கம்பராமாயணம்

இரண்டாவது

அயோத்தியா காண்டம்

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்

(17-தெளிசிங்கப்பெருமாள் கோயில்தெரு, திருவல்லிக்கேணி)

இயற்றிய

உரையுடன்

சென்னை

ஸ்ரீ. ஸ்ரீ. அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கது.

1935.

முதல்பதிப்பு

கார்த்திகைமீ

விலை ரூபா - ரு

இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. கோபால கிருஷ்ணமாசார்யர், 17 - தெளிசிங்கப்பெருமாள்கோயில்தெரு, திரு வல்லிக்கேணி என்ற விலாசத்திற் கிடைக்கும்.

			ரூ.	அ.	பை.
கம்பராமாயணம்:—					
பாலகாண்டம்	உரையுடன்	...	5	0	0.
அயோத்தியாகாண்டம்	,,	...	5	0	0
ஆரணியகாண்டம்	,,	...	4	0	0
கிட்கிந்தாகாண்டம்	,,	...	4	8	0
சுந்தரகாண்டம்	,,	...	5	0	0
யுத்தகாண்டம் 2-வால்யும்	,,	...	10	0	0
பத்துப்பாட்டு:—					
திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி யுரையுடன்		...	0	3	0
பொருநராற்றுப்படை	கை	...	0	4	0
சிறுபாணற்றுப்படை	கை	...	0	4	0
முல்லைப்பாட்டு	கை	...	0	3	0
நெடுநல் வாடை	கை	...	0	4	0
பட்டினப்பாலை	கை	...	0	4	0
நாலடியார் உரையுடன்		...	2	0	0
சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை உரையுடன்		...	0	2	0
தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பு		...	3	2	0
நன்னூற்காண்டிகையுரை		...	1	8	0
வில்லிபாரதம்:—					
சபாபருவம் உரையுடன்		...	2	8	0
சல்லியசௌப்திக பருவங்கள் உரையுடன்		...	3	0	0
சடகோபரந்தாதி உரையுடன்		...	0	12	0
திருப்பாவை உரையுடன்		...	0	6	0
சரசுவதியந்தாதி உரையுடன்		...	0	3	0.
திருவேங்கடக்கலம்பகம் உரையுடன்		...	0	0	0
அழகர்கலம்பகம் உரையுடன்		...	0	0	0
மதுரைக்கலம்பகம் உரையுடன்		...	0	0	0
அஷ்டப்ரபந்தம் விரிவுரையுடன்		...	3	8	0
திருக்கருவைக்கலித்துறையந்தாதி உரையுடன்		...	0	0	0
திருக்கருவைவெண்பாவந்தாதி		...	0	6	0
நாலாயிரதிவ்யப்ரபந்தம்		...	3	8	0
தனித்தனியாயிரமும் கிடைக்கும்.					
பெரியபுராணத்துக் கச்சியப்பமுனிவர்					
கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணம்			0	8	0
நித்யானுசந்தானம்		...	0	0	0
பகவத் விஷயம் 10-வால்யும்		...	50	0	0
திருமந்த்ரார்த்தம்		...	1	8	0
குருபரம்பராப்ரபாவம் அருமைப்படி		...	3	0	0
யதீந்த்ரப்ரவணப்ரபாவம்		...	1	0	0

வசன நூல்கள்.

உதயணன் சரிதை	...	0	12	0
சந்திராபீட சரிதை	...	0	5	0

இப்புத்தகத்தில் அடங்கியவை:—

		பக்கம்.
முகவுரை		1
சோதனைபத்திரம்		9

அயோத்தியா காண்டம்:—

க	மந்திரப்படலம்	க
உ	மந்தரை சூழ்ச்சிப்படலம்	எக
ங	கைகேசி சூழ்வினைப்படலம்	கங
ச	நகர்நீங்குபடலம்	உகக
ஞ	நகரப்படலம்	ஙசஞ
ட	நீராடற்படலம்	சஙட
ண	வனம்புகுபடலம்	டஅக
த	சித்திரகூடப்படலம்	ஞகக
ந	பள்ளிபடைப்படலம்	ஞங
ப	ஆறுசெல்படலம்	சஙன
ம	குகப்படலம்	சஙச
ய	திருவடிசூட்டுபடலம்	எஙக
	செய்யுண்முதற்குறிப்பகராதி	அகசு
	ஆரும்பதவகராதி முதலியன	அஉஞ

முகவுரை

" ஒன்று யிரண்டு சுடராயொரு மூன்று மாகிப்
பொன்றுத வேத மொருநான்கொடைடம் பூத மா
யன்றுகி யண்டத் தகத்தாகியப் புறத்து மாகி
நின்று னெருவன் னவனின்கழ னெஞ்சில் வை ப்பாம். "

"தோத்தலர்பூஞ் சுரிகுழற் கைகேசி சோல்லாற் றே ரனக ரந்
துறந்து துறைக்கங்கை தன்னைப், பத்தியுடைக் குகன்கட ந்த வனம்
போய்ப் புக்குப் பரதனுக்குப் பாதுகமு மரசு மீந்து, சித் ர கூடத்
திருந்தான் றன்னைத் தில்லோகர்த் திருச்சித்ர கூட தன்னு,
ளேத்தனையுங் கண்குளிரக் காணப் பேற்ற விருசிலத்தா ர் கிைமைய
வர்நே ரோவ்வார் தாமே."

அயர்வறுமமரர்கட்கு அதிபதியான திருமால் கல்லோன ப்யாதாகக்
கவும் தீயோரைகலியவும் அரக்கரிலோ டெயும் தான் பிறந்து ன்ட றவு
தாரங்கள் பலவற்றுள் பூர்ணவதாரமாகப் பிறந்தான் அத்தா கும். ராம
வதாரமும் க்ருஷ்ணவதாரமு மாகும். அவற்றுள்ளும், மாறுட தன்மையால்
தெய்வத்தன்மை மறைந்துநிற்கத் தன்னுடைய மாதி ழுந் த்தால் ம
கத்தோர்க்கு கல்லறிவுட்டியது இராமாவதாரமாகும். ஆ ஸ்ரத்தி.
பல பாஷைகளிலுமுள்ள கவிதாப்பலரும், இந்த யரு ந்தி ரி ம் ம
பட்டுத் தம்முடைய வாக்கை அந்தப்பிரான்றாத்துத் தம் தா ன்னை
த்த பயனைப் பெறுவாராயினர்.

ஆயினும், இராமசரித்தத்தைத் செய்யுளாலியற்றியதாகும் மு த ம
யான கவி, ஸ்ரீவான்மீகிமுனிவரேயாவர். மேலையரில் வெ ல் ம
திடமிருந்த செய்யுளைடையை இவரே யெல்லாமுதற்கொண் ட ;
ஆனதுபற்றியே இவரை ஆதிகவி யென்பர்.

நமது அமிழ்திலுமினிய தமிழ்மொழியில் வடமொழியை
ஒப்பத் தலங்குஞ் சீர்மையையுடையது. கம்பரென்றும் ந ர
செய்த இராமாயணமாகும். இத்தமிழ் மாண்டு ம
மொழியிற் கூறியதை யொட்டித் தமிழில் ய ளை
மென்று கருதிலுரென்றாலும், பாற்பேரத்து நினைத்தால் ம
பகுதியை நயப்படுத்துப் பேசுவாராயினர். இத்தன்மைய ம
திற்கு உரையெழுதி வெளியிட்டதில் ஆங்காங்கு
.

இந்த அயோத்தியாகாண்டத்திலும் நடப்பாக
துப் பாலகாண்டத்திற்போலவே
மென்று

நோக்கி ஆங்காங்குக் காட்டியுள்ளான். பெரும்புலவராகிய இந்தக்கம்பர் அங்ஙனம் மாற்றியதற்குக் காரணம் என்னவாயிருக்கலாமென்று கற்போர் ஆராய்ந்தால், ஆங்காங்குத் தக்க காரணம் புலப்படும்: இம்முறைபற்றியே, நாட்டைவிட்டுப் புறப்பட்ட இராமபிரானைக் கங்கைக் கரைவரையிலுந் தேரின்மீது ஏற்றிச்சென்ற சுமந்திரன் கங்கையைத் தேரைக்கொண்டுகடத்த வியலாதாகையால் இராமனிடத்துப் பேரன்புபூண்ட குகப்பெருமானு டனே தங்கியிருந்து இராமபிரான் சித்திரகூடஞ் சேர்ந்தானென்ற செய்தி யை அந்தக்குகனுடைய ஒற்றர்வந்துகூறவே 'இனி இராமன் வனத்தி னின்று மீண்டுவரான்' என்று துணிவுகொண்டு பின்னர் அங்குநின்று மீண்டுவந்து அயோத்திசார்ந்து தசரதனுக்குச் செய்திசொல்ல அச்செய்தி யைக் கேட்டபிறகே தசரதனது ஆவி நீங்கிற் றென்று ஸ்ரீவான்மீகிமுனிவர் கூறியிருக்கவும், ஒப்புயர்வில்லாப் பண்புகள்யாவும் நிறைந்து தனது அன் பிற்கெல்லாம் ஒரேபற்றுக்கோடான இராமனைப்பிரிந்து அவனதுதந்தை யான தசரதன் பலநாள் உயிரோடிருந்தா னெனின் அவனை வன்கண்ண னெனக் கூறியதாகு மெனக்கொண்டு, மகாகவியாகிய கம்பர், கானகம்புறப் பட்ட அன்று இரவில்தானே சுமந்திரன் இராமனைவிட்டுப்பிரிந்து அயோ த்தி வந்துசேர்ந்து இராமன் வனத்திற்குச் சென்றிட்டானென்ற செய்தி யைத்தெரிவிக்க, உடனே தசரதசக்கரவர்த்தியின் ஆவிபோயிற்றென்று கூறு கின்றார்: இவ்வாறுனை கோட்பாட்டுடனேதான் மகாகவியாகிய கம்பர் தாம் கூறியிருக்கின்று ரென்பது "கேட்டேயிருந்தேனெனினுங் கிளர்வானின் றோயிடையு, மாட்டோடுகிலனிறே வன்கணென்னுங் கண்மைநீத்தா" என்று தசரதன்புலம்பலில் அம்மன்னவர்பிரான்வாக்காகக் கூறியுள்ளதிற் புலனாகும். இவ்வாறு கம்பர் கூறியதனால் தசரதன் இராமபிரானிடத்துக் கொண்டபேரன்பை விளக்குகின்றதுமன்றி, வான்மீகத்தையும் கம்பரையும் முரண்படுத்திப் படிப்போர்க்கு நன்கு விளங்கும். இவ்வண் ணம் கூறவேண்டுமாறு நினைப்பதற்குங் கூறவந்ததையே கம்பர் மேற்கொண் டதற்குங், இவ்வாறு கம்பரடிப்பாடலைக் கம்பராடகமென்றும் சிலர் வழங்கு வதற்குங், [illegible] பழிப்பிடையன் சொன்றி கோக்கற்பாலது ஒரு பொருட் பன்மொழி. கம்பர் கூறுகின்றான் வனத்திற்குப்புறப்பட்ட அன்றைய இராம னைத் தேரோடுங்கிலனிறே வன்கணென்னுங் கண்மைநீத்தா என்று, பரதன் இராம னைக்காட்டிற்கு அனுப்பிவிட்டுத் திரும்பிவந்தான் என்றுகூறி, பரதன் இராம னிடத்தே மிக்க அன்புடையனென்று சொல்லுகையிற் கங்கைக் கரை [illegible] குகனைப்பற்றி [illegible] என்ற அச்சமந்திரன் கூற்றைக் கொல்லுவது [illegible] என்பதாம்: இதற்குச் சமாதானம் ஆய்ந்து கூறியுள் [illegible]

[illegible] கம்பர் மாற்றிக்கூறியது [illegible] என்று [illegible] இயலாது. வடமொழியில் இராமபிரான் [illegible]

வோரிடத்து இக்கம்பர் மாற்றிக்கூறியதுபோலவே கூறியிருப்பதை காண லாகும்; தென்மொழியில் ஆழ்வார் ஸ்ரீராமக்கிருஷ்ணரும் இவ்வாறு காணப்படும். படிப்போர்க்கு இப்போதும் விளக்குமாறு போல் தொடரு விஷயத்தைத் திருட்டாந்தமாகக் கூறலென்: உலகமாதாவாகிய புராதனத் தமனது பத்தினியாகிய ஸ்ரீசானகிப்பிராட்டியாரை சிறைசெய்த இரா வணனை கையால் தீண்டியெடுத்துச் சென்று னென்று கூறுவதற்குக் கூசிய இக்க மகாகவி "ஆண்டாயிடை தீயவ ரெயிலைமுனையத், தீண்டாவெறு மேனி சி தைசெயாத், தூண்டாமணிவிளக்காழியான் றனியாத், தீண்டானிலையோ சனை கிழாடுமேல்," "கொண்டானுயர் தேர் மிசை" என்றுகூறியிரு இவ் விஷயம் வடமொழியில் அத்யாத்மராமாயணத்திலே சாயாசீதையை பூமி யோடுபினைத்து தேரின்மீதுவைத்துச் சென்று னென்னும் பொரு பட, 'தசோவிதார்யதரணீம் கணகருத்திருப்பபாறைபி—தோயத்வா தருப் த்வா யலௌசத்ரம்விறாயஸா" என்றுகூறியுள்ளதுகாண்க. இக்கம்ப கூறிய சரிதை மாறுதல்களும் சிற்சில வருணனைப்பகுதியும் வடமொழி நூற்களிற் காணப்படுவது கொண்டு, மகாகவியாகிய இக்கம்பர் வ மொழி யிலும் வல்லவரென்று சிலர் கொள்கின்றனர்: கொள்கையின்மூலமாகக் கூறுப் பகுதிகளின் மாறுதல்களோ வெளிநின்றுத்தொகுத்து விரிபடுத்த முறையும், பெருங்கவியாகிய இக்கம்பர்க்கு எழுவகைப் பாடற்பகுதியை கொண்டு கூறமேலென்றுவகுத்தற்கு தமது நூற்பயிற்சியுமே வடமொழியில் கற்கத் தக்கூறுதற்கு ஏற்ற பெரற்ற விருப்பதாலும் வடமொழியைவிடத் தமிழ் னனம் இனிதுத்தனை யென்று கொள்ளலேண்டுமென்பது அறிவிப்பதாம்.

இந்த ராமாயணத்தில் நூல் பெயர்த்தாகவும், பிராணை கனத்திற் செலுத்துமுன்னே பிராணத்துக்கு பிராணது சரித்திரத் தோன்றத்தக்கவாறு, பெரும்புலவராகிய கம்பரே தாமும் மல்லிகார்ச்சுனக் க நல்லருந்தவர்கள் தாப்பையாடியாடை, வரிக்கண் மின்னாடையும் வுலகங்களினாமன், பரத்துக்கொள்ளுமுறுதிகோள் பதுகிளர்த்தது பாசுரத்திலேற் சொல்லிப்போந்தார்.

இந்தக்காண்டத்தில் தசரதனுடைய கில்லேனினையும்" என்றிருந்தும் காணலாம். அன்றியும், அரசியல்டத்தின் மைக்காலத்து கிழந்தவென்பதையும் டியதன்மை அரசகாரியாச்சயத்து யாளர் நடந்துகொள்ளவேண்டியதிலே சிறப்பு, பகவானுடைய சம்பந்தம் மையென்பது, ஒருத்தர் ஒரு தினையைச் தினைவிளைப்பதாகை, பரியோரிடத்து

வதர்களின் சிறப்பு முதலியனவும் ஆங்காங்குவெளியாம். அன்றியும் வசிட்ட முனிவன் இராமபிரானுக்கு உபதேசித்தது, இராமபிரான் தன்வனவாசத் தைக் குறித்து வருந்திய கோசலையாரைத் தேற்றியது, வனவாசத்தைச் செவியேற்றுச் சீற்றங்கொண்ட இலக்குமணனது சினத்தை இராமபிரான் மாற்றியது, சுமித்திரை இலட்சுமணனுக்குச்சொன்னது, சீதைதான்கான கஞ்செல்வேனென்னப்போந்தது, சுமந்திரனை மீண்டுசெல்லுமாறு பணிக்கை யில் அவன் வருந்தத் தேற்றியது, பரதன் தன்னைப் பிறர் அயிர்க்கப்போகின் றனரே யென்று ஐயுற்றுப் பிரதிஜ்ஞைசெய்தது, பரத வதிஷ்ட சம்வாதம், தசரதமரணத்தா லிராமன் வருந்துகையில் வசிட்டமுனிவன் அவனைத் தேற் றியது, இராமபரத சம்வாதம்முதலிய இடங்களில் பற்பலநீதிகள் செம்பொரு ளாகவும் கருத்துப்பொருளாகவும் விளங்குவதைக் காணலாம்.

இந்த அயோத்தியாகாண்டத்தில் "ஈசுவரன் சேதநனை யங்கீகரித்தால் இச்சேதநனுக்கு உய்வுண்டாகலாமேதவிர, இச்சேதநனுடைய முயற்சியால் எம்பெருமானைக் கால்கட்டிக்கொள்ளுகிறேமென்பது இயலாது" என்ற அரும்பொருள், முக்கியமாக விளங்குமென்பர். இங்ஙனம் அறத்தையுணர வேணுமென்னுங் கருத்துக்கொண்டார்க்குப் பொதுவாகவும் சிறப்பாகவு முள்ள தருமத்தைத் தெரிவிப்பதும், ஆஸ்திகர்க்கு இம்மைமறுமைப்பயனை விளைப்பதும், பிறவிப்பெருங்கடலை நீந்துவார்க்குப் புணைபோல்வதுமாகிச் சுவைமிகுந்து துலங்குகின்றது, இந்த அயோத்தியாகாண்டம்.

பாலகாண்டத்தை அச்சிட்டு வெளிப்படுத்தியபின் அயோத்தியாகாண்டத் தையும் அங்ஙனமே அச்சிட்டுவெளிப்படுத்தவேணுமென்னும் விருப்பத்துடன் அடியேன் உரையெழுதிவருகையில், எனது உத்தியோகசாலையில் தலைவரா யுள்ள திருவாளர் S. வையாபுரிபிள்ளை B A, B.L. அவர்கள் தாம் பலஏட்டுப்பி ரதிகளோ டொப்புநோக்கிப் பாடபேதங்களைக் குறித்துவைத்திருப்பதாகச் சொல்லி, அங்ஙனங்குறித்துள்ள தமதுபுத்தகத்தைத் தந்தனர்: அந்தப்புத்தகத் திற் பாடபேதங்குறிக்கப்பட்டிருந்தபோது, அக்காண்டத்தில் முன்பின்வரும் ஒப்புமைப்பகுதிகளும் பிறநூலின் ஒப்புமைப்பகுதிகளும் சிலகுறிக்கப்பட்டிரு ந்தன: அவர்களது அருமையான உழைப்பு, அவர்களின் புத்தகத்தை நேரிற்க ண்டோர்க்குத்தான் தெரியும். நேரேயுமன்றி, இத்தகம்பராமாயண அயோ த்தியாகாண்டத்தை ஒப்பிட்டுப்பார்க்க, எனது உத்தியோகசாலையில் தலை மைப் பண்டிதராயிருக்கும் ஸ்ரீ உ. வே. மு. ராகவையங்காரீஸ்வாமிகளின் ஏட்டுப்பிரதியும், அரசாங்கவைகையெழுத்துப் புத்தகசாலையிலின்று ஒத்து ஏட்டுப்பிரதிகளும் கிடைத்தன: இவற்றிலுமே திருவாளர் மயிலை-எஸ். சீனிவாச ம்பிள்ளையவர்கள் (ரி. அ. கணகசுந்தரம்பிள்ளையவர்களின் திருத்தங்குறி க்கப்பட்டபிரதி' என்று குறிபிரதியும், கோடிரூபு அச்சிட்டபழம்பிரதியும் தந் தனர்; பிறகு, எனது உத்தியோகசாலையில் பண்டிதராகவுள்ள இலக் குவனாரிடமிருந்தும் - சோமசுந்தர தேசிகரவர்களின் தமது ஏட்டுப்பிரதி யையுதவினர்கள். மானம் முன்னமே அவ்வப்போது ஆராய்ச்சியிற் குறித்திரு

த்தவற்றோடு இடைத்த இத்தம்பியறிவரின் பாடல்களும் இத்தம்பி பிறிற்கு உதவின. இவ்வியற்பாக்களைப்பெறுதற்கு நிருத்தம் பாடுதற்குரிய உரு ணாறையே கருதி தமது பிரதிகளை இத்தம்பிரானுக்கு வழங்கியதாக யாழும் இப்பதிப்புப் பணிக்கு நகர்வோருக்கு இத்தம்பிரான் பற்றியதாக படம் கடை ணமைப்பட்டுள்ளோம்.

இந்தக் காண்டத்தில் முழுமையும் தம்பிரான்பாத்துடனிருந்து பெரு ம்பாலும் எல்லாப்பாடல்களிலும்பாடியதும் காணப்பட்டதோடு அச் சிட்டபிர திமிற் காணப்படாத சிலபாடல்களும் காணப்பட்டன. அவை - மா நிரப்பட லத்தில் "மன்னாடேதினைவை", "தீங்கிளை" என்று தொடங்கும் பாடல்க ளும், "கறைக்குழல்" என்பது முதலாகவுள்ள பதினைந்துபாடல்களும்; கதர் சிங்குபடலத்தில் "என்றென்றறிவித்து", "வானமேயனையதோள்" என்று தொடங்கும் பாடல்களும், தைலமாட்டுபடலத்தில் "கத்துமுகரிக" என் றபாடலும்; கங்கைப்படலத்தில் "திங்முடினைந்தில்", "அந்தி, முதல்", "வெயில்விரி", "மறக்கண்வாள்", "மற்றவரினைதுந்தி" என்ற பாடல்க ளும்; சித்திரகூடப்படலத்தில் "எய்தவின்னல்" என்ற பாடலும், பள்ளி டைப்படலத்தில் "கவ்வாவெதிரை", "என்று கொல்லோதாயம்" என்ற பாடல்களுமாம். சிவகெசிந்தாமணியில் சுரமஞ்சரியிசைத்த கலாப்பி சேர்ந்திருப்பதுபோல, இந்தக் கம்பராமாயணத்தில் கொள்ளியம்பல, தம்பி னென்ற ஒருவர் இடைச்செருகலாய்ச் சிற்சில பாடல்களைப் பாடிச்சென் தாரென்பது, பிரசித்தமாக வழங்குகின்றது. அவை இந்நாளைய பதிப் காலத்துப் பிரித்து எல்லாவற்றையும் யாம்பெற்றோமென்பதும், பாலகாண் படலத்தில் "ஞமலிவழுமுனைதலை" என்பதும் இந்த "கதிர் முடி" என்பது முதலாகவுள்ள பாடல்களும், கடிமணப்படலத்தில் "மை தியின்" என்றபாடலும் அவ்வகைப்பாடலைத் திருத்தியமைத்த இத்தம்பிரானால் றகின்றது.

இந்தாண்டத்திலுள்ள பன்னிரண்டு பாடலைத்தும் அ-திருமணப் எ-வணம்புகுபடலம், அ-சித்திரகூடப்படலம் என்பவற்றுள் ஒவ் படலப்பெயரும் மாற்றிக்காணப்பட்டன; ஏன்? இந்த றைப்படலம் என்றும், உ-ஆவது வைகறைப் என்றும், ஊ-ஆவது குகப்படலம் என்றும், எ-ஆவது செல்படலமென்றும், ஏ-ஆவது என்றும், ஐ-ஆவது பிரதிக்கு மாறாகக் காணப்பட்டதை எடுத் என்ற பெயரையும், ஒ-ஆவது ஆவது நிருவடிசூட்டுபடலமென்ற பெயரையும் இத்தம்பிரானே தொண்டு அதற்குக் காரணமும் ஆங்காங்குக் கூறியுள்ளான். மற்றும்

நு - ஆவது இலம்பாட்டுப்படலம் என்பது - தசரதன் இல்லாமற்பட்டதை [இறந்ததை]த் தெரிவிக்கும்படல மெனப் பொருள்பட்டு இனிது கதைப் போக்கைத் தெரிவிப்பதற்கு உதவுவதாயினும், இலம்பாடு என்பது மரண மென்ற இப்பொருளில் வழங்கியதற்கு மேற்கோள் கிடைக்காமையால் அதனைக் கொள்ளவில்லை: மற்றைப்படிபார்ப்பின் இலம்பாட்டுப்படலமென் பதே மிகவும் பொருத்தமான தாகும். பல ஏட்டுப்பிரதிகளிலும் சு - ஆவது கங்கைப்படலம் என்பதற்குக் குகப்படலம் என்ற பெயர் காணப்படுவது மிகவும் பொருத்தமாயிருப்பினும், அச்சிட்டபிரதிகளின்மூலமாய் கக - ஆவது படலத்திற்கே குகப்படலமென்ற பெயர் உலகத்திற் பரவியிருத்தலால், இப் போது மாற்றி சு-ஆவதுபடலத்திற்குக் குகப்படலமென்றும் கக-ஆவது பட லத்திற்குக் கங்கைப்படலமென்றும் பதிப்பித்தால், உலகத்தோர்க்கு மயக்க முண்டாகக்கூடுமென்று கருதி யான் அங்ஙனஞ் செய்திலேன்: ஆயினும், சு-ஆம்படலத்திற்குக் குகப்படலமென்றபெயரும், கக-ஆம் படலத்திற்குக் கங் கைப்படலம் அல்லது கங்கைகாண்படலமென்ற பெயருமே யமையுமென்று வற்புறுத்துக் கூறுகின்றேன். மற்றை உ-ங - ச - படலங்கள் எங்ஙன மிருப் பினும் வேற்றுமை யில்லை யாதலால், முன்னுள்ளவாறே பதிப்பிக்கலாயின.

அன்றியும், படலமுடிவு மற்றைப்படலங்களிலெல்லாம் ஒத்துக் காணப்படினும், சிலபிரதிகளில் மந்தரைசூழ்ச்சிப்படலம்மாத்திரம் "நன்று சொல்லினை" (அசு) என்ற பாடலோடு முடிய, கைகேசிசூழ்வினைப்படலம் "கூனிபோனபின்" என்ற மந்தரைசூழ்ச்சிப்படலத்து எண்பத்தைந்தாம் பாடல்முதற்கொண்டே தொடங்கியுள்ளது.

பலபாடங்களுள்ளவிடத்துப் பொருட்பொலிவு சொற்சிறிவு ஓசைநயம் பிரதிபண்ணுகையிலுள்ளதாகை முதலிய காரணங்களை முன்னிட்டு இந்தப்பதிப்பில் ஒருபாடத்தை முக்கியமாகக்கொண்டு, மற்ற வற்றைப் பிரதிபேதத்திற் கூறியுள்ளேன். பிரதிபேதத்திற்காட்டியவற்றிற் சில பிழைபாடாகத் தென்பட்டாலும் சிலர்க்குத் தோன்றலாம். "பலகோடி பிரதி [உலகம் பல்கோடிமுகவையுடைத்து]" என்பவாதலால் எல்லாவிடத்தும் யாவரும் இதுவே கொள்கின்றனர் ஒருமனமாக என்பதும் பொருந்தாது; இயலாத செயலொன்றேது?

இவ்வாறு பாடபேதம் மிகுதியாகத்தோன்றுவதற்கு யாதுகாரணமென்ற ஆராய்ச்சி, கற்போர்மனத்துத் தோன்றலாம்: ஒருநூல் மிகச்சுவையுடைத்தாய் அச்சாகும்போதும் பலராலும் விரும்பப்பாராட்டப்பட்டு, இக்காலத்துப் போல அச்சின்மையால் ஒன்றைப்பார்த்து ஒன்றுமுகப் பலபிரதிகள்செய்யப்படு மாயின், எழுதுவோர் யாவரும் தங்கள்விருப்பமாய்த்தாமாக இராமையற்றி உள்ளதையுள்ளபடியே பதித்து எழுதுவது அருமையாகலும், அறிந்தும் பிர தியெழுதுவோர் ஒருவரிடத்து ஆலம்பிரதியிருந்து வேறுசில ஒருசொல்லுள்ளவிடத்து வேறுசில சொல் எழுதுவதில் வித்தியாசமுறை முதலியன இயல்பாகலும்,

எட்டுப்பிரதிகளைப் படிக்கும் அறிஞரும் பழந்துச்சில்லைகளில் முழுத்தை மற்றோரெழுத்தாக மாறுபடக்கருதிப்படித்தலும், பாடபேதங்களின் தத்தமது அறிவுக்குஏற்பச் சிற்சிலஇடத்து நீக்கலன்னைமிருப்பின் கலியடைந் நகருதித் திருத்துவதும், நூலாசிரியரே தாம் முன்னெழுதியபாடம் உலக நிற்பரவி யிருக்க அவ்வப்போது தமக்குத்தோன்றிய திருத்தங்களைச் செய்து கொண்டு வர அத்திருத்தமானபாடமும் பரவியதும் என்றிவற்றினதுன்னமை யென்க.

கிடைத்த பிரதிகளிலுள்ள பாடபேதங்களெல்லாம் விடமறுப்பதில் பிக்க வேணுமென்ற கோக்கத்தோடு இந்நூலைப் பரிசோதித்தன்றே: ஆயி னும், தக்கதுணை முதலியன இன்மையால் எண்ணுருத்து முற்றிலும் சிறை வேறிற்றில்லை: இன்னும் பலபிரதிகளைத் தேடிப்பெற்று ஒப்பிட்டுப் பார்த்தா லும், ஆங்காங்குச் சிறந்த பாடபேதங்கள் கிடைக்குமென்பது, நிச்சயம்.

அன்றியும், எட்டுப்பிரதிகள் பலவற்றில் முகனாகாரங்கள் மரிக்கா தன் பது இயல்புதலால் அவை பெரும்பாலும் காட்டப்படவில்லை: முதலியன பெரும்பாலும் காட்டப்படவில்லை: அனை—வடமொழிச்சொற்களும் சுத் தனகாரவேறுபாடுகள், வேற்றுமையுருபுகளிலும் எதிர்காலவினைகளி லும் வரும் லகரனகரவேறுபாடுகள், புலம் = புன்செய், பயம் = பாசி முதலி போன்ற பேரகிகள், எல்லை = எல்லு என்றாற்போன்ற பேரகிகளும் காண்க.

என்போன்றார்க்கு இராமாயணத்துக்குத் திருத்தமுற நல்லுரை வகுத்த இயலாதாயினும் இந்நூலினிடமுள்ள விருப்பத்தால் நூலினை னதை திருவருளைமுன்னிட்டு இப்பெருந்தொழிலில் தலைப்பட்டேன். அரு யேனைக்குத் தமிழாசிரியரும் தலையன்புரைதாயனாரும் கலைமகளும் மிக்கதிர்த்திவாய்க்கவரும் கும்பகோணம் கலாசாலை தமிழ் பண்டிதராகவினங்கி எம்மேலுரைத்த நிறைந்த பரமபூரித்தவருளான ஸ்ரீமான் வே. சாமிநாதையரவர்களும், அந்தச்சுவாமிகளுடைய தமிழாசிரியரும் டென்னி காலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருந்து ஸ்ரீமான் உ. வே. டபி. மரீ கிருஷ்ணாசாரிய ஸ்வாமிகளும் சிற்சிலபடலங்கட்கு எழுதி வெளியிட்டிருந்த உரைகளும் அபேதாத்மியாகாண்டம் முழுவதற்கும் உரைவகுத்த பெருந்துணையா யுதவின.

இந்த அயோத்தியாகாண்டத்திலும் பாடபேதங்களும் பிரித்தெச்சயுளும் பதவுரையும் என்பகுதிகளும் விளக்குமாறு எல்லாச்செய்யுட்குந் தலைப்பும் பொருள் மற்றும் கூறற்குரியபாகைகள் ஒத்தபகுதிமேற்கோள்கள் புராணகதைகள் னன: அன்றியும், ஒவ்வொரு படலத்திற்கும் தலைப்பும்

மும் காட்டப்பட்டுள்ளது. மற்றும், செய்யுண்முதற்குறிப்பகராதியும் அரும் பதவகராதி முதலியனவுஞ் சேர்க்கப்பட்டுள்ளன.

பெரியோரிடத்துக் கற்றுங்கேட்டுமுள்ளவற்றில் மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டதொழிய அவன்கையில் அகப்படாதபடி நெஞ்சென்னுந் துணைவன் நிறுத்திவைத்தவற்றைக்கொண்டு எழுதிய இத்தவுரையில், சிறப் புக்கள் காணப்படின் அவை என்னுடைய ஆசிரியர் முதலியோருடையன வென்றும், குற்றங் காணப்படின் அவை என்னுடையன வென்றுங் கருதுக. என்னுடைய திரிபுணர்ச்சி சோர்வு அறியாமை முதலியவற்றால் இவ்வுரையிற் காணக்கூடிய குற்றங்குறைகளை விவேகிகள் பொறுப்பதன்றி, தாம் கண்ட அக்குறைவுகளையேனும் அடியேனுக்குப்புலப்படாத அரியபெரியவிஷயங் களையேனும் எடுத்துத் தெரிவிப்பராயின், அவர்களிடத்துப் பெருமகிழ்வோடு நன்றிபாராட்டிச் சமயம்வாய்க்கும்போது அவ்விஷயங்களைப் பிரசுரஞ்செய்து உலகோர்க்குப் பயன்படுமாறு செய்யவும் முயல்வேன்.

இத்தப்பதிப்பு நடக்கும்போது தமக்குஅவகாசப்பட்டகாலங்களில் பரி சோதித்தற்கு உதவியாயிருந்தவர்கள், ஹிந்துஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் **வித்வான் ஸ்ரீ. உ. வே. G. ரங்கசாமியையங்கார்ஸ்வாமி** என்பவரும், **ஸ்ரீ. உ. வே. E. S. வரதாசார்யர்ஸ்வாமி B. A.** என்பவரும் ஆவர்: இவர் கட்கு நன்மை மேன்மேலும் பெருகுமாறு ஸ்ரீராமன் திருவருள் புரிவாராக.

எமது உரைகளை உபயோகித்தும் உபயோகிக்குமாறு தூண்டியும் எமக்கு ஊக்கத்தைவினைத்துவருகிற மகான்கள்திறத்தில் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காப்பியச்சிரேட்டமாகிய இந்தக் கம்பராமாயணத்துக்கு உரையெழுது மாறு சிற்றறிவுடைய சிறியேனுக்கு விருப்பையுண்டாக்கி, விக்கினகாரி யென்று பிரசித்தமாகிய இந்த அயோத்தியாகாண்டத்தின் உரையை முற்று மாறு தோன்றுத்துணையாய்நின்று திருவருள்புரிந்த ஸ்ரீராமபிரானது திருவடி த்தாமரைகளை என்றுங் கருத்திற்கொண்டு வழுத்துவேன்.

"குற்றங் களைந்து குணறபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்."

இங்ஙனம்

வை. மு. கோபாலக்ருஷ்ணன்.

சோதன பத்திரம்.

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
23	21	(அவற்குப்)	(அதற்குப்)
39	22	வறும்மாறு	வருமாறு
49	33	னீனக	ஞனக
64	18	உவகை	உகவை
,,	22	இசைந்தற்து	இசைந்ததற்து
102	17	லன்று	லன்றி
111	35	எனினிமாம்	எனினுமாம்
116	29	அந்தரந்[2]	[2]அந்தரம்
147	36	வண்டோ?	வஞ்சமுண்டோ?
175	4	நிமித்தங்	நிமித்தம்
178	9	ளைளி	ளைவி
,,	25	மூழங்கிளை	மூழக்கிளை
180	37	பணிவார்	யணிவார்
183	2	சாஜ	ராஜ
187	6	நிரம்பின	நிரப்பின
195	4	மூன்மூமடி	மூன்றடி
196	19	கவ்வாறு	கெவ்வாறு
197	16	மூர்த்தியும்	மூர்த்தியிம்
199	14	வரியார்	வறியார்
201	35	வெண்பா	மென்பா
204	31	உள்ளும்	உள்ளம்
257	18	இவ்வருமை	உன்னருமை
261	37	(கூகூ)	(சுகூ)
273	36	[2]நின்றன்	[2]நின்மூன்
302	34	வினவில்	வளவில்
327	38	ரெண்ணமே	ரெண்ணமோ
352	5	மகிழ்ணர்	மகிணர்
,,	11	சுட்டை	'அ'என்று எடுப்பின்: சட்டை
353	22	[4]நேர்ஞானப்	[4]ஞானப்
369	23	தமிழுபசருக்கம்.	கால்வாய்.
399	23	போக்கித	போக்கிய
418	19	ஆம்	ஆலம்
420	30, 31	சுமத்தி	சுமித்தி
435	7	என்றப்	என்ற
442	10	ஏந்திய	
455	38	நங்ஙை	கங்கை
465	19	தீர்த்த	சீர்த்த
472	8	யிருக்கு	யிறுக்கு
573	3	பட்டன	பட்டனவென்றலு ஒன்று
583	32, 33	ள்ளாடோறும்	ளே
597	5	அழித்தமை-தொடுத்	அழித்துமை-தொடுத்
,,	21	நோயொன்	நோயென்
605	33	பதுமுதலியனவும்	டதுமுதலியன
656	9	உவமையாயின.	மாதராரையொக்கு
764	12	கருத்துத்	கருத்துங்

மற்றுங்காணப்படினுந் திருத்திக்கொள்க.

கம்பராமாயணம்.

இரண்டாவது

அயோத்தியாகாண்டம்.

அயோத்தியில் நிகழ்ந்த விருத்தாந்தங்களைத் தெரிவிக்கும் பாகமென் பது பொருள். இராமன் கங்காநதியைத்தாண்டியது முதல் நடந்தவையெல் லாம் அரணியசம்பந்தமானவை யாயினும், பரதன் அயோத்தியிலிருந்துவரு தல் முதலிய கதைகள் கூறப்படுதலால் அவையனைத்தும் அயோத்தியாகாண் டத்தின்பாற் பட்டன.

கீழ்ப் பாலகாண்டத்தில் வக்ஷ்யமாணதர்மாநுஷ்டானஉபயோக்மாக ராமாயணபுருஷார்களுக்கு மஹாகுலப்ரஸூதத்வம், மஹாகுருக்ருபாலப்த தநுர்வேதரஹஸ்யத்வம், தத்ஸம்வாதபூத தாடகாதாடகேயாதிராஸம், ஹர தநுர்ப்பங்கம், வைஷ்ணவசாபபரிக்ரஹம் முதலிய குணங்களும் தர்மபத்நீ யோகமும் ஸவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டன; இக்காண்டத்தில் அவர்களால் அநுஷ்டிக்கப்பட்ட பித்ருவசநபரிபாலனம்முதலிய சாமாநியதருமங்களும், பகவத்சேஷத்வம், பாரதந்த்ர்யம், பாகவதாபிமாநநிஷ்டை முதலிய விசேஷ தர்மங்களும் சொல்லப்படுகின்றன. முன்காண்டத்தில் லக்ஷ்மீயோகமும் இதில் பூமியோகமுஞ் சொல்லப்படுகின்றன என்றும், முன் பரத்வமும் இங் குச் சௌலப்யமுஞ் சொல்லப்படுகின்றன என்றுஞ் சொல்வர். முன் லக்ஷ்மீ விசிஷ்டமான ப்ராப்யஸ்வரூபம் [சேதநன் அடையவேண்டியபொருள்]சொல் லப்பட்டது; இங்கு ப்ராப்தாவின் [கடவுளைப்பேற்றின்பொருட்டுப் பற்றுப வ னை சேதநனது] ஸ்வரூபம் சொல்லப்படுகின்றது என்றலு முண்டு.

க - ஆவது மந்திரப் படலம்.

சக்கரவர்த்தி தன்திருமகனுக்கு முடிசூட்டக்கருதிக் குலகுருவாகிய வசிஷ்டரோடும் சுமந்திரன் முதலிய மந்திரிகளோடும் ஆலோசித்த கதையைச் சொல்லும் சிறிய பிரிவுஎன்பது பொருள்: மந்திரம்-ஆலோசனை. தசரதசக்கர வர்த்திக்கு நரைதோன்றியதாக, அச்சக்கரவர்த்தி ஒருநாள் தன்வடிவத்தைக் கண்ணாடியிற்கண்டு நரைதோன்றியதை நன்குணர்ந்து மகனுக்கு முடிசூட்டித் தான் பரகதிக்குவேண்டியவற்றைத் தேடுமாறு முயலக்கருதிச் சபாமண்ட பத்தையடைந்து மந்திரிமாரை வரவழைக்க, அவர்கள்யாவரும் வந்துகூடிய

பின், தன்கருத்தைஅவர்கட்குத் தெரிவித்து அவர்கள்யாவரும் இராமனுக்கு முடிசூட்டுவதை மிகப்பாராட்டியதுகண்டு, சுமந்திரனைக்கொண்டு இராமனை வரவழைத்து அப்பிராட்டியிடத்துத் தன்கருத்தைத் தெரிவிக்க, அவ்விராகவ பிரானும் தந்தையின்பணி யென்ற காரணத்தினால் மறுக்காமல் முடிசூடுவ தற்கு இசைய, சக்கரவர்த்தி மனமுவந்து எல்லாவரசர்க்கும் ஓலைபோக்கி வர வழைத்து தான் இராமபிரானுக்கு முடிசூட்டக்கருதியிருப்பதை யாவர்க்கும் தெரிவிக்க, அனைவரும் மகிழ்ச்சியோடுஉடன்படவே, சோதிடம்வல்லோரைக் கொண்டு பட்டாபிஷேகத்துக்கு நாளேற்படுத்தச் சென்றனன். இது இங்ஙன மாக: நால்வர் பெண்பிள்ளைகள் கோசலையிடஞ்சென்று இராமனுக்குப்பட்டங் கட்டச் சக்கரவர்த்தி கருதியிருப்பதைத்தெரிவிக்க, அந்தத்தேவி அரசன் துறப்பானென்பதனால் ஒருபால்துயரம்தோன்றவும் மங்களச்செய்திசொன் னவர்க்கு வெகுமதியளித்து அந்தணர்க்குப்பலவகைத்தானங்களைச்செய்து, இட்சுவாகுவமிசத்தார்க்குக் குலதெய்வமான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின்சந்நி திக்குச்சென்று அப்பரமனதுதிருவடிகளை வணங்கிவலம்வந்து தன்மகனது நன்மையின்பொருட்டுப் பலவகைநோன்புகளை நோற்றுக்கொண்டிருந்தன ளென்ற செய்தி இப்படலத்துக் கூறப்படுகின்றது.

க.—கடவுள்வாழ்த்து.

வானின் றிழிந்து [1]வரம்பிகந்த மாபூ தத்தின் வைப்[2]பெங்கு
மூனு முயிரு முணர்வும்போ லுள்ளும் [3]புறனு முள[4]னென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை [5]யிழைப்பக் [6]கோற்றுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ ரிடுக்கண் [7]டீர்த்த கழல்[8]வேந்தே.

(இதன்பொருள்.) கூன்உம் - கூனியும், கோ சிறிய தாய்உம்-கூத்திரிய தர்மத்தையுடையசிற்றன்னையும், கொடுமை இழைப்ப-பொல்லாங்கானகாரி யத்தைச் செய்தமையால், கோல் துறந்து-(தனக்குஉரிய)செங்கோன்மையை விட்டு, கான்உம் - காட்டையும், கடல்உம் - கடலையும், கடந்து - தாண்டி, இமையோர்-தேவர்களுடையவும், (இம்மையோர்)-இவ்வுலகத்தவர்களுடைய வும், இடுக்கண் தீர்த்த - துன்பத்தைப்போக்கியருளிய, கழல் - திருவடிகளை யுடைய, வேந்தே-ஸ்ரீராமபிரானே,—வான்நின்று-மூலப்பிரகிருதியிலிருந்து, இழிந்து-தோன்றி, வரம்பு இகந்த-வரம்புகடந்துபரந்த, மா பூதத்தின் வைப்பு எங்குஉம் - (ஐம்)பெரும்பூதங்களின் காரியமாய்ப் பரவியிராநின்றுள்ள பௌ திக பதார்த்தங்கள் தோறும் [ஜகமெங்கும்], ஊன்உம் உயிர்உம் (போல்)-உட லும் உயிரும்போலவும், (உயிர்உம்) உணர்வுஉம் போல் - உயிரும்உணர்வும்

போலவும், உள்உம் புறன்உம் - உள்ளும்புறத்தும், உளன்-(நிறைந்து) இருப்பான், என்ப - என்று சொல்லுவர் (ஞானிகள்); (என்றவாறு.)

பரமபுருஷனுகிய மன்றலர்துளவிஞனே, தசரதன் மதலையாய் ஸ்ரீராமனுகத்திருவவதரித்து இந்தக்காப்பியவரதனத்துக்குக் கதாநாயகனுக இருத்தலால், கவிச்சக்கரவர்த்தியாகியகம்பர் ஈடுமெடுப்புமில்லாத இவ்வுத்தமநாயகனையே வாழ்த்தல்வேண்டுதலின் காண்டங்தோறும் அவன்விஷயமாகவே கடவுள்வாழ்த்துக் கூறத்துணிந்து, பாலகாண்டத்தில் ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களைச் சொல்லுகிற முறையாலே மூன்றுகவிகளாற் கடவுள்வாழ்த்துக் கூறி அயோத்தியாகாண்டத்தின் இம்முதற்கவியால், அவன்தன்மையைக் காட்டும் வஸ்துநிர்த்தேசரூபமுகத்தாலே இக்காப்பியத்தலைவனுகிய ஸ்ரீராமபிரான் ஜகச்சரீரகனுன ஸர்வேசுவர னென்கிறார்.

வான் - மூலப்பிரகிருதி; அதை "சுரரறிவருநிலை" என்னும் திருவாய்மொழிப்பாசுரத்தில் **விண்**ணென்னும் பதத்திற்குப் பூர்வாசார்யர்கள் செய்தருளிய வியாக்கியானங்களா லறிக. பஞ்சபூதவிகாரமன்றிப் பிரபஞ்சமென்பது ஒன்று இல்லையாதலாலும், இப்பிரபஞ்சகாரணமாகிய அவைதாம் இத்துணையவென இவ்வுலகத்துளவராலுந்துணியப்படாமையாலும்'வரம்பிகந்தமாபூதத்தின்வைப்பு'என்றார்.ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து அப்பும், அப்பிலிருந்து பூமியுமெனப் பூதங்கள் தோன்றும் முறையை வேதங்கூறுதலால் 'வானின்றிழிந்து...மாபூதம்'என்று ரைனினும்பொருந்தும்: "வானும்நிலனும் முதலீறில் வரம்பில்பூதம்" என்பர், மேல் நகர்நீங்குபடலத்தில். இங்கு உணர்வென்பது - தர்மபூதஜ்ஞானம். 'ஊனுமுயிருமுணர்வும்போ லுள்ளும் புறனு முளனென்ப' என்னுமிடத்து "திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசைப், படர்பொருண்முழுவதுமா யவையவை தொறு, முடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" என்னும் பாசுரத்தின் விசேஷார்த்தங்கள் விசாரித்தறியத்தகும். உள்ளேயிருப்பதற்கு ஊனுக்குள் உயிரிருப்பதும், வெளிப்பட்டும் இருப்பதற்கு உயிரில்உணர்வு இருப்பதும் உவமையென்க. உயிரும் என்பதை ஆவ்ருத்திசெய்துகொண்டு பொருளுரைக்கப்பட்டது.

கூனி - மந்தரை; கைகேயிக்குச் சூழ்ச்சி கூறினவளாதலின் இவளை முற்கூறினர். சுமித்திரையும் ஸ்ரீராமனுக்குச் சிறியதாயாதலின் அவளை விலக்குதற்கு 'கோத்தாய்' என்றார். சக்கரவர்த்தி சம்பராசுரனுடன் அமர்புரிகையில், கைகேயி, கூத்தியானியாய் அவனுக்குப்போர்த்துணையாகி கூத்திரகுணத்தைக்காட்டினவளாதலின் கோத்தாயாயினள்: அவள் அக்காலத்துப் பெற்றவரங்களாலே ஸ்ரீராமபிரானுக்குக் கொடுமையிழைக்க நேர்ந்ததென்பதைக் குறிக்கின்றதனுல், கோத்தாயென்றது - **கருந்துடையடைகோளியணி.** ஸ்ரீராமபிரான் திருவவதரித்தகாரியம் தலைக்கட்டுதற்குக் காரணமாயிருந்தவ

ளாதலின், கோத்தாயென்றுரென்னவுமாம்; அன்றிக்கே, சிறியகோத்தாய்எனக் கொண்டு, இளவரசனை பரதன் தாய் என்றுரென்னவுமாம்; இனி, இகழ்ச்சிக் குறிப்பாய்க் கோத்தாயென்று ரெனக்கொண்டு, அற்பகுணமுள்ள தாய் என வும் பொருள்கொள்ளலாம். கொடுமையிழைத்தல் - மாலைமுடி நீத்து மலர் பொன்னடிநோவப் பெருவனத்திடைப் பதினென்குவருடங்கள் நகரிலிருந்து பெயர்ந்து நிரிதரச்செய்தது. கோல்துறத்தல் - அரசாட்சியை அகங்குளிர்ந்து தானேநீக்கல். காட்டைக் கடத்தல்-தண்டகம்முதலிய அரணியங்களைக் கடத் தல். கடலைக்கடத்தல் - கடலில் திருவணைகட்டி இலங்கைசேறல். **ஈரட்டுற மொழிதலால்** இமையோர்க்கு என்பதற்கு - இவ்வுலகத்திலுள்ள தண்ட காரணியவாசிகளாகிய மாமுனிகட்கு எனவும் உரைக்கப்பட்டது. அவரிடுக் கண்தீர்த்தலாவது - இராவணன் முதலிய இராக்கதரால் நேர்ந்த துன்பத் தைப் போக்குதல். அண்டர்புகழும் அயோத்திமாநகரந்துறந்து தண்டகாரணி யஞ்சென்றுதாரமிழந்து வானரசேனையோடுவாரிதியில்வாரதிகட்டிஇலங்கை யைக்கிட்டித் தன்மனைவியைக்கவர்ந்த மாபாதகனை மாள்வித்து, அவற்கு ரனத்தொழில் புரிந்துநின்ற இந்திராதியரை விடுவித்துத் தந்தொழிலில் நிறுத்திய பின்பு அயோத்தியடைந்து பட்டாபிஷேகம்பெற்றுப் பதினாயிரம் வருடம் அரசுபுரிந்தமைதோன்ற 'வேந்து' என்றார்.

இனி இக்கவியுள் 'வானின்றிழிந்து' என்றதனால் தருமத்தைநிலைநாட்டு கைக்காக ஸ்ரீமந்நாராயணன் ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்து இங்கு அயோத்தியில் சக்கரவர்த்தித்திருமகளையவதரித்துப்போந்த பாலகாண்ட சரிதையும், 'கூனுஞ்சிறியகோத்தாயுங் கொடுமையிழைப்பக் கோற்றுறந்து' என்றதனால் இவ்வயோத்தியாகாண்டசரிதையும், புருஷகாரபூதையான பிராட்டியின் பிரிவுக்கஞ்சி 'காணும்' என்ற ஒரேசொல்லால் ஆரணியகாண்ட சரிதையும், கைங்கரியதுரந்தரர்களான சிறியதிருவடிமுதலியோரைக் கண் டது பிராட்டியைத் தேடுகைக்காதலின் அக்கருத்தையுள்ளடக்கி 'கடலும் கடந்து' என்னும் இரண்டுமொழிகளால் கிஷ்கிந்தாகாண்ட சுந்தரகாண்ட சரிதைகளும், இராவணன் வதைக்குப்பயன் தேவர்துயர்தீர்தலும் பெரும் புகழ்விளைதலும் அனைத்துயிரும் அடிபணிய வீற்றிருத்தலுமே யாதலின், 'இமையோரிடுக்கண்தீர்த்த கழல்வேந்து'என்றதனால் யுத்தகாண்டசரிதையும், பெருநாடுகாணச் சராசரங்களை வைகுந்தத்துவற்றித் தானும் அங்குச்சென்றி ருத்தல்தோன்ற, 'உளன்' என்றதனால் உத்தரகாண்டசரிதையும் ஆக ஸ்ரீ ராமாயணசரிதமுழுதும்இச்செய்யுளில்ஒருவாறுகுறிப்பிக்கப்பட்டமை காண்க.

எங்கும்-முற்றும்மை. ஊன், கூன், கொடுமை, கோல், கழல், வேந்து - ஆகுபெயர்கள். என்ப என்னும் முற்றுச்சொல்லுக்கு, ஞானிகள் என்னும் தோன்றுவெழுவாய் வருவித்து முடிக்க.

பிரதிபேதம்:—[1]வரம்பிகழ்ந்த. [2]எய்நி. [3]புறத்தும். [4]என்பான். [5]உரைப்ப. [6]குடை. [7]காத்த. [8]வேந்தை, வேந்தன்.

இது-மூன்றுஞ்சீரும் ஆறுஞ்சீரும் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாய்நின்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம். (க)

வேறு.

உ.—தசரதமன்னவனுக்கு நரை தோன்றுதல்.

† மன்ன[1]னே யவனியை மகனுக் கீந்துநீ
பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்ன[2]மூ லத்தினிற் கழற [3]வந்தென
[4]மின்னெனக் கருமைபோய் வெளுத்த தோர்மயிர்.

(இ - ள்.) 'மன்னனே - அரசனே! நீ—, அவனியை - பூமியை [இராச்சிய பாரத்தை], மகனுக்கு - (மூத்த) குமாரனாகிய இராமனுக்கு, ஈந்து - கொடுத்துவிட்டு, பன்ன அரு தவம் புரி - சொல்லுதற்குமுடியாத (பெருஞ் சிறப்பையுடைய) தவத்தைச் செய்வதற்கு ஏற்ற, பருவம் - காலமாகும், ஈது - இந்தக் கிழப்பருவம்', என - என்று, கன்னமூலத்தினில் - காதினடியிலே, கழற - (இரகசியமாகச்) சொல்ல, வந்(த)து என - வந்ததுபோல, மயிர் - மயிரானது, கருமை - (தனது) கறுத்திருக்குந்தன்மை, போய் நீங்கி, மின் என - மின்னலைப்போல, வெளுத்தது - வெளுத்துத்தோன்றலாயிற்று; (எ - று.)—ஓர் - அசை.

தசரதமன்னவனுக்குக் காதினடியில் நரைதோன்றியது, இராமனுக்கு அரசைக் கொடுத்திட்டுத் தவஞ்செய்யச்செல்வாயென ஒருவன் உபதேசிப்பதைப்போலு மெனக் குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. காதினடியில் நரை தோன்றியது, இனி நாம் இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேணு மென்ற கருத்துத் தசரதனுக்குத் தோன்றக் காரண மாதலின், இவ்வணம் வருணிக்கப்பட்டது. பன்னவரு என்பது, பன்னரு என விகாரப்பட்டது. கன்னமூலம் - கர்ணமூலம் என்ற வடசொல் திரிந்துவந்தது. பி-ம்:— [1]மேதினியையும். [2]மூலத்திலே. [3]வந்தன, வந்தனம். [4]மின்னருங், மென்னருங். (உ)

ஊ.—தனக்கு நரைதோன்றியதைத் தசரதன் கண்ணாடியிற் காணுதல்.

[1]தீங்கிழை யிராவணன் செய்த [2]தீமைதா
ணுங்கொரு [3]நரையதா [4]வணுகிற் றுமெனப்
பாங்கில்வந் திடுநரை [5]படிமக் கண்ணிடை
[6]யாங்கதிற் கண்டன னவனி காவலன்.

† இச் செய்யுளும், அடுத்த செய்யுளும், சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றன. இவை கதைத்தொடர்ச்சிக்குப்பொருத்தமாயிருத்தலாற்கொள்ளத்தக்கன.

(இ-ள்.) 'தீங்கு இழை-(உலகத்தார்க்கெல்லாந்) தீமையைச்செய்கின்ற, இராவணன்—, செய்த-செய்துள்ள, தீமை-பாவமானது, தான்—, ஆங்கு - அப்பொழுது, ஒரு நரையது ஆ - ஒருநரையாக, அணுகிற்றுஆம் - நெருங்கி வந்து சேர்ந்ததாகும்', என - என்று கருதும்படி, பாங்கில் வந்திடு நரை - தன்னிடத்தே வந்துசேர்ந்த நரையை, படிமம் கண்ணாடி அதில் - வடிவத்தைக் காணக்கூடிய கண்ணாடியிலே, அவனி காவலன் - பூமியைப்பாதுகாத்துக்கொண்டிருந்தவனான தசரதன், கண்டனன்—; (எ - று.)—நான்காமடியில், ஆங்கு - அசை: அப்பொழுது எனினுமாம்.

இந்தத்தசரதன் தான் நரையுற்றிருப்பதைக் கண்ணாடியிற்கண்ட காரணத்தினால் 'இனி இராச்சியபாரத்தை இராமபிரானிடத்து வைக்கவேண்டுமேதவிர, நாம் கைக்கொண்டிருத்தல் தகாது' என்ற எண்ணத்தைக் கொண்டு இராமபட்டாபிஷேகத்திற்கு வேண்டிய செயலே மேன்மேற்செய்ய, அதனால் இராமபட்டாபிஷேகத்தை யுணர்ந்த மந்தரையென்ற கூனியான கைகேயியின்தோழி கைகேயியின்புத்திமைக்கலத்து இராமபிரானைக் கானகம் புகுத்த, அந்தஇராமபிரானது வனவாசமே இராவணசங்காரத்துக்குக் காரணமாதல்பற்றி, 'இராவணன்செய்த தீமைதானுங்கொருநரையதா வணுகிற்றே' என்று நினைக்குமா றுயிற் றென்க. பி - ம்:—[1]தீங்குழல். [2]பாவம். [3]நரையதாய். [4]அணுகிற்றுவென, அணுகிற்றேவென. [5]படிவக்கண்ணாடி., படிமத்தின் வடிவு. [6]ஆங்கெதிர்.

(ஈ)

சு.—நரையைக் கண்ட தசரதசக்கரவர்த்தி இராமபட்டாபிடேகத்தைக் குறித்து ஆலோசிக்க மந்திரச்சபைசேர்தல்.

மண்ணுறு முரசின மழையுயி ரூர்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பருமை யாஅனையான்
கண்ணுறு [1]கவரியங் கற்றை சுற்றுற
வெண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினன்.

(இ - ள்.) பண் உறு - அலங்கரிக்கப்பட்ட, படர் சினம் - மிக்க கோபத்தையும், பருமம் - தவிசினையுமுடைய, யாஅனையான் - யானைப்படையையுடைய தசரதசக்கரவர்த்தி,-மண்உறு - மார்ச்சனையமைந்த, முரசு இனம் - பேரிகைக்கூட்டம், மழையின் ஆர்ப்புற - மேகம்போல் முழங்கவும், கண் உறு - பெருமைபொருந்திய, கவரிகற்றை சுற்றுஉற - சாமரைத்திரள் சூழ்ந்துவரவும், (அரண்மனையினின்றும் புறப்பட்டுவந்து), எண் உறு - (காரியங்களை) ஆலோசித்தற்குப் பொருத்தமாகிய, சூழ்ச்சியின் இருக்கை-மந்திராலோசனைச்சபையை, எய்தினன் - அடைந்தான்; (எ - று.)

முரசினமார்ப்பக் கவரிக்கற்றைவீசத் தசரதன்சூழ்ச்சியிருக்கையையடை ந்தனனென்க. சூழ்ச்சியிருக்கை-ஆலோசனைமண்டபம். கவரி-சமரமென்னும் மானின் வால்மயிரைக்கொண்டு செய்யப்படுவதோ ரிராசசின்னம்.பருமம்-கல் லணை: அது,யானைமுதுகின் முற்புறத்து அரசர்வறிவீற்றிருத்தற்குஅமைக்கும் ஆசனம். முரசு-முரஜம்: இது,மற்றைவாத்தியங்களுக்கும்உபலக்ஷணம்; அன்றி, முரசுஇனம் என்பதற்கு - பேரிகையும் அதற்குஇனமாகிய மற்றைவாச்சிய விசேடங்களும் எனினும் பொருந்தும். கண் உறு என்பதற்கு - விளக்கம் பொருந்திய எனினுமாம். கவரியங்கற்றை, அம் - அல்வழிச்சாரியை; அழகு மாம். தன்கோபத்தை மறைத்தற்குரியகாலத்தே மறைத்து வெளிப்படுத்தற்கு உரியகாலத்தே வெளிப்படுத்தலால், 'படர்சினயானை' என்றார்; "கடுஞ்சினங் கடிந்த காட்சியர்" என்றஇடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'சினமென்பது கோபத்தின் பின்னதாய் சிறிதுபொழுதுநிற்பது' எனக் கூறியது இங்குக் காணத்தக்கது. 'யானையான்' என்றது, நால்வகைப்படையுள்ளும் யானை சிறந்தமைபற்றி; அது "படைதனக்கியானை வனப்பாகும்" என்பதனை லறிக. யானையான் - யானைபோன்றவன் என்றுரைத்தலுமொன்று. ஆர்ப்புற, சுற் றுற - விசேச்செவ்வெண். பி-ம்:—[1]கவரியின். (சு)

ரு.—மந்திரச்சபையையடைந்த மன்னவன் யாவரையும் போக்கித் தனிய ஆதல்.

புக்கபின் [1]னிருபரும் பொருவில் சுற்றமும்
பக்கமும் [2]பெயர்கெனப் பரிவி னீக்கிஞ
ரிலைக்கநின் றுலகளித் தி[3]யோகி னெய்திய
சக்கரத் தவனெனத் தமிய ஞயிஞன்.

(இ - ள்.) புக்க பின்-(அவ்வாறு) மந்திராலோசனைச்சபையை அடைந்த பின்பு, நிருபர்உம்-(தன்னுடன்வந்த) அரசர்களையும், பொருவு இல் - ஒப்பு இல்லாத, சுற்றம்உம்-உறவினரையும், பக்கம்உம்-சினேகிதர்களையும், பெயர்க என - நீங்குக வென்றுசொல்லி, பரிவின் - அன்புள்ளவசனங்களால், நீக்கி ஞன் - நீக்கி,—ஒக்க நின்று - (யாவரிடத்துஞ்) சமமாகநின்று, உலகு அளி த்து - உலகங்களைக் காக்க, யோகின் எய்திய - யோகநித்திரைசெய்கின்ற [அறிதுயிலமர்கின்ற], சக்கரத்தவன் என - சக்ராணியாகிய திருமாலைப் போல, தமியன் ஆயினன் - தனித்தவனானன்; (எ - று.)

சருவேசுவரனை அச்சக்கரத்தவன் சகலலோகங்களையுங் காத்தற்குத் தமியனாகி யோகநித்திரைசெய்யுமாறுபோல் இச்சக்கரத்தவனும் தன்நாடு காத்தற்கு வேண்டும் உபாயத்தை ஆலோசிக்கத்தனித்திருந்தா னென்றவாறு. அச்சக்கரத்தவன் என்றதில் சக்கரம்-திருவாழி: இச்சக்கரத்தவன் என்றதில், சக்கரம் - ஆஜ்ஞாசக்கரம். சகலஜகத்காரணனை சருவேசுவரனைத் தனக்குப்

புத்திரனுகப்பெற்ற புண்ணிய முடைமை நோக்கி, இச்சக்கரத்தவனுக்கு அச் சக்கரத்தவனே உவமை கூறினர்; உவமையணி. பெருங்காரியமெண்ணுவோர் தனித்திருந்தெண்ணுதல்வழக்காதலால், தம்பியரைபிரனென்றார். அதிகாரத்தி னால் யாவரையும்போகச்செய்தல் சக்கரவர்த்திக்கு அமையுமாயினும் அவ னது நற்குணத்தோன்றப் பரிவினீக்கினனென்க நிருபர் என்றது - சக்கர வர்த்தியாகிய தமக்குத் திறையுய்க்கவந்த அந்தியதேசத்தரசர்களை. பக்கம் - அன்பு என்னும் பொருளுள்ள பக்ஷமென்ற வடசொல்லின் சிதைவு. சுற்றம், பக்கம் - ஆகுபெயர்கள். பெயர்கென - விகாரம். யோகு - யோகமென்னும் வடசொற்றிரிபு. உலகளித்தியோகு - குற்றியலுகரம்; இயோகுவென்று பிரித்தலுமாம். திருமால் யோகநித்திரை புரிபவனென்பதை ''உறங்குவான்போல் யோகுசெய்தபெருமான்'', ''யோகொடு கறைபறமுயல்வதோர்கடவுள்'' என்ற விடங்களிலுங் காண்க. பி-ம்:—[1]நிருவரும். [2]பெயர்கென. [3]யோகம். (நு)

சூ.—தனித்திருந்த மன்னவன் 'மந்திரிபார்வருக' என்று ஏவுதல்.

சந்திரற் குவமைசெய் தரள வெண்குடை
யந்தரத் தளவுநின் றளிக்கு மாணையா
னிந்திரற் கிமையவர் குருவை [1]யெய்ந்ததன்
மந்திரக் கிழவரை வருகென் [2]றேவினன்.

(இ - ள்.) சந்திரற்கு உவமை செய் - சந்திரனுக்கு உவமையாக்குதற் குரிய, தரளம் - முத்துக்களாலாகிய, வெள் குடை - வெண்மையாகியகுடை யானது, அந்தரத்து அளவுஉம் - ஆகாயத்தளவும், நின்று - (ஓங்கி நிழலைச் செய்து) நிற்ப, அளிக்கும்-(அங்குள்ள தேவர்களையும்)காக்கின்ற, ஆணையான்- ஆணையையுடையவனுகிய சக்கரவர்த்தி,—இந்திரற்கு-தேவராசனுக்கு, இமை யவர் குருவை ஏய்ந்த-பிருஹஸ்பதிபகவானையொத்த,தன் மந்திரம் கிழவரை- தன்மந்திராலோசனைக்குரியவர்களை, வருக என்று ஏவினன்-வருகவென்று நியமித்தான்; (எ - று.)

தசரதசக்ரவர்த்தியின் குடைக்குச் சந்திரனும் உபமானமாயிருக்கத்தக்கவ னல்ல னென்பது தோன்ற, அவனை உபமேயமாக் கொண்டு'சந்திரற்குவமை செய் தரளவெண்குடை' என்றார்: இது, எதிர்நிலையுவமையணியாம். சம்பர னத்தினுலத்து வாசவன்முடியை நிலைநாட்டியமை தோன்ற, 'அந்தரத் தளவுநின்றளிக்குமாணையான்' என்றது. தசரதனுடைய மந்திரக்கிழவர் ஒவ் வொருவரும் பிருஹஸ்பதிபகவானுக்குச் சமானரென்பது 'இந்திரற்கிமைய வர்குருவையேய்ந்த மந்திரக்கிழவர்' என்றதன் பொருள். மந்திரக்கிழவர் - புரோகிதரும், மந்திரிகளும்.த்ருஷ்டி ஜயந்தன் விசயன் சித்தார்த்தன் அர்த்த சாதகன் அசோகன் மந்திரபாலன் சுமந்திரன் என்று எண்மர் மந்திரிமாரும், வசிஷ்டர் வாமதேவர் என்று இருவர் புரோகிதரும் முக்கியமாக இருந்தன ரென்றும், இவர்களைத் தவிரவும் வேறும் மந்திரிமாரும் புரோகிதருமிருந்தன

றென்றும் வான்மீகத்தா லுணரப்படும். இமையவர்குரு - ப்ருஹஸ்பதிபகவானுக்கு ஒருபெயர்; இது ஸுராசார்யஃ என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு. நின்று - செயவெனெச்சத்திரிபு. பி - ம்:—[1]எய்ந்தனன், எய்ந்தன, எய்தன. [2]எயிறுன். (கூ)

எ.—வசிட்டமுனிவன் வருதல்.

பூவரு பொலங்கழற் பொருவின் மன்னவன்
காவலி [1]ஞாணையின் கடவு ளாமெனத்
தேவரு முனிவரு [2]முணருந் தேவர்கள்
மூவரி [3]னல்வனு முனிவந் தெய்தினன்.

(இ · ள்.) பூ வரு - அழகுபொருந்திய, பொலம் கழல் - பொன்னாற் செய்த வீரக்கழலைபணிந்த, பொருவு இல் மன்னவன் - ஒப்பில்லாத தசரத சக்கரவர்த்திக்கு, காவலின் - (புரோகிதமாகிய) காவலினாலும், ஆணையின் - கட்டளையினாலும், தேவர்உம் முனிவர்உம் - தேவர்களும் இருடிகளும், கடவுள் ஆம் என உணரும்-(அவனது தலை)தெய்வமென்று மதிக்கத்தக்கவனும், தேவர்கள் மூவரின் நல்வன் ஆம்-திரிமூர்த்திகளிடையே (சேர்த்துச்சொல்லத்தக்க) நான்காமவனுமான, முனி - வசிட்டமாமுனிவன், வந்து எய்தினன் - வந்துசேர்ந்தான்; (எ - று.)

மந்திரிபுரோகிதனும், குலகுருவும், பிரமரிஷியுமான தலைமைநோக்கி வசிட்டன் வரவு முதலிற் கூறப்பட்டது. பூவரு - பூவின்தன்மை யமைந்த என்றும், பூஅரு - பூவையொத்த அரியவன்றும் உரைத்தலுமாம். பொன் + கழல் = பொலங்கழல்; "பொன்னெனின்னிளவியீறு கெடமுறையின், முன்னர்த்தோன்றும் லகாரமகாரஞ், செய்யுண் மருங்கிற் றிரிபுடனிலவான" என்பது விதி: பொலம்என்றே தனியாக ஒருசொல் கொள்ளுவர் பிற்காலத்தார். பொரு வில் எனக்கொண்டு - யுத்தஞ் செய்தற்குரிய வில்லைத்தாங்கிய என்றுகூறலு மொன்று. மன்னவன் காவலி ஞாணையின் கடவுள் ஆம் என என்பதற்கு - சக்கரவர்த்தியினது காவற்றிறமிலில் ஆணையின்கடவுளாவன் என்று உலகத்தோர்சொல்ல, தேவரும் முனிவரும்-, உணரும் - நியானிக்கின்ற, தேவர்கள்மூவரின் - மூன்றுதேவரோடுசேர்த்துச் சொல்லத்தக்க, நல்வன்ஆம் முனி என்றும் உரைக்கலாம். ஆணையின்கடவுள் - ஆஜ்ஞாசக்கரத்துக்கு அதிதேவதை. முனிவர் - மனனசீலர். எனஎன்னும் எச்சம் உணரும் என்பதனோடு முடியும். மும்மூர்த்திகளிடத்தும் தனித்தனியே முக்கியமாயுள்ள ஆக்கலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று சக்திகளையும் இவன் ஒருங்கேயுடையனென்பார், 'மூவரினல்வனு முனி' என்று ரென்னலுமாம். பி - ம்:—[1]ஆணைசெய், ஆணையங், ஆணையே, இயானையின். [2]தேடும். [3]நால்வராம். (எ)

அ.—இதுமுதல் ஆறுகவிகள் - ஒருதொடர்: பல்வகைக் குணங்களும் நிரம்பிய மந்திரிமார் வருகையைக் கூறும்.

குலமுதற் றிறன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் [1]பயனு மெய்தினர்

நலமுத னலியினு நடிவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினர்.

(இ - ள்.) குலம் முதல் தொன்மைஉம் - குலத்தினது முதன்மையாகிய பழமையையும், கலையின் குப்பைஉம்-(அறுபத்திநான்கு) கலைகளின் மிகுதியையும், பல முதல் கேள்விஉம் - பலசிறந்தகேள்விகளையும், பயன்உம்-(அவற்றுளவாம்) பயனையும், எய்திஞர் - அடைந்தவர்களும், நலம் முதல் நலியின் உம் - (தமக்குவரும்) நன்மைகள் அடியோடு அழிவதாயிருப்பினும், நடுவு நோக்குவார் - நடுவுநிலைமையையே நோக்குபவர்களும், சலம் முதல்-கோபம் முதலானவைகளை, அறுத்து - வேரோடுகளைந்து, அரு தருமம் - அருமையாகிய தருமங்களை, தாங்கினர் - மேற்கொண்டவர்களும்,—(எ - று.) இதனல், குடிப்பிறப்பு கலைஞானம் கேள்வி மேற்கொண்டசெயலேப்பயன் தோன்றுமளவும்முயல்கை நடுவுநிலை தினமின்மை . அறச்செயலேமேற் கொள்கை என்ற குணங்களைப் பெற்றுள்ளார் அந்த அமைச்சரென்க.

தசரதனுக்கு மந்திரிமார் அறுபதினுயிரவர் வந்தனரென்பதைக்கூறத் தொடங்கிய கவி முதலந்துகவிகளால் அம்மந்திரிமார் அமைச்சுக்குணம் நிரம்பியவ ரென்பதைக் காட்டுகின்ருர். தொல்குடிப்பிறந்தோர் கருத்தும் சொல்லும் செயலும் தம்முண்மாருகாமையையும் பழிபாவங்கட்கு அஞ்சுதலேயும் பிறர்கற்பித்தலாலுங்கல்வியாலுமன்றி இயற்கையில் தாமே யுடையராதல் நோக்கி 'குலமுதற்ருன்மை' என்றும், யாவர்க்கும் நன்மை புகட்டி வயப்படுத்தற்கும் எல்லாவிடத்துஞ் சென்று ஆங்காங்குள்ள நல்லோரிடத்து மிகப்பயின்று ஐயந்திரிபறப் பொருள்கோடற்கும் பலகலைகள் இன்றியமையாதிருத்தல் நோக்கி 'கலையின்குப்பை' என்றும், கல்விகற்றவழியும் ஊழ்வினைவயத்தால் மதிமயங்குகையில் நிலைநிறுத்துவனவும் அடக்கம்முதலிய பயப்பனவும் ஆன்ருரிடத்துக்கேட்ட வெளிநிலாக்கேள்வியேயாதலின் 'பலமுதற்கேள்வி' என்றும், அரியகல்விகேள்விகளையுடையார்க்கும் வினைவயத்தால் தக்கபயன் கிடைத்தல் அருமையாயினும் இவர்களுக்கு அது அருமையின்றி எளிதாகக் கிடைத்தலின் 'பயனும்' என்றும், தங்களுக்குப் பெரும்பொருளிவதாகவினும் ஊசிமுனையளவும் தமதுசமநிலைமாருமைநோக்கி 'நலமுதனலியினுநடிவு நோக்குவார்' என்றும், எல்லா நன்மைகளேயும்அழிப்பதற்குஏதுவாகியகோபமும் அதனேடு ஒற்றுமையுடையனவாகிய காமலோபமோகமதமாற்சரியங்களும் ஒருங்குசேர்ந்து, கொள் ளாஹஸம் துரோகம் பொருமை பிறன்குணஞ்சகியாமை ஒருவன்பொருளேயபகரித்தல் காரணமின்றியடித்தல் திட்டுதல் ஆகிய எட்டுத்துக்கங்களேயும் உண்டாக்குந்தன்மையனவாதலின் அவற்றை நீக்கினரென்றமைதோன்ற 'சலமுதலறுத்து' என்றும், பிறராலறிதற்கும் அநுட்டித்தற்கும் அரிய தருமங்களே யறிந்து அவற்றிற்குஏற்ப ஒழுகுதலுடைமைதோன்ற 'அருந்தருமந்தாங்கினர்'என்றுங் கூறினர். 'சலமுதலறுத்தருந்தருமந்தாங்கினர்' என்பதற்கு-அரசன் தம்மைக்கோபித்தபோதிலும் அதனை

நோக்காது தருமத்தையே நாடிச் சொல்பவரென்றும், நலம்மூத்தல் நல்லியினும் என்பதற்கு-தமது நன்மைக்குக் காரணமான செல்வம் அழிவதாயிருந்தாலும் என்றும் உரை கூறுவதுமுண்டு. குப்பை - கும்பம் என்ற வடசொல்திரிந்து வந்தது. சலம் என்ற வடசொல்லுக்கு - வஞ்சனையென்றும் பொருள்கூறலாம். கலை-கலாசப்தபவம். நோக்குவார் என்பது, எதிர்காலத்தைக் குறியாது தன்மை குறித்து நின்றது. முதல்-முதல வென்பதன் விகாரமாகக்கொண்டு, முதலியவையெனவும் கொள்ளலாம். பீ - பீ:—[1]பலனும். (அ)

வேறு.

கூ. உறறது கொண்டு மேல்வந் துறுபொரு [1]ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்.

(இ - ள்.) உற்றது கொண்டு-நேர்ந்த காரியத்தைக்கொண்டு, மேல்வந்து உறு பொருள்-மேல்விளையுங் காரியத்தை, உணரும்-ஊகித்தறியவல்ல, கோளார்-புத்திபல முள்ளவர்களும், அது-அந்த (வேண்டாத) காரியம், வினையின் வந்தது ஆயின் உம் - கர்மானுகுணமாக வந்ததாலும், மாற்றல் ஆற்றும் - (அதனை) மாற்றவல்ல, பெற்றியர்-முயற்சித்திற முடையவர்களும், பிறப்பின் மேன்மை பெரியவர் - குடிப்பிறப்பிற்குத்தக்க மேம்பாடு அமைந்த பெரியோர்களும், அரிய நூல் உம் கற்றவர்-(கற்றற்கு) அருமையான அறிவுநூல்களையும் கற்றவர்களும், மானம் நோக்கின் - மானத்தை நோக்குமிடத்தில், கவரி மா அனைய நீரார் - கவரிமானைஒத்தகுணமுடையவர்களும்,—(எ - று.)

இச்செய்யுளினால், அந்த மந்திரிமார்களின் ஊகிக்குந்திறனும் பின்வாங்காது முயலுந்தன்மையும், குடிப்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கமுடைமையும், கல்வியறிவும், மானமுடைமையுங் கூறப்பட்டன. தனது ஊழ்வினைக்கு ஏற்பவந்த காலனையும் கண்ணுதற்கடவுளாற் கழிவித்த காளையாகிய மார்க்கண்டேயனைப்போல் ஊழையும் உப்பக்கங்காணவல்லா ரென்பது தோன்ற, 'வினையின் வந்ததாயினு மாற்ற லாற்றும்பெற்றியர்' என்றார்: "ஊழையு முப்பக்கங்காண்ப ருலவின்றித், தாழா துளுற்றுபவர்" என்றார் நாயனாரும். அரியநூல்களாவன-ப்ரஹ்மவித்தையாகிய வேதாந்தம் முதலியன: அமைச்சர்க்கு உரியநூலுமாம். மானமாவது எந்நாளும் தந்நிலையிற்றாழாமையும் ஊழாற்றுழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையுமாம். மயிர்நீப்பின் வாழாக் கவரிமாப்போல மானங்கெடவரின் இவர் உயிர்நீப்பரென்பது தோன்ற, 'மானநோக்கிற் கவரிமாவனைய நீரார்' என்றார். பீ-மீ:—[1]ஒன்றுங்கொள்ளார். [2]மெய்ம்மை.

கo. காலமு மிடனு [1]மேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ [2]நுணித்தறங் [3]குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுந் [4]செய்கையுந் தெரிந்து [5]கொண்டு
பால்வரு முறுதி யாவுந் [6]தலைவர்க்குப் பயக்கு நீரார்.

(இ - ள்.) ஏற்ற காலம்உம் - (வினைசெய்தற்கு) ஏற்ற காலத்தையும் இடன்உம்-(அதுசெய்தற்கேற்ற) இடத்தையும், கருவிஉம்-(அதற்கேற்ற) சாதனங்களையும், கற்ற-(தாம்) படித்த, நூல்உற - அரசநீதிநூற்பொருள்களுக்கு ஏற்ப, தெரிய நோக்கி - தெளிய ஆலோசித்து, தெய்வம் நுணித்து-தெய்வாநுகூல்யத்தையும் நுட்பமாக ஆராய்ந்து, அறம் குணித்த - இராசதருமத்தைப் பெருக்கிய, மேலோர்-பெரியோர்களும், சீலம்உம்-நல்லொழுக்கத்தையும், புகழ்க்கு வேண்டும் செய்கைஉம் - (தமக்கும் தம்மிறைவற்கும்) கீர்த்தியுண்டாதற்குக் காரணமான காரியத்தையும், தெரிந்துகொண்டு-அறிந்துகொண்டு, பால் வரும்-(அவைகளின்) பங்காக வருகின்ற, உறுதி யா உம்-உறுதிப்பொருள்களெல்லாவற்றையும், தலைவற்கு-(தம்) இறைவனுக்கு, பயக்கும்-கொடுக்கின்ற, நீரார் - குணமுள்ளவர்களும்,—(எ - று.)

இதனால் அவ்வமைச்சர் தொழில்செய்யும்வகை உரைக்கப்பட்டது. ஒரு காரியத்தைச் செய்யுங்கால், அதற்குத்தக்க காலத்தையும் இடத்தையும் கருவியையும் தாம் படித்த ராஜநீதிசாஸ்திரங்களுக்குஏற்பத் தெளிந்து,ஊழ்வினைகளை யாலோசித்துத் தருமங்களை விருத்திசெய்து, நல்லொழுக்கமும் நற்செய்கையுமுடையராய்,அக்காரியத்தில் வரும் நற்பயனைத் தம்மிறைவற்குச் சேர்க்குந் தன்மையுடையவர் அவ்வமைச்சர் என்பதுகருத்து. பால் - பலனென்றுமாம். உறுதி - ஆகுபெயர். ஏற்ற வென்பதனைக் காலமும்இடமும் என்பவற்றோடுங்கூட்டுக. பி-ம்:—[1]பெற்ற. [2]நுனித்து. [3]குறித்தமேலோர், குறித்துநல்லோர், குணித்தநல்லோர், குணித்துநல்லோர். [4]செல்வமும். [5]கொண்டே. [6]தலைவற்கே.

(கo)

கக. தம்முயிர்க் குறுதி யெண்ணுர் தலைமகன் வெகுண்ட போதும்
[1]வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் [2]வீரர்
செம்மையிற் றிறம்பல் [3]செல்லாத் தேற்றத்தார் தெரியுங் [4]கால
மும்மையு முணர [5]வல்லா [6]ரொருவரே [7]மொழியு நீரார்.

(இ - ள்.) தலைமகன் வெகுண்ட போதுஉம்-(தம்) இறைவன் கோபித்தகாலத்திலும், தம் உயிர்க்கு உறுதி எண்ணுர் - தம் பிராணனுக்கு நன்மையை நினையாராய், வெம்மையை தாங்கி (அக்கோபத்தினது)கொடுமையை(த்தாம்) ஏற்றுக்கொண்டு, விடாது நின்று-(தம்கொள்கையைக்) கைவிடாமல் நின்று, நீதி உரைக்கும் வீரர்-நீதியையே யிடித்துச்சொல்லும் வீரத்தன்மையுள்ளவர்களும், செம்மையில் திறம்பல் செல்லா தேற்றத்தார் - சன்மார்க்கத்தினின்றுதவறுத தேர்ச்சியுள்ளவர்களும், தெரியும் காலம் மும்மைஉம் - (நூல்களால்) அறியத்தக்க மூக்காலக்காரியங்களையும், உணரவல்லார்-அறியவல்லவர்களும், ஒருமை ஏ மொழியும் நீரார் - ஒரு பரிசே பேசுமியல்பினரும்,—(எ - று.)

இதனால், அவ்வமைச்சர்கள் தலைவனுறுதியையே நாடி மந்திராலோசனை சொல்லுந் தன்மை விளக்கப்பட்டது. வெகுண்டபோதும் வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரரெனவே, அரசன் முனியினும் உறுதி நோக்கி யிடித்துக்கூறல் அமைச்சர்க்கு இன்றியமையாக்குணமென்பதுபெறப்

பட்டது. தம் நிலை மாறக்கூடியகாலத்தும் மாறுதுநின்று இடித்துச் சொல்ல வல்ல மனத்திட்பமுடையராதல்பற்றி, வீரரெனப்பட்டார். வெம்மை, செம்மை - ஆகுபெயர்கள். மும்மை, ஒருமையென்பன - தன்மையுணர்த்தாது "இருமை வகைதெரிந்து" என்ற இடத்திற்போல எண்ணினையுணர்த்தி, ஆகுபெயரான் எண்ணுடைப்பொருளைக் காட்டின. ஒருமையேமொழியுநீரார் என்றது - ஒருகாலைக்குஒருகால் மாறிப்பேசுமியல்பினரல்லரென்றபடி: அமைச்சர் பலராயிருந்தும் ஒருபடிப்பட ஆலோசனை சொல்பவ ரெனினு மாம். பி-ம்:—[1]மெய்ம்மையை. [2]நீரார். [3]செய்யாத். [4]காலை. [5]தக்கார். [6]ஒருமை யும். [7]மொழியவல்லார். (கக)

வேறு.

கஉ. நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் [1]மருத்துவ னியல்பி னெண்ணுவா
ரொல்லைவந் துறுவன வுற்ற பெற்றியிற்
றொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார்.

(இ - ள்.) நாயகற்கு - (தம்) இறைவனுக்கு, நல்லஉம்-நன்மையைத்தரு வனவற்றையும், தீயஉம் - தீங்கைத்தருவனவற்றையும், நாடி ஆலோசித்து, எல்லையில்-கடைசியில், மருத்துவன் இயல்பின்-வைத்தியன் சுபாவம்போல, எண்ணுவார் - இதத்தையே எண்ணுபவர்களும்,—ஒல்லை வந்து உறுவன - வினைவில் வந்து சேர்பவையாகிய துன்பங்கள், உற்ற பெற்றியின் - சேர்ந்த காலத்தில், (அவற்றைப்போக்குதற்கு), தொல்லை நல்வினை என உதவும் - பூர்வபுண்ணியப் பயன்போல வந்துதவுகின்ற, சூழ்ச்சியார்-ஆலோசனைத்திற முள்ளவர்களும்,—(எ - று.)

பிணியாளனுக்கு விருப்பமில்லாவிடினும் மருத்துவன் அவனுக்கு இத மானவற்றையே செய்ய முயலுதல்போல, இம்மந்திரிமாரும் அரசனுடைய விருப்பத்தைப்பற்றிக் கருதாமல் அவனுக்கு அநிஷ்டமாகஇருப்பினும் நன்மை பயக்குஞ்செயலையே யெண்ணிச்சொல்லுந் தன்மைய ரென முன்னிரண்டடி களால் விளக்கியவாறு. கீழ்ச்செய்யுளில் முன்னிரண்டடிகளாற் கூறியதை யே இங்குக் கூறினும், உபமானமுகத்தால் வேறுவகையாகவிளக்குதல்பற் றிக் கூறியதுகூறலென்னுங் குற்றத்திற்கு இடமின்மை யறிக. ஆபத்துசேர்ந் திடினும் அவற்றைப் போக்க முயலுந் தன்மை பின்னிரண்டடிகளிற்கூறப் பட்டது. பி-ம்:—[1]மருத்துவர். (கஉ)

கஊ. அறுபதி [1]னாயிர [2]ரேனு மாண்டகைக்
குறுதியி லொன்[3]றிவர்க் குணர்வென் றுன்ன[4]லாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினர்.

(இ - ள்.) திருவின் பெட்பினர்-செல்வப்பெருக்கமுள்ளவர்களும் ஆகிய, அறுபதினாயிரர் என்உம்-அறுபதினாயிரவரேயாயினும், ஆண்தகைக்கு - சக்கர வர்த்திக்கு, உறுதியில் - நன்மையக்கும்விஷயத்தில், இவர்க்கு - இவர்க

எல்லாருக்கும், உணர்வு-அறிவானது, ஒன்று என்று உன்னல் ஆம் - ஒன்றேஎன்று நினைக்கத்தக்க, பெறல் அரு சூழ்ச்சியர் - பெறுதற்கரிய மந்திராலோசனையையுடைய மந்திரிகள், மறி திரை கடல் என - மடங்கி வீழ்கின்ற அலைகளையுடைய கடல்போல், வந்து சுற்றினர் - வந்து (ஆலோசனைமண்டபத்தில்) நிறைந்தார்கள்; (எ - று.)

ஆண்டகை - ஆண்மைக் குணமுள்ளவன்: தகை - தகுதி; அதாவது சற்குணம்; உடையவனுக்கு ஆகுபெயர். அறிவுசூழ்ச்சிகளையுடையரேனும், வறியராயின் ஒருகால் மாறுவராதலின் இவர் அவ்வாறு மாறுதற்குஉரியரல்லரென்பார் 'திருவின்பெட்பினர்' என்றார். கடல்-பரந்தகாட்சிக்கு உவமம். **பி-ம்:**— [1]ஆயிரம். [2]எனினும், எண்ணும், என்னும். [3]அறிந்துணர்த்த. [4]ஆய்.

எய்தினரும் நோக்குவாரும் தாங்கினரும் (அ), கோளாரும் பெற்றியரும் கற்றவரும் நீராரும் (கூ), மேலோரும் நீராரும் (கo), வீரரும்தேற்றத்தாரும் வல்லாரும் நீராரும் (கக), எண்ணுவாரும் சூழ்ச்சியாரும் (கஉ), பெட்பினரும் ஆகிய சூழ்ச்சியர் வந்து சுற்றினர் (கஙு) என முடிக்க. (கஙு)

கச.—வந்த அமைச்சர்கள் வசிட்டனையும் மன்னவனையும் தொழுது வரன்முறையே யிருத்தல்.

முறைமையி னெய்தினர் முந்தி யந்தமி
லறிவினை வணங்கித்தம் மரசைக் கைதொழு
தறை[1]யிடை வரன்முறை யேறி யேற்றசொற்
றுறையறி பெருமையரு ளுருஞ் சூடினர்.

(இ - ள்.) முறைமையின் எய்தினர் - (சூழ்ச்சிமண்டபத்துக்குச் செல்லவேண்டிய) முறைப்படியே வந்தடைந்த அவ்வமைச்சர்கள்,—முந்தி - முற்பட்டு, அந்தம் இல் அறிவினை வணங்கி-முடிவில்லாத பேரறிவுடையனுகிய வசிட்டமாமுனிவனைப் பணிந்து [தண்டனிட்டு], தம் அரசை கைதொழுது - (பிந்தித்) தம்மிறைவனைக் கையாற்றொழுது [அஞ்சலிசெய்து], இறையிடை-(தத்தமக்குரிய இருக்கைகளில்,வரல் முறை ஏறி-வரலாற்றுமுறையே யேறி, ஏற்ற சொல் துறை அறி பெருமையான் - தகுதியாகிய சொற்றுறைகளை முற்று முணர்ந்த பெருமையுள்ள தசரதசக்கரவர்த்தியினது, அருள்உம் - அருள்நோக்கத்தையும், சூடினர் - பெற்றார்கள்; (எ - று.)

வந்த அமைச்சர்கள் வசிட்டனையும் தசரதனையும் வணங்கித் தமக்குரிய ஆசனத்தையடைந்தவளவில், 'வரவேண்டியவர் யாவரும் வந்தனரா?'என்று அறியத் தசரதமன்னவன் தன்திருவருணோக்கத்தைச் செலுத்தினனென்க. வந்தவர்கள் வசிட்டபகவானுக்குத் தண்டன்சமர்ப்பித்துச் சக்கரவர்த்திக்கு அஞ்சலிபண்ணினரென்பது தோன்ற 'வணங்கி' என்றும், 'கைதொழுது' என்றுங்கூறினர். முந்தி யென்பதற்கேற்பப் பிந்தியென்பது வருவிக்கப்பட்டது: இறையிடைவரன்முறையேறி யென்பதற்கு - சக்கரவர்த்தியினிடத்து

வரன்முறையாக் கிட்டிச்சென்றுளனினுமாம். சூடிஞரென்பதற்கேற்ப அருளைப் பூவாகக்கொள்க. முன் கடவுளென்றதற்கேற்ப, இங்கு, அந்தமிலறிவனென்றார்.எய்தின ரென்பதை,முற்றெச்சமாகக்கொண்டுரைப்பது முண்டு. அருள்-இங்கே, அருளோடுகூடிய பார்வை. பி-ம்:—[1]இடம். (கச)

கரு.—வந்தவர்களைநோக்கித் தசரதன் தம்முடைத்தன்மை கூறுதலேனைத்து.

அன்னவ னருளமைந் திருந்த வாண்டையின்
[1]மன்னவ னவர்முக மரபி னோக்கிஞ
ரின்னிய [2]தரும்பெற லுறுதி [3]யொன்றுள
தென்னுணர் வனையநீ ரினிது [4]கேண்மெனை.

இதுமுதல் "ஆதலாலிராமனுக்கு (கஉ)" என்னுங் கவியளவும் ஒருசொடர்.

(இ - ள்.) அன்னவன் - அந்தத்தசரதமன்னவனது, அருள்அமைந்து - அருளைப்பெற்று, இருந்த - (மந்திரிகள் ஆசனத்து) இருந்த, ஆண்டையின் - காலத்தில், மன்னவன் - சக்கரவர்த்தி, அவர் முகம் - அவர்களுடைய முகங்களை, மரபின் நோக்கினன்-முறையாகப்பார்த்து, 'உன்னியது - (என்னால்) நினைக்கப்பட்டதாகிய, அரு பெறல்உறுதி ஒன்று - பெறுதற்குஅரிய உறுதிப்பொருளொன்று, உளது - உள்ளது; (அதை), என் உணர்வு அனைய நீர் - என்னறிவையொத்த நீங்கள், இனிது கேண்ம்-நன்றாகக் கேட்பீர்கள், எனை - என்று சொல்லத்தொடங்கி,—(எ - று.)—கஉ 'ஆங்கவியில் "யாதுநுங்கருத்தென" என்பதிலுள்ள "என" என்பதனோடு தொடரும்.

தசரதமன்னவன் அமைச்சர்யாவரும் தத்தமக்கு ஏற்றஇடத்துஇருந்தபின் அவர்முகங்களையெல்லாம் பார்த்து 'ஓர்உறுதிப்பொருளெண்ணியுள்ளேன்: அதனைக் கேண்மின்' என்று கூறலாயின னென்க. அறிவு நன்மை தீமைகளைப்பாகுபடுத்துணர்த்துமாறுபோலப் பாகுபடுத்துணர்த்த வல்லுநராதலின், அமைச்சரை 'என்னுணர்வனைய நீர்' என்றான். உறுதிப்பொருள்' இனிது கேட்டற்குஉரியதாதலால், 'கேண்ம்' என்றான். கேண்ம்-கேளுமென்னுஞ்செய்யுமென் முற்றின் ஈற்றுயிர் சென்றதில் அடக்கலாம்: கேண்மினை என்பதன் விகார மென்னலுமுண்டு: "இரிந்தனேன்" என்னுஞ் சிந்தாமணிச்செய்யுளில், 'கொண்மென' என்ற விடத்து, 'கொண்மின் விகாரம்' என நச்சினார்க்கினியர் கூறியிருத்தல் காண்க. பி-ம்:—[1]மன்னனும். [2]தருமம்போல், கருமமும். [3]என்று. [4]கேட்கென, கேட்குக. (கரு)

கசு.—இதுமுதற் பதினேட்டுக் கவிகளால், தசரதசக்கரவர்த்தி மந்திரிமாரைநோக்கி, தான் வேதகாலம் அரசுசெய்து கிழத்தனத்தையடைந்தமையால் இராமனுக்கு முடிசூட்டி இனிதிருக்க எண்ணியதைத் தெரிவிக்கின்றன்.

வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர்
செய்கையி னெருமுறை திறம்ப லின்றியே

[1]னவையம்யா ணண்டவாண் டுங்கண் மாட்சியா
[2]லயமி லறுபதி ணயி ரம்மோ.

(இ - ள்.) வெய்யவன் குலம் முதல் வேந்தர் - சூரியகுலத்தில் முதல்வ ராயிருந்த அரசர்களாகிய, மேலவர் - (மனு இட்சுவாகுமுதலிய) மேலோர்க ளது, செய்கையின் - ஒழுக்கத்தில், ஒரு முறை திறம்பல் இன்றிஎ - ஒரு முறையும் வழுவுதலில்லாமலே, உங்கள் மாட்சியால் - உங்கள்பெருமையால், யான் வையம் ஆண்ட ஆண்டு-நான் உலகையாண்ட வருடங்கள், அறுபதிணை யிரம் - அறுபதினாயிரமாகும்: ஐயம் இல் - (இதிற்) சந்தேகமில்லை; (எ - று.)

யான் அறுபதினாயிரம்வருடம் உங்கள் துணையைக்கொண்டு அரசு ஆட்சி செய்தே னென்பதாம். முறையும் என்னும் உம்மை, விகாரத்தாற்றொக்கது. உங்கள் மாட்சியால் - உங்கள்பேருதவியாலென்றபடி. ஆயிரம் மோ - வினித்தல். வெய்யவன் - தபநன் என்னும் வடமொழியின் மொழிபெயர்ப்பு. பி-ம்:—[1]வையகமாண்டது நுங்கண்.வையமென்புயத்திடைநுங்கண். [2]ஐயிரண் டாயிரத்தாறுதாங்கினேன்.

(கசு)

கள. கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலந்
[1]தன்னையித் தகைதரத் தருமங் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினே
னென்னுயிர்க் [2]குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்.

(இ - ள்.) கன்னியர்க்கு - பெண்களுக்கு, அமைவு அரு கற்பின் - பொருந்துதலையுடைய அரிய கற்பினோடு, மா நிலந்தன்னை-பெரிய பூமியை, இ தகை தர - இத்தன்மையான அன்பு பொருந்தவும், தருமம் கைதர - தரு மந் தழைக்கவும் (தாங்கி), மன் உயிர்க்கு - நிலைபேறுடைய உயிர்களுக்கு, உறுவதுவ செய்து வைகினேன் - இதத்தையே செய்துகொண்டிருந்தேன்; (இனி), என் உயிர்க்கு உறுவதுஉம் செய்ய - என்னுயிர்க்கு இதத்தையுஞ் செய்வதற்கு, எண்ணினேன் - கருதினேன்; (எ - று.)

இதுவரையில் உலகிலுள்ள ஜீவராசிகளுக்கு ஹிதம்செய்துவந்தேன்: இனி என்னுயிர்க்கு ஹிதம்செய்துகொள்ள வெண்ணினேனென்பதாம். மாற் றரசரின்றி நானே ஏகசக்ராதிபதியாய் ஆண்டுவந்தன னென்பான் 'கன்னி யர்க்கமைவருங் கற்பின்' என்றும், அன்புமறனும் வழுவாது அரசுபுரிந்து வந்தனனென்பான் 'இதகைதரத் தருமங்கைதர' என்றுங் கூறினன். முன் னிரண்டடிகளில் "கட்டுடைக்காவலிற் காமர்கன்னியே" என்ற சிந்தாமணி யடி ஒப்புநோக்கத்தக்கது. மாநிலந்தன்னை யென்பதற்குத் தாங்கியென ஓர் முடிக்குஞ்சொல்வருவித்து உரைக்கப்பட்டது. என்னுயிர் - இராகுதலையென் றாற்போல, ஒற்றுமைக்கிழமைப்பொருளில்வந்த ஆறாம்வேற்றுமைத்தொகை. கன்னி - கந்யா; ஆரியந்திரிந்த வடசொல். அமைவரும் என்பதனை "வரிப் புனைபந்து" என்பதுபோலக்கொண்டு, பொருந்திவருங் கற்புஎன்றலுமாம்.

கற்பு - தொழிற்பெயர்: பாதிவ்ரத்யத்துக்கு ஆகுபெயர்: பாதிவ்ரத்யத்தைக் கற்பென்ற தென்னையெனின்,—கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறு வழிபடுகவெனவும் இருமுதுகுரவர் கற்பித்தலானும், அந்தணர் திறத்தும் சான்றோர்தேவதத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கந் தலைமகன் கற்பித்தலானும் என்க. உடம்புஅழியினும் உயிர் தானழியாது வேறுடம்புபெற்றுகிற்கு மாதலின், 'மன்னுயிர்' என்றான். உயிரெனப்பொதுப்படக்கூறியவதனால், விலங்கு, பறவை முதலியவும் கொள்க. உறுவதுசெய்தல் - பகை பிணி முதலியவற்றால் துன்பம் வராமற் காத்தல். பி-ம்:—[1]தன்மையிற். [2]உறுவது. (கஎ)

கஅ. விரும்பிய மூப்பெனும் வீடு [1]கண்டையா
[2]னிரும்பிய னைந்தனு [3]மிசைந்த யாஅனையும்
பெருமம்பெயர்க் கிரிகளும் [4]பெயரத் தாங்கிய
வருமம்பொறை யினிச்சிறி தாற்ற வாற்றுமேலன்.

(இ - ள்.) விரும்பிய-(தவத்தை) விரும்புமாறு, மூப்பு எனும் வீடு-மூப்பென்ற வீட்டை, கண்ட—, யான் - நான், இரு பியல் அனந்தன் உம் - பெரியபிடரையுடைய ஆதிசேஷனும், இசைந்த யானை உம் - (திக்குக்களிற்) பொருந்திய யானைகளும் [திக்கஜங்களும்], பெரு பெயர் கிரிகள் உம் - மிக்க பிரசித்திபெற்ற குலாசலங்களும், பெயர - (தம் பாரம்) நீங்கியிருக்கும்படி, தாங்கிய-சுமந்திருந்த, அரு பொறை - (பொறுத்தற்கு) அரிய இவ்விராச்சிய பாரத்தை, இனி - இனிமேல், சிறிது-கொஞ்சமும், ஆற்ற - சுமக்க, ஆற்ற லேன் - வல்லேனல்லேன்; (எ - று.)

என்னுயிர்க்கு உறுதிசெய்யவெண்ணினேன என்ற மன்னவன், இப்போது மூப்புமேலிட்டுள்ளதனால் இராச்சியபாரத்தைச் சுமத்தல் எனக்கு வருத்தமாயிருக்கின்ற தென்கின்றான். 'மூப்பெனும் வீடுகண்ட' என்றமையால், புருஷார்த்தங்களிற்சிறந்த வீடு காணுமை சொல்லாமலேயமையும். பிரவிருத்திமார்க்கத்தைவிட்டு நிவிருத்திமார்க்கத்திற் செலுத்துவதனால் 'மூப்பெனும்வீடு' எனப்பட்டது. தவத்தில் மனஞ்செல்லும்படி செய்கின்றது மூப்பு என்பான் 'விரும்பிய மூப்பு' என்றான்; இராச்சியத்தை யாண்டு அனுபவித்தவனுக்கு இளைப்பாறுவதற்கு ஏது வாதலால், அம்மூப்பு விரும்பப்படுவதாயிற் றென்றலும் ஒன்று. ஆதிசேஷனும், திக்கஜங்களும், குலாசலங்களும் தாங்கும் பூபாரத்தை அரசன் தன்மகிமையால் தாங்குகிறானென்பது, நூற்றுணிபு. பொறை - சுமக்கப்படுவது; செயப்படுபொருள்விகுதிபெற்றுநின்ற பெயர். பி-ம்:—[1]கண்டு. [2]இரும்பயில். [3]இனத்த, எழினல். [4]பொரிதும். (கஅ)

கஆ. † நங்குலக் குரவர்க ணையபி னீங்கிரர்
தங்குலப் புதல்வரே தணி தாங்கப்போய்

† "குணவத்ஸு தோபிதஸ்ரியः பரிணுமேஹி திலீபவம்ஶஜாः-பதவீம் தருவல்கவாஸஸாம் ப்ரயதாஸ் ஸம்யமிநாம் ப்ரபேதிரே" என்ற ரகுவம்ஶ ஸ்லோகம் இங்குக் காணத்தக்கது.

வெங்குலப் புலன்கெட வீடு நண்ணினு
[1]ரெங்குலப் புறுவரென் றெண்ணி [3]நோக்குகேன்.

(இ - ள்.) 'நவையின் நீங்கினர் - குற்றமற்றவர்களாகிய நம் குலம் குரவர்கள் - எங்கள் குலத்திலவதரித்த பெரியோர்கள், (முதுமைப்பருவத்தில்), தம் குலம் புதல்வர்வ - தம்முடைய மேலான புத்திரர்களே, தரணி தாங்க - பூபாரத்தைத்தாங்க, போய் - (தாம் அரணியத்திற்குப்)போய், வெம் குலம் புலன் கெட-வெவ்விய கூட்டமாகிய ஐம்புலவாசை கெட, வீடு நண்ணினர் - மோக்ஷமடைந்தார்கள், எங்கு உலப்பு உறுவர் - எங்குமுடிவு பெறுவார்கள்?' என்று—, எண்ணி நோக்குகேன் - எண்ணிப்பார்க்கின்றேன் [சிந்திக்கிறேன்]; (எ-று.)—எண்ணிப்பார்க்க, அவர்கள் உலப்பற்றவரா யிருக்கின்றனரென்றபடி.

எங்கள்குலத்துமுன்னோர் குற்றமறஅரசாட்சிசெய்து மூப்பு அடைந்தபிறகு தமதுபுதல்வர் அரசாளத் தாம் ,தவஞ்செய்து மோட்சமடைந்தவரை எண்ணிப்பார்க்க, அவர்கள் மிகப்பலராயிருக்கின்றனரென்பதாம். "நங்குலத்துதித்தவர் நவையுணீங்கின, ரெங்குலப்புறுவர்களெண்ணில்" என்று மேல் திருவடிசூட்டுபடலத்தில் இச்செய்யுளடிகளின் சொல்லும்பொருளும் அமைந்துவருதல் காண்க. எங்குஉலப்புறுவர் - அளவிடமுடியாது மிகப்பலரென்றவாறு. [1]எங்கு உலப்புறுவனென்று பாடங்கொண்டு-(நான்) எவ்வாறு ஒழிவுபெறுவேனென ஓதுவாருமுளர். குரவர்-குரவஃ என்னும் வடமொழியின்திரிபு. ஐம்புலன் - சுவையொளியூறோசைநாற்றமென்பன. பி-பி:— [2]எண்ணின். [3]நோக்குவேன், நோக்கிலேன். (ககூ)

20. வெள்ளநீ [1]ருலகினில் விண்ணி னுகரிற்
றள்ளருஞ் பகையெலாந் தவிர்த்து நின்றயான்
[2]கள்ளரிற் கரந்துறை காம [3]மாதியா
[4]முள்ளுறை பகைஞருக் [5]கொதுங்கி வாழ்வெனோ.

(இ - ள்.) வெள்ளம் நீர் உலகினில்-கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்திலும், விண் (உலகு) இல்-சுவர்க்கலோகத்திலும், நாகர் (உலகு) இல்-பாதாளலோகத்திலும், தள்ள அரு பகை எலாம்-நீக்குதற்குஅரிய பகைவரையெல்லாம், தவிர்த்து நின்ற-ஜயித்துநின்ற, யான்-நான், கள்ளரின்-கள்வர்போல, கரந்து உறை-மறைந்துவசிக்கிற, காமம் ஆதி ஆம் - காமம் முதலாகிய, உள் உறை பகைஞருக்கு - உட்பகைவர்க்கு, ஒதுங்கி வாழ்வெனோ - அஞ்சிவாழ்வேனே? [வாழ்தல்தக்கதன்று என்றபடி]; (எ - று.)

மூவுலகிலுமுள்ள புறப்பகைக்குப் பின்னிடாது பொருதுவெற்றிபெற்ற நான் அகப்பகைக்குஅஞ்சி வாழ்தல் தகுதியோ? அன்று: ஆதலால், இதுவரைப் புறப்பகைவரை வென்ற யான் அகப்பகையை வெல்லக்கருதியுள்ளேனென்றவாறு. காமமாதி என்றது-காமம், குரோதம், லோபம், மோஹம், மதம்,மாத்ஸர்யம் என்பவற்றை; இவைகளை வடநூலார் அரிஷட்வர்க்கமென்

பர். தமிழ்நூலார் காமம், வெகுளி, மயக்கமென்ற மூன்றில் அவ்வாற்றுள்ளும் அடக்குவர். ஞானவரசனைக்கண்டு பயப்படுதலின் 'கள்ளரின்' என்றும், அஞ் ஞானவிருளினுல் மறைந்துகிடத்தலின் 'கரந்து' என்றும் கூறினர். வாழ் வெனே, ஓகாரம் - தகுதியின்மை குறிக்கும். பி-ம்:—[1]உலகிடை. [2]கள்வரிந். [3]ஆதியாய், ஆதியா. [4]உள்ளுறுமுற்பகை, உள்ளுறைபகைவருக்கு. [5]ஒளித்து. [6]வாழ்வதோ, வாழ்வலை, வாழலோ. (உ0)

உக. [1]பஞ்சிமென் றளிரடிப் பாவை கோல்கொவ்
வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வென்றுளேற்
கெஞ்சலின் மனமெனு மிழுதை [2]யேறிய
வஞ்சுதேர் வெல்லுமீ தருமை [3]யாவதோ.

(இ-ள்.)பஞ்சி மெல் தளிர் அடி-செம்பஞ்சுஊட்டிய மெதுவாகிய தளிரை யொத்த பாதங்களையுடைய, பாவை கைகேயியானவள், கோல் கொள-சாட் டைகொண்டு சாரத்தியஞ்செய்ய, வெம் சினத்து அவுணர் தேர் பத்துஉம் - வெவ்விய கோபத்தையுடைய அசுரர்களின் பத்துத்தேர்களையும், வென்று உளேற்கு-வென்றிருப்பவனுகிய எனக்கு, எஞ்சல் இல்-குறைவுஅற்ற, மனம் எனும் - மனமென்கிற, இழுதை - பேய், எறிய-எறிகடத்துகிற, அஞ்சு தேர்- ஐந்துதேர்களை, வெல்லும் ஈது-வெல்லுந்தாழிலாகிய இது, அருமை ஆவது ஓ - அருமையாகக்கூடியதோ? [அருமையன் றென்றபடி]; (எ - று.)

சம்பராதியரது பத்துத்தேர் வென்ற எனக்கு ஐந்துதேர் வெல்லுவது அருமையாகக்கூடுமோ? கூடாதென்பதாம். இது - தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணியாம். இதனுல் ஐம்பொறிகளையடக்குதல் தனக்கு எளிது என்கின்றனன். அவுணர் தேர்பத்து என்றது-அவுணரைக்கொல்லப் பத்துத் திசையிலுஞ்சென்றதேர் என்றவாறு; இதுபற்றியே, இவனுக்குத் தசரதனென் ற பெயர்வந்ததும்.பத்துத்திசையாவன-நான்குபெருந்திக்குக்களும், நான்கு மூலைத்திக்குக்களும்,விண்ணும்,மண்ணும். மனத்துக்கு எஞ்சலின்மையாவது- புலநுகர்ச்சியின் பூர்த்தி. அஞ்சுதேர்-ஐம்பொறி; அவை - மெய், வாய், கண், மூக்கு,செவியென்பன. பாவை-ஆகுபெயர். பாவை கோல்கொள—"மடந்தை கோல் கொள்ள" என்றுர் சிந்தாமணியாரும். கோல்கொள்ளுதலாகிய கார ணம் தேரைச் செலுத்தலாகிய காரியத்தை யுணர்த்திற்று; உபசாரவழக்கு. மனமெனுமிழுதை - "இழுதைநெஞ்சினேன்" என்பர் பள்ளிபடைப்படலத் தில். பி-ம்:—[1]பஞ்சின், பஞ்சு. [2]எவிய. [3]ஆவதே. (உக)

உஉ. ஓட்டிய [1]பகைஞர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரோற் பரம ஞானட்போய்த்
தெட்டவ ரல்லரோற் செல்வ [2]மீண்டென
விட்டவ ரல்லரே லியாவர் [3]வீடினார்.

(இ - ள்.) ஓட்டிய - (தால்வகைச்சேனையுட்ன்) பொருந்திய, பகைஞர்- பகைவர், வந்து - எதிர்த்துவந்து; உருத்து சினந்துசெய்த, போரிடை-போர்க்

களத்தில், பட்டவர் அல்லர்எல்-இறந்தவரல்லராயின்,-பரமம் ஞானம் போய் தெட்டவர் அல்லர்எல் - மேலாகிய ஞானமானது கைவந்து தெளிந்தவரல்ல ராயின்,—செல்வம் ஈண்டு என விட்டவர் அல்லர்எல் - சகலஐசுவரியமும் இவ்வுலகத்தே யென்று (அந்தச் சகலஐசுவரியத்தையும் துறந்து) கைவிட் டவர் அல்லராயின், யாவர் வீடு உளார் - யாவர் மோக்ஷத்தை யடைபவ ராவார்? (எ - று.)

மன்னராயினோர், கள்த்திடைமடிந்தாயினும் உண்மை ஞானம்பிறந்து தெளிந்தாயினும், செல்வநிலையாமைநோக்கித் துறந்தாயினும் வீடுபெறலாமே யன்றி வேறுவகையால் வீடுபெற முடியா தென்பது கருத்து. பரமஞானமா வது - ஈசுவரனே உபாயமும் உபேயமு மென்றிருக்கை. முன்னிரண்டு தனக்கு இல்லாமையால், மூன்றும்வழியே தான் மேற்கொள்ள வேண்டிய தாயிற்றெனத் தசரதன் கூறுகின்று னென்க. ஈண்டென-விரைவாகஎனினு மாம். தெட்டவர் - தெளிவு என்னும் பொருளுள்ள தெட்டுஎன்னும் பெயர்ச் சொல்லினடியாகப் பிறந்தபெயர். பி-ம்:—[1]பகைவர். [2]உண்டென, உண்டெ னல். [3]வீட்டுளார்.

(உஉ)

உங. [1]இறப்பெனு [2]மெய்ம்மையை [3]யிம்மை யாவர்க்கு
மறப்பெனு மதனின்மேற் கேடு .மற்றுண்டோ
[4]துறப்பெனுந் தெப்பமே [5]துணைசெ யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க [6]லாகுமோ.

(இ - ள்.) இம்மை-இப்பிறப்பில், யாவர்க்குஉம்-எல்லாருக்கும், இறப்பு-மரணம் (உண்டு), எனும் என்கிற,மெய்ம்மையை உண்மையை, மறப்பு எனும் அதனின் மேல் - மறத்தலென்பதற்கு மேற்பட, கேடு-கெடுதி, மற்று உண்டு ஓ - வேறுண்டோ? [இல்லை]; துறப்பு எனும் - துறத்தலென்கிற, தெப்பம் எ - மிதவையே, துணை செயாவிடின்-உதவிசெய்யாவிட்டால், பிறப்பு எனும் பெரு கடல் - பிறவியென்கிற பெரியகடலினின்று, பிழைக்கல் ஆகும் ஓ - தப்புதல் கூடுமோ? [கூடாது]; (எ - று.)

"சாவாதவில்லை பிறந்தவுயிரெல்லாம்"என்பது முதலியவற்றுற் கூறிய இறப்புண்மையை ஒருவன் மறந்தானெயின்,அவனுடைய மனம் திடங்கொண்டு மிக்கதீவினையுட் புகுத்த, அதனற் பெரும்பாவம் விளைந்து நரகத்துள் அழுந்தி நிற்குமாறு நேரும்: ஆகையால், உலகத்திற் பிறந்தோன் 'மரணம் நேர் வது திண்ணம்' என்ற இவ்வுண்மையை மறவாது மனத்துக்கொண்டு, பிறவி யை யொழித்தற்கு இன்றியமையாத துறவினை மேற்கொள்ளவேண்டும். அங் ஙனம் துறவை மேற்கொண்டால்,பிறப்பெனும்பெருங்கடலைப் பிழைக்கலாகு மென்றவாறு. மற்று - இங்கு, பிறிதென்னும் பொருளது. ஓகாரமிரண்டும்-எதிர்மறைப்பொருளன. துறத்தலைத் தெப்பமாகவும், பிறவியைக்கடலாகவும் உருவகப்படுத்தினமையின், இது - உருவகவணி. துணைசெய்தல் - கடத்

தற்குக் கருவியாய்நிற்றல். பிழைத்தல் - கரைசேர்தல். பிறவியைப் பெருங் கடலென்றது-காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றிவருதலின்: "பிற விப்பெருங்கடல்" என நாயனார் கூறியதுங் காண்க. (9 - பீ:—[1]இறப்பரு. [2]மெய்ம்மையே, மென்மையை, மேன்மைய. [3]இன்மையென்றதை. [4]துறப் பருந். [5]துணைச். [6]ஆவதோ. (உங)

உச. அருஞ்[1]சிறப் பமைவருந் துறவு மவ்வழி
தெரிஞ்[2]சுற வெணமிகுந் தெளிவு மாய்வரும்
பெருஞ்[3]சிறை யுளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை [4]கடத்தலி [5]னினியது [6]யாவதே.

(இ-ள்.) அரு சிறப்பு அமைவரும் துறவுஉம்-(அடைதற்கு) அரிய சிறப் புப்பொருந்திய துறவும், அ வழி - அந்தத்துறவுமார்க்கத்தை, தெரிஞ்சு - தெரிந்துகொள்ளுதலால் (உணடாகிற), உறவு என - (அத்துறவுமார்க்கத் துக்கு) இனமென்று, மிகும்-சிறந்துள்ள, தெளிவுஉம்-தெள்ளுணர்வும், ஆய்- ஆகி, வரும்-வருகின்ற, பெரு சிறை-பெரியசிறைகள் [சிறகுகள்],உளஎனின்- உண்டாயின், பிறவி என்னும் - பிறப்பென்கிற, இ இரு சிறை கடத்தலின்- இத்தப் பெரியசிறையை [காவற்சாலையை]க் கடப்பதினும், இனியது-இனி மையைத்தருவது, யாவது :- எது? [ஒன்றுமில்லை]; (எ - று)—ஏ-ஈற்றசை.

ஆன்மாவாகிய பறவைக்குத் துறவையடைதலே மறுமைப்பயனைக்கூட்டு விக்கு மென்கிற தெளிந்தஅறிவும், அத்தெள்ளுணர்வினைப் பெற்றதற்கு ஏற் பத் துறவினை மேற்கொள்ளுதலு மென்ற இருசிறைக ளுளவாயின், பிறவிச் சிறையிலிருந்து தப்பி விண்ணுலகத்திற்குப் பறந்துசெல்லலா மென்றவாறு. "பாடக்ரமத்தினும் பொருள்கொள்ளும்முறையே மிக்கது [பாடக்ரமாபே க்ஷயா அர்த்தக்ரமஸ்ய பலீயஸ்த்வம்]" என்ற நியாயம்பற்றித் துறவினைமுந் திக்கூறி, அதனைப் பெறுதற்குரிய தெள்ளுணர்வைப் பிற்திக்கூறினாராயி னும், தெள்ளுணர்வே துறவைமேற்கொள்ளுதற்குக் காரணமாகையால், இவ் வாறன் கருத்துக்கொள்ளப்பட்டது: "உபாப்யாமேவபட்சாப்யாம் ஆகாஶபட் சிணம்க்ரமிः-ததைவஜ்ஞானகர்மப்யாம் ப்ராப்யதேபுருஷோத்தமः [வானத்தில் இரண்டுசிறகுகளினால் பறவைகட்குச் செல்லுதல் இயலும்: அவ்வாறே தெள்ளுணர்வும் அதற்கு ஏற்ற செயலும் என்பவைகளால்தான் (இந்த ஸம் ஸாரத்தினின்று) புருஷோத்தமனை திருமாலை யடைதல் கூடும்]" என்ற மேற்கோள் இங்குக் காணத்தக்கது. அருஞ் சிறப்பு அமை வரும் என்பதற்கு- அடைதற்குஅரிய மோட்சத்தை யடைதற்குக் காரணமான என்றும் உரைக்க லாம். சிறப்பென்பது மோட்ச மென்னும் பொருள தாதலை "சிறப்பீனும்" என்ற குறளிலும் காண்க. இது - ஏகதேசவுருவகம். சிறையென்பது - தடுத்துக்காத்தல்: இது இப்பொருள்தாதலை "சிறைகாக்குங்காப்பெவன் செய்யும்;" "சிறைகனியுடைந்த சேயரிமழைக்கண்;" "கொலைச்சிறையுய்ந்து போகுமொருவனை" என்றாற்போல்வன பலசெய்யுளாலும், 'சிறைக்கால், நீர்ச்

சிறை' என்னும் வழக்காலும் உணர்க. இஃது - ஆகுபெயராய்ச் சிறைவைத் தானென்றதிற்போலச் சிறைக்கோட்டத்தை யுணர்த்திற்று. தெரிஞ்சு - தெரிந்துஎன்பதன் போலி. பி ம்:—[1]சிறை. [2]உறவாவரும், உறவெனவரு, உறவாய்வரு, உறவாமிகு. [3]சிறகு. [4]கிடத்தலின். [5]இனிது. [6]யாவதோ. ()

உரு. இனியது போலுமிவ் வரசை யெண்ணுமோ
துனிவரு [1]நலனெனத் [2]தொடர்ந்து [3]தோற்கலா
நனிவரும் பெருட்பகை [4]நவையி னீங்கியத்
தனியர [5]சாட்சியிற் ருழு முள்ளமே.

(இ - ள்.) து(ன்)னி வரும் - நெருங்கி வருகின்ற, நலன் என-இன்பம் என்று சொல்லும்படி, தொடர்ந்து - (ஒன்றன்பினொன்றுகத்) தொடர்ந்து, தோற்கலா - தோல்வியடையாது, நனி வரும் - மிகுதியாகவருகின்ற, பெரு பகை - (விஷயங்களாகிய) பெரியபகைவர்களால் வரும், நவையின் நீங்கி குற்றத்தினின்று நீங்கி, அ - அந்த, தனி-ஒப்பற்ற, அரசு ஆட்சியில்-மோக்ஷ சாம்ராஜ்யத்தையாளுவதில், தாழும்-விரும்புகின்ற, உள்ளம்-(என்) மனமானது, இனியதுபோலும் இனியது போலக்காணப்படுகிற, இஅரசை-இவ்வுலகத்தரசாட்சியை, எண்ணும் ஓ - (ஒரு பொருளாக) மதிக்குமோ? [மதியாது].

சுகதுக்கங்களைவிட்டு மோட்சத்தையடைய விரும்பும் என் மனம் இவ்வுலக வாழ்வை விரும்பா தென்பதாம். விஷயசுகங்கள் இன்பம்பயப்பன போலத் தோன்றி ஆன்மாவை நற்கதியிற் சேரவொட்டாது கெடுத்தலால் அவற்றை 'நலனெனத் தொடர்ந்து தோற்கலாநனிவரும் பெரும்பகை' என்றும், இவ்வுலகத்தரசாட்சி வீளைவில் துன்பரூபமாயிருத்தலால், 'இனியது போலு மிவ்வரசு'என்றும்கூறினன். கீழ் மூன்றுகவிகளால் துறவின்சிறப்பை யுணர்த்தி, இக்கவியால் அவ்வகைத்துறவில் தன்மனம் செல்வதைத் தெரிவிக்கின்றான். பகை - ஆகுபெயர். பி - ம்:—[1]புலனென. [2]தொழுது. [3]தோற்கிலா. [4]நவையு னீங்கிய. [5]ஆட்சியுட்டாழும். (உரு)

உசு. [1]உம்மையா [2]னுடைமையி னுலகம் யாவையுஞ்
செம்மையி னேப்பிரல் லறமுஞ் [3]செய்தனென்
னிம்மையி னுதவி [4]நல் லிசை [5]ந டாயநீர்
ரம்மைய [6]முதவுதற் [7]கமைய [8]வேண்டுமால்.

(இ - ள்.) யான்-நான், உம்மை உடைமையின்-உங்களை (மந்திரக்கிழவராக)ப் பெற்றிருத்தலால், உலகம் யாவையும் - எல்லாவுலகங்களையும், செம்மையின் ஓம்பி - முறைமைப்படி பாதுகாத்து, நல் அறமும் செய்தனென் - சிறந்த தருமங்களையும் செய்தேன்; (இப்படியனைக்கு). இம்மையின் உதவி - இவ்வுலகத்துக்கு வேண்டுங்காரியங்களில் உதவிசெய்து, நல் இசை நடாய - நல்லபுகழை யுண்டாக்கிய, நீர்-நீங்கள், அம்மையும்-அவ்வுலகப்பேற்றுக்கும், உதவுதற்கு-துணைசெய்தற்கு, அமைய வேண்டும்-உடன்படவேண்டும்;(எ று.)

நீங்கள் துணையாயமைந்தமையால் முறைதிறம்பாது இராச்சியத்தைப் பாதுகாத்து அறத்தையும் பேணினேன்: அப்படிப்பட்ட நீங்கள் மறுமையில் நற்கதி யடைவதற்கும் துணைசெய்யவேண்டு மெனத் தசரதன் அம்மந்திரி மாரை வேண்டுகின்றனனென்க. சகலசற்குண ஸாகரமாகிய சருவேசுவரனைப் பிள்ளையாகப் பெற்றுவந்த புகழுக்கு இவர்களின காரணமென்பான் 'இம்மையி னுதவி நல்லிசை நடாயநீர்' என்றான். அமைபவேண்டும் - வியங்கோண் முற்று. பி-ம்:—[1]உம்மைபோல, உம்மையென். [2]உடைமையிவ், உடைமையால். [3]செய்தனன். [4]என்னிசை. [5]நடாயினீர்க்கு, நடாயினீர். [6]அருளுதற்கு. [7]அருள, ஐயம். [8]வேண்டுமோ. (உசு)

உள. இழைத்த[1]தீ வினைதனைக் [2]கடக்கு மெண்ணுறத்
தழைத்தபே ரருளுடைத்[3]தவத்தி னுகுமற்
[4]குழைத்ததே தா [5]ரமிர்தினைக் கோட னீக்கியே
றழைத்ததீ விடத்தினை யருந்த லாவதோ.

(இ - ள்.) இழைத்த - (ஒருவன் தான்) செய்த, தீவினைதனை-பாவத்தினின்று, கடக்கும் - தப்பவேண்டுமென்கின்ற, எண் - நினைவு, உற-தோன்ற, (அந்த எண்ணத்தை நிறைவேற்றுதல்), தழைத்த - மிகுந்த, பேர் அருள் உடை - பெரிய அருளையுடைய, தவத்தின்-தவத்தினால்: ஆகும் எல்-அமையுமாதலால்,—குழைத்தது - அமைக்கப்பட்டதாகிய, ஓர் - ஒப்பற்ற, அமிர்தினை-அமிருதத்தை, கோடல் - பெற்றுக்கொள்வதை, நீக்கி - விட்டிட்டு, வேறு அழைத்த - (அவற்குப்) பிரதியாகச் சொல்லப்பட்ட, தீ விடத்தினை-கொடிய விஷத்தை, அருந்தல் - உண்ணுதல், ஆவதுஓ-தகுமோ [தகாது]; (எ-று.)—அதுபோலத் தவத்தினைச்செய்யாது சமுசாரத்துள் முழுகியிருத்தல் கூடாது என்றபடி.

தவத்தினால் எல்லாம் எய்தலாயிருக்க அதனைவிட்டு வேறுகருமங்களில் முயலுதல், அமுதத்தைவிட்டு விஷத்தை யுண்பதுபோலு மென்பதுகருத்து. குழைத்தல் - முக்கனி சக்கரை கற்கண்டு பால் முதலியவற்றைக் கூட்டிக் குழைத்தலுமாம். இந்தச்செய்யுளில், தீவினையைக்கடத்தல் தவத்தாலாவதாயிருக்க, அமுதத்தினைநீக்கி விடத்தை யருந்தலாகாது என்று முன்னிரண்டடிகளிற் கூறியவர்ணியத்தில் வர்ண்யமல்லாத ஒன்றைத் தொடர்புபடுத்திக் கூறியது - வனப்புநிலையென்னும் **ललितालङ्कारम्**. "தவத்தின் முன்னில் லாதாம்பாவம்" என்ற நாலடியாராலும் தவத்தினால் தீவினையைப்போக்க லாகுமென்பதை யறியலாம். தவமுடையார்க்கு அருள் சிறந்ததாகலின், 'பேரருளுடைததவம்' எனப்பட்டது. பி-ம்:—[1]தொல்வினையையும், தீவினையையும். [2]கடக்கவெண்ணுதல். [3]தவத்தினுக்குமற், தவத்தினுதுமே. [4]குழைத்தபேர். [5]அமிர்தினைக்கோடனீங்கி, அமுதுடைக்கோடீக்கி. [6]ஆதுமோ. ()

உஎ. [1]கச்சையங் கடகரிக் [2]கழுத்தின் [3]கண்ணுறப்
பிச்சமுங் கவினையும் பெய்யு மின்னிழ

னிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
வெச்சிலை [4]நுகருவ [5]தின்ப [6]மாகுமோ.

(இ - ள்.) கச்சை-கழுத்திடுகயிற்றையுடைய, கடம் கரி-மதயானையின், கழுத்தின்கண் - பிடர்மீது, உற-பொருந்த, பிச்சம்உம் கவிகைஉம் பெய்யும்-பீலிக்குஞ்சங்களும் வெண்கொற்றக்குடையும் கொடுக்கின்ற, இன் நிழல் - இனியநிழலானது,நிச்சயம் அன்று எனின் சாசுவதமல்லவென்றால், நெடிது நாள் உண்ட - அநேகநாள்களாயநுபவித்த, எச்சிலை உச்சிட்டத்தை [மிகுதியை], நுகருவது - உண்பது, இன்பம் ஆகும்ஓ - இன்பந் தருவதாகுமோ? [ஆகாது]; (எ - று.)

யானையின்மே லேறிக்கொண்டு குடை சாமரை முதலிய விருதுகளுடன் பவனிவரும் இவ்வரசச்செல்வம் நிலையில்லை யென்றால், வெகுநாளனுபவித்த இதைமே மறுபடியும் அனுபவித்துக்கொண்டிருத்தல் இன்பந் தராது; ஆதலால், மறுமையை நாட வேண்டுவதே நல மென்பது கருத்து. "ஒருநாயகமா யோட வுலகுடனுண்டவர், கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர், பெருநாடுகாண விம்மையிலே பிச்சைதாங்கொள்வர், திருநாரணன்றாள் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினீரே," "யானையெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச், சேனைத்தலைவராய்ச் சென்றோரும் - ஏனை, வினையுலப்ப வேறுகிவீழ்வர் தாங்கொண்ட, மனையாள மாற்றோர்கொள" என்பவை முதலியன காணத்தக்கன. முதலடி - முற்றுமோனை. கச்சையங்கடகரி, அம் - அல்வழிச்சாரியை. பிச்சம் - பிஞ்ஞமென்னும் வடமொழிச்சிதைவு. பி-ம்:— [1]தச்சடு. [2]பிடரில். [3]கண்ணகன். [4]நுகர்வதின், நுகருமிது, நுகருமது. [5]இழுக்கம். [6]ஆவதோ. (உஅ)

உகூ. மைந்தரை யின்மையின் வரம்பில் காலமு
நொந்தன னிராமனென் னோயை நீக்குவான்
வந்தன [1]னினியவன் வருந்த யான் பிழைத்
துய்ந்தனன் போவதோ ருறுதி யெண்ணினேன்.

(இ-ள்.) மைந்தரை இன்மையின்-புத்திரரை யுடையரல்லாமையால், வரம்பு இல் காலமும்உம்-அளவற்றகாலமும், நொந்தனன் - (மனம்)வருந்தினேன்;என் நோயை நீக்குவான்-என்மனவருத்தத்தைத் தீர்க்கும் பொருட்டு, இராமன் வந்தனன்-இராமன் வந்துபிறந்தான்; இனி அவன் வருந்த - இனி அவன் வருத்தப்பட, யான் பிழைத்து - நான் பிழைத்து, உய்ந்தனன் போவது - கடைத்தேறிப்போவதாகிய, ஓர் உறுதி-ஓர் உறுதியான காரியத்தை, எண்ணினேன் - ஆலோசித்தேன்; (எ - று.)

இராமனிடத்துப் பூமியைக்காக்கும் பொறுப்பை வைத்திட்டு நான் துறக்க வெண்ணினேன் என்பது கருத்து.மற்றைச் செல்வமனைத்தும் இருந்தும் முக்கட்செல்வம் ஒன்று இல்லையாதல் அனையனைத்தும் இல்லையாற்போ

லாகி மனத்துப் பெருவருத்தத்தை விளக்கு மாதலால், 'மைந்தரையின்மை யின் வரம்பில்காலமும் நொந்தனன்' என்றும், இராமனென்றசொல்-மகிழச் செய்பவனென்று பொருள்படுதலால், அவன் என்னுயிரை நீக்க எனது தவத் திலனென்றித் திருவுளமிரங்கித் தானேவந்து தோன்றினனென்பான், 'இரா மன் வந்தனன்' என்றும் கூறினன். தசரதன் மனம் நொந்ததற்குக்காரணம் தான் காத்துவந்த பிரசைகள் தன்காலத்துக்குப்பின் காப்பாரில்லாமற்போவ ரேயென்ற கருத்தினை லாகும்.

இனி இப்பாட்டில், அவன்வருந்த யான்பிழைத்துப்நன்போவதோ நூறுதி யெண்ணிலனென் றெனஞ் சொற்றொடரால் - அவன் நாடுதுறந்து காடுசென்று வருந்த, யான் அச்சமயத்தில் இவ்வுடலைத்துறந்து பொன்னுல போவதாகிய ஒருறுதியை யெண்ணிலனென மேல்விளைவைக் குறிப்பிக் கும் ஓர் கருத்துத் தோன்றுதலும் காண்க. பி - ம்:—[1]அவனினி. (உசு)

உ0. இறந்திலன் செருக்களத் திராமன் றாதைதா
னிறந்தலை [1]நிரம்பழுப் படைந்த பின்னருந்
துறந்தில [2]னென்பதோர் சொல்லுண் டாயபின்
[3]பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ.

(இ - ள்.) 'இராமன் தாதை - இராமன்தந்தையான தசரதன், செரு களத்து இறந்திலன்-போர்க்களத்தி லிறந்தானில்லை; நிரம்ப மூப்பு அடைந்த பின்னர் உம் - மிகுதியாகக் கிழத்தனத்தை யடைந்த பிறகும், அறந்தலை - தருமமார்க்கத்தினின்று, துறந்திலன் - (இருவகைப்பற்றுக்களையும்) துறந்தா னில்லை,' என்பது - என்பதாகிய, ஓர் சொல் - ஒருபழிச்சொல், உண்டு ஆய பின் - உண்டானபின்பு, பிறந்திலன் என்பதின்-பிறந்திலை னென்பதினும், பிறிது உண்டாகுமோ - வேறுஉண்டோ? (எ - று.)—தான் - அசை.

பிறவிப்பயனெய்தாமையின் 'பிறந்திலனென்பதிற்பிறிதுண்டாகுமோ' என்றான். "ஓட்டிய பகைஞர்" என்னும் கவியிற் சொல்லிய பொதுத்தன் மையை இங்குத் தனக்குஆக்கிக்கூறுகின்றான். பிறந்ததன் பயனையடையாத மாந்தர் பிறந்தும் பிறவாதாரேயாவரென்க: "ஆற்ற, வறஞ்செய் தருளுடை யீராகுமின் யாரும். பிறந்தும்பிறவாதாரில்" என்ற காலடி இங்குக் காணத் தக்கது. அறமாவது - மநுமுதலியநூல்களில் விதித்தன செய்தலும், விலக் கியனவொழிதலும். தாதை - தாதஃ என்னும் வடமொழிச்சிதைவு. பி - ம்:— [1]நிரம்பி. [2]என்றது. [3]பிறந்தனனென்றலாற், பிறந்திலனென்னலாற், பிறந் திலனென்றசொற். (உ0)

உக. பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாந்
திருமகண் மணவினை தெரியக் கண்டுயா
னரு[1]மக ணிறைகுணத் தவனி மாதெனு
மொருமகண் மணமுங்கண் [2]டுவப்ப [3]வுன்னினேன்.

(இ - ள்.) பெரு மகன் - ஆணிற்சிறந்தோனாகிய ஸ்ரீராமன், என் வயின் பிறக்க - என்னிடத்திற் பிறக்க, (அவ்விராமனுக்கு), சீதைஆம்-சீதையாகிய,

திருமகள்-திருமகளது, மணவினை-மணக்கோலத்தை, தெரிய கண்ட யான்-கண்ணாரக் கண்ட நான், அரு மகள்-அருமையாகிய பெண்ணிற்குரிய, நிறை குணத்து-நிறைத்தகுணத்தையுடைய [கற்பையுடைய], அவனி மாது எனும்-பூமிதேவியென்கிற, ஒரு மகள்-ஒரு பெண்ணினது, மணம் உம்-மணக்கோலத் தையும், கண்டு உவப்ப-கண்டுகளிக்க, உன்னினேன்-எண்ணினேன்; (எ-று.)

கீழே தான் துறக்து நற்கதிபெறவேண்டு மெனக் கூறின தசரதன், 'இராமனுக்குத் திருமணம் நடந்ததைக் கண்டு களித்த யான் பட்டாபிஷேகஞ் செய்வித்துப் பார்க்கவும் பேராக்கொள்கின்றேன்' என்கின்றன னென்க. பெருமகன், திருமகள், அவனிமாது என்னுஞ் சொன்னிலைபால் 'பெருமானுக்குப் பிராட்டிகளிருவருள் பூதேவியின்பாகத்தைக் கண்டு களித்தேன்; இனிப் பூதேவியின் பாகத்தைக் காணவிரும்புகின்றேன்' என்றதாகப் பொருள் தோன்றுமாறு அறிக. பெருமகன் = புருஷோத்தமன். அகழ்வாரைத் தாங்கு மவளாதலால், பூமிதேவியை, 'நிறைகுணத்தவனி' என்றது. பி-ம்:— [1]மகன், மறை. [2]உவப்பது. [3]ஆயினேன், ஓங்கினேன். (கூக)

கூஉ. நிவப்புறு நிலனெனு நிரம்பு நங்கையுஞ்
சிவப்புறு மலர்மிசைச் [1]சிறந்த செல்வியு
முவப்புறு கணவனை யுயிரி னெய்திய
தவப்பயன் [2]ழுழ்ப்பது தரும மன்றரோ.

(இ-ள்) நிவப்புஉறு - உயர்வுபெற்ற, நிலன் எனும் - பூமி யென்கிற, நிரம்பும் - (பெண்மைக்குணங்கள்) நிறைந்த, நங்கைஉம்-பெண்ணும், சிவப்பு உறு மலர்மிசை சிறந்த செல்வியும் - செந்தாமரைமலரின்மேல் வீற்றிருக்கிற மேலான சீதேவியும் [சம்பத்தும்], உவப்பு உறு - விரும்பத்தக்க, கண வனை—, உயிரின் எய்திய - (தம்) உயிர்போல அடைவதற்குக் காரணமான, தவம் பயன் - தவப்பலனை, தாழ்ப்பது - (நான்) தாமதிக்கச்செய்வது, தரு மம் அன்று - தருமமல்ல; (எ-று.)—அரோ - ஈற்றசை.

கீழே தான் இராமபிரானுக்கு முடிசூட்டிச் சகலஐசுவரியங்களையும் ஆட்சிபுரியுமாறு செய்பவேண்டுமென்று விரும்பியதைத் தெரிவித்த தசரதன், இதனால் அந்தமுடிசூட்டுவிபவத்தைத் தாழ்க்காது விரைவிற்செய்பவேண்டு மென்கின்றன னென்க. தனக்குக் கிழத்தன்மை தோன்றியதோடு தான் கண்ட தீக்கனாக்களும் பூமியில்தோன்றும் உற்பாதங்களும் தனக்கு மரணமோ பட்டாபிஷேகத்துக்கு இடையூறு உண்டாகு மெனத் தெரிவிப்பதுபற்றி இராமனுக்கு முடிசூட்டத் தசரதன் விரைகின்று னென்பது, முதனூலாற் பெறப்படும். பட்டாபிஷேகஞ் செய்யப்பெறுகின்ற அரசனைப் பூமிதேவி சகலஐசுவரியங்களும் அடைவதால் மண்மகளுக்கும் பொன்மகளுக்கும் அவன் கணவனாவ னென்க. பூமிக்குயர்வாவது - எல்லாப்பொருள்களையுந் தாங் கும் ஆற்றலுடைமை, வளம் முதலியவற்றுற் சிறந்திருத்தல். சீதேவிக்குச் சிற ப்பாவது-யாவர்க்குஞ் செல்வப்பெருக்கை யுண்டாக்கி இகப்பரசுகங்களை யனு

பவிக்கச்செய்தல். உயிரினைப்நிய - உயிர்போல மகனைப்பெற்ற எனப் பொருள்கொண்டு, இவ்விராமனை என்உயிரினும் அரியமகனைப்பெற்ற, தவத் தின் பயனையான் பெறுது வீணிற்கழிப்பது தரும மன்றெனக் கூறினனெனவும் கொள்ளலாம். தவப்பயன் தாழ்த்தலாவது-அவனுக்கு முடிசூட்டாமலும் தான் தவம் புரியாமலுமிருத்தல். உயர்ந்தமக்களைப்பெறுதல் உயிர்க்கு உறுதி தேடுகைக்கு ஆதலின், உடனே அதனை நிறைவேற்றிக்கொள்ளவேண்டு மென் றெண்ணுகிறனென்ற னென்க. வேந்தர்க்குச் சிறந்தது புகியாதலின் அதனை முற்கூறினர். இனி, 'நிலப்புறநிலனனு நிரம்புநங்கையும் சிலப்புற மலர்மிசைச் சிறந்த செல்வியும் உலப்புறுகணவனை யுயிரினெய்திய' என்பத ற்கு - நிலமகளும் மலர்மகளும் உவந்து கொண்ட கணவனாகிய ஸ்ரீமகாவிஷ் ணுவை மகனைப்பெற்ற எனவும்பொருள்தோன்றுமாறறிக. பி-ம்:—[1]பெரிய. [2]இழப்பது. (கூ)

கூகூ. [1]ஆதலா லிராமனுக்கரசை நல்கியிப்
[2]பேதமை தாய்வரும் பிறப்பை [3]நீக்குவான்
மாதவந் [4]தொடங்கிய வனத்தை [5]நண்ணுவேன்
யாதுநுங் கருத்தென [6]வினைய கூறினான்.

(இ - ள்.) ஆதலால் - ஆகையால், இராமனுக்கு அரசை நல்கி-இராமனு க்கு அரசுஆட்சியைக்கொடுத்து, இ - இந்த, பேதமை தாய் வரும்-அறியாமை தாவிவருவதால் தோன்றுந் தன்மையதான, பிறப்பை-பிறவியை, நீக்குவான் - நீக்குதற்கு, மா தவம் தொடங்கிய-பெரியதவத்தைச் செய்யத்தொடங்க, வன த்தை நண்ணுவேன் - அரண்யத்தை யடையப்போகின்றேன்; (இவ்விஷயத் தில்), நும் கருத்து யாது - உங்கள் கருத்து என்ன? என - என்று, இனைய கூறினான் - இவைகளைச் சொன்னான்; (எ - று.)

பேதமை=பேதைமை-அஜ்ஞானம்:அது நிலையில்லதை நிலையுள்ளதென மாறிநினைக்கும் அவிவேகம்; அது, பிறவிக்கு வித்தாகலின், 'பேதமை தாய் வரும் பிறப்பு' என்றான். "பிறப்பென்னும் பேதைமை" என்றார், நாயனாரும். இனி, பேதமைதாய்வரும் என்பதற்கு-பேதைமை நிறைந்துவரும் எனப்பொ ருள்கொண்டு, நிலையாப்பொருளை நிலையினவாகவெண்ணி அதனைத் தேடுகைக் காக மிக்கவருத்தமுற்றுப் பண்டே அவன்றொண்டாம் உயிரைத் தன்னதென் னுங் களவுமுதலியன செய்து மிக்கபாவந்தேடி நரகிற்புகப்பண்ணும் பிறப்பு எனவும் கருத்துக்கொள்ளலாம். இனைய என்பது - கீழ் "வெய்யவன் குல முதல்" (கசு) என்பதுதொடங்கி இச்செய்யுள்வரையுங் கூறியதைச் சுட்டும். ஸ்ரீராமனுக்கு இளவரசுப்பட்டங்கட்டமாத்திரம் ஆலோசித்ததாக முதனூலிற் பெறப்படும். தொடங்கிய - செய்யபவென்னும் வினையெச்சம்.

இனி, இக்கவியுள்—பேது அமை தாய் - கூனியால் (மனம்) பேதித்தல மைந்த தாயான கைகேயி, வரும்-(கொடியவார்த்தைகளைச் சொல்ல) வரும்:

(ஆதலால்), இராமனுக்கு-அப்போது அவ்விடத்திலில்லாத அரசனுகிய பரதனுக்கு, அரசைநல்கி-இராச்சியங்கொடுத்து, பிறப்பை நீக்குவான்-(என்)பிறப்பை நீக்கும்பொருட்டு உதித்தவனுகிய[தான் இல்லாச்சமயத்து என்னை உயிர் துறக்கப் பண்ணுபவனுகிய] ஸ்ரீராமன், மாது அவம் தொடங்கிய-சீதையாகிய பெண் தன்னிடத்து இல்லாமற் போதலாகிய தன்மையைத் தொடங்கும் பொருட்டு, வனத்தை—, நண்ணுமேவற்கு(=நண்ணுவிப்பேற்கு)-அடைவிக்க எண்ணங்கொண்ட என்விஷயத்தில், நுங் கருத்தியாது-? என்று தசரதன் கூறினன் என்று ஓர் அமங்கலப்பொருள் தோன்றுமாறு அமைந்துள்ளதென்பர். மாதவந்தொடங்கிய வனத்தை நண்ணுமேவற்கு என்பதில் ஒற்றெழுத்துப் பதினென்கெழுத்துக்க ளுளவாதலின் வனத்தைநண்ணுதல் பதினென்கு வருட காலமென்பதும் குறிப்பிக்கப்பட்ட தென்பர். பி-ம்:—[1]ஆதலின். [2]பேதை மைத்தாவரு, பேதைமைத்தாய்வரும். [3]நீக்குறும். [4]தொடங்குவான், தொடங்குற. [5]நண்ணுமேவற்கு. [6]இனிது. (கூகூ)

வேறு.

நச.—தசரதனுடைய சொல்லைக் கேட்ட அமைச்சரது மனநிலை.

திரண்ட [1]தோளின னிப்படிச் [2]செப்பலுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய [3]வுவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் [4]பிரிவெனும் [5]விம்முறு [6]நிலையா
லிரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்.

(இ - ள்.) திரண்ட தோளினன் - திரண்ட தோள்களை யுடையவனுகிய சக்ரவர்த்தி, இப்படி செப்பலும் - இவ்வாறு சொல்லுதலும், சிந்தை புரண்டு மீதிட பொங்கிய - மனத்தினின்றுபொங்கி மேலிடவழிந்த, உவகையர் - சந்தோஷத்தையுடையவர்களாய், (அவ்வமைச்சர்),—ஆங்கு-அப்பொழுது, மன்னவன்-சக்ரவர்த்தியின், பிரிவு எனும் - பிரிவென்கிற, விம்முறு நிலையால் - இரங்குதற்கு உரிய நிலைமையால், வெருண்டு-பயந்து, இரண்டு கன்றினுக்கு-இரண்டுகன்றுகளுக்கு, இரங்கும் - இரங்குகின்ற, ஓர் ஆ என - ஒருபசுவைப் போல, இருந்தார்—; (எ - று.)

ஸ்ரீராமபட்டாபிஷேகத்தைக் கருதுவதற் பொங்கிய வுவகையராயினும், மன்னவன் பிரிவிற் பிரியமில்லாது வருந்தின ராதலின், இரண்டுகன்றினுக்கு இரங்கும் ஆ அம்மந்திரிகளுக்கு உபமானமாக்கப்பட்டது. இரண்டு கன்றினுக்கிரங்கும் ஆ-இளைய கன்றினிடத்தே மிக்க அவாவுடையதாயினும், மூத்த கன்றை மறுத்துவிட மனமில்லாத பசு:இதனால், அதிகாரத்துக்கு அடங்கியவராகாது அன்புக்கு அடங்கியவரென்றதாயிற்று. பி-ம்:—[1]தோளணல். [2]செப்பவும். [3]உவகையாங்கெய்த, உவகையாங்கெய்தா. [4]பிரிவன. [5]வெருவுறு. [6]நிலையார். (நகூ)

நசு.—தசரதனது சொல்லுக்கு மந்திரிமா நடன்படுதல்.

அன்ன ராயினு [1]மரசனுக் கதுவல துறுதி
பின்ன ரில்லெனக் கருதியும் பெருநில வரைப்பின்
மன்னு மன்னுயிர்க் கிராமனிற் [2]சிறந்தவ ரில்லை
யென்ன வுன்னியும் விதியது வலியினு மிசைந்தார்.

(இ - ள்.) (மந்திரிமார்), அன்னர் ஆயின்உம் - அத்தன்மையராயினும், அரசனுக்கு - சக்ரவர்த்திக்கு, அது அலது - அவ்வாறுசெப்வதன்றி, உறுதி-இதம், பின்னர் இல் - வேறில்லை, என - என்று, கருதிஉம் - ஆலோசித்தும், பெரு நிலம் வரைப்பில் - பெரிய நிலவுலகத்தில், மன்னும் - அதிகரித்திருக்கிற, மன் உயிர்க்கு - நிலைபேறுடைய உயிர்களுக்கு, இராமனின் - ஸ்ரீராமபிரான்போல, சிறந்தவர்-சிறந்துதோன்றுபவர், இல்லை—, என்ன-, உன்னிஉம் - நினைத்தும், விதிபது வலியின்உம் - விதிபலத்தினாலும், இசைந்தார் - (சக்கரவர்த்தியின் கருத்துக்கு) இணங்கினர்கள்; (எ - று.)

கருதியும் உன்னியும் வலியினும் இசைந்தா ரென விபைக்க. இக்கு விதியென்றது - எம்பெருமான் ஆதிபிற்கொண்ட சங்கற்பவிசேடத்தை.
பி - மீ:—[1]அரசற்கதுவலது, அதுவலதரசனுக்கு. [2]மன்னவர். (நடு)

நசு.—வசிட்டன் கூறத்தோடங்குதல்.

இருந்த மந்திரக் [1]கிழவர்த மெண்ணமு [2]மகன்பாற்
பரிந்த [3]சிந்தனை மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கித்
[4]தெரிந்து நான்மறைத் திசைமுகன் [5]மகனிவை செப்பும்.

(இ - ள்.) நால் மறை-நான்கு வேதங்களையுடைய, திசைமுகன் - பிரமதேவனுக்கு, மகன் - புத்திரனாகிய வசிட்டமுனிவன், - இருந்த-(அவ்வாறிசைந்து) இருந்த, மந்திரம்கிழவர்தம் எண்ணம்உம்-மந்திரிகளுடைய கருத்தையும், மகன்பால் - (தன்) மகனிடத்தில், பரிந்த - விசுவாசம்பூண்ட, சிந்தனை-மனத்தையுடைய, மன்னவன் - அச்சக்கரவர்த்தி, கருதிய - நினைத்த, பயன்உம் - நினைப்பையும், பொருந்தும் - பொருந்திய, மன் உயிர்க்கு உறுதிஉம் - நிலைபேறுடைய உயிர்களுக்கு இதத்தையும், பொது உற நோக்கி - பொதுவாகப் பார்த்து, தெரிந்து - (சாரம் இதுவென்று) தெளிந்து, இவை செப்பும்-இவ்வார்த்தைகளைச் சொல்பவனுனான்; (எ - று)—அது மேற்கூறுகின்றார்.

பொதுவுறநோக்கல் - பக்கபாதமின்றி நாடல். திசை - நான்கு: நான்கு முகங்களையுடைமையால் பிரமதேவனுக்குத் திசைமுகனென்பது, ஒரு பெயர். பிரமதேவனுடைய மானஸபுத்திரனதலின், வசிட்டனை 'திசைமுகன் மகன்' என்றார். பி - மீ:—[1]கிழவரது. [2]தன்பால், மகன்மேற். [3]சிந்தையம். [4]தெரிந்த. [5]திருமகன். (நசு)

நஎ.—இதுமுதல் ஏழுகவிகள் - ஒருதொடர்: வசிட்டன் தான் இராமபட்டாபிஷேகத்தையுடன்பட்டதைக் கூறுதலைத் தெரிவிக்கும்.

நிருப நின்குல [1]மன்னவர் நேமிபண் டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே யிராமனைப் பெற்றார்
[2]கருமை மேயிது [3]கற்றுணர்ந் தோய்க்கினிக் கடவ
தருமை மும்மிது தக்கதெ [4]நினைந்தனை [5]தகைவாய்.

(இ - ள்.) நிருப - சக்கரவர்த்தியே! பண்டு - பூர்வத்தில், நின் குலம் மன்னவர்-உன்வமிசத்து அரசர்களாகத் தோன்றி, நேமி உருட்டி - ஆஜ்ஞா

சக்கரத்தைச் செலுத்தி, பெருமை எய்தினர் - பெருமையடைந்தவர்களுக்குள்ளே, இராமனை பெற்றூர் - ஸ்ரீராமனைப் போன்ற புதல்வனைப் பெற்றவர்கள், யாவர் - எவர்? [ஒருவருமில்லை]; கற்று உணர்ந்தோய்க்கு - (கற்றற்குரிய நூல்களைக்) கற்று (அவற்றின் பொருளையுள்ளவாறு) அறிந்த உனக்கு, இது கருமம் ஏ - இது தகுதியான காரியந்தான்: இனி கடவ தருமம்உம் இது - இனிச்செய்பத்தக்கதாகிய தருமமும் இது தான்; தகவோய் - அறிவுடையோனே! தக்கது ஏ கினைந்தனை தக்க காரியத்தையே(செய்ய) ஆலோசித்தாய்.

உனக்கு முன்னிருந்த சக்கரவர்த்திகள் உன்னைப்போற் பெருமைமாத்திரம் பெற்றனரேயன்றி ஸ்ரீராமனைப்போன்ற சகலகுணசம்பந்தனைநற்புதல்வனைப் பெற்றிலர் என்பதாம். இராமனது குணத்தில் ஈடுபட்டிருத்தலால் அவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வதைப்பற்றி மாறுனகருத்து எவர்க்கும் நிகழாதென்று தெரிவிக்கும்பொருட்டு 'இராமனை யாவரே பெற்றூர்' என்று அவனது பிறர்க்கிலாச்சிறப்பைத் தொனிக்கவைத்தான். சக்கரவர்த்தி யெண்ணத்துக்கு மகிழ் கூர்ந்தவனுதலால் நிருபவென்றவளவி லமையாது 'தகவோய்' எனவுங் கூறினன். ஆணையைச் சக்கரமென்றல் வழக்கு. இது—தான் மறுமைக்கு முயலுமாறு புதல்வனிடத்து இராச்சியபாரத்தை வைத்தல். இதுதருமம் - மறுமையின் பொருட்டுத்துறத்தல்முறைமையே. கற்றற்குரியநூல்களாவன - அறநூலும் நீதிநூலும் யானை குதிரை தேர் படைக்கலமென்ற இவற்றின்நூல்களும் என்பனவை முதலிய அரசுக்கு உரியனவும், மறுமைக்கு உரிய வேதாந்தமும். பி - பி:—[1]மரபினோர், முதலினோர். [2]கருமமும்மிது. [3]கற்றுணர்ந்தோர்க்கினி, கற்றுணர்ந்தோர்க்கிது. [4]உரைத்தனை. [5]தகவாய்.

(கஎ)

கஉ. புண்ணி யந்[1]தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த
[2]வண்ணை வேலினி யருந்தவ மிபற்றவு மதிக்கும்
வண்ண மேகலை நிலமகண் மற்றுனைப் பிரிந்து
கண்ணி ழந்திலள் எனச்செயு நீதந்த கழலோன்.

(இ - ள்.) புண்ணியம் தொடர் - புண்ணியந்தான்றக் காரணமான, வேள்விகள் யாவையும் - யாகங்கள் எல்லாவற்றையும், புரிந்த - முட்டின்றி முடித்த, அண்ணலே - பெரியோனே! இனி-இனிமேல், அரு தவம் இயற்றவும் அதுக்கும் - (நீ செய்தற்கு) அரிய தவத்தைச் செய்யவுந் தகும்; நீ தந்த - நீ பெற்ற, கழலோன் - வீரக்கழலை யணிந்த ஸ்ரீராமபிரான், வண்ணம்-அழகிய, மேகலை - மேகலாபரணத்தை யணிந்த, நிலமகள் - பூமிதேவி, உனை பிரிந்து-உன்னை நீங்கியதனால், கண் இழந்திலள் என-கண்ணிழவாதவளாயிருக்கிறாளென்று சொல்லும்படி, செயும் - இராச்சியபாலனஞ் செய்வான்; (எ - று.)

நீ இராச்சியபாரத்தை இராமனிடத்துவைத்துத் துறந்துசெல்லுதல் தக்கது என்ற வசிட்டமுனிவன், இனி இராமன் ஒரு குறைவின்றி அரசு செலுத்தவல்லவனென்பதைக் காரணத்தோடு நிரூபிக்கின்றானென்க. வேள்வியைச் செய்வதினுஞ் சிறந்ததென்பான் 'அருந்தவம்' என்றும், சிற்றின்பப்

பயிற்சியற்றுப் போன்ம வழிதேடுதல் இன்றியமையா தாதலின் 'அடுக்கும்' என்றும், நிலமகள் என்னைப்பிரிந்து யாதாவளோ வென்று நீகலங்கவேண்டா: உன்னினும் உன்மகன் ஆயிரமடங்கு அதிகமாக அரசுபுரிவனென்பான் 'கண் ணிழந்திலளாமெனச் செயும்' என்றும், அவன் அத்துணையாற்றலுடையனே வென்று நீ அதிசங்கை செய்யவேண்டா வென்பான் 'கழலேன்' என்றுங் கூறி னான். அரசன் அன்பாலுயினும் அச்சத்தாலுயினுங் குடிகளை அறத்தின்வழி நிறுத்தி அவனியைப் புரத்தலால், அவனை நிலமகளுக்கு நேத்திரஸ்தானமாகச் சாஸ்திரஞ் சொல்லுகையால், 'நின்னைப்பிரிந்து நிலமகள் கண்ணிழந்தவளல்ல ளாகச்செய்வன் நின்மகன்' என்றான். "யாருஞ்செய்பாத யாகமிவன்செய்து மறந்த" என்று பாலகாண்டத்துக் கூறியபடி எல்லாயாகமுஞ் செய்த நீயே அருந்தவம் முயலுவதற்குத் தக்கவனென்பது 'வேள்விகள்யாவும் புரிந்தஅண் ணலே! இனி யருந்தவம் இயற்றவுமடுக்கும்'என்ற தொடரிற் போதரும்.கண்-பெருமையுமாம். மேகலை - மாதரிடையிலணியும் எண்கோவையணி; 'எண் கோவை மேகலை" என்றது காண்க. மற்று - வினைமாற்று.

இனி, கழலேனென்ற சொல்லாற்றலால் - சரணைகதரக்ஷகனை ஸ்ரீரா மன் ஞானக்கண்தந்து சராசரமனைத்தையும் வைகுந்தத்தேற்றி வீறுபெறச் செய்ய முன்னடியிடுந்தன்மையுடையோ னென்னும் விசேஷார்த்தத்தையும் உட்கொண்டு வசிஷ்டமுனிவன் வெளியிட்டதாக உய்த்துணரக்கிடக்கின்றது இந்தச்செய்யு ளென்பர்.பி-ம்:—[1]புரி. [2]அண்ணனீ. (நஅ)

நஊ. புறத்து நாமொரு [1]பொருளினிப் புகல்கின்ற தெவனீ
வறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லாற்
[2]பிறத்தி யாவையுங் காத்தவை [3]பின்னுறத் துடைக்குந்
[4]திறத்து மூவருந் [5]திருந்திடத் திருத்துமத் திறலோன்.

(இ-ள்.) 'அறத்தின் மூர்த்தி-தருமமூர்த்தியே,வந்து அவதரித்தான்—,' என்பது அல்லால் - என்று சொல்லுவதன்றி, இனி , நாம் .. யாம், ஒரு பொ ருள் புறத்து புகல்கின்றது - ஒருபொருளைப் புறத்ததாக எடுத்துச்சொல்லு வது, எவன் - யாது? அ திறலோன் - அந்தவெற்றியுடையான், யாவையும்- எல்லாப்பொருள்களையும், பிறத்தி-உண்டாக்கி, காத்து-காப்பாற்றி, பின் - முடிவில், அவை உற துடைக்கும் திறத்து-அவற்றை மிகவும் அழிக்குந்திற னுள்ள, மூவர்உம் - மும்மூர்த்திகளின்செயலும், திருந்திட - திருத்தமடைய, திருத்தும் - திருத்துவான்; (எ - று.)

இராமபிரான் காக்குந் தொழிற்கடவுளாகிய திருமாலேயென்று கூறிவிட் டால், பிறகு 'இராச்சியபாரத்தை அவனிடத்து வைக்கலாமா?அவனைக் காக்க முடியுமா?' என்பவை முதலிய விஞக்கட்கு வழியில்லையென்பது, 'புறத்து நாமொரு பொருளினிப்புகல்கின்ற தெவனீ?' என்பதன் கருத்து. பிரமனுக் குள் அந்தர்யாமியாகிப் படைத்தும்,உபேந்திரமூர்த்திக்குள் அந்தர்யாமியாகிக் காத்தும், உருத்திரமூர்த்திக்குள் அந்தர்யாமியாகி அழித்தும் முத்தொழிலும்

ஒழுக்குபெற நடக்குமாறு செய்தலின் 'மூவருந் திருந்திடத்திருத்தும்' என்றார்; "மூவர்காரியமுந் திருத்து மம்முதல்வன்" என்றார் பெரியாரும். பிறத்தி - பிறவினை யிறந்தகாலவினையெச்சம்: 'பிற' என்னுந் தன்வினையின்பிறவினை யான பிறத்து - பகுதி. யாவையும் என பொருட்டன்மைநோக்கிக் கூறினரா யினும், இயங்கியற்பொருள் நிலையியற்பொருள் என்னும் இருவகைப் பொரு ளுங்கொள்க. பிரமவிருடி யாதலின், வசிஷ்டமகாமுனிவன் ஸ்ரீராமனுடைய நற்குணக்கடலிலாழ்ந்து மெய்ம்மறந்து தத்துவத்தைத் தசரதனுக்கு ஒருவா ற்றால் விளக்குகின்றா னென்க. **பி-ம்:**—[1]பொருளினை. [2]பிறத்தல். [3]பின்னி ன்று, பின்னுதல். [4]திறத்தின். [5]திருத்தின, திருத்திய, திருந்திய. (கூக)

கூ0. மபானனு யாததபூ மடகதையும புஷமயனுக தருவு
மின்னு யிர்த்துணை யிவனென நினைக்கின்ற விராமன்
றன்னு யிர்க்கென்கை புல்லிது தற்பயந் தெடுத்த
வுன்னு யிர்க்கென நல்லன்மன் னுயிர்க்கெலா [1]முரசேவாய்.

(இ - ள்.) உரவோய்-அறிவின் திட்பமுடையாய்! பொன் உயிர்த்த-அழ கைப்பெற்ற, பூ மடந்தையும் - சீதேவியும் [செல்வமும்], புவி எனும் திரு உம் - பூதேவியும், 'இவன் - இவனே, இன் உயிர் துணை - இனிய உயிர் போன்ற துணைவன் [பிராணநாயகன்]' என - என்று, நினைக்கின்ற - நினைக் கப்பெறுகின்ற, இராமன் - ஸ்ரீராமன், தன் உயிர்க்கு (நல்லன்) என்கை புல்லிது-தன்னுயிருக்கு இனியானென்று சொல்லுவது தகுதியற்றது: தன் பயந்து எடுத்த - தன்னைப்பெற்றெடுத்த உன் உயிர்க்கு என-உனதுயிர்க்கு (நல்லனுதல்) போல, மன் உயிர்க்கு எலாம் - நிலைபேறுடைய உயிர்களுக் கெல்லாம், நல்லன் - நல்லவன்; (எ - று.)

கீழ் இராமபிரானைத் திருமாலினவதாரமென்றுகூறிய வசிட்டமுனிவன் அவ்விராமனதுகுணங்களைத் தொகுத்துச்சொல்லுகின்றான். உன்னுயிர்க்குறு தி செய்யுமாறுபோல உலகத்துயிர்க்கெல்லாம் இராமன் உறுதியேசெய்வானென் றவாறு.உலகத்துமன்னவர் மன்னுயிரைக் காப்பினும் தன்னுயிரினிடத்தும் நசையுள்ளவராவர்;இவ்விராமனோ தனக்குரித்தல்லாப் பிறர்க்குரியாளனென் பான், 'தன்னுயிர்க்கென்கைபுல்லிது' என்றான். "இறந்துபோகினுநன்றி துவல்லது,பிறந்துயான்பெறும்பேறென்பதியாவதோ," "ஆவுக்காயினுமந்தணர் க்காயினும், யாவர்க்கேனுமெளியவர்க்காயினுஞ், சாவப்பெற்றவரேதகைவா னுறை, தேவர்க்குந்தொழுந்தேவர்களாகுவார்" என்று மேல்அகத்தியப்படலத்து ஸ்ரீராமபிரான்கூறுவதால்,அப்பிரான் பிறர்பொருட்டுத்தன்னுயிரையும் ஈயுங் கருத்துள்ளவனுதல் பெறப்படுதலறிக.உடற்றிட்பம் இம்மைமறுமைகளைப்பய வாமையின்,உரமென்பதற்கு-அறிவின்றிட்பமென்று உரைக்கப்பட்டது;இனி அரியாசனத்தின் மேலிருந்து அரசுபுரிந்து ஒன்னலரையொறுத்து உடலைப் பாதுகாத்துவந்த உனக்கு அவ்வுத்தமன்செயல் தெரியுமோவெனவோர்பொருள்

தொனிக்குமாறு 'உரவோய்' என விளித்துக் கூறினு னென்னவுமாம். நல்லன் என்பது முன்னுங் கூட்டப்பட்டது. 'திரு' என்னுஞ் சிறப்புப்பெயர் மாதுளன்னும் பொருளைக்காட்டிற்று. பி - ம்:—[1]உரவோன். (சூ0)

சக. வார மென்னினிப் பகர்வது வைகலு மனையான்
பேரி னல்வரு [1]மிடையுறு [2]பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும் [3]யாஞ்செய்த நல்லறப் [4]பயனென விருப்பார்.

(இ - ள்.) வீர - பராக்கிரமசாலியே! அனையான் பேரினல்-அந்த ஸ்ரீராம னது திருநாமத்தை யுச்சரிப்பதனால், வைகலும் - நாடோறும், வரும் - உண் டாகிற, இடையுறு - துன்பங்கள், பெயர்கின்ற - விலகிப்போகின்ற, பயத் தால் - பயனுள்ளதால், வேதியர் முதலோர் யார்உம் - அந்தணர் முதலியோ ரெல்லாரும், நின் குலம் மைந்தனை-உனதுஜ்யேஷ்டகுமாரனை, யாம் செய்த நல் அறம் பயன் என-யாங்கள்செய்த சிறந்த தருமபலன் என்று, இருப்பார்-நினைத்திருப்பார்கள்: (என்றால்), இனி—, வாரம் - (பிரஜைகளுக்கு அவன் விஷயத்திலுள்ள) அன்பை, என் பகர்வது - என்னசொல்வது? (எ - று.)

இராமனுடையபேரைச் சொன்னமாத்திரத்திலேயே இடையூறுயாவும் போகின்ற பயனைப்பெறுதலால், வேதியர்முதலிய யாவரும் அவ்விராமபிரா னைத் தாம்செய்த நல்லறப்பயனென்று இருப்பாரென்றால், நேரே அவனை அரசனைப் பெறுவதில் எவ்வளவு அன்புஎன்று அளவிட்டு நம்மாற் கூறமுடி யுமோ? என்று கைமுதிகன்யாயத்தால் யாவருக்கும் அவ்விராமனிடத்து அன்புடைமையை எடுத்துக்காட்டுகின்றான். வாச்யப்ரபாவத்தைவிட தாரக மந்திரமான வாசகத்தின் ப்ரபாவமே சிறந்தமையின், 'பேரினல்வருமிடையுறு பெயர்கின்றபயத்தால்' என்றான். இடையுறு-இடையூறுஎன்பதன் விகாரம். 'வீர' என விளித்தலால், பகைவரைப்புடைக்குந் தொழிலை மேற்கொண்ட உனக்குப் பத்தரைப் புரக்குந்தொழிலைமேற்கொண்ட அப்புருஷோத்தமனது அவதாரப்பயன் தெரியாது என ஒருபொருள் தொனிக்குமாறு கூறினு னென்னவுமாம். பி - ம்:—[1]இடையூறு. [2]பெயர்க்கின்ற. [3]தாம், நாம். [4]ஆமென, தவமென. (சக)

சஉ. மண்ணினு [1]நல்லண் [2]மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணினு நல்லள் பெரும்புகழ்ச் [3]சனகியோ நல்லள்
கண்ணினு [4]நல்லன் கற்றவர் கற்றிலா தவரு
முண்ணுநீ ரினு [5]முயிரினு மவனை யே[6]யுவப்பார்.

(இ - ள்.) பெரு புகழ் - பெருங்கீர்த்தியையுடைய, சனகி ஓ ஜாநகியோ வென்றால், மண்ணின்உம் நல்லள்-பூமிதேவியினும் நல்லவள்; மலர்மகள் கலை மகள் கலை ஊர் பெண்ணின்உம் நல்லள் - திருமகள் சரசுவதி பார்வதி என் னும் இவர்களினும் நல்லவள்: (ஸ்ரீராமனை), நல்லள் கண்ணின்உம் - (அத் திறத்த) நல்லவளுடைய கண்களைக்காட்டிலும், நல்லன் - நல்லவன்; (ஆகை யால்), கற்றவர் கற்றிலாதவர்உம் - கற்றவரும் மற்றவரும், உண்ணும் நீரின் உம் - பருகுகின்ற நீரைப்பார்க்கினும், உயிரின்உம் - உயிரைப்பார்க்கினும், அவனை ஏ உவப்பார்-அவனையே (மேலானவனுகவெண்ணி) விரும்புவார்கள்.

அரசன் நல்லவனுயினும் இராணி நற்குணமுடையவளன்றியிருப்பின் அரசன் மனந்திரிய நல்லரசுஆட்சியின்றி விடுமாதலின், இச்செய்யுளில் இராம பிராற்கு அவனதுமனைவியுங் குணஞ்சிறந்திருத்தலைக் கூறுகின்றுன். பொறுமையிற் சிறந்தமையின் 'மண்ணினும் நல்லள்' என்றும், அழகிற் சிறந் தமையின் 'மலர்மகளினும் நல்லள்' என்றும், ஞானத்திற் சிறந்தமையின்'கலை மகளினும்நல்லள்' என்றும், கற்பிற்சிறந்தமையின் 'கலையூர் பெண்ணினுநல் லள்'என்றும் கூறினுன். எல்லாப்பெண்களிடத்துமுள்ள நற்குணங்கள்யாவும் ஒருங்கேயுடைய இவள் பிறவிப்பெருங்கடலைநீந்திக் கரையேறமாட்டாத ஆன் மாக்களைக் கண்டு கண்கலுழ்ந்து தன்கணவற்குஉரைத்து ஈடேற்றிவைக்கும் இலக்குமியைப்போலன்றி, வானவர்துயர்தீரத் தானே சிறையிருந்தமையால் விசேஷமுடையளாயினள்: ஆயினும்,இவள் தன்றிறத்து அபராதம்பண்ணின இராவணன்இறந்ததற்குச் சிறிதும்இரங்காதிருக்க, தான் இரங்கி மிகக்கலுழ் ந்து அவன்தம்பியை அவற்குச் சரமக்கிரியை செய்யும்படி யேவினுதலால், அவளினும் இவ்விராமனிடத்து இரக்கமுடைமை யதிகரித்திருப்பதை யோக த்தாலறிந்தவனுதலின் 'நல்லள்கண்ணினும்நல்லன்'என்றுன். "தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ் சிதகுரைக்குமே, லென்னடியா ரதுசெய் யார் செய்தாரேல் நன்றுசெய்தா ரென்பர்போலும்" என்ப வாதலால், இவ் வாறு கூறினுனுமாம். ராமநாமாம்ருதத்துக்கு ஒப்பாவ தின்றுஆதலானும், அவ்விராமன் உயிர்க்கு உறுதிசெய்பவனுதலானும், 'உண்ணுநீரினு முயிரினு முவப்பார்' என்றுன்; யாவரும் இராமனிடத்திலே அன்புகொண்டிருக்கிறு ரென்பது கருத்து. இனி, உண்ணுநீரினும் உயிரினும் அவனேயே உவப்பார் என்பதற்கு - உண்ணுநீரைப்போலவும் உயிரைப்போலவும் அவ்விராமனை மகிழ்ந்துபோற்றுவா ரென்றலுமாம்: "உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்பது, ஆழ்வார்பாசுரம். உண்ணுநீ ரென்றது - நீரோடுகூடியசோற்றினை: உயிரினும் என்றது-பிராணயாமத்தை யென்றுருமுளர். கலையூர் பெண் மானவாகனமாகவுடைய பார்வதி. சனகி = ஜாநகீ: ஜனகனது மகள்: தத்திதாந்தநாமம். பி - மீ:—[1]நல்லன். [2]நாமகண் மலர்மகள், கலைமகள் மலர்மகள், வானினுநல்லன்மாக். [3]சனகியும்நல்லோர், சனகியினல்லன், சனகியுநல்லள், சனகி பேருலகின். [4]நல்லர். [5]உவரினும். [6]உகப்பார். (சுஉ)

சுசுக. மனிதர் வானவர் [1]மற்றுளோ ரற்றங்காத் தளிப்பா
ரினி[2]யிம் மன்னுயிர்க் [3]கிராமனிற் சிறந்தவ ரில்லை
[4]யனைய ரதலி [5]னரசநிற் குறுபொரு ளறியிற்
புனித மாதவ மல்லதான் றில்லெனப் புகன்றுன்.

(இ - ள்.) அரச - சக்கரவர்த்தியே! மனிதர்-மானுடரும், வானவர்-தேவ ரும், மற்று உளோர் - வேறுள்ளநாகரும்ஆகிய, இ மன் உயிர்க்கு - இந்த நிலை பேறுள்ள வுயிர்களுக்கு, அற்றம் - வருத்தங்களை, காத்து - வரவொட்டாமல் தடுத்து, அளிப்பார் - பாதுகாப்பவர், இராமனின் இனி சிறந்தவர் - ஸ்ரீராம பிரானினும் மேலாகச்சிறப்புற்றவர், இல்லை - (ஒருவரும்) இல்லை; அனையன் ஆதலின் - (இராமபிரான்) அப்படிப்பட்டவனுதலால், நிற்கு உறு பொருள்

அறியின் - உனக்குச் செய்யவடுப்பதாகிய காரியத்தை ஆலோசிக்குமிடத்து, புனிதம் - பரிசுத்தமான, மா தவம் அல்லது-பெரிய தவமன்றி, ஒன்று இல்-வேறொன்றில்லை. என புகன்றான் - என்று சொல்லி முடித்தான், (வசிட்டன்); (எ - று.)

மக்கள் தேவர் நாகர் என்னும் மூவுலகத்தோரையும் யாதொருவருத்தமும் நேராதபடி பாதுகாப்பதில் இராமனைவிடச் சிறந்தவரில்லையாதலால், அவனிடத்து இராச்சியத்தை யொப்புவித்து விட்டு,நீ தவஞ்செய்யச் செல்லுதல் தகுதியென்று வசிட்டன் கூறிமுடித்தன னென்க. கீழ் ங்டு - ஆம் பாடலில் "அரசனுக்கதுவலதுறுதி, பின்னரில்லெனக்கருதியும்.....,மன்னுமன்னுயிர்க்கிராமனிற் சிறந்தவரில்லை,யென்ன வுன்னியும்"என வந்தது காண்க. வேண்டிய வேண்டியாங்கெய்தற் பயத்ததாகலின், 'புனிதமாதவம்' என்றார். **பி-ம்:**—[1]மற்றுளவறங்கள் காத்தளிப்போர், மற்றுளாரறங்கள் காத்தளிப்பார். [2]அம். [3]இன்னனிற். [4]அனையது. [5]அரசனுக்கு. (சங்க)

சச.—அதுகேட்டு மன்னவன் மகிழ்ச்சியடைதல்.

மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் [1]பிடிக்குமப் பெருவி
லிற்ற வன்றினு மெறிமழு [2]வாளவ னிழுக்க
முற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானன்.

(இ - ள்.) அவன் - அவ்வசிட்டமுனிவன், சொன்ன—, வாசகம்-வார்த்தையை, கேட்டலும் - (சக்ரவர்த்தி) கேட்டவளவில்,—மகனை - புத்திரனை, பெற்ற அன்றின்உம்-பெற்ற அந்நாளினும், பிஞ்ஞகன் பிடிக்கும்-உருத்திரன் (கையிற்)பிடிப்பதான, அ பெரு வில்-அந்தப்பெரிய வில்லானது, இற்ற-ஒடிந்த, அன்றின்உம்-அந்நாளினும்,எறி மழுவாளவன் இழுக்கம் உற்ற அன்றின் உம்-வீசுகின்ற குந்தாலிப்படையையுடைய பரசுராமன் தோல்வியடைந்த அந்நாளினும், பெரியது-பெரியதாகிய, ஓர்-ஒப்பற்ற, உவகையன் - சந்தோஷத்தையுடையவனாக, ஆனன்—; (எ - று.)

பிஞ்ஞகன் வில்லென்றது - மயனற்செய்யப்பட்டதும் சிவன் எடுத்து யுத்தஞ்செய்து நிமிவம்சத்தில்தேவராதனிடத்திற் கொடுக்கப்பட்டு குலமுறையாய்ச் சனகனற் பூசிக்கப்பட்டுவந்ததுமாகிய ஜானகியின்மணத்துக்கு வீரசுற்கமாக ஏற்படுத்தியிருந்த வில். ஸ்ரீராமன் கையிலெடுக்க அது முறிந்ததென்க. மகனைப்பெற்ற உவகையிலும் மருமகளைப்பெற்றஉவகை மேலதாய், மாற்றானை முகம்வணக்கப் பார்த்த உவகை அதனினும் மேலதாயினும், இப்போது வசிட்டன் வார்த்தையாலுண்டாகிய உவகை அதனினும் மேற்பட்டதென்க: **மேன்மேலுயர்ச்சியணி.** என்றகாலத்திலும் வீரனென்று கேள்விப்பட்டபோது மகனிடத்து மகிழ்ச்சி மிக,அவ்வீரத்தன்மையோடு சான்றோனெனப் பெரியோர் தன்மகனைப்புகழ்ந்து கூறக்கேட்டபோது உவகை விஞ்சியதென்க. "என்றபொழுதிற் பெரிதுவக்குந்தன்மகனைச், சான்றோனெனக் கேட்டதாய்" என்ற குறள் இங்கு ஞாபகத்துக்கு வருகின்றது. "தந்தைமகற்

காற்று நன்றியவையத்து, முந்தியிருப்பச்செயல்" என்றவாறு தான் செய்ய வேண்டிய கடனை நிரம்பியமைபற்றி உவகையுறையினனுமாம். மற்று - வினைமாற்று. பிஞ்ஞகன் - பிஜ்ஞகன்: வடமொழி: சங்கரிப்போனென்பது, அவயவப்பொருள். பி-ம்:—[1]பிடித்த. [2]வானவன். (கூசு)

சரு.—இதுவும் அடுத்த கவியும் - தூளகம்: தசரதன் வசிட்டனைப் புனந்து கூறுதல்.

அனைய தாகிய வுவகையன் கண்கணீ ரரும்ப
[1]முனைவன் மாமலர்ப் பாதங்கண் முறைமையி னிறைஞ்சி
யினிய சொல்லினை யெம்பெரு மானருள் [2]வழியின்
றனிய னெனிலந் தாங்கிய தவற்[3]கிது தகாதோ.

(இ - ள்.) அனையது ஆகிய உவகையன் - அத்தன்மையதாகிய சந்தோஷத்தையுடையவனாகிய தசரதன், கண்கள் நீர் அரும்ப-கண்கள் நீர்சொரியாநிற்க, முனைவன் - வசிட்டமுனிவனது, மா - பெருமையமைந்த, மலர்-தாமரைமலர்போன்ற, பாதங்கள் - அடிகளை, முறைமையின் இறைஞ்சி-(வணங்கவேண்டிய) முறைமைபோது வணக்கி,—எம்பெருமான் - எம்மிறைவனே! இனிய சொல்லினை-இனியனவே சொன்னாய்: அருள் வழியின்-(தேவரீரது) அருளினால், தனியன்-அடியேன், நானிலம் தாங்கியது-பூபாரத்தைச்சுமந்தது; அவற்கு - அந்த இராமனுக்கு, இது தகாதுஓ - இச்செய்கை தகுதியற்றதோ?

ஒருபாற்கோடாது உரைத்ததுபற்றி வசிட்டனை வணங்கி, யானை நுமது கருணையால் இவ்வுலகத்தை யாண்டிருக்க, சகலகுணசம்பன்னனை அவ்விராமனுக்கு இவ்வரசு மிகவும் ஏற்கு மென்றன னென்றவாறு. ஆநந்தாதிசயத்தாற் கண்கள் நீரரும்பின. இனி, இப்பாட்டின் சொற்போக்கினால், இராமன் இனியடையுந்தன்மை நோக்கிக் கண்களில் நீர்பெருக வசிஷ்டமுனிவனுடைய திருவடித்தாமரைகளை முறைமையின் வணங்கி, 'தேவர் முனிவர் துயர்தீர்தலாகிய இனியகாரியத்துக்குத் தக்கபடியேசொல்லியருளினீர்;உலகமுழுதும் உண்டுமிழ்ந்தளிக்கும் உத்தமன் இவ்வுலகத்தை யளித்தற்கு வந்தவனதலின் உம்முடைய அருள்நோக்கால் தாங்கிய என் அரசாட்சி இராமனுக்கு உடனே தகாது'என்றதாக வேறோர்பொருள்படு மென்பர். இறைஞ்சியென்ற வினையெச்சம், அடுத்த செய்யுளில் "என்றுரைசெய்து" என்றதனோடு இயையும். பி-ம்:—[1]முனிவன். அன்றே; விழியின். [3]அது. (கரு)

சசு. எந்தை நீயுவந் திதஞ்சொல வெங்குலத் தரச
ரந்த [1]மில்லரும் பெரும்புக ழுவனியி [2]னிறுவி
முந்து [3]வேள்வியு முடித்துத்தம் மிருவினை முடித்தார்
வந்த தவ்வரு ளெனக்குமென் றுரைசெய்து மகிழ்ந்தான்.

(இ - ள்.) எந்தை - என்தந்தைபோன்றவனே! நீ—, உவந்து - மனம் மகிழ்ந்து; இதம் சொல - நன்மைகளைச் சொல்ல, எம் குலத்து அரசர் - எங்கள் குலத்துத்தோன்றிய வேந்தர்கள்; அந்தம் இல்-முடிவில்லாத; அரு பெரு புகழ் - பெறுதற்கரிய பெருங்கீர்த்தியை; அவனியில் நிறுவி - உலகத்தில் நிலைபெறுத்தி; முந்து - முற்பட்ட; வேள்வியும் - யாகங்களையும், முடித்து :

நிறைவேற்றி, தம் - தம்முடைய, இரு வினை - இருவினைகளையும், முடித்தார் - வென்றார்; எனக்குஉம் - அடியேனுக்கும், அ அருள் வந்தது - அந்தக் கிருபைவாய்த்தது, என்று -, உரைசெய்து - சொல்லி, மகிழ்ந்தான் - களித்தான், (தசரதன்); (எ - று.)

அரசாண்டுபெரும்புகழ்படைத்து வேள்விமுற்றியிருந்த தசரதன் தான் இருவினை நீங்கிப் பேரின்பமடையுமாறு, வசிட்டன் 'புனிதமாதவ மல்லதான்று இல்' என்று புகன்றுரைதலால், 'வந்ததவ்வருளெனக்கும்'என்று பாராட்டிக் கூறுகின்றான். இதஞ்சொல்வதில் தந்தை சிறந்தவ ரைதலால், 'எந்தை நீயுவந்திதஞ்சொல' என்றான். இம்முனிவனது ஹிதவார்த்தை பிறரது ஹித வார்த்தை போலாது இம்மையிற் பெரும்புகழ்நிறுவுதற்கும், முந்துவேள்வி முடித்தற்கும்,மறுமையில் இருவினை யொழித்து இன்பமடைதற்கும் உதவின வென்பதாம்.முந்துவேள்வியென்றது-அரசர்க்குச் சிறந்த அசுவமேதம் முதலாயினவற்றை. இருவினையென்றதன்பின், முற்றும்மைதொகுத்தல். **பி-ம்:**—[1]இல்லதோர், இல்லவர். [2]நிறுத்தி. [3]வேள்விகள். (சசு)

சஎ.—மந்திரிமார்கருத்தைச் சுமந்திரன் கூறத்தொடங்குதல்.

பழுதின் மாதவன் பின்னென்றும் பணித்தில னிருந்தான்
முழுது [1]மெண்ணுறு [2]மந்திரக் கிழவர்தம் முகத்தா
லெழுதி நீட்டிய விங்கித மிறைமகற் [3]கேற்கத்
தொழுத கையினன் சுமந்திரன் முன்னின்று சொல்லும்.

(இ - ள்.) பழுது இல் - குற்றமற்ற, மா தவன் - பெருந்தவத்தோனை வசிட்டமுனிவன், பின்-அதற்குமேல், ஒன்றுஉம் பணித்திலன் இருந்தான் - ஒன்றுஞ் சொல்லாதிருந்தான்; (அப்பொழுது; முழுதுஉம் என் உறும்-(ராஜ காரியம்) முழுதும் ஆலோசிக்கவல்ல, மந்திரக்கிழவர் - மந்திரிகள், தம் முகத்தால் எழுதி நீட்டிய - தங்கள்முகத்திறை லெழுதிக்காடுத்த [குறிப்பித்த], இங்கிதம்-அபிப்பிராயத்தை, இறைமகற்கு-சக்கரவர்த்திக்கு, ஏற்க-பொருந்த, சுமந்திரன் - சுமந்திரனென்னும் முதன்மந்திரி, தொழுத கையினன் - கூப்பினகைகளையுடையவனாய், முன் நின்று - எதிரில்நின்று, சொல்லும்-சொல்லுபவனானான்; (எ - று.)—அதனை மேல் இரண்டுகவிகளாற் காண்க.

புரோகிதனாகிய வசிட்டன் தன் கருத்தைத் தெரிவித்த பின், மற்றை மந்திரிமார் குறிப்பாகத் தெரிவித்த கருத்தை மன்னவனிடத்துச் சுமந்திரன் கூறத் தொடங்கலாயின னென்க. தவமாவது - "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை, யற்றே தவத்திற்குரு" என்பதனை யறிக. தவத்திற்குப் பழுதாவன - பொய் வெகுளி முதலியன. இங்கிதம் - குறிப்பினிகழும்உறுப்பின்தொழில்; அது, இங்கு அவ்வுறுப்பின்றொழிலாற் குறிக்கப்படுங் கருத்திற்கு ஆகியது. சுமந்திரன் - நல்ல ஆலோசனையுடையவன்.
பி - ம்:—[1]எண்ணும். [2]மந்திரிக். [3]ஏற. (சஎ)

சஅ.—இதுவும் அடுத்த கவியும் - சுமந்திரன்வார்த்தை.

உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு [1]நின்குலத் தொல்லோர்
மறத்தல் [2]செய்கிலாத் தருமத்தை [3]மறப்பதும் வழக்கன்
ற்றத்தி [4]னூங்கினிக் கொடிதென லாவ் [5]தொன்றி [6]யாதோ.

(இ - ள்.) அரசு - அரசச்செல்வம், இராமற்கு—, உற - பொருந்தல், தகும்-, என்று—, உவக்கின்ற-சந்தோஷிக்கிற, மனத்தை-, நீ துறத்தி எனும் சொல் - நீ (எங்களைப்) பிரிகிறே யென்கிற சொல்லானது, சுடும் - சுடாநிற்கும்; நின் குலம் - உன்குலத்தில்தோன்றிய, தொல்லோர் - பெரியோர், மறத்தல் செய்கிலா - மறவாத, தருமத்தை -, மறப்பதுஉம் - (நீ) மறந்துவிடுவதும், வழக்கு அன்று - முறைமையல்ல; (ஆதலால்), இனி—, அறத்தின் ஊங்கு-தருமத்தின் மேற்பட, கொடிது எனல் ஆவது-கொடியதென்று சொல்லுதற்கு எற்றதாகிய, ஒன்று - ஒரு பொருள், யாது - எது? (எ - று.)

இராமன் அரசனெகின்றானென்பதை நினைக்க மனம் உவக்கின்றது; நீ துறக்கின்றாயென்பதை நினைக்க, அது மனத்தைச் சுடுகின்றது; ஆனால் இப்போது செய்யவேண்டுவது எது என்பாயோ, பெரியோர்கள் பூண்ட தருமத்தை மேற்கொள்ளவேண்டுவதே யாகும். அறத்தை நோக்குமிடத்து நீ துறக்கவேண்டுவது இன்றியமையாத தென்று எற்படுவதனால், அறம் மிகக் கொடிதெனத் தோன்றுகின்ற தென்றனனென்க மறத்தல் செய்கிலாத்தருமமாவது - மூத்தமகனுக்கு முடிசூட்டித் தாம் இப்பேதமை தாய்வரும் பிறப்பை நீக்குவான் வனத்தைநண்ணி மாதவமியற்றுதல். பி ம்:—[1]உன். [2]செய்கலாத், செய்திலாத். [3]மறப்பது. [4]ஈங்கினி. [5]இங்கு. [6]யாதே. (சஅ)

சக. புரைசை [1]மாக்கரி நிருபர்க்கும் [2]புரத்துறை வோர்க்கு
முரைசெய் மந்திரக் கிழவர்க்கு முனிவர்க்கு [3]முள்ள
மூரசு மார்ப்பநின் முதன்மணிப் புதல்வினை முறையா
லரசு ணக்கிப்பின் னப்புறத் தடுத்தது புரிவாய்.

(இ - ள்.) புரைசை - கழுத்தணிகயிற்றையுடைய, மா - பெரிய, கரி - யானைச்சேனையையுடைய, நிருபர்க்குஉம் - அரசர்களுக்கும், புரத்து உறைவோர்க்குஉம் - பட்டணத்து ஜநங்களுக்கும், உரை செய் மந்திரக்கிழவர்க்கு உம்-(இப்படித் தமது அபிப்பிராயத்தைக்) குறிப்பித்த மந்திரிகளுக்கும், முனிவர்க்கு உம் - (வசிட்டன்முதலிய) முனிவருக்கும், உள்ளம் முரசம் ஆர்ப்ப - மனத்தில் முரசப்பறையே ஒலிக்க [மனம்மகிழஎன்றபடி], நின் - உனது, மணி - நீலமணிபோன்ற மேனியையுடைய, முதல் புதல்வனை - மூத்தகுமாரனை, முறையால் - கிரமமாக, அரசன் ஆக்கி - அரசனைச்செய்து, பின் - பின்பு, அ புறத்து அடுத்தது - (உனக்கு) மறுமைக்கு ஹிதமானதை, புரிவாய் - செய்யக்கடவாய்; (எ - று.)

கீழ்ச்செய்யுளில் இராமனுக்குப்பட்டாபிஷேகமும் தசரதமன்னவனுக்குத்துறவும் ஆகஇரண்டு நேர்பட்டுள்ளன என்று கூறிய சுமந்திரன், இதனால் இராமபட்டாபிஷேகத்தை முதலில் நடத்திவிட்டுப் பிறகு துறவுக்குச்செல்ல வேண்டுமென்கிறான். ஸ்ரீராமன் நீலமணிபோலுறமுள்ளவனென்பதை 'நின் சிறுவர் நால்வரினும் கரிபசெம்மல் ஒருவனைத் தந்திடுதி" என முன் விசுவாமித்திரன் கூறியதனாலு முணர்க. பி-ம்:—[1]மாற். [2]புறத்து. [3]மகிழ்வாய். ()

ருo.—அரசன் சுமந்திர[2]னைநோக்கி இராம[2]னையழைத்துவருக வெனல்.

என்ற வாசகஞ் சுமந்திர னியம்பலு மிறைவ
னன்று சொல்லினை நம்பியை [1]நளிமுடி சூட்டி
நின்று நின்றது செய்வது விரைவினி னீயே
சென்று கொண்டணை திருமகள் கொழுநனை யென்றான்.

(இ - ள்.) என்ற வாசகம் - என்ற வார்த்தைகளை, சுமந்திரன்-, இயம்பலும் - சொன்னவளவில்,—இறைவன் - சக்ரவர்த்தி, (சுமந்திரனைநோக்கி), 'நன்று சொல்லினை - நல்லதையே சொன்னாய்; நம்பியை-இராமனுக்கு, நளிமுடி சூட்டிநின்று - பெருமைபொருந்திய கிரீடத்தைச் சூடச்செய்து, (பின்), நின்றது செய்வது - எஞ்சிநின்றது செய்க: (அதற்குஎற்ப), நீயே-, விரைவினில் சென்று - விரைவாகப்போய், திருமகள்கொழுநனை கொண்டு அணை- திருமகளையொத்த பெண்ணையுடைய சீதையின் கணவனை [இராமனை] அழைத்துக்கொண்டுவா,' என்றான்—; (எ - று.)

சுமந்திரன் சொல்லியதை இசைந்து தசரதமன்னவன் அவனையே இராமனையழைத்து வறுமாறு கூறினனென்க. மநுமுதற்கொண்டு வருஞ் சிறப்பினையுடைய முடியென்பார் 'நளிமுடி' என்றார்: "தடவுங்கயவும் நளியும் பெருமை" என்பது, தொல்காப்பியம். செய்வது-வியங்கோள்; திருக்கோவையாரில் "மறப்பதறிவிலேன் கூற்றுக்களே" என்றவிடத்து 'மறப்பது-வியங்கோள்' என்று பேராசிரியர் உரைத்தமை காண்க: செய்வது - செய்யத்தக்கது எனக்கொள்ளுதலும் ஒன்று. பி-ம்:—[1]நளிர். (ருo)

ருக.—சுமந்திரன் அவ்விடத்தினின்று தேருடன் இராகவன் திருமனையிற் புகுதல்.

அலங்கன் மன்னனை யடிதொழு தவன்மன மனையான்
விலங்கன் மாளிகை வீதியின் விரைவொடு [1]சென்றான்
றலங்கள் [2]யாவையும் பெற்றன [3]னுமெனத் தளிர்ப்பான்
[4]பொலங்கொ டேரொடு மிராகவன் றிருமனை புக்கான்.

(இ - ள்.) (அதைக்கேட்டு), அலங்கல் மன்னனை - பூமாலையையணிந்த சக்ரவர்த்தியை, அடி தொழுது - அடிவணங்கி, அவன் மனம் அனையான் - அத்தசரதன் மனத்தை யொத்தவனான சுமந்திரன், விலங்கல் மாளிகை வீதியின்-மலைபோன்ற மாளிகைகள்நெருங்கிய ராஜவீதியில், விரைவொடு சென்

ரூன் - விரைவாகப்போய்,—தலங்கள் யாவையும் பெற்றனன் ஆம் என - உலகங்களெல்லாவற்றையும் அடைந்தவன்போல, தளிர்ப்பான்-உள்ளங்களிர் பவுஞகி, பொலம்கொள் தேரோடும் - பொன்மயமான தேருடன், இராகவன் திருமனை புக்கான்-ஸ்ரீராமனது திருமாளிகைக்குட் பிரவேசித்தான்; (எ - று.)

இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போவதைக் கருதி இராச் சியம் தனக்குக் கிடைப்பதுபோல மனக்களிர்ச்சியடைந்தவனுகி, சுமந் திரன், தசரதனது திருமாளிகைக்கு இராமபிரானே அழைத்துக்கொண்டு போக ஒரு தேருடனே இராமனது திருமாளிகைவாயிலை யடைந்து தேரை நிறுத்திவிட்டுத் தான் மனையிலுள்ளே சென்றனனென்க. அரசன் தான் வேண்டும்பொருளைப் பெறுதல் எளிதாக இயலுமாதலாலும், இராமபிரான் அவ்வவர்குறையை வினவி அவற்றைத்தீர்க்க முயல்பவனுதலாலும், தலங்கள் யாவையும் பெற்றனனுமெனத் தளிர்ப்பானுயினனென்க: "தத்தமக்குற்றவர சனைத் தழைக்கின்றமனத்தர்" என எஅ - ஆம் கவியில் வருவதுங் காண்க. மன்னவன் குறிப்பறிந்து நடப்பவனென்பார், 'அவன் மனமனையான்' என் ரூர். இராகவன் - இரகுவமிசத்திற் பிறந்தவன்; இது தத்திதாந்தநாமபதம். பி-ம்:—[1]செல்வான். [2]ஏழையும். [3]தானென. [4]புலன். (நிக)

நஉ. —இலக்குமணனுடனும் மனைவியோடும் இருந்த ஸ்ரீராமனைச் சுமந்திரன் சாணுதல்.

பெண்ணி னின்னமு தன்னவ டன்னெடும் பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலு மருங்கினி திருப்ப
வண்ண லாண்டிருந் தானழ கருநற[1] வினத்தன்
கண்ணு முள்ளமும் வண்டெனக் களிப்புறக் கண்டான்.

(இ - ள்.) பிரியா-(தன்னைவிட்டு ஒருகாலும்) நீங்காத, வண்ணம்-அழகிய, வெம் சிலை குரிசில்உம் - உக்கிரமான வில்லையேந்திய இலக்குமணனும், மரு ங்கு - பக்கத்தில், இனிது இருப்ப - இனிதாக இருக்க, பெண்ணின் இன் அமுது அன்னவள் தன்னெடுஉம்-பெண்களுக்குள் இனிய அமிருதத்தை ஒத் தவளாகிய சீதாபிராட்டியோடும், அண்ணல் - ஸ்ரீராமபிரான், ஆண்டு இருந் தான் - அவ்விடத்திருந்தான்; அழகு - (அச்சேர்த்தியின்) அழகானது, அரு நறவு என - அரிய தேன்போன்று இருக்க, தன் கண்உம் உள்ளம்உம் வண்டு என-தன்கண்களும் மனமும் (அத்தேனை யுண்ணும்) வண்டுகள்போல, களிப் புற - சந்தோஷிக்க, கண்டான் - (சுமந்திரன்) பார்த்தான்; (எ - று.)

எல்லாநிலையினும் பிரியாதிருந்து தொண்டுபூண்டுநடக்கும் இளையபெரு மாளும் "அகலகில்லேனிறையும்" என்று உறையும் அம்மலர்மகளும், தன்னி டத்துஒக்கவிருக்கப் பச்சைமாமலைபோன் மேனியச்சுதன் இவ்வயோத்தியுள் ளும் அத்திருமாமணிமண்டபச்செல்வச்சிறப்பை யனுபவித்துக்கொண்டிருக்க, அவ்வழகை நித்தியசூரிகள் கண்டு அனுபவிக்குமாபோல், தொற்றவனகத்துக்

குற்றேவல்புரியுஞ் சுமந்திரனும் தன்தவப்பயனைற் கண்டு மகிழ்ந்தனனென்க. அங்ஙனம் அவ்வழகைக்கண்டு களிப்படைந்த சுமந்திரனுக்கு நறவுண்டுகளிக்கும் வண்டை உவமைகூறினர். பெண்ணின் இன் அமுது அன்னவள் என்பதற்கு பெண்ணுருவத்தையுடையஇனியஅமிருதமொன்றிருந்தா யின் அதனை ஒத்தவள் என்றலு மொன்று;இது. இல்போருளுவமை. பி-ம்:—1நறவென்ன.

ருஉ.—தந்தையிற்கட்டளையைச் சுமந்திரன் தெரிவிக்க, ஸ்ரீராமன் தேர்மீது ஏறுதல்.

கண்டு கைதாழு தையவிக் [1]கடலுடைக் [2]கிழவோ
னுண்டொர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன் பொருக்கென [3]வெழுந்தார்
கொண்டல் [4]போலவன் கொடிநெடுந் தேர்மிசைக் கொண்டான்.

(இ - ள்.) கண்டு - (அச்சேர்த்தியிலே ஸ்ரீராமனைப்) பார்த்து, கைதாழுது - கைகூப்பிவணங்கி, 'ஐய - ஐயனே! இ கடலுடைகிழவோன் - இந்த உலகத்துக்கு உரியவனாகிய சக்கரவர்த்தி, ஓர் காரியம் உண்டு வருக என - ஓர்காரியமுளது (ஆதலால்) (ஸ்ரீராமனை) அழைத்துவருக என்று, உரைத்தனன்-நியமித்தான்', எனலும்-என்றுசொன்ன அளவில்,-புண்டரீகம் கண் புரவலன் - தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீராமபிரான், பொருக்கென எழுந்து - விரைவாக எழுந்து, ஓர் கொண்டல் போல் - ஒருகரிய மேகம்போல, அவன் - அந்தச் சுமந்திரனது, கொடி நெடு தேர் மிசைக்கொண்டான் - கொடிகள் கட்டிய நெடியதேரை மேற்கொண்டான்; (எ - று.)

தந்தை வரச்சொன்னனென்றதைக் கேட்டுப் பொருக்கென ஸ்ரீராமன் எழுந்து தேர்மீதுஏறின னென்க. இராமபிரான்இப்போதுஎழுந்துசெல்வது அரக்கராகியகோடையால் வாடியுள்ள தேவர் முனிவர்களாகிய பயிர்க்கு அவ் வெப்பந்தணிவதற்குப் பரம்பரையாகக்காரணமாகப்போவதனால், 'கொண்டல் போல் தேர்மிசைக்கொண்டான்' என்றார். ஐய - அழகுள்ளவனே! என்றலு மாம். கடலுடை - கடலைஆடையாகவுடையது: பூமி: வடமொழியில் 'அப்தி மேகலா' என ஒருபெயர் பூமிக்கு உள்ளதுங் காண்க. [1]கடலிடைஎன்றபாடத் துக்கு—"பணிவரும்" என்று தொடங்குஞ் சிந்தாமணிச்செய்யுளில் கடலைத் தன்னிடத்துடையதென்பதுபற்றி 'கடலகம்' என்றதொடர்க்கு-உலகு எனப் பொருள்கொண்டாற்போலப் பூமியென்றேபொருள்கொள்க. மிசைக்கொள் ளல்-ஏறுதல். "பழமுதிர்சோலை மலைகிழவோனே"என்றதிற்போல,கிழவன்-கிழவோனுயிற்று. புண்டரீகம் என்னும் பெயர் வெண்டாமரைக்கே வழங்குவ தாயினும், இங்கு ஸ்ரீராமபிரானது திருக்கண்களுக்கு ஒப்பிடப்பட்டமையின், செந்தாமரைக்குக் கொள்ளத்தக்கது:"செந்தாமரைக்,கண்ணன் செங்கனிவாய் க்கருமாணிக்கம்" என்றார் பெரியோரும். கொண்டல்-கார்மேகம். பி - ம்:— [1]கடற்புவிக். [2]கிழவன். [3]எழுந்தான், எழுந்து. [4]போல்பவன், போற்சென்று.

நுசு.—இராமபிரான் தேர்மீது செல்லுதல்.

முறையின் [1]மொய்ம்முகி லெனமுர சார்த்திட. மடவா
ரிறை[2]க ழுன்றுசங் கார்த்திட விமையவ ரெங்கள்
குறைமு டிந்ததென் றார்த்திடக் குஞ்சியைச் சூழ்ந்த
நறைய லங்கல்வண் டார்த்திடத் தேர்மிசை நடந்தான்.

(இ - ள்.) முரசு - பேரிகைகள், முறையின்-வரிசையாக, மொய் முகில் என-நெருங்கிய மேகம்போல, ஆர்த்திட - முழங்கவும்,-மடவார் - மாதர்களுடைய, இறை கழன்று - முன்னங்கையினின்றும் கழன்று, சங்கு-சங்கவளையல்கள், ஆர்த்திட-(ஒன்றோடொன்று தாக்குண்டு) ஒலிக்கவும்,—இமையவர்-தேவர்கள், எங்கள் குறை முடிந்தது என்று - எங்கள் குறைதீர்ந்ததென்று சொல்லி,ஆர்த்திட-ஆரவாரிக்கவும்,—குஞ்சியை சூழ்ந்த-(தனது)திருமுடியைச்சுற்றியிருந்த, நறை அலங்கல் - தேனுள்ள பூமாலையில், வண்டு-(மொய்த்த) வண்டுகள், ஆர்த்திட-ஒலிக்கவும்,தேர்மிசை நடந்தான்-தேரேறிச் சென்றான்.

இடியுண்டாவது நீர்கொண்ட மேகத்தினிடத்திலேயே யாதலால், நீர் கொண்ட மேகத்தை 'மொய்ம்முகில்' என்றார். முரசு - மங்களமுரசு. அரசகுமாரன் செல்வதுநோக்கி முரசறைந்தனரென்க. மடவார் இறைகழன்று சங்கு ஆர்த்திட என்றது-மாதர் இராமனதுஅழகிலீடுபட்டு மெலியக் கழன்ற சங்கு வளையல்கள் ஒலித்துக்கொண்டு வீழ்வதனை. இமையவர் - கண்ணிமையாமையாகிய விசேடமுடையவர்; தேவர். சூழ்ந்த அலங்கல் என இயையும். ஆர்க்க என்னாது ஆர்த்திட என்றது, இடையறுமையுணர்த்துதற்கு. சங்கு-ஆகுபெயர். தங்கள்பிரார்த்தனையால் இவ்வுலகில் அவதரித்த எம்பெருமான் அக்காரியத்தைத் தலைக்கட்டினானென்று செல்கின்ற னென்னு முண்மையுணர்ந்தவராதலின்,தேவர் ஆர்த்தனர். சுமங்கலிகளின் கைவளைகழலுதலும், தலையிலுள்ள பூக்களில் வண்டுமிதித்துக்கூவுதலும் அபசகுனங்க ளென்பர். ஒலிக்களென்னும் பொருளுள்ள ஆர்த்திட என்றசொல் பலமுறைவந்தது - **சொற்பொருட்பின்வருநிலையணி.** பி - மீ:—[1]இன்முரசார்த்திடமுகிலென. [2]கழன்ற.

(நுசு)

நுரு.—இதுமுதல் ஐந்துகவிகள் - ஸ்ரீராமனை வீதியிற்செல்லும்போது கண்ட மாதராரின் நிலைமையைக் கூறும்.

பணை [1]நி ரந்தன பாட்டொலி [2]நிரந்தன வனங்கன்
கணை [2]நி ரந்தன நாவெணெலி கறங்கின நிறைட்பே
ரணை [1]நி ரந்தன வறிவெனும் பெரும்புன லணையார்
பிணை [3]நி ரந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார்.

(இ - ள்.) பணை நிரந்தன - வாத்தியகோடிகள் நிரம்பின; பாட்டு ஒலி நிரந்தன-பாடலின்ஓசைகள் நிரம்பின; அனங்கன் கணை நிரந்தன-மன்மதபாணங்கள் நிரம்பின; நாண் ஒலி கறங்கின - நாணேசை நிரம்பின; (அங்குள்ளமாதர்களது), அறிவு எனும் பெரு புனல் - இராமனைப்பற்றிய எண்ணை

மாகிய வெள்ளம், நிறை-மனவடக்கமாகிய, பேர் அணை-பெரிதாகிய அணைபை, நிரந்தன - கடந்தன; அனையார் - (அறிவாகிய அணைபைக்கடக்கப் பெற்றவ ர்களாகிய) அம்மாதர்கள், நாணம் உம் பிரிந்தார்-நாணத்தையும் விட்டவர்களாய், பிணை நிரந்து என - பெண்மான்கள் நிரம்பினபோல, பரந்தனர் - (வீதியில் வந்து) நிறைந்தார்கள்; (எ - று.)

ஸ்ரீராமன் வீதியிலழுந்தருளுகையில் பலவாத்தியங்கள் முழங்கவும் மங்களவாழ்த்துப் பாடல் பாடவும், அவைகேட்டு அந்தஃபுரமகளிர் தமது நிறையைக் கடந்து வீதிவழிபேசென்று அவ்விராமபிரானழகிலீடுபட்டு நாண த்தை விட்டு எங்கும்பரந்தன ரென்பது கருத்து. பிணை - கருவியாற்பிறப்ப தற்கும், பாட்டு - கண்டதாற் பிறப்பதற்குங் காரணம். அனங்கன்-உருவில் லாதவன். அனங்கனுக்கு மலர்கள் கணையும் வண்டுகள் நாணியுமாதலின், கணை நிரந்தன நாணெறிகறங்கின என்பதற்கு-அப்பொழுது பூமாரிபொழிய, அவற்றின் தேனுண்ணவந்த வண்டுகள் ஒலித்தனவெனப் பொருள்கொள்ளு மமையும். அறிவைப்புனலென்றமைக்கேற்ப, நிறையை அணையென்றார். அறிவுஎன்பது - இராமபிரானிடத்து ஈடுபாடு. எல்லாரிடத்துங் கலந்து நிற் கும் புருஷோத்தமனதலின், இராமபிரானிடத்து ஈடுபாட்டினால் மகளிர்கற் புக்கு இழுக்கின்மையறிக. நாணழும், உம்-உயர்வுசிறப்பீறாடு இறந்ததழு வியது. பி-ம்:—[1]நிரைந்தன. [2]நிரம்பின, நிரைந்தன. [3]நிரைந்தென. (நிநி)

நிசு. நீளை ழுத்தொடர் [1]வாயினுங் குழையொடு நெகிழ்ந்த
வாள கத்தினை டரமியத் தலத்தினு மலர்ந்த
வாள ரத்தமீவல் வண்டொடு கெண்டைகண் [2]மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்.

(இ - ள்.) தாமரை மலர்கள்—, நீள் எழு தொடர் வாயின்உம் - நீண்ட தூண்கள் அமைத்த வாயில்களிலும், குழையொடு-குண்டலங்களோடும், நெகிழ் ந்த ஆளகத்தினை - அவிழ்ந்தகூந்தலோடும், அரமியம் தலத்தின்உம்-உபரி கைகளிலும், அலர்ந்த - மலர்ந்தன; வண்டொடு - வண்டுகளோடு, வாள்-வாள் களும், அரத்தம் வேல் - உதிரக்தோய்ந்த வேல்களும், கெண்டைகள் - கெண் டைகளும், மயங்க - கலந்துநிற்க, சாளரத்தின் உம் - பலகணிகளிலும், பூத்தன—; (எ - று.)

நிறைகடந்து வீதியில்வந்து ஸ்ரீராமனைப் பார்க்கத்துணியாத பெண்கள் வாயில்களிலும், உபரிகைகளிலும், சாளரங்களிலுமிருந்து பார்த்தன ரென் பது கருத்து. தாமரைமலர்கள் - பெண்களின் முகங்கள். பெண்களின் முகத் தைத் தாமரையாக உருவகஞ் செய்தமைக்கேற்ப, வாயில் முதலியவற்றை நீர் நிலையாகவுருவகஞ்செய்யாமையின், இது-ஏகதேசவுருவக வணி.(நீர்த்தாமரை மலர்களில் வண்டொன்றுமே தங்குவதியல்பு;) இம்முகத்தாமரைமலர்களிலோ வண்டொடு வாளும் வேலும் கெண்டைகளும் மயங்கின என்க: உருவக வுயர்வுநவிற்சியணி. புருவம் வாளாகவும், செவ்வரிபடர்ந்த கண் அரத்த

வேலாகவும், கருவிழி வண்டாகவும், இடம்வலமாகப் பிறழ்தல்வாய்ந்த கண்கள் கெண்டையாகவும் கொள்ளப்பட்டன. வாள்முதலியமூன்றும் கண்களையே குறிக்குமெனக்கொண்டு, இயற்கையாகக்காணப்படும்போது கண்கள் வாளையும், பிறர்மீதுப்படும்போது அரத்தவேலையும், பிறழும்போது கெண்டையையும் போலு மென்னலும் ஒன்று. மயிரின் நீட்சிதோன்ற அளகமென்ற வடசொல்லை 'ஆளகம்' என நீட்டல்விகாரங் கொடுத்துக் கூறினர். அரமியம் - ஹர்ம்யம்: வடசொல். இனி, தாமரைமலர்கள் வாயிலே குழையோடு நெகிழ்ந்து [மலர்ந்து] இருந்தன: அரமியத்தலத்து அளகத்திலேடு மலர்ந்திருந்தன: சாளரத்தில் மயங்கப் பூத்திருந்தன என மூன்றுமுற்றுக்கவுமாம். [2]மறுகளன்ற பாடத்திற்கு, முன்னிரண்டடி - மாதரார் முகத்தையும், பின்னிரண்டடி - அவர்கண்களையும் கூறியனவாக வுரைக்க. இனி இச்செய்யுட்கு - தாமரைமலர்கள் குழையோடும் நெகிழ்ந்தவாளகத்திலேடும் மலர்ந்த [விளக்கமுள்ள] வாள் அரத்தவேல் கெண்டைகள் மயங்க, எழுத்தொடர்வாயினும் அரமியத்தலத்தினும் சாளரத்தினும் பூத்தன என்று ஒருமுடிபாக்கியுரைத்தலும் ஒன்று. **பி-ம்:**—[1]வாயிலுள்; வாயினில், வாயிலில். (நகூ)

நஎ. மண்ட லந்தரு மதிகெழு மழைமுகி லனைய
வண்டர் நாயகன் [1]வரைபுரை [2]யகலத்து ளலங்கற்
றொண்டை வாய்ச்சியர் [3]நிறையொடு நாணெடுந் தொடர்ந்த
கெண்டை யும்முள கிளைபயில் [4]வண்டொடுங் கிடந்த.

(இ - ள்.) மண்டலம் தரு மதி கெழு - வட்டவடிவாகிய சந்திரனைமைந்த [சந்திரனைப்போலும் முகத்தையுடைய], மழை முகில் அனைய - கார்மேகத்தையொத்த, அண்டர் நாயகன் - தெய்வநாயகனாகிய ஸ்ரீராமபிரானது, வரை புரை அகலத்துள் - மலைபோன்ற மார்பிலுள்ள, அலங்கல் - பூமாலையில், தொண்டை வாய்ச்சியர் - கொவ்வைக்கனிபோன்ற வாயையுடைய மாதரது, நிறையொடுஉம் நாணெடுஉம் தொடர்ந்த - நிறையும் நாணமும் பின்தொடரப்பெற்ற, கெண்டைஉம் - (விழிகளாகிய) கெண்டைகளும்,—உள-(அவ்வலங்கலில்தேனைநாடிஎற்கவேவந்து) உள்ளனவாகிய, கிளை பயில் வண்டொடுஉம் - கிளையென்னும் இசையைப் பழகின வண்டுகளொடு, கிடந்த-தங்கின;(எ-று.)

தேனை நாடிவந்த வண்டுகளோடு மார்பழகை நாடி வந்த கெண்டைகளும் மயங்கிக் கிடந்தன என்பதாம். ஸ்ரீராமனைக் கண்டவுடனே நிறையும் நாணும் மகளிரினின்று நீங்கின வென்பார் 'நிறையொடு நாணெடுந்தொடர்ந்த கெண்டை' என்றார்; எனவே, மகளிர் ஸ்ரீராமனைப் பார்த்தவுடனே அவ்விராமபிரானழகிலீடுபட்டு ஆசைகொண்டன ரென்றதாயிற்று. முழுமதியென்பார் 'மண்டலந்தருமதி' என்றார் மண்டலந்தருமதி இராமனுடையதிருமுகத்துக்கும், மழைமுகில்-திருமேனிக்கும் உவமை. பரிபாடலில் "கிளைக்குற்றவுழைச் சுரும்பின்" என்றாற்போல, 'கிளைபயில்வண்டு' என்றார். **பி-ம்:**—[1]மலை. [2]ஆகத்துள். [3]நிறையொடுந். [4]வண்டொடு. (நஎ)

ரூஅ. [1]சரிந்த பூவுள [2]மழையொடு [3]கலையுறத் [4]தாழப்
பரிந்த [5]பூவுள பனிக்கடை முத்தினம் படைப்ப
வெரிந்த பூவுள விளமுலை [6]யிழைபிடை [7]நுழைய
விரிந்த பூவுள [8]மீனுடை [9]வானின்றும் வீழ்வ.

(இ - ள்.) மழையொடு - மேகங்களோடு, கலை - சந்திரகலைகள், உற தாழ - மிகத்தாழ்தலால், சரிந்த - கீழிறங்கிய, பூ - புட்பங்கள், உள - உள்ளன; (அங்ஙனந் தாழ்தலாக்கிய முகத்தினின்று, பரிந்த பூ உள - இரங்கிய குவளைப் பூக்களின்றன்மை யுள்ளனவாகிய, பனி கடை - குளிர்ச்சியைப் பொருந்திய கடைக்கண்கள், முத்து இனம் படைப்ப - முத்துக்கூட்டங்களை யுண்டாக்குவன; எரிந்த பூ உள - தீந்த பூக்களுள்ளனவாகிய, இள முலை - இளமையைப் பொருந்திய தனங்கள், இழை இடை நுழைய - (பூரித்து) ஆபரணங்களினிடையே நுழைய,—விரிந்த பூ உள - மலர்ந்த தாமரைப்பூக்களுள்ளனவாகி, மீன் உடை - மின்னுதலையுடைய வஸ்திரங்கள், வானின்றும் - ஆகாயத்தினின்றும், வீழ்வ - வீழ்வன; (எ - று.)

. கலை - சந்திரன்பங்கு. மீன் - முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். கூந்தலை மழையாகவும், நெற்றியைக் கலையாகவும், கண்களைக் குவளைமலராகவும், கண்ணீரை முத்தினமாகவும், கைகளைத் தாமரைப்பூக்களாகவும் இடையை வாளைகவும் உருவகித்தார். 'மழையொடு கலையுறத்தாழ'னவே, மகளிர் மேன்மாளிகைகளினின்று குளிர்ந்துதோக்கிரை ரென்றதாயிற்று; தோக்கின வளவில் அவ்விராமபிரா னழகி லீடுபட்டு ஆசைகொண்டா ரென்க. கண்ணீர்துளித்தலும், இளமுலை பூரித்தலும், கலைநெகிழ்தலும் - ஸ்திரீகளுக்குக் காமவிகாரங்களால் நிகழ்ந்தன. உடைநெகிழ்வதனையறிந்து கரங்களாற் பற்றிக்கொண்டும் அவைநெகிழ்ந்தன வென்பார், 'விரிந்தபூவுள மீனுடைவானின்றும் வீழ்வ'என்றார். விரிந்த பூக்கள்-கைகளென்க. இனி, மழையொடு-(அவிழ்ந்த) கூந்தலுடனே, கலை-உடைகளும், தாழ - சோர்ந்துதிற்க, சரிந்த - (அக்கூந்தலினின்று) சொரிந்த, பூ உள -: பனி கடை முத்து இனம் படைப்ப - குளிர்ந்த ஓரங்கள் முத்தினம்போலும் கண்ணீரைச் சொரிய, பரிந்த - வருந்திய, பூ-குவளைமலர் போலும் கண்கள், உள -; இளமுலை-, இழை இடை நுழைய-(தாம் பூரித்து) அணிவடத்திலே நுழைந்து வெளிவர, (அம்முலையிலே), எரிந்த பூ உள-மதன வெப்பத்தால் தீய்ந்துபோன மலர்களுள்ளன; (இராமபிரான்மீது மகளிர் மேன்மாளிகையினின்று சொரிதலால்), மீனுடைவானின்று வீழ்வனவாகிய விரிந்த பூவுள எனப்பொருள் காணலுமாம்: சொற்பொருட்பின்வருநிலையணி. இழை அணிவடமாதலை "ஆரம்...மாலை யிழைமாதரணிவடப்பெயரே"என்ற பிங்கலந்தையாலும் அறிக. மீனுடைவானின்றும் வீழ்வ என்ற தொடர் - ஆகாயத்தினின்று நட்சத்திரங்கள் வீழ்வன வென்றும் பொருள்கொள்ளக் கிடத்தலின், இராமனுக்கு அபசகுனமாயிற்றென்ற பொருளும் தோன்றுமென்பர். பி - ம்:—[1]கரிந்த. [2]மழையொடும். [3]கலையொடுங், கலையறத். [4]தாழ்வ. [5]பூணுள. [6]இடையொடு. [7]நுழைவ. [8]வியனுடை, அந்தர. [9]வானின்று. (ருஅ)

ருகூ. வள்ளு றைகழித் தொளிர்வன [1]வாணிமிர் மதியந்
தள்ளு றச்[2]சுமந் [3]தெழு நருந் தமணியக் கொம்பிற்
[4]புள்ளி நுண்பனி பொடிப்பன [5]பொன்னினிற் பொதிந்த
[6]வெள்ளு டைப்பொரி [7]விரிவன வுளசில [8]விளநீர்.

(இ - ள்.) வள் உறை கழித்து வாளினுலியன்ற உறைகளை நீக்கி, ஒளிர் வன - பிரகாசிக்கின்றனவாகிய, வாள் - வாள்களுடன், நிமிர் - நிமிர்ந்த, மதியம் - சந்திரனை, தள்ளுற - தள்ளாடும்படி, சுமந்து - சுமந்துகொண்டு, எழுதரும் - எழுகின்ற, தமனியம் கொம்பில் - பொற்கொடிகளில், உள சில இளநீர் - உள்ளனவாகிய இரண்டு இளநீர்கள்,—புள்ளி நுண் பனி பொடிப் பன - புள்ளிகளாகிய நுட்பமான பனி யரும்புவனவும், பொன்னினில் பொதிந்த - (இடையிடையே) பொற்பொடிபொதியப்பெற்றனவுமாய், எள் உடை பொரி விரிவன - எட்பொரி ஆங்காங்கு விரியப்பெற்றன; (எ - று.)

தமனியம் - தபநீயம் என்னும் வடமொழிச்சிதைவு. இளைகளை உறை யாகவும், கண்களை வாளாகவும், முகத்தை மதியாகவும், மாதரைக் கொம்பாக வும், வியர்வையைப் பனியாகவும், தேமலைப் பொன்னாகவும், பசலையை எட் பொரியாகவும், தனங்களை இளநீராகவும் உருவகப்படுத்தினர்; **உருவகவுயர்வு நவிற்சியணி.** இராமனைக் கண்ட மாதராரின் தேமலைக்கொண்டதனங்களில் வியர்வையும் பசலையும் உண்டாயினவென்றவாறு. மகளிர் இவ்வாறுனது **ஸ்ரீ**ராமனிடத்துக்கொண்ட ஆசையினை லென்க. சில என்பது இரண்டுஎன் னும் பொருளில் வருதலைத் திருமுருகாற்றுப்படையில் ''சில்காழல்குல்''என்ப தற்கு 'சில்காழ் - இரண்டுமணிவடங்கள்' என்று ஆசிரியர் நச்சினார்க்கினி யர் உரைத்துள்ளமையாலும் அறிக. பி-ம்:—[1]வாணுறை, வாண்மினிர்; வான் மினிர். [2]சமைத்து. [3]எழுதரு, எழுதர. [4]புள்ளினுட். [5]பொன்னிடைப். [6]எள் ளிடைப். [7]விரவின. [8]வீழ்வ. (ருகூ)

சுஅ —இராமன் தம்பியோடு தேரிலேறிச்சென்று தசரதனிருந்த இடத்தைச் சேர்தல்.

ஆய தவ்வழி நிகழ்தர வாடவ ரெல்லாந்
தாயை முன்னிய கன்றென நின்றுயிர் [1]தளிர்ப்பத்
தூய [2]தம்பியுந் தானுமச் சுமந்திரன் றோண்மேற்
போய கங்குளிர் புரவல னிருந்துழிப் புக்கான்.

(இ - ள்.) ஆயது - அத்தன்மையதாகியசெய்தி, அ வழி - அவ்விடத்து, நிகழ்தர-நிகழாநிற்க,—ஆடவர் எல்லாம்-புருஷரெல்லாம், தாயை முன்னிய-தாய்ப்பசுவை நினைத்த,கன்று என நின்று-கன்றைப்போல நின்று,உயிர் தளிர்ப்ப - மனம் மகிழாநிற்க,-தூய - பரிசுத்தனாகிய, தம்பியும் - தம்பியாகியலக்ஷ் மணனும், தானும் - தானுமாக, அ சுமந்திரன் தோண்மேல் போய்—, அகம்

குளிர்-மனங்குளிர்ந்திருக்கின்ற, புரவலன்-சக்கரவர்த்தி, இருந்தவூழி-இருந்த விடத்தில், புக்கான் - பிரவேசித்தான்; (எ - று.)

இணைபிரியாத் தம்பியாதலின், தசரதன் இராமனையழைத்துவாக்கட் டளைபிட்டபோது இலக்குமணனும் உடன்சென்று னென்றார். இலக்குமண னும் உடன் சென்றதாக முதனூலிற் கூறப்பட்டிலது. சீவாத்துமாக்கள் பர மாத்துமாவைக் கண்டுழிக் களித்த லிபல்பாதலின், 'தாபமுன்னிய கன் றெனநின்று உயிர்தளிர்ப்ப' என்று ரென்னலாம். உயிர்-ஈண்டு, மனத்தின் மேற்று; தம்பியுந்தானும் புக்கான் என்றது-"தானுந் தேரும் பாகனும் வந் தென்னலனுண்டான்" என்புழிப்போலப் பால்வழுவமைதி. இருந்தூழி-விகா ரம். பி-ம்:—[1]தரிப்ப. [2]தம்பியொடுந்தனிச். (சுo)

சுக.—ஸ்ரீராமன் வசிட்டமுனிவனை வணங்கிவிட்டுத் தசரதனை வணங்கினனாக, அச்சக்கரவர்த்தி இராமனைத் தழுவிக்கொள்ளுதல்.

மாத வன்றனை வரன்முறை வணங்கிவா ளுழுவன்
பாத பங்கயம் பணிந்தனன் பணிதலு மனையான்
காதல் பொங்கிடக் கண்பனி யுகுத்திட்டக் [1]கவிர்வாய்ச்
சீதை கொண்கனைத் [2]திருவுறை மார்பகஞ் சேர்த்தான்.

(இ - ள்.) (அவ்வாறு புகுந்த இராமன்), மா தவன்தனை-பெரிய தபோ நிதியாகிய வசிட்டமுனிவனை, வரல்முறை-முறைப்படி, வணங்கி-தொழுது, (பிறகு), வாள் உழவன் - சக்கரவர்த்தியின், பாதம் பங்கயம் - தாமரைமலர் போன்ற பாதங்களை, பணிந்தனன் - வணங்கினான்: பணிதலும்-வணக்கின வளவில், அனையான்-அச்சக்கரவர்த்தி, காதல் பொங்கிட - அன்பு மிகவும், கண் பனி உகுத்திட-(தன்) கண்கள் நீர்த்துளிகளைச் சிந்தவும், கவிர் வாய் சீதை கொண்கனை - முருக்கமலர்போன்ற [சிவந்த] வாயையுடைய சீதா பிராட்டிக்கு நாயகனாகிய ஸ்ரீராமபிரானை, திருஉறை மார்பு அகம் சேர்த்தான்-அரசச்செல்வி வீற்றிருக்கப்பெற்ற மார்பினிடத்து அணைத்துக்கொண்டான்.

வாள்உழவன் - வாட்போரில் சமர்த்தன்; "வில்லேருழவர்" என்றார் நாயனாரும். பாதபங்கயம்-வடநூன்முடிபு. இனி, பொங்குஇடக்கண் என்றுபிரிந்து, இடக்கண் துடிப்பதோடே நீரைப்பெருக்க எனவும் பொருள் படும்; ஆகவே, இடக்கண் துடித்தல் ஆடவர்க்கு அபசகுன மாதலால், சக்கர வர்த்தி இராமனைத் தழுவும்பொழுது அபசகுனமாயிற் றென்னவுமாம்.

பி-ம்:—[1]கனிவாய். [2]திருவுறு, திருவமர். (சுக)

சுஉ.—சக்கரவர்த்தி இராமபிரானைத் தழுவியதன் வருணனை.

நலங்கொண் மைந்தனைத் தழுவின னென்பதன் [1]னளிநீர்
நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட [2]நினைந்தான்
விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கு
மலங்கன் மார்பையுந் தனதுதே தாள் மார்புகொண் டளந்தான்.

(இ - ள்.) நலம் கொள் மைந்தனை - நன்மைகளைத் தன்னிடத்துக் கொண்டிருக்கிற புத்திரனாகிய ஸ்ரீராமபிரானை, தழுவினன்-தழுவிக்கொண்டான், என்பது என்-என்று சொல்வது என்ன? நளி நீர் - கடல்சூழ்ந்த, நிலங்கள்-நிலவுலகங்களை, தாங்குறும்-சுமத்தற்கு உரிய, நிலையினை-நிலையை, நிலையிட - அளவிட்டறிய, நினைந்தான்-நினைந்து, (அவ்விராமபிரானுடைய), விலங்கல் அன்ன திண் தோளையும் - மலையையொத்த திடமான தோள்களையும், மெய் திரு இருக்கும் அலங்கல் மார்பையும் - உண்மையாகிய திருமகள் தங்குகிற பூமாலையையணிந்த மார்பினையும், தனது தோள் மார்புகொண்டு - தனது தோளையும் மார்பையும் (அளவுகோலாகக்) கொண்டு, அளந்தான் - அளவிட்டான், (தசரதன்); (எ - று)

இப்பூபாரத்தைத் தாங்குவதற்குரிய தோள்களின்பரப்பும் மார்பின் பரப்பும் உள்ளனவோ என்று தன் தோள்மார்புகளால் அளந்துபார்ப்பதற் காகவே இராமனைத் தசரதன் கட்டிக்கொண்டான்போலு மென்பது கருத்து. தழுவுதலை மறுத்து மார்புகொண்டளந்ததாகக் கூறியது, அபநுதியணியாம். நலமாவன - நல்லறிவு, அடக்கம், பொறுமை, வல்லமை, மனவுறுதி முதலியன. திருமகளுக்குத் தன் மார்பைப் படைவீடாக்கித் தந்து சகலசுவரிய சம்பன்னனாய்ச் சகலலோகநியந்தாவா யிருக்கும் கள்ளமாயப்பிரானுடைய கனத்த தோள்களையும் மார்பையும், சுள்ளிகொண்டு கடலாழம் பார்ப்பாரைப்போலச் சக்கரவர்த்தி அளந்து பார்த்தது, பிள்ளையென்றெண்ணிய பேரபிமானமேயென்று வியக்கின்றார் கவியென்க. நளி - பெருமை: கடலினும் பெருநீர் இன்மையின், 'நளிநீர்' என்றது - கடலுக்காயிற்று; நளி-குளிர்ச்சியுமாம். நிலங்கள் தாங்குறும்நிலக்கேற்ப, மைந்தன்என்பதற்கு - திண்ணியன் என்று உரைப்பினும் அமையும். பி-ம்:—[1]நளிர்நீர், நன்னீர். [2]வேண்டி.

(கூஉ)

கூங —தசரதன் தான் சொல்லவேண்டுவது ஒன்று உண்டு என்று இராமனிடம் கூறத்தொடங்குதல்.

ஆண்டு தன்[1]மருங் [2]கிரீஇயுவந் தன்புற நோக்கிப்
பூண்ட போர்மழு வுடையவன் [3]பெரும்புகழ் குறுக
நீண்ட [4]தோளினுய் நிற்பயந் ததித்த[5]யா னின்னை
வேண்டி யெய்திட [6]வினைவதான் [7]றுளதென விளம்பும்.

(இ - ள்.) ஆண்டு-அவ்விடத்து, தன் மருங்கு இரீஇ-(இராமனைத்) தன் பக்கத்தில் இருத்திக்கொண்டு, உவந்து-மனமகிழ்ந்து, அன்புஉற - அன்புமிக, நோக்கி-பார்த்து, 'பூண்ட-தரித்த, போர்-போர்க்குரிய, மழு - மழுவாயுதத்தை, உடையவன்-உடையவனாகிய பரசுராமனது, பெரு புகழ் குறுக-பெரிய கீர்த்தி சுருங்கும்படி, நீண்ட-நிமிர்ந்த, தோளினுய்-தோள்களையுடையவனே! நின் பயந்து எடுத்த யான்-உன்னைப் பெற்றெடுத்த நான், நின்னை வேண்டி எய்திட - உன்னைப் பிரார்த்தித்து அடையுமாறு, ஒன்று வினைவது-வினை

ந்து நிகழவேண்டிய செயல் ஒன்று, உளது -, என - என்று, விளம்பும் - சொல்லுவான்; (எ - று.)—அது மேற்கூறுகின்றார்.

மாமுடிபுனைந்து மாநிலம்புரக்க வேண்டுமென மேற்கூறுதலின், அதற்கு உரிய ஆற்றல் இராமனிடத்து அமைந்துள்ளதென்பதை அவனுக்கு அறிவிக்கு மாறு பரசுராமனை வென்றதைக் கூறுகின்றான். முன்னவதாரமான பரசுராமனதுவலியும் பின்னவதாரமான ஸ்ரீராமனுக்கு வந்துவிட்ட தென்பது தோன்ற, 'தூய நீண்ட தோள்' எனப்பட்டது. இத்தொடரில் முரண் டொடை காண்க. உன்னைப் பெற்றதற்குப்பயன் இப்போது யான் வேண்டுவதைத்தருவதே யென்பான் 'நிற்பயந்ததுத்தயான், நின்னை வேண்டியெய்திடவிரைவது' என்றான். இரீஇ - இருத்தியென்பது விகாரப்பட்டு அளபெடுத்தது. எய்திட - எய்தியிடவென்பதன்விகாரம். விளம்பும் - செய்யுமென் முற்று ஆண்பாலுக்குவந்தது. பி - ம்:—[1]அருகு. [2]இருத்தியங்கு. [3]நெடும். [4]தாளைய. [5]நான். [6]ஈவது. [7]உண்டென. (சுகூ)

சுசு.—இதுமுதல் எட்டுக்கவிகள் - ஒருதொடர்: தசரதன் தான் வேண்டுவதைக் காரணத்தோடு விரித்துரைத்தல்.

ஐய சாலவு மலசின னரும்பெரு மூப்பும்
[1]மெய்ய தாயது [2]மேவிடப் பெரும்பரம் [3]விசித்த
[4]தொய்யன் மாநிலச் [5]சுமையுறு சிறைதுறந் தினியா
னுய்ய லாவதோர் நெறிபுக வுதவிட வேண்டும்.

(இ - ள்.) ஐய - ஐயனே! சாலவும் அலசினன் - மிகவும் வருந்தினேன்; அரு பெரு மூப்புமும் - (நீக்கிக்கொள்வதற்கு) அரிதாகிய பெரிய முதுமையும், மெய்யது ஆயது-(என்) உடம்பில் தோன்றிவிட்டது; (ஆதலால்), பெரு பரம் மேவிட விசித்த - பெரியபாரத்தைப்பொருந்தத் தொடங்கிய, தொய்யல் - துன்பத்திற்குக்காரணமாகிய, மா நிலம் சுமை - பெரியபூபாரமென்கிற, உறு சிறை - மிக்க சிறையை, துறந்து - நீங்கி, இனி யான் உய்யல் ஆவது - இனிநான் பிழைக்கலாவதாகிய, ஓர் நெறி புக - ஒப்பற்ற நன்மார்க்கத்திற் பிரவேசிக்க, உதவிட வேண்டும் - உதவிசெய்யவேண்டும்; (எ - று.)

பலநாள் பூபாரத்தைத் தாங்கி யிளைத்த நிலையில் முதுமையும்மிக்குத் தோன்றியதனால், யான் இத்தப்பூமியைத் தாங்குவதாகியசிறையினின்று விடுபட்டு மோட்சநெறிக்குச் செல்லும்வழியைத் தேடுமாறு நீ உதவவேண்டுமென்று இதனால் தன்கருத்தைத் தசரதன் சுருக்கமாகக் கூறுகின்றனனன்க. அலசினதேயன்றி எனப்பொருள்தரலால் 'மூப்பும்' என்றஉம்மை-இறந்ததுதழுவியது. தொய்யல்-துவட்சியாய், நிலையற்றதென உரைப்பினும் ஆம். நன்னெறிக்கு ஒப்பின்மையின் 'ஓர்நெறி' என்றான். பி - ம்:—[1]வெய்யது. [2]வியனிடம், வியலிடப். [3]விசித்துத், படைத்துத். [4]தொய்யறுழ்நுகம், தொய்யன்மாநிலஞ். [5]முழுவதுஞ்சுமையுறுசிறை. உதவிடல். (சுசு)

சுநு. [1]உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறு[2]துயர் நீங்கி
[3]யிருமை யும்[4]பெறற் கென்பது [5]பெரியவ ரியற்கை
தருமம் மன்னநிற் றந்தயான் றளர்வது தகவோ
கருமம் மென்வயிற் செய்யினென் கட்டுரை கோடி.

(இ - ள்.) உரிமை மைந்தரை பெறுகின்றது - எல்லாவுரிமைகளையு முடைய புத்திரரை (ஒருவர்) பெறுவது, உறு துயர் நீங்கி - மிக்க துன்பத்தி னின்று நீங்கி, இருமைஉம் - இருமையின்பங்களையும், பெறற்கு - அடைதற் பொருட்டாகும், என்பது - என்று சொல்வது, பெரியவர் இயற்கை - பெரி யோரது இயல்பாயிருக்கின்றது; (அங்ஙனமாக), தருமம் அன்ன நின் தந்த யான்-தருமதேவதையையொத்த உன்னைப் பெற்ற நான், தளர்வது-தளர்ச்சி யடைவது, தகவுஓ - தகுதியோ? [அன்று]; (ஆதலால்), என்வயின் - என் னிடத்து, கருமம் செய்யின் - உரியதொழிலைச் செய்யவிரும்பினையாயின், என் கட்டுரை கோடி - எனது உறுதிவார்த்தையைக்கொள்வாயாக; (எ - று.)

சாமானியமாகப் புத்திரரைப்பெறுதல் இருமையும் பெறுதற்குளன்பது பிரசித்தமாயிருக்க, தருமமே வடிவுபடைத்தாற்போன்றுள்ள உன்னைப்பெற்ற நான் இங்ஙனம் தளர்வது தகுதியன்றுதலால், யான் வேண்டியதை நிறை வேற்றவேணுமென்கின்றான் தசரதன். கல்விகேள்விகளால்நிறைந்து சகலசற் குணங்களுக்கும் இருப்பிடமாகிச் சற்காரியங்களைச் செய்து சான்றோராற் புகழ்பெற்று அகங்களிக்கச் செய்தலின் இம்மையையும், நீர்க்கடன் முதலி யன செய்து நற்கதிய டைவித்தலின் மறுமையையும் பெறச்செய்தலின் 'மைந்தரைப்பெறுகின்றது இருமையும் பெறற்கு' என்றார்; "பராவரும் புதல் வரைப் பயக்கயாவரு, முராவருந்துயரைவிட் டுறுதிகாண்பரால்" எனக் கைகேசி சொல்லாக வருவதும் இங்குக் காணைத்தக்கது. பி-ம்:—[1]உருமை. [2]பிணி, வலி. [3]பெருமையும். [4]பெறும். [5]முன்பிலோர். (சுநு)

சுசு. மைந்த நங்குல மரபினின் [1]வந்தருள் வேந்தர்
தந்த மக்களே கடைமுறை நெடுநிலந் தாங்க
வைந்தொ [2]டாகிய முப்பகை [3]மருங்கற வகற்றி
யுய்ந்து போயின ரூழினின் றெண்ணினு முலவார்.

(இ - ள்.) மைந்த - புத்திரனே! நம் குலம் மரபினில் - நமது சிறந்த வம்ச சத்தில், வந்தருள் - தோன்றிய, வேந்தர் - அரசர், தம்தம் மக்களை - தந்தம் புதல்வரே, கடைமுறை - முதுமைப்பருவத்தில், நெடு நிலம் தாங்க-நெடிய பூபாரத்தை வகிக்க, ஐந்தொடு ஆகிய - பஞ்சேந்திரியங்களாலுண்டாகிய,முப் பகை - முப்பகையையும், மருங்கு அற அகற்றி - சுவடுகெட நீக்கி, ஊழி நின்று - (மறுமைக்குவேண்டிய) முறைமையிலிருந்து, உய்ந்து போயினர் - பிழைத்துப்போனார்கள்; (அவ்வாறுஉய்ந்துபோயினவர்), எண்ணினும் - எண்ணினாலும், உலவார் - குறையார் [எண்ணிறந்தோரென்றபடி]; (எ-று.)

பஞ்சேந்திரியங்களினுலாகிய முப்பகைகளை அடியோடறுத்தாலல்லது துறவுண்டாகி முத்திபெறுதல் அருமைபற்றி 'மருங்கறவகற்றி' என்றார். "மெய்வாய் கண் மூக்குச் செவி யெனப்பேர்பெற்ற, வைவாய வேட்கையவர் வினைக் - கைவாய்க், கலங்காமற் காத்துய்க்குமாற்றலுடையான், வில்ங்கர்து வீடுபெறும்" என்றார் பிறரும். முன் கசு-ஆங் கவியில் "நங்குலக்குர்வர்கள்" என்று சொல்லிய விஷயத்தையே இங்குத் தன்மகனுக்குச் சொல்லுகின்றுன். ஊழிஎன்பதற்கு-இவ்வுலகத்திலிருந்து என்றுமாம்:ஊழி உலகென்னும் பொருள தாதலை "ஊழியேழானவொருவா" என்ற இடத்துங் காண்க. இனி ஊழிநின்று எண்ணினும் உலவார்என்று இயைத்து-ஊழிக்காலமிருந்து எண்ணினுலும் குறைபடா ரென்றுமாம். ஐந்தொடு என்புழி ஒடு உருபு ஐந்தாலெனப் பொருள்பட்டு வினைமுதற்பொருளாயிற்று: "கொடியொடுதுவக்குண்டான்" என்புழிப்போல. முப்பகை - காமம், வெகுளி, மயக்கம். **பி-ம்:**—[1]மணிமுடி. [2]ஆதிய. [3]மருங்குறுது. (கசு)

கூன. முன்னை யூழ்வினைப் [1]பயத்தினு மற்றிய வேள்விப்
பின்னை யெய்திய நலத்தினு [2]மரிதினிற் பெற்றே
னின்னம் யானிந்த வரசிய [3]லிடும்பையி னின்றே
னின்னை யீன்றுள [4]பயத்தினி [5]னிரம்புவ தியாதோ.

(இ - ள்.) முன்னை ஊழ் வினை பயத்தின்உம் - முற்பிறப்பிற் செய்த நல்வினைப்பயனாலும், பின்னை முற்றிய வேள்வி எய்திய நலத்தின்உம் - இப்பிறப்பில் முடித்த யாகங்களின்பயனை யடைந்த நன்மையாலும், அரிதின் - அருமையாக, நின் பெற்றேறன் - உன்னைப் பெற்றேறன்; (பெற்றும்), இன்னம் - இன்னமும், யான்—, இந்த அரசு இயல் - இந்த அரசியலைப்பற்றிய, இடும்பையில் - துன்பத்தில், நின்றுல் - இருந்தால், நின்னை ஈன்றுள பயத்தினின் - உன்னைப்பெற்ற பயனால், நிரம்புவது - நிறைவது, யாது—? (எ - று.)—ஓ - அசை.

உன்னைப் பெற்றதற்குப் பயன், இந்த அரசியலிடும்பையிலிருத்தலோ? அன்று: இதனினின்று நீங்குவதே என்பது கருத்து. முற்றியவேள்வி-அசுவமேதம், புத்திரகாமேஷ்டி முதலியன. பிள்ளையின்றி வெகுகாலம் வருந்திப் பெரும்பேறுகப்பெற்றன னென்பான் 'அரிதினிற் பெற்றேறன்' என்றுன். **பி ம்:**—[1]பயத்தினை. [2]அரிதுனை. [3]இடும்பையனென்றுல், இடும்பையனின்றுல். [4]பயத்தினுள். [5]நிரம்பியது. (கூள)

கூஉ. ஒருத்த லைப்பரத் [1]தொருத்தலைப் பங்குவி னூர்தி
[2]யெருத்தி னீங்குநின் றியல்வரக் [3]குழைந்திட [4]ருழக்கும்
வருத்த [5]நீங்கியவ் வாப்பறு திருவினை மருவு
மருத்தி யுண்டெனக் கைய[6]வீ தருளிட வேண்டும்.

(இ - ள்.) ஒரு தலை பரத்து-ஒருபக்கம் பாரத்தையும், ஒரு தலை பங்குவின் - ஒருபக்கத்தில் சொண்டியாயிருக்குந்தன்மையையுங்கொண்ட, ஊர்தி

எருத்தின்-பண்டியிற்கட்டிய எருத்திணுடைய, இயல்-தன்மை, வர-பொருந்த, ஈங்குநின்று-இவ்வுலகத்திலிருந்து, குழைந்து - வாடி, இடர் உழக்கும்-துன் பத்தை யனுபவிக்கச் செய்கின்ற, வருத்தம் - துக்கரூபமாகிய் அரசாட்சியி னின்று, நீங்கி—, எம்பு அறு - எல்லையற்ற, அ திருவினை - அந்தமோட்ச சாமிராச்சியத்தை, மருவும்-அனுபவிக்கவேண்டுமென்கிற, அருத்தி - ஆசை, எனக்கு உண்டு - என்னக்கு உள்ளது; ஐய - இராம்! ஈது - இதனை, அருளிட வேண்டும் - (நீ) கொடுக்கவேண்டும்; (எ - று.)

அறுபதினாயிரமாண்டு அருந்தயருழந்து அரியகிழவனான நான் ஒருபக் கம் பாரமும் ஒருபக்கம் நொண்டிக்காலுமாயுள்ள வண்டியிற்கட்டிய எருது எவ்வாறு குழைவுறுமோ அவ்வாறு குழைவுற்றுள்ளேன்; என்னை இதனி னின்று விடுவிப்பாயாக என்கிறான் தசரதன். பாரத்தைத்தாங்கும் வல்லமை யற்ற கிழத்தனத்தோடு தான் இராச்சியச்சுமையைத் தாங்கிநிற்றலின், தச ரதன் தனக்குப் பெரும்பாரத்தைக் கொண்ட பண்டியிற் பூட்டிய நொண்டி யெருத்தை உவமையாக் கூறுகின்றான். வண்டியிற்பூட்டிய எருதுக்குப் பெரும் பாரமும்நொண்டித்தன்மையும்என்று இருவகையானவருத்தமும்நேர்பட்டாற் போலுமென்பான் 'ஒருத்தலைப்பரத்தினாருத்தலைப்பங்குவினூர்தியெருத்தினி யல்வர' என்றான். எருது என்னும் உயிர்த் தொடர்க்குற்றிய லுகரத்தின் தகரவொற்று வேற்றுமையில் இரட்டி, 'இன்' சாரியை பெற்று எருத்தின் என வந்தது. ஊர்தி - எறிச்செல்லுதற்கு உரியது என்ற காரணம்பற்றிப் பண்டியைக் காட்டிற்று. இனி, ஊர்தி எருத்து என்பதற்கு - எருதினது கழுத்து [ஊர்தி - எருது; எருத்து - பிடர்] என்று பொருள்கொண்டு, இத் தொடர்க்கு - ஒருபக்கமான பாரத்தையுடைய வண்டியில் ஒருபக்கத்துப்பூட் டிய பங்குவாகிய எருதினதுபிடரின்தன்மைபொருந்தஎன்றுகூறுவாருமுளர். அரசாட்சி சகடமாகக் கூறப்படுவதை "கால்பார்கோத்து ஞாலத்தியங்குங், காவற்சாகாடு" என்ற புறநானூற்றிலும் காண்க. இனி, முதலடிக்கு - ஒருபக்கமான பாரத்தைக்கொண்ட வண்டியிற்பூட்டிய ஒருத்தல [எரு தை]ப் போலவும், நொண்டியைச் சுமக்கின்ற வாகனத்தின் எருத்தம் [பிட ரி] போலவும் என்று இரண்டு உவமை வந்துள்ளனவாக உரைகூறினரு முளர். அன்னர் மிக்கவருத்தத்தையுண்டாக்குதற்கு முதலுபமானமும், எங்ங னம்முடவன் ஊர்தியின்மூலமாகவே செல்லவேண்டுமோ அங்ஙனமே அர சும் ஆள்வோன்மூலமாகவே செல்லவேண்டுமென்பதற்கு இரண்டாவது உப மானமும் கூறிய தென்பர். அத்தகில்போன்பமென்பான் 'வரம்பறுதிரு' என்றான். சுட்டு, உலகறிபொருண்மைமற்று. பெருவீடாகிய மோட்சத்துக்கு உடையவனாகிக் கண்டாரை நிலைகலக்குங்கட்டழகமைந்த கருமாணிக்கத்தைக் காணவே தான் மெய்ம்மறந்து உடலுருகி ஞானந் தலைசிறப்ப நின்ற தசரத னது வாக்கில் 'அருளிடவேண்டும்'என வந்ததென்னலாம். ஒருத்தலையனைத் தகரமிரட்டியது, எதுகைநோக்கியும் சந்தவின்பநோக்கியு மென்க. பங்கு வின், இன் - அசை. பங்கு - வடசொல். பி-ம்:—[1]ஒருதலை. [2]எருத்தம் வீங்க

நின்றலம்வர, எருத்தம் வீங்கிநின்றுயல்வர, எருத்தம் வீங்கிநின்றலமர.
[3]சுமந்திடர். [4]உழைக்கும். [5]நீக்கி. [6]அதருளிட. (சுஅ)

சுகூ. ஆளுநன்னெறிக் கமைவருமணமதிபின் முக
நாளுநங்குல நாயக னறைவிரி கமலத்
தாளினல்கிய கங்கையைத் [2]தந்துதந் தையரை
[3]மீள்வி லின்னுல கேற்றினு னெருமகன் மேலுள்.

(இ-ள்.) மேல் நாள்-முற்காலத்தில், ஒரு மகன்-ஒருபுருடன்[பகீரதன்], ஆளும்-பெறுதற்குரிய, நல் நெறிக்கு - நல்லவழிக்கு, அமைவருமம் - பொருந்திய, அமைதி-தன்மை, இன்று ஆக - (தனது மூதாதையர்க்கு) இல்லாமற் போனதனால், (அவர்களை நற்கதியிற்சேர்க்க விரும்பி), நாள்உம் - எந்நாளும், நம் குலம் நாயகன்-நம்முடைய குலதெய்வமாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய, நறை விரி கமலம் தாளின்-தேனேடுமலர்கின்ற திருவடித்தாமரையினால், நல்கிய-தரப்பெற்ற, கங்கையை-கங்காநதியை, தந்து-(இவ்வுலகிற்)கொணர்ந்து, தந்தையரை - (தன்) மூதாதைகளை [சகரபுத்திரர்களை], மீள்வு இல் இன் உல்கு-மீளுதலில்லாத இனிய முத்தியுலகத்தில், ஏற்றினுன்-ஏறச்செய்தனன்.

'உய்யலாவதோர் நெறிபுக வுதவிடுதல் என்னுற் கூடுமோ?' என்னும் ஆசங்கையைப் பரிகரித்தற்கும், அரியபெரியகாரியஞ்செய்தாயினும் தந்தையை மகன் நல்வழியிற் சேர்க்கவேண்டு மென்பதை வற்புறுத்தற்கும், அது நம்முடைய குலவழக்க மென்று உணர்த்தப் பகீரதன்சரிதையை யெடுத்துக் காட்டுகின்றுன் தசரதன். திருமால் மாவலிவேள்வியிற்புக்கு ஒருகுறளாய் மூவடிமண்வேண்டி உலகனைத்தும் ஈரடியா லளந்தாளில் அவன்சேவடியை நான்முகன் குண்டிகைநீர்பெய்து மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்திக் கழுவிய நீரான கங்கையைச் சிவபெருமான் சென்னிமேலேறக் கொணர்ந்து கபிலசாபத்தாலிறந்த தன் மூதாதையரைப் பகீரதன் பரகதியடைவித்தானென்பது இங்குக்குறித்த கதை.இது, பாலகாண்டத்தி லுணர்த்தப்பட்டது. பிரமன் ஆராதித்த திருமால் இட்சுவாகுமன்னவனால் தவஞ்செய்து சத்திய லோகத்தினின்று திருவயோத்திக்குக் கொணரப்பெற்றுச் சூரியகுலமன்னவரால் ஆராதிக்கப்பட்டதனால், 'நங்குலநாயகன்' என்கிறுன். அபேதம்பற்றித் திரிவிக்கிரமனையும் இத்திருமாலையும் ஒன்றுகக்காண்க. மீள்வினுலகு-பரமபதம். பலதந்தையரைக்காத்த பகீரதன்குலத்துதித்த உனக்கு என் னெருவனைக்காத்தல் அரிதன் றென்று குறிப்பித்தபடி. பி-ம்:—[1]அமைவின னுகி. [2]தாழ்த்து. [3]மீள்விலா, மீள்கிலா. (சுசு)

எ0. மன்னர் [1]வானவ ரல்லர்மேல் வானவர்க் காசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் [2]போலிய [3]ரல்லர்
பின்னு மாதவந் [4]தொடங்கி நோன் பிழைத்தவர் [5]பிறரார்
சென்ம சூ[6]மகற் பெற்றவ ரருந்துயர் துறந்தார்.

(இ ள்.)அரு துயர் துறந்தார்-துறத்தற்கரிய துன்பத்தினின்று நீங்கினவர்கள்,—மன்னர் (அல்லர்)-இவ்வுலகத்தரசரல்லர்; வானவர் அல்லர்-தேவர்களல்லர்; மேல் - மேலும், வானவர்க்கு அரசு ஆம்-தேவர்க்கரசாகிய,பொன்னின் வார் கழல் புரந்தரன் போலியர்-பொன்னாற்செய்த நெடிய வீரக்கழலை யணிந்த இந்திரனைப் போன்றவரும், அல்லர்-; பின்உம்-அன்றியும், மாதவம் தொடங்கி நோன்பு இழைத்தவர் (அல்லர்) - பெரியதவத்தைத் தொடங்கி விரதங்களை யநுஷ்டித்தவரு மல்லர்; பிறர் ஆர்-வேறுயாவரெனில், சொல் மறு மகன் பெற்றவர் - (தஞ்)சொல்லை மறுக்காத புத்திரனைப்பெற்றவரே யாவர்; (எ - று.)

மண்ணவரும் விண்ணவரும் மாதவரும் துயர்துறந்தா ரல்லர்;தஞ்சொன் மறு மகற் பெற்றவரே துயர்துறந்தவராவரென்பது கருத்து. "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழி பிறங்காப், பண்புடை மக்கட்பெறின்" என்ற திருக்குறள் இங்குக் காணத்தக்கது. எவ்வகைச் செல்வமிருப்பினும் பயனில்லை; நற்குணமுள்ள மகனைப் பெற்றால் எவ்வகைத் தீமையும் தீண்டப்பெறாது இனிது வாழ லாகு மென்க. "யாமெய்யாக் கண்டவற்றுளில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்லபிற" என்றது திருக்குறள். இனி, இச்செய்யுட்கு - அருந் துயர்துறந்தாரும் மாதவந்தொடங்கிநோன்புஇழைத்தவரும் மன்னர்முதலி யோரல்லர்; சொன்மறுமகற் பெற்றவரே; பிறரில்லையெனப்பொருள்கூறலு மாம். பி-ம்: —[1]ஆனவர். [2]சோரியர். [3]அல்லால். [4]தொடங்கி நோய் பிழைத்தவர், தொடங்கிநோர் பிழைத்தவர். [5]அல்லார். [6]மகப். (எ0)

எக. அனைய காதலி னருந்துயர்ப் பெரும்பர மாசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொளல் வேண்டா
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் [1]புரக்க
நினையல் வேண்டும்நா னின்வயிற் பெறுவதீ தென்றான்.

(இ-ள்.) அனையது ஆதலின் - அப்படியாகையினால் [தந்தையின் பாரத்தைத் தனயன் நீக்குவதே அரசகுலத்தார்க்கு முறையாதலால்],அரசன்—, அரு துயர்-அரிய துன்பத்தையுடைய, பெரு பரம்-பெரியபூபாரத்தை, வினையின் - கபடத்தினால், என்வயின் - என்னிடத்தில், வைத்தனன்—, என - என்று, கொளல் வேண்டா - நினைத்துக்கொள்ளவேண்டா; புனையும்-அலங்கரிக்கின்ற, மா முடி - பெருமைபெற்ற கிரீடத்தை, புனைந்து - அணிந்து கொண்டு, இந்த நல் அறம் புரக்க-இந்த (அரசுபுரிதலாகிய) நல்லதருமத்தைப் பரிபாலிக்க, நினையல்வேண்டும் - நினைப்பாயாக: நான்—, நின்வயின்-உன்னிடத்து, பெறுவது - பெறத்தக்கது, ஈது-இதுவே, என்றான்—; (எ - று.)

உட்பகை புறப்பகைகளைக் களைந்து எவரெவர் எத்திறத்தரோ அவரவர்க்கு அத்திறத்தனாய் நின்று ஆவணசெய்து அறம்வழுவாது நடத்தல் மிகக் கடுமைபற்றி, 'பெரும்பரம்' என்றான். தருமவியாசத்தால் அரசாட்சியைத்

தன்னிடத்துவைத்தா னென்றறண்ணுது அரசற்கு ஈது இன்றியமையாத் தருமமென வெண்ணி இதை மேற்கொள்ளவேண்டு மென்று னென்க. "தரும மென்வயிற் செய்யின் என்கட்டுரைகோடி" என்றதை, இதனால் தசரதன் விளக்குகின்று னென்க. பி-ம்:—[1]புகனீ. (எக)

எ2.—தாதைதகட்டளையென்ற காரணத்தால் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளு இராமன் இசைதல்.

†தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் [1]கடனிதென் [2]றுணர்ந்தும்
யாது கொற்றவ [3]னேவிய ததுசெய லன்மே
நீதி யெற்கென [4]நினைந்துமப் பணிதலை நின்றான்.

(இ-ள்.) தாதை-தகப்பன், அ பரிசு-அவ்விதமாக, உரை செய-சொல்ல, தாமரை கண்ணன்-புண்டரீகாட்சனை ஸ்ரீராமன், காதல் உற்றிலன்-(இராச் சியங்கிடைத்ததுஎன்ற) விருப்பத்தைக் கொள்ளாதவனுகியும், இகழ்ந்திலன்-(இராச்சியத்தைவகித்தல் பாரமாயிற்றே என்று) மறுக்காதவனுகியும், இது-இப்பூபாரந்தாங்குதல், கடன் என்றுஉம்-கடமையென்றுகருதியும்,—கொற் றவன்-அரசன், உணர்ந்து-ஆராய்ந்து, எவியது-எவினது, யாது-எதுவோ, அது-அதனை, செயல்அன்றே-செய்தலல்லவா, எற்கு எனக்கு, நீதி-நியாயம், என-, நினைந்துஉம்—, அ பணி-(இராச்சியத்தையாள ஒப்புக்கொள்ளுதலா கிய) அக்காரியத்தை, தலைநின்றான்-மேற்கொண்டு நின்றான்; (எ-று.)

அரசைக் கைக்கொண்டு தந்தையின்துயரத்தை நீக்கல் தனக்குக்கடமை யாயினும், பித்ருவாக்கிய பரிபாலனரூப தருமத்தையே மேலாகக் கருதியிருந் தமையைத் தோற்றுவிக்க, 'யாது கொற்றவனேவியது அதுசெய்லன்றே நீதியெற்கென நினைந்து தலைநின்றான்' என்றார்; விருப்பும் வெறுப்பும் உண் டாயவழி அதன் குணதோஷந் தோன்று வாதலினுலும், பெரியவரியற்கை யவ்வாறுதலினுலும் அவ்விரண்டுமின்றிக் கடனெனத் தான் ஒப்புக்கொண் டமை தோன்றநின்றுனென்பதாம். பி-ம்:—[1]கடனது. [2]உணர்ந்து, உணர்ந் தது, உணர்ந்தே. [3]ஏவினன். [4]நினைந்துதன், நினைத்துமப். (எஉ)

எங.—இராமன்உடன்பாட்டையுணர்ந்த தசரதன் அவனைத் தழுவிவிட்டுத் தன்னரண்மனையைச் சேர்தல்.

குரிசில் சிந்தையை மனக் [1]கொண்ட கொற்றவெண் குடையான்
றருதி யிவ்வர மெனச்சொலி யுயிருறத் தழுவிச்
சுருதி யன்னதன் [2]மந்திரச் சுற்றமுஞ் சுற்றப்
பொருவின் மேருவும் பொருவருங் கோயில் [3]போய்ப் புக்கான்.

---

† "துரிதைரபிகர்த்துமாத்மஸாத் ப்ரயதந்தேந்ருபஸுநவோஹ்ரியத்-தது பஸ்திதமக்ரஹீதஜ்ஞ: பிதுராஜ்ஞேதிநபோகத்ருஷ்ணயா" என்ற ரகுவம்ஸ ஸ்லோகம் இங்குக் காணத்தக்கது.

(இ - ள்.) குரிசில் - ஸ்ரீராமனுடைய, சிந்தையை - மனக்கருத்தை, மனம் கொண்ட - மனத்துட்கொண்ட, கொற்றம் வெள் குடையான் - சயம் பெற்ற வெள்ளியகுடையையுடையவனாகிய தசரதன், 'இ வரம் - இந்த வரத்தை, தருதி - தருவாய்', என சொல்லி - என்று சொல்லி, உயிர் உற தழுவி - (அவனை) தன்னுயிரோடுபொருந்தும்படி கட்டிக்கொண்டு [இறுகப் புல்லி], (பின்பு), சுருதி அன்ன - வேதத்தையொத்த, மந்திரம் சுற்றம்உம் - மந்திரிகளின்கூட்டமும், தன் சுற்ற-தன்னைச்சூழ்ந்துவர, பொருவு இல் மேரு உம் - ஒப்பில்லாத மேருமலையும், பொருவு அரு-ஒப்பாவதற்கரிய, கோயில் - (தன்) அரண்மனையில், போய் புக்கான் - போய்ச்சேர்ந்தான்; (எ - று.)

இங்கிதத்தால் பட்டாபிஷேகஞ்செய்துகொள்வதற்கு இராமன் இசைந்ததை உணர்ந்த தசரதன் வற்புறுத்துதற்பொருட்டு 'நான் வேண்டும் இவ் வரம் தரவேணும்' என்று மீண்டுஞ்சொல்லி இறுகத்தழுவிப் பிறகு மந்திரிமார் சூழ்ந்துவர ஆலோசனைமண்டபத்தினின்று அரண்மனைபோய்ச் சேர்ந்தானென்க. மார்புடன் இறுகப்புல்லிக்கொள்ளுதலாலுண்டாகிய சுகத்தை யநுபவித்தது உயிராதல் பற்றி, 'உயிருறத்தழுவி' என்றார்; உயிரோடொப்பத் தழுவி யென்றுமாம். நன்மைதீமைகளையாராய்ந்து நடுவுநிலைமையாய்ச் சொல்லி அரசனை நீதிவழிநிறுத்துதல் பற்றி, மந்திரிகளுக்குச் சுருதியை யுவமையாக்கினர். அன்றி, "திருவுடைமன்னரைக்காணிற் றிருமாலைக்கண்டேனே" என்றபடி மன்னவர் திருமாலின்அமிச மாதலாலும், திருமால் இத்தசரதனைத் தகப்பனாகக்கொண்டமையாலும் இவனை மந்திரிகள் சூழ்ந்துவருவதற்குச் சுருதியை யுவமையாகக் கூறினரென்னவுமாம். மேருவை வர்சத்தலமாகக்கொண்டிருக்கும் வானவர்க்கரசனை இந்திரன் இத்தசரதனிடத்தும் இவனுடைய வமிசத்தாரிடத்தும் யாசகனாகியும், வாகனமாகியுங்கிடத்தலால் அவனது வாசத்தலம் எவ்வாறுஒக்கு மென்பார், 'மேருவும் பொருவுருங் கோயில்' என்றார். பி-மீ:—[1]கொண்டு. [2]மந்திரத்தலைவரும். [3]சென்றடைந்தான். (எஉ)

எசு.—இராமன் தன்னரண்மனையைச் சேர்தல்.

நிவந்த வந்தணர் நெடுந்தகை மன்னவர் நகரத்
துவந்த மைந்தர்கண் மடந்தைய [1]ருழையுழை தொடரச்
சுமந்தி ரன்[2]றடந் தேர்மிசைச் சுந்தரத் [3]திரடோ
[4]ளமைந்த மைந்தனுந் தன்னெடுங் கோயில்[5]சென் [6]றடைந்தான்.

(இ - ள்.) நிவந்த-மேலான, அந்தணர்-வேதியரும், நெடு தகை மன்னவர் - பெருங்குணமுள்ள அரசர்களும், நகரத்து - நகரத்திலுள்ள, உவந்த-(தன்னை) விரும்பின, மைந்தர்கள்-புருஷர்களும், மடந்தையர் - பெண்களும், உழை உழை தொடர-அருகே தொடர்ந்துவர, சுந்தரம் திரள் தோள் அமைந்த-அழகாகியதிரண்ட தோள்களையுடைய, மைந்தன்உம் - ஸ்ரீராமபிரானும், சுமந்திரன் - சுமந்திரனது, தட தேர் மிசை - பெரியதேரின்மீது (ஏறி), தன்

நெடு கோயில் சென்று அடைந்தான் - (தனது) பெரியதிருமாளிகையிற் சென்று சேர்ந்தான்; (எ - று.)

மன்னவர் முதலியோர் அன்போடு அருகேதொடர்ந்துவர, சுமந்திரன் கொணர்ந்த தேரின்மீது இராகவபிரான் ஏறிக்கொண்டு தன்னரண்மனைக்குச் சென்றனனென்க. மைந்தனும், உம்மை - இறந்ததுதழுவியது. அழகிய தட்பத்தினையுடையராய் அதனால்உயர்ந்தவராதலால், 'நிவந்த அந்தணர்'என்றார். தாடகைமுதலியோரின் மிடுக்கையழித்து நீலகண்டன்வில்லை நீறுபடவொழித்துப் பரசுராமன்வலியைப் பழித்துப் பரந்துதிரண்டு பார்த்தவர்கண்களைக் கவரும் பேரழகுஅமைந்த தோ ளென்பார் 'சுந்தரத்திரடோள்' என்றார். பி-ம்:—[1]உழையர்பின். [2]தனி. [3]தடந்தோள். [4]இவர்ந்த. [5]புக்கு. [6]இருந்தான்.

எரி.—தசரதன் மன்னவரீக்துச் செய்திதெரிவிக்துமாறு ஓலைபோக்கி, முடிகவித்தற்து வேண்டுவன இயற்றுமாறு வசிட்டனிடங் கூறுதல்.

வென்றி வேந்தரை [1]வருகென [2]வுவணம் [3]வீற்றிருந்த
பொன்றி ணிந்ததே [7]ட்டருங் [4]பெற லிலச்சினை போக்கி
நன்று சித்திர [5]நளிமுடி கவித்தற்கு [6]நல்லோ யைச்
சென்று வேண்டுவ வரன்முறை யமைக்கெனச் [7]செப்ப.

இதுவும் அடுத்த கவியும்—குளகம்.

(இ - ள்.) (தசரதன் தன்கோயிலை யடைந்தபின்), வென்றி வேந்தரை-வெற்றிபொருந்திய அரசர்களை, வருக (இவ்விடத்திற்கு) வரவேண்டும், என-என்று எழுதி, பொன் திணிந்த தோடு-(அந்நாளம் கட்டளையெழுதப்பெற்ற) பொன்னாலாகிய பத்திரிகைகளில், உவணம் - கருடனதுவடிவம், வீறு இருந்த - பெருமையோடிருந்த, பெறல் அரு - பெறுதற்கு அரிய, இலச்சினை - முத்திரையை (இட்டு), போக்கி - அனுப்பி,—(பின்பு வசிஷ்ட முனிவனை நோக்கி), 'நல்லோய்-பகவானே! நன்று-நன்மையாகிய, சித்திரம் - விசித்திரமாகச் செய்யப்பட்ட, நளி முடி - பெருமை பெற்ற கிரீடத்தை, கவித்தற்கு - (இராமனுக்குச்) சூட்டுதற்கு, வேண்டுவ-வேண்டியவைகளை, வரல்முறை-கிரமப்படி, சென்று அமைக்க-சென்று சித்தஞ் செய்தருள்க,'என செப்ப-என்று சொல்ல,—(எ - று.)—"உரியமாதவ மெனுள்ளிதன்றுவந்தனன்" என அடுத்த கவியோடு தொடரும்.

கீழ்மந்திரிமாரோடு ஆலோசித்து இராமனுக்குப்பட்டங்கட்டுவதைத் தீர்மானித்தபின், பலநாட்டுவேந்தர்கட்கும் தான் இராமபிரானுக்கு முடிசூட்டக் கருதியிருப்பதைத் தெரிவித்து அவர்களுடைய உடன்பாட்டையும் பெறக்கருதிய தசரதன், அவ்வரசர்கட்கெல்லாம் பொன்னோலைகளில் 'இங்கேவருக' என்று தன்கட்டளையெழுதித் தனக்குரிய கருடமுத்திரையை அவற்றின் மேலிட்டு அனுப்பியபின்னர் வசிட்டபகவானைநோக்கி மகுடாபிஷேகத்திற்கு

வேண்டியவற்றையெல்லாஞ் சித்தஞ்செய்யுமாறு கூறினனென்பதாம். பல நாட்டிலுமுள்ள அரசர்களையும் ஜநங்களையும் தன்கருத்தைத் தெரிவிக்குமாறு பத்திரிகை யெழுதி வரவழைத்துத்தசரதன் கேகயதேசத்தரசனுக்கும் மிதிலா நகரத்தரசனுகிய ஜநகனுக்கும் அவர்கள்நாடு வெகுதூரத்திலிருப்பதுபற்றிச் செய்தி தெரிவிக்காது இந்தநற்செய்தியைக் கேகயநாட்டரசனும்ஜநகனும்கேட் டுப்பின்னர் இன்பம் அடையட்டு மெனக் கருதினு னென்று முதனூலி லுள் ளது. அரசர்முதலியோர் பிறர்க்கு எழுதும் ஓலையில் தமது இலச்சினையையிட் டுப் போக்குதல்,மரபு. சூரியகுலத்து இட்சுவாகுமன்னவன் முதல் மன்னவர் யாவரும் திருமாலைத் தமக்குக் குலதெய்வமாகக்கொண்டு பூசித்துவந்த வைஷ் ணவராதலால், அம்மன்னவர்கள் அத்திருமாலினது கொடியாகிய கருடபக வானையே தமது இலச்சினையாகக்கொண்டுள்ளா ரெனக் கம்பர் கருதினர் போலும். உவணம்=ஸுபர்ணஃ: இலச்சினை - லாஞ்சநம்: வடசொற்களின் சிதைவுகள். [3]வீற்றிருந்து என்ற பாடத்தைக்கொண்டு, "உவணம்உயர்ச்சி" என்று திவாகரத்திற் கூறியிருத்தலால், உவணமென்ற சொல்-ஆகுபெயரால் உயர்ந்த ஆசனமாகிய சிங்காதனத்தை யுணர்த்தியதாகக்கொண்டு,சிங்காதன த்து வீற்றிருந்து என்று உரைகூறினரு முளர். உவணம் வீற்றிருந்த ஓலை யென்றுகூறலும் உண்டு. பி-ம்:—[1]வருகவென்று.[2]அவணம். [4]பெறும். [5]நளிர். [6]நல்லீர். [7]செப்பும். (எடு)

எசு.—வசிட்டன் செல்ல, வந்த மன்னவரிடம் இராமனுக்கு முடிகவிக்கக் கருதியதைத் தசரதன் தெரிவித்தல்.

உரிய மாதவ னுள்ளிதென் [1]றுவந்தனன் விரைந்தீதார்
பொருவி றேர்மிசை யந்தணர் குழாத்தொடும் போக
நிருபர் கேண்மின்க ளிராமற்கு நெறிமுறை மையிற்றி
றிருவும் பூமியுஞ் சிந்தையிற் சிறந்தன வென்றான்.

(இ - ள்.) (அதைக்கேட்டு), உரிய மாதவன் - (சூரியவமிசத்தரசர்களுக் குப் புரோகிதஞ் செய்தற்கு) உரியவனுகிய வசிட்டபகவான், உள்ளிது என்று உவந்தனன் - நல்லதென்று மகிழ்ந்தவனுகி, விரைந்து—, பொருவு இல்-ஒப் பில்லாத, ஓர் தேர்மிசை - ஒருதேர்மேல் (ஏறி), அந்தணர் குழாத்தொடும் போக-வேதியர்கூட்டத்தோடும்போக,-(சக்ரவர்த்தியானவன் தான்ஓலைபோக் கியதனல் வந்துசேர்ந்த அரசர்களைநோக்கி), 'நிருபர்-அரசர்களே! கேண்மின் கள் - கேளுங்கள்; நெறி முறைமையினல் - அரசநீதிமுறைப்படி, இராமற்கு- இராமனுக்கு, திருவும் பூமியும்-ஐசுவரியமும் இராச்சியமும், சிந்தையின் சிறந் தன-(என்). மனத்திற் சிறந்தன', என்றான் - என்று சொன்னன்; (எ - று.)

இராச்சியத்தையும் அதற்குரியசெல்வத்தையும் தொன்றுதொட்டு வந்த முறைப்படியே இராமனுக்குத் தருதல் தக்கதாகு மென மனத்திற் கருதி யுள்ளே னென்று தசரதன் வந்தமன்னவர்களிடம் தன்கருத்தைத் தெரிவித்தா னென்க. சிந்தையின்-மனம்போல என்று உரைத்து, என் மனம் இராமபிரா னிடத்துச் சிறந்து நிற்பதுபோலத் திருவும் பூமியும் இராமபிரானிடத்துச்

சிறந்துநிற்கு மெனப் பொருள்காணலு மாம். நெறிமுறைமையினல் இராமற்குத் திருவும் பூமியுஞ் சிந்தையிற் சிறந்தன என்னுஞ் சொற்றொடரால், கைகேயிகூறும் வரமென்னும் வழிமுறையால் ஈங்கிராத மன்னனுகிய பரதனுக்குக் [இரா-இங்கேயிராத, மன்-அரசன்.] கொடுக்க அரசச்செல்வமும் பூமியும் என்மனத்திற் சிறந்தன என அத்தசரதன்கருத்துக்கு மாறுக வேறேர் பொருள் தோன்றுதல் காண்க. பி:—[1]அமைந்தனன். (எசு)

எஎ.—அச்சொல்லைக் கேட்டவர் யாவரும் பெருமகிழ்ச்சியடைதல்.

இறைவன் சொல்லெனு மின்னற வருந்தினர் யாரு
முறையி னின்றிலர் [1]முந்துறு [2]களிப்பிடை மூழ்கி
நிறையு நெஞ்சிடை யுவகை போய் மயிர்வழி நிமிர
வுறையும் விண்ணக [3]முடலொடு மெய்தின ரொத்தார்.

(இ - ள்.) இறைவன் சொல் எனும்-சக்கரவர்த்தியின் சொல்லென்கிற, இன் நறவு - இனியமதுவை, அருந்தினர் யார்உம்-(செவியாகிய வாயினல்) உண்டவர்களெல்லாரும்,-முறையில் நின்றிலர்-முறையில் நில்லாதவர்களாய், முந்து உறு களிப்பிடை மூழ்கி - விரைந்துதோன்றுகின்ற களிப்புக்கடலில் முழுகி, நிறையும் நெஞ்சிடை உவகை - நிறைந்த மனத்தின் சந்தோஷம், போய்-மிகுந்து, மயிர் வழி நிமிர - (தம்மளவில் நில்லாது) உரோமங்களின் வழியாய் வெளிப்பட, உடலொடுஉம்-சரீரத்தோடும், உறையும் விண்ணகம் - (யாவரும்) தங்குதற்குவிரும்புகின்ற சுவர்க்கலோகத்தை, எய்தினர்-அடைந்தவர்களை, ஒத்தார்—; (எ - று.)

அரசன்பேச்சைக்கேட்டோர் யாவரும் நறவருந்தினர்போலநிலைதடுமாறி ஆநந்தத்துண்மூழ்கித் தம்மனத்துள்தோன்றிய உவகையானது உள்ளடங்காது மயிர்க்கூச்சமென்ற வியாசத்தால் வெளிப்பட்டுத் தோன்ற, இவ்வுடம்புடனே சுவர்க்கலோகத்தைச் சார்ந்தவர்போன்று பெருமகிழ்ச்சியடைந்தனரென்பதாம். "உடம்பொடுதுறக்கநக ருற்றவரை யொத்தார்" என்றுர் கடிமணப்படலத்தும். ஆநந்தாநுபவத்துக்குக்காரணமாகிய சுவர்க்கம் உடலொழிந்தபின் கிடைப்பதன்றி முன்புகிடைத்த லருமைபற்றி இவர் உடலொடு விண்ணகமெய்தினரொத்தார் என்றுர். மூழ்கியென்றதற்கேற்ப, களியைக் கடலென்க. முறையினில்லாமைக்குக் காரணமாயினமையால், நறவு என்றதற்கு - மதுவென்று உரை கூறப்பட்டது. மயிர்வழிநிமிர்தல் - மயிர்க்கூச்செறிதல். பி கு:—[1]முகந்துறு, முன்றுறை. [2]களியிடை. [3]உயிரொடும். (எஎ)

எஅ.—அவர்கள் யாவரும் தசரதனைத் தொழுது நீ செய்யக்கருதியது நன்றெனத் தெரிவிக்கத் தொடங்குதல்.

ஒத்த [1]சிந்தைய [2]ருவகையி [3]னிருவரி னிருவர்
தத்தமக் குற்ற வரசெனத் [4]தழைக்கின்ற மனத்தர்
முத்த வெண்குடை மன்ன[5]ன முறைமுறை [5]தொழுதா
ரத்த நன்றென வன்பிடை [6]டறிவிப்ப தானர்.

(இ - ள்.) ஒத்த சிந்தையர் - (இராமனுடைய பட்டாபிஷேக விஷயத்தில்) ஒரு தன்மையாக இசைந்த எண்ணத்தை யுடையவர்களும், ஒருவரின் ஒருவர் அரசு தத்தமக்கு உற்ற(து)என உவகையின் தழைகின்ற மனத்தர்- ஒருவரைக்காட்டிலும் ஒருவர் இராச்சியம் தத்தமக்குக்கிடைத்ததுபோல (நினைத்து) மகிழ்ச்சிகொண்டு களிக்கின்ற மனத்தையுடையவர்களுமான அவ்வரசர்கள், முறைமுறை-வரிசைவரிசையாய்நின்று, முத்தம் வெள் குடை மன்னனை - முத்திரைற்செய்த வெண்கொற்றக்குடையையுடைய சக்கரவர்த்தியை, தொழுதார்-வணங்கி, (அவனைநோக்கி), 'அத்த-ஐயனே! நன்று-(நீர் நினைத்தது) நல்லகாரியமே,' என-என்று, அன்பினொடு-உள்ளன்போடு, அறிவிப்பது ஆனர்-விண்ணப்பஞ் செய்வாராயினர்: (எ-று.)—அதனை மேற்கவியிற் காண்க.

இராமபிரான் செருக்கின்றி யாவரோடும் ஒருநீரனைகப் பயின்று அவர்கள்குறைவைநீக்குவதனால், அவனுக்கு அரசு கிடைப்பதைத் தமக்குக் கிடைப்பதுபோல யாவரும் பாராட்டுவாராயின ரென்க: கீழ்ச் சுமந்திரனைப்பற்றி "தலங்கள் யாவையும் பெற்றனன் றனனைத் தளிர்ப்பான்" என்று கூறியதுங் காண்க. பி-ம்:—[1]சிந்தையின். [2]உவகையர். [3]ஒருவரையொருவர், ஒருவர்க்கங்கொருவர். [4]தளிர்க்கின்ற. [5]தொழுவார். [6]அறிவிக்கலுற்றார். (எ அ)

வேறு.

எசு.—இவ்விராமனுக்கு மதுடாபிஷேகஞ் செயீதல் தக்கதேயென்று மன்னவர் கூறுதல்.

மூவெழு முறைமையெங் குலங்கண் [1]முற்றுறப்
பூவெழு மழுவினிற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்
[2]காவலிவ் வுலகமீ தறனென் றாரோ.

(இ - ள்.) மூ எழு முறைமை-இருபத்தொரு தலைமுறை, எம் குலங்கள் முற்றுற-எம்முடைய [ராஜ]குலங்கள் முடிவையடைய, பூ எழு மழுவினால் - கூர்மைமிகுந்த மழுவாயுதத்தால், பொருது-சண்டைசெய்து, போக்கிய - அழித்த, சேவகன்-பராக்கிரமசாலியாகிய பரசுராமனது, சேவகம்-வீரத்தை, செகுத்த-கெடுத்த, சேவகற்கு - மகாவீரனாகிய ஸ்ரீராமனுக்கு, இ உலகம் - இந்த ராஜ்யம், ஆவ-அதீனமாகக்கடவது; ஈது - இது, அறன் - தருமமே, என்றார்—; (எ - று.)—அரோ - ஈற்றசை.

இவ்விராமபிரான் மன்னர் யாவரையும் இருபத்தொருதலைமுறை கட்டழித்த பரசுராமனையும் வலியடக்கிய மகாவீர னதலால், இவனுக்கு இப்பூமியை யதீனமாக்குதல் தக்கதென்று ரென்க. மூன்றுமடி - முற்று மோனை. தமது துயரத்தைத் தீர்த்த மகாவீர னென்பதும், இனியும் எம்

குறைகளைத் தீர்த்தருளத்தக்கவனென்று தாம் கருதியமையும் தோன்ற,'மழு விறைற் போக்கிய சேவகன் சேவகஞ்செகுத்த சேவகன் என்றார்கள். ஆவ - அகரவீற்று வியங்கோள். பூ - கூர்மையாதலை "மலருங்கூர்மையும்...பூவெனல்" என்ற நிகண்டிறையும், "பூவாட்கோவலர்" என்ற புறநானூற்றாலும் அறிக. பி - மி:—[1]மூப்புற. [2]ஆவல், ஆக.

க. நறைக்குழற் சீதையு ஞால நங்கையு
மறுத்துமிங் கொருவற்கு மணத்தின் பாலரோ
கறுத்தமா மிடறுடைக் கடவுட் [1]காலவில்
லிறுத்தவற் கன்றியென் றிரட்டர் கூறினர்.

பி - மி:—[1]காவல்வில்.

உ. ஏத்தவந் துலகெலா மீன்ற [1]மேவந்தினப்
[2]பூத்தவ னல்லனேற் புனித மேவள்ளியைக்
காத்தவ னுலகினைக் காத்த னன்றென
லேத்தவை [3]யியப்புற விதர்ப்பர் கூறினர்.

பி - மி:—[1]எந்தையைப். [2]பூத்தனன். [3]உவப்புற.

ங. பெருமையா லுலகினைப் பின்னு முன்னுநின்
றுரிமையோ டோம்புதற் குரிமை பூண்டவத்
தருமமே தாங்கலிற் றக்கதிண்டொரு
கருமம்மே வறிலதெனக் [1]கலிங்கர் கூறினர்.

பி - மி:—[1]கவுடர்.

ச. [1]கேடகல் படியினைக் கெடுத்துக் கேடிலாத்
தாடகை வலிக்கொரு சரமன் றெவிய
வாடக வில்லிக்கே [2]யாக பாரெலாத்
[3]தோடவிழ் மலர்முடித் துருக்கர் சொல்லினர்.

பி - மி:—[1]கேடகமணியினை. [2]அருள்க. [3]தோடகமலர்.

ஞ. கற்றுநான் மறையவர் கண்ணை மன்னுயிர்
பெற்ற[1]தா யெனவருள் [2]பிறக்கும் வாரியை
யுற்றதே லுலகினி லுறுதி யாதெனக்
கொற்றவேற் கணைகழற் குருக்கள் கூறினர்.

பி - மி:—[1]தாயினை. [2]பிறங்கும்.

ரு. வாட்டொழி லுழவரீ [1]யுலகை வைகலு
மூட்டினை யருள்முந் துரிமை மைந்தனைப்
பூட்டினை யாதலிற் பொருவி னன்னெறி
காட்டினை நன்றெனக் கலிங்கர் கூறினர்.

பி - மி:—[1]உலகின்.

எ. †தொழுகழல் வேந்தனின் மொல்கு லத்துளோர்
முழுமுத லிழித்தகை முறைமை யாக்கியீண்
டெழுமுகில் வண்ணனுக் களித்த விச்செல்வம்
விழுமிது பெரிதென மிலேச்சர் கூறினர்.

பி - ம்:—[1]மௌலியாய். [2]உலகத்து.

ஆ. கொங்கலர் நறுவிரைக் கோதை [1]மௌலியாய்
சங்கநீ [2]ருலகத்துட் டவத்தின் றன்மையா
லங்கண னரசுசெய் தருளு மாயிடிற்
சிங்கள ரிங்கிதிற் சிறந்த தில்லென்றார்.

பி - ம்:—[1]மௌலியாய். [2]உலகத்து.

கூ. ஆதியின் [1]மனுவுநின் னரிய மைந்தற்குப்
பாதியு மாகிலன் பரிந்து [2]வாழ்த்துதல்
வேதியர் தவப்பயன் விளைந்த தாமெனச்
[3]சேதிபர் [4]சிந்தனை தெரியச் செப்பினர்.

பி - ம்:—[1]மனுவினூலமைந்த. [2]வாழ்த்துமவ். [3]சேதியர். [4]சேதனை.

கo. அளப்படு குரைகட லகழி யேழுடை
வளம்படு நெடுநில மன்னர் மன்னனே
[1]யுளம்படிந் துயிரெலா முவப்ப தோர்பொருள்
விளம்பினை பெரிதென விராடர் கூறினர்.

பி - ம்:—[1]உளம்படியுயிர்.

கக. ‡வாய்ந்தனி புரந்தமா மனுவி னான்முறைத்
தாய்ந்தனி [1]புரந்தனை தரும [2]வேலினுய்
நீந்தனி புரத்தலி னெடிது காலநின்
சேய்ந்தனி புரக்கெனத் தெலுங்கர் கூறினர்.

பி - ம்:—[1]புரந்தெனத். [2]வேலியாய்.

கஉ. வையமும் வானமு மதியு ஞாயிறு
மெய்திய வெய்துப [1]திகழும் யாண்டெலா
நெய்தவழ் வேலினுய் நிற்கும் வாசகஞ்
செய்தவம் பெரிதெனச் சேரர் கூறினர்.

பி - ம்:—[1]நிகழும்.

கஙு. பேரிசை பெற்றனை பெறுத தென்னினிச்
சீரிய தெண்ணினை செப்பு கின்றதை
[1]ரிய நங்குடிக் கதிப நீயுமோர்
[1]சூரிய னமெனச் சோழர் சொல்லினர்.

பி - ம்:—[1]ஆரியனங்குடிக்கமரனீயும்.

இப்பாடல் தஞ்சைப்பிரதியி லுள்ள தென்கின்றனர்.

இது முதலுள்ள நான்கு பாடல்கள் சில பிரதியில் நு - ஆவது பாடலுக்குப் பின் காணப்படுகின்றன.

கச. ஒன்றிய வுவகைய ரொருங்கு சிந்தையர்
தென்றமிழ் சேணுற வளர்த்த தென்னரு
மென்றுங்கின் புகழொடு [1]தரும மேமுற
நின்றது [2]நிலையென நினைந்து கூறினர்.

பி-மீ:—[1]தருமமேயுற. [2]நிலையது.

என்கிற இப் பதினைன்கு கவிகள் "மூவெழுமுறை" என்ற இப்பாடலுக்குப்பின் சிலபிரதியிற் காணப்படுகின்றனவாயினும் பல பிரதிகளிலும் இல்லை; இவை பயிலவழங்கா வென்பர்: மேல் "வேறலா மன்னரும்" என்று பாடமிருப்பதை நோக்குமிடத்து இப்பாடல்கள் இருத்தல்கூடுமெனத் தோன்றினமையால், உரையெழுதாவிடினும் பதிப்பிக்கப்பட்டன. (எக)

அ○.—தசரதன் அவர்கள் கருத்தையறிய மீண்டும் வினவத்தொடங்கல்.

[1]வேறிலா [2]மன்னரும் விரும்பி [3]யன்னது
கூறினை ரது[4]மனங் கொண்ட கொற்றவ
[5]னூறிய வுவகையை யொளிக்குஞ் சிந்தையான்
மாறுமோ ரளவைசால் வாய்மை கூறினன்.

(இ - ள்.) வேறு இலா மன்னர்உம்-மாறுபடுதலில்லாத அரசரும், அன்னது-அத்தன்மையான வாக்கியத்தை, விரும்பி கூறினர்-விரும்பிச்சொன்னர்கள்; அது மனம் கொண்ட கொற்றவன் - அதனை உள்ளத்தடைத்த சக்கரவர்த்தி, ஊறிய - (உள்ளே) சுரக்கின்ற, உவகையை-சந்தோஷத்தை, ஒளிக்கும்-அடக்கிக்கொண்ட, சிந்தையான்-மனத்தை யுடையவனாகி, மாறுஉம்-மற்றும், ஓர் அளவை சால் வாய்மை கூறினன் - ஒரு பிரமாணமான வார்த்தையைச் சொன்னன்; (எ - று.)

இராமனுக்குப் பட்டங்கட்டத் தசரதன் கருதியதை யாவரும் மாறுபடாது ஒரேமனமாக ஒப்பித் தனதுபுத்திரனதுபெருமையைப் புகழ்ந்து கூறக் கேட்ட சக்கரவர்த்தி பெருங்களி கூர்ந்தும், அதனை மனத்திலடக்கிக் கொண்டு அவர்கள் கருத்தை உள்ளபடி யுணருமாறு வேறுவகையாக வினவுகின்றனனென்பதாம். [1]'வேறலாமன்னரும்'என்றபாடத்துக்கு-வெவ்வேறு நாட்டினராக வுள்ள எல்லா அரசர்களும் இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வது தகுதியே என ஆமோதித்தனரென்க. பி-மீ:—[1]வேறலா. [2]மன்னவர். [3]இன்னது. [4]மனக். [5]ஊறினன். (அ○)

அக.—நீங்கள் இராமனுக்குப் பட்டங்கட்ட விரும்புவது எதனலென்று மன்னவன் மீளவும் வினவுதல்.

[1]மகன்வயி [2]னன்பினன் மயங்கி யா[3]னிது
புகலநீர் புகன்ற[4]விப் பொம்மல் வாசக
முகவையின் மொழிந்தமே தா வுள்ள நோக்கியோ
தகவென [5]நினைந்தெதத் தன்மையா லென்றனன்.

(இ - ள்.) (அரசர்களே!) யான் மகன்வயின் அன்பிலுல் மயங்கி-புத்திர னிடத்து அன்பிலுல்யான் மதிமயங்கி, இது புகல-இந்தவார்த்தையைச் சொல்ல,(கேட்டு),நீர் புகன்ற-நீங்கள் சொல்லிய,இ பொம்மல் வாசகம்-இந்தப் பொலிவாகிய வார்த்தை, உகவையின் மொழிந்தது ஓ-மனஞ்சந்தோஷித்துச் சொன்னதோ? உள்ளம் நோக்கி ஓ - என்கருத்து நோக்கியோ? தகவு என நினைந்தது - தகுதியென்று நினைத்தது, எ தன்மையால் - எவ்வகையிலுல்? என்றான் - என்று (உண்மை கூறுமாறு) விளவினான், (தசரதன்); (எ - று.)

எனக்கு இராமனிடத்துள்ள அன்பிலுல் அவனை இராச்சியத்தையாலும் வல்லமையுடையவ னென்று எண்ணி அவனுக்குப் பட்டங்கட்ட வேணு மென்று கருதியிருக்கின்றேன். இந்த என்கருத்து தக்கதோ அல்லது தகுதியற்றதோ? என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் நடுநிலையாகச் சொல்லுவீர்களென்ற எண்ணத்திலுல்தான் உங்களை விளவினேன். நீங்கள் இராமனுக்குப் பட்டங்கட்டுதல் தக்க தென்பது, மனமுவந்து சொன்ன சொல்லா? அன்றி, என்முகத்துக்கு இச்சையாகச் சொல்லவேணுமென்று சொன்ன சொல்லா? எந்தக்காரணத்தால் இராமனுக்கு மகுடாபிஷேகஞ்செய் வது தகுதியென்கிறீர்கள்? இதனைப் பிரமாணமாகச் சொல்லவேண்டுமென்று தசரதன் வினவின னென்க. ஓ - ஐயப்பொருளன. உவகை - தொழிற் பெயர்; உக - பகுதி. பி-மி:—[1]மக. [2]நானிலம்வழங்க. [3]அது. [4]அப்பொருமல். [5]நினைந்ததோ தன்மையென். (அக)

அஉ.—இது முதல் நான்குகவிகள் - ஒருதொடர்: மன்னவர் இராமமகுடாபிஷேகத்திற்கு இசைந்தற்குக்காரணம் கூறுதலைத் தெரிவிக்கும்.

இவ்வகை யுரைசெய விருந்த [1]வேந்தனை
[2]செவ்விய நின்றிரு மகற்குத் [3]தேயத்தோ
[4]ரவ்வவர்க் [5]கவ்வள ராற்ற [6]வாற்றுறு
மெவ்வமி லன்பினை யினிது [7]கேளெனை.

(இ - ள்.) இ வகை உரைசெய-இந்தப்பிரகாரம் (சக்ரவர்த்தி) கேட்க,- இருந்த வேந்து அனை - (அவ்விடத்து) இருந்த அரசர்சபை, (சக்ரவர்த்தியை நோக்கி), செவ்விய நின் திருமகற்கு - செவ்வைக்குணமுள்ள உனது புதல் வன்மீது, தேயத்தோர் அவ்வவர்க்கு-அங்கங்கே பற்பல தேசத்துள்ளாருள், அவ்வவர் - யாவரும், ஆற்ற - மிகவும், ஆற்றுறும் - செய்கின்ற, எவ்வம் இல் அன்பினை - குறைவில்லாத அன்பின் தன்மையை, இனிது கேள்-இனிதாகக் கேட்பாய், எனை - என்று சொல்லத்தொடங்கி,-(எ-று.)—"என்றனர்" எனஅருஆங் கவியில் முடியும்.

இராமபிரானிடத்து எல்லாத்தேயத்தவரும் அன்புசெய்யுந்தன்மையைக் கூறுவோ மென்றன ரென்க. தேயத்தோரவ்வவர்க்கு என்பதில் அவ்வவர்க்கு என்பது சொல்லுருபா யுடன்வந்தது:இச்சொல்லில்'கு'எழுத்துருபில் வந்தது,

உருபுமயக்கம். அவ்வவர் - யாவருமென்றபடி. பி-ம்:—[1]வேத்தர்கள். [2]செவ்வி யோய். [3]தேர்ந்துளோர். [4]அவ்வவர். [5]அவ்வவர்க்கு. [6]ஆற்றுமென்று. [7]கேளென்றார். (அஉ)

அங. ஞானமுந் தருமமுந் [1]தகவுந் தன்மை [2]சேர்
ஞானமு [3]நல்லவர்ப் [4]பேணு நன்மையு
மானவ [5]லெவையுநின் மகற்கு [6]வைகுமா
லீனமில் செல்வம்வந் [7]தியைக வென்னவே.

(இ - ள்.) மானவ - மநுவமிசத்துக்குத்தலைவனே! ஞானம்உம்-கொடையும், தருமம்உம் - அறமும், தகவுஉம் - ஒழுக்கமும், தன்மை சேர் ஞானம் உம் - மேன்மைபொருந்திய மெய்யுணர்வும், நல்லவர் பேணும் நன்மைஉம் - பெரியோர்களை விரும்பி வழிபடுகின்ற நலமும், (முதலிய), எவைஉம் - எல்லாக்குணங்களும், 'ஈனம் இல் - குறைவற்ற, செல்வம் - அரசச்செல்வம், வந்து இயைக - வந்து பொருந்தக்கடவது,' என்ன - என்றுசொல்வது போல, நின் மகற்கு - உன் பிள்ளைக்கு, வைகும் - நிலையாகப் பொருந்தியுள் ளன; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

நாங்கள் உன்மகனது மகுடாபிஷேகத்தைப்பற்றி மகிழ்ந்து கூறுவதற் குக் காரணம் அவனிடத்துள்ள நற்குணங்களேயாகு மென்றன ரென்க. இராமனதுகுணம் எங்களை மகிழ்ந்துகூறுமாறு செய்ததன்றி வேறு உன்முகத் துக்கு இச்சகமாகச் சொல்லவேணு மென்று இராமபட்டாபிஷேகத்தை மகிழ் ந்துகூறினேமே மில்லை யென்றன ரென்றவாறு. "பஹவோ ந்ருப கல்யாண குணாஃ புத்ரஸ்யஸந்திதே[மன்னவனே! உன் புதல்வனிடத்துப் பல கல்யாண குணங்கள் உள்ளன]" என்று வான்மீகத்திற்கூறியது கருதத்தக்கது. நல்ல வர்ப்பேணும் நன்மையாவது - மூவிருகுற்றமும் முறைமையிற்கடிந்து காவற் சாகாடு உகைத்தற்குரியனுய், தன்னைத்தீநெறிவிலக்கி நன்னெறிச்செலுத் துந் தவத்தாற் பெரியராய முனிவர்மேலும் ஆற்றலாற்சிறந்தோராய அரசர் மேலும் அறிவாற்சிறந்தோராய அமைச்சர்மேலும் பிழைபாராட்டித் தவறு கூறித் தவியாது, பலஞுசிகளையுந் தன்வயத்துக்கவரவல்ல காந்தம்போல யாவருடைய கருத்தையும் தன்பணிவாற் கவர்ந்து ஒழுகுந் திற மென்பர். பி-ம்:—[1]தவமும். [2]சால். [3]நல்லறம். [4]பேறும். [5]ஐய, கேட்டி. [6]வைகலும். [7]இயைவது, எதிர்ந்தது. (அங)

அச. ஊருணி நிறையவு [1]முதவு மாடியர்
பார்[2]கெழு [3]பயன் மரம் [4]பழுத்தற் றாகவுங்
கார்மழை பொழியவுங் கழனி [5]வாய்ந்தநி
வார்புனல் பெருகவு மறுக்கின் றூர்கள்யார்.

(இ - ள்.) உதவும் - (யாவர்க்கும்) உதவுகின்ற, ஊருணி-குளம், நிறைய உம்-(நீர்)நிறையவும்,—பார் - ஊரின், மாடு - நடுவே, கெழு - பொருந்திய, உயர் - உயர்ந்த, பயன் மரம் - பயன்படுமரம், பழுத்தற்று ஆகஉம் - பழுத்த தாகவும்,—கார்-மேகம், மழை-மழையை, பொழியஉம்-சொரியவும்,—கழனி

வாய்-கழனிகளில், நதி-ஆற்றின், வார் புனல்-மிக்கநீர், பெருகஉம்—, மறுக் கின்றார்கள்-(வேண்டாமென்று) தடுக்கின்றவர்கள், யார் - யாவர்? (எ - று.)

பாழ்போகாதுநெடிதுநின்று எல்லார்க்கும் எளிதில் வேண்டும் பலன்க ளைத் தப்பாது கொடுத்து உதவுகின்ற ஊருணிமுதலியனவற்றிற்கு நீர்நிரம் புகைமுதலியன நேர்படுகையில் அவற்றைத் தடைசெய்வார் இல்லையாஞற் போல, நின்மகன் மன்னுயிர்களைப் பாதுகாக்குமாறு மகுடஞ்சூடுதல் உல கத்துப்பிராணிகள் நன்மைபெறுதற்கே காரணமா மாதலால் அதனை மறுப் பார் ஒருவருமில்லை யென்றதாயிற்று. உபமானங்கள் உபமேயப்பொருளைத் தெரிவித்தலால், இச்செய்யுள் - **பிறிதுமொழிதலணி.** ஊருணியும் பயன்மர மும் எல்லாராலும் எளிதிற்கொள்ளுமாறு உதவுவதிலும், கார்மழை கைம்மாறு கருதாது ஈவதிலும், கழனியிற் பெருகும் நதிப்புனல் யாவர்க்கும் பெரும் பயன்விளைத்தலிலும் உவமையாம். மாடு உயர் எனஎடுத்து-பக்கங்களுயர்ந்த [சுற்றிலும் வேதிகை போடப்பட்ட] எனினுமாம். "ஊருணி நீர்நிறைந்தற்றே யுலகவாம், பேரறிவாளன் திரு", "பயன்மரமுள்ளூர்ப்பழுத்தற்றுற்செல்வ, நயனுடையான்கட்படின்," "நடுவூருள் வேதிகைச் சுற்றுக்கோட் புக்க, படு பயனன்னர் பலர் நச்சவாழ்வார், குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்க, ளிடுகாட்டுளேற்றைறப்பனை", "கற்றையஞ் சுடர்மணி கனகமேனைய, பிற்றைறயென்னுதருள் பெரியர் வண்மைபோன், மற்றவணுள்ளபன் மரமுந் தம்பய, னெற்றையு முலப்புரு தீகைசான்றவே" என்றவை இங்கு ஒப்பு நோக்கத்தக்கவை. ஊருணி-ஊராரால் நீருண்ணப்படுவது: குளம்; இ-செயப் படுபொருள்விகுதி. நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தின்மே லேற்றப்பட்டது. பழுத்தற்று=பழுத்தன்று: ஒன்றன்பால் முற்று. பார் - பூமியின் ஏக தேசத்தைக்காட்டிற்று. பி-ம்:—[1]உதகமாயொரு, உதவுமாயுயர். [2]நுகர். [3]பழு. [4]பழுத்தது. [5]பாய். (அசு)

அ௹. பனை[1]யவா நெடுங்கரப் பரும யானையாய்
நினையவாந் [2]தன்மையை [3]நிமிர்ந்த மன்னுயிர்க்
கெனையவா றன்பின னிராம னீண்டவற்
கனையவா [4]றன்பின வவையு [5]மென்றனர்.

(இ - ள்.) பனை அவாம் நெடு கரம் பருமம் யானையாய் - பனைபோன்ற (நீண்ட) கைகளையும் ஒப்பனையையுமுடைய யானைப்படையையுடையவனே! நினை அவாம் தன்மையை - உன்னை விரும்புந் தன்மையை, நிமிர்ந்த - மிகுதி யாகக் கொண்டிருந்த, மன் உயிர்க்கு - நிலைபேறுடைய உயிர்களிடத்தில், இராமன்—, எனைய ஆறு அன்பினன் - எத்தன்மையான அன்புடையவனு யிருக்கின்றனனே, அவைஉம் - அவ்வுயிர்களும், ஈண்டு - இவ்வுலகத்தில், அவற்கு - அந்த இராமனிடத்தில், அனைய ஆறு அன்பின-அத்தன்மையான அன்புடையனவாயிருக்கின்றன, என்றனர் - என்று சொன்னார்கள்; (எ-று.)

நின்னிடத்து விருப்பம் வைத்திருக்கும் உலகத்துயிர்களிடத்தெல்லாம் இராமன் பேரன்பு காட்டி வருதலால், அவ்வுயிர் யாவும் இராமபிரானிடத்துப்

பேரன்பு பூண்டுள்ளன: ஆதலால், அவ்வுயிர்கள் இராமன் மகுடஞ் சூடுதலிற் பெருமகிழ்ச்சிகொள்ளலாயினவென வேத்தவையோர் கூறின ரென்க. என்றனரென்பதற்கு, அஉ - ஆங் கவியிலுள்ள வேந்தவை என்பது எழுவாய். இராமபிரான் இளம்பிராயந் தொடங்கி யாவரிடத்தும் அன்பு பூண்டு விசாரிக்குந் தன்மையுட னிருக்கின்றனனென்பதையும், உலகத்தவர் அவ்விராமன் இராச்சியத்தை யாட்சிபுரியவேணு மெனக் கருதியிருக்கின்றனரென்பதையும், கீழ்த்திருவவதாரப்படலத்தில் "எதிர்வருமவர்களை யெமையுடை யிறைவன், முதிர்தரு கருணையின் முகமலரொளிரா, வெதுவினையிடரிலை யினிதுநுயனையும், மதிதருகுமரரும் வலியர்கொலெனவே," "அஃதைய னினதெம தரசெனவுடையே, மிஃதொருபொருளல வெமதுயிருடனேழ், மகிதலமுழுதையுமுறுகவிமலரோ, லுகுபகலளவென வுரைநனி புரிவார்" என்று வந்தவற்றாலு முணரலாம். பனையவாநெடுங்கர பருமயானையாய் என்ற இயல்பான பாடத்துக்கு, பனையவாம்நெடுங்கர-பனையையொத்த நீண்டகைகளையுடையவனே! என்று விளியாகக்கொள்க. "பனைத்திரண்டனையதோளாய்" என்றுர் சிந்தாமணியாரும். அவாம்-அவாவுமென்பது ஈற்றுமிசையுகரம்மெய்யொடுங் கெட்டது. ஈண்டு உயிரென்றது பெரும்பாலும், மக்களுயிர்மேனின்றது. உயிர்க்கு, அவற்கு என்பன - உருபுமயக்கம். பி-ம்:—[1]இவர். [2]தன்மையின், தகையனுய். [3]நினைந்த, நினைந்து. [4]அன்பினர். [5]என்பவே. (அடு)

அசு.—அரசன் வேத்தவையோர் சொற்கேட்டு மகிழ்ந்து கூறத்தொடங்குதல்.

மொழிந்தது கேட்டலு [1]மொய்த்து [2]நெஞ்சினைப்
பொழிந்தபே [3]ருவகையிற் பொங்கு காதலன்
கழிந்த[4]தோ [5]ரிடரினன் களிக்குஞ் சிந்தையன்
வழிந்தகண் ணீரினன் மன்னன் கூறுவான்.

(இ - ள்.) மொழிந்தது - (அவ்வாறு சபையில் வந்தவர்) சொன்னதை, கேட்டலும் - கேட்டவுடனே,—மன்னன் - தசரதன், நெஞ்சினை - மனத்தினில், மொய்த்து-நெருங்கி, பொழிந்த - சொரிந்த, பேர் உவகையின் - மிக்க களிப்பினுல், பொங்கு காதலன் - அதிகரிக்கின்ற அன்பையுடையவனும், கழிந்தது ஓர் இடரினன்-நீங்கின ஒப்பற்ற துன்பத்தையுடையவனும், களிக்கும் சிந்தையன்-சந்தோஷிக்கும் மனமுடையவனும், வழிந்த கண் நீரினன் - ஆநந்தத்தால் (தன்னடைவே) பெருகின கண்ணீரையுடையவனுமாகி, கூறுவான் - (அவர்களைநோக்கிச்) சொல்வானுயினன்; (எ - று.)—அதனை மேற்கவியிற் காண்க.

தன்மகனைப்பற்றி வேத்தவையோர் கொண்டாடிச் சொன்னது கேட்ட தசரதன், தன் மனத்தினுள்ளடங்காது மிக்குத் தோன்றிய மகிழ்ச்சியினுல் இராமபிரானிடத்துப் பரிவு பொங்கத் தான் கொண்ட துயரமெல்லாந்தீர்ந்து தனதுமிக்கமகிழ்ச்சி ஆனந்தபாஷ்பமாக வெளிப்பட்டுத் தோன்ற அந்த

வேத்தவையோரை நோக்கிக் கூறலாறு எனன்க. எல்லா வுலகத்தையும் பாதுகாக்கும் பேராற்றல்வாய்ந்த ஸ்ரீராமனை அவ்வேத்தவையோரின் கையடை யென மேற்கூறுவது அவ்விராமனிடத்துப் பெருவிருப்பத்தினு லெழுந்த பேரன்பின்செய லென்பார் 'பேருவகையிற் பொங்கு காதலன் கூறுவான்' என்றார். கழிந்ததோரிடரினன் - வடமொழிநடை. இடர்-தன் மூப்பைக் கருதியதனுலான துன்ப மென்னலாம். பி-ம்:—[1]மொய்த்த. [2]நெஞ்சினில். [3]உவகையான். [4]பேர். [5]துயரினன். (அசு)

அஎ.—தசரதன் தன் மகனை வேத்தவையோர்க்கு அடைக்கலமெனல்.

செம்மையிற் றருமத்திற் செயலிற் [1]றீங்கின்பால்
வெம்மையி னெழுக்கத்தின் [2]மேன் மை[8]மேவினீ
ரென்மக னென்பதென் [4]னெறியி னீங்கிவ
னும்மகன் கையடை. [5]நோக்கு மீங்கென்றான்.

(இ - ள்.) 'செம்மையின்-நடுவுநிலையாலும், தருமத்தின்-அறத்தினாலும், செயலின் - நற்செய்கையினாலும், தீங்கின்பால் வெம்மையின் - தீயவைகளினிடத்துக் கடுமையாகக் காட்டும் வெறுப்பினாலும், ஒழுக்கத்தின்-ஆசாரத்தினாலும், மேன்மை மேவினீர் - மேன்மையைப் பொருந்தியிருக்கின்ற அரசர்களே! ஈங்கு இவன்-இதோ இருக்கிற இவன், என் மகன் என்பது என்-என் புதல்வனென்று சொல்லுவதென்ன? நெறியின் - முறைமையினால், நும் மகன் - (இவன்) நும் புதல்வனே; (இவனை), கையடை - அடைக்கலமாகக் கொண்டு, ஈங்கு-இங்கே, நோக்கும் - பார்த்துக்கொள்ளுங்கள்', என்றான் - என்று சொன்னான், (தசரதன்); (எ - று.)

இவனை என்மக னென்னவேண்டா: உம் மகன்போலவே கருதி, இவனுக்கு யாதொருகுறைவும் வராமல் நோக்குங்க ளெனத் தசரதன் கூறின னென்க. நோக்கும் என்னும் உம்மீறு பன்மையுணர்த்தி முன்னிலையாய் நிற்றல் "இர் ஈர் மின்னென வரூஉ மூன்றும், பல்லோர் மருங்கினும் பல வற்றுமருங்கினுஞ், சொல்லோரனைய வென்மனார் புலவர்" என்றதனுள் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதனை யுணர்க. பி-ம்:—[1]தீங்கிலா, தீங் கென்பார், தீர்கிற்பான். [2]மெய்ம்மை. [3]மேயநீர். [4]இனிதினுங்கவன், என்னை யீங்கிவன், அறியிரீதிவன், அறியிலீங்கிவன். [5]நோக்குமூங்கென்றான், நோக் குவீரென்றான், நுமக்கென்றேதிணன். (அஎ)

அஅ.—அரசர்களை யனுப்பிவிட்டுத் தசரதன் ராமபட்டாபிஷேகத்துக்குச் சோதிடரைக்கொண்டு நல்ல நாள் நோக்குதல்.

[1]அரசனை விடுத்தபி னுணை [2]மன்னவன்
புரைதபு [3]நாளொடு பொழுது நோக்குவா
னுரைதெரி கணிதரை யொருங்கு கொண்டொரு
வரைபொரு மண்டப மருங்கு போயினன்.

(இ - ள்.) அரசு அவை-இராசசபையை, விடுத்த பின்-அனுப்பியபின்பு,- ஆணை மன்னவன்-ஆஜ்ஞையையுடைய தசரதன், புரை தபு நாளொடு-குற்ற மற்ற தினத்தோடு கூடிய, பொழுது - ஒருசுபமுகூர்த்தத்தை, நோக்குவான்- பார்ப்பதற்கு, உரை தெரி கணிதரை-சோதிடநூலை யறிந்தவர்களை, ஒருங்கு கொண்டு-உடன் அழைத்துக்கொண்டு, ஒரு-ஒப்பற்ற, வரை பொரு மண்ட பம் மருங்கு - மலைபோன்றமண்டபத்தில், போயினன் - போய்ப்புக்கான்.

பட்டாபிஷேகத்துக்கு ஏற்ற நல்லநாளைப் பார்க்கும்பொருட்டுச் சோதி டரையழைத்துக்கொண்டு அரசன் ஒருமண்டபஞ் சேர்ந்தா னென்க.நாளொடு பொழுது - நட்சத்திரத்தோடு முகூர்த்தத்தையும் எனினுமாம். [3]நாளொடு பொழுது போக்குவான் என்ற பாடத்துக்கு, நாளொடு-நாளில் [நாள் பார்ப் பதில்], பொழுது போக்குவான் - பொழுதுபோக்கும்படி என்று வலிந்து பொருள் கொள்ளவேணும். "உப்பகார மொன்றென மொழிப, விருவயி னிலையும் பொருட்டா கும்மே" என்றதனால், இங்கு 'தபு' என்பது, படுத்துக் கூறுதலாகிய ஓசைவேற்றுமை பற்றித் தன்வினையிடத்து வந்தது. ஆணை - ஆஜ்ஞா என்பதன் சிதைவு. நோக்குவான் - எச்சம். **பி-ம்:**—[1]அரசரை. [2]மன்னனும். (அஅ)

வேறு.

அகூ.—பட்டாபிஷேகச்செய்தியையுணர்ந்த மங்கையர் காள்வர் அதனைக் கௌசலைக்கு அறிவிக்கச் செல்லுதல்

[1]ஆண்ட வந்நிலை யாக [2]வறிந்தவர்
பூண்ட காதலர் பூட்டவிழ் கொங்கையர்
நீண்ட கூந்தலர் நீள்கலை தாங்கல
ரீண்ட வோடின [3]ரிட்டிடை [4]யிற்றிலர்.

(இ - ள்.) ஆண்டு-அவ்விடத்து, அந்நிலை ஆக-அவ்வாறிருக்க,— அறிந்த வர் - (இராம பட்டாபிஷேக சமாசாரத்தை) அறிந்தவர்களாகிய, (மங்கையர் நால்வர்)-நான்குபெண்கள், பூண்ட காதலர்-அன்பு கொண்டவர்களும், பூட்டு அவிழ் கொங்கையர் - (கச்சின்) முடி அவிழப்பெற்ற தனங்களையுடையவர் களும், நீண்ட கூந்தலர்-தாழ்ந்த கூந்தலையுடையவர்களும், நீள் கலை தாங்கலர்- நீண்ட ஆடைகளைத் தாங்காதவர்களும், இட்டிடை இற்றிலர் - நேரிய இடை யிறுதவர்களுமாய், ஈண்ட - நெருங்க, ஓடினர் - (கோசலையின் கோயிலுக்கு) ஓடினர்கள்; (எ - று.)

மங்கையர்க்குக் களிப்பின்மிகுதியால் உடல்பூரித்துப்பெருக்கக் கச்சின் முடி தானேயவிழ,ஓடுகின்ற விசையால் தலையவிழ்ந்து கலைநெகிழ்ந்த தென்ப தாம்.இவரைக் கோசலையின்சேடிய ரென்னலாம்.மங்கையர்நால்வ ரென்பது, மேலைக்கவியால் விளங்கும். இட்டிடை - இப்பொருட்டாதல் "இட்டிடைப், பின்னை கேள்வன்" என்னுந் திருக்கந்தவிருத்தத்திலுங் காண்க. ஓடுகின்ற விசையைப் பார்த்தால் இடை இற்றுவிடுமோ என்று கருதுமாறு இருந்த

தென்பது, 'இட்டிடையிற்றிலர்' என்பதன் கருத்து. ஓடினர் என்பதற்கு எழுவாய் வருவிக்க. பி-ம்:—[1]ஆண்டவன்னிலை, ஆண்டையங்நிலை, ஆண்டையானிலை. [2]அறிந்தனர். [3]இற்றிடை. [4]அற்றிலார். (அசு)

கூ0.—செய்தியறிவிக்கக் கோசலையிடஞ் சென்ற மங்கைமாரின் மகிழ்ச்சி.

ஆடு கின்றனர் [1]பண்டையி னன்றியே
பாடு கின்றனர் [2]பார்த்தவர்க் கேகரஞ்
சூடு கின்றனர் சொல்லுவ தோர்கிலர்
மாடு சென்றனர் மங்கையர் நால்வரே.

(இ - ள்.) ஆடுகின்றனர் - ஆடுகின்றவர்களும், பண்டையின் அன்றி - (இதற்கு)முன் தாங்கள்இருந்த நிலையாகவல்லாமல்'[பெருமகிழ்ச்சியால் தம் நிலைமாறி யென்றபடி], பாடுகின்றனர்-பாடுகின்றவர்களும், பார்த்தவர்க்கு - (தாங்கள்)பார்த்தவரெல்லாருக்கும்,கரம் சூடுகின்றனர்-அஞ்சலிசெய்கின்றவர் களும், சொல்லுவது ஓர்கிலர்-சொல்லுவது இன்னதென்று அறியாதவர்களு மாகி, மங்கையர் நால்வர் - அந்நான்கு பெண்களும், மாடு - (கோசலையின்) சமீபத்தில், சென்றனர் - போயினர்; (எ - று.)

ஆடுதல் முதலிய இச்செயல்களெல்லாம் ஆநந்தப்பெருக்கா லுண்டான வை யென்க. பி-ம்:—[1]பண்ணைடைவின்றியே, பண்ணைடையின்றியே. [2]பாத்த வர்க்கேகரம். (கூ0)

கூக.—உமது உவகைக்காரணத்தைச் சொல்லுங்களென்று கோசலை வினவுதல்.

கண்ட மாதரைக் காதலி னேக்கினள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை
யுண்டு பேருவ கைப்பொரு [1]ளன்னது
தொண்டை வாயினிர் சொல்லுமி னீண்டென்றாள்.

(இ - ள்.) கொண்டல் வண்ணனை-நீலமேகவர்ணரூகிய ஸ்ரீராமனை, நல் கிய-பெற்ற, கோசலை—,—கண்ட-(இவ்வாறுகவந்து தன்னைக்) கண்ட, மாத ரை - பெண்களை, காதலின்-விருப்பத்தோடு, நோக்கினாள்-பார்த்தவளாகி,— (தொண்டை வாயினிர் - கொவ்வைக்கனிபோன்ற வாயை யுடையவர்களே! (உங்களைப்பார்த்தால்), பேர் உவகை பொருள் - பெரியசந்தோஷ சமாசாரம், உண்டு - உள்ளதாகத் தோன்றுகின்றது: அன்னது - அதனை, ஈண்டு - இப் பொழுதே, சொல்லுமின் - சொல்லுங்கள்,' என்றாள் - என்றுவினவினாள்.

"இக்ஷ்வாகூணாம் அயம் தேசஸ்தஸ்ய ராஜ்ஞஸ்து கோஸலாஃ [கோசலநாட்டவர் இக்ஷ்வாகுத்திரல் அறி பவர்கள்]" என்பதற்கு ஏற்ப, அம்மங்கையர் கருதியவதனை அவர் கூறுமலே குறிப்பான் அறிந்தாளாதலின்,'பேருவகைப்பொருள்உண்டு'என்று ளென்ன லாம். தொண்டை - ஆகுபெயர். கோசலை-கௌஸல்யா என்னும் வடசொல் லின்திரிபு; கோசலதேசத்தரசன்மகள் என்பது பொருள். கோசலம் - உத் தரகோசலம்,தக்ஷிணகோசலம் என இரண்டு பிரிவுள்ளது: அவற்றுள் தக்ஷிண கோசலத்தரசன்மகள் இவள். பி-ம்:—[1]என்றலும். (கூக)

கூஉ.—தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய நிச்சயித்திருப்பதை மங்கைமார் தெரிவித்தல்.

மன்னெ டுங்கழல் வந்து வணங்கிடப்
பன்னெ டும்பகல் பாரளிப் பாயென
நின்னெ டும்புதல் வன்றனே நேமியான்
றுன்னெ டும்முடி [1]சூட்டுகின் றுனென்றார்.

(இ - ள்.) 'மன் - அரசர்கள், நெடு கழல்-பெரியவீரக்கழலையணிந்த பாதங்களில், வந்து வணங்கிட—, பல் நெடு பகல் - அனேகநாள்கள், பார் அளிப் பாய்-பூமியைக் காப்பாய், என-என்று சொல்லி, நின் நெடு புதல்வன்தனை-உனது ஜ்யேஷ்டகுமாரனாகிய ஸ்ரீராமனுக்கு, நேமியான்-சக்கரவர்த்தி, தொல் நெடு முடி - பழமையாகிய பெரிய கிரீடத்தை, சூட்டுகின்றான் - சூட்டப்போகின்றான்,'என்றார்-என்று (அம்மங்கையர்) செய்தி தெரிவித்தார்கள்; (எ-று.)

தசரதன் இராமனைவரவழைத்து'நீ இந்தப் பூமியை யரசாட்சிசெய்வாய்' என்று சொன்னான்: இனி விரைவில்தானே குலமுறையாய்வந்த முடியைச் சூட்டப்போகின்ற னென்று அம்மங்கையர் கோசலையிடம் நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்தன ரென்க. கோசலை இராமன்முதலியநால்வரையும் தன் புதல்வர்போலவே கருதி அன்புசெய்பவளாதலின் 'நின்னெடும் புதல்வன்றனை'என்றது. மன்,கழல்-ஆகுபெயர்கள். வணங்கிஇட எனப்பிரித்து,வணங்கிக் காணிக்கைகளைக் கொணர்ந்துகொடுக்க என்று பொருள் உரைத்தலுமாம். தொழுத்தையர் சக்கரவர்த்தியின் இயற்பெயரைச் சொல்லார்களாதலால், 'நேமியான்' என்றனர். பரம்பரையாய்வந்த தென்பது விளங்க 'தொன்முடி' எனப்பட்டது. முடி-முடிக்கப்படுவதென்னும்பொருளில் செயப்படுபொருள் விகுதிபுணர்ந்துகெட்ட காரணச்சிறப்புப்பெயர்.புதல்வன்றனை-உருபுமயக்கம். நெடும்முடி - விரித்தல். விரைவில் நிகழுமென்பதுபற்றி, சூட்டுகின்ற னென்று நிகழ்காலத்தாற் கூறியது. பி-ம்:—[1]சூட்டுகென்றான். (கூஉ)

கூங.—கௌசலைக்கு இராமபட்டாபிஷேகத்தால் தோன்றிய உவகையை மன்னவன் துறப்பானென்ற கருத்து மாற்றுதல்.

சிறக்குஞ் செல்வ [1]மகற்கெனச் சிந்தையிற்
பிறக்கும் பேருவ கைக்கடல் [2]பெட்பற
வறக்கு மாவட வைக்கன [3]லானதாற்
றுறக்கு மன்னவ னென்னுந் துணுக்கமே.

(இ - ள்.) (அதைக்கேட்ட கோசலைக்கு), மன்னவன் - சக்கரவர்த்தி, துறக்கும் என்னும் துணுக்கம் - துறந்துசெல்வா னென்னும் அச்சமானது, மகற்கு - ஸ்ரீராமனுக்கு, செல்வம் சிறக்கும் என - அரசச்செல்வம் சிறக்குமென்று, சிந்தையில் பிறக்கும் - மனத்திற் றோன்றுகின்ற, பேர் உவகை கடல் - பெரிய சந்தோஷமாகிற கடலானது, பெட்பு அற - பெருமையற,

வறக்கும் ஆ - வற்றும்படி, வடவை கனல் ஆனது - வடவைத் தீயையொத் திருந்தது; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

மகன் முடிசூடுவானென்றதனாலுண்டாகிய களிப்பு, மன்னவன் துறப் பானென்றதனா லுண்டாகிய அச்சத்தால் மிகுதிப்படாமல் அடங்கி நின்ற தென்க. வடவை - வடமொழிச்சிதைவு; இஃது, கடலினிடையில் நின்று அதிகரிக்கும் நீரை உறிஞ்சிப்பருகுமாறு முகத்துக்கனல்பெற்றதோர் பெண் குதிரை. வறக்கும் மா வடவைக்கனல் - வற்றச்செய்கின்ற பெரிய படபாக்நி யென்றுமாம். பி-ம்:—[1]மகற்கெனாஅ. [2]பெட்புற. [3]ஆகுமால், ஆனவால். (கூஉ)

கூச.—கோசலை மங்கலச்செய்தி சொன்னவர்கட்கு வெகுமதியளித்துச் சுமித்திரையோடு ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் கோயிலுக்குப் போதல்.

அன்ன ளாயு மரும்பெற லாரமு
[1]நன்னி திக்குவை யுங்[2]கனி நல்கித் [3]தன்
றுன்னு காதற் சுமித்திரை யோடும்போய்
மின்னு நேமியன் [4]மேவிட மேவினாள்.

(இ - ள்.) (கோசலை), அன்னள் ஆயும் - அத்தன்மையளாகியும்; அரு பெறல்-அரியபெறுதலையுடைய, ஆரம்உம்-மணிவடங்களையும், நல் நிதி குவை உம்-உயர்ந்த திரவியங்களின் குவியல்களையும், கனி நல்கி-(செய்தி சொன்ன மங்கையர்கால்வர்க்கு) மிகவும் கொடுத்து; (அவர்களை யனுப்பிவிட்டு), தன் காதல் துன்னு - தன்னுடைக்கு விஷயமாகிய, சுமித்திரையோடும் - சுமித் திரையுடனே, போய்—, மின்னும் நேமியன் - விளங்குகின்ற (சுதரிசன மென்னுஞ் சக்கரத்தை(க் கையில்) தரித்த ஸ்ரீரங்கநாதன், மேவு இடம் - பொருந்தியிருக்குந் திருக்கோயிலை, மேவினாள் - அடைந்தாள்; (எ - று.)

தன்கணவன் துறக்கப்போகின்றானே யென்பதைக் கருதி மனத்திற் றுணுக்க மெய்தின ளாயினும், கோசலை மங்கலச்செய்தி சொன்னவர்கட்குச் சிறந்த மணிவடம் முதலியன கொடுத்துப் பின்பு தன்புதல்வனுக்கு நன்மை யைவேண்டி, இட்சுவாகுகாலந் தொடங்கிச் சூரியகுலமன்னர்க்குக் குலதெய் வமாகவிளங்கும் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் கோயிலுக்குச் சுமித்திரையோ டுஞ் சென்றனளென்பதாம். கைகேயி இப்பொழுதே வேறுயிருந்தனளென் பது குறிப்பு. நனி - விசேடித்த வுரிச்சொல். முதலடி - முற்றுமோனை. சுமித்திரை=ஸுமித்ரா: நல்லமித்திரையுடையவள்; இயற்கையில் நற்குண முடையவளேயன்றிச் செயற்கையிலும் அவ்வாறிருப்பவளென்பது பொருள். (கூச)

பி - ம்:—[1]பன்மணி. [2]பல நல்கி. [3]பின். [4]வைகிடம்.

கூரு.—கோசலை திருமாலின்திருவடிகளை வணங்குதல்.

மேவி மென்மல ராணில மாதனுந்
தேவி மாரொடுந் தேவர்கள் யாவர்க்கு
மாவி யும்[1]மறி வும்[2]முத லாயவன்
[3]மாவு லாமலர்ப் பாதம் வணங்கினாள்.

(இ-ள்.) (கோசலை), மேவி-(அங்ஙனம்) அடைந்து, மெல்மலராள்-திருமகள், நிலமாது-நிலமகள், எனும்—, தேவிமாரொடுஉம்-தேவியர்களோடும்,—தேவர்கள் யாவர்க்குஉம் - எல்லாத்தேவர்களுக்கும், ஆவிஉம்-உயிரும், அறிவுஉம் - ஞானமும், முதல்(உம்)-ஆதியும், ஆயவன்-ஆனவனுகிய ஸ்ரீமந்நாராயணனுடைய, மா உலாம் மலர் பாதம்-வண்டுகள் (தேனை யுண்ணும்பொருட்டு) உலாவுகின்ற தாமரை மலர்போன்ற பாதங்களை, வணங்கினள்—; (எ - று.)

தேவிமாரொடுமுள்ள முதலாயவன் பாதங்களைக் கோசலை வணங்கினளென்பதாம். [3]வாவிமாமலர் என்ற பாடத்துக்கு, வாடாமலரென்பார் வாவிமாமலர் என்றுரைக்க. தேவர் முதலிய யாவர்க்கும் ஆவியும் அறிவும் நாதனும் நம்நாராயணனேயாவ னென்பது மூன்றுமடியிற் கூறிய பொருள். ஆவியும் அறிவும் முதலாயவன் - ஆவியும் அறிவும்முதலான பொருளாக இருப்பவன் எனினுமாம். பி-ம்:—[1]அழுதும். [2]அழுதாயவன். (கூடு)

கூசு.—வணங்கிய பெருமானிடத்துக் கோசலை இராமனுக்குத் திருவருள்புரிய வேண்டுதல்.

என்வ யிற்றரு மைந்தற் கினியரு
[1]ளுன்வ யத்ததென் றுரைல கியாவையு
மன்வ யிற்றி னடக்கிய மாயனைத்
தன்வ யிற்றி னடக்குந் தவத்தினள்:

(இ - ள்.) உலகு யாவைஉம் - எல்லாவுலகங்களையும், மன் வயிற்றின்-பெருமைபெற்ற (தன்) திருவுதரத்துள், அடக்கிய - அடக்கிக்கொண்ட, மாயனை - நாராயணனை, தன் வயிற்றின் - தன்னுடைய வயிற்றிலே, அடக்கும் - அடக்கிய, தவத்தினள் - தவத்தையுடைய கோசலை,—(அத்தேவர் பிரானைநோக்கி), இனி - இப்பொழுது, என்வயின் தரும் மைந்தற்கு - என்னிடத்துப் பிறந்த ஸ்ரீராமனுக்கு, அருள் - அநுக்கிரகம்புரிவது, உன் வயத்தது-உன்னதீனத்துளது, என்றுள் - என்றுபிராத்தித்தனள்; (எ - று.)

இராமபிரானது நன்மை உன்திருவருளாற் குறைவின்றிப் பெருகவேண்டுமெனத் திருமாலினிடத்து வேண்டின னென்க. இந்தச் செய்யுளின் பின்னிரண்டடிகளில், உலகியாவையு மன்வயிற்றினடக்கிய மாயவ் னென்று ஆதேயத்திற்குப் பெருமையைக் கூறி, அப்படிப்பட்டவனை யடக்கியவயிற்றவளென்று ஆதாரத்துக்கு [ஆதேயம் - தாங்கப்படு பொருள்: ஆதாரம் தாங்கும்பொருள்.] மேன்மையைக் கூறியதனால், இது பெருமையணி: ஊழிக்காலத்துஉறங்கிக்கிடந்த ஆலிலைபோலேயாயிற்று,இவள் வயிறு.அதில், வினையான்றி இச்சையாலே இவள்தவத்தாற் பிணிப்புண்டு கிடந்தானென்பதுதோன்ற, 'தவத்தினள்' என்றார்: இதுபற்றியே, "என்ன நோன்புநோற்றாள் கொலோ விவனைப்பெற்ற வயிறுடையாள்" என்றார் பெரியோரும். மாயன்-மாயையையுடையவன்; மாயையாவது - கூடாததையுங் கூட்டுவிக்குந்திறம்; அகடித கடநாஸாமர்த்தியம்; பிரபஞ்சகாரணமாகிய பிரகிருதியு

மாம். மாயவன் என்பதற்கும் இதுவே பொருள்: கருநிறமுள்ள வனென்றலு முண்டு. பி-ம்:—[1]உன்வயிற்றது, உன்வயத்தன். (க்கூ)

கூஎ.—திருமாலை வணங்கியபின், கோசலை தவசியர்க்குக் கோதானங்கள் புரிதல்.

என்றி றைஞ்சியவ் விந்திரை கேள்வனுக்
கொன்று நான்மறை யோதிய பூசனை
நன்றி ழைத்தவ [1]ணல்ல தவர்க்கெலாங்
கன்று டைப்பசு வின்கட னல்கினாள்.

(இ - ள்.) என்று—, இறைஞ்சி-வணங்கி, அ இந்திரை கேள்வனுக்கு - அந்த இலக்குமிநாயகனாகிய நாராயணனுக்கு, ஒன்றும் - தகுந்த, நால் மறை ஓதிய பூசனை - நான்குவேதங்களிலுஞ் சொல்லிய ஆராதனையை, நன்று இழைத்து - விசேஷமாகச் செய்வித்து, அவண் - அவ்விடத்திருந்த, நல்ல தவர்க்கு எலாம் - நல்ல தவசிகளுக்கெல்லாம், கன்று உடை பசுவின் கடல் - கன்றையுடைய பசுவின் திரள்களை, நல்கினாள்-(தானஞ்) செய்தாள்; (எ-று.)

அவள் நல்ல எனப்பிரித்து, எழுவாயாகவுமாம். பசு - பால்பகாவஃறிணைப் பெயர். கடனல்கினாள் என்பதைக் கடன் நல்கினாள் என்று பிரித்து, பசுவின் என்பதிலுள்ள 'இன்'சாரியையைக் கடன் என்பதனோடு கூட்டி, பசு-பசுவை, கடனின் - முறைப்படி, நல்கினாள் என்று உரை கூறினாருமுளர். பி-ம்:—[1]நல்கித். (கூஎ)

கூஅ.—கோசலை அந்தணர்க்குப் பலவகைத் தானங்களைப் புரிதல்.

பொன்னு மாமணி யும்புனை சாந்தமுங்
கன்னி மாரொடு காசினி யீட்டமு
மின்ன யாவையு மீந்தன ளந்தணர்க்
கன்ன[1]முந்தளி ராடையு நல்கினாள்.

(இ - ள்.) அந்தணர்க்கு-வேதியர்களுக்கு, பொன்உம் - பொன்னையும், மா மணிஉம் - பெருமைபெற்ற நவரத்நங்களையும், புனை - பூசுதற்குரிய, சாந்தம்உம் - சந்தனத்தையும், கன்னிமாரொடு - பெண்களையும், காசினி ஈட்டஉம்-பூமியின் கூட்டத்தையும், இன்ன - இவைபோல்வனவாய, யாவைஉம் - எல்லாவற்றையும், ஈந்தனள் - கொடுத்தாள்; (பின்னும்), அன்னம்உம்-அந்நத்தையும், தளிர் ஆடைஉம்-தளிர்போன்றுள்ள வஸ்திரத்தையும், நல்கினாள்-கொடுத்தாள்; (எ - று.)

முதலில் நற்றவர்களுக்குத் தானஞ் செய்து, பின் மற்றவர்களுக்கெல்லாம் பொன்முதலிய கணக்கிறந்தன தந்து அன்னவஸ்திராதிகளும் அளித்தனளென்க. கன்னிமார், மார்-பலர்பாற்பெயர்விகுதி. உம்மைகள்-எண்ணுப் பொருளன. மா-உரிச்சொல்; மஹாஎன்னும் வடமொழிச்சிதைவுமாம். நவரத்நங்களாவன—கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்

கம், முத்து, வைடூரியம், வைரம்என்பன. சாந்தம், காசினி-சந்தனம், காப்யபீ என்னும் வடசொற்களின் சிதைவு; காப்யபீ - பரசுராமனுல் கப்யப முனிவனுக்கு யஜ்ஞதக்ஷிணையாகக்கொடுக்கப்பட்டது. ஈட்டம் - தொழிற்பெயர்; ஈண்டு - முதனிலை. இவை போன்ற தானங்கள் - பூதானம், தானியதானம் முதலியன. அந்தத்தை அணைவுவார்-அந்தணர்: என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பாரென்றவாறு; "அந்தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்" என்றவாறு அழகியதட்பத்தை [அருளை] யுடையாரென ஏதுப்பெயராகவு மாம். பி-ம்:—[1]தானமும். (கூஅ)

கூகூ.—திருமாலை வணங்கி வலஞ்செய்து பின் கோசலை நோன்புகள் தொடங்குதல்.

நல்கி நாயக ணெண்மலர்ப் [1]பாதத்தைப்
புல்லிப் போற்றி வணங்கிப் [2]புரையிலா
மல்லன் [3]மாளிகைக் கோயில் வலங்கொளாத்
தொல்லை நோன்புகள் யாவுந் தொடங்கினள்.

(இ - ள்.) நல்கி - (அங்ஙனம்) தானஞ்செய்து, நாயகன் - அவ்வரங்கநாதனது, நாள் மலர் பாதத்தை-அன்றலர்ந்த தாமரைமலர்போன்ற திருவடிகளை, புல்லி - தழுவி, போற்றி - (பலவகையாகத்) துதித்து, வணங்கி - சேவித்து, கோயில் - அவ்வாலயத்தை, வலம்கொளா - பிரதக்ஷிணஞ்செய்து, (பின்), புரை இலா - குற்றமற்ற, மல்லல் - வளப்பம்பெற்ற, மாளிகை - அரண்மனையில், தொல்லை - பழைய, நோன்புகள் யாஉம்-விரதங்களெல்லாவற்றையும், தொடங்கினள் - (செய்யத்) தொடங்கினள்; (எ - று.)

தானங்களெல்லாஞ் செய்தது கோயிலிலேயே யென்க. கோசலை அங்ஙனம் தானஞ்செய்தபின் மீண்டும் அத்திருமாலின் பாதங்களைச் சென்று அடைந்து வணங்கி வலஞ்செய்து தன்னிருக்கை சேர்ந்து நோன்புகள் நோற்றிருந்தனளென்க. இக்குலத்துதித்த அரசர்க்கெல்லாம் முடிசூட்டுங்கால் அவ்வவர் தாய்மார் செய்துவந்த நோன்புகளென்பார் 'தொல்லைநோன்புகள்' என்றார். மாளிகைக்கோயில் - அரண்மனையிலுள்ள எம்பிரான்கோயி லென்னவுமாம். 'நல்கித்தொடங்கினள்' என்பவற்றுக்கு எழுவாய் வருவிக்க; சென்ற பாடலிலும் இங்ஙனமே. இப்பாடல் சிலபிரதியிலில்லை. பி - ம்:—[1]பாதங்கள். [2]புரையிலாள். [3]மாமணி. (கூகூ)

மந்திரப்படலம் முற்றிற்று.

உ.—ஆவது மந்தரை சூழ்ச்சிப் படலம்.

ஸ்ரீராமபட்டாபிஷேகத்தையறிந்து, கைகேயியின் தாதியாகிய மந்தரை யென்பாள் கைகேயிக்குக் கலகஞ்செய்த கதையைச் சொல்லுஞ் சிறிய பிரிவென்பது பொருள். (மந்தரை - மனத்தைக்கலக்குபவள் என்று காரணப் பொருள்படும் மந்தரா என்ற வடசொல்லின் திரிபு: இவள்—கைகேயிபின் பாங்கி.சூழ்ச்சி யென்பது-சுழற்சி: சூழ்வருவானைச் சுழல்வரு மென்பவாகலின்; அஃதாவது-மனத்தடுமாற்றம். அது விசாரம், ஆலோசனை; இது இப்பொருட்டாதல் "சூழ்வார் கண்ணுக வொழுகலான் மன்னவன், சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்," "சூழ்ச்சிமுடிவு துணிவெய்தல்," "சொல்லாறு கேளானணி சூழ்ச்சி யுட்டோற்றவாறும்" என்பவற்றுனு முணர்க. இங்கே சூழ்ச்சி-துராலோசனை.) சிலபிரதிகளில், இந்தப்படலத்துக்கு **மந்தரைப்படலம்**என்று பேர்காணப் படுகின்றது.

தசரதசக்கரவர்த்தி சோதிடர்களை நோக்கி 'நல்லநாளையாராய்ந்து சொல்லுக' என்று விடுவ, அச்சோதிடர்களும் ஆராய்ந்து 'நாளைக்கு நல்லநாள்' என்றுராக, பிறகு சக்கரவர்த்தி வசிட்டனை வரவழைத்து 'மகுடாபிஷேகத்திற்கு ஏற்ற நாள் நாளைக்கு ஆதலால், இராமபிரானுக்கு முதலுளை செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து உறுதிப்பொருளையும் உபதேசிக்க' என்ன, வசிட்டனும் உவகை மேலிட்டவனுய் இராமபிரா னிருக்குமிடஞ் சென்று தன்னை வணங்கி வழிபட்ட அப்பிரானை நோக்கி, 'உத்தம! நாளைக்கு மன்னவன் உனக்கு முடிசூட்டப்போகின்றன்: ஆதலால், சில உறுதிப்பொருள் கூறுகின்றேன்' என்று சிறந்த உபதேசமொழிகள் பலகூறிப் பின்பு அவ்விராமபிரானேடு ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் கோயிலுக்குச்சென்று அப்பிரானுக்குத்திருமஞ்சனம் முதலியன செய்து வழிபட்டுப் பிறகு இராமபிரானுக்கு மகுடாபிஷேகதினத்துக்கு முன்னுள் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து அப்பால் மன்னவனுக்கு அறிவிக்க, அத்தசரதமன்னவன் நகரத்தை யலங்கரிக்குமாறு பறைசாற்றித் தெரிவிக்கும்படி கட்டளையிட, வள்ளுவர் தசரதனது அக் கட்டளையைப் பறைசாற்றித் தெரிவித்தனர். இராமபிரானுக்கு மணிமுடிபுனையுந் திருவிழா நாளைக்கு என்றதைக் கேட்ட நகரத்து மாந்தர் யாவரும் பெருங் குதூகலத்துடன் நகரத்தை யலங்கரிக்கலாயினர். இராமன் பாலகனுயிருக்கையில் சுண்டுவில்லில் மண்ணுண்டை வைத்துத் தன் கூனின் மேலெய்ததனுல் அவன்மீது கறுவுகொண்டிருந்த கூனியானவள் நகரத்தவர் அங்ஙனம் பேராரப்பரவத்துடன் நகரத்தை யணிவதைக் கண்டு, இராம பட்டாபிஷேகத்தையுணர்ந்து மனம்பொருது வெதும்பி, கைகேயியின் அரண்மனைக்குச் சரேலென்றுபோய் அணையிற் பள்ளிகொண்டிருக்கும் அக் கைகேயியை விரைவிலணுகித் துயின்றுகொண்டிருந்த அவளை யெழுப்பி, 'பெருந் துயரம்நேர விருக்கையிலும் இங்ஙனம் துயில்வது தகுதியோ?' என்று கூறி இராமன் பட்டம் புனையப்போவதைத் தெரிவிக்க, கைகேயி அகமகிழ்ந்து சிறந்ததோராரத்தை அந்தக் கூனிக்குத் தந்தனள். அப்போது அந்தக் கூனி

அதனைக் கழற்றி யெறிந்துவிட்டுப் பலவகைத் துர்ப்போதனைகளாற் கைகேயி யின் மனத்தைக் கலக்க, முதலில் மந்தரையின் பேச்சுக்குச் சிறிதும் இணங் காதிருந்த கைகேயி பிறகு மனங் கலங்கி அவள் பேச்சுக்கு இசைந்து அவளை நோக்கி, 'இப்போது யான் செய்யவேண்டிய உபாயம் யாது?' என்ன, முன்னே சம்பராசுரயுத்தத்திலே உதவியதற்காக மன்னவன் இரண்டுவரங் கள் உனக்குக் கொடுத்திருக்கின்றானே, அவற்றில் ஒன்றினால் இராமனைப் பதினான்குவருஷம் காட்டிற்குச் செல்லவும்,மற்றொரு வரத்தினால் பரதனுக்கு முடிசூட்டவும் வேண்டுவாய்' என்று உபாயங்கூறினாள். அங்ஙனம் உபாயங் கூறிய கூனியைக் கைகேயி புகழ்ந்து கொண்டாடிச் சற்காரித்து அனுப்பி விட்டுப் பின் தன் ஆபரணங்களையெல்லாங் களைந்தெறிந்து தலைவிரி கோலத் துடன் பூமியின்மீது புரண்டவண்ணம் மூர்தேவிபோற் கிடந்தனளென்பது, இப்படலத்திற் கூறும் பொருள்.

வேறு.

க.—சோதிடர்களை முடிபுனைய நல்லநாள் கூறுமாறு தசரதன் வினவுதல்.

கடிகமழ் தாரினன் [1]கணித மாக்களை
முடிவுற நோக்கியோர் [3]முகமன் கூறிப்பின்
வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை [4]முதன்மைநாண் மொழிமி னென்றனன்.

(இ - ள்.) (கணிதரை ஒருங்குகொண்டு ஒருமண்டபத்தின் மருங்குபோன), கடிகமழ் தாரினன்-வாசனைவீசுகின்ற மாலையையுடைய சக்கரவர்த்தி,—கணிதம் மாக்களை-அச்சோதிடநூல்வல்லோரை, முடிவு உற நோக்கி - கடை பொருந்தப்பார்த்து, ஓர் முகமன் கூறி - (முன்னே) சிறப்பு வார்த்தையைச் சொல்லி, பின் - பின்பு, 'வடி மழு வாளவன் கடந்த மைந்தற்கு - கூர்மை பொருந்திய மழுவாயுதத்தையுடையவனை [பரசுராமனை] வென்ற வீரனாகிய இராமனுக்கு,முடி புனை முதன்மை நாள்-முடிசூட்டுதற்குரிய சிறந்த நாளை, மொழிமின் - சொல்லுங்கள்,' என்றனன் - என்றான்; (எ - று.)

இச்செய்யுள் "உரைதெரிகணிதரை யொருங்குகொண்டடோரூ; வரைபொருமண்டப மருங்குபோயினன்" என்று வந்த அசை - ஆஞ் செய்யுளோடு தொடர்புடையது. கணிதமாக்கள் - சோதிடர். மாக்கள் - மக்களென்பதன் விகாரம். மாக்களென்ப்படுவார் மனவுணர்ச்சியில்லாதார்; மக்களென்ப்படுவார் ஐம்பொறி யுணர்வேயன்றி மனமென்பதோரறிவுமுடையார்; இதனை "மாவு மாக்களுமையறிவினவே," "மக்கடாமேயாறறிவுயிரே" என்னும் மரபியற் சூத்திரங்களானுமுணர்க; ஆதலின், இவரை மாக்களென்பது பொருந்தாமை தெற்றென வுணர்க. இனி இச்சோதிடர் கூறுஞ் சோதிடம் பயன்படாமை பற்றிக் கவி 'மாக்கள்' எனப் பழித்துக்கூறினரென்னலுமாம். முடிவுற நோக்கி - நன்குநோக்கியென்றபடி. 'பின்' என்றதனால், 'முன்' என்பது வருவிக்கப்பட்டது. வாள் - இங்கு ஆயுதமென்னும்மாத்திரையாய் நின்றது.

மழு ஆளவன் எனப் பிரித்து, மழுவையாளுந்தலையுடையவன் என்றுமாம். "மெல்லெழுத்து மிகுவழி" என்னுஞ் சூத்திரத்து "உயர்திணைமருங்கி னெழி யாதுவருதலும்" என்றதன்கண் ஒழியாது என்னும் இலேசால் வாளவனை என்னும் உருபுதொக்கது. வடிமழுவாளவற் கடந்தமைந்தனை அவன் இள மையிற்புரிந்த. ஆண்டொழிலே யெடுத்துக் கூறவே, முடிபுனைந்து மூவுலகுங் காக்கும் வீரமுடைய னென்பது கூறியதாயிற்று. கீழ் எசு-ஆஞ் செய்யுளில் "மழுவினுற் பொருதுபோக்கிய, சேவகன்சேவகஞ் செகுத்தசேவகற்கு, ஆவ இவ்வுலகம்" என வந்ததுங் காண்க. பி-ம்:—[1]கடிகை. [2]முடியுற. [3]முதன் மை. [4]கடிகை. இச்செய்யுள் சிலபிரதிகளிலில்லை. (கஂஂ)

உ.—நாளை நல்லநாளென்று கணிதமாக்கள் கூறவே,
தசரதன் வசிட்டனை வரவழைத்தல்.

பொருந்துநா ணுளை[1]யுன் புதல்வற் [2]கென்றலுந்
திருந்திணை [3]ரினியசொற் கேட்ட செய்கழற்
பெருந்திண்[4]மா லியானையான் பிழைப்பில் [5]செய்தவ
மருந்தனன் வருகென வசிட்ட னெய்தினன்.

(இ - ள்.) திருந்தினர் - (நூல்களில் தேறினவராகிய முகூர்த்தவிதானி கள், 'உன் புதல்வற்கு-உனது புத்திரனுக்கு (ப்பட்டாபிஷேகஞ் செய்தற்கு), பொருந்தும்-(எல்லாநன்மைகளும்) பொருந்திய, நாள்-முகூர்த்ததினம், நாளை-நாளைக்கேயாகும்', என்றலும் - என்று சொன்ன வளவில், —இனிய சொல் கேட்ட-அந்த இனிமையான வார்த்தையைக் கேட்ட, செய் கழல் - செம்மை யாகிய வீரக்கழலேபணிந்த, பெரு திண் மால் யானையான்-பெரிய வலிய மத யானைபோன்ற சக்கரவர்த்தி, 'பிழைப்புஇல் செப் தவம்-குற்றமில்லாத தவத் தைச்செய்துள்ள, மருந்து அனன்-தேவாமிருதம்போற் சிறந்தவனை, வசிட் டன் - வசிட்டபகவான், வருக - வருவானாக,' என-என்று கூற, எய்தினன்- (அம்முனிவன்) வந்தான்; (எ - று.)

வினாவில் இராமபிரானுக்கு முடிசூட்டவேணுமென்று கருதியிருக்கை யில், 'உன்புதல்வற்குப் பொருந்துநாள் நாளை' என்று முகூர்த்தவிதானிகள் சொல்லியதனால் 'இனிய சொல்' என்றார். முகூர்த்தவிதானிகள்-முகூர்த்தம் விதிப்பவர். கழல் - வீரர்காலணி; அது "வீரத்தின்வீக்கியகழலே, யாடவர் கான்மிசையணிவடம்" என்பதனாலறிக. செம்பொற்கழலாதலால் 'செய்கழல்' என்றார்; செம்மையின் 'மை' போய்ப் முன்னின்ற மெய் திரிந்தது; வினைத்தொ கையாய்க் கட்டியகழல் என்றும், கழல்-ஆகுபெயராய், அழகியபாதங்களென்று மாம். வசிட்டன் - ஞானம்தன்னிடத்துக்குடிகொண்டவன். பி-ம்:—[1]தின். [2]என்றனர், என்றுவந்து. [3]அன்ன. [4]மால்யானை. [5]செய்தவம் வருந்தினன். ()

ங.—'நாளைக்குப் பட்டாபிஷேகமாதலால் இன்று செய்விக்கவேண்டிய சடங்குகளை இராமனுக்குச் செய்விக்க' என்று தசரதன் சொல்லுதல்.

நல்லியன் மங்கல நாளு நாளையவ்
வில்லிய ரோளவற் [1]கின்று வேண்டுவ
வொல்லையி [2]னியற்றிநல் லுறுதி [3]வாய்மையுஞ்
[4]சொல்லுதி [5]பெரிதெனத் தொழுது சொல்லினன்.

(இ - ள்.) (அப்பொழுது சக்கரவர்த்தி வசிட்டனை நோக்கி), 'நல்இயல் மங்கலம் நாள்உம்நாளை-நல்லமுகூர்த்தத்தையுடைய சுபதினமும்நாளைக்கே: (ஆதலால்), அ வில் இயல் தோளவற்கு-அந்தக்கோதண்டம்பொருந்திய புயங்களையுடைய இராமனுக்கு; இன்று-இன்றையதினம், வேண்டுவ-செய்யவேண்டுவனவாகிய சடங்குகளை, ஒல்லையின்-விரைவாக, இயற்றி-செய்து; நல் உறுதி வாய்மைஉம் - மிக்க நன்மையைத்தருவனவாகிய உபதேசவார்த்தையையும், பெரிது சொல்லுதி-மிகுதியுஞ்சொல்லுவீராக;' என-என்று, தொழுது-அஞ்சலிசெய்து, சொல்லினன் - சொன்னன்; (எ - று.)

வில்லியல்தோளென்றது-சிவனுடையவில்லை யொடித்ததற்கும், விஷ்ணுவினதுவில்லை வளைத்ததற்குங் குறிப்பு. மகுடாபிஷேகத்து முன்னாளிற் செய்யவேண்டிய விரதம்முதலியவைகளை இராமனுக்குச் செய்வித்து, இராச்சியத்தை நடத்தவேண்டிய முறைமையைப்பற்றி உறுதிபயக்கும் நீதிகளையும் உபதேசிக்குமாறு வசிட்டனை வேண்டினன் தசரத னென்க. பட்டங்கட்டுபவர்க்குப் பலவகை அரசநீதிகளை யுபதேசித்தல், இயல்பு: அங்ஙனம் உபதேசிப்பதைப் பலநூல்களிலுங் காணலாம். தசரதன் தானே பலவகைநீதிகளை யுபதேசித்தனனென்று முதனூல் கூறும். பீ-மீ:—[1]ஈண்டு, என்று. [2]இயற்றிய. [3]வார்த்தையும். [4]சொல்லுதிர், சொல்லுக. [5]நீயென, போயென. (கஅஉ)

சு.—இராமபிரானது மாளிகைக்கு வசிட்டன்சென்ல, இராமன் முனிவனை யெதிர்கொண்டு தன்னிருக்கைசேர்தல்.

முனிவனு முவகையுந் தானு முந்துவான்
மனுகுல நாயகன் [1]வாயின் [2]மன்னிலு
னனையவன் வரவுகேட் டலங்கன் [3]மார்பனு
மினிதெதிர் கொண்டுதன் [4]னிருக்கை யெய்தினன்.

(இ - ள்.) முனிவன்உம் - வசிட்டமுனிவனும், உவகைஉம் தான்உம் முந்துவான்-சந்தோஷமுந் தானும் முற்பட்டுச்செல்பவனாய், மனு குலம் நாயகன்-வைவசுவதமனுவினதுவம்சத்திற் பிறந்தவனாகிய ஸ்ரீராமனது, வாயில் மன்னினன் - மாளிகைவாயிலை யடைந்தான்; அனையவன் வரவு கேட்டு - அம்முனிவனதுவரவைக் (கடைகாப்பாளர் சொல்லக்)கேட்டு, அலங்கல் மார்பன்உம்-மாலையையணிந்த மார்பையுடைய ஸ்ரீராமனும், இனிது எதிர்கொ

ண்டு-இனிதாக எதிர்கொண்டு (எழுந்தருளப்பண்ணி); தன் இருக்கை - தன் னிருப்பிடத்தை, எய்திஞன் - அடைந்தான்; (எ - று.)

வசிட்டமுனிவன் தேரின்மீது ஏறியவண்ணம் இராமபிரானது அரண் மனையினுள்ளே சென்றனனென முதனூல் கூறும். முனிவனு முவகையுந் தானு முந்துவான் - முனிவன் மிக்கமகிழ்போடு விரைவிற்சென்றென்றபடி. முந்துவான் - முற்றெச்சம். அலங்கல்-தொழிலாகுபெயர். பி-ம்:—[1]வாயல். [2]நண்ணினனென்; முன்னினனென். [3]வீரனும். [4]கோயில். (கஅ)

வேறு.

நு.—நாளைக்கே உனக்குப் பட்டாபிஷேகமென்று வசிட்டன் தெரிவித்தல்.

[1]ஒல்க லில்தவத் துத்தம ரைதுறான்
மல்கு [2]கேள்விய வள்ளலை நோக்கினன்
புல்கு காதற் புரவலன் போர்வலாய்
நல்கு நானில நாளை [3]நினக்கென்றான்.

(இ - ள்.) ஒல்கல் இல் தவத்து - தளர்ச்சியில்லாத தவத்தையுடைய, உத்தமன்-உத்தமனாகிய வசிட்டன், ஓதும் நூல்-கற்றற்குரிய நூல்களையும், மல்கு கேள்விய - நிறைந்தகேள்வியையுமுடைய, வள்ளலை - அவ்விராமனை, நோக்கினன்-பார்த்து, போர் வலாய்-யுத்தத்தில் வல்லவனே! புல்கு காதல் புரவலன்-(நின்னிடத்து) விருப்பத்தையுடைய அரசன், நினக்கு - உனக்கு, நாளை - நாளைக்கு, நானிலம் - பூமியை, நல்கும்-கொடுப்பன், என்றான் - என்று சொன்னன்; (எ - று.)

அரசன் அன்போடு உனக்கு நானிலத்தைத் தருதலால், அவனது அன்புபெருக நீ நானிலத்தையாளவேண்டுமென்பான் 'புல்கு காதற் புரவலன் நல்கு நானிலம் நாளை நினக்கு' என்றும், உன்தந்தையின்வேண்டுகோளையும் மறுக்காமல் நிறைவேற்றவேண்டு மென்பான் 'வள்ளல்' என்றும், ஆளவல்ல வல்லமையுள்ளவன் நீ யென்பான் 'போர்வலாய்' என்றுங் கூறினன். கேள்வியாவது - கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட் டல்; கற்றவழி அதனினைய அறிவை வலியுறுத்தலானும், கல்லாதவழியும் அதனையுண்டாக்குதலானும் இது நூலின்பின் வைக்கப்பட்டது. வள்ளல் - வரையாது கொடுப்பவன். நானிலம் - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; நான்காகிய நிலத்தினையுடையது; ஆகுபெயருமாம். நான்கு நிலங்களாவன—குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பவைகளில், பாலைநீங்க நன்மக்கள் குடியிருப்பதற்குரிய மற்ற நான்கு மாம்; பாலைக்கு நிலமில்லை: "நடுவணைந்திணை நடுவணதழியப், படுதிரை வையம் பாத்தியபண்பே," "மாயோன் மேய காடுறையுலகமும், சேயோன் மேய மைவரையுலகமும், வேந்தன்மேய தீம்புனலுலகமும், வருணன்

மேய பெருமணலுலகமு, முல்லைகுறிஞ்சி மருதநெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்லவும்படுமே" என்றார், ஆசிரியர் தொல்காப்பியனார். "நானிலம் வாய்க்கொண்டு நன்னீ ரறமென்று கோதுகொண்ட, வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ்பாலே" என்பதும் இக்கருத்தேபற்றி வந்தது. நானிலம் - நாற்கடல்சூழ்ந்த நில மென வுரைப்பாருமுளர். கேள்விய - குறிப்புப் பெயரெச்சம். பி - ம்:—[1]ஒல்கிலாத். [2]கேள்வியவ்வள்ளலே, கேள்வியன்வள்ளலே. [3]நினக்கென. (கoச)

சூ.—இராமனைநோக்கி, வசிட்டன் உறுதிப்பொருளாகக்
கூறுவேன் எனல்.

என்று பின்னு மிராமனை [1]நோக்கிநா
னென்று கூறுவ [2]துண்டுறு திப்பொரு
ணன்று கேட்டுக் கடைப்பிடி [3]நன்கெனைத்
துன்று [4]தாரவற் சொல்லுதன் மேயினன்.

(இ - ள்.) என்று - என்று சொல்லி, பின்னும்—, இராமனை நோக்கி; இராமனைப்பார்த்து, 'நான் கூறுவது - நான் சொல்லவேண்டுவதாகிய- உறுதி பொருள் ஒன்று - நன்மையைத்தருவதாகிய ஒருவிஷயம், உண்டு - உளது; (அதனை), நன்று கேட்டு - நன்றாகக்கேட்டு, நன்கு கடைப்பிடி - நன்றாய் உறுதியாகக்கொள்', எனை - என்று, துன்று தாரவன் - நெருங்கியமாலையையுடைய அவ்விராமனைக்குறித்து, சொல்லுதல் மேயினன் - (வசிட்டன்) சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—உறுதிப்பொருள் கூறுவதை மேற்பதினைந்து கவிகளிற் காண்க.

'நானென்று கூறுவதுண்டுறுதிப்பொருள்' என்றதனால், இதனை அலட்சியஞ் செய்யலாகா தெனக் குறிப்பித்தபடியாம். ஒன்று என்பதை உறுதிப்பொருளோடுகூட்டி, வினைத்தொகையாக, ஒன்று - பொருத்திய [கூறவேண்டுவதாகிய], உறுதிப்பொருள் உளது எனினுமாம். கேட்டவரெல்லாம் அவ்வாறு நடத்த லரிதாதலின், 'நன்குகடைப்பிடி' என்றான். பி ம்:—[1]நோக்கினன். [2]ஒன்று. [3]நன்றெனத். [4]தாரவன். (கoந)

எ —இதுமுதற் பதினைந்துகவிகள் - இராமபிரானுக்கு வசிட்டன்
கூறிய உறுதிமொழிகளைத் தெரிவிக்கும்.

கரிய மாலினுங் கண்ணுத லானினு
மூரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமொ ராைந்தினு மெய்யினும்
பெரிய ரந்தணர் [1]பேணுதி யுள்ளதால்.

இதுமுதல் "ஏனைநீதி" (உஉ) என்னுங் கவியளவும் - ஒருதொடர்.

---

† "தைவாதீநம் ஜகத்ஸர்வம் மந்த்ராதீநம்துதைவதம்-தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் ப்ராஹ்மணை மம தேவதா" என்று ஸ்ரீமஹாபாரதத்திலே ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அருளிச்செய்துள்ளது கருதத்தக்கது. இதன் பொருள் - உலகமுழுதுந் தெய்வத்தின்வயத்தது; அத்தெய்வம் மந்திரத்தின் வயத்தது; அம்மந்திரம் அந்தணர் வயத்தது; அவ்வந்தணர் எமக்குக் கடவுளாவரென்பது.

(இ - ள்.) அந்தணர் - வேதியர்,-கரிய மாலின் உம்-கருநிறத்தை யுடைய திருமாலேக்காட்டிலும், கண் நுதலானின் உம் - நெற்றிக்கண்ணை யுடைய பரமசிவனேக்காட்டிலும், உரிய தாமரைமேல் உறைவானின் உம் - (இருத்தற்கு) உரிய (திருமாலினது திருவுந்திக்) கமலத்தில் வசிக்கின்ற பிரமதேவனேக் காட்டிலும், விரியும் பூதம் ஓர் ஐந்தின் உம் - விரிகின்ற ஒப்பற்ற பஞ்சபூதங்களேக்காட்டிலும், மெய்யின் உம் - சத்தியத்தைக் காட்டிலும், பெரியர்-பெருமையையுடையர்; (ஆதலின் அவ்வந்தணரை), உள்ளத்தால் பேணுதி - நன்மனத்தோடு ஆதரிப்பாயாக; (எ - று.)

பூதமைந்து - இலக்கணையால், பாஞ்சபௌதிகமயமான லோகம்: இது வடிவத்தாற்பெரியது. அந்தணரதுபெருமை இந்தவுலகத்திலும்அடங்காது; ஏனெனின் வானுலகத்துத் தேவர்களினும் பெரியர் அந்தண ரென்று நூல் கள் ஓதுதலாலென்க. அந்தணர் பெருமையைக் கூற வந்தவர் சத்தியம் மிகச் சிறந்ததென்று அதன்பெருமையையும் பெற வைத்தார். மெய்யினும்பெரியர் அந்தணரென்று அந்தணரைச் சார மெய்யை வைத்தது, அவர்க்குச் சத்தியம் வேண்டு மென்பதைக் குறிப்பிக்கும். மும்மூர்த்திகளெனவே, பிரபஞ்ச காரணங் கூறியதாயிற்று;விரியும் பூதமொரைந்தெனவே, காரியமாகிய பிரபஞ்சங் கூறியதாயிற்று. மெய் - பிரபஞ்சத்திற்கு ஆதாரமாகிய சத்தியம்: இவையனைத்தினும் உயர்ந்தோர் அந்தணரெனவே, அவரையன்றி உலகம் நின்று நிலவா தாதலின், உலகம்அளிக்கும்அரசர்க்கு அவரைப் பேணுதல் இன்றியமையாத தென்றதாயிற்று. பூதமைந்து - நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்பன. உள்ளத்தால் என ஆலுருபு உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. உரிய - உரிமையான எனினுமாம். பி - ம்:—[1]பேசுதி. (கஅ)

அ. அந்த ணுளர் முனியவு மாங்கவர்
சிந்தை யாலருள் செய்யவுந் [1]தேவரி
[2]லெந்து ளாரையு [3]நொய்[4]துயர்ந் தாரையு
மைந்த வெண்ண வரப்பு[5]முண் டாங்கொலோ.

(இ-ள்.) மைந்த - குழந்தாய்! அந்தணாளர்-அந்தணர், முனியவும்-கோபிக்கவும், சிந்தையால் - மனத்தால், அவர்—, அருள் செய்யவும்-கருணைபுரியவும், தேவரில்-தேவர்களுள், நொந்து உளாரையும் - வருந்தியிருப்பவரையும், நொய்து உயர்ந்தாரையும் - விரைவாக உயர்வுபெற்றவரையும், எண்ணை - கணக்கிட,வரம்புஉம் உண்டுஓ-அளவும்இருக்கின்றதோ?[இல்லை யென்றபடி].

தேவர்களில் அந்தணரின்முனிவால் இழிந்தோரும் அநுக்கிரகத்தால் மேன்மையடைந்தோரும் பலர் காணப்படுகின்றனரென்று காரணங்காட்டிக் கீழ்ச்செய்யுளில் தேவரைக்காட்டிலும்பெரியர் அந்தணரென்றதனேநிலைநாட்டுகின்றுன் வசிட்டனென்க. அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப்பயன்களேப் பயந்தேவிடும் நிறைமொழிமாந்தராதலின், இவ்வாறுகூறினர். நொய்து என்பதை நொந்துளாரோடுங்கூட்டுக. நொந்துளார்க்கு - துருவாசமுனிவன்

சாபத்தினால் இந்திரன் தன்பதமிழந்து தாமரைத்தண்டி லொளித்ததும், இந்திர பதவிபெற்ற நகுஷன் அகத்தியமுனிவன்சாபத்தினால் மலைப்பாம்பாயினமையும்; அருளினால் மேம்பட்டதற்கு-பிருகுமுனிவனால் திருமால் பரம்பொருளென்று விளக்கப்பட்டமையும் விசுவாமித்திரன் பிரமவிருடியானதும் முதலியன உதாரணமாதல் காண்க. ஆங்கு, ஆம், கொல் - அசைகள். பி-ம்:— [1]தேவருள். [2]உந்தினுரையும். [3]நொந்து. [4]உணர்ந்தாரையும். [5]உண்டாகுமோ.()

கூ. [1]அனைய ராதலி னைய[2]விவ் வெய்யதீ
வினையி னீங்கிய [3]மேலவர் [4]தாளினைப்
புனையுஞ் சென்னியை [5]யாய்ப்[6]புகழ்ந் [7]தேத்துதி
[8]யினிய கூறிநின் [9]றேயின [10]செய்தியால்.

(இ - ள்.) அனையர் ஆதலின்-(அந்தணர்) அத்தன்மையராதலால, ஐயகுழந்தாய்! வெய்ய தீவினையின்-கொடியபாவத்தினின்று, நீங்கிய-விலகின, இமேலவர் - இம்மேன்மையையுடைய அந்தணரது, தாளினை - திருவடிகளை, புனையும் சென்னியை ஆய்-அணியும் முடியை யுடையவனாகி, புகழ்ந்து ஏத்துதி-மிகவும் துதிப்பாயாக; (இன்னும்), இனிய கூறி - இனியமொழிகளைச் சொல்லி, நின்று-(நல்லொழுக்கத்தில்) நின்று, ஏயின - (அவர்) ஏவினவைகளை, செய்தி - செய்வாயாக; (எ - று.)

முதலில் அந்தணரைப் பெரியராதலால் அவரைப் பேணவேண்டுமென்று கூறி, கீழ்ச் செய்யுளால் தேவர்களைக்காட்டிலும் அவர் சிறந்தவரென்பதற்குக் காரணங்கூறி, இதனால் அந்த ஏழாஞ் செய்யுளிற் கூறிய விஷயத்தை முடிக்கின்றனன். ஐயவென்பது-மரபுவழுவமைதி. இன்-நீக்கம். சென்னியை, ஐ-முன்னிலையொருமைவிகுதி. ஆல்-அசை. பி-ம்:—[1]அனையது. [2]இனைய நீ, அவ்வெய்யதீ. [3]வேதியர். [4]தாளினை. [5]வாய். [6]புகன்று. [7]ஏத்திநீ. [8]இனைய. ஏயது. [10]செய்தியே. (கூஅ)

கo. ஆவ தற்கு மழிவ தற்குப்மவ
ரேவ நிற்கும் [1]விதியுமென் றுலினி
யாவ [2]தெப்பொரு [3]ளிம்மையு [4]மம்மையுந்
தேவ ரைப்பர வுந்துணை சீர்த்ததே.

(இ - ள்.) 'ஆவதற்குஉம் - (ஒருவர்) மேம்படுதற்கும், அழிவதற்குஉம்-கெடுவதற்கும், அவர் ஏவ-அவ்வந்தணர் ஏவலின்படி, விதிஉம்-ஊழும், நிற்கும்-காத்திருக்கும்,' என்றுல்—, இனி—, இம்மைஉம் - இப்பிறப்பிலும், அம்மைஉம்-மறுபிறப்பிலும், தேவரை - (பூ-மி) வானவரான அந்தணரை, பரவும் - கொண்டாடுகின்ற, துணை-அளவு, சீர்த்தது-சிறப்பினையுடையது;—ஆவது-பொருந்திய, எப்பொருள்-எந்தப்பொருள்? [எதுவுமில்லை]; (எ - று.)

கீழ் இரண்டுசெய்யுளிற் கூறியதே மனத்திற் படும்பொருட்டு வேறு வகையாகக் கூறப்படுகின்றது. நல்லொழுக்கமுடைய அந்தணர் ஒருவனைப் பார்த்து இவனுக்கு நன்மை பெருகவேண்டுமென்று கூறினாலும் இவன்

அழிந்திடவேண்டுமென்று கூறினாலும், விதியும் அவர் எவலின்படி நிற்பதால் அவ்வந்தணரைக்காட்டிலுஞ் சிறந்தது எப்பொருள்? எதுவுமில்லை; தேவர்களைப்பரவுவது இவ்வந்தணரைப் பேணுவதைக்காட்டிலுஞ் சிறந்த அளவையுடையதாகுமோ? என்பது, பொருளாகும். ஆகூழ், போகூழ் என்பனபற்றி, 'ஆவதற்கு மழிவதற்கும்' என்றான். தெய்வமும் தான் அந்தணர்க்கு ஏவல் செய்யுமென்பதாம். விதியும்-உயர்வுசிறப்பு. பின்னிரண்டடிகள்-'யாவதிப்பொருளின்மையத் தன்மையாற்.....செய்தியோ' என்றுங் காணப்படுகின்றன. பி-ம்:—[1]வினையும். [2]இப்பொருள். [3]எம்மையும், இம்மைக்கும். [4]அம்மைக்கும், மெய்ம்மைக்கும். (கo)

கக. உருளு நேமியு மொண்கவ ரெஃகமு
[1]மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்குந்
தெருளு நல்லற மும்மனச் [2]செம்மையு
[3]மருளு நீத்தபி னைவதுண் டாகுமோ.

(இ - ள்.) உருளும் நேமியும் - வட்டவடிவாகிய சக்கரத்தையும், கவர் ஒள் எஃகம்உம்-(பகைவருயிரைக்) கொள்ளையிடுகின்ற ஒள்ளிய மழுவையும், மருள் இல் வாணிஉம்-மயக்கமில்லாத சரசுவதியையும், வல்லவர்-படையாகக்கொண்டு வல்லமைபெற்றவராகிய, மூவர்க்குஉம் - மும்மூர்த்திகட்கும், தெருளும்-தெளிவாகிய, நல் அறம்உம்-நல்ல தருமமும், மனம் செம்மைஉம்-மனத்தினதுசெப்பமும், அருள்உம்-தயையும், (ஆகிய இவற்றை), நீத்த பின்-விட்டபின்பு, ஆவது - நன்மையாவது, உண்டாகும்ஓ - உளதாகுமோ? [ஆகாதென்றபடி]; (எ - று.)

முத்தேவரும் தாம் மேற்கொண்டுள்ள தொழில் இனிது நிறைவேறுதற்கு அறம் முதலியவற்றைக் கைக்கொண்டிருக்கின்றனர்; எனவே, தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுகின்ற அரசர்க்கு,நல்லறமும் செம்மையும் அருளும் இன்றியமையாவென்றவாறு. "சீலமுந் தருமமுஞ் சிதைவில்செய்கையும், சூலமுந் திகிரியுஞ் சொல்லுந்தாங்கிய, மூலம்வந்ததவிய மூவர்" என்று திருவடிசூட்டுபடலத்து வருவது இங்கு நினைக்கத்தக்கது. எஃகு - ஆகுபெயர்: அம் - அசை. அரியும்அரனும் நேமியையும் எஃகத்தையுங்கொண்டு துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்தல்போல,வாய்மொழியைக்கொண்டே அதனைச்செய்தலால், அயனை 'வாணிவல்லவன்' என்றான். முதலில் அந்தணரைப் போற்றவேண்டுமென்பதைக் காரணத்தோடு கூறி, இதனால் அறம்முதலிய நற்குணங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்கிறான். நீத்தபின்-வினையெச்சம். பி-ம்:--[1]மருளும்பாசமும். [2]செய்கையும். [3]அருளின்.

கஉ. சூது முந்துறச் சொல்லிய [1]மாத்துயர்
நீதி மைந்த [2]நினக்கிலை யாயினு
மேத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல[3]மனைவியென [4]வோர்திரே.

(இ - ள்.) நீதி மைந்த - நியாயமுறைமையையுடைய குழந்தாய்! சூது முந்துற - சூது முதலாக, சொல்லிய - சொல்லப்பட்ட, மா துயர் - பெரிய துன்பங்கள், நினக்கு இலை ஆயின்உம் - உன்னிடத்தில் இல்லையானாலும், ஏதம் என்பன யாவைஉம்-குற்றமென்னப்பட்ட அனைத்தையும், எய்துதற்கு-அடைவதற்கு, ஓதும் மூலம் - சொல்லப்படுகின்ற காரணம், அவை - அவையாகும், என - என்று, ஓர்தி - அறிவாயாக; (எ - று.)

சூது முதலிய துயரங்கள் பெருங்குற்றத்தைவிளக்கு மாதலால் என்றும் அவை உன்னிடத்துச் சேராது பார்த்துக்கொள்ள வேண்டுமெனக் கூறியபடியாம். மிக்க துன்பத்தை விளக்குஞ் சூது முதலியன இன்னையென்பதை "வேட்டங் கடுஞ்சொான் மிகுதண்டம் சூது பொரு, ளீட்டங் காமமோடேழு" என்பதனை னறிக. இவற்றை வடநூலார் வ்யஸநமெனக் கூறுவா ராதலின், 'சூதுமுந்துறச் சொல்லிய மாத்துயர்' என்றார். சூதாடுதல், வேட்டையாடுதல், பகலிற்றூங்குதல், வம்பளத்தல், ஸ்திரீலோலனையிருத்தல், குடித்தல், பாட்டு கூத்து வாத்திய முதலியவற்றில் பெருவிருப்பமுள்ளவனை யிருத்தல், வீணைதிரிச்சல் என்னுங் காமத்தினையுண்டாகும் பத்துத்துக்கங்களென்றலு முண்டு.சொல்லிய-செபப்பாட்டு வினைப்பொருளில் வந்த செப்வினை. நினக்கு - உருபுமயக்கம். யாவினை-எஞ்சாமைப்பொருளது.

பி-ம்:—[1]மாதுயர். [2]நினைந்து புரிவதேல், நினக்கிலையாமெனின், நினைக்கிலையாயினும். [3]அதுவென. [4]ஓதியே, ஓர்தியால். (ககக)

கரு. யாரொ டும்[1]மனக் கோளிலை தென்றபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
ரூரொ டுங்கல்[2]செய் யாதது [3]தக்கபின்
வேரொ டுங்[4]கெடல் வேண்ட[5]லுண் டாகுமோ.

(இ - ள்.) (ஒருவனுக்கு), யாரொடுஉம்-எவரோடும், மனம் கோள்-நெஞ்சில்மாறுபாடு [விரோதம்], இலது - இல்லை, என்ற பின்-, போர் ஒடுங்கும் - யுத்தம் அடங்கும்; தன் புகழ் ஒடுங்காது - அவனது கீர்த்திசுருங்காது [வளரும்]; தார் ஒடுங்கல் செப்பாது - (அவனது) படையும் கெடாது; அது தக்கபின் - அத்தகைய நன்மை யுண்டான பின்பு, வேரொடுஉம் கெடல் - (பகை) வேரோடுகெடுதலை, வேண்டல் - விரும்பவேண்டியது; உண்டாகுமோ—? (எ - று.)

மனத்தின்மாறுபாடே போர்கிளர்ச்சிக்குக் காரணமாதலால், எவரோடும் மனம்மாறுபாடுகொள்ளாவிடின், போர் உண்டாவதற்கே வழியில்லை: எவரோடும் பொருவதில்லாவிடின் புகழ் குறையுமோ என்று கருதவேண்டா: தந்தியைநாடுவது சாதுக்களின் செயலாதலால், அதனாற் புகழே பெருகும்: மேலும், படைகட்குஞ் சேதமில்லை: யாவரும் நண்பினராகவே யிருத்தலால் பகைவர் வேருடன் அழியவேணுமென்று கருதுதற்கும் இடனில்லை யென்ற படி. இதனால், காரணமின்றிப் பகைகொள்ளாதிருக்கவேணு மெனக் கூறிய

வாறு. புக்ழாவது - இம்மைப்பயனுகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. பீ-ம்:—[1]பகைகோளிலதென்ற, பகைகொள்ளிலனென்ற, மனக்கோளிலதான. [2]செல்லாதது. [3]தந்தபின். [4]கெட. [5]உண்டாகுமே. (கஉ)

கச. கோளரு மைம்பொறி யுங்குறை யப்[1]பொரு
ளைளுங் [2]கொண்டு [3]நடுவுறு [4]நோன்மையி
ளைளு மவ்வர [5]சேயர சன்னது
வாளின் மேல்வரு மாதவ [6]மைந்தனே.

(இ - ள்.) கோளரும்-(தத்தமக்கேகற்ற புலன்களைக்) கொள்ளுகின்ற, ஐம் பொறிஉம் - பஞ்சேந்திரியங்களும், குறைய - தணிந்திருக்க, பொருள் - சம் பத்தை, நாள்உம் கொண்டு - தினந்தோறும் ஈட்டி, நடுஉறு நோன்மையின் ஆளும்-நடுநிலையோடு பொருந்திய மனவுறுதியோடு ஆளுகின்ற, அ அரசுவ - அந்த அரசாட்சியே, அரசு - அரசாகும்; மைந்தன - குழந்தாய்! அன்னது - அப்படிப்பட்ட அரசாட்சி, வாளின்மேல் வரும் மா தவம் - வாளாயுதத்தின் மேல் நின்றுசெய்யும் பெருந்தவ மாகும்; (எ - று.)

ஜந்தளைப் பாதுகாத்தற்குப் பொருள் வேண்டியிருப்பதுபற்றி நாடோ றும் வருவாயைப் பெருக்கி ஐம்புலன்களை யடக்கி நடுவுநிலை பொருந்த மன வுறுதியோடு இராச்சியத்தைப் பாதுகாப்பது, வாள்கொண்டு செய்யுந்தவ மென்றவாறு. இங்ஙனம் அரசாட்சிசெய்யின் முனிவர் ஐம்பொறிகளை யொறுத்துப் புரியும் தவத்தாற் பெறலாகும் பயனைப் பெறலாமென்பது கருத்து. இதனால், அரசு புரியவேண்டிய வகை உணர்த்தப்பட்டது. கோ ளரும்-கொள்ளுமென்பதன்விகாரம். வாளின் மேல்வரும் மாதவம் என்பதற்கு-வாளைக்கொண்டு ஆள்வதைக் காட்டிலும் சிறந்துள்ளதாகித் தவமென்றுசொல் லத் தக்கதா மென்று உரைத்தலும் ஒன்று. பீ-ம்:—[1]பெரு. [2]கண்டு. [3]நடு நின்று, நடுக்கற, நடுக்குறு, நகைக்குறு. [4]நோன்பராய், நோன்பினி. [5]எய்த ரிது, எயரிது. [6]மன்னனே. (ககஉ)

கரு. உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கு
மிமைப்பி னிட்டமொ ரெட்டை யாணுக்குஞ்
[1]சமைத்த [2]தோள்வலி தாங்கின [3]ராயினு
மமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே.

(இ - ள்.) உமைக்கு நாதற்கும்-பார்வதித்தக் கணவனுகிய சிவபெரு மானுக்கும், ஓங்கு புள் ஊர்திக்கும்-உயர்ந்த கருடவாகனனுகிய திருமாலுக்கும், இமைப்பு இல் நாட்டம் ஓர் எட்டு உடைபானுக்கும்-இமைத்தலில்லாத ஒப்ப ற்ற எட்டுக்கண்களையுடைய பிரமனுக்கும், சமைத்த - உள்ள, தோள் வலி - புஜபலத்தை, தாங்கினர் ஆயின்உம்-பெற்றிருந்தாராயினும், (அம்மன்னவர்), அமைச்சர் சொல் வழி ஆற்றுதல்-மந்திரிகளினது சொற்படி (காரியங்களைச்) செய்தல், ஆற்றல் - (அவர்க்கு வலியைத்தருவதாகும்; (எ - று.)

திரிமூர்த்தியர்போலத் தோள்வலி பெற்றிருப்பாராயினும் அமைச்சர் சொல்வழி மன்னர் நிற்கவேண்டுமென்று இதனாற் கூறப்பட்டது. உமை - உமா: மலைமகளான இவள் இளம்பிராயத்தில் தவஞ்செய்யச் சென்றபோது பெற்றோர்கள் 'உ[அம்ம]! மா[வேண்டா]' என்று கூறியதுபற்றி, இவட்கு இப்பெயர் வந்தது. முகம் நான்காதலால் கண்எட்டாயின. சமைந்த வெனற் பாலது சமைத்த வென வலிந்து நின்றது. அமைச்சர்=அமாத்பர்; ஆலோசனை சொல்லுமாறு அரசனுடைய அருகிலேயிருப்பவரென்று பொருள். ஆற்றலைத்தருவதனை ஆற்றலென்று உபசரித்தார். பி-ம்:—[1]சமைக்கும். [2]தொல்வினை. [3]தாயினும். (ககச)

ககூ. என்பு தோலுடை யார்க்கு [1]மிலார்க்குந் [2]தம்
வன் [3]ப கைப்புலன் மாசற [4]மாய்ப்பதென்
முன்பு [5]நின்றுயர் [6]மூன்றுல கத்தினு
மன்பி [7]னல்லதொ ராக்கமுண் டாகுமோ.

(இ - ள்.) என்பு தோல் உடையார்க்குஉம் - எலும்பையும் தோலையும் உடைய்யவர்களுக்கும் [மனிதர்க்கும்], இலார்க்குஉம்-அவை யில்லாதவர்களுக்கும் [தேவர்க்கும்], தம் வன் பகை புலன் - தமதுவலியசத்துருவாகிய இந்திரியங்களை, மாசுஅற - குற்றமில்லாமல், மாய்ப்பது - நிக்கிரகிப்பது, என் - யாதுபயனைத் தரும்? முன்பு நின்று உயர் - வெகுகாலமாக [அநாதியாக] உயர்ந்து தோன்றுகின்ற, மூன்றுஉலகத்தின்உம் - மூன்றுலோகங்களிலும், அன்பின் அல்லது - அன்பிலைலல்லாமல், ஓர் ஆக்கம் - ஒருசெல்வம், உண்டாகுமோ—? [உண்டாகாது]; (எ - று.)

என்பு, தோல் என்பன - மற்றைத்தாதுக்களுக்கும் உபலக்ஷணம்: அவற்றையுடையார் என்றது-எழுவகைத்தாதுக்களாலமைந்த யாக்கையையுடைய மானுடரை. இலார் என்றது - அத்தன்மைய யாக்கையல்லாத தேவர்களை. யாவராயினும் அன்பி லார்க்கு ஆக்கமில்லை யென்பதாம். அன்பு இல்லாவிடின் ஆக்கமறுமென்பதும், அதுதான் மண்ணுலகத்தோர்க்கு அன்றி மற்றையவுலகத்தோர்க்கும் இன்றியமையாததென்பதுந் தோன்ற 'மூன்றுலகத்தினும்' என்றுங் கூறினர். அன்பால் அருளும், அருளால் அறமும், அறத்தால் நற்கதியும் உளவாதல் பற்றி, அன்பே எல்லாவற்றிற்கும் மூலமென்க. இனி என்புதோலுடையார் என்றதற்கு - காயிலைநின்றுந் தீயிடைநின்றுங் கானிலுறைந்தும் ஐம்புலவாசையை ஆசறவறுத்து உடலைவருத்தி முற்றத்துறந்த முனிவ ரெனவும் பொருள்கொள்ளலாம். முற்றத்துறந்த முனிவர்க்கே அன்பு இன்றியமையா தெனின், மன்னுயிரனைத்துந் தன்னுயிர்போலக் காக்கும் மன்னவர்க்குச் சொல்லவேண்டாதாயிற்று. உடையார்க்கும் இலார்க்கும் மாய்ப்பது - நான்கனுருபு வினைமுதற்பொருளில் வந்தது: "ஒன்று மூன்று நான் காறனு முருபொடு, வருமே வினைமுத லென வகுத்தனரே" என்பது இலக்கணக்கொத்து. பி - ம்:—[1]எவர்க்கும். [2]தன். [3]புலப்பகை.

[4]வாய்ப்பதென், மாய்ப்பதாம், மாய்ப்பரோன். [5]பின்பற்றி, பின்பது, பின்பின்றி. [6]மூவுலகத்தினும். [7]அன்றியோர். (கசஞ)

கள. வையம மன்னுயி [1]ராகவம் மன்னுயி
ருய்ப்பத் தாங்கு முடலன்ன [2]மன்னனுக்
கைப மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ.

(இ - ள்.) வையம் மன் உயிர் ஆக - உலகத்தவர் பெருமை யையுடைய உயிராக, அ மன்உயிர் - அந்த நிறைந்த உயிர்களை, உய்ப தாங்கும் - பிழைக்கும்படி தரிக்கின்ற, உடல் அன்ன மன்னனுக்கு - உடம்பையொத்த அரசனுக்கு, அறம் கடவாது - தருமத்தைத் தவறுமல், அருள் - கருணை, மெய்யின் - உண்மையாக, ஐயம்இன்றி - சந்தேகமில்லாமல், நின்ற பின் - இருந்த பின்பு, வேள்விஉம் வேண்டும் ஓ - யாகமும் வேண்டுமோ ? [வேண்டுவ தில்லை]; (எ - று.)

எனவே, அசுவமேதம் வாஜபேயம் முதலிய யாகங்களாற் பெறும்பயனை, உயிர்கள்மாட்டு அருள் மெய்ம்மையாயிருக்குமாயின் அதுவே தரு மென்ற படி. வையம் - ஆகுபெயர். "தன்னுயி ராமென வுலகிற் றங்கிய, மன்னுயி ரனைத்தையும் புரக்கு மாட்சியான்" என்றது, முதலிரண்டடியில் ஒரு சார் ஒப்பு நோக்கத்தக்கது. அருள் - அருளானது, மெய்யின் - வாய்மையோடு என்று உரைத்து, அருளும் வாய்மையும் இருக்குமாயின், வேறு வேள்விகள் வேண்டா எனக் கூறினுமாம். உயிரைத்தாங்குதல்-காத்தல். உயிரில்லாதவழி உடல்இல்லாதது போலக் குடிகளில்லாதவழி அரசனில்லை யாதலின், உலகை அரசனுக்கு உயிரெனக் கூறினர். வேள்வியும்வேண்டுமோ எனலால், அருள் மெய்யினில்லாதாயின் அருள்கடந்த அம்மன்னவன் எத்துணை வேள்விகளைப் புரிந்தாலும் அவற்றாற் பயனெய்தா னென்பதும் பெறப்படும். நின்றபின் - இல்லாதுவிட்டபின் என்க. பி-ம்:—[1]ஆகவும். [2]மன்னருக்கு. (கசக)

கஎ. [1]இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
[2]வினையன் றூயன் விழுமியன் வென்றிய
னினையு நீதி நெறிகட வானெனி
லனைய மன்னற் கழிவு[3]முண் டாங்கொலோ.

(இ - ள்.) (ஒருமன்னவன்),—'இனிய சொல்லினன் - (கேட்பவர்க்கு இனிய) மொழியை யுடையவன்: ஈகையன் - தானத்தையுடையவன்: எண்ணினன் - ஆராய்ச்சியையுடையவன்: வினையன் - முயற்சியையுடையவன்: தூயன் - பரிசுத்தியையுடையவன்: விழுமியன் - சீர்மையையுடையவன்: வென்றியன் - வெற்றியையுடையவன்: நீதி நினையும் - நியாயமுறைமையை நினைப்பவன்: நெறி கடவான் - சன்மார்க்கத்தினின்றும் விலகான்,' எனில்-என்றால், அனைய மன்னற்கு - அத்தகைய அரசனுக்கு, அழிவுஉம் உண்டாம் கொல் - கேடும்உண்டாகுமோ [உண்டாகாது]; (எ - று.)

கீழ்ப்பாடல்களில் அன்பும் அருளும் இன்றியமையாவெனக் கூறிய ஆசிரியர் இச்செய்யுளினால் மன்னவர்க்கு இன்சொல்முதலியன வேண்டுமென்கிறார். இனியசொல் - மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல். ஈகையாவது - வறியராய் ஏற்றார்க்கு மாற்றுது கொடுத்தல். எண் - தான் செய்யும் வினைகளை யாராய்ந்துசெய்யுந்திறம்; வலியறிதல், காலமறிதல், இடனறிதல் முதலியன இதனுளடங்கும். வினையாவது - மேற்சேறன்முதல் தேறலீறாய தொழில்; எனவே - இடைவிடாத மெய்ம்முயற்சியுடையனுதல்வேண்டு மென்க. விழுமியன் - விழுமமென்னும் பண்படியாகப் பிறந்த பெயர். விழுமம் என்பது இப்பொருட்டாதல் "விழுமஞ் சீர்மையுஞ் சிறப்புமிடும்பையும்" என்றதனுலுணர்க. நினையும் நீதி நெறியைக் கடவான் எனவுங் கூட்டிப்பொருள் கூறலாம். இனியசொல் முதலியன உடையனேனும், நீதியிறந்தவழி நிந்தையும் கேடு முண்டாதல்பற்றி 'நெறிகடவானெனில்' என்றார். பீ-ம்:—[1]இனைய. [2]வினையுந், வினையின். [3]உண்டாகுமே, உண்டாகுமோ. (ககஎ)

ககூ. சீல மல்லன நீக்கிச் செம்பொற்றுலைத்
[1]தால [2]மன்ன [3]தனிநிலை தாங்கிய
ஞால [4]மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாகுமோ.

(இ-ள்.) சீலம் அல்லன நீக்கி-நல்லொழுக்கத்தின்பாற் படாதனவகளை யகற்றி, செம் பொன் துலை தாலம் அன்ன - சிவந்த பொன்னை நிறுக்கின்ற துலைநாவை யொத்த, தனி - ஒப்பற்ற, நிலை - நடுவுநிலைமையை, தாங்கிய - உடைய, ஞாலம் மன்னற்கு-உலகத்தரசனுக்கு, நல்லவர்-நன்மையையுடைய அமைச்சரின், நோக்கிய-நோக்கம்பெற்ற, காலம் அல்லது-பொழுது அல்லாமல், கண்உம்-வேறேகண்ணும், உண்டாகுமோ-? [இல்லை]; (எ - று.)

நடுவுநிலைமையாவது-பகை, நொதுமல், நண்பு என்னும் மூன்றுபகுதியினிடத்தும் அறத்தின்வழுவாது ஒப்பநிற்கும் நிலைமை; சமன்செய்தலும், சீர்தூக்குதலும், அமைதலும், ஒருபாற்கோடாமையும், ஐயக்கிடப்பொருளை யுணர்த்தலும், மெய்ந்நடுநிலையும், மிகினும்குறையினும் நில்லாதாகலும் முதலியபற்றி, நடுவுநிலைமைக்குத் துலாக்கோல் உவமையாக்கப்பட்டது; "சமன்செய்து சீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற், கோடாமைசான்றோர்க்கணி" என்றார் நாயனாரும். கரும்பொன், வெண்பொன் முதலிய நிறுக்குங்கால் தாலஞ் சிறிதுகோடினும் அதனன்வரும் ஊதியக்குறைவு சிறிதேயாதலின், இது மிகப் பெரிதெனத் தோன்ற, 'செம்பொற்றுலைத்தாலம்'என்றார். துலை - துலாவென்னும் வடமொழித்திரிபு. தாலம்-தாலு என்னும் வடமொழிச்சிதைவு. காலம்-வலிமையினால் மிகுந்தவனுப்ப் பகைமேற்சேறலுற்ற அரசனுக்கு அச்செலவுக்கு ஏற்றகாலம்.வெற்றியைக்காண்டற்குக் கருவியாகலின், அது கண்ணெனப்பட்டது. இது, சிலபிரதிகளில் உஉ-ஆவது பாடலாக வுள்ளது. பீ-ம்:—[1]தாலு. [2]என்னத். [3]தனிநிலம், தாணியைத். [4]மன்னர்க்கு. ()

உ0. [1]ஓர்வி னல்வினை [2]யூற்றத்தி னுருரை
[3]பேர்வி றெல்வித்தி பெற்றுள [4]தென்றோ
[5]தீர்வி லன்புசெ லுத்தலிற் செவ்வியோ
ராரவ [6]மன்னவற் [7]காயுத மாவதே.

(இ - ள்.)'ஓர்வு இல் நல் வினை ஊற்றத்தினுர்-ஆராய்தற்குஇடமில்லாத நல்லதொழில்களாகிய பற்றுக்கோட்டையுடைய முனிவருடைய, உரை - வார்த்தையை, பேர்வு இல் தொல் விதி (தன்னிலையினின்று) பெயர்தலில் லாத பழைய ஊழும், பெற்று உளது-(அடைந்து)(அங்ஙனமே)நடக்கின்றது, என்று-என்றெண்ணி, தீர்வு இல் அன்பு-நீங்குதலில்லாத பக்தியை, செலுத் தலின்-(அவரிடம்) செய்வதனால், செவ்வியோர் ஆர்வம்-நன்மையையுடைய அப்பெரியோரதன்பு, அன்னவற்கு-அவ்வாறு பக்திசெலுத்துகின்றவனுக்கு; ஆயுதம் ஆவதே - படைக்கலமாகும்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

தன்னுபதேசத்தை முடிக்கப்போவதனால், முனிவன்,இதனால் இதனைக் கொள்ளவேண்டுமென்றும், அடுத்தசெய்யுளால் தள்ளவேண்டியது .இது வென்றுந் தொகுத்துக் கூறுகிறான். ஆர்வமன்னவற் காயுதமாவதே - முற்று மோனை. ஆர்வம் மன்னவற்கு எனவும்பிரிக்கலாம். அவரருள் பகைவரை யழித்தற்குக் கருவியாய்நிற்றலால், 'ஆயுதமாவது' என்றார். பி-ம்:—[1]ஓரின், ஓரும். [2]ஊற்றத்தினால். [3]சோர்விறெல்வினை. [4]அன்று. [5]தீரில். [6]மன்னவர் க்கு. [7]அற்புதம். (ககூ)

உக. தூம [1]கேது [2]புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே.

(இ - ள்.) புவிக்கு-பூமியில், தூமகேது என - வால்நட்சத்திரம் போல, தோன்றிய-உண்டான, வாமம் மேகலை மங்கையரால்-அழகிய மேகலாபரணத் தையுடைய மகளிரால், வரும்—, காமம்-காமநோய், இல்லை எனில் - இல்லை யாதலால், கடுங் கேடு எனும்-மிக்ககெடுதியென்கிற, நாமம்-பெயரும், இல்லை ; நரகம்உம் இல்லை - நரகத்துன்பமும் இல்லை; (எ - று.)

கீழ் அரசர்க்குஅன்பு இன்றியமையாது எனக்கூறியதனால்,அந்த அன்பு மாதராரிடத்து மிகுதியாகக் கொள்ளலாகாதென இதனால் மறுத்தவாறு. தூம கேது தோன்றுமாயின், பின் பெருங்கேடு விளைதற்கு அது ஓர் உத்பாதமாகு மென்பது நூற்றுணிபு. இங்குக் காமமென்பது - பெண்ணாசையின் மிகுதி யை. அதனால் விளையுங்கேட்டினும் பெருங்கேடு பிறிதில்லை யென்றற்கு, 'கடுங்கேடு' என்றான். காமமிகுதி அரசர்க்கு அநர்த்தமென்பதனைச் சச் சந்தன்முதலானார் சரித்திரத்துங்காண்க. மங்கை-வேட்கைபிறந்தபருவத்துப்

பெயர்; மடந்தை, அரிவை, தெரிவை என்பனவும் இவ்வாறே. கர்மத்தால் வருவன நேரேபகையல்லவாயினும், ஆக்கஞ்சிதைத்தல் அழிவுதலைத்தருதல் என்னுந் தொழில்களாற் பகையோடொத்தலின் இவ்வாறு கூறினர். மேற் கிட்கிந்தாகாண்டத்தில் "மங்கையர்பொருட்டா லெய்து மாந்தர்க்கு மரண மென்றல், சங்கையின்றுணர்தி வாலிசெய்கையாற் சாலு மின்னு, மக்கவர் திறத்திலுனே யல்லலும் பழியுமாத, லெங்களிற் காண்டியன்றே யிதற்குவே றேதியாதோ" என்பதும் இதுபற்றி யென்க. நாம் - அச்சமாயின், அம் - அசை. நாமம் என்னும் எச்சவும்மையாற் றழுவப்படும் எஞ்சுபொருட் கிளவி உம்மையில்சொல்லாதலால், அவ்வும்மையில்சொல் அவ்வும்மைத்தொ டர்க்குப் பின்சொல்லாது முன்சொல்லப்பட்டது. பி-ம்:—[1]ஏது. [2]தழற்கு, கனற்கு, புகழ்க்கு. (கஉ0)

உஉ.—உபதேசித்தபிறகு வசிட்டமுனிவன் ஸ்ரீராமனோடு ஸ்ரீமந்நாராயணனது கோயிலுக்குச் செல்லுதல்.

ஏனை நீதி [1]யினியன [2]வையகப்
போன கற்கு விளம்பிப் [3]புலன்கொளீஇ
யான வன்னெடு மாயிர [4]மெளலியான்
ரூன நண்ணினன் றத்துவ [5]நண்ணினான்.

(இ-ள்.) தத்துவம் நண்ணினான்-தத்துவத்தையறிந்த வசிட்டமுனிவன்,-இனியன - இனிமையைத் தருவனவாகிய, ஏனை நீதி - இவைபோன்ற பல நீதிகளை, வையகம் போனகற்கு - உலகங்களை யுண்டியாகக்கொண்ட இராமனுக்கு, விளம்பி—, புலன் கொளீஇ-அறிவு கொளுத்தி, ஆனவன்னெடுமம்-அவனுடன், ஆயிரம்மௌலியான்-திருமாலினது, தானம்-கோயிலை, நண்ணினன் - அடைந்தான்; (எ - று.)

ஊழியிறுதியில் உலகமுண்டபெருவாயனது ஓரவதாரமாதலால், ஸ்ரீராமனை 'வையகப்போனகன்' என்றார். "ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ:[புருஷனென்னத்தக்க கடவுள் ஆயிரஞ்சிரசைக் கொண்டவன்]" என்றுவேதங் கூறுவதற்கு ஏற்ப 'ஆயிர மௌலியான்' என்றார். ஆயிரமென்றது - மிகப்பலவாய எண்ணிற்கு ஒன்றுகாட்டியவாறு. தத்துவநண்ணுதல் - தத்துவஞானம்: அஃதாவது-பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் ஐயந்திரிபுகளன்றி உண்மையாலுணர்தல்;இதனை மெய்யுணர்வென்பர்.இங்கு ஆயிரமௌலியான் என்றது, இக்ஷ்வாகுசக்ரவர்த்தி பிணியரங்கவினையகலப் பெருங்காலந் தவம் பேணி மலரயனை வழிபட்டுக் கொணர்ந்த பணியரங்கப்பெரும்பாயற் பரஞ்சுடராகிய அணியரங்கநாதனை.ஸ்ரீராமன் திருமாலாக இருந்தும் அவன்கொண்ட வேஷத்திற்குஏற்ப உபதேசித்தனனேயன்றி இராமன் பரம்பொருளென்பதை யுணராதவ னல்லன் வசிட்டமுனிவ னென்பார்'தத்துவ நண்ணினான் வையகப் போனகற்கு விளம்பிப்புலன் கொளீஇ' என்றார். பி ம்:—[1]இனையன, இனையவும். [2]வையகம். [3]புலங்கொளீஇ,பொலங்கொளி,பொலங்குரு.[4]மௌலியான். [5]நண்ணுவான் (கஉக)

உக.--வசிட்டன் இராமனுக்குப் பட்டாபிஷேகத்தின் முன்னுட் செய்யவேண்டிய சடங்கு செய்வித்தல்.

[1]நண்ணி நாகணை வள்ளலை நான்மறைப்
புண்ணி யப்புன லாட்டிப் [2]புலமையோ
ரெண்ணு நல்வினை முற்றுவித் தேற்றினன்
[3]வெண்ணி றத்த தருப்பை விரித்தரோ.

(இ - ள்.) நாகம் அணை வள்ளலை நண்ணி-பாம்பணையிற்பள்ளிகொள்ளும் அரங்கநாதனைச் சேர்ந்து சேவித்து, (அக்கடவுளின்முன் இராமனை), நான் மறை - நான்குவேதங்களால் மந்திரிக்கப்பட்ட, புண்ணியம்புனல் - பரிசுத்த மான தீர்த்தத்தால், ஆட்டி-ஸ்நானஞ் செய்வித்து, புலமையோர் எண்ணும் - அறிவையுடையவர் (அரசனுக்கென்று) எண்ணுகின்ற, நல் வினை - நல்ல சடங்குகளை, முற்றுவித்து-முடியச்செய்து, வெள் நிறத்த தருப்பை விரித்து-வெண்மையாகிய நிறத்தையுடையனவாகிய தருப்பைகளைப் பரப்பி, ஏற்றினன் - அவற்றில் ஏறப்பண்ணினனன், (வசிட்டன்); (எ - று.)

ஸ்ரீமந்நாராயணனது சன்னிதியில் இராமபிரானை நீராட்டுவித்து; பட்டங்கட்டுவோர்க்கு முன்னுள் செய்யவேண்டிய காப்புநாண் முதலிய சடங்குகளையும் அப்பிரானுக்குச் செய்வித்து அவ்விராமனை உபவாசமிருக்கும்படி தருப்பாசனத்தி லிருக்கச் சொல்லினன் வசிட்டமுனிவ னென்க. நாகணை வள்ளலை - இராமபிரானை யென்று உரைத்தலும் ஒன்று. நாகணை - விகாரம். தருப்பை தர்ப்பம். இனி, இச்செய்யுளுக்கு-நாகணை வள்ளலைநண்ணி, வெண் ணிறத்த தருப்பைவிரித்து, அவற்றில் அவனை நான்மறைப் புண்ணியப்புன லாட்டிப் புலமையோரெண்ணும் நல்வினையாகிய சோடசோபசாரங்களையும் முடியச்செய்து விளக்கேற்றினனன் என்பது பொருளாக உரைப்பாருமுளர். புலமையோர்-ரவ்வீற்றயலாகாரமோவாயிற்று. இச்செய்யுள் அந்தாதித் தொடையாக வந்தது. பி-ம்:—[1]நண்ணினர்களவ். [2]புலமையோடு. [3]வெண்ணி றத் தருப்பை விரித்தானரோ. (கூஉ)

வேறு.

உசு.—தான் முன்னுட் சடங்கு செய்வித்ததை முனிவன் அறிவிக்க, பின் தசரதன் நகரை யலங்கரிக்க ஏவுதல்.

[1]ஏற்றிட வாண்டகை யினி[2]தி ருந்துழி
நூற்றட [3]மார்பனு நொய்தி [4]னெய்தப்போ
[5]யாற்றல்சா [6]லரசனுக் [7]கறிவித் தானவன்
சாற்றுக நகரணி சமைக்க வென்றனன்.

(இ-ள்.) ஏற்றிட-(வசிட்டன் தருப்பாசனத்தில்) இருக்கச்செய்ய, ஆண் தகை - இராமன், இனிது இருந்த உழி - இனிமையாகவிருந்தகாலத்தில்,—நூல் தட மார்பன்உம் முப்புரிநூலைத் தரித்த அகன்றமார்பினையுடைய வசிட்

டனும், நொய்தின் எய்த போய்-விரைவாக அடையச்சென்று, ஆற்றல் சால் அரசனுக்கு-வலிமை மிகுந்த சக்கரவர்த்திக்கு;அறிவித்தான்-(அதனைத்) தெரிவித்தான்; அவன்-அம்மன்னவன்; நகர் அணி சமைக்க-பட்டணத்தை அலங்காரஞ்செய்யும்படி, சாற்றுக - பறையறைவிப்பீராக, என்றனன்-;(எ - று.)

கீழ்ச் செய்யுளிற் கூறியவாறு முன்னுட் செய்யவேண்டிய சடங்குகளை முற்றுவித்து அவனை உபவாசமிருக்குமாறு சொல்லித் தருப்பாசனத்தில் வீற்றிருக்கச் செய்தபின், வசிட்டமுனிவன் அதனைத் தசரதமன்னவனுக்குத் தெரிவிக்க,தசரதன் நகரத்தை யலங்கரிக்குமாறு பறைசாற்ற ஏவினனென்க. இருந்துழி - விகாரம். பி - மீ:—[1]ஏற்றிய. [2]இருந்தபினாற்றெரடர். [3]மார்பினன். [4]எய்தி. [5]ஆற்றலின். [6]மன்னவற்கு. [7]உணர்த்தினன். (கஉங)

ஒரு.—வள்ளுவர் நாளை இராமபட்டாபிஷேகமென்று பறையறைந்து தெரிவித்தல்.

[1]ஏவின [2]வள்ளுவ ரிராம னுளைபெ
பூமகள் கொழுநனுப்பப் புனையு [3]மௌலியிக்
[4]கோநக ரணிகெனக் கொட்டும் [5]பேரியந்
தேவருங் [6]களிகொளத் [7]திரிந்து சாற்றினர்.

(இ - ள்.) ஏவின வள்ளுவர் - (அரசனால்) ஏவப்பட்ட வள்ளுவர்கள், 'இராமன்—, நாளை—, பூமகள் கொழுநன் ஆய் - நிலமகளுக்கு இறைவனாக, மௌலி புனையும் - முடி தரிக்கப் போகிறான்: (ஆதலால்), இக் கோநகர் - இந்தச் சிறந்தநகரத்தை, அணிக - அலங்கரிப்பீராக,' என - என்று சொல்லி, கொட்டும் - முழக்குகின்ற, பேரியம் - முரசத்தை, தேவர்உம் களிகொள - தேவர்களும் ஆநந்தத்தையடையும்படி, திரிந்து - (நாற்புறமும்) ஓடி, சாற்றினர் - அறைந்தார்கள்; (எ - று.)

வள்ளுவர் பறையறைந்து இராமபட்டாபிஷேகத்தைத் தெரிவிக்க, அதனையுணர்ந்து இவ்வுலகத்தவரே யன்றி விண்ணுலகத்தவரும் களிகொள்வாராயின ரென்பதாம். இராமன் அடவிசென்று அரக்கர்குலம் அழிக்குஞ் சமயம் அணுகியதனையுணர்ந்து தேவர் களிகொள்ள லாயின ரென்றற்கு, 'தேவரும் களிகொள' என்றாரென்னலாம். வள்ளுவர் - பறையறைவோர். ஆய்-ஆக: எச்சத்திரிபு. பேரியம்-பேரிகா என்றவடசொல்லின் விகாரம்:பெருமையென்று பிரித்து உரைத்தலும் ஒன்று. தேவரும் என்ற எச்சவும்மை முனிவர்முதலிய கணங்களையும் உணர்த்துகின்றது; உயர்வு சிறப்புமாம். இவ்வுலகத்தோர் யாவருந் தவஞ்செய்து எறுவா ஞாயிற்கின்ற அவ்வுலகத்தோரும் இழிவதற்கு அருத்திபுரிகின்ற நகர மாதலால், அயோத்தியை 'கோநகர்' என்றார். பி-மீ:—[1]ஏவிய, ஏவலின். [2]வள்ளுவன். [3]மௌலி. [4]கோவணிநகர். [5]பல்லியந்,பேரியத். [6]மருள். [7]திரிதந்தெற்றினர்,திரிந்துசாற்றினன். (கஉச)

உசு.—நகரத்தவர்க்கு வள்ளுவர்சொல் மகிழ்ச்சியளித்தல்.

கவியமை கீர்த்தியக் காளை நாளையே
புவியமை [1]மணிமுடி புனையு மென்றசெ?ல்
[2]செவ்யமை [3]நுகர்ச்சிய தெனினுந் தேவர்த
மவியமு [4]தானதந் நகரு ளார்க்கெலாம்.

(இ - ள்.) 'கவி அமை கீர்த்தி அ காளை - பாடல்களிலமைத்துப் பாடப் படுகின்ற புகழையுடைய அவ்விராமன், நாளை புவி அமை மணி முடி புனையும் - நாளைக்கே இராச்சியபாரத்துக்குரிய அரதனகிரீடத்தைச் சூடிக்கொள்வான்,' என்ற - என்று (பறையறைந்து) தெரிவித்த, சொல் - வார்த்தை, செவி அமை நுகர்ச்சியது எனின்உம் - காதுகளுக்கு இனிய இன்பத்தையுடையதாயினும், அ நகர் உளார்க்கு எலாம் - அந்தப்பட்டணத்திலுள்ளவர்களுக்கெல்லாம், தேவர்தம் அவி அமுது ஆனது - தேவர்களுடைய அவியுணவையும் அமிருதத்தையும் ஒத்திருந்தது; (எ - று.)

செவியிலுல் நுகரும் நுகர்ச்சியினும் நாவில்நுகரும் நுகர்ச்சி மிக்க இன்பந்தருவ தாதலின், 'தேவர்தம் அவியமுதானது' என்றார். எனவே, அச்சொல்லைக் கேட்டவுடனே அந்நகரத்தாரனைவரும் தேவர்கள் அவிசைப் பெற்றாற்போலவும் அமிருதபானம்பண்ணினாற்போலவும் பேரானந்தமடைந்தனரென்றதாயிற்று. கவி - ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்பன. புகழ்தான் உரையும் பாட்டு மென இருவகைப்படும்: அவற்றுள், 'கவியமை கீர்த்தி' எனப் புலவர்க்கே யுரிய செய்யுளையே யெடுத்தா ராயினும், இனம் பற்றி எல்லார்க்கு மூரிய வழக்குங் கொள்ளப்படும்; ஆகவே, உரையமை கீர்த்தி யென்பதூஉம் பெற்றாம். காளை - உவமவாகுபெயர். வமிசபரம்பரையாய் வருதல்பற்றி, 'புவியமை முடி' என்றார். அவி, அமுது - ஹவிஸ், அம்ருதம் என்னும் வடமொழிச்சிதைவுகள். அவி - தேவர்க்கு மந்திரபூர்வகமாகத் தீயிற்கொடுப்பது. அமுது - திருமாலாற் பாற்கடலைக் கடைந்தெடுத்துக் கொடுக்கப்பட்டது. அவியமுது - உம்மைத்தொகை. பி - மீ:—[1]நெடுமுடி. [2]செவியுற. [3]நுகர்ச்சிய. [4]ஆன, அன்ன. (கஉரு)

உஎ.—நகரத்தவரின் பெருங்களிப்புச்செயல்.

ஆர்த்தனர் களித்தன ராடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் [1]சிலிர்த்து மெய்ம்மயிர்
[2]போர்த்தவர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தனர் [3]நீணிதி சொல்லி னூர்க்கெலாம்.

(இ - ள்.) (அச்சொல் அமுதம்போன்றிருந்ததனால் அதனைப்பருகிய அந்நகரத்துமாந்தர்),—ஆர்த்தனர்-ஆரவாரித்தனர்; களித்தனர் - ஆநந்தித்தனர்; ஆடி பாடினர் - கூத்தாடுதலும் பாட்டுப்பாடுதலுஞ் செய்தனர்; வேர்த்தனர்-உடல் வியர்த்தனர்; தடித்தனர் - (ஆநந்தத்தால் உடல்) பூரித்தனர்; மெய் -

உடம்பில், மயிர் சிலிர்த்து போர்த்தனர்-மயிர்க்கூச்சுக்கொண்டு மூடப்பெற்றனர்; மன்னனை-அரசனை, புகழ்ந்து - துதித்து; வாழ்த்தினர்—; சொல்லினர்க்கு எலாம் - (இம்மங்கலத்தைச்) சொல்லினவர் யாவர்க்கும், நீள் நிதி - மிகுந்த திரவியத்தை, தூர்த்தனர் - நிரப்பினர்கள்; (எ - று.)

அமிருதபானஞ்செய்ததனால் அவர்கள் மெய்ம்மறந்து இவ்வாறுயின ரென்க. இது-தன்மைநவிற்சியணி. மெய்-மங்கலவழக்கு. எல்லாமென்பது-இருதிணைக்கும்பொது. இச்செய்யுள் ஒரு பிரதியில் இல்லை. பி-ம்:-[1]சிலிர்த்த மெய்யினர், சிலிர்த்த மெய்ம்மயிர். [2]போர்த்தொழில். [3]இருநிதி. (கஉசு)

உஅ.—மாந்தர் நகரினை யலங்கரித்தல்.

திணிசுட ரிரவியைத் திருத்து [1]மாறுடப்
பணி[2]யிடைப் பள்ளியான் [3]பரந்த மார்பிடை
[4]மணியினை வேகடம் வகுக்கு [5]மாறும்போ
லணிநக ரணிந்தன ரருத்தி மாக்களே.

(இ-ள்.) அருத்தி மாக்கள்-அன்பையுடைய அந்நகரத்துமாந்தர்,—திணி சுடர் இரவியை - நெருங்கிய கிரணங்களையுடைய சூரியனை, திருத்தும் ஆறு உம் - சீர்திருத்தலையும், அ பணியிடை பள்ளியான் - அந்த ஆதிசேஷனில் அறிதுயிலமர்ந்த திருமாலினது, பரந்த மார்பிடை - அகன்ற மார்பிலுள்ள, மணியினை-கௌஸ்துபமணியை, வேகடம் வகுக்கும் ஆறுஉம் - சாணைபிடித்தலையும், போல் - போல, அணி நகர்-அழகிய பட்டணத்தை, அணிந்தனர் - அலங்கரித்தார்கள்; (எ - று.)

ஒப்பாரும் மிக்காருமில்லாத மாமாயனுதித்தாலுதலாலும், அவ்வியோத்தியின் [வைகுண்டத்தின்] பெயரைத் தான் பூண்டிருப்பதனாலுமே இயற்கையழகு பெறப்படும்: அவ்வழகிய நகர்க்கு இப்போது செயற்கையழகு செய்தாரென்பதாம்; **உவமையணி.** சந்திராக்கினியர்போலப் பதினாறு எழுகிரணங்களையுடையதாகாமல், அவர்க்குக் கொடுத்து மீளவும் கவர்கின்ற ஆயிரங் கதிர்களையுடைமை தோன்ற, 'திணிசுடரிரவி' என்றார். பணி - பணத்தையுடையது; பணம்-படம். அகரச்சுட்டு, பணியை விசேடித்து நின்றது. திருவீற்றிருக்கு மார்பென்பார் 'பரந்தமார்பு' என்றார். அருத்தி-'அர்த்திக்' என்னும் வடமொழிச்சிதைவு. மாக்கள்-விகாரம். அருத்திமாக்கள் - **கருத்துடையடைகொளி.** பி-ம்:—[1]ஆறுபைப், ஆறுமைப். [2]உடை, அடை. [3]பாரம். [4]மணியுடை. [5]ஆறு. (கஉஎ)

உகூ.—இதுமுதல் "ஏயிந்தெழுசெல்வமும்" (கூஅ) என்னுங்கவியாவும் அந்நகரை அலங்கரித்த சிறப்புக் கூறப்படுகின்றது.

வெள்ளிய கரியன [1]செய்ய வேறுள
கொள்ளைவான் கொடி[2]நிரைக் [3]குழாங்க டோன்றுவ
கள்ளவிழ் கோதையான் செல்வங் காணிய
புள்ளெலாந் [4]திருநகர் புகுந்த [5]போன்றவே.

(இ - ள்.) வெள்ளிய-வெண்ணிறத்தை யுடையனவும், கரியன-கருநிறத்தையுடையனவும், செய்ய - செம்மைநிறத்தை யுடையனவும், வேறுஉள - வேறுநிறங்களை யுடையனவுமாகி, தோன்றுவ-தெரிவனவாகிய, கொள்ளை - மிகுதியையுடைய, வான் - பெரிய, நிரை-வரிசையாகிய, கொடி - துவசங்களின், குழாங்கள்-கூட்டங்கள்;—கள் அவிழ் கோதையான் - தேனிழுகுகின்ற மலர்மாலையையுடைய ஸ்ரீராமனது, செல்வம்-ஐசுவரியத்தை, காணிய-பார்க்கும்பொருட்டு, புள் எலாம்-பறவைகளெல்லாம், திரு நகர்-அழகியபட்டணத்தை, புகுந்த போன்ற - அடைந்தவைபோன்றன; (எ - று.)

இது, பலவகைக்கொடிகள் கட்டப்பட்டவற்றின் வருணனை. புள் பலவேறுநிறமுடையன. புள்ளரசையுர்த்தியாகவுடையவ ரதலின், அவன் செல்வத்தைப் பார்க்க, 'புள்ளெலாம்புகுந்தபோன்ற' என்றார். வேறு-பசுமை, பொன்மைமுதலியன. நிரை - ஒன்றன்கூட்டம். குழாம் - பலவின்கூட்டம். தோன்றுவ-படுத்தலோசையாற் பெயராய் நின்றது. திருவென்பது-கண்டாரால் விரும்பப்படுந்தன்மைநோக்கம்: அழகு; திருமகள்தங்கும் நகரெனினு மமையும்; தற்குறிப்பேற்றவணி. வெள்ளிய கரியன செய்ய-முரண்டோடை. பி-ம்:—[1]சிவந்த. [2]நகர்க். [3]குழாங்கொண்டாடுவ, குழாங்கொண்டோடுவ, குழாங்கொடாடுவ. [4]ஒருவழி. [5]போலுமே. (கஉஅ)

கூ0. மங்கையர் குறங்கென வகுத்த வாழைக
ளங்கவர் கழுத்தெனக் [1]கழுக மார்ந்தன
தங்கொளி முறுவலிற் ரூம [2]நான்றன
[3]கொங்கையி னிரைத்தன [4]கனக கும்பமே.

(இ - ள்.) அங்கு-அந்நகரத்தில், மங்கையர் குறங்கு என-மாதரது தொடைபோல, வாழைகள் - வாழைமரங்கள், வகுத்த-அமைக்கப்பட்டன; அவர் கழுத்து என-அவரது கழுத்துப்போல, கமுகம்-பாக்குமரங்கள், ஆர்ந்தன - நிறைந்தன; தங்கு ஒளி முறுவலின் - (அவரது) நிறைந்த காந்தியையுடைய பல்வரிசைபோல, தாமம் - முத்துமாலைகள், நான்றன - தொங்கின; கொங்கையின்-(அவரது) ஸ்தனங்கள் போல, கனக கும்பம்-பொன்மயமான பூர்ணகும்பங்கள், நிரைத்தன-வரிசையாயமைக்கப்பட்டன; (எ - று.)

இதனால், அந்நகரத்தவர் ஆங்காங்கு வாழைமரங்களையும் கமுகமரங்களையும்கட்டி, முத்துமாலைகள் நாலவிட்டுப் பூர்ணகும்பங்கள் அமைத்தமை கூறப்படுகின்றது. வாழை - திரட்சிக்கும், கமுகம் - வழுவிற்கும் நெய்ப்பிற்கும், தாமம் - வெண்மைக்கும் வரிசைக்கும் உவமை. குறங்குமுதலியன - சாதிப்பெயர். வகுத்த-முற்றுவினை. கமுகம்=க்ரமுகம், வடமொழி. இங்கு உபமானங்களாகிய வாழைமுதலியவற்றை உபமேயங்களாகக்கூறியது - எதிர்நிலையுவமையணி. செய்பவன்வினையாகிய வகுத்தல்முதலியவற்றைச் செயப்படுபொருளின் வினையாகக்கூறியது, செயப்படுபொருளைச் செய்ததுபோலத் தொழிற்படக்கிளத்தலும் வழக்கியன் மரபு ஆதலின். நான்றன, நால் - முதனிலை. பி-ம்:—[1]கழுகுமான்றன, கமுகமான்றன. [2]நான்றென. [3]கொங்கையை நிகர்த்தன. [4]கனகக். (கஉக)

கூக. முதிரொளி [1]யுயிர்த்தன முடுகிக் காலையிற்
கதிரவன் வேறொரு [2]கவின்கொண் டானென
மதிதொட [3]நிவந்தன மகர தோரணம்
புதியன வலர்ந்தன [4]புதவ ராகியே.

(இ - ள்.) மதி தொட நிவந்தன - சந்திரனைத் தீண்டும்படி யுயர்ந்தனவும், புதியன - புதியவையும், மகரதோரணம் அலர்ந்தன - மகரதோரணங்கள் விளங்கப் பெற்றனவுமான, புதவம் ராசி-கோபுரவாயிலிரண்டுங்கள்,—காலையில் கதிரவன் - விடியற்காலத்திலுள்ள இளஞ்சூரியன், முடுகி - விரைந்து, வேறு ஒரு கவின் - முன்னினும்வேறுகிய ஒப்பற்ற அழகை, கொண்டான் என - கொண்டன னென்று சொல்லும்படி, முதிர் ஒளி - மிக்ககாந்தியை, உயிர்த்தன - வீசின; (எ - று.)

இதனால், கோபுரவாயில்கள் விளங்கியமை வருணிக்கப்படுகின்றது. மேன்மேலும் விளங்கின என்பதாம். புதா - கதவு; இச்சொல், குறியதன்கீழ் ஆக் குறுகி அம்முச்சாரியைபெற்று 'புதவம்' என்றாகி, இலக்கணையாற் கதவுகளைக்கொண்ட கோபுரவாயிலைக் காட்டிற்றென்பர்: தோரணவாயிற் கதவுகளின் வருணனை யெனக் கொள்ளினுமாம். புதவு கதவாதலை "கதவு மொரு விகற்பப் புள்ளும் புதவே" என்னும் பிங்கலந்தையாலும் அறிக. மகர தோரணம் - வாயலிற்றூக்குந் தோரணம்: மகரவடிவத்தைத்தாங்கிய கட்டுவாயி லென்றல் பொருந்தும். பி - ம்:—[1]நிகர்த்தன. [2]கவின்கள் காட்டின. [3]நிவந்துயர், நிவந்ததோர். [4]புலவராகியே, புட்பராகியே. (கூ○)

கூஉ. [1]துனியறு செம்மணித் தூண நீறுதோய்
வனிதையோர் [3]கூறினன் வடிவு காட்டின
புனைதுகி [3]லுறைதொறும் [4]பொதிந்து [5]தோன்றின
பனிபொதி கதிரெனப் பவளத் [6]தூண்களே.

(இ - ள்.) துனி அறு செம் மணி தூணம்-குற்றமற்ற சிவந்தரத்தினமயமான கம்பங்கள்,—புனை துகில் உறை தொறும் பொதிந்து - அலங்கரிக்கப்பட்ட வெள்ளைவஸ்திரத்திலுலாகிய உறைகள்தோறும் மறைத்து, நீறுதோய் - திருநீற்றைப் பூசிய, வனிதை ஓர் கூறினன் - பார்வதியையொருபக்கத்திற்கொண்ட சிவபெருமானது, வடிவு - உருவத்தை, காட்டின - ஒத்து விளங்கின; பவளம் தூண்கள் - பவழமயமான கம்பங்கள், (புனைதுகில் உறைதொறும்பொதிந்து), பனி பொதி கதிர் என-(பெய்) பனியில் மறைந்த சூரியனைப்போல, தோன்றின—; (எ - று.)—புனைதுகிலுறைதொறும் பொதிந்து - மத்திமதீபம்.

இதனால், செம்மணித்தூண்களும் பவளத்தூண்களும் உறையோடுவிளங்கியமை வருணிக்கப்படுகின்றது. செம்மணித்தூண்கள் வெள்ளுறைபொதிந்தவை - மேனிமுழுதும் திருநீறுபூசிய சிவபெருமானையும், அங்ஙனம் உறை பொதிந்துள்ள பவளத்தூண்கள் - பனிபொதிகதிரினையும் போலு மென்றார்: தற்குறிப்பேற்றவணி. தூணம் - ஸ்தூண என்னும் வடமொழிச் சிதைவு.

ஓர்கூறு - வாமபாகம். துகில் - வெண்டுகில். உறை - மூடும்உறை. பவளம்-ப்ரவாளம் என்னும் வடமொழிச்சிதைவு. பீ - மீ:—[1]துனியுறு. [2]கூற்றினன். [3]அணி. [4]பொலிந்து. [5]தோன்றுவ. [6]தூணைலாம். (கஙக)

கூகூ. [1]முத்தினின் முழு[2]நில வெறிப்ப மொய்ம்மணிப்
[3]பத்தியி னிளவெயில் பரப்ப நீலத்தின்
[4]றொத்தின மிருள்வரத் தூண்டச் சோதிட
வித்தகர் [5]விரித்தநா [6]ளொத்த வீதியே.

(இ - ள்.) வீதி-(அந்நகரத்துத்) தெருக்கள்,—முத்தினின் முழு நிலவு எறிப்ப - (அலங்கரித்திருக்கும்) முத்துக்களினுல் (ஒருபுறத்தில்) பூரணசந்திர கிரணத்தை வீசுதலாலும், மொய் மணி பத்தியின் - நெருங்கிய (பதுமராக) மணிகளின்வரிசைகளால், இள வெயில் பரப்ப-(ஒருபுறத்தில்) இளஞாயிற்றி னொளியை வீசுதலாலும், நீலத்தின் தொத்து இனம் - நீலமணிகளின் பூங் கொத்துப்போன்ற திரள், இருள் வர தூண்ட - (ஒருபுறத்தில்) அந்தகார முண்டாம்படி தூண்டுதலாலும், சோதிடம் வித்தகர் விரித்த நாள் ஒத்த - சோதிடசாஸ்திரஜ்ஞர்கள் விளங்கச்செய்த தினங்களை யொத்தன; (எ - று.)

முத்து-முக்தா என்னும் வடமொழிச்சிதைவென்பர்.வீதிகள் தமது இரு புறத்துமுள்ள மாளிகைகளிலும் ஆங்காங்குஅமைந்த கட்டுவாயில்களிலும் முத்து பதுமராகம் நீலமணி என்பவற்றுல் அலங்கரிக்கப்பெற்று நிலவு வெயில் இருள் என்ற இவைகளையுண்டாக்குதலால், அவ்வீதியை நாளையொக்குமென வருணித்தார்: இனி, சந்திரன் சுக்கிரன் வெண்ணிறமுடைமையாலும், சூரியன் செவ்வாய் குரு கேது செந்நிறமுடைமையாலும், புதன் ,சனி இராகு கருநிறமுடைமையாலும் சோதிடர் விரித்த நாளொத்த, என்றுரைத்தனர். தற்துறிப்பேற்றவணி. பத்தி-பங்க்தி யென்னும் வடமொழிச்சிதைவு. நீலம் - ஆகுபெயர். நீலத்தின்தொத்து இருளினம்வர எனவுங் கூட்டலாம். பீ-மீ:— [1]முத்தினுன், முத்திடை. [2]நிலாமுளைத்த, நிலாமுளைப்ப. [3]பத்தியால். [4]தொத்திலுல். [5]விதித்த. [6]இயைந்த. இந்தப்பாடல் சிலபிரதிகளில் கூ0 - ஆம் பாடலுக்குப்பின்னே காணப்படுகின்றது. (கஙஉ)

கூசு. ஆடன்மான் றேர்க்குழா மவனி காணிய
[1]வீடெனு முலகின்வீழ் விமானம் போன்றன
வோடை[2]மாக் கடகளி றுதய மால்வரை
தேடருங் கதிரொடுந் திரிவ போன்றவே.

(இ - ள்.) ஆடல் மான் தேர் குழாம் - கூத்தாடுதலையுடைய குதிரைகளைப் பூட்டிய இரதங்களின் சமூகம்,—அவனி காணிய - பூமியைப் பார்க்கும் பொருட்டு, வீடு எனும் உலகின் வீழ் - சுவர்க்கமென்ற உலகத்தினின்றும் இறங்குகின்ற, விமானம் போன்றன - தேவரதங்களை யொத்தன; ஓடை மா கட களிறு - முகபடாத்தையுடைய பெரிய மதயானைகள்,—உதயம் மால் வரை - பெரிய உதய பருவதங்கள், தேடு அரு கதிரொடுஉம் திரிவ-(உவமை) தேடுதற்குஅரிய சூரியனோடும் திரிவனவற்றை, போன்ற - ஒத்தன; (எ-று.)

கீழே வீதியை வருணித்த கவி, இச்செய்யுளினால் அவ்வீதியிற் செல்லு வனவான தேரிலே பூட்டப்பட்டுச் செல்லுங்குதிரைகளையும், முகபடாத்தைக் கொண்டுள்ள மதயானைகளையும் வருணிக்கின்றார். பொற்றேராதலின், பொன்னுலகினின்றும்வீழ்கின்ற விமானத்தை யுவமான மாக்கினர். வீடு - இலக்கணையால், சுவர்க்கத்தைக் காட்டிற்று. இன் - நீக்கம். கடம் - மத்தகமுமாம். உதயமால்வரைகள் தேடருங்கதிரொடுந்திரிதல் - இல்பொருளுவமை. மயூர கதி, மல்லகதி, வாரணகதி, விடபகதி, வியாக்கிரகதி என்னும்ஐங்கதியுமுடை மைபற்றி 'ஆடன்மான்' என்றார்; ஐங்கதியை "விக்கிதம் வற்கிதம்வெல்லு முபகண்ட, மத்திமஞ் சாரியோடைந்து" என்றலு முண்டு. திரிவ - பெயர்.

பி-ம்:—[1]வீடுசேர். [2]ஒண், வெங். (கங-ங)

ங-ரு. வளங்கெழு திருநகர் வைகும் வைகலும்
பளிங்குடை நெடுஞ்சுவ [1]ரடுத்த பத்தியிற்
கிளர்ந்[2]தெரி சுடர்மணி யிருளைக் கீறலாற்
[3]றளர்ந்தில [4]பிரிந்தில [5]சக்ர வாளமே.

(இ - ள்.) வளம் கெழு திரு நகர் - வளப்பம்மிகுந்த அழகிய அந்நகரத் தில், வைகும் - பொருந்திய, பளிங்கு உடை நெடு சுவர் - பளிங்குக்கற்களை யுடைய உயர்ந்த சுவர்களினது, அடுத்த பத்தியில் - சேர்ந்த வரிசைகளில், கிளர்ந்து - நிறைந்து, சுடர் - பிரகாசிக்கின்ற, எரி மணி - பதுமராகங்கள், இருளை கீறலால் - அந்தகாரத்தைப் பிளத்தலால்,—வைகல்உம் - எந்நாளும், சக்ரவாளம் - சக்கரவாகப் பறவைகள், பிரிந்தில - (ஆணும் பெண்ணும்) விட்டுநீங்காதனவாகி, தளர்ந்தில-மனத்தளர்ச்சியின்றி மகிழ்ச்சியுற்றிருந்தன.

பளிக்குச்சுவரிற் பதித்துள்ள பதுமராகக்கற்களி னெளி இருளைப் போக்குவதுபற்றி எப்போதும் பகல்போலவே யிருத்தலால், பகற்பொழு தெல்லாம் ஆணும்பெண்ணுமாயிருக்கும் தன்மையவான சக்கரவாகப் பறவை கள் இரவிலும் பிரியாது மகிழ்ந்திருந்தன வென்றபடி. ஈற்றடியில், 'வளர்ந் தில பிரிந்தில செக்கர்வானமே' என்ற பாடத்திற்கு—செவ்வானம் அந்நகரில் புதிதாகத் தோன்றியனவு மில்லை, நீங்கினவுமில்லை யென்க: இப்பொருளில், பதுமராகத்தின் செந்நிறத்தை வானம் எப்பொழுதும் பெற்றிருந்ததாகக் கூறியது - பிறிதின்தணம்பெறலணி. வளம் - ஆகாரங்களிற்படுவனவும், வய லினுந்தண்டலையினும் விளைவனவுமாம். வைகுஞ் சுவரென இயையும். வைக லும் - முற்றும்மை. பளிங்கு - ஸ்படிகம்: வடமொழிச்சிதைவு. உதயகிரியில் சிந்தூர அருவிவீழ்ந்த சிந்தூராகரத்திற் பிறந்து பதினறு சதுர்யுகம் சிவப் பேறின முழுமாணிக்கம் இருளைக் கெடுக்குமென்பவாதலின், 'மணியிருளைக் கீறலால்' என்றார். பி - ம்:—[1]முத்தின். [2]எழு. [3]தெளிந்தில. [4]பிறிந்தில. [5]சக்கரவாளமே. (கஉச)

நூசு. பூமழை புனன்மழை புதுமென் சுண்ணத்தின்
றூமழை தரளத்தின் [1]ரோமில் வெண்மழை
தாமிழை [2]நெரிதலிற் றகர்ந்த பொன்மழை
மாமழை நிகர்த்தன மாட வீதியே.

(இ - ள்.) மாடம் வீதி-மாளிகைகளையுடைய தெருக்களில், பூ மழை - புஷ்ப வர்ஷமும், புனல் மழை-நீரின் வர்ஷமும், புது மென் சுண்ணத்தின் - புதிய மெல்லிய வாசனைப்பொடியின், தூ மழை - பரிசுத்தமான வர்ஷமும், தோம் இல் வெண் தரளத்தின் மழை-குற்றமற்ற வெள்ளிய முத்துவர்ஷமும், இழை தாம் நெரிதலின் - ஆபரணங்கள் நெருங்குதலால், தகர்ந்த - (அவை) உடைந்து தோன்றிய, பொன் மழை-சுவர்ணங்களின் வர்ஷமும், மா மழை-பெரியமேகவர்ஷத்தை, நிகர்த்தன - ஒத்தன; (எ - று.)

அந்நகரத்தவர் நீர்தெளித்து மலர்களையும் சுண்ணங்களையும் முத்துப் பவழங்களையுந் தூவி வீதியை யலங்கரித்தன ரென்க. புனல் - பனிநீருமாம். இராமபிரான் கானகஞ்சென்று ராவணசங்காரஞ் செய்வானென்ற மகிழ்ச்சியால் தேவர்கள் கற்பகமலர்மாரி பொழிந்தாரெனக் கொள்ளுதலும் உண்டு. சுண்ணத்திற்கு மென்மை-கண்களுக்கினிதாகிய மென்மையும், தன்னைமோந்தார் பிறிது மோவாமல் தடுக்கும் மென்மையும். சுண்ணம் - சூர்ணம்: வட மொழிச்சிதைவு. பொன்னணிகலங்களைப்பூண்ட ஜனங்கள் வீதியில் மிகுதியாகநெருங்கிச் செல்லும்போது அவ்வணிகலங்கள் ஒன்றோடொன்று தாக்கித் தகர்ந்துபொடியாக மழைபோலப் பொற்பொடி யுதிர்கின்ற தென்பது, 'தாமிழை நெரிதலிற்றகர்ந்த பொன் மழை' என்பதன் பொருள். தாம்-அசை.

பி-ம்:—[1]தொழில. [2]நெரித்தலின், நெரிதரத். (கஉடு)

நூஎ. காரொடு தொடர்மதக் களிறு சென்றன
வாரொடு தொடர்கழன் மைந்த ராமெனத்
[1]தாரொடு நடந்தன [2]பிடிக டாழ்கலைத்
தேரொடு [3]நடக்குமத் தெரிணை மானினே.

(இ - ள்.) காரொடு தொடர் மதம் களிறு-மேகத்தையொத்த மதத்தையுடைய யானைகள்,—வாரொடு தொடர் கழல் மைந்தர்ஆம் என-கவசத்தோடு பொருந்திய வீரக்கழலையுடைய வீரர்போல, சென்றன—; பிடிகள் - பெண் யானைகள், தாழ் கலை தேரொடு நடக்கும் அ தெரிணைமானின்-தொங்குகின்ற மேகலையையுடைய அல்குலோடு செல்கின்ற அந்நாட்டுமகளிரைப்போல, தாரொடு - கிண்கிணிமாலையுடன், நடந்தன—; (எ - று.)

விலங்குகளும் இராமபட்டாபிஷேகத்தை யுணர்ந்து குதூகலங்கொண்டு திரிந்தனவென்பதற்காகக் களிறும் பிடியும் உல்லாசமாகநடப்பதைக்கூறினர். களிறு-கம்பீரத்தன்மைக்கும், பிடி-நடைக்கும் உவமம்; இங்கு உபமானங்களை உபமேயங்களாகக் கூறினர்: எதிர்நிலையுவமையணி. காரொடு, ஒடு - உருபு

மயக்கம். தொடர்-உவமவுருபு. யானைக்கும், மேகத்திற்கும்-கருமை, பொதுத் தன்மை. இனி, காவொடுதொடர் மதக்களிறுஎன்பதற்கு-மழைநீரையொத்த மதநீரையுடைய களிறென்றுமாம். வாரொடு தொடர் கழல் - கயிற்றாற் கட்டிய கழல் என்றுமாம். ஆம் - அசை. கலை - மேகலையென்பதன் முதற் குறை. தேர் - உவமவாகுபெயர். தெரிவையென்பது, வேட்கைபிறந்த பருவத்துப்பெயர். பி - ம்:—[1]தாரொடுந்தொடர்ந்தன. [2]பிடிகண்மேகலைத், பிடிகள்தண்கலை. [3]தொடர்ந்தன, நடந்தன. (கஉசு)

கூஉ. ஏய்ந்தெழு செல்வமு மழகு மின்பமுந்
[1]தேய்ந்தில வனையது [2]தெரிகி லாமையா
[3]லாய்ந்தனர் பெருகவு மமர [4]ரிம்பரிற்
போந்தவர் போந்தில மென்னும் புந்தியால்.

(இ-ள்.) ஏய்ந்து எழு செல்வம்உம்-பொருந்தி மேன்மேலும் வளர்கின்ற ஐசுவரியமும், அழகுஉம் - சௌந்தரியமும், இன்பம்உம்-சுகமும், தேய்ந்தில-(பொன்னகரத்தினும் இந்நகரில்) குறைந்திருக்கவில்லை; அனையது தெரிகிலாமையால் - அதனை யறியாமையால், இம்பரில் போந்தவர்-(இராம பட்டாபிஷேகங் காண) இவ்வுலகத்தி லிழிந்து வந்தவராகிய, அமரர்-தேவர், போந்திலம் என்னும் புந்தியால்-(இன்னும் திருவயோத்தி)வந்தோமில்லையே யென்னு மெண்ணத்தால், பெருகஉம் ஆய்ந்தனர் - மிகவும் ஆலோசித்தனர்; (எ - று.)

செல்வம் முதலிய தேய்ந்திலாமையால் தேவர்க்குத் திருவயோத்தி பொன்னகரெனத் தோன்ற, மயங்கின ரென்பது கருத்து. பொன்னகரம் பொன்நிருந்தது, இந்நகரமென்பதாம். இச்செய்யுளில் செல்வம்முதலியவை சுவர்க்கலோகத்தோடொப்ப இவ்வயோத்திமாநகரிலும் சுருங்காது நிரம்பியிருத்தல் பற்றி, ஒப்புமையால், வானவர் சுவர்க்கத்திற்கும் இந்த அயோத்திக்குமுள்ள வேறுபாட்டையுணராமல் இங்குவந்தும் தம்நகரத்திலிருந்து இன்னும் வந்துசேரவில்லையே யெனக் கருதினரெனக்கூறிய இது - மறைவணியாம்: இதனை வடநூலார் மீலிதாலங்காரமென்பர். பி-ம்:—[1]தேய்ந்திலா, தேய்ந்திலர். [2]தெரிந்திலாமையால், தெரிகலாமையின், தெரிக்கிலாமையின். [3]ஆய்ந்துணர், ஆய்ந்தன. [4]உம்பரில். (கஉவ)

கஉ.—நகரம் அலங்கரிக்கப்படுதலைக் கூனி காணுதல்.

அந்நக [1]ரணிவுறு மமலை வானவர்
பொன்னக [2]ரியல்பெனப் பொலியு [3]மெல்லையி
லின்னல்செ யிராவண னிழைத்த [4]தீமைபோற்
றுன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.

(இ - ள்.) அ நகர் - அவ்வயோத்திமாநகரத்தை, அணிவுறும்-அலங்கரிக்கின்ற, அமலை-பேராரவாரத்தால்,—வானவர் பொன் நகர் இயல்பு என-தேவலோகத்தினதுதன்மைபோல, பொலியும் எல்லையில் - (அந்நகர்) விளங்குங் காலத்தில்,—இன்னல் செய் - (எல்லாவுலகத்துக்கும்) துன்பத்தைச் செய்

கின்ற, இராவணன் - தசமுகன், இழைத்த - (முற்பிறப்பிற்) செய்த, தீமை போல்-தீவினை(இப்பிறப்பில் ஒருருவத்தை யெடுத்து வந்தது)போல, துன்ன அரு கொடு மனம் கூனி-(பிறராற்) பெறுதற்கரிய கொடுமையையுற்ற மனத் தையுடைய மந்தரை, தோன்றினள் - வெளிப்பட்டுப்பார்த்தாள்; (எ - று.)

மந்தரையென்று பேருள்ள கூனி, அரசமாளிகையின் உபரிகைமீது ஏறி நகரம் அலங்கரிக்கப்படுவதையும் யாவருங் குதூகலத்துட னிருப்பதையும் கண்டு, தன்னருகேயிருந்த இராமனது செவிலித்தாயைநோக்கி 'இராமனது தாய் செல்வத்தை மிகுதியாகக் கொடுப்பதற்கும் ஜநங்கள் குதூகலமாயிருப் பதற்கும் நகரம் அலங்கரிக்கப்படுவதற்கும் யாது காரணம்?' என்றுவினவி, அவளால் இராமபட்டாபிஷேகத்தை யுணர்ந்தா ளென்று முதனூல்கூறும். இப்பொழுது மந்தரை செய்யுஞ் சூழ்ச்சியால் இராமன் நாட்டைவிட்டுக் காட்டையடைந்து இராவணனைச் சங்கரிப்பதனால் 'இராவணனிழைத்த தீமைபோல்' என்றார். ஒப்புயர்வில்லாத கொடுமனமென்பார் 'துன்னருங் கொடுமனம்' என்றார். இனி, கிட்டி நட்புக்கொள்ளுதற்குத்தகாத கொடு மனத்தையுடைய கூனி என்றுமாம்: நாமத்தாலும், ரூபத்தாலும் கூனியாத லன்று மனத்தாலுங் கூனி யென்பதாம்; கூன் - வளைவு; "கூனுலாவிய மட்ந் தை" என்றார் பெரியாரும். இராமனது பட்டாபிஷேகத்தைக் கெடுப்பதற்கு எங்கிருந்தோ இந்தகூனிவந்தாளே என்ற வெறுப்பினால், கவி, 'கூனி தோன்றினள்' என்கிறார். இராமபிரான் இராவணனைத் தொலைப்பதற்காகக் கைகேயிக்கும் ஸ்ரீராமனிடத்து மனமாறுபாடு உண்டாகுமாறு தேவதைகளே அவளை யனுப்பினார்களாகையால், அந்தத் தேவரகசியத்தை மனத்துட் கொண்டு 'கூனி தோன்றினள்' என்றருமாம். அமலையால் தோன்றி னளென்க. ;ராவணன் - கூவினவன், கூச்சலிடச்செய்தவன்; கைலாசமலை யின்கீழ்க் கையகப்பட்டுக் கொண்டபோது பேரரவமிட்டானுதலாலும், அதனாற் சகமெல்லாங் கூச்சலிடும்படியான தாதலாலும், அதுமுதல் இவ னுக்கு இப்பெயர் வழங்கிற்று என்றும், விச்சிரவசின்மகனென்னும் பொரு ளில் ஆதேசம்வந்து ராவணனென்றாயிற்று என்றும் இப்பெயர்க்குக் கார ணங் கூறுவர். பி-மீ:—[1]அணியுறுமமலை, அணியுமவ்வமலை. [2]இதுவென. [3]எல்லையின், காலையில். [4]தீமையாற், தீமையிற். (கஉஅ)

சுo.—இதுமுதல் மூன்றுகவிகள் -- ஒருதொடர்: கூனி தடுஞ்சினங்கொண்டு கைகேயி படுத்திருக்கும் இடத்தைச்சேர்தல்.

தோன்றிய கூனியுந் துடிக்கு நெஞ்சினை
ளுன்றிய வெகுளியா [1]ளுலைக்கு முள்ளத்தாள்
கான்றெரி நயனத்தாள் [2]கலிக்குஞ் சொல்லிணை
மூன்[3]றுல கினுக்குமோ [4]ரிடுக்கண் மூட்டுவாள்.

(இ - ள்.) தோன்றிய கூனியும்-அங்ஙனம் வெளிப்பட்டு(நகர் அலங்கரிக் கப்படுவது)கண்ட கூனியும்,—(இராமபட்டாபிஷேகத்தை யுணர்ந்து),துடிக் கும் நெஞ்சினள்-(கோபத்தால்)துடிக்கின்ற மனத்தையுடையவளும்,ஊன்றிய

வெகுளியாள் - நிலைநின்ற கோபமுடையவளும், உலைக்கும் உள்ளத்தாள்- வேதனைப்படுகின்ற மனமுடையவளும், எரி கான்ற நயனத்தாள் - தீயைக் கக்குகின்ற கண்களையுடையவளும், கலிக்கும் சொல்லினள் - தடுமாறுகின்ற பேச்சையுடையவளும், மூன்று உலகினுக்குமும்—, ஓர் இடுக்கண் - ஒப்பற்ற துன்பத்தை, மூட்டுவாள் - செய்யப்போகின்றவளும்;—(எ - று.)

யாவரும் மகிழ்ச்சியோடிருக்கையில், கூனி இராமபட்டாபிஷேகத்தை யுணர்ந்து பொறுமையால் நெஞ்சுதுடிக்க மனக்கொதிப்பால் மிகவருந்திக் கண்களில் தீப்பொறி பறக்க உரைதடுமாற,மூன்றுலகிற்கும் பெருந்துயரத்தை விளைக்குமாறு வழிதேடுவளாயின ளென்க. கலித்தல்-ஸ்கலித்தல். இது கீழ்ச் செய்யுளோடு அந்தாதித்தொடையா னமைந்தது; பின்னுஞ் சிலவிடத்து இது வரும். பி-ம்:—[1]கொதிக்கும், உழைக்கும். [2]கதிக்கும். [3]உலகிற்கும். [4]இறுதி, உறுதி. (கஉக)

சக. தொண்டை வாய்க் [1]கேகயன் றேமுகை [2]கோயின்மேன்
மண்டினுள் வெகுளியின் மடித்த வாயினுள்
பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமி
[3]ழுண்டையுண் டதனைத்தன் னுள்ளத் துள்ளுவாள்.

(இ - ள்.) பண்டை நாள் - முற்காலத்தில், இராகவன் - ஸ்ரீராமனது, பாணி வில் - கையிலுள்ள வில்லினுல், உமிழ் - வெளிப்படுத்தப்பட்ட, உண்டை-மண்திரளை, உண்டதனை-(மேற்) பட்டதனை, தன் உள்ளத்து-தன் மனத்தில், உள்ளுவாள் - நினைத்து, வெகுளியின் - கோபத்தினுல், மடித்த வாயினுள் - மடிக்கப்பட்ட வாயையுடையவளுமாகி,—தொண்டை வாய் கேக யன் றோகை - கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையுடைய கைகேயினது, கோயின்மேல் - மாளிகையில், மண்டினுள் - நெருங்கி,—(எ - று.)—"எய்தி னுள்" என அடுத்த கவியோடு முடியும்.

இராகவன் - இரகுமகாராஜனின் வம்சத்திலவதரித்தவன். ஸ்ரீரா மன்,சிறுவனையிருந்தகாலையில், கையிற்சிறுவில்லும் மண்உணடையுங்கொண்டு குளத்தினருகே விளையாடி வருகையில்,இக்கூனி குடங்கொண்டு நீர்மொண்டு மங்கையர்குழாத்துட் கலந்து நடக்க, இவன் 'தன்வீட்டு வேலைக்காரிதானே இவள்' எனச் சொந்தம்பாராட்டி மண்ணுண்டையை இவள்மே லெவ, அது னுல் இவள்கைநெகிழ்ந்து குடம்வீழ, யாவரும் பெருநகை நகைத்தன ராக, இவள் கடுங்கோபமுற்று அரசன்மைந்தனெதலின் ஒன்றுஞ்செய்ய இயலாது வாளாசென்று தனக்கு வாய்க்குந்தருணத்தை நோக்கிக்கொண்டிருந்தன ளென்பது கதை. இந்த விருத்தாந்தம் மூதனூலாகிய வான்மீகத்தி லில்லை யாகிலும், "கூனகம் புகத்தெறித்த கொற்றவில்லி" என்றும், "கொண்டை கொண்ட கோதைமீது தேனுலாவுகூனிகூ;னுண்டைகொண் டரங்கவோட்டி யுண் மகிழ்ந்த நாதன்" என்றும், "கூனேசிதையவுண்டைவின் னிறத்திற் றெறித்தாய்" என்றும் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்திருக்கின்றனர். தேவர்களாலனுப்பப்பட்டுவந்த அக்கூனிக்கு, இராம

பட்டாபிஷேகத்தைக் கலைப்பதற்கு, அப்பிரான் சிறுபிராயத்திற்செய்த இந்த விளையாட்டுத்தொழில் ஒரு வியாஜமாயிற் றென்க. தொண்டை - முதலாகு பெயர். வாய் - அதரம். தோகை - இருமடியாகுபெயர். பண்டை - ஐயீற்றுடைக்குற்றுகரம். பண்டென்றது - இளமையிலென்றபடி. பி - ம்:—[1]கைகயன். [2]கோயிலின். [3]உண்டையான் மெலிந்ததை. (கசo)

சஉ. நாற்கடற் படுமணி நளினம் [1]பூத்தசதார்
பாற்கடற் படுதிரைப் பவள. வல்லியே
போற்கடைக் [2]கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாடனை விரைவி னெய்தினள்.

(இ - ள்.) நால் கடல் படு மணி - நான்குசமுத்திரங்களிலுமுண்டாகிய ரத்நங்களோடுகூடி, நளினம் - தாமரை, பூத்தது - மலரப்பெற்றதாகிய, ஓர்-ஒப்பற்ற, பால் கடல் - பாற்கடலின், திரை-அலையில், படு - அமைந்த, பவளம் வல்லி போல் - பவழக்கொடிபோல, கடைக்கண் அளி பொழிய - கண்ணின் கடை அருளைச் சொரிய, பொங்கு அணைமேல் கிடந்தாள்தனை - விளங்குகின்ற பரணைமேற் சயனித்துக்கொண்டிருந்த கைகேயியை, விரைவின் எய்தினள் - சீக்கிரமாக அடைந்தாள்; (எ - று.)—ஏ - அசை.

படுக்கையிற் சயனித்திருந்த கைகேயியை மந்தரை கிட்டினளென்க. நளினம் பூத்ததோர் பாற்கடற் படுதிரைப் பவளவல்லி - இல்பொருளுவமை. நாற்கடற்படு மணி என்றது - ஆபரணங்களை. கடலில் மணியுண்டாகு மென்பதனை, ரத்நாகரம் என்னும் அதன்பெயராலு மூணர்க. நாற்கடல் - நான்கு புறத்திலுஞ் சூழ்ந்த கடல். நளினமென்றது - கண், கை, கால், முகமாகிய அவயவங்களை. பாற்கடல் என்றது - பள்ளியை. பவளவல்லி யென்றது - சரீரத்தை. படுக்கை பாற்கடற் படுதிரைபோலிருக்க, கைகேயி பவளக்கொடி போன்றிருந்தன ளென்க. இனி, பாற்கடலிற் படுதிரையிற் றோன்றிய பவளக்கொடி என்றே, தூயகுலத்துத் தோன்றிய கைகேயியைக் கவி கூறினு ரெனினுமாம். "பாற்கடன் முளைத்ததோர் பவளப் பூங்கொடி, போற்சுடர்ந் திலங்கொளிப்பொன்செய்கோதை," "பௌவநீர்ப் பவளக்கொடி போல்பவள்" என்ற சிந்தாமணிப் பகுதிகள் இங்குக் காணத்தக்கன. அளி - அன்பு காரணத்தாற் றோன்றும் அருள். மந்தரையின் தீய உபதேசத்தின் பின்பே கைகேயியின் மனம் மாறுதலால் அதற்குமுன் அருளோடு இருந்தனள் என்பார் 'கடைக்கண்ணளி பொழிய' என்றார். அவளைக் காணும்பொழுதே இவளிடத்து அருளுள்ளதெனத் தெரியுமென்க. இராமனது நாயகத்தன்மையும், இலக்குவனது அடிமைத்திறமும், பரதனது கட்டளை கடவாப்பெருந்தன்மையும், சத்துருக்கனனது அடியார்க்கடிமைசெய் திறமும், ஆஞ்சநேயரின் சிறந்தபக்தியும், மகாராசரின் நட்புத்திறனும், இன்னும் மற்றுமுள்ளோர்களின் மங்கலகுணங்களும் வெளிப்படுகைக்கும், இராவணுதியர்களின் இழிவு தோற்றுகைக்கும், இமையோரிடுக்கண் நீங்குதற்கும், காரணமாய்த் திருமா

லின் ஆதிசங்கற்பத்தோடொக்கநின்று தக்க காலத்தே யுதவினமையின், அக்கருத்தையுட்கொண்டு 'அளிபொழிய' என்றா ரென்னலும் ஒன்று. ஐந் தாயவொன்றும் மும்மூன்றாகப் படுத்த வமளியாதலால், 'பொங்கரணை' என் றார். தன்-அசை. இனி, நாற்கடற் படு மணி பொங்கரணையென்றுங் கூட்ட லாம். படுதிரையென்பதற்கு-ஆற்றொழுக்காக "படுதிரைவையம்" என்புழிப் போல ஒலிக்குந் திரை யென்னவு மாம். பி-ம்:—[1]பூத்தன. [2]கண்ணருள், கண்ணெளி. (கசக)

சுக.—கைகேயியின் பாதங்களை மந்தரை மெல்லத்தீண்டுதல்.

[1]எய்தியக் கேகயன் மடந்தை யேடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பிறைற்
[2]செய்தவே ருவமைசால் செம்பொற் [3]சீறடி
கைகளிற் றீண்டினள் காலக் கோளனள்.

(இ-ள்.) காலம் கோள் அனள்-உத்பாதகாலத்தைக் குறிக்கத்தோன்றுங் தீக்கோளைப் போன்றவளாகிய அக்கூனி, எய்தி - (அவளை) அடைந்து,—அ கேகயன் மடந்தை-அந்தக்கைகேயியினது, ஏடு அவிழ் - இதழ் நெகிழ்கின்ற, நொய்து அலர்-மென்மையாக மலர்ந்த, தாமரை-தாமரைமலர்கள், நோற்ற - செய்த, நோன்பிறல்-தவத்திறல், செய்த பேர் உவமை சால் - பெற்ற மிக்க உவமத்தன்மை பொருந்திய, செம் பொன் சிறு அடி - சிவந்தபொன்னிலாகிய ஆபரணங்களையணிந்த சிறிய பாதங்களை, கைகளின் தீண்டினள்-(தன்) இருகைகளாலும் தடவினள்; (எ - று.)

கைகேயி படுக்கையிற் கண்ணயர்ந்திருந்ததனால் மந்தரை அவளை யுணர்த்துமாறு அவளுடைய சீறடிகளைக் கைகளினால் தீண்டின ளென்க. மகா சுகுமாரனை இராமபிரானைக் காட்டிற்குச்செலுத்தும்படி தோன்றின பாவி யாதலால், மந்தரையை 'காலக்கோளனள்' என்றார்: எங்கேயோ கிடந்தவள் இங்குத் தோன்றியது, பெருந்துன்பத்தை விளக்கும் உற்பாதக்கோள் தோன்றியதுபோலு மென்க. தாமரைமலர் வனத்திற்சென்று ஒருதாளா னின்று மனங்குழைந்து சூரியனை நோக்கி ஆனந்தக்கண்ணீர் பொழிந்து யோகஞ்செய்து அத்தயோகத்திற்குப் பயனைக் கைகேயியின் பதஸாரூப்யத் திற் சிறிது பெற்றன வென்னும் தற்குறிப்பேற்றவணியின் பொருள்கொள்ள "ஏடவிழ் தாமரை நோற்ற நோன்பிறற் செய்த பேருவமைசால் செம்பொற் சீறடி' என்றார்; சீறடி-"நுதலடிநுசுப்பெனும் மூவழிச்சிறுகி" என்ற கலித் தொகை காண்க. பி-ம்:—[1]எய் யகைகயன். [2]செய்தவப்பெருமைத்தாம். [3]சீரடி. (கசஉ)

சுச.—கைகேயி சிறிது துயிலுணர்கையில் மந்தரை கூறத்தொடங்குதல்.

தீண்டலு முணர்ந்தவத் தெய்வக் கற்பினை
ணீண்டகண் [1]ணனந்தரு நீங்க கிற்றிலள்.

மூண்டெழு பெரும்பழி முடிக்கும் [2]வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லன் மேயினாள்.

(இ - ள்.) தீண்டலும் - (அவள்) தடவியவளவில், —(துயிலினின்று), உணர்ந்த-உணர்ச்சி பெற்ற, அ தெய்வம் கற்பினாள்-அந்தத்தெய்வத்தன்மை பொருந்திய கற்பினையுடைய கைகேயி, —நீண்ட கண்-நீட்சியையுடைய கண்களினின்று, அனந்தர்உம் நீங்ககிற்றிலள் - துயிலும் நன்கு நீங்கப்பெற்றாளில்லை; (அவ்வளவில்தானே கூனி), மூண்டு எழு பெரு பழி-அதிகரித்தெழுகின்ற மிக்க நிந்தையை, முடிக்கும் - சூட்டுதற்காகிய, வெவ் வினை - பாவம், தூண்டிட-எவுதலால், கட்டுரை-கட்டிக்கூறுஞ் சொல்லை, சொல்லல் மேயினாள் - சொல்லத்தொடங்கினாள்; (எ - று.)—அதனை மேற்கவியிற் காண்க.

அனந்தர்-தூக்கமயக்கம். மந்தரையின் தூர்ப்போதனையேறுத நிலையில் கணவன்கொள்கைக்கு மாறுபடாதிருப்பவ ளென்பதைக் குறிப்பிக்க, இங்குக் கைகேயியை 'தெய்வக் கற்பினாள்' என்கிறார். தெய்வக்கற்பு-தெய்வத்தன்மையையுடைய அருந்ததிபோலுங் கற்பென்றுமாம். கண் அனந்தர் நீங்ககிற்றிலள்-சினவினை முதலொடுமுடிந்தது. பி-ம்:—[1]அனந்தரினிற்க நிற்கிலாள், அனந்தலு நீங்கநிற்கலாள், அனந்தரினிற்க நீக்கிலாள். [2]வல்வினை. (கஅஉ)

சுரு. —'பேரிடர் வரவும் வந்தாது துயிலலாமோ?'
என்று கூனி கூறுதல்.

அணங்குவாள் விடவரா வணுகு மெல்லையுங்
குணங்கெடா தொளிவிரி [1]குளிர்வெண் டிங்கள்போற்
பிணங்கு[2]வான் பேரிடர் பிணிக்க நண்ணவு
முணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள்.

(இ - ள்.) 'அணங்கு-துன்பஞ்செய்கின்ற, வாள்-வாள்போன்ற, விடம் அரா-விஷத்தையுடைய பாம்பாகிய இராகு, அணுகும்-சமீபிக்கின்ற, எல்லையும் - வரையிலும், குணம் கெடாது-தன்மைமாறுமல், ஒளி விரி - கிரணங்களை வீசுகின்ற, குளிர் வெள் திங்கள் போல்-குளிர்ச்சியையுடைய வெள்ளிய சந்திரன்போல, பிணங்குவான் - வருந்தும்படி, பேர் இடர்-பெருந்துன்பம், பிணிக்க-கட்ட, நண்ணவும் சமீபிக்கவும், உணங்குவாய் அல்லை - (அதற்கு) வருந்துவாயல்லை: நீ உறங்குவாய்-நீ தூங்குவாய்,' என்றாள்—; (எ - று)

விடவராவணுகும் எல்லையும் ஒளிவிரிகின்ற திங்கள்போல, நீ செல்வமெல்லாம் இழக்கவருகின்றஇப்போதும் சிறிதுங் கவலைகொள்ளாமல் பெருமகிழ்ச்சியோடு தூங்குகின்றாயே யென்றன ளென்பதாம்; உவமையணி. உணங்குவாய், உறங்குவாய் - காலவழுவமைதி. பெரும்பழிப்பை யுண்டாக்குஞ் செயலை முடித்தற்கு உரிய தீவினை மந்தரைக்குக் கிடத்தலால், அது தூண்டக் கைகேயி துயிலுணர்ந்தும்உணராதும் இருக்கையில்தானே ஒரு சொல்லைக் கட்டிச் சொல்லலாறு ளென்க. கட்டுரை - தானே படைத்துக் கொண்டு சொல்லுஞ் சொல். அணங்கு என்பதற்கு-கைகேயியை விளிக்கும் விளியாக, தெய்வப்பெண்ணே! என்றும், பிணங்குவானென்றதற்கு - மனம் மாறுபட்டவளெகிய சக்ரவர்த்தியென்றும் பொருள் கூறுவாரு முளர். பி-ம்:—[1]கொழு. [2]வான். (கஅஅ)

ாசு.—கைகேயி என் புதல்வர் யாவரும் அறந்திறம்பாதவராயிருக்கையில் எனக்கு என்ன துன்பமெனல்.

வெவ்விட மனையவள் விளம்ப வேற்கணை
டெவ்வடு சிலைக்கையென் [1]சிறுவர் [2]செவ்விய
ரவ்வவர் துறைதொறு மறந்தி றம்பல
ரெவ்விட ரெனக்குவந் தடுப்ப [2]தீண்டினை.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) வெவ் விடம் அனையவள்-கொடிய நஞ்சையொத்த கூனி, விளம்ப-அங்ஙனஞ்சொல்ல,—வேல் கணவள்-வேல்போலுங்கண்களையுடைய கைகேயி,(அவளைநோக்கி), 'தெவ் அடு சிலை கை என் சிறுவர்-பகைவரை வெல்லுகின்ற வில்லேத்தாங்கிய கையையுடைய என்மைந்தர்கள், செவ்வியர் - சுகமாயிருக்கின்றனர்; அ அவர் - அந்தமைந்தர்கள், துறைதொறும் - தொழில்களிலெல்லாம், அறம்திறம்பலர்-தருமத்தினின்றுதவறுமலிருக்கின்றனர்;எனக்கு-இத்தகைய எனக்கு, ஈண்டு - இப்பொழுது, வந்து அடுப்பது-வந்துசேர்வது, எ இடர் - என்ன துன்பம்?' எனை-என்றுகூறி,—(எ - று.)—''என்றாள்'' என அடுத்த கவியோடு முடியும்.

தன்சொல்லைக் கேட்டார்க்குக் கேடுண்டாதுமாறு துன்பஞ்செய்தலால், 'வெவ்விடமனையவள்' என்றும், கடுஞ்சொற் கூறிய கூனியை விரித்துப் பார்த்தனள் கைகேயி யென்பார் 'வேற்கணவள்' என்றுங் கூறினர். வேற்கணவள்—கருத்துடையடைகொள். வெவ்விடம் என்றது - பாற்கடலிற் பிறந்த ஹாலாஹலத்தை. சிறுவர்க்கு 'தெவ்வடு சிலைக்கை' என்று அடைமொழி கொடுத்தது—கருத்துடையடைமொழி;'தெவ்வடுசிலைக்கைச் சிறுவர்' என்பதனால், பிறரால் தீங்குவாராது பாதுகாத்துக்கொள்ள வல்லவ ரென்றவாறு. நால்வரையுங்குறித்து 'சிறுவர்' எனப் பன்மையாற் கூறினள். அவ்வவர் துறை யென்றது - ஸ்ரீராமன் பெற்றோர் சொல்லைப் பேணுதல், இளைய பெருமாள் ஸ்ரீராமனிடத்து அடிமை பூண்டொழுகுதல், பரதன் இராமன் சொன்ன சொற்படியே அவனுக்குப் பாதத்திரனை கடத்தல், சத்துருக்கினன் ஸ்ரீராமபிரானிடத்துப் பரதன்போலப் பரதனிடத்துப் பாதத்திரனை இருக்கை முதலியன. வந்தடுப்பதென்றதனால், இதுகாறும் இடரின்மை யுணர்க. இரண்டாமடி - முற்றுமோனை. பி பி:—[1]மைத்தர். [2]சுகமெனை, ஈண்டென்றாள். (கசஇ)

சுஎ.—இராமன் புதல்வரு பிருக்கையில் கைகேயி தனக்கு இடருண்டாகா தெனல்.

பரவருந் புதல்வரைப் பயக்க யாவரு
முரவருந் [1]துயரைவிட் டுறுதி காண்பரால்
விரவருஞ் புவிக்கெலாம் வேத மே [2]பன
விராமனைப் பயந்தவெற் [3]கிடருண் டோவென்றாள்.

(இ - ள்.) 'பரா வ அரு புதல்வரை-புகழ்தற்கு அரிய புத்திரர்களை, பயக்-பெறுவதனால், யாவர்உம் - எவரும், உரா வ அரு துயரம் விட்டு-வருதற்கரிய [மிக்க] துன்பத்தை நீங்கி, உறுதி காண்பர் - நன்மையை யடைவர்; ஆல்.. ஆதலால், விரா வ வரு புவிக்கு எலாம்-பஞ்சபூதங்களின் சேர்க்கையால் தோன்றுவதான பூமியிலெல்லாம், வேதமே அன-வேதத்தையேயொத்துத் தோன்றுகின்ற, இராமனை—, பயந்த - பெற்ற, எற்கு - எனக்கு, இடர் உண்டு ஓ - துன்பம் உளதாகுமோ?' என்றாள் - என்றுங் கூறினாள்; (எ - று.)

'முறைதிறம்பாதவராய் பெருவீரரான புதல்வர் நால்வர் இருக்கையில் இடருண்டோ?' என்று கீழ்கூறிய கைகேயி, இச்செய்யுளில் 'மற்றவர்களைப் பற்றி நான் நினைக்கவேண்டியதும்இல்லை: இராமபிரான் எனக்குப்புதல்வனாக இருக்கையில், எனக்குத் துயரம் உண்டாகுமோ? உண்டாகாது' எனத் தான் இராமபிரானிடத்துப் பேரன்புவைத்திருத்தல்தோன்றக் கூறினளென்க. பரா வரும்புதல்வர்-நற்குணமுள்ள புதல்வரென்றபடி. புதல்வர் இம்மையில் மனத்துயரைஅகற்றிப் பெருமகிழ்ச்சியை விளைத்தலாலும், மறுமையில் புத்தேளுலகம் சேரவிடாது பெற்றோர்களைக்காத்தலாலும், 'பரா வரும்புதல் வரைப் பயக்கயாவரு முரா வருந்துயரைவிட் டுறுதிகாண்பர்' என்றது. முன்னிரண்டடிகளிற் கூறிய பொதுப்பொருளைப் பின்னிரண்டடிகளிற்கூறிய சிறப்புப் பொருள் சமர்த்தித்துநின்றது, வேற்றுப்பொருள்வைப்பணியின் பாற்படும். வேதமேயன்ன இராமன் - வேதம்போல் நித்தியமான பரபிரமசொரூபமாகிய இராமன்: 'சுருதியன்னசேவகன்'' என்பர், கடவுளுபடலத்தும். விதிவிலக்குக்களை யுணர்ந்து அறிவிப்பவ னெனினுமாம். பரா வரும், உரா வரும், விரா வரும் எனப் பிரித்தும் பொருள்கூறலாம். காண்பர், காணுதல்-இலக்கணையாய்ப், பெறுதற்பொருட்டாயிற்று. வேதம் - நன்மை தீமைகளை யறிவிப்பது. பி-ம்:—[1]துயரம். [2]என. [3]இடருண்டாகுமோ. (கசசு)

சஅ.—கைகேயிகூற்றுப் பொறுமைதோன்றுமாறு மந்தரை 'கோசலைவாழ்ச்சி பெற்றனள்' எனல்.

ஆழ்ந்தபே ரன்பிறை ளஃனய கூறலுஞ்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலந் திருவும்[1] வீழ்ந்தது
வாழ்ந்தனள் கோசலை [2]மதியி னுலென்றாள்.

(இ-ள்.) ஆழ்ந்த பேர் அன்பினுள்-(இராமனிடத்து) மிகுந்த அன்பாகிய கடலில் அழுந்தினவளாகிய கைகேயி, அனைய - அவ்வார்த்தைகளை, கூறலும்.- சொன்னவளவில், - சூழ்ந்த தீவினை நிகர் கூனி - வளைந்துகொண்ட (அவளது) பாவத்தையொத்த மந்தரை, சொல்லுவாள் - பேசத்தொடங்கி, 'நின் நலம் வீழ்ந்தது - உனது நன்மை யழிந்தது; திருவும் - ஐசுவரியமும், வீழ்ந்தது - (உனக்கு) ஒழிந்தது; கோசலை - கௌசல்யை, மதியினுல் - புத்தியினால், வாழ்ந்தனள் - செல்வம்பெற்றுவாழ்ந்தாள்,' என்றாள்—; (எ - று.)

இராமபிராணிடத்து அன்புபொங்கக் கைகேயி அங்ஙனம்கூறினவளவில், கூனி, அந்தக்கைகேயிக்குப் பொறுமையுண்டாக்கவேணுமென்ற கருத்திஞல் அவளை நோக்கி, உன்செல்வாக்கும் செல்வமும் ஒழிய, உன்சக்களத்தியாகிய கோசலை தன்மதியின்வல்லமைபால் எல்லாநன்மையும் பெற்றுவிட்டாளாதலால் இனிவாழ்வாளென்று கைகேயியைத்தாழ்த்திக் கோசலைமேம்படுவதைக் குத்துப்பாடாக எடுத்துக்கூறின னென்க. ஆழ்ந்தபேரன்பினுல் - விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது. பழியையுண்டாக்குதலால், தீவினையை யுவமை யாக்கினர். வீழ்ந்தது முதலியன - தெளிவிஞல் எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்டன; விரைவிஞலுமாம். மதியாவது - நல்லதன்னலனுந் தியதன்தீமையும் உள்ளவாறு உணர்தல்; சாமர்த்தியமுமாம். பி - ம்:— [1]வீந்தது, வீய்ந்தது. [2]மதியிஞள். (கசஎ)

சகூ.—கோசலைக்கு ஏற்கவே ஏற்பட்டுள்ள பெருவாழ்வினைக் கைகேயி பாராட்டிக் கூறுதல்.

[1]அன்னசொ லனையவள் [2]கூற வாயிணை
மன்னவர் மன்ன[3]னேற் கணவன் மைந்தனேற்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனி
லென்[4]னிதன் [5]மேலெய்ட் கெய்தும்வாழ் வென்றுள்.

(இ - ள்.) அனையவள் - அந்தக்கூனி, அன்ன சொல் கூற - அத்தவார்த்தையைச்சொல்ல,—ஆய்இழை-ஆராய்ந்தெடுத்தணிந்த ஆபரணங்களையுடைய கைகேயி, 'கணவன் - நாயகன், மன்னவர் மன்னன் ஏல் - சக்கரவர்த்தியாருதல், மைந்தன் - புத்திரன், பன்ன அரு பெரு புகழ் பரதன்ஏல்-புகழ்தற்கு அரிய மிக்க கீர்த்தியையுடைய பரதனுதல், - இதன்மேல் - இதனினும் மேலாக, அவட்கு - அக்கோசலைக்கு, பார்தனில் - பூமியில், எய்தும் - வரக்கடவதாகிய, வாழ்வு—, என் - யாது?' என்றுள்—; (எ - று.)

சக்கரவர்த்தி கணவன்: பரதன் மைந்தன் என்றுல், இதனினும் மேலாக அவளுக்கு வரும் வாழ்வுயாது? என்பதாம்: புதிதாக அந்தக்கௌசலைக்கு வாழ்ச்சி வரவேண்டியது இல்லை; ஏற்கவே, நல்வாழ்வு அமைந்திருக்கின்றதெனக் கூறியவாறு. அன்புடைமைபற்றிக் கௌசல்யையைப் பரதன்தாயாகக் கூறினுள். இனி எனக்குக் கணவன் மன்னவர்மன்னவனென்றுல், மைந்தன் பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் என்றுல், என்னினும் மேலாக அவளுக்கு வரும் வாழ்ச்சி யாது? என்பது கருத்தாக வுரைப்பாரு முளர். பரதன் - பரம்=பாரம், இதனையுடையவன், பரதன்: லௌகிகவைதிககாரியங்களை நிர்வகிக்கவல்லவன் என்பது கருத்து; இராச்சியபாரத்தை எம்பெருமான் திருவடிநிலேயில்வைத்து ஆண்டவன் என்றுங் கொள்ளலாம். பி-ம்:— [1]அன்னவளவ்வுரை, அன்னவளனையவள். [2]உரைப்ப. [3]என், எங். [4]அதன். [5]மேலும்வந்து. (கசஅ)

ரு0.—மந்தரை கௌசலுக்கீதுவரும் வாழ்வை எடுத்துக்கூறுதல்.

ஆடவர் நகையுற வாண்மை [1]மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ ளிவளவாழ் [2]விதனைச் சொல்லினாள்.

(இ - ள்.) (கூனி), 'ஆடவர் நகை உற-வீரர்கள் பரிகசிக்கவும், ஆண்மை மாசுஉற-ஆண்தன்மை குற்றமடையவும், தாடகை எனும் பெயர் தையலாள்-தாடகையென்னும் பெயரையுடையபெண், பட - அழியும்படி, கோடிய-வளைந்த, வரி சிலை - கட்டமைந்தவில்லினையுடைய, இராமன்—, நாளை—, கோமுடி - அரசுக்குரிய கிரீடத்தை, சூடுவன்-சூடிக்கொள்வான்: இது வாழ்வு-(அவளுக்கு வரும்) வாழ்வு இதுவே,'என - என்று, சொல்லினாள்—; (எ-று.)

புத்திரன் பட்டமடைதல் உன்வாழ்வினும் மேலானவாழ்வென்பதாம். இராமன் பெண்பாலார்திறத்தில் இரக்கமின்றித் தவறுசெய்பவனென்பாள், 'தாடகையெனும்பெயர்த் தையலாள்படக் கோடியசிலையிராமன்' என்றாள்: இந்த அடைமொழி கொடுத்துக்கூறியது, உன்திறத்துக் கொடுமைபுரிதலிலும் பின்வாங்கமாட்டான் அவ்விராம னென்பதை யுணர்த்தற்பொருட்டாகும். மாசுறுதற்குக் காரணம், பெண்கொலைபுரிதல். தையலாள் - அழகுடையவள். கோடியசிலை - அரிதியாகிய தொழிலில் முயன்ற சிலை யென்றுமாம்.

பி - ம்:—[1]மாசுண. [2]இதுவெனச்சொல்லினாள், இதுவெனச்சொனாள், இதுவெனச் சொன்னாள். (கசகூ)

ருக.—இராமபட்டாபிஷேகத்தைக் கேட்டுக் கைகேயி கோசலைபோல மகிழ்தல்.

மாற்றமஃ துரைசெய மங்கை யுள்ளமு
மாற்றல்சால் கோசலை யறிவு [1]மொத்தவால்
வேற்றுமை [2]யுற்றிலள் [3]வீரன் றுணைதபுக்
[4]கேற்றவ [5]ளிருதயத் திருக்க வேகொலாம்.

(இ - ள்) அஃது மாற்றம் உரை செய - அத்தவார்த்தையை (க் கூனி) சொல்ல, மங்கை உள்ளம்உம் - கைகேயியின்மனமும், ஆற்றல் சால் கோசலை அறிவுஉம்-பெருமைமிகுந்த கௌசல்லையினது புத்தியும், ஒத்த-ஒத்திருந்தன; ஆல் - ஆதலால், வேற்றுமை உற்றிலள் - (கைகேயி) வேறுபாடு அடைய வில்லை; (அதற்குக்காரணம்), வீரன் தாதை-இராமன்தந்தையாகிய தசரதன், அவள் இருதயத்து - அவள் மனத்தில், புக்கு ஏற்று - புகுந்து இணங்கி, இருக்கவேகொல் ஆம் - இருந்ததனாற்போலும்; (எ - று.)

இது-கவிக்கூற்று. வீரமாதாவாதலாலும், சருவசுவரனைத் திருமகனைப் பெற்றதனாலும், தசரதன்மனைவியர் அரசர்க்குள் பிரதானமானவர் மூவருள் ளும்முதல்தாரமாய்ப் பட்டம்பெற்றவளாதலாலும், 'ஆற்றல்சால்கோசலை'என் றார். இராமபட்டாபிஷேகத்தைச் செவியுற்றதனால் கோசலைக்கு எவ்வளவு

களிப்புண்டாயிற்றே, அவ்வளவுகளிப்பு கைகேயிக்கும் உண்டாயிற்று என்ற வாறு. இங்ஙனம் மாற்றுள்புதல்வனுக்கு முடிசூடுதலிற் பெற்றதாய்போல் இந்தக் கைகேயிக்கு மனமகிழ்ச்சி தோன்றிய காரணம், எப்பொழுதும் அக் கைகேயியின் மனத்தில் தசரதனிருப்பதால், அவன் மனமே அவள் மனமாவ தன்றி வேறுஇல்லாமையாலெனக் கவி பின்னடிகளால் வருணிக்கின்றாரென்க. ஆல்-விகாரம்.இராமன் தன்னறிவும்ஒழுக்கமுங்கண்டார் 'இவன்தந்தை இவனைப்பெறுதற்கு என்னதவஞ்செய்தான் கொல்லோ!' என்றுசொல்லுஞ் சொல்லே நிகழ்த்தியொழுகுமவ ஞதலால், தயரதனை 'வீரன்தாதை'என்றார். நான்காமடி-முற்றுமோனை. பி-ம்:—[1]ஒத்ததால். [2]உற்றில. [3]இராமன்றுதையும், வீரவீரனும், வீரர்வீரனும், வீரர்வீரன்புக்கு. [4]எற்றவர். [5]இதயத்தில், (கஞ்ச)

ருஉ.—இராமபட்டாபிஷேகச் செய்தியைக் கூறியதற்காகக் கைகேயி மந்தரைக்கு மணிமாலையளித்தல்.

ஆயபே ரன்பெனு மளக்க ராத்திதழுத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ [1]ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலா
நாயக மணியதோர் மாலை நல்கினாள்.

(இ - ள்.) தூயவள்-கைகேயி,—ஆய-உண்டாகிய, பேர் அன்பு எனும் - மிக்க விருப்பமாகிய, அளக்கர் - கடல், ஆர்த்து எழ - ஒலித்துக்கொண்டு கிளரவும், தேய்வு இலா மதி முகம் - (கிருஷ்ணபட்சத்திலும்) தேய்தல் இல்லாத பூர்ணசந்திரன்போன்ற முகம், விளங்கி தேசு உற - தெளிந்து ஒளியடையவும், உவகை போய் மிக - மகிழ்ச்சி எல்லைகடந்து அதிகரிக்கவும், சுடர்க்கு எலாம் நாயகம் அனையது-முச்சுடர்க்கும் தலைமைபெற்றதுபோன்றதாகிய, ஓர் மாலை-ஒருஇரத்தினமாலையை, நல்கினாள்-(இராமபட்டாபிஷேகமென்ற மகிழ்ச்சிச்செய்தியைக் கூறிய அந்த மந்தரையென்னுங் கூனிக்குக்) கொடுத்தாள்; (எ - று.)

இராமபட்டாபிஷேகத்தைச் செவியுற்றதனால் கைகேயிக்கு மனத்துக்கு உள்ளே மகிழ்ச்சியடங்காது முகத்தில்வெளித்தோன்ற, அக்கூனி சொல்லிய கொடுஞ்சொல்லைப் பொருட்படுத்தாது கைகேயி பேரொளியுள்ள அதன மாலையை மகிழ்ச்சியைத்தெரிவித்த அவட்குக் கொடுத்தனளென்க. முகத்தின் ஒளி நாடோறும் வளர்ந்தேவருதலால் தேய்விலாமதியை யுவமை யாக்கினர். தூயவள்-சுத்தமுடையவள்; மனத்திற் களங்கமற்றவள்; கருத்துடையடை கோளி. முச்சுடராவன-சந்திரன் சூரியன் அக்கினி யென்பன. இனி, சுடர்-துவாதசாதித்தருமாம். சுடர்க்கு எலாம்நாயகம் - சூரியனென்னுங்கடவுள் எனினுமாம். பி-ம்:—[1]உவகையான், உவகைபோல். (கஞ்ச)

ருங.—மந்தரை பெருவஞ்சமடைந்து செய்த செயல்.

தெழித்தன [1]ளுரப்பினள் [2]சிறுக்கண் டீயுக
விழித்தனள் வைதனள் வெய் [3]துயிர்த்தன
ளழித்தன ளழுதன ளம்பொன் மாலையாற்
குழித்தன ணிலத்தையக் கொடிய கூனியே.

(இ - ள்.) கொடிய அ கூனி—, தெழித்தனள் - இரைந்தாள்; உரப்பினள் - அதட்டினாள்; சிறு கண் தீ உக - சிறிய கண்களினின்று நெருப்புப் பொறி சிந்த, விழித்தனள் - பார்த்தாள்; வைதனள் - திட்டினாள்; வெய்து உயிர்த்தனள்-வெப்பமாகப் பெருமூச்சுவிட்டாள்; அழித்தனள்-(தன்கோலத்தைக்) கெடுத்தாள்; அழுதனள் - புலம்பினாள்; அம் பொன் மாலையால் - (உவகைச்செய்திசொன்னதற்காகக் கைகேயி கொடுத்த)அழகிய பொன்னாற்றிலால், நிலத்தை - பூமியை, குழித்தனள் - குழியாக்கினாள்; (எ - று.)

நிலங்குழிபடப் பொன்மாலையைத் தரையிலெறிந்தா ளென்பார்,'குழித்தனணிலத்தை' என்றார். அரதனமாலையாயினும் பொன்னிற்பதித்துச் செய்யவேண்டுதலால், அவ்வரதனமாலை பொன்மாலை யெனப்பட்டது. கொடுமை - பெயரிலும், உடலிலும், சொல்லிலும், குணத்திலும், செயலிலுமுள்ளது. **பி-ம்:**—[1]உயிர்த்தனள். [2]சிறுகண். [3]உரப்பினள். (கடுஉ)

நிச.—கூனி, 'நீ துயர்படச்சம்மதித்தாலும் கோசலையின் தாதியர்க்கு அடிமைசெய்ய நான் உடன் படேன்' எனல்.

வேதனைக் கூனிபின் [1]வெகுண்டு நோக்கியே
[2]பேதைநீ பேதின்றிப் பிறந்த சேயொடு
[3]மாதுயர் படுகநா [4]னெடிதுன் 'மாற்றவ
டாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள்.

(இ-ள்.) வேதனை கூனி-துயரத்தைச் செய்கின்ற கூனியானவள், பின்-பின்பு, வெகுண்டு நோக்கி-(அந்தக்கைகேயியைக்)கோபித்துப்பார்த்து, 'நீ—, பேதை-அறிவுகெட்டவள்: பேது இன்றி-(நாம் வேறு கௌசலைவேறு என்ற) பேதபுத்தியில்லாமையால், பிறந்த சேயொடுஉம் - (நினது வயிற்றிற்) பிறந்த மகனுகிய பரதனோடும், மா துயர் படுக-பெருந்துன்ப மடைவாயாக; நான்—, உன் மாற்றவள் தாதியர்க்கு-உனது சக்களத்தி (கௌசலையின்) தாதிகளுக்கு, நெடிது-வெகுகாலம், ஆள் செய - அடிமைசெய்ய, தரிக்கிலேன் - பொறுக்க மாட்டேன்,' என்றாள்—; (எ - று.)

அந்தக்கூனி கைகேயியைச்சினந்துநோக்கி 'நீ அறிவுகெட்டவள்: அதனால்,'நாம் வேறு,கௌசலை வேறு:அவளுக்கு எற்றம்வந்தால் அது நமதுவாழ்வுக்குக் குறைவே'என்ற உண்மையையறியமாட்டாமல் மகிழ்கிறாய்: கௌசலையும் அவளைச் சேர்ந்தவர்களும் உன்னைத் தாழ்மைப்படுத்த, நீ இனி உன் மகனோடு துயரமுற்றுக்கிடப்பாய்: நாளை தன்மகன் இராச்சியம் பெற்றதனாற் பெருமிதங்கொண்ட கோசலையின் தாதியர்க்கு அடிமைசெய்து பிழைக்க மனம்பொறேன்' என்றனளென்க. மாற்றவளின் தாதியர்க்கு ஆட்செயப் பொறேன் என்று மந்தரை கூறியது-நீ கோசலையின்தாதியர்க்கு ஆட்செய்யும் படி நேரு மெனக் குறிப்பித்தபடியாம். **பி - ம்:**—[1]வெகுண்ட நோக்கியப், வெகுண்டுநோக்கியப். [2]பேதைநீ பித்தனில், பேதைநீபேதையை, பேதையைப்பித்திநிற். [3]நீதுயர்ப், நீதுயர். [4]நெடிதுமற்றவள். (கடுஉ)

நுடு.—இராமன் பத்தினியுடன் சிங்காசனத்திருக்க, நின்மகன் தரையிலிருக்கவேணுமே யெனல்.

சிவந்தவாய்ச் சீதையுங் கரிய செம்மலு
நிவந்த[1]வா சனத்தினி திருப்ப நின்மக
[2]னவந்தலைப் [3]வெறுநிலத் திருக்க லானதோ
துவந்தவா [4]றென்னிதற் குறுதி யாதென்றாள்.

(இ - ள்.) சிவந்த வாய் சீதையும் - சிவந்தவாயினையுடைய சீதையும், கரிய செம்மல்உம் - கருநிறத்தையுடைய இராமனும், நிவந்த ஆசனத்து - உயர்ந்த சிங்காதனத்தில், இனிது இருப்ப - இனிமையாகவீற்றிருக்க,—நின் மகன் - பரதன், அவம் ஆய் - வீணாய், வெறு நிலத்து - சிங்காதனமில்லாத நிலத்தில், இருக்கல் ஆன போது - இருக்க நேர்ந்த காலத்தில், உவந்த ஆறு - சந்தோஷித்த காரணம், என் - யாது? இதற்கு உறுதி யாது - இதனுக்கு நீ கொண்ட மனவுறுதி யென்ன? என்றாள்—; (எ - று.)

—.— சக்களத்திமகனென இராமன் தன்மனைவியோடு சிங்காதனத்திலேறி வீற்றிருக்க, அவர்கள் பாதத்தின் கீழ் வெறுந்தரையில் உன் மகன் யாதொரு பெருமையுமின்றிக் கைகட்டிநிற்கவேணுமே! இவ்வாறான நிலை நிகழ்வதாயிருக்கவும் மனத்தில் என்ன உறுதிகொண்டு மகிழ்கின்றா யென மந்தரை வினவுகின்றனளென்க. சிவந்த வாய்ச் சீதை யென்பதனால் அவளது இனிதிருப்பையும், இராமனிடத்துள்ள சினத்தினால் 'கரியசெம்மல்' என்று அவனது கொடுமையையும் விளக்குகின்றா னென்பர். அவம்என்பதன்பின் தன்-சாரியை. அவந்தன்-அவத்தனென்பதன் விகாரமுமாம்: வீணனவன்: அவந்தியன் என்ற வடமொழித் திரிபாகக்கொண்டு - வணங்குதற்கு உரியனல்லாதவன் [அதாவது - எவராலும் இலட்சியம் பண்ணப்படாதவன்] எனக் கூறுதலு மொன்று. பி - மீ:—[1]ஆசனத்தின்மேல். [2]அவந்தனால். [3]வறு. [4]என்னிதன், என்னிதில், என்னிது, என்னிழுக்கு. (கஙிச)

நுசூ.—கோசலையினால் இராமன் அரசுபெற்று மேன்மையடையப் பரதன் தாழ்ச்சிபெறுவதை மந்தரை யெடுத்துக்காட்டல்.

மறந்திலள் கோசலை யுறுதி மைந்தனுஞ்
[1]சிறந்தனன் றிருவினிற் றிருவு [2]நீங்கினு
னிறந்தில [3]னிருந்தில னென்செய் காற்றுவான்
பிறந்திலன் பரதனீ [4]பெறுத லாலென்றாள்.

(இ - ள்.) கோசலை - கௌசல்லையை, உறுதி - நன்மையை, மறந்திலள் - மறந்தாளில்லை; (அதனால்), மைந்தன்உம் - அவள் மகனும், திருவினில் - இராச்சிய சம்பத்தால், சிறந்தனன் - மேம்பட்டான்; பரதன் - பரதனை, திருவும் நீங்கினான்-செல்வத்தையும் இழந்தான்; (செல்வமில்லாத அவன்), இறந்

திலன் - செத்தானில்லை; இருந்திலன் - (நல்வாழ்க்கையோடு) இருந்தானுமில்லை; என் செய்து - என்ன செய்து, ஆற்றுவான் - துயர் தீர்வான்; நீ பெறுதலால்- நீ யீன்றதனால், பிறந்திலன்-உற்பவித்தானில்லை, என்றாள்—.

கோசலை தன்னுறுதியை நாடுபவளாய்த் தசரதசக்கரவர்த்தியைக்கொண்டு தன்மகனுக்குப் பட்டங்கட்டுவித்தலால், இராச்சியசம்பத்தை யெல்லாம் பெற்று இராமன் மேம்பட்டு நிற்க, பரதன் இப்போதிருக்குஞ் செல்வ வாழ்க்கையும் குறைய உயிர்ப்பிணம்போல இவ்வுலகில் தடுமாறித் திரியுமாறு நேருமென மந்தரை குத்திக் காட்டுகின்றனளென்க. பரதனுக்கு இராச்சியத்தை வாங்கித்தருமாறு கைகேயிக்குத் துர்ப்போதனைசெய்யும் மந்தரை, கோசலை தன்னுறுதியைநாடி இராமனுக்கு இராச்சியத்தை வாங்கித்தந்ததாகக் கூறுகின்றனள். பரதன் இறந்திருப்பானுயின் துயர்தீர்வான்என்று இரங்குவாள் போன்று 'இறந்திலன்'என்றும், நல்வாழ்வின்றியிருப்பது இறந்ததுபோலவே யாகு மென்பாள் 'இருந்திலன்' என்றும், இத்தீங்கு தந்தைதாயர் காரணமாக வந்ததனால் 'என்செய்தாற்றுவான்' என்றும் கூறினாள். நீ - மாற்றாளின் செல்வங் கண்டுகளிக்கும் நீ. உலகிற்பிறந்ததனால் ஒருபயனையும் எய்தாமை பற்றிப் பரதன் பிறந்திலன் என்கிறாள்; முன் "பிறந்தில னென்பதிற் பிறிதுண்டாகுமோ" என்றதூஉம் இக்கருத்தே பற்றி வந்தது. [1]சிறந்தநற்றிருவினிற் றிருவு மெய்திஞள் என்ற பாடத்திற்கு - சீதையாகிய இலக்குமியோடு ராஜலக்ஷ்மியுஞ் சேர்ந்தாளென்று பொருள் காண்க. பி - ம்:—[2]நீங்கினாள், எய்தினன். [3]இருந்தனன். [4]பெற்றதால். (கருரு)

ருள.—மந்தரை பரதசத்துருக்கனர் தவஞ்செய்யச் செல்லலாமெனல்.

சரதமிப் புவியெலாந் தம்பி யோடு[1]மிவ்
வரதனே காக்கு[2]மேல் வரம்பில் காலமும்
பரதனு மிளவலும் பதியி னீங்கிப்போய்
விரதமா தவஞ்[3]செய [4]விடுத னன்றென்றாள்.

(இ - ள்.) இ புவி எலாம் - இவ்வுலகமனைத்தையும், சரதம்-மெய்யாக, இ வரதன் ஏ-இவ்விராமனே, தம்பியோடுஉம்-தம்பியாகிய லக்ஷ்மணனுடன், காக்கும்ஏல் - ஆள்வானுனால், வரம்பு இல் காலம் உம் - அளவில்லாத காலமுழுவதிலும், பரதன்உம் இளவல்உம் - பரதனும் அவன்தம்பியாகிய சத்துருக்கனனும் (ஆகிய இவர்களிருவரையும்), பதியின் நீங்கி போய் - நாட்டினின்றும் பிரிந்துபோய், விரதம் மா தவம் செய - விரதங்களோடுகூடிய பெரியதவத்தைச் செய்வதற்கு, விடுதல் - (காட்டுக்கு) அனுப்புதல், நன்று - நல்லதாகும், என்றாள்—; (எ - று.)

"பரதனுமிளவலு மொருநொடிபகிரா,திரதமுமிவுளியு மிவரினுமறைநூ, லுரைதரு பொழுதினு மொழிகிலரெனையாள்,வரதனுமிளவலு மெனமருவினரே"என ஒருவரையொருவர் விடாதுதொடர்தல் கூறப்பட்டதனால், இலக்கு

மணனை இராமன்தம்பியென்றும், சத்துருக்கனனைப் பரதன்தம்பியென்றும் கூறினள். பதியின்நீங்கி - அரசினின்றும் நீங்கியென்றுமாம்; இன் - தீக்கம். அரசின்றி நகரவாசஞ்செய்வதினும் வனவாசஞ்செய்தல் மேன்மையுடைத்து என்பதாம். பரதனுல் யாதுநேருமோ என்று அச்சங்கொண்டு இராமன் பரதனை உயிர்மாய்த்தலுங் கூடுமாதலால், அங்ஙனம்நேராதபடி அந்தப் பரதனைத் தம்பியோடு தவஞ்செய்யுமாறு காட்டுக்கு அனுப்புவது நன்று என மந்தரை கூறினளென்று முதனூல்கொண்டு கருத்துக்காண்க. பி-ம்:—[1]அவ். [2]ஆல். [3]செய்து. [4]விடுகை. (கருசு)

ருஅ.—பரதன் அரசரிவரிசையில் சோப்பெறவிடில் இறந்தலே நன்று எனல்.

பண்ணுறு கடகரிப் பரதன் பார்மகள்
கண்ணுறு கவினரா யினிது காத்தவம்
மண்ணுறு முரசுடை மன்னர் மாலியி
லெண்ணுறப் பிறந்தில னிறத்த னன்றென்றுள்.

(இ - ள்.) 'பரதன்—, பண் உறு கடம் கரி - கல்லணைபொருந்திய மத யானைச்சேனையையுடையனுகி [அரசனுகி],—பார்மகள் கண் உறு கவினர் ஆய் இனிது காத்த-நிலமகள் விரும்பத்தக்க அழகையுடையவராய் இனிமை யாக ஆண்ட, மண் உறும் முரசு உடை-மார்ச்சனைபொருந்திய பேரிகைகளை யுடைய, அ மன்னர் மாலயில் - அவ்வரசரது வரிசையில், எண் உற - கணக்கிடும்படியாக, பிறந்திலன்-; (ஆதலால்), இறத்தல்-, நன்று-,' என்றுள்-.

உலகத்திற் செல்வமில்லாதிருப்பது உயிர் நீங்கிய நிலக்கே ஒப்பாமாதலால் அரசச்செல்வமின்றிக் கிடக்கும் பரதன் இளவரசோடு உயிர்வைத்துக் கொண்டிருப்பதினும் இறந்துவிடுவதே நலமென்று மந்தரை கூறுகின்றனளென்க. மனு இட்சுவாகு மாந்தாதா முதலாகக் குலமுறைகளைதுபடலத்திற் கூறியவாறு சொல்லப்படும்அரசர்கோவ்டியிற் சேரப்பெற்றிலனெயென்பான் 'மன்னர்மாலயி லெண்ணுறப் பிறந்திலன்' என்றுள். இப்பாடலினை துணை மந்திரப்படலத்தின் சு-ஆஞ்செய்யுளோடு ஒத்துவருதல் காண்க. கரி - மற் றையங்கங்களுக்கும் உபலட்சணம். ஈண்டுக் கவின் என்றது - நீதிமுறை பிறழாத செங்கோலினதழகை. மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை என்றஇவற்றுன்வரும் கேடு தோன்றுதபடி காக்கவேண்டுதலின், 'இனிதுகாத்த' என்றுள். இதனுனே, ஆறலைப்பார் கள்வர் குறும்பு கூறுவார்முதலிய மாக்களும், பன்றி புலி கரடி முதலியவிலங்குகளுமாகிய பகையின்மையும் பெற்றும். மண்ணுறுத்தல் - "ஆவுதிமண்ணி" என்றுற் போலப் பண்ணுதலுமாம். இறத்தல்நன்று என்றவிடத்து இறத்தலே நன்று என்றுபொருளாதலால், ஏகாரம்-விகாரத்தால் தொக்கதென்க. "தோன்றிற் புகழொடு தோன்றுக வம்மதிலார், தோன்றலிற் றோன்றுமை நன்று" என்ற திருக்குறள் இங்குக் காணத்தக்கது. (கருஎ)

ருக.—கேகயநாட்டிற்குப் பரதனை யனுப்பியதன் காரணம் விளங்கிற்றென்றலும்.

பாக்கியம் [1]புரிந்திலாப் பரதன் றன்னைப்பண்
டாக்கிய பொலங்கழ லரச ணையாற்
[2]றேக்குயர் [3]கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று [4]போந்ததால்.

(இ - ள்.) பாக்கியம் புரிந்து இலா பரதன் தன்னை - (அரசாளுதற்குப் பொருந்திய) நல்வினையைச் செய்யாத பரதனை, பொலம் ஆக்கிய கழல் அரசன்-பொன்றற்செய்த வீரக்கழலையணிந்த சக்ரவர்த்தி, பண்டு - முன்னே, ஆணையால்-(தனது) ஏவலினால், தேக்கு உயர் கல் அதர்-தேக்குமரங்கள் உயரப்பெற்ற மலையைச்சார்ந்த பெருவழியாக, சேண்இடை - வெகுதூரத்தில் [கேகயநாட்டில்], கடிது-விரைவாக, போக்கிய - அனுப்பிய, பொருள் - காரணம், எனக்கு இன்று போந்தது - எனக்கு இப்பொழுது தெரியவந்தது; (என்று மந்தரை கூறினாள்); (எ - று.)—ஆல்-தேற்றம்: அசையுமாம்.

சேணிடைப்போக்கியது என்றது, தசரதன் பரதனைக் கேகயதேசத்தரசனாகிய அவன்மாமன் யுதாஜித்து அழைக்கச் சத்துருக்கனனோடு கூட்டி யனுப்பியதனை; இதனை "ஆணைநின்றன் முதுதாதையையகிற், காணியவிழைவ தோர் கருத்தனுதலாற், கேணியில்வளைமுரல் கேகயம்புகப், பூணைளிமார்பநீ போதியென்றனன்" என்பது முதலாகப் பரசுராமப்படலத்திற் கூறியதனை நினைக்க. இராமனுக்குப் பட்டங்கட்டுதற்குப் பரதன் ஒருகால் தடையாயிருப்பானென்ற காரணத்தினாலே யனுப்பியதாக மந்தரை கூறுகின்றாள். பி-ம்:— [1]புரிந்திலான். [2]தேக்குறு, தேக்கிய. [3]கவலதர். [4]போயிற்றால், போய்த்தென்றாள். சிலபிரதியில் போக்கினையிலையினிப்போதல்செய்யென்றாள் என்று நான்காமடி. சிலபிரதிகளில் "கல்வியும்" என்று தொடங்கும் கூஉ ஆம் பாடல் இப்பாடலின்முன்னேயுள்ளது. (கருஅ)

கூ○.—பரதனைக் குறித்து மந்தரை யிரங்குதல்.

மந்தரை பின்னரும் [1]வகைந்து கூறுவா
ளந்தரந் [2]தீர்ந்துல கனிக்கு நீரினாற்
[3]றந்தையுங் [4]கொடியனற் றாயுந் தீயளா
லெந்தையே பரதனே யென்[5]செய் வாயென்றாள்.

(இ - ள்.) மந்தரை—, பின்னர்உம் - பின்பும், வகைந்து கூறுவாள் - வகைப்படுத்துச் சொல்லுபவளாகி,—'அந்தரம் தீர்ந்து-வேற்றுமை கொண்டு, உலகு-இராச்சியத்தை, அளிக்கும்-(இராமனுக்குக்) கொடுக்கின்ற, நீரினால் - தன்மையினால், தந்தைஉம் கொடியன் - தகப்பனும் கொடியவன்; (அது கேட்டு மனம் உவக்கின்ற), நல் தாய் உம்-பெற்ற தாயும், தீயள்-கொடியவள்; எந்தையே-என்தந்தையே! பரதனே-! என்செய்வாய் - (இனி நீ) யாதுசெய்வாய்?' என்றாள்—; (எ - று.) ஆல் - தேற்றம்: இரக்கமுமாம்.

தகப்பனை தசரதனே உன்னிடத்து அன்பின்றிப் பட்சபாதமாக இராமனுக்கு முடிசூட்டுகின்றான்: பெற்றதாயாகிய இந்தக்கைகேயியாவது அதனைத் தடுத்து உனக்குமுடிசூட்ட முயலலாமே; நான் சொல்லியும் அவ்விஷயத்திற் சிறிதும் இவள் மனத்தைச் செலுத்துகின்றாளில்லை; அந்த இராம பட்டாபிஷேகத்துக்கு மனமுவக்கின்றாள்; இப்படி தகப்பனைடு பெற்றதாயோடு வாசியறக்கொடியராயிருக்கப்பெற்ற நீ, ஐயோ இனிஎன்செய்வாய்! என்று பரதனைக் குறித்து மந்தரை இரங்கிக்கூறினளென்க. எந்தையேயென்றது மரபுவழுவமைதி. பி-பி:—[1]வகுந்து, வரைந்து. [2]அந்தரத்தினிது, அந்தரந்தீர்த்து. [3]எந்தையும். [4]கடியன். [5]செய்தாற்றுவாய். (கஙிக)

சூக.—மீண்டும் மந்தரை கைகேயியை யிடித்துக்கூறுதல்.

[1]அரசரிற் பிறந்துபின் [2]னரச ரில்வளர்ந்
தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்ற
யுரைசெயக் கேட்கிலை [3]யுணர்தி யோவென்றாள்.

. (இ-ள்.) (மந்தரை மீண்டும் கைகேயியைப்பார்த்து):அரசர் இல் பிறந்து-அரசவமிசத்தில் உற்பவித்து, பின்—, அரசர் இல் வளர்ந்து-வேந்தர்வீட்டில் வளர்ந்து, அரசர் இல் புகுந்து-வேந்தர்வீட்டில் வாழ்க்கைப்பட்டு, பேர் அரசி ஆன நீ - பெரிய ராஜமகிஷியான நீ, கரை செயற்கு அரு - கரைகாணுதற்கு அரிதாகிய, துயர் கடலில் - துக்கசாகரத்தில், வீழ்கின்றாய் - விழப்போகின்றாய்;உரை செய கேட்கிலை-(நான்) சொல்லவும் கேட்கின்றாயில்லை; உணர்தி ஓ - (உனக்கு) உணர்ச்சியுள்ளதோ? [இல்லையென்று தோன்றுகின்றது], என்றாள்—; (எ - று.)

சாமானியமான குலத்துப்பெண்ணையிருந்தால் அவள் அரசியலையறியாளாதலால் மாற்றாளின்மகன் அரசனுவதைப்பற்றி அப்படிப்பட்டவட்குக் கவலையுண்டாகாமலிருப்பது இயற்கையே; நீ அரசகுலத்திற்பிறந்தாய்: பிறந்தது மாத்திரமன்றி அரசரில்லிலேயே வளர்ந்தாய்:அம்மாத்திரமன்றி அரசரில்லிற் புகுந்து பட்டமகிஷியுமானாய்: இப்படிப்பட்ட நீ உன்மகனுக்கு அரசியல் நேராது மாற்றாளின்மகன் அரசாட்சியைப்பெறுவது உனக்குப் பெருந்துயரை விளைவிக்கப்போகின்ற தென்பதையும் உணராமலிருக்கின்றாயே! என்று கைகேயிக்கு இடித்து மந்தரை மதி புகட்டியவாறு. வீழ்கின்றாய் - தெளிவுபற்றி எதிர்காலம் நிகழ்காலமாகக் கூறப்பட்ட காலவழுவமைதி. உணர்தியோ, ஓ - எதிர்மறை. பி-பி:—[1]அரசியற். [2]அரசினில். [3]உணர்விலோயென்றான். (கஙூ)

சூஉ —மந்தரை பரதனது அரசியற் குணங்கள் எல்லாம் பயனற்றுப்போவதற்கு இரங்கூதல்.

கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
வில்விசை யுரிமையு மழகும் வீரமு
மெல்லியில் குணங்களும் பரதற் [1]கேயது
[2]புல்லிடை யுகுத்தமு தேயும் போலென்றாள்.

(இ - ள்.) கல்விஉம் - வித்தையும், இளமைஉம்-யௌவனமும், கணக்கு இல் ஆற்றல்உம் - அளவில்லாத வல்லமையும், வில் வினை உரிமைஉம்-தனுர் வித்தையிலுள்ள சாமர்த்தியமும், அழகுஉம் - எழிலும், வீரம்உம்-வீரியமும், எல்லை இல் குணங்கள்உம் - மற்றும் அளவில்லாத நற்குணங்களும், பரதற்கு ஏயது-பரதனுக்குப் பொருந்தியுள்ளது,புல் இடை உகுத்த அமுது ஏயும்-புல் தரையில் சொரிந்த அமிருதத்தையொக்கும், என்றுள்—; (எ - று.)

அரசர்க்குரிய கல்வி முதலிய யாவும் பரதனிடத்து அமைந்திருந்தும் அரசு பெற்றுலன்றி வேறு வகையில் அவை விளங்காவாதலால் புல்லிலே சிந்திவிட்ட அமுதம்போல வீணுகுமென்பதாம். உகுத்தவென்னும் பெயரெச்சத்து அகரவீறு தொகுத்தல். போல் - அசை. உம்என்பதைப் போல் என்ப தோடு இயைத்து அமுதேபோலும் என்று உரை கூறுவாருமுளர். பி-ம்:— [1]எய்திய, எய்துபு. [2]புல்லிடையுக்கமுதேயும், புல்லிதுபுல்லுகுமமுதம். (கசுக)

வே று.

சுங.—மந்தரையின்கொடுஞ்சொற் கேட்டுக் கைகேயி சினந்து கூறத்தொடங்குதல்.

வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய்[1]க னற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்
[2]கேக யர்க்கிறை திருமகள் கிளரிள வரிக
டோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும்.

(இ - ள்.) வாய் கயப்பு உற - வாய் கசச்சும்படி, மந்தரை—, வழங்கிய-கூறிய, வெம் சொல் - கொடிய வார்த்தை, காய் கனல்தலை - எரிகிற நெருப்பில், நெய் சொரிந்து என-நெய்யைவார்த்தாற்போல, கதம் கனற்ற-கோபத்தை மிகுவிக்க, கேகயர்க்கு இறை திருமகள் - கைகேயி, கிளர் இள வரிகள் தோய்-விளங்குகின்ற சிறிய செவ்வரிகள் பொருந்திய, கயல் கண்கள்-கெண்டைபோன்ற கண்கள், சிவப்பு உற - (கோபத்தாற்) செம்மையடையும்படி, நோக்கினள்-பார்த்தவளாய், சொல்லும்-சொல்லுவாள்; (எ - று.)—கைகேயி சினந்து கூறுவதை மேல் நான்கு கவிகளிற் காண்க.

நெய்விடுந்தோறும் தீ மூண்டெரிதல்போல மந்தரை கடுஞ்சொல் வழங்குந்தோறும் கைகேயிக்குச் சினம் மிகுந்துவருதலின் 'காய்கனற்றலை நெய் சொரிந்தெனக் கதங்கனற்ற' என்று உவமைமுகத்தால் விளக்கினர். மந்தரை கைகேயிக்கும் அவள்மகனுக்கும் மேன்மையுண்டாகுமாறு கூறினுளேயாயினும், இராமனிடத்துச் சினங்கொண்டு கூறியசொற்களாதலின், "யாவ ரேதினினுங் கைக்குமாம் வேம்பு" என்ற நியாயம்பற்றி அக்கடுஞ்சொற்கள் சொன்ன அவட்குங் கயப்பை விளைக்கு மென்பார், கவி 'வாய்கயப்புற' என்றார்: இதனால் அவள் கூறிய இன்னுச்சொல்லின் தீமை விளக்கப்பட்டது. கயப்பு - கசப்பு. சொரிந்து - எச்சத்திரிபு. பி-ம்:—[1]எரித்தலை. [2]கேகயத் திறை. (கசுஉ)

சுசு.—இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்:
கைகேயி மந்தரையைக் கடிந்து கூறுதல்.

வெயின்[1]மு றைக்[2]குலக் கதிரவன் [3]முதலிய மேலோ
ருயிர்[4]மு தற்பொரு டிறம்பிணி [5]முறைதிறம் பாதோர்
மயின்மு றைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
[6]செயிரு றப்[7]புலச் சிந்தையா லென்சொலைப் தீயோய்.

(இ - ள்.) வெயில் முறை குலம் கதிரவன் முதலிய மேலோர் - கிரணங்களின் வரிசையையுடைய சிறந்த சூரியன் முதலாகிய பெரியோர், உயிர் முதல் பொருள் திறம்பின்உம் - உயிரும் மூலதனமும் தவறினாலும், முறை திறம்பாதோர் - நீதிமுறை தவறாதவர்; மயில் முறை குலத்து உரிமையை - (நான் பிறந்த) கேகயகுலத்தினது உரிமையையும், மனு முதல் மரபை - வைவச்சுவதமனுவினது சிறந்தவமிசத்தையும், செயிர் உற - குற்றமடையும்படி, தீயோய் - கொடியவளே! புலை சிந்தையால் - புன்மைக்குணமுள்ள மனத்தினால், என் சொலை - யாது சொன்னை? (எ - று.)

குலத்திற்கு ஆதிபுருஷனுதலாற் சூரியனையும், அவன்மகனுதலானும் அவனே அரசாட்சியை மேற்கொண்ட முதல்வனுதலானும் மனுவையும் கூறினாள். உயிர்முதல்பொருள் - உம்மைத்தொகை. இனி, உயிர்முதலிய சிறந்த பொருள்க ளென்றுமாம். பிறந்தஇடத்திலும் சான்புக்கஇடத்திலும் நிகழும் நிகழ்ச்சிக்கு மாறுபாடாக மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டங்கட்ட முயலுமாறு உன் இழிந்த மனப்போக்கின்படி துராலோசனை கூறுகின்றாயே; அடி துஷ்டை! யாரிடத்தில் என்ன சொன்னை? என்று கைகேயி மந்தரையை யதட்டுகின்றன ளென்க. அரசகுலங்களில் தான்பிறந்தகுலம் புக்க குலம் இவ்விரண்டின் முறைமையை நன்கு உணர்ந்தவ ளாதலால், அவ்விரண்டை யெடுத்துக் கூறினாள். மயின்முறைக்குலத்துரிமையை மனுமுதன் மரபை யென்பதற்கு - மயினது முறைமையைக்கொண்ட குலத்துரிமையையுடைய மனுமரபையென்று கூறி, மயில் முட்டையிட்டுப் பொரிக்கும்போது முதற்பார்ப்பின் கலாபத்துப் பீலி பொன்னிறமடைய மற்றைப்பார்ப்புக்களின் கலாபங்களின் பீலிகள் பொன்னிறமடையாதவாறு போல, முதற்குமாரனே மணிமுடிபுனைய மற்றையோர் முடிபுனையாமையை யுடையது மனுகுல மெனக் கருத்துவிரிப்பர்: இத்தொடர்க்கு, இன்னும் வெவ்வேறு வகையாகவும் உரைப்பர். செயிராவது - முறைபிறழ்வும், உலகநிந்தையும். பி - ம்:— [1]முதற். [2]குலத்திறையவன், குலத்திறைவனை. [3]முதலினர். [4]முறைப். [5]உரை. [6]செயிர்முறைப். [7]புலச். (சுசுடு)

சுரு. எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
றனக்கு நல்லையு மல்ல[1]யத் தருமமே நோக்கி
னுனக்கு நல்லையு மல்ல[2]வந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை [3]மதியிலா [4]டனத் தோய்.

(இ - ள்.) நீ எனக்கு நல்லவுடம் அல்லை - நீ எனக்கு நன்மையைச்செய் பவளுமன்று; என் மகன் பரதன் தனக்குவும் நல்லவுடம் அல்லை—; அ தருமம் நோக்கின்-அந்தாஜதருமத்தை நோக்குமிடத்து,உனக்கு நல்லவுடம் அல்லை—; மதி இலா மனத்தோய் - அறிவில்லாத நெஞ்சினையுடையவளே ! ஊழ்வினை வந்து தூண்ட - பழவினை வந்து தூண்டுதலினால், மனக்கு நல்லன - (உன்) மனத்துக்கு நன்றாயிருப்பனவுகளை, சொல்லினை - சொன்னாய்; (எ - று.)

நீ எனக்கு நல்லவள்போலவும் என்மகனிடத்து நல்லவள்போலவுஞ் சொல்லுகின்றாயாலும் உன்சொற்களைக்கேட்டு நாங்கள் நடந்தால் அது பழிபாவங்கட்கு ஏதுவாமாதலால், 'நீ எனக்கு நல்லையுமல்லை யென்மகன் பரதனுக்கும் நல்லையுமல்லை' என்கின்றாள். தன்தலைவிக்கும், அவள்மகனுக் குமே தீங்கிழைத்தல்பற்றி 'அத்தருமமேநோக்கின் உனக்குநல்லையுமல்லை' என்கின்றாளெனக. தீயவற்றை மனத்தினாற் கருதிச்சொல்லுதலும் பாவத்தை விளைக்குமாதலின் உனக்கு நல்லவழியில் மனஞ்செல்லாதது உன்னாழ் வினையே யென்பாள், 'ஊழ்வினை தூண்ட மனக்குநல்லன சொல்லினை' என் றாள். மனக்கு-அத்துச்சாரியை பெற்றுநின்றது. 'உன்மனத்துக்கு நல்லன' என்றதனால், சொல்லிற்குஞ் செயலுக்கும் நல்லனவல்லாதனை யென் பதூஉம், பிறர்மனத்திற்கு நல்லனையல்லாதனை யென்பதூஉம் பெற்றாம். **பி - ம்:**—[1]நீ. [2]நீ. [3]மதியிலி. [4]மறந்தாய். (கசுச)

சுசு. பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும்[1]புகழே
னிறந்தி றப்பினு நியாயமே திறம்பினு நெறியின்
றிறந்தி றம்பினுஞ் செய்தவந் திறம்பினுஞ் [2]செயிர்தீர்
[3]மறந்தி றம்பினும் [4]வரன்முறை திறம்புதல் [5]வழக்கோ.

(இ - ள்.) பிறந்து இறந்து போய் - (மனிதர்) பிறந்தாயினும் இறந்தாயி னும், பெறுவதுவும் - அடையும் பயனும், இழப்பதுவும் - இழந்து போகும் பயனும், புகழ்வெல் - கீர்த்தியென்றால், நிறம் திறம்பின்வும் - குணம் மாறுபடி னும், நியாயம்வ திறம்பின்வும் - நீதி மாறுபடினும், நெறியின் திறம் திறம் பின்வும் - சன்மார்க்கத்தினது தன்மை மாறுபடினும், செய் தவம் திறம்பின் வும்-செய்யப்படுவதாய தவம் மாறுபடினும், செயிர் தீர் மறம் திறம்பின்வும் - குற்றமற்ற வீரம் மாறுபடினும், வரன்முறை திறம்புதல் - தன்குலத்தினது ஒழுங்கு தவறுதல், வழக்குஓ - நியாயமோ? (எ - று.)

ஒருவர் கருத்தோடு பெறவேண்டுவது புகழே யாதலால், எதுபோவதாலு லும் புகழ்போகாமற் பார்த்துக்கொள்ளவேண்டும்; வரன்முறை தவறிநடக்க முயன்றாற் புகழ்கெடு மாதலால் அங்ஙனம் புகழ்கெட வரன்முறைதிறம்புதல் வழக்கன்று என்றவாறு: "தோன்றிற் புகழோடு தோன்றுக"என்றது, குறள். திறம்பினும் என்றவும்மைகள், திறம்பாமையுணர்த்தி நின்றன. செய்தவம் திறம்புதல் - மேற்கதி வீடுபேறு முதலியவற்றைப் பெறுவித்தலில்மாறுபடல்.

வழக்குத்திறம்புதல் வரன்முறையோ என்றுங் கூட்டியுரைக்கலாம். ஓ-எதிர் மறை. பி-ம்:—[1]புகழே. [2]மைதீர், செய்தீர், தீரா. [3]வறக். [4]மனுமுறை, மயின்முறை, உயர்முறை, அறன்முறை. [5]அழகோ. (கசுங)

சுஎ. போதி யென்னெதிர் [1]நின்றுநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது [2]பொறுத்தனன் புறஞ்சில ரறியி
னீதி [3]யல்லவு நெறிமுறை [3]யல்லவு நினைந்தா
யாதி யாதலி [4]னறிவிலி யடங்குதி யென்றாள்.

(இ . ள்.) என் எதிர் நின்று-என்னெதிரிலிருந்து, போதி - (அப்புறம்) போகக்கடவை; நின் புன் பொறி நாவை-அற்பப்பேச்சுக்களுக்கிடமாகிய உன் புல்லியநாக்கை, சேதியாது-அறுத்தெறியாமல், இது-இக்குற்றத்தை, பொறுத் தனன்-சகித்துக்கொண்டேன்; புறம் சிலர் அறியின் - (என்னையன்றி) வேறு சிலர் இதனையறிந்தால்; நீதி அல்லவும் நெறி முறை அல்லவும்-நியாயமல்லாத வையும் நல்லொழுக்கமல்லாதவையுமாகியவற்றை, நினைந்தாய் ஆதி-நினைந்து செய்ன குற்றத்துக்கு உள்ளாவாய்; ஆதலின்-ஆகையால், அறிவிலி-அறிவு கெட்டவளே! அடங்குதி-வாயைமூடு: என்றாள்—; (எ - று.)

நீ சொன்னதற்கு உன் நாவைத் தோண்டியறுக்கவேணும்: என் தோழி யாதலின் பொறுத்தேன்: புறத்தாரறியின் குற்றத்திற்கு உள்ளாவாய்; புறத் தாரறியாதபடி உன்வாயைமூடு என்று கைகேசி மந்தரையைக் கடிந்து கூறி னளென்க. இராமன் முடிபுனைவதற்குப் பொருதுகூறின நாவாதலின், 'புன் பொறி நா' என்றாள். பொறிநா - இருபெயரொட்டு. பி-ம்:—[1]நின்றுமுன், நிற்கினின், நின்றநின். [2]பொறுத்தினன். [3]அல்லன. [4]அடங்குதியறிவி. ()

சுஅ.—நீ சினந்தாலும் உனக்கு உறுதிகூறப் பிள்வாங்கே னென்று காலில்வீழ்ந்து மந்தரை கூறத்தொடங்குதல்.

அஞ்சி மந்தரை யகன்றில ளம்மொழி கேட்டு
நஞ்சு தீர்க்கினு நீர்கிலா ததுநலிந் தென்னத்
தஞ்ச மேயுனக் குறுபொரு ளுணர்த்துகை தவிர்ென்
வஞ்சி போலியென் [1]றடிமிசை [2]வீழ்ந்துரை வழங்கும்.

(இ - ள்.) நஞ்சு தீர்க்கின்உம்-விடத்தை நீக்கினாலும், அது நீர்கிலாது - அது நீங்காது, நலிந்(த)தென்ன-வருத்துதல்போல, மந்தை—, அ மொழி கேட்டுஉம்—, அஞ்சி அகன்றிலள்-பயந்து விலகாதவளாகி, 'வஞ்சி போலி - வஞ்சிக்கொடி போல்பவளே! தஞ்சமே-(எனக்குப்) பற்றுக்கோடா யிருப்பவ ளே!உனக்கு உறு பொருள் உணர்த்துகை-(நீ சினந்தாலும்)உனக்குப்பொருந் திய நற்காரியங்களை அறிவித்தலினின்று, தவிர்ேன் - நீங்கேன்', என்று—, அடிமிசை வீழ்ந்து-(அக்கைகேயியின்)காலில்வீழ்ந்து, உரை வழங்கும்-(ஈண் டுஞ் சில) சொற்களைச் சொல்வாள்; (எ - று.)—மந்தை கூறுவதை மேல் எட்டுச்செய்யுள்களிற் காண்க.

கடிந்துகூறினும் மந்தரை மீண்டுபோகாமல் கைகேயியின் மனத்தைக் கெடுக்குமாறு மறுபடியும் கூறுவதனால், 'நஞ்சுதீர்க்கினுந் தீர்கிலாதது நலிந் தென்ன' என்றார். நலிந்து - நலிந்தது: விகாரம். தஞ்சமே - துணையாக என்றுமாம். சிலபிரதிகளில், ஈற்றடி 'பஞ்சுசோவியவடிமிசைப்படிந்திவை பகரும்' என்று காண்கிறது. பி-ம்:—[1]அடியிணை. [2]வீழ்ந்திவை, முந்துரை. (சுகூ —இதுமுதல் எட்டுக்கவிகள்-ஒருதொடர்: மந்தரையின் தூர்ப்போதனை.

மூத்த வற்குரித் தர[1]செனு முறைமையி னுலகங்
காத்த மன்னனி லிளையனன் மேருகடல் வண்ண
னேத்து [2]நீண்முடி புனைவதற் [3]கிசைந்தன னென்றான்
[4]மீத்தருஞ் செல்வம் பரதனை விலக்குமா றெவனே.

(இ - ள்.) 'மூத்தவற்கு அரசு உரித்து-(வயதில்)முதிர்ந்தவனுக்கு இராச் சியபாரம் உரிமையுடையது', எனும் - என்கிற, முறைமையின் - கிரமப்படி (பார்த்தால்), உலகம் காத்த மன்னனில்-இராச்சியத்தையாண்ட சக்ரவர்த்தி யினும், கடல்வண்ணன்-கடல்போலும் நிறத்தையுடைய இராமன், இளையன் அன்றே-சிறியவ னல்லவோ; (அவ்வாறிருக்கச் சக்ரவர்த்தி அவனுக்கு), எத் தும் நீள் முடி புனைவதற்கு இசைந்தனன் - (யாவராலும்) புகழப்படுகின்ற பெரியகிரீடத்தைச் சூட்டுவதற்குச் சம்மதித்தனன்: என்றால்-ஆனால், மீ தரும் செல்வம்-மேன்மையைத்தருகின்ற அவ்வைசுவரியம், பரதனை விலக்கும் ஆறு-(அவனினும் இளையோனை) பரதனை (த் தகாதவனென்று) நீக்கும்விதம், எவன்ஓ :எங்ஙனமோ? (எ - று.)

'மூத்தவனிருக்க இளையவன் அரசுபுரிதல் கோத்தருமம் மன்று என்றால், மூத்தவனாகிய சக்ரவர்த்தி தான் இருக்கத் தன்னினும் இளையவனாகிய இராம னுக்கு முடிசூட்ட முயலுதல் எங்ஙனம்? அது அமையும்போழுது அவனி னுஞ் சிறியனனபரதனுக்கு முடிசூட்டத் தடை யாது?' என்பதாம். கடல் வண்ணன்என்ற தொடர்-கடல்போன்ற தன்மையுடையவனெனப் பொருள் பட்டு, கடலைக்கடைந்தபோது அது அழுதத்தைப் பயந்ததுபோல இராம பிரானைக் காட்டிற்குப்போமாறு அலைத்தால் அரசச்செல்வத்தைப் பரதனுக் குத்தருவா னென்ற கருத்தைப்புலப்படுத்து மென்பர், ஒருசாரார். பி-ம்:— [1]எனின். [2]நன். [3]இயைந்தனன். [4]பார்த்தரும், பாத்தரும். (ககூஅ)

எ0. [1]அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதா
மறநி னைந்து[2]மை வலிகில ராயினு மனத்தா
லிற[3]னு றும்படி யியற்றுவ ரிடையரு வின்னல்.

(இ-ள்.) அறம் நிரம்பிய-துறவறம் நிறைவதற்குக் காரணமாகிய, அருள் உடை-கருணையையுடைய, அரு தவர்க்கு என்னும் - செய்தற்குஅரிய தவத் தினையுடைய முனிவர்க்காயினும், பெறல் அரு திரு பெற்றபின்-பெறுதற்கு அரிய[மிக்க] செல்வத்தை யடைந்தபின்பு, சிந்தனை பிறிது ஆம் - எண்ணம்

வேறுகும்; (ஆதலால், இராமன் முதலிலோர்), மறம் நினைந்து-கொடுமையை யெண்ணி, உமை வலிகிலர் ஆயின்உம்-(இதுவரை) உங்களை உபத்திரவப்படுத் தாதவர்களாலுலும், மனத்தால் இறல் உறும்படி-நெஞ்சிலல் துன்பமடையும் படி, இடை அறு இன்னல்-நீங்காத தீவினை, இயற்றுவர்-(திரப் பெற்றபின்) செய்வர்; (எ - று.)

பரதன் அரசினைப் பெறலா மென்று காட்டிய மந்தரை, இராமன் அர சைசப்பெற்றால் உண்டாகுந் தீமையை இனி எடுத்துக்காட்டுகின்றாள். 'அருந் தவர்க்கேனும்' என்றதனால், முற்றத்துறந்த முனிவர்க்கே இங்ஙனமாயின் துறவாத இல்லறத்தார்க்குக் கூறல்வேண்டுமோ? என்றதாயிற்று. கைமுதிக நியாயம்பற்றி முன்னடிகள் பின்னடிகளைச் சமர்த்தித்துகின்றது - **தொடர் நிலைச்செய்யுட்பொருட்பேறணி:** வடநூலார் காவ்யார்த்தாபத்தியென்பர். "என் சிறுவர் செவ்வியர், அவ்வவர் துறைதொறு மறந்திறம்பலர்," "விரா வருபுவிக்கெலாம் வேதமேயன, விராமனைப்பயந்த வெற்கிடருண்டோ" என்று கைகேயி சொண்டுள்ள எண்ணத்தை மாற்றக் கூனி கூறிய தாகும், இது. இறல் - சாவுளனினுமாம். **பி ம்:**—[1]அறனிரம்பிய. [2]மெய் வலியிலர், உமைநலிகிலர். [3]நினைந்திட, இறும்படி. (ககக)

எக. புரியுந் [1]தன்மக னரசெனிற் பூதல மெல்லா
[2]மெரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையா மென்றுற்
பரியு நின்குலப் புதல்வற்கு [3]முனைக்குமிப் [4]படிமே
[5]லுரிய தென்[6]னவ [7]ளுதவிய வொருபொரு ளில்லால்.

(இ-ள்.) தன் மகன் அரசு புரியும் எனின்-தன்புத்திரன் அரசையாளுவ னென்றால், பூதலம் எல்லாம்-இந்நிலவுலகமுழுவதும், எரியும் சிந்தனை கோச லைக்கு - (பிறருடையபெருமையிற்) பொறுமைகொள்ளும் மனத்தையுடைய கௌசல்லையைக்கு, உடைமை ஆம் - உரிமையாகும்: என்றால்—, நின் பரியும் குலம் புதல்வற்குமும் - உனது அன்பிற்குரிய சிறந்த புத்திரனுக்கும் [பரத னுக்கும்], உனக்குமும்—, இ படிமேல்-இவ்வுலகத்தில், அவள் உதவிய ஒரு பொருள் அல்லால்-அவள் கொடுத்த ஒரு (சிறிது) செல்வ மல்லாமல், உரியது என் - உரிமையையுடையது (வேறு) யாது? (எ - று.)

கௌசலை பிறர்பெருமையைப் பொறுளாதலால், தன் சொற்படிகேட்கும் மகன் இராமன் அரசுபெற்றா னென்றால், அக்கௌசலை இப்போது இருப்பது போலச் செல்வாக்கு உனக்கு இருக்கும்படி விடாள்: அவள்பார்த்துக்கொடு த்த சிறுபொருளைக்கொண்டே நீயும் உன்மகனும் வாழவேண்டுமென்றனள் மந்தரையென்க. "பிறந்த சேயொடும், நீ துயர்ப்படுக (நிசை)" "கரைசெயற் கருந்துயர்க்கடலில் வீழ்கின்றாய் (சுக)" என்று கீழ்க்கூறியவற்றை இனி மந் தரை விவரித்துக்காட்டுகின்றனளென்க. இவ்வுலகத்துக்கு இன்றியமையாத பொருளை விருப்பின்படி இனிப்பெற முடியா தென எடுத்துக்காட்டியவாறு. [2]விரியுஞ்சிந்தனை என்ற பாடத்திற்கு - பிறரேற்றத்தைக்கண்டாற் பொறாமல்

விரிந்துபோகும் மனத்தையுடைய என்றுபொருள்காண்க: விசாலித்த மனத்தையுடைய என்று பொருள்கொள்வது மேற்கூறுவதோடு பொருந்தாதாம். பி-ம்:—[1]தன்மகற்கு. [2]இரியும். [3]னைக்கும். [4]பார்மேல். [5]உரிய. [6]அவர். [7]உறு பொருளுதவியதல்லால். (கஎ0)

எஉ. தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் [1]துயரா
லீண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி [2]யவளை
வேண்டி யீதியோ [3]வெள்குதி யோவிம்ம ணோயான்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி.

(இ - ள்.) தூண்டும்-(பிறரிடத்துப் போய் இரக்குமாறு) ஏவுகின்ற, இன்னல்உம்-துன்பமும், வறுமைஉம்-இல்லாமையும், தொடர்தர-(தம்மிடத்துத்) தொடர்ந்துநிற்க, துயரால் - துன்பத்தோடு, ஈண்டு வந்து - இவ்விடத்தில் வந்து, உனை-, இரந்தவர்க்கு - யாசித்தவர்க்கு, இரு நிதி - மிக்கசெல்வத்தை, அவளை வேண்டி ஈதி ஓ-அக்கோசலையை யாசித்து (அவளிடத்தினின்றுபெற்றுக்) கொடுப்பாயோ? வெள்குதி ஓ - (ஒன்றும் கொடுக்க இயலாதிருப்பது பற்றி) நாணுவாயோ? விம்மல் நோயால் மாண்டுபோதி ஓ - (இரப்பவர்க்குக் கொடுக்க இயலவில்லையே என்ற காரணத்திலுல் மனத்துத்தோன்றுகின்ற) வருத்தமாகிய நோயினுல் இறந்துபோவாயோ? மறுத்தி ஓ - (அவர்க்கு இல்லையென்று) கொடாதிருப்பாயோ? எங்ஙனம் வாழ்தி - எவ்வாறு சீவிக்கப்போகிறாய்? (எ - று.)

இராமன் அரசுபுரிவானுயின், கௌசலை தந்த சிறுபொருளே பெற்று வாழவேண்டு மென்று கூறிய மந்தரை, சிறுபொருளைப் பெறுவதால் விளையும் வருத்தத்தை இங்கு எடுத்துக்காட்டுகிறாள். பொருள் சுருங்குவதால் நேருந் தீங்கை, இதனாலும் அடுத்த செப்புளினாலும் எடுத்துக்காட்டியவாறு. ஈண்டு-சுட்டு நீண்டது. 'புகழே இன்றியமையாதது' என்று கூறிய கைகேயிக்கு, பொருளில்லாவிடின் இரப்பார்க்கொன்றீவார்மேல் நிற்கும் புகழ் எய்தலாகாதென்றுணர்த்த, இரப்போர்க்கீய வியலா தெனக் காட்டுகின்றா ளென்னலாம். "சாதலி னின்னுத தில்லை யினிததூஉ, மீத லியையாக்கடை" என்பவாகலான், 'மாண்டுபோதியோ' என்றாள். பி-ம்:—[1]துயராய். [2]மூகந்து, அவனை. [3]வெஃகுதியோ. (கஎக)

எக. சிந்தை [1]யென்செயத் திகைத்தனை யினிச்சில நாளிற்
றந்த மின்மையு மெளிமையு நிற்கொண்டு தவிர்க்க
வுந்தை [2]யன்னையுன் கிளைஞர்மற் றுன்குலத் துள்ளார்
வந்து [3]காண்பதுன் மாற்றவள் செல்வமோ மதியாய்.

(இ - ள்.) என் செய - என்ன செய்யலாமென்று கருதி, சிந்தை - உன் மனம், திகைத்தனை - திகைப்படைந்தாய்? இனி சில நாளில்—, தம் தம் இன்மைஉம் - தத்தம் இல்லாமையையும், எளிமைஉம் - (அதனாலுண்டாகிய) தாழ்வையும், நின்கொண்டு தவிர்க்க - உன்னுற் போக்கிக் கொள்ள, உந்தை-

உன்தந்தையோ, (அல்லது), அன்னை-(உன்)அன்னையோ, (அல்லது), உன் கிளைஞர் - உனதுசுற்றத்தவரோ, மற்று உன் குலத்து உள்ளார் - (அன்றி) உன்னுடைய குலத்துஉள்ளவராகிய மற்றவரோ, வந்து-(உன்னிடம்)வந்தால், காண்பது-அவர்கள் பார்ப்பது, உன் மாற்றவள் செல்வம் ஓ-நினது சக்களத்தியினது செல்வத்தையோ? மதிபாய்-ஆராய்ந்துபார்; (எ - று.)

பொருளில்லாமையால் வந்த இரப்பாளர்க்கு உதவஇயலாது என்று காட்டிய மந்தரை, இதனால் உன்னைச்சார்ந்தவர் ஒருகால் குறைபுற்று வந்தாலும் உதவவியலா தென்கின்றனளென்க. உன்னைச்சேர்ந்தவரெளிமையைப் போக்கவியலாது அவரதிரில் நீ இளிவரவுட னிருக்கநேருமெனக் காட்டியவாறு. இன்மை - நுகரப்படுவன யாவுமில்லாமை. மதிபாய் எனஇகழ்ந்து விளித்தனளென்னவுமாம். கிந்தைபென்செய எனத் தனிவாக்கியமுமாம்.

பி-ம்:—[1]செய்கையில். [2]உன்னை. [3]காண்பது மாற்றவள். (கஎஉ)

எச. காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் றுதைதனைத் தெறுகில னிராமன்
மாது லன்னவ [1]னுந்தைக்கு வாழ்வினி யுண்டோ
பேதை யுன்றுணை யாருளர் [2]பழிபடப் பிறந்தார்.

(இ - ள்.) காதல் உன் பெரு கணவனை-விருப்பத்தினையுடைய உனது பெருமையையுடைய கணவனுக்கு, அஞ்சி - பயந்து, அ கனி வாய் சீதை தந்தை - கொவ்வைக்கனிபோன்ற அதரத்தினையுடைய அத்தச்சீதையினது தகப்பனும், இராமன் மாதுலன்அவன் - இராமனுக்குமாமனுமாகிய அத்தச் சுநகராசன்,உன் தாதையை தெறுகிலன் - உன்தந்தையை அழித்தானில்லை; இனி நுந்தைதக்கு வாழ்வு உண்டுஓ-இனிமேல் நினதுதந்தைக்கு வாழ்த்துளதோ?(இல்லையாதலால்), பேதை-அறிவிலாய்! உன் துணை-உன்னைப்போல, பழிபட பிறந்தார்-நிந்தையடையும்படி பிறந்தவர், யார் உளர்-எவர்இருக்கின்றனர்? [ஒருவருமில்லை]; (எ - று.)

நீ பொருளின்மையால் வருந்தவேண்டுமென்று காட்டிய மந்தரை, உன் பெற்றோரையும் வருத்தத்திற்கு உள்ளாக்குபவளாவா யென்று இதனாற் காட்டுகின்றனளென்க. புகழே இன்றியமையாததென்று கூறிய கைகேயிக்கு இராமன் அரசுபெற்றால் உனக்குப் புகழைப்பெறுதலாகாதென்று கீழே நீரு பித்துக்காட்டி, இதனாற் பழியு முண்டாகுமென்று காட்டுகின்றாள். தசரதனுடைய தாட்சிணியத்துக்குக் கட்டுப்பட்டுச் சனகமகாராசன் கேகயவரசன் மீது படையெடாதிருக்கின்றானாதலால், தன்மருமகன் அரசுக்குவந்தால் உடனே உன் தந்தையின் இராச்சியத்தைச் சனகன் கைப்பற்றுவன்: ஆதலால், இனி அவனுக்கும் வாழ்வில்லாது போகும்: ஆகவே, பெற்றோரின் தீமைக்குக் காரணமான நீ பெரும்பழிக்கும் பாத்திரமாவா யென்றவாறு. மாதுலன் என்

பதற்குத் தாயோடுபிறந்தவ னென்பதே பொருளாயினும், அம்மான்பெண்ணை மணம்புரிவது தென்னாட்டவர் வழக்க மாதலானும், மாமனென்று மனைவியின் தகப்பனுக்கும் வழங்குதலானும் ஈண்டு மன்னியின்தந்தையை மாதுல னென்றார்; கீழ்ப்பாலகாண்டத்திலும் "நம்பன்மாதுலன்" என்றது காண்க. இராமன் மாதுலன் - இராமனதுமாதுலனாகிய கோசலதேசத்தரசன் எனப் பொருள்கொள்வாரு முளர்.உந்தைக்கு என்றும் பிரிக்கலாம். பி-ம்:—[1]உந்தை வாழ்வுண்டதுமதியாய். [2]வழிகெட. (களங)

எரு. [1]மற்று நுந்தைக்கு வான்பகை பெரிதுள [2]மறத்தார்
செற்ற போதிவர் சென்றுத வாரெனிற் செருவிற்
கொற்ற மென்பதான் றெவ்வழி யுண்டது கூறாய்
சுற்ற முங்கெடச் [3]சுடுதுயர்க் கடல்விழுத் துணிந்தாய்.

(இ - ள்.) மற்றுஉம்—, நுந்தைக்கு-உன்தந்தைக்கு,பெரிது வான் பகை உள - மிகவும்பெரியபகைவராகவுள்ள, மறத்தார் - கொடுமையையுடையவர், செற்ற போது - செருங்கிப்போர்செய்கின்றகாலத்தில், இவர்-இந்தக்கோசல நாட்டரசர், சென்று உதவார் எனின்—, செருவில்-போரில், கொற்றம் என்பது ஒன்று - வெற்றியென்று சொல்லப்படுகின்ற ஒருபொருள், எவ்வழி உண்டு - எவ்விதத்திலு ளதாகும்? அது கூறாய் - அதனைச்சொல்லு; (நீ), சுற்றம்உம் கெட-உறவினருங் கெடும்படி, சுடு துயர் கடல்-அழிக்கின்ற துன்பமாகிய கடலில், விழ - விழுவதற்கு, துணிந்தாய் - உறுதிகொண்டாய் போலும்; (எ - று.)

இராமன் உலகாள்வாளுலல் நின்தந்தைக்குப் போர்த்துணை யாகான்; ஆதலால் நின்தந்தையும் உறவினருங் கெடுவ ரென்பதாம். சனகன் பொரா விட்டாலும் மற்றும்இருக்கின்ற பல பகைவரும் பொருவாராயின், அப்போது துணையாவா ரில்லையே யென்று எடுத்துக்காட்டியவாறு. என்னுடைய பெற் றோர்கள் போரசராதலால் யான் உதவவேண்டிய நிலைமை அவர்கட்கு நேரா தேயென்று கைகேயி கருதக்கூடுமாதலால், போன செய்யுளாலும் இந்தச் செய்யுளாலும் பெற்ற குலத்தோர்க்கு இழிநிலைநேர்தற்குரிய வழியை மந் தரை யெடுத்துக்காட்டின ளென்க. துணிந்தாய்-விளியாகவுமாம். சுற்றமும்-எச்சவும்மை. பி-ம்:—[1]மற்றுன்றந்தைக்கும். [2]மறத்தாற். [3]கடுந்துயர். (களச)

எசு. கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீ
ருடுத்த [1]பாரக முடையவ னெருமகற் கெனவே
கொடுத்த [2]பேர ரசவன்குலக் கோமைந்தர் தமக்கு
மடுத்த [3]தப்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள்.

(இ-ள்.) உனக்கு அரு புதல்வனை-நினது பெறுதற்கரிய புத்திரனை [பர தனை], கெடுத்து ஒழிந்தனை - அழித்துவிட்டாய்; கிளர் நீர் உடுத்த பார் அகம்உடையவன்-விளங்குகின்றகடலை யாடையாகவுடுத்திய பூமியையுடைய சக்ரவர்த்தி, ஒரு மகற்கு என ஏ - ஒப்பற்றபுத்திரனுக்கென்றே, கொடுத்த-, பேர் அரசு-பெரிய இராச்சியபாரம், அவன் குலம் கோ மைந்தர் தமக்குஉம் -

அம்மகனது குலத்திற் பிறந்த சிறந்த புத்திரர்க்கும், அடுத்த தம்பிக்குஉம் - அவனைச்சார்ந்த தம்பிக்கும், ஆம் - (உரியது) ஆகும்; பிறர்க்கு ஆகும் ஓ - அயலார்க்கு உரியதாகுமோ? [ஆகாது]: என்றுள்-என்று (மந்தரை)கூறினள்.

"பரதஸ்சாபிராமஸ்ய தீருவம் வர்ஷஸாதாத்பரம் - பித்ருபைதாமஹம் ராஜ்யம் அவாப்தாபுருஷர்ஷபஃ [இராமன் நூறுவருஷம் ஆண்டபின் புருஷ சிரேஷ்டனை பரதனும் குலமுறையாகவந்த இராச்சியத்தை யடையப்போ கிறான்]" என்று சொன்ன கைகேயியின் சொல்லை மறுத்து, "பவிதாராக வோராஜா ராகவஸ்யாநுயஸ்ஸுதஃ-ராஜவம்ஸாத்துகைகேயி பரதஃபரிஹ்ரஸ் யதே-நஹிராஜ்ஞஸ்ஸுதாஸ்ஸர்வே ராஜ்யேதிஷ்டந்திபாமிநி [இராமன் அரச ஞகப்போகின்றான்; அவன்பின் அவனது மகன்: ஆதலால், அரசர் மாலேயி னின்று பரதன் நீக்கப்படுவான். செல்வீ! அரசரின் எல்லாப் புதல்வரும் இராச்சியத்தைப் பெறார்]" என்று மந்தரை கூறிய சொல்லின் கருத்தை உட் கொண்டது, இச்செய்யுள்: ஆகவே, தசரதன் இராமனுக்குக்கொடுத்த இராச் சியம் அவ்விராமனுக்கும் அவனைவிட்டுப் பிரியாத தம்பியாகிய இலக்குமண னுக்கும், அவ்விராமன் காலத்துக்குப்பின் அவன் சந்ததியார்க்கும் அநுப விக்க உரியதாகுமேயன்றி, பரதனுக்கு வருமாறுஇல்லை; பரதனுக்கு இராச் சியங்கிடைக்க உபாயந்தேடாமையால் அப்பரதனையுங் கெடுத்து நீயும் கெட் டொழிகின்றாயென்று கூனி கூறுகின்றாளென்பதே இச்செய்யுளின் பொருள். இச்செய்யுட்கு வேறுவகையாகப் பொருள்கூறுவது, கவியின் கருத்துக்கும் முதனூலுக்கும் முரண்படுவதாகும். இராமன் அரசையெய்திலுல் வினையுந் தீங்கு இன்னவையென்று கூறிய மந்தரை, இதனுல் பரதனுக்கும் அவன் வழியில்வருபவர்க்கும் அரசவுரிமையெய்தாதென்றுகூறித் தன்பேச்சைமுடிக் கின்றாளென்க. கோமைந்தனென்றது - அரசாள்வதற்குரிய மூத்தமைந்தனை. அடுத்ததம்பியென்றது - "நெய்குழலுறுமிழையெனதிலேதிரிவார்" என்றவாறு விடாதுபின் சென்று தொடர்ந்து கைங்கர்யஞ்செய்யுந் தம்பியாகிய இலக்கு மணனை. பி-ம்:—[1]பாரெலாம். [2]போதவன்றன். [3]நம்பிக்கும். (கஎடு)

எஎ.—மந்தரையின் போதனையினுல் கைகேயியின் மனம் மாறுபடுதல்.

தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய [1]சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் [2]பெற்றுள [3]வரமுண்மை யாலு
மாய வந்தண ரியற்றிய [4]வருந்தவத் தாலும்.

(இ - ள்.) தீய மந்தரை இ உரை செப்பலும்-கொடிய கூனி இவ்வார்த் தையைச் சொன்னவுடனே, இமையோர் மாயையும் - தேவர்களினது மாயத் தாலும், அவர் பெற்றுள வரம் உண்மையால்உம் - அத்தேவர் பெற்ற சிறந்த வரந்தவறுமையினுலும், ஆய அந்தணர் - அறவோராகிய வேதியர், இயற்றிய-

செய்த; அரு தவத்தால்உம் - (செய்தற்கு; அரிய தவத்திலுலும், தேவி தூய சிந்தைஉம் - கைகேயியின்து நல்லமனமும், சூழ்ச்சியின் - (மந்தரையின்) தீய ஆலோசனைப்படி, திரிந்தது - மாறிற்று; (எ - று)

இதுமுதல் இரண்டுகவிகள் - கவிக்கூற்று. இவ்வுரையென்றது - மூத்தவற்குரித்தரசு (சுக)" என்று தொடங்கி, "கெடுத்தொழிந்தனை" (எசு) என்ற பாடல் வரையிற் கூறிய விஷயங்களையெல்லாஞ் சுட்டும். அவையாவன—மூத்தவரிருக்க இளையவர் அரசு புரியலாமென்பதும், அரசிலுல் எப்படிப்பட்டவரும் சிந்தனைமாறி இடரியற்றுவரென்பதும், கோசலையின் பொருளாலேயே நீ வாழவேண்டுமென்பதும், இரப்பவர் சுற்றத்தாரேனும் மற்றையோரேனும் அவர்க்கு உதவ வியலாதென்பதும், மாற்றாரால் உன்னைப்பிறரோன் இராச்சிய மிழக்கநேரு மென்பதும், இனி ஒருகாலும் பரதனுக்கு இராச்சியம் வருமாறில்லை யென்பதும். இமையோர் வரமென்றது - இந்திராதிதேவர் பாற்கடலிற் கண்வளரும் பரமனையடைந்து பணிந்து அரக்கர்தங் கொடுமையைப் பகர, அதற்கு அவன் "வளையொடுதிகிரியும் வடவைதீதர, விளைதரு கடுவுடை விரிகொள்பாயலு, மிளஞ்ஞர்களெனவடி பரவ வேகினாம், வளைமதிலயோத்தியில் வருதும்," "வஞ்சகர்தந்தலை யறுத்திடர் தணிப்பென்" என்றதனை. திரியாத மனந்திரிந்தது என்பார் 'தூயசிந்தையுந் திரிந்தது' என்றார். தேவர்மாயையே கூனியாய்வந்து கைகேயிக்குப் போதிக்க, மூந்தியே அரக்கரைக் கொல்லுமாறு இமையோர் திருமாலினிடத்து வரம் பெற்றிருத்தலால், அரக்கராலலைப்புண்ட அந்தணர்கள் தவம்பலிக்கின்ற அக்காலத்துக்கு ஏற்ப, இராமபிரானிடத்துத் தன்புதல்வனிடத்திற்காட்டிலும் பேரன்புகொண்டிருந்த கைகேயியின் மனமும் அப்பிராணக் காலகம்புகுத்து மாறு திரிந்ததென்க. அந்தணர் - தண்டகாரணிபவாசிகளாகிய மாமுனிவர். மூன்றுமடி சிலபிரதிகளில் 'மாயையுந்தவும் வரம்பெற்றவரன்முறையாலும்' என்றும், 'மாயையுந்தவுமவர்பெற்றவர முண்மையாலும்' என்றும் காண்கிறது. பி-ம்:—[1]சிந்தனை. [2]பெற்றநல். [3]வரவு. [4]நல்லறத்தாலும். (கஎசு)

எஅ.—இதுவும் அது.

அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
தூரக்க [1]நல்லரு டுறந்தன [2]டூமொழி மடமா
னிரக்க மின்மையன் றேவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழழுதினைப் பருகுகின் றதுமே.

(இ - ள்.) அரக்கர் (இயற்றிய) பாவம்உம்-இராக்கதர்செய்த தீவினையும், அல்லவர் இயற்றிய அறம்உம்-தேவரும் முனிவருஞ் செய்த நல்வினையும், தூரக்க - ஏவுதலால், நல் அருள் துறந்தனள் - நல்லகருணையை விட்டவளாகிய, தூ மொழி மடமான் - பரிசுத்தமாகிய வார்த்தைகளையுடைய இளமையையுடைய மான்போன்ற கைகேயியினது, இரக்கம் இன்மை அன்றே - கருணையில்லாமையினலன்றே, இன்று-இப்பொழுதும், இ உலகங்கள்-இவ்வுலகத்

தவர், இராமன் - ஸ்ரீராமபிரானது, பரக்கும் தொல் புகழ் - பரவிய பழைய கீர்த்தியாகிற, அமுதினை-அமிருதத்தை, பருகுகின்றது - குடிக்கின்றது.

கைகேயியின் மனம் மாறுபடாதிருப்பின் சிறையிருந்தவளினேற்றத் தைத்தெரிவிக்கின்ற ஸ்ரீராமாயணமென்ற காவியரத்நமே தோன்றுதாதலால், கைகேயியின் மனத்திரிவிலும் உலகோர்க்கு நன்மையுண்டாயிற்றென்று நன்மையைத்தெரிந்து எடுத்து ஓதுகின்றனர் நூலாசிரிய ரென்க. இங்ஙனம் கைகேயியின் குற்றத்தைக் குணமாகக் கல்பித்துக் கூறியது—இலேசவணி யெனப்படும். அரக்கரையழித்தற்கும், முனிவரையுந் தேவரையும் அளித்தற் கும், இராமன் புகழினைப்பெறுதற்கும், வனம்புகுவித்த கைகேயியே காரண மாதலின் இங்ஙனங் கூறினர். அரக்கர்-ராக்ஷஸ் என்னும் வடமொழிச்சிதைவு. புகழை யழுதென்றார், கேட்போர்க்கு இனிமைபயத்தலும் பவத்துயர்துடைத் தலு முடைமைநோக்கி. பி-பி:—[1]நல்லறம். [2]தூய்மொழி மடமாது, கேகயன் றேவி.

(கஎஎ)

எகூ.—கூனியைக் கைகேயி மனமுவந்துநோக்கிப் பரதனுக்கு முடிசூட்ட உபாயம்கூறுமாறு வேண்டுதல்.

அனைய தன்மைய ளாகிய கைகய [1]னன்னம்
வினைநி ரம்பிய கூனியை விரும்பின ணோக்கி
யெனையு வந்தனை [2]யினியையென் மகனுக்கு மினையான்
புனையு [3]நீண்முடி பெறும்படி புகலுதி யென்றாள்.

(இ-ள்.) அனைய தன்மையள் ஆகிய-அப்படிப்பட்ட [மனம்திரிவுமாறின] தன்மையுடையவளாகிய, கைகயன் அன்னம் - கைகேயி,—வினை நிரம்பிய-தீவினை நிறைந்த, கூனியை—, விரும்பினள் நோக்கி - விரும்பிப்பார்த்து, '(நீ), எனை உவந்தனை-என்னிடத்து விருப்பம்வைத்தாய்; என் மகனுக்குமும் இனியை-என்புத்திரனுக்கும் நல்லவள்; அனையான் - அவன், புனையும் நீள் முடி - அலங்கரிக்கப்பெற்ற அழகிய கிரீடத்தை, பெறும்-அடைகின்ற, படி-விதத்தை, புகலுதி-சொல்லு,' என்றாள்—; (எ - று.)

'வினைநிரம்பிய கூனி' என்றதன்கண், கைகேயிக்குச் சூழ்ச்சிகூறினமை யால் இராம னவதரித்த தொழில் நிரம்புதற்குக் காரணமாகியவ ளென ஒரு பொருளுந் தோன்றுமா றறிக. "கண்கள் சிவப்புறநோக்கினள்" என்றதற்கு மாறுக 'விரும்பினணோக்கி' என்றும், "எனக்குநல்லையுமல்லை" என்ற தற்கு மாறுக 'எனையுவந்தனை' யென்றும், "என்மகன்பரதன் றனக்கு நல் லையுமல்லை" என்றதற்கு மாறுக 'இனியை-என்மகனுக்கும்' என்றும், "வரன் முறைதிறம்புதல்வழக்கோ" என்றதற்கு மாறுக 'புனையுநீண்முடி பெறும்படி புகலுதி' என்றும் கூறுகின்றாள்: மனந் திரிந்ததனா லென்க. மகனுக்கும்-எச்ச வும்மை. அனையான் - ஸ்ரீராமனுமாம். பி-பி:—[1]தனையை, தனயள். [2]என்மக னுக்குமிங்கனையான். [3]நன்.

(கஎஅ)

அo.—என்சொல்லுக்கேட்டால் உன்மகற்கு முடிசூட்டுவிப்பேனென்று மந்தரை கூறுதல்.

[1]டாழை யொண்கணி யுரைசெயக் கேட்டமந் தரை[2]யென்
றேழி வல்ல[3]ளென் றுணைவல்ல ளென்றடி தொழுதா
[4]டாழு மென்னினி யென்னுரை தலைநிற்பி னுலக
மேழு [5]முன் றொரு பெருமகற் காக்குவ னென்றாள்.

(இ - ள்.) மாழை ஒண் கணி-மாவடுப்போலும் அழகிய கண்களையுடைய கைகேயி, உரை செய-அவ்வார்த்தையைச் சொல்ல, கேட்ட—, மந்தரை—, 'என் தோழி வல்லள்-எனது தோழி சமர்த்தை; என் துணை வல்லள் - எனக்கு உதவியாயவள் சமர்த்தை', என்று - என்று (கைகேயியைப் புகழ்ந்து) சொல்லி, அடி தொழுதாள்-(அவள்)பாதங்களை வணங்கி,'என் இனி தாழும்-என்ன இனித் தாழ்ச்சியுண்டாகும்? [உனக்கு இனி ஒரு தாழ்வும் உண்டாகாதென்றபடி]; என் உரை தலைநிற்பின்-என் வார்த்தையின்படி நின்று செய்தால், உலகம் ஏழ்உம் - ஏழுலோகங்களையும், உன் ஒரு பெரு மகற்கு-தனது ஒப்பற்ற பெருமையுள்ள புத்திரனுக்கு [பரதனுக்கு], ஆக்குவன் - உரியனவாகச்செய்வேன்,' என்றாள்—; (எ - று.)

தன்கருத்துக்குக் கைகேயி இயைந்தமைபற்றி நயப்புரைத்தாள். 'என் துணைவல்லள்' என்பதற்கு-என்னைப்போலச் சமர்த்தை யென்று உரைத்தலுமொன்று. [4]தாழுமன்னிலையென்றபாடத்திற்கு, மன் ஆகுபெயராய்,மன்னிலை-(இராமனுக்குமுடிசூட்டக்கருதிய தசரத)மன்னவனது(மன)நிலைமை,தாழும்-மாறும்என்க; இனி, இராமன் இந்நாட்டைவிட்டுக் காட்டையடைவன் என்றும் உரைக்கலாம். தலைநிற்பின், தலை-தமிழுபசருக்கம். உலகம் ஏழ் - ஏழு தீவுகளாகவுள்ள பூமி யென்னலாம். பி-ம்:—[1]மாழையுண். [2]தான். [3]என்றடியினையிறைஞ்சின டொழுதாள். [4]தாழ்கிலென்னினி, தாழுமந்நிலை. [5]ஏழுமுன்றொருமகற்கு.

(களக)

அக.—முன் மன்னவ னளித்துள்ள இரண்டுவரங்களைக் கேட்குமாறு மந்தரை கூறுதல்.

நாடி யொன்று[1]நன் குரைசெய்வ னகுமணி யனையாய்
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் றலைவுற்ற வேலை
யாடல் வென்றியா னருளிய வர[2]மவை யிரண்டுங்
கோடி யென்றன வுள்ளமுங் கோடிய கொடியாள்.

(இ - ள்.) உள்ளம்உம் கோடிய கொடியாள் - மனமும் கோணியிருக்கின்ற கொடிய மந்தரை, 'நகு மணி அனையாய் - விளங்குகின்ற இரத்தினம் போன்றவளே! நன்கு நாடி ஒன்று உரைசெய்வன் - நன்றாக ஆராய்ந்து (உனக்கு) ஒருகாரியத்தைச் சொல்கின்றேன்: தோடு இவர்ந்த தார் சம்பரன்-பூவிதழ்கள் நெருங்கிய வெற்றிமாலையையணிந்த சம்பராசுரன், தொலைவு

உற்ற வேலை - (யுத்தத்தில்)மடிந்த காலத்தில், ஆடல் வென்றியான்-போரில் வெற்றியையுடைய சக்கரவர்த்தி, அருளிய - (உனக்குக்) கொடுத்த, வரம் அவை இரண்டுஉம் - இரண்டுவரங்களையும், கோடி - (இப்பொழுது) கொள் வாயாக,' என்றனள் - என்று (கைகேயியை நோக்கிக்) கூறினாள்; (எ - று.)

அருளிய என்பது - அவன்தானே உள்ளமுவந்து தந்ததாகையால் மறுக் கொணாது என்பதைக் குறித்தது; சம்பராசுரயுத்தத்தில் கைகேயி பிராணபா யத்தினின்று மீட்டுச் சாரத்தியஞ்செய்ததற்காகக் கொடுத்த வரம் என்பதாம். அவை - பகுதிப்பொருள்விகுதி. உள்ளமும் என்ற எச்சவும்மை, உடலுஞ் செயலும் பெயருங் கோடியவளென்பது குறித்துநின்றது. பி - ம்:—[1]உனக் குரைசெய்வெ னளிர்மலர்க்கையாய், நின்றுரைசெய்வ னலர்கதிரனையாய், உரைசெய்குவெ னளிர்மணிநகையாய், நின்றுரைசெய்வானளிர்மதிநகை யாய், நன்றுரைசெய்வெ னளிர்மலர்க் கையாய். [2]இவை. (கஅ0)

அஉ.—மந்தரை இருவரங்கள் இன்னவையெனக் குறித்தல்.

இரு[1]வ ரத்தினு மொன்றிரு லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை. [2]யேழிரு [3]பருவங்கள் பெயர்ந்து
திரித ரச்[4]செய்வ தொன்றிரு[5]செழுநில மெல்லா
மொருவ ழிப்படு முன்மகற் குபாய[6]மீ தென்றாள்.

(இ - ள்.) 'இரு வரத்தின்உம் - அவ்விரண்டுவரங்களுள், ஒன்றிரு ல் - ஒருவரத்திலுல், அரசு கொண்டு - இராச்சியபாரத்தை உன்மகனதாக்கிக் கொண்டு, ஒன்றிலுல்-மற்றொன்றிலுல், இராமன்—, பெரு வனத்திடை - பெரியகாட்டில், ஏழ் இரு பருவங்கள் - பதினான்கு வருஷங்கள், பெயர்ந்து-(அயோத்தியினின்று) நீங்கி, திரிதர - அலையும்படி, செய்வது - செய்க; (செய்தால்), உன் மகற்கு - னதுபுத்திரனுக்கு, செழு நிலம் எல்லாம் - வளத்தையுடைய உலகமுழுவதும், ஒருவழிப்படும் - அனுகூலமாய்விடும்; ஈது உபாயம் - இதுவே உபாயம்,' என்றாள்—; (எ - று.)

'நீ முதன்முதலில் முன்னர்ச் சம்பராசுரயுத்தத்தில் எனக்குத் தந்த வரங்களிரண்டையும் இப்போது தா என்று மன்னவனைக் கேள்: அவன் தருகிறே னென்றதும், அப்போது பரதனுக்குப் பட்டங்கட்டுமாறு ஒரு வர மும் இராமன் பதினான்குவருடம் வனஞ்செல்லுமாறு மற்றொருவரமும் கேட் டுப்பெறுக; இவ்வாறு இரண்டுவரமும் பெற்றால், உன் மகன் அரசுபுரிய இராமன் பதினான்குவருடம் காட்டிலில்லாமற் கானகஞ்சென்றுவிடுவன்: அத னால், அரசின்கீழ்வாழும் ஜநங்களெல்லாம் பரதனுக்கு வசமாகி அனுகூலமா வர்: இதுவே செய்யத்தக்க உபாயம்' என்று மந்தரை கூறின ளென்க. வழிப் படும் - பெயரெச்சமாய், உபாயமென்னும் பெயரோடு முடிதலுமாம். பெயர் ந்து - முடிசூட்டும்நிலையினின்றும் மாறியென்றுமாம். செய்வது-வியங்கோள்; திருக்கோவையாரில் "கொள்ளப்படாது மறப்பதறிவிலேன் கூற்றுக்களே" என்றவிடத்து மறப்பது என்பதுபோல. பி - ம்:—[1]வரத்தினில். [2]ஈரெழு, பதிறைலு. [3]பருவமும். [4]செய்தி. [5]செல. [6]இது. (கஅக)

அஉ.—இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்: கைகேயி கூனியைக் கொண்டாடுதல்.

உரைத்த கூனியை யுவந்தன [1]ளுயிருறத் தழுவி
நிரைத்த மாமணி யாரமு நிதியமு நீட்டி
யிரைத்த வேலைசூ ழுலகமென் றெருமகற் கீந்தாய்
தரைக்கு நாயகன் [2]ரூயினி நீயெனத் [3]தணியா.

(இ - ள்.) உரைத்த கூனியை - (இவ்வுபாயத்தைச்) சொன்ன மந்தரையை, (கைகேயி), உவந்தனள் - மகிழ்ந்தவளாய், உயிர் உற தழுவி-இறுகத் தழுவிக்கொண்டு, மணி நிரைத்த - ரத்தினங்களுமிழைத்த, மா ஆரம் உம் - விலையுயர்ந்த மாலையையும், (மா) நிதியம்உம் - மிக்க திரவியங்களையும், நீட்டி - கொடுத்து, 'என் ஒரு மகற்கு - எனது ஒப்பற்ற புத்திரனுக்கு, இரைத்த வேலை சூழ் உலகம் - ஒலிக்கின்ற கடலாற்சூழ்ந்த உலகத்தை, ஈந்தாய் - கொடுத்தாய்; (ஆதலால்), இனி - இனிமேல், தரைக்கு நாயகன் தாய் நீ-பூமிக்கரசனாகிய பரதனைப் பெற்றவள் நீயே,' என-என்று, தணியா-மகிழ்ந்து,—(எ - று.)—"என்ரூள்" என அடுத்த கவியோடு தொடரும்.

தன்மகனுக்குப் பட்டம் வருமாறு ஆலோசனை சொல்லித்தந்ததனால், கைகேயி மந்தரையை இறுகத்தழுவிக்கொண்டு அவளுக்கு ஆரமும் நிதியமுங் கொடுத்து அவளைப் புகழ்ந்தனளென்க. பீ - மீ:—[1]உள்ளுற. [2]தாயுநீயே யென, ஆகுவனினியென. [3]துணியா, தணியாய், தனித்தாய். (கஅஉ)

அக.—கைகேயி தன்துணிவை மந்தரைக்குக் கூறுதல்.

[1]நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி [2]சூட்ட
றன்று கானத்தி லிராமனைத் துரத்த லிவ்விரண்டு
[3]இன்றெய் தாவெனி லரசன்மு [4]னென்னுயிர் துறந்து
பொன்றி நீங்குதல் [5]புரிவென்யான் போதிநீ யென்ரூள்.

(இ - ள்.) 'நன்று சொல்லினை - (நீ) நல்லஉபாயத்தைச் சொல்லினாய்: நம்பியை நளிர் முடி சூட்டல் - பரதனைப் பெருமையையுடைய கிரீடத்தைச் சூட்டுதலும், இராமனை துன்று கானத்தில் துரத்தல் - இராமனை நெருங்கிய காட்டில் ஓட்டுதலும், இ இரண்டும்—;இன்று எய்தாவெனில்-இன்றுகைகூடா மற் போமாயின், அரசன்முன்-சக்கரவர்த்தியினெதிரில்,என் உயிர் துறந்து-எனதுபிராணனை விட்டு, பொன்றி-இறந்து, நீங்குதல் புரிவென் யான்-நான் ஒழிவேன்: நீ போதி - நீ போ,' என்ரூள்—; (எ - று.)—ஆம் - அசை.

நீ சொல்லியவாறு என்கணவனிடம் பரதனுக்கு முடிசூட்டவும் இராமனைக் காட்டுக்குஅனுப்பவும் இருவரம் கேட்பேன்: இவ்விருவரங்களையும் மன்னவன் கொடுத்தானெனிற் சரி: கொடாவிடின் அவன்முன்னிலையில்தானே என்னுயிரை விடுவேன்: இதுவே என்துணிபு: நீ போய்வருக என்றனள் கைகேசி யென்க. நம்பியை - நம்பிக்கு: உருபுமயக்கம். முன் - இடமுன். பீ-மீ:—[1]நன்கு. [2]சூட்டி. [3]அன்றதாமெனில். [4]ஆருயிர். [5]புரிகுவென்.

சிலபிரதிகளில் இங்கே கைகேயிப் படலம் என்று ஆரம்பிக்கின்றது:

அரு.—இதுழுதல்முன்றுகவிகள் - கைகேயி தன்னெயலங்கோலமாகச் செய்துகொண்டதைத் தெரிவிக்கும்.

கூனி போனபின் குலமலர்க் குப்பைநின் [1]றிழிந்தாள்
சோனை வார்குழற் கற்றையிற் [2]சொருகிய மாலை
[3]வான வார்மழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போற்
றே[4]ன வாவுறு வண்டின [5]மலமரச் சிதைத்தாள்.

(இ-ள்.) கூனி போன பின்-மந்தரை போயின பின்பு, (கைகேயி),குலம் மலர் குப்பை நின்று - சிறந்த மலர்களினது கூட்டத்தாலாகிய படுக்கையினின்று, இழிந்தாள் - இறங்கி, சோனை வார் குழல் கற்றையில்-பெருமழை பொழியும் மேகம்போற்கரிய நீண்ட கூந்தற்றொகுதியில், சொருகிய-சொருகியணிந்திருந்த, மாலை-பூமாலையை, வானம் வார் மழை நுழைதரும் மதி பிதிர்ப்பாள்போல்-ஆகாயத்திலிருக்கின்ற பெரிய கார்காலத்து மேகத்தில் நுழைந்திருக்கின்ற பூர்ணசந்திரனைச் சொரிவிப்பவள்போல, தேன் அவா உறு வண்டு இனம்-மதுவினிடத்துள்ள ஆசையினால் மொய்க்கின்ற வண்டுக்கூட்டம், அலமர-வருந்தும்படி, சிதைத்தாள்-கசக்கியெறிந்தாள்; (எ - று.)

கூந்தலிற்சொருகியிருந்த மாலையைக் கைகேயி எடுத்தெறிந்தது, மழையில் நுழைந்த மதியைப் பிதிர்ப்பதுபோலுமென்றார்; **தன்மைத் தற்குறிப்பேற்றவணி.** "பொங்கணைமேற்கிடந்தாள்" என்றதனை நோக்கி, 'குப்பை நின்றிழிந்தாள்' என்றார். குப்பை-தொகுதி: "போதின் குப்பை" என்பர், வனம்புகுபடலத்தும். **பி-ம்:**—[1]ஒழிந்தாள். [2]சுற்றிய. [3]வானமார், வானவா. வானமா. [4]அவாவுறும், அவாவற. [5]அலம்வர. (கஅச)

அசு. விளையுந் தன்புகழ் [1]வல்லியை வேரறுத் தென்னைக்
கிளைகொண் மேகலை சிந்தினள் [2]கிண்கிணி யோடும்
வளைது றந்தனண் [3]மதியினின் மறுத்துடைப் பாள்போ
லளக வாணுத லரும்பெறற் றிலதமு மழித்தாள்.

(இ-ள்.) விளையும் தன் புகழ் வல்லியை - வளர்கின்ற (தனது) கீர்த்தியாகிய கொடியை, வேர் அறுத்து என்ன-வேரோடு அறுத்தாற்போல, கிளை கொள் மேகலை-ஒளியைக்கொண்ட மேகலாபரணத்தை, சிந்தினள் - சிதறி, கிண்கிணியோடுஉம் பாதகிண்கிணியுடன், வளை - கைவளைகளையும், துறந்தனள் - எறிந்து விட்டு, மதியினின் மறு - சந்திரனிடத்துள்ள களங்கத்தை, துடைப்பாள் போல் - அழிப்பவள் போல, அளகம் வாள் நுதல் - கூந்தலையடுத்த ஒளியையுடைய நெற்றியிலுள்ள, அரு பெறல் திலதம் உம் - அரிய பெறுதலையுடைய திலகத்தையும், அழித்தாள்-துடைத்தாள்; (எ - று.)

வெண்ணிறவரதனங்களாலியன்ற கோவைகளையுடைமையால், மேகலை யறுத்தெறிந்தது - தன்புகழ்வல்லியை வேரோடு அறுத்தது போலு

மென்றூர்: இது - தற்குறிப்பேற்றவணி. நெற்றியில் திலகத்தை அவித்தது-மதியை மறுத்துடைத்ததுபோலு மென்ற இதுவும் தற்குறிப்பேற்றவணியே. மேகலையறுத்தது - தன் மனமாறுபாட்டைக் காட்டுதற்கு ஆதலால், 'புகழ் வல்லியை வேரறுத்தென்ன' என்றது. கிஞ-அதற்கு இனமாகிய அணிகளு மாம். கிண்கிணி-காரணப்பெயர். பி-பீ:—[1]வில்லியை. [2]மேகலை. [3]மதியினை.()

அஎ. [1]தாவின் மாமணிக் கலன்[2]முற்றுந் தனித்தனிச் சிதறி
நாவி[3]யோதியை நானிலந் தைவரப் பரப்பிக்
காவி[4]யுண்டக ணஞ்சனங் கான்றிடக் [5]கலுழ்ந்
பூ[6]வு திர்ந்ததொர் கொம்பெனப் [7]புவிமிசைப் புரண்டாள்

(இ - ள்.) தா இல் மா மணி கலன் முற்றுஉம்-குற்றமற்ற பெரிய இரத்தினமயமான ஆபரணங்களெல்லாவற்றையும், தனி தனி சிதறி - தனித்தனியாகச்சிந்தி,-நாவி ஓதியை-கஸ்தூரியணிந்த கூந்தலை, நானிலம் தைவர - பூமியைத் தடவும்படி, பரப்பி-அவிழ்த்துவிட்டு, காவி உண்ட கண்-நீலோற்பலம் போன்ற மையுண்ட கண்கள்,அஞ்சனம் கான்றிட-மை கரையும்படி, கலுழ-அழுதுகொண்டு, பூ உதிர்ந்தது ஓர் கொம்பு என - மலர்கள்உதிர்ந்ததாகிய ஒருவல்லிபோல, புவிமிசை - பூமியில், புரண்டாள் - விழுந்துருண்டாள்.

காவி-நிறத்திற்கு உவமை. முன் "நளினம்பூத்ததோர்வல்லி" என்றதற்கு ஏற்ப 'பூவுதிர்ந்ததொர்கொம்பு' என்றார். அணிகலங்களை நீக்கிய நிலையில் பூவுதிர்ந்த கொம்பை உவமை கூறுதலை "பிடிக்கைபோலுந்திரள் குறங்கினணியு நீக்கிப் பிணையன்ன, ளடிக்கிண்கிணியு மஞ்சிலம்பும் விரன் மோதிரத்தோடகற்றியபின், கொடிப்பூத்துதிர்ந்ததோற்றம்போற் கொள்ளத் தோன்றி" என்று சிந்தாமணியிற் கூறியிருத்தலுங் காண்க. "மேவருங்கலங் களை வெறுத்த மேனியர்...பூவுதிர்கொம்பென மகளிர்போயினர்" என்பர் மேல் ஆறுசெல்படலத்தும். பி-பீ:—[1]தாவினன் மணி. [2]மற்றும். [3]மென்குழல், நன்குழல். [4]உண்கண்கள், ஒண்கண்கள். [5]கலுழப், கலுழ்ந்து. [6]உதிர்த்தது. [7]படிமிசை, பார்மிசை, பொடிமிசை. (கஅசு)

அஅ —கவிக்கூற்று: அலங்கோலமாகக் கிடந்த கைகேயியின் வருணனை.

நவ்வி வீழ்ந்தென நாடக மயிறுயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றியாத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் [1]கேகயன் [2]றனையை.

(இ - ள்.) கேகயன் தனைய - கைகேயி,--நவ்வை கூர்தர - துன்பம் மிகுதலால், நவ்வி வீழ்ந்து என-மான் விழுந்தாற்போலவும், நாடகம் மயில் துயின்று என்ன - குலாவிக்கூத்தாடுகின்ற மயில் (அஃது ஓழிந்து) ஓடுங்கிக் கிடந்தாற் போலவும்,—சனகி ஆம் - சீதையாகிய, கடி கமழ்

கமலத்து அவ்வை - வாசனைவீசுகின்ற பொற்றூமரைமலரில் வீற்றிருக்கின்ற தாயாகிய இலக்குமி, நீங்கும்-(காட்டிற்கு) நீங்குவாள், என்று-, அயோத்தி வந்து அடைந்த-அயோத்தியாபுரியில் வந்து சேர்ந்த, அ மடந்தை தவ்வை என-அவ் விலக்குமியினது மூத்தவள்போலவும், கிடந்தனள்-விழுந்துகிடந்தாள்; (எ-று.)

மனத்தின்மாறுபாடுதோன்ற அலங்கோலத்தைக்கொண்ட நிலைமை யோடு கைகேசி பூமியிற்கிடந்தது-நவ்வி வீழ்ந்ததனையும், மயில் கொஞ்சிக்கூத் தாடுதலொழிந்து ஒடுங்கிக்கிடந்ததனையும், இலக்குமியாகிய சீதை நீங்குவது குறித்து மூதேவி குடிபுகுந்ததையும் போலு மென வருணித்தார்; முதலிரண் டும்-**உவமையணி**; மூன்றுவது-**தற்குறிப்பேற்றவணி**. கவ்வை கூர்தர-காரிய நிமித்தமாக என்றுமாம். அவ்வை - உலகமாதா. கவ்வை, அவ்வை-போலிகள். அயோத்தி-அயோத்யா என்னும் வடசொல்லின் திரிபு: சண்டையிடுவதற்குக் கூடாததென்பது பொருள்; அகழி, மதில், ஆயுதம், சேனை முதலியவற்றால் தக்க காவலுடைத்தென்பது கருத்து. தவ்வை - மூதேவி. ஆம் - அசை. பி - ம்:—[1]கைகயன். [2]தனயள். (கஅஎ)

மந்தரைசூழ்ச்சிப்படலம் முற்றிற்று.

ங-ஆவது கைகேசி சூழ்வினைப்படலம்.

அதாவது - கைகேயி ஸ்ரீராமபட்டாபிஷேகத்துக்கு இடையூறுசெய்ய ஆலோசித்த தீயசெயலைச் சொல்லும் பகுதி யென்பது பொருள். கைகேசி - கைகேயி என்பதன் விகாரம்; கேகயராட்டரசன்மக ளென்பது பொருள். இந்தப் படலத்திற்குப் பெயர்,'**கைகேசிப்படலம்**' என்று சிலபிரதியிற் காண் கிறது.

கூனியாற்கலக்கப்பட்டு மாறுபாடுற்று அலங்கோலத்தோடுகைகேயிகிடக் கையில், இராமபிரானுக்குப் பட்டங்கட்டுவ தென்று நிர்மானித்த அன்று நள்ளிரவில் தசரதசக்கரவர்த்தி இராமமகுடாபிஷேகத்தைக் கைகேயிக்கு உணர்த்துமாறு அவளதுமாளிகைக்குச்சென்று, கைகேயிபாயல்துறந்து அலங் கோலநிலையுடன்கிடப்பதைக் கண்டு, 'இவட்கு என்ன கேர்ந்தீதா!' என்று நெஞ்சு சோர்ந்து, தன்கைகளால்அவளை எடுக்கத்தொடங்க, கைகேயி அக்கை யினின்றுநீங்கி மண்ணில்வீழ்ந்து மெட்டுயிர்க்க, அதுகண்ட மன்னவன் அஞ்சி, 'நிகழ்ந்தது என்னை? யாரேனும் உனக்குத் தீங்கிழைத்திருந்தாற் சொல்: நான் அவர்களைச் செய்வதைக் காண்' என்று தேற்ற, அதுகேட்ட கைகேயி,'என்மீது உண்மையாக அன்புளதாயின், முன்கொடுத்த வரங்களைத் தருமாறு உறுதிகூறுக' என்ன, தசரதமன்னவன் அவளதுவஞ்சனையை யுணராது சிரித்து 'இராமன்மேல் ஆணை: நீ வேண்டும் வரங்களைத் தரு

கிறேன்'என்ன,கைகேயி'என்மகன் முடிசூடுவது முதல்வரம்:இராமனைக் காட்டிற்கு அனுப்புவது இரண்டாம்வரம்'என்று தன்கருத்தை யறிவித்தாள். அது கேட்ட மன்னவன் சொல்லொணாத்துயரத்தால் கீழ்வீழ்ந்து வெய்துயிர்த்து நாவறளுயிரொடுங்கமனம்புலர்ந்து ஒருபாற்கோபம்மூளவெம்பிப் புண்ணில் வேற்படைபுகப்பெற்றவேழம்போல வருந்தினன். மன்னனது அந்தநிலையைக் கண்டும் சிறிதும் மனமிளகாது கைகேயி நிற்க, அவளை நோக்கி மன்னன், 'நீ நிகைத்தது உண்டோ? யாரேனும் துர்ப்போதனைசெய்தார்களோ? சொல்' என்று விளவினன். கைகேயியோ, 'எனக்குத் துர்ப்போதனை செய்தாரும் இல்லை; நான் நிகைத்ததும் இல்லை: வரந்தந்தாற் கொள்கிறன்: இன்றேல், உனக்குவசையுண்டாக மாய்வேன்' என்றாள். அதுகேட்ட மன்னன் மிக வருந்திக் கைகேயியைப்பழித்துப் பின்பு 'இவளை இரந்துபார்ப்போம்' என்று கருதிப்பலபடிகெஞ்சி 'பூமியைக் கொடுத்துவிடுகிறன்: இராமன்மாத்திரம் நாட்டிலிருக்கட்டும்:இராமன் நீங்கினால் என்னுயிர் நீங்கும்:யான் உன்னடைக் கலம்' என்று காலில்வீழ்ந்து இரந்தான். என்னஇரந்தும், தன் நிலையினீங் காது கைகேயி விடாப்பிடியுடனிருத்தலை யறிந்து தசரதன் மிகவருந்திப்பல படியாகப்பழித்துத் தரையிற்புரண்டவண்ணங் கிடந்தான். அப்போதும் கைகேயி 'நீ வரத்தைக்கொடுத்தாற் கொடு: இல்லாவிடின் மாய்வேன்' என்றாள்:மன்னவன் பெருந்துயரத்தோடு'வரம் ஈந்தேன் ஈந்தேன்;என்மகன் காடு செல்ல, நான் வானகஞ்செல்லுகின்றேன்: நீ உன்மகனோடும் வசைக்கடலில் அழுந்துக' என்றுகூறி மூர்ச்சித்தான். தன்செயல்முற்றியதுகண்டு கைகேயி யும் துயின்றாள். பின்பு இரவுபோய்ப் பொழுதுவிடிந்தது;இராமபட்டாபிஷே கத்தைக் காணவேனுமென்று நகரத்தவர்யாவரும் அலங்காரஞ்செய்து கொ ண்டு எங்குந் திரண்டனர். அரசர்கள் பலரும் பட்டாபிஷேகமண்டபத்துக்கு வந்துசேர்ந்தனர். வசிட்டமுனிவன் பட்டாபிஷேகத்துக்கு வேண்டியபொ ருள்களைச் சித்தஞ்செய்துகொண்டு அந்தணர்களோடும் அம்மண்டபம் வந்து சேர்ந்தான்.இங்ஙனமிருக்கையிற் பட்டாபிஷேககாலம்வந்திட்டதென்று கணி கள் தெரிவித்ததனால் வசிட்டன் 'விரைவில் மன்னனையழைத்துவருக' என்று பணிக்க, சுமந்திரன் கைகேயியின் மாளிகையில் தசரதன் சென்றிருப்பது தெரிந்து அங்குச்செல்ல, கைகேயி 'இராமனை யழைத்துக்கொண்டுவா'என்ற னள். அதுகேட்ட சுமந்திரன் பட்டாபிஷேகத்துக்குத்தான் அழைத்துவரச் சொல்லினளென்றுகருதிப் பேருவகையோடுசென்று இராமபிரானையடைந்து வாய்புதைத்தவண்ணம் கைகேயி யழைத்துவரச்சொன்னசெய்தியைத் தெரி வித்து, 'மகுடஞ்சூடவிரைந்துவருக' என்றனன். இராமபிரானும் ஸ்ரீமந்நாரா யணமூர்த்தியை வணங்கிவிட்டு அரசர்சூழவும் பலவாத்தியங்கள் ஒலிக்கவும் தேரேறிச்சென்று வீதிகளைக்கடந்து பேருவகையோடு அரசர்திரண்டுள்ள மண்டபத்திற்புகாமல் கைகேயியின் மாளிகையிற் சென்றான்.கைகேயி தந்தை யைஞாடிவரும் இராமபிரானுக்கு எதிர்சென்று,தன்பாதங்களை வணங்கிநின்ற அவ்விராமபிரானிடம் 'தந்தையின்எவல்ஒன்று உளது' என்ன, ஸ்ரீராமன்,

தந்தையின்பணியை நீர் உரைசெய்யமுடியுமாலுல் யான்உய்ந்தேன்; நும் ணியைச் சிரமேற்கொள்வேன்: பணிமின்'என்ன, 'பரதன் உலகத்தையாள பதிணென்குவருடம் தவக்கோலத்துடன் காட்டில் வசித்துவரவேண்டும்'என் ாள். அதுகேட்ட ஸ்ரீராமன் இராச்சியபாரத்தைத் தாங்கவேண்டுமென்று ந்தைகூறிய நாளையினும் அப்போது முகமலர்ந்து இராச்சியச்சுமை தன்னை ிட்டு நீங்கியதற்காக மனமுவந்து, 'மன்னவன்பணியன்றுகில் நும்பணியே யினும் மறுப்பேனே? என்தம்பியின் செல்வம் என்னதே யன்றே? நும் ணி தலைமேற்கொண்டேன்: கானம் போகின்றேன்; விடைபெற்றுக்கொள் றேன்' என்றுனென்பது, இப்படலத்திற் கூறுகிற விஷயம்.

வேறு.

க.—தசரதன் கைகேயியின் மாளிகையை யடைதல்.

காழிகை கங்குலி னள்ள டைந்த [1]பின்றை
யாழிசை யஞ்சிய [2]வஞ்சொ லேழை கோயில்
வாழிய [3]வென்றயின் மன்னர் துன்ன வந்தா
ழெழி நெடுங்[4]கை மடங்க லாளி யன்ஞன்.

(இ - ள்.)கங்குலின் காழிகை-இரவின் காலம், கள் அடைந்த பின்றை-ுவை யடைந்த பின்பு, நெடு கை மடங்கல் ஆளி அன்ன - நீண்டகைகளை ுடைய ஆண்சிங்கத்தை யொத்தவனை, ஆழியான்-சக்கரவர்த்தி,—வாழிய ன்று - வாழ்வாயாகவென்றுசொல்லி, அயில் மன்னர்-வேலேத்தாங்கிய அர ர்கள், துன்ன - சூழ்ந்துவர, - யாழ் இசை-வீணையினதுஒலியும், அஞ்சிய - ுஞ்சப்பெற்ற, அம் சொல் - அழகியமொழியையுடைய, ஏழை - கைகேயியி னது, கோயில் - மாளிகைக்கு, வந்தான்—; (எ - று.)

இராசாங்க காரியத்தை யெல்லாம் கவனித்து உண்டபின்பு கள்ளிரவில் கைகேயியின் கோயிலுக்குத் தசரதன் சென்று னென்க. கைகேயியினிடத்து ுரசனுக்குக் காதல் மிகுதியாகையால், இராமபட்டாபிஷேகமாகிய உவகைச் செய்தியைத் தானே அவளிடம் சேரே தெரிவிக்கவேணுமென்று தசரதன் சென்று னென்பதை மூதனூலா லறிக. யாழிசையஞ்சிய சொல் - யாழிசை யினும் சொல் இனிதென்பதுகருத்து. 'அஞ்சிய' என்றதனுல் சொல்லின் பொருட் கொடுமையும், 'ஏழை' என்றதனுல் அறிவில்லாத மனத்தினது கொடுமையும் விளங்குகின்றன. வேந்தர்கருங்கிய போரையினிங்கித் தனித் திருக்க அந்தஃபுரத்திற்குச் செல்வாரேது மன்னர் உடன்செல்லுதற்கு இயையுமோ? எனின்,—மன்னர்மன்னனதலின் வழிவிடச்சென்று னென்க; அல்லது, உயிர்போலச் சிறந்த கட்பரசரென்று கொள்க. "எறுபோற்பீடு ுடை" என்றும், "மடங்கன்மொய்ம்பிஞர்"என்றும் கூறப்பதுதலால், பெரு மிதமுடையாளுக்குச் சிங்கவேறு கடையாளும் வலியாளும் உவமை. மடங்க லாளி - ஒருபொருளேக்குறித்த இருசொற்கள்; மடங்கல் - பிடரிமயிர் மடங்கி பிருக்கப்பெற்றதுன ஆண்சிங்கத்துக்குக் காரணக்குறி. காழிகை - காடிகா என்பதன்சிதைவு. அன்ன ஆழியான் - விகுதிபிரித்துக்கூட்டல். இனி, ஆழியையுடைய ஆளியன்ஞனென்றே யுரைப்பினுமாம். பி-ம்:—[1]வேலை. [2]சிசுஞ்சொல். [3]வென்றியன், வென்றயல். [4]கண். (கஅஅ)

உ.—தசரதன் கைகேயியை யணுகுதல்.

வாயிலின் மன்னர் வணங்கி நிற்ப வந்தாங்
[1]கேயின செய்யு [2]மடந்தை மாரொ டேகிப்
பாய றுறந்த படைத்த டங்கண் மென்மே
ளாயிழை தன்னை யடைந்த வாழி மன்னன்.

இதுவும் மேலிற்கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) மன்னர் - (தன்னுடன்வந்த) அரசர், வணங்கி - தொழுது, வாயிலின் நிற்ப - அந்தஃபுரவாயிலில் நிற்க,—ஆங்கு - அவ்விடத்தில், வந்து-ஓடிவந்து, ஏயின செய்யும் - ஏவினபணி செய்கின்ற, மடந்தைமாரொடு - பெண்களோடு, ஏகி - போய்,—பாயல் துறந்த - படுக்கையைவிட்ட, படை தட கண் - வேல்போன்ற [கூரிய] பெரிய கண்களையும், மெல் தோள் மெல்லிய தோள்களையுமுடைய, ஆய்இழைதன்னை-கைகேயியை, அடைந்த சேர்ந்த, ஆழிமன்னன் - சக்கரவர்த்தி,—(எ - று.)—"எடுக்கலுற்றான்" என அடுத்த கவியோடு முடியும்.

மந்தரையால் மனங்கலங்கலுற்ற கைகேயி தான் படுத்திருந்த இடத்தை விட்டுச் சினங்கொண்டபோது இருங்குங் கிருகத்திற்குப் போய் தன்னணி கலங்களையும் மாலைகளையும் களைந்தெறிந்து வெறுந்தரையிற் புரண்டுகிடந்தனளாக, தசரதன் வழக்கமாகக் கைகேயி படுத்திருக்கும் அறையிற்போய்ப் பார்த்து அங்கு அவளைக் காணுமையால் மனந்திடுக்கிட்டு அக்கைகேயி கோப கிருகத்திற் சென்றிருப்பதையறிந்து அங்குச்சென்று அவள் வெறுந்தரையிற் படுத்திருப்பதைக் கண்ணுற்று னென்று முதனூற்கு ஏற்க விரித்துரைக்க.

ஏயின - ஏவின: பெயர். ஆழிமன்னன் - சுட்டு. **பி-மீ:**—[1]ஏயது. [2]மடந்தை யாரொடேகி, அணங்கினர்கள் சூழ. (கஅக)

ங.—தசரதன் மனம்வருந்திக் கைகேயியைத் தழுவி யெடுக்கமுயலுதல்.

[1]அடைந்தவ ணைக்கி யரந்தை யென்கொல் வந்து
தொடர்ந்த தெனாத்துயர் கொண்டு சோரு நெஞ்சன்
மடந்தையை [2]மானை யெடுக்கு [3]மானை யேபோற்
றடங்கைகள் கொண்டு தழீஇ யெடுக்க லுற்றான்.

(இ - ள்.) அவண் அடைந்து - அவ்விடத்தைச் சேர்ந்து, நோக்கி - (அவளைப்) பார்த்து, 'வந்து தொடர்ந்தது அரந்தை என்-(இவளுக்கு) வந்து பொருந்தினதாகிய துன்பம் யாது?' என - என்றெண்ணி, துயர் கொண்டு - துன்பத்தையுட்கொண்டு, சோரும்-தளர்கின்ற, நெஞ்சன்-மனத்தையுடைய வனாய்,—மானை - பெண் மானை, எடுக்கும்-(துதிக்கைகொண்டு) தூக்குகின்ற, ஆனை ஏ போல் - களிற்றைறப்போல, தட கைகள் கொண்டு - பெரிய கைகளால், மடந்தையை - அவளை, தழீஇ - கட்டியணைத்து, எடுக்கல் உற்றான் - தூக்கத்தொடங்கினன்; (எ - று.)—என் கொல், கொல் - அசை.

அந்தக்கைகேயி தரையில் வீழ்ந்துகிடப்பது கண்டு பெருந்துயரமடைந்த தசரதன் 'என்னசொல்லுவளோ! என்னசெய்வளோ?' என்ற அச்சத்தோடு வேடனது நஞ்சுதீற்றிய அம்பால் அடியுண்டுவீழ்ந்த பெண்யானையை நெடுங் காட்டில்திரியும் பெருங்களிறு பரிசிப்பதுபோலத் தன்கையாற் பரிசித்தா னென்று முதனூல் கூறும். அவள்நோக்கியெனப்பிரித்து, இரண்டனுருபு தொக்கதாகவுமாம். வந்து தொடர்ந்ததென்றதனால்,இதுகாறுந் துயரமின்மை பெறப்பட்டது. கைகளெனப் பன்மையாற் கூறுதலால், இருகைவேழத்தை யுவமையாக்குக. மடந்தை - வேட்கைபிறந்த பருவத்துப் பெயர். பி - ம்:— [1]அடைந்தவன், அடைந்தனன், அடைந்தவர், அடைந்தது. [2]மாலை. [3]யானை.

சு.—மன்னவன்கையைத்தள்ளிக் கைகேயி பூமியில்வீழ்ந்து நெட்டுயிர்த்தல்.

நின்று தொடர்ந்த நெடுங்கை [1]தம்மை நீக்கி
மின்றுவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தா
ளொன்று மியம்பல னீங் யிர்க்க லுற்றான்
[2]மன்ற லருந்தொடை மன்ன னுயி யன்னாள்.

(இ-ள்.) மன்றல் அரு தொடை மன்னன்-வாசனையையுடைய (கிடைத் தற்கு) அரிய மாலையைத் தரித்த சக்ரவர்த்தியினது, ஆவி அன்னாள்-உயிரை யொத்த கைகேயி,—தொடர்ந்து நின்ற - தழுவியெடுத்து நின்ற, நெடு கை தம்மை-(அரசனுடைய) பெரிய கைகளை, நீக்கி-தள்ளி, மின் துவள்கின்றது போல - அசைகின்ற மின்னலைப்போல, மண்ணில் வீழ்ந்தாள்-பூமியில் (மறு படியும்) விழுந்து, ஒன்றுஉம் இயம்பலள்-ஒன்றும் பேசாதவளாய், நீடு உயிர்க்கல் உற்றாள் - பெருமூச்சுவிடத் தொடங்கினாள்; (எ - று.)

அரசனுக்கு ஆவிபோலச் சிறந்த கைகேசி தன்னைத் தழுவியெடுக்கலுற்ற தசரதனது கைகளைத் தள்ளி ஒரு மின்னற்கொடிபோல் துவண்டு மண்ணில் விழுந்து மன்னவனுக்கு மறுமாற்றமொன்றுஞ் சொல்லாமல் நெட்டுயிர்த்தன ளென்பதாம். நின்றுதொடர்ந்த=தொடர்ந்துநின்ற: விருதிபிரித்துக்கூட் டல். பி-ம்:—[1]தன்னை நீக்கி, எழைநீக்கி, நீக்கியேழை. [2]மன்றலாவ னவியன்னமன்னாள், மன்றளாதாவனவியன்னமன்னாள், மன்றளாதாவனவி யன்னமங்கை. (ககக)

ரு.—தசரதன் அதுகண்டு 'உனக்கு நிகழ்ந்ததைச் சொல்' என்று வேண்டுதல்.

அன்னது கண்ட வலங்கன் மன்ன னஞ்சி
யென்னை [1]நிகழ்ந்த [2]திஞ்ஞ லமெழில் வாழ்வா
ருன்னை யிகழ்ந்தவர் மாள்வ ருற்ற தெல்லாஞ்
சொன்னபி னென்செயல் காண்டி [3]சொல்லி டென்றான்.

(இ-ள்.) அன்னது கண்ட-அந்தக்கைகேயிமண்ணில்வீழ்ந்து நெட்டுயிர்த் தலைப்பார்த்து; அலங்கல் மன்னன்-மாலையையுடையஅரசன்; அஞ்சி-பயந்து;

'நிகழ்ந்தது என்னை - நடந்தகாரியம் யாது? இ ஞாலம் ஏழில் வாழ்வார் - இவ்வேழுலகங்களில் வாழ்பவர்களுள், உன்னை இகழ்ந்தவர் மாள்வர் - உன்னை இகழ்ந்தவர் (எவராயிருந்தாலும் அவர்கள் என்னாற்கொல்லப்பட்டு) உயிரையிழப்பார்கள்; உற்றது எல்லாம் நடந்தது முழுவதும், சொன்னபின் - (நீ) சொன்னபின்பு, என் செயல் காண்டி - என் செய்கையைப் பார்; சொல்லிடு - (நிகழ்ந்ததைச்) சொல்வாயாக,' என்றான்—; (எ - று.)

கைகேயியின் கொடியவெண்ணத்தை யுணராத தசரதன் 'இவள் இங்ஙனம் மண்ணில்வீழ்ந்து நெட்டுயிர்த்தற்கு யாதுகாரணமோ? யார் இவட்குஎன்ன அவமானஞ் செய்தார்களோ? அன்றி எதேனும் உடலில்நோய் தோன்றியுள்ளதோ?' என்ற எண்ணத்திலால் மனநடுக்கங்கொண்டு, 'உன்னை எவரேனும் இகழ்ந்தார்களா? அப்படி எவரேனும் இகழ்ந்திருப்பின் அவர்களை இப்பொழுதே கொன்றுவிடுகிறேன்; அன்றி, உடம்பில்எதேனும் நோய் தோன்றியுளதா? அப்படிஎதேனும்இருப்பினும் என்னிடம் மிகச்சிறந்த மருத்துவர் இருத்தலால் அவர்களைக்கொண்டு ஒருநொடியில் உன்நோயைப் போக்குவேன்: உனக்கு நேர்பட்டுள்ளது இன்னதுஎன்று விவரமாகச்சொல்: சொன்னால் அதற்குத் தக்கபரிகாரத்தை உடனேசெய்கின்றேன்:பார்'என்று தசரதன் நல்வார்த்தை சொல்லிக் கைகேயியைத் தேற்றப்பார்த்தனனென்க. சொன்னபின் - வினையெச்சம். காண்டி - முன்னிலையொருமைவினைமுற்று. என்னாற்கொல்லப்படுவரென்பான் மாள்வரெனத் தன்வினையாற் கூறினான். பி-ம்:—[1]இகழ்ந்தது. [2]இவ்வேழு ஞாலமாள்வார், இவ்வேழு ஞாலம்வாழ்வார். [3]சொல்லிது, சொல்லுக.

(ககஉ)

கூ.—தசரதன்சொல்லைக் கேட்ட கைகேயி முன்தந்தவரத்தைக் கொடுக்கவேண்டுதல்.

[1]வண்டுளர் தாரவன் வாய்மை கேட்ட [2]மங்கை
[3]கொண்ட னெடுங்கணி னைவி கொங்கை [5]கோப்ப
வுண்டுகொ லாமரு [6]ளுன்க ணெனக ணெணக்கிற்
[7]பண்டைய [8]வின்று [9]பரிந்த னித்தி யென்றாள்.

(இ - ள்.) வண்டு உளர் தாரவன் - வண்டுகள் ஒலிக்கின்ற மாலையையுடைய அரசனது, வாய்மை - வார்த்தையை, கேட்ட-செவியுற்ற, மங்கை-கைகேயி,—கொண்டல் - நீர்கொண்டமேகம்போல, நெடுங் கணின் - பெரியகண்களினின்று, ஆவி - நீர்த்துளிகள், கொங்கை கோப்ப-தனங்களில்நிறையும்படி, (அழுதுகொண்டே), 'என்கண்-என்னிடத்தில்,அருள்உண்டு கொல், கருணை இருக்கின்றதோ? உன்கண் - உன்னிடத்தில், ஒக்கில் - இருந்தால். பண்டைய - முன்னேகொடுத்தவற்றை, இன்று - இப்பொழுது, பரிந்து. - விரும்பி, அளித்தி - கொடுப்பாயாக,' என்றாள்—; (எ - று.)—ஆம் - அசை.

மங்கை-பெண்மாத்திரையாய் நின்றது. கண்ணீர்த்துளிகள் முத்துக்கள் போலுதலால், 'கோப்ப' என்றார். பண்டைய-ஐகாரச்சாரியையை இறுதியிற் பெற்றுவந்த பண்டென்னும் மென்றொடர்க் குற்றியலுகரத்தடியாகப்பிறந்த

பலவின்பாற்பெயர். பண்டையவென்றது - சம்பரனைத சமர்புரிகையில் போர்த்துணையாய் நின்றதனுக்குக் கொடுத்த வரமிரண்டனையும். பி-ம்:— [1]வண்டனி. [2]நங்கை. [3]கொண்ட. [4]கண்ணை. [5]போர்ப்ப. [6]என்கணுண்மை நோக்கின், என்கணுன்கணைக்கின். [7]பண்டையது. [8]அன்று. [9]பரிந்துதா வது, பரிந்துதானது, பரிந்துதாரல், பரிந்துதானீ. (ககங)

எ.—தன்னிடம் ஏதோவேண்டத்தான் கைகேயி இங்ஙனம் இருக்கின் றனென அறிந்த தசரதன் வேண்டுவதைத் தருவேனென்று ஆணைபிடல்.

கள்ளவிழ் கோதை [1]கருத்துணரா தமன்னன்
[2]வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன [3]நக்கா
னுள்ள [4]முவந்தது செய்வ [5]னென்றுமு லோபேன்
வள்ள விராம [6]னுன்னமந்த ணாணை யென்றான்.

(இ - ள்.) கள் அவிழ் கோதை-தேன்வழிகின்ற கூந்தலையுடையவளான கைகேயினது, கருத்து-எண்ணத்தை, உணராத-அறியாத, மன்னன்-சக்ர வர்த்தி,—வெள்ளம் நெடு சுடர் மின்னின் - மிகுந்த பெரிய ஒளியையுடைய மின்னல்போல, மின்ன - விளங்கும்படி, நக்கான்-சிரித்து, 'உள்ளம் உவந் தது (உன்)மனம் விரும்பியதை, செய்வன்-செய்வேன்; ஒன்றும் உலோபேன்-சிறிதும் லோபஞ்செய்யேன்; உன் னைந்தன் - தனது பிள்ளையும், வள்ளல்-வள்ளலுமாகிய, இராமன்-இராமன்மேல், ஆணை சத்தியம்,' என்றான்—.

நீ வேண்டியதைத்தருவேனென்று தசரதமன்னன் சொல்லக் கேட்டுச் சிறிது தேறிய கைகேயியின் வெண்திங்களினால் பிரகாசிக்கின்ற செப்பத் தொடங்கி, அம்மன்னவன்: தனது உயிரைக்காட்டிலும் மேலானவனை மதித் திருக்கும் இராமபிரான்மீது ஆணையிட்டு வேண்டியதைத் தருவதாகச் கைகே யிக்கு உறுதி கூறின னென்க. கள் - சூட்டியமலர்மாலையினின்றும் பெருகு வது; வாசனையுமாம். கள்ளவிழ் கோதை-அடைபடுத்தவாகுபெயர். நக்கான்- பிறர்பேதைமையான் நக்க நகை. "உண்ணிறங்காட்டிநீரென்னுயிர்தரவு லோபினீரே", "எருதுகளோது பொருதி யது முலோபாய்காணம்பீ" என்பவற்றிற்போல, உலோபேன்னென்பது - லோபமென்னும் வடமொழிப் பெயரடியாகப் பிறந்த எதிர்மறைவினைமுற்று. லோபம் ஈயாமை. வள்ளல் மன்னன் எனக் கூட்டுதல் சிறப்பு. தனக்குப்போல அவனுக்கும் இராமனிட த்து அன்புஇருந்தது கருதி, 'இராமனுன்னமந்தன்' என்றான். பி ம்:—[1]கருத் துணர்ந்த. [2]வெள்ளை. [3]நக்கானகு. [4]உவந்துள. [5]ஒன்றும்லோபேன், ஒன்றுலோவேன். [6]நின். (ககச)

அ.—முன்னிந்த வரத்தையே கோடுத்துமாறு கைகேயி கேட்டல்.

ஆன்றவ னவ்வுரை கூற [1]வன்ன மன்று
மோன்றிய பேரவ லந்[2]து டைத்த லுண்மோடற்
சான்றிமை யோர்குல மாக [3]மன்ன நீயன்
றென்ற வரங்க ளிரண்டு மீதி யென்றாள்.

(இ - ள்.) ஆன்றவன்-தசரதன், அ உரை கூற - அந்தவார்த்தையைச் சொல்ல, அன்னம் அன்ஞள் - அன்னப்பறவைபோல்பவளான கைகேயி, 'தோன்றிய பெரு அவலம் துடைத்தல் உண்டுஎல் - (எனக்கு) உண்டாகிய மிக்கதுன்பத்தைப் போக்குவது உளதாஞல், மன்ன-அரசனே! இமையோர் குலம் - தேவர்கூட்டம், சான்று ஆக - சாக்ஷியாகட்டும்: நீ அன்று என்ற வரங்கள் இரண்டும்-நீ அக்காலத்தில் (கொடுப்பதாய்) அங்கீகரித்த இரண்டு வரங்களையும், ஈதி - (இப்பொழுது) கொடுப்பாயாக', என்ஞள்—; (எ - று.)

இராமன்மீது பிரதிஜ்ஞைசெய்து கொடுத்தபின்பு, கைகேயி 'நீ என் துயரைப் போக்குமாறு பிரதிஜ்ஞைசெய்ததற்கு முப்பத்துமுக்கோடி தேவர் களும் சந்திரசூரியர்களும் மற்றுமுள்ள தேவர்களும் முதலியோர் சாட்சி: நான் அபூர்வமாக ஒன்றும் உன்னைக் கேட்கவில்லை; முன்பு உன்ஞல் தரப் பட்டு உன்னிடத்தே வேண்டியபோது கொள்ளுமாறு வைத்திருந்த இரண்டு வரங்களையுந்தான் கேட்கிறேன். அவற்றைத் தருவாய்' என்றனளென்க. இங் ஙனம் முன்னிந்தவரத்தையே மீட்டுங்கேட்பதற்குக் கைகேயி மன்னவனைக் கட்டுப்படுத்துவது, தான் கேட்கப்போவது தசரதமன்னவனுக்கு மிகவும்அநி ஷ்டமானதாகையால் எங்கேவாக்குத்தவறிவிடுவானேஎன்று அஞ்சியதனாலென் க. ஆக-முற்று: வினையெச்சமாகக் கொண்டு உரைப்பினுமாம். ஆன்றவன்- பலகுணங்களாலும் நிறைந்தவன். பி ம்:-[1]ஐயமில்லான். [2]துடைப்பது, துடை த்தது. [3]மன்னமுன்னீ, முன்னர்மன்ன, முன்னநீயன்று, முன்னர்நீயன்று. சிலபிரதியில்'வானவர்வானவமன்னர்மன்ன முன்னீ' என்று மூன்றுமடி. ()

கூ —தசரதன் 'விரும்புமிவரத்தைதக் கூறுக: தருவேன்' எனல்.

வரங்கொள வித்துணை [1]மம்ம ரல்ல லெய்தி
யிரங்கிட வேண்டுவ [2]தில்லை யீவனென்பாற்
பரங்கெட விப்[3]பொழு தேப கர்ந்தி டென்ற
னுரங்கொண் மனத்தவள் வஞ்ச [4]மோர்கி லாதான்.

(இ-ள்.) (அப்போது தசரதமன்னவன்), உரம் கொள் மனத்து அவள் வஞ்சம் ஓர்கிலாதான்-வலிமைகொண்ட நெஞ்சத்தையுடைய அக்கைகேயி யினது வஞ்சனையை யறியாதவனாய்,'வரம் கொள-(கொடுப்பதாகச்சொன்ன) வரங்களைப் பெற்றுக்கொள்ள, இ துணை-இவ்வளவு, மம்மர் - தடுமாற்றமும், அல்லல்-வருத்தமும், எய்தி-அடைந்து, இரங்கிட வேண்டுவது - தளரவேண் டியது, இல்லை—; என்பால் என்னிடத்துள்ள, பரம்-பாரம், கெட-போம்படி, இப்பொழுதே—, ஈவன் - (நீ வேண்டுவதைக்) கொடுப்பேன்; பகர்ந்திடு - சொல்,' என்ஞன்—; (எ - று.)

சிறிதுமிரக்கமில்லாத கன்னெஞ்சன்பார், 'உரங்கொள் மனம்' என் ஞர். அடைக்கலப்பொருளைப் பாதுகாத்துத்தரவேண்டும் பொறுப்புப்போல இரண்டுவரத்தைத் தரவேண்டு மென்கிற பொறுப்புத் தன்னிடத்துத் தங்கி யிருத்தலால், 'ஈவ னென்பாற்பரங்கெட' என்கிறன்தசரதன். பி-ம்:—[1]மன் னும், மாழ்கி. [2]ஈவனேகொள், ஈவனேகொல். [3]பகலே. [4]ஓர்வதில்லான். (ககூசு)

ா0.—பரதனுக்குத்தப்பட்டங்கட்டவும் இராமனைக் காட்டிற்தஅனுப்பவும் கைகேயி இரண்டுவரங் கேட்டல்.

ஏய வரங்க ளிரண்டி னென்றி னுலென்
சே[1]யுல காள்வது சீதை கேள்வ [2]னென்றுற்
போய்வன [3]மாள்வ தெனைப்பு கன்று நின்று
[4]டீயவை யாவை யினுஞ்சி றந்த தீயாள்.

(இ - ள்.) தீயவை யாவையின்உம் சிறந்த தீயாள் - கொடியவை யெல் லாவற்றிலும் மேம்பட்ட கொடியவள் [கைகேயி], 'எய வரங்கள் இரண் டின் - (நீ) கொடுத்த இரண்டு வரங்களுள், ஒன்றினுல் - ஒரு வரத்தினுல், என் சேய் உலகு ஆள்வது - எனது மகன் [பரதன்] இராச்சியத்தை யாள வேண்டுவது; ஒன்றுல் - மற்றொன்றுல், சீதை கேள்வன் - இராமன், போய் - (இந்நாட்டை விட்டுச்) சென்று, வனம் ஆள்வது - காட்டில் வாசஞ்செய்யவேண்டுவது,' என புகன்று - என்று (வாய்கூசாது) சொல்லி, நின்றுள் - (சிறிதும் மனங்கலங்காமல் உறுதியாக) இருந்தாள்; (எ - று.)

பகைவரும் சொல்ல வாய்கூசுங் கடுஞ்சொல்லைச் சொல்வியும் தன்மன வுறுதி சிறிதுங்குன்றாது கைகேயி இருந்தன ளென்பார் 'தீயவையாவை யினுஞ்சிறந்த தீயாள் நின்றுள்' என்றார். தீயவை யென்றது - அக்நி, யமன், விஷம், சர்ப்பம் முதலியன; தீயவையெல்லாவற்றினுஞ் சிறந்த தீப் போன்றவ ளென்றுமாம். 'வனம் ஆள்வது' என்பதனுல், நாட்டைப்பற்றிய நினைவு இராமனுக்கு அறவொழிந்திடவேணு மென்பது குறிப்பிக்கப்படுமென் பர். எய - எவிய வென்பதன் விகாரம். பி - ம்:—[1]நிலன், அரசு. [2]ஒன்றில். [3]வாழ்வது [4]தீயன. (கசுஎ)

கக.—இது முதல் ஐந்து கவிகள் - தசரதமன்னவன் கொண்ட வருத்தமிகுதியைத் தெரிவிக்கும்.

நாக மெனுங்கொடி யாட [1]னவின் வந்த
சோக விடந்தொட ரத்து ணுக்க [2]மெய்தா
வாக மடங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான்.

(இ - ள்.) நாகம் எனும் - சர்ப்பமென்று சொல்லத்தக்க, கொடியான் தன் - கொடுமையையுடைய கைகேயினது, நாவின் வந்த - நாக்கில்தோன் றிய, சோக விடம் - துன்பத்தைத்தருகின்ற (வார்த்தையாகிய) விஷம், தொடர - பற்றினவளவிலே, துணுக்கம் எய்தா - நடுக்கமடைந்து, ஆகம் அடங்கலும் - உடல்முழுவதும், வெந்து - வெதும்பி, அழிந்து - சோர்ந்து, அராவின்-பாம்பினுல், வேகம் அடங்கிய - தீவிரத் தணிந்த, வேழம் என்ன - யானைபோல, (தசரதமன்னவன்), வீழ்ந்தான்—; (எ - று.)

நாகம் - நடவாதது, ஊர்ந்துசெல்வது. தலையிலும், கொடுக்கிலும், பல் லிலுமுள்ள விஷத்தினும் வேற்றுமைவிளங்க, 'நாவின்வந்த விடம்' என்றார்.

தன்னை ப்பாலூட்டி வளர்த்தானையே தீண்டுதலால், நாகமெனுங் கொடியா
ளென்றதென்பர். ஆகம் வெந்துவீழ்ந்தான்-சினைவினை முதலோடு முடிந்தது.
கீழ் 'ஆனை' என்றதற் கேற்ப, வேழமென்றார். தொடர என்ற விதப்பு, 'உல
கத்து விடம் கொல்வது தான் உட்புக்கபின்பே; இச்சோகவிடம் தொடர்ந்த
வளவிலே கொல்லும்' என்னும் வேற்றுமை தோன்றநின்றது: உருவகமுலமாக
வந்த வேற்றுமையணி. பி-யி:—[1]நாவினீந்த, நாநயந்த. [2]எய்த. (ககஅ)

கஉ. பூதல முற்றத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை [1]முற்றிட வெந்து வெந்து கொல்ல
னூதுலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான்.

(இ - ள்.) பூதலம் உற்று - பூமியையடைந்து [விழுந்து], அதனில் புர
ண்ட மன்னன் - அதில் உருண்ட சக்ரவர்த்தியினது, மா துயரத்தினை -
மிக்க துன்பத்தை, சொல்ல வல்லார் - (இவ்வளவென்று) சொல்லவல்லமை
யுடையவர், யாவர் - யார்? [ஒருவருமில்லை]; வேதனை முற்றிட - துன்பம்
முதிர்ச்சியடைய, வெந்து வெந்து - (அத்தசரதன் மனம்) மிகவெதும்பி,
கொல்லன் ஊது உலையில்-கருமான் ஊதுகின்ற உலக்களத்திலுள்ள, கனல்
என்ன - நெருப்புப்போல, வெய்து உயிர்த்தான் - கொடுமையாய்ப் பெரு
மூச்சுவிட்டான்; (எ - று.)

இது, கவிக்கூற்று. ஒருவராலும் அளவிட்டுச் சொல்லமுடியாததான
சோகவேகத்தைப் பொறுக்கமாட்டாமல் தசரதமன்னவன் பூமியில் விழுந்து
புரண்டு வேதனைமிக உடல் வெந்து நெட்டுயிர்ப்பெறிந்தானென்க. அம்
மன்னவனது நெட்டுயிர்ப்பின் வெம்மைக்கு, கொல்லனது உலக்கனல்
உவமை. வெந்துவெந்து - அடுக்கு மிகுதிப்பொருளது. பி-ம்:—[1]உற்றிட. ()

கஙூ. உலர்ந்தது [1]நாவுயி ரோட லுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் [2]பொடித்த [3]பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்கதென்கொ [4]லென்றென்
றலந்தலை யுற்ற வரும்பு லன்க ளைந்தும்.

(இ - ள்.) (அம்மன்னவனுக்கு), நா உலர்ந்தது - நாக்கு வறண்டது;
உயிர் ஓடல் உற்றது - பிராணன் போகத்தொடங்கியது; உள்ளம் புலர்ந்தது-
மனம்தளர்ந்தது; கண்கள்—, பொங்கு சோரி பொடித்த -, மிகுந்த ரக்தத்
தைச் சிந்தின; சலம் தலைமிக்கது - கவலை மிகுந்தது; அரு புலன்கள் ஐந்து
உம் - (நீங்குதற்கு) அரிய ஐந்து இந்திரியங்களும், - தக்கது - செய்யத்தகுந்த
தொழில், என் என்று என்று - என்னவென்றெண்ணியெண்ணி, அலம்
தலையுற்ற - சஞ்சலம்மிகுந்தன; (எ - று.)—கொல் - அசை.

கீழ் மன்னவனது துயரத்தை விளக்கிய கவி, இதனால் அவனுடைய
உறுப்புக்கள் பட்ட நிலையை வருணிக்கின்றார். புலன் - அறிவு: ஞானேந்திரி
யங்கட்கு இலக்கணை. என்றென்று - பலமுறையென்னும் பொருளில் அடுக்

ற்று. அலந்தலை எனப் பிரித்து, அலத்தலை என்பதன் விகாரமாகக்கொள்ள
ுமாம். பெருந்துன்பத்தோடு கைகேயிபக்கங் கோபமும் அரசனுக்குத்தோன்
ற்றென்பார் 'கண்கள் பொடித்த' என்றார். அவலச்சுவையோடு வெகுளிச்
வையுங் கலந்துவருவதனை மேலுங் காண்க. பி-ம்:—[1]நாவும். [2]புலர்ந்தன,
பாடித்தன, பொடித்தது. [3]பொங்கும், செய்ய. [4]ஈதென்று. (உ00)

கச. மேவி நிலத்தி [1]னிற்கும் [2]விம்மும் வீழு
மோவிய மொப்ப வுயிர்ப்ப டங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றி யெற்ற [3]வெண்ணு
மாவி பதைப்ப வலக்க [4]ணெய்தி நின்றான்.

(இ - ள்.) ஆவி பதைப்ப-உயிர் பதைக்கும்படி, அலக்கண்-துன்பத்தை,
ய்தி நின்றான்-அடைந்திருந்த சக்ரவர்த்தி,—மேவி - (மனத்தைத் தேற்றிக்
கொண்டு)எழுந்து, நிலத்தில் நிற்கும்-பூமியில்(சிறிதுபொழுது)நிற்பான்; விம்
மும் - புலம்புவான்; வீழும்-(மறுபடியும்) விழுவான்; உயிர்ப்பு அடங்கி-மூச்சு
அடங்கி, ஓவியம் ஒப்ப - சித்திரத்தை யொக்கும்படி, ஓயும் - செயலொடுங்கி
விடுவன்; பாவியை-பாவச்செய்கையையுடைய கைகேயியை, எதிர் உற்று -
எதிரேபோய், பற்றி-பிடித்து, எற்ற மோத, எண்ணும்-நினைப்பான்; (எ-று.)

இதனாலும், தயரம்மிக்க மன்னவனது செய்கை உணர்த்தப்படுகின்றது.
தசரதமன்னவனிடத்து மேவிநிற்றல்முதலிய பலதொழில் ஒருங்கு நிகழ்ந்
தனவாகக் கூறிய இது-கூட்டவணியின்பாற்படும்: வடநூலார் ஸமுச்சயாலங்
காரமென்பர். மேலும் இவ்வணி காண்க. பி-ம்:—[1]இருக்கும். [2]நிற்கும். [3]என்
னும். [4]எய்துகின்றான். (உ0க)

கரு. பெண்ணென [1]வுற்ற [2]பெரும்ப ழிக்கு நாணு
முண்ணிறை வெப்பொ டுயிர்த்து யிர்த்து லாவுங்
[3]கண்ணில னெப்ப வயர்க்கும் [4]வன்கை வேல்வெம்
புண்ணுழை [5]கிற்க வுழைக்கு மானை போல்வான்.

(இ - ள்.) வல் கை வேல்-வலிய கையிலுள்ள வேலாயுதமானது, வெம்
புண் நுழைகிற்க - கொடிய புண்ணில் நுழைவதனால், உழைக்கும் - வருந்து
கின்ற, ஆனை போல்வான்-களிற்றையொத்த அவன்,—பெண் என - பெண்
ணென்றெண்ணி, உற்ற பெரும் பழிக்கு - (கைகேயியைப்பற்றி யெற்றுவத
னால்)வருகின்ற பெரியபழிமொழிக்கு, நாணும்-நாணுவான்; உள் நிறை வெப்
பொடு-உள்ளே நிறைந்த தாபத்துடன், உயிர்த்து உயிர்த்து-மிகப்பெருமூச்சு
விட்டு, உலாவும்-அலைவான்; கண் இலன் ஒப்ப-கண்கெட்டுவிடப்பெற்றவன்
போல, அயர்க்கும் - சோர்வான்; (எ - று.)

பாவியை யுற்று எதிர்பற்றியெற்ற வெண்ணிய தசரதன், கைகேயி
பெண்ணையிருத்தலால், அவளை வதைத்தாற் பெரும்பழி நேருமே யென்று
நாணி அச்செயலினின்று நீங்கி வெய்துயிர்த்து உலாவுவான்: தயரமிகுதி

யாற் கண்கெட்டவன்போன்று சோர்ந்து விழுவானென்றவாறு.உறும்பழியை உற்றபழியென்றார், தெளிவுபற்றி: காலவழுவமைதி. நாணுதலாவது-தனக்கு ஒவ்வாத இழிந்த கருமத்தில் மனமொடுங்குதல்; "கருமத்தாணுண்ண ணுண்ணித் திருநுத; னல்லவர் நாணுப் பிற" என்றார் நாயனாரும். பெண்கொலைக்குப் பயந்தா னென்க. தான் கொடுத்த வரம் தனக்கே வருத்தத்தை விளைத்தலால், 'கைகேவல் புண்ணுழைகிற்க' என்றது. பி-ம்:—[1]உட்கும். [2]மிகட்ட. [3]கண்ணினிலேக்கும், மண்ணினைநோக்கும். [4]மிக்ககைகேவல். [5]தைக்க.(உ0உ)

கசூ.—தசரதனது சோகத்தைக் கண்டு யாவரும் நிலைகலங்க,
கைகேயி வன்னெஞ்சளாயிருத்தல்.

கம்ப நெடுங்களி யானை யன்ன மன்னன்
வெம்பி [1]விழுந்தழும் விம்மல் கண்டு [2]வெப்துற்
றும்பர் நடுங்கின ளூழி போர்வ [3]தொத்த
தம்பன கண்ணவ ளுள்ள மன்ன தியால்.

(இ-ள்.) கம்பம் நெடு களி யானை அன்ன மன்னன்-கம்பத்திற்கட்டிய மிக்க மதத்தையுடைய களிற்றையொத்த சக்ரவர்த்தி, வெம்பி - வெதும்பி, விழுந்து-(பூமியில்) வீழ்ந்து, அழும் - புலம்புகின்ற, விம்மல் - கலக்கத்தை, கண்டு—, வெய்து உற்று-பயம் மிகுந்து, உம்பர் - தேவரும், நடுங்கினர்—; ஊழி போர்வது ஒத்தது - (அக்காலம்) பிரளயகாலம் வந்து போன்றது; அம்பு அன கண்ணவள் - அம்பையொத்த கண்களையுடைய கைகேயியினது, உள்ளம்-மனமோ, அன்னது ஏ-அவ்வாறுகவேயிருந்தது;(எ-று.)—ஆல்-அசை.

கைகேயி சொற்படி நடந்துவந்தமை தோன்ற, 'கம்பயானையன்ன மன்னன்' என்றும், அவனது வருத்தத்திற்குஏதுவாயிருத்தல்பற்றி, 'அம்பன கண்ணவள்' என்றுங்கூறினர். தேவாதிதேவனானதிருமாலைப்பெற்ற தந்தை யாதலின், இத்தசரதனதுதுன்பத்தைக் கண்டு தேவரும் வருந்தின ரென்க. இம்மன்னவனது துயரமிகுதியைக்கண்டு உலகத்தவர்யாவரும்வருந்துதலால், 'ஊழிபோர்வதொத்தது' என்றது: இப்படி யாவரும் வருந்தவும் மனம் கல்லா யிருந்த அந்தக்கைகேசியின் நிலையை ஈற்றடியால் விளக்கினர். கம்பம் மன்னன் எனக்கூட்டி-நடுக்கத்தையுடைய அரசனெனவும், உள்ளம் அன்னது என்பதற்கு-மனமும் அவ்வம்புபோல வருத்தத்திற்கு ஏதுவாகவே யிருந்ததெனவும் பொருள்கொள்ளலுமாம். கம்பநெடுங்களியானை - கட்டுத்தறியை முறிக்கின்ற நெடுங்களியானை என யானையி னியல்பை விளக்கும் விசேடணமுமாம். பி-ம்:—[1]விழுந்தெழும். [2]வெய்துயிர்த்து. [3]ஒத்த. (உ0ஈ)

கஎ.—இதுவும் அது.

[1]அஞ்சல னேயன தல்லல் கண்டு முள்ள
[2]நஞ்சில ணெணில [3]ளென்ன [4]நாண மா மால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட [5]மென்றே
தஞ்சென மாதரை [6]யுள்ள லார்க டக்கோர்.

(இ - ள்.) ஐயனது அல்லல் கண்டுஉம் - கணவனது வருத்தத்தைப் பார்த்தும், அஞ்சலள் - (அவள்) பயப்படவில்லை, உள்ளம் நஞ்சிலள் - மனம் இரங்கவில்லை, நாண் இலள் - வெட்கப்படவுமில்லை, என்ன - என்று (அவள் நிலையைச்) சொல்ல, நாணம் ஆம் - (சொல்லுகின்ற நமக்கே) வெட்கமுண் டாகும்; தக்கோர் - (கல்விகேள்விகளாற்) பெரியவர், பண்டு - பழமையாய், 'வஞ்சனை - வஞ்சகம், மடந்தை மேவடம் - பெண்ணுருவம்,' என்ற - என்று எண்ணியே, மாதரை - பெண்களை, தஞ்சு என - பற்றுக்கோடு [தினை] என்று, உள்ளலார்கள் - நினையார்கள்; (எ - று.)—ஆல் - அசை.

சக்கரவர்த்தியான தன்கணவன் பேரிடர்கொண்டு மனங்கலங்கி விம்மி நிற்கும்போது அவனதுமனைவியான ஒருபெண்ணின் இரக்கம்முதலியன இல்லாநிலைமையை எடுத்துச்சொல்வதென்றால், சொல்ல வாய்கூசுகின்றது; அதனால்தான் விவரித்துச்சொல்லவில்லையென்றுகூறி, பெரும்பாலும் மடந்தைமார் வஞ்சகத்தன்மையுடையராதலால், அவர்களை நம்புவது தக்கோர்க்குத் தகாது என்று பின்னிரண்டடிகளாற் கவி கூறுகின்றார்; இதனால், கைகேயியை நல்லகுணமுள்ளவ ளென்று நம்பி அவள்பால் யிக்கசெயம்வைத்தது தவறு என்று எடுத்துக்காட்டியவாறுயிற்று. நஞ்சிலள் - நைந்திலள்: போலி. தஞ்சு-தஞ்சமென்பதன் விகாரம். பி-ம்:—[1]அஞ்சிலள். [2]எஞ்சிலள். [3]என்ன. [4]ஞானம். [5]அன்றே, இன்றே. [6]உள்ளுவாரோ, உன்னலார்கள். (உ ஈ ச)

கஅ.—'மனம் மாறுபடக் காரணமென்?' என்று கைகேயியை மன்னவன் வினவுதல்.

இந்நிலை [1]நின்றவ டன்னை யெய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவ னீ[2]தி னைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த வஞ்ச முண்டோ
[3]வந்நிலை சொல்லென தாணை யுன்னை யென்றான்.

(இ-ள்.) இந்நிலை - இந்நிலைமையில், நின்றவன் தன்னை - நின்றஅவனை, எய்த நோக்கி - பொருந்த [நன்றாய்] ப்பார்த்து, நெய் நிலை வேலவன் - நெய் தடவிக் கூர்செய்யப்பட்ட அழியாத வேலாயுதத்தையுடைய அவன், நீ நினைத்தது உண்டுஓ-நீ நினைத்தது உண்டோ? பொய் நிலையோர்கள் - வஞ்சத்தன் மையையுடையவர்கள், புணர்த்த-(உனக்குச்சுட்டிக்) சொல்லிய, வஞ்சம்-வஞ்சனைச்சொல், உண்டுஓ - உளதோ? அ நிலை - அந்நன்னிலைமை, எனது ஆணை - என்மேலாணை, உன்னை - நிச்சயமாய், சொல்—;' என்றான்—.

இதுவரையில் இராமனிடத்துத் தன்புதல்வனைக்காட்டிலும் அன்பு பாராட்டிவந்த கைகேசி அப்படிஅன்றைக் காட்டிற்குப்போகவும் தன்மகனை நாடாளவும் வேண்டினது விபரீதமாகஇருக்கையால், 'நினைத்ததுண்டோ? புணர்த்தவுண்டோ?' என இவ்வாறு மன்னவன் வினவலானான்: நினைத்தது-எனக்கு உன்னிடம் உண்மையான அன்பு உண்டாஇல்லையா என்று சந்தேகித்த தெனவுமாம். வேல்மன்னவரையிலும் அந்நிலை கைகேகியினிடம் செல்

லாதென்ற கருத்தினால் 'நெய்ந்நிலவேலவன்' என்றது. பி-ம்:—[1]ஈன்றவள் இன்றவள். [2]திகைத்தது. [3]உன்னிலை. (உ0ஞ)

கக. —கைகேயியின் மறுமொழி.

திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோ
ரிசைத்தது மில்லை [1]முனீந்த விவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரி னின்று [2]கொள்வெ னன்றேறல்
[3]வசைத்திறன் நின்வயி [4]னிற்க மாள்வெ னென்றாள்.

(இ - ள்.) (அதுகேட்டுக் கைகேயி), 'குசை பரியோய் - கடிவாளத்தை யுடைய குதிரையையுடையவனே! திசைத்ததுஉம் இல்லை - (நான்) பிரமித்ததும் இல்லை; எனக்கு தீயோர் வந்து இசைத்ததுஉம் இல்லை - என்னிடத்தில் கொடியவர்வந்து (வஞ்சனையைச்) சொன்னதும் இல்லை; முன் ஈந்த இவரங்கள் - முன்னே (வாயாற்) கொடுத்த இவ்விரண்டுவரங்களை, இன்று - இப்பொழுது, தரின் - கொடுத்தால், கொள்வென் - பெற்றுக்கொள்வேன்; அன்று எல்-அன்றிக் கொடாமற்போவாயானால், வசை திறன்-பழியின்கூறுபாடு, நின் வயின் நிற்க - உன்னிடத்தில் நிலையாயிருக்குமாறு, மாள்வென் - இறப்பேன்,' என்றாள்—; (எ - று.)

'எனக்குத் திசைத்ததும் இசைத்ததுமில்லை' என்றதனால், உனக்கு இவ்விரண்டும் இருந்தாலுமிருக்கலா மென்றவாறு. 'நீ திசைத்ததுஉண்டோ? வஞ்சனையோர் புணர்த்ததுஉண்டோ?' என்று மன்னவன் விளவியதுபற்றிக் கேட்டவரங்களைக்கொடுக்க அவனுக்குச் சம்மதமில்லையென்று விளங்குவதனால், 'வரங்கொடுத்தால் சரி, இல்லாவிட்டால் உயிரைமாய்ப்பது' என்று தான் கொண்டுள்ள மனவுறுதியைக் கைகேயி இங்கு வெளியிடுகின்றனளென்க. குசை - புறமயிருமாம். பரி-பரித்தலையுடையது; பரித்தல்-சுமத்தல். 'குசைப்பரியோய்' என்றதனால் - யான் பரிதூண்டித் தேரூர்ந்ததனைன்றே நினக்குப் புகழுளதாயிற்றெனக் குறிப்பித்தவாறு. பி - ம்:—[1]முனீந்த வரங்களென்பால், முனீந்தவைவரங்கள். [2]கொள்வன். [3]வசைப்பொருள். [4]வைத்து.

உ0.—கைகேயியின் கடுமொழிகேட்டுத் தசரதன் மூர்ச்சித்து விழுதல்.

இந்த நெடுஞ்சொலவ் வேனழ [1]கூறு முன்னே
வெந்த [2]கொடும்புணில் வேலு னைழந்த தொடப்பச்
சிந்தை [3]திரிந்து திகைத்த யர்ந்து [4]வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறி லாத மன்னன்.

(இ - ள்.) மைந்தன் அலாது-பிள்ளையை [இராமனை] அல்லாமல், உயிர் வேறு இலாத மன்னன்-வேறேபிராணனில்லாத சக்கரவர்த்தி,-அ வனை-அக்

கைகேயி, இந்த நெடு சொல்-இப்பெரியவார்த்தையை, கூறும் முன்னே-சொல் லுதற்கு முன்னே, வெந்த கொடு புணில்-வெந்ததலையுண்டாகிய கொடிய வி ரணத்தில், வேல் நுழைந்தது ஒப்ப-வேல்நுழைந்ததைப்போல, சிந்தை திரிந்து-மனந் தடுமாறி, நிகைத்து-(மதி) மயங்கி, அயர்ந்து-சோர்ந்து, வீழ்ந்தான்—.

ஏற்கனவே வருந்தியிருந்த மன்னவனுக்கு அவளதுகடுஞ்சொல் பின்னும் வருத்தத்தையுண்டாக்கிற் றென்பதை, உவமையால் விளக்கினர். தசரத சக்கர வர்த்தியின் இவ்வளவு துயருக்குங்காரணம் புத்திரவாற்சலியமே யென்பது, ஈற்றடியாற் பெறப்படும். நெடுஞ்சொல் என்றது-உயிருள்ளவரையும் அவன் நெஞ்சுபுண்பட்டுக்கிடக்கும்படிசொன்னகொடுஞ்சொல்லை. 'ஏழை'யென்றார், அறிவில்லாமைநோக்கி. வெந்தபுண் - வெந்தகாரி, உண்டஎச்சில், சங்குசுட்ட சுண்ணம்பு என்றாற்போலப் பெயரெச்சம் காரணப்பொருட்டு. பி ம்:—[1]கூற. [2]நெடும். [3]கனிந்து. [4]சாய்ந்தான். (உ0எ)

உக.—இது முதல் மூன்றுகவிகள் - தசரதன் பட்ட வருத்தத்தைத் தெரிவிக்கும்.

ஆகொடி யாயெனு மாவி காலு மந்தோ
வோ[1]கொடி தேயற மென்னு முண்மை [2]யொன்றுஞ்
சாக வெனவெழு மெய்[3]த ளாடி வீழு
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான்.

(இ - ள்.) மாகம்உம்-பெரிய மேலுலகத்தையும், நாகம்உம்-கீழுலகத்தை யும், மண்உம்-நடுவுலகத்தையும், வென்ற - சயித்த, வாளான் - ஆயுதத்தை யுடைய அவன், - ஆ கொடியாய் எனும் - ஐயோ கொடுந்தன்மையையுடைய வளே! என்பான்; ஆவி காலும் - பெருமூச்சு விடுவான்; அந்தோ ஓ கொடுமை அறம் என்னும் - ஐயோ! ஓ! தருமம் கொடுமையுடையது! என்பான்; உண்மை ஒன்றும் சாக எனை எழும் - மெய்முழுவதும் அழிக வென்று எழுந்தி ருப்பான்; மெய் தளாடி வீழும் - உடம்பு அசைந்துவிழுவான்; (எ - று.)

உண்மைதவறக்கூடாதென்ற உறுதியான எண்ணமே தன்னுடைய இவ் வளவு வருத்தத்துக்குங் காரணமாதலால், 'ஓ கொடுமை யறம்:உண்மையொன் றும் சாக' என்றான். ஓ கொடுமையறம்-"அறத்தினூங்கினிக்கொடுமை னலாவதொன்றியாதோ" என்று மந்திரப்படலத்துள் வந்துள்ளது. மூவுலகத் தையும் வென்று வழிப்படுத்திய மன்னவனுக்கு ஒருபெண்ணின்கீழ் நின்று வருந்தும்படியாயிற்றே! என்ற கருத்து; இங்குத் தொன்றும். இது முதல் மூன்றுகவிகளிலும் கவி மன்னவனை ஈற்றடியாற் சிறப்பித்துக் கூறும்வகை, மிகவுப் பாராட்டற்பாலது. ஒன்றும் - முற்றும்மை. ஒன்றும்உண்மை என மாறி - பெயரெச்சமாய், பொருந்திய மெய்யென்றுமாம். சாக-வைதற்பொரு ளில்வந்த வியங்கோள். மாகம் - வடசொற்சிதைவு. பி-ம்:—[1]கொடிதோ. [2]என்றும். [3]தாளாடி; தளர்ந்து. (உ0அ)

22. நாரியர் நில்லையிற் ஞால [1]மெங்கு மென்னைக்
கூரியவாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரியெண் ணிடை வீழ்வ னென்று பொங்கும்
வீரியர் வீரம் [2]விழுங்கி நின்ற வேலான்.

(இ - ள்.) வீரியர் வீரம்-வீரர்களுடையவீரத்தை; விழுங்கிநின்ற-சயித்து நின்ற,வேலான்-ஆயுதத்தையுடையஅவன்,—'இ ஞாலம் எங்குஉம்-இவ்வுலக முழுவதிலும், நாரியர் இல்லை என்ன - பெண்களில்லையென்று சொல்லும் படி, கூரிய வாள்கொடு-கூர்மையையுடையவாளால், கொன்று நீக்கி-கொலை செய்துதள்ளிவிட்டு, யான்உம்—, பூரியர் எண்இடை-கீழ்மக்களது சங்கையில், வீழ்வன் - விழுவேன்,' என்று—, பொங்கும் - கோபிப்பான்; (எ - று.)

பெருவீரனென தசரதசக்கரவர்த்திக்குக் கைகேயியால்தோன்றிய பெருந்துயர்ால் உலகத்திற் பெண்பாலாரேயில்லாமற் செய்து அதனால் விளையும் பழியையும் எற்றுக்கொள்ளலாமா?என்ற ஓரெண்ணமும் தோன்றியதுபற்றி, 'வீரியர் வீரம் விழுங்கிநின்ற வேலான் - நாரியரில்லையென்னக் கொன்று நீக்கி வீழ்வனென்று பொங்கும்' என்றார்: இங்ஙனம் பலபடி தடுமாறிற்று, அந்தச்சக்கரவர்த்தியினது மன மென்க. நாரீ என்றவடசொல் - குறுகி, பலர் பால் விகுதியேற்றது. பி-ம்:—[1]ஏழும். [2]விழுங்குகின்ற. (20க)

23. [1]கையொடு [2]கைகள் புடைக்கும் [3]வாய்க டிக்கு
[4]மெய்ப்புரை குற்ற மெனப் [5]புழுங்கி [6]விம்மு
நெய்யெரி யுற்றென நெஞ்[7]சு ழிந்து சோரும்
வையக [8]முற்று நடந்த வாய்மை மன்னன்.

(இ-ள்.) வையகம் முற்றும் நடந்த-உலகமுழுவதும் சென்ற, வாய்மை-சத்தியமான ஒழுக்கத்தையுடைய, மன்னன் - தசரதன்;—கையொடு கைகள் புடைக்கும் - கையுடன் கையை மோதுவான்; வாய் கடிக்கும் - உதட்டைக் கடிப்பான்; மெய் உரை குற்றம் - மெய்சொல்லுதல் தீங்கைத்தருவது, என—, புழுங்கி - மனம்புழுங்கி, விம்மும் - வருந்துவான்; நெய் எரி உற்று என - நெய்யில் நெருப்புப்பட்டாற்போல, நெஞ்சு அழிந்து - மனமுருகி, சோரும் - வருந்துவான்; (எ - று.)

வாய்மை தவறுதிருக்கவேணு மென்று கொண்ட கருத்தே தான் இவ்வளவு வருத்தப்படுதற்குக் காரணமானது குறித்து 'மெய்யுரை குற்றம்' என்கின்றான்.தன்வாய்மை உலகம் முழுதுஞ்சென்ற மன்னன் மெய்யுரை குற்ற மென்று சொல்லுமாறும் ஆயிற்றேயென்பார் 'வையகமுற்று நடந்தவாய்மை மன்னன் - மெய்யுரை குற்றமெனப் புழுங்கிவிம்மும்' என்கின்றார். மூன்று மடிக்கு-நெய் எரியி லுற்றுற்போல மனம் வெம்பி யெரிந்தனினுமையும். பி-ம்:—[1]கைக்கொடு. [2]கையை. [3]காவெரடுக்கும், வாய்மடிக்கும். [4]பொய்யுரை. [5]புழுங்க. [6]வாடும். [7]எரிந்து. [8]முற்றநடத்தும். (2கo)

வாய்மை தவறுதிருக்கவேணு மென்று கொண்ட கருத்தே தான் இவ்வளவு வருத்தப்படுதற்குக் காரணமானது குறித்து 'மெய்யுரை குற்றம்' என்கின்றான்.தன்வாய்மை உலகம் முழுதுஞ்சென்ற மன்னன் மெய்யுரை குற்ற மென்று சொல்லுமாறும் ஆயிற்றேயென்பார் 'வையகமுற்று நடந்தவாய்மை மன்னன் - மெய்யுரை குற்றமெனப் புழுங்கிவிம்மும்' என்கின்றார். மூன்று மடிக்கு-நெய் எரியி லுற்றுற்போல மனம் வெம்பி யெரிந்தனினுமையும்.
பி-ம்:—[1]கைக்கொடு. [2]கையை. [3]காவெரடுக்கும், வாய்மடிக்கும். [4]பொய்யுரை. [5]புழுங்க. [6]வாடும். [7]எரிந்து. [8]முற்றநடத்தும்.
(2கo)

உச.—வருத்திய தசரதன் இரந்தாவது பார்ப்[illegible]ன்று எழுதல்.

ஒறுப்பினு [1]மந்தர முண்மை [2]யொன றுளாவா
[3]விறுப்பினு [1]மந்தர [4]மென்று வாய்மை மன்னன்
[5]பொறுப்பினு [6]மிந்நில [7]போகி லாளை [8]வாளா
[9]லிறுப்பினு மாவ [10]திரப்ப தென்[11]ற ழுந்தான்.

(இ - ள்.) வாய்மை மன்னன் - மெய்யையுடைய அரசன்;—உண்மை - மெய்யை, ஒன்றுஉம் - சிறிதும், ஓவா - காவாமல், ஒறுப்பின்உம் - (இவளைத்) தண்டித்தாலும், அந்தரம் - தீமை; இறுப்பின்உம் - (இவள் கேட்ட படி வரத்தைக்) கொடுத்தாலும், அந்தரம்-தீமை, என்று - என்றுநினைத்து;—பொறுப்பின்உம் - பொறுத்தலினும், இந்நில போகிலாளை - இந்நிலமையினின்று விலகாதவளை, வாளால் இறுப்பின்உம் - வாளாயுதத்தாற் கொல்லுதலினும், இரப்பது - (வேண்டி) யாசிப்பதை, ஆவது - பொருந்துவது, என்று - என்றெண்ணி, எழுந்தான்—; (எ - று.)

அந்தரம்என்பதைப் பின்னடிகளிலும் சேர்த்து இந்நில போகிலாளைப் பொறுப்பினும் அந்தரம், வாளால் இறுப்பினும் அந்தரம்: இரப்பது ஆவது எனக் கூட்டியுரைத்தலுமாம். முன்னிரண்டடிகட்கு - இவளைத்தண்டித்தாலும் அந்தரம்; உண்மையை யொப்புக்கொள்ளாமல் வாயடி கையடியாகச் சொன்னாலும் அந்தரமே என்று உரைகூறுதலும் உண்டு. இந்நிலபோகிலாள் - இவ்விடம் விட்டுப் பெயராதவள் என்றுமாம். பி - ம்:—[1]ஆவதென். [2]இன்றொடாவி, என்றுமோவா. ஒன்றுமொடாவ்வா. [3]மறுப்பினும். [4]என்ற. [5]மறுப்பினும். [6]அந்நில. [7]சோர்நிலாளை. [8]வாளா, ஆவி. [9]இறப்பினுமாவது, அறுப்பினுமாவது, இறுப்பினும்பாவம். [10]இரப்பன். [11]இரப்பான், இரந்தான்.

வேறு.

உரு.—சமாதானப்படுத்தக்கருதித் தசரதன் கைகேயியின் காலில்விழுதல்.

கோன்மேற் கொண்டுங் குற்ற [1]மகற்றக் [2]குறிகொண்டார்
போன்[3]மே லுற்ற துண்டெனி னன்றும் பொறை[4]யென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்து[5]கொல் யானைக் [6]கனிமன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான்.

(இ - ள்.) கந்து கொல் யானை களி மன்னர் - கட்டுத்தறியை முறிக்கின்ற மதயானைகள் போன்ற செருக்கையுடைய அரசர்; முந்தி - முற்பட்டு, மேல் மேல் வந்து - ஒருவர்பின்பு ஒருவர்வந்து, வணங்கி-சேவித்து, மிடைந்குகின்ற, தாளான் - பாதங்களையுடைய அத்தசரதன், 'கோல் மேல் கொண்டு உம் - செங்கோலை மேற்கொண்டும், குற்றம் அகற்ற - குற்றங்களை நீக்க, குறி கொண்டார்போல் - (மிக்க அரும்பாடு படுவதில்) தங்கருத்தைச் செலுத்தியவர்போல, மேல் உற்றது - இனிமேல் வரும் நன்மை, உண்டு எனின் - இருந்தால், பொறை நன்று ஆம் - பொறுமை நன்மையையுடைய தாம்,' என்ன - என்று எண்ணி, கால்மேல் வீழ்ந்தான் - (கைகேயியினது) அடியில் விழுந்தான்; (எ - று.)

தாம் மேம்பட்ட மன்னவராயிருந்தும் தமது ஆட்சியிற் குற்றம்நிகழாதிருக்கவேணுமெயென்று அரும்பாடுபட்டவர்போல, நமது சக்காவர்த்தித் தன்மையைக்கருதாது இந்தக்கைகேயியைச் சினந்தணிவித்துச் சொன்னசொல்தவறினனென்ற பேரில்லாமல் முறைகேடின்றி இராமனுக்கு முடிசூட்டவேணுமென்று தசரதன்கருதிக் கைகேயியின் காலில் விழுந்தானென்பதாம். சொன்னசொல் தவறுமை - இராமனுக்கு முடிசூட்டுவேனென்பதும், கைகேயிக்கு வேண்டும் வரம் கொடுப்பே னென்பதும். கோல் - அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை; அம்முறை ஒருபாற்கோடாது செவ்விய கோல்போறலின், கோலெனப்பட்டது; உவமவாகுபெயர்: வடநூலாரும் தண்டமென்றார். பொறை - காரணம்பற்றியாதல் மடமையாலுதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவர்கட்செய்யாது பொறுத்தல். களியை யானைக்குங் கூட்டுக. யானையையுடையமன்ன ரென்னிலுமாம். மேன்மேலென்ற வடுக்கு, மிகுதிக்கண்வந்தது. பி - பி:—[1]அகற்றி. [2]குறை. [3]மேற்கொண்டது. [4]அன்னாள். [5]கொள். [6]கழல். (உகஉ)

உசு.—இதுமுதல் நான்குகவிகள் - தசரதன் கைகேயியை யிரத்தலைத் தெரிவிக்கும்.

கொள்ளா னின்சே யிவ்வர சன்னுன் கொண்டாலு
நள்ளா திந்த நானில [1]ஞாலந் தனிலென்று
மூள்ளா ரெல்லா மோத வுவக்கும் புகழ்[2]கொள்ளா
யெள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றுன்.

(இ - ள்.) நின் சேய் - உனதுமகன் [பரதன்], இ அரசு-இந்த அரசாட்சியை, கொள்ளான் - (கொடுத்தாலும்) பெற்றுக்கொள்ளான்; அன்னுன் கொண்டால்உம் - அவன் பெற்றுக்கொண்டாலும், இந்த நானிலம்-இப்பூமியிலுள்ளவர், நள்ளாது - விரும்பார்; (ஆதலால் நீ, என்றுஉம் - எக்காலத்தும், ஞாலத்தனில் உள்ளார் எல்லாம்-பூமியில் இருக்கின்றவ ரனைவரும், ஓத உவக்கும் - சொல்ல விரும்புகின்ற, புகழ்-கீர்த்தியை, கொள்ளாய்-பெறமாட்டாய்; எள்ளாநிற்கும் - (உலகத்தார்) நிந்திக்கின்ற, வல் பழி கொண்டு - கொடிய பழியை அடைவதனால்,பயன் என்-பிரயோசனம் யாது? என்றுன்—;(எ று.)

நீ கேட்டுவாங்கும் இராச்சியத்தை உன்மகன் அங்கீகரிபான்; ஒருகால் அவன் அங்கீகரித்தாலும் உலகத்தவர் உன்னையே பழிப்பர். இப்பழியைக் கொண்டு உனக்கு என்னபய னென்பதாம். பரதன் நீதிநெறிதவறுதலின் 'கொள்ளான் நின்சேய்' என்றும், ஒருகால் உன்னுடைய துருபதேசத்தால் அந்தப்பரதனும் மனந்திரிந்து அரசைக் கைக்கொண்டாலும் உலகத்தார் பழிப்பரென்பான் 'கொண்டாலும் நள்ளாது இந்தநானிலம்' என்றும் கூறினன். ஞாலம் - பூமியிலுள்ளார்க்கு ஆகுபெயர். கொள்ளாய் - எதிர்மறைமுற்று: உடன்பாடாக்கிக்கொண்டு பொருளுரைப்பினுமாம். சேயென முன்வந்தமையின்,பின் அன்னுனெனச் சுட்டியொழிந்தார். கொண்டாலுமென்றவும்மை-

கொள்ளுதலின் அருமை விளக்கி நின்றது: பி-பி:—[1]ஞாலத்தினில். [2]கொள்ளாது, கொள்ளா. (உகங)

உஎ. வாழ்ஞர் கொள்ளார் [1]மண்ணவ ருய்யா ரினிமற்றெ
ஞேழ்ஞர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வா
யா[2]னே சொல்லக் கொள்ள விசைத்தான் [3]முறையாலே
தானே நல்கு முன்[4]மக னுக்குந் தரையென்றான்.

(இ-ள்.) '(இராமனைக் காட்டிற்குத்துரத்திவிட்டுப் பரதன் இராச்சியம் ஆள்வதை), வாழ்ஞர் கொள்ளார்-தேவர் அங்கீகரியார்; மண்ணவர் உய்யார்-நிலவுலகத்தாரும் (இராமனைப் பிரிவதால்)உயிர்வைத்திரார்;இனி-இனிமேல், மற்று ஏழ்ஞர் செய்கை என்-மற்றைப் பாதாளலோகத்திலிருப்பவரின் செய்கையைப்பற்றிச் சொல்லவேண்டுவதென்ன? [அதுவும்அவ்வாறே யென்ற படி]; (இங்ஙனம் மூவுலகத்தவரும் இராமன் காட்டிற்குத் துரத்தப்படப் பரதன் அரசுபுரிவதைக் குறித்து உடன்படாதிருக்கும்போது), நீ—, யாரொடு இவ் அரசு ஆள்வாய்-எவருடன் இவ்விராச்சியத்தைக் காப்பாய்? யான் சொல்ல ஏ - நான் சொன்னதலைலேயே, கொள்ள - (இவ்வரசாட்சியைப்) பெற்றுக் கொள்ள, இசைந்தான்-சம்மதித்த இராமன்;—முறையாலே-கிரமமாக, உன் மகனுக்குமம் - உனதுமைந்தனுக்கும், தானே—, தரை-பூமியை, நல்கும் - கொடுப்பான்,' என்றான் - என்றுகூறினான்; (எ - று.)

பரதன் அரசுபுரியவேணுமென்று நீ விரும்புவாயானால், இராமபிரானைக் காட்டிற்குத் துரத்தவேண்டுமென்பதில்லை; உன்விருப்பத்தை யறிந்த மாத்திரத்தில் இராமன் தானே பரதனுக்கு இராச்சியத்தைத் தருவன்: அப்படியிருக்க இராமனைக் காட்டிற்குஅனுப்பிப் பரதனை யாளச்செய்யவேணு மென்று மூவுலகத்தார்க்கும் வற்காதசெயலைச் செய்யவிரும்புதல் தக்கதன்றென்பதாம். "உண்ணுநீரினுமுயிரினும் அவனையே யுவப்பார்" ஆதலின், அவன் கானகஞ் சென்றால், 'மண்ணவரும்யார்' என்றான்; இராமன் தக்கையிட்ட கட்டளை யென்று அரசை யேற்றுக்கொண்டானே யன்றி எப்படியாவது இராச்சியத்தைக் கைப்பற்றவேணு மென்ற விருப்ப முள்ளவனல்ல னென்பது, 'யானை சொல்லக்கொள்ளவிசைந்தான்' என்பதன் கருத்து. பி பி:—[1]மன்னவர். [2] நேரொல்ல. [3]அன்பாலே. [4]மகனுக்குத். (உகச)

உஏ. கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவே[1]னென்
னுண்ணே ராவி வேண்டினு மின்றே யுன[2]தன்றே
பெண்ணே வண்மைக் [3]கைகயன் [4]மானே [5]பெறுவாயேன்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்றும் மறவென்றான்.

(இ - ள்.) (என்றுகூறிப் பின்னரும்), பெண்ணே—! வண்மை - வரையாதுகொடுக்குந் தன்மையையுடைய, கைகயன் மானே - கேகயத்தரசன்மகளே! கண்ணே வேண்டும் என்னின்உம்-(என்) கண்களே வேண்டுமென்றாலும்,

ஈயக்கடவேன்-கொடுப்பேன்: என் உள் நேர் ஆவி-எனது உள்ளேபொருந்திய உயிரை, வேண்டின் உம் - விரும்பினாலும், (அது), இன்றை - இப்பொழுதே, உனது அன்றே - உன்னுடைய அதீனத்திலிருப்பதல்லவோ? பெறுவாய் ஏல் - (வரத்தைப்)பெறவிரும்புவாயானால், நீ மண் ஏ கொள் - நீ உலகத்தை மாத்திரம் பெற்றுக்கொள்; மற்றையது ஒன்று உம் மற-இன்னென்றை மாத்திரம் மறந்துவிடு,' என்றான்—; (எ - று.)

எல்லாப்பொறிகளினுஞ் சிறந்தமைபற்றி 'கண்'என்றும், கண்ணினும் அருமைப்பாடுடையதாதலின் 'உண்ணேரா வி' என்றும், நின் தலைமுறை தலைமுறையாகவந்த ஈகை உனக்கும்வேண்டு மென்பான்'வண்மைக்கைகயன் மானே' என்றுங் கூறினான். சேய்கொள்ளாவெனன்பதைக் கருதாது பெற வேணுமென்று வேண்டினையாதலால் என்பது 'பெறுவாயேல்' என்பதன் பொருள். இனி, 'வண்மைக்கைகயன் மானே பெறுவாயேல்' என்பதற்கு, கொடுக்குங்குலத்திற் பிறந்த நீ என்வேண்டுகோளைத் தாராது என்னிடத்துப் பெற விரும்பினையாதலெனன்று கருத்துரைத்தலும் ஒன்று. உனது - குறிப்பு முற்று. மற்றையது-இராமனைக் காட்டிற்கனுப்புதல்; அதனை வாயாற்சொல்லவும் அஞ்சி இவ்வாறு கூறினான். பி-ம்:—[1]நான். [2]அன்றே. [3]கேகயன், கைகயர். [4]மாதே. [5]பெறுவானேல், பெறுவேனேல். (உகரு)

உகூ. வாய்[1]தந் தேனென் றேனினி யாதே வதுமாற்றே
ஈயுந்தந் தென்னை நோவன [2]செய்து நுவலாதே
தாய்தந் தென்னைத் தன்னை யிரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தீயு நீயிது தந்தாற் பிழை[3]யாமோ.

இதுவும் அடுத்த கவியும்-ஒருதொடர்.

(இ-ள்.) வாய் தந்தேன் என்றேன்-வாயாற் கொடுத்துவிட்டே னென்று சொன்னேன்; இனி யான்ஓ அது மாற்றேன்-இனிமேல் நானே அதனைத் தவறேன்; என்னை நோய் தந்து-எனக்கு வருத்தத்தைக் கொடுத்து, நோவன செய்து - துன்புறத்தக்கவற்றைப் பண்ணி, நுவலாதே-சொல்லாதே; தன்னை இரந்தால்-தன்னை (ஒன்று) யாசித்தால், தழல் வெம் கண் பேய் - நெருப்புப் போலும் வெவ்விய கண்களையுடைய பேயும், தாய் தந்துஎன்ன-தாய் கொடுத்தாற்போல, தந்தீயும்-கொடுக்கும்; (ஆதலால்), நீ இது தந்தால்-நீ இதனைக் கொடுத்தால், பிழை ஆம் ஓ - தவறுகுமோ? (எ - று.)

நீ கேட்டவரத்தைக் கொடுப்பதாகச் சொல்லிவிட்டபடியால், நான் கொடுத்தது கொடுத்ததுதான்; அதனை மாற்றுகின்றே னென்று என்னைப்பழியாதே:ஆனாலும், கேட்கும்வரம் என்னை மிகவும்வருத்துவதால் அதனை மாற்றிக் கொள்ளும்படி இரக்கின்றேன்:பேயும் ஒருவர் தன்னையிரந்தால், தாய்போலத் தண்ணளிகொண்டு வேண்டியதைத் தருகின்றது; ஆதலால், நீ இரங்கி என் வேண்டுகோளைத் தரலாகாதா? என்று தசரதன் கைகேயியை இரக்கின்றனனென்க. தழல்வெங்கண்-நெருப்பைக்காலுகின்ற வெங்கண்ணுமாம். பேயென்பது,அதனது இரக்கமின்மையை விளக்கிநின்றது. என்ன-உவமவுருபு.

தந்தீயும் - தருமமன்னும் படர்க்கை முற்று வினைத்திரிசொல். பேயென்ற விடத்து இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தந்து என்றதைத் தந்தையென்பதன் விகாரமாகக்கொண்டு, தாய் தந்து என்ன - தாயே! தந்தையே! என்றுசொல்லி யிரக்க என்று பொருள்கொள்ளுதலும் ஒன்று. பி - ம்:—[1]தந்தின்றேமற்றினி, தந்தன்றேமற்றினி, தந்தேனென்றேனனி. [2]செய்தே. [3]உண்டோ. (உகசு)

ங.o.—கைகேயி இராமகாது தசரதனை யிழித்துக் கூறுதல்.

இன்னே [1]யின்னே பன்னி யிரந்தா [2]னிகல்வேந்தன்
றன்னே ரில்லாத் தீயவ ளுள்ளந் தடுமாறுண்
முன்னே தந்தா யிவ்வர [3]நல்காய் முனிவாயே
லென்னே மன்ற யாருளர் வாய்மைக் கினியென்றாள்.

(இ-ள்.) இகல் வேந்தன்-வெற்றியையுடைய சக்கரவர்த்தி,—இன்னே இன்னே - இவ்வாறுக, பன்னி-சொல்லி, இரந்தான்-வேண்டினனென்; (வேண்டியும்), தன் நேர் இல்லா தீயவள்-தனக்குஒப்பு (வேறு ஒருவரும்) இல்லாத கொடிய கைகேயி,உள்ளம் தடுமாறுள்-மனம்மாறி இரங்காதவளாய்,--இ வரம் முன்னே தந்தாய்-இத்தவரங்களை முன்னே (வாயாற்) கொடுத்தாய்; நல்காய்-(இப்பொழுது தொழிலாற்) கொடாமல், முனிவாய் எல் - வெறுப்பாயானால், மன்ற - சக்கரவர்த்தியே! என்னை - (செய்யத்தக்கது) யாதுளது? இனி—, வாய்மைக்கு - உண்மைக்கு, யார் உளர்-(இவ்வுலகத்தில்) எவர் இருக்கின்றார்கள்?" என்றாள்—; (எ - று.)

உலகத்தில் தருமத்தை நிலைநாட்டவேண்டுவது மன்னவன்தொழிலே யாதலாலும், "வையகமுற்றும் நடத்தவாய்மையன்" என்றவாறு உலகெங்கும் தன்மெய்ம்மையை நடக்கச் செய்தலாலும், அப்படிப்பட்ட நீயே வாய்மைதவறின் உலகில் வாய்மையே நிலையா தென்பாள் 'மன்ற யாருளர் வாய்மைக்கு இனி' என்கிறாள்;உன்போல வாய்மையுடையவர் வேறொருவருமில்லையென இகழ்ச்சி செய்தபடியுமாம்.கீழ்: "தீயனை யாவையினுஞ்சிறந்த தீயாள்" என்றதற்கேற்ப 'தன்னேரில்லாத் தீயவள்' என்றார். கணவன் மனம்கொந்து இரக்கவும் அவனுக்கு மனத்துயர் மிகுவதுபற்றிச் சிறிதும் சிந்தனையின்றிக் கல்லினும் வன்னெஞ்சளாயிருப்பதுபற்றிக் கைகேயியை இவ்வாறு கூறிய தென்க. பி ம்:—[1]இன்ன, இன்னம். [2]இயன்மன்னன், இகன்மன்னன். [3]நல்கா. (உகஎ)

ங.க.—கைகேயியின் பேச்சினால் மன்னவன்மூர்ச்சித்துப் பின்பு தெளிந்து பேசத்தொடங்குதல்.

அச்சொற் கேளா வாவி புழுங்கா வயர்கின்றான்
பொய்ச்சொற் [1]கேளா வாய்மொழி மன்னன் பொறை[2]கூர
நச்சுத் தீயே [3]பெண்ணுரு வன்றோ வென[4]நாணு
முச்சற் றூர்போற் பின்னு [5]மிரங்தெ மொழிகின்றான்.

(இ - ள்.) பொய் சொல் கேளா வாய் மொழி மன்னன்-அசத்தியமான வார்த்தையைக் கேட்டும் அறியாத வாய்மையுள்ள வார்த்தையையுடைய சக்ர வர்த்தி,—அ சொல் கேளா-அந்தவார்த்தையைக் கேட்டு, ஆவி புழுங்கா-உயிர் வெதும்பி, அயர்கின்றன்-சோர்கின்றவனாகி,—பொறை கூர-(பின்பு) பொறு மைமிக, 'பெண் உரு-இந்த ஸ்த்ரீரூபம், நச்சு தீவ அன்றே-விஷமும் நெருப் பும் (போன்ற தொன்று) அல்லவோ?' என - என்றெண்ணி, நாணு-வெட்கி, மூச்சு அற்றார் போல்-மூச்சு அற்றவரைப்போல இருந்து [மூர்ச்சையடைந்து கிடந்து], பின்உம் - மீண்டும், இரந்துவ மொழிகின்றன் - இரத்தலேமேற் கொண்டே பேசுகின்றன்; (எ - று.)—அது மேற்கூறுகின்றார்.

எப்பொழுதும் மெய்யேபேசுபவனுதலால் தசரதமன்னன் 'மன்னு! இவ் வரம் நல்காய்:முனிவாயேல் வாய்மைக்கு யாருளர்?'என்று கைகேயி மொழிந் ததைக்கேட்டு உயிர்வெம்பிச் சோர மிகவருந்தி, அக்கைகேயியின் கொடுமை யைக்கண்டு அவளிடத்துப் பேச நேர்ந்ததற்கு வெட்கி மூர்ச்சித்துப் பின்பு தேறி மீண்டும் குறையிரந்து பேசத்தொடங்கின னென்க. மந்திரிமார்களையும் அரசர் முதலியோரையும் வரவழைத்து 'இராமனுக்குப் பட்டங்கட்டவிரும்பு கிறேன்' என்றுசொல்லி அவரனுமதியையெல்லாம் பெற்று இராமனுக்கும் இராச்சியம் அளிப்பதாகச் சொல்லிவிட்டு, ஒருபெண்ணின் பிடிவாதத்தினால் அச்சொல் பிறழநேர்வது குறித்து வெட்கிய னெனினுமாம். முச்சற்றார் போல்—"இத்தனைகாலம், முச்சற்றன்கொ லம்முழுமுதலோன்" என்பர், யுத்தகாண்டத்தும். கூர்-முன்சிறவாதுள்ளது சிறத்தலாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொல். நச்சுத்தீ-நச்சுதலையுடைய தீயென்றுமாம்; நச்சுதல்-அலட்டுதல், விஷாக்கினியுமாம். முச்சு-மூச்சு என்பதன்விகாரம். பி-ம்:—[1]பணை. [2]நின் றன். [3]பெண்ணுருவன்றுமென. [4]நாளும். [5]இருந்தே. (உகஅ)

உஉ.—இராச்சியத்தைப் பெற்றுக்கொண்டு இராமனைக் காட்டிற்கு அனுப்பாதிருக்குமாறு மன்னவன் மீண்டும் கைகேயியை வேண்டுதல்.

நின்மக னுள்வா னீயினி தாள்வாய் [1]நிலமெல்லா
முன்[2]வய மாமே யாருதி தந்தே னுரை[3]குன்றே
னென்மக னென்க ணென்னுயி ரெல்லா [4]வுயிர்கட்கு
நன்மக னிந்த [5]நாடுற வாமை [6]நயவென்றன்.

(இ - ள்.) [1]நின் மகன் ஆள்வான் - (இராச்சியத்தை) உனதுமைந்தன் [பரதன்] ஆள்வானாக; நீ இனிது ஆள்வாய் - நீ சுகமாய் அதிகாரஞ்செலுத்து வாயாக; நிலம் எல்லாம்-பூமிமுழுவதும், உன் வயம் ஆம்ஏ-உன்னுடைய வச த்ததாகவேயிருக்கட்டும்; ஆருதி-ஆள்வாயாக; தந்தேன்-கொடுத்தேன்; உரை குன்றேன்-சொன்ன சொல் தவறேன்; என் மகன்-எனது புத்திரனும், என் கண்-எனக்குக் கண்போன்றவனும், என் உயிர்-எனது உயிர்போன்றவனும், எல்லா உயிர்கட்குமம் நல்மகன்-எல்லாவுயிர்களுக்குஞ் சிறந்தபுத்திரன் போன் றவனுமாகிய இராமன், இந்த நாடு இறவாமை - இத்தேயத்தைவிட்டு நீங்கா மையையமாத்திரம், நய - விரும்பியருள்புரிவாய்,' என்றன்—; (எ - று.)

கோசலையின் மேன்மையைப் பொறேனென்று கருதுங் கைகேயியைச் சமாதானப்படுத்த, நீ அதிகாரஞ்செலுத்தும்படி பரதனே முடிசூடி யரசு ஆளட்டும்: அவ்வரத்தைப் பின்வாங்காமற் கொடுத்தேன். எனதுகண்மணி இராமனைக்காட்டிற்குச் செல்லவிடாமல் இக்ஷ்வாகுகுலத்திலேயிருக்குமாறு அருள்புரிய வேண்டுமென்று மீண்டும்நயந்து வேண்டுகின்றனன் தசரத னென்க. வயம் - வசம். "தன்னுயிர்க்கென்கை புல்லிது தற்பயந்தெடுத்த, வுன்னுயிர்க்கென நல்லன் மன்னுயிர்க்கெலாமுரவோய்" என்று கீழ் வசிட்டன்கூறினதற்கேற்ப 'என்மகன் எல்லாவுயிர்கட்கும் நன்மகன்' என்கிறான். பி - ம்:—[1]உலகு. [2]வசமாகும், வயமாமேல், வயமாமே. [3]நின்றேன். [4]உலகுக்கும். [5]நாடிறவாமல், நாடிகவாமல். [6]நல்கென்றான். (உகக)

ஈக.—மன்னன் என்னுயிர் உன்னபயமெனல்.

மெய்யே யென்றன் வேலற நூறும் வினைநோக்கி
நையா நின்றே னவு முலர்ந்தே னளினம்போற்
கையா னின்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானே
லுய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான்.

(இ - ள்.) 'மெய்யே - சத்தியமே, என்தன் வேல் அற நூறும் - என்னுடைய அடி கெடும்படி அழிக்கின்ற, வினை-செயலாதலை, நோக்கி - கருதி, நையாநின்றேறன் - வாடுகின்றேன்; நாவும் உலர்ந்தேன் - நாக்கும் வறளப் பெற்றேன்; நளினம் போல் கையான் - தாமரைமலர்போன்ற கைகளையுடைய இராமன், இன்று - இப்பொழுது, என் கண்ணெதிர் நின்றுமும் - எனது கண் களுடைய எதிரிலிருந்து, கழிவான் எல் - நீங்குவானேனல், உய்யேன்-(நான்) பிழையேன்; (ஆதலால்), நங்காய் - பெண்ணே! என் உயிர் உன் அபயம் - எனது பிராணன் உனது அடைக்கலம்,' என்றான்—; (எ - று.)

சத்தியந் தலைகாக்கு மென்பர்; தாயே பகையாவதுபோல அத்தச்சத்தி யமே என்னை வேரோடழிக்கும் வினையாகிவிட்டதால், யான் மனம்நைந்து நாக்குலர்ந்தேன்; தாமரைக்கையனென இராமன் என்கண்ணைவிட்டுஅகன்றா னென்றால் யான் உயிரோடு இரேன்; கைகேயி! அதனால் உன்னை அடைக்கல மாகஅடைகின்றேறன்: என்னுயிர் தங்கும்படி இராமனைக் காட்டிற்குஓட்டா மல் நாட்டில்தானே இருக்கச்சொல்வாயாகவென்றனன் தசரத னென்க. மெய்யே நையாநின்றேறன் எனக் கூட்டி யுரைத்தலும் ஒன்று. (உஉ0)

ஈச.—கைகேசி 'இந்தவரத்தைத் தவிருமாறுகூறுதல் அறமோ?' எனல்.

இரந்தான் சொல்லு மின்னுரை [1]கொள்ளாண் [2]முனிவெஞ்சாண்
மரந்தா [3]னென்னு நெஞ்சின [4]ளாளர் வசைபாரான்
சரந்[5]தாழ் வில்லாய் தந்த வரத்தை தவிர் [6]கென்ற
லுரந்தா [7]னல்லா னல்லற மாமோ வுரையென்றாள்.

(இ - ள்.) (பின்னும் கைகேயி), இரந்தான் சொல்லும் இன் உரை கொள்ளாள் - வேண்டுகின்ற மன்னவன்சொல்லுகின்ற இனியவார்த்தையை அங்கீகரியாதவளும், முனிவு எஞ்சாள்-கோபந் தணியாதவளும், மரம் தான்

என்னும் நெஞ்சினள்-மரமேயென்று சொல்லத்தக்க மனத்தையுடையவளும் நாணள்-(தீச்செயலுக்கு) வெட்கப்படாதவளும், வசை பாராள்-பழியை (பொருளாக) இலட்சியஞ்செய்யாதவளுமாகி, 'சரம் தாழ்வு இல்லாய்-பாணங்களை மிகுதியாகக்கொண்டுள்ளவனே! தந்த வரத்தை - (முன்) கொடுத்த வரத்தை, தவிர்க என்றல்(நீ)-கேளாது ஒழி என்று சொல்லுதல், உரம்தான் அல்லால் - வலியே யல்லாமல், நல் அறம் ஆம்கொ-நல்ல தருமமாகுமோ? உரை சொல்,' என்றாள்—; (எ-று.)

நீ அம்புளப்யும்பெருவீரனாயிருந்து ஒருமெல்லியலிடம் வந்து கொடுத்த வரத்தைத் தவிராவேணு மென்று இரப்பவன்போலக் கேட்பது, 'நமக்குஅஞ்சி இவள் வேண்டியவரத்தை மாற்றிக்கொள்ளட்டும்' என்று உன்வலியால் வற்புறுத்துவதுஆகுமேயன்றித் தருமம்ஆமோ? சொல்,என்று தன்மனம் சிறிதும் நெகிழாமல் கைகேயி கூறினளென்க: "வேலொடுநின்றனிடுவென்றதுவொக்குங், கோலொடுநின்றனிரவு" என்ற குறள் கைகேயியின்பேச்சில் நினைவுக்கு வருகின்றது. 'சரந்தாழ்வில்லாய்' என்ற விளி - உன்னுரை உரத்தால் தோன்றுவதுஎன்பதைத் தெரிவித்தலால், கருத்துடையடை கொளியாம். சரம்தாழ்வில்லாய்-சரத்தைவெளிவிடும்பொருட்டுத் தாழ்கின்ற வில்லையுடையவனே! எனினுமாம்: இதில், உன்னுடைய வன்மையைப் பணிவினால் வெளிப்படுத்துபவன் நீ என்ற கருத்தும் தோன்றும். நெஞ்சில், நெகிழ்ச்சியில்லாமைக்குத் திருஷ்டாந்தமாக 'மரந்தானென்னுநெஞ்சினள்' என்றார்; "மரங்கள்போல் வலியநெஞ்சவஞ்சனேன்" என்றார் பெரியாரும். பி-ம்:—[1]கேளாள். [2]முனிவாரூள், முனிவஞ்சாள். [3]அன்ன, என்ன. [4]ஆளள். [5]தாவில்லாய். [6]என்றூல். [7]இல்லா. (உஉக)

கூநி.—சோகத்தால் மன்னவன் மண்ணில் விழுதல்.

கொடியா ளின்ன கூறினள் கூறக் குலவேவந்தன்
முடி[1] சூடாமல் [2]வெம்பரன் மொய்கா னிடைமெய்யே
நெடி.தோ னீங்க நீங்கு [3]மென்ன துயிரென்ன
விடுதே றண்ட மால்வரை போன்மண் ணினைடவீழ்ந்தான்.

(இ - ள்.) கொடியாள் - கொடியவளாகியகைகேயி, இன்ன கூறினள்-இப்படிப்பட்டவைகளைச் சொன்னள்; கூற - சொல்ல, குலம் வேந்தன்—, நெடியோன் - இராமன்; முடி சூடாமல் - கிரீடத்தைச் சூடப்பெறாமல், வெம் பரல் மொய் கானிடை - கொடிய [உறுத்துந்தன்மையுள்ள] பரற்கற்கள் நெருங்கிய காட்டில், நீங்க - பிரிய, என் ஆர் உயிர் - எனது (உடம்பிற்) பொருந்திய உயிர், மெய்யே - உண்மையாக, நீங்கும்-பிரியும்,' என்ன-என்று சொல்லி, இடி ஏறு உண்ட - பேரிடிவிழுந்த, மால் வரை போல் - பெரிய மலைபோல, மண்ணினிடை - பூமியில், வீழ்ந்தான்—; (எ - று.)

தசரதன் கைகேயியின் அக்கடுஞ்சொல்லைக்கேட்டு 'இனி இராமன் முடி சூடப்பெறாமல் வெம்பரற்கானிடைச் செல்வது திண்ணம்; அவன் நீங்க என்னுயிரும் நீங்கும்'என்று சொல்லிப் பெருந்துயரத்தாற் புவியில் வீழ்ந்தனன்

னென்க. குலம்-சூரியகுலம். இடியேறுண்ட மால்வரை யென்றது - மூன்ளிற் சிறகுள்ளனவாயிருந்து பறந்து நாடுகளின்மேல் விழுந்து அழித்துக் கொண்டிருந்ததனால் இந்திரனால் வச்சிராயுதங்கொண்டு சிறகரியப்பட்ட மலை களையென்னலாம். பி-ம்:—[1]சூட்டாமல். [2]காத்தலும், காத்தது. [3]என்னுவியினி. மூன்றுமடியில்'நெடியோனீங்குநீக்கலு நீங்கானினியென்னு' என்றும் பாடம்.

ங.—வீழ்ந்தமன்னவன் கைகேயியின்கொடுநெஞ்சைகீகண்டு வருந்தத்தொடங்கல்.

வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்
தாழ்ந்தா ளுழா வக்கட லுக்கோர் கரைகாணான்
[1]சூழ்ந்தா [2]டன்பஞ் சொற்கொடி யாள்சொற் கொடு[3]நெஞ்சம்
[4]போழ்ந்தா [5]ளுள்ளப் புன்மையை நோக்கிப் [6]புரள்கின்றான்.

(இ-ள்.) (தசரதமன்னவன்),—வீழ்ந்தான்-(பூமியில்)விழுந்தான்; வீழா-விழுந்து, வெம் துயரத்தின் கடல் வெள்ளத்து-கொடிய துன்பமாகிய சமுத்திரத்தினது நடுவெள்ளத்தில், ஆழ்ந்தான் - அழுந்தினான்; ஆழா - அழுந்தி, அ கடலுக்கு - அச்சமுத்திரத்திற்கு, ஓர் கரை காணான் - ஒரு எல்லையைக் காணாதவனாய்,துன்பம் சூழ்ந்தாள்-தீங்கை யாலோசித்தவளும், சொல் கொடி யாள்-கொடிய வார்த்தையையுடையவளும், சொல் கொடு நெஞ்சம் போழ்ந் தாள்-(தன்) வார்த்தையால் மனத்தைப் பிளந்தவளுமாகிய கைகேயினது, உள்ளம் புன்மையை-மனத்தினது அற்பத்தன்மையை, நோக்கி - பார்த்து, புரள்கின்றான்-(மனஞ்சகியாமற் புவியிற்) புரள்பவனானான்; (எ - று.)

கரையின்றிவருதலால், துயரத்தின் கடலென்றார்; "பிறவிப்பெருங் கடல்" என்றாற்போல. கரைகாணுமைக்கு, நடுவெள்ளமென்றுரைத்தாம். நீந் தற்கருமையால், 'ஆழ்ந்தான்' என்றார். சொற்கொடியாள் கொடுஞ்சொல் லாள்என விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது. துன்பஞ்சூழ்ந்தாள்,சொற்கொடி யாள் என்பவை கூனியையாய், அவள்சொற்கொடுநெஞ்சம்போழ்ந்தாளென் றுமாம். நோக்குதல் - கருதுதல். பி-ம்:—[1]சூழ்ந்தான். [2]துன்பச். [3]சித்தம். [4]போழ்ந்தான். [5]என்னப். [6]புலர்கின்றான். (உஉங)

ஙஎ.—இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்: தசரதன் கைகேயியைப் பலவாறு பழித்துத் துயருறுதலைத் தெரிவிக்கும்.

[1]ஒன்று நின்ற [2]வாருயி ரோடு [3]மூயர்[4]கேள்வர்
பொன்று முன்னம் [5]பொன்றின ரென்னும் புகழல்லா
[6]லின்றோர் காறு [7]மெல்வளை யார்தம் மிறையோனைக்
கொன்று நில்லைக் [8]கொல்லுதி யோநீ கொடியாளே.

(இ-ள்.) 'எல் வளையார்-விளக்கமுள்ள வளையலையுடைய மகளிர், ஒன்று நின்ற - (உடலோடு) பொருந்திய, ஆர் உயிரோடு உம் - அரிய உயிருடனே, உயர் கேள்வர் - (எல்லாப்பொருளினும்) சிறந்த பிராணநாயகர், பொன்று

முன்னம் - இறப்பதற்குமுன்னே, பொன்றினர் - (தாம்) இறந்தனர்,' என் னும்-என்றுசொல்லப்படுகின்ற, புகழ் அல்லால்-கீர்த்தியைக் கொண்டவரல் லாமல், இன்று காறுஉம் - இதுவரையிலும், தம் இறையோரை கொன்றூர் - தமதுகணவரைக்கொலைசெய்தவர், இல்லை-எங்குமில்லை; கொடியாளே-கொடுந் தன்மையையுடையாளே! நீ கொல்லுதியோ-நீ கணவனைக் கொல்லுகின்றாயோ?

கணவன் இறக்கத் தாம் உயிர்வைத்துக்கொண்டிருக்க விருப்பமில் லாது அவருடன் மாய்ந்தா ரென்று புகழ்பெற்ற மகளிரும் பலர்உளர்:ஆதலால், இதுவரையில், தன் கணவனைக் கொன்றூரென்று பேரெடுத்த மகளிர் இவ் வுலகில் லில்லை. நீ கணவனுயிரைக் கொன்கின்ற யாதலால், உன்போற் கொடியா ருண்டோ? என்று தசரதன் கைகேயியைப் பழித்தன னென்க. கற்புடைமகளிர் கணவன்இறந்ததைக் கேட்டமாத்திரத்தில் உயிர்மாயப் பெறுவரென்றும், அங்ஙனம் உயிர்போகாவிடின் குளிர்ந்த நீர்ப்பொய்கையிற் குளித்தல்போலத் தீக்குதித்து உயிர்மாய்ப்பரென்றும் நூல்கள் கூறும்: இவற் றை "அரிமா னேந்திய வடிவிமிசையிருந்த, திருவீழ்மார்பிற் றென்னர் கோ மான், றயங்கிணர்க்கோதைதன் றுயர்பொறுஅன், மயங்கினன்கொல்லென மலரடிவருடத், தலைத்தாணெடுமொழி தன்செவிதேளாள், கலக்கங்கொள் ளாள் கடுந்துயர்பெறுஅண், மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத், தன் னுயிர்கொண் டவனுயிர் தேடினள்போற், பெருங்கோப்பெண்டு மொருங் குடன் மாய்ந்தனள்" என்ற சிலப்பதிகாரமும், "காதலன்வீயக்கடுந்துயரெய் திப், போதல்செய்யாவுயிரொடு புலந்து, ளியிரும்பொய்கை யாடுகர்போல, முளியெரிபுகூஉ முதுக்குடிப்பிறந்த, பத்தினிப்பெண்டிர்"என்ற மணிமேகலை யும், "பெருந்தோட்கணவன் மாய்தென வரும்பற,வள்ளிதழவிழ்ந்த தாமரை, நள்ளிரும் பொய்கையுந் தீயுமோரற்றே" என்ற புறநானூறும், "ஒருயிராக வுணர்கவுடன்கலந்தார்க், கிருயிரென்பரிடை தெரியார்-போரில், விடனேந் தும் வேலோற்கும் வெள்வளையினைட்கு, முடனே யலந்ததுயிர்" என்ற வெண்பாமாலையும் இங்குக் காணத்தக்கன. ஓர்-ஆசை. எல் - இடைச்சொல்; இது உரிச்சொல் நீர்மைத்தாயினும், ஆசிரியர்"எல்லேயிலக்கம்"என இடைச் சொல்லாக வோதினமையால் இடைச்சொல்லென்றே கொள்க. இனி, மெல் வளையார் என்றும் பிரிக்கலாம். பி-மீ:—[1]ஒன்றூய். [2]அவ்வுயிர். [3]உயிர்க். [4]கேள்வன். [5]பொன்றினள், போதினர். [6]இன்றே. [7]பெய். [8]கொல்லுதியே.()

கூடீ. ஏவம் பாரா [1]யின்முறை நோக்கா யறமெண்ணை
யாவென் பாயோ வல்லை மனத்தா லருள்கொன்றூய்
நாவம் பாலென் றருயி ருண்டா யினிநூலம்
பாவம் பாரா [2]தின்னுயிர் கொள்ளப் [3]போகின்றூய்.

(இ - ள்.) (நீ), ஏவம் பாராய்-குற்றத்தைக் கருதாய்; இல் முறை நோக் காய்-நற்குடிப்பிறந்தமகளிர் செய்யும் கிரமத்தைப் பாராய்; அறம் எண்ணை - தருமத்தை நினையாய்; ஆ என்பாயோ அல்லை - அந்தோ என்று இரங்குகின்

ரூயுமில்லை;மனத்தால் அருள் கொன்ரூய்-நெஞ்சிற் கருணையழித்து விட்டாய்; நா அம்பால் - (உனது) சொல்லாகிய அம்பினால், என் ஆர் உயிர் உண்டாய்- எனது அரியபிராணனை வாங்கினாய்; இனி—, பாவம் பாராது - பாவத்தை நினையாமல், ஞாலம் - உலகத்தாரது, இன் உயிர்-இனிய பிராணனை, கொள்ளப்போகின்ரூய் - கொலைசெய்யப் போகிரூய்; (எ - று.)

மிகக்கொடிய நீ உன்தாவாகிய அம்மை என்மீது எய்ததனால், நான் உயிர் போகும் நிலையை யடைந்திட்டேன்: இனி, விரைவில்தானே இராமனைக் காட்டிற்குத்ரதத்தி அவன்மூலமாய் இவ்வுலகத்தார் உயிரையேகொள்ளப்போகின்ரூயென்று தசரதன் பழித்தவாறு. உலகத்தார் இராமபிரானிடத்துப்பேரன்புவைத்திருப்பதை யுணர்ந்ததுபற்றி, மன்னவன் 'ஞாலத்தின்னுயிர் கொள்ளப்போகின்ரூய்' என்கிரூன். ஏவம்-எவ்வம் என்பதன் விகாரம். பாராய், நோக்காய், எண்ணைப்-எதிர்மறை ஆகாவிகுதி புணர்ந்து கெட்டன; உடன்பாடாகவுரைக்கவுமாம். பி-ம்:—[1]இனமுறை.[2]என்னுயிர். [3]படுகின்ரூய்.

ரூ. ஏண்பா [1]லிலாவா நாண்மட மச்ச மிவைமீதம்
பூண்பா லாகக் [2]காண்பவர் நல்லார் [3]புகழ்பேணி
நாண்பா [4]லோரா நங்கையர் தம்பா [5]னணுகாரே
[6]யாண்பா லாரே [7]பெண்பா லாரோ டடைவம்மா.

(இ - ள்.) ஏண் பால் - பெருமையின்பகுதியினின்று, ஓவா - நீங்காத, நாண் மடம் அச்சம் இவைஎ - நாணம் மடம் அச்சம் என்பவற்றை, தம் பூண் பால் ஆக - தமது ஆபரணங்களின்பகுப்பிற் சேர்ந்தனவாக, காண்பவர் - (மனத்திலுலாவாய்ந்து) கொள்பவரே, நல்லார் - மகளிரென்றுசொல்லத்தக்கவர்; புகழ் பேணி நாண்பால் ஓவா - புகழைவிரும்பி நாணின் பகுதியைக் கொள்ளவேண்டியது இன்றியமையாததாகவிருக்கவும் அதனை யறியாத, நங்கையர் - மாதர்கள்,—தம் பால் - தமது பகுப்பாகிய பெண்பாலார் வர்க்கத்தில், நணுகார் - சேரமாட்டார்; (பின்னை அவர் எத்தப்பாலிற் சேர்வரென்னில்),—ஆண்பாலார் ஏ - ஆண்பால்வர்க்கத்திற் சேர்ந்தவரேயாவர்; பெண்பாலாரோடு அடைவு-(அவர்கள் உலகத்திற்) பெண்பாலாரோடு வழிவு ஒப்புமைபற்றிச் சேர்வது (எவ்வாறு?) அம்மா - ஆச்சரியம்! (எ - று.)

நாண் மடம் முதலிய பெண்மைக்குணம் இல்லாதவர் பாலைக்குப் பெண்பாலார் போலத்தோன்றினும் ஆண்பாலாகவே கருதத்தக்கார்: உலகத்தில் அவரைப் பெண்பாலாராக வழிவு ஒப்புமை மாத்திரத்தைக் கொண்டு வழங்குவது வியக்கத்தக்கதேயென்றவாறு. இனிப்பின்னிரண்டடிகட்கு—நாண்என்ற பெண்மைக்குணத்தைத் தம்மிடத்துக்கொள்ளாத மகளையிடத்துச் சேராத ஆண்பாலாரே ஆண்பாலாரென்று சொல்லுதற்குரியவர்; அந்நாணம் நாணமற்ற மகளிரிடத்துச்சேரும் ஆண்பாலாரோ பெண்பாலாரோடு சேர்த்துச்சொல்லுதற்கு உரியவ ரென்று பொருளுரைப்பாருமுளர்.

நாண் மடம் அச்சம் என்பன-பயிர்ப்பென்னும் குணத்திற்கும் உபலக்ஷணம். அவற்றுள், நாண்-தகாதவற்றின்கண் உள்ள மொடுங்குதல்; மடம்-எல்லா

மறிந்தும் அறியாதுபோலிருத்தல்; அச்சம் - என்றுங்காணுததைக் கண்டவிட
த்து அஞ்சுதல். பயிர்ப்பு - தன்கணவனல்லாதவரின் கைமுதலியன மேற்படின்
அருவருத்தல். "கடிசொல்லில்லை காலத்துப்படினே" என்றதனால், அம்மா
வென்பது வந்ததென்க. பி-ம்:—[1]ஒவ்வா. [2]காண்பயனுக்குப், காண்பயரு
கும், காண்பயனந்தப், காண்பவர்நல்ல, காண்பனநல்ல, காண்பனநல்லார்.
[3]பயனீத்த. [4]ஓரார், ஓர்வார். [5]நணுகாதோர், அணுகாரோ. [6]ஆண்பாலொவ்
வா, ஆண்பாலாரோ. [7]அப்பொருளாரோடடைவு, பேரருளாரோடடைவு,
பெண்பாலுளரோடடைவு, பெண்பொருளாருமடைவு, பேரருளென்னுமவர்.

சஅ. மண்ணுள் கின்று [1]ராகி வலத்தான் மதியால்வைத்
தெண்ணு நின்றூர் யாரையு மெல்லா விகலாலும்
விண்மேனூர் காறும் வென்ற வெனக்[2]கொர் மனைவாழும்
பெண்ணுல் [3]வந்த தந்தர மென்னப் [4]பெறுவேனே.

(இ-ள்.) மண் ஆள்கின்றூர் ஆகி-பூமியை ஆளுகின்றவராய், வலத்தால்-
பலத்தினுலும், மதியால் - புத்தியினுலும், வைத்து - (மேலாக) வைத்து,
எண்ணு நின்றூர் யாரையும் - எண்ணப்படுகின்ற எல்லா அரசரையும், எல்லா
இகலாலும் - எல்லாவகையினுலும், விண்மேனூர்காறும் - தேவர்வரையிலும்,
வென்ற-சயித்த, எனக்கு—, மனை வாழும் ஓர் பெண்ணுல்-(எனது) வீட்டில்
வாழும் ஒருபெண்ணினுல், அந்தரம் வந்தது-தீமை சேர்ந்தது, என்ன பெறு
வேன் ஓ - என்றுசொல்லத்தக்க நிலைமையை அடைவேனே! (எ - று.)

புத்திபலம் தேகபலம் முதலியவற்றுற்சிறந்த இவ்வுலகத்தரசரையும்விண்
ணுலகத்தவரையும் வென்று பெருவீரனென்று பேர்பெற்ற எனக்கு அவ்விரு
வகைவலிமையுமில்லாத வீட்டில்வாழும்பெண்ணினுல் உயிர்போகும் நிலை நிக
ழும் படியாவதே! என்று தசரதன் வருந்துகின்றனனென்க. வைத்து-அசை
யாகவுமாம். எல்லாவிகலாவன - பலம், மதிமுதலியன; எல்லாப்போராலும்
என்றுமாம். அந்தரம் - மரணம். ஓ - இழிவுசிறப்பு. மனைவாழும்பெண் -
மனைவியென்னவுமாம். பி-ம்:—[1]ஆதிவலத்தின். [2]என், ஏ. [3]வந்ததீதாம்,
வந்தவந்தாம். [4]பெறுகேனே.

(உஉஎ)

சக. என்றென் றுன்னும் பன்னி [1]யுயிர்க்கு [2]மிடர்தோயு
டொன்றென்ற [3]றெவ்வா வின்ன லுழக்கு [4]முயிருண்டோ
[5]வின்றின் றென்னும் வண்ண [6]டயங்கு [7]மிடியும்பொற்
குன்[8]றென் றென்றே[9]டொன்றிய தென்னக் குவிதோளான்.

(இ-ள்.) பொன் குன்று ஒன்று-ஒருபொன்மயமான மலை, ஒன்றோடொன்றி
யது என்ன-(அத்தனையமலை) மற்றொன்றுடன் சேர்ந்தால் (அதைப்) போல
விருக்கின்ற; குவிதோளான்-திரண்டதோள்களையுடைய சக்ரவர்த்தி,—என்று
என்று உன்னும்-என்று பலவாருக நினைப்பான்; பன்னி-(வாயிறொற்) பலபடி
சொல்லி, உயிர்க்கும்-பெருமூச்செறிவான்; இடர் தோயும் - துன்பக்கடலில்
மூழ்குவான்; ஒன்று ஒன்று ஒவ்வா-ஒன்றோடொன்று ஒவ்வாத [பலவகைப்

பட்ட], இன்னல் - துன்பத்தில், உழக்கும் - வருந்துவான்; 'உயிர் உண்டோ - பிராணன்இருக்கின்றதோ, இன்று இன்று - இல்லை இல்லை,' என்னும் வண்ணம் - என்றுசொல்லும்படி, மயங்கும் - மூர்ச்சிப்பான்; இடியும் - (நெஞ்சு) உடைவான்; (எ - று.)

தோய்தலென்னும் வினைக்கேற்ப, இடர் கடலாக உரைக்கப்பட்டது பொன்குன்றொன்றொன்றோடொன்றியது—இல்பொருளுவமை. பி - ம்:—[1]இரக்கும், இரங்கும். [2]மிடலாயும், மிடலோயும். [3]அல்லா. [4]உயிரோடும். [5]இன்றென்றுன்னும், அன்றென்றுன்னும். [6]அயர்க்கும். [7]இடைகின்றான், இடைதேறான், மிடிதென்றான், மிடையும்பொற், மடியும்பொற். [8]ஒன்றோடொன்று. [9]ஒன்றியவென்ன. (உஉஅ)

சுஉ.—கைகேயி 'நீ உரைத்தபினும் நான்உயிர்மாய்வேன்' எனல்.

ஆழிப் பொற்றேர் மன்னவ [1]னிவ்வா றயர்வெய்திப்
பூழிப் [2]பொற்றோண் முற்று மடங்கப் புரள்போழ்தி
லூழிற் [3]பெற்ற [4]லென்னுரை [5]யின்றே லுயிர்மாய்வேன்
பாழிப் [6]பொற்றூர் மன்னவ லென்றாள் பணையற்றாள்.

(இ - ள்.) ஆழி பொன் தேர் மன்னவன் - சக்கரத்தைக்கொண்ட பொன்மயமான இரதத்தையுடைய சக்கரவர்த்தி, இவ்வாறு - இங்ஙனம், அயர்வு எய்தி - தளர்வடைந்து, பொன் தோள் முற்றும் - (தன்) அழகியபுயமுழுவதிலும், பூழி அடங்க - புழுதி நிறையும்படி, புரள் போழ்தில்-(பூமியிற்)புரளுங் காலத்தில்,—'என்உரை - என்வசனத்தை, ஊழில் பெற்றால் - முறைமையாகப் பெற்றால்சரி, இன்று எல் - பெரும்பிழை, உயிர் மாய்வேன் - பிராணனை மாய்த்துக்கொள்வேன்; பாழி பொன் தார் மன்னவ - வலியையும் அழகிய வெற்றிமாலையையுமுடைய அரசனே!' என்றாள்—; (யாதெனில்), பணை அற்றாள் - (நெஞ்சில்) ஈரமில்லாதவளான கைகேயி; (எ - று.)

மன்னவன் துயரத்தாற் பலவாறு சொல்லிபவண்ணம் பூமியிற் புரண்டு கொண்டிருக்கையில், கைகேயி தன்மனத்திற்கொண்டுள்ள உறுதியை வெளியிட்டனளென்க. பெற்றால் என்ற வினையெச்சத்திற்கு உயிர்வைத்திருப்பேனென்றுமுடிக்குஞ்சொல் வருவிக்க. ஆழிப்பொற்றேர் மன்னவன் என்பதில், தசரதன் என்பதன் கருத்து அடக்கியிருக்கின்றது: தேர், சூழ்வையும் தேரையுமுடைய மன்னவ னென்றுமாம். 'மன்னவ' என்ற விளி - தான் உன்னைக் கணவனாகக்கொண்டு உன் கொள்கைப்படி நடக்கவேண்டுமென்கின்ற கற்புடைமகளிர்நிலையிலிருந்து பேசவில்லை; அறத்தைப் பாதுகாக்கவேண்டிய அரசன் முறையில் உன்னைவைத்து நீ அறம்வழுவாது சொன்னசொல்லைப் பாதுகாக்குமாறு வற்புறுத்துகின்றனை னென்பதைக் குறிப்பிக்கும். பூழி, பொழ்து - புழுதி, பொழுது என்பவற்றின் மரூஉ. அற்றாள் - பெயர். பணை - ஈரம், உள்ளன்பு. பி - ம்:—[1]அவ்வாறு. [2]பொற்றார். [3]பொய்த்தாற். பொய்த்தாய், பெற்றாய். [4]என்றுரை. [5]அன்றேல், இன்றேல். [6]பொற்றேரான். (ஈ)

சுரு.—கைகேயி 'நீ வரம்கொடுத்துவிட்டு இப்போது வருந்துவது தகாது' எனல்.

அரிந்தான் முன்னோர் மன்னவ [1]னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரநல்கிப்
[2]பரிந்தா [3]லென்னு மென்றனள் [4]பாயுங் கனலேபோ
லெரிந்[5]தா றுதே யின்னுயி ருண்ணு மெரியன்னாள்.

(இ - ள்.) பாயும் கனல் ஏ போல் - பரவுகின்ற தீப்போல, எரிந்து ஆறுதே - எரிந்து தணியாமல், இன் உயிர் உண்ணும் - இனிய பிராணனைக் குடிக்கின்ற, எரிஅன்னாள் - நெருப்பையொத்த அந்தக் கைகேயி, 'வரிந்து - இறுக்கி, ஆர் - கட்டப்பட்ட, வில்லாய் - தனுவையுடையவனே! ஓர் மன்னவன் - (உன்குலத்திற்பிறந்த) ஒரு அரசன், முன் - முன்னே, வாய்மை வளர்ப்பான் - மெய்யை வளரச்செய்யும்பொருட்டு, அரு மேனி - (பெறுதற்கு) அரிய உடலை, அரிந்தான் அன்றே - அறுத்துக்கொடுத்தானல்லவா? (அவன்வமிசத்திற்பிறந்த நீ), வரம் நல்கி - வரத்தைக் கொடுத்து, (அவ்வரத்தைக் கேட்கும்போது), பரிந்தால் - வருந்திஞல், என் ஆம்-யாது பயன்உண்டாகும்? என்றனள்—; (எ - று.)

சிபி பிரதிஜ்ஞைசெய்தபடியே தன்னுடலைப் பருந்துக்கு அறுத்துக்கொடுத்துநற்கதியடைந்தான்: அலர்க்கனென்ற ராஜரிஷியும் ஓரந்தணனுக்குத் தன்கண்களைப்பிடுங்கிக்கொடுத்தான். ஸமுத்ரமும் ப்ரதிஜ்ஞைகடவாதிருக்கும்படி கரைகடவாதிருக்கின்றது: ஆகவே, சத்தியந்தான் முக்கியம். சத்தியத்தைக்காட்டிலும் மேம்பட்ட தருமமில்லையாகையால், உலகில்மேம்பட்டவனை நீ செய்தபிரதிஜ்ஞைதவறுதல் இராமனைக் காட்டிற்குஅனுப்புவாயாக:மும்முறைசொல்லுகின்றேன். நீ என்பொருட்டுச்செய்த பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவிடின் உன்முன்னிலையிற்றானேபிராணனைவிடுவேன்:என்புதல்வனுக்குப்பட்டங்கட்டி இராமனைக்காட்டிற்குஅனுப்பி எனக்கு எதிரிகளில்லாமற்செய்வாய். இல்லாவிடின் பிரதிஜ்ஞைதவறிய நீ கடைத்தேற முடியாது எனக் கடுமைபாகக் கைகேயி கூறினளென முதனூல்பற்றி விரித்துரைக்க. ஓர்மன்னவன் - சிபி; இதனை "புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகை," "இவர்குலத்தோன் மேற்பறவை, மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறுகவழங்கினனால்" எனப் பாலகாண்டத்திற் கூறியவாற்றானு முணர்க. இதனை யெடுத்துக்கூறினள், அவன்வமிசத்துப் பிறந்த நீ உயிர்துறந்தாயினும் வாய்மையை நிலைபெறுத்தவேண்டு மென்றற்கு. ஒருபொருளைப் பற்றி யெரித்தபின் ஆறிவிடுவதாயிருக்கக் கைகேயியாகிய தீயோ உயிரோடு கூடிய மன்னவனைப்பற்றியெரித்தும் தணியாது அவனுயிரையுங் கொள்ளுகின்றதென வேற்றுமையணி தோன்றக்கூறுவார் 'எரிந்தாறுதேயின்னுயிருண்ணு மெரியன்னாள்' என்றார். எரிந்தாறுதேயின்னுயிருண்ணு மெரியன்னாள் என்ற விடத்து "தீயிறைச்சுட்ட புனலுள்ளாறு மாறுதே, நாவிறைச்சுட்டவடு" என்னுந் திருக்குறளின்பொருள் அறியத்தகும். வாய்மை - வாயினின்று தோன்றுவதாகிய சத்தியம். பி - ம்:—[1]அன்றே. [2]பிரிந்தாய். [3]என்னை, என்னே. [4]பெய்யும். [5]எறுதே.

(உரு ஏ)

சசு.—தசரதன் கைகேயிக்கு வரத்தைத் தந்தேனெனல்.

[1]வீந்தா ளெயிவ் வெய்யவ ளென்னு மிடல் வேந்த
னீந்தே னீந்தே னிவ்வர மென்சேய் வனமாள
மாய்ந்தே கான்போய் வா[2]னுல காள்வென் வசைவெள்ள
நீந்தாய் நீந்தாய் நின்மக னேடுந் நெடிதென்றான்.

(இ - ள்.) 'இ வெய்யவள்-இக்கொடியவள், வீந்தாள் ஏ - (கேட்டவரத்தைக் கொடுக்காவிட்டால்) இறந்தவளேயாவள்,' என்னை - என்னிறண்ணி,—மிடல் வேந்தன்-வலியையுடைய சக்ரவர்த்தி,—'இ வரம் ஈந்தேன் ஈந்தேன்-இவ்வரத்தைக்கொடுத்தேன் கொடுத்தேன், என் சேய் வனம் ஆள-என்மகன் [ராமன்] காட்டையாள, நான் மாய்ந்து ஏ போய்-யான் இறந்துபோய், வான் உலகு ஆள்வென்-தேவலோகத்தை யாள்வேன்; நெடிது - வெகுகாலம், நின் மகனேடும்-உனதுபிள்ளையுடன் [பரதனுடன்], வசை வெள்ளம் - பழியாகிய கடலை, நீந்தாய் நீந்தாய் - கடக்கமாட்டாமல் அதனுள் அழுந்துவாயாக,' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

'இனி இவள் கேட்டவரத்தைக் கொடுக்கப் பின்வாங்கினால் இப்போதே உயிர்விடுவள்: அங்ஙனம் உயிர்நீத்தால் நாம் மெய்ம்மைதவறியவனாவதோடு பெண்கொலைக்குக் காரணமாவதுபற்றிப் பெண்பாவமும் நம்மைத் தொடரும்: ஆதலால், இவள் கேட்டவரத்தைக் கொடுத்தலே சரி' என்று உறுதிகொண்ட தசரதன் 'நீ கேட்கும்வரத்தைத் தந்தேன் தந்தேன்; உண்மை தவறுதற் பயத்தினால் சுவர்க்கலோகத்தில் நான் மேன்மை பெற்றிருக்க, நீ கணவனைக் கொன்ற பெரும்பழி நீலத்திருக்க, உன்மகனுடன் இனிது அரசுபுரிவாய்' என்று தன்மனத்திலுள்ள அடக்காத்துயரமும் வெகுளியுந்தோன்றச் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டுக் கூறின னென்க. வீந்தாள் - வினைவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது; தெளிவுபற்றியுமாம். ஈந்தேனீந்தேன், நீந்தாய் நீந்தாய் - அடுக்குதேற்றப்பொருளெச்சாட்டும்; வெகுளியுமாம். ஆளுதல்-அடைதல். வெள்ளம்-ஆகுபெயர். பி-ம்:-[1]வீய்ந்தாள். [2]ஆசாள்வன்.

சரு.—வரந்தந்த மன்னவன் மூர்ச்சிக்க, கைகேயி தன்னெண்ணம் நிறைவேறித் துயிலுதல்.

கூறு [1]முன்னங் கூறு படுக்குங் கொலைவாளி
னேறு [2]மென்னும் வன்றுய ராகத் திடைமூழ்கத்
தேறு ளுகிச் செய்கை மறந்தான் செயன்முற்றி
யூறு நின்ற [3]சிந்தையி னுளுந் துயில்வுற்றுள்.

(இ - ள்.) கூறு முன்னம்-சொல்லுதற்கு முன்னே;—கூறு படுக்கும் - பாதியாக அறுக்கின்ற, கொலை-கொல்லுதற் றொழிலையுடைய, வாளின் ஏறு ஆம்-சிறந்த வாளோடு ஒத்ததாகும், என்னும் - என்றுசொல்லத்தக்க, வன் துயர்-கொடிய துன்பம், ஆகத்து இடை மூழ்க - மனத்தில் அழுந்துதலால்,

(அத்தசரதன்), தேறுன் ஆகி-தனியாதவனுய், செய்கை மறந்தான் - செயல் மறந்துகிடந்தான்; செயல் முற்றி-தன்காரியத்தை முடித்துக்கொண்டு, ஊறு நின்ற சிந்தையிளுள்உம் - களிப்புமிகுகின்ற மனத்தையுடைய கைகேயியும், துயில்வு உற்ருள் - தூக்கத்தை யடைந்தாள்; (எ - று.)

வரத்தைத்தந்தவுடனே பெருந்துயர் மனத்தில் மூளத் தசரதமன்னவன் நிகைத்து மூர்ச்சித்தான்; கைகேயியோ தன்னெண்ணம் முற்றியதனுல் மனக் களிப்போடு துயிலலாளுளென்க. கூருழுன்னம் செய்கைமறந்தான்-**உயர்வு நவிற்சி.** இச்செய்யுளில் தசரதமன்னவன் பெருந்துயரினுற்செயலற்றுக்கிட க்க, கைகேயியும் பெருமகிழ்ச்சியால் மெய்ம்மறந்து தூங்கினுளெனத் துயருற் ருருக்கும் மகிழ்ச்சியடைந்தார்க்கும் ஒருதலை நிகழ்ந்ததன்மையைக் கூறிய நயம்பாராட்டத்தக்கது. கூருழுன்னம் என்பதைக் கூறுபடுக்கும் என்பத னேடுஇயைத்து வாளுக்கு அடையாக்கி, வாளினது கூர்மையைச் சிறப்பித் கின்றதெனினுமாம். ஆற்றல்பற்றி வாளின் ஏறென்ருர்; கீழ் "இடியேறு" என்ருற்போல. ஏறு-ஏறுதலென்றுமாம். செயல்முற்ற லாவது-தான் கேட்ட வரங்களைப் பெற்றுக்கொண்டது. கூருழுன்னம் செய்கைமறந்தா னென்று மாம். **பி-மீ:**—[1]மன்னன். [2]வண்ணம். [3]சிந்தையினுனுந்துயில்வுற்ருன்.(உகஉ)

வேறு.

சகூ.—இரவுகழிதலின் வருணனை.

சேணுலாவிய நாளெலாமுயி ரொன்று போல்வன செய்துபி னேணுலாவிய தோளி ணுகிட ரெய்த வொன்று [1]மிரங்கிலா வாணிலாநகை மாதராள்செயல் கண்டு மைந்தர்மு னிற்கவு நாணி ணுளென வேகி ணுணளிர் கங்கு லாகிய நங்கையே.

(இ-ள்.) (பின்பு),சேண் உலாவிய நாள் எலாம்-மிகுதிபொருந்திய தினங் களிலெல்லாம், ஒன்று உயிர் போல்வன-ஒருஉயிரையொக்கின்றகாரியங்களை, செய்து—, பின்-பிறகு [இப்போது என்றபடி], எண் உலாவிய தோளி ணுன்-வலிமைபொருந்திய புயங்களையுடைய கணவன், இடர் எய்த-துன்பத் தை யடைய, (அப்பொழுதும்), ஒன்றுஉம் இரங்கிலா - சிறிதும் மனம் பரி தபியாத, நிலா வாள் நகை மாதராள் - சந்திரகிரணம்போல் ஒளியையுடைய புன்சிரிப்பினையுடைய கைகேயியினது,செயல் கண்டு-தீத்தொழிலைப்பார்த்து, மைந்தர்முன்-ஆடவர்முன்னே, நிற்கஉம் - நிற்பதற்கும், நாணினுள் என - வெட்கப்பட்டவள்போல, எளிர் கங்குல் ஆகிய நங்கை - குளிர்ந்த இராத்திரி யென்கின்ற பெண், எகினுள் - போனுள்; (எ - று.)

ஒருபகுப்பைச் சேர்ந்தவர் ஒருதீத்தொழிலைப் புரியின் அப்பகுப்பைச் சேர்ந்தவர்க்கெல்லாம் வசையுண்டாதல் உலகத்திலே யியற்கையாதலால், பெண்பாலாரைச் சேர்ந்த கைகேயியொருத்தி தன்கணவன் உயிர்நீங்கும்நிலை யையடைந்தும் சிறிதும்இரக்கமில்லாதது குறித்துப் பெண்பாலார்க்கெல்லாம் வசையுண்டாகுமென்று கருதி மைந்தர்முன் நிற்கவும் நாணினுள்போலக் கங்

சூலாகிய நங்கை போயிறவினென்றார்: இது-ஏதுத்தற்குறிப்பேற்றவணி. இவ் வணிக்குக் கங்குலாகிய நங்கை என்ற உருவகவணி அங்கமாய்வந்தது. கங் குற்பொழுதுகழிந்தினென்றவாறு. சேண்உலாவியநாளென்றது விவாகஞ்செய் து கொண்டதுமுதல் வரம்வேண்டியன்று வரையிலுமுள்ள நாட்களை. உயிர் ஒன்று போல்வன - பார்ப்பவர் சக்ரவர்த்திக்கும் இவளுக்கும் உடல்வேறு, உயிர்ஒன்றே யென்று சொல்லத்தக்க இன்செயல்கள். எவ்வாற்றானும் வேறுசோக மில்லாதவ னென்பது விளங்க, 'எனுலாவிய தோளினான்' என் றார். ஒன்றும் - இழிவுசிறப்பு. "வரங்கிப்பரித்தாலென்னும்" என்று கீழ்க் கூறியதனால், 'ஒன்றுமிரங்கிலாமாதரான்' என்றார். வாள் - ஒளி: இனி, வாள் நிலாநகை—அரசனிறத்திற்கு ஏதுவாகலின் வாள்போன்ற நகையென் றுமாம். நிற்கவும் - இழிவுசிறப்பு. வடமொழியுள் இராத்திரியென்பது பெண் பாற்சொல்லாதலின், 'கங்குலாகிய நங்கை' எனப் பெண்பாலாகக் கூறியது. "பால்வாய்ப்பிறைப்பிள்ளை யொக்கலைக்கொண்டு பகலிழந்த,மேல்பாற்றிசைப் பெண்புலம்புறுமாலை" எனப் பெரியாரும் பணித்தார். மாதரான் - அழகினை யுடையவன், அல்லது விருப்பத்தையுடையவன்; மாதர் விருப்பமாதல்"மாதர் காதல்" என்பதனை னுணர்க. பின் - காலம். முன்-இடம். இத்தச் செய்யுளில் பிராசமென்னுஞ் சொல்லணி காண்க. பி-டீ:—[1]இரங்கலா. (உகக)

சஎ.—கோழிகூவுதலின் வருணனை.

எண்ட ருங்கடை சென்ற யாம மிபம்பு கின்றன வேனைழபால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன் மயங்கி விம்மிய வாறலைங்
கண்டு நெஞ்சு கலங்கி யஞ்சிறை [1]யான காமர் துணைக்கரங்
கொண்டு [2]தம்வயி றெற்றி பெற்றி [3]விளிப்ப போன்றன கோழியே.

(இ-ள்.) எண் திரும்-எண்ணப்படுகின்ற [வரையறையையுடைய], கடை சென்ற யாமம் - கடைசியாய்வந்த யாமத்தில், இயம்புகின்றன-கூவுகின்றன வாகிய, கோழி - கோழிகள்,—ஏனைழயால் - கைகேயிபால், வண்டு தங்கிய தொங்கல் மார்பன்-வண்டுகள் மொய்க்கின்ற மாலையணிந்த மார்பினையுடைய சக்ரவர்த்தி, மயங்கி - மதிமயங்கி, விம்மிய ஆறு எலாம்-புலம்பிக்கூறியவை யெல்லாவற்றையும், கண்டு—, நெஞ்சு கலங்கி—, அம் சிறை ஆன - அழகிய சிறகுகளாகிய, காமர் துணை கரம் கொண்டு-அழகிய இரண்டு கைகளால், தம் வயிறு - தம்முடைய வயிற்றில், எற்றி எற்றி - பலமுறை யடித்துக்கொண்டு, விளிப்ப போன்றன - அழுவனவொத்தன; (எ - று.)

இதுமுதற் பதினாறு கவிகளால் பொழுதுவிடிகையில் நிகழும் பலவகை நிகழ்ச்சிகளை வருணிக்கத்தொடங்கி, இதனாற் கோழிகூவுதலை வருணிக்கின் றார். தாம், கூவிப் பொழுதுவிடுவதைத் தெரிவிக்கின்ற கோழிகள், ஒரு பெண்ணால் தசரதசக்ரவர்த்தி மதிதிகைத்துப் புலம்பியதையெல்லாம் கண் ணாரக் கண்டதனால் அத்துயரத்தையாற்றமாட்டாமல் தமது இறகுகளா கிய கைகளால் வயிற்றிலறைந்துகொண்டு அழுவனவற்றை யொத்தனவென

வருணித்தார்; **தன்மைத்தற்குறிப்பேற்றவணி:** இத்தவணிக்கு 'சிறையான காமர்துணைக்கரம்' என்ற இடத்துள்ள **உருவகவணி** அங்கமாய் நின்றது. விளிப்ப என்பதற்கு - அரசனுக்கு நேர்ந்தவிபத்தை வந்துகாணுமாறு கூப்பிடுவனவற்றை என்று உரைப்பினுமாம். எழையென்றூர், அறிவு மிரக்கமுமின்மைபற்றி. எற்றியெற்றி-அடுக்கு, பண்மைப் பொருளது. விளிப்ப - அகரவீற்றுப்பலவறிசொல், படுத்தலோசையாற் பெயராய்நின்றது; விளிப்பது என்பதன் விகாரமெனினுமாம். பி-ம்:—[1]ஆய [2]தன். [3]அரற்றல், விழிப்ப. ()

சஅ.—பலவகைப்புட்களும் ஒலித்தலின்வருணனை.

தோய்க யத்து மரத்து மென்சிறை துள்ளி மீதெழு புள்ளெலாந்
தேய்கை யொத்த [1]மருங்குன் மாதர் சிலம்பி னின்று சிலம்புவ
கேக யத்தர சன்ப யந்த விடத்தை [2]யின்னிகர் கேடுசூழ்
மாக யத்திவை புட்கொ தித்து [3]மனத்துள் வைவன போன்றவே.

(இ - ள்.) தோய் கயத்தும்-நீராடுதற்குரிய குளங்களினின்றும், மரத்து உம் - மரங்களினின்றும், மெல் சிறை - மெல்லிய சிறகுகளால், துள்ளி - குதித்துக்கொண்டு, மீது எழு - ஆகாயத்திற்பறக்கின்ற, புள்ளெலாம்-பறவைகளெல்லாம், தேய்கை ஒத்த - தேய்வு பொருந்திய, மருங்குல் - இடையையுடைய, மாதர் - மகளிரின், சிலம்பின் நின்று - காற்சிலம்பொலிபோலிருந்து, சிலம்புவ - ஒலிப்பவை,—கேகயத்து அரசன் பயந்த விடத்தை - கேகய தேசத்தரசன்பெற்ற விஷம் போன்றவளான, இன்னது ஓர் கேடு சூழ் மாக யத்திவை - இத்தன்மையதாகிய ஒரு கெடுதியைச் சூழ்ந்த மிக்கதீழ்மையையுடையவளே, உள் கொதித்து-உள்ளம் புழுங்கி, மனத்துள் வைவன போன்ற-மனத்திலே வைவனவற்றை யொத்திருந்தன; (எ - று.)

மரங்களிலும் நீர்நிலைகளிலுமுள்ள பறவைகள் பொழுதுவிடிகையில் ஒலிப்பதை, கைகேயி செய்த கொடுஞ்செயலைக்கண்டு தம்மனத்தினுள் அவளை வைவதுபோலு மென்று வருணித்தார்: **தன்மைத்தற்குறிப்பேற்றவணி.** இராசபத்தினி யாதலாலும், "என்னை நிகழ்ந்த திருஞால மேழில்வாழ்வார், உன்னை நிகழ்ந்தவர் மாள்வருற்றமெதல்லாஞ், சொன்னபி னென்செயல்காண்டி சொல்லிடென்றூன்" என்னுமாறு அரசன் இவளிடத்து அன்புவைத்திருக்கின்றமையாலும் வெளிப்படையாய்வைதாற் நீங்கு வரு மென்று கருதி மனத்துள் வைவன வென்றூர். பறவைகளி லெலிக்கு, மகளிர்காற்சிலம்பொலி ஒப்புமை. கைகேயியை விடமென்றதற்கு எற்பக் கேகயத்தரசனைப் பாற்கட லாக்குக. இதனால், இனியபாற்கடலில் நஞ்சு தோன்றியதுபோலச் சிறந்த கேகய குலத்திற் கைகேயி தோன்றின ளென்க. இன்னதோர்கேடு - கணவனை இறக்கும் நிலைக்குக் கொணர்ந்த கொடுஞ்செய்கை. உலகத்திற் பெரும்பழியைப் படைத்ததன்றி முடிவில் தன்மகன் இராச்சியத்தை யாளுமாறு செய்யமுடியாமற் போனதால், கைகேயியைக் கவி 'கயத்தி' என்றனரென்னலாம். கயமையாவது - எற்புடைய குணங்கள் யாவுமிலராய கீழோரது தன்மை.

கயத்தி-பெண்பாற்பெயர். சிலம்புவ, வையன - பெயர். சிலம்புவனவாகிய புள்ளென்க. போன்ற-வினை. சிலம்பு - ஒலிக்கு, ஆகுபெயர். துன்பஞ் செய்கின்றமையால், விடமென்றார். பி-ம்:—[1]மருங்கின். [2]அன்னவக். [3]மனத்து.

சகூ.—யா[2]ன தும்பிலொழிந்து எழுதலின் வருண[2]ன.

சேம மென்பன பற்றி யன்பு திருந்த வின் றுயில் செய்தபின்
வாம மேகலை மங்கை யோடு வனத்துள் யாரு [1]மறக்கிலா
நாம நம்பி நடக்கு மென்று நடுங்கு கின்ற மனத்தவா
யாமு மிம்ம ணிறத்து மென்பன போல வுழுத்தன யானையே.

(இ - ள்.) யான-யானைகள்,—சேமம் என்பன பற்றி - காவல்வீடென் பவைகளைப் பொருந்தி, அன்பு திருந்த - (ஸ்ரீராமனிடத்தில்) நேயம் மிக, இன் துயில் செய்த பின் - இனிய தூக்கத்தைச் செய்த பின்பு, 'வாமம் மேகலை மங்கையோடு-அழகிய இடையணியினையுடைய சீதாபிராட்டியோடு, யார்உம் மறக்கிலா நாமம் நம்பி - ஒருவரும் மறவாத திருநாமத்தையுடைய ஸ்ரீராமபிரான், வனத்துள் நடக்கும் - காட்டிற் செல்வான்,' என்று - என் றெண்ணி, நடுங்குகின்ற மனத்த ஆய்-வருந்துகின்ற நெஞ்சையுடையனவாய், 'யாம்உம்—, இ மண்-இக்காட்டை. இறத்தும் - விட்டுவிடுவோம்,' என்பன போல் - என்றுசெல்வனபோல, எழுத்தன-கிளம்பின; (எ - று.)

யானைகள் தாம்படுத்திருந்த இடத்தினின்று வெளியே செல்லுமாறு எழுந்ததை; இராமபிரான் காட்டைவிட்டுக் காட்டுக்குச்செல்லப்போவதறிவ் நாமும் இவ்விடத்தைவிட்டுச் செல்லுதலுமாமென எழுந்தாற்போல்தோன்றிய தென்று வருணித்தார்; இதுவும் - தற்குறிப்பேற்றவணியே. சகுமானனை இராமபிரான் வனத்திற்குச்செல்வதுகுறித்து விலக்காகிய யானையும் மனம் நடுங்கின வென்க. நடுக்கமென்பது - அன்பும் அச்சமும் முதலாக உடம்பிற் புலப்படுமாற்றான் உள்ளம்நடுங்குதல்: புதல்வர்க்குப் பிணிபில்லாப்போதும் எவறுங்கொலென்று நடுங்குதல். அன்பான் நடுங்குதலாம்: அச்சமென்னுஞ் சுவைபிறந்த பின்னர் அதன்வழித்தோன்றிய நடுக்கம், அச்சத்தாற் றோன்றிய நடுக்கமாம். சேமம் சேகமம்; கட்டுமிடம். வாமம்-அழகு என்னும் பொருளுள்ள தற்சமவடசொல். மேகலை-எண்சேகாவையணி. தாரகமந்திர வாச்சியனென் பார் 'யாருமறக்கிலாநாம நம்பி' என்றார். நம்பி-'நம்' முதனிலையாக நமக்கின்ற னென்னும் பொருள்பட வருவதோருயர்ச்சிச்சொல்; இதனை "எல்லிருள்" என்னுஞ் சிந்தாமணியுட் காண்க. யாமும்-இறந்ததுதழீஇய வெச்சவும்மை. "நினையவாந்தன்மையை நினைந்தமன்னுயிர்க், கெனையவா றன்பின னிராம னீண்டவர்க், கனையவாறன்பினவையும்" என்று கீழ்க்கூறினதற்கேற்ப. அஃறிணையாகிய பறவையும் விலங்கும் இரங்கின வென்க. பி-ம்:—[1]மறக்கலா.

ரு0.—வானத்து நட்சத்திரங்கள் மறைதலின் வருணனை.

சிரித்த பங்க யமொத்த செங்க ணிராம னைத்திரு மாலையக்
கரிக்க ரம்பொரு கைத்த லத்துயர் காப்பு நாணணி தற்குமுன
வரித்த தண்கதிர் [1]முத்த தாகியிம் மண்ண னைத்து நிழற்றமேல்
விரித்த [2]பந்தர் பிரித்த தாமென மீ[3]ளெ னித்தது வானமே.

(இ - ள்.) சிரித்த பங்கயம் ஒத்த-மலர்ந்த தாமரைப்பூப்போன்ற, செங் கண் திருமாலை இராமனை - சிவந்த கண்களையுடைய விஷ்ணுவாகிய ஸ்ரீராம பிரானது, அ கரி கரம் பொரு கைத்தலத்து - அப்படிப்பட்ட யானையினது துதிக்கையையொத்த கையிலே, உயர் காப்பு நாண் - சிறந்த மங்கலநாணை, அணிதற்கு-கட்டுவதற்காக, முன்-முன்னே, வரித்த தண் கதிர் முத்தது ஆகி-கட்டின குளிர்ந்தகிரணங்களையுடைய முத்துக்களையுடையதாய், இ மண் அனைத்துமம் நிழற்ற-இவ்வுலகமுழுதும் நிழலைச்செய்யும்படி, மேல் விரித்த-ஆகாயத்தில் விரியச்செய்த, பந்தர்-பந்தல், பிரித்தது ஆம் என - பிரிக்கப்பட் டாற்போல, வானம்-ஆகாயம், மீன் ஒளித்தது - நட்சத்திரங்களோடு மறைந் தது; (எ - று.)

இந்த உலகம் முழுதையும் மூடிய வானத்தையே பந்தலாகவும், அவ் வானத்துவிளங்கும் நட்சத்திரவரிசைகளை அந்தப்பந்தலில் அலங்காரமாகத் தொங்கவிட்ட முத்துச்சரங்களாகவுங்கொண்டு, உதயகாலத்து அவ்வானத் தினின்று நட்சத்திரங்கள் மறைவதைப் பந்தர்பிரிக்கையில் அலங்காரமாகத் தொங்கவிட்ட முத்துச்சரங்கள் அகற்றப்பட்டனபோலு மென்று குறித்தார்: **தற்குறிப்பேற்றவணி.** வானம் இரவில்தோன்றுந்தோற்றத்தினும் பகற்பொழு தில் வேறுபட்டுத்தோன்றுதலால் இரவில்தோன்றியவானப்பந்தர் பிரிக்கப் பட்டதெனக் கூறினர்போலும். ஹஸ் என்றவடமொழித்தாதுபோல, 'சிரி' என்றவினைப்பகுதியும் நகைத்தல் மலர்தல்என்ற இருபொருளையுங் காட்டு மென்க; 'நகுதல், நகைத்தல்' என்பனவும் இங்ஙனம்வரும். பட்டாபிஷேகத் திற்கு இடையூறு நேர்ந்தமைபால், பந்தல்பிரிக்கப்பட்ட தென்க. ஸர்வேசுவர னுதலாலும், சக்கரவர்த்தித் திருமகனுதலாலும் மண்ணனைத்தும்நிழற்றப் பந் தரிட்டார். மலர்ச்சியும், குளிர்ச்சியும், கண்டோரைமகிழ்வித்தலும்பற்றிக் கண்களுக்குத் தாமரைமலர் உபமானமாம். செங்கண்மால் என்றும், தாமரைக் கண்ணன் [புண்டரீகாக்ஷன்] என்றுங் கூறப்படுதலால், 'சிரித்த பங்கய மொத்த செங்க ணிராமன்' என்றும், விட்டுணுவி னவதாரமாதலால், 'திரு மால்' என்றுங் கூறினர். அக்கைத்தலத்து எனக்கூட்டுக: அகரச்சுட்டு, பிர சித்தியைக் காட்டும். இனி அகரச்சுட்டினால், சிரித்தபங்கயமொத்த வெண் பதைக் கைத்தலத்துக்கும் கூட்டலுமாம். கரிகரமென்னும் வடநூன் முடிபு, எதுகைநோக்கி யிரட்டிற்று. கரிகரமென்பது-பூர்வபதமும் உத்தரபதமும் சமானார்த்தகமென்பார்க்கு "வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன்," "அடியளந்தான் ரூயமிதல்லாம்," "கோடாதசெங்கோல்" என்பனபோலக் கேவலபதமாத்திரையாய் நின்றதென்க. கரம்-கை, துதிக்கை; அதனையுடை யது-கரி. கரிகரம்-திரட்சியாலும், நீட்சியாலும் உவமம். காப்பு-ரக்ஷாபந்தனம்.

பி-ம்:—[1]முத்தாசி, முத்தமாதி. [2]பந்தறிரைத்தது. [3]ஒளித்தன. (உஎ)

நுக.—காலையில் மணமுரசு ஒலிக்க, மாதரார் எழுதலின் வருணனை.

நாம விற்கை யிராம னைத்தொழு நாள டைந்த நமக்கெலாங்
காம விற்குடை கங்குன் மாலை கழிந்த தென்பது கற்பியாத்
தா[1]மொ லித்தன பேரி யவ்வொலி [2]சாரன் மாரி [3]தழங்கலா
மாம யிற்குல மென்ன [4]முன்ன மலர்ந்தெ ழுந்தனர் மாதரே.

(இ - ள்.) 'நாமம் வில் கை இராமனை - அச்சத்தைத்தருகின்ற கோதண்டத்தையேந்திய புயத்தையுடைய ஸ்ரீராமபிரானை, தொழும் நாள் அடைந்த நமக்கு எலாம் - வணங்கும் நல்லநாளைப்பெற்ற நமக்கெல்லாம், காமன் வில் குடை கங்குல் மாலை-மன்மதனது கருப்புவில் துலைக்கின்ற இராப்பொழுது, கழிந்தது—,' என்பது - என்பதை, கற்பியா - தெரிவித்து, பேரி ஒலித்தன-முரசவாத்தியங்கள் முழங்கின; அ ஒலி - அம்முழக்கம், சாரல் மாரி தழங்கல் ஆ - மலைப்பக்கங்களில்வந்து தங்குகின்ற மேகங்களின் ஒலிபோலாக, மாதர்-(அதனைக் கேட்ட) மகளிர், மா மயில் குலம் என்ன - பெரிய மயில்களினது கூட்ட மெழுந்தாற்போல, முன்னம்-(தங் கணவனெழுந்திருப்பதற்கு) முன்பு, மலர்ந்து எழுந்தனர் - முகம்மலரப்பெற்றுத் துயிலெழுந்தெழுந்தார்கள்.

மன்மதனது பஞ்சபாணங்களால் தாக்குண்டு கிடந்த இராப்பொழுதின் முடிவில், 'இராமபிரானை முடிசூடுவிழாவில் தரிசிக்கக்கூடிய நான் வந்திட்டது' என்றுரைப்பதுபோல மங்கலப்பேரொலியொலிக்க, அவ்வொலியைக் கேட்ட மாதரார், மேகத்தின்கருச்சினைபைக்கேட்ட மயில்போலமிகமகிழ்ந்து முன்னம் முகமலர்ந்து துயிலெழுந்தனரென்க. 'நமக்கெலாம்'என்ற இடத்து 'நுமக்கெலாம்' என்று பாடமிருப்பின் நலம். இனி, உடைகங்கு லென வினைத்தாகையாய், பிரிந்தவர் காமனதுவில்லிற்குக் கெடுகின்ற கங் குற்பொழுதுமாம். வில்என்பது - இலக்கணையாய், அதுகொண்டு எய்யப்படுகின்ற புஷ்பபாணங்களை யுணர்த்தும். ஆ-ஆக: விகாரம். "மயில்கண்டன்ன மடகடைமகளிர்" எனவும், "மணிமயிற்றிரள்" எனவும், "மயிலெனப் போந்து" எனவும், "கடைமயிலே" எனவும், "மயிலன்னசாயல்" எனவும், "மயிலினமிரியவாங்கோர் மடமயிறழுவிக்கொண்ட வெயிலினஞ்செல்வன்" எனவும் மயிலை நடைக்குஞ் சாயற்கும் உவமமாக்கலின், மயிலுவமை-கடைக்கும் சாயற்குமென்றுணர்க. பின்றாக்கிமுன்னெழுதும் பெறையதாதலின், 'முன்னமெழுந்தனர்' என்றார். முன்னம்மலர்ந்து-அகமகிழ்ந்து எனினுமாம். மலர்ச்சி - ஸ்ரீராமபட்டாபிஷேகத்தைத்தரணும் வெட்கையாலுண்டாயது. தாம் - அசை. பி-ம்:—[1]ஒலித்தது. [2]சார. [3]தழக்கலான், தழங்கலாய், முழங்கலான். [4]உள்ளம். (உக)

நுஉ.—மந்தமாருதம் வீசுதலின் வருணனை.

இனமலர்க்குலம் வாய்[1]வி ரித்தின வாச மாருதம் வீசமுன்
புனைது கில்கலி சோர நெஞ்சு புழுங்கி ஞ்சில பூவைமார்
[2]மனம னுக்கம்வி டுத்த னித்தனி வள்ள லேப்புனர் கள்ளவன்
கனவி னுக்கிடை யூற டுக்கம யங்கி ஞ்சில கன்னிமார்.

(இ - ள்.) சில பூவைமார் - சிலமகளிர்,—இனம் மலர் குலம்-பலஇனங்களான புட்பங்களின்கூட்டம், வாய் விரித்து - வாய்விட்டுமலர, இள வாசம் மாருதம் - வாசனையையுடைய இளங்காற்று, வீச - விசுதலினால், முன் - முன்னே, புனை துகில் கலை சோர - அணிந்த சீலையும் மேகலையும் நெகிழ, நெஞ்சு புழுங்கினர் - மனம்வருந்தினர்கள்; சில கன்னிமார் - சிலபெண்கள், மனம் அனுக்கம் விட - நெஞ்சிலுள்ள வருத்தம் நீங்க, தனித்தனி—, வள்ளலை - (தம்) கணவனை, புணர் கள்ளம் வன் கனவினுக்கு-தழுவுகின்ற மிக்க வஞ்சனையையுடைய கனவிற்கு, இடையூறு அடுக்க - தடை பொருந்துதலினால், மயங்கினர் - திகைத்தார்கள்; (எ - று.)

காலையில் மலர்கள்விரிதலையும் இளமாருதம் வீசுதலையும், "மதுவிரிந் தொழுகினமாமலரெல்லாம்", "கொழுங்கொடிமுல்லையின் கொழுமலரணை விக்கூர்ந்தது குணதிசைமாருதம் இதுவோ" எனப் பெரியார் அருளிச்செய்திருத்தலும் காண்க. மலர்ந்த பூக்களிற் பட்டு மாருதம் நறுமணமடைந்து வீசுவதனால், அது தம்மீது படப்பெற்றுக் காமோத்தீபகமாக, கணவனைப்பிரிந்த மாதரார் அதனால் துகிலும் கலையுஞ் சோர மனம் புழுங்கினராக, சில மாதராள் தம் மனத்தாற் கருதியிருந்த கணவனைக் கனவினிற் கண்டு புணராநிற்கையில் மந்தமாருதம் தம்மீது படத் துயிலுணர்ந்து தம் கனவுப்புணர்ச்சி இடையூறுபட்டதனால் மனந்திகைத்தனரென்க. வள்ளல் - இராமனைனக் கொள்ளலுமொன்று. இச்செய்யுள் விவாகமாகாத மாதரைக் குறிக்குமென்னலுமாம். இனம் - பலவினீட்டம். விரித்து - விரிக்க; எச்சத்திரிபு. இளமாருதம் - மந்தமாருதம். துகில்கலை - உம்மைத்தொகை; துகிற்கலைபாடமாயின், துகின்மேலணிந்த கலை யென வேற்றுமைத்தொகையாம். பூவை - நாகணவாய்ப்புள்: அதுசொல்லிற்குவமை; அஃது ஈண்டு உவமவாகுபெயர். அனுக்கம் - தொழிற்பெயர்; அனுங்கு - பகுதி. ஒளிக்குந்தன்மையதாதலால் 'கள்ளக்கனவு' என்றும், வருத்தந்தருதலால் 'வன்கனவு' என்றுங் கூறினர். பி - பீ:—[1]விடாது, விடா. [2]மனவனுக்கம்விட, மனமறுக்கம்விட. (உஉக)

ருஉ.—தழுதமலர் துவிதலின்வருணனை.

சா[1]ய டங்க நலங்[2]க லந்து [3]தயங்கு [4]தன்குல நன்மையும்
போய டங்க நெடுங்கொ டும்பழி கொண்ட ரும்புகழ் சிந்துமத்
தீய டங்கிய சிந்தை யாள்செயல் கண்டு[5]சிரிய [6]நங்கைமார்
வா[7]ய டங்கின வென்ன வந்து குவிந்த வண்குழு தங்களே.

(இ-ள்.) சாய் அடங்க-(தன்) பெருமை அழியவும், நலம் கலந்து தயங்கு தன் குலம் நன்மைஉம் போய் அடங்க நன்மையோடுபொருந்திவிளங்குகின்ற தனது கமிசத்தினது நன்மையும் சென்றழியவும், நெடு கொடு பழிகொண்டு-பலநாளைக்குஉளதாகிய கொடிய பழியைக் கொண்டு, அரு புகழ் சிந்தும்-(பெறுதற்கு)அரியகீர்த்தியைச் சிதறுகின்ற,அ-அந்த,தீ அடங்கிய சிந்தையாள்-கொடுமைபொருந்திய மனத்தையுடைய கைகேயியினது,செயல்-தீச்செய்கை

யை, கண்டு - பார்த்து,—சீரிய நல்லைமார் - நற்குணங்களையுடைய பெண்களின், வாய்-, அடங்கினஎன்ன - மூடுறைற்போல, வண் குமுதங்கள் - வளப்பத்தையுடைய ஆம்பல்மலர்கள், வந்துகுவித்த - பொருந்திமூடின; (எ - று.)

கணவனைக்கொன்ற காதகியென்று பழிச்சொல்பெற்ற கைகேயியின் தீச்செயலைக்கண்டு 'நமதுவகுப்பைச்சேர்ந்த ஒருத்தி இங்ஙனம் கொடுஞ்செயல் செய்தனளே!' என்று கருதுவதனால் நற்குணமுள்ளமாதராள் நாணங்கொண்டு வாயடங்கிநிற்றல்போல, குமுதங்கள் வாயடங்கின வென்றார்: **உவமையணி.** ஒருபெண்பிள்ளை தீச்செயல்புரியின் அது அப்பாலார்க்கெல்லாம் இழிவைத்தருமென்றதை "மாதரான் செயல்கண்டு மைந்தர்முனிற்கவும் நாணினளென" என முன்னும்கூறினர். சாய் - சாயாவன்றவடசொல்லின் விகாரம்: சாயல் என்பதன்விகார மெனக் கொள்வாரு முளர். வக்து - சொல்விழுக்காடாகவந்த அசையுமாம். பி ம்:—[1]அலர்த்த. [2]கலங்க. [3]தழங்கு. [4]நன். [5]சிறிய. [6]மங்கைமார். [7]அடங்கியது, அடங்கினர். (உசo)

ருசு.—பண்கனிந்தெழுபாடலின் வருணனை.

மொய்ய ராக நிரம்ப [1]வாசை முருங்கு தியின் முழங்கமேல்
வைய ராவிய மாரன் வாளியும் [2]வானி லாநெடு வாடையு
மெய்ய ராவிட வாவி சோர வெதும்பு மாதர்த்த [3]மென்செவிப்
பைய ராதுழை கின்ற போன்றன பண்க னிந்தெழு பாடலே.

(இ - ள்.) மொய் அராகம் நிரம்ப-பொருந்திய வேட்கை மிகவும், ஆசை முருங்கு தீயின்மேல் முழக்க-அவா எரிகின்ற நெருப்பினும்மேலாக அதிகரிக்கவும், வை அராவிய மாரன் வாளியும்-கூர்மைசெய்யப்பட்ட மன்மதபாணங்களும், வான் நிலா-ஆகாயத்துத்தோன்றுந் சந்திரகிரணமும், நெடு வாடை உம் - நீண்ட வாடைக்காற்றும், மெய் அராவிட - உடலை அறுக்கவும், ஆவி சோர-உயிர்தளர, வெதும்பும்-வாடுகின்ற, மாதர்த் - மகளிருடைய, மென் செவி-மெல்லிய காதுகளில், பண் கனிந்து எழு பாடல் - இசைமுதிர்ந்து தோன்றுகின்ற பாடல்கள், பை அரா துழைகின்ற போன்றன - படத்தையுடைய பாம்புகள் உட்புகுவனவற்றை யொத்தன; (எ-று.)

பிரிந்த மாதராள் மாரன்வாளிபாலும் நிலாவாலும் வாடையாலும் மெலிந்துநிற்கையில், பண்கனிந்தெழுபாடல் அவர்செவியிற்புகுந்து அவர்தளை மிகவும்வருத்திற்று என்க. மேட்டினமேதிகள் தினைவிடுமாயர்கள் வெய்ங்குழலோசையை, 'பண்கனிந்தெழுபாடல்' என்றனரென்க: இனி இத்தொடர்க்கு - இசைப்பாட்டுடன் பழுத்துத் தோன்றுகின்ற வாய்ப்பாடல் என்று கூறினுமாம். இராமனிடத்துக் காமம் கைம்மிகுதலால், மாதர் இவ்வாறுபின ரென்பாருமுளர். அராகமாவது - பொருள்கண்மேற்றோன்றும் பற்றுள்ளம்; இதனை வேட்கையென்ப. ஆசையாவது - அப்பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேல் நிகழுவது; இதனை அவாவென்ப. அராகம் - ராகம்: வடசொல். நிலாவுமென்னும்எண்ணும்மை, தொக்கது. இனி, வானில் நிலாவுகின்ற வாடையென்றுமாம்; நிலாவுதல் - பரவுதல். வாடை - வடபுறமாக வீசும்

காற்று எனக்கொண்டு, தென்றற்காற்றென்க. இராமபிரானுக்குப் பட்டங் கட்டவேணுமென்று குறிப்பிட்ட நாள் சைத்திரமாதத்தில் புஷ்யநட்சத்திர மென்று பெறப்படுதலால், இங்ஙனங் கொள்ளுதல் தக்கதாம். "தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்குங்கோகிலத்துக், கன்றிற்கமைக் காழிக்கம்புலிக்கு— நின்றரற்று, மன்னைக்குமாரற் கயர்ந்தாளென்றன்னமே, யென்னைக்குமாரற் கியம்பு"என்னும் வெண்பாவினால், மாரன்வாளி முதலியன தூயர்க்கு எதுவா மாறுணர்க. பி-மீ:—[1]வாசமுருகுதீயின். [2]வானிலா. [3]இன்செவி. (உசக)

ருரு.—மைந்தர் படுக்கையினின்று எழுதலின் வருணனை.

ஆழி யான்முடி சூடு நாளிடை யான பாவி யிதோதாரிரா
வூழி யா[1]யின வாறெ னுவுயர் போதின் மேலுறை பேதையு
மேழு லோகமு மெண்ட வஞ்செய்த கண்ணு மெங்கண் மனங்களுஞ்
வாழு நாளி தெனவெ முந்தனர் மஞ்சு தோய்புய[2]மஞ்சரே.

(இ - ள்.) 'ஆழியான்-சக்ரதரனெனிய ஸ்ரீராமன், முடி சூடும் நாள் - பட்டாபிஷேகஞ்செய்துகொள்ளும் நாளுக்கு, இடை ஆன-நடுவிலேவந்த, பாவி-பாவியாகிய, இது ஓர் இரா-இந்த ஒருஇராத்திரி, ஊழி ஆயின ஆறு - ஊழிக்காலம்போற் பெரிதாயிருந்தவிதம் (என்ன?),' எனு-என்றுஎண்ணியும், 'உயர் போதின்மேல் உறை பேதையும்-சிறந்தபொற்றுமரைமலரில் வீற்றிருக்கின்ற திருமகளும், எழு லோகமும்-எழுலோகத்தாருடையவும், எங்கள் - எங்களுடையவும், எண்ணவம் செய்த கண்ணும் எண்ணத்தக்க[மிக்க] தவத்தைச்செய்த கண்களும், (எண்ணவம்செய்த) மனங்கள்உம் - அத்தன்மைய நெஞ்சுகளும், வாழும் நாள்-வாழ்வுடையுங்காலம். இது-இவ்வளவு,' எனு - என்றுஎண்ணியும், மஞ்சு தோய்-மேகத்தையொத்த [ஈரைத்தன்மையையுடைய], புயம்-கைகளை யுடைய, மஞ்சர் - ஆடவர், எழுந்தனர் - (படுக்கையினின்று) எழுந்திருந்தார் கள்; (எ - று.)

மைந்தர்எழுந்திருக்கையில் இராமபட்டாபிஷேகத்தைக் காண்பதிலுள்ள பெருங்கரைசயால் 'பலஊழி ஓரிரவாயிற்றே என்னும்படி நெடிதாகத்தோன்றிய பாவியிரவு ஒழிந்தது' என்று கழிந்தஇரவைப்பழித்து, இராமனை முடிசூட்டு கோலத்துடன் காணப்போகின்றோமென்று கருதி அந்நாளைக்கொண்டாடிய வண்ணம் படுக்கையினின்று எழுந்தனரென்க: முடிசூடுநாள் நாளையென்னும் போது இடையில்வந்து தடுத்தமையால், 'இடையானபாவியிரா'எனப் பழித் தனர்: பழித்தமையால், அம்மைந்தர் இராமுழுதும் துயிலின்றி 'எப்போது பொழுதுவிடியப்போகின்றது ?' என்ற கருத்தோடு கிடந்தனரென்பது தொனிக்கும். உத்தமநாயகனைச் சேர்தல்பற்றி, 'போதின்மேலுறை பேதை வாழும் நாள்'என்றும், மாத்தர்க்குக் கண்ணும்மனமும்படைத்தமையாற்பெறும் பயன் ஸ்ரீராமசேவையும் வாழ்த்தலுமன்றி வேறில்லையாதலின், 'கண்களும் மனங்களும் வாழுநாள்'என்றுங்கூறினர். போதின்மேலுறை பேதை-இராச் சியலக்ஷ்மி: சீதையெனக்கொண்டு; சீதையும் யாமும் முடிசூட்டுகோலத்துடன்

இராமனைக்கண்டு மனமும் கண்ணும் வாழும்நாளென்றலு மொன்று. 'எண்ட வஞ்செய்த' என்னும் அடையை மனத்திற்குங் கூட்டுக. எல்லாவுலகத்தாரும் ஸ்ரீராமபட்டாபிஷேக நிமித்தங் இங்கு வந்திருக்கின்றன ராதலால்'எழுலோக மும் கண்ணுமனமும் வாழுநாள்' என்றது: அன்றி லோகமும், கண்ணும், மனமும் வாழுநாளென்றுமாம். தோய்-உவமவாசகம். கைம்மாறு நோக்காமல் தானஞ்செய்தலால், 'மஞ்சுதோய்புயம்' என்றார் மஞ்சர் - மைத்தென்பதன் போலி. உயர்போது-தாமரைமலர்; புஷ்பங்களில் தாமரை உயர்ந்ததாதலின்; அதனை "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே," "பூவிற்குத்தாமரையே" என்பவற்றாலுமுணர்க. பி-ம்:—[1]உயர். [2]மைந்தரே. (உசூ)

நிசூ.—மாதர் படுக்கையினின்று எழுதலின் வருணனை.

ஐயு றுஞ்சுடர் மேனி யாயெழில் காண மூரு மவாவினிற்
கொய்யு றுங்குல மாம லர்க்குவை நின்ற முந்தனர் கூர்மைகூர்
நெய்யு றுஞ்சுடர்வேலெடுங்கண்முகிழ்த்து[1]நெஞ்சி னினீப்பொடும்
பொய்யு றங்கு மடந்தை மார்குழல் வண்டு பொம்மென[2]விம்மவே.

(இ - ள்.) கூர்மை கூர் நெய் உறும் சுடர் வேல்-கூர்மைமிகுந்த நெய்தட வின ஒளியையுடைய வேலாயுதம் போன்ற, நெடு கண் - பெரியகண்களை, முகிழ்த்து-மூடிக்கொண்டு, நெஞ்சில்--, நினைப்பொடும்-(ஸ்ரீராமன்முடிபுனைந்து வீதியில்வலம்வருவதைக்காணவேணுமென்ற கருத்துடன், பொய்உறங்குகள்ளத்துயில் செய்கின்ற, மடந்தைமார்-மகளிர், — ஐ உறும் சுடர் மேனியான்-வியப்பைத்தருகின்ற ஒளியையுடையதிருமேனியையுடைய ஸ்ரீராமபிரானது, எழில் - அழகை, காண - பார்ப்பதற்கு, மூரும்-மேன்மேலு முண்டாகின்ற, அவாவினால் - ஆசையினால், கொய் உறும் குலம் மா மலர் குவை நின்று-(அப்பொழுது) பறித்த சிறந்த பெரியபுஷ்பங்களினது தொகுதியிற்செய்த படுக்கையினின்று, குழல் வண்டு - இசைப்பாட்டையுடைய வண்டுகள், பொம்மென விம்ம - பொம்மென்று ஒலியாதிற்க, எழுந்தனர் - எழுந்திருந்தார்கள்.

இராமனது முடிசூட்டுவிபவத்தைக் காண்பதிலுள்ள பேராசையினால் துயில்வராதிருக்கவும் கண்ணை மூடியவண்ணம் பொய்யுறக்கம் உறங்கும் மாதராரி, தாமரை முதலிய விரிந்த மலர்களின் மதுவை யுண்ண வண்டுகள் ரீங்காரஞ்செய்துகொண்டு பறப்பதனால் பொழுது புலர்ந்ததை யுணர்ந்து, இராமனெழிலைக் காண்பதிலுள்ள அவாவினாலே மலர்ப்படுக்கையினின்று எழுந்தனரென்க. "தாமவிற்கை" என்று தொடங்குஞ் செய்யுள் சனகனுடன் கூடியிருந்த மகளிர் துயிலுணர்ந்தெழுந்ததைத் தெரிவிப்பதென்றும், இச் செய்யுள் அங்ஙனமில்லாத மகளிரின் துயிலுணர்ச்சியைக் குறிப்பதென்றும் உணர்க. ஐ-வியப்பாகியகுறிப்புணர்த்தும் உரிச்சொல்; "ஐவியப்பாகும்." எழிலாவது - வளர்ந்தமைந்தபருவத்தும் இதுவளர்ந்து மாறியதன்றி இன்னும் வளரு மென்பது போன்றுகாட்டுதல். கொய்யுறும் மலர்-தாண்மலரென்க. இனி, குவை-ஒன்றன்கூட்டமும், குலம்-பலவினீட்டமுமாகவுமாம். குவை-ஆகுபெயர். ஆடவர்க்குத் தன்பத்தைச்செய்தலால், 'வேனெடுங்கண்' என்

ரூர். குழல்வண்டு-இசைவண்டு: "பாடுவண்டேதும்" என்றூர் பிறரும்;"பொன் பால் பொருவும் விரையல்லி புல்லிப் பொலிந்த பொலந்தாது, தன்பாற் றழுவுங் குழல்வண்டு தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே"என்பர்,கிட்கிந்தாகாண்டத்திலும். பொம்மெனல்-அநுகரண வோசை. பி-ம்:—[1]செஞ்சு. [2]ஸிம்மும்.

நெ.—ஊடியமகளிர் கூடல்புரியாது பிரிதல்.

ஆட கந்தரு பூண்[1]மு யங்கிட வஞ்சி யஞ்சி [2]யனந்தரா
லேட கம்[3]பொதி தார்[4]பொ ருந்திட யாம பேரி யிசைத்தலாற்
சேட் கடம்புனை கோதை மங்கையர் சிந்தை யிற்செறி திண்மையா
லூடல் கண்டவர் கூடல் கண்டிலர் நையு மைந்தர்க ளுய்யவே.

(இ-ள்.) சேடகம் புனை கோதை மங்கையர் - சிறப்புப்பொருந்திய மலர் மாலையையணிந்தமகளிர், சிந்தையில் செறி திண்மையால் - மனத்திற் பொருந்திய வலிமையால், ஊடல் கண்டவர் - புலந்தவர்,—(அப்பொழுது), யாமம் பேரி இசைத்தலால் - பொழுதுவிடிந்ததையறிவிக்கின்ற முரசம்ஒலித்தலால், ஆடகம்தரு பூண் முயங்கிட - பொன்னாற்செய்தஆபரணங்கள் அழுந்தவும், வஞ்சி அஞ்சி - வஞ்சிக்கொடிபோன்ற இடை அச்சமடையவும், - ஏடு அகம் பொதி தார்பொருந்திட - புறவிதழ்களும் அகவிதழ்களும் பொருந்திய மாலை பொருந்தவும், கையும் மைந்தர்கள் உய்ய - வருந்துகின்ற ஆடவர் பிழைக்கும் படி, கூடல் - கூடுவதை, அனந்தரால் - மனச்சோர்வோடு, கண்டிலர் - காணவில்லை ; (எ - று.)

ஊடல்கொண்ட மகளிர் தாம் கூடுவதற்குமுன்னமே வைகறையையுணர்த்தும்பேரி இசைத்தலால் குறைத்துக்கத்துடனேயே கணவரைப்பிரிந்து சென்றன ரென்க. அனந்தரால் பேரியிசைத்தலால் என இயைத்து - மந்த வொலியோடு பேரிமுழங்குதலா லென்றலும் ஒன்று: இது, இப்பொருளதாதலை "எடுத்தெறியனந்தற்பறை"என்ற புறநானூற்றிலும் காண்க. வஞ்சிஎன் றுபிரிக்காமல் அஞ்சிஎன்றே பிரித்து, பூண்முயங்கிடஅஞ்சியும், தார்பொருந்திடஅஞ்சியும் யாமபேரியிசைத்தலாற் கூடல் கண்டிலர்என்றுரைப்பாருமுளர்: அஃதுசிறப்பின்மையறிக. சேடகம் - திரட்சி எனக்கொண்டு, சேடகம் புனைகோதை - திரட்சியையுள்ளெகொண்ட மயிர்முடியென்றலு முண்டு. ஊடலாவது - தலைமகனுந் தலைமகளும் ஓர்அமளிக்கட்கூடியிருந்துழித் தலைவனிடத்துப்புலத்தற்குக்காரண மில்லையாகவும் காதல்கைம்மிகுதலான் நுண்ணிய தோர்காரணமுளதாக உட்கொண்டு அதனை யவன்மேலேற்றித் தலைமகள்புலத்தல்; இருவர்நெஞ்சும் புணர்ச்சி விரும்பாது புலக்கக்கருதியவழி ஒருவரோடொருவர் புலத்தலுமாம். "ஊடுதல் காமத்திற்கின்பமதற்கின்பந், கூடிமுயங்கப்பெறின்" என்றமையின், ஊடலேமுற்கூறினர். இனி, அஞ்சி அஞ்சிஅனந்தரால் நையும் மைந்தர்கள்எனவுங்கூட்டலாம்.வஞ்சி - உவமவாகுபெயர். அஞ்சி=அஞ்ச: எச்சத்திரிபு. ஏடு - புறவிதழ். அகம் - அகவிதழ்: ஆகுபெயர். யாமபேரி - விடநூன்முடிபு. பி-ம்:— [1]அழுந்திட. [2]அனந்தலால். [3]தரு. [4]பொதிந்திட, பொருந்திடும்.

ருஅ.—பலவகையொலிகளின் வருணனை.

தழையொ லித்தன வண்டொ லித்தன தாரொ லித்தன பேரியா
[1]முழவொ லித்தன தேரொ லித்தன முத்[2]தொ லித்தன [3]மல்குபே
ரிழையொ லித்தன புள்ளொ லித்தன யாழொ லித்தன வெங்கணு
மழையொ லித்தன போல்[4]க லித்த மனத்தின் முந்துறு வாசியே.

(இ - ள்.) எங்கண்உம் - எல்லாவிடத்திலும்,—தழை ஒலித்தன-பீலிக் குஞ்சங்கள் விளங்கின; வண்டு ஒலித்தன-வண்டுகள் சப்தித்தன; தார் ஒலித்தன - பூமாலைகள் விளங்கின; பேரிஆம் முழவு ஒலித்தன-பேரிவன்கிற வாச்சியங்கள் சப்தித்தன; தேர் ஒலித்தன - இரதங்கள் (செல்லுகையிற்) சப்தித்தன; முத்து ஒலித்தன - (ஆங்காங்கு அலங்காரமாகத்தொங்கவிடப்பெற்ற) முத்துமாலைகள் சப்தித்து விளங்கின;மல்கு பேர் இழைஒலித்தன-(ஆடவரும் மகளிரும்)மிகுதியாக அணிந்த சிறந்தஆபரணங்கள் சப்தித்தன;புள் ஒலித்தன-பறவைகள் சப்தித்தன; யாழ் ஒலித்தன - வீணைகள் சப்தித்தன; மனத்தின் முந்து உறு வாசி - மனவேகத்திலும் மேலாக விரைந்தோடுகின்ற குதிரைகள், மழை ஒலித்தன போல்-மேகங்கள் கர்ச்சித்தனபோல, கலித்த - ஒலித்தன; (எ - று.)

'வினைப்பகுதிகள் வேண்டியபொருளை விளக்கும்' என்னும் நியாயத்திலே, இக்கவியுள் 'ஒலித்தன' என்னுஞ் சொல்லுக்குச் சந்தர்ப்பத்திற்கேற்பப்பொருளுரைக்கப்பட்டது: சொற்பிவிவருநிலையணி. தார்-கிண்கிணிமாலையுமாம். பி-பீ:—[1]முரை. [2]ஒலித்தெழும். [3]அல்குலார். [4]ஒலித்த. (உசாநி)

ருக.—தீபம் ஒளியழுங்குதலின் வருணனை.

வையமேழு மொரேழு மாருயி ரோடு கூட வழங்கு[1]மம்
மெய்யன் வீரருள் [2]வீரன் மாமகன் மேல்[3]வி ளைந்ததொர் காதலா
னைய நைய [4]நலம்பு லன்க ளவிந்த [5]டங்கி நடுங்குவான்
றெய்வ மேனி படைத்த சேயொளி போன்ம ழுங்கின தீபமே.

(இ - ள்.) வையம் ஏழ்உம் ஓர் ஏழ்உம்-உலகமேழுடன் மற்றொரு ஏழுலகங்களையும், ஆர் உயிரோடு கூட-அரியபிராணனுடன்சே, வழங்கும்-தானஞ் செய்கின்ற, அ மெய்யன்-அப்படிப்பட்ட சத்தியத்தையுடையவனும், வீரருள் வீரன்-வீரர்களுள்வீரனுமிருப்பவனும், மா மகன்மேல் - பெரிய புத்திரனிடத்தில், விளைந்தது-உண்டானதாகிய, ஓர் காதலால் - ஒப்பற்ற விருப்பத்தால், நைய நைய - மிகவும்வருந்த, நல் ஐம் புலன்கள் - சிறந்த ஐந்துபுலன்களும், அவிந்து - அழிந்து, அடங்கி-அமைந்து, நடுங்குவான்-பதறுகின்றவனுமாகிய சக்ரவர்த்தியினது, தெய்வம் மேனி படைத்த - தெய்வத்தன்மையையுடைய உட்டலில் தோன்றுகின்ற, சேய் ஒளி போல்-செவ்விய காந்திபோல, தீபம் - விளக்குகள், மழுங்கின-(பொழுதுவிடிதலால்) ஒளிகுறைந்தன; (எ - று.)

சக்ரவர்த்தியினது சரீரம் ஒளியிழந்ததுபோலத் தீபங்களும் ஒளியிழந்தனவென்பதாம்: பிரகிருதமாகிய மன்னவன் உடலொளியிழந்திருந்ததையே

வர்ணியமாகிய வைகறையில் விளக்குக்கள் ஒளியிழந்தமைக்கு உவமையாக்கினர். ஒருபொய்கூறுதற்கு நாணி அளவில்லாத அருந்துயரடைந்தமைபற்றி, 'அம்மெய்யன்' என்றார். வீரன் - திண்ணியன். பிறப்புமுறையானும் சிறப்புமுறையானும் முதல்வனுதல்பற்றி, 'மாமகன்' என்றும் சர்வேசுவரனவதாரத்திற்கு ஏதுவாயிருந்தமைபற்றி 'தெய்வமேனி' என்றுங் கூறினர். நையை - அடுக்கு மிகுதிப்பொருளது. **பி-ம்:**—[1]எம். [2]வீரமாமகன். [3]விளைந்தன. [4]நலன், நலம். [5]அடங்க. (உசுசு)

சுஎ.—பலவகைப் பாடற்கருவிகள் ஒலி.

வங்கி யம்பல தேன்வி ளம்பின [1]வாணி [2]முந்தின [3]பாணியின்
பங்கி யம்[4]பர மெங்கும் விம்மின பம்பை [5]பம்பின பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின நூபு ரங்கள் புலம்பவெண்
சங்கி யம்பின கொம்ப லம்பின சாம கீத [6]நிரம்பவே.

(இ - ள்.) வங்கியம் பல - அநேகமாகிய இசைக்குழல்கள், தேன் விளம்பின-வண்டுகள்போல ஒலித்தன;வாணி-வாழ்த்துச்சொற்கள், முந்தின-மிகுந்தன; பாணியின் பங்கி-பாட்டுக்களின் வகைகள், அம்பரம் எங்கும் விம்மின-ஆகாயம் முழுவதிலும் ஒலித்தன; பம்பை—, பம்பின-மிக்குஒலித்தன; பல்வகை - பலவகையனவாகிய, பொங்கு இயம் பலவும் - பொலிவுபெறுகின்ற வாச்சியங்கள்அநேகங்களும், கறங்கின-ஒலித்தன; நூபுரங்கள் புலம்ப - காற்சிலம்புகள் ஆரவாரிக்க, வெண் சங்கு இயம்பின-வெள்ளிய சங்கங்கள் (அவற்றிற்கு ஏற்ப) ஒலித்தன; கொம்பு-(ஊதிடு) கொம்புகள், சாமகீதம் நிரம்ப-சாமவேதகானம் போன்ற இசை நிறைய, அலம்பின-ஒலித்தன; (எ - று.)

தேன்விளம்பின-தேனீப்போல இனிமையாக ஒலித்தன வென்றுமாம். தேவாதிதேவனுதலின், அவனது பட்டாபிஷேகத்திற்குத் தேவர்களும் அம்பரத்தில் வாச்சியம் முழங்கினரென்க; அன்றி, இவ்வுலகத்தில் இயம்பின இயங்களினுலி, அம்பரங்காறுஞ்சென்றுஒலித்தன வென்றுமாம். கொட்டுவன ஊதுவன முதலாகப் பலவகைப்படுதலால் 'பல்வகையியம்' என்றார். **பி-ம்:**—[1]பாணி. [2]முந்துறு. [3]வாணியின். [4]பல. [5]பம்மின. [6]நிரந்தவே. (உசுள)

சுக.—சூரியோதயவருணனை.

தூப முற்றிய காரி ருட்பகை துள்ளி யோடிட வுள்ளெழுந்
தீப[1] முற்றவு நீர்த்த கன்றெனச் [2]சேய தாருயிர் [3]தெய்தலாற்
[4]பாப முற்றிய பேதை செய்த பகைத்தி றத்தினில் வெய்யவன்
கோப [5]முற்றி மிகச்சி வந்தன னெத்த னன்[6]குண குன்றிலே.

(இ-ள்.) தூபம் முற்றிய-புகையைப்போல.(க்காியதாகி) முதிர்ந்த, கார் இருள் பகை - காிய அந்தகாரமாகிய சத்துரு, துள்ளி ஓடிட - குதித்துஓடிப்போகவும், உள் எழும் தீபம் முற்ற உம்-மாளிகைகளினுட்புறத்தே எாிகின்ற விளக்குகளெல்லாம், நீர்த்து அகன்றென-நீர்மை[ஒளி] மழுங்கிடவும்,-வெய்ய

வன் - சூரியன், குணக்கு குன்றில் - உதயபர்வதத்தில், சேயது ஆர் உயிர் தேய்தலால் - (தன்) குலத்திற்பிறந்த புத்திரனுகிய சக்ரவர்த்தியினுடைய அரிய பிராணன் மெலிதலால் [மெலியும்படி], பாபம் முற்றிய பேதை செய்த - தீவினைமுதிர்ந்த கைகேயி பண்ணின, பகை திறத்தினில் - பகைத் தன்மையினால், கோபம் முற்றி - சினம் முதிர்ந்து, மிக—, சிவந்தனன் - சிவப்புநிறத்தையடைந்தவனை, ஒத்தனன்—; (எ - று.)

சூரியன் உதயபருவதத்திற் செந்நிறமாகத்தோன்றியதனைத் தன்குலத் துதித்த தசரதனது உயிரொடுங்குமாறு பாபத்தொழில்புரிந்த கைகேயியின் மீது கோபங்கொண்டான்போல்தோன்றினை னென வருணித்தார்: ஏதுத் தற்குறிப்பேற்றவணி. உதயகாலத்திற் சூரியன் மிக்கசெந்நிறமுடையவனு யிருத்தலும், சூரியனுதிக்கையில் இருள்நீங்கிவிடுதலும், தீபங்கள் ஒளிமழுங் குதலும்இயற்கை. குணகுன்று - உதயகிரி. ஓடிட - செயவினைச்சம். அகன்றென - செய்தென என்னும் வாய்பாட்டுவினையெச்சம். கீழ் "திசைவ மேனிபடைத்தசெயொளிபோன்மழுங்கினதீபமே" என்றதற்கேற்ப, "தீப முற்றவுநீர்த்தகன்றெனச்சேயதாருயிர்தேய்தலால்" என்றார். பி-ம்:—[1]முற் றவுதித்தகன்றன, முற்றவுநீத்ததன்றெனச், முற்றவுநீத்தகன்றன. [2]செம் மல். [3]தேயவப். [4]பாவம். [5]உற்று. [6]குணக்குன்றின்மேல். (உசஅ)

சுஉ.—தாமரைமலர் மலர்தலின் வருணனை.

மூவ ராய்முத லாகி [1]மூலம தாகி ஞாலமு [2]மாகிபத்
[3]தவ தேவர் பிடித்த மாபார்வி லொடித்த தேசவகர் தேசனிலங்
காவன் மாமுடி [4]சூடு மாபெரமூரில் [5]காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன [6]முன்ன மலர்ந்த பங்கய [7]ராசியே.

(இ - ள்.) மூவர் ஆய் - (அரிஅயன் அரன் என்னும்) மூன்றுமூர்த்திக ளாய், முதல்ஆகி - (அம்மூவர்க்குள்ளும் திருமாலாகிய) முதல்வனுகி, மூல மது ஆகி - (எல்லாவற்றிற்கும்) ஆதிகாரணமுமாய், ஞாலம்உம் ஆகி - ஐக லாண்டசராசரக்கருமாய், அ தேவதேவர் - அந்த இந்திராதிதேவர்களுக்கெல் லாம் தலைவராகிய சிவபெருமான், பிடித்த - (கையிற்) பிடித்த, போர் வில் - போரிற்குரிய வில்லை, ஒடித்த - முறித்(துச் சீதையை மணஞ்)ச, தேவர் - மஹாவீரனுகிய ஸ்ரீராமபிரான், தேன் நிலம் காவல் - பெரிய இராச்சியத் தைப் பாதுகாத்தற்குரிய, மா முடி - பெரிய கிரீடத்தை, சூடு-சூட்டிக்கொள் கின்ற, பேர் எழில் - மனோஹரத்வத்தை, காணல்ஆம் - பார்க்கலாம், எனும்- என்கின்ற, ஆசை—, கூர் - மிகுந்த, பாவைமார் - மகளிருடைய, முகம் என்ன - முகங்கள்போல, பங்கயராசி - தாமரைமலர்களின் கூட்டம், முன் னம் மலர்ந்த - விரைவாக மலர்ச்சிபெற்றன; (எ - று.)

தாமரைமலர் மலர்ந்ததற்கு, இராமன் முடிசூடும் பெரியகைக்காண விருப்பங்கொண்டுள்ள மங்கையர்முகம்மலர்ந்திருத்தலை உவமைகூறினர்: எதிர்நிகழ்வுவமையணி. விபரீதவுவமையெனப் படுவதும் இதுவே. உபமே

யத்தை உபமானமாக்கிக்கூறியமை காண்க. இதனால் மங்கைமார்முகத்துக்கு ஏற்றம் பெறப்படும். மூவரென்னுஞ் சொல், திரிமூர்த்திகளைக் குறிப்பாலுணர்த்திற்று. பிரமாதியரைவிடுவித்துச் சிருஷ்ட்யாதிகளை நிர்வகித்தும் தானென நிலையிலேநின்று பாலநத்தை நிர்வகித்தும் போருமவனதலால், 'மூவராய் முதலாகி' என்றார்; "முதலாவார்மூவரேயம்மூவருள்ளும், முதலாவான்மூரிநீர் வண்ணன்" என்றார் பெரியாரும். பி-ம்:—[1]மூலமும். [2]ஆகுமத். [3]தேவர். [4]சூடுமாமெழில், சூடுமாவெழில். [5]காணமூளுமவாவினல். [6]வந்து. [7]வாவியே.(உசுக)

சூசு.—கவிக்கூற்று: அயோத்தியிலுள்ளார் இராமாபிஷேகத்தின் பொருட்டுச் செய்தவற்றை ஒருவாறுகூறுவோ மெனல்.

இன்ன வேலையி னெழு வேலபு மொத்த போல விரைத்[1]தெழுந்
[2]தன்ன மா[3]நகர் மைந்தன் மாமுடி சூடு மைவக விதா[4]மெனைத்
துன்னு காத றுரப்ப வந்தவ செல்ல லாம்வகை யெம்மனோர்க்
குன்ன லாவன வல்ல [5]வென்னினு முற்ற பெற்றி யுணர்த்துவாம்.

(இ - ள்.) இன்ன வேலையின் - இப்படிப்பட்ட சமயத்தில், எழு வேலை உம் - எழுகடலும், ஒத்த போல-ஒருசேர இரைத்து எழுந்தாற்போல, அன்ன மாநகர் - அந்தப்பெரிய அயோத்தியாநகரத்திலுள்ளவர், 'இது - இந்நாள், மைந்தன் மா முடி சூடும் வைகல் ஆம் - சக்ரவர்த்தித்திருமகன் இராச்சியபட்டாபிஷேகஞ்செய்து கொள்ளுகின்ற நாளாகும்,' எனை - என்றெண்ணி, துன்னு காதல் துரப்ப - பொருந்திய விருப்பந் தூண்டுதலால், இரைத்து எழுந்து - ஆரவாரித்துக்கொண்டு கிளம்பி, வந்தவை - (அவர்கள் செய்து) வந்த விதங்களை, சொல்லல் - சொல்லுதற்கு, ஆம் வகை - உரியவகைகள், எம் அனோர்க்கு - எம்போன்றவர்களுக்கு, உன்னல் ஆவன அல்ல - நினைப்பதற்குத் தக்கவையல்லன: என்னின்உம் - என்றாலும், உற்ற பெற்றி - கூடிய அளவு, உணர்த்துவாம் - சொல்லுவோம்; (எ - று)

எல்லாவுயிர்கட்கும் நன்மகனுதலால், பொதுவாக 'மைந்தன்' என்றும், ஒரு முகத்தையுடைய எம்போலியர்க்கு என்பார், 'எம்மனோர்க்கு' என்றுங் கூறினர். 'உன்னலாவனவு மல்ல' என்றும் இழிவுசிறப்பும்மை, விகாரத்தாற்றொக்கது; எனவே, சொல்லலாவனவல்ல வென்பது கூறாதே பெறப்பட்டது. உணர்த்துவாம் - பன்மைத்தன்மை; ஈண்டு, ஒருவரைக்கூறும் பன்மை. இரைத்தெழுந்ததன்பதனை, உவமைக்கும் உவமிக்கப்படும்பொருளுக்குங் கூட்டுக. பி - ம்:—[1]எழும். [2]மன்னன். [3]திலவேந்தனெய், நகர்வேந்தன்மா. [4]என. [5]ஆயினும்.

(உருo)

வேறு.

சூசு.—இராமபட்டாபிஷேகத்தைக்கருதி மகளிர்தம்மையலங்கரித்தல்.

குஞ்சர மனையார் கிந்தைகொ ளிளையார்
[1]பஞ்சினை பணிவார் பால்வளை தெரிவா
ரஞ்சன மெனவா ளம்புக ளிடையே
[2]நஞ்சினை யிடுவார் நாண்மலர் புனைவார்.

(இ - ள்.) குஞ்சரம் அனையார் - யானையையொத்த பெருந்தன்மை யுள்ள ஆடவருடைய, சிந்தை - மனங்களை, கொள் - (தாம்) கவர்கின்ற, இளையார் - இளைய மங்கையர்,—பஞ்சினை செம்பஞ்சுக்குழம்பை, அணிவார்- (கால்களில்) ஊட்டுவார்கள்; பால் வளை தெரிவார் - பால்போலும் வெள்ளிய சங்குவளையல்களை ஆராய்ந்தெடுத்து (க்கைகளில்) இடுவார்கள்; வாள் அம்புகள் இடையே-வாளும் பாணமும்போற் கொடிய கண்களில், அஞ்சனம் எனமையெனப்பெயர்வைத்து, கஞ்சினை இடுவார் - விஷத்தை இடுவார்கள்; நாள் மலர் புனைவார் - புதிபமலர்களைச் (சிரசிற்) சூடுவார்கள்; (எ - று.)

குஞ்சரம்-வடசொல். இளையாளென்றது இலக்குமிக்குப்பெயராதலால், இளையாளென்பது - பெரும்பாலும் மகளிரையே யுணர்த்தும்; முன்னும் "பத்தினையிளையவர் பயிலிடம்" என்றார். வாள், அம்பு-உவமவாகுபெயர். வாளிற்கும் அம்பிற்கும் விடத்தடவுதல்போலக் கண்களுக்கு மையிட்டாளென்க. வாள் கண்ணுக்கும்,அம்பு அதனினின்றுந்தான்றும்பார்வைக்கும் உவமையென்னலுமொன்று. பஞ்சணிதல் முதலியவற்றைத் தாமே தமக்குச்செய்து கொள்வார்கள்; ஒருத்தருக்கொருத்தருஞ் செய்வார்களனென்க. பி-ம்:—[1]பஞ்சிகள், பஞ்சுகள். [2]நஞ்சுகள். (உரிகை)

வேறு.

கூ௱.—அந்தகரத்தவரின் மகிழ்ச்சி.

பொங்கிய வுவகை வெள்ளம் பொழிதரக் கமலம் பூத்த
சங்கையின் [1]முகத்தார் தம்பி தம்பிய ரனைய ராகி
செங்[2]கய னறவ மாந்திக் [3]களிப்பெனச் சிவக்குங் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குவவுத்தோட் குமர ரெல்லாம்.

(இ - ள்.) பொங்கிய உவகை வெள்ளம் பொழிதர - மிகுந்த ஆனந்தத்தாலுண்டாகிய கண்ணீர்ப்பெருக்குத் தோன்றும்படி, கமலம் பூத்த-தாமரைமலர் போன்ற கண்கள்பொருந்திய,சங்கை இல் முகத்தார்-குற்றமற்ற வதனத்தை யுடையவராகிய, செம் கயல் நறவம் மாந்தி களிப்பு என சிவக்கும் கண்ணார் - சிவந்தகெண்டைமீன்கள் மதுவைக்குடித்துக்களிப்படைந்திருத்தல் அவற்றைப்போலச்சிவந்திருக்கின்ற கண்களையுடைய மகளிரது, குங்குமம் சுவடு - (தனங்களிலணிந்த)குங்குமக்குழம்பினது அடையாளம், நீங்கா-நீங்காத,குவவு தோள்-திரட்சியான புயங்களையுடைய, குமரர் எல்லாம்-ஆடவர் அனைவரும், தம்பி தம்பியர் அனையர் ஆனர் - இராமதம்பியினது தம்மைபோற்றவராக ஆனார்கள்; (எ - று.)

மதுவைக்குடித்துக் களித்திருக்குஞ் செங்கயலை, செவ்வரிபரந்து களித்திருக்கும் மாதராரின்கட்கு உவமைகூறினர். மகளிரிடத்துள்ள விருப்பால் குங்குமச்சுவட்டைக் குமரர் நீங்காதிருக்கப்பெற்றனரென்க.கமலக்கண்கட்கு, உவகைவெள்ளத்தைத் தேன்பெருக்கென்னலாம். பருவத்தாற் சிறியவர் தம்பியரையனையரானரென்றுகூறினர்:இராமர் நுஜரைப்போல மகிழ்ச்சி பெற்று

ரென்க. பருவத்தாற் பெரிய ஆடவர் தசரதனையொத்தா ரென்று மேலேகூறுவர். வெள்ளம் என்றதற்கேற்பக் கண்ணீரென்பது வருவித்துரைக்கப்பட்டது. சோகவெள்ளத்தை நீக்குதற்கு, 'உவகைவெள்ளம்' என்றார். சங்கையில்முகம்-நிஷ்களங்கமாகிய மதியுளதேல் அதனை ஒக்கும் முகமென்க. சிவக்குங் கண்ணுதலின், செங்கயலென்றார். பி-ம்:—[1]முகத்தானம்பி. [2]கையின். [3]களிப்பன, சிவணும், களித்தெனச்சிவக்கும்.

(உருஉ)

சுசு.—அந்தநகரத்தவர் எல்லாரிதம்முடையவும் மகிழ்ச்சியின் வருணனை.

மாதர்கள் கற்பின் மிக்கார் [1]மீகாசலை மனத்தை யொத்தார் வேதிபர் [2]வதிட்ட னெனத்தார் வேறுள மகளி ரெல்லாஞ் சீதையை யொத்தா [3]ரன்னு டிருவினை யொத்தா [4]ளவ்வூர்ச் [5]சாதுகை மாந்த ரெல்லாந் [6]தயரதன் றன்னை யொத்தார்.

(இ - ள்.) கற்பின் மிக்கார்-கற்பின் மிகுந்தவராகிய, மாதர்கள்—, கோசலை மனத்தை ஒத்தார்—; வேதியர்-அந்தணர், வதிட்டன் ஒத்தார்—; வேறுள மகளிர் எல்லாம்-வேறுகவுள்ள மாதர்கள் எல்லாம், சீதையை ஒத்தார்—; அன்னாள்-அச்சீதாதேவி, திருவினை-இலக்குமியை, ஒத்தாள்—; அவ்வூர் சாதுகை மாந்தர் எல்லாம் - அந்நகரத்தில்வசிக்கின்ற சற்குணமாகிய ஒழுக்கத்தையுடைய ஆடவரெல்லாரும், தயரதன் தன்னை ஒத்தார்—; (எ - று.)

அப்போது அந்நகரத்தவர், பெற்றோரையும் புத்ரரதனையும் மனைவியையும்போல மகிழ்ந்திருக்க, சீதை இலக்குமியேபோல விளங்கினளென்க. தயரதன் - தஸரதன்: இது - தசரத எனப்பிரிந்து பத்துத்திக்கிலுஞ் செல்லவல்ல தேருடையவன் என்று பொருள்படும்; இதனால் எங்குந் தடையின்றிச் செல்ல வல்லவன் என்றதாயிற்று; இது, இந்திரனை வென்ற சம்பராசுரனை வதைக்கும்பொருட்டு அவன்சென்ற இடமெல்லாஞ் சென்றமையால் விளங்கிற்று. கற்பாவது; தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்; கற்புக் கற்பினைபாதல் கற்பிபலா னுணர்க. வேதிபர் - வேதங்களைப் பழுதறக்கற்று அவற்றிற்குத்தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்பவர். பி-ம்:—[1]கவுசலை. [2]வசிட்டன். [3]அன்னாட்டிருவினை யொத்தார். [4]இவ். [5]சாதுலாம், சாதுனை. [6]தசரதன்.

(உருங)

சுஎ.—பட்டாபிஷேக மகோத்ஸவத்தைக் காண அரசவெள்ளம் திரளுதல்.

இமிழ்திரைப் பரவை ஞால மெங்கணும் வறுமை [1]கூர வுமிழ்வதாத் [2]துதவு காத [3]லுந்திட வந்த தன்றே குமிழ்முலைச் சீதை கொண்கன் கோமுடி [4]புனைதல் காண்டா னமிழ்துணைக் [5]குழுவு கின்ற வபரி ணசச வெள்ளம்.

(இ-ள்.) அரசர் வெள்ளம்-சாஜசமூகம்,—குமிழ் முலை சீதை கொண்கன்-புடைத்திருக்கின்ற தனங்களையுடைய சீதைக்குக் கணவனாகிய ஸ்ரீராமன், கோ முடி-அரசிற்குரிய கிரீடத்தை, புனைதல் - சூட்டிக்கொள்ளுதலை, காண்பான்-பார்க்கும்பொருட்டு, உமிழ்வது ஒத்து உதவு காதல் - வெளிப்படுவது போன்று மிகுகின்றவிருப்பம், உந்திட - எவித்தூண்டுவதனால், அமிழ்து உண குழுவுகின்ற-அமிருதத்தையுண்ணுவதற்குக் கூடுகின்ற, அமரரின் - தேவர் போல, இமிழ் திரை பரவை ஞாலம்-ஒலிக்கின்ற அலைகளையுடைய கடலாற் சூழப்பட்ட நிலவுலகம், எங்கண்உம்-எல்லா இடமும், வறுமை கூர-வெறுமை யையடையும்படி, வந்தது-(அந்நகரத்தில்) வந்து கூடிற்று; (எ - று.)

பட்டாபிஷேகமகோத்ஸவத்தைக் காணத் திரண்ட அரசர்குழுவுக்கு, அமுதுணத்திரண்ட தேவர்குழுவை உவமைகூறினர்: **உவமையணி.** பரவை-பரவுதலுடையது; ஐ-வினைமுதற்பொருண்மைவிகுதி. வறுமை-ஒருபொருளு மின்மை. **பி-ம்:**—[1]தீர. [2]உலவு. [3]உயர்ந்திட. [4]அணிதல். [5]குழுமுகின்ற. ()

சூஅ.—ஆடவரும் மகளிரும் செல்ல இடமில்லாமல் வீதியில் திரண்டு நிற்றல்.

பகியல் பவளச் செவ்வாய்ப் பணைமுலைப் பரவை யல்குற்
றோகையர் குழாமு மைந்தர் சும்மையும் தூவன்றி யெங்கு
மேகுமி னேகு மென்றென் றிடையிடை நிற்ற [1]லல்லாற்
[2]போகில மீள கில்லா பொன்னகர் வீதி யெல்லாம்.

(இ-ள்.) பாகு இயல் பவளம் செம் வாய்-சர்க்கரைப்பாகுபோன்ற இனி மையையும் பவழம்போற் செந்நிறத்தையுங்கொண்ட அதரத்தையும், பணை முலை-பருத்த தனங்களையும், பரவை அல்குல் - பரந்த அல்குலையுமுடைய, தோகையர்-மகளிரது, குழாம்உம்-கூட்டமும், மைந்தர் சும்மைஉம் - ஆடவர் கூட்டமும், பொன்நகர் வீதி எல்லாம்-அவ்வழகியநகரத்தின் தெருக்களிலெல் லாம், எங்கும் தூவன்றி-எல்லாவிடங்களிலும் நெருக்கி, 'எமுமின் எமும்-நட வுங்கள் நடவுங்கள்,' என்று என்று - என்று பலமுறைசொல்லிக்கொண்டு, இடையிடை-தாமிருந்தஇடங்களிலேயே, நிற்றல் அல்லால்-நிற்பதல்லாமல், போகில-செல்லவுமில்லை; மீளகில்லா - (போதலேஅன்றுமென்றஎண்ணத்தை) ஒழிந்தனவுமில்லை; (எ - று.)

பாகியல் என்பதைப் பவளத்தோடு இயைப்பின், பாகியல்பவளச்செவ் வாய்என்றதொடர்-இல்பொருளுவமையாம். "பவளம்போற்சிவந்தவாய்" என்றுமிதனைப்பிறரும். **பி-ம்:**—[1]ஆற்றார். [2]போகுநர் மீளலாகா. போகலர் மீள்கலில் லர், போகொணாமீள்கலாகாப். (உருரு)

சூகூ.—பெருந்திரளின் காட்சி.

வேந்தரே பெரிதென் பாரும் [1]வீரரே பெரிதென் பாரு
மாந்தரே பெரிதென் பாரு மகளிரே பெரிதென் பாரும்

போந்ததே பெரிதென் பாரும் [2]புகுவதே பெரிதென் பாருந்
தேர்ந்ததே [3]தேரி னல்லால் [4]யாவரே [5]தெரியக் கண்டார்.

(இ-ள்.) வேந்தர் ஏ பெரிது என்பார்உம்-அரசர்கூட்டமே மிகுதியென் பவரும்.வீரர் ஏ பெரிது என்பார்உம்-அந்தணர்கூட்டமே மிகுதியென்பவரும், மாந்தர் ஏ பெரிது என்பார்உம்-ஆடவர்கூட்டமே மிகுதி யென்பவரும்,மகளிர் ஏ பெரிது என்பார்உம் - மாதர்கூட்டமே மிகுதியென்பவரும், போந்ததுஏ பெரிதுஎன்பார்உம் - வந்தஜஃமே மிகுதியென்பவரும், புகுவதுஏ பெரிது என்பார்உம் - வரக்கடவ ஜஃமே மிகுதியென்பவரும் (ஆகி), தேர்ந்தது ஏ தேரின் அல்லால்-தாம்அறிந்ததையே அறிந்தல்லாமல், யாவர்ஏ-எவர்தாம், தெரிய கண்டார்-(முழுவதும்)நன்முயறிந்தவர்? [ஒருவருமில்லை யென்றபடி].

தாம் கண்டதைச் சொல்வதல்லாமல் தெரிய்க்கண்டு எவராலும் சொல்ல முடியாதபடி வேந்தர் முதலியோரின் பெருந்திரள் திரண்டிருந்த தென்க. வேந்தர் முதலியநான்கும்-ஆகுபெயர்கள். "அந்தணாளர்க்கரசுவரைவின்றே" என்றதனால்,வீரரென்றார்; "விரிமலர்க்கோதைபாட வெழாலவகைவீரர்தோற்றார்" என்றார் சிந்தாமணியிலும். இனி, படைவீரருமாம். பி-ம்:—[1]வேதியர். [2]புக்கதே. [3]தேர்வதல்லால். [4]யாவரே. [5]தெரியவல்லார். (உருசு)

எ0.—மகளிர் நெருங்குதலின் வருணனை.

குவளையி னெழிலுஞ் மேவலின் கொடுமையுங் குழைத்து[1]க் கூட்டித்
திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளவெண் [2]மதியுள் வைத்த தன்மை[3]சா றடங்க ணல்லார்
துவளுநுண் ணிடையா ராடுந் [4]தாகையங் குழாத்திற் றொக்கார்.

(இ-ள்.) குவளையின் எழில்உம் கருங்குவளையினது அழகையும்,மேவலின் கொடுமைஉம்-மேவலினது கொடுந்தன்மையையும், குழைத்து கூட்டி - ஒன்றுக் கலந்துசேர்த்து, (அவற்றில்), திவளும் அஞ்சனம் என்று எய்ந்த நஞ்சினை - மெல்லிய மையென்றுபெயர்கூறப்பட்டுப் பொருந்திய விஷத்தை, தெரிய தீட்டி-விளங்கப்பூசி, (அவற்றை), தவளம் ஒள் மதியுள்-வெண்மையாகிய ஒண்மையையுடைய சந்திரனிடத்தில், வைத்த தன்மை சால் வைத்தாற் போன்ற தன்மைமிகுந்த, தட கண்-பெரியகண்களையுடைய, நல்லார்-அழகியவரும், துவளும் நுண் இடையார்-ஒசிகின்ற மெல்லிய இடையினையுடையவருமாகிய மகளிர், ஆடும் தோகை அம் குழாத்தின் - நர்த்தனஞ்செய்கின்ற அழகிய மயிற்கூட்டம்போல, தொக்கார்-கூடிநெருங்கினர்; (எ - று.)

முகத்திற் கண்கள் - குவளையினெழிலும் வேலின்கொடுமையும் கூட்டி அஞ்சனநஞ்சினைத்தீட்டி மதியுள் வைத்தனபோலு மென்றார்: இல்பொருளுவமை. இது—தன்மைத்தற்குறிப்பேற்றவணியி லடங்கும். அஞ்சனநஞ்சு - உருவகம். ஒண்மை-ஒளி. பூர்ணசந்திர னென்பார் 'தவளவெண்மதி' என்றார். அம் - சாரியையுமாம். பி-ம்:—[1]தீட்டி. [2]மதியின். [3]சார்தடங்கண். [4]தோகையின். (உருஎ)

எக.—முடிசூட்டுவிழாவைக் காண வ்ராதவர் இவரெனல்.

நலங்கிளர் [1]பூமி யென்னு நங்கையை நறுந்து ழாயி
னலங்கலான் புணருஞ் செல்வங் [3]காணவந் தடைந்தி லாதா
ரிலங்கையி னிருத ரேயிவ் வே[3]ழுல கத்து வாழும்
[4]லிலங்கலு [5]மாசை நின்ற விடாமத வில்ல மேலவால்.

(இ - ள்.) நறு துழாயின் அலங்கலான்-மணக்கின்ற திருத்துழாய்மாலை யையுடைய ஸ்ரீராமன், நலம்கிளர் பூமி என்னும் நங்கையை-நன்மைவிளங்குகின்ற பூமியென்னும் பிராட்டியை, புணரும் - கூடுகின்ற, செல்வம் - பாக்கியத்தை, காண - பார்த்தற்கு, வந்து அடைந்திலாதார் - வந்துசேராதவர்,—இலங்கையில் நிருதர் ஏ - இலங்காபுரத்திலுள்ள ராக்ஷசர்களும், இ ஏழ் உலகத்து வாழும் விலங்கலும் - இந்தஏழுதீவுகளாகவுள்ள உலகத்திருக்கின்ற மலைகளும், ஆசை நின்ற - எட்டுத்திக்குக்களிலுமின்ற, விடா மதம் விலங்கல் (உம்) ஏ-நீங்காத மதத்தையுடைய அஷ்டகஜங்களுமேபாகும்; (எ-று.)—ஆல் - ஈற்றசை.

பல தேசத்தவரும் பட்டாபிஷேகமகோத்ஸவத்தைக் காணத் திரண்டனரென்பதை வற்புறுத்தும்பொருட்டு, அத்திருவிழாவைக்காண வராதவர் நிருதர் முதலிய சிலரேயென்றார். அரக்கர் பகைமையாலும், மலைகள் அசைதலில்லாத நிலைமையாலும், திக்கஜங்கள் பூமியைச்சுமப்பதைவிட்டு விலகிவரக் கூடாமையாலும் வரவில்லை யென்க. இருதிணையுங்கலந்து சிறப்பினால் 'அடைந்திலாதார்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன. விலங்கல்-திரியக்குமாம். விலங்கல் - யானைக்கு உவமவாகுபெயர். பி - ம்:—[1]பூமேல்வை குமும்,பூவென்றேங்கும். [2]காணியவந்திலாதார். [3]உலகத்திலுள்ள. [4]விலங்கலே. [5]ஆசைநின்று, மாமுமாதி வேறுளபொருள்களெல்லாம். (உருஅ)

எஉ.—வந்த மன்னவர் மௌலிசூட்டும் மண்டபத்திற் புகுதல்.

சந்திரர் கோடி யென்னத் தரளவெண் கவிகை போங்க
வந்தரத் தன்ன மெல்லர்[1]மார்ந்தினக் கவரி துன்ன
[2]விந்திரற் குவமை சாலு மிருநிலக் கிழவ ரெல்லாம்
வந்தனர் [3]மௌலி சூட்டு [4]மண்டப மதனிற் புக்கார்.

(இ - ள்.) இந்திரற்கு உவமை சாலும்-(ஒவ்வொருவருக் தனித் தனியே) தேவேந்திரனுக்கு உபமானமாகத்தக்க, இரு நிலம் கிழவர் எல்லாம் - பெரிய அரசுரிமையையுடைய அரசர்கள் யாவரும்,—சந்திரர் கோடி என்ன-சந்திரர் பலரென்னும்படி, தரளம் வெண் கவிகை ஓங்க - முத்தாலாகிய வெள்ளிய குடைகள் உயர்ந்துவிளங்கவும்,—அந்தரத்து-ஆகாயத்தில், அன்னம் எல்லாம்-ஹம்ஸங்களனைத்தும், ஆர்ந்த என - நிறைந்தன என்னும்படி, கவரி துன்ன-வெண்சாமரை நெருங்கவும், வந்தனர் - வந்தவர்களாய், மௌலி சூட்டும் மண்டபம் அதனில் - பட்டாபிஷேகமண்டபத்தில், புக்கார் - சென்றார்; (எ - று.)

மன்னவர் குடைநிழற்றவும் வெண்சாமரைவீசவும் திருவிழாக்காண வந்து மண்டபத்தில் முறைப்படி புகுந்தன ரென்க. ஆர்ந்துளனப்பிரிப்பினுமாம். போகங்களிலிந்திரனுக்கு மேம்பட்டவ ரென்பார் 'இந்திரற்குவமை சாலுங் கிழவர்' என்றார். பி - மீ:—[1]ஆர்த்தென்ன, ஆர்த்தென. [2]இந்திரக்கு. [3]மவுலிசூடும். [4]மண்டபத்தரிதிற், மண்டபமரபிற். (உருகூ)

எங.—அம்மண்டபத்துத் திருவிழாக்காண அந்தணர் வந்துசேர்தல்.

முற்பயந் தெடுத்த காதற் புதல்வனை முறையி னேது
மிற்பயன் [1] சிறப்பிப் பாரி னீண்டிய வுவகை தூண்ட
வற்புதன் றிருவைச் சேரு மருமணங் காணப் புக்கார்
நற்பயன் றவத்தி னுய்க்கு [2]நான்மறைக் கிழவ ரெல்லாம்.

(இ - ள்.) தவத்தின்-தவத்தினால், நல் பயன் உய்க்கும்-நல்ல பயன்களை யடைகின்ற, நால் மறை கிழவர் எல்லாம்-நான்குவேதங்களுக்குரிய அந்தணர் யாவரும்,—முன் பயந்து எடுத்த காதல் புதல்வனை - முன்னே தாம் பெற்று வளர்த்த விருப்பத்தையுடைய (தம்) புத்திரனை, முறையினேதும் - முறைமையுடன், இல் பயன் சிறப்பிப்பாரின்-மணஞ் செய்விப்பவர்போல, ஈண்டிய உவகை தூண்ட-மிக்க மகிழ்ச்சி யேவுதலால், அற்புதன்-ஸ்ரீராமன், திருவை சேரும் - ராஜ்யலக்ஷ்மியை அடைகின்ற, அரு மணம் - பெறுதற்கரிய கல்யாணத்தை, காண - பார்த்தற்கு, புக்கார் - சென்றடைந்தார்கள்; (எ - று.)

தூண்டப் புக்கார்என்க. அந்தணர் தமதுபுத்திரனுக்கு மணஞ்செய்விக்கையில் எவ்வளவு உவகையடைவரோ அவ்வளவு உவகையுடனே முடிசூட்டு திருவிழாவைக்காண அம்மண்டபத்தைச் சேர்ந்தாரென்க. இற்பயன் - இல்லிலிருக்கும்பயன்: இல்லிலிருத்தற்குப்பயன் விருந்தோம்புதல் முதலியன ஆதலால், அதற்குரியவராம்படி மணப்பித்தலை 'இற்பயன்' என்றார். முற்பயந்தெடுத்த காதற்புதல்வன்-மூத்தகுமார னென்னவுமாம். பி-மீ:—[1]சிறப்பப். [2]நான்மறைப்புலவர். (உசூ)

எச.—இதுவும் அடுத்தகவியும் - அங்ஙனத்திரண்டோரிலல்நிகழ்ந்த நிகழ்ச்சியின் வருணனை.

விண்ணவர் விசும்பு [1]தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல
மண்ணவர் திசைக [1]ளேர்த்தார் மங்கல மிசைக்குஞ் சங்கங்
கண்ணகன் முரசி னேனை [2]கண்டவர் செவிக ளேர்த்த
வெண்ணருங் கனக மாரி யெழுதிரைக் [3]கடலுந் தூர்த்த.

(இ-ள்.)(அந்த முடிசூட்டுதிருவிழாவைக் காணுமாறு வந்த),விண்ணவர்-தேவர், விசும்பு தூர்த்தார் - ஆகாயத்தை நிரப்பினர்; விரி திரை உடுத்த கோலம் மண்ணவர்-கடலை(ஆடையாக)உடுத்த அழகிய பூலோகத்திலுள்ளவர், திசைகள் தூர்த்தார் - (எட்டுத்) திக்குக்களையும் நிரப்பினர்; மங்கலம் இசைக்

கும் சங்கம்-மங்களகரமாக ஒலிக்கின்ற சங்கங்களின் ஒலியும், கண் அகல் முரசின் ஓதை - பெரிய முரசுவாத்தியங்களின் ஒலியும், கண்டவர் செவிகள் தூர்த்த - கேட்டவர்காதுகளை நிரப்பின; எண் அரு கனகம் மாரி - அளவில்லாத சுவர்ணத்தோடு(தானஞ்செய்யுங் காலத்தில் வார்க்கின்ற) நீர்மழை, எழு திரை கடல்உம் - அலைகளையுடைய எழுகடல்களையும், தூர்த்த - நிரம்பின.

கேள்வியும் உணரப்படுதலிற் காட்சியேயாம்; ஆதலால் 'கண்டவர் செவிகள்' என்றார்; "நம்பிதந்தகீதமேயத்துகாணைவோடினர்" என்றார் சிந்தாமணியிலும். கனகமாரி - பொன்மழையுமாம். விரிதிரை - கடலுக்கு; வினைத்தொகையன்மொழி. எழுதிரை - வினைத்தொகையுமாம். பி-ம்: —[1]தூர்த்த. [2]கேட்டவர். [3]கடல்கடூர்த்த. (உகக)

எரு. விளக்கொளி மறைத்த மன்னர் மின்னொளி மகுட கோடி
துளக்கொளி விசும்பி னூருஞ் சுடரையு [1]மறைத்துச் சூழ்ந்த
வளக்கர்[2]வாழ் முத்த மூரன் முறுவலா [3]ரணியின் சோதி
[4]வளைக்கலா மென்றவ் வாமினர் கண்ணையு [5]மறைத்ததன்றே.

(இ - ள்.) விளக்கு ஒளி மறைத்த - (தமது உடம்பின்ஒளிபால்) தீபத்தி னொளியை மறையச்செய்த [தீபத்தினும் மிக்க ஒளியுடன் விளக்குகின்ற], மன்னர் - அரசரது, மின் ஒளி மகுடம் கோடி - மின்னுப்போன்ற காந்தியை யுடைய பலவாகிய கிரீடங்கள், துளக்கு ஒளி - செய்கின்ற ஒளி, விசும்பின் ஊரும் சுடரைஉம்-ஆகாயத்திற் செல்கின்ற ஞாயிறினையும், மறைத்து சூழ்ந்த-மறைத்தன; அளக்கர் வாழ் - கடலிற்றோன்றிய, முத்தம் - முத்துப்போன்ற, மூரல் முறுவலார் - பற்களையும் புன்னகையையு முடைய மகளிர் அணிந்த, அணியின்-ஆபரணங்களின், சோதி - காந்தி, வளைக்கல் ஆம் என்று-(இக்கில வுலகத்தைவளைத்த நாம் மேலுலகத்தையும்) சூழ்தல்கூடுமென்று எண்ணி, அ வாமினர் கண்ணைஉம் - அத்தேவர்களது (இமையாத) கண்களையும், மறைத்தது - (ஒளியின்மிகுதிபால்) இமைக்கச்செய்தது; (எ - று.)

மகுடகோடி சுடரை மறைத்தலாவது - மகுடகோடிகள் ஞாயிறினும் மிக்கஒளியையுடையனவாதல். கோடி - பலவென்னு மாத்திரையாயிற்று. ஊர்தல் - ஈண்டுப்போதன்மேற்று; "வானூர்மதியம்," "மஞ்ஞைதூர்த்து நின்றமால்" என்பவற்றிற்போல. அன்றை-ஈறுதொகைகள். பி-ம்:—[1]மறைத்த; மறைத்துஞ். [2]வாய். [3]அணியும். [4]வளைத்தலாலென்றி, வளைத்தலாமென்றி, வளைதலாமென்றி. [5]மறைத்த. (உகஉ)

எசு.—வசிட்டன் வேதியரோடு அந்த வந்துசேர்தல்.

ஆயதே [1]ரமைதி யின்க ணணபண மகுடந் தூட்டம்
கேயுமங் கலங்க ளான யாவையு மியைபக் கொண்டு
தூயநான் மறைகள் வேத பாரகர் கொல்லத் தொல்லை
[2]வாயில்க [3]ணெருக்க [4]நீங்க [5]மாதவக் கிழவன் வந்தான்.

(இ-ள்.) ஆயது ஓர் அமைதியின் கண்-அப்பொழுது;—ஐயனை மகுடம் சூட்டற்கு - ஸ்ரீராமனை முடிசூட்டுவதற்கு, எயும் - பொருந்திய, மங்கலங்கள் ஆன யாவையும் - சுபகரங்களாகிய எல்லாவற்றையும், இயைய கொண்டு - பொருந்த எடுத்துக்கொண்டு;—வேதபாரகர்-அந்தணர், தூய நால் மறைகள்-பரிசுத்தமாகிய நான்கு வேதங்களையும், சொல்ல-சொல்லிக்கொண்டிருக்கவும், தொல்லை வாயில்கள் நெருக்கம் நீங்க - பழையவாயிலிலுள்ளவர் நெருக்கத்தை நீங்கி விலகி வழிவிடவும், மாதவம் கிழவன்-மிக்கதவத்தூரிமையையுடைய வசிஷ்டன், வந்தான் - எழுந்தருளினான்; (எ - று.)

தன் சீடர்களோடு வசிட்டன் வந்தானென்று முதனூல் கூறும். பாரம்-அக்கரை; முடிவு: இங்கு வேதாந்தம்; அதனையறிந்தவர்-வேதபாரகர். தொல்லை வாயில் என்றதனால், வாயில் முதியதாயினும் நெருக்கம் புதிய தென்க.
பி - ம்:—[1]அளவையின்கண். [2]வாயல்கள். [3]நெருக்கி. [4]நீக்கி, போக்கி. [5]மாதவற்கரசன்.

(உசுஉ)

எஎ.—வசிட்டமுனிவன் பட்டாபிஷேகச்சடங்கிற்குச் சித்தஞ்செய்து வைத்தல்.

கங்கையே [1]முதல வாகக் கன்னியீ [2]றுனதீர்த்த
மங்கலப் புனலு நாலு வாரியி னீரும் பூரித்
[3]தங்கியின் விஜனயிற் சேகற்ற [4]யாவையு [5]மமைத்து வீரச்
சிங்க [6]வா தனமும் வைத்துச் செய்வன பிறவுஞ் [7]செய்தான்.

(இ - ள்.) (வந்த அம்முனிவன்):—கங்கை ஏ முதலாக-கங்காநதி முதலாக, கன்னி ஈறு ஆன - குமரியாறுஇறுதியாக வுடையவாய், தீர்த்தம்-புண்ணிய தீர்த்தங்களினது; மங்கலம் புனல்உம்-மங்களகரமான நீரையும், நாலு வாரியின் நீர்உம் - நான்குகடல்களின் நீரையும், பூரித்து - (கும்பங்களில்) நிறைத்துவைத்து, அங்கியின் விஜனயிற்கு - அக்கினியிற் செய்யவேண்டும் ஓமம் முதலியவற்றிற்கு; ஏற்ற யாவைஉம் - பொருந்திய எல்லாவற்றையும், அமைத்து - அமையப்பண்ணி, வீரம் சிங்கஆதனம்உம்-வீரஸிம்ஹாஸநத்தையும், வைத்து—, செய்வன பிறஉம் - செய்யவேண்டியபிறகாரியங்களையும், செய்தான் - சித்தஞ்செய்தான்; (எ - று.)

அங்கி - அக்கி யென்னும் வடமொழிச்சிதைவு. வீரச்சிங்கவாதனம் - வீரன் வீற்றிருத்தற்குரிய சிங்காதனம். 'பிறவும்' என்றதனாலே, அட்சதை தருப்பம் சமந்தகலிகள் யாஜ்ஞ குதிரை அத்திமரத்தாற்செய்தபீடம் முதலிய பட்டாபிஷேகத்திற்குவேண்டிய சாமக்கிரிகளைக் கொள்க. பி-ம்:—[1]முதலாயுள்ள, முதலான; முதலாய. [2]ஆய. [3]அங்கிசெய், அங்கனை, இங்கினை. [4]யாவையும். [5]புரிந்து. [6]ஆசனமும். [7]செய்தார்.

(உசுக)

எஅ.—சுமந்திரன் வசிட்டன்கட்டளையால் மன்னவனை யழைத்துவரச் செல்லுதல்.

கனிதரு ளுலைந்த [1]மாந்தர் காலப்வந் [2]தடுத்த தென்னப்
பிணியற நோற்று நின்ற பெரியவன் விரைவி [3]னேகி
மணிமுடி வேந்தன் றன்னை வல்லைபிற் கொணர்தி யென்னப்
பணிதலை [4]நின்ற காதற் சுமந்திரன் பரிவிற் சென்றான்.

(இ - ள்.) கணிதம் நூல் உணர்ந்த மாந்தர் - சோதிடநூலை யறிந்தவர், 'காலம் வந்து அடுத்தது-முகூர்த்தகாலம் வந்து சமீபித்தது,' என்ன-என்று தெரிவித்ததனால், பிணி அற நோற்று நின்ற பெரியவன் - பந்தம் நீங்கும்படி தவஞ் செய்துநின்ற வசிஷ்டபகவான், 'விரைவின் எகி - வேகத்தோடு சென்று, மணி முடி வேந்தன் தன்னை - ரத்நகிரீடத்தையுடைய சக்ரவர்த்தியை, வல்லையின் கொணர்தி-விரைவே அழைத்துக்கொண்டுவா', என்ன - என்று கட்டளையிட,—பணி தலைநின்ற - (அம்முனிவனுடைய) ஆணையைத் தலைமேற்கொண்டுநின்ற, காதல் சுமந்திரன் - விருப்பத்தையுடைய சுமந்திரன், பரிவின் சென்றான் - அன்போடு போயினான்; (எ - று.)

அரசமாளிகையின் வாசற்றிண்ணையில் உட்கார்ந்திருந்த வசிட்டமுனிவன் அலங்காரஞ்செய்துகொண்டு அபிஷேகவத்ஸவத்தின்பொருட்டு வந்த சுமந்திரனைக்கண்டு, 'சுமந்திரனே! பட்டாபிஷேகத்திற்குவேண்டியனவெல்லாஞ் சித்தமாக வைத்துக்கொண்டு நான் காத்திருப்பதைச் சொல்லிச் சூரியோதயத்திற் புஷ்யநட்சத்திரத்திற் பட்டாபிஷேகம்நடக்குமாறு மன்னவனை விரைவுப்படுத்துக' என்று சொல்லியனுப்பினனென்று முதனூலிற் கூறப்பட்டுள்ளது. காலம் வந்தடுத்ததென்றது; காலங் கழிக்குமதன்றென்றவாறு. பிரமவிருடியென்பார் 'பெரியவன்' என்றார். பி - ம்:—[1]மாக்கள். [2]உற்றது. [3]எய்தி. [4]என்று. (உசுடு)

எக.—சுமந்திரன் கைகேயியின் அந்தப்புரத்துவரலிருப்பது உணர்ந்துஅங்குச்சேல்ல, கைகேயி சுமந்திரனிடத்து இராமனை யழைத்துவரச்சொல்லுதல்.

விண்டொட நிவந்த கோயில் வேந்தர்க்கு வேந்தன் றன்னைக் கண்டிலன் [1]வினவக் கேட்டான் [2]ககையி கோயி னண்ணித் தொண்டை வாய் மடந்தைமாரிற் சொல்ல [3]மற் றவருஞ் சொல்லப் பெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்றாள்.

(இ - ள்.) (சென்ற சுமந்திரன்), விண் தொட நிவந்த - ஆகாயத்தை யளாவும்படி யுயர்ந்த, கோயில் - அரண்மனையில், வேந்தர்க்கு வேந்தன் தன்னை - சக்ரவர்த்தியை, கண்டிலன் - காணாதவனாய், வினவ - (அக்குறிப்பை) விசாரிக்க, கேட்டான் - (அக்கிருப்பவர்கள் சொல்லக்) கேட்டு, ககையி கோயில் நண்ணி - கைகேயியினது மனையைச் சமீபித்து, தொண்டை வாய் மடந்தைமாரின் சொல்ல - தொண்டைக்கனிபோலும் வாயினையுடைய தாதியரிடத்தில் (தன்வருகையைத்) தெரிவிக்க, அவரும் - அத்தாதியரும், சொல்ல - (கைகேயிக்கு) அறிவிக்க,—பெண்டிரில் கூற்றம் அன்னாள்-பெண்களுள் யமனையொத்த அக்கைகேயி, 'பிள்ளையை - இராமனை, கொணர்க - அழைத்துக்கொண்டு வருவாயாக,' என்றாள் - என்று (சுமந்திரனை நோக்கிக்) கூறினாள்; (எ - று.)

விண்டொடநிவந்தகோயில்-தொடர்புயர்வுநவிற்சியணி. வசிட்டமுனிவனது கட்டளைப்படிசென்ற சுமந்திரன் அந்தப்புரத்து எவராலும் தடுக்கப்படாமல் அரசனைத் துதித்துவணங்குசென்று, தசரதனது துர்வஸ்தையை

யறியாதவனுய் அம்மன்னவனை இனியமொழிகளாற் பலவகையாக வாழ்த்திப் புகழ்ந்து எழுப்ப, அவ்வரசர்க்கரசன் தலையெடுத்துப்பார்த்து 'சுமந்திரனே! மிகவும்வருந்தியுள்ள என்னைத் துதிமொழிகளால் மீளவும்வருத்துகின்றனை' என்றனை, வாடிய மன்னவனது முகத்தைப்பார்த்தும் கருணைமான அச் சொல்லைக்கேட்டும் மனம்நடுங்கிச் சுமந்திரன் ஒதுங்கிநிற்கையில், கைகேயி அச்சுமந்திரனைநோக்கி மன்னவர் ராமாபிஷேகசந்தோஷத்தால் இரவெல்லாம் உறக்கம்பியோதிருந்து இப்போது கண்ணயர்ந்திருக்கின்றார்: நீ விரைவிற் சென்று இராமனையழைத்துவருக: சுபமுண்டாகுக' என்று சொன்னுள். சுமந்திரன் கைகேயியின்பேச்சைக் கேட்டு, மங்கலமே மற்றொன்றும்இல்லை யென்றுமகிழ்ந்தான் என்று முதனூலி லுள்ளது. தன்கணவனைக் கொல்ல வழிதேடினவளாதலின் 'பெண்டிரிற்கூற்றமன்னுள்' என்றார். பி - ம்:— [1]னவி. [2]கைகயை, கைகயற். [3]வந்தவரும்.

(உசுசு)

அ0 —சுமந்திரன் கைகேயியின் கட்டளைப்படி யழைத்துவர ஸ்ரீராமனை அடைதல்.

என்றன ளென்னக் கேட்டா னெழுந்தபே ருவகை பொங்கப்
பொன்றிணி மாட வீதி பொருக்கென [1]நீங்கிப் புக்கான்
றன்றிரு வுள்ளத் துள்ளே தன்னையே நினையு மற்றக்
[2]குன்றிவர் தோளி ணானைத் தொழுதுவாய் புதைத்துக் கூறும்.

(இ - ள்.) என்றனள் - என்று அவள் சொன்னுள்; என்ன - என்று சொல்ல, (சுமந்திரன்), கேட்டான் - கேட்டு, எழுந்த பேர் உவகை பொங்க-உண்டாகிய மிக்க மகிழ்ச்சி மேன்மேலும் வளர்தலால், பொன் திணி மாடம் வீதி-பொன்மயமான மண்டபங்களையுடைய வீதிகளை, பொருக்கென நீங்கி - விரைவாகக்கடந்து, புக்கான் - போய்,—தன் திருவுள்ளத்துள்ளே - தனது அழகிய மனத்திற்குள்ளே, தன்னை எ நினையும் - தன்னையேநினைந்துகொண் டிருக்கின்ற; அ குன்று இவர் தோளினானை - மலையையொத்த புயங்களை யுடைய அந்த ஸ்ரீராமனை, தொழுது—, வாய்புதைத்து - வாயை மூடிக் கொண்டு, கூறும் - (பின்வருமாறு) சொல்லலானுன்; (எ - று.)

பட்டாபிஷேகத்தின்பொருட்டே கைகேயி தன்அந்தப்புரத்துக்கு இராமனை வரவழைப்பதாகக் கருதியிருந்ததனுல். சுமந்திரனது மனத்தில் உவகை பொங்குவதாயிற்று. தான் கொண்ட மாறுபடவேடத்திற்கு ஏற்பப் பட்டினி கிடந்து ஸ்ரீமந்நாராயணனைத்தியானித்துநிற்றலின், 'தன்றிருவுள்ளத்துள்ளே தன்னையே நினையுமக் குன்றிவர்தோளினுன்' என்றது: இனி, தன்னையே நினைதல் - தனதவதாரத்தின் காரணத்தையும், அதற்குச் செய்யவேண்டிய தொழில்களையும் நினைத்தலுமாம். பொருக்கென - விரைவுக்குறிப்புமொழி. வாய்புதைத்தல் - வணக்கமிகுதியால். மற்று - அசை. பி - ம்:—[1]நீக்கி, நெரு ங்கி. [2]குன்றன.

(உசுஎ)

அக.—சுமந்திரன் இராமனிடத்துக் கைகேயிசொல்லத் தெரிவித்து, மதுடஞ்சூடவிரைவில் வருக எனல்.

கொற்றவர் [1]முனிவர் மற்றுங் குவலயத் [2]துள்ளா ருன்னைப்
பெற்றவன் றன்னைப் போலப் பெரும்[3]பரி வுபற்றி நின்றூர்
சிற்றவை [4]தானு மாங்கே கொணர்கெனச் செப்பி னு[5]ளப்
பொற்றட மகுடஞ் [6]சூடப் போதுதி விரைவி னென்றான்.

(இ - ள்.) 'கொற்றவர்-அரசரும், முனிவர்-இருடியரும், மற்றுஉம்-பின்னும், குவலயத்து உள்ளார்-பூமண்டலத்தி லுள்ளவர்களும், உன்னை பெற்றவன்தன்னை போல-உன்னைப்பெற்ற சக்ரவர்த்தியைப்போல, பெரு பரிவு - (உன்பக்கல்) மிக்கஅன்பை, இயற்றி நின்றூர் - செய்து நின்றூர்; சிறு அவை தான்உம்-சிறியதாயாகிய கைகேயியும், ஆங்கே அவ்விடத்தில் [தன்மாளிகையில்], கொணர்க-(இராமனை) அழைத்துக்கொண்டு வருவாயாக, என-என்று, செப்பினுள்-சொன்னாள்; (ஆதலால்), அ பொன் தட மகுடம் சூட-சுவர்ணமயமான பெரிய அம்முடியைச் சூட்டிக்கொள்ள, விரைவின் போதுதி - சீக்கிரமாக வருவாயாக,' என்றான்-என்றுகூறினான், (சுமந்திரன்); (எ - று.)

"ஏழையரானவரு மிவர்தடமுலைதோய், கேழ்கிளர்மதுகையர் கிளைகளு மினையார், வாழியவெனவவர் மனனுறுகடவுட், டாழ்குவர்கௌசலை தயரத னெனவே," "அவ்வூர்ச், சாதுகைமாந்தரெல்லாந் தயரதன்றன்னையொத்தார்," "முற்பயன்றெடுத்தகாதற் புதல்வனை முறைபிழைத, பிற்பயன்சிறப்பிப்பாரி னீண்டியவுலகைத்துண்ட" என்றவற்றை நோக்கி, 'உன்னைப்பெற்றவன் றன்னைப்போலப் பெரும்பரிவியற்றிநின்றூர்' என்றார். சிற்றவை - சிற்றவ்வை; அவ்வை-தாய். பி-ம்:—[1]முனிவோர். [2]உள்ளோர். [3]பரிசு. [4]வினவின். [5]செம். [6]சூட்ட. (உசுஅ)

அஉ.—இராமன் தேரிலேறிச்செல்லுதல்.

ஐயனு மச்சொற் கேளா வாயிர மௌலி யாலே
கைதொழு [1]தாச வெள்ளங் கடலென [2]த் தொடர்ந்து சுற்றத்
தெய்வகீ தங்கள் பாடத் [3]தேவரு மகிழ்ந்து வாழ்த்தத்
தையலா ரிரைத்து நோக்கத் தாரணி தேரிற் [4]சென்றான்.

(இ - ள்.) ஐயன்உம்-ஸ்ரீராமனும்,-அ சொல் கேளா-அவ்வார்த்தையைக் கேட்டு,—ஆயிரம் மௌலியாலே-ஆயிரத்திருமுடிகளையுடைய திருமால், கை தொழுது-அஞ்சலிசெய்து, (பின்), அரசவெள்ளம் - அரசர்கூட்டம், கடல் என-கடல்போல, தொடர்ந்து-பின்தொடர்ந்து, சுற்ற-சூழவும், தேவர்-தேவலோகத்தவர், தெய்வம் கீதங்கள் பாடஉம்-தேவர்கட்குரிய கானத்தைப் பாடவும், மகிழ்ந்து வாழ்த்த - களித்து ஆசீர்வதிக்கவும், தையலார் இரைத்து நோக்க -மகளிர் இரைந்துகொண்டு வந்துபார்க்கவும், தார் அணி தேரில் - மாலைகளைக்கட்டிய தேரின்மேல், சென்றான்—; (எ - று.)

விரைவிற்புறப்படவேணுமென்று சுமந்திரன்சொல்லியதனால் தமதுகுல தெய்வமான ஸ்ரீரங்கநாதனைத் தொழுதுவிட்டு ஸ்ரீராமன் புறப்பட்டனனென்க. 'தெய்வகீதங்கள்பாடி' என்று பாடமிருப்பின், நலம். ஆயிரமௌலியென்றது-திருக்கண், திருக்கை, திருவடிகளுக்கும் உபலக்ஷணம். தார் பொன்னாரிமாலையும், கொடியுமாம். பி-ம்:—[1]அரசர். [2]வந்து. [3]தேவர்கள். [4]போனன்.

அந.—"தையலாரிரைத்துநோக்க" எனக் கீழ்க்கவியிற் கூறியதனை இதுமுதல் நான்குகவிகளால் விவரிக்கின்றார்.

திருமணி மகுடஞ் சூடச் சேவகன் செல்கின் றனென்
றிருவரி னிருவர் [1]முந்திக் காதலி னிவகை யுந்த
விருகையு [2]மிரைத்து மொய்த்தா ரின்னுயிர் யார்க்கு மொன்றாய்ப்
பொருவரு நேரிற் செல்லப் புறத்திடைக் கண்டார் போல்வார்.

(இ-ள்.) (அம்மகளிர்),—'சேவகன்-ஸ்ரீராமன், திரு மணி மகுடம் சூட-அழகிய ரத்நகிரீடத்தைச் சூட்டிக்கொள்ளுதற்கு, செல்கின்றனன்—,' என்று-, காதலினாடு உவகை உந்த-விருப்பமும் மகிழ்ச்சியுந் தூண்டுதலால், இன்னுயிர்-இனியவுயிர், யார்க்குமும் ஒன்றுமாய் - எல்லார்க்குமொன்றுகி, புறத்திடை - வெளியில், பொருவு அரு நேரின் செல்ல - ஒப்பில்லாத இரதத்திற்போக, கண்டார் (அதனைப்) பார்த்தவரை, போல்வார்-போன்றவராய்,—ஒருவரின் ஒருவர் முந்தி - ஒருவரினும் ஒருவர் முற்பட்டு, இரு கைகளும் - (அவ்விராமனது) இரண்டுபக்கங்களிலும், இரைத்து-(சந்தோஷத்தினாற்) பேராரவாரஞ் செய்துகொண்டு, மொய்த்தார்-நெருங்கினர்; (எ - று.)

மகளிர் தம்முயிரெல்லாம்ஒன்றுகி வெளியே தேரின்மீது ஸ்ரீராமவடிவம் படைத்துச்செல்வதைப் பார்ப்பவரை யொத்து, அப்பிராட்டிக் காணவேணுமென்னுமாசையும் காணப்போகின்றோமென்பதைக் கருதுவதனாலாகியவுவகையும் தூண்ட, ஒருவரினும்ஒருவர்முந்தி இரைத்தவண்ணம் இராமனது இருமருங்கிலும் நெருங்கினரென்க. மகளிர் தம்முயிர்போல இராமனைக்கருதியிருந்தனரென்பது, பின்னிரண்டடிகளிற் பெறப்படும். இருகையும் இரைத்து என்பதற்கு - தமது இரண்டுகைகளையுந் தட்டிக்கொண்டு என்று கூறினருமுளர். பி-ம்:—[1]முந்த. [2]திரைத்து. (உஎ0)

அச. துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச் சுடர்முடி துறந்து தாய
மண்ணெனுந் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம் வள்ளல்
பண்ணெனுஞ் சொல்லி னார்தந் தேவினு மினைத்த வேயுங்
கண்ணெனுங் கால வேலு மிடைநெடுங் கானம் புக்கான்.

(இ-ள்.) துண் எனும் சொல்லாள் சொல்ல - அஞ்சத்தக்க சொல்லினையுடைய கைகேயி சொல்லுதலால், வள்ளல்-ஸ்ரீராமன், சுடர் முடி துறந்து-ஒளிபொருந்திய மகுடஞ்சூடுதலைத் தவிர்ந்து, தாய மண் எனும் திருவை நீங்கி-

தூய்மையையுடைய பூமியென்னும் மனைவியைப் பிரிந்து, வழிக்கொளாமுன்னம் - பயணப்படுதற்கு முன்னமே,—பண் எனும் சொல்லினத்தம் - இசைப்பாட்டென்று சொல்லத்தக்க சொல்லினையுடைய அம்மகளிரது, தோள் எனும் - தோள்களாகிய, பிணைத்த வேய்உம் - பருத்த மூங்கில்களும், கண் எனும் கால வேல்உம் - (அவர்) கண்களாகிய (கொடுந்தன்மையால்) யமனையொத்த வேல்களும், மிடை-(இருபுறமும்) நெருங்கிய, நெடு கானம்-பெருங் காட்டில், புக்கான் - போனான்; (எ - று.)

கைகேசிசொல்லால் இராமபிரான் இனிக் கானகம்போகப்போகிறானதலால், அதற்குமுன்னமே வேயும்வேலும் மிடைந்த கானிற் சென்றானென்றார். இங்ஙனம் மேல்வருவதனை முன்னமே நிகழ்ந்ததாக வருணனையிற்கூறுதலே "சேவகன் சீறுமுன்னஞ் சேதுவுந் தெரிந்தமாதோ" எனச் சுந்தரகாண்டத்துங் காணலாம். 'கானம்' என்றசொல் காடுஎன்பதுபோலவே மிகுதியென்னும் பொருளையுங் காட்டும். கண்ணெனும்வேல் மிடை கானம்—சிலேடையோடு சேர்ந்துவந்த உருவகவணி; "ஆருயிர்கவருங்கூர்நுதிக்கண்ணெனுங்காலவேல்" என்றார், எழுச்சிப்படலத்தும். வேல் - மரத்திற்கும், படைக்கும் சிலேடை. ஸ்ரீதேவி பூதேவியென்னும் இருவருள் ஒருத்தியாதலால், நிலமகளை 'தூபமண்ணினுந்திரு' என்றும், பரதனுக்கு அரசுகொடுப்பதைநோக்கி இராமனை 'வள்ளல்' என்றுங் கூறினர். (உஎக)

அரு. சுண்ணமு மலருஞ் சாந்துங் கனகமுந் தூவ வந்து
வண்ணமே கலையு நாணும் வளைகளுஞ் [1]சிந்து வாரும் [கை
புண்[2]ணுற வனங்கன் வாளி [3]புழைத்த[4]தம் புணர்மென் கொங்
கண்ணுறப் பொழிந்த [5]காம வெம்புனல் கழுவு வாரும்.

அசு. அங்கண னவனி காத்தற் காமிவ னென்ன லாமோ
நங்கணன் பிலனென் றுள்ளந் தள்ளுற நடுங்கி னைவார்
செங்கணுங் கரிய கோல மேனியுந் தெரு மாகி [பார்.
பெங்கணுக் [6]தோன்று கின்ற [7]ரெனினவரோ வீரா [8]மென்

இவையிரண்டும் - ஒருதொடர்: ஒருங்கே பொருளுரைக்கப்படும்.

(இ - ள்.) (அரு) (அம்மகளிர்), சுண்ணம்உம் - கத்தப்பொடியையும், மலர்உம் - புஷ்பத்தையும், சாந்துஉம் - சந்தனத்தையும், கனகம்உம்-, தூவ வந்து—, வண்ணம் மேகலை உம் - அழகிய மேகலாபரணத்தையும், நாண் உம் - வெட்கத்தையும், வளைகள்உம் - கை வளையல்களையும், சிந்துவார்உம் - சிந்துபவரும்,—அனங்கன் வாளி - மன்மதபாணம், புண்உற - விரணமுண்டாகும்படி, புழைத்த - துளைத்த; தம் புணர் மெல் கொங்கை - தமது நெருங்கிய மெல்லிய தனங்களை, கண் - கண்களினின்றும், உற - மிகுதியாக, பொழிந்த - வழித்த, காமம் - காமநோயாலுண்டாகிய, வெம் புனல் - வெப்பமானநீரினால், கழுவுவார்உம் - கழுவுகின்றவர்களுமாகி;—(அசு) 'நம் கண்

அன்பு இலன் - நம்மிடத்து அன்பில்லாதவனுகிய, இவன் - இவ்விராமன், அவனி காத்தற்கு ஆம் - பூமியைக்காத்தற்குப் பொருந்திய, அம் கணன்-அழகிய [அருளுடைய] கண்களையுடையவன்,' என்னல் ஆம் ஓ என்றுசொல்லுதல் பொருந்துமோ? [பொருந்தாது], என்று - என்று எண்ணி, உள்ளம் கள்ளுற - மனந் தடுமாறுதலால், நடுங்கி-(உடல்) நடுங்கி, நைவார்-தளர்வார்; செம் கண் உம் - சிவந்தகண்களும், கரிய கோலம் மேனிஉம் - கறுத்த அழகிய திருமேனியும், தோர்உம் ஆகி - இரதமுமாகப்பொருந்தி, எங்கண்உம் - எல்லாவிடத்தும், தோன்றுகின்றூர் - தெரிகின்றவர், எனைவர்ஓ இராமன் - இராமனென்பவர் எத்தனைபேரோ?' என்பார் - என்றுசொல்வார்; (எ - று.)

சுண்ணம்முதலியவற்றைத் தூவவந்தவர், ஸ்ரீராமனைக்கண்டவளவிற் காமங்கைம்மிகுதலால், மேகலைசோர நாண்துறந்து உடல்மெலிந்து வளைகழற்சிந்திக் கண்களினின்றுந் தாரைதாரையாய் நீர்பொழிய நின்றனராகி, 'மெல்லியராகிய நம்மிடத்து மனமிரங்கி யருள்புரியாத இவன் அவனிகாப்பதற்குத் தக்கவன் என்பது எப்படி?' என்று மனந்தடுமாறி நடுங்கி, உருவெளித்தோற்றத்தால் இராமன் எங்குந் தோன்றக் கண்டு 'செங்கண்ணும் கரியமேனியுமாகித் தேர்களில் இராமன் எங்குந் தோன்றுகின்றனே; இராமன் என்பார் எத்தனைபேருண்டோ?' என்று வாய்பிதற்றலானர்க ளென்பதாம். செங்கணும் கரியகோலமேனியும்—ஸ்ரீராமோடை. புழைத்த - புழையென்னும் பெயரடியாகப்பிறந்த பெயரெச்சம். எனைவர் என்பது, (எவ்விடங்களிலுந் தோன்றுகின்றவருள்) இராமன் எவரோ என ஒருவரைக்கூறும் பன்மையாகவுமாம். பி-ம்:—[1]தூவுவாரும். [2]உறு. [3]புதைத்த. [4]புண். [5]காமங் கனற்றக் கலுழுவாரும். [6]தோன்றுகின்றன். [7]எனையரோ, எவரோ, [8]என்பான். "அங்கணன்" என்றுதொடங்கும் பாடல்முன்னும், "சுண்ணமும்" என்றுதொடங்கும்பாடல் அதன்பின்னுமாகச் சிலபிரதிகளி லுள்ளன.(உஎந)

அள.—கவிக்கூற்று: அயோத்திமாநகரத்திலுள்ள முனிவர் முதலியோர் ஸ்ரீராமனது திருமேனியைக்கண்டு கூறியதைக் கூறுவோமெனல்.

[1]இனையராய் மகளி ரெல்லா மிரைத்தனர் நிரைத்து [2]மொய்த்தார்
மூனைவரு நகர மூதூர் [3]முதினரு மினாளர் தாமு
மனையவன் மேனி கண்டா ரன்பினுக் கெல்லை காணர்
[4]நினைவினர் மனத்தால் வாயா னிகழ்ந்தது [5]நிகழ்த்த லுற்றும்.

(இ - ள்.) மகளிர் எல்லாம்-மாதரனைவரும், இனையர் ஆய்-இத்தன்மையராகி, இரைத்தனர்-ஒலித்துக்கொண்டு, நிரைத்து-கூட்டமாகி, மொய்த்தார் - நெருங்கினர்; மூனைவர்உம்-முனிவரும், நகரம் முதுஊர் முதினர்உம்-அயோத்திமாநகரமாகிய பழையவூரிலுள்ள மூத்தவரும், இளஞர்தாம் உம் - சிறியவரும், அனையவன் - ஸ்ரீராமனது, மேனி-திருமேனியை, கண்டார்-பார்த்தவராகி, அன்பினுக்கு-(அக்காட்சியாலுண்டாகிய)விருப்பத்திற்கு,எல்லை காணர்-அளவையறியாதவராய், - மனத்தால் நினைவினர் - நெஞ்சிலல்லினைத்தவர்க

ளாய், வாயால் நிகழ்ந்தது-வாயிறற்கூறியதை. நிகழ்த்தல்உற்றும்-சொல்லத் தொடங்குவோம்; (எ - று.)—அவற்றை, மேல் பதினெருகவிகளிற் காண்க.

முதலடியால், கீழ்க்கூறியபொருளைத் தொகுத்து, பின் மூன்றுமடிக ளால் மேல்விரித்துரைக்கும் பொருளைக் காட்டுகின்றன வென்க.முன்னை முனைவரென்பது ஓர்சொல்விழுக்காடாம், முன்னென்பதனை முனையென்ப வாகலின்;இது இப்பொருட்டாதலை:'வினையினீங்கி வினங்கியவறிவின்;முனை வன்கண்டது முதனூலாகும்" என்ற விடத்துங் காண்க: ஆகவே, முனைவர் - சிறந்தவராகிய முனிவரை யுணர்த்திற் றென்க. மூதார் என்றதனால், ஊர் முதியதாயினும், இத்தகைய விழவு புதிய தென்க. சிந்தையும் சொல்லும் ஒரு நிகர்ப்பட்டவரென்பர் 'நினைவினர் மனத்தால் வாயானிகழ்ந்தது' என் றார். நிகழ்ந்தது = நிகழ்த்தியது: அந்தர்பாவித ணிச்சன்பர், வடநூலார். பி-ம்:—[1]இனையரா,இனையன. [2]மொய்க்க, மொய்ப்ப. [3]முதியரும்.[4]நினைவன, நினைவினல். [5]நிகழ்த்துவாம்யாம். (உசு)

அஅ.—இதுமுதற் பதினெருகவிகள் - ஒருதொடர்; முனைவர் முதலியோர் கூறியவற்றைத் தெரிவிக்கும்.

உய்ந்ததிவ் வுலக மென்ப ருழிகாண் கிற்பா ரென்பார்
மைந்தரீ கோடி பெங்கள் வாழ்க்கைகாள் [1]பாவு மென்பா
ரைந்தவித் தரிதிற் செய்த தவமுனக் காக வென்பார்
பைந்[2]துழாய்த் [3]தெரிய லாய்க்கே கல்வினை பயக்க வென்பார்.

(இ - ள்.) (அவர்), இ உலகம் உய்ந்தது என்பார்-'இவ்வுலகம் பிழைத் தீடேறிற்று' என்பவரும்,—ஊழி காண்கிற்பாய் என்பார் - 'யுகமுடிவையும் (இவ்வுலகிலிருந்து) பார்ப்பாயாக' என்பவரும்,—'மைந்த - வீரனே! எங்கள் வாழ்க்கை நாள் யாவும் - எங்களுடைய வாழ்நாளெல்லாம் [ஆயுள்] எல்லாவற் றையும், ஈ கோடி - ஈ (என்னுடையனவாகத்) கொள்வாயாக,' என்பார் - என்பவரும்,—'ஐந்து அவித்து - (புலன்களினிற்செல்கின்ற ஆசை) ஐந்தினையும் அடக்கி, அரிதின் செய்த-அருமையாக(யாம்)செய்த, தவம்-தவத்தின் பயன், உனக்கு ஆக - உனக்குச்சித்தியாகுக,' என்பார்-என்பவரும்,—'பைந் துழாய் தெரியலாய்க்கு ஏ - பசியதிருத்துழாய்மாலையணிந்த உனக்கே, நல் வினை பயக்க-புண்ணியம் பயன் தருவதாகுக,' என்பார் - என்பவரும்,—(எ - று.)

ஊழிகாண்கிற்பாய் என்பதற்கு-யுகமுடிவுகாறும் இவ்வுலகில்தானே வா ழ்ந்திருப்பாயென்றும், ஈகோடியெங்கள் வாழ்க்கைகாள்யாவும் என்பதற்கு-எங் களுடைய ஆயுள்முழுவதையுங் கூடினால் எவ்வளவோ அவ்வளவுகாலம் வாழ் வாயாக என்பதுங்கருத்து. ஐந்துமென்னு முற்றும்மை, விகாரத்தாற்றொக்கது. தவம் உனக்காக என்னுமிடத்து-உனக்குத் தவங் கைகூடுக என்னும் பொரு ளுந் தோன்றுதல் காண்க. பி-ம்:—[1]பலவும்.[2]துணர். [3]தெரியலாற்கே. (உஎ)

கூக. உயரரு ளொண்க [1]ணைக்குந் தாமரை நிறத்தை யொக்கும்
[2]புயல்பொழி மேக மென்ன புண்ணியஞ் [3]செய்த வென்பார்
[4]செயலருந் தவங்கள் செய்திச் செம்மலைத் தந்த [5]செல்வத்
தயரதற் கென்ன கைம்மா றுடையம்[6]யாந் தக்க தென்பார்.

(இ - ள்.) 'உயர் அருள்-மிக்ககருணையையுடைய, ஒள்-ஒண்மையாகிய, கண்-(ஸ்ரீராமனது)திருக்கண்களை,ஒக்கும் போன்ற,தாமரை-தாமரைமலரும், நிறத்தை ஒக்கும்-(அப்பிரானது) நிறத்தைப்போன்ற, புயல் பொழி மேகம் - நீரைப்பெய்கின்ற கார்மேகமும், என்ன புண்ணியம் செய்த-என்ன நல்வினை செய்தன?' என்பார் - என்பவரும்,—'செயல் அரு தவங்கள் செய்து - (பிறராற்) செய்தற்கரிய தவங்களைச்செய்து, இ செம்மலை தந்த - இவ்விராமனைப் பெற்று (இவ்வுலகத்துக்கு)க்கொடுத்த, செல்வம் தயரதற்கு - பாக்கியத்தையுடைய சக்ரவர்த்திக்கு, யாம்—, தக்கது - (அவர்செய்தநன்றிக்குத்) தகுந்ததாகிய, கைம்மாறு - பிரதியுபகாரம், என்ன உடையம் - என்ன உடைத்தாயிருக்கின்றோம்?' என்பார் - என்பவரும்,—(எ - று.)

உபமானப்பொருளாகிய தாமரையையும் மேகத்தையும் இராமபிரானின் திருக்கண்கட்கும் திருமேனிநிறத்துக்கும் உபமேயமாக்கிக்கூறியது - **எதிர்நிலையணி.** புயல்மொழிமேக மென்ன புண்ணியஞ்செய்தது - "மேகங்களோவுரையீர் திருமால்திருமேனியொக்கும், யோகங்க ளுங்களுக்கவ்வாறு பெற்றீருயிரளிப்பான், மாகங்களெல்லாந் திரிந்து ஈண்னீர்கள் சுமந்து நுந்த, மாகங்கள்நோவ வருத்துந் தவமாமருள் பெற்றதே" என்பது, நம்மாழ்வார் பாசுரம். புயல் - நீருக்கு, இலக்கணை. **பி-பி:**—[1]ஏய்க்குந். [2]புயலணி. [3]செய்தது. [4]செயறரும். [5]தெய்வத். [6]நாததக்க. இச்செய்யுள் சிலபிரதிகளில் "நீலமாமுகிலனை" (கூக) என்ற பாடலுக்குப் பின் உள்ளது. (உஎசு)

கூ0. வாரண மரற்ற வந்து [1] காவுயிர் மாற்று நேமி
நாரண [2]ணைக்கு மிந்த நம்பிதன் [3]கருணை யென்பா
ராரண மறித றேற்ரு வையனை [4]யணுகி நோக்கிக்
காரண மின்றி யேயுங் கண்கணீர் கலுழ நிற்பார்.

(இ-ள்.) 'இந்த நம்பிதன் கருணை-இவ்விராமபிரானது திருவருள், வாரணம் அரற்ற - கஜேந்திரன் (ஆதிமூலமேயென்றுகூவி) அழைக்க, வந்து - (உடனே அங்கு) ஓடிவந்துதோன்றி, கரா உயிர் மாற்றும்-முதலையினதுஉயிரைப் போக்கின, நேமி-சக்கரத்தையுடைய, நாரணன் (கருணை)-ஸ்ரீமந்நாராயணனது திருவருளை, ஒக்கும்-,'என்பார்-என்பவர்களும்,—ஆரணம் அறிதல் தேற்ரு-வேதங்களாலும் (இனையனென்று) அறிதல்கூடாத,ஐயனை - ஸ்ரீராமனை,அணுகி-சமீபித்து, நோக்கி-பார்த்து, காரணம் இன்றியே உம்-எதுவில்லாமலும், கண்கள் நீர் கலுழ - கண்கள் நீரைச்சிந்தும்படி, நிற்பார்-நிற்பவரும்.

பலவிடத்தும் ஸ்ரீராமபிரானை வாரணமழைக்கவந்து உதவியவனென்று பாராட்டிக்கூறுவர். இராமனைக் கண்டமாத்திரத்தில் அவர்கட்கு உவகைக் கண்ணீர் பெருகிற்றென்க. நாரணன் - திருமால்: நாராயணன் என்பதன் சிதைவு; நாரம்=பிரளயப் பெருங்கடனீர்; அதனை இருப்பிடமாகக் கொண்டவன்: எல்லாமழிந்தபோதும் மிகுந்திருக்குங் காரணக்கடவுளென்பது கருத்து. சகலநற்குணக்களுமுடையவ னென்றும், சகல ஆத்மாக்களுக்கும் உள்ளத் திருப்பவனும் இடமாயிருப்பவனுமென்றும், நித்யவஸ்துக்களினுடைய திரளுக்கு ஆஸ்ரயமாயிருப்பவ னென்றும், அவற்றை ஆஸ்ரயமாகவுடையவ னென்றும் இவ்வாறு பலபொருள்களும் சாஸ்திரங்களிற் சொல்லப்படும். கீர்-ஆநந்தபாஷ்பம். பி - ம்:—[1]கராங்கொலமடுத்த, மகரங்கோள்விடுத்த. [2]ஒக்கு மேயிந். [3]கருணைக்கு. [4]அணுக நோக்கிக், அணுகி நோக்காக். (உஎஎ)

கூக. நீலமா [1]முகில னென்ற [2]னிறைவிமே டறிவு [3]நிற்க
சீலமார்க் குண்டு கெட்டேன் [4]றேவரி னடங்கு வாமே
காலமாக் [5]கணிக்கு நுண்மைக் கணக்கையுங் கடந்து நின்ற
மூலமாய் முடிவி லாத [6]மூர்த்தியும் [7]முன்ப னென்பார்.

(இ - ள்.) 'நீலம் மா முகில் அனைன்தன் - கரிய பெரியமேகத்தை யொத்த ஸ்ரீராமனது, நிறைவிமேடு-நிறைவோடு, அறிவும்-புத்தியும், நிற்க-ஒருபுறத்து நிற்க, சீலம் - (அவனது) சீலகுணம், ஆர்க்கு உண்டு - எவருக்குத்தான்உண்டு? [ஒருவர்க்குமில்லை]; காலம் ஆ கணிக்கும் - பலகாலமாக எண்ணுகின்ற, நுண்மை கணக்கையும் - நுட்பமாகிய எண்களையும், கடந்து நின்ற - தாண்டிநின்ற, மூலம் ஆய் - ஆதிமூலமாகி, முடிவு இலாத - அழிவில்லாத, மூர்த்தி - ஸ்ரீமந்நாராயணனுடைய விசேஷதாவதாரமான, இ முன்பன் - இத்தஸ்ரீராமபிரான், தேவரின் - (காலக்கணக்கைக் கடவாது நின்று ஆதியந்தங்களை யுடைய) தேவர்களுள், அடங்குவான்ஓ - ஒருவனாக அமைவானோ? [அமையான்]; கெட்டேன் - (இம்மெய்ப்பொருளையறியாது) இது காறுங்கெட்டேன்,' என்பார் - என்பவர்களும்.—(எ - று.)

இவனைக்கண்டவரிற் சிலர் 'நிறைவு அறிவுஎன்ற குணங்கள் கிடக்கட்டும்: இவனது சீலகுணம் யாருக்குஉண்டு? எவருக்கும் இராது'எனப்புகழ்ந்து, அவனது குணநிறைவைக்கண்டு 'இவன் மானுடரிற் சேர்ந்தவனல்லன்: தேவரிற் சேர்ந்தவனோ?' என்று ஐயுற்று, 'மும்மூர்த்திகளில் முதன்மூர்த்தி யாகிய திருமாலே இவன்' என்று துணிந்து கூறின ரென்க. நிறைவு - திருப்தி. சீலமாவது - தான் மிக மேம்பட்டவனாயிருந்தும் மிகத்தாழ்ந்தாரோ டும் வேற்றுமையின்றி நடத்தல். ஆர்க்கென்னும் வினை இன்மைகுறித்து நின்றது. 'கெட்டேன்' என்றது, துயரமிகுதியாலே கைச்சொரித்துச்சொல்லும் வார்த்தை; "கேளாராயர்குலத்தவரிப்பழி கெட்டேன் வாழவில்லை" என்று பெரியாழ்வார்பாசுரத்து வருதலுங் காண்க. ஆதியந்தமில்லாதவனென்பார், 'மூலமாய் முடிவிலாத மூர்த்தி' என்றார். முன்பன் - முதல்வன். பி - ம்:—[1]முகிலனென்றம், முகிலினென்றன். [2]நிறையிமேடு. [3]நிற்கச், நீக்கச். [4]தேவரில். [5]குணித்த, குணிக்கும். [6]மூர்த்தியாம். [7]மொய்ம்பன், முதல்வன் (உஎஅ)

கூஉ. ஆர்கலி யகழ்ந்தோர் கங்கை யவனியிற் [1]கொணர்ந்தோர் முந்தை
போர்கெழு [2]புலவர்க் காகி யசுரரைப் பொருது வென்றோர் [ப்
பேர்கெழு சிறப்பின் வந்த பெரும்புகழ் நிற்ப தையன்
ரூர்கெழு திரடோ டுந்த புகழினைத் தழுவி யென்பார்.

(இ - ள்.) 'ஆர்கலி அகழ்ந்தோர்-கடலைத் தோண்டினவர்க்கும், கங்கை அவனியில் கொணர்ந்தோர் - ஆகாசகங்கையைப் பூலோகத்திற் கொண்டுவந்தவர்க்கும், முந்தை - பழமையாகிய, போர் கெழு புலவர்க்கு ஆகி - யுத்தத்தில் விளங்குகின்ற தேவர்நிமித்தமாக, அசுரரை - அவுணரை, பொருது வென்றோர் - போர்செய்து வென்றவர்க்கும், பேர் கெழு சிறப்பின் - பெயர் விளங்குகின்ற மேன்மையோடு, வந்த - உண்டாகிய, பெரு புகழ் - மிக்க கீர்த்தி, நிற்பது - நிலைநிற்பது;—ஐயன் - ஸ்ரீராமனது, தார் கெழு திரள் தோள்-வெற்றிமாலை விளங்குகின்ற புயங்கள், தந்த-உண்டாக்கிய, புகழினை-கீர்த்தியை, தழுவி - தழுவியே,' என்பார் - என்பவர்களும்,—(எ - று.)

ஆர்கலி அகழ்ந்தவர் - சகரபுத்திரர். கங்கை கொணர்ந்தவர் - பகீரதன். அசுரரை வென்றவர்-ககுத்தன், முசுகுந்தன் முதலியோர். 'அவனியில் இராமன் பிறந்தது எப்படிப்பட்ட குலத்திலே?' என்று விஸ்வாமித்திரர் நிகழ்கையில், ஆர்கலியகழ்ந்தோர் முதலியோர் தோன்றிய குலத்தி லென்று விடையளிக்க வேண்டியிருத்தலின், ஆர்கலியகழ்ந்தோர்...பெரும்புகழ் நிற்பதையன்...திரடோள்தந்த புகழினைத் தழுவியென்க. மகாவீரனை ஸ்ரீராமன் இராவணனைச்சங்காரித்த வீரச்செயலைக் கூறுவதாகிய ஸ்ரீராமாயணத்தாலேயே சகரர் முதலியோரின் பெரும்புகழ் நிலைநிற்பதும் இங்குக் கருதத்தக்கது. ஆழ்கடலகழ்ந்தோர் முதலியோரின் புகழ்களாகிய பூங்கொடிகளுக்கு, இவன்புகழ் கொள்கொம்பாகு மென்க. "இரவியென்பான்றன் புகழ்க்கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்குமாபோன், மன்புகழ் பெருமைநுங்கண்மரபினோர் புகழ்களெல்லா, முன்புகழாக்கிக்கொண்டாய்" எனக் குகப்படலத்துவருவது இங்குக்காணத்தக்கது: புலவர் - அறிவினையுடையவர்: புலமை-அறிவு; இது, விபுதர்என்னும் வடமொழியின் மொழிபெயர்ப்பு. அஸுரர் - சுரர்க்குப்பகைவர்: ஸுரர் - தேவர்; அமிருதத்தையுடையவர்; ஸுரா - அமிருதம். அஸுரர் என்பதற்குப் பகைவருயிரைக் கவர்பவரெனவும் பொருளாம். இக்கவியிற் குறிக்கப்பட்ட கதைகளைக் கீழ்ப்பாலகாண்டத்திற் குலமுறைகளத்துபடலத்தில், "இடரோட்ட," "தாங்கின்ற," "தான்றனக்கு", "மறைமன்னு" என்னுங் கவிகளிற்காண்க. பி - ம்:—[1]தந்தோர். [2]தேவர்க்காகி, தேவர்க்காக. ()

வேறு.

கூகூ. சந்தமிலை தாவின்மணி யார[1]மிலை யாவுஞ்
சிந்துர[2]பூ மிங்கிலை [3]செறிந்த மத[4]வேழப்
[5]பந்திகள் வடப்பரி [6]பசும்பொனின் வெறுக்கை
[7]யைந்தவறி யோர்கொள வழங்கென நிரைப்பார்.

(இ - ள்.) 'இவை—, சந்தம் - சந்தனங்கள்; இவை—தா இல் மணி ஆரம் - குற்றமில்லாத நவரத்நஹாரங்கள்; இங்கு இவை-இவ்விடத்திலுள்ள இவை, சிந்துரம்உம் - திலகமும், யாஉம் - மற்றைஎல்லா அணிகளும், செறிந்த - பொருந்திய, மதம் வேழம் பந்திகள் - மதயானைவரிசைகள்; வயம் பரி - வெற்றியையுடைய குதிரைகள்; பசு பொனின் வெறுக்கை - பசும்பொன்னு கிய செல்வங்கள்; (இவற்றை), மைந்த - வீரனே! வறியோர் கொள-பொருளில்லாத எழைகள் பெற்றுக்கொள்ளும்படி, வழங்கு - தானஞ்செய்', என - என்று, நிரைப்பார் - ஒழுங்காய்வைப்பவரும்,—(எ - று.)

ஸ்ரீராமனுக்கு நன்மைவிளையவேணு மென்ற கருத்துக் கொண்ட சிலர் அப்பிரானது மகுடாபிஷேககாலத்தில் தம்முடைய பொருளான சந்தனம் முதலியவற்றை அப்பிரான்கையைக்கொண்டு வறியவர்க்குக் கொடுப்பிக்க விரும்பின ரென்க. சந்தம் - சந்தநத்தின்சிதையு. 'இவை' என்ற சொல்லைப் பிறவிடத்துங் கூட்டுக. பந்தி - பங்க்தி என்பதன்சிதையு. "வரியார்க்கொன் றீவதேயீகைமற்றெல்லாங், குறியெதிர்ப்பைநீரதுடைத்து" என்பவாகலான், 'வறியோர்கொள வழங்கு' என்றார். பி - டீ:—[1]அவை தாமம். [2]முகங்கினர். [3]தெரிந்த. [4]வேழம். [5]பந்தமுவையங்களவை, பந்தனல்வயங்குறு, பந்தமும்வயங் கொளி, பந்திகள்வயங்குறு. [6]பசுஞ்சுடர். [7]மைந்தர். (உஅ0)

கூச. மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு [1]போழ்திற்
றன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்
கன்புருகு [2]சிந்தையொடு மாவுருகு டாபோ
லென்புருகி [3]நெஞ்சுருகி னைந்துருகி [4]நிற்பார்.

(இ - ள்.) மின் பொருவு தேரின்மிசை - மின்னலை யொத்த இரதத் தின்மேல், வீரன் வரு போழ்தில் - ஸ்ரீராமன் வருங்காலத்தில்,—ஆ - பசு வானது, தன் பொருவு இல் கன்று - தனது ஒப்பில்லாத கன்று, தனி - துணையில்லாமல், தாவி வரல் - குதித்துவருதலை, கண்ட ஆங்கு - பார்த்த அப்பொழுது, அன்பு உருகு சிந்தையொடும்-அன்பினாற் கரைகின்ற மனத் தோடும், உருகும் - இரங்குகின்ற, ஆ போல் - விதம்போல, என்பு உருகி - உடம்பு கரைந்து, நெஞ்சு உருக இனைந்து உருகி - மனம்நீராக வருந்தி கரைந்து, நிற்பார் - நிற்பவரும்,—(எ - று.)

"மாதர்கள்கற்பின்மிக்கார் கோசலைதன்னையொத்தார்" என்று கீழ்க் கூறியதை 'கன்றுதனிதாவிவரல்கண்டுஅன்புருகுசிந்தையொடுமாவுருகுமா போல்' என்றுஉவமை முகத்தால் விளக்கினார். நெஞ்சுருக × இனைந்து என் பது நெஞ்சுருகினைந்து என அகரம் தொக்குவந்தது. பின்னிரண்டடிகளில், உருகுதல்என்ற சொல் பன்முறைவந்தது - சொற்பொருட்பின்வருநிலையணி யாம். மின் - ஒளிக்கும், விரைவிற்கண்டுங் காணப்படாத தன்மைக்கும் உவமை. ஆ - ஆறுஎன்பதன் விகாரம். என்பு - ஆகுபெயர்; "அன்புடையா, ரென்புமுரியர் பிறர்க்கு" என்புழிப்போல. பி - டீ:—[1]போதிற். [2]சிந்தையி னெடு. [3]நெஞ்சுருகிநஞ்சுருகி. [4]நில்லார். (உஅக)

கூடு. சத்திர நிழற்றநிமிர் தாணையொடு நாலு
வத்திர நிழற்றவரு ளோடவனி யாள்வார்
புத்திர னினிப்பெறுதல் புல்லிதென நல்லோர்
சித்திர மெனத்தனி திகைத்துருகி நிற்பார்.

(இ-ள்.) நல்லோர்-நற்குணமுடையவர், சத்திரம் நிழற்ற-குடை நிழலிடச் செய்யவும், நிமிர் தாணையொடும்-விளங்குகின்ற சேனையுடன், நாலு அத்திரம்-பலபடைகளும், நிழற்ற-ஒளியைச்செய்யவும், அருளோடு-கருணையுடன், அவனி ஆள்வார்-பூமியை யாள்கின்ற அரசர், 'இனி-ஸ்ரீராமன்பிறந்தபின்பு, புத்திரர் - மைந்தர்களை, பெறுதல் - பெறுவது, புல்லிது - சிறுமையையுடையது,' என - என்றுசொல்லி, திகைத்து,—சித்திரம் என - ஓவியப்பாவை போல, தனி - தனித்தனியாக, உருகிநிற்பார்-உருகிநிற்பவர்களும்,—(எ-று.)

இராமனைப்போன்று வடிவு அழகு குணம் முதலியயாவும் நேர்பட்டுள்ள புத்திரரைப்பெறுவது அவனியாள்வார்க்கு இயையாதாதலாலும், அங்ஙனம் நற்குணம்நிரம்பாதபுதல்வரைப்பெற்றால் 'இவ்வரசன்தசரதனைப்போலநற்குணம்நிரம்பிய புதல்வனைப் பெற்றானே?' என்று உலகத்தாரால் வம்பளக்கப்படுமாதலாலும், 'அவனியாள்வார் புத்திரரினிப்பெறுதல்புல்லிது' என்றார்: இதில் - இராமனுடையகுணத்தால் அவனியாள்வார்க்குப் புத்திரரைப்பெறுவது புல்லிது என ஒன்றன்குணத்தால் மற்றொன்றிற்குக் குறைவுகூறியது; **அகமலர்ச்சியணியாம்:** வடமொழியில் உல்லாஸாலங்காரமெனப்படும். சத்திரம் - சத்ரம். அத்திரம் - அஸ்த்ரம்; வடசொற்கள். அத்திரங்கள் - எய்வன, எறிவன, குத்துவன, வெட்டுவன எனப் பலவேறுவகைப்படுதலால், 'நாலு வத்திரம்'என்றார். நிழல் - சாயை, ஒளி என்று இருபொருளுமுடையதாகையால், நிழற்ற என்பதற்கு - நிழலிடச்செய்ய, ஒளிசெய்யஎன்று வெவ்வேறு பொருள்உரைக்கப்பட்டன. இக்கவியிலுள்ள நல்லோர்என்பது "உய்ந்ததிவ்வுலகம்" (அ) என்னுங் கவிமுதல் "பாவமும் அறனும்" (கூ) என்னுந் தொடையும் ஒருதொடராக நின்ற கவிகளுக்கு எழுவாயாகநின்றது; இதை, ஆள்வார்க்கு அடையாக்குதலும், நல்லதொரு சித்திர மென்று இயைத்துரைத்தலும், முதியமகளிரென்றலுமாம். (உஅஉ)

கூசு. கார்மிடை மினாயதென நூல்[1]கரு மார்பன்
றேர்மிசைநம் [2]வாயில்கடி தேகுதல்செய் வாறே
[3]கூர்ங்கன காசியொடு கோடிமணி யாலுந்
தூர்மினெடு வீதியிசை யென்றுசொரி வாரும்.

(இ - ள்.) கார் - கார்காலத்துமேகம், மிடை-மின்னலோடு, உலாயது என - பொருந்தி விளங்கியதன்மைபோல, நூல் கருமும் மார்பன் - முப்புரிநூல்விளங்குகின்றமார்பினையுடைய ஸ்ரீராமன்,நம் வாயில்-நமது வீட்டுவாயில் வழியாக, தேர்மிசை-தேரின்மேல், கடிது-விரைவாக, ஏகுதல் செய்வாறே - போய்விடுவானே?(அத்தேரைத்தடுத்தற்காக), கூர் கனகம் காசியொடு - மிக்க

பொற்குவியலோடு, கோடி மணியால்உம் - பலரத்தினங்களாலும், நெடு வீதியினை - பெரியதெருவை, தூர்மின் - நிரப்புங்கள், என்று - என்றுசொல்லிக் கொண்டு, சொரிவார்உம் - (அவற்றை) மிகப்பொழிபவரும்,—(எ - று.)

இராமபிரான் கடிதுசென்றால் அவனதுவடிவழகைக்கண்குகாணமுடியாதாதலால் அவனதுதேர் விரைந்துசெல்லமுடியாதபடி கனகம்முதலியவற்றைத் தேர்செல்லும் நெறியிடையே தூர்மினென்று சொல்லிபவண்ணம் கனகராசி முதலியவற்றைச் சிலர் பொழிந்துவைத்தனரென்க. கார் - கரியதிருமார்பிற்கும்,மின்-யஜ்ஞோபவீதத்திற்கும் உவமை. "அத்தனைனர்க் குரியவுமரசர்க், கொன்றியவரூஉம் பொருளுமாருளவே" என்றதனால், தல்கூறினர். பி-ம்:—[1]கனலும். [2]ஷாயல். [3]கோர்மினிமின்கோடுமணிபாலுக்திபாலும். (உஅக)

கூஎ. தாய்கையில் வளர்க்திலன் [1]வளர்த்தது தவத்தாற்
கேகயன் மடந்தைகிளர் ஞாலமிவ [2]ளை
வீகையி [3]லுவந்தன னியற்கையிது [4]வென்றுற்
றோகை[5]யவள் பேருவகை [6]சொல்லலரி தென்பார்.

(இ-ள்.)'(ஸ்ரீராமன்).தாய் கையில் வளர்க்திலன்-பெற்றதாயாகிய கௌசல்யையினுடைய கையிலே வளர்த்தானில்லை;வளர்த்தது-(இவனைப்பின்னை) வளர்த்தது (யாரெனில்).தவத்தால்-(முற்பிறவியிற்செய்த)தவப்பயனால், கேகயன் மடந்தை-கைகேயி யாவள்:(அதனால்தான் அவள்),கிளர் ஞாலம்-விளங்குகின்ற உலகத்தை, இவன் ஆள - இவன்அரசாளுதற்பொருட்டு, தகையில்-கொடுத்தலில், உவந்தனள் - மகிழ்ந்தாள்: இயற்கை - அவளியல்பு; இது என்றால் - இதுவாதலால், தோகையவள் - அக்கைகேயியினது, பேர் உவகை - பெருங்களிப்பு, சொல்லல் - சொல்லுதல், அரிது-அருமையையுடையது,' என்பார்-என்பவர்களும்,—(எ - று.)

இவன் கோசலையால் வளர்க்கப்படாமல் பூர்வபுண்ணியத்தாற் கைகேயி வளர்க்க வளர்ந்தான்; அதனால்தான் கைகேயி, இவனுக்கு இராச்சியத்தைக் கொடுப்பதில்உவகைகொண்டிருக்கிறாள்:ஆகவே, அவளை இராமனுக்குத்தாயாதலால், அவளைப்போன்ற மகிழ்ச்சி இராமபட்டாபிஷேகத்தில் வேறுயாவர்க்கு உண்டு? என்று சிலமாத்தர் கூறினரென்க. வளர்த்தது தவத்தாற் கேகயன் மடந்தை-பாதிவ்ரத்யோகம். பி-ம்:—[1]வளர்த்தது. [2]ஆன்மானைகயின். [3]உவந்தமனியற்கை, உவந்தவனியற்கை, உவந்ததமியற்கை. [4]என்றோ. [5]இவள். [6]சொல்ல. (உஅக)

கூஏ. பாவமு மருந்துயரும் மேவற்றி யென்பார்
பூவலய மின்று[1]தனி யன்றுபொது வென்பார்
தேவர்பகை [2]யுள்ளனவிவ் வள்ளறிறு வென்பா
ரேவல்செயு மன்னர்தவம் யாவதுகொ லென்பார்.

(இ-ள்.)'பாவம்உம்-தீவினையும்,அருதுயர்உம்-நீக்குதற்கரியபிறவித்துன்பங்களும், மேவர் பறியும்-அடியோடுகெடும்,' என்பார்-என்பவர்களும்,—பூவல

யம் - பூமண்டலம், இன்று - இப்பொழுது, தனி அன்று - (ஸ்ரீராமனொரு வனுக்கே) தனிமையாயுரியது அன்று: பொது-(எல்லார்க்கும்) பொதுவாகும்,' என்பார் - என்பவர்களும்,— 'தேவர் பகை உள்ளன - தேவர்க்குப்பகைவரா யுள்ள அரக்கர்கூட்டங்களை, இவ்வள்ல்-இவன், தெறும்-அழிப்பான்,' என் பார் - என்பவர்களும்,—'ஏவல் செயும்-(இவன்)ஏவினபணிகளைப்புரிந்துவரு கின்ற, மன்னர் - அரசரது, தவம் - நல்வினை, யாவது கொல் - எத்தன்மை யையுடையதோ?' என்பார் - என்பவரும், (ஆயினர்); (எ - று.)

இவனைப் பார்த்தமாத்திரத்திலேயே நம்முடைய பாவமுத்துயருந் தீரு மென்றூர் சிலரென்க; புண்ணியபுருஷரைத்தரிசித்தலால் பாவம் நீங்குமென் பது,நூற்கொள்கை.இதற்குமுன் ஆட்சிபுரிந்த அரசர்போலவல்லாமல் இவன் ஆட்சிபுரிகையில்உலகத்திலுள்ளஒவ்வொருத்தருடையகுறைகளையும் வினவி, அவரவர் தாமேஅரசுபுரிந்தால்எங்ஙனம் நன்மையைப்பெறலாமோ அங்ஙனம் நன்மையைப் பெறுமாறுசெய்யுந் தன்மைய னென்றுஉணர்ந்ததனால்,'பூவலய மின்று தனி யன்று பொது' என்பா ராயினர் சில ரென்க. அன்று பொது என்றதற்கு, இவன்பிறவாதவன்று பொது வென்றும் பொருள் கூறலாம். இச்செய்யுளில் 'ஆயினர்' என்று முற்றுவினைச்சொல்வருவித்து, "உய்ந்த திவ்வுல்கம்"என்றபாடல் முதலுள்ளஎன்பார் முதலியவற்றை ஒன்றுசேர்த்து, உம்என்னும் இடைச்சொல்லையும்உடன்பெய்து, "சத்திரநிழற்ற" (கரு) என் னுங்கவியிலுள்ள'நல்லோர்'என்பதை எழுவாயாகக்கொண்டு,நல்லோர் (கரு). என்பாரும் என்பாரும்என்பாரும் என்பாரும் (அஅ); என்பாரும், என்பாரும் (அக), என்பாரும் நிற்பாரும் (கo),என்பாரும் (கக),என்பாரும் (கஉ), நிரை ப்பாரும் (கங), உருகிநிற்பாரும் (கச), உருகிநிற்பாரும் (கரு), சொரிவாரும் (கசு), என்பாரும் (கள), என்பாரும் (ஆயினர்) (கஅ) என்று முடிக்க. பகை, ஏவல் - ஆகுபெயர்கள். பி-ம்:—[1]முதல். [2]உள்ளவும், உள்ளனவும், உள்ள வமிவ்.

(உ அரு)

கக கக.—ஸ்ரீராமன் மன்னவன் அரண்மனையிற் புகுதல்.

ஆண்டினைய ராயினைய கூறவடல் வீரன்
றாண்டுபுர விப்பொருவில் சுந்தர மணித்தேர்
[1]நீண்டகொடி மாட[2]நிரை வீதி[3]நிறை யப்பரப்பி
யூண்டபுகழ் மன்னனுறை கோயில்புக லோடும்.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) (நகரத்தாரனைவரும்),ஆண்டு-அப்பொழுது; இனையர் ஆய் இத்-தன்மையையுடையராய்; இனைய-இத்தன்மையனவற்றை, கூற - சொல்லிக் கொண்டிருக்க,—அடல் வீரன்-வெற்றியையுடைய ஸ்ரீராமன்,தாண்டு புரவி-(சுமந்திரனுற்) செலுத்தப்பட்ட குதிரைகளையுடைய, பொருவு இல் - ஒப்பில் லாத, சுந்தரம் மணி தேர் - அழகிய நவரத்நங்களிழைத்த இரதத்தில், நீண்ட கொடி மாடம் நிரை-உயர்ந்த துவசங்களையுடைய மாளிகைகளிலெழுந்தினை

யுடைய, வீதி - தெரு, நிறைய - பூர்ணமாகும்படி, போய்—, பூண்ட புகழ் மன்னன் - (அணிகலமாக) அணிந்த கீர்த்தியையுடைய சக்ரவர்த்தி, உறை - வசிக்கின்ற, கோயில் - அரண்மனையை, புகலோடும் - அடைந்தவளவில்,— (எ - று.)—"காணுன்" என அடுத்த கவியோடு முடியும்.

இனைய - பெயர். புகலோடும் - உம்மீற்றுவினையெச்சம். பி - ம்:—[1]மாண்ட. [2]நெடு. [3]மறைய. (உசுசு)

வேறு.

கஂஂ.—ஸ்ரீராமன் அங்த மன்னவனைக் காணுமை.

ஆங்குவந் தடைந்த [1]வண்ண [2]லாசையின் கவரி [3]வீசப்
பூங்[4]குழன் மகளி ருள்ளம் புதுக்களி [5]பாட நோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரிமுகக் கமல பீடத்
[6]தோங்கிய மகுடஞ் சூடி யுவகைவீற் றிருப்பக் [7]காணன்.

(இ - ள்.) பூ குழல் மகளிர்-பூவைமுடித்த கூந்தலையுடைய மாதர், ஆசையின் கவரி வீச - அன்போடு சாமரங்களை வீசவும். உள்ளம் - (அவரது) மனம், புது களி ஆட-புதிய களிப்புப் பொருந்தவும், ஆங்கு வந்து அடைந்த அண்ணல் - அங்குவந்து சேர்ந்த அந்த ஸ்ரீராமன், நோக்கி - (அவ்விடத்தில்) பார்த்து, வீங்கு - (மேன் மேலும்) வளர்கின்ற, இரு காதல்-மிக்க அன்பை, காட்டி - வெளிப்படுத்தி, விரி முகம் - விளக்குகின்ற இடத்தினையுடைய, கமல பீடத்து - பதுமசிங்காசனத்தில், ஓங்கிய மகுடம் சூடி - உயர்ந்த கிரீடத்தைச் சூட்டிக்கொண்டு, உவகை வீற்றிருப்ப-களிப்போடு (அச்சை) மகிழ்ந்திருக்க, காணுன் - காணுத்வனுகி,—(எ - று.)—"கோயில்புக்கான்" எனஅடுத்த கவியோடு இயையும்.

இராமபிரான் அக்குவந்து தசரதன் மகிழ்ச்சியோடி அவ்விடத்து இருப்பதைக் காணுதவளுயின னென்றவாறு. "நித்தமைதாலு மாங்கே னொணர் கெனச் செப்பினுள்" என்று சுமந்திரன் சொன்னதைக் கேட்டுப் புறப்பட்ட இராமன், தசரதனுடன் கைகேயி அரசமாளிகையிலிருந்து தன்னை வரச் சொன்னதாகக் கருதிவருதலால் அங்கே பார்த்துத் தன் தந்தை உவகையோடு அங்குஇருப்பதைக் காணுதவளுயினனென்ற குறிப்பினால், கண்டான்என்ற பாடத்தைக்கொண்டு, கைகேசியின் அந்தப்புரத்திற்குச் செல்லும்போது தசரதனரண்மனை வழியாகச் செல்லவேண்டியிருத்தலுபற்றி அவ்வரண்மனைவழியாகச்சென்ற இராமன் கவரிவீசலையும் புதுக்களியாடலையும் நோக்கி, அங்கே மகுடாபிஷேகஞ் காணவந்த மன்னர் முதலியோர் காதல்காட்டித் தம்முடைய முகமாகிய கமலபீடத்திலே உவகையென்பது தான் மகுடஞ்சூடி [தசரதனை லுத்தி]வீற்றிருப்பதைக் கண்டா னென்று உரைத்து, பட்டாபிஷேகத்தைஎப் போது காணப்போகின்றோமென்ற பேராவலோடு மன்னவர் முதலிய யாவரும் பெருமகிழ்ச்சிகொண்டிருந்ததைக்கண்டா னென்று கருத்துக்கூறல் பொருந்தும். காணுன் என்ற பாடத்துக்கே - மன்னர் முதலியோர் மகிழ்ச்சியோடு வீற்றிருப்பதைக் கண்ணெடுத்துப் பாராதவனுய் என்று உரைத்தல் நேரிதா

கும். ஆசையின் கவரி வீச என்பதற்கு - திசைகள்தோறும் கவரிவீச என்றும் பொருளுரைக்கலாம். விரிதல் - பரத்தலுமாம். கமலபீடம் - வடநூன்முடிபு. பி - ம்:—[1]வீரன். [2]ஆசைமின். [3]வீசி. [4]குழை. [5]ஆட்ட, ஆடல். [6]ஓங்கருள். பின் மூன்றடிகளை 'பூங்குழன் மகளிரோடும் புதுக்களியாட்ட நோக்கி, வீங் கிருங் காதல்காட்டி வியனரி சுமந்தபீடத், தோங்கிய வுவகையோடு மரசன் வீற்றிருப்பக்காணன்' என்று படிப்பாரு முளர். (உஅள)

கoக.—ஸ்ரீராமன் கைகேயியின் அரண்மனையிற் புகுதல்.

வேத்தவை முனிவ ரோடு விருப்பொடு களிக்கு மெய்ம்மை
யேத்தவை யிசைசக்குஞ் செம்பொன் [1]மண்டப மினிதினெய்தா
ஞேத்தவை யுலகத் தெங்கு முள்ளவை [2]யுணர்ந்தா ருள்ளம்
[3]பூத்தவை வடிவை யொப்பான் சிற்றவை கோயில் புக்கான்.

(இ - ள்.) ஓத்து அவை - வேதங்களையும், உலகத்து எங்குஉம் உள் ளவை - லோகத்தில் மற்றுமுள்ள நூல்களையும், உணர்ந்தார்-அறிந்தஞானிய ருடைய, உள்ளம் - மனத்தில், பூத்தவை - மலர்ந்தனவாகிய, வடிவை-உரு வத்தை, ஒப்பான்-மனமொத்துக் கொள்பவனுகிய ஸ்ரீராமன்,—முனிவரோடு வேத்தவை - இருடியரும் அரசர்கூட்டமும், விருப்பொடு - அன்புடன், களிக் கும் - மகிழ்கின்ற, மெய்ம்மை எத்துஅவை இசைக்கும் - உண்மையாகிய புகழை யெடுத்துச் சொல்லுகின்ற, செம் பொன் மண்டபம் - செம்பொன் மயமாகிய சபாமண்டபத்தை, இனிதின் - இனிமையாக, எய்தான் - அடை யாதவனுகி,—சிற்றவை - சிறியதாயாகிய கைகேயியினுடைய, கோயில்-மாளி கையை, புக்கான் - போய்ப் பிரவேசித்தான்; (எ - று.)

அரசர்கூட்டமும் முனிவரும் தன்புகழைச் சொல்லிக்கொண்டு மகிழ்ச்சி யோடு பட்டாபிஷேகமகோத்ஸவத்தை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிற மண்டபத்திற் புகாமல் ஸ்ரீராமன் கைகேயியின்மாளிகையை யடைந்தன னென்க. உலகத்தெங்கு முள்ளவை - வேதந்தவிர ஆறங்கங்களும் மீமாம்ஸா ந்யாய புராண தர்மசாஸ்திரங்களும் மற்றுமுள்ள ஞானத்தை யுண்டாக்குங் கலைகளும். உணர்ந்தாருள்ளம்பூத்தவைவடிவைஒப்பான் — "தமருகந்த தெவ்வுருவமவ்வுருவந்தானே" என்றும், பெரியாரும். இனி; ஞானிகள் தியானிக்கின்றவடிவைக்கொண்டு அவர்மனத்துத் தோன்றுபவனெனினும், உள்ளும் பூத்த ஐ வடிவைஒப்பான் - உள்ளத்திற்பூத்த (பரம் வியூகம் விபவம் அந்தர்யாமி அர்ச்சை என்ற) ஐவகைவடிவும் அமைந்திருக்கப்பெற்றவ னெனினுமாம். அண்ணல் (கoo), ஒப்பான் என்பன - சுட்டுமாத்திரையாம். வேத்தவை - மென்றொடர் வன்றொடராயிற்று. எய்தான் - எதிர்மறை முற்றெச்சம். எத்தவை, ஓத்தவை, அவை - பகுதிப்பொருள்விகுதி. எத்து - முதனிலைத்தொழிற்பெயர். ஓத்து - ஓதப்படுவது. பூத்தவை - வினையா லணையும்பெயர். பி - ம்:—[1]மண்டபத்தினிதில், மண்டபமதனின். [2]உணர்ந் தாவுள்ளம், உணர்ந்தாணுள்ளம், உணர்ந்தோனுள்ளம். [3]பூத்தவை வடிவே யொப்பான், பூத்தவைவடிவைபொக்கும், பூத்தவை வடிவே லொக்கும். (உஅஅ)

க02.—இராமன் கைகேயியி னரண்மனையிற் சென்றதை வந்திருந்த புரவலர் முதலியோர் பாராட்டுதல்.

புக்கவன் றன்னை நோக்கிப் புரவலர் முனிவர் [1]யாருந்
[2]தக்கதே நினைந்தான் றுணை தாமரைச் சரணஞ் சூடிக்
[3]திக்கினி [4]னிமிர்ந்த [5]கோலச் [6]செங்கதிர்ச் செல்வ னேய்ந்த
மிக்குயர் மகுடஞ் சூட்டச் சூடுதல் விழுமி தென்றார்.

(இ - ள்.) புக்கவன் தன்னை-பிரவேசித்த ஸ்ரீராமனை, நோக்கி—, புரவலர்-அரசரும், முனிவர்-இருடியரும், யார்உம்-எல்லோரும், 'தக்கது எனினைத்தான்-(ஸ்ரீராமன்) தகுந்ததாழிலையே எண்ணினான்; (எப்படியெனில்), தாளை-தகப்பனுரை, தாமரை சரணம் - திருவடித் தாமரைகளை, சூடி-தலையிலணிந்து [வணங்கிவிட்டு], (பிறகு), திக்கினில் நிமிர்ந்த கோலம் செங்கதிர் செல்வன் ஏய்ந்த மிக்கு உயர் மகுடம் - எல்லாத்திக்குக்களிலும்மேலாகத்தோன்றுகிற வடிவுபடைத்த செந்நிறக்கிரணங்களைச் செல்வமாகவுடைய சூரியபகவானைத் தொடங்கிவருவதான மிகச்சிறந்த மகுடத்தை, சூட்ட-தான்முறைப்படி அணிவிக்க, சூடுதல் - அணிந்துகொள்ளல், விழுமிது-சிறப்பினையுடையது,' என்றார்—; (எ - று.)

தன்தந்தையை வணக்கிவிட்டுப் பிறகு விதிமுறைப்படி மகுடஞ்சூட இராமபிரான் கருதித்தந்தையுள்ளத்திடம்போக்கிச் செல்வதாகக்கருதி ஸ்ரீராமபிரான் செய்தை செவ்விதாகுமென்று வெத்தனைபோர் அனைது செயலைப் பாராட்டினரென்க. புரவலர் - காத்தற்றொழிலில் வல்லவர். விழுமிது-சிறப்பாகிய குறிப்புணர்த்தும் விழுமமென்னும் உரிச்சொல்லடியாப்பிறந்த குறிப்பு வினைமுற்று. பி-டி:—[1]எல்லாம். [2]தக்கது. [3]திக்கினை. [4]நிமிர்ந்த, நிகழ்ந்த. [5]கீர்த்தி. [6]செல்வனை செம்பொற்சோதி. (உசுக)

க0ங.—இராமன் அந்நிகழ்வதைநோக்கி, தன்வரத்தைத் சொல்லக் கைகேசி முன்னே வருதல்.

[1]ஆயன நிகழும் வேலை [2]பண்ணவ னுடம்பட்[3]டெழுந்
[4]தாயவ னிருந்த சூழ [5]லருகினன் வருத லோக்கி
காயக னுரையான் வாபா லுனித்து பகர்வ னென்றுத்
தாயென நினைவான் [7]முன்னை கூற்றென வடைபள் வந்தாள்.

(இ-ள்.) ஆயன - அப்படிப்பட்டவை, நிகழும் வேலை - நடக்குங் காலத்தில், அண்ணல்உம் - ஸ்ரீராமனும், அயர்த்து - மூர்ச்சையடைத்து, தேறு - தெளியாத, தூயவன் - பரிசுத்தனாகிய தயரதன், இருந்த—, சூழல்-இடத்தை, துருவினன் வருதல் - தேடிவருதலை, நோக்கி - பார்த்து:—'இது - இதனை, நாயகன்-கணவன், வாயால் உரையான்-(தன்) வாயாற் கூறான்: (ஆதலால்), நான் பகர்வன் - நான் சொல்வேன்,' என்ற - என்றெண்ணிக்கொண்டு, தாய் என நினைவான் முன்னை-தாயென்றெண்ணுகின்ற ஸ்ரீராமன்முன்னே,

கூற்று என - யமனைப்போல, தமியள் - ஒப்பற்ற கொடுமையையுடைய கைகேயி, வந்தாள்—; (எ - று.)

யமன் உடலையும் உயிரையும் வேறுபிரித்துக் கூறுபடுத்தல்போலச் சக்ரவர்த்தியையும் திருமகனையும் பிரித்தலால், இது - தொழிலுவமம். பி-ம்:—[1]ஆயது. [2]ஐயனும். [3]தேறுன். [4]தூயவன்கிடந்த. [5]குறுகினன். [6]இவை பகர்வல். [7]முன்னர். (உகூ)

கூ0சு.—கைகேயியைத் தண்டனிட்டு ஸ்ரீராமன் பணிவுதோன்ற நிற்றல்.

வந்தவ டன்னைச் சென்னி மண்ணுற வணங்கி [1]வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் [2]செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் [3]துவண்டு நின்ரு
னந்திவந் தடைந்த தாயைக் கண்டவான் [4]கன்றி னன்ரூன்.

(இ-ள்.)அந்தி வந்து அடைந்த-மாலைப்பொழுதில் வந்துசேர்ந்த,தாயை-, கண்ட-பார்த்த, ஆன் கன்றின் - பசுவின் கன்றை, அன்ரூன் - ஒத்த ஸ்ரீராமன்,—வந்தவள்தன்னை-(அவ்வாறு) வந்த கைகேயியை, சென்னி மண் உறதலை நிலத்திற்படும்படி, வணங்கி - ஸாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, வாசம் சிந்துரம் பவளம்-வாசனையுள்ளதும் சிந்தூரத்தையும் பவழத்தையு மொத்தது மான, செவ் வாய்-சிவந்தவாயை, செம் கையில் புதைத்து - சிவந்த (ஒரு) கையால்மூடிக்கொண்டு, மற்றை சுந்தரம் தட கை - அழகிய பெரிய மற்றொரு கை, தானை மடக்குற-ஆடையைமடக்க, துவண்டு நின்ரூன்-வணங்கி நின்ரூன்; (எ - று.)

இது - அடக்கம்; அடக்கமென்பது உயர்ந்தோர்முன் அடங்கியொழுகு மொழுக்கம்; அது - பணிந்தமொழியுந் தணிந்த நடையுந் தானைமடக்கலும் வாய்புதைத்தலும் முதலாய கொண்டது. எம்பெருமானது செவ்வாய் நறுமணம்பெற்றிருக்கு மென்பதை "கருப்பூரநாறுமோ கமலப்பூநாறுமோ, திருப் பவளச் செவ்வாய் தான் திகழ்கின்றதுமோ, மருப்பொசித்தமாதவன்றன் வாய்ச்சுவையு நாற்றமும், விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழிவெண் சங்கே" என்ற ஆண்டாள் பாசுரத்தாலும் அறிக. அந்தி - ஸந்த்யா என்னும் வடமொழியின் சிதைவு. உம்மைபால், கைகேயியினிடத்து இராமன்கொண்ட பேரன்புவிளங்கும். கன்றின், இன் - அசை. பி-ம்:—[1]வாய்த்த. [2]செங்கையாற். [3]தொழுது. [4]கன்றே. (உகூ)

கூ0ந.—இராமனிடத்து 'தந்தை உன்னிடம் சொல்லுமாறு ஒருரையுண்டு' என்று கைகேயி-தெரிவித்தல்.

நின்றவன் றன்னை நோக்கி யிரும்பிரு [1]னியன்ற நெஞ்சிற்
[2]கொன்றுழல் கூற்ற மென்னும் [3]பெயரின்றிக் கொடுமைபூண்டா
னின்றெனைக் [4]குணர்த்த லாவ தேதடே தையென்னி லாகு
மொன்றுனக் குரைத்த மைந்த [5]வுரைப்பதோ ருரையுண் டென்ரூள்.

(இ - ள்.) நின்றவன் தன்னை நோக்கி - அங்ஙனம்நின்ற ஸ்ரீராமனைப் பார்த்து,—இரும்பினன் இயன்ற நெஞ்சின் - இரும்பாலாகிய மனத்தோடு, கொன்று உழல் கூற்றம் என்னும் பெயர் இன்றி-(உயிர்களைக்,கொன்று திரி கின்றயமனென்னும்பெயர்மாத்திரமில்லாமல்,கொடுமை-(அவ்யமன்போன்ற) கொடுந்தொழிலை, பூண்டாள் - மேற்கொண்ட அத்தக்கைகேயி, 'மைந்த—! உந்தை - உன்தந்தை, உனக்கு உரைப்பது-உனக்குச் சொல்லவேண்டுமென்று கருதியதாகிய, ஓர் உரை ஒன்று - ஒப்பற்ற ஒருவார்த்தை, உண்டு - உளது: எயது-அவ்வுரைக்கவேண்டுமென்ற அது, இன்று - இப்பொழுது, எனக்கு—, உணர்த்தல்ஆவது என்னில் - தெரிவிக்கலாமென்றால், ஆகும்-தெரிவிக்கலா கும்,' என்றான்—; (எ - று.)

தந்தை உன்னிடத்துச் சொல்லுமாறு மனத்துக்கருதிய உரையொன் றுண்டு: அது எனக்குத் தெரியுமாதலால் தந்தையார் எவ்வேலை நான் இப்போது சொல்லுவது தக்கதேயாமென்று நீ உடன்பாட்டாற் சொல்லுவை யென்று கைகேயி இராமனிடம் கூறினை யென்க.''இரும்புபோல் வலியநெஞ்சம்'' என் றார் பெரியாரும். மைந்த என்றான், அவனிராதிருத்தற்கு. பெயர்-பிரிந்து. பூண்டாள்-பெயர். எயது-எவியதன்விகாரம். சக்ரவர்த்திகட்டளையைச் சொல் வேனையன்றி வேறன்றென்பதாம். பி-ம்:—[1]இயைந்த, இசைந்த. [2]கொன் றுழற். [3]பெயரிறற், பெயரீண்டிக், பெயரினிற், பேரின்றிக். [4]உணரலாகா தாவதே யென்னில், உணரலாவதாயதேயென்னல், உணரலாயதாயதே யெண்ணல். [5]உரைத்தவா, உரைக்கலாம். (உகூ)

கஎசூ.—நீரே அந்தக்கட்டளையைத் தெரிவிப்பின் யான் செய்வேனென்று இராமன் கூறுதல்.

எந்தையே யேவ [1]நீரே யுரைசெய [2]வியைவ தன்றே
[3]னடியே னென்னிற் [4]பிறந்தவ ருளரோ வாழி
[5]வந்ததென் [6]றவத்தி னைய வருபயன் [7]மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயு [1]நீரே தலைநின்றேன் [8]பணிமி னென்றான்.

(இ - ள்.) 'எந்தைஎ ஏவ-என்தந்தையே கட்டளையிட, நீர்எ உரை செய- நீரே சொல்ல, இயைவது - பொருந்துவது, உண்டுஎல் - ஒன்றுண்டானால், அடியேன் உய்ந்தனன்-நான் ஈடேறிவிட்டேன்; என்னின்-என்னைப் போல, பிறந்தவர் - (மேம்படப்) பிறந்தவர், உளர்ஓ - (உலகத்தில்) வேறொருவரிருக் கின்றனரோ? என்-எனது, தவத்தின்-(முற்பிறப்பிற் செய்த) கல்வினையால், ஆய-உண்டாகிய, வரு பயன்-வரக்கடவதாகிய பயன்,வந்தது-வந்துவிட்டது: மற்று ஒன்று உண்டுஓ - இதைவிட வேறொருபயன் உளதோ? தந்தைஉம் தாய்உம் நீர்எ-(எனக்கு) மாதாபிதாக்கள் நீரே; தலைநின்றேன்-(நீர் சொல்லப் போவதை) தலைமேற்கொண்டுநின்றேன்; பணிமின்-கட்டளையிடுமின்,' என் றான் - என்று கூறினான்: (ஸ்ரீராமன்); (எ - று.)

என்தந்தையின் ஏவல் தாயாகிய நுமது வாயால்வர வாய்க்குமேயானால் எனக்குப் பெரும்பேறாகும்: ஆகவே, அக்கட்டளையைத் தெரிவித்தாற் சிர

மேற்கொண்டு செய்வே னென இராமன் கூறின னென்க. "மஞ்சத்திற்கை கேயியோடிருக்கிற தந்தையைப் பார்த்து இராமன் நமஸ்காரித்தான்: அத்தசர தன் கலக்கமுற்றிருக்கக் கண்டுநடுங்கிஞன்: பின்பு கைகேயியை நோக்கி 'யான் ஒருபிழையுஞ்செய்யாதிருக்க, மகிழ்ச்சிகொள்ளாமல் இவர் என்மீது கோபிக்கக்காரணம்என்ன? எவர்க்கும்ஒருதீங்கும்இன்ரு? நீர் அப்பிரியஞ்செய் யாமலிருக்கிறீரா?" என்ன, கைகேயி 'மன்னவர் கட்டளையொன்றைஉனக்குச் சொல்லவெண்ணிவாய்வராமல்சும்மா இருக்கிறார்:மன்னவர்சொல்வதைச்செய் வாயாஞல் நானேசொல்லுகிறேன்'என்றனளாக, இராமன், 'தமப்பன்பேச்சை இராமன்கேளாஎனன்று இவள் சங்கிக்கும்படியாயிற்றே'என்று வருந்திப்பின் 'மன்னவர் எதுசொல்வதாஞலும்செய்வேன்; அரசர்விருப்பத்தைச்சொன்னல் உடனேசெய்வேன்: இரண்டல்லஇராமனுக்கு நாக்கு" என்ருனென்று முத னூலிலுள்ளது. நீர் - ஒருவரைச் சிறப்பிஞற்கூறும் பன்மை. என்னிற்பிறந்த வர்-என்னினும் மேம்படப்பிறந்தவரென்றுமாம். வாழி - அசை. ஓகாரங்கள்- எதிர்மறை. பி - ம்:—[1]நீயே. [2]இயைந்தது, இசைந்தது. [3]அடியன். [4]பிறந் தனர். [5]வந்தவென். [6]தவத்திருமேலே. [7]இனி. [8]பணியது, பணியும். (உகஙு)

கo஑.—பரதன் அரசுபுரிய, நீ தவக்கோலத்துடன் பதினன்குவருடம் வனவாசஞ் செய்யவேணுமென்பது அரசர் கட்டளை யெனல்.

ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
[1]பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய [2]நதிக ளாடி
யேழிரண் டாண்டின் வாவென் [3]றேவின னரச னென்ருள்.

(இ - ள்.) ஆழி சூழ் உலகம் எல்லாம்-கடல்சூழ்ந்த உலகமனைத்தையும், பரதன் ஏ ஆள - பரதனே யாண்டுகொண்டிருக்க, நீ போய்—, தாழ் இரு சடைகள் தாங்கி-தொங்குகின்ற பெரிய சடைகளைத் தரித்துக்கொண்டு,தாங்க அரு - தரித்தற்கரிய, தவம் - தவவேடத்தை, மேற்கொண்டு - பூண்டு, பூழி வெம் கானம் - புழுதியையுடைய கொடிய காட்டை, நண்ணி - சேர்ந்து, புண்ணியம் நதிகள் - பரிசுத்தமாகிய நதிகளிலே, ஆடி-நீராடி, ஏழ் இரண்டு ஆண்டின் - பதினன்குவருடங்கழித்தபின்பு, வா - திரும்பி வருக, என்று—, அரசன் - சக்கரவர்த்தி, ஏவினன் - ஆஜ்ஞாபித்தான், என்ருள்—; (எ - று.)

ஆள - அகரவீற்றுவியங்கோளாகவுமாம். பூழி - புழுதியின் விகாரம்.

பி-ம்:—[1]பூழிருங். [2]துறைகள். [3]ஏயினன், இயம்பினன். (உகச)

கoஒ.—இராமன் அதுகேட்டு மனமுவந்திருந்ததன் வருணனை.

இப்பொழு [1]தெம்ம னோரா லியம்புதற் கெளிதா [2]யாருஞ்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கி
ணெப்பிதை முன்பு [3]பின்பு வாசக முணரக் கேட்ட
வப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

(இ - ன்.) யார்உம் செப்ப அரு குணத்து-எவராலுஞ்சொல்லுதற்கரிய திருக்கல்யாணகுணங்களையுடைய, இராமன்-ஸ்ரீராமனது, திரு முகம் செவ்வி-திருமுகமண்டலத்தின் செளந்தரியத்தை, இப்பொழுது—, நோக்கின் - பார்த்தால்,— அது), எம்மனோர்கள்-எம்மைப்போன்றவரால், இயம்புதற்கு எளிதோ - சொல்லுதற்கு எளிதோ? [அன்றென்றபடி]: (ஏனெனில்), முன்பு-இதற்கு முன்பெல்லாம், (செம் தாமரையினை)-செந்தாமரைமலரை, ஒப்பது-போன்றதாகிய அம்முகச் செவ்வி, அவ் வாசகம் உணர கேட்ட பின்பு - அக்கைகேசிவார்த்தையை அறியக் கேட்ட பின்பு, அப்பொழுது அலர்ந்த செம் தாமரையினை வென்றது - அப்பொழுதுதான் அலர்ந்த செந்தாமரை மலரை வென்றிட்டது; (எ - று.)

எப்பொழுதும் தாமரைமலரை யொப்பதாகிய இராமனது முகச்செவ்வி, கைகேயியின்சொல்லைக் கேட்டவுடனே, தாதைபணியைத் தாயானவளுரைக்கஅதனைப் புரியுமாறு சேர்ந்த பாக்கியத்தைக் கருதியும், அரசுபுரிபுஞ்சுமை தனக்கு அப்போதுநீங்கிவிட்டது கருதியுந் தோன்றியமகிழ்ச்சியால்,மிகமலர்ச்சிகொண்ட தென்றவாறு. "மெய்த்திருவத்திற்றூலும் வெந்துயர் வந்துற்றூலு, மொத்திருக்குமுள்ளத்துரவோன்;" "வில்லக்கில்லுமிழும் பூணன் விழுச்சிறைப்பட்டபோது,மலங்கலந் தாரினன்வந் தருஞ்சிறை விடுத்தபோழ்தும், புலம்பலு மகிழ்வு மெஞ்சிற்பொலிதலுமின்றிப் போன்ரர்.துலங்கலந் துயர்ந்தசோளா லூழ்வினைபென்று விட்டான்" என்று பாராட்டப்படுபவர், இவ்விராமனது குணத்தைநாடி எடுத்துக் கழிப்பதற்குந் தகுதிபற்றவராதல் காண்க. எளிதோ-எதிர்மறை. அம்மா-வியப்புணர்த்துவதோர் 'நிலைச்சொல். பீ-மீ:—[1]எம்மனோருக்கியம்புவதெளிதே. [2]யாக்கும். [3]நின்மின். பின்பம். ()

கூ.—ஜிதுவும் அது.

தெருளுடை [1]மனத்து மன்ன [2]னேவலிற் [3]றிறம்ப வஞ்சி
யிருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் [4]கிணைத்து நின்ரு
னுருளுடைச் [5]சகடம் பூண்ட [6]வுடையவ னுய்த்த காபே
றருளுடை யொருவ னீக்க வப்பினி பவிழ்ந்த தொத்தான்.

(இ-ன்.)தெருள் உடை மனத்து-அறிவின் தெளிவையுடைய நெஞ்சினையுடைய, மன்னன் - சக்கரவர்த்தியினது, ஏவலின் - கட்டளையினின்றும், திறம்ப-பிறழ்வதற்கு, அஞ்சி - பயந்து, இருள் உடை உலகம் - மயக்கத்தையுடைய உலகத்தை, தாங்கும் - காக்கின்ற, இன்னலுக்கு - வருத்தத்திற்கு, இணைத்து நின்ரான்-சம்மதித்துநின்ற ஸ்ரீராமன்,-உருள் உடை சகடம் பூண்ட-சக்கரத்தையுடைய வண்டியிற் பூட்டப்பட்ட, உடையவன் உய்த்த-யஜமானனாற் செலுத்தப்பட்ட, கார் ஏறு - கரிய எருது; அருள் உடை ஒருவன் - கருணையையுடைய வேறொருவன், நீக்க - (அவ்வண்டியினின்றும்) விலக்குதலால், அப் பிணி அவிழ்ந்தது - அவ்வருத்தம் நீங்கியதனை, ஒத்தான்—.

இராச்சியத்தைச் சகடமாகவும், அப்பாரத்தைச் சுமப்பவனை எருதாகவும் கூறுதல்வழக்கமாதலால், அரசச்சுமையை நீங்கிய இராமன் வண்டிச்சுமையைநீங்கிய எருதுபோல் வருத்தம்நீங்கி இனிதிருந்தன னென்றவாறு. இதனாற் கைகேயியினிடத்து இராமன் நன்றிபாராட்டலாயின னென்பதும் தொனிக்கும்; **உவமையணி.** தெருள்-முதனிலைத்தொழிற்பெயர். வாழ்பவரது அஞ்ஞானவிருள் உலகத்தின்மே லேற்றப்பட்டது. "எருமையுமரையும் பெற்றமுமன்ன" என்றதனால் ஏறென்றார். பி-மி:—[1]மனத்தின். [2]ஏவலை. [3]திறம்பல். [4]இசைந்து. [5]சகடம்பூட்டி, சகடவாழ்க்கை. [6]பாசமதகற்றிப்பின்னர். ()

கஉo.—இராமன் கைகேயிக்கு இறுத்த விடை.

மன்னவன் பணியன் [1]ருகி [2]னும்பணி மறுப்ப தேவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்றே
[3]வென்னிதி னுறுதி யப்பா லிப்பணி தலைமேற் [4]கொண்டேன்
[5]மின்னெனிர் கான மின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) மன்னவன் பணி அன்று ஆகில்-சக்ரவர்த்தியினது கட்டளையன்றாயினும், நும் பணி மறுப்பன்மை - உமதுகட்டளையைச் செய்யமாட்டேனென்பதேனோ? என் பின்னவன் பெற்ற செல்வம்-என்தம்பியடைந்தஜசுவரியம், அடியனேன் பெற்றது அன்றே - நான் அடைந்ததன்றோ? அப்பால் - பின்பு, இதின் - இதனினும்மேலான, உறுதி-நன்மை, என்-யாது? இ பணி-இக்கட்டளையை, தலைமேல் கொண்டேன் - தலைமே லேற்றுக்கொண்டேன்; மின் ஒளிர் கானம் - மின்னல்போன்ற வெயில் விளங்குகின்ற காட்டிற்கு, இன்றுஎ போகின்றேன்-இப்பொழுதே செல்கின்றேன்; விடையும் கொண்டேன்-(நும்மிடத்து) உத்தரவும் பெற்றுக்கொண்டேன்; (எ - று)—"என்று ...கோசலை கோயில்புக்கான்" என அடுத்த கவியில் முடிபு காண்க.

அரசர் கட்டளையிடவேண்டுமென்பதில்லை; நுமதுபணியே போதும்: மேலும் என்தம்பிக்கு இராச்சியம் கிடைப்பின், அது நான் அரசுபெற்றது போலவேயாகு மாதலால், இராச்சியமில்லையேயென்ற குறையும் எனக்கு இல்லை;இப்படி நானும் என்தம்பியும் நன்மைபெறுமாறு ஒன்றுநிகழுமாயின் இதைவிட மேம்படஉறுதிபயப்பது ஒன்றுமில்லை யாதலால், நுமதுபணியைத் தலைமேற்கொண்டு இன்றே கானகத்துக்குச்செல்கின்றேன்; விடைபெற்றுக் கொள்கின்றேனென்றனன் இராமனென்க. கைகேசி கூறியதைக்கேட்டவுடன் இராமன் 'அப்படியேசெய்வேன். பரதனுக்குப் பட்டங்கட்டுவதைத் தந்தையார் என்னுடன்சொல்லவில்லையேயென்ற வருத்தம் என்னைத் துன்புறுத்துகின்றது: பரதனுக்குஎதையும் கொடுக்கக்கூடியவன் நான்; தாதுவர் விரைந்துசென்று பரதனையழைத்துவரட்டும்: நான் போகின்றேன்' என்றனை;கைகேயி 'பரதனையழைத்துவருவதைப்பற்றி நீ சிந்திக்கவேண்டா'என்று

கூறித் தனக்குள் 'பரதன் வந்திட்டால் இராமனைப் போகவிடான்: அதற்குள் இராமனைக்காட்டுக்குப் போக்கவேணும்' என்றுகருதி, 'தாமதியாதே: நீ கானகஞ்செல்வாயோ மாட்டாயோ என்ற ஐயத்தினால் மன்னவர் ஸ்நானம்முதலியன செய்யார். இப்போதே காட்டுக்குப் புறப்படுக' என்ன, இராமன் தமப்பனுக்கு விருப்பமானதைச் செய்வதே எனக்குத் தருமாநுஷ்டானமாகும். தமப்பனர்சொல்லாவிட்டாலும் நீர் சொன்னதேபோதும்: வரத்தின்மூலமாய் என்னைப்போகச்சொன்னதால் என்தன்மையின்னதென்று நீர் ஆராயவில்லைபோலும். நான் என்தாயுடன்சொல்லி அவளனுமதியைப்பெற்றுக்கொண்டு சீதைக்குஞ் சொல்லிவிட்டுப் பின்செல்கின்றேன்: இத்தத்தாமத்திற்கு அவகாசந்தருக: பரதன் தந்தையார்க்குப் பணிவிடைசெய்யப் பார்த்துக்கொள்ளும்' என்று இவ்வாறுசொல்லி, தந்தையாரையும் கைகேயியையும் வந்தனஞ் செய்து புறப்பட்டனனென்று வால்மீகத்திலுள்ளது. தலைமேற்கொள்ளுதல்-பயபக்தியோடேற்றுக்கொள்ளுதல். நீரென்பது நம்மனத்திரிந்தது.

பி-மீ:—[1]ஆயின். [2]நின். [3]என்னினி. [4]கொண்டு. [5]யின்னினி. (உகஎ)

கைகேசிசூழ்வினைப்படலம் முற்றிற்று.

ச - ஆவது நகர்நீங்குபடலம்.

அதாவது - ஸ்ரீராமபிரான் கைகேசிசொல்லால் வனம்புகுமாறு நகரினின்று நீங்கியதைச் சொல்லும் படலமென்பது. பொருள்.

இராமன் இவ்வனங் கைகேயினிடஞ் சொல்லி வணக்கிவிட்டுத் தந்தையைத் திக்குநோக்கித் தண்டனிட்டுப் பின் கோசலையின்மாளிகைபிற்சென்று தண்டனிட்டுநிற்க, பட்டாபிஷேகத்திற்குரிய அனைபாளதோன்றுமில்லாமல் மகன் வந்துநிற்பதுகண்டு கோசலை 'முகத்துட எதாகிலும் நினைபூறு உண்டோ?' என்றுவினவ, இராமன் 'நின்மகன்பரதன் முகதுதிகின்றான்' என்றான். கோசலை 'முறைமையன்றுனன்பதன்றி மற்றைப்படி பரதன் குணத்தால் நின்னினும் உயர்ந்தவனை. மகனே! தம்பிக்குப் பூமியைக்கொடுத்து மாறுபாடின்றி நீழிவாழ்க' என்றாள். அதுகேட்டு மகிழ்ந்த இராமன், 'தந்தை என்னைப் பதினான்குவருடம் கானகத்திலுறையுமாறு கட்டளையிட்டிள்ளார்' என்றான். அதுகேட்டதும் கோசலை துடிதுடித்து வருத்தத்திலுற்பல வாறுகூறிப் புலம்பினாள். அப்வனம் வருத்துகின்ற கோசலையைநோக்கி இராமன், மன்னவனைப் பொய்யனைக்கப் பார்த்தலாகுமோ? தம்பி இராச்சியம்பெற, காட்டில் நிச்சிந்தையாகவாழ்ந்து தந்தையைச் சத்தியசந்தனுக்குவனைத்தாட்டிலும் யான் பெறும் பேறு யாதுளது? அண்ணலைவலைமறுத்தல் எனக்குமுடியுமோ? மனமழியேல்' என்ன. கோசலை 'நீ கானகஞ்செல்லுத்துணிந்தால் என்னையும் உடன்அழைத்துச்செல்வாய்' என்றாள். இராமன் 'அம்மா! என்னைவிட்டுப்பிரிந்துவருந்தும் மன்னவனைத் தேற்றுதல்லவோ தமது கடன்? என்னுடன்வரத் துணியலாமோ? பரதனுக்குப் பட்டங்கட்டிக் கான

கஞ்செல்லும்போது மன்னவருடன் நீரும்சென்று அருமைநோன்புகள் புரிக; தேவர்களும் தவஞ்செய்து மேன்மைபெற்றுராதலால் யானும் வனஞ் சென்று தவஞ்செய்து பதிணன்குவருடங்களையும் பதிணன்குநாளாகக்கழித்து மேன்மையுடன்வருவேன்; விடைதருக' என்றனன். எவ்வளவுதேறுதல் சொல்லியும் கோசலை கேளாமற் காட்டுக்கு இராமனைச்செல்லாதிருக்கும்படி அரசனைக் கேட்டுத்தடுப்பேனென்று அரசனிருக்குமிடத்துக்குச் சென்றனளாக, இராமன், 'சுமித்திரையானவள் கோசலையையுந் தேற்றுவாள்' என்று அவள்மாளிகைக்குச் சென்றான். இதுநிற்க.

சென்றகோசலை மன்னவன்மூர்ச்சித்திருப்பதைக்கண்டு பலவாறுபுலம்ப, அக்குரல் பட்டாபிஷேகத்திற்குவந்திருக்கும் மன்னவர்முதலியோரின் செவியில்விழ, அவ்வழுகைக்குரலுக்குக் காரணத்தை யறிந்துவருமாறு அங்குள்ளோர் வசிட்டமுனிவனை வேண்டினர்கள். அம்முனிவன் அந்தப்புரத்துச்சென்று கைகேயியைவினவிச் செய்தியுணர்ந்து 'மன்னவா! அயரேல்: கைகேயியே இராமனுக்கு அரசுதருவாள்' என்றுசொல்லிச் சீதோபசாரஞ்செய்துதேற்ற, அப்போதுமன்னவனுக்கு உயிர்ப்புவரக்கண்டு இன்மொழிகளால் மீண்டும் அவனைத்தேற்றிக் கைகேயியைநோக்கிப் பலவாறு மதி கூறவும் அவள் விடாப்பிடியுடனிருக்க, பிறகு மன்னவனும் அவளை நன்மொழிகள் சொல்லிப்பார்க்கவும் சிறிதும் அவள் இரங்காதது கண்டு, 'நீ என் தாரமல்லை: மன்னனைவரும் பரதனையும் மகனென்று உன்னேன்: அவனும் என்னுரிமைக்கு ஆகான்' என்று சொல்லிவிட்டு, கோசலை வந்திருப்பதையறிந்து மூர்ச்சிக்க, அவள் பலவகையாகத்தேற்றத் தெறிய மன்னவன் தான் ஒரு முனிகுமாரனைக் கொன்றதனாற் சாபமுற்ற வரலாற்றைத் தெரிவித்து 'என்னுயிர்போவது திண்ணம்' என்றுகூற, அதுகேட்டுக் கோசலை திகைத்துநிற்க, முனிவன்போய் அவையோர்க்குச் செய்தி தெரிவிக்கவே, இராமாபிஷேகம் தடைப்பட்டபொருள் அந்தகரத்து எங்கும் பரவ, உயர்திணையோடு அஃறிணையான பொருள்யாவும் பெருவருத்தமடைந்தன. கூனியும் கைகேசியுமே, அந்தகரில் வருந்தாதவர்.

இச்செய்தி கேள்வியுற்ற இலக்குமணன் பெருஞ்சினங்கொண்டு யுத்தசன்னத்தனாகி 'எவர் வந்தாலும் வரட்டும்: இராமாபிஷேகத்துக்குத் தடைசெய்வோனைத் தொலைத்துவிடுகிறேன்' என்று சொல்லி நாணேப்புடைத்துக்கொண்டு நகர்வலில் திரிந்துகொண்டிருந்தான். சிற்றன்னையிடமிருந்த இராமன் அவ்வொலிகேட்டு வந்து இலக்குமணனைநோக்கி, யுத்தசன்னத்தனாகியுள்ள காரணத்தை வினவி, 'எல்லாம் விதியினால் விளைவது: எவர்மீதும் குற்றமில்லை'என்ன, 'இலக்குவன் நான் விதிக்கும் விதியாவேன்: என்வில்லின்முன்னே விதி என்னசெய்யமாட்டும்?'என்ன, இராமன் 'மறையோத்தும் வாயால் நீ இன்னனம் சினங்கொண்டு கூறலாமோ? தாதை சொல்லை மீறுதல் எனக்குத்தகாது' என்ன, இலக்குமணன் சீற்றந்தணிய, பின் அவனுடன் சுமித்திரையின் கோயிலையடைந்து தாம் தண்டகவனஞ்செல்வது உணர்ந்து

அன்னைவருந்த அவளைத்தேற்றினன். அப்போதுசேடியர்மூலமாகக்கைகேயி வரவிடுத்தமரவுரியைவாங்கிக்கொண்டு, இலக்குமணன் தாயைப் பணிந்து நிற்க, அவள் 'அவ்வனம் இவ்வபோத்தி: இராமனே தசரதன்: சீதையே உன் தாயர்: நீ இவ்விராமனுக்கு அடியவன்போல ஏவல்புரிவாய். இவ்விரா மன் திரும்பிவந்தால் வருக: இன்றேல் முன்னம் முடிக: ஒருகணம் நிற்பினும் ஏதம்' என்று உபதேசித்துவிடைகொடுத்தாள். இருவரும் சுமித்திரையைத் தொழுதுமீண்டபின், சீரைகளைத்தரித்தனர். பின் இராமன் 'தாய்மார்களை யும் தந்தையாரையும் தேற்றிக்கொண்டு நகரில்தானே தங்குக'என்று இலக் குமணனிடஞ் சொல்ல, இலக்குவன் கண்ணீர்வடித்து 'ராஜ்யசீதையும் உன் னைவிட்டு ஒருகோடிப்போதும் பிரிந்து உயிர்வாழும: கருணைபுரிக' என்று வேண்ட, இராமனும் இலக்குமணன் உடன்வருவதற்கு உடன்பட்டனன். அங்குவசிட்டமுனிவன் வந்து இராமன் மரவுரிதரித்த கோலத்தோடு இருப் பதுகண்டு தன்பக்கடலுளழுந்தி இராமனைநோக்கி. 'நீ கானகஞ்செல்லவே ண்டா' என்று தடுக்க, இராமன் 'தான் கானகஞ்செல்வதே தக்கது' என்று தக்கநியாயமெடுத்துக் காட்டினன்; முனிவனும் வாய்மூடினன்.

பின்பு இராமன் சீதையின் மாளிகைநோக்கிச்சென்ற. அவனைக்கண்ட அந்தகரத்து உயர்திணைப்பொருளாது அஃறிணைப்பொருளாதுவாசிபற எல் லாம் துக்கசாகரத்துளழுந்தின.அப்பொழுதப்போது செல்கின்ற இராமனைத் தொடர்ந்து தாய்மாரும் அந்தணர் அரசர் முதலியோரும் அழுதுகொண்டு உடன்வந்தனர்.மரவுரிதரித்த கோலத்தோடுவரும் இராமனைச்சீதை கண்டுதிடுக்கிட்டுநடுங்கிக்கண்களில்நீர்வடிய 'இது என்?' என்றுவினவ, 'என் தம்பியதன் அருளுரிவான். நான்காட்டுக்குப்போய்த் தக்கதவத்தை நிறை வேற்றி வருவேன்: வருந்தாதிரு' என்றான். காயகன் வனத்துக்குச் செல்வ னென்றதைக்காட்டிலும் வருந்தாதிருவென்றசொல்லைக் கேட்டதால் துயரம் மேலிடப்பெற்றுச் சீதை 'தாய்தந்தையர்சொல்லைச் செய்வது தக்கதே: என் னைக் கைவிடத்துணிந்த காரணம் யாது?' என்ன, இராமன் 'கல்லையும் உருக் கும் வெப்பத்தையுடைய காடு உன்மெல்லிய பாதத்தைச் சுடும: உன்னை யழைத்துச் செல்வதால் எனக்கு வருத்தம் சேரும்' என்ற பலபடி சொல்லித் தடுக்க, சீதை 'நின்பிரிவினும் காடு சுடுமோ?'என்னத் துறத்தலால் இன்பம் நுமக்கு நேரும்போதும்'என்று பலவாறுதன்மனவருத்தத்தைநிவித்துச் சீரைசாத்திக்கொண்டு பின்னே வரலானள். இங்ஙனம் இலையவன்முன்னே செல்லவும் திருமகள் பின்னேவரவும் இடைபோகடக்கும் இராமனைக்கண்டு அந்தகரத்தவர் பட்ட வருத்தத்தை அளவிட்டுச் சொல்லுதல் எவர்க்கும் இய லாது. அவ்வண்ணமே இராமன் தந்தையாரிருக்குமிடஞ் சென்று தாய்மாரை வணங்கி 'மன்னவனைத் தேற்றிக்கொண்டிருங்கள்' என்று சொல்லிவிட்டு, சுமந்திரன் கொணர்ந்த தேரின்மீது ஏறிச்செல்லலாயினனென்பது. இப்பட லத்திற் கூறும் பொருள்.

க.—ஸ்ரீராமன் கைகேயியையும் தசரதனையும் வணங்கிவிட்டுக் கோசலையின் மாளிகையை யடைதல்.

என்றுகொண் டினைய கூறி யடியிணை [1]யிறைஞ்சி மீட்டுந்
தன்றுணைத் தாதை பாத மத்திசை நோக்கித் [2]தாழ்ந்து
பொன்றிணி போதி னுலும் பூமியும் புலம்பி நையக்
குன்றினு முயர்ந்த தோளான் கோசலை கோயில் புக்கான்.

(இ - ள்.) குன்றின்உம் உயர்ந்த தோளான் - மலையினுஞ் சிறந்த புயங்களையுடைய ஸ்ரீராமன், - என்று இனைய கூறி - என்று இப்படிப்பட்டவார்த்தைகளைச் சொல்லி, அடி இணை-(கைகேயியினது) உபயபாதங்களை, மீட்டும் இறைஞ்சி-மறுபடியும் வணங்கி, தன் தாதை-தனது தகப்பனுருடைய [தசரதனுடைய], துணை பாதம் - அடியிணையை, அ திசை நோக்கி தாழ்ந்து - அத்திக்கைக்குறித்து வணங்கி,—திணி பொன் போதினுள்உம்-திண்மையாயிருக்கின்ற பொற்றாமரைப்பூவில்வீற்றிருக்கின்ற இலக்குமியும், பூமிஉம்-பூமிப்பிராட்டியும், புலம்பி நைய-வருந்தி அழும்படி, கோசலை-கௌசல்யையினுடைய, கோயில் - மாளிகையை, புக்கான் - அடைந்தான்; (எ - று.)

தான் வனஞ்செல்லப்போவதைக் கோசலைக்குத் தெரிவித்துத் தன்னைப் பிரிதலால் வருந்தக்கூடிய தசரதமன்னவனைத் தக்கஉபசாரம் முதலியவற்றால் தேற்றிக்கொண்டு இருக்குமாறு அறிவுறுத்தி அவளைச் சமாதானப்படுத்தி அன்னளிடத்தினின்று விடைபெற்றுச் செல்வதற்காக அக்கோசலையின் மாளிகைக்கு ஸ்ரீராமன் சென்றனனென்க. தசரதன் மூர்ச்சையடைந்துகிடத்தலால் அவனிடத்து நேரே கிட்டிவிடைபெற இயலாததுபற்றி ஸ்ரீராமன் அவனைத் திசைநோக்கித் தொழுதனன். பிரிவிற்கு அஞ்சி ஆற்றுமையால், போதினுலும் பூமியும் புலம்பி நைவாராயினர்: பொன்திணிபோதினுள்-ராஜ்யலக்ஷ்மி. நைந்து புலம்புவன மாறுக. கொண்டு - அனை; இனி, எண்ணிக்கொண்டென்றுரைத்தலும், கூறிக்கொண்டென்று கூட்டலுமாம். கீழ் "வந்தவடன்னைச்சென்னி மண்ணுறவணங்கி" என்றதனை நோக்கி 'மீட்டும்' என்றார். தன்றுணைத் தாதையென்றற்கு - தான்அவதரித்தபயனைத் தலைக்கட்டுவிக்கத் துணையாய்நின்ற தாதை யென்றுமாம். பி-பி:—[1]தொழுது. [2]தாழ்த்து.

உ.—இராமன் கோசலைமுன் செல்லுதல்.

குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
யிழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி [1]யேக
மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்ணண் முன்னெரு தமியன் சென்றான்.

(இ - ள்) (அடைந்து), 'மழை குன்றம் அனையான் - மேகங்கள் தங்கப்பெற்ற மலையையொத்த இராமன், மௌலி கவித்தனன் வரும் - கிரீடத்தைச்

சூட்டிக்கொண்டு வருவான்,' என்று என்று—:தழைக்கின்ற-மகிழ்கின்ற,உள் ளத்து - மனத்தையுடைய, அன்னாள் முன் - அக்கோசலைக்குமுன், குழைக் கின்ற கவரி இன்றி - வீசுகின்ற சாமரமில்லாமல், கொற்றம் வெண் குடை உம் இன்றி - வெண்கொற்றக்குடையு மில்லாமல், இழைக்கின்ற விதி முன் செல்ல-(நன்மைதீமைகளை)உண்டாக்குகின்ற ஊழ்வினை முன்னே போகவும், தருமம் பின் இரங்கி எக - அறக்கடவுள் வருந்திப் பின்னே வரவும், ஒரு தமி யன்-தன்னந்தனியனாய், சென்றான்-(அவ்விராமன்) வந்து சேர்ந்தான்.

தான் முடிசூடாமற் காட்டிற்குச்செல்லச் சங்கற்பித்துவிட்டதனால் அர சசின்னங்களை ஸ்ரீராமன் விலக்கிவிட்டா னென்று முதனூல்கொண்டு அறிக. உலகத்துப் பிறந்ததற்குஏற்ப ஊழ்வினைவசத்தா லுழல்பவன்போன்று நடித்தன னென்பதை விளக்க 'இழைக்கின்ற விதிமுன்செல்ல' என்றார். இழைக்கின்றவிதி - தம்முடைய ஆதிசங்கற்பமு மாம். தர்மஸம்ஸ்தாப நார்த்தமாகத் தோன்றினவ தனால், தருமம் பின்தொடர்ந்தது. இராமன் செல்கையில் தருமமுஞ்செல்லுமென்று கூறப்படுவதனை, 'தருமமே தாது செல்ல - வருகின்றான்" என்று மிதிலைக்காட்சிப்படலத்தும் காண்க. கரு மைக்கும், உயர்விற்கும் 'மழைக்குன்று' என்றார்: இனி, குளிர்ச்சியையுடைய குன்றென்றுமாம். மௌலி-ஆகுபெயர். தமியன்என்னுஞ்சொல், தனிமைப் பொருள்குறித்த தமியென்பதன் அடியாகப்பிறந்தது. ஒரு தமியன் - ஒரு பொருளைக்குறித்த இருசொற்கள்: தன்னந்தனியன்: முடிசூட்டு சின்னம் எதுவும்இல்லாத தமிய னென்றவாறு. பி-மீ:—[1]செல்ல. (உகக)

கூ.—கோசலை இராமனைக்கண்டு சங்கையினால் 'முடிபுனைய இடையுறுஉண்டோ?' என்று வினவுதல்.

புனைந்திலன் மௌலி குஞ்சி மஞ்சனப் புனித நீரா
[1]னனைந்தில னென்கொ லென்னு மையத்தா னனினைபாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலுங் [2]குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடையூ றுண்டோ நெடுமுடி புனைதற் கென்றாள்.

(இ - ள்.) மௌலி புனைந்திலன் - (இராமன்) திருமுடியைச்சூட்டிக் கொண்டானில்லை; குஞ்சி மஞ்சனம் புனிதம் நீரால் நனைந்திலன் - தலைமயிர் நீராட்டத்திற்குரிய பரிசுத்தமாகிய தீர்த்தத்தினால் நனையப்பெற்றானில்லை; என்கொல்-(இதற்குக்காரணம்) யாதோ?என்னும் ஐயத்தான்-என்னுஞ்சங்கை யைக்கொண்ட அக்கோசலையினுடைய. நனைம் பாதம்-தாமரைமலர்போ ன்றதிருவடிகளை, பொன் கழல் வனைந்த கால்-பொன்னினாற்செய்த வீரக்கழ லணிந்த திருவடியையுடைய. வீரன்-ஸ்ரீராமன், வணக்கலும்-சேவிக்க,குழை ந்துவாழ்த்தி-(அவள்) வருந்தி ஆசீர்வாதஞ்செய்து, 'நினைந்தது என்-(சக்ரவர் த்தி)எண்ணின காரியம் யாதாயிற்று? நெடு முடி புனைதற்கு - நீண்டகிரீடத் தைச் சூடுதற்கு, இடையூறு உண்டோ - (யாதாயினும்) தடையுளதோ?' என்றாள்—; (எ - று.)

குஞ்சி - ஆண்மயிர். கங்கையேமுதலவாய கன்னியீருண தீர்த்த மங்கலப் புனலுகாலுவாரியினீருமாதலின், மஞ்சனப்புனிதநீரென்றுள். பி-ம்:— 1நனைந்திலதென்கொல். 2மகிழ்ந்து. (கூ00)

வேறு.

சு.—பாதன் முடிசூடுகின்று னென்றல்.

மங்கை யம்மொழி 1கூறலு மானவன்
செங்கை கூப்பி2நின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான்.

(இ - ள்.) மங்கை-கோசலை, அ மொழி கூறலும் - அவ்வார்த்தையைச் சொல்ல,—மானவன்-ஸ்ரீராமன், செம் கை கூப்பி-சிவந்தகைகளைக் கூப்பிக் கொண்டு, 'நின் காதல் திருமகன்-உனது அன்பிற்குஇடனான அழகியகுமாரனும், எம்பி - எனது தம்பியுமாகிய, பங்கம் இல் குணத்து - குற்றமில்லாத குணங்களையுடைய, பரதன்ஏ---, துங்கம் மா முடி-உயர்வாகிய பெருமையையுடைய கிரீடத்தை, சூடுகின்றான் - கவித்துக்கொள்ளுகிறான்' என்றான்—.

பரதன் - நாட்டைப்பரிப்பவன்: காப்பவனென தசரதன் சுவர்க்கம்புக, ஸ்ரீராமனும் வனம்புக, அரசனில்லாத இராச்சியத்தைக் காத்தல் நோக்கி இப் பெயர் வசிஷ்டரால் இடப்பட்டது. மானவன்-(வைவஸ்வத) மநுவமிசத்தில் பிறந்தவன். பி-ம்:—1கூறலுமன்னவன். 2உன். (கூ0க)

சூ.—கோசலை 'முத்தவனிருக்க இளையவனுக்கு முடிசூட்டுதல் முறைமையன்றே' எனல்.

முறைமை யன்றென்ப தொன்றுண்ட 1தல்லது
நிறைகு ணத்தவ னின்னினு நல்ல2னுற்
குறைவி லன்னெனக் கூறின னெல்வர்க்கு
மறுவி 3லன்பினில் வேற்றுமை மாற்றினாள்.

(இ - ள்.) நால்வர்க்கு உம்-(இராமன் இலட்சுமணன் பரதன் சத்துருக்கினன் என்ற) நான்கு குமாரர்களிடத்தும், மறு இல் அன்பினில்-குற்றமற்ற அன்புசெலுத்துவதில், வேற்றுமை-வேறுபாட்டை, மாற்றினாள் - ஒழித்தவளாகிய கௌசல்லை, '(மூத்தவன்இருக்க இளையவன் அரசுஆளுதல்); முறைமை அன்று என்பது ஒன்று உண்டு-இராசநீதியன்று என்கின்ற ஒரு குறைமாத்திரம் உண்டு; அது அல்லது - அதுவல்லாமல், (மற்றைப்படி), (அந்தப் பரதன்), நிறை குணத்தவன்-(யாவரினும்) நிறைந்த குணத்தையுடையவன்; நின்னின் உம் நல்லன் - உன்னைக்காட்டிலும் நல்லவன்; (அன்றியும்), குறைவு இலன்-(ஒருவகையாலும்) குறைவு இல்லாதவன்,' என-என்று, கூறினன் சொன்னாள்: (எ - று.)—ஆல்-ஈற்றசை; தேற்றமுமாம்.

அப்போது கௌசல்யை, எல்லாப்புத்திரனையும் ஒரு திகாத கினைப்பவ னாதலால் பரதனுக்குப் பட்டங்கட்டப்போவதிற் சிறிதும் மனத்தாங்கல் கொள்ளாது மகிழ்ச்சியேயடைந்து, தன் புதல்வனை நோக்கி 'மைந்தா! இப் போது பட்டங்கட்டக்கருதிய பரதன் மேம்பட்ட குணசாலி; உன்னைக்காட்டி லும் நல்லவன்: அரசு ஆளுதற்கு வேண்டிய தகுதியாவும் நிறைந்தவன்: ஆத லால், அவனுக்குப் பட்டங்கட்டுதல் எற்கும்: ஆயினும், குணக்கேடனாயிருந்தா லன்றி மற்றைப்போது மூத்தவனுக்கே முடிசூட்டுதல் அரசமுறைபாயிற்றே!' என்றன ளென்பதாம்.பரதன் கௌசல்யாதேவியினிடத்திலும் இராமனைக்காட்டி லும் மிக்க பணிவோடு நடத்தலால், அக்கௌசலை, பரதனை 'கின்னினும் நல் லன்' என்கிறாளென்க. கௌசல்யை இராமன் முதலிய நால்வரிடத்தும் ஒரு தன்மையான அன்புடையவளாதலால்,பரதனுக்குப் பட்டங்கட்டப்போவ தைக் கேட்டபோதும் மனத்தில் வேறுபாடின்றி அத்தம்பரதனைப் பாராட்டிக் கூறினளென்பதை விளக்க, கவி, கௌசலைக்கு 'நால்வர்க்கு மறவி லன்பினில் வேற்றுமைமாற்றினள்' என்று ஒரு பெயர் கூறினர்: இத்தொடர்-இக் ஙனம் ஒரு கருத்தைத் தெரிவிப்பது - **கருத்துடையடைகொளியணியாம்.**

ஒன்று-எண்ணலளவையாகுபெயரால், ஒரு குறைவு என்ற பொருளைத் தந்தது. [1]மும்மையின் என்ற பாடத்துக்கு: மும்மை - மூன்று என்ற பொரு ளது: "தெரிமாண்டமிழ் மும்மை" என்ற இடத்துப்போல; மூவுலகத்தினும் என்க. இனி மும்மையின் நிறைகுணத்தவன் என்பதற்கு - சத்துவம் ராஜ தமசு என்ற மூன்றுகுணங்களுள் நிறைத்தகுணமாகிய சத்துவகுணத்தை யுடையவனெனினுமாம். நின்னினும் மும்மையின் நல்லன் என இயைத்து - உன்னைக்காட்டிலும் மூன்றுமடங்கு நல்லவ னென உரைப்பாரு முளர். நிறைகுணத்தவன் - நிறைத்தகுணத்தையுடைய பரத னெனக் கூறி, எழுவா யாக்குதலும் ஒன்று. நால்வர் - தொகைக்குறிப்பு: உம்மை - முற்றும்பொரு ளது. நால்வர்க்கும்—உருபுமயக்கம்: வேற்றுமைமாற்றினள்—பிராசம். பி-ம்:—[2]ஓர். [3]அன்பன்றி. (கூ2)

சு—கோசலை இராமனை நோக்கி 'தந்தைசொல்லை மறுமல். தம்பிக்கு அரசு கொடுத்து வாழ்க' எனல்.

என்று பின்னரு மன்னவ னெனவிய
தன்[1]றை னுமைம கனென புனக்கற
னன்று [2]நம்பிக்கு நானில நீகொடுத்
தொன்றி வாழ்தி யூழி பலவென்றாள்.

(இ - ள்.) என்று - என்று கூறி, பின்னர்உம்—, (கோசலை தன் மகனை நோக்கி), 'மகனே—! மன்னவன் ஏவியது - சக்கரவர்த்தி ஆஜ்ஞாபித்த தொழில், அன்று-(நீதி) அன்று, எனைமை-என்று சொல்லாமை, உனக்கு—, அறன் - தருமமாகும்; நீ—, கன்று - கன்மையாக, நம்பிக்கு - உனது தம்பி யாகியபரதனுக்கு, நானிலம் கொடுத்து - உலகத்தைக் கொடுத்து, ஒன்றி -

(அவனேடு மாறுபடாமற்) கூடியிருந்து, ஊழி பல - பல நெடுங்காலம், வாழுநி—, என்றான்—; (எ - று.)

தந்தைசொன் மிக்க மந்திரமில்லையாதலால், 'தந்தையாரின்எவல் முறை மையானதா? அன்றா?' என்று ஆராய்ச்சி செய்யாமலே அங்கீகரித்தல் உனக்கு அறமாம்: ஆகவே, தம்பிக்கு இராச்சியத்தைக் கொடுத்து அவனேடு ஒற்றுமை கொண்டு வாழ்வா யென்றனள் கோசலை யென்க. மூத்த குமாரனுக்கே அரசு உரியதாதலால், 'நீகொடுத்து' என்றான். பித்ருவசநபரிபாலநஞ்செய்யவேண்டு மென்றானென்பதாம். பி-ம்:—[1]எனைமகனேயுனக்கன்புடை. [2]தம்பிக்கு.(கூ0கூ)

எ.—இராமன் 'தந்தையார் எனக்கு ஏவியதும் ஒன்று உண்டு 'எனல்.

தாயு ரைத்தசொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்திரு
ணைய கன்னெனை நன்னெறி யுய்ப்பதற்
கேய துண்டொர் பணியென் றியம்பினன்.

(இ-ள்.) (என்று), தாய் - கோசலை, உரைத்த - சொல்லியருளிய, சொல்-வார்த்தையை, கேட்டு—, தூய சிந்தை தழைக்கின்ற - பரிசுத்தமாகிய மனம் மகிழ்கின்ற, அ தோம் இல் குணத்திரு - குற்றமற்ற குணங்களையுடைய அவ்விராமன், (தாயை நோக்கி), 'நாயகன்-சக்ரவர்த்தி, எனை-அடியேனை, நல் நெறி உய்ப்பதற்கு-சந்மார்க்கத்திற் செலுத்துவதற்காக, ஏயது - நியமித்ததாகிய, ஓர் பணி-ஒரு கட்டளை, உண்டு—,'என்று—, இயம்பினன்-சொன்னன்.

பரதனுள்வதைக் கௌசலை ஒப்பியதலால், இராமன் தழைக்கின்ற சிந்தையனானன். மன்னவன் கானகம்எகுமாறு ஏவினனென்று முதன்முதலிற் கூறுமல் எனை நன்னெறியுய்ப்பதற்கு ஏயதுஎன்று முதலிற்கூறிப் பின் தெரிவிக்குந் திறம் பாராட்டற்குரியது. பூமிக்கு நாதனுதலாலும், கோசலைக்குத் தலைமகனுதலாலும், ஐங்குரவருள் தகப்ப னெருவ னுதலாலும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" ஆதலாலும், சக்ரவர்த்தியை, 'நாயகன்' என்றான்.

அ.—கோசலை வினவ, இராமன் மன்னவன் பணிதெரிவித்தல்.

ஈண்டு ரைத்த பணி[1]யென்னை [2]யென்றலு
மாண்டொ ரேழினெ டே[3]ழகன் கானிடை
மாண்ட [4]மாதவத் தோருடன் வைகிப்பின்
மீண்டு நீ[5]வரல் வேண்டுமென் றானென்றான்.

(இ-ள்.) (அதனைக்கேட்டு), 'ஈண்டு-உன்னிடத்து, உரைத்த சொன்ன, பணி-காரியம், என்னை - யாது?' என்றலும்-என்று (அக்கோசலை) விணவிய வளவில்,—(ஸ்ரீராமன் அவளைநோக்கி), 'நீ—, ஓர் ஏழினெடு ஏழ் ஆண்டு-ஒரு பதினான்குவருடகாலம், அகல் கானிடை-பரந்த காட்டில், மாண்ட மா தவத் தோருடன் - மாட்சிமைப்பட்ட சிறந்த இருடிகளுடன், வைகி - சேர்ந்து தங்கி, பின்—, மீண்டு வரல்வேண்டும் - திரும்பிவரவேண்டும், என்றான் - என்று (சக்ரவர்த்தி) ஆஜ்ஞாபித்தான்,' என்றான்-என்று (தந்தை காட்டிற் குப்போமாறு ஏவியசெய்தியைத்) தெரிவித்தான்: (எ - று.)

பதினென்குவருடங் காட்டில் தவசியரோடு உறைந்து பிறகு மீண்டுவரு மாறு தந்தையார் எனக்குக் கட்டளையிட்டன ரென, இராமன் கோசலையிடத் தித் தந்தையின்கட்டளையைத் தெரிவித்தன னென்க. தவத்தால் மனந்துய வராதலின் 'மாண்டமாதவர்' என்றது. ஈண்டு - முன்னிலைக்கண் வந்தது: இப்போது எனினுமாம். கான் - காநமென்பதன் விகாரமென்பர். பி-ம்:— [1]என்கொல். [2]என்றவட்கு. [3]அருங். [4]மாதவரோடுடன். [5]வர. (கூ0இ)

கூ.—இதுமுதல் ஆறுகவிகள் - அச்சோலைக்கேட்ட கோசலை வருந்துதலைக் கூறும்.

ஆங்கவ் வாசக மென்று மனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராழுன
மேங்கி னளிளைத் தாடிகைத் தாண்மனம்
வீங்கி னள்விம்மி னள்விழுந் தாளரோ.

(இ - ள்.) ஆங்கு-அப்பொழுது, அ வாசகம் என்னும் அனல்-அவ்வார்த்தை யென்கிற தீ, குழை தூங்கு தன் செவியில் தொடரா முனம் - குழை யென்னுங்காதணி அசைகின்ற தன்னுடைய காதுகளில் விழாததற்கு முன்னமே, (அந்தக்கோசலை :—எங்கினள் - இரங்கினள்; இளைத்தாள் - மெலிந்தாள்; மனம் நிகைத்தாள் - நெஞ்சு பிரமித்தாள்; வீங்கினள்-(மயக்கம்) மிகுந்தாள்; விம்மினள் - அழுதாள்:வி ழுந்தாள்—; (எ - ஐ.)—அரோ - ஈற்றசை.

வாசகமென்னுமனல் என்ற விதப்பு - உலகத்தெரிப்புச்சுடுவது தான் சேர்ந்தபின்பே: இச்சொருப்புச சேராத முன்னுற்ற சுடு மென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. அனலும் வாசகமுஞ் சுடுதற்றொழிலான் ஒத்தலால், உரு வகப்படுத்தினர். தூங்குதல் - அசைதலாதலை "தூக்குசினைறவாவல்" என்ற விடத்திலுங் காண்க. இது காரியத்தை முன்னுக் காரணத்தைப் பின்னும் கிழ்வணவாகச்சொல்லுதலால். மிசையுயர்வுநவிற்சியணி: இதனை, அத் யந்தாதிசயோத்தியென்பர் வடநூலார். இதில் காரண காரியக்களின் முன் பின்னிகழ்தலாகிய முறையில் பிறழ்வு கூறப்பட்டது. காரியவினாவைக் குறிப்பிக்கும். காற்சிறப்பாக்களில் மோனையழுத்துக்கள் சீரின்முதலி லன்றி இடையிலும்வரப்பெறுமென்பது இச்செய்யுளிற்கருதத்தக்கது.(கூக)

க0. வஞ்ச மோ மக னென [1]யுரை மாதிலர்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசக
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனை
[2]வஞ்ச மஞ்சுமென் றைய [3]ரஞ்சுமால்.

(இ-ள்.) (விழுந்து),'மகனை—! உனை-உன்னைக்குறித்து,'மா நிலம் தஞ் சம் ஆக நீ தாங்கு - நீ இப்பொறுப்பினைப் பற்றுக்கோடாகக் காப்பாயாக,' என்ற - என்று மன்னவர்சொன்ன, வாசகம்-வார்த்தை, வஞ்சம்மு-வஞ்சனை யோ? நஞ்சம்மு-விடமோ? இனி நான் உயிர் வாழ்வெனை—? என் ஆர் உயிர்

அஞ்சும் - எனது அரிய பஞ்சபிராணன்களும், அஞ்சும் அஞ்சும் - மிகவும் பயப்படும்' (என்றுகூறினள் கௌசலை); (எ - று.)—ஆல் - ஈற்றசை.

இராச்சியத்தையாளவேணுமென்ற பிரஸ்தாவம் இல்லாவிட்டால் நீ காடு செல்லவும் நிகழ்ந்திராதென்பாள்'உனைமாநிலந்தஞ்சமாக நீ தாங்கென்ற வாசகம் நஞ்சுமோ' என்கிறாள். ''மெய்பொடிப்பச்சிங்கிகுளிர்ந்துங்கொலும்'' என்றவாறு முதலில் இனிதுபோன்று பின் இன்னாதாகிமுடிதல் நஞ்சின் இயல்பாதலால், இவ்வாறு கூறியதுமாம். மாநிலந் தஞ்சமாகநீ தாங்கென்ற வாசகம்-''தஞ்சமிவ்வுலகநீ தாங்குவாயென'' என்று ஆறுசெல்படலத்து வருகிறது. அவ்வாறான உரையைக் கேட்ட நான் உயிரைக் கொண்டிருக்க இயலாது எனப் பின்னடிகளாற் கூறுகிறாள். பி-பி:—[1]நினை. [2]எஞ்சுமெஞ்சும். [3]எஞ்சுமால், என்னுமால். (கூ0எ)

கக. [1]கையைக் கையிற் னெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளிர் ராற்பிசை யும்புகை
[2]வெய்து யிர்க்கும் [3]விழுங்கும் புழுங்குமால்.

(இ-ள்.) (என்றுசொல்லிப்பின் கௌசலை), கையை கையில் நெரிக்கும்-ஒருகையை மற்றொருகையினால் நெரிப்பாள்; தன் காதலன் வைகும் - தனது மகனாகிய ஸ்ரீராமன் (பன்னிரண்டுமாதம்) எழுந்தருளியிருந்த, ஆல் இலை அன்ன வயிற்றினை - ஆலிலையையொத்த வயிற்றை, வளை பெய் தளிரால் - வளையல்கள் நெருங்கிய தளிர்போன்ற கைகளால், பிசையும் - பிசைவாள்; புகை வெய்து உயிர்க்கும்-நெருப்புப்புகை கிளம்பும்படி வெம்மையுடையதாகப் பெருமூச்சுவிடுவாள்; விழுங்கும் - (மீண்டும் அவ்வுயிர்ப்பை) உட்கொள்வாள்; புழுங்கும் - (மனமும் உடலும்) வெம்புவாள்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

வைகும் வயிறென இயையும். தளிர் - உவமவாகுபெயர். மகளிர்க்கு வயிறு ஆலிலைபோலிருத்தல், மஹாபாக்யலக்ஷணம்; இவ்வாறு வடமொழியுட் சாமுத்திரிகநூலாரும், போசராசனுங் கூறுதல் காண்க. இனி ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கு வாழிடமாயிருத்தலால், ஆலிலையையொத்த வயிறு என்றுமாம். பெய்வளையென்ற குறிப்பால் தளிர் கையைக்காட்டிற்று. விழுங்கும் என்பதற்கு-ஏதோசொல்லத்தொடங்கி மனத்துக்குள்ளே யடக்கிக்கொள்வாளென்றுமாம். பி-பி:—[1]கைகள். [2]வெய்துயிர்த்து. [3]விழுந்து. (கூ0அ)

கஉ. நன்று மன்னன் கருணை யெனைநகு
நின்ற மைந்தனை நோக்கி நெடுஞ்சுரத்
தென்று [1]போவ [2]தெனைவெழு மின்னுயிர்
பொன்றும் போதுற்ற [3]துற்றது [4]போலுமே.

(இ-ள்.) (இவ்வாறு புலம்பி), மன்னன் கருணை-சக்ரவர்த்தியின் கிருபை, நன்று எனை நகும் - நன்றாயிருக்கின்றதென்று சிரிப்பாள்; நின்ற மைந்தனை நோக்கி-(எதிரே) நின்ற ஸ்ரீராமனைப்பார்த்து, நெடு சுரத்து என்று போவது

எ-ல-பெரிய காட்டிற் போகிறது எப்போதென்று சொல்லி, எழும் - எழுந் திருப்பாள்; இன் உயிர்-இனியவுயிர், பொன்றும் போது - (உடலினின்று) நீங்குங் காலத்தில், உற்றது - அடைகின்ற வருத்தத்தை, உற்றது - (தான்) அடைந்தால் அதனை, போலும் - ஒப்பாள்; (எ - று.)

மன்னவன் கடுமையைக்கருதிச் சிரித்து 'நீ காட்டுக்குப் போவது எப் போது? நானும் வருகிறேன்' என்று எழுபவளாயினள் கோசலை யென்க. முன் "விழுந்தாள்"(க)என்றதனை நோக்கி,எண்டு எழு மென்றருமாம். அந்தக் கோசலைக்கு அப்போது நேர்ந்த வருத்தம் மரணவேதனையை யொக்குமென் பது, 'இன்னுயிர்பொன்றும் போதுற்ற துற்றதுபோலுமே' என்பதன் கரு த்து. பி-ம்:—[1]போவம். [2]எனவெழும், எனவிழும், என்னவிழும். [3]உற்றனள். [4]போலுமால். (கூ0க)

கஙூ. அன்பி ழைத்த மனத்தர சற்குநீ
யென்பி ழைத்தனை யென்றுநின் றேங்குமான்
முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் [1]பொதிந்தனர் போலவே.

(இ - ள்.) (இவ்வாறு பதைத்து), 'அன்பு இழைத்த மனத்து அரசற்கு-(உன்னிடத்துக்) காதலை வெளிப்படுத்துஞ்செயலைச்செய்து வந்த நெஞ்சினை யுடைய சக்ரவர்த்திக்கு, நீ என் பிழைத்தனை - நீ என்ன தவறு செய்தாய்?' என்று நின்று - என்று சொல்லிக்கொண்டு நின்று,—முன் பிழைத்தவறுமை யின் முற்றினோர்-முற்பிறப்பிற்செய்த தீவினைபாலதாகிய தரித்திரத்தினால் மிக்கிருக்கப்பெற்றவர், பொன் - (இடையிலே தாம் பெற்ற) செல்வம், பிழைக்க - தவறிப்போக, பொதிந்தனர்போல - (செல்வத்தையிழந்த பெருந் துயரத்தினால் முகத்தை) மூடிக்கொண்டு வருந்துபவர்போல, ஏங்கும் - இரங்குவாள்; (எ - று.)

'என்னைப் பதினென்குவருடம் காட்டில் தனியேதோடு வாழ்த்துவருமாறு தந்தை கட்டளையிட்டார்' என்று இராமபிரான் கூறியதைக் கேட்டவுடனே முற்பிறவியிற்செய்த தீவினைப்பயனால் வறியவரைப்போன்ற ஒருவன் திரிக் குவியலைச் சிறிதுகாலம்பெற்று மீண்டும் இழந்தாற்போன்று பெருவருத்தங் கொண்ட கோசலை, 'அரசர் தம்புத்திரர்களெல்லருள்ளும் உன்னிடத்துப் பேரன்புகொண்டிருந்தாரே; அவருடைய அந்த அன்பு நீக்குமாறு நீ என்ன குற்றஞ்செய்தாய்?' என்று சொல்லிபவண்ணம் புலம்பலாயினளென்க. நெடுங்காலம் புத்திரனில்லாதிருந்து பிறகு பெற்ற புத்திரனைக் காட்டிற்கு அனுப்பிவிடுமாறு நேர்ந்த கோசலைக்கு, முற்பிறவியின் தீவினைப்பயனால் வறி யராயிருந்து இடையிற்செல்வம்பெற்று மீண்டும் அதனை இழக்க நேர்ந்தவர் உவமையாவர்.

ஈற்றடிக்கு-(தாங்கள் அடைந்த) பொருள் தவறிப்போகுமாறு (அந்தப் பொருளை) மூடிக்கொண்டிருந்தவரைப்போல என உரைத்து, என் பிழைத்

தனைஎன்று உரைத்தாருமுளர்: அவ்வுரைக்கு, வறுமையடைந்தவர் தமக்குக் கிடைத்த பொன் தவறிப்போகுமாறு பொதிந்ததுபோலப் பெற்ற அரசினைப் பிறர்க்குத் தெரியாமல் தவறுசெய்ததனால் இழந்தனையோ? அப்பிழை யாதோ? என்று கருத்துவிரிப்பர். பொன்பிழைக்கப் பொதிந்தனர் என்ற தொடரை, பொன் பொதியப் பிழைத்தனர் என்று விகுதிபிரித்துக்கூட்டி - பொன்னைப் பத்திரப்படுத்திவைக்கவும் தமது தீவினையால் இழந்தவர் என்று உரைப்பினுமாம். பிழைத்த வறுமை - பிழை[தீவினை]செய்ததனால்தோன்றிய வறுமை: பெயரெச்சம், காரணப்பொருட்டாய் வந்தது. முன்பு இழைத்த என்றுபிரித்து உரைப்பாரு முளர். முற்றினோர் - வினையாலணையும்பெயர்: முற்றுதல்-மிகப் பெறுதல். பி-ம்:—[1]புலம்பினர். (ஙகo)

கச. அறமெனக் கிலேயோ [1]வென்னு மாவி[2]னைநந்
[3]திறவ டுத்ததென் [4]றெய்வதங் காளெனும்
பிற[5]வு ரைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினள்.

(இ - ள்.) (பின்னும் அந்தக் கோசலை),—எனக்கு அறம் இலை ஓ என்னும்-எனக்குத் தருமமென்பது துணையாவதில்லையோ என்பாள்; தெய்வ தங்காள்-தெய்வங்களே! ஆவி நைந்து இற - (என்னுடைய) உயிர் வாடி யழியும்படி, அடுத்தது-(என்னைச்) சார்ந்துள்ள தீவினை, என்-யாதோ? எனும்—; (அந்தக்கோசலை அப்போது), கன்று பிரிந்த உழி - (தான் ஈன்ற) கன்றைப் பிரிந்தபோது, கறவை ஒப்ப-(அந்தக்கன்றையீன்ற) தாய்ப்பசுவைப்போல, கரைந்து - மனமுருகி, கலங்கினள் - வருந்தினள்; பிற உரைப்பது என் - (அங்ஙனம் பெருந்துயரால்வருந்திய கோசலைக்குத் தாயைப்பிரிந்த கன்றைத் தவிர) வேறு உவமையாகக் கூறுவதற்குரியது யாது உள்ளது? [எதுவு மில்லை]; (எ - று.)

'யான் மனமாரப் பலதருமச்செயலைச் செய்திருத்தலால், அவையாவும் இப்போது உதவாமற்போயினவே!' என்பாள் 'அறமெனக்கிலேயோ?' என்றும், ஒருவர் அறச்செயலைச் செய்துள்ளாராயினும் முற்பிறவியிற் பெருந் தீவினை செய்திருப்பாராயின் அத்தத்தீவினை அத்தீப்பயனை விளைத்தே தீருமா தலால், அங்ஙனம் யான் செய்த தீவினை யுளதோ? சொல்லுதியெனன்பாள், 'ஆவினைநந்திறவடுத்ததென் தெய்வதங்காள்' என்றும் கௌசலை கூறினள். இராமனைப்பிரியுந் தாய்க்குக் கன்றைப்பிரிந்த தாய்ப்பசுவை டாரீவான்மீகி முனிவரும் பலவிடத்தும் உவமை கூறியுள்ளார். "கறவைகன்றிழந்தபோன் றுங்கிடந்தழுகின்ற கண்ணுர்" என்றது, இங்கு ஒப்புநோக்கத்தக்கது. எனக்கு என்பதை உருபுமயக்கமாகக்கொண்டு; அறம் எனக்கு இலையோ என்பதற்கு-என்னிடத்தில் தருமமென்பதுஇல்லையோ? என்றும், இரண்டாமடிக்கு, என் தெய்வதங்காள்-என்னுடைய தேவதைகளே! ஆவி நைந்து இற அடுத்தது-என் னுடைய உயிர் வாடியொழியுங் காலம் சேர்ந்திட்டது, எனும் - என்பாள் என் றும் உரைப்பினுமாம். இறவு அடுத்தது என்றும் பிரிக்கலாம். பிற - அவள்

பட்ட மற்றைவருத்தங்களை, உரைப்பது என்? என்று உரைப்பாரு முளர். இற-செயவெனெச்சம்: இறவு - தொழிற்பெயர்: இரண்டிலும். இறு-பகுதி. தெய்வதங்காள் - தெய்வதங்கள் என்பதன் ஈற்றயல் நீண்ட விளி. தெய்வதம்=தைவதம்: வடசொல். "காலமுலகம்" என்று தொடங்குந் தொல்காப்பியச்சூத்திரத்தில் "பால்வரைதெய்வம்...ஆவயின் வரூஉக்கிளவி யெல்லாம், பால்பிரிந்திசையா வுயர்திணைமேன" என்றதனால், தெய்வதமென்பது உயர்திணையாயினும் உயர்திணைபிற் பால்பிரிந்திசையாது அஃறிணைப்பாலாயினைத்தது. கறவை - கறக்கப்படுவது: ஐ - செயப்படுபொருள்விகுதி. பிரிந்துழி, பெயரெச்சத்தின் அகரம் தொக்கது: விகாரம். பி ம்:—[1]எனும், என. [2]சோம், நொந்து. [3]திறமடுத்த, இறவிடுக்கும், இறவிடுத்தது: இறவிடுத்த. [4]தெவ்வதைகாள். [5]இசைப்பது. (கூகக)

கடு.—வருந்துங் கோசலையைக் கையாலெடுத்து இராமன் 'நீ அரசனைப் போய்யறுத்துவாயோ ?' எனல்.

இத்தி றத்தி னிடருறு வாடனைக்
கைத்த லத்தி னெடுத்தருங் கற்பினாய்
பொய்த்தி றத்தின னைக்குதி போபுகல்
மெய்த்தி றத்துநம் மேவந்தனை நீ[1]யென்றான்.

(இ - ள்.) (அப்பொழுது ஸ்ரீராமன்): இத்திறத்தின் இடர் உறுவாள் தனை - இவ்வகையாக வருத்தமடைகின்ற அக்கோசலையை. கைத்தலத்தின் எடுத்து - (தன்) கைகளால் தூக்கி. 'அரு கற்பினாய்-அரிய கற்பினையுடைய வளே! மெய் திறத்து நம் மேவந்தனை-சத்தியத்தின் மேன்மையையுடைய நமது சக்ரவர்த்தியை, நீ—, பொய் திறத்தினன் ஆக்குதி ஓ-பொய்யின்பாற்பட்டவனாக முயல்கின்றாயோ? புகல் - சொல்வாயாக.' என்றான்—: (எ - று.)

ஸ்ரீராமன் அவ்வாறு வருந்துகின்ற கௌசலையைத் தன்கைகளாலெடுத்து, கணவன் கொள்கைக்கு எற்பநடப்பதே கற்புடையமாதராய்செயலாதலால் அவன் தந்த வரத்தை முற்றுவிக்க உதவியாயிராமல் "வஞ்சமோமதனை உனைமாநிலத்,தஞ்சமாக நீ தாங்கென்ற வாசகம்" என்று பழிப்பதும், வருந்துவதும்,ஒருகால் அவ்வரசன் வரம் பொய்ப்பதற்கும் வழியாகலா மாதலால், இந்தஉனதுசெயல் தக்கதன்று என்றன னென்பதாம். நீ எனக்கு விடைதந்து கானகமனுப்பவேண்டுமென்றபடி. கற்பினாய் - இறந்தியவாகி. ஈற்றயல்ஆ ஓவாயிற்று. பி - ம்:—[1]எனை. (கூகஉ)

கசு.—பின்னும் சிறந்த சொற்களால் இராமன் தாயைத் தேற்றல்.

பொற்பு றுத்தன [1]மெய்ம்மை [2]பொதிந்தன
சொற்பு றுத்தற் குரியன சொல்லினான்
கற்பு றுத்திய கற்புடை யாடனை
[3]வற்பு றுத்தி மனங்கொளத் [4]தேற்றுவான்.

(இ - ள்.) (பின்னும் இராமன்), கற்பு உறுத்திய கற்பு உடையாள்தனை-கல்லின் தன்மையை உறுதிப்படுத்திய கற்பினையுடைய அக்கோசலையை, வற்புறுத்தி-உறுதிப்படுத்தி, மனம் கொள - மனத்திற்பதியும்படி, தேற்றுவான்-தேறப்பண்ணும்பொருட்டு,—பொற்பு உறுத்தன - அழகியனவும், மெய்ம்மை பொதிந்தன - உண்மை நிறைந்தனவும், சொற்பு உறுத்தற்கு உரியன - சொல்லுதற்குத் தகுந்தனவுமாகிய வார்த்தைகளை, சொல்லினான்-கூறினான்; (எ - று.)—அவை மேற்காண்க.

மலையினும் பலமடங்கு அதிகமாகச் சலனமில்லாததென்பார் 'கற்புறுத்திய கற்பு' என்றார். இனி "சீலமின்னதென்றருந்ததிக்கருளியதிருவே" என்பதுபோலக் கற்பினிலக்கணத்தை இன்னவகைத்தென்று உலகத்தார் அறியும்படி இலக்கியமாயிருந்து உறுதிப்படுத்திய கற்பென்றுமாம். சொற்பு-சொல்: பு - தொழிற்பெயர்விகுதி. சொற்புறுத்தல், உறு - துணைவினை. தேற்றுவான் - எச்சம்; பெயராய், எழுவாயாகவுமாம். பி - ம்:—[1]மென்மை. [2]புரிந்தன. [3]வைப்பு. [4]தேற்றினான். (நூகஈ)

கஎ.—இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்: இராமன் கோசலையை நியாயங்காட்டித் தேற்றுதலைத் தெரிவிக்கும்.

சிறந்த [1]தம்பி திருவுற வெந்தையை
மறந்தும் பொய்யில [2]னுக்கி வனத்திடை
யுறைந்து தீரு முறுதிபெற் றே[3]னிதிற்
[4]பிறந்தி யான்பெறும் பேறென்ப தி[5]யாவதோ.

(இ - ள்.) சிறந்த தம்பி - (என்னிலுஞ்) சிறந்த பரதன், திருஉற-ராஜ்ய லக்ஷ்மியைப் புணர, எந்தையை - என்தந்தையை, மறந்துஉம் பொய் இலன் ஆக்கி - மறந்தும் பொய்சொல்லாதவனாகச் செய்து, வனத்திடை - காட்டில், உறைந்து - வசித்து, தீரும் - திரும்பிவருகின்ற, உறுதி - நன்மையை, பெற்றேன் - அடைந்தேன்; இதின் - இதனிலும், யான்-, பிறந்து - (இவ்வுலகத்தில்) தோன்றி, பெறும்-அடையவேண்டிய, பேறுஎன்பது - பாக்கியமென்று சொல்லப்படுவது, யாவதுஓ - எதுவோ? [ஒன்றுமில்லை]; (எ - று.)

தம்பிக்கு இராச்சியத்தைக்கொடுத்துத் தந்தையை மெய்யனாக்கிக் காட்டில் தவமுஞ்செய்யப்பெறுவதால் மூவர்க்கும் நன்மையைத்தரும் இவ்வனவாசம் பெரும்பேறாகு மென்கின்றான். கீழ் "தின்னிலுநல்லன்" எனத் திருத்தாயார் கூறினதற்குஏற்ப 'சிறந்த தம்பி' என்றான். மறந்தும் பொய்யிலன் - "மறந்தும் பிறன்கேடுசூழற்க" என்பதுபோல நின்றது. இதின் - இதனின் என்பது அன்சாரியை தொக்குநின்றது. சரீரமெடுத்ததற்கு இதனைப்பார்க்கிலும் பாக்கியம் வேறென்னவிருக்கின்ற தென்றவாறு. பி ம்:—[1]எம்பி. [2]ஆக. [3]இனிப். [4]பிறந்துநான். [5]யாவதே. (நூகஉ)

கஎ. விண்ணு மண்ணு [1]பிவ்வேவலையு மற்றும்வே
றெண்ணும் பூத மெலா[2]மழிந் தேகினு
மண்ண லேவன் [3]மறுக்க வடியன்னற்
கொண்ணு மோ[4]விதற் குள்ளழி வேயென்றான்.

(இ - ள்.) விண்ணும்-ஆகாயமும், மண்ணும் பூமியும், இவ்வேலையும் - இந்தச் சமுத்திரமும் [அப்பும்], மற்றும்-இன்னும், வேறு எண்ணும் - வேறாக எண்ணப்படுகின்ற, பூதம் - (கருப்பு காற்று என்னும் இரண்டு) பூதங்களும், எலாம்-இவையனைத்தும், அழிந்து எகின்றும்-அழிந்துபோவதாயிருந்தாலும், அண்ணல் சக்கரவர்த்தியினது, ஏவல் ஆஞ்ஞையை, மறுக்க - தடுக்க, அடியனேற்கு-அடியேனுக்கு, ஒன்னுமோ தகுமோ? [தகாது]; (ஆதலால்), இதற்கு உள் அழிவேல் - இதற்கு நீ மனம்வருந்தாதே, என்றான் - என்றுகூறினான் (ஸ்ரீராமன்); (எ - று.)

என்னவிலைவதாயிருந்தாலும் தந்தையின் கட்டளையை மறுக்க என்னலியலாது; ஆதலால், நீ மனமழிவது யான் கானகஞ்செல்வதற்கு விடைதர வேண்டுமென்று வற்புறுத்திக்கூறியபடி. எகினுமென்ற உம்மை, எகாமையுணர்த்திநின்றது. அண்ணல் - பெருமையுடையோன்: பண்பாகு பெயர்.

பி-ம்:—[1]அவ். [2]இறந்து. [3]மறுக. [4]அதற்கு. (கஎஞ)

கஅ.—இராமன் காடுசெல்வதையுடன்பட்டுத் தன்னையும் உடனழைத்துச்செல்லுமாறு சோகலை கூறுதல்.

ஆகி லெம வரசன்ற ஞினையா
[1]லெக லென்பதி யானுழை யைக்கிலென்
[3]சாக லாவுயிர் தாங்கவல் லேனையும்
[4]போகி னின்னெறிங் [5]கொண்டுனை [6]போகென்றாள்.

(இ-ள்.) (என்று சொல்லக் கேட்ட சோகலை), 'ஐய-குழந்தாய்! ஆகில் - ஆனால், அரசன்தன் ஆணையால் - சக்கரவர்த்தியினது கட்டளைப்படி, ஏகல் - போகாதே, என்பது-என்பதனை, யான்உம்—, உரைக்கிலென்-சொல்லமாட்டுவேனல்லேன்; (உன்னைப் பிரிந்து), சாகலா உயிர்-அழியாத [நிலையுள்ள] பிராணனை, தாங்க - சுமக்க, வல்லேனையும் - வல்லவனல்லாத என்னையும், போகின்-(நீ) போவாயானால், இன்னெறியும்-உன்னெறியில், கொண்டுனை போகு-அழைத்துக்கொண்டுபோவாயாக,' என்றாள்—; (எ - று.)

கணவனைப் பொய்பனைக்காமல் மெய்பனைக்குவதே கற்புடைமாதர் செயலாதலால், நான் உனக்குப் போக விடை தந்தேன். போகாவுயிரைத் தாங்கிவருந்துகின்ற என்னையும் உன்னுடன் அழைத்துப்போவாயாக எனக் கௌசலை இராமனிடத்துக் கூறினளென்க. சாகலாவுயிர்—"மன்னுயிர்" போல. சாகலாவுயிர் என்பதற்கு-சாகவில்லை யென்ற ஒரு குறைமாத்திரம் உள்ளதே

தவிர மற்றைப்படி ஒன்றுக்கும் உதவாத நிலையை யடைந்துள்ள உயிர்என்று மாம்: இத்தொடரில், செத்தால் இவ்வருத்தம் நீங்கி இன்புற்று வாழ்வே னென்ற குறிப்பும் தோன்றும்: "போகாவுயிர்"என்பது, ஆண்டாள் பாசுரம். இனி, உயிர் சாகலாத் தாங்கவல்லேனை யெனக்கூட்டி, உயிரை விடாமல் தாங்கியிருக்கிற என்னை யென்றுமாம். வல்லேன் - வல்லமையற்ற நான்: வன்மையென்ற பண்பினடியாப்பிறந்த 'வல்'என்ற பகுதி உடன்பாடுதிர் மறையிரண்டிலும் வருதலை "வல்லாராயினும் வல்லுநராயினும்" என்ற புறப் பாட்டாலும் அறிக. பி-ம்:—[1]எகனீயென்று. [2]உரைக்கலென். [3]சாகிலா. [4]போகிலுண்ணெடும். [5]கொண்டுடன். [7]போது. (நகசு)

20.—இதுமுதல்எழுகவிகள் - நீ கணவனுடனிருந்து உதவவேண்டுமென்றும் நான் கானகஞ் செல்வது நன்றுஎன்றும் இராமன் கோசலைபிடம் தெரிவித்தலைக் கூறும்.

என்னை நீங்கி [1]யிடர்க்கடல் [2]வைகுறு
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன்
றுன்னு கானம் [3]படரத் [4]துணிவதே
[5]யன்னை யேயறம் [6]பார்க்கிலை யா[7]மென்றான்.

(இ-ள்.) (என்று சொல்லக்கேட்ட ஸ்ரீராமன்), 'அன்னையே-தாயே!(நீ), என்னை நீங்கி அடியேனைப் பிரிந்து, இடர் கடல் - துக்கசாகரத்தில், வைகு றும்-மூழ்குகின்ற, மன்னர் மன்னனை-சக்ரவர்த்தியை, வற்புறுத்தாது-தைரி யப்படுத்தாமல், உடன் என்னுடன், துன்னு கானம்-நெருங்கிய காட்டிற்கு, படர-வர, துணிவதுஎ-மனத்து நிச்சயிப்பது தகுமோ? அறம் - தருமத்தை, பார்க்கிலை ஆம்-(ஆராய்ந்து)பார்க்கவில்லைபோலும்,' என்றான்—;(எ - று.)

புதல்வனைப் பிரிந்ததால் பெருந்துயரமடைந்து வருந்தும் மன்னவர்க்கு அருகிலிருந்து தைரியஞ்சொல்லித் தேற்றிக் காக்கவேண்டுவது உமது கட மையாயிருக்க, நீர் என்னைத் கானகம்வரத் துணிகின்றீரே; இது தரும மாகுமோ? என்றனனென்பதாம். பி-ம்:—[1]இடரகல். [2]வைகுமம். [3]தொடரத். [4]துணிவதென், துணிவதோ. [5]அன்னை நீர், அன்னை நீ. [6]பார்க்கிலிரால், பார்க் கிலையால். [7]எனை. (நகஎ)

உக. வரிவி லெம்பியிம் மண்ணர [1]சாயவற்
குரிமை மாநில மூற்றபின் கொற்றவன்
றிருவி னீங்கித் தவஞ்செயு நாளுட
னருமை நோன்புக ளாற்றுதி [2]யாமன்றே.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) (என்றுகூறிப் பின்னும்), வரி வில் எம்பி இ மண் அரசு ஆயவ ற்கு-கட்டமைந்த வில்லினையுடைய இவ்வுலகத்திற்கு அரசனாகிய என் தம்பி

க்கு,மா நிலம் உரிமை உற்ற பின்-பெரிய பூமியின் உரிமை பொருந்தியபின்பு, கொற்றவன் - சக்ரவர்த்தி, திருவின் நீங்கி - ராஜ்யலக்ஷ்மியினின்று நீங்கி, தவம் செயும் நாள் - தவத்தைச்செய்யுங் காலத்தில், உடன்-அவருடன் (இருந்து), அருமை நோன்புகள் - (செய்தற்கு) அரிய விரதங்களை, ஆற்றுதி-செய்வாயாக: (எ - று.)—ஆம், அன்றே - அசைகள்.

பரதனுக்கு அரசைத் தந்துவிட்டுத் தவஞ்செய்யுமாறு தசரதசக்ரவர்த்தி காட்டுக்குச்செல்லும்போது உடனிருந்து பணிவிடைபுரிதலும் அருமைநோன்புகள் புரிதலு மல்லவோ நுமக்குக் கடனென்றனன் இராமனென்பதாம்.சண்டுத்தவ மென்றது-இவ்வுலகவிட்டுத் தீபோது வனத்திற்சென்று மனையாள் வழிபட வானப்பிரஸ்தனைப் ஒழுகும் ஒழுக்கத்தை. பி-ம்:—[1]ஆயவர்க்கு, ஆன வற்கு. [2]நீயென்றான், ஆமென்றான். (நகஅ)

௨௨. சித்த நீதிகைக் கின்றதென் றேவல
மொத்த மாதவஞ் செய்துயர்ந் தானன்றே
யெத்தினைக்குள வாண்டுக [1]ளீண்டனை
[2]பத்து நாலும் [3]பகலல வோவென்றான்.

(இ-ள்.) (நீ செய்யவேண்டியகடமை கணவன்பணிவிடையேயாயிருக்க, நீ சித்தம் திகைக்கின்றது என்-நீ மனங்கலங்குதற்குக்காரணம் யாது? தேவர் உம்-இப்போது தேவராயிருப்பவர்களைத், தந்த-(தமது மனத்திட்பத்துக்குத்) தக்க, மா தவம்-மஹாதபசை, செய்து—, (அதனால்). உயர்ந்தார் அன்றே - உயர்ச்சிபெற்றவர்களல்லவா? ஈண்டு ஆண்டுகள் - இப்போழுது (என்னைக் காட்டில் வசிக்குமாறு தந்தையார் விதித்த) வருடங்கள், எத்தினைக்கு உள - எத்தனையிருக்கின்றனவோ, அவை - அந்தப் பதினான்கு வருடங்களும், பத்து மும் நால்உம் பகல் அலவு - (தேவமானத்தால்) பதினான்கு தினங்களல்லவா? என்றான்—; (எ - று.)

செய்தன்றே உயர்ந்தாரென்று கூட்டுதலுமாம். மிகவும் மனக்கலக்கமுறுகின்ற கோசலையைநோக்கி, இராமபிரான் 'அம்மா! பிரமன் முதலிய தேவர்களும் அந்தப்பதவியைப் பெற்றது தவத்தின்பயனாக வல்லவோ? யானும் காட்டிற்சென்று தவம்புரியின் அப்படிப்பட்ட மேன்மைகளை யடையலாமே;அன்றியும், தந்தையார் கூறிய பதினான்கு வருடமென்பது, பதினான்கு நாளாகக்கழியுமன்றோ: எனதுதந்தையார் என்னுடைய நன்மைக்காகக் காட்டிற் சிலகாலம் தவசியரோடு வாழும்படி ஏவினரல். அதற்காக நீர் இத்தனை மனந்திகைத்து வருந்தலாமோ?'என்று கூறித் தேற்றினனென்க. தேவரும் தவஞ்செய்து உயர்ந்தாராதலால் யானும் தவஞ்செய்யக் கானகஞ்செல்லுதல் இன்றியமையாததென்பது; முன்னிரண்டடிகளிற் போதரும். மனிதர்க்கு ஓராண்டு தேவர்கட்கு ஒருநாளாகு மென்பது நூற்கொள்கை யாதலால், 'அவைபத்துநாலும் பகலலவோ' என்றான்; வெகுவிரைவிற் கழிந்துவிடு மென்ற கருத்தும் இதிற் பெறப்படும். இனி, பகல் - நாழிகையென்றும்

உரைப்பர். இராமபிரான் தான் விஷ்ணுவின் அவதாரமூர்த்தியாதல்பற்றித் தேவமானத்தால் இங்ஙனம் கூறினனென்பாருமுளர். சித்தம் நீதி கைக்கின்றது என் - (நியாயமானசெயலைச் செய்ப ஏவினால்) மனத்தினால் நியாயமான அந்தச்செயலை வெறுக்கின்றது என்ன காரணம்? என்று பிரித்துப்பொருள் கூறவுமாம். ஆண்டுகளீண்டனை - பிராசமீ. பி - ம்:—[1]ஆண்டனை, யாண்டனை. [2]பத்துநாலு. [3]பகலல்லதேவாவெனை, அன்றேபகரென்றனன். (நுகஉ)

உஙூ. முன்னர்க் [1]கோசிக னென்னு முனிவரன்
றன்ன ருட்டலை தாங்கிய விந்தையும்
பின்ன ரெய்திய பேறும் பிழைத்தவோ
வின்ன [2]நன்[3]றவ [4]ரேயின [5]செய்தலே.

இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (என்றுபின்னும்), முன்னர் - முன்பு, கோசிகன் என்னும் முனிவரன்தன் - கௌசிகன் என்று சொல்லப்படுகின்ற இருடித்தலைவனது, அருள் தலை - கிருபையினால், தாங்கிய - பெற்ற, விந்தையும் - வித்தையும், பின்னர் - பின்பு, எய்திய - அடைந்த, பேறும் - பாக்கியமும், பிழைத்த ஒதவறினவோ? [இல்லை]; அவர் - அப்படிப்பட்ட முனிவர்கள், ஏயின-ஏவின காரியங்களை, செய்தல்—, இன்னம் நன்று - இன்னமும்நல்லது; (எ - று.)

ஈண்டு விந்தையென்றது - பலை, அதிபலையென்னும் இரண்டுமந்திரங்களை. பின்னர் - அவ்விந்தைகளைப்பெற்று விசுவாமித்திரனது வேள்வியைக் காத்தபின்பு. எய்தியபேறு - சீதாகல்யாணம். ஒருமுனிவனுக்கு ஏவினசெய்தலால்வந்த பயனே இவ்வளவாயிருத்தலாற் பலமுனிவர்களுக்கு ஏவினசெய்தலால் வரும் பேறு அளவிலவாயிருக்குமென்பார், 'இன்ன நன்றவரே யினசெய்தலே'என்றான். ''மாண்ட மாதவர்'' (அ) 'முனிவரன்'ஏ பவற்றைநோக்கி 'அவர்' எனச் சுட்டினான். இன்ன-இவ்வாறுசெயவென்றுமாம். இனி, இச்செய்யுளுக்கு-விசுவாமித்திரமுனிவனால் முன்பெற்ற அஸ்திரம்முதலியவை எனக்குத் துணையாயிருக்கின்றனவே யென்பது கருத்தாகவும் பொருள்கூறுவர். கோசிகன் - கௌசிகனென்பதன் விகாரம்; குசிகவமிசத்தவனென்பது பொருள். நமக்குக் குலகுருவாகிய வசிஷ்டமுனிவனோடு பகைத்துப் பின்பு தனது அரசை நீத்துப் பலநாட் பலவிடத்துத் தவஞ்செய்து பிரமரிஷியென்னும் பட்டமும்பெற்ற பெரியவ னென்பது தோன்ற, 'முனிவரன்' என்றான். அருட்டலை, தலை - ஏழனுருபு; கருவிப்பொருட்கண் வந்தது. விந்தை-வித்யா என்னும் வடமொழிச்சிதைவு. பி - ம்:—[1]கௌசிகன். [2]நின்று. [3]அவர்க்கு. [4]ஏயது. [5]செய்வதே. (நுஉ0)

உச. மாத வர்க்கு வழிபா டிழைத்தரும்
போத முற்றிப் பொருவ ரு விந்தைக
ளேத [1]மற்றன தாங்கி யிடையவர்
காதல் பெற்றிங் ருகர்வக் காண்டியால்.

(இ - ள்.) மா தவர்க்கு வழிபாடு இழைத்து - மிக்கதவத்தினையுடைய முனிவர்க்குப்பணிவிடைசெய்து, அரு போதம் முற்றி-பெறுதற்கரிய அறிவு மிகுந்து; ஏதம் அற்றன - குற்றமற்றவைகளாகிய, பொரு அரு விஞ்சைகள்-ஒப்பில்லாத வித்தைகளை, தாங்கி - பெற்று, இமையவர் காதல் பெற்று - தேவர்களது அன்பை அடைந்து, இ நகர் வர - (அடியேன் காட்டினின்று) இந்நகரத்துக்கு மீண்டுவர, காண்டி - பார்ப்பாயாக; (எ - று.)—ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம்.

போதமாவது - கல்விகேள்விகளினுல அறிவோடு தோன்றும் உண்மையறிவு; வீடுபயக்குந் தத்துவஞானமுமாம். அது "அறிவற்றங்காக்குங் கருவி செறுவார்க்கு, முள்ளழிக்க லாகா வரண்" என்பது முதலாகச் சிறப்பித்துக் கூறப்படுதலால், 'அரும்போதம்' என்றார். அரும்போதமுற்றுதல் - அகத்திய முனிவன்முதலிய அருந்தவ ருபதேசத்தால்; பொரு அரு விஞ்சைகள் ஏதமற்றன தாங்குதல் - அவரருளால்; இமையவர் காதல்பெறுதல்-அவருக்குப்பகைவர்களாகிய ராவணநிராகரூஸர்களுடைய வதத்தால். காண்டி - நீ இருந்துபாரென்றபடி. பி - ம்:—[1]அற்றவை. [2]தன்காப், நன்கா. (கூ2க)

உரு. மகர மேவலமண் டொட்ட[1]வண் டாடுதார்ச்
சகரர் தாதை பணிதலை நின்றுதம்
[2]புகரில் யாக்கைபி [3]னின்னுயிர் போக்கிய
[4]நிகரின் மாப்புகழ் நின்றதன் [5]றெவ்வெனை.

(இ-ள்.) மகரம் மேவல மண் - முதலைகளையுடைய கடலினைச் சூழ்ப்பட்ட பூமியை, தொட்ட - தோண்டிய, வண்டு ஆடு தார் சகரர் - வண்டுகள் உலாவுகின்ற மாலையையுடைய சகரபுத்திரர்கள். தாதை - (தமது) தகப்பனது. பணி தலை நின்று - உத்தரவின்படி யிருந்து; தம் புகர் இல் யாக்கையின் - தமது குற்றமற்ற உடல்களினின்று; இன் உயிர்-இனிய பிராணன்களை, போக்கிய-வெளிப்படுத்தியதனையுண்டாகிய; நிகர் இல் - ஒப்பில்லாத; மா புகழ்-மிக்க கீர்த்தி, நின்றது அன்றே - (இதுவரையிலும்) இருக்கின்றதல்லவா? எனை - என்றுவினாவல்லி; (எ - று.)—"என்றான்" என அடுத்த கவியில் முடியும்.

தான் தக்கைதிசால்லுத் தலைமேற்கொண்டு கடக்கவேண்டுமென்று வற்புறுத்துதற்பொருட்டு முன்னோர்கள் தக்கைதிசால்லின்படிசெய்து மேம்பாடு பெற்றமையை, இதனைலும் அடுத்த செய்யுளாலும் காட்டுகின்றான். மண் வேலை தொட்ட என்பதற்கு - மண்ணில் வேலைபடத்தொட்ட வென்றும், மண்ணை வேலைபாகத்தொட்ட வென்றுமாம். சகரர் - ஸாகரர் என்னுந் தந்தை தாத்தத்தின்விகாரம். யாணும் பித்ருவசனபரிபாலனஞ் செய்தலை லையின் சகரர்புகழ் எல்லாவுலகங்களிலும் நிலைபாய் நிற்றல்வேண்டுமென்பதும் நிற்க மென்று னென்பது. சகரர் தமதுதக்கைபணிபால் வெள்விக்குநிலையை நாடிச்சென்றாராயினும், அத்தவியாசத்தாலேயே உடல்சாம்பராயினாரதலால் இங்ஙன்கூறியது. பி-ம்:—[1]தண்டொட்டினர்ச், வண்டொட்டணர்ச், திண்டாட்டத்தாற். [2]புகரிலாமையின். [3]நின்று. [4]நிகரிலாப். [5]என்றான். (கூ22)

உசூ. டான்ம றிக்கரத் தான்மழு வேந்துவான்
ற்ன்ம றுத்திலன் ற்ணதசொற் [1]ற்ணையே
யூன றக்குறைத் தாணுர வோ[2]ணுரை
யான்[3]ம றுப்பதென் றெண்ணுவ தோ[4]வென்ற்ன்.

(இ - ள்.) (பின்னும்), மான் மறி கரத்தான் - மான்குட்டியை (இடக்) கையிலுடைய சிவபெருமானது, மழு - மழுப்படையை, ஏந்துவான் - தாங்கிக்கொண்டிருப்பவனாகிய பரசுராமன், தாதை சொல் - தகப்பனாராகிய ஜமதக்கினிரிஷியினுடைய வார்த்தையை, தான்—, மறுத்திலன் - தடுக்காதவனாய், தாயைவ - பெற்றவளாகிய ரேணுகையையே, ஊன் அற-சரீரம் அறும்படி, குறைத்தான் - (தலையைத்) துணித்தான்; (என்றால்), உரவோன்-சக்தியினது, உரை - ஆஜ்ஞை, மறுப்பது - தடுக்கத்தக்கது, என்று-, யான் எண்ணுவதோ - நான் நினைப்பது தகுமோ? என்றான்—; (எ - று.)

கோசலை கணவனுடனிருக்கவேண்டுமென்று வற்புறுத்திய இராமன், 'தந்தையினுரையால் பரசுராமன் தாயையும் கொன்று விளங்கினான்: அப்படியிருக்க நான் தந்தைசொல்லை மீறுவது தகுதியோ? தகுதியன்று' என்று தான் தந்தைசொல் தட்டலாகாதென்பதை வற்புறுத்திக்கூறுகின்றானெனக. தகப்பனார் வசனத்தை யனுசரித்துக் கோவதஞ்செய்த கண்டுமகர்ஷிசரித்திரமும் இங்கேமுதனூலிற் கூறியுள்ளது. "மாத்ருதேவோபவ [மாதாவைத் தெய்வமாகக் கொள்வாய்]" என்று இருக்க, தந்தையின் கட்டளையால் தாயைக்கொல்வது எங்ஙனம் பொருந்து மெனின்?—"பிதுஸ் ஶதகுணம் மாதா கௌரவேணாதிரிச்யதே [தந்தையைக்காட்டிலும் தாய் நூறு மடங்கு கௌரவத்தால் மேன்மைபெற்றவள்]" என்றுற்போன்ற தருமசாஸ்திரவசனங்கள் இருந்தாலும் அவை தந்தையைவிடத் தாய் மிகவும் உபசரிக்கத்தக்கவ ளென்ற கருத்தைத் தெரிவிப்பனவா மாதலால், தாய்க்குத் தீமை பயப்பதாயினும் தந்தை ஆஞ்ஞையிட்டபொழுது நியாமகனென தந்தையின்சொல்லே நடத்தவேண்டியதா மென்பர். "யாடுங் குதிரையு நவ்வியு முழையு, மோடும் புல்வா யுளப்பட மறியே" என்றதனுன் 'மான்மறி' என்றார். மறி-இளமைப்பெயர். ஊனவனத் தசையை யுணர்த்திநின்ற ஓரெழுத் தொருமொழி "ஊனவெனுருபெயராவொடுசிவணும்" என்றதனுல், னகரவொற்றுப்பெற்று முடிந்தது; அஃது, ஈண்டாகுபெயர். உரவோன் - அறிஞன்; மூத்தவன். இச்செய்யுளிற்கூறிய சரித்திரம் வருமாறு:—சமதக்கினிமுனிவனின் பத்தினியான ரேணுகையென்பாள் ஒருகால் நீராடிப் புனல்கொணரக் †கங்கைக்குப் போயிருக்கையில் அங்கே சித்திரரதனென்ற கந்தருவன் அப்ஸரஸ் ஸ்திரீகளோடு புனல்விளையாட்டயர்கையிற் கண்டு மனம்நெகிழ்ந்து அங்குத்தானே தாமதித்துப் பிறகு பர்த்தா ஓமஞ் செய்யும்வேளை கடப்பதுகண்டு வந்து அச்சத்துடனே தீர்த்தகலசத்தை முன்னேவைத்துநிற்க, முனிவன் அவளதுவியபிசாரத்தை யுணர்ந்து, முறையே

† கருமுகைக்குளென்று மகாபாரதத்திலுள்ளது.

ருமண்வான் ஸ²மேஷணன் வஸ² விஸ்வாவஸ² என்னுந் தன்புதல்வர் நால்வரைக் கூப்பிட்டு 'தீச்செயலுச்செய்த இவ்வள மனத்திற் கவலையின்றிக் கொல்லுங்கள்' என்று கட்டளையிட, அவர்கள் தாயைக்கொல்வதற்குப் பின்வாங்கி நிற்க, இறுதிப் புதல்வனுகிய பரசுராமனைப் பார்த்துத் தன்சொல்லுக் கேளாத தமையன்மாரையும் விபரீசனித்த தாயையுங் கொல்லுமாறு கூற, பரசுராமன் தனது கோடரிப்படையால் உடன்பிறந்தாரையும் தாயையும் தலையை வெட்டி வீழ்த்திலுனுக, பிறகு சினந்தணிந்த சமதக்கினிமுனிவன் மனமுவந்து பரசுராமனேநோக்கி 'நீ என்சொல்லால் செய்தற்குஅரிய தொழிலுச் செய்தாயாதலால் விரும்பிய வரத்தைக் கேட்பாயாக' என்ன, பரசுராமன் 'எனது தாயும் உடன்பிறந்தோரும் துயிலுணர்ந்தெழுந்தவர்போல் எழுக்கடவர்' எனவும், 'தீவினைநீங்கக்கடவர்' எனவும் வரம்வேண்ட, முனிவனருளால் அவர்கள் அங்ஙனமே தீவினைநீக்கித் துயிலுணர்ந்தவர்போற் பிழைத்தெழுந்தனரென்பது. பி-ம்:—[1]தாய்தலை. [2]அருள். [3]மறப்பன், மறப்பது. [4]எனை. (உஉஉ)

உஎ.—கோசலை எப்படியும் இராமன் நாட்டைவிட்டுச்

செல்வா னென்று கருதுதல்.

இத்தி றத்த வெனைப்பல வாசக
முய்த்து ரைத்த மகனுனை [1]யுட்கொளா
லெத்தி றத்து மிறக்கு[2]மிந் நாடெனை
மெய்த்தி றத்து விளங்கிழை [3]யுன்னுவாள்.

(இ - ள்.) இ திறத்த-இப்படிப்பட்டனவாகிய, எனை பல வாசகம்-இன்னும் அநேகம் வார்த்தைகளை, உய்த்து உரைத்த-தூண்டி கூறிய, மகன்-ஸ்ரீராமனது, உரை-வார்த்தையை, உள் கொளா-மனத்திலுட்கொண்டு,—'இ நாடு எத்திறத்துஉம் இறக்கும்-எப்படியும் இக்கோசலதேசத்தை(இராமன்) விட்டுவிடுவான் [காட்டிற்குப்போய் விடுவான்],' எனை என்று, மெய் திறத்து விளங்கு இழை-சத்தியகுணமாகிய ஒளிசெய்கின்ற ஆபரணத்தையுடைய அக்கோசலை, உன்னுவாள்-மனத்துக்கினைப்பாளாஞள்; (எ - று.)

இராமன் வார்த்தையைக்கேட்டுக் கோசலை 'இவன் எப்படியும் என்னை இங்குத்தானேவிட்டுக் காட்டுக்குச்செல்வானெனத் தோன்றுகின்றதே; இதற்கு என்செயலாம்' எனத் தன்மனத்திலு ளாலோசிக்கலாறு எனபதாம். மெய்த்திறத்துவிளங்கிழை யுன்னுவாள் என்பதற்கு - விளக்கிழை மெய்த்திறத்து உன்னுவாளென்றும், உடம்பின்மேல் விளங்குகின்ற இழையையுடையவள் உன்னுவாளென்றுங் கூறலாம். பி-ம்:—[1]உட்கொளாள். [2]இன்னெனை, இந்நாளெனை. [3]உள்ளுவாள். (உஉச)

உஅ—'பரதனரசாளட்டும்: இராமன் காடுசெல்லாதபடி மன்னவனை வேண்டுவேன்' என்று கோசலை மன்னனுள்ளாஇடத்துக்தப்போதல்.

அவனி [1]காவல் பரதன தாகுக
விவனிந் நூல மிறந்திருங் கானிடைத்
[2]தவனி லாவகை காப்டென் [3]றகைவிலாப்
புவனி நாதற் றொழுதென்று போயினள்.

(இ-ள்.) (என்று நினைத்துப் பின்பு), (கோசலை), 'அவனி காவல்-ராஜ்ய பரிபாலனம், பரதனது ஆகுக - பரதனுடையதாகுக: இவன்-இவ்விராமன், இ ஞாலம் இறந்து-இந்நாட்டை விட்டு, இரு கானிடை-பெரிய காட்டினிடத்தில் (போய்), தவன் நிலா வகை - தவறில் நிற்காதபடி, தகைவு இலா - (கைகேயியின் தொழிலைத்)தடுத்தல்செய்யாத, புவனி நாதன்-சக்ரவர்த்தியை, தொழுது-அஞ்சலிசெய்து (வேண்டி), காப்பென் காப்பாற்றுவேன்', என்று-, போயினள்-(தசரதனிருக்கிற இடத்திற்குப்) போனள்; (எ - று.)

இரண்டுமூன்றுமுறை இராமபிரான் கோசலையைநோக்கி 'பத்தினிக்குக் கணவனுடனிருந்து பணிவிடைசெய்வதே தகுதி: என்னைப்பிரிந்து வருத்தப்படுகையில் அம்மன்னவனைத் தேற்றி ஏற்ற பணிவிடைசெய்துகொண்டிருக்க: யாவரும் மன்னவனுக்குக்கட்டுப்பட்டுநடக்கவேண்டுமாதலால், எனக்கு அனுமதிதருக. பரதன் தர்மிஷ்டனாகையால் கைகேயியால் உனக்கு அவமரியாதையடையும்படி விடான்' என்று பலவாறுகச்சொல்ல, கோசலை தந்தையின் சொல்லை நிறைவேற்றுவதில் தன்மகனுக்குஉள்ள ஊற்றத்தைக் கண்டு பிரயாணஞ்செய்கையில் அழுவது அமங்கலமென்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ரட்சைகட்டி மங்களமுண்டாகுமாறு பலபடியாகவாழ்த்தி அநுமதிகந்தனளென்று முதனூல் கூறும். புவனி-புவநமென்ற வடசொல்லின் விகாரம்; இச்சொல் இங்ஙனம் விகாரப்பட்டுவருவதனை "பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளிரோ" என்ற கம்மாழ்வார்பாசுரத்திலும் காண்க. பி-ம்:— [1]காத்தல். [2]தவநிலாப்பகை. [3]தகவினப், தகவுடைப், தகவிலாப். (உஉரு)

உக.—இராமன் சுமித்திரையின்யாளினிகளை யடைதல்.

போகின் றுளைத் தொழுது புரவல
[1]னுக மற்றிவ டன்னையு மாற்றி'யிச்
சோகந் தீர்ப்பவ ளென்று சுமித்திரை
மேகந் [3]தோய்தனிக் கோயிலே பேயினான்.

(இ - ள்.) போகின்றுளை - (அவ்வாறு) போகின்ற கோசலையை, தொழுது - அஞ்சலிசெய்து, (ஸ்ரீராமன்).—புரவலன்ஆக-தசரதனைத் தேறுதலடைய (ச்செய்து), மற்று - பின்னும், இவள் தன்னை உம் - இக்கோசலையையும், ஆற்றி - தணியச்செய்து, இ சோகம் தீர்ப்பவள் - இத் துன்பத்தை நீக்கவல்லவள், (சுமித்திரை)' என்று - என்றுகருதி,

சுமித்திரை - சுமித்திரையினது, மேகம் தோய் - மேகங்கள் தங்கப்பெற்ற, தனி - ஒப்பற்ற, கோயிலை - மாளிகையை, மேயினன்-அடைந்தான்; (எ-று.)

இனி, புரவலனெந்தன்னையும், மற்றிவள்தன்னையும் ஆற்றியென்றுமாம்; புரவலனெம் - சக்ரவர்த்தி திருமேனி. நாம் சுமித்திரையினிடஞ் செய்தி தெரிவித்து வேண்டிக்கொண்டால் அவள் என் தந்தையாரையும் தாயாரையும் தேற்றுவாளென்று கருதி அச்சுமித்திரையின்மாளிகைக்கு இராமபிரான் சென்றனனென்க. கோசலைபால் மங்களவாழ்த்துச் செய்யப்பெற்ற இராமன் சீதையுள்ள இடத்துக்குச்சென்றனனென்று முதனூல் கூறும். பி - ம்:— [1]ஆகமுற்றவடன்னையும், ஆகமற்றவடன்னையும். [2]அச். [3]தோய்த்திரு, தோய்திரு, தோய்மணி. (நஉசு)

நஎ.—சென்ற கோசலை கைகேயியின்மனையைச் சார்ந்து சக்ரவர்த்தி வீழ்ந்துகிடத்தலெக்கண்டு தான் மூர்ச்சித்துவிழுதல்.

கடந்த கோசலை கேகய [1]நாட்டிறை
மடந்தை கோயிலை யெய்தினண் [2]மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் கெட்டுயி
ருடைந்த போதி னுடல்விழுந் தென்னவே.

(இ - ள்.) கடந்த கோசலை-(அவ்வாறு) கடந்துபோன கௌசல்யாதேவி, கேகயம் நாடு இறை மடந்தை கோயிலை - கேகயநாட்டிற்குத் தலைவனான அசுவபதியினது புதல்வியாகிய கைகேயியின் மனையை, எய்தினள் - அடைந்தவளாய், மன்னவன் கிடந்த பார்மிசை-அரசன் விழுந்துகிடக்கின்ற இடத்தில், உயிர் உடைந்த போதின் - பிராணன் போன காலத்தில், உடல்—, விழுந்து என்ன-விழுந்தாற்போல, கெட்டு-(அறிவு) சோர்ந்து, வீழ்ந்தனள்—; (எ-று.)

'இராமபிரானைக் காட்டிற்குச் செல்லவிடாமலாவது செய்யவேண்டும்' என்ற கருத்துடன் அரசனிடத்துச்சென்ற கௌசலை அக்கு மன்னவன் தனையில் மூர்ச்சித்துக்கிடத்தலைக் கண்டு, தானும் மூர்ச்சித்து வீழ்ந்தனளென்பதாம். கீழ்க் கைகேசிசூழ்வினைப்படலத்தில் "கொடியாளின்னதுகூற...இடியேறுண்டமால்வரை போன்மண்ணினை வீழ்ந்தான்," "கூறுமுன்னைக் கூறுபதுக்குங்கொலைவாளி, னேறுமென்னும் வன்றுயராகத்தினை மூழ்கத், தேறுகிச் செப்பைமறந்தான்" என்பவற்றை நோக்கி 'மன்னவன் கிடந்த பார்' என்றார். உயிருடைந்தபோதினுடல்விழுதல், பிராணநாயகன் வீழ்ந்தபோது பிராணநாயகிவீழ்ந்ததற்கு உவமை. கோசலைபுலம்பலும், வசிட்டன்வந்து செய்தியறிந்து மன்னனைத் தேற்றிக் கைகேயிக்கு நன்மதிசொல்லியும் அவளைப்பழித்துப்பார்த்தும் அவள் தன்னிலையிற் சலியாமலிருத்தலைக் கண்டு இராமனை மீட்பதாகச்சொல்லி மன்னர்முதலியோர் குழுமிய சபைக்குச்செல்லுதலும் என்ற இவ் விஷயங்கள் முதனூலிற் கூறப்படவில்லை. பி - ம்:— [1]நாட்டன்றன். [2]மன்னவர். (நஉஎ)

வேறு.

உக.—இதுமுதல் நான்குகவிகள் - மன்னவனைக்கண்ட கோசலையின் புலம்புதலைத் தெரிவிக்கும்.

[1]பிறியார் [2]பிரிவே தென்னும் பெரியோய்! தகவோ வென்னு
[3]நெறியோ [4]வடியே நிலைநீ [5]நினையா [6]நினைவே தென்னும்
வறியோர் தனமே யென்னுந் தமியேன் வலியே யென்னு
மறிவோ வினையோ வென்னு மரசே யரசே யென்னும்.

(இ - ள்.) (விழுந்தபின் சிறிது தேறிய கோசலை), பிறியார் பிரிவு எது-பிரியத்தகாதவர்களுடைய பிரிவுக்குக்காரணம் யாது? என்னும் - என்பாள்; பெரியோய் தகவுஓ-பெருமையையுடையவனே! (இது உனக்குத்) தக்கதோ? என்னும்-; நெறிஓ - நீதியோ? (என்பாள்); அடியேம் நிலை நீ நினையா நினைவு எது - அடியவர்களாகிய எங்களுடைய நிலைமையை நீ மனத்திற்கொள்ளாத எண்ணம் எதனால்? என்னும்—; வறியோர் தனமே-ஒருபொருளும் இல்லாதார்க்கு அவர் வேண்டியதொருபொருள் போன்றவனே! என்னும்—; தமியேன் வலியே - (வேறு துணையின்மையால்) தனிபளாயின என்னுடைய பலமே! என்னும்—; அறிவுஓ - (இது உனக்கு) அறிவுதானோ? வினைஓ - (இது நீ செய்யத்தக்க) தொழிலோ? என்னும்—; அரசே அரசே-அரசனே! அரசனே! என்னும்—; (எ - று.)

பிறியார் - தம்மைப் பிறர்போற்கூறிய படர்க்கை இடவழுவமைதி; நானும் எனதுமகனு மென்றபடி. பெருமையாவது - செயற்கரிய செய்தல் தருக்கின்மை பிறர்குற்றங்கூறுமை என்றிவை முதலிய நற்குணங்களாற் சிறந்தாரது தன்மை. அடியேம் நிலைநீ நினையா நினைவு எது என்பதற்கு - அடியேங்களுடைய நிலைமையை நினையாமல் நீ வேறு நினைவதற்குக் காரணம் யாது? என்றுமாம். இது க்ஷத்ரதர்மத்திற்கு அடுத்த தன்றென்பாள், 'வினையோ' என்றாள். அறிவு ஓவினையோ-அறிவு நீங்கினையோ எனவுமாம். அரசேயரசே - முறையீட்டைத்தெரிவிக்க இரண்டடுக்கிற்று; அவலத்தால் இரண்டடுக்கிற்றெனக்கொண்டு, அரசன் கிடக்கிற கிடையிலேல இறந்ததாக நினைத்து இவ்வாறு புலம்பலுற்றா ளென்பாரு முளர். இனி, அரசு ஏய் அரசே - அரசருக்கேய்ந்த அரசனையென்றுமாம்; பிரிவென்பதுபோல பிறி என்னும் பகுதியும் உண்டு என்க: "பிறிந்தென் பெற்றமக்கள்" என்றார், திருமங்கையாழ்வாரும். பீ-மீ:—[1]பிறிவோர், பிறிவோ. [2]பிரிவோவினைவதாம், பிரிவோவிது தான். [3]நெறியோய். [4]அடியோம், அடியம். [5]நினையாய். [6]நினைவே, நினைவென்.

உஉ. இரு[1]ளற் றிடவுற் றிருளிரு மிரவிக் கெதிருந் திகிரி
யுருளத் தனியுய்த் தொரு[2]கோ னடையிற் கடைகா ணுலகம்
பொரு[3]ளற் றிடமுற் றுறு[4]மப் [5]பகலிற் புகுதற் [6]கென்றே
வருளக் கருதிற் றிதுவோ வரசர்க் கரசே யென்னும்.

(இ - ள்.) (பின்னும்), இருள் அற்றிட உற்று ஒளிரும் இரவிக்கு - இருளானது ஒழியும்படி நன்குவிளங்குகின்ற சூரியனுக்கு, எதிரும் - ஒப்பான, திகிரி-ஆஜ்ஞாசக்கரம், உருள-உருளும்படி, தனி - ஒப்பில்லாமல், உய்த்து - செலுத்தி, ஒரு கோல் கடைபில் கடைகாண்-(உனது) ஒப்பற்ற செங்கோல் யாதோரிடையூறுமின்றி நடத்துவருதலைக் கொண்டுள்ள, உலகம் - இவ்வுலகமானது, பொருள் அற்றிட முற்றுஉறும் அ பகலின் புகுதற்கு என்றஞ்சி எல்லாப்பொருள்களும் அழியும்படி முடிகின்ற பிரளயகாலத்திற் புகும்படி அழிவை யடையவேண்டுமென் றெண்ணினையோ? இது - இக்காரியம் (செய்தது : அருள கருதிற்றுஓ-அருள்கொண்டுசெய்பகினைத்ததாகுமோ? என்னும் - என்பாள்; அரசர்க்கு அமைச (என்னும்) - சக்ரவர்த்தியே! என்பாள்; (எ - று.)

ஒழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழுவுதலாகிய இருளறும்படி விளங்குதலாலும், சூரியகிரணஞ் செல்லுமிடங்களிலெல்லாம் பரவுதலாலும், சந்திரனைப்போலத் தேய்தலும் வளர்தலுமின்றி விளங்குதலாலும் 'இருளற்றிடவுற்றெளிரு மிரவிக்கெதிருந் திகிரி' என்றார். ஒருகோல் கடை - ஒரு செங்கோன்முறைமை யென்றுமாம். ஒருகோன் அடையில் எனப்பிரித்து, ஒரு அரசன் வருதலிலென்றுமாம். இனி, திகிரி உருள ஒருகோல் உய்த்து என்றலுமாம். இராமன் உலகத்துயிர்போல்பவரைதலால் அவன் காட்டைவிட்டுச்சென்றால் இக்தக் கோசலதேசமே அழிவுஅடையுமென்பான், 'பொருளற்றிட முற்றுறுமப்பகலிற் புகுதற்கென்றெ வருளக்கருதிற்று' என்கிறான், கௌசலை யெனினுமாம். பி-ம்:—[1]அற்றிடையுற்று. [2]தேர்டையில். தோணடையிற், கோனடையிக். கோனடவிக். கோலிடையிற். [3]இற்றிட, உற்றிட. [4]இப். [5]புகலிற். [6]அன்றெ. [7]அருளிற். (உஉக)

நஉ. திரையார் கடல்சூ ழுலகின் றவரேட திருவின் றிருவே
[1]நிரை[2]யார் கலியின் கடலே நெறிபார் [3]மறைதின் னிலையே
கரையா வயர்வெ னெனினீ கருணை யெயனை [4]யென்னென்
[5]றுரையா யிதுதா னழகோ வுலகே ழுடையா யென்னும்.

(இ - ள்.) (பின்னும்), திரை ஆர் கடல் சூழ் உலகின் தவரே - அலைகள் நிறைந்த கடலினாற் சூழப்பட்ட நிலவுலகின்க ணுள்ளவர் செய்த தவப்போல் பவனே! திருவின் திருவே - இலக்குமிக்கும் இலக்குமிபோல்பவனே! நிரை ஆர் கலியின் கடலே - ஒழுங்கினையுடைய செல்வக்குக் கடல்போல்பவனே! நெறி ஆர் மறையின் நிலையே - நீதிகள்நிறைந்த வேதத்தினுற்கோல்லிய சாரமாகிய தத்துவப்பொருள் போல்பவனே! கருணையனை - அருளுக்கு வீடாயிருப்பவனே! கரையா அயர்வென் எனை - மனமுருகி வருத்துகின்ற என்னைக்குறித்து, நீ என் என்று உரையா இது - நீ (அழுதற்குக் காரணம்) என்னென்று ஒருவார்த்தையுஞ் சொல்லாத இது, அழகுதான் ஓ-அழகாகுமோ? உலகு எழ் உடையாய் - எழுலகங்களையும் உடையவனே! என்னும்—; (ங - று.)

இப்படிப்பட்ட நீதிமானை அரசன் கிடைத்தது உலகத்தோரின் தவப் பயனேயாதலால், 'உலகின்தவமே' என்றும், இவனைப்பெறுதலால் அரச விலக்குமிக்கும் ஒருபேரொளி தோன்றியதனால் 'திருவின் திருவே' என்றும், கல்வி ஒழுங்காக நிரம்பப்பெற்றவனேயென்பாள் 'நிரையார்கலபின் கடலே' என்றும், வேதத்திற்கூறிய நல்லொழுக்கத்தை நிலைபாகக்கொண்டவனே யென்பாள் 'நெறியார் மறையின் நிலையே'என்றும் விளித்தாள். முன்னிரண்டடிகள்-தசரதமன்னவன் அதுகாறும் முறைபிறழாது மிக்கமேம்பாட்டுடனே அரசுசெய்தமையைக் குறிக்கும். கருணைபாவது-அயலார் துன்புறுவதுகண்டு தாளும் மனமிளகி இயன்றால் அதனைப்போக்க வகைதேடுகையே யாதலால், கருணையுள்ளவனென நீ நான் வருந்துகையில் என்னென்றது உபேட்சிப்பது தகுதியோ வென்பாள் 'கருணையமனே! கரையாவயர்வேனனே என்னென் றுரையா இது அழகோ!' என்கிறாள்; கருணையன்-**கருத்துடையடைகோளி யணி.** உருவகத்திற் றினையும் பாலும் மயங்கின. பி-ம்:—[1]நிறை. [2]ஆர்கலியின், ஆர்கவியின். [3]மலபின். [4]எனிலென்று. [5]உரையாய். (நகூ)

நூச. மின்னின் றனைய மேனி வெறிதாய் விடநின் றதுபோ
லுன்னுந் [1]தகைமைக் [2]கடையா வுறுநோ [3]யுறுகின் [4]றுணரா
[5]னின்னென் [4]றுரையா [6]னென்னே யிதுதான் [7]யாதென் றறி
மன்னன் [8]றகைமை காண வாராய் மகனே யென்னும். [யென்

(இ - ள்.) (என்று பின்னும்), மின் நின்று அனைய மேனி - மின்னல் நிலைநின்றால் (அதன் நிலைமைபை) ஒத்த சரீரம், வெறிது ஆய்விட நின்றது போல் - உயிரில்லாததாக ஆகிவிடும்படியுள்ளதுபோலத் தோன்று மாறு, உன்னும் தகைமைக்கு அடையா - நினைக்குந்தன்மைக்கு அரிதான, உறுநோய் - மிக்க துன்பத்தை, உறுகின்று-அடையாநின்றுகொண்டு, (தசரதன்), உணரான்-அறிவற்றுள்ளான்; இன்ன என்று-(தனக்கு நேர்ந்துள்ளது) இன்னதன்மையதென்று, உரையான்-சொல்லான்; என்னே-(இதற்குக்)காரணம் யாதோ? இதுதான் யாது என்று அறியேன் - இது எதுவென்று தெரிந்திலேன்; மகனே-பிள்ளாய்! மன்னன் தகைமை காண - சக்ரவர்த்தியினது தன்மையைப் பார்க்க, வாராய்-வருவாயாக, என்னும்—; (எ - று.)

தனது பேரொளிபுள்ளமேனி ஒளிகுன்றிவிட உயிரையேகொள்ளும் நோய் அடைந்திட்டதுபோல் இம்மன்னவன் பேச்சுமூச்சற்றுக்கிடக்கிறான்: தன்னிலை யின்னதென்று சொல்லுகின்றானு மில்லை. இவனது நிலை யாதோ? மகனே! இதனைக் காணவாராய் என்று கதறினாள் கோசலையென்க. நிலை நின்ற மின்னல்போன்று பேரொளிபடைத்த தசரதன்மேனி யென்பாள் 'மின்னின்றனையமேனி' என்றாள். இத்தொடர்க்கு - மின்னல்போல் நிலையற்ற (தனது)உடல் எனப் பொருளுரைத்தாரு முளர். உறுகின்று-''தொழாநின்று'' என்பதுபோல வந்த நிகழ்காலவினையெச்சம். பி-ம்:—[1]தன்மைக்கு. [2]இடையா. [3]உணர்கின்று. [4]உணராய், உரையாய். [5]என். [6]இன்னேயிதுதான், என்னேயிதுகான், இதுகாளிடையூறு. [7]எது. [8]தன்மை. (நகூக)

நரு.—கோசலை கதறிய தூலைக் கேட்டுப் பட்டாபிஷேகத்திற்குக் காத்திருந்த மன்னர்முதலியோர் சொல்லியபடி வசிட்டன் அங்குவந்து மன்னவன் நிலையைக் காணுதல்.

இவ்வா றழுவா ளிரியற் குரல்சென் றிசையா முன்ன
மொவ்வா [1]தொவ்வா [2]தென்ன [3]வொளிவா ணிருபர் [4]முனிவ
ரவ்வா றறிவா யென்ன [5]வந்தான் முனிவன் [6]வந்தான்
வெவ்வா ளரசன் னிலைகண் டென்னும் [7]விளைவென் றுன்ன.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இ ஆறு அழுவாள் - (என்று) இவ்விதமாகப் புலம்புகின்ற கோசலையினது, இரியல் குரல்-கூக்குரல், சென்று-போய், இசையா முன்னம்-ஒலிப்பதற்கு முன்பு,—ஒளி வாள் நிருபர்-நிரணத்தையுடைய வாளாயுதத்தை யேந்திய அரசரும், முனிவர் - இருடியரும், 'ஒவ்வாது ஒவ்வாது - (இது இக் காலத்துக்குப்) பொருந்தாது பொருந்தாது,' என்ன-என்று (தமக்குட்) சொல்லிக்கொண்டு, (பின்பு), அஆறு-அந்தஅழுகைக்குரலின் காரணத்தை, அறிவாய்-அறிந்துவருவாய், என்ன-என்றுசொல்ல,—முனிவன் வந்தான்-வசிட்டமுனிவன் (தயரதனிருக்குமிடத்துக்கு) வந்தான்; வந்தான் - அங்ஙனம்வந்த வசிட்டன், வெம் வாள் அரசன் நிலை கண்டு - கொடிய வாளினையுடைய சக்கரவர்த்தியினது தன்மையைப் பார்த்து, விளைவு என் ஆம் என்று உன்ன - இதன் முடிவு யாதாகுமோ? என்று சங்கித்து,—(எ - று.)—"என்ன வுன்ன" எனஉள - ஆங் கவியோடு தொடரும்.

இங்ஙனம் கோசலை கூக்குரலிடும் ஒலிபட்டாபிஷேகம் எப்போது நடக்கப்போகிறதோ?' என்று எதிர்பார்த்தவண்ணம் பட்டாபிஷேக மண்டபத்திற் காத்துக்கொண்டிருக்கும் மன்னர்முனிவர் முதலியோரின் காதில் விழ, 'மங்களம் நிகழவேண்டிய காலத்தில் இவ்வாறு கூக்குரல்கேட்கக் காரணமில்லையே! இது என்னோ?' என்று சஞ்சலசித்தராய், யாவரும், அந்தப்புரத்தினுள் எளிது செல்லத்தக்க வசிட்டமுனிவனை நோக்கி 'இப்படிம் கூக்குரல் நிகழக் காரணம் என்னோ? இதனை யறிந்துவருக' என்ன, வசிட்டமுனிவன் வந்து மன்னவன் நிலைமையைக்கண்டு என்ன விளையுமோ என்று சஞ்சித்தனனென்பதாம். இரியல் - அழுகுரல். முனிவன் - வசிஷ்டன். பி-டி:—[1]ஒல்வாது. [2]என்ன. [3]ஒளிர். [4]முனிவ. [5]அந்தார். [6]அவனும். [7]வினையென்று. (நகஉ)

நகஉ.—வசிட்டன் ஆங்குள்ள நிலையைக்கண்டு தன்னுட் கருதுவது.

இறந்தா [1]னல்லன் னரச னிறவா தெழுவா னல்லன்
மறந்தா னுணர்வென் [2]றுன்ன [3]வன்கை கயற்கான் மங்கை
துறந்தா டுயரந் தன்னைத் துறவா தெழுவா [4]ளிவளை
பிறந்தார் பெயருந் தன்மை பிறரா லறிதற் [5]கெளிதோ.

(இ-ள்.) அரசன்-சக்கரவர்த்தியோ, இறந்தான் அல்லன்-முடிந்தவனல்லன்; இறவாது ஒழிவான் அல்லன் - சாவாது நீங்குபவனல்லன்; உணர்வு மறந்தான்என்று-இப்போது (மன்னவன்) அறிவுகெட்டுமூர்ச்சையடைந்தானே யென்று, உன்னை-சிறிதுஞ் சிந்தனைகொள்ளாத, வல் கேகயர்கோன் மங்கை-மனம்வலிய கைகேயி, துயரம் தன்னை துறந்தாள் - துன்பத்தைவிட்டாள்; இவள்எ துறவாது ஒழிவாள் - இக்கோசலேயோ துன்பத்தை விட்டிடாமல் அழிபவள்; பிறந்தார் - உலகத்துஉதித்த மனிதர், பெரும் - நிலை வேறுபடுகின்ற, தன்மை-விதம்,பிறரால் அறிதற்கு எளிதுஓ-அயலாரால் தெரிவதற்கு எளியதோ? [அன்று]; (எ - று.)

அங்குவந்து கண்ட வசிட்டமுனிவன் 'தசரதன் இப்போது இறந்திலனெயினும் விரைவில் இறந்துபடுவா னென்று தோன்றுகின்றது; இப்படியிருக்கையில் அரசனது காதலுக்குஇடனை கைகேசியோ மனத்திற் சிறிதுந் துயரங்கொள்ளாதிருக்கின்றாள்: கோசலையோ துன்பம் மிகப்பெற்று மனமழிகின்றாள்; தன்கணவனுக்கு நேர்ந்திருக்கிற நிலையைக்கருதி ஒருத்தி மனமழிவதும் மற்றொருத்தி சிறிதும் மனக்கவலைபற்றிருப்பதுமாகிய இவற்றிற்கு இன்னதென்று காரணம் விளங்கவில்லை' என்று தன்மனத்துட் கருதினனென்க. பி-ம்:—[1]அரசனல்லன். [2]அன்னான். [3]வண்கைகையர். [4]என்னைப், என்னே. [5]எளிதே.

(கஉகஉ)

கஉஎ.—முனிவன் அரசன்நிலைமைக்குக் காரணத்தை வினவ, கைகேசி விளங்கச் சொல்லுதல்.

என்ன வுன்ன முனிவ னிடரா [1]லழிவா டுயரஞ்
[2]சொன்ன ளாகா வெனமுன் றொழுகே கயர்கோன் மகளை
யன்ன யுரையா யரச [3]னயர்வா னிலை[4]யென் னென்னத்
தன்ன [5]னிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னாள்.

(இ-ள்.) என்ன உன்ன-என்று எண்ணி, முனிவன் - அவ்வசிட்டமுனிவன், 'இடரால் அழிவாள் - துன்பத்தால் மனமழிகின்ற கோசலை, துயரம் சொன்னாள் ஆகாள்-துன்பத்தின் காரணத்தைச் சொன்னவளாகாள்,' என-என்று எண்ணி; முன் தொழு கேகயர் கோன் மகளை - முன்னேவந்து அஞ்சலிசெய்துநின்ற கைகேயியை, 'அன்னாய் - தாயே! அயர்வான் அரசன் நிலை என் - மூர்ச்சித்திருப்பதெனிய சக்ரவர்த்தியின் நிலைமைக்குக் காரணம்யாது? உரையாய் - சொல்,' என்ன - என்றுகேட்க,—(அவள்), தன்னில் நிகழ்ந்த தன்மை - தன்னில் நடந்த விதத்தை, தான் எ தெரிய சொன்னாள் - தானே விளங்கக் கூறினாள்; (எ - று.)

கீழ்க் கூறியவாறு சிந்தைகொண்ட வசிட்டமுனிவன் 'இந்தக்கௌசலையால்,மன்னவனுக்குப்பேரிடர்க்காரணம் நிகழ்ந்துள்ளதென்பதுவிளங்குவதேயன்றி வேறொன்றும் தெரியவில்லை; இந்தக்கௌசலையின் மூலமாகத் துயர்க்

காரணத்தைத் தெரிந்துகொள்ள முடியாதெனவுந் தோன்றுகின்றது' என்று சிந்தித்து, தன் முன்னேவந்து தொழுத கைகேயியை நோக்கி 'அரசன் வருந்தக் காரணம்என்ன? அம்மா! கூறுக' என்ன, அந்தக்கைகேசியும் நிகழ்ந்தனவெல்லாம் விவரமாகக் கூறின ளென்பதாம். அன்னை - அரசன்தேவி. அஞ்சாமலும், நாக்கூசாமலுஞ் சொன்ன ளென்பார் 'தானே சொன்னள்' என்றார். பி-பி:—[1]அழுவாள். [2]சொன்னவுல். [3]அயர்வாகிலை. [4]எது. [5]நிகழ்ந்தவெல்லாம், தன்மையெல்லாம். (உஉச)

உஅ.—வசிட்டன் இன்சொல்லால் மன்னவனைத் தேற்றுதல்.

சொற்றாள் சொற்ற முன்னஞ் சுடர்வா ளரசர்க் கரசைப்
பொற்[1]ற மரைபோற் கையாற் பொடி[2]சூழ் படிதின் றெழுவிக்
கற்ற யயரே லவளே தருகின் [3]காதற் கரசை
யெற்றே செய[4]லின் [5]றெழிதீ யென்றென் [6]றிரவா நின்றான்.

(இ - ள்.) சொற்றாள் - கூறின அவள், சொற்ற முன்னம்-கூறுவதற்கு முன்பு, சுடர் வாள் அரசர்க்கு அரசை - ஒளிபொருந்திய வாளினையுடைய சக்ரவர்த்தியை, பொன் தாமரைபோல் கையால் - அழகியதாமரைமலர் போன்ற கைகளால், பொடி சூழ் படி தின்று எழுவி - புழுதிநிறைந்த பூமியினின்றும் எழுந்திருக்கப்பண்ணி, 'கற்றாய் - (சற்றற்குரிய நூல்களைக்) கற்றவனே! அயரேல் - கவலப்படாதே; அவன் எதின் காதற்கு அரசை தரும் - அக்கைகேயியே உன்மகனுகிய ஸ்ரீராமனுக்கு இராச்சியத்தைக் கொடுப்பாள்: செயல் எற்று - இச்செய்கை எத்தன்மைத்து? நீ இன்று ஒழி - நீ இப்பொழுது (இவ்வருத்தம்) நீக்கு;' என்று என்று இரவாகின்றான் - என்று (பல முறை) வேண்டிநின்றான். (வசிட்டன்); (எ - று.)

கைகேசியாற் செய்தியுணர்ந்ததும், வசிட்டன், 'கற்றவனுகிய நீ சாதாரணமனிதன்போல அயர்தல் தகுதியோ? அன்றே; உன் புத்திரன் இராமனுக்கு அந்தக் கைகேசியே அரசை யீந்திடுவாள்: நீ இவ்வாறு வருந்துதல் தக்கதன்று: இதனை யொழிக' என்று பலமுறை வேண்டிக் கூறினனென்பதாம். வருத்தத்தைத் தீர்த்துத் தெளிவையுண்டாக்கத்தக்க கல்வியைக் கற்றவனுயிருந்தும் அறியாமல் வருந்துதற்குக் காரண மென் னென்பான் 'கற்றாய்' என்றான். பி-பி:—[1]தாமரைப்பொற்கையால். [2]சேர். [3]காதலிக்கின்று, காதற்கரசென்று, காதற்கரசன்று, புதல்வற்கரசென்று, பதல்வற்கரசின்று. [4]என்று. [5]அறியேன். [6]இரையாகின்றான், இரையாகின்றே, இரவாகின்றே.

உக.—முனிவனது இன்னுரையாலும் சைத்தியோபசாரத்தாலும் மன்னவன் உணர்வுபெறுதல்.

சீதப் பனிநீ [1]ரளவித் தின்கா [2]லுதவுந் தண்காற்
போதத் தளவே [3]தவழ்வித் தின்சொற் புகலா நின்று
மேதக் கடனஞ் சனையா னுரைநஞ் சொருவா றவியக்
காதற் புதல்வன் பெயரோ புகல்வா னுயிருங் கண்டான்.

(இ - ள்.) (வேண்டிப் பின்னும்), சீதம் பனி நீர் - குளிர்ச்சியையுடைய பனிநீரை, அளவி - தெளித்து, திண் கால் உதவும் தண் கால் - விசிறியினை வீசுதலிலுண்டாகிய குளிர்ந்தகாற்றை, போதத்து அளவுற தவழ்வித்து - அறிவுதோன்றும் வரையிலும் தவழும்படிசெய்து, இன் சொல்-இனியவார்த்தைகளை, புகலாநின்றான்-சொல்லுகின்ற அம்முனிவன்,—ஓதம் கடல் நஞ்சு அனையாள்-குளிர்ச்சியையுடைய திருப்பாற்கடலினின்றுண்டாகிய விஷத்தையொத்த கைகேயினது, உரை நஞ்சு - வார்த்தையாகிய விஷம், ஒரு ஆறு அவிய - ஒருபடியாய்த் தணிய, காதல் புதல்வன் பெயர்ற - விருப்பத்தையுடைய தன்மகனது நாமத்தையே,புகல்வான் - சொல்லாநின்ற தசரதனது, உயிர்உம் - பிராணனையும், கண்டான் - பார்த்தான்; (எ - று.)

பூமியிலிருந்து கையாற்றாக்கியெடுத்துக் கைகேசி தானே உன்புதல்வற்கு அரசுதருவாளென்று முனிவன்சொல்லிடவும் மூர்ச்சைதெளியாத மன்னவன்மீது அம்முனிவன்பலமுறை பனிநீர்தெளித்து ஆலவட்டத்தைக்கொண்டு மென்காற்றுத் தோன்றுமாறு வீசசெய்து அவன் உயிர்தோன்றியதும் தோன்றுததுமாக விருக்கையில் இன்சொல்லைச் செவிப்படும்படி யோத, அதனால் கைகேயியின் விஷச்சொல்லால் தோன்றிய துயர் சிறிதுநீங்கவே, தன்காதற்குரிய புதல்வனான ஸ்ரீராமனது திருநாமத்தைச் சொல்லிபவண்ணம் மன்னன் உயிர்பெற்றெழக் கண்டா னென்பதாம். புதல்வன்பெயரைப் புகல்வதைக்கேட்டு உயிரிருத்தலை முனிவன் அறிந்தானென்க. பனிநீர் - ஓர் வாசனைநீர். திண்கால்-சிற்றிலவட்டம்; அண்மொழித்தொகை. போதத்தளவே தவழ்வித்தல் - மூர்ச்சைதீங்கி அறிவுண்டாகும்படி மேலேபட வீசுவித்தல். உயிரும் என்ற உம்மை - உயிர்காணுதலி னருமை விளக்கி நின்றது. இனி, முனிவன் புகலாநின்றான்; ஓதாநிற்கச் சக்ரவர்த்தி தனதுயிரைக்கண்டா னென்றுமாம். தண்கால் - மந்தமாருதம். பி - ம்:—[1]உதவி. [2]உக்கமென்கால். [3]தழுவித்தன், தழுவித்தின், தழுவுற்றின்.

(நூநூசு)

சo.—வசிட்டன் மீண்டும் மன்னவனிடத்து இன்னுரை கூறுதல்.

காணை வையா வினிநீ யொழிவாய் கழிபே ரவல
மாணை யகனே யினிநா டாள்வா னிடையூ றுளதோ
மாணை வுரையா [1]டானே தருமா மழையே யனையான்
பூணை [2]தொழிவா னெனில்யா முளதோ மொன்றே லென்றான்.

(இ-ள்.) காணை - (தசரதன்உயிர்வரப்பெற்றதைக்)கண்டு;ஐயா-தலைவனே! இனி-இப்பொழுது;நீ கழி பேர்அவலம்ஒழிவாய்-மிகவும்பெரியவருத்தத்தை விடுவாயாக; இனி ஆண் நாயகன்ஏ நாடு ஆள்வான்-இனிப் புருஷோத்தமனே பூமியைக்காப்பான்; இடையூறு உளதோ-(அதற்குத்) தடை யிருக்கின்றதோ? [இல்லை]; மாணைஉரையாள்தான் ஏ-மாட்சிமைப்படாத வார்த்தையையுடைய கைகேயியே, தரும் - (பூமியைக்) கொடுப்பாள்; மா மழைஎ னையான் கரிய

மேகத்தையொப்பவனுகிய ஸ்ரீராமன், பூணுது ஒழிவான்எனில்-(மகுடஞ்)சூடாமற் (காட்டிற்குப்) போனல், யாம் உளம்ஓ-நாம் இருக்கப்போகிறோமோ?[இல்லை]; பொன்றேல்-வருந்தாதே,' என்றன் - என்றுசொன்னன், (முனிவன்).

மூர்ச்சை தெளிந்தபின்பும் மீண்டும் மூர்ச்சைபடையாதிருத்தற்பொருட்டு முனிவன் இன்சொற் கூறுகின்றனனென்க. கைகேயியின் வன்னெஞ்சத்தின் தன்மையை யறியாமையால் கைகேயியின்மனத்தைத் திருப்பிவிடலாமென்று உறுதிகொண்டு வசிட்டமுனிவன் இங்ஙனம் கூறலாயினன். கைகேயி தன்புதல்வனுக்கு அரசுகேட்டதும் மகாநுபாவனுப்க் குற்றமின்றியிருக்கும் ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்புமாறு கூறியதும் அதருமமாதலால், கைகேயியை 'மாணுவுரைபான்' என்கிறன். 'இனி' என்றது-"இனி நீனைக்கிரக்கமாகின்று" என்றவிடத்திற்போல இப்பொழுது என்னும் பொருளது. கழிபேர்-ஒருபொருளைக்குறித்த இருசொற்கள். ஆளபகன் - புருஷோத்தமன்: ஸ்ரீராமன்; ஆள் நாயகன் எனவும் பிரிக்கலாம். பி-ம்:—[1]தருமம் மழையேயனையான்மகுடம். [2]ஒழியான். (நுஉ)

சுக.—தசரதமன்னவன், வசிட்டனை நோக்கி இராமனுக்குப் பட்டங்கட்டுவித்துத் தன்னுரையும் பொய்யாகாதிருக்கச் செய்ய வேண்டுதல்.

என்றம் முனிவன் றன்னை நினையா வினையே னினிபான்
பொன்றும் மளவில் லவனைப் புனைமா மகுடம் புனைவித்
[1]தொன்றும் வனமென் [2]றுன்ன வண்ணஞ் செய்தென் னுரை
குன்றும் பழிபூ ணுமற் காவாய் கோவே யென்றான்.

(இ-ள்.) என்ற அ முனிவன் தன்னை-என்று கொன்ன அம்முனிவனைக் குறித்து;—நினையா-(மனத்தில்) ஆலோசித்து, 'நினையேன் யான்-இத்தன்மையனுகிய நான், இனி பொன்றும் அளவில்-மேல் அழிபுக்காலத்திற்குள், அவனை-இராமனை, புனை மா மகுடம் புனைவித்து - அழகிய பெரிய திருமுடியைச் சூட்டி, வனம் ஒன்றும் என்று உன்ன வண்ணம் செய்து - காட்டையடைவா னென்று நினையாதபடிசெய்து, என் உரைஉம்-என் வார்த்தையும், குன்றும் பழி பூணுமல்-இழிவாகிய பழியை மேற்கொள்ளாதபடி, காவாய் - இரட்சிப்பாயாக; கோவே-தலைவனே!' என்றன் - என்று வேண்டிக்கொண்டான், (தசரதன்); (எ - று.)

தசரதன் தன்மனத்திற்குள்தானே ஆலோசித்துத் தன்னைத் தேற்றின முனிவனைப்பார்த்து, 'நான் கைகேயிக்கு வரங்கொடுத்ததைப் பொய்த்தென்ன பழிச்சொல் உண்டாகாவண்ணமும் இராமன் காட்டிற்குச்செல்லாமல் அரசுபுரியும்வண்ணமும் நீ செய்யவேண்டும்' என்று வேண்டின னென்றவாறு. நிலையாத இன்பத்தின் பொருட்டு நிலையான பழியை மேற்கோடல் சால்போடியையாமையின், 'பழிபூணுமற் காவாய்' என்கிறன். என்றம் முனி

வன்-என்ற அம்முனிவன் என்பதன் விகாரம்: இனி, என்றமுனிவன் என் பது விரித்தல்பெற்று வந்ததென்றலும் ஒன்று. வினையென் எனப்பிரித்து, தீவினையையுடையே னென்றுமாம். இனியா னவனை யெனக் கூட்டலுமாம்; இனியான்-ஸ்ரீராமன். பொன்றும் அளவு இல்லவனை எனப்பிரித்து-அழிவில் லாத ஸ்ரீராமனை யென்றுரைத்து, இனையேன்யான் உன்றவண்ணம் எனக் கூட்டலுமாம். ஈண்டு, உரை யென்றது - கைகேசிக்குக் கொடுத்த வரங்களை. பழிபுணைமல்-பொய்யாகாமலென்றபடி. பி-மி:—[1]என்றும். [2]உள்ளா. (கூகஅ)

சஉ.—வசிட்டன் இராமனுக்கு இராச்சியமளித்துப் புகழ்பூணுமாறு கைகேயிக்கு உபதேசித்தல்.

முனியும் முனியுஞ் செய்கைக் கொடியாண் முகமே[1]முன்னி
யினியுன் புதல்வற் கரசு [2]மேனை யோர்க்கின் னுயிரு
மனுவின் வழிநின் கணவற் குயிரும் முதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே [3]புனைவாய் [4]பொன்னே யென்றான்.

(இ - ள்.) முனிஉம்-(என்றுசொல்லக்கேட்ட) வசிட்டமுனிவனும், முனி யும் செய்கை கொடியாள் - வெறுக்கப்படுகின்ற தொழிலையுடைய கொடிய கைகேயியினது, முகம்ஏ முன்னி-முகத்தைப்பார்த்து, 'இனி-இப்பொழுது, உன் புதல்வற்கு அரசுஉம் - உன்மகனுகிய ஸ்ரீராமனுக்கு இராச்சியபாரத்தை யும், ஏனையோர்க்கு இன் உயிர் உம்-ஒழிந்தவர்களுக்கு இனியபிராணனையும், மனுவின் வழி நின் கணவற்கு - வைவசுவதமனுவினது வம்சத்திற்பிறந்த உனது கொழுநனுக்கு. உயிர்உம் - பிராணனையும், உதவி - கொடுத்து, வசை தீர்-குற்றமற்ற, புனிதம் மருவும்-சுத்திபொருந்திய, புகழ்ஏ - கீர்த்தியையே, புனைவாய்-அணிவாயாக; பொன்னே - இலக்குமிபோன்றவளே!' என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

கைகேயியைப்பார்த்து வசிட்டமுனிவன் 'நீ இராமனுக்கு இராச்சியத் தைத் தந்து கானகம் ஏகவண்ணம்செய்தால் அதனால் இவ்வுலகுக்கே உயி ரீந்தவளாவாய்: இம்மன்னனும் உயிர்பெறுவான்: அதனைற் பெரும்புகழ் பெறலாம்: ஆகவே, பழிப்பையுண்டாக்கும் உன்செயலைவிட்டுப் புகழைப் பயக்குமாறு செய்க' என்றன னென்பதாம். ஸ்ரீராமனை உன்புதல்வனென் றான், கருணை பிறத்தற்பொருட்டு: முன் அந்தக்கைகேயி காட்டிவந்த அன்பைக் குறிக்கும்பொருட்டு மாம். மனுவின்வழி நின்கணவன் - நீதிநூல் பிறழாத கணவன் என்றுமாம். இனி, மனுவின்வழியென்பதனை அரசோடு கூட்டலுமாம். பி - மி:—[1]நோக்கி. [2]ஏனையோருயிருக்குயிரும். [3]புனையாய். [4]பெண்ணே.

(கூகக)

சங.—கைகேயியின் மாற்றுமொழி.

மொய்ம்மான் வினைவே றறவென் [1]றுபர்வான் மொழியா முன்னம்
விம்மா [2]வழுவா ளரசன் மெய்யிற் றிரிவா னென்னி
னிம்மா வுலகத் துயிரோ டினிவாழ் வுகவே னென்சொல்
[3]பொய்ம்மா ணுமற் [4]கின்றே பொன்று [5]தொழியே னென்றாள்.

(இ - ள்.) (என்று), மொய் மாண் வினை - நெருங்கிய மாட்சிமையுடைய (நல்வினை தீவினை யென்னும் இரு) வினைகளையும், வேர் அற - அடிகெடும் படி, வென்று - (புலன்களிற்செல்கின்ற அவாவைத்தனையும்) அடக்கி, உயர் வான் - மேம்பட்ட அந்த வகிட்டமுனிவன், மொழிபா முன்னம் - சொல்வதற்கு முன்பே,—(கைகேயி),—விம்மா அழுவான் - விம்மியழுது, 'அரசன் - சக்கரவர்த்தி, மெய்யின் - வாய்மையினின்றும், திரிவான் என்னின் - மாறுவானாயின், இனி - பின்பு, இ மா உலகத்து - பெரிய இந்த நிலவுலகத்தின் கண், உயிரோடு வாழ்வு - உயிரோடு வாழ்ந்திருத்தல். உகவேன் - விரும்பேன்;என் சொல் பொய் மாறுமத்து - என் வார்த்தை பொய்படாமைக்காக, இன்றை - இப்பொழுதே, பொன்றுதல் ஒழிவேன் - அழிவதிலேன்,' என்றாள்—; (எ - று.)

ஈண்டு மெய்யென்றது - நிகழ்ந்ததுகூறிக் கூறியவாறொழுகுதலை. அவள் சொன்னசொல் தவறினும் யான் சொன்னசொல் தவறுதலிலேன் என்கிறான். செய்தவினைத்தொடர்ந்து பயனை அனுபவிக்கச் செய்தலால், 'மொய்வினை' என்றார். மாறுவினையை, மாண்வினை யென்றது - நிகழ்ச்சி. தீவினைகள் இருப்புவிலங்கும், நல்வினைகள் பொன்விலங்கும் போலத் தம்முள் சமப்படுத்து உணர்தற்பான்மையவாதலால், இருவினையும் மாறுவாயின; 'வேறு' என்றதனால், அப்பயன்களைத் துறந்தவுடம்புகளான் அனுபவித்தனவும், பிறந்தவுடம்பான் முகந்து கின்றனவும் தெரிய, பின்னும் அனுபவிக்கவேண்டுவன வாய் முன்கிடந்த துன்பக்களையும், மேல்வருக்கடவ துன்பங்களையும் நிலைபெறுதல் பெற்றார்: பரம்பொருளை யுணர்தலால் நிலை பற்றின. மாறுபற்றுதன்பது - எதிர்மறை காட்டுவகந்த எதிர்காலவினையெச்சமென்பர்: மாறுபற்றுதன்பது மாறுகொள்ளுதன்று நிருப்பின்மையிலக்கணத்தாற் றொழிற்பெயரென்க. சிலபிரதிகளில் இச்செய்யுள் அதிக பாடமின்மையின் காணப்படுகின்றது.

பி-ம்:—[1]ஒழிவான். [2]விழுவான். [3]அம்மான்;அப்பான். [4]இன்னை. [5]ஒழிபான்.

சச.—இதுமுதல் ஏழரு கவிகள் - வகிட்டமுனிவன் கைகேயியைக் கண்டித்துக் கூறியன.

கொழுநன் றுஞ்சும் மெனவுங் கொள்ளா துலக்கம் மெனவுட்
பழிநின் றுபருந் மெனவும் பாவம் முளதா மெனவு
மொழிகின் றிலபன் றிபுமெனா னுணர்கின் றிலபா னினைகிலேன்
மொழிகின் றனலிவன் [1]னென்ற முனிபுட் முனிவன் [2]றென்றான்.

(இ - ள்.) (எனக்கேட்டு), முனிபுள் - அம்முனிவனும், கொழுநன் துஞ்சும் எனவும் - கணவன் இறப்பான் என்றும், உலகம் கொள்ளாது எனவும் - உயிர்த்தவர் எற்றுக்கொள்ளா தென்றும், பழி நின்று உபரும் எனவும் - பழி நின்று மொழி கிலவின்று மேன்மேலும்வளரு மென்றும், பாவம் உனதுளதாம் எனவும் - தீவினை உண்டாமென்றும் (எண்ணி), ஒழிகின்றிலை - (நீ இச்சாபத்தினின்றும்) நீங்குகின்றாயில்லை; அன்றியும் - (அது) அல்லாமலும், ஒன்று

உணர்கின்றிலை-(பிறர் சொன்னலும் அதனைச்) சிறிதும் அறிந்து செய்கின்றி யில்லை; யான்—, இனிமேல் மொழிகின்றன என்-பின்னல் இன்னும் சொல்லக்கடவன யாவை? என்ன-என்றுகூறி, (பின்னும்), முறை அன்று என்றான்-(இது) நியமமல்ல வென்றுங்கூறினான்; (எ-று.)

உனக்கே உன் செய்கையினல் விளைவன இவையென்று தெரியாவிட் டாலும், பிறர் சொன்னலும் கேட்கமாட்டேனென்கிறாயே? இனி உனக்குயான் என்னசொல்லுவது? இறுதியாக ஒன்று சொல்லுகின்றேன்: உன்செயல் முறைமையன்றென்றனன் வசிட்டனென்க. பி-ம்:—[1]என்றான் [2]என்பான்.

சுரு. கண்ணே டாதே கணவ [1]னுயிரோ டுடற்கா ணுதே
[1]புண்ணோ டோடுங் கனலோ விடமோ வென்னப் புகல்வாய்
பெண்ணே தீயோ [3]மாயாப் பேயோ கொடியாய் [4]நீயும்
மண்ணே டன்னே [5]டென்னும்[6]வசையோ வலிதே யென்றான்.

(இ-ள்.) (என்று பின்னும் வசிட்டன்), கண் ஓடாது-தாக்ஷிண்ய மின்றி, கணவன் உயிர் ஓடு இடர் காணுது-சக்ரவர்த்தியினது உயிர் (உடலை விட்டு) விரைந்துசெல்லுந் துன்பத்தையும் நினையாமல். 'புண் ஊடு ஓடும் கனல் ஓ-விரணத்தினுட்புகும் நெருப்போ? விடம் ஓ-நஞ்சோ?' என்ன-என்னும்படி, புகல்வாய்-பேசுகின்றவளே! நீ—, பெண் ஓ-ஒரு மானுட மாதரோ? (அன்றி), தீ ஓ-நெருப்போ? (அன்றேல்), மாயா பேய் ஓ-விடாப் பிடியுள்ள பிசாசமோ? கொடியாய்-கொடுமையுடையவளே! இ மண்ணோடு உன்னோடு என் ஆம்-(இனித் தசரதனுக்கு இவ்வுலகத்தோடும் உன்னோடும் என்னஉறவு இருக்கின்றது? வசை ஓ வலிது ஏ-(உனக்குவந்த) பழிச்சொல் லோ வலியதே, என்றான்—; (எ-று.)—முதலடியில், ஏ-அசை.

கண்ணோட்டமாவது-தன்னோடுபயின்றாரைக் கண்டால் அவர் கூறி யன மறுக்கமாட்டாமை; இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வ தாக லின், அப்பெயர்த்தாயிற்று. கேகயன்மகளும் தசரதன்மனைவியுமாதல்பற் றிப் பெண்ணோ வென்றும், தீய ஒழுக்கத்தாற் பெண்ணல்லளெனத் துணிந்து தான் சேர்ந்தவிடத்தைச் சுடுதலுங் கொல்லுதலும்பற்றித் தீயோவென்றும், இவள் தான் சேராதஇடத்தையுஞ் சுடுதலாலும் ஆறுமையாலும் தீயினுங் கொடியளாதலால் தீயல்லளெனத் துணிந்து பிறர்வருத்தத்திற்கு இரங்காது மேன்மேலும் வருத்தல்பற்றிப் பேயோ வென்றுங் கூறினான். மாயாப்பேய் என்பதற்கு-உலகத்துப்பேய் வருத்துவது தான் மறைந்து நின்றே, இப் பேய் மறையாமலும் வருத்தும் என்னும் வேற்றுமை தோன்றக் கூறலும் ஒன்று. மாய்தல்-மறைதலாதலில "கதிர்மாய்க்குந்தண்கழனி" என்ற இடத் துங் காண்க. பி-ம்:—[1]துயரோடிடர். [2]புண்ணோடு. [3]மாயப்பேயோ. [4]நீயும், அறியேன். [5]என்னே. [6]வசையே, மனமே, மனதே. (நூசூ)

சசு. வாயான் மன்னன் மகனை வனமே கென்ன முன்ன
நீயோ சொன்ன யவனே நிமிர்கா னினைடு[1]வெங் கெறியிற்

[2]போயோ புகலோ தவிரான் புகழோ டுயிரைச் சுடுவெங்
[3]தீயோய் நின்போற் றீயா ருளரோ செயலென் னென்றான்.

(இ - ன்.) (என்று பின்னும்), மன்னன் - சக்கரவர்த்தி, வாயால் மகனை வனம் ஏகு என்ற முன்னம்-(தன்) வாய்மொழியாற் குமாரனைக் காட்டிற்குச் செல் என்று ஏவுதற்குமுன்னே, நீ ஓ சொன்றாய் - நீயே (வனமேகென்று) சொன்றாய்; அவன்ற - அவ்விராமனை, நிமிர் கானிடை - நெருங்கிய காட்டில், வெம் நெறியில் - கொடிய வழியில், போய்ற புகல்ற - சென்று அடைதலையோ, தவிரான் - ஒழியான்; புகழோடு - கீர்த்தியையும், உயிரை - கணவனுயிரையும், சுடு-எரிக்கின்ற, வெம் தீயோய்-கொடிய நெருப்புப் போன்றவனே! நின்போல் தீயார் - உன்னைப்போன்ற கொடியவர், உளர்ற - (இவ்வுலகத்து) இருக்கின்றனரோ? செயல் என் - (இதனினுஞ்) செய்யத்தக்க வேறு கொடுந்தொழில் யாது?' என்றான்—; (எ - று.)

தசரதசக்ரவர்த்தி தன்வாயிலால் இராமனைக் காட்டிற்குப்போமாறு துணிந்துசொல்லப் பின்வாங்குகையில், 'அந்தச்சக்ரவர்த்தி உன்னை வரவழைத்தது பதினான்குவருடம் வனவாசஞ்செய்யும்படி ஏவுதலின்பொருட்டாகும்' என்று அந்தச்சக்ரவர்த்தியின் அபிப்பிராயமாக நீயே கூறிவிட்டாய்; இராமனை, 'நம்மைப் பெற்ற தந்தையார் ஏவவில்லை: மாற்றாந்தாயல்லவா அவருடைய கருத்தாக ஏவுகிறாள்' என்று சொல்லிக் காட்டிற்குப் போகாமலிரான். இங்ஙனம் ஒருசக்ரவர்த்திகுமாரனைக் காட்டிற்குச் செலுத்தி அதனாற் புகழை யிழந்து பெரும்பழியைப்பெற்ற தீதபாதனை உயிர்போகும்வரையிற் செய்துவிட்டாய். உனது இத்தச்செய்கை எவ்வளவு விபரீதமாயிருக்கின்றது! உன்னைப்போற் கொடியவரும் உளரோ?' என்று வசிட்டமுனிவன் கைகேயியைத் திட்டின னென்க. உலகத்துத்தீ புகழையும் உயிரையும் எரிக்க மாட்டா தாதலின் அவ்வுலகத்தீயினும் வேறுபாடுதோன்ற 'புகழோடுயிரைச் சுடுவெந்தீ' என்றான்; இது - வேற்றுமைபணி. புகழெரித்தல் - புகழைப் போக்குதல்: உயிரையெரித்தல் - தசரதனுயிரைப் பிரிவிக்கச் செய்தல்.
பி-ம்:—[1]வன்னெறியிற். [2]போயே புகலாதவிப். [3]தீயோ. (உசஉ)

சுள.—இதுமுதல் மூன்றுகவிகள் - தசரதன் தன்வரத்தைத் தோன்றக் கைகேயியைப் பழித்துக்கூறுதலைத் தெரிவிக்கும்.

தாவின் முனிவன் புகலத் தளரா தின்ற டன்ன
[1]ஞவின் னஞ்சம் முடைய நங்கை தன்னை நோக்கிப்
பாவி நீயெ வெங்கான் படர்வா [2]யென்றன் னுயிரை
[3]யேவி ஞீயோ வவனு மேகி னானு [4]வென்றான்.

(இ - ள்.) (என்று), தா இல் முனிவன் - குற்றமில்லாத அம்முனிவன், புகல-சொல்ல, (கேட்டு), தளராதின்ற மன்னன்-வருந்துகின்ற அத்தசரதன், நாவில் நஞ்சம் உடைய நங்கைதன்னை நோக்கி - நாவில் விஷத்தையுடைய

கைகேயினையப்பார்த்து, 'பாவி - தீயவளே! வெம் கான் படர்வாய் என்று - கொடிய காட்டிற் செல்வாயாகவென்று, என் உயிரை - எனது உயிரோ டொத்த இராமனை, நீ ஏ எவினாய் ஓ - நீயே அனுப்பினையோ? அவன்உம் எகி னான் ஓ - அவனும் (காட்டிற்குப்) போய்விட்டானே? என்றான்—; (எ - று.)

கைகேயி இராமபிரானைநோக்கிக் காட்டுக்குச் செல்வாயென்று ஏவிய போது, மன்னவன் மூர்ச்சித்திருந்தானைதலால் நிகழ்ந்தது தெரியாமையால், வசிட்டமுனிவன் 'மன்னன்மகனை வனமேகென்னைமுன்னம் நீயோ சொன் னாய்: அவனை காணிடைப்போய்ப் புகுதல்தவிரான்' என்று சொன்னதைக் கேட்டுக் கைகேயி இராமனைக் காட்டிற்குச் செல்லுமாறு ஏவியதையுணர்ந்து 'பாவி! நீயே வெங்கான்படர்வாயென்று என்னுயிரை ஏவினையோ?' என்கி றான். ஈண்டுக்குற்றமென்றது - காமவெகுளி மயக்கங்களை. நஞ்சமென்றது - வெவ்வுரையை. எனதாணையின்றி யென்பான் நீயேயெனப் பிரிநிலையேகாரந் தந்தான்; நீயேபடர்வா யென்றுமாம். உயிர் - உபசாரவழக்கு. பி-ம்:—[1]நாவி னஞ்சம். [2]என்றன். [3]ஏவினையே. [4]என்னை, என்ன. (நடசசு)

சசுவ. கண்டே னெஞ்சங் [1]கனிவாய்க் [2]கனிவாய் விடநா னெடுநா
ளுண்டே னதனை னீயென் னுயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப் பாவி [3]தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன்.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) (பின்னும்), நெஞ்சம் கனிவு ஆய் கண்டேன்-(உன்)கருத்தை நன்றுயறிந்தேன்; நான் கனி வாய் விடம் நெடு நாள் உண்டேன் - யான் (உனது) கொவ்வைக்கனிப்போலும் வாயினது விடத்தைப் பலகாலும் புசித் தேன்;அதனால் நீ என் உயிரை முதலோடு உண்டாய்-ஆதலால்தான் நீ எனது சிவனை அடியோடு புசித்தாய்;பண்டெ-முன்னே, எரி முன்-அக்கினியின்முன், பாவீ - கொடியவளே! தேவி ஆக உன்னை கொண்டேன் அல்லேன் - மனை வியாக உன்னை கொண்டவனல்லேன்; வேறு - மாறாக, ஓர் கூற்றம் தேடிக் கொண்டேன் - ஒருயமனைச் சம்பாதித்துக்கொண்டேன்; (எ - று.)

நான் உன்னை வேற்றுவடிவங்கொண்டுவந்துள்ள யமனென்றுஅறியாது பெண்ணென்று மாறாகஎண்ணித் தேவியாகக்கொண்டேன்: பயன்விளையுங் காலத்து நீ பெண்ணல்லையென்றும், ஓர்கூற்றமென்றும் விளங்கிற் றென்ற வாறு; கைகேயியினிடத்துள்ள தேவியாந்தன்மையை மறுத்துக் கூற்றின் தன்மையை யேற்றிக் கூறியது-அவநுதியணியாம். கணவன் களிக்கும்போது உடன்களித்தலும், அவன் துயருறும்போது உடன்துயருறுதலுமாகிய கற்பி லக்கண மின்மையால் தேவியாகக்கொண்டேனல்லேனென்றும், காலமாகா மைக்கு முன்பே கொல்லுதலால் வேறென்றும், ஸ்ரீராமசம்பந்தம்பெற்றவ னிடத்துஞ் செல்லுதலால் ஓர்என்றும், என்னுயிரை முதலோடுண்டாய் என்ப தற்குஏற்பக் கூற்றமென்றும், நீ செய்யும்இது உன்பிழையன்று என்பிழையே

யென்பான் தேடிக்கொண்டேனென்றுங் கூறினான். நெஞ்சம் - ஆகுபெயர். கனிவாய்விடமுண்டல் - அதரபானம். அதராமிருதத்தை 'விடம்' என்றான், துன்பஞ்செய்தலால். நுகரப்படும் பொருளெல்லாம் உணவெனப்படுமாகலின், விடமுண்டேனென உணவென்னும் பொதுச்சொல்லாற் கூறினான். மகனுக் குத்தீங்குவினைத்தலால், முதலோடென்றான். உயிருண்டாய் என்பது, இலக் கணைக்குறிப்பு; "கண்ணுங்கொளச்சேறி நெஞ்சேயிவை யென்னைத், தின்னு மவர்க்காணலுற்று" என்புழிப்போல; இது-"உண்டதற்குரிய வல்லாப்பொருளை, யுண்டனபோலக் கூறலுமாமே" என்னுஞ் சூத்திரத்தில் உய்த்துக்கொண்டு ணர்தலென்பதனாற் கொள்ளப்பட்டது: "தோணலமுண்டு துறக்கப்பட்டோர், வேணீருண்ட குடைவேந்தன்னர்," "அளித்தபின்கின்ற வேந்தன்" என்றார் கலித்தொகையிலும், சிந்தாமணியிலும். அக்கினிவைப் பிரதிவ்மந்து உதகம் பண்ணுத லுளதாதலின், எரிமுன்தெவிபாக்கொண்டே னென்கிறான். பி-ம்:—[1]களிங்கன். [2]விடகாணெடுகாளைன்றேடு. [3]தேவி. (உசஅ)

சக. விழிக்குங் கண்மே றில்லா வெங்கா னென்கான் முளேனைச்
சுழிக்கும் வினையா லேகச் சூழ்வா [1]யென்னைப் [2]போழ்வாய்
பழிக்குங் காணைப் மாணைப் பாவி யினியென் பலவுன்
கழுத்தின் ளுணுன் மகற்குக் [3]காப்பின் வுணை [4]மென்றான்.

(இ - ள்.) 'விழிக்கும் கண் மேறு இல்லா - அவன்தெவ்வாயல்: நிறத்து பார்க்கின்ற வேறுவிழி யில்லாத, என் கான் முளேனை-எனது பிள்ளையாகிய இராமனை, வெம் கான் - கொடிய காட்டில், சுழிக்கும் வினையால் - அலைய செய்கின்ற ஊழ்வினையினால், ஏக - செல்லும்படி, சூழ்வாய் - சூழ்ச்சியை செய்பவனே! என்னை போழ்வாய் - என்னைப் பிளப்பவனே! பழிக்கும் காணைய் - பழிமொழிக்கும் வெட்காதவனே! மாணை பாவி - மாட்சிமைப்படாத கொடியவனே! இனி என் பல-இனிமேற் பலவாய்த்தானைனைக் கூறுவதனாற் பயன்யாது? உன் கழுத்தின் காண் - உன்கழுத்திற்கட்டிய மணவரான், உன் மகற்கு - உன்பிள்ளையாகிய பரதனுக்கு, காப்பின் கான் ஆட்சிபுரிதற்கு நத்துக்குரிய கயிறுகும்,' என்றான் - என்று கூறினான். (தகாதன் : ஏ - று.)

பரதனுக்குப்பட்டங்கட்டுவதற்குன் கான் இரப்பேனென்பதுகருத்து; பிறிதினவிற்சியணி. இராமபிரான் என்கண்போன்றவன்: அவனை பிரிந்தால் நான் கண்ணிழந்த குருடனையென்பது 'விழிக்குங்கண் வேறில்லா என்கான் முளை' என்பதன்கருத்து. இனி எப்பொழுதும் என்கண்ணோட்டானத்தக்க வன் அந்த ஸ்ரீராமபிரானனையென்ற கருத்துக்கொள்ளவுமிடமுண்டு: "விழித் துங்கண்ணிலெனின்கண்மற்றல்லால் வேறொருவனோடென்னனப்பற்றுதல்" என்ற பெரியாழ்வாசுரமுங் காண்க. கான்முளை - சக்தியில்முளைப்பது: சக் நானம்: அன்மொழித்தொகை. வெங்கானென்கான், சூழ்வாயென்னைப் போழ்வாய், காணைய்மாணை—பிராசம். பி-ம்:—[1]என்ன, என்னைத் [2]பெழ்வா ப்ப். [3]காப்புநாண். [4]என்னை. (உசக)

ரு○.—மனமிரங்காத கைகேயியைக்தூறித்து வசிட்டனைச் சாட்சியாகக் கொண்டு மன்னவன் சிலகூறுதல்.

இன்னே பலவும் பகர்வா [1]னிரங்கா தாளை நோக்கிச்
சொன்னே [2]னின்றே யிவளென் ரூர மல்ல டுறந்தேன்
மன்னே [3]யாவான் வருமப் பரதன் றனையும் மகனென்
றுன்னேனென் முனிவா [4]வவனு மாகா னுரிமைக் கென்றான்.

(இ - ள்.) இன்னவ - இத்தன்மையவாய், பலவும் பகர்வான் - அநேக வார்த்தைகளைச் சொல்லுந் தசரதன்,—இரங்காதாளை நோக்கி-மனமிளகாத அக்கைகேயியைப்பார்த்து, [கைகேயி மனமிளகாதிருத்தலைக் கண்டுஎன்ற படி], (வசிட்டனை நோக்கி), 'முனிவா-முனிவனே! இன்று ஏ சொன்னேன்-இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்; இவள் என் தாரம் அல்லள்-இவள் என் மனைவியல்லள்; துறந்தேன் - வெறுத்துவிட்டேன்; மன்ன ஆவான் வரும் - அரசனாக வருகின்ற, அ பரதன்தனை உம்—, மகன் என்று உன்னேன் - பிள்ளையென்று நினையேன்; அவன் உரிமைக்குஉம் ஆகான் - அப்பரதன் புத்திரன் செய்வதற்குரிய உத்தரகிரியை செய்வதற்குத் தக்கவனாகான்,' என் றான்—; (எ - று.)

தான் கல்லுங் கரையும்படிசொல்லவும், கல்லினும்வன்னெஞ்சளாய்க் கைகேசி சிறிதும் இரங்காதிருத்தலைநோக்கி அவளிடத்துமனங்கசந்து தசரதன்,வசிட்டமுனிவனைநோக்கி, 'சுவாமி!நான் இந்தக்கைகேயியைத் துறந்து விட்டேன்: என்னுயிரைவாங்குவதால் யமன்போன்ற இந்தப்பாவி எனக்கு மனைவியல்லள்: மூத்தவன்அரசுபுரிதலென்ற முறைமைமாறி இராச்சியத்தை யாளவேண்டுமென்ற கருத்துடன் வரப்போகின்றதனாலும், ஸ்ரீராமனைக் காட் டுக்குச்செல்லுமாறு செய்வதனாலும் என்மனத்துக்கு மாறான பரதனும்,எனது புத்திரன் ஆகான்: ஆகவே, இராமனைப்பிரிவதனால் இறக்கப்போகின்ற எனக்கு அந்திமகிரியைசெய்வதற்கும் அவன் ஏற்றவனல்ல னென்றனன்' என்ப தாம். இன்ன ஏ என்பன இன்னையென்று விகாரப்பட்டன; எகாரம் - பிரி நிலை. சொன்னேன் - காலவழுவமைதி: இயல்பிலுல்வந்தது. தாரம் - தாராஃ என்ற வடசொல்லின்விகாரம். மன்-மன்னனுக்கு ஆகுபெயர்:எகாரம்-சிறப்பு.

பி-ம்:—[1]இரங்காதவளை. [2]முன்னை. [3]ஆள்வான். [4]அவனென்னுரிமைக்கா கான்.

(நாளை)

நிக.—தசரதன்நிலையைக் கண்டு கோசலை வருத்தமுறுதலை இதுவும் அடுத்தகவியும் கூறும்.

என்னைக் கண்டும் மேகா வண்ணம் மிடையூ [1]றுடையா
னுன்னைக் கண்டும் மிலமீ [2]ளென்னு வுயர்கோ சலையைப்
பின்னைக் கண்டா னனையான் பிரியக் [3]கண்ட துபரந்
தன்னைக் கண்டே [4]தவிர்வா[5]ளர்வா னிலபிற் [6]றளர்வாள்.

(இ - ள்.) பின்னை-பின்பு, இடையூறு உடையான்-துன்பத்தையுடைய தசரதன்,—உயர் கோசலையை - சிறந்த கௌசலையைநோக்கி, '(இராமன்), என்னை கண்டு ஏகா வண்ணம் உம்-என்னைப்பார்த்தபடியே (தான்) காட்டிற் குச்சென்றதுபோலவே, உன்னை உம் கண்டு இலன்-உன்னையும் பார்க்கவில்லையோ?' என்ற-என்றுகூறிக்கொண்டே, கண்டான்-; அனையான் பிரிய கண்ட துயரம்தன்னை-அவ்விராமன் பிரிதலால் (மன்னவனுக்கு) சேர்ந்துள்ள துன்பத்தை, கண்டென-கண்கூடாகப்பார்த்தபின்பே, தவிர்வான் - (தான் அத்தசரதனிடம் இராமனைக்காட்டிற்கு அனுப்பாதிருக்கும்படி கேட்கவேண்டுமென்றுநினைத்துவந்த கருத்தை) ஒழிபவனாய், தளர்வான் - சோர்பவனாகிய அரசனது, நிலையில்—, தளர்வான்-(தானும்) சோர்பவனாய்; (எ - று.)

'கானகஞ்செல்கின்றேனென்று சொன்னால் தான் எங்ஙனம் வருந்துவேனோ?' என்று என்றேனும் சொல்லாமலே கானகத்துக்குப் புறப்பட்ட இராமன் உன்னிடத்தும் அவ்வண்ணமே சொல்லாதொழிந்தானே? என்று மன்னவன் விரைவியவண்ணம் கௌசலையைக் கண்டானாக, அரசனது துயரமிருதியைக் கண்டு, தன்னுயிரன்றவனையில் இராமனைக் காட்டிற்கு அனுப்பக்கூடாதென்றே இம்மன்னவன்முயன்றுள்ளானென்பதையும் இராமனைப்பிரிந்ததால் தன்னைவிட மன்னவன் மிகுதியாகத்துன்பப்படுகிறானென்பதையும் கண்கூடாகக்கண்ட கோசலை, தான்இராமனைக் காட்டிற்குச்செல்லாதவாறு செய்யவேணுமென்று வேண்டிக்கொள்ளும் எண்ணந் தவிர்ந்து மன்னவன் போலவே தானும் வருந்துபவளாயினளென்பதாம். என்னைக்கண்டிட் ஏகா வண்ணம் இடையூறு ஒன்றுமடையான் என்பதற்கு - கானகத்திற்குச் செல்லுமுன் என்னைப்பார்த்துவிட்டுப் போகமுடியாதபடியும் யாதொன்றினால் தடை செய்யப்பட்ட இராமனென்றும், அனையான் பிரிய கண்ட துயரம்தன்னைக் கண்டே தவிர்வானென்பதற்கு - அவ்விராமன் பிரிந்ததனால் தோன்றிய துயரத்தைத் தன்னைக் கண்டே போக்கிக்கொள்பவனாகிய அக்கோசலையென்றும் உரைக்கலாம். வீரமாதாவாதலாலும், ஸ்ரீராமனைப்பெற்ற பேறுகுடையாலும், பட்டமகிஷியாதலாலும், தருமபத்தினியாதலாலும் 'உயர்கோசலை' என்றார். இனி அனையான் பிரியக்கண்ட துயரத்தையும் தன்னையுங்கண்டு தளர்வாள் என்றும், தன்னைக்கண்டே அனையான் பிரியக்கண்ட துயரந் தவிர்வாள் என்றும்உரைப்பினுமாம். இனி, இடையூறுடையான் [1]தசரதன் கண்டாளாக, என்ன, தளர்வான்; இவன்தளர்வான் எனினுமையும். பி-ம்:—[1]உடையான். [2]என்றான். [3]கண்டாளாள. [4]தவிர்வாள். [5]தளர, தளர்வாள். [6]தளர்வான். ()

மாற்றான் செயலா மென்றுங் கணவன் வரமீந் துள்ள
மாற்று தபர்ந்தா னென்று மறிந்தா ளவனும் [1]மனத்தைத்
தேற்று நின்றான் மகனைத் [2]திரிவா யென்று ளரசன் [3]வாள்.
றேற்றான் மெய்யென் றுலகஞ் சொல்லும் பழிக்குஞ் [4]சோர்

(இ - ள்.) மாற்றான் செயல் ஆம் என்றுஉம்-(இது)சக்கேயினது செய்கையாகுமென்றும், கணவன் உடம் ஈந்து உள்ளம் ஆற்றுது-சக்கரவர்த்தி வரத்

தைக்கொடுத்து [வற்புறுத்தப்பெற்றுவரத்தைக் கொடுத்தபோதிலும்] மனம் பொருந்தாமல், அயர்ந்தான் என்றுஉம் - மூர்ச்சித்தானென்றும், அறிந்தாள் அவள் உம் - தெரிந்துகொண்டவளாகிய அக்கோசலையும், மனத்தை தேற்றி நின்றாள் - (தன்) மனத்தைச் சமாதானப்படுத்திக்கொண்டு, அரசன் மெய் தோற்றான் என்று-சக்ரவர்த்தி சத்தியந்தவறினானென்று, உலகம் சொல்லும்-உலகத்தார் சொல்லும், பழிக்குஉம்-பழிமொழிக்கும், சோர்வாள் - தளர்பவளாய், மகனை திரிவாய் என்றாள்-இராமனைக்குறித்து(க் காட்டிற்கு)ச் செல்வாயென்றாள்; (எ - று.)

தசரதனைக் கண்டபிறகு அந்தச்சக்ரவர்த்தி சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு வேறுவகையின்றி மகனைக் காட்டுக்குப்போக அனுமதிசெய்து மனம்மிகவுந் தவித்தலை யுணர்ந்த அந்தக் கோசலை, தன்கணவன் ஸத்யப்ரதிஜ்ஞை ஜகாவிட்டால் உலகத்தார் தூற்றுவாரேயென்று மனந்தளர்ந்து தன்மகன் கானகஞ்செல்வதை யுடன்பட்டுக் கூறினளென்க. மகனைத்திரிவாயென்றாளென்பது-மகன்காட்டிற்குச்செல்வதை யுடன்பட்டாளென்றவாறு.[1] அவனைத்தேற்றுகின்றாள் மகனைத்திரிவானென்றாள் என்ற பாடத்துக்கு-கணவனைத் தேற்றுபவளாய் மகன் காட்டிற்குச்செல்வதினின்று மீள்வானென்றாளென்று பொருள்கூறுக: இப்பொருளில், அரசன் சத்தியபிரதிஜ்ஞையைதுகுறித்து இராமன் காட்டிற்குப்போவதை யுடன்பட்ட கோசலை கணவனைத் தேற்றும் பொருட்டு இராமன் கானகஞ்செல்லுங்கருத்தை விட்டிட்டானென்றாளென் பாருமுளர். இனி, மகன் திரிவான்-மகன் திரும்பிவருவானென்றாளென்னலாம். மாற்றாள்-சக்களத்தி: ஸபத்நி. பி-ம்:—[1] அவனை. [2] திரிவாயென்றாள், திரிவானென்றாள். (நடசக)

நாங.—கோசலை 'பெருமைக்குத் தகுந்தவாறு, மகன்மீது அன்பை யொழியவேண்டும் எனல்.

தள்ளா [1]நிலைசான் மெய்ம்மை [2]தழுவா வழுவா வகைநின்
றெள்ளா நிலைகூர் பெருமைக் [3]கிழிவா மென்று ளுரவோய்
விள்ளா நிலைசே ரன்பான் மகன்மேடன் [4]மெலியின் னுலகங்
கொள்ளா தன்றே வென்றாள் கணவன் குறையக் குறைவாள்.

(இ-ள்.) கணவன் குறைய குறைவாள்-(இவ்வாறு) கணவன் துயருறும் போது உடன்துயருறுகின்ற கோசலை,—'உரவோய்-வலியுடையவனே! தள்ளா நிலை சால் மெய்ம்மை - தவறத்தகாத தன்மைபொருந்திய சத்தியத்தை, தழுவா-ஏற்றுக்கொண்டு, வழுவா வகை நின்று-தவறுதபடி நிலைநின்றபின்பு, எள்ளா நிலை கூர் பெருமைக்கு இழிவுஆம் என்றால் - இகழப்படாத தன்மை மிகுந்த (நின்) பெருந்தன்மைக்கு நிந்தையைத் தருவதாகு மாறால், விள்ளா நிலை சேர் மகன்மேல் அன்பால் மெலியின்-வேறுபடாததன்மைபொருந்திய பிள்ளையிடத்துள்ள நேசத்தினாற் சோர்ந்தால், உலகம் கொள்ளாது அன்றே-உலகத்தார் (அதனை) ஏற்றுக்கொள்ளார்களல்லவா? என்றாள்-; (எ-று.)

பெருமைபெறலேணுமாலால் சத்தியத்தைப்பாதுகாக்கவேண்டுமேயன்றி மகன்மேலன்புகொண்டு மனமழிவதாற் பயனுண்டோ? அது பெருமைக்கு இழிவாமன்றே? ஆதலால், மகன்மீது அன்புகொண்டு வருந்தவேண்டா எனக் கோசலை மன்னவனைத் தேற்றின ளென்க. பெருமையாவது - எவ்வழியும் மனக்கலக்கமின்றித் தாம் செய்யவேண்டியவைகளைச்செய்யும் உறுதிப் பாட்டாலுய உயர்வு. இழிவைத் தருவதனை இழிவென்று உபசரித்தார். உரவு-மனமொழி மெய்களது வலி: அறிவுமாம். அன்பாவது - மனைவியர்கண்ணும், தாய்தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின்கண்ணும் பிணிப்பித்து நிற்கும் நேயம்; "அன்பெனப்படுவது தன்கிளைசெறுமை" என்றுர் கலித்தொகையி னும். கணவன்குறையைக் குறைதல் - கற்பிலக்கணம். உரவோய்என்ற விளி - உரவோனுகிய உனக்கு இது தகாதென்பதைக் குறிப்பிக்கும். பி-ம்:—[1]கோ யான். [2]தம்மைத்தழுவாவகைகின்று, தழுவாவகையாலெய்தின். [3]இழவாம். [4]இனியிவ்வுலகம், மெலியலுலகம். (நகு)

நச.—கோசலையின் வருத்தம்.

[1]போவா தொழியா னென்றுள் புதல்வன் றன்னைக் கணவன்
சாவா தொழியா னென்றென் றுள்ளந் [2]தள்ளுற் றபர்வாள்
காவா [3]யென்ணெண் மகனைக் கணவன் புகழுக் கழிவா
ளாவா வுயர்கோ சலைபா டன்னம் பென்னும் னனளே.

(இ - ள்.) (என்றுபின்னும்): புதல்வன் தன்னை - (தன்) மகனைப்பற்றி; 'போவாது ஒழியான் - (என்மகன் வனத்திற்குச்) செல்லாமல் நிற்கான்;' என்றுள்—; கணவன் சாவாது ஒழியான் என்று என்று - (இதனால் தன்) கொழுநன் இறவாது விடானென்று பலமுறையென்னி, உள்ளம் தள்ளு ற்று - மனம்நெருக்கப்பட்டு, அபர்வாள் - வருந்துவாள்; கணவன் புகழுக்கு அழிவாள் - கொழுநனது கீர்த்திக்குக் குறைவுவருமேயென்று வருந்துபவ ளாய், மகனை காவாய் என்றுள் - இராமனை (வனத்துக்குச் செல்லவொட்டா மல் தடுத்து)க் காப்பாயாக என்று (தன்கணவனிடத்துச்) சொல்லாள்; ஆஅ- அந்தோ! அந்தோ!! உயர் கோசலை ஆம் அன்னம் - சிறந்த கோசல்லைபடிகிய அன்னப்பேடை, என் உற்றனள் - எவ்வாறுதுன்பப்பட்டாள்? [5]மிகவும் வருந்தினுள் என்றபடி; (எ - று.)

'இராமனை தந்தை கட்டளையிட்டதால் வனத்திற்செல்லாதிருக்கமாட் டான்; அவன் வனஞ்சென்றுதேலா கணவன் உயிர்தாங்கி இருக்கமாட்டான்: இனி கணவனதுபூதவுடம்பைக் காக்கும் பொருட்டு மகனைக் கானகத்திற்செல்ல வேண்டா மென்று கணவனைக்கொண்டே தடுப்போ மென்றுதேலா அதனுற் கணவனதுபுகழுடம்புக்கு அழிவு வருமே!'என்று இவ்வாறு நினைத்து நினைத்து அந்தக்கோசலை பட்ட துன்பத்துக்கு ஓரெல்லையில்லை யென்பதாம். ஒருபால் மகன் கானகஞ் செல்லுதலும் கணவனிறப்பதனை என்று சுட்டைவருத்து மகன் கானகஞ்செல்லாவிட்டாற் கணவனது புகழுக்கும் புண்ணியத்துக்கும்

கேடுவருமே என்ற வருத்தம் மற்றொருபால்இடருறுத்த இவ்விருவகைத் துன் பத்துக்குஇடையே அகப்பட்ட கோசலையின் மனத்துயர்நிலை நம்மாற்சொல்ல முடியாதென்றபடி. மகனைக்காவாய் என்பதற்கு-மகனைக்குறித்து (நீ தந்தை யைக்) காவாய் என்றுமாம். ஆவா-இரக்கச்சொல்:அவலத்தால், இரண்டடுக்கி ற்று. அங்ஙனந் தேவியாயவள் இங்ஙனமாயிஞளேயென்று குறிக்குமாறு, 'ஆவாவுயர் கோசலையாம் அன்னம் என்னுற்றனளே'என்று கவி இரங்குகின் றன ரென்க. பி ம்:—[1]போவாவெழிவாயென்னுள், போவாவெழியாவென்னுள், போவாவெழிவாவென்னுள், போவாவெழிவாவென்னுள். [2]தளர்வுற்று. [3]என்னுள். (நடுநிக)

நுரு.—இதுமுதற் பன்னிரண்டுகவிகள் -கானகஞ்செல்லாநின்ற மகனைக்குறித்துத் தசரதன் புலம்புதலைத் தெரிவிக்கும்.

உணர்வா னணையா ணுரையா [1]லுயர்ந்தா ணுரைசால் குமரன்
புணரா னில[2]மே வனமே போவா னெனா மென்னு
விண[3]ரார் தருதா ரரச னிடரா லயர்வான் விணையேன்
றுணைவா துணைவா [4]வென்னுன் [5]றோன்னுறு[6]றோன்னுறு [7]யென்னுன்.

(இ - ள்.) இணர் ஆர்தரு தார் அரசன் - மலர்கள் நிறைந்த மாலையை யுடைய தசரதன், அனையாள் உரையால் - அக்கோசலையினது வார்த்தையி னால், 'உயர்ந்தான் உரை சால் குமரன் - சிறந்தவனுகிய கீர்த்திமிகுந்த ராமன், நிலம் ஏ புணரான் - பூமியைச் சேரான்; வனம் ஏ போவான் ஏ ஆம்-காட்டிற்குச் செல்பவனேயாவான்', என்னு உணர்வான்-என்றுஅறிந்து,— இடரால் அயர்வான் - வருத்தத்தாற் சோர்பவனுகி, விணையேன் துணைவா - தீவினையையுடைய எனதுதோழனே! துணை வா-சகாயமாக வா,என்னுன்—; தோன்றல்-மகனே! தோன்றாய் - (என்முன்னே) வருவாயாக, என்னுன்—.

இராமன் காட்டிற்குச்செல்வானேயன்றிப் பட்டாபிஷேகஞ்செய்து கொள்ளா னென்று கோசலை கூறியதனால், மன்னவன் துயர்மேலிட்டுக் கதற லானனென்க. முதற்குமாரனைதலாலும், சகலகல்யாணகுணங்களுமுடையவ னைதலாலும், 'உயர்ந்தான்' என்றார். நிலம்புணர்தல் - பூமிப்பிராட்டியோடு கலத்தல், பட்டாபிஷேகஞ்செய்துகொள்ளுதல். துணைவாதுணைவா, தோன் றல்தோன்றாய் - இத்தொடர்—எழுத்தின்கூட்டம் இடைவிடாது பொருள் வேறுபாட்டாற் பெயர்த்தும் வருவதால், மடக்கு என்னுஞ் சொல்லணியாம். உணர்வான் - முற்றெச்சம். பி-ம்:—[1]உயர்ந்தான். [2]மாவனமே. [3]ஆதரித்ததா ரான், ஆர்தருதார்மார்பன். [4]என்னுள். [5]தோன்றாய். [6]தோன்றல். [7]என்னுள்.

நுசு. கண்ணுங் நீரா யுயிருடம் [1]டொழுகக் கழியா நின்றே
னெண்ணுங் [2]நீர்நான் மறையோ ரெரிமுன்[3]னின்மேற் சொரிய
டண்ணுங் நீராய் வந்த புனலே மகனை [4]விணையேற்
குண்ணுங் நீரா யுதவி யுயர்கா [5]னடைவா யென்னுன்.

(இ-ள்.) (பின்னும் தசரதன் இராமனை விளித்து), 'மகனே-(எனது) புத்திரனே! கண்உம் நீர்ஆய் - கண்களிரண்டும் நீராகி, உயிர்உம் ஒழுக - சீவனும் வெளியிற் செல்ல, கழியாகின்றேன் - இறக்கும்நிலையையடைந்துள்ளேன்; எண்ணும் நீர் நால் மறையோர் - (யாவராலும்) மதிக்கப்படுந்தன்மையையுடைய நான்கு வேதங்களையுமுணர்ந்த பிராமணர், எரிமுன் - அக்கினியின் முன்னே, (நீ பட்டாபிஷேகத்திற்குச் செய்யவேண்டிய ஓமக்கினைச் செய்த பின்பு), நின்மேல் சொரிய - உன்மீது அபிஷேகஞ்செய்வதற்காக, மண்ணும் நீர் ஆய் வந்த - சுத்த ஜலமாகக் (கங்கை முதலிய புண்ணியதீர்த்தக்களிலிருந்து) கொண்டுவந்த, புனலை - தீர்த்தங்களை, வினையேற்கு - தீவினையையுடையேனை எனக்கு, உண்ணும் நீர் ஆட்உதவி - (நான் இறந்துவிடப் பிரேதவுருவத்தையடைந்த எனக்கு) உண்ணுதற்கு உரிய நீர்க்கடனைக் கொடுத்து, (பிறகு), உயர் கான் - பெருங்காட்டை, அடைவாய் - சென்று சேர்வாய்', என்றான் - என்று புலம்பிக்கூறினான்; (எ - று.)

'எனது கண்ணிரண்டு நீர்மயமாகி ஆறாய்ப்பெருக, என்னுயிரும் நீங்கப்போகின்றேன்: வேதமந்திரங்களைக்கொண்டு ஜபித்து ஓமஞ்செய்து உனக்கு அபிஷேகஞ்செய்யும்பொருட்டுக் கங்கைமுதலிய புண்ணியநதிகளிலிருந்து கொண்டுவந்துள்ள நீரை, மகனே! இறந்துவிட்ட எனக்குத் தர்ப்பணநீராகக்கொடுத்துப் பிறகு காட்டிற்குச் செல்வாய்' என்று தசரதன் இராமனைக்குறித்துப் பெருந்துயரத்தாற் கூறின னென்பதாம். 'கண்ணும் நீராயுயிரும் மொழுக' என்ற தொடரில், 'நீராயொழுக, உயிரும் ஒழுக' என்று இனிமையுண்டாக உடனிழுத்தலையைக் கூறியது - உடனிழுத்தியலணியாம். மண்ணும் நீர் - கழுவிநீராட்டுதற்குரிய நீர்: "மண்ணுநீர் மருவ வாட்டி" என்றார், சிந்தாமணியிலும். வினையேன்றது-"கங்கைபெரு முதலவாய கன்னிமீரென நீர்த்த, மங்கலப்புனலும் ஈதுவானிடைக்கூட்டி" என்று கீழ்க் கைகேகிகுழ்வினைப்படலத்திற் கூறிய கங்கைமுதலிய புண்ணிய நதிகளின் தீர்த்தத்தைக் காட்டும். காண்டற்பொருட்டாகக் கொணர்ந்த நீர் பட்டாபிஷேகத்தில் நீராட்டுவித்தற்குரிய புனலாக இருக்க நீலலோசனனும், இறந்த யான் உண்ணும் நீராகவாவது உதவுதி யென்று தசரதன் கூறுகின்றான். ஒருவர் இறந்தபிறகு அவருடைய ஆன்மா பிரேதசரீரத்தைப் பெறுகின்ற தென்பதும், புதல்வர்முதலியோர் இறந்தவர்க்குச் செய்யுங் கடன்களில் உதகுவனவான நிலவாதசம்[என்றதன் கூடபதி]வாதிலவாதசம் [என்னப்பட்ட பிண்டசரீரம்பெற்ற அவ்வான்மாவால் உண்ணப்படு மென்பதும் நூற்கொள்கை. இராமபிரானுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வதென வகுத்தபின் மூவிரோர் சேர்ந்து அதற்கு எற்ற செயலைத் தொடங்கியும் அது கைகூடப்பெறுமையோடு இராமபிரானையே காட்டிற்குச் செலுத்தும்படியும் நேரிட்டதுபற்றி, தசரதன், தன்னை 'வினையேன்' எனப் பழித்துக் கூறுகின்றான்.

இரண்டாமடியில், நீர் - நீர்மையென்றதன் விகாரம். மற்றை மூன்றடிகளிலுமுள்ள நீர் - புனல் என்றபொருளது; எரி - எரிவது: எனவே, அக்கினியாயிற்று; வினைமுதற்பொருள்விகுதிபுணர்ந்துகெட்டபெயர். பி-ம்:— [1]ஒழுகி. [2]நீரான், நீரார். [3]என். [4]வினையேன். [5]அடையாய். இப்பாடலின்பின் சுக-ஆவது பாடலாகவுள்ள "எற்றே" என்றுதொடங்கும் பாடல் சிலபிரதியிலுள்ளது. (சுருசு)

நுஎ. படைமா ணரசைப் பலகான் [1]மழுவா ளதனு லெறிவான்
[2]மிடைமா வலிதா னனையான் [3]வில்லா லடுமா வல்லா
[4]யுடையா மகுடம் புனையென் றுரையா வுடனே கொடியேன்
சடைமா மகுடம் புனையத் தந்தே னந்தோ வென்றான்.

(இ - ள்.) (என்றுபின்னும்), 'படை மான்ற அரசை - சேனைகளினது மாட்சிமையையுடைய வேந்தர்களை, பல கால்-இருபத்தொருமுறை, மழுவாள் அதனால் மழுப்படையால், எறிவான் - வெட்டுபவனும், மிடை மா வலி தான் அனையான்-நெருங்கிய மிகுந்த பலத்தில் தன்னைத்தானே யொத்தவனுமாகிய பரசுராமனை, வில்லால் அடும் ஆ (று) வல்லாய் - தனுவிதையில் வெல்லுந் திறத்தில் வல்லவனே! கொடியேன்-தீவினையையுடைய யான், உடையா மகுடம் புனை என்று - குலமுறைதவறுதுவருகிற முடியைச் சூடென்று, உரையா - சொல்லி; உடனே—, சடை மா மகுடம் புனைய - பெரிய சடைமுடியை யணியும்படி, தந்தேன்—; அந்தோ—!' என்றான்—; (எ - று.)

உனது வீரகுணத்துக்குத் தோற்று இவ்வரசு உனக்கே தக்கதென்று அறுதியிட்டு உன்னைக்கூவி, உடையாமகுடம் புனை யென்றுகூறி, உன்னையே சடை மா மகுடம்புனையுமாறு தந்தேனே! என்னுரையென்னே! அந்தோ!! என்று தசரதன் இரங்குகின்றனனென்க. இச்செய்யுளில்:கருத்துக்கு விருப்பமாகிய ஒருசெயலைச்செய்யத்தொடங்கி அதற்குமாறாக மற்றொன்றைப் பெறுவதாகிய **ததூதியின்மையணி** வந்துள்ளது காண்க: இது, வடமொழியில் விஷமாலங்காரமெனப்படும். மிடை மாவலிதான் அனையான்-வெற்றிபொருந்திய மகாபலிசக்ரவர்த்தியை யொத்தவனென்றுமாம்; இவ்வுரையில் அவன் தேவரைவென்றுற்போல இவன் அரசரை வென்றமையால் அவனை உவமையாக்கினரென்க. மாவலியை வாமனவதாரத்தில் வென்றதுபோல, இவனை [பரசுராமனை] இவ்வவதாரத்தில் வென்றனை யென்றபடி. இனி, மிடைமாவலிதானனையான் [தயரதன்] என்றான் எனக் கூட்டலுமாம். [1]பழுதாய் மழுவாலெறிவான்என்ற டாடத்துக்கு-பழுக்கக்காய்ச்சிக் கூர்மைசெய்த மழுப்படையால் எறிபவனென்க. பி-ம்:—[2]மிடன்மாண். [3]வில்லோடு. [4]உடைமா. (சுருசு)

நுஅ. [1]கறுத்தா [2]யுருவம் [3]மனமுங் கண்ணுங் கையுஞ் [4]செப்பாய்
பொறுத்தாய் பொறையே யிறைவன் புர[5]மூன் றெரித்த [6]போர்வி
லிறுத்தாய் தமியே [7]னென்னை தென்னை யிம்மூப் பினட்டே
லெறுத்தா யினி[8]நான் வாணெள் வெண்டே னெவண்டே னென்றான்.

(இ - ன்.) (என்றுபின்னும்), 'உருவம் கறுத்தாய் - திருமேனி கறுத்திருப்பவனே! மனம்உம் கண்உம் கைஉம் செய்யாய் - உள்ளமுங் கண்களுங் கைகளுஞ் செம்மையாயிருப்பவனே! பொறையே பொறுத்தாய் - பொறுமையென்னுங் குணத்தையே தரித்திருப்பவனே! இறைவன் புரம் மூன்று எரித்த போர் வில் இறுத்தாய் - சிவபெருமானது முப்புரங்களையும்நீறுக்கின யுத்தத்தில்வென்ற வில்லை யொடித்தவனே! தமியேன் என்றது - தனியனாயிருக்கின்றேமென்று நினையாமல், என்னை இம்மூப்பிடைவ வெறுத்தாய்-என்னை இம்முதுமையிலே வெறுத்திட்டாய்; இனி நான் வாழ்நாள் வேண்டேன் வேண்டேன் - இனி யான் (சரீரத்தோடு) வாழ்நாளை விரும்பேன் விரும்பேன்,' என்றான்—; (எ - று.)

தான் சத்தியபிரதிஜ்ஞனாகவேண்டிக் கானகம்போவென்றாலும் தன் பேச்சைமீறி இராமன் காடுசெல்லாதிருப்பின் நலமென்று கருதுபவனாதலின், அங்ஙனம் தன்பேச்சைமீறாது இராமன் கானகஞ்செல்வதுபற்றி, தமியேனென்னைவிட்டுச்செல்வதாக இராமன்மீதுகுறைகூறுகின்றனன் தசரதனென்க. இதனால், தசரதனது அன்பும் பெருவருத்தமும் வெளியாம். மனஞ் செம்மையாதல் - மனம்நல்லதாயிருத்தல். இனி, உருவமும்மனமுங்கறுத்தா யென்றுமாம்; அவ்வுரையில் மனங்கறுத்தல் - மனங் கோபித்தல்; "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள." புரமூன்றெரித்த இறைவன்போர்வில் என்றலுமாம். வேண்டேன்வேண்டேன் - அவலம்பற்றியதடுக்கு. பி - ம்:—[1]கருத்தாய். [2]உருவும். [3]கண்ணுமனமும். [4]செய்ய. [5]அன்று. [6]பொருவில். ஒருவில். [7]என்னுய். [8]யான். (நருநரு)

நுகூ. பொன்னின் முன்னம் மொளிரும் பொன்னே புகழின் புகழே
[1]மின்னின் மின்னும் வரிவிற் குமரா மெய்யின் மெய்யே
யென்னின் முன்னம் [2]வனீ யடைதற் கெளியே னல்லே
னுன்னின் முன்னம் புகுவே னுயர் [3]வா னகம்யா னென்றான்.

(இ - ள்.) 'பொன்னின் முன்னம் ஒளிரும் பொன்னே - பொன்னிலும் மேலாக விளங்குகின்ற பொன்போன்றவனே! புகழின் புகழே - கீர்த்திக்குக் கீர்த்தியானவனே! மின்னின் மின்னும் வரி வில் குமரா - மின்னலினும் (மேலாக) விளங்குகின்ற கட்டமைந்த வில்லையுடைய மகனே! மெய்யின் மெய்யே - வாய்மைக்கும் வாய்மையானவனே! என்னின் முன்னம்-எனக்கு முன்னே, நீ வனம் அடைதற்கு - நீ காட்டிற்போவதற்கு, எளியேன் அல்லேன் - நான் எளிமையையுடையவனல்லேன்; உன்னின் முன்னம் - உனக்கு முன்னே, யான்—, உயர் வானகம் புகுவேன் - உயர்ந்த தேவலோகத்தை யடைவேன்,' என்றான்—; (எ - று.)

"தேனகுமா மலர்க்கூந்தற்கோசலையுஞ் சுமித்திரையுஞ் சிந்தைசோவக், கூனுருவிற் கொடுந்தாழுத்தை சொற்கேட்ட கொடியவன் தன் சொற் கொண்டின்று,கானகமே மிகவிரும்பி நீ துறந்த வானகரைத்துறந்து நான்றும், வானகமே மிகவிரும்பிப்போகின்றேன் மனுகுலத்தார் தங்கள் கோவே"

என்று தசரதன் புலம்பலில் குலசேகரப்பெருமாளருளிச்செய்த பாசுரம் இங்குக் காண்தக்கது. 'மெய்யின் மெய்யே' என்பதற்கு - சத்தியத்தினது உருவம் போன்றவனே யென்றும், என்னின்முன்னம், உன்னின்முன்னம் என்பவற்றிற்கு - என்கண்முன்னே உன்கண்முன்னே என்றும் உரைக்கலாம். குமரன் - குமாரன் என்பதன் விகாரம்; குமாரன் என்பதற்கு - மன்மதனைத் தன் கட்டழகாற் குற்சிதனைக்க வல்லவ னென்றும், குற்சிதர்களைச் சங்காரிக்கின்றவனென்றும், பூமியில் மன்மதனைப்போற் சுந்தரனாக இருக்கின்றவ னென்றும், எப்பொழுதும் பாலனாகஇருக்கின்றவ னென்றும், பூமியிற் சம்பத்தைக்கொடுக்கின்றவனென்றும், எப்பொழுதும் பிரமசாரியாயிருப்பவ னென்றும் பலவகையாய்ப் பொருள்கொள்ளலாம்; இது, முதலில் முருகக் கடவுளது பெயராய்ப் பின்பு அவனைப்போன்ற மைந்தருக்கு ஆயிற்று; சேய் என்பதுபோல. பி - ம்:—[1]மின்னும் வரிவிற்குமரா மெய்யின்மெய்யே வினையேன். [2]அவனி. [3]வாணினி. (நருசூ)

சூ0. நெகுதற் கொத்த [1]நெஞ்சு [2]நேயத் தாலே யாவி
யுகுதற் கொத்த வுடலு முடையே [3]னுன்போ லல்லேன்
றகுதற் கொத்த சனகன் றையல் கையைப் பற்றிப்
[4]புகுதக் கண்ட கண்ணுற் போகக் காணே னென்றான்.

(இ - ள்.) (என்றபின்னும்), நேயத்தாலே-அன்பினால், நெகுதற்கு ஒத்த நெஞ்சுஉம்-உருகுதற்குப் பொருந்தின மனமும், ஆவி உகுதற்கு ஒத்த உடல் உம்-அன்பினால் உயிர் விடுதற்குப் பொருந்தின சரீரமும், உடையேன்-உடையவனான், உன் போல் அல்லேன் - உன்னைப்போல(இவ்விரண்டையும்உடையவனாதவன்) அல்லேன்; தகுதற்கு ஒத்த சனகன் தையல்-உரிமைக்குப் பொருந்தின சானகி [சீதை] யினது, கையை பற்றி-கையைப் பிடித்துக்கொண்டு, புகுத-(இந்நகரத்துப்) பிரவேசிப்பதை, கண்ட-பார்த்த, கண்ணால்-(என்) நேத்திரத்தால், போக - (வனத்திற்) செல்ல, காணேன்-பாரேன்,' என்றான்—.

சானகியைப் பாணிக்கிரகணஞ்செய்துகொண்டு இந்நகரத்திற்புகக்கண்டுகளித்த இக்கண்களாற்கண்ட நான் நீ நகரத்தைவிட்டு அந்தச்சீதையோடு கானகஞ்செல்வதைக் காண மனம்பொறேன்: அதற்குக் காரணம் உன்போல அல்லாமல் நேயத்தால் நெகும்நெஞ்சும் நேயத்தால் உகும் உடலும் உடையனாயிருப்பதே யென்றன னென்க. நெகுதற்கு...உடையேன்-**நந்துடையடை கொளியணி.** நேயத்தாலே - **மத்திமதீபம்.** விவாககாலத்தில் வாமபாணிக்கிரகணம்பண்ணி அக்கினியை வலம்கொள்ளுதல் மரபாகலின், சனகன்றையல் கையைப்பற்றி எனக் கூறினானாம். உன்னைப்போலப் பிரிவாற்றுபவனல்லேனென்றபடி.பி-ம்:-[1]நெஞ்சின், நெஞ்சம். [2]நேசத்தாலே. [3]தின். [4]புகுதல்.()

சூக. [1]எற்றே [2]பகர்வ னினியா [3]னென்னை யுன்னிற் [4]பிரிய
[5]வற்றே [6]யுலகம் மெனினும் வானே [7]வருந்தா தெனினும்
பொற்றே ரரசே தமியேன் [8]புகழு யுயிரே யுன்னைப்
பெற்றே னருமை[9]யறிவன் பிழையேன் பிழையே னென்றான்.

(இ-ள்.) (என்று பின்னும்),'உன்னின் பிரிய-உன்னைவிட்டுப்பிரியும்படி, உலகம் - உலகத்தார், வற்றுள எனின்உம் - பொறுக்கவல்லவர்களாஞலும், வான்ள வருந்தாது எனின்உம் - தேவரும் மனம் வருந்தாராஞலும், பொன் தேர் அரசே-பொன்மயமான தேரையுடைய அரசனே! தமிழ்பன் புகழே - (வேறுதுணையில்லாத) எனது கீர்த்திக்குக் காரணமானவனே! உயிரே - உயிர்போல்பவனே! உன்னை பெற்றேன்-உன்னை (நோற்றுப்) பெற்ற நான், அருளை அறிவேன் - (பெற்ற) அருமையை அறிவேன்; இனி யான் என்னை எற்று ளை பகர்வேன் - இப்போது நான் எந்நிலைமையைக்குறித்து என்ன வென்று கூறுவேன்? பிழையேன் பிழையேன் - உய்யேன் உய்யேன்,' என்ருன்—; (எ - று.)

மண்ணுலகத்தவர் விண்ணுலகத்தவர் யாவர்க்கும் நீ உயிர்போன்றவனுதலின் நீ பிரிய அவரும் உயிர்வைத்திரார்: ஒருகால் அவர் உயிர்வைத்துக்கொண்டிருந்தாலும் என்னுயிர்நிற்கா தென்றவாறு. சிந்தையாலுஞ் சொல்லாலுந் தான் முடிசூட்டினமையால் 'அரசே'என்றும், இம்மை மறுமை இன்பங்களையொருங்கே யெய்துவித்தலால் 'புகழே' என்றும். இராமன் சீக்கிரல் உயிர் நீங்குமென்னு மியைபுபற்றி 'உயிரே'என்றும் உபசரித்துக்கூறினன்.தொக்கு பரிவாய் மகவைப் பெறுந் துயரத்தை உற்றிபறியாள்போல, இவ்வருமையைப் பெற்ற யான் அறிவேனேயன்றிப் பிறர்அறியாரென்றபடி. என்னில் உன்னைப்பிரிய என உருபுகளைப் பிரித்துக்கூட்டிப் பொருள் கோடலுமாம்.
பி-ம்:—[1]ஒற்றே. [2]பகர்வான். [3]என்னை. [4]பிரியா. [5]மற்றே. [6]உலகத்தெலும். [7]உறைதும், வருந்தான். [8]பொன்னை. [9]அறிவன். (நடுஅ)

சுஉ. அள்ளற் பள்ளப் புனல்சூ ழுகன்[1]மா நிலமும் மரசுங்
கொள்ளக் குறையா நிதியின் குவையும் [2]முதலா மெனையுங்
கள்ளக் [3]கைகே கிக்கே யுதவிப் [4]புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென் [5]னுயிரை மாய்க்கும் மாய்க்கும் மென்ருன்.

(இ-ள்.) (என்று பின்னும்), 'அள்ளல்-குழைசேற்றையுடைய, பள்ளம் - ஆழத்தையுடைய, புனல்-கடலால், சூழ்-சூழப்பட்ட, அகல் மா நிலமும்-அகலமும் பரந்த பூமியையும், அரசும்-இராச்சியபாரத்தையும், கொள்ள குறையா நிதியின் குவையும் - (யாவர் எவ்வளவு) கொள்ளினுங் குறையாத நிதியின் குவையும், முதல் ஆம்-இவைமுதலிய, எனையும்-எல்லாவற்றையும், கள்ளம் கைகேசிக்கு எ - வஞ்சனையையுடைய கைகேயிக்கே, உதவி-கொடுத்து, புகழ் கைக்கொண்ட-கீர்த்தியைப்பெற்ற, வள்ளல் தனம்-(உனது) ஒளதார்யகுணம், என் உயிரை மாய்க்கும் மாய்க்கும்-எனது பிராணனைக்கொல்லுங் கொல்லும்;' என்ருன்—; (எ - று.)

கைப்பட்ட இராச்சியத்திற் சிறிதும் பற்றுக்கொள்ளாது மனவெழுச்சியோடு தம்பிக்கு ஈந்த உதாரகுணம் என்னுயிரைக் கொள்ளைகொள்கின்ற

தென்கிழான் தசரதன். இனி, அள்ளல் - அகத்திய னெருகையால் மொள்ளு தலும், சாகரரால் தோண்டுதலுமென்றும், என்னுயிரை மாய்க்கும் மாய்க்கும்-எனதுயிரோ டொத்த இராமனை மறைக்கும் மறைக்கு மென்றுமாம். பி-ம்:— [1]நானிலமும், மாநிலமாய். [2]முதலாவெவையும். [3]கைகேயிக்கே. [4]புகழைக் கொண்ட. [5]உயிரானென்றி மறையேன். (கருகூ)

கூருூ. ஒலியார் கடல்சூ ழுலகத் துயர்வா னிடைநா கரினும்
பொலியா நின்ற ருன்னைப் போல்வா ருளரோ [1]பொன்னே
வலியா ருடையா ரென்றுன் மழுவா ளுடையான் வரவுஞ்
சலியா [2]நிலைநின் ருன்போற் [3]றடுப்பா ருளரோ வென்றுன்.

(இ - ள்.) (என்று பின்னும்), 'ஒலி ஆர் கடல் சூழ் உலகத்து - ஓசை நிறைந்த பெருங்கடல்சூழ்ந்த இந்நடுவுலகத்தவரிலும், உயர் வானிடை-மேலா கிய தேவர்களிலும், நாகரின்உம் - பாதாளலோகவாசிகளிலும், பொலியா நின்றார் - புகழ்முதலியவற்றால் விளங்குகின்றவர், உன்னை போல்வார் உளர் ஓ-உன்னை ஒப்பவர் இருக்கின்றனரோ? பொன்னே-பொன்போன்றவனே! மழுவாள் உடையான் - பரசுராமன், வலி உடையார் யார் என்றுன்-(என்னி னும் மிக்க) வலியுடையவர் யாவர்? [ஒருவருமில்லை] என்று சொல்லியவ னைய், வரஉம்-(போருக்கு) வரவும், சலியா நிலை நின்றுன்போல் - மனந்தள ராது எதிர்த்துவென்றதன்மையை யுடைய இராமனைப்போல், தடுப்பார் உளர் ஓ - (எதிராளியின் வலியைத்) தடுக்கவல்லவர் வேறிருக்கின்றனரோ?' என்றுன்—; (எ - று.)

கூத்திரியரை இருபத்தொருகால் வென்ற பரசுராமன் 'என்முன் வலி யுடையார் யாவர்?என்று செருக்கோடு கருச்சித்துக்கொண்டுவரவும் அப்படிப் பட்டபெருவீரனையும்வென்ற மகாவீரனை இராமனைப்போல் தைரியசாலிக ளானவீரர் எங்குங்கிடையா ரென்பதாம். கிடைத்தற்கருமைபற்றி, 'பொன் னே' என்றுன். வலியாருடையாரென்றுனென்றது - 'மலைகுவன்வல்லையா கில் வாங்கிடித்தனுவையென்றுன்" என்றதனை நோக்கி. என்றுல் எனப் பிரித்து,தடுப்பார் உளரோ-இனி இதனை விலக்குபவருண்டோவென்றுமாம். இனி, தயரதன், (நின்னிலும்) வலியுடையார் யார் என்றுன்; தடுப்பார் உள ரோ என்றுன் எனக்கூட்டலுமாம். [2]நிலையானென்றுல் தவிர்வார் உளரோ என்ற பாடங்கொண்டு, இங்கு வலியவர் யாவருளரென்று பரசுராமன் வந்த போதும் சிறிதுஞ் சலியாதுகாத்த இராமனையும் தவிர விடலாமோ? அங்ங னம் தவிரவிட்ட உன்னைப்போல் யாவர் இவ்வுலகிலிருப்பவ ரென்று இராச் சியவிலக்குமியைத் தசரதன்பழித்துரைத்ததாக இப்பாடலுக்குப் பொருள் காண்பாருமுளர். பி-ம்:—[1]திருவே. [2]நிலையாயென்றுல், நிலைநின்றுய்போற், நிலையாநின்றுல், நிலைநின்றார்போல். [3]தவிர்வார். (கூசுo)

சுசு. கேட்டே [1]யிருந்தே [2]னெனினுங் கிளர்வா னின்றே யடைய
மாட்டே [3]னகி லன்றே வன்கண் ணெனன்கன் மைந்தா
காட்டே யுறைவாய் நீயிக் கைகே சியையுங் கண்[4]டிந்
நாட்டே யுறைமே னென்ற னன்றென் [5]றன்மை யென்றான்.

(இ-ள்.) (என்று பின்னும்), 'கேட்டு எ-(நீ காட்டுக்குப் போவாயென்று) கேட்டும், இருந்தேன் எனின்உம் - இங்கிருப்பேனெனினும், கிளர் வான் இன்று அடைய மாட்டேன் ஆகில் அன்றே - விளங்குகின்ற தேவலோகத்தை இப்பொழுதே யடையாமற்போயினலல்லவா, என்கண் வன்கண்-என்னிடம் கொடுமைத்தன்மை யுளதாகும்? மைந்தா - மகனே! நீ காட்டே உறைவாய்-நீ காட்டில் வசிப்பாய்: (அங்ஙனமாகவும்), நான்—, இ கைகேசியையும்—, கண்டு-(கொல்லாமல் எதிரிற்) கண்டு, இ நாட்டே உறைவென்-இப்பூமியிலே வசிப்பேன், என்றால்-, என் தன்மை நன்று-எனதியல்பு நன்றாயுள்ளதாகும்,' என்றான்—; (எ - று.)

நான் உன்னைக் காட்டிற்கு அனுப்பி இக்கைகேசியினது முகத்தில் விழித்த வண்ணம் இக்காட்டில் இருப்பேனல்ல, என்தன்மை பரிகசிக்கத் தகுந்ததாகும்: மேலும், நீ காட்டிற்குச் சென்றாயென்பதைக்கேட்டும் நான் உயிர்வைத்திருந்தால் என்னைப்போன்ற வன்கண்ண ரொருத்தரு மில்லையா வன்: யாரே அங்ஙனம் வன்கண்ண னென்று பிறர் கூறும்படியும் கைகேசியின் முகத்தில் விழிக்கும்படியும் இக்காட்டில் உயிர்வைத்திராமல் வானகத்தின்றேவிடுவே னென்றனன் தசரத னென்க. நன்று - எதிர்மறை யிலக்கணையாகிய பிறகுறிப்பு. பி-ம்:—[1]விழித்தேன். [2]தின்றும். [3]தாயின். [4]பான். [5]கன்மை.

சுரு. [1]மெய்யார் தவமே செய்துன் மிடன்மார் பரித்திற் பெற்ற
செய்யா ளென்னும் பொன்னு திலமா தென்னுந் திருவு
மும்மா ருய்யார் கெடுதே வுனைனப் [2]பிரிகின் [3]விணே
னீயா [4]கைகே கிளைப்[5]தே ராதே னென்றான்.

(இ-ள்.) (என்று பின்னும்:)மெய் ஆர் தவமே செய்து-உடம்பை நிரப்பிய தவத்தைச்செய்தே, உன் மிடல் மார்பு-உனது வலியையுடைய மார்பை, அரிதின் பெற்ற-அருமையாய்ப் புணர்ப்பெற்ற, செய்யாள் என்னும் பொன்னும் - திருமகளென்னும் பிராட்டியும், திலம் மாது என்னும் திருவும் - லக்ஷ்மி யென்னும் பிராட்டியும், உய்யார் உய்யார்-பிழையார் பிழையார்; விணையேன் உன்னை பிரியின் கெடுவேன்-பாவியாகிய யான் உன்னைவிட்டுப்பிரிந்தால்தப்பி வேன்; ஐயா - குழந்தாய்! (உன்னைப்பிரியின்) - உன்னைவிட்டுப் பிரிந்து உயிரோடுவாழ்ந்தால், நான்—, கைகேசியை ஏன் சூதேன் நீ - கைகேசியை யொத்த பாவியாகமாட்டேனே?' என்றான்—; (எ - று.)

உன்னைக் காட்டிற்குஅனுப்பியும் நான் இனிதுஇருந்தேனல்ல, யானோப்பி உன்னைக்காட்டுக்கு எழுமாறுசொன்ன கைகேயிக்குஞ் எனக்குஞ் சின்ன

வித்தியாசம்? ஆகையால், உயிர்போக நான் வானகஞ்சேர்வ னென்றனன் தச் ரதனென்பதாம். மெய்யார்தவம்-உடம்பு வருந்தச்செய்யுந் தவமுமாம். செய் யாளென்னும் பொன்-சீதையுமாம். அதுக்கு அவலம்பற்றியது. உன்னைப்பிரி யின்-மத்திம தீபம். பி-ம்:—[1]மெய்யே. [2]பிரியில். [3]வினையேற்கு. [4]கைகேசியே, கைகேசிதன், கைகேசிக்கா. [5]மருளாதேனை, நேராருளராம், நேராருளரோ, நேராருரைதான். (நகூஉ)

சுசூ. [1]பூணை ரணியும் முடியும் பொன்னை சனமுங் [2]குடையுஞ்
சேணுர் [3]மார்புந் திருவுந் தெரியக் காணக் [4]கடவேன்
[5]மாணை மரவற் கலையு மானின் றோலும் மவை [6]தான்
[7]காணை தொழிந்தே னென்ற னென்றுய்த் தன்றே கருமம்.

(இ - ள்.) (என்று பின்னும்), 'பூண் ஆர் அணிஉம்-அணிதல்பொருந்திய ஆபரணங்களும், முடிஉம் - கிரீடமும், பொன் ஆசனம்உம் - பொன்மயமான சிங்காதனமும், குடைஉம் - வெண்கொற்றக்குடையும், சேண் ஆர் மார்புஉம்- அகலம் பொருந்திய மார்பும், திருஉம் - (அதில் வீற்றிருக்கின்ற) ஜயலட்சுமி யும், (ஆகிய இவற்றை), தெரிய காண - விளங்கப்பார்த்தற்கு, கடவேன் - உரிய நான், மாணை மரம் வற்கலைஉம்-மாட்சிமைப்படாத மரவுரியும், மானின் தோல்உம் - கிருஷ்ணஜினமும், அவை-ஆகிய அவற்றை, காணுது ஒழிந்தேன் என்றல் - பாராமல் (தேவலோகத்துக்குப்) போய்விட்டேனுதல், கருமம் - (உயிர் நீங்கும்) அத்தொழில், நன்று ஆய்த்து அன்றே-நல்லதாயிற்றல்லவா?' என்றான்—; (எ - று.)—தான் - அசை.

நீ மணிமுடிசூடிவெண்கொற்றக்குடைநிழற்றப்பேரணிகலம்பூண்டுசிங்கா தனத்தில்இலக்குமிதங்கும்மார்போடுவீற்றிருக்கக்காணுதற்குரியயான்அதற்கு மாறுய் நீ மரவுரிதரித்து மான்றோல்போர்த்துச் சடைமுடியுடன் இருக்குந் தவக்கோலத்தைக் காணுது வானுலகஞ்சேர்தல் எனக்குநேருமாயின் அதுவே எனக்குநன்றென்கிறான் தசரதன். தன் திருமகனது மெல்லியல்புக்குப் பொருந்தாமையாலும், அரசர்க்குரித்தன்மையாலும் 'மாணை' என்றான். [4]திரி வேன் என்ற பாடத்துக்கு இவ்வாறு பொருளுரைப்பதன்றி, முடிமுதலியன கொண்டுதிரிபவனாகிய யான் அவ்வரசசின்னங்களையெல்லாம்விட்டு வற்கலை முதலிய தாபசவேடத்தைக்கொள்ளாமல்இறந்திட்டால் என்செயல் நன்றாய் விட்டதல்லவா? என்று, தசரதன் தான் கருதியவாறு தன்னிராச்சியத்தை மகனிடத்து வைத்துத் தான் கானகஞ்சென்று தவஞ்செய்து தன் சரீரத்தை விடப்பெறுத இன்னுப்பிறற் கூறுகின்றனெனக் கருத்துக்காண்டல் ஏற் கும். "பூமருவுநறுங்குஞ்சி புன்சடையாப்புனைந்து பூந்துகில்சேரல்குற், காம ரெழில்விழுங்குதித்துக் கலனணியாதங்கங்களழகுமாறி,யேமருதோளென்புதல் வன்யானின்றுசெலத்தக்கவனந்தான்சேர்தல், தூமறையீரிதுதகவோசுமந்தி ரனே வகிட்டனேசொல்லீர்நீரே" என்ற பாசுரம் இங்கு ஞாபகத்திற்கு வருகிறது. மாண் ஆம் மரவற்கலை எனப்பிரித்து உரைப்பினுமாம். வற்-

கலை - வல்கலா என்னும் வடமொழிச்சிதைவு. பி-ம்:—[1]பூணர்மார்பும். [2]சிறப்பும். [3]அழகும். [5]மாணுவனை, மாணுமனை, மாணுமா. [6]கான். [7]காணுதாழி வேனென்றனன்றுய்த்தன்றேகருமம், காணுதாழிவேனன்றே நன்றுய்த்தன்றேகருமம், காணுதாழிவே னன்றுய்த்தன்றே கருமமென்றன், காணுதொழிந்தேனன்றுய்த்தன்றேகன்றேறியென்றன். இப்பாடலுக்குப்பின் சில பிரதிகளில் "வன்மாயக்கைகேசி (எஉ)" முதலுள்ள பத்தொன்பது பாடல்கள் உள்ளன. (நகநட)

சுஎ.—பலபடி புலம்பும் மன்னவனை வசிட்டன் தேற்றுதல்.

[1]என்று வொன்றென்றன் றெவ்வா [2]வினைதந் தரசன் னுயிருஞ்
[3]சென்று னின்றேறு டென்னுந் தன்மை [4]யெய்தித் தேய்ந்தான்
மென்றேறன் [5]மார்பின் முனிவன் வெந்தே யயரே லவனை
[6]யின்றே காத வண்ணந் [7]தகைவென் னுலகோ [8]டென்றன்.

(இ - ள்.) என்று - என்று, ஒன்று ஒன்று ஒவ்வா - ஒன்றேடொன்று பொருந்தாத பலவார்த்தைகளை, இசைதந்து-சொல்லி, அரசன்-சக்கரவர்த்தி,—இன்றேடு உயிர்உம் சென்றன்என்னும் தன்மை எய்தி - இற்றைநாளுடன் உயிரும் அழியப்பெற்றன்என்று சொல்லத்தக்க இயல்பை அடைந்து, தேய்ந்தான் - வருந்தினன்; மென் தோல் மார்பின் முனிவன்-மெல்லிய மான்தோலைச்சாத்திய மார்பையுடைய அம்முனிவன், 'வெந்தே-அரசனை, அயரேல்-வருந்தாதே; அவனை-அவ்விராமனை, உலகோடு-இக்காட்டினின்றும், இன்று எகாதவண்ணம்-இன்று செல்லாதபடி, தகைவென்-தடுப்பேன்,' என்றன்—.

மன்னவன் பலபடி புலம்பிப் பரிதவிப்பதைக் கண்ட வசிட்டமுனிவன் தசரதனைக்கிட்டி, இராமனைப் போகாதவண்ணந்தடைசெய்வனென்று சொல்லித் தேற்றின னென்க. வசிட்டமுனிவன் இங்ஙனம் தேற்றியதாக முதனூலிற் காணப்படவில்லை. கைகேசிக்கு வரத்தைப் பிரதிக்ஞைசெய்துவிட்டி, இராமன் கானகஞ்செல்லாதிருப்பின் சலமென்றுதல் அவன் கானகஞ்செல்வது குறித்து அவன்மீதுகுறைகூறுதல் முதலியன வருத்தத்தால் மதிமயக்கிக் கூறுகின்றனவை யாதலின், ஒன்றேடொன்றெவ்வாகாயின். உயிர்சென்றன்-இனி விஞை முதன்மேல் சின்றது. உலகோடு - உருபுமயக்கம். உலகோடி தகைவென் - உலகவொழுக்கத்தோடிபொருந்தத் தடைசெய்வனென்றுமாம். இன்று - இப்பொழுதுமாம். பி-ம்:—[1]ஒன்றேறொடொன்றென்று, ஒன்றேறொடொன்றென்று. [2]உரை. [3]சென்றேறின்றன், சென்றனின்றன். [4]எய்திற்றென்றன். [5]மரபின். [6]இன்றேயேகா. [7]தருவன், [8]என்ற. இதுமுதல் ஐந்துபாடல்கள் "சிந்தைதளர்வுற்று" என்று தொடக்கும் கூ0 - ஆம் பாடலுக்குப்பின் சில பிரதிகளிற் காணப்படுகின்றன. அக்ஙனம் காணுமிடத்து "முனிவன்" என்று தொடங்கும் அடுத்த பாடலினீற்றில் "மறையோன்றனும் போனென்" என்று பாடமுள்ள பிரதிகளில் "மறத்தான்" (கூக) என்று தொடங்கும்பாடல்முதல் மூன்றுபாடல்களில்லை. (நகந)

சூஅ.—முனிவன்சொற் கேட்டு மன்னவன் ஆறியிருத்தல்.

முனிவன் [1]சொல்லும் மளவின் முடியுங் கொல்லென் றரசன்
றனிநின் றுழறன் னுயிரைச் சிறிதே தகைவா னிந்தப்
புனிதன் போனு லிவனற் [2]போகா தொழிவா னென்னு
[3]மனிதன் வடிவங் கொண்ட மனுவுந் தன்னை மறந்தான்.

(இ - ள்.) முனிவன் சொல்லும் அளவில் - அம்முனிவன் அவ்வாறு சொல்லுங்காலத்தில், முடியும் கொல் என்ற - இப்பொழுதே இறந்துவிடு வானே என்னுமாறு இருந்த, அரசன் - சக்ரவர்த்தியாகிய, மனிதன் வடிவம் கொண்ட மனுஉம் - மநுஷ்யரூபத்தை யெடுத்துக்கொண்ட வைவஸ்வதமனு சக்ரவர்த்திபோன்ற தசரதனும், 'இந்த புனிதன் போனல் - இப்பரிசுத்த முனிவன் சென்றால், இவனல்-இவன் வார்த்தையினால், போகாது ஒழிவான்- (இராமன் வனத்திற்குப்) போகாமல் நீங்கிவிடுவான்,' என்னு-என்றெண்ணி தனி நின்று உழல் தன் உயிரை - (துணையில்லாமல்) தனியேநின்றுவருந்து கின்ற தனது பிராணனை, சிறிது ஏ தகைவான் - கொஞ்சந்தடுத்தவனுய், (பிறகு), தன்னை மறந்தான்—; (எ - று.)

முடிந்துவிடுவானே? என்னும் நிலையிலிருந்த தசரதமன்னவன், வசிட் டன் வார்த்தையைக்கேட்டதும் சிறிதுமுதலில்தேறினனும், உடனே அந்நிலை மாறி மூர்ச்சித்தன னென்பதாம். தன்னைமறத்தல் - தன்நிலை தவறிவிடுதல்: உணர்ச்சியற்றவனுதல். முடியுங்கொல்என்பதற்கு - இராமன் ஏகாதவண் ணம் தடுத்தல் கூடுமாஎன்றுஉரைப்பின், 'புனிதன் போனு லிவனற் போகா தொழிவான்' என்று பின்னேவருவதோடு மாறுகொளக்கூறியதாதல் காண்க. மனுமுறை கோடாத செங்கோலரசன், முனிவன்சென்றால் இராமன் வருவா னென்று கருதித் தேறுதலடைவதும் தன்சொல்லால் இராமனைக்காட்டுக்குச் செல்லாமல்தடுப்பதும் தனது சத்தியபிரதிஜ்ஞைக்குத் தவறுகுமேயென்ற எண்ணத்தால் தன்னைமறந்ததா லென்னினுமாம். வைவசுவதமனு - சூரியன் மகனும், தசரதன் வமிசத்துக்கு ஆதிபுருஷனுமாகியவன்: அவன் நீதிநூல் வகுத்து முறை பிறழாது செங்கோல்செலுத்தினமைபோல இவனுந் செங் கோல் செலுத்தலால், அவனை உவமை யாக்கினர். என்றரசன் - தொகுத் தல். பி-ம்:—[1]செல்லும். [2]போகலொழிவான். [3]மனுவின் வடிவங்கொண்ட மன்னுந் தன்னை மறந்தான், மனுவின்வடிவங்கொண்ட மறையோன்றனும் போனன்.

(உசுரு)

சூகூ.—கோசலை தன்கணவன் நிலைகண்டு வருந்தல்.

மறந்தா னினனவும் [1]முயிரும் மன்னன் [2]னென்னை மறுகா
விறந்தான் கொல்லோ வரச னென்னை விடருற் றழிவா
[3]டுறந்தாய் மகனை யுலகோ டெனமையும் மென்னத் [4]துணையா
மறந்தா னிதுவோ வையா வரசர்க் கரசே [5]யென்றாள்.

(இ-ள்.) (அரசன் நிலைபைக்கண்டு, 'மன்னன் - அரசன், நினைவுமம் உயிர்உம் மறந்தான் - ஞாபகமும் பிராணனும் மறக்கப்பெற்றான்,' என்ன - என்று அறிந்து, மறுகா-மனங்கலங்கி, அரசன் இறந்தான் கொல் ஓ என்ன- 'மன்னன் உயிர்நீத்தானே!' என்றுசொல்லி, இடர் உற்று - வருத்தமடைந்து, அழிவாள் - சோர்பவளாகிய கோசலை,—'மகனே - குழந்தாய்! உலகோடு எமைஉம் துறந்தாய் - இந்நாட்டுடன் எங்களையுந் துறந்துவிட்டாய், என்ன- என்று நான் வருந்துகையில், ஐயா - தலைவனே! அரசர்க்கு அரசே - சக்ர வர்த்தியே! துணைஆம் அறம் தான் - (இல்வாழ்க்கைக்குத்) துணையாயிருக்குந் தருமம், இது ஓ-(என்னைவிட்டுச் செல்லுகின்ற) இதுதானே?' என்றான்—.

மன்னவன் உணர்வும் உயிரும் சோர்ந்ததுகண்டு, ஒருகால் இவன் இறந் திட்டானே? என்றுசங்கையுற்ற கோசலை, 'மகனே! நீ காட்டுக்குச் செல் கின்றாயே! என்று நான் வருந்திக்கொண்டிருக்கையில் என்னைத்தேற்றாது என்னைவிட்டுச் செல்கின்றாயே! இல்லறவாழ்க்கையில் எனக்குத்துணையாவது இவ்வாறுதானே?' என்றுபுலம்புகின்றனளென்க. இனி, மகன் எம்மையும் இராச்சியத்தையும்விட்டுக் கானகஞ்சென்றானென்று கருதியதலால் மன்னன் நினைவுகுன்றி யுயிரோடுக்கியுள்ளானென்று மனக்கலக்கி, 'ஒருகால் இறந்து பட்டானே?' என்றும் அயிர்த்து மனமழிபவளாய்க் கோசலை 'அரசர்க்கர சனை நீ எம்மைத் தனியேவிட்டுச்செல்வது தருமமோ?' என்று புலம்பினளெனினுமாம். கோசலையே 'துறந்தாய்மகனே யுலகோடு' என்று மகனைக் குறித்தும் இடையேகூறினளெனக்கொள்ளலும் ஒன்று. தானுஞ்சக்கரவர்த்தி யோடு ஸஹகமனஞ்செய்ய நினைத்தானாதலால் எமை எனப் பன்மையாற் கூறினளென்பாருமுளர். 'என்றான் என்றபாடத்துக்கு, துணைவா-துணைவ னே! ஐயா அரசர்க்கு அரசே! அறந்தான் இதுவோ? என்று வகிட்டன் கூறி னனென உரைக்க. பீ-யீ:—[1]உணர்வும்முயிரும். [2]மறுகிமறுகி. [3]இறந்தாய். [4]துணைவா, துணையான். மூன்றுபாடமுமிவ்; [5]துறந்தான்மகன்முன் னெனையுந்துறந்தாய் நீயுந்துணைவா' என்று சிலர் ஓதுகின்றனர். (உகூ)

எ0.—கோசலை மன்னவனைத் தேற்றுதல்.

மெய்யின் மெய்யே யுலகின் வேந்தர்க் கெல்லாம் வேந்தே
யுய்யும் வகைதின் னுயிரை யோம்பா தின்னன் றெம்பின்
வையம் முழுதுந் துயரான் மறுகும் முனிவன் னுடன்[1]னம்
[2]மையன் வரினும் வருமா லையநீ [3]லதேச வென்றாள்.

(இ - ள்.) (பின்னும்), 'மெய்யின் மெய்யே - வாய்மைக்கு வாய்மை யாயிருப்பவனே! உலகின் வேந்தர்க்கு எல்லாம் வேந்தே-மூவுலகத்திலுள்ள அரசர்களுக்கெல்லாம் அரசனே! நின் உயிரை - உனது பிராணனை, உய்யும் வகை-பிழைக்கும்படி, ஓம்பாது - காவாமல், இன்னன் றெம்பின் - இவ்வாறு வருந்தினால், வையம் முழுதுஉம் துயரால் மறுகும்-உலகமெல்லாம் துன்பத்

தாற் கலங்கும்; முனிவன்னுடன் நம் ஐயன் வரின்உம் வரும் - அம்முனி வனுடன் நந் திருமகன் வந்தாலும்வருவான்; அரசே அயரேல் - அரசனே! வருந்தாதேயும்,' என்றுள்—; (எ - று.)—ஆல்—ஈற்றசை.

இங்ஙன் - விகாரம். "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்பவாக லான், 'நீ தேம்பின் வையம் மறுகும்' என்றுள். பி-மி:—[1]எம். [2]மெய்யன். [3]அயரேலரசே. (நகூஎ)

எக.—தேற்றியவண்ணம் கோசலையு' பரிக்க, மன்னன் அறிவுதெளிந்து 'இராமன் வருவானே?' எனல்.

என்றென் றரசன் மெய்யு மிருதா ளிணையும் முகனுந்
தன்றன் செய்ய கையாற் றைவந் திடுகோ சலையை
யொன்றுந் தெரியா மம்ம ருள்ளத் தரசன் மெள்ள
வன்றின்ன சிலைநங் குரிசில் வருமே வருமே யென்றான்.

(இ-ள்.) என்று என்று-என்றுபலமுறைசொல்லி, அரசன் - அரசனது, மெய்உம்-உடலையும், இருதாள் இணைஉம்-உபயபாதங்களையும், முகன்உம்-முகத்தையும், தன்றன் செய்ய(இரு)கையால் தைவந்திடு - தனது சிவந்த இரண்டு கைகளாலும் பலமுறைதடவுகின்ற, கோசலையை,—, ஒன்றுஉம் தெரியா மம்மர் உள்ளத்து அரசன்-சிறிதும் பிரஜ்ஞையில்லாத மயக்கம்பொருந்திய மனத்தையுடைய அந்தச் சக்ரவர்த்தி, மெள்ள—, 'வல் திண் சிலை நம் குரிசில்-மிகவும் வலியகோதண்டத்தையுடைய நமதுமகன், வரும் ஏ வரும் ஏ-வருவானே வருவானே?' என்றான்—; (எ - று.)

அரசன் மகன்மேலுள்ள அன்பிஞல் 'வருமேவருமே' என்று கூறினனென்க. பரசுராமனென்ற ஆற்றல்தோன்ற 'வன்றிண்சிலைநங்குரிசில்' என்றது.

எஉ.—மன்னன் கைகேசியின் கொடுமைபேசி வருந்தல்.

[1]வன்மா யக்கை கேசி [2]வரத்தா லென்றன் னுயிரை
முன்மாய் விப்பத் துணிந்தா [3]ளெனுங் கூனி மொழியாற்
றன்மா மகனுந் [4]தானுந் தரணி பெறுமா றன்றி
யென்மா மகனைக் காணே கென்று [5]ளென்று ளென்றான்.

(இ-ள்.) 'வல் மாயம் கைகேசி-கொடிய வஞ்சனையையுடைய கைகேயி, கூனி மொழியால் - மந்தரை வார்த்தையால் (தூண்டப்பட்டு), வரத்தால் - (தன்) வரத்தினுலே, என்தன்உயிரை-எனதுபிராணனை, முன்மாய்விப்பதுணிந்தாள் என்உம் - முன்னே அழியும்படிசெய்ய நிச்சயித்தாளாயினும், தன் மா மகன்உம் தான்உம் - தனது பெருமையையுடைய புத்திரனுந் தானும், தரணி பெறும் ஆறு அன்றி-பூமியைப் பெறும்விதமல்லாமல், என் மா மகனை-எனது மூத்தமகனை, கான்எகு-காட்டிற்குப்போ, என்றுள் என்றுள்—,' என்றான்—.

என்றுளென்றுள்-வெகுளியடுக்கு. தன் கருத்திற்கு மாறுபாடாக வரங் கேட்டதுபற்றி, மன்னன், என்னுயிரை முன்மாய்விப்பத் துணிந்தாளென்றும்,

வெறுப்பிறற் பாதனை வேறுபடுத்தி 'தன்மாமகன்'என்றும் கூறுகின்றான். பி - மீ:—[1]வன்மாமாயக்கேகி, வன்மாக்கைகேகிகைதன். [2]வாக்கால். [3]அன்றேறற், எனலும். [4]தாணிதாகின. [5]அன்றுவென்றான், என்னேவென்றான், அன்றேயென்றான். இங்கு எறும்பின்கதையாள் என்று சில பிரதிகளிற் காணப்படுகிறது. அப்பாடத்திற்கு எறும்பின்சரித்திரத்தைக்கொண்டவ னென்பது பொருள்: எறும்பின் சரித்திரத்தைக் கொண்ட தாயின் குணத்தைக்கொண்டு பிறந்தவ னென்பது கருத்து: அச்சரித்திரம் வருமாறு:—கைகேயியின் தந்தை எறும்பு ஈ முதலிய ஜந்துக்களின் பாஷைகளை யுணர்ந்தவ னதலால் ஒருகால் தன் மஞ்சத்தின் கீழே அருகிற் போய்க்கொண்டிருந்த ஓரெறும்பின்சொல்லைக் கேட்டு வியப்புற்றுச் சிரித்தானை, கைகேயியின்தாய் தன்னைப் பரிகாசஞ்செய்பவே தன் கணவன் சிரித்தா னென்றுகருதிப் பெருஞ்சினங்கொண்டு 'நீ சிரிப்பதன் காரணத்தைச் சொல்லவேண்டும்' என்று வற்புறுத்தினள். அவன்கணவனை அசுவபதி 'இதன்காரணத்தைச் சொன்னால் எனக்குமரணம் நேரும்:ஆகையாற் சொல்லமுடியாது' என்றனன். கைகேயியின்தாயோ 'நீ பிழைத்திருந்தாலுஞ்சரி, செத்தாலுஞ்சரி: அது எனக்கு அவசியமில்லை; நீ சிரித்தகாரணத்தைச்சொன்னால்தான் என்னைப்பரிகாசஞ்செய்பவனில்லை யென்பது எனக்குத் தெரியவரும்' என்று கடுமையாகச் சொல்லினள். அப்போது கேகயாசன் தனக்கு ஜந்துக்களின் பாஷைத் தெரியும்படி வரங்கொடுத்திருந்த யோகியின் மொழிப்படியே அந்தக் கைகேயியின் தாயைத்துரத்திவிட்டு தினந்தவறாமல் மகிழ்க்கலாயின னென்பது. கைகேயிக்குத் தன்னைவன்சாவதாலுமே மனமடங்காத துர்க்குணம் தாயின்வழியாகவந்துள்ள தென்று.அக்கைகேயியைச் சுமந்திரன் பழித்துக்கூறுகையில் இச்சரித்திரம் வால்மீகத்தில் வந்துள்ளது. ()

எக.—பிறகு தசரதன் கோசலையைநோக்கித் தனக்கு முன்னேநேர்ந்த சாபத்தைக் கூறத்தொடங்குதல்.

[1]பொன்னார் வலயத் தோளான் காதலை புகுத நவிலா
னென்னை ருயிரோ வகலா தொழிபா [2]திதுகா சலிகேள்
முன்னை ளொருமா முனிவன் [3]மொழியுஞ் சாபம் முனதென்
றந்தா னுற்ற தெல்லா மவளுக் கரசன் னவனவான்.

(இ-ள்.) (பின்பு), அரசன்—, (கௌசலையைநோக்கி), 'கோசலை கோச லையே! பொன் ஆர் வலயம் தோளான்-பொன்னலியன்ற வளைபூண்ட தோள்களையுடைய இராமன், காள் புகுதல் ஓ - காட்டிற்குச் செல்வதை யோ, தவிரான் - நீங்கமாட்டான்; (அதனால்), என் ஆர் உயிர் ஓ - எனது அருமையான உயிரோ, அகலாது ஒழியாது - நீங்காது இராது [நீங்கியே தீரும்]; இது கேள் - (இங்ஙனம் இராமன் காட்டிற்குச்செல்ல எனது உயிர் போயேதீருமென்ற) இதற்குக்காரணமான வரலாற்றைக் கேட்பாயாக: முன் நாள் - முன்னொருகாலத்தில், ஒரு மா முனிவன் - ஒரு சிறந்தஇருடி,

மொழியும் - சபித்த, சாபம்—, உளது - இருக்கின்றது,' என்று - என்று சொல்லி, அ நாள் உற்றது எல்லாம் - அந்தச்சாபகாலத்தில் நேர்ந்ததெல்லாவற்றையும், அவளுக்கு அறைவான் - அந்தக்கௌசலையிடம் சொல்லுவானென்; (எ - று.)—அதனை மேல் கள-கவிகளிற் காண்க.

இராமன் காட்டிற்குப்போவது திண்ணம்: அவனைப்பிரிந்த துயரத்தால் என்னுயிர்போவதும் திண்ணம். இவை நேர்ந்தே தீருமென்பதற்கு ஏற்ப ஒருவரலாறு நிகழ்ந்ததுண்டு என அதனைக் கூறலாயினனென்பதாம்.[1]பொன்னர் தோளான் காலை புகுதப் புகுதறவிரான் என்ற பாடத்தில், பொன் ஆர் தோளான் என்பதற்கு - அழகுபொருந்தியதோளையுடையவ னென்றும், வெற்றித்திருவீற்றிருக்கின்றதோளையுடையவ னென்றும், பொன்னாலாகிய ஆபரணமணிந்ததோளையுடையவனென்றும் பொருளுரைக்கலாம். கான் ஓ புகுதப்புகுதல் - ஊர்க்குப் போகப்போகிறார் என்றூற்போன்ற வழக்குப் பற்றிவந்ததென்க: ஓகாரம் - தெரிநிலை. புகுதப்போதறவிரான்என்றும் பாடமுண்டு. அகலாதொழியாது - இரண்டு எதிர்மறைகள் ஒன்று சேர்ந்து, அகன்றேதீரும் எனத் தேற்றப்பொருளைக் காட்டிற்று. உற்றதெல்லாம் - ஒருமைப்பன்மைமயக்கம். அவளுக்கு அறைவான் - உருபுமயக்கம். பி - ம்:—[1]அது. [2]மொழிந்த.

(கஎ0)

எசு.—இதுமுதல் " சிந்தைதளர்வுற்று " (கூ0) என்னுங் கவியளவும் ஒருதொடர்: தசரதன் தன் சாபவரலாற்றைக் கூறுவதைத் தெரிவிக்கும்.

வெய்ய கானத் திடையே வேட்டை வேட்கை மிகவே
யைய [1]சென்று கரியோ டரிக ளுருவித் திரிவேன்
[2]கையார் சிலையுங் கணையுங் [3]கொடுகார் மிருகம் வருமோர்
செய்ய நதியின் கரைவாய்ச் [4]சென்றே மறைய நின்றேன்.

(இ - ள்.) (முன்னொருகாலத்தில்), வேட்டை வேட்கை மிகவ - வேட்டையாடுதலில் ஆசை பெருக, வெய்ய-கொடுமையையுடைய, ஐய-வியக்கத்தக்க, கானத்து இடையே-காட்டில், சென்று—, கரியோடு அரிகள் துருவியானைகளையுஞ் சிங்கங்களையுந் தேடி, திரிவேன் - அலைகின்ற நான்,—கார் மிருகம் வரும்-யானைமுதலிய பெரிய மிருகங்கள் சஞ்சரிக்கின்ற, ஓர் செய்ய நதியின் கரைவாய்-ஒரு அழகிய ஆற்றோரத்தில், சென்று—, கை-கைகளில், ஆர் சிலையும் - அரியவில்லையும், கணையும்-அம்புகளையும், கொடு - கொண்டு, மறைய நின்றேன் - மறைவாய் நின்றேன்; (எ - று.)

வேட்டையாடவேணுமென்று விருப்பந்தோன்றியதலால், யான் ஒரு கால் கையும்வில்லுமாய்க் கானகஞ்சென்று பல மிருகங்களும் தண்ணீர்பருகுதற்குவரும் ஒரு நதியின்கரையில் மறைந்திருந்தே னென்கின்றனன் தசரத னென்க. வேட்கையாவது - பொருள்கண்மேற் றோன்றும் பற்றுள்ளம். ஐ என்னும் உரிச்சொல் ஐயவெனப் பெயரெச்சக்குறிப்பாய்நின்றது;" ஆயிதழ்ப் பன்மல ரையகோங்குறைத்தர" என்றவிடத்துப்போல: "ஐவியப்பாகும்"

என்பது சூத்திரம். இனி, ஐய வென்பது-வியப்புச்சொல்லும், அசையுமாம். நீர் குடிக்க மிருகம் வரும் நதி யென்க. பி-ம்:—[1]சென்றே. [2]கையில், கையும். [3]இருக்கக்கதமாவருமோர், இறுகக்கதமாவருமோர். [4]சென்றேன். (உஎக)

எரு. ஒருமா முனிவன் மனைமேயா டொளி[1]யொன் றிலவாய் நயனக்
[2]கிருமா [3]மகனை துணையாய்த் தவமே புரி[4]போழ் தினின்வா
யருமா [5]மகனை புனல்கொண் டகல்வான் வரு[6]மா றறியேன்
பொரு[7]மா கணைவிட் டிடலும் [8]புனிமீ தலறிப் [9]புரள்வான்.

(இ - ன்.) (அப்பொழுது), ஒரு மா முனிவன் - ஒருபெரிய இருடியானவன், மனையோடு - மனைவியுடன், நயனம் ஒளி ஒன்று இல வாய் - கண்கள் பிரகாசஞ் சிறிதுமில்லனவாகி, திரு மா மகன்ற துணை சூப் - அழகிய சிறந்த புத்திரனை சகாயமாகி, தவம்ற புரி போழ்தினின்வாய்-தவத்தையே செய்து கொண்டிருக்குங் காலத்தில்,—அரு மா மகன்ற-அவ்வரிய பெரிய புத்திரனை, புனல் கொண்டு - நீரைக்கொண்டு, அகல்வான் - போதற்கு, வரும் ஆறு - வருகின்ற விதத்தை, அறியேன்-தெரியாத நான். பொரு மா கணை விட்டிடலும் - போர் செய்தற்குரிய அம்பைச்செலுத்த (அந்த அப்பு பெற்றோர்க்குத் தண்ணீர்கொண்டுபோகுமாறுவந்த குடத்தின் மீது பட்டதனால்), புனிமீது அலறி புரள்வான் - (அவன்) தரையில் (விழுந்து) உருண்டு கதறுவான்; (எ - ம்.)

அக்காலத்து ஒருமுனிகுமாரன்அக்காட்டில் தவஞ்செய்துகொண்டிருந்த கண்ணில்லாத தன்தந்தைதாயர்க்குத் தண்ணீர் கொண்டுசெல்லுமாறு விரைந்து வந்துசேர்ந்தனனாக, அவ்வொலியால் யானைதான் நீர்பருகுகின்றதென் றுகருதிச் சத்தவேதியென்னும் யானறிந்த வித்தையின் மயிலையால் அவ் வொலிதோன்றிய இடத்தை இலக்காகவைத்து எய்ய, அந்த அம்பு அம்முனி குமாரன்மேல்பட, அவன் கீழ்வீழ்ந்து அலறுவானென்பதாம். மகனையுடை யவனென்பார் 'மா' என்றும், முதனடப்பதத்திலும் நடுக்கத்தையுறுவ னென்பார் 'தவமே புரிபோழ்து' என்றும், நிருமுதலாதற்கு ஏற்ற சகாயத்தைச் செய்யும் நற்குணமுடையவனென்பார் 'திரு.அரு' என்றும், எடுத்துரைப்பான் பார் 'மாமகன்' என்றுங் கூறினர். நினைவுக்கெட்டி எரித்தால் அம்மொழி தோன்றின விடத்துச்சென்று கொன்ற எருமையைத்தேடுமென்னும் தன் தந்தையை 'பொருமாகணை' என்றது. பி-ம்:—[1]இன்னினையுறுதை, இன்னின்றி யன்பால், இன்றின்றியன்பார், இன்றிலதா யனன். [2]தரு. [3]மகனை. [4]போழ் தினில்வாய், போதினின்வாய், போதனன்வாய். போதன்றுற்ற. [5]னைமத் தன். [6]என்று. [7]மால். [8]பூமீது, புதல்வன். [9]புரள். (உஅ)

எசு. புக்குப் [1]பெருநீர் நுகரும் [2]பொருதே தகமென் றெரிதேமற்
கைக்கட் கணை [3]சென் றதலாற் கண்ணிற் றெரியக் காணை
[4]னக்கைக் கரியின் குரலே [5]யன்றி தென்ன வெருவா
மக்கட் குரலென் [6]றயர்வெய்ன் மன[7]னொக் தவண்வந் தினனால்.

(இ - ள்.) (அதனைக்கேட்டு), புக்கு - சென்று, பெரு நீர் நுகரும் - மிக்க தண்ணீரைக்குடிக்கின்ற, பொரு போதகம் - தாக்குதற்குரிய யானைக்கன்று,

என்று - என்றெண்ணியதனால், ஒலிமேல் - அவ்வோசையின் மேல் [ஓசை வந்தவழியைப்பற்றி], கைக்கண் கணை சென்றது அலால் - கையிலிருந்த அம்பு போனதல்லாமல், கண்ணின் தெரிய காணேன் - கண்ணால் விளங்கப் பாராத நான்;-அ கரியின்-அவ்யானையினது,கை குரலே அன்று ஈது என்ன-தும்பிக்கையிலிருந்துண்டாகிய சத்தமே யன்று ஈது என்று எண்ணி, வெரு வா - பயந்து, மக்கள் குரல் என்று - மனிதரது சத்தமென்று துணிந்து, அயர்வேன் - தளர்ந்து, மனம் நொந்து—, அவண் வந்தனென் - அவ்விடத் திற் போனேன்; (எ - று.)—ஆல் - ஈற்றசை.

மூனிகுமாரன் புரண்டலறுவதைக்கேட்டு சத்தவேதிமகிமையால் உரு வத்தைக் கண்ணிற்காணுமலே எய்த யான் 'இந்தக்குரல் அடிபட்டயானைக் கன்றின்குரலன்று, மனிதக்குரல்' என்றுதெரிந்து மனந்தளர்ந்து நொந்து அம்பு எய்தவிடத்துக்குவந்துபார்த்தே னென்பதாம். போதகம்-யானைக்கன்று என்று பொருள்படும் வடசொல். கைக்கண், கண் - ஏழனுருபு. பி - ம்:— [1]பொரு. [2]பொரும். [3]சென்றல்லால். [4]இக்கை, விக்கல். [5]அன்றிதெனவொரு மா, அன்றீதென்னவொருவா. [6]அமர்வேன். [7]நெக்கவண் வந்தனனல், நெக்கி வண்வந்தனனல், நொந்தவண் வந்ததனல், நொந்தவலந்தன்னல். (நூஎந)

எஎ. கையுங் [1]கடமுங் நெகிழக் கணையோ [2]டுருள்வோற் காணை
மெய்யுந் தனுவும் மனனும் வெறிதே [3]கிடமேல் வீழா
[4]வையன் னீதான் யாவ னந்தோ [5]வருள்கென் றயரப்
பொய்யொன் றறியா யைந்தன் கேணீ யென்னப் [6]புகல்வான்.

(இ-ள்.) (போய்), கையும் கடமும் நெகிழ-கையும் அதிலுள்ள கமண்ட லமும் ஒன்றைவிட்டு ஒன்று நீங்க,கணையோடு உருள்வோன்-(உடம்பிற்பொத் தியுள்ள) அம்போடு புரளுகின்ற அம்முனிகுமாரனை,காணை-பார்த்து,மெய்உம் தனுஉம் மனன்உம் - (என்) உடலும் வில்லும் நெஞ்சும், வெறிது எகிட - இன்மையையுடையனவாய்ப்போக, மேல் வீழா - (அவன்மேல்) விழுந்து, 'அந்தோ - ஐயோ! ஐயன் - சிறுவனே! நீ யாவன்—? அருள்க-சொல்வா யாக,' என்று அயர-என்று மனந்தளர்ந்து (யான்) கேட்க,—பொய் ஒன்று அறியா மைந்தன்-பொய்யைச் சிறிதுந் தெரியாத அவன், நீ கேள் என்ன—, புகல்வான் - சொல்லுவான்; (எ - று.)—அதனை மேல் நான்குகவிகளிற் காண்க. தான் - அசை.

அங்குச்சென்றயான், தன்கையிற்கொண்டுவந்த நீர்மொள்ளும்பாத்திரம் ஒருபக்கமும் தான்ஒருபக்கமுமாக முனிகுமாரன் கீழ்வீழ்ந்துஉருண்டுகொண் டிருப்பது கண்டு, அவனை 'நீ யாவன்?' என்று வினவினைனாக, அவன் தன் வரலாற்றைக் கூறலாயினனெனக. அம்முனிகுமாரன் தன் வரலாறுதனை மூன்றுகவிகளாற்கூறிப் பின் அவ்வரசன் செய்யவேண்டுவதைக் கூறுகின்றா னெனக. பி - ம்:—[1]குடமும், கடனும். [2]உழல்வோன். [3]கிடவா. [4]அய்யா. [5]அருளென்று. [6]புகலும்.

(நூஎச)

எஅ. சேலா கியமா முதல்வன் [1]றிருவுந் தியி²ணீண் மலரின்
மேலா கிய³நான் முகனுல் வேதங் களின்மா முறையின்
பாலா கியபோ னிகளின் பலவாம் வருணந் தருவா
னலா கியதாம் வருணந் தனின்⁴முன் னெனைடநல் கினனுல்.

இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) சேல் ஆகிய மா முதல்வன்-மத்ஸ்யாவதாரமாகிய பெரிய திரு மாலினது, திரு உந்தியின்-அழகிய நாபியில்தோன்றிய, நீள் மலரின்மேல் - பெரிய தாமரைப்பூவில், ஆகிய - பிறந்த, நான்முகன் - நான்குமுகங்களையு டைய பிரமன், நால் வேதங்களின் மா முறையின் பால்-நான்கு மறைகளிற் கூறிய சிறந்த கிரமப்படியாக, ஆகிய - ஆன, யோனிகளின்-பிறப்புக்களில், பல ஆம் வருணம் தருவான் - அதிகமாகிய குலங்களைச் சிருஷ்டிப்பவன், நாலாகியதுஆம் வருணம் தனில்-(பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும்) நால்வகையதாகிய குலங்களில், முன்-முதன்மையாகிய பிராமணகுலத்தில், எனை நல்கினன் - எம்மைப்படைத்தான்; (எ - று.)—சூல் - அசை.

இதனுல், அத்தவிருஷிகுமாரன் தக்கனைப்பிராமணகுலத்தவனென்று கூறியவாறு. திருமால் மத்ஸ்யாவதாரஞ்செய்து, வேதங்களை யபகரித்துக் கொண்டுபோன சோமகாசுரனைக்கொன்று அவற்றைக்கொணர்ந்து பிரம னிடத்துத்தந்து அவற்றிற் கூறிய முறைப்படி படைக்க நியமித்ததனுல், 'சேலாகிய' என்றும், "முதலாவார் மூவதேபம் மூவருள்ளு. முதலாவான் மூரிநீர் வண்ணன்" என்கிறபடியே மும்மூர்த்திகளுள்ளும் முதன்மூர்த்தியாத லால், 'மாமுதல்வன்' என்றும், எப்போழுதும் மலர்ந்ததும் வாடாததுமா யிருத்தல்பற்றி, 'நீண்மலர்'என்றுங் கூறினர். யோனிகளென்றது,எண்பத்து நான்கு நூறுயிரம் யோனிபேதங்களை: இதனை 'ஐம்பதிரண்டு மொன் பதுமானுடம், கீர்ப்பறவை நற்நாலோர்ப்பத்தாம்-கீரிய, பத்தமாத் தேவர் பதினுலயன் படைத்த, வத்தில் சீர்த்தாவரமேழ்து" என்பதனுலறிக. இது வும் அடுத்தபாடலும் சிலபிரதியில் இல்லாமையாலும் முதனூலுக்கு மாறுபடு வதாலும் செருகுகவியாயிருக்கலாமோவென்று ஐயமுண்டாகின்றது. சிலபிரதி யில் அடுத்தபாடல்மாத்திரம் இல்லை; அத்தப்பகுதியில். நான்காமடிக்கு-முன் னே எனை நான்காம்வருணத்திற் படைத்தா னெனின் எற்கும். பி - ம்:— [1]தருவுந்தியின். [2]மா. [3]நான்முகனர். [4]மேல். (உஎ)

எக. அந்நான் [1]முகனர் வழியி லருள்கா சிபனன் மைந்தன்
மின்னர் புரிநூன் மார்பன் விருத்தே சனன்மெய்ப் புதல்வ
னன்னன் மறைநூ றெரிபு நாவான் [2]சலபோ சனப்பெயர்
சொன்னன் முனிவன் [3]றருசு ரோச னன்னென் பெயரோன்.

(இ - ள்.) அ நான்முகனர் - அந்தப் பிரமதேவன், வழியில் அருள் - முறையாய்ப் படைத்த, காசிபன்-காசியப முனிவனுடைய, நல் மைந்தன் - நல்ல புத்திரனும், மின் ஆர் புரி நூல் மார்பன் - மின்னலேயொத்த முந்நூலை

யணிந்த மார்பையுடையவனுமாகிய, விருத்தசனன்-விருத்தசனனென்பவ னது, நல் மெய் புதல்வன்-சிறந்தவாய்மையையுடைய புத்திரனும், நல் நால் மறைநூல் தெரியும் நாவான்-சிறந்த நான்கு வேதங்களையும் சாஸ்திரங்களையு முணர்ந்த நாவினையுடையவனும், சலபோசனன் பேர் சொன்றனன் - சலபோ சனனென்று பெயர்சொல்லப்படுபவனுமாகிய, முனிவன் - இருடி, தரு - பெற்ற, சுரோசனன் என் பெயரோன் - சுரோசனனென்னும் பெயரை யுடையவன் (நான்); (எ - று.)

என்னுடையதந்தையார் பிரமனது வழியில்தோன்றிய காசிபரது புதல்வ ராகிய விருத்தசனனென்பவருடைய குமாரராகிய சலபோசனனென்பவர்: என்பெயர் சுரோசனனென்பது எனத் தன்னை இன்னனென்று அந்த முனி குமரன் தெரிவித்தன னென்க. தசரதன் செய்யவேண்டிய செயல் இன்ன தென்று தெரிவித்தபிறகு, தசரதன், 'இந்த ருஷிகுமாரனைக் கொன்றோமே; இதனற் பிரமகத்தியும் நம்மைத் தொடருமோ?' என்று அஞ்சிநிற்கையில், தசரதமன்னவனது முகக்குறிப்பால் அம்மன்னவனது மனத்துத்தோன்றிய அச்சத்தை யுணர்ந்த முனிகுமாரன் 'நான் பிராமணனல்லேன்: வைசிய னுக்குச் சூத்திரஸ்திரீயினிடம் பிறந்தவன்' என்று தன்னைத்தெரிவித்ததாக முதனூலிலுள்ளது. ஸ்ரீராமனை இரதத்தின்மீது ஏற்றிக்கொண்டுபோய்க் காட்டில் விட்டுவந்த சுமந்திரன் தசரதனிடத்து ஸ்ரீராமனது செய்தியைச் சொன்னபின்பு, இந்தச்சாபவரலாற்றை ஸ்ரீராமன் காட்டிற்குச் சென்ற ஆறுநாள் இரவு கௌசலைக்குச் சொல்லிவிட்டுப் பிறகு அத்தசரதன் மரண மடைந்தானென்று முதனூலால்அறியப்படும். காசிபன்-காசியபன் என்னும் வடமொழிச் சிதைவு; கசியபப்பிரஜாபதியின் மகனென்பது பொருள்; அவன் மரீசியாயிருக்கலாம். விருத்தசனனது மெய்ப்புதல்வன்னென்றுமாம். மின் னுர் புரிநூல்-உருவுவமை. புரிநூல் பூணூல். பி-பீ:—[1]மறையோன். [2]சலபோச னனைச், சலபோசன்னனைச். [3]தருசுரோசனன்யானென்றான், தருசுரோச னன்யானென்றான், புதல்வன் சுரோசனனென்பெயரோன், சுரசேயன்யா னென்னைச்சொன்னன், தருசுரோசனனேயானென்றான். (கூஎசு)

40. இருகண் கருந்[1]மின் றியதாய் தந்தைக் கும்[2]மீங் [3]கவர்கள்
பருகும் புனல்கொண் டகல்வான் படர்ந்தேன் பழு[4]தா யினதா
விருகுன் றனைய புயத்தா யிபமென் [5]றுணரா தெய்தா
யுருகுந் துயரந் தவிர்நீ யூழின் செயலீ [6]தென்றே.

(இ-ள்.) ஈங்கு - இப்பொழுது; இரு கண்கள்உம் இன்றிய - இரண்டு நேத்திரங்களு மில்லாத, தாய் தந்தைக்குஉம் - அன்னைக்கும் பிதாவுக்கும், அவர்கள் பருகும் புனல் கொண்டு - அவர்கள் குடித்தற்குஉரிய தண்ணீரை யெடுத்துக் கொண்டு, அகல்வான் - போதற்கு, படர்ந்தேன் - வந்தேன்; (வந்தஇடத்தில்), பழுது இத்தீங்கு, ஆயினது - (எனக்கு) உண்டாயிற்று; இரு குன்று அனைய புயத்தாய் - இரண்டு மலைகளை யொத்த தோள்களை

யுடையவனே! உணராது - (மனிதனென்று) அறியாமல், இபம் என்று - யானை யென்று மயங்கி, எய்தாய் - (என்மீது) அம்பு தொடுத்தாய்; ஊழின் செயல் ஈது என்று - இது விதியினது தொழிலென்று நினைந்து, நீ உருகும் துயரம் தவிர்-நீ மனந்தளர்கின்ற வருத்தத்தை விடு; (எ-று.)—ஆல்-சற்றசை.

இருகண்களுமில்லாத என்பெற்றோர்கட்கு நீர்வேட்கையைத் தணிவிக் கும்பொருட்டு நீர்கொண்டுபோகவந்தஇடத்தில் என்னூழ்வினை தூண்ட மனித னென்று என்னையுணராது யானையென்றுநினைந்து என்னையெய்தாய்;அதை யால்,உன்மீது குற்றமில்லை:நீ வருந்தவேண்டா என்று தசரதனை அடியுண்ட ருஷ்யிகுமாரன் தேற்றின னென்க. இபம்-வடசொல். இனி. ஊழின் செயல் ஈது, நீ உருகுந் துயரந் தவிர: என்று - என்று சொல்லி என்றலுமாம். பி-ம்:—[1]இல்யாய்க்கு மெய்தைக்கும், இன்றியாய்க்குமெய்தைக்கும். [2]இங்கு. [3]இவர்கள். [4]ஆயினவால். [5]உணராவெய்தாய். [6]எனவே, என்றான். (உஎக)

அக. உண்ணீர் வேட்கை மிகவே [1]யுயங்கும் மெய்தைக் கொரு நீ, தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவுப் [2]முரைத்தும் புதல்வன், விண்மீ தடைவான் மெழுதா [3]னெனவும் மவர்பால் விளம்பென், றெ ண்ணீர் மையிலென் [4]விண்ணோ ரெதிர்கொண் டிடவே கினனால்.

(இ - ள்.) நீர் உண் வேட்கை - தண்ணீர் குடிப்பதிலுண்டாகிய ஆசை [தாகம்], மிகவ - அதிகரித்தலால், உயக்குற்-வருத்துகின்ற, எற்றைக்கு-என் தந்தைக்கு,ஒரு நீ-ஒப்பற்ற நீ,தண் நீர் கொடு போய் அளித்து-குளிர்ந்த நீரைக் கொண்டுபோய்க்கொடுத்து, என் சாவுமும் உரைத்து-எனது மரணத்தையுஞ் சொல்லி, 'உம் புதல்வன் - நுமது புத்திரன், விண்மீது அடைவான் - தேவ லோகத்தின்மேற் செல்லுதற்காக, தொழுதான்-அஞ்சலி செய்தான்,' என உம்-என்றும், அவர்பால் விளம்பு-அவ் விருமுதுகுரவர்பாற் சொல். என்று - என்று சொல்லி, எண் நீர்மையிலென் - புகழத்தக்க குணமுண்மையிலேன், விண்ணோர் எதிர்கொண்டிட - தேவர் எதிர்கொள்ளும்படி, எகினன் - (பர லோகத்திற்குச்) சென்றான்; (எ - று.)—ஆல்-சற்றசை.

தசரதனைத் தேற்றிய முனிகுமாரன் பெற்றோர்க்கு மன்னவன் செய்ய வேண்டியதைப் பணித்து நல்லுலகஞ் சேர்ந்தனை, இதனால் தெரிவிக்கின் றார். எற்றையென்பதில் தாயும் அடக்கினன். அவர் என்பதனை நோக்கி, 'உம்' என்றுபன்மையாற்கூறினான். எண்ணீர்மையாவன - அருளுடைமை முதலாகத் துறவறத்துக்குக் கூறப்பட்டவை. இது துர்மரண மென்பதனை விலக்குவதற்கு'எண்ணீர்மையிலென் விண்ணோர் எதிர்கொண்டிட வேகினன்' என்றார். நீர்மையிலென் - பெயராய், எழுவாயாகவுமாம். பி-ம்:—[1]உயக்கும். [2]உரைத்துப், உரைத்துன். [3]வருந்தேலெனவும். [4]வானோர். (உஎஅ)

அஉ. மைந்தன் [1]வரவே நோக்கும் [3]வளர்மா [3]தவர்பான் மகவோ
[4]டந்தண் புனல்கொண் டணுக வையா [6]விதுபோ தளவாய்
வந்திங் [7]கணுகா தென்றே வந்த [8]தென்றே [9]நொந்தேதஞ்
சந்தங் கமழுந் தோளாய் தழுவிக் [10]கொளவா வெனவே.

இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) மைந்தன் வரவு ஏ நோக்கும்-மகனது வருகையையே பார்த்துக் கொண்டிருக்கின்ற,வளர் மாதவர்பால்-மிக்கதவத்தையுடைய முனிவனும் முனிபத்தினியுமான (இறந்த குமாரனது) பெற்றோரிடத்தில், மகவோடு - பிள்ளாயோடு, அம் தண் புனல்கொண்டு - அழகிய குளிர்ந்த நீரை யெடுத்துக் கொண்டு, அணுக - சென்று கிட்ட,—(அப்பொழுது தமப்பனை முனிவன்), 'ஐயா - குழந்தாய்! இது போது அளவுஆய் - இவ்வளவு நேரமாய், வந்து இங்கு அணுகாது - இவ்விடத்தில் வந்து சேராமையால், என் ஓ வந்தது என்றே - யாதோ துன்பம் நேர்ந்தென்றே, நொந்தேதம் - (எண்ணி) வருந்தினேம்; சந்தம் கமழும் தோளாய் - சந்தனம் மணக்கின்ற புயங்களையுடையவனே! தழுவிக்கொள வா - (நாங்கள்) ஆலிங்கனஞ்செய்யும்படி அருகில் வருவாயாக', என-என்று சொல்ல,—(எ-று.)—இச்செய்யுளின் ஈற்றிலுள்ள 'என' என்பதற்கு, "என்ற விருதாள் சென்னிபுனைந்தேன்" என அரு - ஆங் கவியில் முடிபு காண்க.

தசரதன் முனிகுமாரனது பெற்றோரை யணுகிச் செய்தி தெரிவித்தமை, இதுமுதல்மூன்றுகவிகளா லுணர்த்தப்படுகின்றது. தண்ணீர் கொணரச்சென்ற புதல்வன் இன்னும்வரவில்லையே யென்று மைந்தன்வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்த பெற்றோரிடத்தில், 'என்னைப் பெற்றோரிடத்திற் சேர்ப்பி' என்று சொன்ன முனிகுமாரனது வாக்கைத்தழுவி, பருகும் நீரோடு சல்லியம்பட்டிருந்த முனிகுமாரனையும் எடுத்துக்கொண்டுமன்னவன் சென்றுரைக, காலோசையால் தம்மகன்றான் வருகின்றானென்று கொண்டு அவர்கள் அவனைநோக்கி 'குமாரனே! சென்று வெகுநேரம் கழிந்தமையால் உனக்கு என்ன விளைந்ததோ என்று மனம் வருந்தினேம். எங்களைத் தழுவிக்கொள்ளாய்' என்று பெற்றோர்கள் கூறின ரென்க. காளிதாச மகாகவியும் இந்தச் சாபவரலாற்றைக் கூறுமிடத்து "தச் சோதிதஸ் தமநுத்திருதஸல்யமேவ பித்ரோஸ்ஸகாஸ மவஸந்நத்ருஸோர் நிநாய [அம்மகவிழல் ஏவப்பட்டவனுய், மன்னவன் கண்ணிலிகளான பெற்றோர்களருகில் உடம்பிற் பொத்திய பாணத்தைப் பிடுங்காமலே அம்முனிகுமாரனை யடைவித்தான்]" என்று கூறியிருப்பதும், அவ்விடத்து மல்லிநாதசூரியென்ற வியாக்யாதா இராமாயணத்தில் 'பின்பு நான் தனியே முனிகுமாரன்கிடந்த அவ்விடத்துக்கு மிகவுந் துன்பமுற்றுள்ள பெற்றோரை யிட்டுக்கொண்டுபோய் அந்தமுனிவனைப் பார்யையோடு அந்தப்புதல்வனைத் தொடுவித்தேன்" என்று கதிதீரத்தில்தானே இறந்த புதல்வனுள்ளவிடத்தைக் குறித்துப் பெற்

மறைபிட்டுக்கொண்டு போனதாகக்கூறியிருத்தலால் இது இராமாயணத் தோடுமுரணுவது' எனச் சொல்லியிருப்பதும் இங்கு அறியத்தக்கன. மக வோடு என்பதன் பின் 'ஒப்ப' என வருவித்து உரைப்பாருமுளர். மகவு - ஆகுபெயர். சந்தங்கமழ்தல் - இயற்கை மணம் வீசுதல். சக்ரவர்த்தினது தோள்களின் மணம் அருகே வீசுதலால் இங்ஙனம் கூறினருமாம். சந்தங் கமழ்தல்-அழகுதோன்றுதலுமாம். பி-ம்:—[1]வரவு, வரவை. [2]வளம். [3]தவன். [4]இத்தண். [5]அணுகா, அணுகி. [6]அது. [7]அணுகாயென்றே, அணுகாயென்ற. [8]என்ன. [9]சொன்தேன். [10]கொள்ளாய். (உஎக)

உஅ. ஐயா [1]யாதே ரரச னமோத்தி நகரத் துள்ளேன், மை யார் [2]மிருகந் துருவி [3]மறைந்தே வதிந்தே னிருள்வாய்ப், பொய்பா வாய்மைப் புதல்வன் புனன்மொண் டிடு[4]மோ தையின்மேற், [5]கை யார் கணை[6]சென் றதலாற் கண்ணிற் றெரிபக் காணேன்.

(இ - ள்.) ஐயா - சுவாமீ! யான்—, அயோத்தி நகரத்து உள்ளேன் - அயோத்தியா பட்டணத்திலுள்ளவனாகிய, ஓர் அரசன்—; மை ஆர் மிருகம் துருவி-கருமை பொருந்திய [கோடிய] மிருகங்களைத்தேடி, இருள்வாய் - இருட்டில், மறைந்துவ வதிந்தேன் - மறைந்திருந்தேன்; பொய்பா வாய்மை புதல்வன்-பொய்பேசாது மெய்யைமேபேசுகின்ற உமது புத்திரன், புனல் மொண்டிடும் ஓதையின்மேல் - நீரை (க்கடத்தில்) மூகக்கின்ற சத்தத்தின் மேல், கை ஆர் கணை-என்கையிலுள்ள பாணம், சென்றது அலால்-போயிற் றல்லாமல், கண்ணின் தெரிப காணேன் - கண்களால் விளக்கக் கண்டே னல்லேன்; (எ - று.)

இப்பாடல்முதல் என்பத்தைந்தாம்பாடலில் "அருள்வாம்" என்னும் வரையும் தசரதன் இறந்த முனிகுமாரனது பெற்றோரிடத்துக் கூறுவது. புதல் வன் புனலொண்டிடும் ஓசையைக்கேட்டு ஓசைதான்றிய திடத்தை இலக்காகக்கொண்டு இலக்குப்பொருளைக் காணாமலே பெய்தே னென்ற னென்க. சப்தவேதியென்னும் வித்தையின் மகிமையால் தசரதன் இங்ஙனஞ் செய்தான். இதனால், தன் செயல் அபுத்திபூர்வகமாக நிகழ்ந்த தெனக்காட் டியவாறு. தீங்குபயக்கும் நிகழ்ந்ததுகூறற் பொய்ம்மையின்பாற் படுதலால், அதனை விலக்கித் தீங்குபயவாத நிகழ்ந்ததுகூற லென்றற்கு, 'பொய்பா வாய்மை' என்று னென்னலாம். பி-ம்:—[1]யாதேரரசன். [2]கனப், மிருகம். [3]மறைந்தேததிவாய்கின்றேன், நதிவாய்மறையவதிய, மறைந்தேவதிந்தேன் றருவாய். [4]ஓசை. [5]கையாற். [6]சென்றதலால். (உஅ)

உச. வீட்டுண் டலறுங் குரலால் வேழக் குரலன் றெனவே
யோட்டந் தெதிரா நீயா ரென[1]வுற் றவெலா முரையா
வாட்டந் தருநெஞ் சினனாய் [2]நின்றன் [3]வணங்கா வாகை
நீட்டம் மெதிர்வந் திடவே யிறந்தே கினன்[4]யின் னிலையே.

(இ-ள்.) வீட்டுண்டு-(அம்பு) விடப்பட்டு, அலறும் குரலால் - கதறுகின்ற சத்தத்திலுல், வேழம் குரல் அன்று எனவே - (நாம் யானையின்குரலென்று கொண்டு எய்யக் காரணமாயிருந்தஒலி) யானையின் சத்தமன்றென்றெண்ணி, ஓட்டந்து-ஓடி, எதிரா-பார்த்து, நீயார் என - நீயார்? என்று (நான்) கேட்க, (குமரன்),-உற்ற எலாம் உரையா-நடந்தவை யனைத்தையுஞ் சொல்லி, வாட்டம் தரு நெஞ்சினன் ஆய் நின்ரூன்-வாடுதலையடைந்த மனத்தையுடையவ னெய்நின்று, வானோர் ஈட்டம் வணங்கா எதிர்வந்திடஎ-தேவர் கூட்டம் நமஸ் காரித்துவந்து எதிர்கொள்ள, இறந்து - (இவ்வுலகவாழ்க்கையை) விட்டு, விண்ணிடை எகினன்-தேவலோகத்திற் சென்ரூன்; (எ - று.)

அம்பு அடிபட்டு அலறுகின்ற குரலால் 'நான் இலக்காகக் குறித்தது வேழமன்று: மனிதனே' என்று உணர்ந்து மனத்தில் துணுக்குண்டு ஓடிப் போய்ப் பார்த்து, என்னம்பாற் ரூக்குண்ட குமாரனைக் கண்டு செய்திவினவ, அவனுந் தன் செய்தியைத் தெரிவித்து வானவர்எதிர்கொள்ள மேலுலகஞ் சென்றனனென்பதாம். நெஞ்சம் வாடுதற்குக் காரணம் - இருகண்ணிழந்து மூதுமையால்வருந்தும் பெற்ரோர் தன்னைப்பிரிதலால் உதவிபுரிவோரின்றி வருந்துவரே யென்று கருதியதனாலாகியது: அடியுண்ட வேதனையாலாய தென்பாருமுளர். ஓட்டந்து - ஓட்டந்தந்துவென்பதன் விகாரம்; "உள்ள மூருகி யென்கொங்கை யோட்டந்து பாய்ந்திடுகின்ற" என்புழிப்போல். பி ம்:—[1]உற்றதெலாம், உற்றெல்லாம். [2]நின்ரூள். [3]வணங்கி. [4]விண்ணனைவே.

அரு. அறுத்தாய் கணையா [1]லெனவே யடியேன் றன்னை[2]யையா, கறுத்தே [3]யருளா யாமை கண்ணிற் கண்டே னல்லேன், மறுத்தா னில்லான் வனமொண் டிடுமோ தையி[4]னெய் ததலாற், பொறுத்தே யருள்வா யென்னை விருதாள் சென்னி புனைந்தேன்.

(இ - ள்.) கணையால் அறுத்தாய் என ஏ - அம்பினுல் எய்துகொன்ரு யென்று, அடியேன்தன்னை—, ஐயா-! கறுத்துஏ அருளாய்-கோபித்தருளாம விருப்பீராக; மறு தான் இல்லான் - ஒருபிழையுமில்லாத அவன், வனம் மொண்டிடும் ஓதையின்-நீரை முகக்கின்ற சத்தத்தின் மேல்,எய்தது அலால்-(அம்பு) எறிந்ததல்லாமல், யான்ஓ கண்ணில் கண்டேன் அல்லேன் - நாமே கண்களால் நேராகப்பார்த்தவனல்லன்; பொறுத்துஏ அருள்வாய் - (இவ் வெனதுபிழையைப்) பொறுத்துக் கிருபைசெய்வீராக, என்ரு-என்று, இரு தான் - (அம்முனிவனது) உபயபாதங்களில், சென்னி புனைந்தேன்-(எனது) தலையை அணிந்தேன்; (எ - று)

இதனுல், தசரதமன்னவன் அபுத்தி பூர்வகமாகத் தான்செய்த பிழை யைப் பொறுக்குமாறு பணிந்து வேண்டுகின்ரூன். 'கருமை'என்னும் பண்பு 'கறு' எனத் தொழிற்பட்டு வெகுளியை யுணர்த்தும்: "கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள" என்றது காண்க. அருளுதல் - துணைவினை. பெரியோர் செயலைச் சொல்லுமிடத்து 'அருள்' என்னுந் துணைவினைசேர்த்துச் சொல்லும்

வழக்குப்பற்றி, கோயிலாதே யென்னுமிடத்து 'கறுத்தேபருளாய்' என்கிறான். பி - மீ:—[1]என்றே. [2]ஐய. [3]அருளாதியாதே. [4]எம்தனைஞல். (உஅஉ)

உசு. வீழ்ந்தா ரயர்ந்தார் புரண்டார் [1]வீழிபோ யிற்றின் றென்ரு
ராழ்ந்தார் துன்பக் [2]கடலு ளையா வையா வென்ரூர்
போழ்ந்தாய் நெஞ்சை யென்ரூர் பொன்னு டதனிற் போய்நீ
[3]வாழ்ந்தே யிருப்பத் [4]தரியேம் [5]வந்தெம் வந்தெ மினியே.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்) (அவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் அவ் விருடிகளு வரும்), வீழ்ந்தார் - (கீழே) விழுந்தார்கள்; அயர்ந்தார் - சோர்ந்தார்கள்; புரண்டார்—; இன்று விழி போயிற்று - இன்றைக்குத்தான் கண்கள் தெரியாமற் போயின, என்ரூர்—; துன்பம் கடலுள் ஆழ்ந்தார்-(பூதி) சோகமாகிய சமுத்திரத்துள் அமிழ்ந்தார்கள்; ஐயா ஐயா - குழந்தாய்! குழந்தாய்! என்ரூர்—; நெஞ்சை போழ்ந்தாய் - மனத்தைப் பிளந்தாய், என்ரூர்—; நீ போய்—, பொன்னுடலினில் வாழ்ந்துள இருப்ப - சொர்க்கலோகத்தில் வாழ்ந்துகொண்டிருக்க, தரியேம் - (யாங்கள் இக்கு இருக்கப்) பொறுமை; இனியே - இப்பொழுதே, வந்தேம் வந்தோமணியே - வருவோம் வருவோம்; எ-று.)

இதனுல், தசரதனுல் அம்பெய்து தம் புதல்வன் விடுத்தப்பட்டனை தம் மன்னவனது சொல்லாலுணர்ந்த பெற்றோர்கள் பட்ட துன்பக் கூறப்படுகின்றது. முன்னமே இருகண்களுமில்லாதவராயினும், இதுகாறும் மகன் கண் போலிருந்ததனுல் அவன் போயினமையை 'விழிபோயிற்றின்று' என்ரூர்; மகன் கண்போலிருத்தல் - கண்களிருந்தால் அவர் பெறும் இன்பத்தைத் தான்செய்யும் உபசாரங்களாற் பெறுவித்தலால். பி - மீ:—[1]விழியே போயிற் றென்ரூர், விழிபோயிற்றின்றென்றே. [2]கடல்புக்கு. [3]வாழ்ந்தாம். [4]தரியோம். [5]வந்தோம் வந்தோமணியே. (உஅஉ)

உஎ. என்றென் றயருந் தவனை [1]யிருதாள் வணங்கி யாதை
[2]யின்றும் புதல்வன் னினிநீ சேவுப் பணிசெய் திலையே
னென்றுந் [3]தளர்வுற் றயரீ [4]ரொழிமின் [5]னிடரென் றிடலுய்ந்.
வன்றிண் சிலையாய் தினண்டோ வெனவே பொருசால்வுரத்தா

(இ - ள்.) என்று என்று—, அயரும் - வருத்தங்கின்ற, தவனை - முனிவனை, இரு தாள் வணங்கி—, 'யாதை இன்று உய்புதல்வன் - தாதை இன்று முதலாக உங்கள் மகன்; இனி நீர் எவும் பணி செய்திலேன்-இனி மேல் நீங்கள் கட்டளையிடுகின்ற கைங்கரியங்களை (அம்மகனைப் போல)ச் செய்துவருவேன்; என்றுமும் தளர்வு உற்று அயரீர் - சிறிதும் மனச்சோர்வடைந்து வருந்தாதீர்கள்; இடர் ஒழிமின் - (பூதி) சோகம் நீங்குமின்;'

என்றிட்லும் - என்று யான் சொல்லலும்,—(அம்முனிவன்), 'வல் திண் சிலை யாய் - மிகவும் வலிய வில்லை யுடையவனே! கேண்மோ - கேட்பாயாக,' எனவ - என்று, ஒரு சொல் வகுத்தான் - ஒருவார்த்தையைச் சொன்னான்; (எ - று.)—அதுமேற் கூறுகின்றார்.

குமாரனைப்பெற்றோர் தம்புதல்வன் இறந்ததுகேட்டு மிகவும்வருந்திப் புலம்ப, அதுகேட்ட தசரதன் அவர்களைநோக்கி, 'இன்று முதல் நான் நுமது புதல்வன்போலிருந்து நீர் எவியதைச் செய்வேன்:புத்திரசோகத்தையொழிக' என்று தேற்ற, அம்முனிவன் அரசனைநோக்கி ஒன்றுகூறலானனென்க. கேண்மோ, மோ - முன்னிலையசைச்சொல்; "காமஞ்செப்பாது கண்டது மொழிமோ" என்புழிப்போல. தவத்தவர் என்னும் அத்து தொக்கது. பி-யீ:—[1]இருந்தாள். [2]இன்றும்புதல்வன்றன்னின், இன்றும் புதல்வன்றனினீர், என்றும் புதல்வன்றனினீர், இன்றுமுதனுஞ் சேய்போல். [3]தளரேலையா. [4]ஒழியும், ஒழி நீ. [5]துயர். [6]என்ன. [7]வகுத்தார். (நூஅசு)

அஅ. கண்ணுண் மணிபோன் மகனை யிழந்தும் முயிர்கா தலியா
[1]வுண்ணு வெண்ணி யிருந்தாலுலகோ ரென்னென் [2]றுரையார்
விண்ணின் றலை[3]சே ருதும்யா மெம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா வுடையா யடைவாய் படர்வா[4]னென்ன.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) 'கண்ணுணுள் மணி போல் மகனை - கண்ணினுள்ள கருமணி போன்ற [மிகவும் அருமையான] (எம்) மகனை, இழந்துஉம்—, உயிர் காதலியா - பிராணனை விரும்பி, உண்ணு எண்ணி இருந்தால் - உண்டுகொண்டு (இவ்வுலகவாழ்க்கையிலிருக்க) நினைத்திருந்தால், உலகோர் - உலகத்தார், என் என்று உரையார்-என்னவென்றுதான் பழியார்? யாம் விண்ணின் தலை சேருதும் - நாங்கள் தேவலோகத்திற் செல்வோம்; பண்ணும் பரி மா உடையாய் - அலங்கரித்த குதிரையை யுடையவனே! எம்போல் - எம்மைப்போல், விடலை பிரிய-மகன் (உன்னைவிட்டுப்) பிரிவதனால், படர் வான்-பரந்த தேவலோகத்தில், அடைவாய் - (நீ) செல்வாயாக,' என்ன - என்று சாபங்கொடுத்து,—(எ-று.)—"என்ன ..போயினர்" என அடுத்த கவியோடு முடியும்.

இதனால், முனிவன் துயரத்தைப் பொறுக்கமுடியாமல் மன்னவனுக்குச் சாபங்கொடுத்தது கூறப்படுகிறது. "கண்மணிப்பாவையன்னபெண்," "உன் கண்மணிவாழ்பாவை" என்றுரைப்பிறரும். உலகோ ரென்னென் றுரையார் - மகனை விழுங்கியபின்பும் இந்தக் கிழப்பிணம் உண்டுபடுத்து இனிதிருக்க விரும்புகின்றதே! இதன் நெஞ்சு என்ன கல்நெஞ்சோ? என்று திட்டுவ ரென்றபடி. மனவியையும் உளப்படுத்தி 'யாம்' எனப் பன்மையாற் கூறினான். பி-யீ:—[1]உண்ண. [2]உரைப்பார். [3]எதுதும். [4]எனவே. (நூஅநி)

அகூ. தாவா [1]தொளிருங் குடையாய் தவ[2]றிங் கிதுனின் சரணங்
காவா [3]யென்று யதனற் கடிய சாபங் கருதே
மேவா மகலைவப் பிரிந்தின் றெம்போ [4]லிடருற் றனைநீ
போவா யகல்வா[5]னென்னப் பொன்னட் டிடைபோ யினரால்.

(இ - ள்.) 'தாவாது ஒளிரும் குடையாய் - கெடாது விளங்குகின்ற ஏக சத்திரத்தையுடையவனே! 'நின் சரணம்-(நான்) உனது அடைக்கலம்; இங்கு இது தவறு காவாய் - இப்பொழுது இப்பிழையைப் பொறுப்பாயாக, என்றும்—; அதனால்—, கடிய சாபம் கருதேம் - அஞ்சத்தக்க சாபத்தைக் (கொடுக்க) நினைபேம்; * ஏவா மகலை பிரிந்து - ஏவாமலே [குறிப்பறிந்து கைங்காரியஞ்செய்கின்ற] புத்திரனைப் பிரிந்து, இன்று எம் போல் - இன்றைக்கு எம்மைப்போல, இடர் உற்றனை - சோகமடைந்து, நீ அகல்வான் போவாய்-நீ பரந்த தேவலோகத்திற் செல்வாயாக,' என்ன-என்றுசொல்லி, பொன் நாட்டிடை - தேவலோகத்தில், போயினர்-(இருவரும்) சென்றனர்.

நீ என்னைச் சரணமாகவடைந்ததனால், எக்ஷோப்போலப் புத்திரனிறக் கத்துயரையுழப்பாயென்று கடியசாபங்கொடாமல் புத்திரன் பிரிய அத்துய ரால் உயிர் நீப்பாயென்று இவ்வளவே சாபங்கொடுத்தே னென்றனனென்க. நீழ்மொழிந்ததையே காரணத்தோடு விரித்து இதிற் கூறின னென்க. கடிய என்பதில் கடியென்கிளவி அச்சப்பொருட்டாயிற்று. "ஏவாமக்கள் மூவாமருந்து" என்றாற்போல, ஏவாமகவு என்றான். பி-ம்:—[1]ஒளிரும். [2]ஈங்கு. [3]என்றவதனால். [4]இடரினைந்து. இடருற்றினைந்து. இடருற்றினையாய். இடருற்றினையாப். [5]எனவே.

(நகூ)

கூ0. சிந்தை [1]தளர்வுற் [2]றயர்தல் சிறிதுட் மிலனு யிர்சொன்
மைந்த னுளனென் றதனன் மகிழ்வோ டிவண் [3]வந் தினனு
லந்த முனி [4]சொற் றமையி னண்ணல் வனமே குதலு
[5]மென்ற னுயிர் [6]வீ குதலு [7]மிறையுத் தவறு வென்றான்.

(இ-ள்.) (அவர் அவ்வாறு போயினபின்பு தான், சிந்தை தளர்வு உற்று அயர்தல் - மனம் சோர்வடைந்து வருந்துதல், சிறிதுடம் இலன்தப் - கிஞ்சித்துமில்லாதவனாகி, இன் சொல் மைந்தன் உளன் என்றதனால்-இனிய மழலைச்சொல்லையுடைய மகன் பிறப்பா னென்று எற்பட்டதனால், மகிழ்வோடு-களிப்புடன், இவண் வந்தனன்-இவ்விடத்து [சுமந்திரத்துக்கு] மீண்டுவந்தேன்; அந்த முனி சொற்றமையின்-அந்தமுனிவன்சொன்னதனால், அண்ணல் வனம் எகுதல்உம்-இராமன் காட்டிற்குச் செல்லுதலும், என்தன் உயிர் வீகுதல்உம்-எனது பிராணன் போவதும், இறையும் தவறு - சிறிதும் மாறு, என்றான் - என்று (தன்சாபவரலாற்றைக்) கூறி முடித்தான்; (தயரதன்); (எ - று.)

† தனக்கு வருத்தத்தை யுண்டாக்கவேணு மென்று முனிவன் இட்ட சாபத்தைத் தசரதன் தனக்கு அநிஷ்டமாகக்கருதாமல் பெரும்பேறுயுள்ள புதல்வனைத்தருகையாகிய பெருவிருப்பத்தைத் தந்ததெனக் கொண்டதனால், இது - **தற்குறிப்பேற்றவணியாம்.** "வெய்ய" (எச) என்னுங் கவிமுதல் இக் கவியளவும் ஒருதொடராக்கி முடிக்க. பி-ம்:—[1]துயருற்று. [2]அயர்வும், அயரல், அயரேன். [3]வந்தனன். [4]சொற்றமையும். [5]எந்தன். [6]எதுதலும். [7]இவை.

கூக.—அதுகேட்ட கோசலை விளைவயுன்னி வருந்தி மூர்ச்சிக்க, முனிவனும் வருந்துதல்.

இம்மா மொழிதந் தரசன் [1]னிடருற் றிடுபோழ் தினிலச்
செம்மா மயில்கோ சலையுந் திகையா வுணர்[2]வோ வினளாய்
[3]விம்மா நெறியின் விதியின் விளவுந் தளர்வின் றொடர்வு
மம்மா தவனும் வினவோ டவலந் தருநெஞ் சினனுய்.

இதுமுதல் இரண்டு கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அரசன்-சக்ரவர்த்தி, இ மா மொழி தந்து - இப்பெரியவார்த்தையைச் சொல்லி, இடர் உற்றிடு போழ்தினில்-வருத்தமடையுங் காலத்தில், அ செம் மா மயில் கோசலையும் - அந்த அழகிய பெரிய மயிற்பேடை போன்ற கௌசலையும், திகையா - மனமயங்கி, உணர்வு ஓவினள் ஆய் - அறிவுநீங்கினவளாக [மூர்ச்சிக்க],—அ மாதவன்உம் - அம்முனிவனும், நெறியின் - முறையே, விதியின் விளவுஉம் - ஊழ்வினையினது விளைவையும், தளர்வின் தொடர்வுஉம் - வருத்தத்தினது தொடர்ச்சியையும், விம்மா - (கண்டு) கலங்கி, அவலம் தரும் நெஞ்சினன் ஆய் - வருத்தத்தைக் கொண்ட மனத்தை யுடையனாகி,—விரைவோடு—,—(எ - று.)—"ஆயினன்" என அடுத்த கவியோடு முடியும்.

நெறியின் விதியின் விளவும் தளர்வின்றொடர்வும் விம்மா உணர்வு ஓவினளாய் எனக் கூட்டுதலுமொன்று. சில பிரதிகளில் இச்செய்யுள் காணப்படவில்லை: "என்றுவொன்றென்றன் றுவ்வா" (கூஎ) என்ற பாடலும், ஈற்றடியில் "மறையோன்றனும்போனென்" என்ற பாடத்தோடு "முனிவன் செல்லும்" (கூஅ) என்ற பாடலும் உள்ளன. பி ம்:—[1]இடருற்றனன், இடருற்றன. [2]ஓய்வினள். [3]மெய்ம்மாநெறியும்.

(கூஅஅ)

---

† ராமோப்யத்ருஷ்டதநயாகநபத்மஸோ பே ஸாநுக்ரஹோ பகவதா மயி பாதிதோ ஸ்மி—க்ருஷ்யாம் தஹந்தபி கலு க்ஷிதி மிந்தநேத்தோ ப்ரஸோஹ்யநீம் தஹநஃ கரோது" என்று குவலயாகந்தத்தில் விஷமாலங்காரத்துக்கு உதாஹரணமாகக் கொடுக்கப்பட்ட ராகவ்ம ஸ்லோகம் இங்குக் காணத்தக்கது.

வேறு.

கூஉ.—வசிட்டமுனிவன் அரசர் முதலியோரிருந்த
முடிசூடுமண்டபத்திற் போய்ச் சேர்தல்.

உரைசெய் பெருமை யுயர் [1]தவத்தோ னோங்கல்
[2]புரைசெய் மதகளிற்றன் பொற்கோயின் [3]முன்னர்
முரச முழங்க முடிசூட்ட மொய்த்தான்
[4]டரச ரினிதிருந்த கல்லவை யி[5]னுயினான்.

(இ - ள்.) உரை செய் பெருமை - (உலகத்தாரால்) சொல்லப்படுகின்ற புகழையும், உயர் தவத்து - மிக்க தவத்தையுமுடைய, ஓர்-ஒப்பற்ற, ஓங்கல் செய்-மலையை யொத்த, புரை - மேன்மையையுடைய, மதம் களிற்றன் - மதயானையையுடைய சக்ரவர்த்தியினது, பொன் கோயில் முன்னர்-அழகிய அரமனையின் முன்னே, முரசம் முழங்க - வாச்சியங்க ளொலிக்க, முடி சூட்ட - (ஸ்ரீராமன்) திருவபிஷேகஞ் சூட்டிக்கொள்ளுதலினிமித்தம், ஆண்டு மொய்த்து - அவ்விடத்தில் நெருங்கி, அரசர் இனிது இருந்த - மன்னவர் இனிமையாயிருந்த, நல் அவையின்-சிறந்த சபையில், ஆயினான்-சேர்ந்தான்.

வசிட்டமுனிவன், தன்னைச் செய்தி யுணர்த்து தெரிவிக்குமாறு வேண்டிக்கொண்ட மன்னவர்முதலியோர் சபையாகவிருந்த முடிசூட்டுமண்டபத்துக்கு மீண்டனனென்க. பெருமை-வீறுமுமாம்; அது எல்லாரோடும் ஒப்பில்லாது பேரெல்லையாக நிற்றலாற் பெருமை எனப்படும். உயர்தவம் - ஸ்ரீராமனைப் பெறுதல். செய் - உவமவுருபு. 'மொய்த்து' என்பதனால் அவர் களின்மிகுதியும், 'இனிதிருந்த' என்றதனால் அவையினது பரப்பும் விளங்கும். நல்லவை-இருந்தாடது நன்மை அவையில் ஏற்றப்பட்டது. ஆயினான் என்ற வினைமுற்றுக்குச் 'சிறப்புளியுள்ளாயினான்' என்பது எழுவாய். இனி, உயர்தவத்தோனோங்கல் என்பதற்கு-இருடித்தலைவ னெனப் பொருளுரைத்து, அதனை ஆயினான் என்பதற்கு எழுவாயாக்கினும் அமையும். புரைஎன்பதை உவமவுருபாக்கினால், செய்என்பதைப் பொன்னெடுகூட்டிச் செய்பொற்கோயிலென்க; செய் களிறு - அழகிய களிறுமாம். மூன்றுமுடி - முற்றுமோனை. பி-ம்:—[1]குணத்தோர், தவத்தோன். [2]பூசை. [3]மூன்னம். [4]அரசன். [5]ஆனான். (உஅக)

கூஎ.—அறிந்துவந்த செய்தியை யுணர்த்துமாறு
அரசர் முனிவனை வேண்டுதல்.

வந்த முனியை [1]முகநோக்கி வாள்வேந்த
ரெந்தை [2]புகுந்த விடை யூறண் [3]டாயதோ
[4]வந்தமில் சோகத் தழுந [5]குரற் [6]றினென்ன
நிந்தை [7]தெளிவி [8]யெமக்கி தென்றுரைத்தார்.

(இ-ள்.) வாள் வேந்தர்-ஆயுதங்களையுடைய அரசர்கள், வந்த முனியை-வந்தமுனிவனை, முகம்நோக்கி—, 'எந்தை எம்தந்தைபோல்பவனே! புகுந்த-(பட்டாபிஷேகம் நின்றுவிடுமாறு) நேர்ந்த, இடையூறு-தடை, உண்டாயதோ-

உளதாயிற்றே! அந்தம் இல் சோகத்து-முடிவில்லாத துன்பத்துடன், அழுத குரல்தான் என்ன-அழுதசத்தத்திற்குக் காரணந்தான் யாது? ஈது-இவ்விஷயத்தை, எமக்கு—, சிந்தை தெளிவி - மனந்தெளியச்சொல்வாய்,' என்று—, உரைத்தார்—; (எ - று.)

இரண்டாமடியில், எந்தை புகுதற்கு இடையூறுஉண்டாயதோ என்ற பாடத்துக்கு - தயரதர் இங்கேவந்து முடிசூட்டிவைத்தற்கு இடையூறுண்டாயதோ என்றும், எந்தை - ஸ்ரீராமனென்றும் பொருள்கூறலாம். பி-ம்:— [1]முகன். [2]எதுவும், புகுதற்கு. [3]ஆனதோ. [4]அந்தமிலா. [5]குரலும். [6]அறியேம், என்னை. [7]தெளிந்தோய், தெளிந்தாய், தெளிந்திடீ. [8]தெரியமக்கிவ்வென்றுரைத்தார், செப்பீதமக்கென்றார். (ஈகo)

கூச.—பட்டாபிஷேகம் தடைப்பட்ட விஷயத்தை வசிட்டன் அவையோர்க்குத் தெரிவித்தல்.

கொண்டாள் வர[1]மிரண்டு கேகயர்கோன் கொப்பவட்குத்
தண்டாத [2]செங்கோற் [3]றயரதனுந் [4]தானளித்த
[5]ளெண்டார் முகிலே வனம்போகென் [6]றுருப்படுத்த
ளெண்டானும் வேறில்லை யீதந்த வாறென்றான்.

(இ - ள்.) கேகயர் கோன் கொம்பு-கைகேயி, 'முன்சம்பரனைவு சமர்புரிகையில்), வரம் இரண்டு கொண்டாள் - இரண்டுவரங்களைப் பெற்றுக்கொண்டாள்; அவட்கு—, தண்டாத செங்கோல் தயரதன்உம் - தடைப்படாத நீதியையுடைய சக்ரவர்த்தியும், தான் அளித்தான்-தான் (அவள் கொடுக்குமாறு இப்பொழுது கேட்டதனால்) கொடுத்தான்; (அவ்வரத்தைக்கொண்டு அவள்), ஒள் தார் முகிலே - ஒள்ளிய மாலையணிந்த ஸ்ரீராமனே, வனம் போகு என்று-காட்டிற்குச் செல் என்று சொல்ல, ஒருப்படுத்தான்-(அரசனைச்) சம்மதிக்கும்படி செய்தாள்; எண் தான்உம் வேறு இல்லை-(யாருக்கு என்னதீங்குநேரிட்டதோ? என) வேறுக எண்ணவேண்டியது யாதும் இல்லை· அடுத்த ஆறு ஈது-பொருந்தின விதம்இது, என்றான்-என்றுகூறினன்;(முனிவன்);(எ-று.)

கொம்பு-ஒல்குதலுக்கும், மென்மைக்கும், நுண்மைக்கும், முகில் - கருமைக்கும், கைம்மாறுகருதாக் கொடைக்கும் உவமை. என்றான்-என்ற முனிவன் எனின், மேலிற் கவியில் "ஆயினன்" என்பதனைநோக்கு. பி-ம்:— [1]இரண்டும். [2]செஞ்சொல். [3]தசரதனும், தலைமகனும். [4]தான்கொடுத்தான், தந்தழிந்தான். [5]ஒண்டாரவனை, ஒண்டாரவனும், ஒண்டாரிராமன், ஒண்டாரறிவன். [6]ஒருப்படுத்தான். இந்தப்பாடலும் அடுத்தபாடலும் சில பிரதிகளில் முன்பின்னாக வுள்ளன. (ஈகக)

கூரு.—இதுவும் அது.

வேந்தன் [1]பணியிறற் கைகேசி மெய்ப்புதல்வன்
[2]பாந்தண் மிசைக்கிடந்த பா[3]ரளிப்பா னையினை
னேந்து தடந்தோ ளிராமன் றிருமடந்தை
காந்த [4]ளெருமுறைபோய்க் காடுறைவா னையினான்.

(இ-ள்.) வேந்தன் பணியிலை-சக்ரவர்த்தியினது வரத்திலை, கைகேசி மெய் புதல்வன்-கைகேயியினது மெய்ப்புத்திரனாகிய பரதன், பாந்தள் மிசை கிடந்த பார் - ஆதிசேஷன்மேலே யிருக்கின்ற பூமியை, அளிப்பான்-காக்குந் தன்மையன், ஆயினன்—; ஏந்து தட தோள் இராமன் - உயர்ந்து பரந்த தோள்களையுடைய ஸ்ரீராமனாகிய, திருமடந்தை காந்தன் - சீதைக்குக்கண வன், ஒருமுறை போய்—, காடு உறைவான் ஆயினன் - காட்டில் வசிக்குந் தன்மையனானன் (என்றான் முனிவன்); (எ - று.)

பணி - சொல், கட்டளை. மெய்ப்புதல்வன் - வயிற்றிற் பிறந்த பிள்ளை யென்றபடி. ஆயிரமுடிகளாற் சுமக்கப்படுதல்விளங்க 'பாந்தண்மிசைக்கிடந்த' என்றது; இது, பூமிபாரத்தைச் சுமந்தளித்தலினது அருமை தோற்றுவிக்கும். ஏந்து தோள் - அழகிய தோளும், பூமிபாரத்தை ஏந்துதற்குரிய தோளுமாம். பி - மீ:—[1]மதிமயங்கக். [2]பாந்தளிடைக். [3]அளிப்பதாயினன், புரப்பா னினன், காப்பானையினன், முழுதுந்தான் புரக்க. [4]ஒருமுறையே காடுறைவா னையினன், அரசிழந்து காட்டகத்தனையிடமே. (நகஉ)

கூசு.—இதுமுதல் எட்டுக்கவிகள் - இராமன் வனந்செல்வதைக் கேள்வியுற்ற நகரத்தவர் கொண்ட வருத்தத்தைத் தெரிவிக்கும்.

வாரார் முலையாரு [1]மற்றுள்ள [2]மாந்தர்களு
மாராத காத லரசர்களு மந்தணரும்
பேராத வாய்மைப் பெரியோ னுரை[3]செவியிற்
சாராத முன்னந் [4]தயரதனைப் போல்வீழ்ந்தார்.

(இ-ள்.) பேராத வாய்மை பெரியோன் உரை-வேறுபடாத மெய்மை யையுடைய பெரிய முனிவனதுவார்த்தை, செவியில் சாராத முன் னம்-காதுகளிற் சேர்தற்கு முன்னமே,—ஆராத காதல் அரசர்கள்உம்-தெவி ட்டாத அன்பையுடைய மன்னவர்களும், அந்தணர்உம்-முனிவர்களும், மற்று உள்ள மாந்தர்கள்உம்-வேறுயுள்ள மனிதர்களும், வார் ஆர் முலையார்உம்-கச் சிற்பொருந்திய தனத்தையுடைய மாதர்களும், தயரதனைப்போல்வீழ்ந்தார்—.

மற்றுள்ளமாந்தர் - அமைச்சர்முதலியோர். செப்புளாதலின், ஈண்டுப் பிறழவைத்தார். ஆராதகாதல்-அளவில்லாத காதல். இல்வாழ்வார்க்குயின் தமரோடு விளையாட்டுவகையாற் பொய்ம்மைக்கழிலும் அமையும்; துறந்தார்க் காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோர்முழுக்கா மாகலின், 'பேராதவாய் மை'என்றார். பி-மீ:—[1]மற்றுமுள்ள. [2]மைந்தர்களும். [3]செவியுட். [4]தசரதனை.

கூஎ. [1]புண்ணுற்ற தீயிற் புகையி னுரைபதைப்ப
மண்[2]ணுற் றயர்ந்து [3]மறுகிற் றுடம்பெல்லாங்
கண்ணுற்ற வாரி கடலுற்ற தந்நிலையே
விண்ணுற்ற தெம்மருங்கும் விட்டழுத பேரோசை.

(இ - ள்.) புண்-விரணத்தில், உற்ற - பட்ட, தீயின் - நெருப்புப்போல, [புண்ணில்நெருப்புப்பட்டாற்போல], புகையின் - நெட்டுயிர்ப்போடு, உரை பதைப்ப - பேச்சுப் பதைப்புடனேதோன்றவும், உடம்பு எல்லாம் - (அவர்களின்) சரீரங்களெல்லாம், மண் உற்று-பூமியில் விழுந்து, அயர்ந்து-சோர்ந்து, மறுகிற்று - புரளலாயிற்று; கண் உற்ற - (அவர்களின்) கண்களிலிருந்து வழிந்த, வாரி - கண்ணீரானது, கடல் உற்றது - சமுத்திரமீரை யொத்தது; அ நிலை - அந்நிலைமையிலிருந்தே, எ மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும், விட்டு - வாய்விட்டு, அழுத - அழுதலிலுலுண்டாகிய, பேர் ஓசை-மிக்கஒலி யானது, விண் உற்றது - தேவலோகத்தை யடைந்தது; (எ - று.)

[1]புண்ணுற்றதீயிற்புகையுற்றுயிர்பதைப்ப என்ற பாடத்துக்கு, இல்என்னும் உருபைப் புண்ணேணுடுமாற்றி, புண்ணில்புகை தீ உற்ற (து) உற்று - விரணத்திலே தூமத்தையுடைய தீ பொருந்திலுல் அதையொத்து உயிர்துடி துடிக்க என்றுஉரைப்பர்: உற்று - உவமவுருபு; "தோளுற்றெர்தெய்வம்" என்பதிற்போல. உடம்பெல்லாம்மறுகிற்று - ஒருமைப்பன்மைமயக்கம். கண் ணுற்றவாரி கடலுற்றதுஎன்பதற்கு - கண்ணீர் ஆறுய்ப்பெருகிக் கடலை யடைந்ததெனினும் அமையும். அந்நிலையே-அப்படியேயென்றுமாம். பீ-ம்:— [1]புண்ணுற்ற தீயிற் புகையிற்று. [2]உற்றுயின்று. [3]மறுகுற்று. (நகூசை)

கூ௰. மாத ரருங்கலமு [1]மங்கலமுஞ் சிந்தித்தங்
கோதை புடைபெயரக் கூற்றினைய கண்சிவப்பப்
பாத மலர்[2]சிவப்பத் தாம்பதைத்துப் பார்[3]சேர்ந்தா
ருதை யெறிய [4]வொசிபூங் கொடி[5]யொப்பார்.

(இ - ள்.) ஊதை எறிய - பெருங்காற்று வீசுவதலுல், ஒசி பூ கொடி ஒப்பார் - அசைகின்ற பூங்கொடியை யொப்பாராகிய, மாதர்—, அரு கலம் உம் - பெறுதற்கரிய ஆபரணங்களும், மங்கலம்உம் - மங்கலநாணும், சிந்தி - சிந்தவும், தம் கோதை புடைபெயர-தமது கூந்தல் அவிழவும், கூற்று அனைய கண்சிவப்ப-யமனையொத்த கண்கள் சிவக்கவும், பாதம் மலர் சிவப்ப—, தாம் பதைத்து—, பார் சேர்ந்தார் - பூமியில் விழுந்தார்கள்; (எ - று.)

பாதமலர் - சிவத்தலென்னும் வினைக்கேற்ப மலரென்பது பாதமாகப் பரிணமித்ததலுல் **திரிபணி**யென்னும் பரிணுமாலங்காரம். இத்தொடரை உருவகமாக்கிக்கொள்ளின், சிவத்தலென்னும்வினைக்கு ஏலாது. கூற்றினைய் கண் என்றது, கண்ணின்கொடுமையை விளக்கிநின்றது. [1]கமலமுஞ்சிந்தி என்ற பாடத்துக்கு - கண்ணீரைச் சிந்தி என்க. பீ-ம்: —[2]பதைப்ப. [3]சோர்ந் தார், வீழ்ந்தார். [4]ஒசியுங். [5]போல்வார், அன்னர். (நகூரு)

கூக. ஆவா வரச னருளிலனே யா[1]மென்பார்
[2]காவா வறத்தையினிக் கை[3]விடுமேவம் யாமென்பார்
தாவாத மன்னர் [4]தலத்தலைவீழ்ந் தேங்கினர்
மாவாதஞ் சாய்த்த மராமரமே போல்[5]கின்றார்.

(இ - ள்.) தாவாத மன்னர்-(வலி)அழியாத அரசர்கள்,—ஆஆ-அச்சோ அந்தோ! அரசன் அருள் இலன் ஏ ஆம் - சக்ரவர்த்தி கருணையில்லாதவனே யாவான், என்பார்-; யாம்-, காவா-பாதுகாக்காமல், அறத்தை - தருமத்தை, இனி—, கைவிடுதேம்—, என்பார்—; மா வாதம் சாய்த்த-பெருங்காற்றினால் கீழ்தள்ளப்பட்ட, மராமரம் ஏ-ஆச்சாமரத்தையே, போல்கின்றார்-போன்ற வராகி, தலத்தலை வீழ்ந்து-மண்மேல்விழுந்து, எங்கிளர்-அழுதார்கள்;(எ-று.)

பி - ம்:—[1]என்றும். [2]காவாது. [3]விடுதேமாம். [4]தலைத்தலை. [5]வீழ்ந்தார். (உகஉ)

உ00. கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத [1]வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்[2]சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்.

(இ - ள்.) 'வள்ளல் - வரையாதுகொடுக்குந் தன்மையனான ஸ்ரீராமன், வனம் புகுவான்-காட்டிற்குச் செல்வான்,' என்று உரைத்த-என்றுசொல்லக் கேட்ட, மாற்றத்தால் - வார்த்தையினால், கிள்ளையொடு பூவை - கிளிகளும் நாகணவாய்ப்பறவைகளும், அழுத - புலம்பின; கிளர் மாடத்துள் உறையும் பூசை - விளங்குகின்ற வீடுகளில் வசிக்கின்ற பூனைகள், அழுத - அழுதன; உரு அறியா பிள்ளை - உருவத்தைஅறியாத சிறுகுழந்தைகள், அழுத—; (என்றால்), பெரியோரை என் சொல்ல-பெரியோர்அழுகையைப்பற்றி யான் என்னவென்றுசொல்லுக; (எ - று.)

அஃறிணையும் அவற்றோடொத்த ஒருசாருயர்திணையும் அழுதனவென்றால், வயசினாலும் குணத்தினாலும் கல்வியினாலும் அறிவதத்தினாலும் அன்பினாலும் பிறவற்றினாலுஞ் சிறந்த உயர்திணையோர் அழுதன ரென்பது, கூறாமலே பெறப்படு மென்றவாறு. கிள்ளைமுதலியவை யழுதனவென்றால் பெரியோர் அழுதனரென்பது தானேவிளக்குமென்ற நிதி-ஒருபொருளைக்கூறியமாத்திரத்தால் மற்றோர்பொருள் சித்திப்பதைத் தெளிவித்துத் தோடர்நிலைச் செய்யுட்பொருட்பேறணியாம். தனக்குமுறைபாகவந்த அரசுரிமையைத் தம்பிக்கு உதவித் தான் காட்டிற்குச்செல்ல உடன்பட்டா னாதலால், இராம பிரானை 'வள்ளல்' என்றார்.

கிள்ளை - பழங்களை மூக்காற் கிள்ளித்தின்பதுபற்றிய பெயர்: கிளத்தல் [பேசுதல்] தன்மையதாதல்பற்றிவந்த பெய ரென்பாரு முளர். கிள்ளை பூவை என்ற பால்பகாவஃறிணைப்பெயர்கட்கு, தகுதிபற்றிப் பன்மைப்பொருள் கொள்ளப்பட்டன; சாதியொருமையினைக் கொள்ளினுமாம். அழுத-'அன்' சாரியைபெறுத பலவின்பால் வினைமுற்று; சாரியைபெறின் 'அழுதன'என நிற்கும். ஆசிரியர் தொல்காப்பியனார் மரபியலில் "கொக்காம் வெருகினைப் பூசையென்றலும்" என்பதனால் 'பெருந்தோட்டங்களிலும் புதர்களிலும் பதுங்கியிருந்து தசையுண்ணுதற்காகப் பிறபிராணிகளின் உயிரைக் கவரும் வெரு

கம்பூனையை வீட்டிலுறையும் பிராணியாகிய பூசையின் பெயர்கொடுத்துக் கூறுதலும் அமையும்' என்று கூறினராதலின், அவ்வகைவெருகம்பூனையை விலக்குதற்கு 'கிளர்மாடத்துள் உறையும் பூசை'. என்றார். [1]உணர்வறியாப் பிள்ளை என்றபாடத்திற்கு-இவர் வேண்டியவர் இவர் வேண்டாதவர் என்று அறியமாட்டாமலிருப்பனவாய் அஃறிணைப்பொருள்போன்ற சின்னஞ்சிறார் என்க. "குழவியும்மகவும்"என்ற தொல்காப்பியச் சூத்திரத்தில் 'கிழவவல்ல' என்ற மிகையால், பிள்ளைப்பெயர் மக்களுக்கும் வந்த தென்பர். சொல்ல - அகரவீற்றுவியங்கோள்; செயவெனெச்சமாகக்கொண்டு, பெரியோரைக் குறித்து, சொல்ல-சொல்லுமாறு, என்-என்ன உள்ளது? என்றுமாம். பி-ம்:— [2]சொல்லி.

(நகஎ)

கoக. சேதாம்பற் போதனைய செங்கனிவாய் வெண்டளவப்
போதாம்பற் றோன்றப் புணர்முலைமேற் [1]பூந்தரள
மாதாம்பற் றென்ன மழைக்கண்ணீ ராலியுக
நாதாம்பற் றுமழலை நங்கைமா ரேங்கினார்.

(இ - ள்.) சேது ஆம்பல் போது - செவ்வல்லிமலரையும், செம் கனி - சிவந்த கொவ்வைக்கனியையும், அனைய-ஒத்த, வாய்-வாயில், வெள் தளவம் போது ஆம் - வெள்ளிய முல்லைமலரையொத்த, பல் - பற்கள், தோன்ற - வெளியில்தெரியவும்,--- புணர் முலைமேல் - நெருங்கிய தனங்களின்மேல், மா-பெரிய, பூ-அழகிய, தரளம் தாம்பு-முத்துமாலை, அற்று என்ன-அறுந்து விழுந்தாற்போல, மழை கண் நீர் ஆலி-குளிர்ச்சியையுடைய கண்ணிலிருந்து வழியும் நீரின்துளிகள், உக-சிந்தவும்,-நா பற்று மழலை-நாவில் நன்குபொருந்தாத [நிரம்பாத] சொல்லையுடைய, நங்கைமார்—, ஏங்கினர்—; (எ - று.)

ஆம்பல் உலகத்துப்பெண்பால்கள் வாயது நறுநாற்றத்திற்குவமை;"ஆம்பலுறுந் தேம்பொதிகிளவி"என்பவாகலின், மகளிரின்வாய் நிறத்தால் கொவ்வைக்கனியையும் நறுநாற்றத்தாற் செவ்வாம்பலையும்போலுமென்பது, 'சேதாம்பற்போதனையசெங்கனிவாய்' என்பதன்பொருள். இராமன் கானகஞ்சென்றதனையுணர்ந்து பல்தோன்றவும் கண்களிலிருந்துநீர்வடியவும் தம்மழலைச் சொற்களால் அவலச்சொற்களைச்சொல்லியவண்ணம் மகளிர் ழுதன ரென்க. தூத்தாம்பும் தரளத்தாம்பும்அற்றாற்போலக் கண்ணீராலியுக என உரைத்தலுமாம். தாம்பு-ஆரம். ஈற்றடியில், தாம்-அசை. இச்செய்யுளில், திரிபு என்னுஞ் சொல்லணி காண்க. மழைக்கண்ணீர் - மழைபோன்ற கண்ணீருமாம். செம்மை + ஆம்பல் = சேதாம்பல்: "ஈறுபோதல்" என்னுஞ் சூத்திரவிதி. பி-ம்:— [1]பூண்.

(நகஅ)

கoஉ. ஆவு [1]மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு [2]மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகுங்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு [3]மழுதன வம்மன்னவனீ மானவே.

(இ - ள்.) அ மன்னவனை மான - (இராமபிரானுடைய பிரிவைப் பொறுக்கமாட்டாமற் புலம்புகின்ற) அந்தத் தசரதசக்கரவர்த்தியைப்போலவே, ஆவும் - பசுவும், அழுத—; அதன் கன்று அழுத - அப்பசுவின் கன்றுகளும் அழுதன; அன்று அலர்ந்த பூவும்-அன்றுமலர்ந்த மலர்களும், அழுத—;புனல் புள் - நீர்வாழ் பறவைகளும், அழுத—; கள் ஒழுகும் காவும்-தேன்பொழியுஞ் சோலைகளும், அழுத-; களிறு - யானைகளும், அழுத - ; கால் வய போர் மாவும்-தேரிற்பூட்டப்படுகின்ற வலிமையுள்ள போர்க்குரிய குதிரைகளும், அழுதன—; (எ - று.)

கா, பூ - ஓரறிவுயிர்; மற்றவை - ஐயறிவுயிர். இச்சசெய்புளில் ஓரறிவுயிரும்ஐயறிவுயிரும்அழுதமைகூறி,மற்றை ஈரறிவுயிர் முதலியன அழுதமையை உபலட்சணத்தாற் பெறவைத்தார். ஆ முதலியன அழுதல் - தம் கண்களால் நீரைப்பெருக்கிக்கொண்டு கதறுதல்.கா, பூ அழுதல் - வாடிவதங்கிப் பொலிவிழத்தலால் தமதுதியாத்தைப் புலப்படுத்தல். ஆ - சாதியொருமை; அழுத - அழுததென்பதன்விகாரம். 'ஆ என்பது பால்பகாவஃறிணைப்பெயராதலால், அழுத எனப் பன்மைமுற்றைக்கொண்டது' எனக் கொள்ளின், மேலேவரும் 'அதன்கன்றும்' என்பதனோடு பொருந்தாதாம். களிறு - மதக்களிப்பையுடையது: ஆண்யானை. கால் - சக்கரம்: அதனையுடைய தேருக்குச் சினையாகுபெயர். இனி, கால் - கால்வேகத்தைக்கொண்டமா எனினுமாம். கால்-காலாள் என்பாருமுளர்.''வயவலியாகும்'' என்ற தொல்காப்பியத்தால், 'வய' என்பது - வலிமைப்பொருள்தரும் உரிச்சொல்லென்பது பெறப்படும்; வயம் என்று பிரித்தால் - வெற்றியென்று பொருளாம். இப்பொருளில், இது பெயர்ச்சொல். மான - உவமவுருபு. பி-ம்:—[1]அழுதன. [2]அழுதவதன்; அழுதவப். [3]அழுதவால். (உகக)

கஅஈ [1]ஞானீயு [2]முப்கலா னென்றுதித காயகனைக்
காணீயு மென்றுரைத்த [3]கைகேசி யுங் [4]கொடிய
கூனீயு[5]மல்லாற் கொடியார் பிறருளரோ
மேனீயு [6]மின்றி வெறுநீரே யாயினர்.

(இ - ள்.) 'ஞானீயும் - அறிவுடையவனும், உப்கலான் - (இராமனைப் பிரிந்து) பிழையான்;' என்றது - என்றுஎண்ணுமல், 'காயகனை - தலைவனை, கான் ஈயும் - (இராமனுக்கு) வனவாசத்தைக் கொடும்;' என்று உணர்த்த; (கொடிய) கைகேசியும்—, கொடிய கூனீயும்—, அல்லால்—, கொடியார் - கொடியவர் [அழாதவர்], பிறர் உளர் - வேறெவரிருக்கின்றனரோ? [இல்லை]; (பிறரெல்லாம்), மேனீயும் இன்றி - உடம்புமில்லாமல், வெறு நீர்த - வெறுமையுடைய நீர்போலக் கரைந்தனர்; (எ - று.)

இராமபிரான் உலகத்து எப்பொருளிடத்தும் பற்றுச்செய்யாத ஞானிகளும் பற்றுச்செய்யும் பரம்பொருளின் திருவவதாரமாவனாதலால், இவனைப் பிரிந்தால் அந்த ஞானியும் உய்யா னென்க. இராமபிரானது நிலையைக் கரு

தாதுகானகத்திற்செலுத்துமாறு தூண்டிய கைகேயியும், இராமபிரானிடத்துத் தன்மகனிடத்துக்காட்டிலும் பேரன்புவைத்திருந்த கைகேயியையும் தன் தூர்ப்போதனையால் மனம்மாறுபடுவித்த கூனியுமே அந்நகரத்துள் மனம்நிறுதும் இளகாதிருந்தவர்; மற்றையோர் யாவரும் துயரமிகுதியால் நீர்ப்பண்டம் போல் தம்முடல் கரைவாராயினரென்றவாறு. கூனீ, மேனீ - நீட்டல்விகாரங்கள்:"வீடுமின்" என்றவிடத்துப்போல். கொடிய-மத்திமதீபம். வெறுந்தேரையாயினர் - வெறுந்தன்மையுடையவராய் மூர்ச்சித்துச் சாகுநிலைமையராயினரென்றபடி. பீ-ம்:—[1]நானீயும். [2]உய்கிலாம், உய்கலாம், உய்கலாது. [3]கைகேயீயும். [4]கடிய. [5]அன்றி. [6]எல்லாம்.

(சுஎ)

கஎசு.—ஊராரின்துயரத்தைத் தெரிவிக்குங் கவிக்கூற்று.

தேரு தறிவழிந்தா [1]ரெங்குலப்பார் தேரோட
நீரூகிச் சுண்ணை [2]நிறைந்த தெருவெல்லா
மாரூகி யோடின [3]கண்ணீ ரருநெஞ்சங்
கூரூகி [4]யோடாத [5]வித்துணையே [6]குற்றமே.

(இ-ள்.) தேருது அறிவு அழிந்தார்-தெளியாமல் உணர்வுநீங்கப்பெற்றவர்கள், எங்கு உலப்பார்-எங்ஙனம் கணக்கிடப்பெறுவார்? தேர் ஓட-தேர்கள் செல்லுதலினால், நீறுஆகி-பொடியாய், சுண்ணம் நிறைந்த-புழுதிகள் நிறைந்திருக்கின்ற, தெரு எல்லாம்-தெருமுழுதும் (அப்புழுதிகள் நீங்கும்படி), கண்நீர் ஆறு ஆகி ஓடின-; அரு நெஞ்சம்-அருவப்பொருளாகிய மனம், கூறுஆகி-வேறுகி, ஓடாத - நீங்காத, இத்துணைய - இவ்வளவே, குற்றம்—; (எ - று.)

இராமனைப்பிரிந்த துயரத்தால் இன்னதென்று தெரியாது நிகைத்து நின்ற அவ்வூரார் எத்துணைவரோ? சொல்லமுடியாது; அவர்களைத்தவிர்த்து மற்றையோர்கண்களிலிருந்து நீர் ஆறுகிப்பெருகிற்று: அவர்களைப்பற்றிக் குறைகூறமேவணுமானால் நெஞ்சம் இருபிளவாகி யழிந்திடவில்லை யென்னலாமென்றவாறு. உலத்தல் - அளவுபெறுதல். அருவப்பொருளாதலின் நெஞ்சங் கூறுகியோடவில்லையென்ற கருத்துப்பட 'அருநெஞ்சங் கூறுகியோடாத' என்றார்: இது - **கருத்துடையடைமொழியணியாம்.** பீ-ம்:—[1]எங்குலத்தார். [2]நிறைத்த, நிகர்த்த. [3]கண்ணினீருள், கண்ணுணீரருள், கண்கணீருள். [4]ஓடிலவால். [5]இத்தனையே. [6]கூற்றமே.

(சுஎக)

கஎந.—இதுமுதல் பத்துக்கவிகள் - நகரத்தவர் வருந்தியதைத் தெரிவிக்கும்.

மண்செய்த பாவ முளதென்பார் மாமலர்மேற்
பெண்செய்த பாவ[1] மதனிற் பெரிதென்பார்
புண்[2]செய்த [3]நெஞ்சை விதியென்பார் பூதலத்தோர்
கண்செய்த பாவங் [4]கடலிற் பெரிதென்பார்.

(இ - ள்.) (அவ்வயோத்தியிலுள்ளார்): 'மண் செய்த பாவம் உளது - நிலமகள் செய்த தீவினை மிகுதியாகவுள்ளது,' என்பார் - என்பார்கள்; 'மாமலர்மேல் பெண் செய்த பாவம் - சிறந்த தாமரைமலர்மேல் வீற்றிருக்கின்ற பெண்ணகிய இலக்குமி செய்துள்ள பாவம், அதனில் பெரிது - அந்த மண்மகள்செய்த பாவத்தினும் மிக்குள்ளது,' என்பார் - ; 'விதி - (நமது) ஊழ்வினை, நெஞ்சை - (யாவருடைய) மனத்தையும், புண் செய்த - புண்ணாகச் செய்துவிட்டது,' என்பார்—; 'பூதலத்தோர் கண் செய்த பாவம் - இந்நிலவுலகத்தோரின்கண்கள்செய்துள்ளபாவம், கடலின் பெரிது - கடலைக் காட்டிலும் மிக்குள்ளது,' என்பார்—; (எ - று.)

ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு தன்னை யாளும் பாக்கியத்தைப் பெருமையால், 'மண்செய்தபாவம் உளது' என்றும், மணிமுடி பூண்டு தன்னைக் காக்கும் பாக்கியத்தை மண்மகள் பெருவிடினும் அப்பிரானது சேவடி தன்மீது பலவிடத்தும் தீண்டப்பெறும் பாக்கியத்தையேனும் பெற்றிருக்க, செல்வத்திற்குரியமகள் ஒருவகையாலும் அப்பிரானது சம்பந்தத்தைப் பெருமையால், 'மாமலர்மேற் பெண்செய்தபாவம் அதனிற்பெரிது' என்றும், இங்ஙனம் இராமபிரான் முடிதுறந்து நம்மனம் புண்படுமாறு காட்டிற்குச்செல்வது நமது ஊழ்வினையே யென்பார் 'புண்செய்த நெஞ்சை விதி' என்றும், இராமபிரான் முடிபுனைந்து பொற்பட்டாடை முதலியன தரித்துச் செல்லத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெருமல் மரவுரிதரித்து முனிவர்கோலத்துடன் சஞ்சரிப்பதைத் தரிசிக்கப்போவதால், 'பூதலத்தோர் கண்செய்த பாவம் கடலிற்பெரிது' என்றும் அந்தகரத்தவர் கூறினரென்க. இதுமுதல் ககச - ஆங்கவிவரையிலும்வரும் என்பார் முதலிய மூற்றுக்களுக்கு கஎஅ-ஆங்கவியிலுள்ள 'அந்தணகரார்' என்பது எழுவாயாம். மூன்றுமடியில், 'செய்த'-செய்தது என்பதன் தொகுத்தல்; மற்றை மூன்றடிகளில் 'செய்த' பெயரெச்சங்கள். திருமகள் தாமரையில் வாழ்பவளென நூல்கள் கூறும். பி - ம்:— [1]இதனில். [2]செய்தார். [3]நெஞ்சம். [4]கடலென்பாராயினர். (கஎஉ)

கஎசு. ஆளான் பரத னரசென்பா ரையனினி
மீளா னமக்கு விதி[1]கொடிது காணென்பார்
[2]கோளாகி வந்தவா கொற்ற[3]முடி தானென்பார்
மாளாத நம்மின் [4]மனம்வலியா ரார்என்பார்.

(இ - ள்.) 'பரதன் அரசு ஆளான்' என்பார்—; 'ஐயன் - ஸ்ரீராமன், இனி மீளான்—,'(என்பார்)—; 'நமக்கு விதி கொடிதுகாண்—,'என்பார்—; 'கொற்றம் முடி - வெற்றியையுடைய பட்டாபிஷேகம், கோள் ஆகி வந்த ஆ (று) - கொல்வதாகி [யமனுகி] வந்தவிதந்தான் (என்னே?),' என்பார்—; 'மாளாத நம்மின் - இறவாத நம்மினும், மனம் வலியார் ஆர்—?' என்பார்—; (எ - று.)—காண் - முன்னிலையசை. தான் - அசை.

பட்டாபிஷேகப் பேச்சு இல்லாவிடின் ஸ்ரீராமனைக் கைகேயி வனத்திற்குச் செல்லவேண்டுமென வரம்வேண்டாளாதலின், 'கோளாகிவந்தவா கொற்ற

முடிதான்' என்றனர். கோள் - உயிர்கொள்ளுதலே யுடையது; இடையூறும், தூமகேதுவுமாம். பி - ம்:—[1]கொடிதேதான், கொடிதுதான். [2]கோளாகவந் தேதா. [3]முடியென்பார். [4]வலியார்களார். (சஎக)

கஎஎ. ஆதி யரச [1]னருங்கே கயன்மகண்மேற்
காதன் முதிரக் கருத்தழிந்தா னெமென்பார்
சீதை மணவாளன் றன்னோடுந் தீக்கானம்
போது மது[2]வன்றேற் புகுது மெரியென்பார்.

(இ - ள்.) 'ஆதிஅரசன் - தலைவனுகிய சக்ரவர்த்தி, அரு கேகயன் மகள் மேல் - அரிய கைகேயியின்மேல், காதல் முதிர-அன்பு மிகுதலால், கருத்து அழிந்தான் ஆம் - மனமயங்கி வரங்கொடுத்தவனுவான்,' என்பார்—; '(நாம்), சீதை மணவாளன் தன்னோடுஉம் - ஸ்ரீராமனோடும், தீ கானம் - கொடிய காட்டை, போதும் - அடைவோம்; அது அன்றுஎல் - அதுவுங் கிடைத்த தின்றேல், எரி புகுதும் - தீப்புகுவோம்,' என்பார்—; (எ - று.)

ஆதியரசன் - பிரதானனுன அரசனென்க: "ஆதிமன்னனையாற்றுமினீ ரென்றான்" எனப் பின்னும் வருதல்காண்க: இனிஇத்தொடரில், ஆதியென் னும் முதன்மைகுறிக்கும் அடை, வயதுமுதிர்ந்தமையான் மதியிழந்தா னென் பதனை விளக்கு மென்பாருமுளர். ஆதி - முன்னே என்றுமாம். அருமகள் - இகழ்ச்சி: நற்குணங்களின் இன்மையை யுடைய மகளுமாம். மணவாளன் - மணத்தை ஆளுதலுடையவன்; மணம் - கல்யாணம். பி-ம்:—[1]அருள்கேகயன் மகண்மேல், கேகயர்கோன்மாமகண்மேல். [2]அன்றி, அன்றுல். (சஎச)

கஎஉ. கையா [1]னிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவா
ருய்யாள்பொற் கோசலையென் [2]றேறுவா துவெய்துயிர்ப்பா
ரையா விளங்கோவே யாற்றுதி[3]யோ நீயென்பார்
நெய்யா ரழலுற்ற துற்றூரந் நீணகரார்.

(இ - ள்.) கையால் நிலம் தடவி—, கண் நீர் மெழுகுவார்-கண்ணீரால் (தரையை) மெழுகுவார்; பொன் கோசலை - அழகியகோசலைதேவி, உய்யாள் என்று - பிழையாளென்று, ஓவாது - இடைவிடாமல், வெய்து உயிர்ப்பார் - பெருமூச்சுவிடுவார்; 'ஐயா—! இளங் கோவே - இளையபெருமாளே! [இலக்கு மணு!], நீ ஆற்றுதி ஓ-நீ மனம்பொறுப்பாயோ?' என்பார்—; நெய் ஆர் அழல் உற்றது - நெய்யைப்பெய்த நெருப்படைந்ததன்மையை, உற்றூர் - அடைந் தார்; (யாவரெனில்), அ நீள் நகரார்-அந்தப்பெரிய அயோத்திநகரிலுள்ளார்.

இராமனையிழந்தமை கண்களையிழந்தமைபோலுதலாலும், கண்களில் நீர் ததும்புகின்றதனுலும், கண்திறந்துபார்க்கமுடியாமையால் கையால்நிலந் தடவினர். உய்யாள்போற்கோசலையென்று படிப்பாருமுளர். பி - ம்:—[1]நிலத் தடித்து. [2]ஓதுவார். [3]நீயோ. இப்பாடல் சிலபிரதிகளில் "தள்ளுறு" என்ற அடுத்த பாடலுக்குப்பின் காணப்படுகின்றது. (சஎந)

கoக. [1]கள்ளுறல் [2]வேறில்லாத் தன்மகற்குப் பார்[3]கொள்வா
[4]ளெள்ளுறு தீக்கருமம் நேர்ந்தா னிவ[5]னென்பார்
[6]கள்ளுறு செவ்வாய்க் [7]கணிகைகாண் கைகேகி
[8]யுள்ளுறு காத லிலள்போலென் றுள்[9]ளழிவார்.

(இ - ள்.) 'தன் மகற்கு பார் கொள்வான் - தன்பின்னாபாகிய பரதனுக்காக இராச்சியத்தைச் கைக்கொள்பவளாய், கள்ளுறல் - (ஸ்ரீராமனைக்காட்டிற்கு) அனுப்புவதற்குக்காரணம், வேறு இல்லா-வேறு இல்லாமல், இவள் - இக்கைகேசி, என் உறு தீ கருமம் நேர்ந்தாள்-(யாவராலும்) பழிக்கப்படுகின்ற (வரமென்ற வியாசத்தினால் இராமனைக்காட்டிற்கு ஓட்டியதாகிய இத்தக்) கொடியகாரியத்தை வேண்டினாள்', என்பார்—; 'கைகேகி-இவள், கள் உறு செவ் வாய் கணிகை காண் - தேன்போல்இனிய சிவந்த அதரத்தையுடைய வேசியேயாவாள்; (அதனால்தான்), உள் உறு காதல் இலள்போல்-மனத்திற் பொருந்திய அன்பில்லாதாள்போல்வாள்,' என்று-என்றுசொல்லி, உள் அழிவார் - மனம்வருந்துவார்; (எ - று.)

என் - முற்றினிலத்திதாழிற்பெயர். இனி, சக்ரவர்த்தியைக்கொல்லுதலால், எள்ளுப்பொருந்திய கருமமு மாம். உண்டவர்க்கு மயக்கத்தையுண்டாக்குதலால், கள்ளுறு வாயென்றார் உள்ளுறுகாதலிலனென்றதனால், வெளியில் அன்புபாராட்டுகின்ற வென்பது பெற்றாம்; வேகியர் இன்னாதல் "தலையு மாகமுந்தாளுந் தழீஇயதன், கிலகிலா திறைகின்றதுபோலவே, மலையினுள் ளவிலலாங்கொண்டு மண்டலால், விலயின்மாதரை பொத்ததவ் வெள்ளமே," "பொன்விலப், பாவையர்மனமும்போற்பகையுடற்றிதே", "அச்சின் விழை யார் பொருள்விழையு மாய்தொடியார்" என்பவற்று ளுணர்க. பி-ம்:—[1]தள் ளுறு [2]வேறில்லை. [3]கொள்வான். [4]எள்ளுறிட. [5]என்ற. [6]கள்ளுறு. [7]கணி கைபோல், கணிகையரும். [8]உள்ளுறு. [9]அழிந்தார். (கoக)

ககo. நின்று தவ[1]மியற்றித் தான்றீ நேர்ந்தேதா
[2]வன்றிவ் வுலகத்து ளா[3]ருயிராய் வாழ்வானைக்
கொன்று களைபக் [4]குறித்த பொரு[5]ளொன்றோ
நன்று வரங்கொடுத்த நாயகற்கு நன்றென்பார்.

(இ-ள்.) 'தான்-சக்ரவர்த்திதான், நின்று - நிலையாய், தவம் இயற்றி - தவத்தைச் செய்து, தீர - (இவ்வுலகத்தினின்றும்) நீங்க, நேர்ந்ததுஉ - சம்மதித்தபடியோ? அன்று-அதுவன்றுபின், இ உலகத்துள்—, ஆர் உயிர் ஆய்-அரிய உயிருடன்கூடி, வாழ்வானை-வாழுஞ் சனகனை, கொன்று களைய - கொலைசெய்து அடியோடே நீக்கிவிடுதற்கு, குறித்த-நினைத்த, பொருள்ஒன் றோ-ஒருகாரியமோ? வரம் கொடுத்த(து)-(கைகேயிக்கு வரங்கொடுத்தசெயல், நாயகற்கு-தசரதனுக்கு, நன்று நன்று - நன்றுகவுள்ளது நன்றுகவுள்ளது;' என்பார்—; (எ - று.)

அரசன் கைகேயியின் இஷ்டப்படி வரத்தைக்கொடுத்தது; தவஞ்செய்து தன்னுயிரைவிட்டிடவேணுமென்ற கருத்திலை லா? அன்றி, இவ்வுலகத்து வாழ்வாரையெல்லாங் கொன்றுவிடவேணுமென்ற கருத்திலை லா? இவ்வரசனதுசெயல் எவ்வளவு தீமையாகவுள்ளதென்றனரென்றவாறு. நன்றுநன்று-பிறகுறிப்பால், மிகவுந்தீதுஎன்ற பொருளைக் காட்டிற்று. உலகத்தவர் இராமனைப்பிரிதலால் இறந்துபடுவரென்பது, இரண்டுமூன்றும்அடிகளின்கருத்து. உலகத்து ளாருயிராய் வாழ்வார் என்றது, இராமனைக்குறிக்கு மெனினுமாம். கொடுத்த=கொடுத்தது: விகாரம். பி - ம்:—[1]உருற்றி, ஆற்றி, முயற்றி. [2]அன்றியுலகத்துள். [3]உயிரை. [4]கொடுத்த. அன்றே. (சoஎ)

ககக. பெற்றுடைய மண்ணைவளருக் கீந்து [1]பிறந்துலக
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி
யுற்[2]றுறைதும் யாரு [3]முறையமே [4]சின்னாளிற்
புற்றுடைய காடெல்லா நாடாகிப் போமென்பார்.

(இ - ள்.) பெற்று உடைய மண் - (வரத்தினாற்) பெற்றிருக்கின்ற இராச்சியத்தை, அவளுக்கு ஈந்து-அக்கைகேயிக்கு (ஆளுமாறு) கொடுத்து, பிறந்து (தான் மூத்தவனாகப்) பிறந்தமையினாலே, உலகம் முற்று உடைய - உலகமுழுவதுக்கும் உரியவனை, கோவை-இராமனை, யார்உம் - (யாம்) எல்லோரும், பிரியாது-பிரியாமல், ஈண்டி-திரண்டு, மொய்த்து-நெருங்கி, உற்று-(காட்டை) அடைந்து, உறைதும் - (அங்கே) வசிப்போம்; உறையவ - அவ்வாறு வசித்தலால், புற்று உடைய காடுஎல்லாம்-புற்றுக்களையுடைய வனங்களெல்லாம், சில் நாளில்—, நாடு ஆகி போம் என்பார்—; (எ - று.)

நாம் இவ்விராச்சியத்தை விட்டிட்டு இராமபிரானோடு வசிப்போம்: அங்ஙனம் ஊராராகிய நாம் எல்லாரும் வசிப்பதனால் காடே நாடாகிப்போய் விடுமென்றன ரென்க. பெற்றுடைய மண்ணைவளருக்கீந்து-அவள்வாயில் மண்ணைப்போட்டு என்ற கருத்தும் படுமாறு கூறிய நயம் கருதத்தக்கது. பிறந்துலகம் முற்றுடையகோ - "முழுவதே பிறந்துலகுடைய மொய்ம்பினோனென்" என்பர், பின்னும்; "பிறந்தநீயுடைப் பிரிவில் தொல்பதம்" என்று பரதன் கூறுவதுங் காண்க. காடெல்லாம் நாடாகிப்போ மென்பதில், நாடெல்லாங் காடாகுமென்பதுஉ முணர்க. பி-ம்:—[1]பிறிந்து. [2]உறையும். [3]உறையச். [4]சிலநாளில், இந்நாளில். (சoஅ)

ககஉ. என்னோ [1]நிருப னியற்கை யிருந்தவா
தன்னோ [2]ரிலாத [3]தலைமகற்குத் தாரணியை
முன்னோ கொடுத்து முறைதிறம்பத் [4]தம்பிக்குப்
பின்னோ கொடுத்தாற் பிழையாதோ மெய்யென்பார்.

(இ - ள்.) 'நிருபன் இயற்கை இருந்தஆ(று)என்ன-தசரதமன்னவனது இயல்பு இருந்தவிதம் என்ன வியப்பாயிராநின்றது! தன் நேர் இலாத தலைமகற்கு-தனக்குஒப்பு(தன்னையேயன்றி வேறு) இல்லாத முதற்புத்திரனுக்கு,

தாணியை-பூமியை, முன்னே கொடுத்து-முன்னே ஈந்து, முறை திறம்ப - நீதிதவற, தம்பிக்கு - அவன்பின்னோனுக்கு, பின்னே கொடுத்தால்—, மெய் பிழையாது ஓ - சத்தியந் தவறுதோ?' என்பார்—; (எ - று.)

'ஒருவனுக்குக் கொடுத்த பொருளை வேறொருத்தனுக்குக் கொடுத்தல் முறையாகாது'என்று தருமசாஸ்திரம் எற்பட்டிருக்க, மன்னவன் இராமனுக் குக் கொடுத்த இராச்சியத்தைக் கைகேசிக்கு எவ்வாறு கொடுக்கலாம்? இந்தக் கொடையில் மூத்தவனுக்கு உரியதை இளையானுக்குக் கொடுத்தலும் முன்னே ஒருத்தற்குக் 'கொடுத்ததை மீட்டும் மற்றொருவர்க்குக் கொடுத்தலும் ஆகிய இரண்டுகுற்றங்கள் அடங்கியிருக்கின்றனவே: ஒருகால் அரசர்க்கென்று வேறே தருமசாஸ்திரம் உண்டுபோலு மென்று கூறியதாகக் கருத்து விரித் துரைத்துக்கொள்க. தனக்குமேல் அதிகாரி எவரும் இல்லாதவனென்பார், 'கிருபன்' என்றும், ''ஜ்யேஷ்டபுத்திரனுக்குக் குற்றமுண்டாயிருந்தால் கனிஷ்டனுலகையாள்க'' என்று நீதிநூல்வழக்கு உண்மையால் எவ்வாற் றும் குறைவற்ற மூத்தகுமார னென்பதற்கு 'தன்னேரிலாத தலைமகற்கு' என்றுங் கூறினர். தாரணி-தரணியென்பதன் விகாரம். முன்னே கொடுத்து என்றது ''புனையுமாமுடி புனைந்திருந்தல்லறம்புரக்க. தினைபல்வேண்டும் யானின்வயிற்பெறுவதீதென்றான்'' என்றதனை நோக்கி. தினைத்தலும் சொல் லலும் செய்தலோடொக்கு மாதலால், கொடுக்க தினைத்ததனையும் சொன்ன தனையும் 'கொடுத்து' என்றார். இராமனுக்கு இராச்சியம் கொடுத்தால் வாய்மைபிழைக்குமென்ற கைகேசிக்கு மாறுகப் பரதனுக்குக் கொடுத்தால் வாய்மை பிழையாதோ வென்றார் சுகாத்தவ ரென்க. பி-ம்:—[1]கிருபர். [2]ஒன் றிலாத். [3]தன்மகற்கு; தனிமகற்கு. [4]தம்பியற்கு. (சாக)

ககஙூ. கோதை வரிவிற் குமரற் கொடுத்தநில
மாதை யொருவர் [1]புணர்வராம் வஞ்சித்த
பேதை [2]சிறுவனைப் பின்பார்த்து [3]நிற்குமே
சீதை பிரியினுந் [4]தீராத் திருவென்பார்.

(இ-ள்.) 'கோதை வரி வில் குமரன் கொடுத்த-வெற்றிமாலையைச்சூட்ட கட்டமைந்த கோதண்டத்தைத்தாங்கிய ஸ்ரீராமனுக்குக் கொடுத்த, நிலம் மாதை - பூமிப்பிராட்டியை, ஒருவர் புணர்வர்தும்-வேறொருவர் சேர்வரா; சீதை பிரியின்னும் - சீதாபிராட்டி பிரிந்தாலும் கொடுகென்றலும், தீரா-தொ ணும் அவ்வுரைவிட்டுப் பிரிந்து செல்லாமல், திரு - இலக்குமி,—வஞ்சித்த பேதை சிறுவனை-வஞ்சனைசெய்த கைகேயியினது பத்திரமகிய பரதனை, பின் பார்த்து நிற்குமே - அங்கீகரித்து நிற்பாளோ? [நிற்கமாட்டாள்,] என்பார்—.

சீதை பிரிந்ததனால், திரு இவ்வுரில் தங்கா வென்றன ரென்க. கோதைக் குமரனென இயையும்; கோதைவில்லென இயைத்து. காணியையுடைய வில்லெனப்பொருள் கொள்ளவுமாம். புணர்வராம் என்பது, தகுதியின்மை

யைப் புலப்படுத்தும். குமரற்கென்னும் நான்கனுருபு, தொகுத்தல். இழித் தற்கண் ஒருவர்புணர்வரெனப்பன்மையாற்கூறியது. பின்பார்த்தல் - இலக் கணையால் அங்கீகரித்தற்கு வந்தது. தீரா-விகாரம். பி - மீ.—[1]புணர்வாராம், புணர்வரா. [2]சிறுவனேயே. [3]நிற்குமா, நிற்குமோ. [4]தான் றீராடிருவென்பார், தீராதோ திருவென்பார், தீராடிருவென்பார். (சுகo)

ககசு. உந்தாது நெய்[1]வார்த் [2]துதவாது காலெறிய
நந்தா விளக்கி னடுங்குகின்ற நங்கைமார்
செந்தா மரைத்[3]தடங்கட் செவ்வி யருணோக்க
மந்தோ பிரிதுமோ வாவிதியே யோவென்பார்.

(இ - ள்.) 'உந்தாது - தூண்டப்படாமல், நெய் வார்த்து உதவாது - நெய்வார்த்துத் துணைசெய்யப்படாமல், கால் எறிய - காற்று வீசுதலினால், நந்தா விளக்கின் - கெடாதவிளக்குப்போல, நடுங்குகின்ற நங்கைமார்-உடம்பு நடுங்குகின்ற மாதர்கள், செம் தாமரை தட கண்-(ஸ்ரீராமனது) செந்தாமரை மலர்போன்ற பெரியகண்களினது, செவ்வி-அழகினையுடைய, அருள் நோக் கம் - கிருபையோடுகூடிய பார்வையை, பிரிதும்ஓ - (நாம்) பிரிந்துஉயிர்வாழ் வோமோ? விதியே - தெய்வமே! அந்தோ ஆ ஓ—!!' என்பார்—; (எ - று.)

இங்கு நடுக்கம், பிரிவுப்பொருளாகப் பிறந்த அச்சத்தாற் றோன்றியது. மகளிர் நடுங்குவதற்கு, காற்றில் விளக்கு நடுங்குவதை உவமைகூறினர். இது - நகரத்தாருள் நங்கைமார்துயரத்தைக் குறிப்பது; ஆண்மக்களினும் மனம் மெல்லியராய் வருந்தும்இயல்பு பெண்மக்கட்கு மிகுதியாமென்ற கருத் தினால், தனியேஎடுத்துக்கூறினர்போலும். உந்துதல்-காற்று மீதுபடவொட் டாமல் மறைவையுண்டாக்குதலெனினும் அமையும். பி-மீ:—[1]வந்து. [2]உறை யாது. [3]பெருங். (சுகக)

வேறு.

ககரு.—கைகேயி ஸ்ரீராமனுக்கு முடிசூட்டுதலைத்தவிர்த்துக் காட்டிற்குச் செல்லச்செய்ததைக் கேள்வியுற்ற இலக்குவன் சினங்கொள்ளல்.

கேட்டா னிளையோன் கிளர்ஞாலம் வரத்தி னுலே
மீட்டா ளனித்தாள் வனந்[1]தம்மூ னெவ்வை [2]முற்றத்
தீட்டாத வேற்கட் சிறுதாயென யாவ ராலு
மூட்டாத காலக் கடைத்தீ யெனமூண் டெழுந்தான்.

(இ-ள்.) (இங்ஙனம்நிகழாநிற்க), இளையோன்-இளையபெருமாள் [லக்ஷ் மணன்],-தீட்டாத வேல் கண் - (ஒருப்பிற்காய்ச்சிக்) கூராக்காத [இயற்கை யிற் கூர்மையுடைய] வேலாயுதம் போன்ற கண்களையுடைய, சிறு தாய்-கை கேயி,வெம்மை முற்ற-(மனத்திற்)கொடுமை மிக,கிளர் ஞாலம்-விளங்குகின்ற பூமியை, வரத்தினால் ஏ மீட்டாள் - (அரசன்கொடுத்த) வரத்தினாலே (தான்)

திருப்பிக்கொண்டான்; தம்முனை - தமையனுக்கு, வனம் அளித்தான் - காட்டைக்கொடுத்தான்,' என கேட்டான்-என்றுகேள்விப்பட்டு,—பாவரால் உம் மூட்டாத-எவராலும் பற்றப்பண்ணாத, கடைகாலம் தீ என-பிரளயகாலத்து அக்கினிபோல, மூண்டு எழுந்தான் - கோபம்பெருகி யெழுப்பினன்; (எ-று.)

இராமன் முடிசூடித் தன்னைப்புணர்வானென்று பூமிதேவி களித்திருந் தமை தோன்ற 'கிளர்ஞாலம்' என்றார். வரத்தினுலே என்பதனை அளித்தா னென்பதனோடுங் கூட்டுக. ஊழித்தீயினும் இவன்கோபத்திற்கு வேற்றுமை தோன்ற,'மூட்டாத காலக்கடைத்தீ' என்றார். தம்முன்-அண்ணன். பி-மீ:— [1]தம்முனின். [2]மூற்றி. (சகஉ)

கசசு.—இதுவும் அது.

கண்ணிற் கடைத்தீ யுக[1]நெற்றியிற் கற்றை காற
விண்ணிற் [2]சுடருங் கெட மெய்யினி னீர் [3]விரிப்ப
வுண்ணிற்கு முயிர்ப்பெனு மூதை [4]பிறக்க நின்ற
வண்ணற் பெரியோன் றனதாதியின் [5]மூர்த்தி யொத்தான்.

(இ - ள்.) கடைக்கண்ணின் தீ உக - கண்களினுனியினின்றும் கெருப்பு வழியவும், நெற்றியில் கற்றை காற - நுதலில் (புருவத்தின்) மயிர்த்தொகுதி தோன்றவும், விண்ணின் சுடர்உம் கெட - ஆகாயத்தில்விளங்கும் இரஞ்சூரி யனும் (இவ்வுக்கிரத்துக்குமுன்னே) கிலகெடவும், மெய்யினின் நீர் விரிப்ப-உடம்பினின்றும் வியர்வைநீர் பரவவும், உள் நிற்கும் - உள்ளேயிருக்கின்ற, உயிர்ப்பு எனும் ஊதை - மூச்சென்னுங் கடுங்காற்று, பிறக்க - வெளியில் தோன்றவும், நின்ற அண்ணல் பெரியோன்-(வெகுண்டு) நின்ற பிக்கபெருந் தன்மையையுடைய இலக்குமணன்,தனது ஆதியின் மூர்த்தி ஒத்தான்-தனது முதல்ஸ்வரூபமாகிய ஆதிசேஷனை யொத்திருந்தான்; (எ - று.)

இலக்குமணன் ஆயிரத்தலையரவாக சிறுமாபோற் சிறிய னென்க. இலக் குமணன் ஆதிசேஷனது நிருவவதாரமாதலால்"வளைவயாதிகியும்"என்னும் பாலகாண்டக் கவியா லுணர்க. திருவனந்தாழ்வான் திருமாலினிடத்துத் தான் கொண்டுள்ள பொங்கும்பரிவினால் எப்போதுந் தினைத்தோன்ற விருப்ப னென்பதை "ஆங்காவாரமது கேட்டழலுமிழும், பூங்காடாவு", "காய்ச் சிருளோமாற்றிக் கதிரிலகுமாமணிக, ளெய்த்த பணக்கதிர்மேல் வைத்துயிர்ப்ப" என்ற முதலாழ்வார் வாக்குக்கொண்டும் உணர்க. கன் றீப்போற் புறப்படு தலுபோலத் தோன்றுவதும், புருவம் நெரித்து நெற்றியிலுவதும், உடம் பில் வேர்வை மிகுதியாகத்தோன்றுவதும், உண்ணின்று உயிர்ப்புத்தோன்று தும் - வெகுளியின் மெய்ப்பாடுகள். நெற்றியிற் கற்றைகாற என்பதற்கு - நெற்றியிற் கோபாக்கினியின் ஒளிவீசவும் எனக் கூறினருமுளர். பி-மீ:— நெற்றியின் வேர்வைகால, நெற்றியிற்கற்றைகால, நெற்று விரிக்கதென்ன. சுடர்தோன்ற மெய்க்நீர், சுடர்தோன்ற மெய்க்நனீர். [3]விரிக்க. [4]பிறக்க. [5]மூர்த்தம். (சகஎ)

ககள.—சினங்கொண்ட இலக்குமணன் கைகேயியின் செயலை இகழ்ந்து கூறுதல்.

சிங்கக் குருளைக் கிடு[1]தீஞ்சுவை யூனை நாயின்
வெங்கட் [2]சிறுகுட்டனை யூட்ட [3]விரும்பி னளா
னங்கைக் கறிவின்றிற நன்றிது நன்றி தென்னுக்
கங்கைக் கிறைவன் *கமலக்கை புடைத்து நகுகான.

(இ - ள்.) 'சிங்கம் குருளைக்கு இடு - சிங்கக்குட்டிக்குவைத்தற்கு உரிய, தீம் சுவை ஊனை - இனிய உருசியையுடைய மாமிசத்தை, வெம் கண் சிறு நாயின் குட்டனை - கொடியகண்களையும் இழிவையுமுடைய நாய்க்குட்டியை, ஊட்ட - உண்பிக்க, விரும்பினள் - (கைகேயி) இச்சித்தாள்; நங்கைக்கு - இந்தக்கைகேயியினுடைய, அறிவின் திறம் இது இது - இந்த இந்தப் புத்திவலிமை, நன்று நன்று - மிகநன்றாயுள்ளது நன்றாயுள்ளது,' என்னு - என்றுசொல்லி, கங்கைக்கு இறைவன் - இலக்குமணன், கமலம் கை புடைத்து - தாமரைமலர்போன்ற (தன்) கைகளைக் கொட்டி, நக்கான் - சிரித்தான்; (எ - று.)

சிங்கக்குட்டிக்கு இடுதற்கு உரிய ஊனை நாய்க்குட்டிக்கு இடுவது முறைமையாகாமையோடு எல்லோர்க்கும் இகழ்ச்சியைவருவதுபோல இராமபிரான் ஆள்வதற்கு உரிய இராச்சியத்தைப் பரதனுக்குத் தருதல் முறைமையாகாமையோடு யாவர்க்கும் இகழ்ச்சியைவருமென்பது, உவமைமுகத்தாற் பெறப்படும். இங்ஙனம் பொருத்தமற்றகாரியத்தைக் கைகேயி செய்தமை குறித்து இகழ்ச்சிபற்றி இலக்குமணன் கைகொட்டிச் சிரித்தனனென்க. இச் செய்யுளில் முதலிரண்டடிகளிற்கூறிய உவமை, உவமேயத்தைக் காட்டிற்று: இது - **பிறிதுமொழிதலணி:** உபமானத்தினால் உபமேயத்தைப் பெறவைப்பது, இதன் இலக்கணம். இலக்குமணன் வசிக்கும் நாடாகிய கோசலதேசத்தினது எல்லை கங்காநதிவரையிலுமாதலால், அவனை 'கங்கைக்கிறைவன்' என்றார். சரயூநதிக்கு இராமகங்கையென்று ஒருபெயருள்ளதை லேனும், **கங்கையைஎல்லாநதிக்கும் பொதுவாகவழங்கியும் ஒருசார்வழக்குப்பற்றியேனும்** சரயூநதிபாயப்பெற்ற கோசலநாட்டையுடையவனென்ற பொருளில் 'கங்கைக்கிறைவன்' என்றாருமாம். இனி, கங்கையைப் பூமிக்குக்கொணர்ந்த பகீரதசக்கரவர்த்தியினது வமிசத்திற் பிறந்தவனென்பதுபற்றி இவ்வாறு கூறினரெனினுமாம். இலக்குமணன் செயற்கு அரிய செய்யுந்திறமுடையனென்பதை விளக்க, தேவலோகத்தினின்று ஆகாயகங்கையைப் பூமிக்குக்கொணர்ந்த பகீரதசக்கரவர்த்தியின் பெயரால் அவ்விலக்குமணனைக் கவி குறித்தாரென்றலும் பொருந்தும். ஊனுண்ணும் விலங்குகட்கு அது சுவைக்குமாதலால், 'தீஞ்சுவையூன்'என்றார். தீஞ்சுவையூன் என்றது - உபமேயத்தில் இராச்சியபாரத்தை. ஆல் - தேற்றம்.

"நாயேபன்றி" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் 'ஆயுங்காலை' என்றதனால், 'சிங்கக்குருளை' என்றார். குட்டன்-குட்டியென்ற பொருளில்வரு

தலை, "தன்சிறுக்குட்டன்களைக், குடங்கைக்கொண்டு மந்திகள் கண்வளர்த் துங்கோவர்த்தனம்" என்ற பெரியாழ்வார்பாசுரத்திலுங் காண்க. [2]சிறுகுட்டியை என்றபாடத்துக்கு, "குட்டியும் பறழுங் கூற்றவண் வயிரார்" என்றதனால் 'ஈயின்குட்டி' என்றது. சிங்கம்-ஹிம்ஸ என்பதன் எழுத்து கீலமாறி வந்த ஹிம்ஹரஎன்ற வடசொல்லின் திரிபு. [2]கடுங்குட்டியை என்றபாடத்துக்கு, கடுமான் என்பதிற்போல விரைவுக்குறிப்புணர்த்தும் 'கடி' என்னும் உரிச்சொல் 'கடு' எனத்திரிந்து வந்ததெனக் கொள்க. சென்றிது சென்றிது - அடுக்கு, எள்ளல்பற்றிவந்தது. பி-ம்:—[1]தின். [2]சிறுகுட்டனுக்கு. [3]விரும்பி னளோ, விரும்பினளே. [4]கடகக்கை. (சஉச)

ககஅ.—இதுமுதல் மூன்றுகவிகள் - இலக்குமணன் போர்க்கோலம் பூண்டு நிற்றலைத் தெரிவிக்கும்.

சுற்றூர் [1]மணியின் வடிவாள் புடைதோன்ற வார்த்து
விற்றூங்கி வாளிப் பெரும்புட்டில் புறத்து வீக்கிப்
பற்றூர்க்த செம்பொற் கவசப்[2]பனி மேரு வாங்கொர்
புற்று மெண[3]வாங்கிய தோளொடு மார்பு போர்க்க.

இதுமுதல் நான்குகவிகள் - குளகம்.

(இ - ன்.) சுற்று ஆர் மணியின் வடி வான் - சுற்றுபக்கங்களிலும் இரத்தமணிகளையுடைய கூர்செய்த கைவாளை, புடை தோன்ற ஆர்த்து - பக்கத்தில் விளங்கும்படி கட்டி, வில் தாங்கி-வில்லேந்தி, பனி மேரு ஆங்கு ஓர் புற்று ஆம் என - குளிர்ந்தமேருமலையின்கணுள்ள ஒருபாம்புப்புற்றைப்போல, வாளி பெரு புட்டில் புறத்து வீக்கி - அம்பறாத்தூணியைப் பின்பக்கத்திற் கட்டி, பற்று ஆர்ந்த செம் பொன் கவசம்-பொருந்தின செம்பொற்கவசம், ஓங்கிய தோளொடு-உயர்ந்தபுயங்களுடன், மார்பு போர்க்க - மார்பைமறைக்க வும்,—(எ - று.)

மணி-கைப்பிடியுமாம். அம்புகளின் கொடுமைபற்றிப் பாம்புப்புற்றுணைப் பட்டது. மேரு தோளுக்கும், புற்று புட்டிலுக்கும் உவமை. இனி, மகாமேரு மலை ஒரு புற்றுமேடுபோற் சிறிதாகத்தோன்றும்படி யோங்கிய தோள் என்று மாம். பி ம்:—[1]மணியார். [2]படர். [3]வீக்கிய. (சகஐ)

ககக. அடியிற்சுடர் பொற்கழ லார்கலி நாண வார்ப்பப்
[1]பொடியிற் றடவுஞ்சிறு நாண்பெரும் பூச [2]லோசை
[3]யிடியிற் [4]றொடரக் கடலேழு [5]மடித்திந் நூல
[6]முடிவிற் [7]குமிறுப் மழைமும்மைடின் மென்மு முழங்க.

(இ-ள்.) அடியில் சுடர் பொன் கழல்-கால்களிற் (கட்டி) விளக்குகின்ற பொன்னாலாகிய கழல், ஆர்கலி நாண ஆர்ப்ப-சமுத்திரமும் வெட்கும்படி சப்திக்கவும், பொடியில் தடவும்-பூமியிற் படுகின்ற, சிறு நாண்-சிறியநாணினது, பெரு பூசல் ஓசை-மிக்க போர்க்குரிய ஒலியானது, இ நூலம் முடிவில் - இவ்வுலகம் முடியுங்காலத்தில், கடல் ஏழும் மடித்து-எழுசமுத்திரங்களையும்

டட்சொன்றி, இடியின் தொடர-இடிகளோடு பொருந்த, குமிறும் - ஒலிக்கின்ற, மழையின்மேல்-மேகங்களிலும்,மும்மை முழங்க மூன்று பக்கு(அதிகமாக) ஒலிக்கவும்,—(எ - து.)

வினையாக் கடப்பதறல் வீரக்கழல்தவிப்ப, காணைத்தெறிப்பதறற் பே
ரோலி யுண்டாகின்ற தென்க. வீரக்கழல் கடல்போலொலிக்க, வில்காணியி
னெலி இடியிறும் மும்மடியொலித்தது. பொடி-தூசுபெயர். பொடியிற்றடவு
கண்-பொடியோடுதடவும் காணுமாம். இனி, காலுறைசெ கடலேழுந் தொடர
மழித்து, இந்நூலழிவிற் குமிறும் மழையினின்மேல் மும்மை முழங்க
வென்றுமாம். பி-ம்:—[1]பிழையிற்றடவும், பொடிவிற்றிடவும், பொடியுற்றிட
வும். [1]தூசை. [2]கடிதில். [1]தொடராச். [3]எடுத்தநூலம். நிமிர்த்தநூலம். [6]முடி
வில். [7]குமுறும்.
(சகசு)

கூஉ. வாளுங் கினையும் முதல்[1]வீறில் வரம்பில் [2]பூத
மேனின்ற நிற்காறும் [3]னிசிந்தனை வீற்ற போலுத்
தானுந் தனதம்முறு மல்லது முப்பாட நூலுத்
தானும் முயிருந் முடையாக்க [4]ஈனடந்திதா தங்க.

(இ-ள்) விசிந்தனை - பரந்தன்னையாய, வான்உம் நிலன்உம் முதல் - ஆகியமுப் பூவியும்முடையன. ஈறு இல் முடிவில்லாத, வரம்பு இல் பூதம் - அளவற்ற ஐம்பூதங்களும், மேல்நின்ற நிற்காறும் - மேலே யிருந்து கீழ் வரையிலும், நிற்கிறோல-விழுவாரோல : சினைந்து), —தான்உம் தன தம் மூன்உம் அல்லது - தானும் தன்னுடைய தலைமகளுகிய ஸ்ரீராமனுக்கலா, முப்பாட நூலத்து - மூன்றாகிய நூல்களிலுமுள்ள, வான்உம் உயிர்உம் உடை யாக்கை-சுமந்தும் நூன்றாவுமுடையவாக்கை, உடைத்து ஒதுக்க - அழிந்து விடுமென்று,—(எ - து.)

நிற்கூறியவகை மீசக்கழலினின்றும் வில்காணியினின்றும் அப்போது தோன்றிய பேரொலியால், ஐம்பெரும்பூதங்களும் தலைகீழாய்மாறிவீழ்கின்ற வென்னை என்றகருதி எல்லாப்பிராணிகளுஞ் சுழன்று ஒடுங்கினவென்க. உலகமாகின்ற சிறப்பைப்பற்றி உபசரித்தலையாற் கூறினமேனும், அஃறிணை யான பிராணிகளிடம் சென்க. ஐம்பெரும் பூதங்களுன் முதலதாகிய நிலத் தையும் சுற்றுகிய வானையுங் கூறினர். அவற்றுள் உற்பத்திக்கிரமம்பற்றி வானுதலில் வைக்கப்பட்டது. நிற்காறுவோ [நூற்றெழுத்துப்போல] நீர் நிலம்வரை. 'மேல் பூதம்' என்றும். 'மூன்றாவுமுடையவாக்கள்' என்றது மூன்று வகை சரீரத்தினையும் கொள்க. பி-ம்:—[1]ஒன்றி. [2]எழும். ஒன்றன். [3]நிசிந்தன. நிசிந்தன. [4]ஊனடந்து.
(சகஎ)

உக.—நிருவரும் அஞ்ச கலியும் - எவர்வந்தாலும் வென்று
னைகேயியின் சுந்தை நிறைவேற்ற வொட்டேனென்று
நிலத்துடையும் வீரவாதங் கூறியதைத் தெரிவித்தலும்.

புனிப்பாலை யரக்கெடப் [1]பொரிவெங் தீகாலை யெல்லா
மனிப்பாறு [2]நிசிந்தி யனிக்தாக்கைகளை யண்ட முற்றக்
குனிப்பாறு [3]நிசிந்தி யெனை [4]கோனிசினக் கொற்ற வெளலி
கனிப்பாறு நிசிந்தி னிதுகாக்குரர் [5]காடி னென்றான்.

(இ - ள்.) 'போரில் வந்தோரை எல்லாம் - (நான் இராமபிரானுக்கு முடிசூட்டுதலைநிகழ்த்துவிக்கையில் அதனைத்தடுக்குமாறு என்னோடு பொரும் பொருட்டு) முனைமுகத்தில் வந்தவரெல்லாரையும், புவிப்பாரை பரம் கெட-பூமிதேவிக்குப் பாரம் நீங்கும்படி, இன்றன அவிப்பான்உம் - இன்றைக்கே அழிப்பவனும், அவித்து - அங்ஙனம் அழித்து, ஆக்கையை - அவருடலை, அண்டம் முற்ற - உலகம் நிறைய, குவிப்பான்உம் - குவியல்செய்பவனும், என கோவினை - எனது தலைவனாகிய ஸ்ரீராமனை, கொற்றம் மௌலி-வெற்றியையுடைய திருமுடியை, இன்றன - இன்றைத்தினமே, கவிப்பான்உம் - சூட்டுபவனுமாக (உறுதிகொண்டு), நின்றேன்—; இது காக்குநர் - இதனைத் தடுக்கும் வலியுடையவர், காமின் - தடுக்கள்,' என்றான் - என்றுகூறினான், (இலக்குமணன்); (எ - று.)

இராமனுக்கு முடிசூட்டுதற்கு விரோதஞ்செய்யுமாறு எவ்வகையாலும் அவரையெல்லாம் போரிற்கொன்று அவர்களின் உடம்புகளையெல்லாம் பெருங்குவியலாகக்குவித்துப் பிறகு வெற்றியினால்கிடைத்த மகுடத்தை என் தலைவனாகிய ஸ்ரீராமனுக்குச் சூட்டுவேன்: என் செயலைத்தடுக்க எவ்வகையாலும் வருக எனப் போர்க்கு அறைகூவுகின்றனன் இலக்குமன எனக்க. கருமமூர்த்தியாகிய இராமபிரானுக்கு முடிசூட்டலைத்தடுமாற்றஞ் செய்பவர் பூமிக்குப்பாரமேயாவ ரென்பதுதோன்ற, 'புவிப்பாரைபரம்கெட' என்றது. காக்குநர் காமின் - முன்னிலையிற்படர்க்கைவந்த இடவழுவமைதி. பி - ம்:— [1]போருவந்தோரை. [2]அவித்தவர். [3]எனக்கொரு, நின்றேன்குணக், இன்றே யென். [4]கோனினை. [5]காக்க.

(சகக)

கஉஉ. விண்ணோட்டவர் [1]மண்ணவர் விஞ்சையர் காகர் மற்று
மெண்ணோட்டவர் யாவரு நிற்கவென் சூளாக
மண்ணோட்டுநர் [2]காட்டுநர் வீட்டுநர் வந்த போதும்
[3]பெண்ணோட்ட மொட்டே [4]னினிப் [5]போருல கத்து ளென்றே.

இதுமுதல் மூன்று கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (மின்னும் இலக்குமணன்),—'விண்ணாட்டவர் - தேவரும், மண்ணவர் - பூமியிலுள்ளாரும், விஞ்சையர்-வித்தியாதரரும், காகர்-பாதாள வுலகத்தவரும், மற்றுஉம் என்ன நாட்டவர் - இன்னும் எண்ணத்தக்க பலவாகிய இடங்களிலுள்ளவர்களுமாகிய, யாவர்உம் -, நிற்க - கிடக்கட்டும்; மண்ணாட்டுநர் - பூமியைப்பாதுகாப்பவரும், காட்டுநர் - காப்பவரும், வீட்டுநர்-அழிப்பவரும் ஆகிய, ஓர் மூவர் - ஒப்பற்ற மும்மூர்த்திகளும், ஆகி-ஒன்றாகி, வந்த போதுஉம் - வந்து எதிர்த்தகாலத்திலும், இன் - இப்போது, பேர் உலகத்துள் - (இந்தப்) பெரிய உலகத்திற்குள், பெண் நாட்டம் - பெண்களின் நோக்கத்திற்கு, ஒட்டேன் - இடம்கொடேன்,' என்று - என்றுகூறி,—(எ - று.)—"திரிகின்றமேலை" என அடுத்த கவியோடு தொடரும்.

'சாதாரணமானே தேவர் மானுடர் விஞ்சையர் நாகர் முதலியோர் கிடக் கட்டும்: படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைப் புரிபவ ரான திரிமூர்த்திகளே வந்து கைகேயியின்கருத்தை முற்றுவிப்பதாக என்னை யெதிர்த்துநின்றாலும், கைகேயியின்கருத்தை நிறைவேறுமாறு விடேன்' என்று இலக்குமணன் சினங்கொண்டு கூறினனென்க. விண்ணோட்டவர்-சுவர்க்க நாட்டில் வசிப்பவர். விஞ்சையர்-பதினெண் தேவகணங்களுட் சேர்ந்தவர். நாகர் - படமும் வாலுமுடையரான ஒரு தேவசாதியார். எண்ணோட்டவர் என்றது - மற்றுங் கூறப்படாத சித்தர் கின்னரர் முதலிய தேவகணங்களை: எட்டெத்திக்கிலுமுள்ள மற்றையோரும் எனினுமாம். நிற்க என்பது - அவர்களைத் தான் ஒருபொருட்டாக மதிக்கவில்லை யென்பதைக் குறிப்பிக்கும்: வியங் கோள் முற்று. மூவர் - தொகைக்குறிப்பு. மண் என்றது - இலக்கணையால், உலகங்களை யுணர்த்திற்று. நாட்டம் - நாடியது: விரும்பியது: பெண் ஆட்டம் என்று பிரித்து உரைப்பினுமாம். பெண்நாட்டம் ஒட்டேன்-பெண்களை கண்ணிற் காண அருமையாம்படி செய்வேனென்பாருமுளர். பி-ம்:—[1]விஞ் சையர் மண்ணவர். [2]காக்குநராயவர், காக்குநர்வீட்டுநர், காக்குநர்நீக்குநர். [3]பெண்ணோட்டவொட்டேன். [4]நனி. [5]பேருலகத்தினென்றூன், பேருலகத்து மன்னே.

(சகக)

கூஉங.—வீரவாதஞ்செய்த இலக்குமணன் நகரின்நடுவே திரிதல்.

[1]காலைக் கதிரோ னடு[2]வுற்றதோர் வெம்மை [3]காட்டி
ஞாலத்தவர் கோமக [4]னங்கர ரத்து நாப்பண்
மாலைச் [5]சிகரத் தனிமந்தர [6]மேரு வூன்றை
வேலைத் திரிகின்றது போற்றிரி கின்ற வேலை.

(இ - ள்.) காலை கதிரோன் - இளஞாயிறு, நடு உற்றது - உச்சியடைந் தாற்போன்ற, ஓர் வெம்மை - ஒரு கடுமையை, காட்டி—, ஞாலத்தவர் கோ மகன் - சக்ரவர்த்தியினது (இளைய) திருமகன் [லக்ஷ்மணன்], அ நகரத்து நாப்பண் - அவ்வயோத்தியின் நடுவில், மாலை சிகரம் தனி மந்தரம் மேரு - ஒழுங்காகிய முடிகளையுடைய ஒப்பற்ற மந்தர பருவதம், ஊன்றை - முற்காலத்தில், வேலை - திருப்பாற்கடலில், திரிகின்றதுபோல் - சுழன்றது போல, திரிகின்ற வேலை - சுழன்றுலாவுங் காலத்தில்,—(எ - று.)—''கேட் டான்'' என அடுத்த கவியோடு முடியும்.

எவராவது போர்க்கு வருபவருண்டா?' என்று வீரவாதத்துடனே ஆர்ப் பாடஞ்செய்துகொண்டு இலக்குமணன் நகர்நடுவே திரிந்தானென்க. மேரு - மலையென்னும் மாத்திரையாய்நின்றது. முன்றை - கடைந்த காலத்தில் என்ற படி. திருமாலுக்கு இந்நகரம் இனிது தங்குமிடமாதலால் இதற்குப் பாற்கட லுவமையாயிற்று; பாலகாண்டத்து ''மாயோன் மார்பினன்மணிகள் வைத்த பொற்பெட்டியோ'' என்றார். பி-ம்:—[1]காலைக்கதிரோன், காலக்கதிரோன். [2]உற்றன; அற்றதோர். [3]கூட்டி; காட்ட. [4]நன்னகரத்து. [5]சிகரத்தனி. [6]ஏல்.

கஉசு.—இலக்குமணனது வில்லின் நாண் [redacted] ராமனது செவியிற் படுதல்.

வேற்றுக் கொடியாள் [1]வினைவித்த வினைக்கு விம்மித்
தேற்றத் தெளியாதயர் சிற்றவை பாலி ருந்தா
[2]றற்றற் றுணைத்தம்பிதன் [3]விற்புய லண்ட கோளங்
[4]கீற்றெறித் துடையப்[5]படு நாணுரு மேறு [6]கேட்டான்.

(இ - ள்.) வேறு கொடியாள்-வேறுகிய கொடுமையையுடைய கைகேயி, வினைவித்த-உண்டாக்கின, வினைக்கு-கொடுந்தொழிலுக்கு, விம்மி - கலங்கி, தேற்ற தெளியாது - தேறப்பண்ணவும் தேறுமல், அயர் - வருந்துகின்ற, சிற்றவைபால்-சிறியதாயாகிய சுமித்திரையாரிடத்தில், இருந்தான் - இருந்த ஸ்ரீராமன்,—ஆற்றல் துணை தம்பி தன் - வல்லமையையுடைய (தனக்குத்) துணையாகிய லக்ஷ்மணனது, வில் புயல் - வில்லாகிய மேகத்தினின்று, அண்டகோளம் கீற்று ஒத்து உடைய - அண்டகோளம் பிளவுபட்டுத் தகரும் படி, படும்-உண்டாகிய, நாண் உரும் ஏறு - வின்னாணின் ஒலியாகிய இடியேற்றை, கேட்டான் - செவியுற்றான்; (எ - று.)

இலக்குமணன் கரிண்டுவே திரித்துகொண்டுசெய்த காலைவியானது சுமித்திரையாரிடத்திருந்த இராமபிரானது செவியிற் பட்டதென்க. வேற்றுக்கொடியாள் என்றது-ஸ்ரீ கௌசலையாருக்குத் தன்னினவாகிலு வேறுதுக் கொடியவளென்றபடி: ஸ்ரீபரதாழ்வான் நினைவுக்குப் பொருத்தமையாகிலு வேறுங் கொடியா ளென்றதாகவுமாம். எந்நாளும் இராமனுடன் கூட விருந்து கைங்கர்யஞ் செய்து வருதலால், 'துணைத்தம்பி' என்றார்; வல்லமையில் தனக் கொப்பாகிய தம்பியென்றுமாம். கீற்றெறித்து - கிழுதலெப் பொருந்தி; பிளவுபட்டு. பி - ம்:—[1]மூடப்பித்த, மூடவித்த. [2]ஆற்றத்தனிக், ஆற்றற்றனிக். [3]விற்றொழில். [4]கிற்றுத்து, கிற்றத்து. [5]பொரு. [6]கேளா.(கூடுக)

கஉரு.—ஸ்ராமன் இலக்குமணனுள்ள இடத்துக்கு வருதல்.

[1]வீழுக்கிய பொற்கலன் [2]விக்கிட வாடு மின்ன
மாழுத் [3]தனிச்சொற் றுளிமாரி [4]வழுங்கி வந்தான்
காழுக்க நிமிர்ந்து [5]புகைந்து கனன்று பொங்கு
மாழுக் கனலாற்றுபொ ரஞ்சன மேக மென்ன.

(இ - ள்.) (கேட்ட அவ்வளவில்,—வீழு ஆக்கிய பொன் கலன் - வேலுண்டாக்கில்லாத அழகையுண்டாக்குகின்ற பொன்னாகிய திருவாபரணங்கள், வில் இட - ஒளி வீசவும், ஆடம் மின்ன - முத்துமாலைகள் பிரகாசிக்கவும், கால் தாக்க - பெருங்காற்று வீசுதலினால், சிமிர்ந்து - வளர்ந்து, புகைந்து - எரிந்து, கனன்று - காய்ந்து, பொங்கும் - விளங்குகின்ற, ஆழ் கனல் - தணியாத [பிரளயகாலத்] தீயை, ஆற்றும் - தணிவிக்கின்ற, ஓர் அஞ்சனமேகம் என்ன - ஒரு மையைபோலுக்கரிய மேகத்தைபோல, மாறு - தவறாத, தனி-ஒப்பற்ற, சொல் - வார்த்தைகளாகிற, மாரி துளி - மழைத்துளிகளை, வழுங்கி வந்தான்-சொல்லிக்கொண்டுவந்தான்; (எ - று.)

இராமபிரான் இலக்குமணனது சினத்தைத் தணிப்பிக்கக்கருதி அவனுடைய இடத்திற்கு இன்சொற்களைச் சொல்லிக்கொண்டு வந்தனனென்க. காலக்கலப்பினையெனக் கீழ்க்கூறியதனால், ஆருக்கனல் என்பதற்கு பிரளயகாலத்தி னெனப்பட்டது: இது தொழிலும் உருவும்பற்றிவந்தது. அஞ்சன மேகமென்றது, கார்காலத்துச் சூல்கொண்ட மேகத்தை. பி-ம்:—[1]வீழ்கிய. [2]வில்லிட்ட. [3]தணி. [4]வழங்க. [5]கனன்றுபுகைத்து. (கூடூ)

கூடூ.—'பொற்கோலம்பூண்டிருக்கக் காரணமென்?' என்று இராமன் இலக்குமனனை வினவுதல்.

மின்னெனத்த [1]சிற்றக் கனல்விட்டு விளங்க நின்ற
பொன்னெனத்த மேனிப் புயலொத்த தடக்கை யாஅன
[2]யென்னத்த வென்னீ [3]யிறையேயனு முனிந்திலாதாய்
[4]சன்னத்த னகித் தனுவேவந்ததற் கேது வென்றான்.

(இ-ள்.) (ஸ்ரீராமன்). மின் ஒத்த-மின்னலைப்போன்ற, சிற்றம் கனல் - கோபாக்கினியை, விட்டு-வெளியே தோற்றுவித்துக்கொண்டு, விளங்கநின்ற-விளக்கமாக நின்ற, பொன் ஒத்த மேனி-பொன்போன்ற திருமேனியையும், புயல் ஒத்த தட கையாஅன-மேகம்போன்ற பெரிய கைகளையுடையவனுமான இளையபெருமாளைநோக்கி, 'என் அத்த - எனது குழந்தாய்! இறை என்னும் முனிந்திலாதாய்-ஒரு கொடிப்பொழுதும் சினங்கொள்ளாதவனை, ஈ—, சன்னத்தன்ஆகி - போருக்கு ஆயத்தமானவனைப், தனு எந்துதற்கு - விற்பிடித்தற்கு; எது-காரணம், என்-யாது?', என்றான்-என்றுவிணவினான்; (எ - று.)

என்குறிப்பை யுணர்ந்து அதன்படியே நடப்பதன்றி நீ தனியாகச் சிறிது சினங்கொள்வதும் எப்போதுங் கண்டதில்லையே; அங்ஙனமுள்ள நீ, இப்போது பெருஞ்சினங்கொண்டு யுத்தசன்னத்தனாகிநிற்கக் காரணம் என்? என்று இராமன் இலக்குமனனை வினவினனென்க. சன்னத்தன் = ஸந்நத்தன்: போர்க்கவசம் பூண்டவன். மின்னெனத்த சிற்றக் கனலென்றதனால், வெகுளி தானுள்ளவளவு கணமே யெனக்கொள்க. இளைய பெருமாளை மேல் ஆணைய காண்டத்திலும் "சுவணவண்ணன்" என்பராதலால், பொன்உவமை நிறத்திற்கு. அப்புமாரியுதவுதலாகிய தொழில் பற்றி 'புயலொத்த தடக்கை' என்றார். [5]இமையோரை முனிந்திலாதாய் என்ற பாடத்துக்கு-தேவர்களின் வேண்டுகோளுக்குத் தாம் இரங்கி யவதரித்தமையைக்குறிப்பித்தற்கு இவ்வாறு கூறியதென்பர்: அன்றி இமை ஓரை-இமைப்பொழுது எனினுமாம். பி-ம்:—[1]சிற்றத்தனல். [2]என்னத்தனெண்ணி, என்னத்தனை ஈ. [3]சின்னத்தனுவேந்துதற்கேது வென்செப்புகென்றான். (கூடூ)

கூடஎ.—இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்: இலக்குமணன் இறுத்த விடை.

[1]மேம்பையச் சிதைவித்துன் [2]மேன்முறை [3]நீத்த [4]நெஞ்சமையிற் [5]கரியாளெதிர் நின்சீ[6]யம் பெளவி சூட்டல்
செய்யக் [7]கருதித் தடைசெய்குநர் தேவ[8]ரேனுந்
துய்யைச் சுடுவெங் கனலிற் சுடுவான் றுணிந்தேன்.

(இ - ள்.) (அதற்கு இலக்குமணன்), மெய்யை சிதைவித்து - சத்தியத்தைக் கெடச்செய்து, நின் மேல் முறை - உனக்குச் சிறப்பாகவுள்ள அரசு முறைமையை, தித்த - கிக்கின, நெஞ்சம் மையில் கரியான் எதிர்-மனம் மையினுங் கரியனாகிய கைகேயியின் முன்னே, நின்னை - உன்னை, அமைவி சூட்டல் - அந்தக்கிரீடத்தைச் சூட்டுதலை, செய்ய-செய்தற்கு, கருதி - (நான்) நினைந்து, தடை செய்குவர் - (அதற்குத்) தடைசெய்பவர், தேவர் எனும் - தேவர்களே யாயினும், (அவரை), துய்யை சுடு வெம் கனலின் - பஞ்சையெரிக்கின்ற கொடிய தீப்போல, சுடுவான் - அழித்தற்கு, துணிந்தேன்-நிச்சயித்தேன்; (எ - று.)

இராமனுக்கு முடிசூட்டுகிறே னென்றசொன்ன சக்ரவர்த்தியை அது செய்யாது தடுத்தலால், மெய்யைச் சிதைவித்ததாயிற்று. தித்த-நன்மையினை பிறவினைப்பொருளில் வந்தது. மனத்தில் வெகுளியையுடையவனென்பான் 'நெஞ்சம் மையிற்கரியான்' என்றான். துய் - பஞ்சிற் றொடர்ந்தனி. கருதித் துணிந்தே னென முடிக்க. பி-பி:—[1]மெய்ம்மை. [2]மெய்ம்முறை, மெய்ம்முறை. [3]தித்து. [4]நெஞ்சின். [5]கொடிய. [6]சுடுமெனலி, சுடுமவுவி, மவுலி. [7]கருத்தித்தடை. [8]எயும். (சுஉச)

கஉஅ. வலக்கார் முகமென்னைய தாகவவ் வாறு னேரும்
[1]விலக்கா ரவர்வந்து விலக்கினு மென்னை [2]வானிக்
கிலக்கா மெனினித் துலகேழினை டோழு மன்னர்
குலக்கா வலுமின் றுணைக்கியான் ரரக்கேகு மென்றான்.

(இ - ள்.) வலம் கார்முகம்-வலிமையுடைய வில்லானது, என் கையது ஆக-எனது கையிலுள்ளதாயிருக்க, அவ்வாறு னேர் உம்-அத்தன்மையரும், விலக்கார் - (துணிந்து) தவிர்த்தல் செய்யார்; அவர் வந்து விலக்கினும் - அவர் (துணிந்து) வந்து தடுத்தாலும், என் வரவானிக்கு - எனது கையிலுள்ள பாணத்துக்கு, இலக்க ஆ (க)—லட்சியமாகுமட்டு, எரிவித்து-எரிடச்செய்து, உலகு எழினெடு எழ்உம் - பதினெண்குலமாகக்கலைஞரும், மன்னர் குலக் காவல் உம் - அரசர்கூட்டத்தைக் காத்தற் றொழிலையும், இன்று - இப்பொழுது, உனக்கு—, யான் தரு-தான் கொடுக்க, கொடு-பெற்றுக்கொள்க, என்றான்—.

இச்செய்யுளின் முன்னடகன் - இச்சிச்செய்யுளின் அந்தாதி: இவ்வந்தாதம் உலகெழினெடுமும் மன்னர்குலக்காவலும் யான் தரக்கொடுவென்று விதித்தலின் பொருட்டு வந்த தென்க. இலக்க - லக்ஷ்யம் என்பதன்திரிபு. உனக்கியான் - குற்றியலுகரம். பி-பி:—[1]விலக்காட. [2]வானிலக்கா. (சுஉஅ)

கஉக.—அதுகேட்ட இராமன் 'முறைக்கேடாக உனக்கு இப்படிச் சீற்றந் தோன்றக் காரணம் என்ன?' என்றல்.

இளையா [1]னிது [2]கூற விராம [3]னினைத்த நீதி
வளையா வருநன் னெறி [4]நின்ன றிகு [5]மன்கி ற
யுளையா வறம் [6]வற்ற டுழ்வழு [7]வுற்ற சீற்றம்
விளையாத நிலத்தி னக் கெங்ஙன் விளைந்த தென்றான்.

(இ - ள்.) இளையான் இது கூற - இலக்குமணன் (தான் வில்லே திய காரணம்) இன்னதென்பதனைச் சொல்ல,— இராமன்—, 'இயைந்த நீதி வழையா வரும் நல் நெறி - (நூல்களிற்) கூறப்பட்டுள்ள நீதிமுறைக்கு ாறு காமல் நடக்கின்ற நல்லமுறையிலேயே, நின் அறிவு - உனதுபுத்தி, ் தும் அன்றே - பொருந்தியிருக்குமல்லவா? ஊழ் வழு உற்ற - நீதிமுறைக்குத் தவ றுகவுள்ள, சீற்றம் - கோபம், விளையாத - (ஒருபோதும்) உண்டாயிராத, நெ த்து-இடமாகிய மனத்தில், உளையா அறம் வற்றிட-அழியாத தருமம் வ ும் படி, உனக்கு—, எங்ஙன்-எப்படி, விளைந்தது - தோன்றிற்று?' என்று ன் என்று வினவினான்; (எ - று.)

இலக்குமணன் சொல்லைக் கேட்டதும், இராமன் 'அப்பா இலட்சு ண! உன்னுடைய அறிவு நீதிமுறைதவறாத நன்னெறியில்தான் செல்லவல்ல து; அப்படியிருக்க, தருமத்திற்குக் கேடு உண்டாகும்படி நீதிமுறைக்கு மா றாக உன்மனத்திலே இப்போது சினம் எவ்வாறு பிறந்தது?' என வினவின னான் பதாம். இது என்றது - இராமபிரானுக்கு மகுடம் புனைதற்கு மாறாகக் கை கேயிஎண்ணிய எண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டுத் தேவர் உதவி யும் அவர்களையுங் கொன்றொழிப்பே னென்றதை. இலக்குமணன்புத்தி நீதித வறி நன்னெறியிலேயே செல்லுமென்பான் 'நீதிவழையாவரு நன்னெறி நின்க ண்ணி வாகும்' என்றான். தருமத்திற்கு அழிவு என்றும் உண்டாகாதென்ற நூற்கொ ள்கை பற்றி 'உளையாவறம்' எனப்பட்டது. உளையா = உலையா: லகரத்துக்கு ளகம் போலியாகவந்தது: போலியாகக்கொள்ளாமல், அறம்உளையா வற் ட்' என்று இயைத்து-தருமதேவதை மனம்வருந்தியொடுங்க என்று உரைப்ப னுமாம். இளையான் என்பதற்கு - தான் கொண்ட கருத்திற்சிறிதுந் தளரா வ ஞெகி என்று உரைப்பாரு முளர். அறிவு + ஆகும் = அறிவாகும்: "முற்ற ற்ற றொரோவழி." பி-ம்:—[1]அது. [2]சொல்ல. [3]இசைந்த. [4]நின்னெறியா ம். [5]இன்றே. [6]அற்றிட, உற்றிட. [7]அற்ற.

(கூ ரு)

கங்o.—இலக்குமணன் யான் இப்போது சினங்கொள்ளாது எப்போது சினங்கொள்வதெனல்.

நீண்டா[1]ன துரைத்தலு நித்திலங் [2]தோன்ற நக்குச் சேண்டான் றொடர்மாநில [3]நின்னதென் றுந்தை செப்பப் பூண்டாய் பகையா [4]ழிழந்தீதவனம் போதி [5]யென்றான் [6]யாண்டோ வடியேற் கினிச்சீற்ற மடுப்ப [7]தென்றான்.

(இ - ள்.) நீண்டான்-ஸ்ரீராமன், அது உரைத்தலும்-அவ்வார்த்தைகளைச் சொன்னவிளவில்,—'இலக்குமணன்), 'நித்திலம் தோன்ற - பற்கள் வெளித் தோன்ற, நக்கு - சிரித்து, 'உந்தை - உன்தந்தை, சேண் தான் தொடர் ாநிலம்-அகலம்பொருந்திய பெரிய பூமி, நின்னது - உன்னுடையது', என்று செப்ப-என்று சொல்ல, பூண்டாய்-(அதனை) அங்கீகரித்தவனாகி,(பின்),பகை யால் இழந்துன - சத்துருவினால் இழந்துபோய், வனம் போதி - காட்டிற்குச்

செல்வாய், என்றூல்—, அடியேற்கு-எனக்கு, இனி—, சிற்றம் அடுப்பது - கோபம்வருவது, யாண்டுஓ-' இத்தலேஊதவிர) வேறு எப்பொழுதோ?' என்றூன்—; (எ - று.)

அடியேனுக்கு இக்காலத்தில் கோபம் வருகிறது அதிசயமா? என்றபடி. நீண்டான் - மிக்கருணைக்கினையுடையவன்: வாமனாவதாரத்தில் மாவலிபக்கல் மூவடிமண்வேண்டி நீண்டமையற்றி, நீண்டா னென்றூதலுமாம். பி - ம்:— 1உரைசெய்தலும், அறுணர்த்தலும், அதுகூறலும். 2தோற்க. 3நின்னதோ ளை, நின்னதின்றூளை. 4இழந்தாய். 5என்ன. 6ஆண்டோ. 7என்றெ.(சஉஎ)

கஙக.—இதுவும் இலக்குமணன்மறுமொழி.

நின்கட் 1பரிவில்லவர் நீள்வனத் துன்னை நீக்கப்
புன்கட் பொறியாக்கை பொறுத்துயிர் 2போற்று கேனை
வென்கட் 3புல 4முன் னுனக்கிந்தவைத் தில்லை யென்ற
வன்கட் புலந்தாங்கிய மன்னவன் 5போல வென்றூன்.

(இ - ள்.) 'என் கண் புலம் முன் - எனது கண்முன்னே, உனக்கு ஈந்து வைத்து - உனக்கு (இராச்சியத்தை வாயாற்) கொடுத்து வைத்து, இல்லை என்ற - பின்னரில்லையென்று சொல்லி (உன்னைக் காட்டுக்கு அனுப்பி மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டு) நின்ற, வன் கண் புலம் தாக்கிய-கொடுந் தன்மையைக்கொண்ட கட்புலனேறுகூற்ற, மன்னவன்போல - அரசன் போல,—நின் கண் பரிவு இல்லவர் - உன்பக்கல் அன்பில்லாத தாய், நீள் வனத்து - நீண்ட காட்டில், உன்னை நீக்க - உன்னை அனுப்ப, (அதனைக் கண்டும்), புன் கண் பொறி யாக்கை பொறுத்து - துன்பத்தைத் தருகின்ற ஐம்பொறிகளையுடைய உடலைத் தாங்கி, உயிர் போற்றுகேனை - பிராணனைக் காப்பாற்றுவேனோ?' என்றூன்-; (எ - று.)

இராமபிரானுக்கு அரசு தருகிறேனென்று தசரதன் கூறியது தனக்குத்தெரியுமென்பதையுணர்த்த, இலக்குமணன் 'என்கட்புலமுன்னுனக்கீந்து வைத்து' என்கிறூன். உயிர்போற்றுகேனை...வன்கட்புலத்தாக்கிய மன்னவன் போல - "பைந்தொடியொருத்தி சொற்கொண்டு பாடகன், கைத்துயிர் நடுங்கவுடலத்திகாணை, வப்தனனிருந்தன னுண்மைகாலன்" என்று பின்னும் இலக்குமணன் கூறுவது காண்க. உண்மையை - நிகழ்வின்மை. பரிவில்லவர் - இழிப்பிறற் பண்மைவந்தது. பி - ம்:—1பரிவிலவர், பரிவில்லவன். 2போற்றுகேனை 3புலன். 4உன்னனக்கு, நின்னனக்கு. 5காண்மிகால். (சஉஅ)

கஙஉ.—இலட்சுமணன்சொல்லுக்கேட்டு இராமன் கூறத்தொடங்குதல்.

என்றென் 1றறிவித் திளையோனி தியம்பி டாமுன்
கன்றென்று மாவிற் பலசோனிபுங் காத்த 2கெடி
வன்றிண் சிலைக்கைகம் மனுவென்னும் வயங்கு சித்திக்
குன்றென்று தோளான் மருமானிவை கூற லுற்றூன்.

(இ - ள்.) இளையோன்-இலட்சுமணன், இது - (தான்) சினங்கொண்ட தன் காரணத்தை, என்று என்றுஅறிவித்து-, இயம்பிடாமுன் - சொல்லுவ தற்கு முன்னம்,—கன்று ஒன்றும் ஆவின் - (தன்) கன்றினிடத்தேஅன்பு பொருந்திய பசுப்போல, (மிக்க அன்புகொண்டு), பல யோனிஉம் காத்த - பலவகைப் பிறவிகளிலும்பிறந்த பிராணிகளையெல்லாம் பாதுகாக்கின்ற, நேமி வல் திண் சிலை கை - ஆழ்ஞாசக்கரத்தையும் மிகவும்வலிமைபெற்ற கோதண்டத்தையும் பூண்ட கையையுடையவனுகிய, மனுஎன்னும் வயங்கு சீர்த்தி குன்று ஒன்றுதோளான் மருமான்-மனுவென்கின்ற விளங்கும்பெரும் புகழைக்கொண்டவனுகி மலையையொத்த தோள்களையுடையவனது சந்ததி யிற்பிறந்த ஸ்ரீராமன், இவை - இவ்வார்த்தையை, கூறல் உற்றான் - சொல் லத்தொடங்கினன்; (எ - று.)—அதனை மேலிரண்டுகவிகளிற் காண்க.

இச்செய்யுள் சில பிரதிகளில் மாத்திரம் காணப்படுவதாயினும், சந்தர்ப் பத்திற்கு ஒத்திருப்பதால்,உரையெழுதப்பட்டது. "சீர்த்தி மிகுபுகழ்"என்பது தொல்காப்பியம். தன் சீற்றம் தக்கதேயென்றுதெரிவித்தற்குப் பலமுறை கூறினனென்பார் 'என்றென்றறிவித்து'என்றார். பி-ம்:—[1]சீற்றத்து.(கூஉக)

கஙஙு.—இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்: சினங்கொள்ளுதல் கூடாதென்பதற்கு இராமன் காரணங்காட்டித்தெளிவிக்கும்.

பின்குற்ற மன்னும் பயக்கும்மர சென்றல் பேணென்
முன் [1]கொற்ற மன்னன் முடி[2]கொள்கெனக் கொள்ள[3]மூண்ட
தென்குற்ற [4]மன்றே [5]விகன்மன்னவன் குற்றம் [6]யாதே
மின்குற் றெளிரும் [7]வெயிற்கொ டமைந்த வேலோய்.

(இ - ள்.) மின் குற்று ஒளிரும் - மின்னலே வென்று விளங்குகின்ற, வெயில் தீ கொடு அமைந்த-சூரியகிரணத்தாலும் அக்கினியிலுஞ் செய்தாற் போன்ற, வேலோய் - வேலாயுதத்தையுடையவனே! கொற்றம் மன்னன் - வெற்றியையுடைய சக்ரவர்த்தியானவன், முன் - முன்னே, முடி கொள்க என-கிரீடத்தைச் சூட்டிக்கொள்வாயாகவென்று சொல்ல, அரசு - இராச்சிய பாரம், பின்-பின்பு, குற்றம் - குற்றத்தை, மன்உம் பயக்கும்-மிகுதியும் உண் டாக்கும், என்றல் - என்பதை, பேணேன் - கருதாதவனுய், கொள்ள - (அத னைப்) பெற்றுக்கொள்வதற்கு, மூண்டது முயன்றதொழில்,என் குற்றம் அன் றே-எனது பிழையன்றே; இகல் மன்னவன் குற்றம் யாது ஓ - வெற்றியை யுடைய சக்ரவர்த்தியின் பிழையதுவோ?[ஒன்றுமில்லையென்றபடி];(எ-று.)

இராச்சியத்தை யாளுமாறு முதலில் ஒப்புக்கொண்டது என்மேற் பிழையாவதால், குற்றஞ் செய்தவரைத் தண்டிப்பதனுல் என்னையே தண் டிக்கவேண்டுமென்றவாறு. உம்மை - இசைநிறை. பி ம்:—[1]சொற்ற. [2]கொள் ளென. [3]மூண்ட. [4]அன்றி, அன்றே. [5]இயல். [6]உண்டோ. [7]வெயிலிற்கொண்டு.

காஉச. நதியின் பிழையன்று நறும்[1]புன லின்மை [2]யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்[3]பு ரந்தாண்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று [4]மைந்த
விதியின் பிழைநீ யிதற்[5]கென்னை [6]வெகுண்ட தென்றான்.

(இ - ள்.) 'நறு புனல் இன்மை-(சில ஆறுகளிற் சிலகாலங்களில்) நல்ல நீர்இல்லாமல்வற்றிப்போவது, நதியின் பிழை அன்று - அந்நதிகளின் குற்ற மன்று; (வானம் மழைபெய்யாத குற்றமேயாகும்); அற்றே-அதுபோலவே, (நான் அரசுபெறுமற் காட்டிற்குப்போவது), பதியின் பிழை அன்று-நக்ஷத் யினது குற்றம் அன்று; பயந்து - பெற்று, நமை புரந்தான் மதியின் பிழை அன்று - (இதுவரையில்) நம்மைப் போற்றிவந்தவளாகிய சிற்றன்னையிலு டைய அறிவினது குற்றமுமன்று; மகன் பிழை அன்று - (அவ்வன்னையின்) புத்திரனாகிய பரதனது குற்றமுமன்று; (பின்னை யாருடைய பிழையினால் இது விளைந்ததென்றால்), மைந்த-இலக்ஷ்மணனே! விதியின் பிழை-ஊழ்வினை யின் குற்றமேயாம்; இதற்கு-இதன்பொருட்டு, நீ--, வெகுண்டது - சினங் கொண்டது, என்னை-என்?' என்றான்-என்று (இராமபிரான்) கூறினான்.

'ஊழ்வினையால் யான் முடிதுறக்கு காட்டிற்குச் செல்லுமாறு கேக்கதே தவிர,தக்ஷதையார் முதலியோரிடத்து யாதுக் குற்றமில்லை;வனமுலவல் லுதல் எவ்வளவு வலியுடையோர்க்கும் கூடாமையால், நீ வெகுண்டு யாது பயன்?' என்றுகூறி, இராமன் இலக்குவனைச் சமாதானப்படுத்தப் பார்த் தனனென்க; உவமையணி. இதனால், அரசன் முதலியோரிடத்துக் குற் றங்கூறலாகாதெனத் தெளிவித்தவாறு. கைகேயியை 'படைத்து நமைப்புரந் தாள்' என்றது-அவள் நமக்குப் பிழைபுரிபோனென்ற கருத்தை விலக்குதற்கு: கருத்துடையடைகோளியணி. பி-ம்:—[1]பெயல். [2]நக்ஷம். [3]புரந்தார், புரந் தான். [4]மைந்தா. [5]என்கொல். [6]வெருண்டது. (சஉக)

கஉரு.—இலக்குமணன் விரித்தும் விதியாலே னெனல்.

உதிக்கும் முலையுள்[1]ளுறு திபெனை யுனதை பொக்கக்
கொதிக்கும் மனமெங்ஙன [2]மாற்றுவென் கோ[3]னி யைதுத்தான்
மதிக்கும் [4]மதிபாய்முதல் [5]வானவர்க் குய்வ மீதிதாம்
விதிக்கும் [6]விதிபாகுமென் விற்றொழில் காண்க வென்றான்.

(இ-ள்.) (அக்ஷனைத் தேற்றிய தற்கு இலக்குவனன்), —உதிக்கும் உலையுள் உறு தீ எனை - பருத்த உலைக்களத்தின்கண் பொருந்திய நெருப்பை, ஊதை பொக்க-பெருமூச்சு (விரைவிற்செய்தற்கு) போக்கினாலென்ன, கொதிக்கும் மனம்-வெம்புகின்ற மனத்தை, எங்ஙனம் ஆற்றுவென் - எப்படி தணி யச்செய்வேன்? கோன் இனைத்தான் மதிக்குமும் மதியும் - (பட்டாபிஷேகத் திற்கு) இடையூறு செய்தவளாகிய கைகேயியின் அறிவுக்கும் அறிவுமூட்டுவ தாய், முதல் வானவர்க்குமும் மேலிதுவும் ஆய்-முதல்மூர்த்திகளாகிய மும்மூர்த் திகளின் வலிமைக்கும் அடங்காது மிக்குவலிமையுடையதாகிய, விதிக்குமும்

விதி ஆகும் என் வில் தொழில்-(எல்லாரையும் வெல்லும்வலிமையையுடைய) ஊழ்வினையையும் வெல்லும் ஒரு ஊழ்வினைபோன்றுள்ள என் வில்லின் செயலை, காண்டி - காண்பாயாக,' என்றான் - என்று மறுமொழி கூறினான்; (எ - று.)

'ஊழ்வினையால் நேர்ந்ததற்கு நீ வெகுள்வது தகாது' என்று இராமன் கூறியது கேட்ட இலக்குமணன், மிகவும் வெப்பமாகப் பெருமூச்சுவிட்டுக் கொண்டு, 'சுவாமி! விதி என்வில்லின் வலிமைக்கு முன்னே என்செய்யமாட்டும்? என் சினமோ தணிவதாயில்லை; கைகேயியின்கருத்தை முற்றுவிக்கும்படி திரிமூர்த்திகளே வந்தாலும் அவர்களையும் தோற்கடித்து, தனது சூழ்ச்சியினால் உமது பட்டாபிஷேகத்துக்குத் தடைசெய்தஅவளுக்குப் புத்தியுண்டாக்குவேன்: விதிக்கும் ஓர் விதிபோல்வதாகும் என் வில்லின்வலிமை; இது கொண்டு உமது பட்டாபிஷேகத்தை நிறைவேற்றிவைப்பேன்: இதைப் பாரும்' என்று னென்பதாம். 'விதிக்கும் விதியாகுமென் விற்றொழில்காண்டி' என்று கூறுவதனால், ஊழை ஓரிலட்சியமாகக்கொள்ளாமல் முயற்சியே வலி தென்ற கொள்கையினன் இலக்குமணனென்பது, பெறப்படும். விதிக்கும் விதி-"காலகாலன்" என்றுற்போலக்கொள்க. விதி தான் வலிதாய் யாவரையும் வெல்லும் வல்லமையுள்ளது; அவ்விதியினும் வலிதாய் அதன்செயலைப் பலிக்கவொட்டாது செய்யும் வல்லமை என் வில்லுக்கு உண்டு என்பது, 'விதிக்கும் விதியாகுமென்வில்' என்பதன் கருத்து. உலையில் உதிக்கும் தீ என இயைப்பினுமாம். ஊதை - காற்று. பொங்க என்றான் என்க: பொங்கக் கொதிக்கும் எனக் கூட்டுவாரு முளர். மனத்துயர்க்கு உலையுள்ளுறுதீ உவமை என்றுருமுளர். கோளிழைத்தாள் - மந்தரையென்பாருமுளர். முதல்வானவர் - முதன்மைபெற்ற வானவர்: முதல்வராகிய மும்மூர்த்திகள். வலீஇது=வலிது: செய்யுளோசைநிறைக்கவந்த உயிரளபெடை.

பி-ம்:—[1]எழு. [2]ஆறுமிக். [3]இழைத்தான். [4]மதியா. [5]வானவரும். [6]மற்றும்; மற்றை. [7]விதியாமென. [8]காண்டிரென்றான், காண்டிவீர. (கசுஉ)

கஙசூ.—இராமன் இலக்குமணனை நோக்கித் தந்தையார்மீது சினங்கொள்ளுதல் தகாதெனல்.

[1]ஆய்ந்தந்தவ னவ்வுரை கூறலு [2]மைய நின்றன்
[3]வாய்ந்தந் தன [4]கூறு திமையாமறை [5]தந்த [6]நாவா
னீந்தந்த தன்மே றெறியோர்க [7]ணிலாத தின்ற
[8]தாய்தந்தை யென்று லவர்மேற் சலிக்கின்ற [9]தென்னே.

(இ-ள்.) அவன்-லக்ஷ்மணன், ஆய்ந்து-ஆராய்ந்து, அ உரை கூறலும்-அந்தவார்த்தையைச் சொன்ன வளவிலே,—(இராமன் இலக்குமணனை நோக்கி),—'ஐய-தம்பி! மறை தந்த நாவால் - வேதங்களின் பொருளையறிந்த (உன்)வாயினால், நின் தன் வாய் தந்தன-உன்வாயில்வந்தவைகளை, கூறுதிஓ-சொல்லுகின்றாயோ? நீ தந்தது - நீ (இப்போது) சொன்ன தொழில்,

நெறியோர்கண் - நன்னெறியைக் கடைப்பிடித்து நடப்பவரிடத்தில், நிலாதது அன்றே—நிலவாத செயலல்லவா? (உனது விருப்பத்திற்குமாறுகநடப்பவர்), என்ற தாய் தந்தை என்றால் - பெற்றதாயுந் தந்தையும் (ஆவர்) என்றால், அவர்மேல்-அவரிடத்தில், சலிக்கின்றது - கோபிப்பது, என்னே - எவ்வாறே?' (என்றான், ஸ்ரீராமன்): (எ - று.)

வேதத்தைக் கற்றுணர்ந்த நீ அவ்வாயால் வேதநெறிக்குமாறுகச் சொல்லுதல் தக்கதோ? நீ இப்போது சொல்வது, நன்னெறியோர் மேற்கொண்ட ஒழுக்கமல்லவே. தாய்தந்தையர் நம்மனத்துக்கு மாறுக நடப்பவரென்றால், அவரிடத்துப் பொறுமையைக் காட்டாது கூத்திரியதருமத்தைக் காட்டுதல் தக்கதோ? என்று இராமபிரான் இலக்குமணனைநோக்கிக் கூறினனென்க. ஆய்ந்தவன் - ஒருசொல்லுமாம். மறைதந்த நாவால் சொல்லுதியோ - இப்போது நீ சொல்லும் பேச்சு வைதிகன்சொல்லுமதல்ல: அவைதிகமென்ற படி. நெறியோர் கண் இலாதது எனவும் பிரிக்கலாம்.பீ-ம்:—[1]ஆய்ந்தனன். [2]ஐயனின்றான், ஐயநின்றான். [3]வாய்தந்தது. [4]சொல்லுதியோ. [5]தந்து. [6]நாவாய். [7]இனத்தினின்று, அனைத்துமின்ற, இனிதுநின்ற. [8]தாய்தந்தையரென்றிவர் மேல். [9]என்றான். (சுஙஙு)

கஙஎ.—இலக்குமணன் இராமனைநோக்கித் தான்மேற்கொண்ட செயலைச் செய்தே தீருவேனெனல்.

நற்றை தையுநீ தனிநாயக னீவ யிற்றிற்
பெற்றையு [1]நீயே பிறரில்லை பிறர்க்கு நல்கக்
கற்றை [2]யிதுகாணுதி யின்றெனக் [3]கைம்ம றித்தான்
முற்று மதியம் மிலைந்தான் [4]முனிந்தானை [5]யன்னான்.

(இ-ள்.) முனிந்தான் - கோபித்தவனுகிய, முற்று மதியம் மிலைந்தானை-(கலைகள்)நிரம்பாத இளம்பிறையைத் தலையிலணிந்த உருத்திரனை, அன்னான்-ஒத்தவனுகிய இலக்குமணன்,—(இராமனைநோக்கி), 'பிறர்க்கு நல்ல கற்றாய்-(உனக்கேயுரியபொருள்களை)அயலார்க்குத் தானஞ்செய்யக் கற்றவனே! நல்தாதையும் நீ - சிறந்த தந்தையாவானும் நீயே; தனி நாயகன் நீ - ஒப்பற்ற தலைவனும் நீயே; வயிற்றில் பெற்றாய்உம் நீவ - வயிற்றிலே (பத்துமாதங்கொண்டிருந்து பிறகு) பெற்றதாயாகுவாயும் நீயே; பிறர் இல்லை - (எனக்கு) வேறொருவருமில்லை; இன்று இது காணுதி - இப்போது (யான்) காட்டப்போகின்ற வில்லின்செயலைக் காண்பாயாக,' என-என்றுசொல்லி, கைமறித்தான் - (தன்) கையை மேலேதாழ்ல்செய்யும்படி யசைத்தான்; (எ - று.)

எனக்குத் தந்தை முதலியோர் நீரேயாதலால் உமக்குத்தீமைசெய்யக் கருதிய கைகேயிமுதலியோரையும் பெற்றேமென மதியாது என்வில்லின் வலியைக் காட்டி, 'உமக்கு இவ்விராச்சியத்திற் பட்டாபிஷேகஞ்செய்தே தீருவேன்' என்று இலக்குமணன் தன் மனவுறுதியைக் கூறினனென்ப

தாம். கைம்மறித்தான் - அவன்வார்த்தையைத் தடுத்துக்கூறினை னென்
மாம். தயரதர் நற்ருதையல்லரென்பான் 'நற்ருதைநீ' என்ருன். பெற்ருய்
பெற்றஆய் என்பதன் விகாரமுமாம். 'முனிந்தான் மதியம் மிலைந்தாை
எனவே, பிரளயகாலருத்திர னென்றவாறு. தாதைநீ நாயகன்நீ - முன்னிர
யிற் படர்க்கைவந்த இடவழுவமைதிகள். முனிந்தான் மிலைந்தானை - உரு
பிரித்துக் கூட்டப்பட்டது. முற்ருமதியம் - பிறைச்சந்திரன். மதிக்கப்படு
தென்ருவது, மதுவை [அமுதத்தை] யுடையதென்ருவது, 'மதி' என்
சொல்லுக்குக் காரணப்பொரு ளுரைப்பர். இனி,இச்செய்யுட்கு—அன்ளன்
அந்த இராமபிரான்,—முற்ருமதியம் மிலைந்தான்முனிந்தானை - இளம்பிறை
சந்திரனை முடியிற்சூடிய சிவபிரானைப்போன்றவனுப்ச் சினங்கொண்டிருந்
இலக்குமணனைப்பார்த்து, 'நல்தாதைஉம்நீ - சிறந்த தந்தையாவானும் நீயே
தனிநாயகன்நீ - ஒப்பற்ற தலைவனும்நீயே; வயிற்றில்பெற்ருய்உம்நீயே
(பத்துமாதகாலம்)வயிற்றிற்கொண்டிருந்து பெற்ற தாயும் நீயே;பிறர் இல்லை
(எனக்குப்)பிறர் இல்லை; பிறர்க்கு நல்ல கற்ருய் - (முறைக்கேடான செயலை
பிறர் நிகழ்த்தியபோது) அந்தப்பிறர்க்கு உபதேசிக்கக்கற்றவனே! இன்
இது காணுதி - இப்போது யான்சொல்லுகின்ற இதை (நன்மையாகக்
கொள்வாய்,' என்று - என்றுசொல்லி, கைமறித்தான் - (வில்தொழில்செ
யும்படி இலக்குமணன் முயல்வதைத் தடுக்குமாறு) கைச்செய்கையால் தடு
தான் என்று இராமன்கூறியதாக உரைப்பாருமுளர். கைம்மறித்தல் விலக்
தற்குக் குறிப்பாதலை, "கைம்மறித்த காந்தளந்தோ தகாதெனவே" என்
சிந்தாமணியடியாலும் அறிக. பி - ம்:—[1]நீ பிறரில்லை. [2]இவை காணுந்
நீயென. [3]கட்டுரைத்தான். [4]முனிவேயும். [5]ஒத்தான். (கூகூ

**கஉஅ.—இதுவும் அடுத்தகவியும்-இலட்சுமணன் சினந்தணியாமையால்
மீண்டும் அவன் மனத்திற்பதியுமாறு இராமன் சினங்கொள்ளுதல்
தகாததெனக் காட்டுதலைத் தெரிவிக்கும்.**

வரதன் பகர்வான் வரம்பெற்றவ டானிவ் வையஞ்
சரதம் உடையா ளவளென்றனித் [1]தாதை செப்பப்
பரதன் பெறுவா [2]னினியான் படைக்கின்ற செல்வம்
விரதம் [3]மிதினல்லது வேறினி யாவ தென்ருன்.

(இ - ள்.) வரதன் பகர்வான் - ஸ்ரீராமன் சொல்லத் தொடங்கினன்.
'வரம்பெற்றவள் - (தான்சாரத்தியஞ்செய்து) வரத்தைப்பெற்றகைகேயி.
தான்-, இ வையம் சரதம் உடையாள் - இவ்விராச்சியத்தை மெய்யாகக் கேட்
டுப்பெறுதற்கு உரிமையுடையளாவாள்; அவள் - அந்தக்கைகேசி, என் தனி
தாதை செப்ப - எனது ஒப்பற்ற தந்தை சொல்ல, பரதன் பெறுவான்-(அவ்
விராச்சியத்தைப்) பரதன் கைக்கொள்வான்; இனி—, யான் படைக்கின்ற
செல்வம்-நான் பெறுகின்ற ஐசுவரியம், விரதம் - தவம்; இதின் நல்லது-இத
னினும் நல்லது, வேறுயாவது இனி-வேறே யாது இனிமேல்?' என்ருன்—.

இதின் = இதனின்: அன்சாரியை தொக்கு நின்றது. இதனினும் நல்லது வேறில்லையென்க. பி-ம்:—[1]தாயரன்றே. [2]நனி. [3]இதுநல்லதுவேறினி, இதன்மேலெனக்கொல்வது. (சாடு)

கஉஈ. ஆன்றான் [1]பகர்வான் [2]பிறு மையு[3]விவ் வையு மையற்
றோன்று நெறி[4]வாழ் துணைத்தம் பியைப்போர் தொலைத்தோ
சான்றோர் [5]புகழுந் தவத்தாதையை [6]வாகை கொண்டோ
வின்றூளை வென்றோ வினியிக்கதந் தீர்வ தென்றான்.

(இ - ள்.) ஆன்றான்-பூரீராமன், பின்உம் பகர்வான்-பின்னுஞ் சொல்லத் தொடங்குபவனாகி, 'ஐய - தம்பீ! இ வையம் - இவ்வுலகத்தில், மையல் தோன்று நெறி வாழ் - மயக்க மில்லாத சன்மார்க்கத்தில் வாழுகின்ற, துணை தம்பியை-துணையாகிய உடன்பிறந்தவனை, போர் தொலைத்துழ - யுத்தத்தில் வென்றபின்போ, சான்றோர் புகழும்-பெரியவர் புகழ்கின்ற, தவம் தாதையை-பாக்கியத்தினையுடைய தந்தையை, வாகை கொண்டுழ-வெற்றிகொண்ட பின்போ, ஈன்றூளை வென்றுழ-பெற்றதாயைச் செயித்தபின்போ, இனி—, இ கதம் தீர்வது - இக்கோபம் நீங்குவது?' என்றான்—; (எ - று.)

எவ்வளவு சொல்லியும் இலட்சுமணன் தன் சினந்தணியாதது கண்டு, 'இராச்சியம்பெறும் பரதனைப் போரில் வென்றோ? அல்லது, அவனுக்கு இராச்சியத்தைவரமாகஅளித்த தந்தையாரைப் போரில்வென்றோ?அன்றி, வரம்கேட்டுப்பெற்ற கைகேயியைப் போருக்கு இழுத்து அவளைச்சயித்தா? என்ன செய்து நீ சினந்தணியப் போகிறாய்?'என்று இராமன் விளவினனென்க. இலட்சுமணன் சினத்துக்குக் காரணமாகி இலக்காகக்கூடியவர்-தம்பியர் முதலிய மூவரே யாதல்பற்றி, இங்ஙனம் கூறியதென்க. இதனால் உன்கோபத்துக்கு இலக்காகுமவரை யாராய்ந்தால் சினங்கொள்ள வழியில்லையென்று காட்டியவாறு. ஆன்றான்-நற்குண நற்செய்கை நிரம்பியவன்: பொறுமையுள்ளவன். பகைவென்றவர் வாகைசூடுவரென்பது தமிழ்நூல் மரபாதலின், வாகையென்றசொல் - இலக்கணையால், வெற்றியைக்காட்டிற்று. பி-ம்:—[1]புகல்வான். [2]பகர். [3]ஓரையமெய்யில், இவ்வையமெங்கும். [4]ஆள். [5]புகழ்நற்றனித்தாதையை. [6]வாதை. இச்செய்யுள் சிலபிரதிகளில் "நன்சொற்கடந்தான்" என்னும் கசக-ஆம் செய்யுளுக்குப்பின் காணப்படுகின்றது. (சாடு)

கசஅ — இராமன்சொல்லைக் கேட்டு இலக்குமணன்
வெறுத்துக்கொண்டு தன்கோபம் ஒழிதல்.

[1]செல்லுஞ்சொல் வல்லானெதிர் தப்பியுந் தெவ்வர் சொல்லுஞ்
சொல்லுஞ் சுமந்தே னிருந்தாளெனைச் சோப்பி [2]யோங்குஞ்
கல்லுஞ் [3]சுமந்தேதன் கணைப்புட்டி லுங் [4]கட்ட மைந்த
வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன் வெகுண்டென்னை யென்றான்.

(இ-ள்.) செல்லும் சொல் வல்லான் எதிர் - (காரியத்தைக்) கைகூட்டு விக்கும் பேச்சுகளைப் பேசுவதில் வல்லவனை இராமனுக்கு எதிராக, தம்பி உம் - இலக்குமணனும்,—'தெவ்வர் சொல்லும் சொல்உம் சுமந்தேன் - பகைவர் புகழ்ந்துகூறுகின்ற புகழ்ச்சொல்லைத் தாங்கியிருந்தவனாகிய யான், (இப் போது), இரு தோள் என சோம்பி ஓங்கும் கல் உம் சுமந்தேன் - இரண்டு தோள்கள் (உள்ளன)என்றுசொல்லும்படி பயனின்றிவளர்ந்துள்ளமலைகளை யும் சுமந்துநிற்கின்றேன்; கணை புட்டில்உம் கட்டு அமைந்த வில்உம் சுமக்க பிறந்தேன் - அம்பறுத்தூணியையும் உறுதிபொருந்திய வில்லையும் (வீணே சுமக்கப்பிறந்தேன்; வெகுண்டு என்னை - (யான்) கோபித்துப் பயன்யாது? என்றான் - என்று (வெறுத்துக்) கூறினான்; (எ - று.)

இங்ஙனம் இராமபிரான் கடுமையாகக்கூறியதைக் கேட்டதும், இலக்குமணன், தான் சினந்து செய்யத்தொடங்கிய செயலை நிறுத்திவிட்டு, 'இதுவரையில் பகைவர் புகழப் பெருஞ்சிறப்போடிருந்த யான் இப்போது வேண்டாதார்கண்ணெதிரில் என்வலிமையைக் காட்டமாட்டாது சோம்பிக்கிடக்கும் படியாயிற்றே! எனது அம்பறுத்தூணியும், வில்லும், தோளுக்கும் கைக்குஞ் சுமையாயிருப்பனவேயன்றிப் பகைவரையழிக்க உதவுகின்றிலவே! எனது கோபந்தான் என்ன பயனை விளைத்தது?' என்று தான் இராமபிரான் சொல்லுக்குக் கட்டுப்பட்டு ஒன்றுஞ்செய்யமாட்டாது நிற்கும் நிலையைக் குறித்து வெறுத்துக்கூறுகின்றனனென்க. பகைவரையழிக்கமாட்டாது சோம்பிக் கிடக்கும் எனது தோள் கல்லுப்போல் அசைவற்றுக்கிடந்து உடற்குப்பாரமாய்ச்சுமக்கும்படியிருப்பதல்லது ஒருபயனையும் விளக்கவில்லையென்பான், 'தோளெனச்சோம்பியோங்குங் கல்லுஞ் சுமந்தேன்' என்கிறான். எங்கும் பயனைத் தவறுதுவிளக்குஞ் சொல்லென்பது, 'செல்லுஞ்சொல்' என்பதன் கருத்து. கணைப்புட்டில்-அம்புகளைவைப்பதற்குஉரிய தூணீரம். 'இருதோளெனச்சோம்பி யோங்குங் கல்'-அவநுதியணி. பி-ம்:—[1]சொல்லும். [2]எங்கும். [3]சுமந்தாண்கணைப். [4]கட்டிமைந்த, கட்டமைத்த. (சுகூஎ)

நகக —இராமன் பின்னும் இலட்சுமணனைச் சமாதானப்படுத்துதல்.

[1]நன்சொற் கடந்தாண் டெனைநாளும் வளர்த்த [2]தாதை
தன்சொற் கடந்[3]தெற் கரசாள்வது தக்க [4]தன்றா
லென்சொற் கடந்தாலுனக் [5]கியாதுள தீன மென்றான்
தென்சொற் கடந்தான் வடசொற்கலைக் கெல்லை [6]தேர்ந்தான்.

(இ - ள்.) தென் சொல் கடந்தான்-(பரதகண்டத்தின்) தென்பகுதியில் வழங்கும் பாலைநயாகிய தமிழ்மொழிக்கடலைத் தாண்டினவனும் [தென்மொழியை முற்றுமுணர்ந்தவனும்], வடசொல் கலைக்கு எல்லை தேர்ந்தான்-ஸம்ஸ்க்ருதமொழியிலுள்ள சாத்திரங்களையெல்லாம் நன்குஅறிந்தவனுமாகிய டாரீராமன்,—(இலக்குமணனை நோக்கி),—'நல் சொற்கள் தந்து-இனியமொழிகளைக்

கூறி, எனை ஆண்டு-என்னைப் பாதுகாத்து, நாள்உம் வளர்த்த-இந்நாள்வரையிலும் வளர்த்துவந்த; தாததன்-தந்தையினுடைய, சொல் கடந்து-சொல்லை மீறி, அரசு ஆள்வது - இராச்சியத்தை அரசாட்சிபுரிவதை மேற்கொள்வது, எற்கு-எனக்கு, தக்கது அன்று—; (அங்ஙனமே), என் சொல் கடந்தால்-என்னுடையசொல்லை அவமதித்து மீறுவதானால், உனக்கு யாது உளது-உனக்கு என்ன நன்மையிருக்கின்றது? [ஒன்றும் இல்லை]; (என்சொல்லை மீறுவதென்பது), ஈனம்-(உனக்கு) இழிவையே தரும்,' என்றான்-என்று கூறினான்;(எ-று.)

'என்னை இந்நாள்வரையிலும் அன்போடு பாதுகாத்துவளர்த்த தந்தையாகிய தசரதசக்ரவர்த்தியின் சொல்லை நான் மீறுவது தகுதியோ? தகுதியாகாது; அதுபோலவே, என்சொல்லைக் கடப்பதும் நினக்குத்தகாது. அதனைற் பழியே விளையும்' என்று இராமன் கூறின னென்க. நன்சொற்கள் என்பது-பெற்றோர் தம்மக்களுக்குக் கற்றுக்கொடுக்கும் இன்சொற்களை. ஆண்டு எனநாலும் என்பதற்கு - அனேகவருஷகாலமென்று உரைப்பாருமுளர். இனிமை மகிமை தொன்றுதொட்டுவருகை முதலிய பல தன்மைகளிலும் தென்மொழியும் வடமொழியும் ஒப்பனவாமென்பதும், இராமபிரான் உணர்ந்தபாஷையென்றே இத்தமிழ்மொழியிலும் கம்பர் மதிப்பும் அன்பும் உடையவரென்பதும் ஈற்றடியில் தொனிக்கு மென்பர். தென்சொற்கடந்தான் என்றதுபோல, வடசொற்கடந்தானென்னுமல் 'வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்று மிகுத்துக்கூறியதனால், தென்மொழியினும் வடமொழியிற் கலைகள் மிக்கிருத்தலால் அவையெல்லாவற்றினும் வல்லவன் இராமன் எனக் கூறியவாறு மென்பர். இனி, ஈற்றடிக்கு—தென்மொழி வடமொழி என்ற இரண்டிற்கும் எட்டாதவன் எனக் கருத்துக்கொள்வாரு முளர். இனி, மூன்றுமடியினீற்றிலுள்ள என்றான் என்பதற்கு முற்றெச்சமாக 'என்று' எனப் பொருள்கொண்டு, தென்சொற்கள் தந்தான் - இனிமையான சொற்களைப் பேசினனென உரைத்தாருமுளர். தாததன்சொற்கடந் தெற்கரசாள்வது தக்கதன்று'—"தந்தைசொன்மிக்கமந்திரமில்லை" என்பது ஔவைமொழி. 'ஜ்யேஷ்டப்ராதா பித்ருஸமஃ [தமையன் தந்தையோடொப்பான்]' என்பவாதலால், தமையனுகிய என்மொழியைக்கடத்தலும் நினக்குத் தகாதென்றான். சொற்கள் + தந்து = சொற்கடந்து. ஈனம்-ஹீநம்: கலை = கலா; வடசொற்கள். இனி, இச்செய்யுள்-சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேணுமென்று கருதுகிற எனக்குத் தந்தைசொல்லைமீறி அரசாள்வதுதகாது; எதற்கும் கட்டுப்படாமலிருக்கிற உனக்கோ என்சொற்கேளாமல் விட்டால் என்ன ஊனம்? ஒன்று மில்லையென்று இராமபிரான் நிட்டூரமாகக் கூறினனென்று கருத்துக் கொள்ளுதல் எற்கும். பி-ம்:—[1]வன். [2]மேலோன். [3]ஆண்டு. [4]என்றல். [5]யாதுளதூற்றம், ஈனமதாகும், யானுளதூற்றம். [6]கண்டான். (சுகஅ)

கசஉ.—இராமன்மொழியால் இலக்குமணன் சினந் தணிந்துநிற்றல்.

சீற்றந் துறந்தா னெதிர்நின்று தெரிந்து செப்பு
மாற்றந் துறந்தான் மறைநான்கென வாங்கல் [1]செல்லா
நாற்றெண் டிரைவேலை[2]யி னஞ்சித னுணை யாலே
யேற்றந் தொடங்காக் கடலிற் றணிவெய்தி நின்றான்.

(இ - ள்.) சீற்றம் துறந்தான்-(அப்போது) கோபத்தை அடியோடு வி டவ்னை இலக்குமணன்,—மறை நான்கு என - நான்குவேதங்கள் போ எதிர்-(அவ்விராமபிரானது) எதிரே, நின்று—, தெரிந்து செப்பும் மாற்ற துறந்தான்-ஆராய்ந்து சொல்லுகின்ற வார்த்தைகளைப் பேசாதவனாய்,-வே யின் ஏற்றம் தொடங்கா - (கடவுளாஜ்ஞைக்குக் கட்டுப்பட்டுக்) கரையினின் பொங்கிப்பெருகப்பெறுத, தெள் திரை-தெளிவான அலைகளையுடைய, நா கடலின்-நான்கு கடல்களைப்போல, வாங்கல் செல்லா - மீறிநடக்கக்கூடா தான, நம்பிதன் ஆணையால் - ஸ்ரீராமனது கட்டளையிலால், தணிவு எய், நின்றான் - ஆறுதலடைந்தவனானான்; (எ - று.)

நாற்றிசையிலும் பூமியைச் சூழ்ந்துநிற்குங் கடல் கடவுளாஜ்ஞைக்கு அ சிக் கரைமீறுது நிற்றல்போல, இராமபிரானுடைய வார்த்தைக்குக் கட்டு பட்டு இலக்குமணன் ஆறித் தன்கோபத்தை அடியோடுவிட்டு மறுமாற் மொன்றுஞ்சொல்லாது மௌனமாயிருந்தா னென்பதாம். எம்பெருமான தி புகழைக் கூறத்தொடங்கி அவனுக்கு முன்னேநின்று அக்குணங்களைக் கூ முடியாதொழிந்த வேதம்-இராமனுக்குமுன்னேநின்று பேசமுடியாமற்போ இலக்குமணனுக்கும், கடவுளாணையால் கரைமீறுது அமைந்துநிற்கும் அ பொங்குங் கடல்-இராமபிரானது மொழியிலால் மரியாதைகடவாது பொ குஞ் சினம் அடங்கிய பெருவலிபெற்ற இலக்குமணனுக்கும் ஏற்றஉவமை யாம்; **உவமையணி.** எம்பெருமான் திருவாணையாலே கடல் வேலையை கடவாதிருக்கு மென்பதை "நெடுங்கடனிற்பதும் நாயிறுகாய்வதும் நிற்றலுங் கால், ஓடுங்கி நடப்பதுந் தண்கார்பொழிவதும் ஊழினில், சுடுங்கனல் பற் றிச் சுடாதேயிருப்பதுந் தும்பைபுனைந்து, அடுங்கணலாழியரங்கேசர்தந் திரு வாணையினே" என்பதனாலும் அறியலாம். இனி, வேதத்திற்சொல்லிய வி யைக் கடத்தல் கூடாதென்பார் 'மறைநான்கென வாங்கல்செல்லா நம்பித னாணை' என்றாரெனினுமாம்: இப்பொருளில், கடத்தற்குக்கூடாமையினால் இராமபிராணாணைக்கு மறைநான்கும் அவ்விராமபிராணாணையை மீறுதிருந்தத னால் இலக்குமணனுக்கு வேலையை மீறுதிருந்த கடலும் உவம மென்க. இனி, தணிவெய்திநின்ற இலக்குமணனுக்கே மறைநான்கு நாற்கடல் என்ற இரண் டும் உவமை எனக்கொள்ளுவது பொருந்துமாயிற் கொள்க. ஆணை-ஆஜ்ஞா: வடசொல்திரிந்து வந்தது. **பி-ம்:**—[1]சொல்லா. [2]இந்நம்பி. (கூக)

கசஙு.—இராமன் சினந்தணிந்த இலக்குமணனை யழைத்துக்கொண்டு சுமித்திரைகோயிலைச் சேர்தல்.

அன்னவன்றனை யையனு மாதியொ டந்த[1]மென்று
தன்னுலு மளப்பருந் தானுந் தன் [2]பாங்கர் நின்ற
பொன்[3]மா னுரியானுந் தழீஇயெனப் புல்லிப் [4]பின்னைச்
சென்மாண்புடை யன்னை சுமித்திரை கோயில் புக்கான்.

(இ - ள்.) ஐயன்உம்-ஸ்ரீராமனும்,—ஆதியொடு அந்தம் என்று-முதலும் ஈறும் (இவை) என்று, தன்னுல்உம் அளப்ப அரு - தன்னுலும் வரையறுக்கக்கூடாத, தான்உம்-விஷ்ணுரூபியாகிய தானும், தன் பாங்கர் நின்ற - தன் பக்கத்திலிருந்த, பொன் மான் உரியான்உம் - பொன்னிறமான மான்தோலையுடைய சிவனும், தழீஇ என-கட்டியணைத்தாற்போல, அன்னன்தனை - அவ்விலக்குமணனை, புல்லி - தழுவி, பின்னை - பின்பு, சொல் மாண்பு உடை - சொல்லின் மாட்சிமையையுடைய, அன்னை சுமித்திரை-தாயாகிய சுமித்திராதேவியினது, கோயில் - மாளிகையை, புக்கான் - அடைந்தான்; (எ - று.)

'தன்னுலுமளப்பரு' எனவே, பிறரால் அளத்தற்கு அருமை சொல்லவேண்டாதாயிற்று. விஷ்ணுவின் அவதாரமாதலால், 'தான்' என்றார். சிற்றத்திற்கும், நிறத்திற்கும் அடிமையாய்நிற்றற்கும் இலக்குமணனுக்குச் சிவபெருமான் உவமை. "புரவல, ஞகமற்றிவடன்னை புமாற்றியிச், சோகந்தீர்ப்பவள்" என்று முன் கூறினதற்கேற்ப, 'சொன்மாண்புடையன்னை' என்றார்.

சுமந்திரனால் அழைக்கப்பட்டுக் கைகேயியும் தசரதனும் உள்ளிடத்துக்கு இராமன் சென்றபோது லக்ஷ்மணனும் உடன்சென்றிருந்தாலொத்தல் கைகேயி வனத்துக்குப்போகுமாறு சொன்னதை அப்போதேயுணர்ந்தானுய், பிறகு ஸ்ரீராமன் கோசலையாரிடத்துக் கானகஞ் செல்ல நேர்ந்திருப்பதைத் தெரிவித்தற்காகச் செல்கையில் அப்பிராணுடனேசென்று, அவ்விராமனற் செய்தியுணர்ந்து கௌசலை வருந்துகையில் அவளை அவ்விலட்சுமணன் சமாதானப்படுத்தி, 'மன்னவன் பேச்சைக்கேட்கவேண்டியதில்லை' என்று இராமனிடங் கூற, ஸ்ரீராமன், 'நான் சத்தியந்தவறக்கூடாது: நீ இப்போது கொண்டுள்ள இந்தப்புத்தியை யொழிக' என்று கூறிவிட்டுக் கௌசலையை விடைதருமாறு பலவகை நியாயமெடுத்துக்காட்டவும், தம்பியும் தாயும் சம்மதப்படாமலிருந்ததனுல் ஸ்ரீராமன் தன்மனவுறுதியைத் தெரிவித்து லக்ஷ்மணனுக்குக் கைகேயியினிடம் பொங்கிவருகின்ற கோபத்தை யடக்குமாறு விதியின் வல்லமையை யெடுத்துக்கூற, 'பௌருஷத்துக்குமுன் விதி என்னசெய்யமாட்டும்? நீ கட்டளையிட்டால் பூமிமுழுவதையும் உன்னதீனமாக்கிவிடுகிறேன்: நான் உன்னுடைய அடியவன்'என்று இளையபெருமாள் கண்ணீர்விட்டுச்சொல்ல, இராமன் அந்த லக்ஷ்மணனது கண்ணீரைத் துடைத்து, 'லக்ஷ்மண! மென்மையானதன்மையுடையஉனக்கு இப்படிப்பட்ட சினம் எவ்வாறு வந்தது? நான் தந்தையாரின் கட்டளையை எள்ளளவும் மீறமாட்டேன். பித்ருவசனபரிபாலனமே சன்மார்க்கம்' என்றான். தன்புதல்வனுடைய மனவுறுதியைக்கண்டு கௌசலை கொண்டாடித் தன்மனத்தில் வருத்தம்மிகுந்தும் அடக்கிக்கொண்டு ஆசிகூறி யனுப்பினுள்; அங்கிருந்து செய்தி தெரிவித்தற்காகச் சீதையினிடம் சென்றனென்பது, ஸ்ரீவான்மீகத்திலுள்ள கதைப்போக்கு. சுமித்திரையின் கோயிலுக்கு ஸ்ரீராமன்சென்றதாக மூதனூலிற்கூறப்பட்டிலது. பி-ம்:—[1]என்றும். [2]பாகம். [3]மானுமுவந்து. [4]பின்னர்ச். (சுசு)

கசசு.—தண்டகவனத்திற்குச் செல்லச் சித்தமாயிருக்குந் தன்மக்களைக் கண்டு சுமித்திரை வருந்துதல்.

கண்டாண் பகனும் மகனுந்தன கண்கள்போல்வார்
[1]தண்டா வனஞ்[2]சார் வதற்கே சமைந்தார்க டம்மைப்
புண்டாங்கு [3]நெஞ்சத் தினளாய்ப் [4]படிமேற் புரண்டா
ளுண்டாய துன்பக் கடற்கெல்லை யுணர்ந்தி லாதாள்.

(இ . ள்.) (அச்சுமித்திரை),-தண்டாவனம் சார்வதற்குவ-தண்டகாரணியத்திற்குப் போவதற்கே, சமைந்தார்கள் - நிச்சயித்தவர்களும், தன கண்கள் போல்வார் - தன்னுடைய இருகண்களை யொத்தவர்களுமாகிய, மகன்உம் மகன்உம் தம்மை-ஸ்ரீராமன் லக்ஷ்மணன் என்னும் இருவரையும், கண்டாள் - பார்த்து, புண் தாங்கு நெஞ்சத்தினள் ஆய் - புண்பட்ட மனமுடையவளாகி, உண்டாய துன்பம் கடற்கு - (புதிதாகத் தனக்கு) உண்டாகிய துன்பமாகிய சமுத்திரத்திற்கு, எல்லை உணர்ந்திலாதாள் - முடிவை அறியாதவளாய், படிமேல் புரண்டாள் - பூமியின்மேற் புரண்டழுதாள்; (எ - று.)

இன்றியமையாமைபற்றி, 'கண்கள்போல்வார்' என்றார். தண்டவனம் என்பது, தண்டாவனமென்று விகாரப்பட்டது. **தண்டாவனமென்றபெயர்க்குக் காரணம் வருமாறு:**—சூரியகுலத்து இட்சுவாகுமன்னவனுடைய குமாரர்களுள் கடைப்பட்டவனை தண்டனென்றும் தண்டகனென்றும் பெயர் கொண்டவன் விந்தியமலைக்கும் சைவலமலைக்கும் இடையிலுள்ள நிலத்தைத் தன்னாட்சிக்கு உரியதாக்கி மதுமந்தமென்கிற பட்டணத்தை யமைத்து அரசு புரிந்து வருகையில், ஒருநாள் தனது புரோகிதனை சுக்கிராசாரியனது ஆச்சிரமத்துட்சென்று அவன்மகளாகிய அரஜையென்பாளைக் காதலித்து வலியக்கற்பழிக்க, பின்பு அதனையுணர்ந்த சுக்கிராசாரியன் சினந்து 'ஏழுநாள்களில் இவன் குடும்பத்தோடும் பரிவாரத்தோடும் அழிந்துபோக, இவனது நாடு மண்மாரியால் யாதொருஜந்துவுமில்லாமல் பாழாகக்கடவது' என்று சபிக்க, அங்ஙனமே பாழான அவ்விடம் காடாகிவிட்டதென்பது: தண்டகன் நாடு காடாயினமைபற்றி, தண்டகவனமென்று பெயர்பெற்றதென்க: தண்டனென்று பெயருண்மையால் தண்டவனமென்றுஞ் சொல்லப்படும். புண் - ஈண்டுத் துன்பம். **பி - பீ:**—[1]தண்டார்வனம். [2]சேர்வதற்கே, செல்வதற்கே. [3]நெஞ்சத்தனள். [4]பொடிமேல்விழுந்தாள், புரண்டாள்படிமேல், புரண்டாள் பொடிம்மேல்.

(சசக)

கசரு.—இராமன் தான் வனஞ்செல்லாதிருக்கமுடியா தென நிரூபித்துக்காட்டல்.

சோர்வாளை [1]யடித்தொழு தேத்தினன் றுன்ப மென்னு
மீர்வாளை [2]வாங்க மனந்தேற்றுதற் கேற்ற செய்வான்
போர்வா [3]ளரசர்க்கிறைப் பொய்த்தன ணைக்க கில்லேன்
கார்[4]வா னெடுங்காணிறை [5]கண்டிநின் மீள்வெ னென்றான்.

(இ - ள்.) சோர்வாளை - (அங்ஙனந்தளர்கின்ற) அச்சுமித்திரையை, அடி தொழுது—, ஏத்தினன் - துதித்து, (பிறகு), துன்பம் என்னும் - (அவளது) துயரமென்கின்ற, ஈர் வாளை - அறுக்கின்ற வாளாயுதத்தை, வாங்க - கழலும் படி, மனம் தேற்றுதற்கு - மனத்தைத் தெளியப்பண்ணுதற்கு, ஏற்ற - தக்க காரியங்களை, செய்வான் - செய்பவனுய், (ஸ்ரீராமன்), போர் வாள் அரசர்க்கு இறை-யுத்தஞ்செய்வதில் வல்ல ஆயுதத்தையுடைய சக்ரவர்த்தியை, பொய்த் தனன் ஆக்ககில்லேன்-பொய்கூறினவனுகச் செய்யமாட்டுவேனல்லேன்;(ஆத லால்), கார் வான் நெடு கான்-கரியமேகந்தவழ்கின்ற பெரியகாட்டை, இறை கண்டு - சற்றுப்பார்த்திட்டு, இ ஙன் மீள்வென் - இங்கே திரும்புவேன்,' என்றுன்—; (எ - று.)

தாம் கானகஞ்செல்லப்போவதை யுணர்ந்ததனுல் தம்மைக் கண்டதும் வருந்தி மனம்புண்ணுகிப் பூமியிற்புரண்டு தளருஞ் சுமித்திரையை, ஸ்ரீராமன், அடிதொழுது துதித்து, அவளை ஒருவாறு தயராற்றக்கருதி, 'நம்முடைய அரசரைச் சத்தியசந்தராக்கவேண்டுவது நமதுகடமை யாதலால், காட்டை யடைந்து கடவுளாலைக்கழித்து ஒருநொடியிற்போல் மீண்டுவருவேன்' என்ற னனென்க. சோகத்தைத் தணிப்பிக்கவேணுங் கருத்தினுலதவின், கானிறை கண்டிஙன் மீள்வெனென்றுன். இஙன்-இங்ஙன்: விகாரம். பி-ம்:—[1]ஓடித் தொழுதேந்தினன். [2]வாங்கா, வாங்கி. [3]அரசன்னரசன். [4]வாழ்நெடுங். [5]கண் டுடன், கண்டுபின், கண்டனன். (கசஉ)

கசசு.—வனஞ்செல்வதில் இராமன் தனக்குவந்தமில்லையெனல்.

கான்புக் கிடினுங் கடல்புக் கிடினுங் கலிப்பேர்
வான்புக் கிடினும்மெனக் கன்னைவ மாண மோத்தி
யான்புக்க தொக்கும் மெனையார் நலிகிற்கு மீட்டா
ருன்புக் குயிர்புக் [1]குணர்புக் குலையற்க வென்றுன்.

(இ-ள்.) (என்றுபின்னும்), 'யான்—, கான் புக்கிடினும் - காட்டை யடைந்தாலும், கடல் புக்கிடினும் - சமுத்திரத்தையடைந்தாலும், கலி பேர் வான் புக்கிடினும் - ஆரவாரத்தையும் பெருமையையுமுடைய தேவ லோகத்தை யடைந்தாலும், எனக்கு—, அன்னைவை-அவை, மாண் அயோத்தி புக்கது ஒக்கும்-மாட்சிமையுடைய அயோத்தியை யடைந்ததனை யொக்கும்; யார் எனை நலிகிற்கும் ஈட்டார்-யாவர் என்னை வருத்தும் வலியுடையவர்? ஊன் புக்கு-உடல்வற்றி, உயிர் புக்கு - உயிர் தளர்ந்து, உணர் புக்கு - அறிவு அழிந்து, உலையற்க-வருந்தாதொழிக,' என்றுன்—; (எ - று.)

'எந்நிலையிலிருந்தாலும் மனத்தில் மாறுபாடுகொள்ளாமல் ஒரேதன்மை யாய்நிற்பவ ளுதலால், எனக்கு அயோத்தியோடு கான்முதலியவற்றோடு வேறுபாடுஇல்லை; மேலும் எங்கும் பிறரால் ஒருதீங்கும் நணுகாதபடி காத் துக்கொள்ளும் வல்லமையும் எனக்குஉண்டு:ஆதலால், ஒருவராலும் எனக்குத் தீங்கேனும் வருத்தமேனும் செய்யமுடியாது. இந்த என்னிலையைமனத்திற் கொண்டு வருந்தாதிருப்பீராக' என்று சுமத்திரையைத் தேற்றினன் இராம

னென்க. ஆகாசம் சப்தத்தைக் குணமாகவுடையதாதலால், 'கலிப்போர்வா எனப்பட்டது: கலிப்போர் என்னும் அடையைக் கடலுக்கும் கூட்டலா மாணையோத்தி, மாண் - பெருமை; அதாவது - முத்திதரும் நகரங்களேழி முதன்மையாயிருத்தல். புக்குளன்னுஞ்சொல்லுக்கு, சந்தர்ப்பத்திற்கேற்ட பொருளுரைக்கப்பட்டது. உணர் - முதனிலைத்தொழிற்பெயர். பி-ம்:- [1]உணர்வுக்கு. (சுசூ

கசூஎ.—அங்குக் கைகேயியின்தோழியர் மரவுரிகொண்டுவருதல்.

தா[1]யாற்றுங் கிலாடனை யாற்றுகின் றூர்க டம்பாற்
[2]றீயாற்று கின்றுரெனச் சிந்தையி னின்று தேற்ற
[3]நோயாற்று கில்லா வுயிர்[4]போல நுடங்கி டையார்
மாயாப் பழியாடர வற்கலை யேந்தி வந்தார்.

(இ - ள்.) தீ ஆற்றுகின்றூர் என - தீயையவிப்பவர்போல, சிந்தையிலை நின்று தேற்ற - (அந்தச்சுமித்திரையை அவள் கொண்ட) கவலையினின்று (தவிருமாறு) தேற்றிக்கொண்டிருக்கையில்,—தாய் ஆற்றுகிலாள்தனை - துயரந்தீராத தாயாகிய சுமித்திரையை, ஆற்றுகின்றூர்கள் தம்பால் - அவ்வாறு தணிக்கின்ற அவ்விராமலக்ஷ்மணர்களிடத்தில்,-நோய் ஆற்றுகில்லா-நோயைப் பொறுக்கமாட்டாத, உயிர் போல-சீவன்போல, நுடங்கு இடையார் - துவளுகின்ற இடையையுடைய மாதர்கள், மாயா பழியாள் தர-அழியாதபிந்தையுடைய கைகேயி கொடுக்க, வற்கலை ஏந்தி வந்தார் - மரவுரியையெடுத்துக் கொண்டுவந்தார்; (எ - று.)

முடிசூட்டற்குத் தடைசெய்தமையால், கவி 'மாயாப்பழியாள்' என்று கைகேயிக்கு ஒருபெயரிட்டார். [2]தீயாற்றுகிலாத்தனிச்சிந்தையினின்றுதெற்ற நோயாற்றுகில்லாவுயிர் என்ற பாடத்துக்கு - தீமையைப்பொருந்த துணையில்லாதமனத்தோடு பொருந்திக் கோபமாகிய நோயைப் பொறுக்கமாட்டாத உயிர்கள்என உரைத்து,சினமாகிய நோய் அறிவில்லாத தனித்த தம்மனத்து மூள அதனால் பொறுக்கமாட்டாமல் தவிக்கின்ற உயிரை இடைக்குஉவமை கூறியதென்க. பி-ம்:—[1]ஆற்றுகில்லாடனை, ஆற்றகிலாடனை. [2]தீயாற்று கிலார்தனி. [3]நோயாற்றுகிலா, நோயாற்றகிலா. [4]போனுடங்கும்மிடையார்.

கசூஅ.—கைகேயியின்சேடியர் தாம் மரவுரிகொணர்ந்தமையைத் தெரிவித்தல்.

கார்வான மொப்பான்றனைக் [1]காண்டொறுங் காண்டொறு
நீரா[3]யுகக் கண்ணினு நெஞ்சுழி [4]கின்ற நீரார் [ம் [2]போய்
போரா விடர்ப்பட் டயலா [5]ருறுபீழை கண்டுந்
தீரா மனத்தாடர [6]வந்தன சீர மென்றூர்.

(இ-ள்.) (கைகேயியனுப்பிய சேடிமார்கள்), கார் வானம் ஒப்பான்தனை-காளமேகத்தையொத்த ஸ்ரீராமனை, காண்தொறுஉம் காண்தொறுஉம் - பார்க்கும்போதெல்லாம், கண்ணின்உம் - கண்களினும்மேலாக, நீர்ஆய் போய் உக-நீராகக்கரைந்துருகும்படி, நெஞ்சு அழிகின்ற நீரார்-மனம்வருந்துகின்ற தன்மையுடையவராய்,—'பேரா இடர் பட்டு அயலார் உறு பீழை-நீங்காத துன்பத்திலகப்பட்டு அயலார்படுகின்ற பெருந்துன்பத்தை, கண்டுஉம்-பார்த்தும், தீரா - (இராமபிரானைக்காட்டுக்குஅனுப்புவதென்ற தன்கொள்கையினின்று) நீங்காத, மனத்தாள்-மனத்தை யுடையளான கைகேயி, தர்-கொடுத்தனுப்ப, வந்தன-வந்தனவாகிய, சீரம் - மரவுரியாகும் (இவை), என்றூர்—; (எ - று.)

மரவுரிகொணர்ந்த அச்சேடியர், தாம் கைகேயியின்சேடியராயிருந்தும் இராமபிரானைக் காணும்போதெல்லாம் நெஞ்சம்நீராய்க்கரைந்துருகக் கண்களினின்று சோகக்கண்ணீர் தாரைதாரையாகப்பெருக நின்று, 'கல்நெஞ்சளாகிய கைகேயி தந்த மரவுரியைக் கொணர்ந்தோம்' என்று செய்தி தெரிவித்தனரென்க. போய் - (சேடியர் இராமனிடஞ் சென்று எனினுமாம். பீழை-பீடாஎன்ற வடசொல்லின் திரிபென்பர். சீரம் - தற்சமவடசொல். [2]பொய் என்று படிப்பாரு முளர். **பி-ம்:**—[1]கண்டொறுங்கண்டொறும். [3]உகுகண்ணீரும். [4]நின்ற. [5]உயா; உறும். [6]வந்துஞ்சீரை; வந்துசீரை. (சசரு)

கசக.—மரவுரியைக்காட்டுமாறு இலக்குமணன் கூறுதல்.

வாணித் தில [1]வெண்ணகை யார்தர வள்ள றட்பி
யாணர்த் திருநா [2]டிழப்பித்தவ ரீந்த வெல்லாம்
பூணப் [3]பிறந்தா னுநின்ற[4]னைவ போர்வி லோடுங்
காணப் பிறந்தே தனுநின்றே[4]னைவ [5]காட்டு மென்றான்.

(இ - ள்.) வாள் நித்திலம் வெள் நகையார் - ஒளியினையுடைய முத்துப்போலும் வெள்ளிய பற்களையுடைய சேடிமார், தர - மரவுரிகொணர,—வள்ளல் தம்பி-லக்குமணன், 'யாணர் திருநாடு இழப்பித்தவர்-புதுமையையுடைய அழகிய நாட்டை யிழக்கும்படிசெய்த அந்தக்கைகேயியார், ஈந்த எல்லாம் - கொடுத்தவையனைத்தையும், பூண பிறந்தான்உம்-அணியப்பிறந்த இராமனும், நின்றான்-(இதோ)நின்றான்; அனைவ-அவற்றை, போர் விலோடுஉம்-பொருதலுக்செய்கின்ற வில்லுடன் (இருந்து), காண பிறந்தேன்உம்-பார்க்கப்பிறந்த நானும், நின்றேன்—; அனைவ-அவற்றை, காட்டும்—,' என்றான்—; (எ - று.)

வள்ளல்தம்பி - இராமன்பின்னவன். நாட்டையிழப்பித்த பெரியவராதலின் அவர் எதையீந்தாலும் பூணவேண்டியதே அவர்க்குக் கீழ்ப்படிந்தவர்க்குக்கடமையென்பான், 'அவரீந்தவெல்லாம் பூணப்பிறந்தான்' என்றும், என்கையில் வில்லிருந்தும் பயன்படவில்லையே யென்ற மனத்தாங்கல்தோன்ற, 'போர்விலோடுங் காணப்பிறந்தேனும்' என்றுங் கூறுகின்றான். **பி - ம்:**—[1]வெண்ணகையார்களை, நன்னகையார்களை. [2]இழந்தீந்தவரீந்தது. [3]பிறந்தோனும். [4]அது. [5]காட்டுகென்றான். (சசசு)

கரும.—சீரையை வாங்கிக்கொண்டு இலக்குமணன் தாயைக் காணேக விடைகேட்டல்.

அன்ன [1]னவர்தந்தன வாதரத் தோடு மேந்தி
பின்ன விடர்[2]தீர்ந் துடனேனென வெம்பி ராட்டி
[3]சொன்ன லதுவே துணையாமெனத் [4]தூய நங்கை
பொன்ன ரடிமேற் பணிந்தா னவளும் [5]புகன்றாள்.

(இ - ள்.) அன்னன் - அவ்விலக்குமணன்,—அவர் தந்தன - அச்சேடிய ராற் கொடுக்கப்பட்டமரவுரிகளை, ஆதரத்தோடும் ஏந்தி - அன்போடு பெற் றுக்கொண்டு, 'இன்ன இடர் தீர்ந்து - இனியதல்லாத துன்பம்நீங்கி உடன்எகு - உடனே போவாயாக, என - என்று, எம் பிராட்டி-எமதுதலை வியாகிய நீ, சொன்னல் - சொல்லின், அதுவே துணையும்-அவ்விடையே சகாய மாகும்,' என-என்று, தூய நங்கை - தூய்மையையுடைய சுமித்திரையினது பொன்னார் அடிமேல் - பொன்னாலாகிய ஆபரணங்கள்பொருந்திய திருவடி களில், பணிந்தான் - வணங்கினன்; அவள்உம் புகன்றாள் - அவளுஞ் சொன் னாள்; (எ - று.)—சொல்லியதை மேலிரண்டு கவிகளிற் காண்க.

பிராட்டி - பிரான் என்பதன் பெண்பால். இக்கவிக்கு வேறுரைப்பாரு முளர். பி - பீ:—[1]வயினம்மடவாரவையங்கை நல்கி, வயினம்மடவாரவை யங்கைநல்க. [2]தீர்த்தனை; தீர்த்தென்னை. [3]சொன்னாள், சொன்னன். [4]தாய் நகையாள். [5]புகல்வாள்.

(கூகள)

கருக.—இதுவும் அடுத்த கவியும் - சுமித்திரை இலக்குமணனுக்குச் சில உபதேசமொழிகளைக்கூறி விடையீதலைத் தெரிவிக்கும்.

ஆகாத தன்றாலு னக்கவ்வன [1]மிவ்வ போத்தி
மாகாத [2]லிராமனம் மன்னவன் வையம் ஈந்தும்
போகா [3]வுயிர்த்தாயர்நம் [4]பூங்குழற் சீதை யென்ஏற
யேகா யினியிவ்வயி னிற்றலு மேத மென்றாள்.

(இ - ள்.) (சுமித்திரை இலக்குமணனைநோக்கி, 'அவனம்), உனக்கு ஆகாதது அன்று - அந்தக்காடு நீ செல்லுதற்குத் தகாததன்று; (இராமனுடன் காட்டுக்குச்செல்லுதலே உனக்குத்தகுதி); அவனம் - (நீ செல்லுகின்ற) அந்தவனம், இ அயோத்தி - இந்த அயோத்திமாநகர்: மா காதல் இராமன் - (உன்னிடத்தில் மிக்கஅன்பையுடைய) அவ்விராமபிரானே, நம் மன்னவன்- நம்முடைய தயரதமன்னனுவன்: நம் பூங் குழல் சீதை - பூவையணிந்த கூந் தலையுடைய நமது சீதையே, வையம் ஈந்துஉம் - (இராமன் பூமியைப்) பர தனுக்குக்) கொடுத்திட்டு (க்காட்டிற்கு) ச்சென்ற பின்பும், உயிர் போகா-பிரா ணனையிழவாத [உயிரைவைத்துக்கொண்டிருக்கின்ற], தாயர் - தாயாவள்,' என்ஏற - என்று கருதியவண்ணமே, ஏகாய் - (இராமனுடன்) செல்வாயாக:

இனி—, இ வயின் நிற்றல்உம் - இவ்விடத்தில் நிற்பதும், ஏதம் - குற்ற முடையதாகும்,' என்றுள் - என்றுகூறினாள்; (எ - று.)

'நீ இராமபிரானுடன் காட்டுக்குச்செல்லும்போது அயோத்தியையும் பெற்றோரையும் பிரிந்து செல்லவேண்டுமே! என்று கருதவேண்டா: இராம பிரானுடன் வசித்தலால், அவ்வனமே அயோத்திபோலும்: இராமனும் சீதை யுமே பெற்றோராவர்என்று இவ்வண்ணங்கருதி, இராமனுடன் செல்வாயாக: இனி, இங்குத் தாழ்த்தலுந் தகாது' என்றன ளென்பதாம். 'இராமனுள்ள விடம் அயோத்தி' என்பது,பழமொழி. 'அவ்வனம் இவ்வயோத்தி' என்ற தொடரில், இராமபிரான் பிரிந்து செல்வதனால் இவ்வயோத்தியாநகரம் பாழ் பட்டுத் தண்டகாரணியம்போலாய்விடுமென்பதும், இராமபிரான் சென்று சேர்வதனால் இதுவரையிற் பாழ்பட்டிருந்த அவ்வனம் பலவளங்களும் நிரம் பிச் செழித்துக் குளிர்ந்து வாழ்தற்கு இனிய இடமாகுமென்பதும் பெறப் படும். அம் மன்னவன் என்றும் பிரிக்கலாம். இச்செய்யுளில் அயோத்தி யென்பதற்குப் பரமபதமென்றும், மாகாதலிராமன் அம்மன்னவன் என்ப தற்கு - இலக்குமி விரும்புகின்ற ஸ்ரீராமபிரான் அகாரத்திறற் குறிக்கப்படு கின்ற இறைவனுவன் என்றும், நம்பூங்குழற்சீதை—, வையம் ஈந்தும் போகு ஆ உயிர்தாயர் - வையத்தை இராமன் ஈந்தபின்பும் அவனுடன்போகின்ற அந்த எல்லாவுயிர்க்குந் தாயாகிய திருமாமகளாவள் என்றும் விசேடவுரை வகுத்தலு முண்டு. "ராமம் தஸரதம்வித்தி மாம்வித்திஜநகாத்மஜாம் - அயோத் யாமடவீம்வித்தி கச்ச தாத யதாஸுகம்,' என்ற வான்மீகத்தின் பொருளைக் கொண்டது இச்செய்யுள்: காட்டிற்குச்செல் என்று விதிக்கவேண்டியது முக்கியமாதலின், 'ஆகாததன்றுலுனக்கவ்வனம்' என்று இச்செய்யுளில் அது முதலிற்கூறப்பட்டதென்க. வான்மீகி அருளிய அந்தஸ்லோகத்திற்குப் பெரிய வாச்சான்பிள்ளை யருளிச்செய்த விசேஷப்பொருள்களை இந்தப்பாட்டிற்கும் ஏற்றபெற்றி ஏற்றிக் கூறுவதுமுண்டு: அவை விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

சனகமகாராசன் வேள்விச்சாலை யமைப்பதற்காகப் பூமியை யுழுத பொழுது கலப்பையுழுபடைச்சாலில் அகப்பட்டவளாதலால், சீதை என்று திருநாமம்; ஸீதா - உழுபடைச்சால். அவ்வனம் என்றது - மத்திமதீபமாய், முன்னின்ற ஆகாததன்று என்றதனோடும், பின்னின்ற இவ்வயோத்தி யென்பதனோடும் இயையும். பி ம்:—[1]அய்யசெய்ய. [2]டன்னன்னிவன்வையக மீந்துவானிற், மன்னன்னிவன்மாகடலாயவைப்பிற், மன்னனிவன்வையக மீந்துயெய்யிற், மன்னனிவன்வையக மீந்து வானம். [3]இருதாயரும். [4]யாமெ னிற். (சசஅ)

கருஉ. பின்னும் பகர்வாண் மகனேயிவன் பின்[1]செ றம்பி
யென்னும் படியன் றடியாரினி லேவல் செய்தி
[2]மன்னுந் [3]நகர்க்கே யிவன் [4]வந்திடன்வா வ தன்றோன்
முன்னம் முடியென்றனள் [5]வார்விழி சோர நின்றுள்.

(இ - ள்.) பின்உம் - மீண்டும், பகர்வாள் - (சுமித்திரை இலக்குமணனுக்கு உறுதிமொழிகளைக்) கூறுபவளாய்,(அவனைநோக்கி),மகனே—!இவன் பின் செல்-இவ்விராமபிரானுக்குப் பின்னேபோ;'அங்ஙனம்செல்லுமிடத்து) தம்பி என்னும்படி அன்று - (பார்ப்பவர் இவன்) தம்பியென்னும்படியல்லாமல், அடியாரினில் - அடிமையாயிருப்பவரைப்போல், ஏவல் செய்தி-(அவ்விராமபிரான்) ஏவுந் தொழிலைச் செய்வாய்; இவன் - இவ்விராமன் மன்னும் நகர்க்கு ஏ - (பலவளங்களும்) பொருந்திய நகரத்துக்கு, வந்திடின் - மீண்டு வந்தால், வா-கூடவா; அது அன்றுஎல்-அப்படியல்லாமற் போனால், முன்னம் முடி - (அவனுக்கு) முன்னமே உயிரைத்துறந்துவிடு,' என்றனள்-என்றுசொல்லி, வார் விழி -(தனது) நீண்ட கண்களின்று, சோர - (கண்ணீர்) பெருக, நின்றாள்—; (எ - று.)

'நீ இராமபிரானது பின்னேசெல்லும்பொழுது ஓர் அரசகுமாரனென்றும் இராமபிரானதுதம்பியென்றும் கண்டவர் நினைக்கும்படி பெருமிதங்கொண்டு செல்லாமல், அவ்விராமனுக்கு வேண்டிய குற்றேவல்செய்வதே உனக்கு அழகாகும். ஒருகால் அவ்விராமனுக்கு ஏதேனும் ஆபத்துவருமெனத் தோன்றினாலும் அதனைத் தடுக்குமாறு உன்னுயிரையும் நீ ஈதல் தகுதி' என்று தனது புதல்வனாகிய இலக்குமணனுக்கு உபதேசித்துச் சோகத்தினால் சுமித்திரை கண்ணீரைப் பெருக்கினின்றனளென்பதாம். கண்ணிற்குப்புலனாகாத அருவப்பொருளாகிய அன்பைக் காட்டுதற்குக் கண்களினின்று நீர் சோரல் அறிகுறியாமென்க. இராமபிரானுக்கு ஆபத்து நேருமாயின் என்று கூறுதற்குக் கூசி, 'அதன்றேறல்' என்றாள். மன்னும் நகர் - மனுசக்ரவர்த்தி முதல் சூரியகுலத்து மன்னவரால் தலைமுறை தலைமுறையாக அரசாண்டு வந்த நகரமெனினுமாம். பின்செல்தம்பி என்னும்படி - பின்னேசெல்லுகின்ற தம்பியென்னும்படி என்று உரைப்பினுமாம். பி - ம்:—[1]செல்வதம்பி. [2]மன்னன். [3]நகர்க்கீண்டிடுவன். [4]வந்திடில். [5]பான்முலை. (கூகூ)

வேறு.

கருத.—இராமலட்சுமணரிருவரும் வணங்கிச் சுமித்திரையிடம் விடைபெற்று, மாவுரிதரித்து வெளியே செல்லுதல்.

இருவருந் தொழுதன ரிரண்டு கன்றொரீஇ
வெருவரு [1]மாவினிற் ரூயும் விம்மினாள்
பொருவருங் [2]குமரரும் போயி னர்[3]புறந்
திருவரை[1]த் தகிலொரீ இச்[5]சீரை [6]சாத்தியே.

(இ - ள்.) இருவர்உம் - இராமலட்சுமணரிரண்டுபேரும், தொழுதனர் - (காட்டிற்குச்செல்லுமாறு விடைபெற்றுச் சுமித்திரையை) வணங்கினர்கள்; அப்பொழுது), தாய்உம் - சுமித்திரையும், இரண்டு கன்று ஒரீஇ - (தனது) இரண்டு கன்றுகளை விட்டுநீங்கி, வெருவரும் - (அந்நீக்கத்திற்கு) அஞ்சுகின்ற, ஆவினில் விம்மினாள் - பசுவைப்போல மனங்கலங்கிப் புலம்பினாள்;

பொருவு அரு குமரர்உம்-(தமக்கு)உவமையில்லாத அம்மைந்தரும்,திரு அரை துகில்-(தமது) அழகிய அரையில்தரித்த பட்டாடைகளை, ஒரீஇ-நீக்கி, சீரை சாத்தி - மரவுரியையுடுத்துக்கொண்டு, புறம் போயினர்-வெளியே சென்றனர்.

தாம் காட்டுக்குப்போவதைத் தெரிவித்து விடைபெற்ற இராமலட்சு மணர் தொழுதபோது, அவர்களைப் பிரியவேணுமேயென்று கன்றைப்பிரியும் பசுப்போற் சுமித்திரை யஞ்சி வருந்தினளாக; அப்போது அவ்விருவரும் தமது திருவரையிற்சாத்திய பட்டாடைகளைக் களைந்து மரவுரிகளைத் தரித் துக்கொண்டு சுமித்திரையின் மாளிகையினின்று வெளியேபோயின ரென்க. இராமலக்குமணரைப் பிரியுஞ்சுமித்திரைக்கு, இருகன்றுகளைஒருவும் ஆ உவ மை. ஒரீஇ என்ற செய்தினெச்சத்தை ஒருவனென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு எனக் கொள்ளினுமாம். பி - ம்:—[1]தாயென. [2]குமரனும்போயினன். [3]பொனின், புனை. [4]தனிலெரு. [5]சீரம். [6]சாத்தவே. (சரு0)

கருச.—இதுவும் அடுத்தகவியும் - ஒருதொடர்: மரவுரிதரித்த இலக்குமணனைநோக்கி,இராமன்'இந்தத்தானேயிரு'என்றலைத்தெரிவிக்கும்.

தான்புனை சீரையைத் [1]தம்பி [2]சாத்திடத்
தேன்புனை தெரியலான் [3]செய்கை நோக்கினன்
வான்[4]புனை யிசையினைய் [5]மறுக்கி லாதுநீ
யான்[6]புக லினையதோ ருறுதி கேளெனை.

(இ - ள்.) தான் புனை சீரையை - தான் உடுத்துக்கொண்டதுபோன்ற மரவுரியை, தம்பி சாத்திட - லக்ஷ்மணனுமுடுத்துக்கொள்ள,—தேன் புனை தெரியலான்-வண்டுகள் மொய்க்கின்ற மாலையையணிந்த ஸ்ரீராமன், செய்கை நோக்கினன் - (அவனது) தொழிலைப்பார்த்து; 'வான் புனை இசையினைய - தேவலோகத்தையும் அலங்காரிக்கின்ற கீர்த்தியையுடையவனே! யான் புகல் - நான் சொல்வதாகிய, இனையது ஓர் உறுதி-இந்தச்சிறந்ததாகிய ஒரு நல்வார்த் தையை, நீ மறுக்கிலாது கேள் - நீ மறுக்காமற் கேட்பாயாக,' எனை - என்று சொல்லி,—(எ - று.)—"என்றான்" என அடுத்த கவியில் முடிபு காண்க.

தேன்புனை தெரியல்-மதுப்பொருந்திய மாலையுமாம். பி-ம்:—[1]தானும். [2]சாத்துமத், சுற்றுமத், சுற்றுறும். [3]தெரிய. [4]புகழ், புரை. [5]மறுக்கலாது. [6]புகற்கையதோர், புகல்வினையதோர், புகறகையதோர். ஈற்றடி 'யான் புக லுறுதியைக் கேளென்றோதுவான்' என்று சிலபிரதியி லுள்ளது. (சருக)

கருரு. அன்னைய ரனைவரு மாழி வேந்தனு
முன்னைய ரல்லர்வெந் துயரின் மூழ்கினர்
ரென்னையும் பிரிந்தன ரிடரு றுவகை
யுன்னைநீ யென்பொருட் டுதவுவா யென்றான்.

(இ-ள்.) 'அன்னையர் அனைவர்உம்-தாயர் யாவரும், ஆழி வேந்தன்உம் - சக்ரவர்த்தியும், முன்னையர் அல்லர் - முன்னிருந்த நிலைமையரல்லர்; வெம்

துயரில் மூழ்கினர்-கொடிய துன்பத்தில் ழுழ்ந்தினர்; என்னையும் பிரிந்தனர்-; இடர் உறு வகை - (அவர்) துன்பமடையாதபடி, நீ—, என்பொருட்டு—, உன்னை உதவுவாய்-உன்னை (அவர்க்குத்) துணையாகச் செய்வாய்,'என்றான்-.

அன்னையர் - கோசலையும் சுமித்திரையும்: இனி, சக்ரவர்த்திக்கு முன் சொன்ன மூவர் தவிர அறுபதினாயிரமனைவிய ருண்டாதலின், அவரையெல்லாங் குறிக்க 'அனைவரும்' என்று னென்பாருமுளர். துயரின் மூழ்கினரென்பதற்குக் காரணங்கூறுவான் 'என்னையும்பிரிந்தனர்' என்றான். என்னையுமென்ற எச்சவும்மை, பரதசத்துருக்கனர்களைப் பிரிந்தமை யன்றி யென்றது குறித்து நின்றது: இனி, கைகேயியின் கொடுமைக்கு இலக்கானமையேயன்றி, அதன்பயனாக என்னையும் பிரிந்தனர் எனக் கொள்ளலுமொன்று. இனி, என்னைப்பிரிந்தனராய்த் துயரின்மூழ்கினர்; அவர் அவ்விடருறுவகை உன்னையுதவுவாயென்றுமாம். அன்றி, இடர் என்றது, இலக்குமணனைப் பிரிவதனா லுண்டாந் துன்பத்தை யென்றலுமாம். (சருஉ)

கருசு—இதுமுதல் ஐந்துகவிகள் - இலக்குமணன் மறுமொழி.

ஆண்டகை யம்மொழி பகர [1]வன்பனுந்
தூண்டகு திரள்புயந் [2]துளங்கத் [3]துண்ணெனு
மீண்டதோ [4]ருயிரிடை [5]விம்ம விம்முவா
னீண்டெனக் கடியனேன் பிழைத்த தியா [6]தென்றான்.

(இ - ள்.) ஆண் தகை - ஆண்மைக்குணநிறைந்த ஸ்ரீராமன், அ மொழி பகர-அவ்வார்த்தையைச் சொல்ல, அன்பன் உம்-(அவனிடத்துப்) பக்தியையுடைய லக்ஷ்மணனும்,—தூண் தகு திரள் புயம் துளங்க - தூணினையொத்த திரண்டதோள்கள் நடுங்கும்படி, துண்ணெனு-அஞ்சி,—மீண்டது ஓர் உயிர்-திரும்பிவந்ததாகிய ஒருசீவன், இடை விம்ம - நடுவிலே கலங்கும்படி, விம்முவான்-அழுபவனைய், 'ஈண்டு - இப்பொழுது, உனக்கு-தேவரீர்பக்கல், அடியனேன் - அடியேன், பிழைத்தது - தவறுசெய்தது, யாது—?' என்றான்—.

நான் உன்திறத்து யாதும் பிழை செய்யாதிருக்கவும், உன்னைவிட்டுப் பிரிந்து என்னை வசிக்குமாறு சொல்வது என்னே என்கிறான், இலக்குமணன். தூண் - திரட்சிக்கும் நீட்சிக்கு முவமை. தகு - உவமவுருபு. ஸ்ரீராமன் வனஞ்செல்வதுகேட்டு மிகக்கலங்கிப்பின் ஒருவாறுதெளிந்துள்ள இலக்குமணன்விம்முவதனால்'மீண்டதோருயிரிடைவிமமவிம்முவான்'என்றது. பி-ம்:--
[1]ஐயனும். [2]துளங்கி. [3]திண்ணென. [4]உயிரொடும். [5]விம்மி. [6]எனை. (சருஙூ)

கருஎ. நீருள வெனிலுள [1]மீனு நீலமும்
பாருள வெனிலுள [2]யாவும் [3]பார்ப்புறி
லுருள கணுவுளாய் நாலுஞ் சீதையு
மாருள மானிலும்ள [4]மருவு வாமியன்றான்.

(இ - ள்.) நார் உள தனு உளாய் - நாணினையுடைய கோதண்டத்தை யுடையவனே! பார்ப்புறின் - யோசித்துப்பார்த்தால், நீர் உள எனின் - நீர் இருக்குமாலால், மீன்உம் - மீன்களும், நீலம்உம் - கருங்குவளைகளும், உள - இருக்கின்றன; பார் உள எனின்-உலகங்களிருக்குமாலால், யாஉம் - எல்லாச் சீவகோடிகளும், உள - இருக்கின்றன; (அதுபோல), நான்உம் சீதைஉம் - அடியேனும் பிராட்டியும், ஆர் உளர் எனின்-யாரிருந்தால், உளேம் - இருப் பவராவேம்? அருளுவாய்-சொல்வாயாக,' என்றான்—; (எ - று.)

நீருள்ளவிடத்து மீனும் நீர்ப்பூவாகிய நீலமும் இருப்பதுபோலவும், பாருள்ளவிடத்துப் பல்வேறு சீவராசிகளும் இருப்பதுபோலவும், நீயுள்ளவிட த்து நானும் சீதையும் இருப்போமேயன்றி, நாங்களிருவரும் நின்னைப்பிரிந்து உயிர்வாழோம்என்றனன் இலட்சுமண னென்க. "ந ச ஸீதா த்வயா ஹீநா நசாஹமபிராகவ-முஹூர்த்தமபிஜீவாவோஜலாந்மத்ஸ்யாவிவோத்தரு தள" என்ற ஸ்ரீவால்மீகிராமாயண ஸ்லோகத்தின் கருத்தைக் கொண்டது, இச் செய்யுள். நீரிலிருந்து எடுக்கப்பட்ட மீன் நீர்ப்பசையுள்ளமட்டுமே பிழைத் திருப்பதுபோல,உன்னைப்பிரிந்த சீதையேனும்நானேனும் விரைவிற்கூடுவோ மென்ற கருத்து இருக்கும்வரையில்தான் பிழைத்திருப்போமே யன்றி அஃது அற்றால் உயிரோடிரோம் என்று இந்த ஸ்லோகத்துக்கு விசேஷப்பொருளு ரைப்பது,கவனித்தற்குஉரியது.நீரை உண்டென்றது, உளவென்றல் "தகுதி யும்வழக்குந் தழீஇயினவொழுகும்,பகுதிக்கிளவி வரைநிலையிலவே"என்னுஞ் சூத்திரத்தானமைந்தது. அருளுவாய் என்பதற்கு உடன்வரும்படி கிருபை செய்வாயென்று மூரைக்கலாம். பி-ம்:—[1]மீனினீடுயிர், மீனுமியாவையும், மீனுமாமையும். [2]பாரம், பார்ப்பு. [3]பொற்புற. [4]அருளுநீ. (சுருசு)

கருவு. பைந்தொடி யொருத்திசொற் கொண்டு பார்மக
ணைந்துயிர் [1]நடுங்கவு நடத்தி காவனு
வுய்ந்தன னிருந்தன னுண்மை காவலன்
மைந்தனென் றியசொல் வழங்கி னையெனை.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) 'பைந் தொடி ஒருத்தி சொல் கொண்டு-பசும்பொன்னாலாகிய வளையல்களையணிந்த ஒருமனைவியினதுவார்த்தையால், பார்மகள்-பூமிப்பிரா ட்டி, நைந்து-வாடி, உயிர் நடுங்க—,கான் நடத்தி-காட்டிற்குச் செல்வாயாக, எனை உம்-என்று எவியும், உய்ந்தனன் இருந்தனன் - பிழைத்திருந்தவனாகிய, உண்மை காவலன் - மெய்யைக்காப்பவனென சக்ரவர்த்தியினது, மைந்தன் என்று - மகனென்று(என்னைஎண்ணியோ), இனைய சொல்-இத்தகையவார்த் தையை, வழங்கினை - சொன்னை?' எனை - என்றுசொல்லாநின்று,—(எ-று.)

தந்தைபோல்வான் தநயனுதலின், அச்சக்ரவர்த்திமகனாகிய யான் அவர் போலவே உன்னைப் பிரிந்திருந்துயிர்வாழ்வேனென்று கருதியோ இங்ங னங்கூறினை? என்றனனென்க. இச்செய்யுளின் கருத்தை "நின்கட்பரிவில்

லவர்'' (கஙக) என்று இப்படலத்திற் கீழ்வந்த செய்யுளோடு ஒப்பிட்டுஅறிக. இனி இச்செய்யுட்கு-உன்னைக்காட்டுக்கு அனுப்பியும் உயிர்நீங்காத தசரதனது குமாரன் நீ என்றதற்குஏற்ப நீ இங்கேதானேயிரு என்று கொடிய சொல்வழங்கிஞையென்றுஉரைப்பது, சிறவாது. பீ-மீ:—[1]ஒடுங்கவும். (சருஙு)

கருகூ. மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
வேறின [1]வெகுளியை யாது [2]முற்றுற
வாறினை தவிர்கென வையவாணையிற்
கூறிய மொழியினுங் [3]கொடிய தாமென்றான்.

(இ - ள்.) 'ஐய-சுவாமி! நீ வனம் கொள்வாய் என-நீ காட்டிற்புகுவா யென்று, ஏறின வெகுளியை-(யான்) கொண்ட கோபத்தை, 'யாதுஉம் முற்றுஉற-சிறிதுமில்லாதபடிஒழிய, ஆறினை-தணிந்தவனுய், இனி—, தவிர்க-நீங்குக',என-என்று, ஆணையின்-ஏவலாக, என்னை-என்னைக்குறித்து,மாறு-பிரதியாக, கூறிய—, மொழியின்உம்-வார்த்தையினும், கொடியது ஆம்-(நீ இங்கே தானேயிரு என்ற இச்சொல்) கொடுமையையுடையதாகும்,' என்றான்—.

உன்னைக் காட்டுக்குச்செல்லுமாறு விடுத்தற்காக யான் சினங்கொண்ட போது கோபத்தைத் தணியுமாறு என்னைக்குறித்துக் கூறிய சொல்லினும் நீ இங்குத்தானேயிரு என்றுசொல்லிய இச்சொல் மிகக் கொடியதாயுள்ளதென்றனனென்க. கோபமாறினாலும் உனக்குப்பணிவிடைசெய்துகொண்டு உடன் உறையலா மென்று கருதுதற்காவது வழியிருந்தது: இப்போது அங்ஙனங் கருதுதற்கும் இச்சொல் இடம் தராததனாற் கொடிதாகுமென்றன னென்க. முதலடிக்கு-நீ என்னை வனம்வருவா யென்பதுதோன்ற இருந்திட்டு, இப்போதாக மாறுதலையடைய என்ன காரணம்? எனக் கூறலாம். நான் உடன் வருதற்கு முன்னமேயிசைந்திருந்து இப்போது வேண்டாமென்கிறுயே என்ற பொருள்கொண்டதாய், ஸ்ரீவான்மீகிராமாயணத்தில் இலக்குமணன் கூற்றுக "அநுஜ்ஞாதஸ்ச பவதா பூர்வமேவ யதோஸ்ம்யஹம்-கிமிதானீம் புநரிதம் க்ரிய தே மோகிவாரணம் (ஙூ,எ)"என்று வருவதும், "மகனேம்மகனுந் தனகண்கள் போல்வார், தண்டாவனஞ் செல்வதற்கே சமைந்தார்"என்று கீழ்வந்த கசசு-ஆஞ்செய்யுளும் இவ்வாறு பொருள்கொள்ளுதலேற்கு மென்பதை வலியுறுத்தும். பீ-மீ:—[1]வெகுளித்தீ. [2]முற்றுறுது, இற்றிற, இற்றிராது. [3]கொடிதி தாம், கொடிதிதால். இச்செய்யுளை "மாறினை யென்னைநீ வனம் வரேலென, வேறியவெகுளி மற்றியாதிப்பார்வள, ஞறினைதவிர்கெனவையவாணையிற், கூறியமொழியினுங் கொடியதாமென்றார்" என்று ஓரிரைரும் உளர். இச்செய்யுள் சில பிரதியில்லை. (சருசு)

கசுஙு. [1]செய்துடைச் செல்வமோ யாதுந் தீர்ந்[2]தெனைக்
கைதுடைத் தேதகவுங் கடனை யோவையா
நெய்துடைத் [3]தடையலர் நேய மாதர்கண்
மைதுடைத் துறைபுகும் [4]வயங்கொள் [5]வேலினாய்.

(இ - ள்.) நெய் துடைத்து-நெய் பூசப்பட்டு, அடையலர்-சத்துருக்களுடைய, நேயம் மாதர் - விருப்பத்தினையுடைய மனைவியாது, கண் - கண்களிலிட்ட, மை - அஞ்சனத்தை, துடைத்து - அழித்து, உறை புகும்-உறையையடைகின்ற, வயம் கொள் வேலினுய் - வெற்றியைக்கொள்கின்ற வேலினையுடையவனே! ஐயா - தலைவனே! (நீ), செய்து உடை செல்வம்ஓ யாதுஉம் தீர்ந்து - உனக்குரித்தாகவுடைய பாக்கிய மெல்லாவற்றையும் நீங்கி, எமை உம் - எம்மையும், கைதுடைத்து - கைவிட்டு, ஏக கடவையோ - (காட்டிற்குப்) போகக்கடவாயோ? (என்றும் இலட்சுமணன் இராமனை நோக்கிக்கூறினான்).

செல்வம் ஈட்டுதற்குரிய தாதலின் 'செய்துடைச்செல்வம்' என்றான்: இனி, பரசுராமனை வென்றதுகண்டு தசரதமன்னவன்முதலியோர் இவனுக்கு அரசு தகு மென்று நினைத்துள்ளாரென்பது "வடிமழுவாளவற்கடந்த மைந்தற்கு, முடிபுனைமுதன்மைநாண் மொழிமின்," "சேவகன் சேவகஞ்செகுத்த சேவகற், காவலிவ்வுலகம்" என்பவற்றுல் விளங்குவதுபற்றி, செய்துடைச் செல்வம் என்பதற்கு - தன் வீரத்தாற் சம்பாதிக்கப்பட்டதாகவுடைய அரசச் செல்வம் என்று உரைத்தலுந் தகும். செல்வத்தைக்கைவிட்டுக் கானகஞ் செல்லுமாறு மன்னவ னேவியதுபற்றி, உன்னுடைமையான என்னையுங் கைவிட்டுச் செல்லவேண்டுவது கடமையெனக் கருதுகின்றுயோ? என்றனன் இலக்குமண னென்க. கைதுடைத்தல் - இலக்கணையால், அறவே விட்டிடுதல் என்ற பொருளைக் காட்டிற்று. பி - ம்:—[1]செய்திடை. [2]என்னை. [3]அடையலார். [4]மறம். [5]வாளினுய். (சருள)

கசுஉக.—இராமன் மறுமொழி சொல்லமாட்டாதிருத்தல்.

உரைத்தபின் னிராமனென் றுரைக்க [1]நேர்ந்திலன்
வரைத்தடந் தோளினுன் வதன நோக்கினுன்
விரைத்தடந் தாமரைக் [2]கண்ணின் [3]மிக்கநீர்
நிரைத்திடை யிடைவிழ நெடிது நிற்கின்றுன்.

(இ - ள்.) உரைத்த பின் - (இவ்வாறு இலக்குமணன்) சொன்னபின்பு, இராமன் ஒன்று உரைக்க நேர்ந்திலன் - ஸ்ரீராமன் (அதற்கு எதிராக) ஒரு மொழியுஞ் சொல்லமுடியாதவனுகி, (அப்பொழுது), வரை தட தோளினுன் - மலைபோன்ற பெரிய தோள்களையுடைய லக்ஷ்மணனது, வதனம் நோக்கினுன் - முகத்தைப் பார்த்தான்: (அங்ஙனம்பார்த்தகாலத்தில்), விரை தட தாமரை கண்ணின் - வாசனையையுடைய பெரியதாமரைமலர்போன்ற (தன்)கண்களில், மிக்க நீர்-பூரித்த நீர், நிரைத்து-ஒழுங்காய், இடை இடை-இடையிடையே, நெடிது விழ - விடாது சிந்தும்படி, நிற்கின்றுன்-(இலக்குமணன்) நின்றுகொண்டிருந்தான்; (எ - று.)

மறுமாற்றஞ் சொல்லமுடியாது ஸ்ரீராமன் லக்ஷ்மணன் முகத்தைப்பார்த்தான்: அப்பொழுது அவ்விலக்குமணன் கண்ணீர்பெருக்கிக்கொண்டிருப்ப

தைக் கண்டானென்க. இனி, இராமன் ஒன்றுஞ் சொல்லமுடியாதபோது இலக்குமணன் இராமன்முகத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்துக்கொண்டு நிற்பவனையிஞ னென உரைத்தலும் ஒன்று. பி - பீ:—[1]நோக்கிலன், நேர்க லன். [2]கண்ணினர். [3]மிக்கு. (சுநஅ)

கசுஉ.—அப்போது வசிட்டமுனிவன் அங்குவருதல்.

அவ்வயி னரசனை நின்று மன்பின
னெவ்வமி [1]லிருந்தவ முனிவ னெய்திஞன்
செவ்விய குமரருஞ் [2]சென்னி தாழ்ந்தனர்
[3]கவ்வையம் [4]பெருங்கடன் முனியுங் காவ்வைத்தான்.

(இ - ள்.) அ வயின்-அப்பொழுது, அரசு அனை நின்றும்-ராஜசபையி னின்றும், அன்பினன் - (ஸ்ரீராமன் முதலியோரிடத்து) அன்பை யுடையவ ஞகிய, எவ்வம் இல் இரு தவம் முனிவன் - குற்றமில்லாத மிக்க தவத்தையு டைய வசிஷ்டன், எய்திஞன் - எழுந்தருளினஞன்: செவ்விய குமரர்உம் - (உலகோர்விரும்பும்) அழகையுடைய சக்ரவர்த்திதிருமகர்களும், சென்னி தாழ்ந்தனர் - தலையால் வணங்கினர்; முனிஉம் - அவ்வசிஷ்டனும், கவ்வை பெரு கடல் - துன்பமாகிய பெரியசமுத்திரத்தில், கால்வைத்தான் - மூழ்கத் தொடங்கினன்; (எ - று.)

"அரசனிருந்தநல்லனையினனென்" (கூஉ)என்று கீழ்வந்தமையால், அதனை டொட்ட 'அரசனைவின்றும்' என்றார். அப்போது வசிட்டமுனிவன் வந்து குமரரைக்கண்டு பெருந்துன்பமடைந்தன னென்பதாம். முனியும் - உலகப் பற்றில்லாதவனுதலால் எப்போதும் துன்பத்தைக் கண்டிராதவனை முனி வனும் என்க. கவ்வை...கால்வைத்தான் - "பரிந்தழுவதற்கு அடியிட்டவாறு கண்டாய்" என்றுற்போன்ற வழக்கு. அம் - சாரியை. பி-பீ:—[1]அருந். [2]சென்னைகூப்பினர். [3]கவ்வையின். [4]கடலிடை. (சுநக)

கசுந.—வசிட்டமுனிவன் வருந்துதல்.

[1]அன்னவர் முகத்தினை டகத்தை [2]நோக்கினன்
பொன்னரை[3]ச் சீரையின் பொலிவு நோக்கினை
னென்னினி யுணர்த்துவ தெடுத்த துன்பத்தாற்
றன்னையு முணர்ந்திலனுணருந் தன்மையான்.

(இ-ள்.) உணரும் தன்மையான்-(தத்துவ நெறிகளை யறிகின்ற) மெய்யு ணர்வையுடைய அவ்வசிஷ்டமுனிவன், - அன்னவர் முகத்தினை அகத்தை நோக்கினன்-அவர்களுடைய முகத்தையும் மனத்தையும் பார்த்தான்; பொன் அரைசீரையின் பொலிவுஉம் நோக்கினன்-(பீதாம்பரத்தை யுடுக்குந்)திருவரை யிற்சாத்திய மரவுரியினது அழகையும் பார்த்தான்;என் இனி உணர்த்துவது-இனிச் சொல்லவேண்டுவது யாது? எடுத்த துன்பத்தால்-உண்டாகியதுயரத் தினால், தன்னைஉம் உணர்ந்திலன் - தன்னையும் மறந்தான்; (எ - று.)

முகத்தை ஊனக்கண்ணலும், அகத்தை ஞானக்கண்ணலும் நோக்கினனென்க. இனி, ஒடு என்னும் மூன்றனுருபு ஆல்எனப் பொருள்பட்டு, முகமாகிய கருவியால் அவர் கருதியவதனைக் கூறுமல்அறிந்தா னென்றுமாம். பி-ம்:—[1]அன்னவன். [2]நோக்குவான். [3]உரியும்பொற்சடையும். (சசுஎ)

கசுச. —வசிட்டன் உள்ழ்விதியின்வலிமையை நினைந்துகூறுதல்.

வாழ்வினை நுதலிய மங்க லத்துநாட்
டாழ்வினை யதுவரச் சீரை சாத்தினன்
சூழ்வினை நான்முகத் [1]தொருவற் சூழினு
மூழ்வினை யொருவரா [2]லொழிக்கற் பாலதோ.

இதுவும் அதற்க கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள் - (கிரீடந் தரித்து வாழ்தற்குக் கூறிய சுபதினத்தில், தாழ் வினை அது வர - (அது) கழிதற்குரிய தீவினைவந்துசேர, சீரை சாத்தினன் (ஸ்ரீராமன் கிரீடம்புனைவதையொழிந்து) மரவுரியைத் தரித்தான்: சூழ் வினை - (விடாது தொடர்ந்து) சூழ்ந்திடுகின்ற தீவினைப்பயன், நான்முகத்து ஒருவன் சூழின்உம் - நான்குமுகங்களையுடைய ஒப்பற்ற பிரமதேவனைச் சூழ்ந்திட்டாலும், ஊழ்வினை - (செய்தவனையே சென்றடையுந் தன்மையுள்ள) அவ்வூழ்வினை, ஒருவரால் ஒழிக்கல்பாலது ஓ - ஒருவரால் நீக்குதற்குரிய தன்மையையுடையதோ? [அன்றுஎன்றபடி]; (எ-று.)

படைக்குந் தொழிலைச் செய்கின்ற பிரமதேவனுனையும் அவனையும் சூழ்ந்திட்டுத் தன்பயனைத் தரவல்ல ஊழ்வினைக்குள்ள முறைமை எவராலும் நீக்கவொண்ணுதலால், மகுடாபிஷேகஞ்செய்யும்படி நாளிட்ட இன்றைத் தினம் தீவினைப்பயனால் இராமபிரான் முடிபுனைதல் நீங்கி மரவுரியைத்தரிக்கும்படியாயிற்றே! என்று வசிட்டன் வருந்திக்கூறினனென்க. 'இராமன் சீரைசாத்தினன்' என்ற சிறப்புப்பொருளை, 'எப்படிப்பட்டவரை ஊழ்வினை சேர்ந்தாலும் அது எவராலும் தடுக்கக்கூடியதன்று' என்ற பொதுப்பொருள் சமர்த்தித்து நின்றதனால், இச்செய்யுள் - வேற்றுப்பொருள்வைப்பணியாம். விதித்தற்றொழிற்கு உரிய பிரமனைக் கூறினமையால், மற்றையோருடைய விதி ஒழித்தற்குரியதன்றென்பது தானே பெறப்படும். வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள் - இராமபிரானுக்குப்பட்டாபிஷேகஞ்செய்யும்படி நிச்சயித்த நாள். சூழ்வினை என்றஇடத்து வினை யென்றது; ஆதியிற்கொண்ட சங்கற்பத்தை யென்பது உள்ளுறை: உலகவழக்குப்பற்றி, இங்ஙனங் கூறினான். பி-ம்:— [1]ஒருவன்றொன்றினும். [2]ஒழிக்கலாகுமோ. (சசுக)

கசுரு — வசிட்டன் இராமனது வனவாசத்தைக்குறித்துத் தன்மனத்துட் கருதுதல்.

வெவ்வினை யவடா விளைந்த [1]தியுமன்
றிவ்வினை யிவன்வயி னெய்தற் [2]பாற்றுமன்
றெவ்வினை நிகழ்ந்த [3]தோ வெண்ணி மற
[4]செவ்விதி னெனுரு[5]வையு நெரியும் பின்[5]னென்றான்.

(இ - ள்.) வெவ் வினை - இக்கொடுந்தொழில், அவள் தர - அக்கைகேயி உண்டாக்கியதால்மாத்திரம், விளைந்தது ஏஉம் அன்று-உண்டானதும் அன்று; இ வினை - இத்தொழில், இவன் வயின்-இவனிடத்தில், எய்தல்பாற்றுஉம் - அடைதற்குரியதன்மையை யுடையதும், அன்று—; எ வினை நிகழ்ந்ததுஓ - எவ்வினையிலுல் நடந்ததோ? எவர் எண்ணம்ஓ-எவருடைய ஆலோசனையோ? பின்—, ஒருமுறை-ஒருவழியாக, செவ்விதின் தெரியும் - நன்ருய்த்தெரியும், என்ருன் - என்று (மனத்திற்) கருதினன்; (எ - று.)

கைகேயி வியாஜமாத்திரமே: இராமனது தன்மையைப் பார்க்குமிடத்தும் காட்டிற்குப்போமாறு நேர்வது தக்கதன்று: இது எவரது எண்ணத்தால் நிகழ்ந்த வினைவோ? இவ்விஷயம் பிறகு நன்குவிளங்குமென்றன னென்க. 'தேவர்களின் சூழ்ச்சியால் நிகழ்ந்தது இது' எனப் பின்னர் விளங்குமென்பது, வசிட்டன் குறிப்பு. பி-ம்:—[1]எனுமற்று. [2]பாலதோ. [3]தேவர், மேலோர். [4]செவ்விதென்று. [5]எனை.

(சசுஉ)

கசுசு.—வசிட்டன் இராமனைநோக்கி நீ சென்றல் மன்னவன் இறப்பானெனல்.

விற்றடந் தாமரைச் [1]செங்கண் வீரனை
யுற்றடைந் தையநீ [2]யொருவி யோங்கிய
கற்றடங் காணுதி யென்னிற் கண்ணகன்
மற்றடந் [3]தானையான் [4]வாழ்கி லானென்ருன்.

(இ - ள்.) 'வில் - கோதண்டத்தையும், தட தாமரை செங்கண் - பெரிய தாமரைமலர்போன்ற சிவந்த திருக்கண்களையு முடைய, வீரனை-ஸ்ரீராமனை, உற்று அடைந்து - பொருந்தி யடைந்து, 'ஐய - குழந்தாய்! நீ—, ஒருவி - நீங்கி, ஓங்கிய கல் தடம் - உயர்ந்த மலைகளையுடைய வனத்தை, காணுதி - காண்பாய்,' என்னின்-ஆனல், கண் அகல் மல் தட தானையான்-இடமகன்ற [மிக்க]வலியினையுடைய பெரிய சேனையையுடைய சக்ரவர்த்தி,வாழ்கிலான்-உயிரோடு வாழ்ந்திரான்,' என்ருன் - என்றுகூறினன் (வசிஷ்டன்; (எ-று.)

அன்போடடைந்தென்பான் 'உற்றடைந்து'என்றும்,கொடிய வனமென்பான் 'ஓங்கிய கற்றடம்' என்றுங் கூறினன். "கன்னிரைந்து தீய்ந்து கழையுடைந்து கால்சுழன்று, பின்னுந் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவாக், கொன்னவிலும் வெங்கானம்" என்னும்படி காட்டின் கொடுமைதானிருக்குமென்க. காணுதல் - இலக்கணையாய், அடைதற்பொருட்டாயிற்று. பி-ம்:—[1]செங்கை. [2]ஒருவலையகன். [3]தாளினன். [4]வாழ்விலான்.

(சசுங)

கசுஎ.—தன்கடமையும் முனிவன்கடமையும் இன்னவென இராமன் கூறுதல்.

அன்னவன் பணிதலை யேந்தி யாற்றுத
லென்னது கடனவ னிடரை நீக்குத
னின்னது கடனிது நெறியு மென்றனன்
பன்னகப் [1]பாயலுட் பள்ளி நீங்கினன்.

(இ - ள்.) பன்னகம் பாயலுள்-ஆதிசேஷனுகிய திருவணையில், பள்ளி-அறி துயிலை, நீங்கினுன் - நீங்கித் திருவவதரித்த ஸ்ரீராமன், 'அன்னவன் பணி-(பிதாவாகிய)சக்ரவர்த்தியினுடைய திருவாணையை, தலைஏந்தி-தலைமேல் தாங்கி, ஆற்றுதல் - (அதன்படி) செய்தல், என்னது கடன் - (புத்திரனுகிய) என்கடமையாகும்; அவன் இடரை நீக்குதல் - அவனது சோகத்தைப் போக் குதல், நின்னது கடன்-(குலகுருவாகிய) தேவரீரது கடமையாகும்: நெறிஉம் இது-நீதியும் இதுவே', என்றனன்—; (எ - று.) அவதரித்தற்குப்பயன் கான கஞ் செல்வது என்பது தோன்ற ஸ்ரீராமனை, 'பன்னகப்பாயலுட்பள்ளிநீங்கி னன்' என்றுர். பி-ம்:—[1]பாயலிற். (சசுச)

கசுஅ.—வசிட்டன் 'கானகஞ்செல்லுதல் மன்னவன் பணியன்று' எனல்.

[1]வெவ்வரம் பயில்சுரம் விரவென்றுனலன்
றெவ்வரம் பனையசொற் றீட்டி னுடனக்
கவ்வரம் பொருதவே லரச [2]னுய்கிலா
திவ்வரந் [3]தருவெனென் றேன்ற துண் [4]டென்றுன்.

(இ - ள்.) (அதுகேட்ட வசிஷ்டன்), 'வெம் அரம் பயில் சுரம்-கொடிய முட்கள் பொருந்திய காட்டை, விரவு என்றுன் அலன் - சேர் என்று (சக்ர வர்த்தி) கட்டளை யிட்டானில்லை; அரம் பொருத வேல்-அரத்தினு லராவிக் கூர்செய்த வேலினையுடைய, அ அரசன் - அச்சக்ரவர்த்தி, தெவ்வர் அம்பு அனைய சொல் - பகைவரது கணையை யொத்த வார்த்தையை, தீட்டினுள் தனக்கு-சொன்னவளாகிய கைகேயிக்கு, இ வரம் தருவென்-இவ்வரங்களைக் கொடுப்பேன், என்று—, ஆய்கிலாது-ஆலோசியாது, என்றது-சம்மதித்தது, உண்டு—,' என்றுன்—; (எ - று.)

'அன்னவன்பணிதலையேந்தி யாற்றுதல்என்னது கடன்'என்ற இராம னுக்கு, இதனுல், வசிட்டமுனிவன், கானகம்புகுமாறு மன்னவன் கட்டளை யிடவில்லையென்று கூறியவாறு. சொல்என்றது - முன் "ஆழிசூழுலகமெல் லாம்," "எயவரங்கள்" என்னுங் கவியிற்கூறியவற்றை. 'என்றது'என்றது-"வரங்கொளவித்துணைமன்னுமல்ல லெய்தி, யிரங்கிடவேண்டுவதீவனேகொ லென்பாற், பரங்கெட விப்பொழுதே பகர்ந்திடு" என்றதனை. அரம் - முள் ளுக்கு,இலக்கணை. [1]வெவ்வரம்பையில் என்றபாடத்தில் ஐகாரத்தைச் சாரியை யெனக்கொண்டு, வரம்பு இல்லாதவெம்சுரம் என்றுரு முளர். பி-ம்:--[1]வெவ் வரம்பனைய சம்பரனைவென்றநாள், வெவ்வரம்பனைய சொல்வீரன்வென்ற நாள். [2]ஆணையால். [3]தருவனென்றது. [4]எனை. (சசுரு)

கசுக.—இராமன் யான் கான்செல்வதைத் தடுப்பது முறையன்றெனல்.

[1]என்றன னெங்கை [2]யிவ் [3]வரங்க ளெவினு
ளின்றவள் யானது செண்ணி யேந்தினன்
சான்றென நின்றநீ தடுத்தி யோவென்றுன்
றேன்றிய நல்லற நிறுத்தத் தோன்றினன்.

(இ-ள்.) தோன்றிய நல் அறம்-விளங்குகின்ற நல்ல தருமத்தை, நிறுத்த-நிலைநிறுத்துதற்கு, தோன்றினன்-அவதரித்த ஸ்ரீராமன்,—'எந்தை இ வரங்கள் என்றனன்-என்தந்தை (கைகேயிக்கு) இவ்வரங்களை(த்தருமாறு)சம்மதித்தார்; என்றவள்-தாயாகிய கைகேயி, எனிஞள் - (காட்டிற்குச் செல்லும்படி) எனக்குக் கட்டளையிட்டாள்; யான் அது சென்னி ஏந்தினேன் - நான் அதனைத் தலைமேற்கொண்டேன்; சான்று என நின்ற நீ - (எல்லாவற்றிற்குஞ்) சாட்சியென்று சொல்லும்படி நிற்கின்ற தேவரீர், தடுத்தி ஓ-(இதனை)விலக்குவீரோ? என்றனன்—; (எ - று.)

அரசன் சம்மதித்ததைக் கைகேயி கூறியதனால், மன்னவன் சொல்லவில்லையென்று ஒருபோக்குச் சொல்லுவது சரியன்றென்றவாறு. அன்புடைமைபற்றி 'என்றவள்' என்றும், கீழ் "இப்பணிதலைமேற்கொண்டேன்"என்றதற்குஎற்ப 'சென்னியேந்தினேன்' என்றும், சகலசாஸ்திரங்களுமறிந்த நீ என்பான், 'சான்றென நின்ற நீ' என்றும், தடுத்தல் நெறியன்றென்பான், 'தடுத்தியோ' என்றுங் கூறினன். தோன்றியநல்லற நிறுத்தத்தோன்றினன் என்றது—தரும ஸம்ஸ்தாபநார்த்தமாகத் திருவவதரித்தவனென்றபடி: **கருத்துடையடைகொளி.** சான்று-பெருமைக்குணமுமாம். **பி-ம்:**—[1]என்றவன், என்றபின். [2]அவ். [3]வரத்தினேயினுள்.

(சகூசு)

கஎ0.—மேலே சொல்லமாட்டாது வசிட்டன் கண்ணீர்வடிக்க, இராமன் மன்னவனதுமாளிகைவாயிலை யடைதல்.

[1]என்றபின் முனிவனென்[2]றியம்ப நேர்ந்திலனின்றன [3]னெடுங்கணீர் நிலத்து நீர்த்துகக்குன்றன [4]தோளவன் றொழுது கொற்றவன்பொன்றிணி நெடுமதில் வாயில் போயினன்.

(இ - ள்.) என்ற பின்—, முனிவன்-வசிஷ்டன், ஒன்று இயம்ப நேர்ந்திலன்-ஒன்றுஞ் சொல்லமாட்டாதவனாய், நெடு கண் நீர்-மிக்க கண்ணீர், நிலத்து நீர்த்து உக-பூமியில் தாரையாய்ப் பெருகும்படி, நின்றனன்-நின்றனனாக,-குன்று அன தோளவன்-மலையையொத்ததிருத்தோள்களையுடையஸ்ரீராமன், தொழுது-(அம்முனிவனை)வணங்கி, கொற்றவன்-சக்ரவர்த்தியினது, பொன் திணி நெடு மதில்-பொன்னாற்செய்த உயர்ந்த மதில்களையுடைய, வாயில் - வாயிலில், போயினன்-போய்ச்சேர்ந்தான்; (எ - று.)—பி-ம்:—[1]என்றனன். [2]இயம்பல், உரைக்க. [3]நிலத்துக்கண்கடிதுநீர்விழக். [4]தோள்வற்றொழுது. ()

கஎக.—கவிக்கூற்று: இராமன்கொள்கையை யறிந்தவரின் துயரத்தைக் கூறுவோமெனல்.

சுற்றிய சிரையன் [1]றொடர்ந்த தம்பியன்முற்றிய வுவகையன் முளரிப் போதினுங்குற்றமின் முகத்தினன் கொள்கை [2]கண்டவருற்றதை யொருவகை யுணர்த்து வாமரோ.

(இ - ள்.) சுற்றிய சீரையன் - (திருவரையிற்) சாத்திய மரவுரியை யுடையவனும், தொடர்ந்த தம்பியன்-பின் செல்கின்ற இலட்சுமணனையுடைய வனும், முற்றிய உவகையன் - முதிர்ந்த மகிழ்ச்சியையுடையவனும், முளரி போதின்உம் குற்றம் இல் முகத்தினன் - தாமரைமலரினும் (மேலாக)க் குறையில்லாதுவிளங்குகின்ற திருமுகத்தை யுடையவனுமாகிய ஸ்ரீராம னது, கொள்கை - கோட்பாட்டை, கண்டவர் - அறிந்த அந்நகரமாந்தர், உற் றதை - அடைந்த நிலைமையை, (முழுவதுமுணர்த்துத லரிதாயினும்), ஒரு வகை உணர்த்துவாம் - ஒருவாறு [சிறிது] கூறுவாம்; (எ - று.)

"இப்பொழுதெம்மனோரால்" என்னுங் கவியிற் கூறிய கருத்தை விளக் குமாறு 'முளரிப்போதினுங் குற்றமின் முகத்தினன்' என்றார். கொள்கை - வனவாசஞ் செய்யப்புகுங் கோட்பாடு. பி-ம்:—[1]தொடருந் தம்பியன், சடை யின் சும்மையன். [2]கொண்டவர். (சுசுஅ)

களஉ.—அந்தணர் முதலியோரின் பெருவருத்தம்.

அந்தண [1]ரருந்தவ ரவனி காவலர்
நந்தலி [2]னகருளார் [3]நாட்டு ளார்கடஞ்
சிந்தையென் புகல்வது தேவ ருள்ளமும்
வெந்தனர் மேல்வரு முறுதி வேண்டலார்.

(இ - ள்) அந்தணர் - பார்ப்பனரும், அருந்தவர்-அரியதவத்தினையுடைய முனிவரும், அவனி காவலர் - அரசர்களும், நந்தல் இல் நகர் உளார்-கேடில் லாத அந்நகரத்துஉள்ளவர்களும், நாடு உளார்கள் தம்-அந்நாட்டிலுள்ளவர்களுமா கிய இவர்களது, சிந்தை என் புகல்வது-மனத்தைப்பற்றிச் சொல்வதுயாது? தேவர்உம்-(அரக்கர்கொடுமையைத்தீர்க்க வரம்வேண்டிய) தேவர்களும், மேல் வரும் உறுதி வேண்டலார் - (தமக்குப்பின்பு) இக்காரியத்தால் வரத்தக்க நன் மையையும் விரும்பாதவர்களாகி, உள்ளம் வெந்தனர்-மனம்வெதும்பினர்கள்.

வசிட்டன் சொல்லியும் தன் கோட்பாடு குன்றுதிருத்தலைக் கண்டபின் அரசர் முதலியோர் பெருவருத்தங்கொண்டன ரென்பதாம். தேவர்களும் தம்முறுதியையும் நாடாது இராமன் வனவாசஞ்செல்வதில் மனம்வெம்பினரென்றல், மற்றையோர் இவ்வளவுவருந்தினரென்று எற்றுக்குப்புகல்வது? எனக் கைமுதிகந்யாயமெனப்படும் தண்டாபூபிகாந்யாயத்தாற் பொருளை விளக்கினமையால், இச்செய்யுள் - தொடர்நிலைச்செய்யுட்போருட்பேறணி யாம். "ஐயனே"(களஙு)என்ற பாடலுக்குப்பின் சிலபிரதிகளில் இந்தப்பாடல் காணப்படுகின்றது: சிலபிரதிகளில் "நன்னெடு (கஅஅ)" என்று தொடங்கும் பாடலுக்குப் பின் உள்ளது: இங்ஙனமிருப்பது பொருத்தமாகத் தோன்று கின்றது. பி-ம்:—[1]அருமறைமுனிவன். [2]நகருளோர். [3]நாட்டுளோர்கடாம். ()

கஎந.—இதுமுதற் பதினொன்றுகவிகள் - அந்நகரத்திற் பலரும் பலவாறுவருத்தப்பட்டமையைக் கூறும்.

ஐயனைக் காண்டலு [1]மணங்க ளர்கடா
மொய்ம்பினைத் [2]தளிர்களான் முளரி மேல்வீழு
[3]மையலின் மதுகரங் கடியு மாறெனக்
கைகளின் [4]மதர்நெடுங் [5]கண்க ளெற்றினர்.

(இ - ள்.) அணங்கு அனர்கள் - தெய்வமகளிரை யொத்த மாதர்கள், ஐயனை - ஸ்ரீராமனை, காண்டலும்—, முளரிமேல் விழும் - தாமரைமலரின் மேல் வந்து மொய்க்கின்ற, மையலின் - மயக்கத்தையுடைய, மதுகரம் - வண்டுகளை, மொய் இள தளிர்களால்-நெருங்கிய இளந்துளிர்களால், கடியும் ஆறு என - ஓட்டுந் தன்மைபோல, கைகளின் - (தம்)கைக்களால், மதர் நெடு கண்கள் - களிப்பினையுடைய பெரிய (தம்) கண்களை, எற்றினர் - அறைந் தார்கள்; (எ - று.)—தாம் - அசை.

தளிர் - கைக்கும், முளரி - முகத்திற்கும், மதுகரம் - கண்களுக்கும் உவமை.கடிதல் - தழும்புபடச்செய்தலுமாம். கண்களாற் பார்க்க மன்மொழு மையால், மகளிர் இவ்வாறு செய்தன ரென்க. இவை அரண்மனையைச் சார்ந்திருப்பவரின் வருத்தத்தைத் தெரிவிப்பனவென்னலாம். பி - ம்:— [1]அணங்களெல்லாம், அணங்களுர்கடம். [2]தளிரினை. [3]மையரி, மையனை, மையினி. [4]மானெடுங். [5]கண்ணின்.

(சஎ0)

கஎஅ. தம்மையு முணர்ந்திலர் [1]தணப்பி லன்பிலை
லம்மையி னிருவினை [2]யகற்ற வோ [3]வன்றிறல்
விம்மிய பேருயிர் மீண்[4]டி லாமைகொல்
[5]செம்மறன் முதையிற் [3]சிலவர் முந்திரை.

(இ - ள்.) சிலவர் - சிலர்,—தணப்பு இல் அன்பிலை - நீங்குதலில்லாத ஆசையினால், தம்மையும் உணர்ந்திலர்-தங்களையும் அறியாதவர்களாய், செம் மல் தன் தாதையின் - ஸ்ரீராமனது தந்தையினும், முந்திரை - முற்பட்டுத் தேவலோகம்போய்ச் சேர்ந்தார்கள்; (அதற்குக்காரணம்), அம்மையின் - வரு பிறப்பில் (தொடர்தற்குரிய), இரு வினை - இரண்டுவினைகளையும், அகற் றல - போக்குதலிலையோ? அன்றுஎல் - அஃதன்றென்றால், விம்மிய பேர் உயிர் - கலங்குகின்ற பெரிய பிராணன், மீண்டிலாமைகொல் - திரும்பாமை யினையோ? (எ - று.)

நகரமாந்தரிற் சிலர் பேரன்பினால் உயிர்துறந்ததை இருவகையாகக் குறிக்கின்றார். இருவினைதீர்ந்தவர் மீளாவுலகஞ்சேர்வ ரென்பது நூற்கொள் கையாதலால், 'இருவினையகற்றவோ' என்றும், இராமனைப்பற்றிய உயிர் அங்ஙனின்றுமீண்டிட வில்லையோவென்பார் 'பேருயிர் மீண்டிலாமைகொல்' என்றும் கூறுகின்றார். அகற்ற - அகற்றுதற்பொருட்டென்றுமாம். பி-ம்:— [1]தணிப்பில். [2]இயற்றவோ. [3]அன்றே. [4]இலாமையிற். [5]செம்மையின். [6]சிலரும்.

களரு. விழுந்தனர் சிலர்சிலர் விம்மி விப்மிமே
லெழுந்தனர் சிலர்[1]முகத் திழிகண் ணீரிடை
யழுந்தினர் [2]சிலர்பதைத் தளக [3]வல்லியின்
[4]கொழுந்தெரி யுற்றெனத் துயரங் கூர்கின்றூர்.

(இ-ள்.) சிலர் விழுந்தனர்—; சிலர்—, மேல் விம்மி விம்மி-மேன்மேலும் அழுதழுது, எழுந்தனர்—; சிலர்—, முகத்து இழி கண் நீரிடை - முகத்தினின்றும் பெருகுகின்ற கண்ணீரில், அழுந்தினர் - மறைந்தனர்; சிலர்—, பதைத்து-பதறி, அளகம் வல்லியின்-தலைமயிரில், எரி கொழுந்து உற்று என-நெருப்புப்பற்றினாற்போல, துயரம் கூர்கின்றூர்-துன்பப்பட்டார்கள்; (எ-று.)

"அளகம் புனலும் மயிருமாகும்" என்ப வாதலால் அளகவல்லியென் பதற்கு-நீரில்தோன்றிய பூங்கொடியென்றலுமொன்று. பி-டீ:—[1]சிலர். [2]பதைத் தனரளக, பதைத்தனரணிகொள். [3]வல்லிநீர், வல்லியார், வல்லியங். [4]கொழுங்கனல்.

(சஎஉ)

களசு. கருப்பன [1]மொழியினர் கண்[2]ப னிக்கிலர்
வரம்பறு துயரினுன் மயங்கி [3]யேகொலா
மிரும்பன [4]மனத்தின ரென்ன நின்றனர்
பெரும்பொரு ளிழந்தவர் போலும் பெற்றியார்.

(இ-ள்.) பெரு பொருள் இழந்தவர் போலும் பெற்றியார்-பெருஞ்செல்வத்தை யிழந்தவரைப்போன்ற தன்மையை [பெருந்துயரத்தை] யுடையவரும், கரும்பு அனை மொழியினர் - கருப்பஞ்சாற்றையொத்த [மிகவினிய] சொற்களையுடையவருமாகியசிலர், கண் பனிக்கிலர் - கண்ணீர்விடாதவராய், இரும்பு அனை மனத்தினர் என்ன - இரும்பையொத்த மனத்தையுடையவ ரென்று (உண்டோர்) சொல்லும்படி, நின்றனர் - திகைத்து நின்றூர்கள்; (இங்ஙனம் அவர்கள் நின்றது), வரம்பு அறு துயரினுல் - அளவற்ற துன்பத்தினுல், மயங்கி ஏ கொல் ஆம் - அறிவுகலங்கியதனாற்போலும்; (எ - று.)

இராமபிரான் ஊரைவிட்டுச்செல்வதனுல் துயர்மிகுந்து தமது நிதியத்தை இழந்தவர்போன்ற சில மங்கைமார், கண்களினின்று ஒரு சொட்டுநீரும் வெளிவராமல் இரும்புமனத்தவர்போலச் சலியாது நின்றனர்: இங்ஙனம் அவர்கள் ஆனதற்குக் காரணம், துயரமிகுந்து திக்பிரமையடைந்ததனுலான தென நாம் ஊகித்து உணரவேண்டியதாயுள்ள தென்பதாம். 'வரம்பறுதுயரினுல் மயங்கியேகொல்' என்றது-'கண்பனிக்கிலராய், இரும்பன மனத்தின ரென்ன நின்றனர்' என்றதைச் சமர்த்தித்து நின்ற ஏதுத்தற்குறிப்பேற்ற வணி; கொல்-தற்குறிப்பேற்றவணியின் உருபு. வல்நெஞ்சிற்கு இரும்புஉவமை கூறப்படுதலை "இரும்புபோல் வலியநெஞ்சம்" என்ற பெரியார் பாசுரத்திலுங் காண்க. கண்பனித்திலாமையால், 'இரும்பன மனத்தினரென்ன நின்றனர்' என்றூர். கரும்பனமொழியினரெனவே, பெண்பாலாரெனப்பட்டது: இனி, கரும்பையொத்த இன்சொல்லையுடையவரெனப் பொதுப்பாலாகக் கொள்ளுமாம். பி-டீ:—[1]மொழியவர். [2]பனித்திலர். [3]எய்தலாம். [4]மனத்தவர்.

(சஎஅ)

கஎஎ. [1]நெக்கன வுடலுயிர் [2]நிலையி னின்றில
விக்கண மிக்கண மென்னுந் [3]தன்மையும்
புக்கன புறத்தன புண்ணிற் கண்மல
[4]ருக்கன நீர்வறந் துதிர வாரியே.

(இ - ள்.) புறத்தன-இன்னுஞ்சில ஐநங்கள்;—உடல் நெக்கன - சரீரந் தளர்ந்தன; உயிர் நிலையில் நின்றில-பிராணன் (தமது) நிலையில் நிற்கப்பெற் றனவில்லை: இக்கணம் இக்கணம்-இந்தக்ஷணமே (போய்விடும்),' என்னும் - என்றுசொல்லும், தன்மையும்-இயல்பையும், புக்கன-அடைந்தனவாகி, கண் மலர்-தாமரைமலர்போலுங் கண்களில், நீர் வறந்து-தண்ணீர் வற்றிப்போய், புண்ணின் - விரணத்தினின்றும்போல, உதிரம் வாரி - இரத்தவெள்ளம், உக்கன - சிந்தப்பெற்றன; (எ - று.)

உயிர்நிலையில்நிற்றல்-உயிர்உடம்பில் நிற்றல். கண்களில் நீர்வற்றிவிடப் புண்களிற்போல உதிரவெள்ளம் பெருகிற்றென்க. அறிவுகுன்றினமையாற் கண் புண்ணையின: அறிவுஇராதநிலையிற் கண் புண்ணைமென்பதை. "முகத் திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என நாயனர் கூறியிருத்தலாலுங் காண்க. பி - ம்:—[1]நெக்கனருயிருடல், நெக்கனவுயிருடல். [2]நிலயுணின் றிலாது. [3]தன்மைய. [4]உக்கநீர்வறந்தன. (கஎக)

கஎஅ. இருகையிற் கரிநிக ரெண்[1]ணி றந்தவர்
[2]டெருகையிற் [3]பெயர்த்தனர் தலையைப் பேணெ
ரொருகையிற் [4]கொண்டன [5]ருருட்டு கின்றன
சுரிகையிற் கண்மலர் [6]சூன்று நீக்கினர்.

(இ-ள்.) இரு கையின் கரி நிகர் - இரண்டு கைகளையுடைய யானை யொத்த, எண் இறந்தவர்-அனேகர், தலையை-(தம்) சிரசை, பேணலர்-விரும் பாதவராய், பெருகு ஐயில் பெயர்த்தனர் பெரிய கைவாளாற் கொய்தவராய், ஒரு கையில் கொண்டனர்-ஒருகையில் வைத்துக்கொண்டு, உருட்டுகின்றனர்-உருளச்செய்கின்றார்; (இன்னுஞ் சிலர்), கண் மலர்-மலர்போலுங் கண்களை, சுரிகையின்-உடைவாளால், சூன்று-குடைந்து, நீக்கினர்-போக்கினர்; (எ-று.)

"இருகைவேழத்திராகவன்"என்றாற்போல, 'இருகையிற்கரிநிகரெண் ணிறந்தவர்' என்றார். ஐயில்-முதற்போலி. சுரிகை - கூர்-ரிகாவென்னும் வட மொழிச்சிதைவு. தாம் உயிரோடிருக்கவேண்டாமென்று கருதித் தம் தலை யைக் கொய்தபின்னும் முன் துவக்கின தொழிலின் தொடர்ச்சியால் பின் னும் தம் தலையை யுருட்டினரென்க. உடல் துண்டிக்கப்பட்ட விடத்தும் வீரருடல் செயல்காட்டியாடுதல் அட்டையாடுதலெனப்படுவதும், கலிங்கத் துப் பரணியில், "அடிக்கழுத்தினைடுஞ்சிரத்தை யாவராலோ வரிந்தசிர மணங்கின்னைக்கொடுப்பாராலோ, கொடுத்தசிரங் கொற்றவனைப் பரவுமா லோ குறையுடலுங் கும்பிட்டு நிற்குமாலோ"என வருவதும் இங்குக் காணத்

தக்கன. இராமன் காட்டிற்குச் செல்லுங்கோலத்தைக் காணப்பொறுமற் கண்ணைச் சூன்று நீக்கினரென்க. சூன்று, சூல்-பகுதி. பி-ம்:—[1]இறந்தனர். [2]பொருகையிற். [3]பெயர்த்ததந். [4]கொண்டுடல். [5]உருளுகின்றனர். [6]சூழ்ந்து.

கஎசூ. சிந்தின [1]வணிமணி சிதறி வீழ்ந்தன
பைந்துணர் [2]மாலையிற் பரிந்த மேகலை
[3]நந்தினர் நகையொளி விளக்க நங்கைமார்
சுந்தர வதனமு [4]மதிக்குத் [5]தோற்றவே.

(இ - ள்.) அணி சிந்தின - (மகளிர்பூண்ட) ஆபரணங்கள் சிதறின;மணி சிதறி வீழ்ந்தன - (அவற்றிற்பதித்த) இரத்தினங்கள் சிந்தி விழுந்தன; பைந் துணர் மாலையின் - பசிய பூமாலையைப்போல, மேகலை-மேகலாபரணங்களும், பரிந்த - அறுந்தன; நங்கைமார் - மகளிர், நகை ஒளி விளக்கம் - சிரிப்பினது ஒளியின்தெளிவு, நந்தினர் - அழியப்பெற்றார்; (அவரது), சுந்தரம் வதனம் உம் - அழகிய முகங்களும், மதிக்கு தோற்ற - சந்திரனுக்குத் தோல்வி யடைந்தன; (எ - று.)

பூமாலையும்,மேகலையும் அற்றுவிழுந்தன வென்றற்கு, 'பைந்துணர்மாலை யிற் பரிந்தமேகலை' என்றார். நகை-ஆபரணமுமாம். முன், மதியைத்தோல்வி யுறுவித்த நங்கைமார்முகங்கள், இப்பொழுது விளக்கமின்மையால் அதற்குத் தோற்றன. பி-ம்:—[1]பணி. [2]மாலைகள். [3]நந்தின. [4]மதிக்கும். [5]தோற்றதே. (சஎசு)

கஎ0. அறுபதி [1]னாயிர ராசன் றேவியர்
மறுவற கற்பினர் மழைக்கண் ணீரினர்
சிறுவனைத் தொடர்ந்தனர் திறந்த வாயின
ரெறிதிரைக் கடலென விரங்கி [2]யேங்கினர்.

(இ - ள்.) மறு அறு கற்பினர் - குற்றமற்ற கற்பினையுடைய, அறுபதி னாயிர்-அறுபதினாயிரவராகிய, அரசன் தேவியர்-சக்ரவர்த்தியினது மனைவி யர்,—மழை கண் நீரினர் - மழைபோன்ற கண்ணீரையுடையவராய், சிறு வனை தொடர்ந்தனர் - ஸ்ரீராமனைப் பின்தொடர்ந்து, திறந்த வாயினர் - வாய்திறந்தவராய்,எறி திரை கடல் என இரங்கி ஏங்கினர் - வீசுகின்ற அலை களையுடைய சமுத்திரத்தினோலிபோலப் (பேரொலிபடட்) பரிதவித்தழுதார் கள்; (எ - று.)

முதனூலில் முந்நூற்றைம்பதின்மரென்று கூறப்பட்டிருக்கின்றது: தச ரதனது வாழ்நாள் அறுபதினாயிரமாயதுபோல, கம்பர், அமைச்சர் மனைவி யர்களையும் அறுபதினாயிரம்படப்பேசுவர். மூவரே, குலம்முதலிய பெருமை யும் பட்டத்துக்குரிமையும் உள்ளவர்கள். இதுமுதல் ஆறுகவிகள், அரசன் தேவியர் பட்ட வருத்தத்தைக் கூறுவன வென்னலாம். சிலபிரதிகளில் இது வும் அடுத்த கவியும் "கிளையினும்" (கஅஉ) என்று தொடங்கும் பாடலுக்குப் பின்உள்ளன. பி-ம்:—[1]ஆயிரம். [2]ஏங்குவர், ஏங்குவார். (சஎஎ)

கஉக. கன்னிநன் மயில்களும் குயிற்க ணங்களு
மன்னழுந் சிறை [1]யிழந் தவனி [2]சேர்ந்தன
வென்னவீழ்ந் [3]தழந்தன ரிராம னல்லது
மன்னுயிர்ப் [4]புதல்வரை மற்றும் பெற்றிலார்.

(இ-ள்.) இராமன் அல்லது - ஸ்ரீராமனல்லாமல், மற்றுஉம் - வேறு, மன் உயிர் புதல்வரை-நிலேபேறுள்ள பிராணனேயொத்த புத்திரரை, பெற்றிலார்-பெறுத அம்மடவார்,— கன்னி நல் மயில்கள்உம் - இளமையையுடைய நல்ல மயில்களும், குயில் கணங்கள்உம் - குயிற்கூட்டங்களும், அன்னம்உம் - ஹம்ஸங்களும், சிறைஇழந்து-சிறகுபோய், அவனி சேர்ந்தன என்ன-பூமியை யடைந்தவைபோல, வீழ்ந்து உழந்தனர் - விழுந்து வருந்தினர்; (எ - று.)

'கன்னி நல்' என்னும் அடையைக்'குயிற்கும்,அன்னத்திற்கும்,' 'கணங் கள்' என்பதனே 'மயிற்கும், அன்னத்திற்கும்' கூட்டுக. இனி,கன்னி-பெடை யுமாம். பி-ம்:—[1]கழிந்து [2]வீழ்ந்தன, வீழ்ந்த, வீந்தன. [3]உளந்தனர், உழைத்தனர், உழன்றனர். [4]புதல்வனே. (சஎஅ)

கஉஉ. கிளை[1]யினு நரம்பினு நிரம்புங் [2]கேழன
[3]வளவிறந் துயிர்க்கவிட் டரற்றுந் தன்மையாற்
றெளள[4]படு குழலினே டி[5]யாழ்க்குத் தோற்றன
விளையவ ரமுதினு மினிய சொற்களே.

(இ-ள்.) இளையவர்-அத்தேவியரது, அமுதின்உம் இனிய சொற்கள்—, —தெளள படு குழலினேடு-துளபொருந்திய குழலிசையோடு, கிளையின்உம் நரம்பின்உம் நிரம்பும் கேழன யாழ்க்கு-பண்ணிசையோடு தந்திரியில் நிறைந்த ஒளியினேயுடையவாகிய யாழினிசைக்கு, அளவு இறந்து உயிர்க்க விட்டு அர ற்றும் தன்மையால் - அளவில்லாமற் பெருமூச்சுத்தோன்ற வாய்விட்டு அழும் இயல்பினுல், தோற்றன - தோல்வியடைந்தன; (எ - று.)

முன் குழல்யாழ்களே வென்ற சொற்கள், இப்பொழுது அவற்றுல் வெல்லப்பட்டன. ஒருபொருளினிடத்து முன்னிருந்தநிலே மாறி வேற்று நிலேவந்ததாகக் கூறியதனுல், இது - முறையிற்படரீச்சியணி யெனப்படும் பரியாயாலங்காரமாம். பி - ம்:—[1]எனும். [2]கேளென, கேழ்மைய, கேளன. [3]அளவறுந்துயரம்விட்டு, அளவறுந்துயர்க்கழிந்து. [4]பயில். [5]யாழ்க்குந்,யாழுந்.

கஉஊ. புகலிடங் கொடுவனம் [1]போது மென்றுதம்
மகன்வயி னிரங்குறு மகளிர் [2]வாய்களா
லகன்மதி னெடு[3]மனே யரத்த வாம்பல்கள்
பகலிடை மலர்ந்ததொர் பழனம் [4]போன்றவே.

(இ-ள்.) 'புகல் இடம் கொடு வனம் போதும் - (நாங்கள் ஸ்ரீராமன் செ ல்லுங்) காட்டையே புகுதற்குரிய இடமாகக்கொண்டுசெல்வோம்,' என்று - என்றெண்ணி, தம் மகன்வயின் - தமதுபுத்திரன்பக்கல், இரங்குறும் - பரி

தபிக்கின்ற, மகளிர்-அத்தேவியரது, வாய்களால்—, அகல் மதில் நெடு மனை-அகன்ற சுற்றுச்சுவரையுடைய பெரிய அந்தப் புரமாளிகைகள்,—அரத்தம் ஆம்பல்கள்-செவ்வல்லிகள், பகலிடை மலர்ந்தது-பகலில்மலரப்பெற்றதாகிய, ஓர் பழனம் - ஒருகழனியை, போன்ற—; (எ - று.)

[1]போலும் என்றபாடத்துக்கு ஒப்பில்போலியென்க. பகலிடை யாம்பல் மலர்ந்த தொர்பழனம் - இல்போருளுவமை: தற்குறிப்பேற்றவணியென்னலாம். மனை பொலிவிழந்திருந்த தென்பதாம். "செங்கழுநீர்வாய்நெகிழ்ந்தாம் பல்வாய் கூம்பினகாண்" என்று விடியற்காலத்தைக் குறிப்பதாலும், ஆம்பல் பகலிற்கூம்பும்மலராதலை யறியலாம். இச்செய்யுள் சிலபிரதிகளில் தாயரும் (கஅசு)என்று தொடங்கும் பாடலுக்குப் பின் உள்ளது **பீ-ம்:**—[2]வாய்கடாம். [3]நகர். [4]போன்றதே. (சஅ0)

கஉசு. திடருடைக் குங்குமச் சேறுஞ் [1]சாந்தமு
மிடையிடை வண்டலிட் டார மீர்த்தன
[2]மிடை[3]முலைக் [4]குவடொரீஇ மேக லத்தடங்
கடலிடைப் [5]புகுந்தகட் கலுழி யாறரோ.

(இ ள்.) கண் கலுழி ஆறு-கண்ணினின்றுந்தோன்றிய கலங்கல்நீராகிய நதிகள்,—திடர் உடை குங்குமம் சேறுஉம்-மிகுதியையுடைய குங்குமக்குழம்பும், சாந்தம்உம் - செஞ்சாந்தும், இடைஇடை - நடுவில்நடுவில், வண்டல் இட்டு - சேறுகப்பொருந்தப்பெற்று, ஆரம் ஈர்த்தன - (அவரது) முத்துமாலையை யிழுத்துக்கொண்டு, மிடை முலை குவடு ஒரீஇ - நெருங்கிய தனங்களாகிய மலைச்சிகரங்களினின்று நீங்கி, மேகல தடம் கடலிடை - மேகலையையுடைய கழிதடமாகிய கடலினுள், புகுந்த - புக்குப்பாய்ந்தன; (எ - று.)

திடர் மேடு. **உருவகவணி.** ஆறும் மலையுச்சியினின்று கீழிறங்கிப் பின் மேகலையை [மேகலை-மலையின்தாழ்வரை] யடைந்து, பின்பு கடலைச் சேருமென்க: எனவே, மேகல யென்பது-சிலேடை. அரோ-ஈற்றசை. **பீ-ம்:**—[1]சந்தமும். [2]மிடல். [3]மலை. [4]கோட்டொரீஇ, குவட்டொரீஇ, குவட்டுடன். [5]பெயர்ந்தகட், பாய்ந்ததக், பரந்தகட், புகுந்ததக். சிலபிரதிகளில் இரண்டு மூன்றுமடிகள் 'மிடைமுலைக்குவடொரீஇ மேகலைத்தடத், திடையிடைவண்டலிட்டாரமீர்த்தன' என்று உள்ளன. (சஅக)

கஉரு. தண்டலைக் கோசலைத் தலைவன் மாதரைக்
கண்டன னிரவியுங் கமல வாண்முகம்
[1]விண்டலத் துறையுநல் [2]லிவந்தற் காயினு
முண்டிட னுற்றபோ தென்[3]னு ளுதன.

(இ - ள்.) தண்டலை கோசலை தலைவன் - சோலைகளையுடைய உத்தரகோசலதேசத்தரசனாகிய தசரதனது, மாதரை - தேவியரை, கமலம் வாள் முகம் - தாமரைபோன்ற ஒளியினையுடைய முகத்தை, இரவிஉம்-(ஒருநாளுங்

காணுதை) சூரியனும், கண்டனன்-பார்த்தனன்; விண் தலத்து உறையும்-தேவ லோகத்தில் வசிக்கின்ற, நல் வேந்தற்கு ஆயின்உம்-சிறந்த இந்திரனுக்காலு லும், இடர் - ஆபத்து; உண்டு - உளதாகி, உற்ற போது வந்தகாலத்தில், என் உறுதன - எவைதாம் வராதவை? (எ - று.)

இதுகாறும் ஒருநாளும் வெளிப்புறப்படாத தேவியர் இப்பொழுது ஸ்ரீராமனைத்தொடர்ந்து புறப்பட்டன ரென்க. உண்டு உறையும் என இயைத்து-அமிர்தத்தையுண்டு உறையும் வேந்தனென்றுமாம். வேந்தற்காயினும் என்றது-எத்துணைச் சிறந்தவர்க்காயினும் என்றபடி. வேற்றுப்போருணைவைப் பணி. தண்தலை-சோலைக்குப் பண்புத்தொகையன்மொழி. வேந்தன்-தேவேந்த்ரனென்பதன் சிதைவென்பர். உண்டு - முற்றெச்சம். பி-ம்:—[1]விண்டலங் தூறையுள, விண்டலத்துறையுனர். [2]வேந்தர்க்கு. [3]உறுதவே. (சஅஉ)

கஉசு. தாயருங் கிளைஞருஞ் சார்ந்து ளார்களுஞ்
சேயரு மணியருஞ் சிறந்த [1]மாதரும்
காயெரி யுற்றன ரனைய கவ்வையர்
வாயிலு முன்றிலு மறைய மொய்த்தனர்.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) தாயர்உம்—, கிளைஞர்உம்-நெருங்கிய பந்துக்களும், சார்ந்து ளார்கள்உம்-சேய்மைப்பந்துக்களும், சேயர்உம்-தூரத்திலுள்ளவரும், அணியர் உம் - சமீபத்திலுள்ளவருமான, சிறந்த மாதர்உம்—, காய் எரி உற்றனர் அனைய கவ்வையர்-எரிக்கின்றநெருப்பை யடைந்தவர்போன்ற துயரத்தை யுடையவராய்,வாயில்உம்-வீட்டின்வாசலும்,முன்றில்உம்-முற்றமும்,மறைய-இடமின்றும்படி, மொய்த்தனர்-நெருங்கினராகி,—(எ-று.)—'இரைத்தனர்' என அடுத்த கவியோடு தொடரும்.

தாயரெனப்பொதுப்படக் கூறியதனால், ஐவகைத்தாயரையுங் கொள்க; தசரதன் மனைவியரைக்குறிக்கு மென்னலுமாம். தாயர் முதலியோர் பெருந் துயரோடு எங்கும் மொய்த்தன ரென்க. கவ்வை=கௌவை: போலி. இச் செய்யுள், "கன்னிநல்"(கஅக)என்றபாடலுக்குப்பின் சிலபிரதிகளிற் காணப் படுகின்றது. இப்பாடலுக்குப் பின் பலபிரதிகளில் "மாந்தர்தம்" (உகரு) என்றபாடல் உள்ளது. பி-ம்:—[1]மாந்தரும். (சஅந)

கஅஎ.—இராமன் தன்மாளிகையை நோக்கிச்செல்லல்

இரைத்தன ரிரைத்தெழுந் தேங்கி யெங்கணுந்
திரைப்பெருங் கடலெனத் தொடர்ந்து பின்செல
வுரைப்பதை [1]யுணர்கில னுழிப்ப [2]தோர்கிலன்
வரைப்புயத் தண்ணறன் மனையை நோக்கினன்.

(இ - ள்.) இரைத்தனர் - கூவினர்கள்; இரைத்து எழுந்து ஏங்கி—, எங்கண்உம் - எல்லாவிடங்களிலும், திரை பெரு கடல் என - அலைகளையுடைய பெரியகடல்போல, பின் தொடர்ந்து செல—, உரைப்பதை உணர்கிலன் - (அவர்களிடம்) சொல்வதை அறியாதவனாய், ஒழிப்பது ஓர்கிலன் - (அவரை) நீக்கும் வழியை அறியாதவனுமாகி, வரை புயத்து அண்ணல் - மலைபோலுந் தோள்களையுடைய இராமன், தன் மனையை நோக்கினன் - தனது மாளிகையை நோக்கிநடந்தான்; (எ - று.)

தாயரிடத்து விடைபெற்றுக்கொண்ட இராமன் சீதைக்குச்செய்தி தெரிவிப்பதற்காகத் தன்மனைநோக்கிநடந்தா னென்க. இவன் சீதையைக்காணவே செல்கின்றனென்பது, "சானகியிருந்துழிச்சார்ந்தான்(உகக)" என்று மேல் வருவதனாற் காண்க. மூன்றுமடிக்கு, பேரிரைச்சலாற் பிறர்சொல்வதைத் தான் உணராதவனாகியும், அவ்விரைச்சலை நீக்குமாற்றையோராதவனாகியு மென்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]உணர்ந்திலன். [2]ஓர்ந்திலன். (சஅச)

கஅஅ.—இதுவும் அது.

நன்னெடு [1]நளிர்முடி சூட நன்மணிப்
[2]பொன்னெடுந் [3]தேரொடும் பவனி போனவன்
[4]றுன்னெடுஞ் [5]சீரையுஞ் [6]சுற்றி மீண்டுமப்
பொன்னெடுந் தெருவிடைப் போதன் [7]மேயினன்.

(இ - ள்.) (மூன்), நல் - சிறந்த, நெடு - பெரிய, நளிர் - பெருமையையுடைய, முடி - கிரீடத்தை, சூட - சூட்டிக்கொள்ளுதற்கு, நல் - நல்ல, மணி - நவரத்நங்களிழைத்த, பொன் - சுவர்ணமயமான, நெடு தேரொடு உம் - பெரிய தேருடன், பவனி போனவன் - உலாப்போன ஸ்ரீராமன்,—துன் நெடு சீரைஉம் - பொருந்திய பெரிய மரவுரியையும், சுற்றி - சாத்திக்கொண்டு, மீண்டுஉம் - மறுபடியும், அ பொன் நெடு தெரு இடை - அந்த அழகியபெரியவீதியில், போதல் மேயினன் - செல்வானுயினன்; (எ - று.)

முடிபுனைய உலாப்போனவன் அதனைப்பிறருமற் சடைபுனைந்து சீரை சாத்தி அத்தெருவிடையே போயினன் எனத் ததுதியின்மையணி யென்னும் விஷமாலங்காரந் தோன்றக் கூறியது காண்க. மணிக்கு நன்மை - மறுவின்மை. பவனிபோனவன் என்றது-கீழ்க் கைகேசிசூழ்வினைப்படலத்தில் "தாரணி தேரிற்சென்றான்" (அஉ) என்று கூறியதனை. உம்மை - சிறப்பு; அசையுமாம். பி - ம்:—[1]மணிமுடி, தளிர்முடி. [2]பன். [3]தேரிடை. [4]துன்னருஞ். [5]சீரைகள், சீரையன். [6]சடையுஞ் சுற்றியப், சுற்றிமீண்டுற. [7]மேவினன், நோக்கினர். இது அடுத்த பாடலின்பின் சில பிரதிகளி லுள்ளது. ()

கஅகூ.—இதுமுதல் முப்பதுகவிகளால், இராமன்தெருவிற் சென்றபோது கண்டவர் பாட்ட வருத்தங் கூறப்படுகின்றது.

அஞ்சன மேனி[1]யிவ் வழகற் கெய்திய
வஞ்சனை கண்டபின் வகிர்ந்து நீங்கலா
நெஞ்சினும் [2]வலிதுயிர் நினைப்ப தென்[3]சில
நஞ்சினும் [4]வலியநந் நலமென் றூர்சிலர்.

(இ-ள்.) சிலர்—,—'அஞ்சனம் மேனி இ அழகற்கு-மைபோலுங் கரிய திருமேனியையும் இத்தகையவழிலையுமுடைய ஸ்ரீராமனுக்கு, எய்திய - பொருந்திய, வஞ்சனை - பொல்லாங்கை, கண்ட பின்—, வகிர்ந்து-பிரிந்து, நீங்கலா - (உடலை) விட்டுப்போகாத, உயிர்—, நெஞ்சின்உம்—, வலிது—; சில நினைப்பது என் - சிலவற்றை யெண்ணுவதனாற் பயன் யாது? நம் நலம்-நமது நன்மைகள், நஞ்சின்உம் வலிய-விடத்தினும் கொடியன,' என்றார்—.

வஞ்சனை-முன் நாடுதருவேனென்று கூறிப் பின் காடுதருதல். நெஞ்சும் உயிரும் வலியன வென்பார், 'நெஞ்சினு முயிர்வலிது' என்றார். தமது உயிர் போகாதுவருத்துதல் பற்றி, 'நந்நலம் நஞ்சினும் வலிய' என்றார். பி-ம்:— [1]அவ். [2]வலியினென், வலிதுயாம், வலிதுயான், வலிதுரு. [3]கடு. [4]வலியது மனம், வலிதுநந்நலம், வலிது நம்மனம். (சுஅசு)

கசுo. மண்கொடு வருமென [1]வழியி ருந்தயா
மெண்கொடு [2]சுடர்வனத் [3]தெய்தல் [4]காணேவா
பெண்கொடு வினைசெயப் பெற்ற [5]நாட்டினிற்
கண்கொடு பிறத்தலுங் கடை[6]யென் றார்சிலர்.

(இ - ள்.) சிலர்—,—'மண் கொடு - அரசாட்சியைப் பெற்றுக்கொண்டு, வரும்-(ஸ்ரீராமன்) வருவான்,' என-என்று, எண்கொடு-நினைத்தல்கொண்டு, வழி - (வரும்) வழியில், இருந்த - எதிர்பார்த்துக்கொண்டிருந்த, யாம்—, சுடர் வனத்து-வெயிலையுடையகாட்டில், எய்தல்-(அவன்) அடைதலை, காணஓ-பார்க்கவோ? பெண் கொடு வினை செய பெற்ற - பெண் கொடியதொழிலைச் செய்யப் பொருந்திய, நாட்டினில் - இத்தேயத்தில், கண்கொடு - கண்களையுடையோமாகி, பிறத்தல்உம்—, கடை - இழிவினையுடையது,' என்றார்—.

கணவன்வழி யொழுகற்பாலளாய இல்லாள் தன்வழியே அக்கணவனை யொழுகுவித்துத் தீவினைசெய்தற்கு இடமாகிய இந்நாட்டில் வாழ்ந்து, இராமன்வனத்தெய்தக் கண்ணுற்பார்த்திருத்தல் இன்னு தென்பதாம்.மண் கொடு வரக்காண இருந்தவர்க்குச் சுடர்வனத்தேதகக் காண நேர்ந்தமைகூறியது - **ததுதியின்மையணியாம்.** பி-ம்:—[1]வாழ்ந்திருந்த, வழியிருந்து, வழியிருந்தது. [2]துயர், தொடர். [3]ஏகல். [4]காணவா, காணேவார். [5]நாட்டினிக். [6]என்பார். ()

கசுக. முழுவதை பிறந்துல குடைப [1]மொய்ம்பினை
ழுழுவைசேர் கானகத் துறைவென் யானென
வெழுவதை யெழுதல்கண் டிருப்ப தேயிருந்
தழுவதை யழகி [2]தென் வன்பென் றார்சிலர்.

(இ-ள்.) சிலர்—, - 'பிறந்து - மூத்தவனைக்பிறந்து, உலகு முழுவதுன உடைய மொய்ம்பினேன்-உலகமுழுவதையுந்தனதாகும்முறைமையையுடைய வலியினனாகிய இந்தராமன், உழுவை சேர் கானகத்து - புலிகள் பொருந்திய காட்டில், யான்—, உறைவென் - வசிப்பேன், என-என்று, எழுவதுன-புறப்

படுவதா? எழுதல் கண்டு - (அவ்வாறு) புறப்படுவதைப் பார்த்தும், இருப்பதுஎ - (நாம் உயிரோடு) இருப்பதா? இருந்து - (இந்நாட்டில் உயிரோடு) இருந்துகொண்டு, அழுவதுஎ - அழுவதா? இ அன்பு அழகிது-இந்த (நமது) அன்பு அழகினையுடையது!' என்றார்—; (எ - று.)

அழகிது - எதிர்மறையிலக்கணை. உழுவை - மற்றைக் கொடுவிலங்குகளுக்கும் உபலக்ஷணம். இ வன்பு எனவும் பிரிக்கலாம். பி-ம்:—[1]முன்பினேன். [2]எம்மனம், எம்மன்பு, இவ்வனம். சிலபிரதியில் "திருவரை" (ககஙஉ) என்று தொடங்கும் பாடலுக்குப்பின் இதுவும், இதன்பின் "வலங்கடிந்து" என்று தொடங்கும்பாடலும் உள்ளன: சிலபிரதிகளில், இதுவும் அடுத்தபாடலும் மாத்திரம் முன்பின் மாறியுள்ளன. (சுஅஅ)

ககஙஉ. வலங்கடிந் [1]தேழைய னைய மன்னனை
நலங்'கடிந் தறங்கெட [3]நயத்தி ரோவெனைக்
குலங்'கடிந் தான்வலி கொண்ட கொண்டலை
நிலங்கடிந் தாளொடு நிகரென் றார்சிலர்.

(இ - ள்.) சிலர்—,—வலம் கடிந்து - வலியை விட்டு, எழையன் ஆய - அறிவீனனாய்விட்ட, மன்னனை - தசரதனைக்குறித்து, '(நீர்), நலம் கடிந்து - நன்மையைவிட்டு, அறம் கெட-தருமமழிய, நயத்திர் ஓ (கைகேயியின்வரத்தைத் தர) விரும்பினின்றீரோ? எனை - என்னை, குலம் கடிந்தான் வலி கொண்ட கொண்டலை - (ராச) வம்சத்தைத் துணித்த பரசுராமனது பலத்தை வெற்றி கொண்ட நீலமேகச்சாமளனான ஸ்ரீராமனை, நிலம் - பூமியினின்று, கடிந்தாளொடு - நீக்கிய கைகேயியோடு, நிகர்-சமானமாவாய்,' என்றார்—; (எ - று.)

முதலில் இராச்சியத்தைத் தனக்குக்கொடுப்பதாக வாக்களித்துவிட்டுக் கைகேயியைக் கண்டவுடனே வலிகுன்றி அறிவிழந்துநின்ற மன்னனைப் பார்த்து, 'புண்ணியத்தைக் கைவிட்டுத் தருமத்திற்குவிரோதமாக நீர் நடக்கலாமோ?' என்று கண்டித்துச்சொல்லாத இந்தஇராமன், நமக்குவருத்தத்தையுண்டாக்குந் தன்மையிற் கைகேயிபோல்பவனே யாவனென்று சிலர் கூறினரென்க. 'வலங்கடிந்தேழையராயமன்னனை, நலங்கடிந் தறங்கெட நயக்கலீர்களும்'என்ற பாடத்துக்கு - தசரதன் சந்மார்க்கத்தைவிட்டுத் தருமத்துக்குமாறுக நடக்கவும் அவனைக் கண்டிக்கவிரும்புகின்றீரில்லை;நீவிர் இராமனைப் பூமியையாளவொட்டாதுசெய்த கைகேயியைப் போன்றவர்களாவீரென்று, தம்வலிமையால் இராமனுக்குப் பட்டங்கட்டமுயலாது வலியற்றவராய்விட்ட மன்னரைப்பார்த்துச் சொல்வாரென்க: நயக்கலீர்கள், கள் - அசை. பரசுராமனுக்கு,'குலங்கடிந்தான்' என்று ஒருபெயரிட்டார். கொண்டலென்றதனால், ஸ்ரீராமன்நீங்குகின்றநகரம் மழைநீங்குகின்றநகரொக்குமென்றும்; அவன்புகுகின்ற வனம் அது புகுந்துபெய்கின்ற வனமொக்குமென்றுங் கொள்க. பி-ம்:—[1]எழையினையமன்னனும், எழையராயமன்னரும். [2]கடந்து.

[3]நயக்கிலீரகங், நயத்தியோவெனைச், நடந்தவன்நணுங், நயத்தினைரினுங், நயத்திரோவெனைக், நடந்தமன்னர்தங். [4]கடிந்தவன்வலி, கடிந்திவ்வணம், கடிந்தவர்வலி. (சஅக)

ககூக. திருவரை [1]சுற்றிய சீரை யாடையன்
[2]பொருவருந் துபரினன் றொடர்ந்து போகின்ற
னிருவரைப் பயந்தவ ளீன்ற கான்முளை
யொருவனே விவற்[3]கிவ்வூ ருறவென் றூர்சிலர்.

(இ - ள்.) சிலர்—,—'திரு அரை சுற்றிய சீரை ஆடையன் - அழகிய அரையிலுடுத்த மரவுரியாகிய உடையையுடையவனும், பொருவு அரு துயரினன் - ஒப்பற்ற துன்பத்தையுடையவனும், தொடர்ந்து போகின்றனன் - (ஸ்ரீராமனை) பின்றொடர்ந்து செல்கின்றவனுமாகிய, இருவரை பயந்தவள் ஈன்ற கான் முளை ஒருவன் ஓ - இரட்டைப்பிள்ளைகளைப்பெற்றவள் [சுமித்திரை] பெற்ற பிள்ளை [லக்ஷ்மணன்] ஒருத்தன்தானே, இவற்கு - ஸ்ரீராமனுக்கு, இ ஊர் - இந்நகரத்தில், உறவு - சுற்றம்?' என்றார்—; (எ - று.)

இம்மாநகரில் இலக்குமணனொருவனே தானும் மரவுரிதரித்துப் பெருந்துயரத்தோடு இவ்விராமனைத் தொடர்ந்து செல்லுகின்றனன்: இவனுக்கு இவ்வொருவன்தானே உற்றஉறவின னென்று சிலர் வருந்தினரென்க. ஒருவனே என்ற ஓகாரத்தைப் பிரிநிலையாக்கி, இராமனைத் தொடர்ந்து செல்வதால் இவனொருவன்தான் இவ்வூரில் உற்றஉறவினனென்று உரைப்பினுமாம். பீ-பீ:— [1]உரியினன் சடையின் சென்னியன், சுற்றிய சீரவாடையன். [2]பொருவரு. [3]அவ்வூர். (சஙo)

ககூச. முழுக்கலின் [1]வலியரும் மூரி நெஞ்சினை
மழுக்களிற் பிளத்துமென் றோடு வார்[2]வழி
யொழுக்கிய [3]கண்ணினிற் கலுழி யூற்றிடை
[4]யிழுக்கலில் [5]வழுக்கிவீழ்ந் திடருற் றூர்சிலர்.

(இ - ள்.) சிலர்—,—'முழு கல்(ல்)லின் வலிய-பெரிய கற்பாறையினும் வலியதாகிய, நம் மூரி நெஞ்சினை - நமது கடுமனத்தை, மழுக்களின் பிளத்தும் - மழுவாற் பிளப்போம்,' என்று ஓடுவார் - என்று சொல்லி (மழுவைத் தேட) விரைந்து செல்பவராகி;—வழி-நெறியில், கண்ணினின் ஒழுக்கிய - கண்களினின்று பெருக்கிய, கலுழி ஊற்றிடை-கலங்கனீரூற்றுலாகிய, இழுக்கலில் - சேற்றில், வழுக்கி வீழ்ந்து சறுக்கிவிழுந்து; இடர் உற்றார் - துன்பமடைந்தார்; (எ - று.)

மழுக்களின், இன்-எதுப்பொருள்; எதுப்பொருள் கருவிக்கணடங்கும். பீ-பீ:—[1]வலியன. [2]வரித்து, வழித்து. [3]கலுழியாற்றிடைவிழுந்துயிர், கலுழியாற்றிடை விழுந்துயர், கலுழியாற்றிடையிழிந்திட. [4]ஒழுக்கலில். [5]இழுக்கி, இழுக்க. (சஙக)

கசுரு. பொன்னணி மணியணி மெய்யிற் போக்கினர்
மின்னென மின்னென [1]விளங்கு மெய்[2]யிறப்
பன்னிறத் [3]துகிலினைப் பறித்து [4]நீக்கினர்
சின்ன நுண் [5]டுகிலினைப் புனைகின் றூர்சிலர்.

(இ - ன்.) சிலர்-,-பொன் அணி-சுவர்ணபரணங்களையும், மணி அணி-ரத்நாபரணங்களையும், மெய்யின் போக்கினர் - (தம்) உடம்பினின்று கழற்றி யெறிந்தவராகி, மின் என மின் என விளங்கும்-பல மின்னல்போல விளங்கு கின்ற, மெய் - (தம்)உடம்பினின்று, இற - கிழிந்துவிடும்படி, பல் நிறம் துகி லினை-பலவர்ணங்களையுடைய ஆடையை, பறித்து பிடித்திழுத்து, நீக்கினர்-அப்பால் வீசினவராகி, சின்ன நுண் துகிலினை-சிறிய நுண்ணிய ஆடையை, புனைகின்றூர் - உடுக்கின்றூர்; (எ - று.)

இராமபட்டாபிஷேகத்துக்காக நல்லணிகளை யணிந்தும் நற்பட்டாடை களையுடுத்து மிருந்த சிலர், இராமன் காடுசெல்வதையுணர்ந்து வெறுப்பினால் ஆடையாபரணங்களை அப்பாலெறிந்துவிட்டுத் தம் மானங்காத்தற்குவேண் டிய சிறுதுணியையுடுத்துக்கொண்டனரென்க. மின்னென மின்னென என் னும்அடுக்கு, பன்மைப்பொருளுணர்த்திற்று. சின்ன-சிறிய என்பதன்மரூஉ; சின்னமென்னும் வடசொற்றிரிபாகவுமாம். பி-ரி:—[1]விலக்கி. [2]விலப். [3]துகி லிடை. [4]நீக்கியே. [5]துகிலரை. (சுகூ)

கசுசு. நிறைமக வுடையவர் நெறிசெ லும்பொறிக்
குறை[1]டக குறையினுங் கொடுப்ப [2]ராமுயிர்
முறைமகன் வனம்புக மொழியைக் [3]காக்கின்ற
விறைமகன் றிருமன மிரும்பென் றூர்சிலர்.

(இ - ள்.) சிலர்—, 'நிறை மக உடையவர்-நிறைந்த[பல] புத்திரர்களை யுடையவரும்,—(அம்மகாருள்), நெறி செல் - ஐம்புலநெறியிற் செல்கின்ற, ஐம்பொறி குறை-ஐந்துபொறிகளில் ஒன்றுஇரண்டு குறைந்த, மக - பிள்ளை, குறையின்உம்-அழிந்தாலும், உயிர் கொடுப்பர்-(தமது) உயிரைப்போக்குவர்; ஆம்-இது உலகவழக்காகும்; (இங்ஙனமாக), முறை மகன்-முறைமைக்குரிய மூத்த திருமகன் [ஸ்ரீராமன்], வனம் புக - காட்டிற்குச் செல்ல, (அதனைத் தடுக்காது), மொழியை காக்கின்ற-(தன்) வாய்மையை யோம்புகின்ற, இறை மகன் - சக்ரவர்த்தியினது, திரு மனம் - அழகியமனம், இரும்பு - இரும்போ டொப்பாகும்', என்றூர்—; (எ - று.)

பலமகவு தமக்கு இருப்பினும், ஐம்பொறிகளிற்குறைபாடுடைய மகவு ஒன்று கெட்டாலும் தம்முயிரையும் இழக்குந்தன்மையைக்கொண்ட இவ்வுல கத்தில், தன்வாய்மையைக் காப்பதென்ற வியாஜத்தால் இறைமைக்குணம் மிக்க தன்மகனைக் காட்டிற்குப்போக்கிய இந்தத்தசரதனது மனம் இரும்பே யென்றனரென்க. மக - ஆகுபெயர். உடையவரும் என்னுஞ் சிறப்புமை

தொக்கது. ஐம்பொறி குறைமக-ஐம்பொறி யுணர்விலுங் குறைவுபட்டமக்கள் அவை-ஊமுஞ் செவிடுங் குருடும் போல்வன. முறைமகன் என்றது-எவ்வாற் றானுங் குறைவுபடாத திருக்கல்யாணகுணகணங்களையுடையவ னென்றபடி. பி-ம்:—[1]மகன். [2]தம்முயிர், ஆருயிர். [3]தாங்கிய. (சகூஉ)

கஉ. [1]வானமே யனையதோர் கருணை மாண்பலா
[2]லூனம்வே றிலாளுட னுலகெய் யாவையுங்
கானமே புகு[1]மெனிற் காதன் மைந்தனுந்
தானுமே யாளுங்கொ ணரையென் றூர்சிலர்.

(இ-ள்.) சிலர்—,—'வானம் ஏ அனையது ஓர் மாண்பு கருணை அலால் - மேகத்தையே ஒப்பாகக்கொண்ட வேறோருவமையற்ற சிறந்த கருணையென்ற நற்குணத்தையே வடிவாகக்கொண்டன்றி, வேறு ஊனம் இலாளுடன் மாறு கச்சொல்லக்கூடிய கெட்டகுணமொன்றையும் பெறுதவளாகிய இராமபிரா னுடன், உலகம் யாவையும் - இவ்வுலகத்திலுள்ள ஜந்துக்களெல்லாம், கானம்- ஏ புகும் எனின்-(அவன்செல்லுகின்ற) காட்டிற்கே சென்றுவிடுமாயின்,(இந் தக்கைகேயி), தரை - இந்தப்பூமியை, காதல் மைந்தன்உம் தான்உம்ஏ - தன் னன்பிற்கு உரிய புதல்வனாகிய பரதனும் தானும்மாத்திரமாகஇருந்து, ஆளும் கொல்-அரசுபுரிவாளோ?' என்றூர்—; (எ - று.)

இராமனைக் கானகம் புகுத்தியது கொடுமை யென்பதற்கு, அவனது குணங்களைப்பாராட்டி 'கருணைமாண்பலால் ஊனம்வேறிலான்' என்றனர். இச்செய்யுள், அச்சிட்ட பிரதிகளிலில்லை; சிலபிரதிகளில் "வாங்கிய" என்ற அடுத்தபாடலின்பின் உள்ளது. பி-ம்:—[1]மானமே. [2]ஊனமேவேறிலா, ஊன மேவேறிலான். [3]நையவும். [4]இனி. (சகூஉ)

கஊ. வாங்கிய [1]மருங்குலை வருத்தும் கொங்கையர்
பூங்கொடி பொதுங்குவ போ[2]லொ துங்கின
ரேங்கிய [3]குரலின [4]ரிணைந்த காந்தளிற்
றூங்கிய செங்கைதந் [5]தலைகண் மேலுளார்.

(இ - ள்.) வாங்கிய மருங்குலை வருத்தும் கொங்கையர்-வளைந்த இடை யைத் தமதுபாரத்தால்)வருத்துகின்ற தனங்களையுடையவராகிய மகளிர்,— ஏங்கிய குரலினர்-அழுகின்ற குரலினையுடையவரும், இணைந்த காந்தளின் தம் தலைகள்மேல் தாங்கிய செம் கை உளார் - சேர்ந்த செங்காந்தண்மலர் போலத் தம்தலைமீதுவைத்த சிவந்த கைகளை யுடையவருமாகி, பூங் கொடி- ஒதுங்குவ போல்—, ஒதுங்கினர்—; (எ - று.)

இரண்டுகைகளையும் தலைமேல்வைத்துக்கொண்டு அழுதவண்ணம் மக ளிர் ஒருபுறமாகச்சென்று கிடந்தன ரென்க. பி-ம்:—[1]மருங்குலார் வைத்த கொங்கையார். [2]ஒதுங்கினர். [3]குரலினர். [4]இளைத்த. [5]தங்கண், தலையின். ()

கஎ. தலைக்குவட் டயன்மதி [1]தவழு மாளிகை
நிலைக்குவட் டிடையிடை நின்ற நங்கைமார்
முலைக்குவட் டிழிகணீ ராலி மொய்த்துக
மலைக்குவட் [2]டயர்வுறு மயிலின் மாழ்கினர்.

(இ - ள்.) தலை குவடு அயல் - சிகரத்துச்சியில், மதி தவழும்-சந்திரனூர் கின்ற, மாளிகை - வீடுகளினது, நிலை குவடு இடை இடை-மேல் நிலையாகிய உபரிகையிடங்கள்தோறும், நின்ற—, நங்கைமார்—,—முலை குவடு இழி-(தம்) தனங்களின்மேல் வழிகின்ற, கண் நீர் ஆலி-கண்ணீர்த்துளி, மொய்த்து உக-இடைவிடாது சிந்த, மலை குவடு அபர்வுறும்-பர்வதசிகரத்தில் வருந்துகின்ற, மயிலின் - மயிற்பேடைகள் போல, மாழ்கினர் - வருந்தினர்; (எ - று.)

கண்ணீர் பொழிய மாளிகைமேலிருந்து புலம்புகின்ற மகளிர், மழைநீர் பொழிய மலைமேல் அயர்வுறும் மயிலையொத்தனரென்பதாம்; **தன்மைத்தற் குறிப்பேற்றவணி.** பி - ம்:—[1]தழுவ, தழுவு. [2]அகவுறு. இச்செய்யுள் சில பிரதியில் "நன்னெடு" (உ0ந) என்ற பாடலுக்குப் பின் உள்ளது. (சகூசு)

உ00. [1]மஞ்சென வகிற்புகை வழங்கு மாளிகை
யெஞ்சலில் சாளரத் [2]திரங்கு [3]மின்சொலா
ரஞ்சனக் [4]கண்ணினீ ரருவி சோர்தரப்
பஞ்சரத் திருந்தழுங் கிளியிற் பன்னினர்.

(இ - ள்.) மஞ்சு என அகில் புகை வழங்கும் - மேகம்போல அகிற்புகை பொருந்திய, மாளிகை - உபரிகையிலுள்ள, எஞ்சல் இல் சாளரத்து-குறைதலில்லாத பலகணிவழியால், (கண்டு), இரங்கும் இன் சொலார் - வருந்துகின்ற இனிய சொல்லினையுடைய மகளிர், அஞ்சனம் கண்ணின்-மையுண்ட கண்களினின்று, நீர்—, அருவி சோர்தர - மலையருவிபோல வழிய, பஞ்சரத்து இருந்து அழும் கிளியின் - கூட்டிலிருந்து அழுகின்ற கிளிகள்போல, பன்னினர் - அழுதார்; (எ - று.)

சாளரத்திரங்கும் இன்சொலார்க்கு, பஞ்சரத்திலிருந்தழுங் கிளி உவமையாம். மாளிகைமேல்வழங்கு புகை, மலைமேல் தவழும் மஞ்சுஅன்னதாதல் காண்க. **பி-ம்:**—[1]மஞ்சன. [2]இயங்கும். [3]மென். [4]கண்கணீர். (சகூஎ)

உ0ந. நன்னெடுங் கண்களி னுன்ற நீர்த்துளி
தன்னெடுந் தாரைக [1]டளத்தின் [2]வீழ்தலான்
[3]மன்னெடுங் [4]குமரன்மாட் டழுங்கி மாடமும்
பொன்னெடுங் கண் [5]குழித் தழுவ போன்றவே.

(இ - ள்.) (மேன்மாடத்தினின்று இராமபிரான் செல்வதைக் காண்பவர் களுடைய), நல் நெடு கண்களின் - அழகிய பெரிய கண்களினின்று, நான்றவழிகின்ற, நீர் துளிதன் - நீர்த்திவலைகளுடைய, நெடு தாரைகள் - பெரிய தாரைகள், தளத்தின் வீழ்தலால் - உபரிகையினின்று பெருகுதலால்,—மாடம்உம் - மாளிகைகளும், மன் நெடு குமரன் மாட்டு - சக்ரவர்த்திதிருமகன் விஷயத்தில், அழுங்கி - இரங்கி, பொன் நெடு கண் குழித்து-அழகிய பெரிய கண்களை [இடத்தை]க் குழியாக்கி, அழுவ போன்ற - அழுவனவற்றைப் போன்றன; (எ - று.)

இராமபிரான் மரவுரிதரித்து வீதியிற்செல்வதை மேன்மாளிகையி னின்று கண்ட சிலர் தமது கண்களினின்று நீரை ஆறுப்பெருக்க அந்நீர் குழிவிழும்படி உபரிகையினின்று கீழேபெருகியது, மாடமே கண்குழித்து அழுவனபோலு மெனக் குறித்தார்: **அதிசயோக்தியணி**யை யங்கமாகக் கொண்டுவந்த தற்குறிப்பேற்றவணி. இத்தற்குறிப்பேற்றத்திற்கு 'கண்குழி த்து' என்ற விடத்துள்ள சிலேடை அங்கமாய்நின்றது: கண் - நயனமும் இடமும் என இருபொருள்படுதல் காண்க. குழித்தல் - குளித்தல்: நீராட்டு தல் என்பாருமுளர். பி-ம்:—[1]தலத்தின், நிலத்து. [2]வீழ்த்தலால். [3]அந்நெடுங். [4]குமரர். [5]குழிந்து, குவித்து. இச்செய்யுள், ''மக்களை'' என்று தொடங்கும் அடுத்தபாடலுக்குப்பின் சில பிரதிகளி லுள்ளது. (நகஅ)

202. மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்
புக்கிட [1]மறிந்திலர் புதல்வர் பூசலிட்
டுக்கன ருயங்கின ருருகிச் சோர்ந்தனர்
துக்க[2]நின் றறிவினைச் சூறை யாடவே.

(இ - ள்.) மாதர் மக்களை மறந்தனர் - மகளிர் (தம்) பிள்ளைகளை மறந்து விட்டார்கள்; புதல்வர் தாயர் புக்க இடத்தை அறிந்திலர்-புத்திரர் தாய்மார் சென்ற இடத்தை அறிந்தாரில்லை; (இங்ஙனம் அந்நகரமாந்தர்), பூசல் இட்டு-பெரிதாலித்து, உக்கனர் - நெஞ்சுளைந்தவராகியும், உயங்கினர் - மனந் தளர்ந்தவராகியும், துக்கம் நின்று அறிவினை சூறை ஆட - துயரம் நிலைத்து அறிவைக் கொள்ளையிட, உருகி சோர்ந்தனர்—; (எ - று.)

தாயர் புதல்வரையும், புதல்வர் தம் தாயரையும் அறிந்திலர்: இங்ஙன மானதற்குக் காரணம், அவர்களுடைய நெஞ்சு இராமனுக்குநேர்ந்த வநவாசத் தைக் கருதியதனால் உக்கு உயங்கியுருகியமையே யென்றவாறு. தாயரை, 'ஐ'-பிரித்துக்கூட்டப்பட்டது. பி-ம்:—[1]உணர்ந்திலர். [2]நின்றிருவினை. (நகக)

203. காமரங் [1]கனிந்தெனக் கனிந்த மென்மொழி
மாமடந் தையரெலா [2]மறுகு சேர்தலாற்
றோமரு நறுங்குழற் [3]றிருவி னீங்கிய
தாமரை [4]யொத்தன தவள மாடமே.

(இ - ள்.) காமரம் கனிந்து என - காமரமென்னும் பண்ணிசை பழுத் தாற்போல, கனிந்த மெல் மொழி - இனிய மெல்லிய சொல்லினையுடைய, மா மடந்தையர் எலாம் - அழகிய மகளிர் யாவரும், மறுகு சேர்தலால் - வீதியை அடைந்ததனால், தவளம் மாடம் - (முன் அவர்களிருந்த) வெள்ளிய மாளிகைகள்,—தேன் மரு நறு குழல்-கட்கினிமையையும் மிக்கமணத்தையு முடைய கூந்தலையுடைய, திருவின் - திருமகளால், நீங்கிய - பிரியப்பெற்ற, தாமரை - தாமரைமலரை, ஒத்தன—; (எ - று.)

"திருப்புறக் கொடுத்த செம்பொற்ரூமரைபோன்று கோயில்,புரிக்குழன் மடந்தை போகப் புலம்பொடுமடிந்ததன்றே" என்ற சீவகசிந்தாமணி இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. தேன்மரு-சூடிய மலரிலுள்ள மதுப்பொருந்திய, குழலென்றுமாம். தேன் + மரு = தேமரு: "தேன்மொழி"என்னுஞ் சூத்திரவிதி. திருவின், இன் - அசையுமாம். பி-ம்:—[1]களிந்தன. [2]மறுகிற்சேர்தலால், மறுகினேகலால். [3]திருவை. [4]ஒத்ததத். இச்செய்யுள் "மழைக்குலம்" என்று தொடங்கும் அடுத்த பாடலுக்குப்பின் சில பிரதிகளிலுள்ளது. (நுஂஂ)

உஂச. மழைக்குலம் [1]புரைகுழல் [2]விரிந்து மண்ணுறக்
குழைக்குல முகத்தியர் [3]குழாங்கொண் டேகின
ரிழைக்குலஞ் சிதறிட வேவுண் [4]டோய்வுறு
முழைக்குல முழைப்பன [5]வொத்தொர் [6]பாலெலாம்.

(இ - ள்.) ஓர் பால் எலாம்-ஒருபக்கத்திலெல்லாம்,-ஏ உண்டு - அம்பினலடிக்கப்பட்டு, ஓய்வுறும் - தளர்கின்ற, உழை குலம் - பெண்மான்கூட்டம், உழைப்பன ஒத்து-வருந்துகின்றனவற்றைப்போன்று,-குலம் குழை முகத்தியர் - சிறந்த குண்டலத்தை யணிந்த காதினையுடைய மகளிர்,—மழை குலம் புரை குழல் - முகிற்குழாத்தை யொக்கின்ற கூந்தல், விரிந்து மண் உற - அவிழ்ந்து தரையிற் புரள, இழை குலம் சிதறிட - ஆபரணசமூகஞ் சிந்த, குழாம் கொண்டு - கூட்டமாகத்திரண்டு, ஏகினர் - போனார்கள்; (எ - று.)

மகளிர்பலராதலாற் கூந்தலும் பலவாதல்பற்றி, 'மழைக்குலம்' என்றார். குலக்குழையென மாறுக. முகம் - ஆகுபெயர். செறிப்பன, பூண்பன முதலாகப் பலவகைப்படுதலால்,இழைக்குலமென்றார்.மகளிர்க்கு-உழைக்குலமும், ஸ்ரீராமனைப் பிரிவதனாலுண்டாகிய துயரிற்கு - அம்பும் உவமை. எலாமென்றது, எஞ்சாமைப்பொருளது. பி-ம்:—[1]புரி. [2]விரித்து. [3]குழாங்களேங்கின, குழாங்கொண்டோங்கின, குழாங்கொண்டேங்கினர். [4]ஓய்தரும். [5]மொய்த்த, ஒத்த. [6]பாரெலாம். (நுஂக)

உஂரு. கொடியடங் கினமனைக் குன்றங் கோமுர
சிடியடங் கினமுழக் கிழந்த பல்லியம்
படியடங் கலுநிமிர் பசுங்கண் மாரியாற்
பொடியடங் கின [1]மதிற் புறத்து வீதியே.

(இ - ள்.) மனை குன்றம்-மலைபோன்ற மாளிகைகள்,-கொடி அடங்கின-கொடிகள் அடங்கப்பெற்றன; கோ முரசு இடி-மேன்மையையுடைய முரசவாத்தியங்களினொலி, அடங்கின—; பல் இயம் - பலவகை வாச்சியங்கள், முழக்கு இழந்த-ஒலியை இழந்தன; மதில் புறத்து வீதி - மதிலினதுவெளியிலுள்ள தெருக்கள், படி அடங்கலும் நிமிர்-நிலமுழுவதிலும் பெருகுகின்ற; பசு கண் மாரியால் - பசிய கண்ணீரால், பொடி அடங்கின-துகள் அடங்கப்பெற்றன; (எ - று.)

மாடங்கள் கொடியெடுத்துக்கட்டுதல் ஒழிந்து, மங்களவாச்சிய வொலிகளும் ஒலியாதிருக்க, வீதிகள் அழுகின்றவர்களின் கண்ணீர்வெள்ளத்தாற் புழுதியடங்கினவென்க. பசுமை-ஈண்டுக்கருமைமேற்று; இனி, புதுமை மேற்றாய், இதுகாறும் ஒருநாளுமில்லாத புதிய கண்ணீரென்றுமாம். பி-ம்:— [1]மதில். (நூ0உ)

உ0சு. அட்டிலு [1]மிழந்தன புகைய கிற்புகை
நெட்டிலு [1]மிழந்தன நிறைந்த [2]பால்கிளி
வட்டிலு [3]மிழந்தன [4]மகளிர் [5]வான்மணித்
தொட்டிலு [1]மிழந்தன மகவுஞ் [6]சோரவே.

(இ - ள்.) அட்டில்உம்-மடைப்பள்ளிகளும், புகை-(சமையல்செய்தலினாலுண்டாகிற) புகையை, இழந்தன—; நெடு இல்உம்-உயர்ந்த உபரிகைகளும், அகில் புகை-அகிற்கட்டையினாலுண்டாக்கப்படுகின்ற தூமத்தை, இழந்தன-; கிளிஉம்—, பால் நிறைந்த வட்டில் - பசுவின்பால் நிறைந்த வட்டிலை, இழந்தன—; வான் மணி தொட்டில்உம்-சிறந்த ரத்நமயமான தொட்டில்களும், மகஉம் சோர - குழந்தைகளைத் தளர்ச்சியடைய, மகளிர் - மாதர்களினது வரவை, இழந்தன—; (எ - று.)

சொற்பொருட்பின்வருநிலையணி: மேலும் இது காண்க. உண்ணவேணுமென்ற விருப்பம் இன்மையால் அட்டில் புகையிழந்தன; அகிற்புகை யூட்டுதல் உல்லாசகாலத்து நிகழ்வதாதலால், நெட்டிலும் அகிற்புகையையிழந்தன: கிளிப்பிள்ளைகட்குப் பாலூட்டுதலைச் செய்யாமையால், கிளியும் பால் நிறைந்த வட்டிலையிழந்தன;குழவிகளைத் தாய்மார் எடுத்துவிடவேணுமென்ற கருத்துக் கொள்ளாமலிருத்தலால், மகளிரை மணித்தொட்டிலு மிழந்தனவென்க. பி-ம்:—[1]மறந்தன. [2]பால்களின். [3]இழந்தனர், மறந்தன. [4]மருங்கு. [5]காழ், கால்சால். [6]சோர்ந்தவே. (நூ0ஊ)

உ0எ. ஒளிதுறந் தன[1]முக முயிர்[2]துறந் தெனத்
துளிதுறந் தனமுகிற் றொகையுந் [3]தூயநீர்த்
தளிதுறந் தன[4]பரி தான யானையுங்
களிதுறந் தனமலர்க் [5]கள்ளுண் வண்டினே.

(இ-ள்.) முகம்-(யாவருடைய) முகமும், உயிர் துறந்துளன - உயிரைப் பிரிந்தாற் போல, ஒளி துறந்தன - காந்தியைவிட்டன; முகில் தொகைஉம் மேகக்கூட்டமும், துளி துறந்தன - மழைத்துளியை விட்டன; பரி - குதிரைகளும், தூய நீர்-பரிசுத்தமாகிய நீரினையுடைய, தளி-சாலைகளை, துறந்தன—; தானம் யானைஉம் - மதயானைகளும், மலர் கள் உண் வண்டின் - பூக்களிலிருந்து மதுவைக் குடிக்கின்றவண்டுகள்போல, களிதுறந்தன-களிப்பைவிட்டன.

தூய நீர்மையையுடைய தளி யென்று உரைத்தலும், தூய நீர்த்துளி யென இயைத்தலுமாம். தளி-கட்டுமிடம்; அரசன் கோயிலுமாம். பரிதுஆன

எனஎடுத்து - பருமையை யுடையதாகியவென யானைக்கு அடையுமாம்.
பி - ம்:—[1]உடல். [2]துறந்தன. [3]தூயவாம், தூயவர். [4]பலித்தானம்,பலிதானம், பரிதானை. [5]கண்ணின். (நுoசு)

உoஅ. நிழல்பிரிந் தனகுடை நெடுங்க ணேணைழயர்
குழல்பிரிந் தனமலர் குமரர் தாளிணை
கழல்பிரிந் தனசினக் [1]காமன் வாளியு
மழல்பிரிந் தனதுணை பிரிந்த [2]வன்னமே.

(இ - ள்.) குடை-சத்திரங்கள், நிழல் பிரிந்தன-நிழலை விட்டன; நெடு கண் ஏழையர் குழல்-நீண்ட கண்களையுடைய மகளிரது கூந்தல், மலர் பிரிந் தன - பூக்களைச்(சூடாது) விட்டன; குமரர் தாள் இணை-ஆடவர்களுடைய உபயபாதங்கள், கழல் பிரிந்தன-வீரக்கழலை விட்டன; சினம் காமன் வாளி உம் - கோபத்தையுடைய மன்மதனது பாணங்களும், அழல் பிரிந்தன-வெப் பத்தைவிட்டன; அன்னம்-அன்னப் பறவைகள், துணை பிரிந்த - (தம்) பெடையைப்பிரிந்தன; (எ - று.)

'நிழல்பிரிந்தனகுடை' என்றதற்கு-யாவருங் குடைபிடித்துக்கொள்ளு தல் முதலியவற்றைக் கொண்டில ரென்றும், 'காமன்வாளியும் அழல்பிரிந் தன' என்றதற்கு-யாவரும் வேட்கையுற்றில ரென்றுங் கருத்துக்கொள்க.
பி-ம்:—[1]காமவாளியும். [2]அன்றிலே. (நுoநு)

உoக. தாரொலி நீத்தன புரவி தண்ணுமை
வாரொலி நீத்தன மழையின் [1]விம்முறுந்
தேரொலி நீத்தன தெருவுந் தெண்டிரை
நீரொலி நீத்தன [2]நீத்தம் [3]போலுமே.

(இ-ள்.) புரவி-குதிரைகளின், தார் ஒலி-கிண்கிணிமாலையிலேனைசையை, நீத்தன-விட்டனவும், தண்ணுமை-பேரிகைகளினது, வார்ஒலி-தோல்வாரின் ஒலியை, நீத்தன-நீத்தனவும்,மழையின் விம்முறும்-மேகம்போல ஒலிக்கின்ற, தேர் ஒலி-தேரோசையை, நீத்தன-விட்டனவுமாகிய, தெருவும்—,—தெள் திரை நீர் ஒலி நீத்தன-தெளிந்த அலைகளையுடைய நீரினதுஒலியை விட்டன வாகிய, நீத்தம்-கடலை, போலும்—: (எ - று.)

தெருவும், உம்மை-கதைப்போக்கைத் தழுவிவந்தது: இறந்தது தழுவிய வெச்சவும்மையின்பாற்படும். தெரு-அரசர் தெரு. புரவித்தாரொலிமுதலியன நீங்கப்பெற்ற தெரு, தெண்டிரையொலி நீத்த கடலைப்போலுமென்க. நீத்தம்-கடலுக்கு; இலக்கணை. இனி, 'புரவி தாரொலி நீத்தன: தண்ணுமை வாரொலி நீத்தன: தெருவும் விம்முறுந் தேரொலி நீத்தன: (இவை), தெண் திரை நீரொலி நீத்தன நீத்தம்போலும் என்று உரைப்பினுமாம். பி-ம்:—
[1]முத்துறத். [2]நீத்த. [3]போலவே. (நுoசு)

உகo. முழவெழு மொலியில முறையின் [1]யாழ்நரம்
பெழவெழு மொலியில விமைப்பில் [2]கண்ணினர்
விழவெழு மொலியில வேறு மொன்றில
வழவெழு [3]மொலியல [4]தரச வீதியே.

(இ-ள்.) அரசவீதி-ராஜவீதிகளில், அழ எழும் ஒலி அலது - அழுதலா லுண்டாகிற ஒலியேயல்லாமல்,—முழவு எழும் ஒலி இல - வாச்சியங்களி னின்று உண்டாகின்ற ஒலி இல்லை; முறையின் - கிரமமாக, யாழ் நரம்பு - வீணையினது நரம்புகளினின்றும், எழ எழும் - மிகுதியாக உண்டாகின்ற, ஒலி-, இல—; இமைப்பு இல் கண்ணினர் - இமையாக்கண்ணராகிய தேவர் களின், விழவு - திருவிழாக்களில், எழும் - உண்டாகின்ற, ஒலி—, இல—; வேறு ஒன்றுஉம் இல—; (எ - று.)

[3]ஒலியில என்ற பாடத்துக்கு, மூர்ச்சித்தன ராதலால், அழவெழுமொலி யுமிலதாயிற் றென்க. இங்கே 'அரசவீதி' என வந்ததால், கீழ்ச்செய்யுளில் தெருவென்றதும் அரசவீதியையே காட்டும். பி - ம்:—[1]ஆரணம். [2]கண்ணைநீர். [3]ஒலியிலாது, ஒலியலால், ஒலியிலா, ஒலியெழும். [4]அரசர். (நoஎ)

உகக. தெள்ளொலிச் [1]சிலம்புகள் சிலம்பு பொன்மனை
நள்ளொலித் திலநளிர் கலையு[2]மன்னவே
புள்ளொலித் தில[3]புனல் பொழிலு [2]மன்னவே
கள்ளொலித் திலபலர் களிறு [2]மன்னவே.

(இ-ள்.) தெள் ஒலி சிலம்புகள்-தெள்ளிய ஒலியினையுடைய காற்சிலம்பு கள், சிலம்பு - ஒலிக்கின்ற, பொன் மனை - பொன்மயமான மாளிகைகள், நள் ஒலித்தில-நள்ளென்றுஒலித்தன வில்லை; நளிர் கலைஉம்-பெரிய மேகலா பரணங்களும், அன்னவ-அத்தன்மையனவே; புனல்-நீரில், புள்-பறவைகள், ஒலித்தில—; பொழில்உம்-சோலைகளிலும், அன்னவ—; மலர் - பூக்களில், கள்-வண்டுகள், ஒலித்தில—; களிறுஉம்-யானைகளும், அன்னவே—; (எ-று.) பி ம்:—[1]சிலம்புதன். [2]அன்னதே. [3]பொழில்புனலும், புனற்பொழிலும். ()

உகஉ. செய்ம்மறந் தனபுனல் சிவந்த வாய்ச்சியர்
கைம்மறந் தன[1]பசுங் குழவி காந்தெரி
நெய்ம்[2]மற ந்தனநெறி யறிஞரி யாவரு
மெய்ம்மறந் தனரொலி மறந்த வேதமே.

(இ-ள்.) செய் - கழனிகள், புனல் மறந்தன - நீர் மறக்கப்பெற்றன; சிவந்த வாய்ச்சியர்-சிவந்த அதரத்தையுடைய மகளிரின், கை—,பசுங் குழவி-இளங்குழந்தைகளை, மறந்தன—; காந்து எரி - விளங்குகின்ற அக்கினிகள், நெய் மறந்தன-(ஆகுதிசெய்யும்) நெய்யை மறக்கப்பெற்றன; நெறி அறிஞர் யாவர்உம்-நன்னெறியை யறிந்த ஞானிகளனைவரும், மெய் - தத்துவஞானத் தை, மறந்தனர்—; வேதம் - மறைகள், ஒலி மறந்த - ஓசையை மறந்தன.

பசுமை - ஈண்டு, இளமை மேற்று. காருகபத்தியம், ஆஹவநீயம், தக்ஷி ணாக்கினி என மூவகைப்படுதலால், 'எரி மறந்தன' எனப் பன்மையாற் கூறி னர். யாவரும் வேதபாராயணஞ் செய்தில ரென்பது ஈற்றடியிற் கூறியபொ ருள். ஒலி-ஸ்வரமென்றிருமுளர். பி-ம்:—[1]அருங். [2]மறந்தறநெறி. (நுoகூ)

உகூ. ஆடின ரழுதன ரழுத வேழிசை
பாடின ரழுதனர் [1]பரிந்த கோதைய
ரூடின ரழுதன ருயிரி னன்பரைக்
கூடின ரழுதனர் குழாங்[2]கு ழாங்கொடே.

(இ - ள்.) குழாம் குழாம் கொடு - கூட்டங்கூட்டமாகத்திரண்டு,—ஆடி னர் - நர்த்தநஞ்செய்துகொண்டிருந்தவர், அழுதனர்—; அழுதம் ஏழ்இசை பாடினர் - அமிர்தம்போலினிய ஏழுசுரங்களைப் பாடிக்கொண்டிருந்தவர், அழுதனர்—; பரிந்த கோதையர் - நீக்கிய மாலையை யுடையவராய், ஊடி னர்-(தங்) கணவரோடு ஊடினவர், அழுதனர்—; உயிரின் அன்பரை கூடினர்-(தம்) பிராணநாயகரைப்புணர்ந்தவரும், அழுதனர்—; (எ - று.)

ஆடுதல் முதலியன நிகழ்த்தியோரிடத்து அத்தொழில் நீங்கி அழுதல் தொழில் நிகழ்ந்ததாகக்கூறியது, முறைபிறழ்ச்சியணியாம். குழாங்குழாங் கொடுஎன்றதொடர் கடைநிலைத்தீவகமாகி, ஆடினர்முதலியவற்றோடியை யும். பி-ம்:—[1]பரித்த. [3]குழாங்களாய். (நுகo)

உகசு. நீட்டில களிறுகைந் [1]நீரின் வாய்புதல்
பூட்டில புரவிகள் புள்ளும் பார்ப்பினுக்
கீட்டில விரைபுனிற் றீன்ற கன்றையு
[2]மூட்டில [3]கறவைகன் றுருகிச் [4]சோர்ந்தவே.

(இ - ள்.) களிறு - யானைகள், (பருகுமாறு), நீரின் - நீரில், கை நீட் டில - துதிக்கையை நீட்டினவில்லை; புரவிகள் - குதிரைகள், வாய்--வாயில், புதல் பூட்டில - புல் கொடுக்கப்பெற்றனவில்லை; புள்உம் - பறவைகளும், பார்ப்பினுக்கு - (தம்) குஞ்சுகளுக்கு, இரை ஈட்டில - உணவைச் சம்பாதித் தனவில்லை; கறவை - பசுக்கள், ஈன்ற புனிறு கன்றைஉம் - (தாம்) பெற்ற இளங்கன்றுகளையும், ஊட்டில - உண்பித்தனவில்லை; கன்று-அக்கன்றுகள், உருகி சோர்ந்த—; (எ - று.)

பார்ப்பு - இளமைப்பெயர்; "பார்ப்பும்பிள்ளையும் பறப்பவற்றிளமை." "புதல்புல்லென்பன பற்பிறப்பாகும்" என்பது, திவாகரம். பி-ம்:—[1]நிமிரு நீரின்வாய், நீரின்வாய்முகம், நீரினீரின்வாய். [2]ஊட்டிய. [3]கறவைசைந்து, கறவைநன்று, கறவைபால், கறவையும். [4]சோரவே. (நுகக)

உகஞ. மாந்தர்த மொய்ம்பினின் மகளிர் கொங்கையா
மேந்திள நீர்களுஞ் வறுமை யெய்தின
[1]சாந்தமம் மகிணர்த முடியிற் றையலார்
கூந்தலின் [2]வறுமைய மலரின் கூலமே.

(இ - ள்.) மாந்தர்தம் மொய்ம்பினின் - ஆடவரது மார்பில், மகளிர் கொங்கை ஆம் எந்து இள நீர்கள்உம் - மகளிரது தெங்கங்காயையொத்த தனங்களும், வறுமை எய்தின-இல்லாமையை யடைந்தன; மலரின் கூலம் - பூவினம், சாந்தம் அம் மகிழ்ணர் தம் முடியில்-சந்தனமணியுந்தன்மையரான அழகிய கணவரது குஞ்சியிலும், தையலார் கூந்தலின் - அம்மகளிரது குழலிலும், வறுமைய - இல்லாமையையடைந்தன; (எ - று.)

ஆடவரும்மகளிரும் மலர்சூடுதலைத் தவிர்ந்தன ரென்பது, பின்னிரண்டடிகளிற் கூறியபொருள்; முன்னிரண்டடிகள்-ஆடவர் மகளிரைப் புல்லி மகிழாமையைத் தெரிவிக்கும். இளநீர்கள் சாந்தத்தால் வறுமையெய்தின. என்றலுமாம். மொய்ம்பு-ஆகுபெயர். தையல்-அழகு. சுட்டைத்தை பலாரோடுங் கூட்டுக. மகிணர்=மகிழ்நர்: மரூஉ. பி-ம்:—[1]சாந்தயர்கடையவர் தார்பெய் குஞ்சியின், சாந்தயர்சடையவர்தார்பெய் குஞ்சியின். [2]வறுமையம். (நிகஉ)

வேறு.

உகசு. ஓடை நல்லணி முனிந்தன வுயர்களி றுச்சிச்
சூடை நல்லணி முனிந்தன [1]தொடர்மணி [2]கொடியி
ணுடை நல்லணி முனிந்தன [3]வம்பொன்செ யிஞ்சி
பேடை நல்லணி முனிந்தன [4]மென்னடைப் புறவம்.

(இ - ள்.) உயர் களிறு-பெரியயானைகள், ஓடை-முகபடாத்தையும், நல் அணி - சிறந்தஆபரணங்களையும், முனிந்தன - வெறுத்தன; தொடர் மணி - நெருங்கிய மாளிகைகள், உச்சி சூடை - சிகரத்தி லணிதற்குரிய, நல்அணி - நல்ல அலங்காரங்களை, முனிந்தன—; கொடியின்ஆடை-துவசபடங்கள், நல் அணி-நல்லஅழகை, முனிந்தன—; அம் பொன் செய் இஞ்சி-அழகிய பொன்னாலாகிய மதில்கள், மெல் நடை புறவம் - மெல்லியநடையையுடைய புறாக்களும், பேட்டை - (அவற்றின்) பேடைகளும், (இவற்றாலான), நல் அணி - நல்லழகை, முனிந்தன—; (எ - று.)

"பேடையும்பெடையு நாடிலென்றும்" என்றதனால், புறவத்திற்குப் பேடையென்ற பெண்மைப்பெயர் கூறினர். பி-ம்:—[1]சுடர். [2]கொடிகள். [3]சிறுவியரன்னம், செம்பொன்செயன்னம், செம்பொன்செயன்னப். [4]வெள்ளிடைப்பிறக்கம், வெள்ளடைப்பிறக்கம். (நிகஉ)

உகஎ. திக்கு நோக்கிய தீவினைப் [1]பயனெனச் சிந்தை
நெக்கு [2]நோக்குவோர் நல்வினைப் [3]பயனென [4]நோர்வோர்
பக்க [5]நோக்கலென் [6]பருவர லின்ப[7]மென் [8]றிரண்டு
மொக்க நோக்கிய [9]யோகரு மருந்துய [10]ருழந்தார்.

(இ - ள்.) பருவரல் இன்பம் என்ற இரண்டுஉம்-இன்பதுன்பங்களிரண்டையும், ஒக்க நோக்கிய - சமமாக எண்ணுகின்ற, யோகர்உம் - யோகியரும், அருந்துயர் - (போக்குதற்கு) அரிய துன்பத்தால், உழந்தார்-வருந்தினர்கள்: (என்றால்),(துன்பம் இன்பம் என்ற இவை நேரும்போது,) (முறையே),திக்கு நோக்கிய தீவினை பயன் என - (தாம்இருக்கும்) இடத்தை நாடிவந்த தீவினை

யின் பயனென்று, சிந்தை நெக்கு நோக்குவோர்-மனம்முறிந்து நோக்குபவ ரும், நல்வினை பயன் என-புண்ணியத்தின்பயனென்று, நேர்வோர் பக்கம்-மனத்திற்கொள்பவருமான இவ்வுலகத்தவரிடத்து, (மிகவும் வருந்திரென் பதைப்பற்றி),நோக்கல் என்-ஆராய்ந்து பாராட்டிக் கூறவேண்டுவது என்ன?

இன்பம் நேர்ந்தபோதும் துன்பம் நேர்ந்தபோதும் அவற்றில் விருப்பு வெறுப்புக்கொள்ளாமல் ஒரேதன்மையராயுள்ள யோகியரும், இராமன்செல் வதுகுறித்து வருந்திரென்றல், எதேனும் துன்பம் நேர்ந்தால் 'நாம் இருக் கும் இடத்தை நாடி நம்மைத் துன்பப்படுத்தவந்த தீவினையின் விளைவாகும் இது' என்று மனம் நெக்குத்தளர்வதும், எதேனும் இன்பம் நேர்ந்தால் 'நமது புண்ணியத்தின்பயன் இது' என்று மனங்களிப்பதுமாகவுள்ள உலகத்தவர் வருந்திரென்பதைக் குறித்துக் கூறவேண்டுமோ? என்பதாம். ஒருபொரு ளைக் கூறி அதனால் மற்றொருபொருள் எளிதில் சித்திக்கக்கூறியதனால், இச் செய்யுள்-தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணியாம். துன்பம் நேர்ந்தால் தீவினைப்பயனென்று மனம் வருந்துவதும், இன்பம்நேர்ந்தால் புண்ணியப் பயனென்று மனம் மகிழ்வதும் உலகத்தவரின்தன்மை யாதலால், அவ ரை 'திக்குநோக்கிய தீவினைப்பயனைனச் சிந்தை நெக்கு நோக்குவோர் நல் வினைப்பயனென நேர்வோர்' என்றார். இங்கு, தீவினையைப்பற்றி உலகத் தவர் வெறுக்குந்தன்மைவிளங்கக் கூறியமை, கருதத்தக்கது.

யோகம் - கடவுளிடத்து மனத்தைச்செலுத்தி நிற்பது; அதனையுடைய வர்-யோகர். பி-ம்:—[1]பயமிது, பயனீது. [2]நோக்கிய, நோக்கியர், நோக்கலர். [3]பயம் [4]நேராப், நேர்ஞானப். [5]நோக்கிலேன், நோக்கிலர். [6]பருவரல்போகம். [7] ஒன்று. [8]ஒருங்க. [9]யோகியர். [10]உழன்றார். (நிகழ)

உகவு. [1]ஓவி னல்லுயி [2]ருயிர்ப்பிறே டுடல்பதைத் துலைய
[3]மேவி [4]நல்[5]லழ கெழில்கெட விம்மறேய் [6]விம்மத்
தாவி லம்பொறி [7]மறுகுறத் தயரத னென்ன
வாவி [8]நீக்கின்ற தொத்ததவ் வியோத்திமா நகரம்.

(இ - ள்.) அவ்வியோத்திமாநகரம்—, உடல்-(பிராணிகளினது) சரீரங் கள், உயிர்ப்பிறேடு-பெருமூச்சுடன், ஓவுஇல் நல் உயிர் பதைத்து - நீங்குத லில்லாத இனிய சீவன் பதறப்பெற்று,உலைய-வருந்துதலை, மேவி-பொருந்தி, நல் அழகு எழில் கெட-சிறந்த அழகும் எழிலும் கெடுதலாலும், விம்மல் நோய் விம்ம - கலக்கத்தைத்தருகின்ற துன்பம் மிகுதலாலும், தா இல் ஐம் பொறி மறுகுற - கெடுதலில்லாத பஞ்சேந்திரியங்கள் சுழற்சியடைதலாலும், தயரதன் என்ன-சக்ரவர்த்திபோல, ஆவி நீக்கின்றது-(ஸ்ரீராமனதுபிரிவிற்கு ஆற்றாது) உயிரை விடுகின்றதனை, ஒத்தது—; (எ - று.)

நகரம் ஆவி நீக்கின்றதொத்த தென்றாராயினும், நகரத்தவர் ஆவிநீக்கின் றனரொத்தன ரென்று கருத்துக்கொள்க. மன்னனைப்படி மன்னுயிரப்படி யென்பவாகலான், 'தயரதனென்ன வாவி நீக்கின்றது' என்றார். "ஆவுமழு

த...அம்மன்னவனேமானவே" என்றூர் கீழும். நீக்கின்றது, நீ - பகுதி. பி-மீ:—[1]ஓவநல்லுயிர், ஓவிநல்லுயிர். [2]உணர்விழுடு. [3]மேவு. [4]தொல். [5]உலகெழில். [6]விம்மி, உலகந். [7]மறுகுறுந். [8]நீக்கியது. (நகந)

உகசு.—இராமன் சீதையிருக்குமிடத்தைச் சேர்தல்.

[1]உயங்கி யந்நக ருலவுற [2]வொருங்குழை சுற்ற
மயங்கி [3]யேங்கினர் வயின்வயின் [4]வரம்பிலர் தொடர
வியங்கு பல்[5] லுயிர்க் கோருயி ரெனநின்ற விராமன்
றயங்கு பூண்முலைச் சானகி யிருந்துழிச் சார்ந்தான்.

(இ - ள்.) (இவ்வாறு), அ நகர்-அந்நகரத்தவர், உயங்கி உலவுற-மனந் தளர்ந்து வருந்தவும், ஒருங்கு உழை சுற்ற - ஒருமிக்கப் பக்கத்திற் சூழவும், மயங்கி ஏங்கினர்-அறிவுகலங்கி அழுதவராய், வரம்பு இலர்-அநேகர், வயின் வயின்-இடந்தோறும், தொடர - பின்னே வரவும், இயங்கு பல் உயிர்க்கு - இயங்குகின்ற பலவகைப்பட்ட[எல்லா]வுயிர்களுக்கும், ஓர் உயிர் என நின்ற-ஒப்பற்ற சீவன்போல இருக்கின்ற, இராமன்—, தயங்கு பூண் முலை சானகி-விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்த தனங்களையுடைய சீதை, இருந்த உழி-இருந்த விடத்தில், சார்ந்தான்-போனன்; (எ - று.)—மூன்றுமடி திருமாலின் அந்தர்யாமித்வத்தைக் காட்டு மென்றலும் ஒன்று. பி-மீ:—[1]உயங்குநன்னகர். [2]ஒருபுடைச். [3]ஏங்கின. [4]வரம்பில. [5]உயிற்குயிரெனின்றவவ், உடற்கோருயிரெனநின்ற. (நகசு)

உஉ0.—தாயர்முதலியோர் அருகேபொருமை; இராமன்வனவாசத்திற்குரிய கோலத்தோடுவருவதுகண்டு சீதை துணுக்குற்றெழுதல்.

அழுது தாயரொ [1]டருந்தவ ரந்தண ரரசர்
புழுதி யாடிய மெய்யினர் புடைவந்து பொருமப்
[2]பழுது [3]சீரையி னுடையினன் வரும்படி [4]பாரா
வெழுது பாவையன் னண்[5]மனத் துணுக்கமொ டெழுந்தாள்.

(இ - ள்.) தாயரொடு-தாய்மாரும், அரு தவர்-முனிவரும், அந்தணர் - வேதியரும், அரசர் - மன்னர்களும், அழுது—, புழுதி ஆடிய மெய்யினர் - (பூமியிற் புரளுதலால்) தூசி படிந்த உடலினையுடையராய், புடை வந்து பொரும-பக்கங்களில் வந்து வருந்த,—சீரையின் உடையினன்-மரவுரியாகிய ஆடையையுடையனும், பழுது வரும் - பொல்லாங்காக (ஸ்ரீராமன்) வருகின்ற, படி-வகையை, பாரா-கண்டு,—எழுது பாவை அன்னாள் - சித்திரப் பாவையை யொத்த சீதை,—மனம் துணுக்கமொடு - மனத்திலச்சத்துடன், எழுந்தாள்—; (எ - று.)

அருந்தவரென முன்னர்வந்ததனால், அந்தணரென்றது இல்லறத்தாரை. பி-மீ:—[1]அந்தணர் முனிவரோடு, அந்தணர்முனிவர்கள், அருந்தவவந்தணர். [2]பழுதில். [3]சீரையன்சடையினன். [4]பார்த்தாள். [5]மனந். (நகஎ

உஉக.—இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்: அப்போதுமாமிமார் முதலியோர் சீதையைத் தழுவிக்கொண்டு வந்த, அன்னாள் இன்னதென்று உணராது கணவனைநிகழ்ந்ததையுணர்த்துமாறு வினவல்.

எழுந்த [1]நங்கையை மாமியர் தழுவின [2]ரேங்கிப்
பொழிந்த [3]வுண்கணீர்ப் புதுப்புன லாட்டினர் [4]புலம்ப
வழிந்த சிந்தைய [5]ளன்னமீ தின்னதென் றறியாள்
வழிந்த நீர்நெடுங் கண்ணினள் வள்ளலை [6]நோக்கி.

இதுவும் அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) எழுந்த நங்கையை - (அவ்வாறு) எழுந்த பிராட்டியை, மாமியர்—, தழுவினர்-தழுவிக்கொண்டு, ஏங்கி—, பொழிந்த உண் கண் நீர் புதுபுனல் - சிந்தின மையுண்டகண்களி னீராகிய புதுநீரால், ஆட்டினர் - நீராட்டினவர்களாய்,புலம்ப—,—அன்னம் - சானகி, அழிந்த சிந்தையள்-வருந்தியமனத்தளாய், ஈது இன்னது என்று அறியாள் - இதற்குக் காரணம் இன்னதென்றறியாதவளாய், நெடு கண் வழிந்த நீரினள் - பெரிய கண்களினின்று பெருகுகின்ற நீரினையுடையளாய், வள்ளலை நோக்கி - ஸ்ரீராமனைப் பார்த்து,—(எ - று.)—'இயம்பினள்' என அடுத்த கவியோடு முடியும்.

மாமிமார் சீதையுள்ள இடத்துக்கு வந்ததாக முதனூலிற் கூறப்படவில்லை. மாமி - கணவன்றாய். இதுகாறுமில்லாத கண்ணீராதலின், புதுப்புனலென்றார். நெடுங்கண்ணீரினளென விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது.
பி-ம்:—[1]மங்கையை. [2]ஏந்தி. [3]வெங்கணிற், வெங்கணீர்ப், புன்கணீர்ப். [4]புலம்பி. [5]அன்னமுமின்னதென்று, அன்னவதின்னதென்று, அன்னளின்னதென்று, அன்னமிதின்னதென்று, அன்னள்மதியின்னதென்று. [6]நோக்கா. ()

வேறு.

உஉஉ. *பொன்னை யுற்ற பொலங்கழ லோய்[1]புகழ்*
மன்னை யுற்றதுண் டோ[2]மற்றிவ் வன்றுய
ரென்னை யுற்ற தியம்பென் றியம்பிணை
மின்னை [3]யுற்ற [4]நடுக்கத்து மேனியாள்.

(இ - ள்.) மின்னை உற்ற - மின்னலையொத்த, நடுக்கத்து - நடுங்குதலையுடைய, மேனியாள்-திருமேனியையுடைய சீதை,—'பொன்னை உற்ற பொலம் கழலோய் - பொன்னிலாகிய அழகிய வீரக்கழலையணிந்தவனே! இவன்துயர்-இக்கொடுந்துன்பத்திற்குக் காரணம், புகழ் மன்னை-கீர்த்தியையுடைய சக்ரவர்த்திக்கு, உற்றது-நேரிட்டதீங்கு, உண்டுஓ—? என்னை உற்றது-யாது நேர்ந்தது? இயம்பு—,' என்று—, இயம்பினள்—; (எ - று.)—மற்று-அசை.

மாமிமார் அழுவதுநோக்கிச் சக்ரவர்த்திக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டதோ என்று சீதை சங்கித்து வினவினளென்க. மன்னையென்பது முன்னிலை

யில்வந்த படர்க்கையெனக்கொண்டு, மன்னஞகிய உன்னை என உரைத்தலும் பொருந்தும் பொன்னை, ஐ - உருபுமயக்கம். பி - ம்:—[1]புகல். [2]வினவன், அன்றிவான். [3]ஓத்த. [4]நடுவுற்ற.

(நகக)

ஃஃந.—இராமபிரான் செய்தி தெரிவித்தல்.

பொருவி லெம்பி புவிபுரப் பான்[1]புக
ழிருவ ராணையு மேந்தினெ னின்றுபோய்க்
கருவி மாமழைக் [2]கற்றடங் [3]கண்டுநான்
வருவெ [4]னீண்டு வருந்தலை நீயென்றான்.

(இ - ள்.) (இராமன்சீதையைநோக்கி), 'பொருவு இல் எம்பி - ஒப்பற்ற என்தம்பி [பாதன்], புவி புரப்பான் - பூமியைக்காப்பவனுக, நான்—, புகல் இருவர் ஆணைஉம் ஏந்தினென் - தஞ்சமாகிய இருமுதுகுரவரது ஆஜ்ஞையையும் தாங்கினவனுகி, இன்று போய்—, கருவி மா மழை கல் தடம் - (உலகியல்நடாத்தற்குக்) காரணமாகிய பெருமைதங்கிய மேகங்களுள்ள வனத்தை, கண்டு—, ஈண்டு வருவென் - இங்கே வருவேன்; நீ வருந்தலை - நீ வருத்தமடையாதே,' என்றான்—; (எ - று.)

இத்தனைநாளென்று சொல்லாமல் கற்றடங்கண்டு நான் வருவேனென்று காட்டுக்குப் போய் உடனே வந்திடுபவன்போல இராமபிரான் சொல்லியது, சீதை வருந்தாதிருத்தற்பொருட்டு. காட்டை 'கற்றடம்' என்று சொல்லுதலை "கற்றடங்காணுதியென்னில்" என்று கீழ்வந்ததுகொண்டும் உணர்க. பொருந்தார்கைவேல் நுதிபோற்பாயும் பரற்கள யுடைமையால், 'கற்றடம்' என்னப்பட்ட தென்னலாம். பி - ம்:—[1]புகழ். [2]கற்கடம். [3]கண்டுடன், கண்டபின். [4]இன்று.

(நஉ0)

ஃஃப.—இராமபிரான் சொன்ன வகைக்குச் சீதை வ—

நாய கன்[1]வன நண்ணலுற் றனென்று
மேய மண்ணிழந் தானென்றும் விம்மல
ணீவ ருந்தலை [2]நீங்குவென் யானென்ற
தீய வெஞ்சொற் செவிசுட [3]த் தேம்புவாள்.

(இ - ள்.) (சீதை), நாயகன் வனம் நண்ணல் உற்றன் என்றும் - கணவன் காட்டிற்குப்போகத்தொடங்கினனென்றேனும், மேய மண் இழந்தான் என்றும் - ஆளுதற்குப் பொருந்திய இராச்சியத்தை யிழந்தானென்றேனும், விம்மலள் - வருந்தாதவளாய், 'நீ வருந்தலை யான் நீங்குவென்—', என்ற—, தீய வெம் சொல் - மிகக்கொடியசொல், செவி சுட - காதைச்சுட, தேம்புவாள் - வருந்துவாள்; (எ - று.)—பி - ம்:—[1]சுரம். [2]நீங்குவனெமன்ற. [3]விம்முவாள், விம்மினாள்.

(நஉக)

ஃஃற.—சீதை துயரமடைந்ததுபற்றிய கவிக்கூற்று.

துறந்து போமெனச் சொற்றசொற் [1]றேறுமோ
வுறைந்த பாற்கடற் சேக்கை யுடனீரீ இ
யிறந்தி றம்புமென் றையு னயோத்தியிற்
பிறந்த [2]பின்பும் [3]பிரிவிலா யிரோ.

(இ - ள்.) உறைந்த - (தாம்) வசிப்பதற்கு இட்னன, பாற்கடல் - திருப் பாற்கடலிலே, சேக்கை - (ஆதிசேஷனகிய) படுக்கையில், உடன் - கூட (வசிப்பதை), ஓரீஇ - விட்டு, ஐயன் - இராமபிரான், அறம் திறம்பும் என்று அயோத்தியில் பிறந்த பின்புஉம் - ('நாம் அவரித்துத் தருமத்துக்கு விரோ தஞ்செய்பவரை யழிக்காவிட்டால்) தருமம் நிலைகெடுமே!' என்று கருதித் திருவயோத்தியில் திருவவதரித்தபின்பும், பிரிவு இலள் ஆயினள் - (சீதை வழிவங்கொண்டு உடனுறைந்து) நீங்காதவளானவள், 'துறந்து போம்-(கண வன் தன்னைப்)பிரிந்து விட்டுப்போவான்,' என - என்று தான் கருதுமாறு, சொற்ற - சொன்ன, சொல்-வார்த்தைக்கு, தேறும்ஓ - ஆற்றுவளோ?(எ-று.)

உலகத்தில் அரக்கரால் நிலைகெடுவதாகஇருந்த அறத்தை நிலைநிறுத் தும்பொருட்டுத் திருப்பாற்கடலிலிருந்து வந்து திருமால் இராமனாகத் திரு வவதரித்தபோது அவனைவிட்டுப் பிரியாதிருக்கவேணுமென்னுங் கருத்திலை லேயே தான் சீதையாகத் திருவவதரித்த இலக்குமி 'உன்னைவிட்டுப் பிரிந் துபோவேன்' என்ற சொல்லுக்கு ஆற்றுவளோ? ஆற்றமாட்டாளென்ற வாறு. 'துறந்துபோமெனச்சொற்றசொல் தேறுமோ' என்பதைப் பின்மூன் றடிகள் சமர்த்திக்துநின்றது - **தொடர்நிலைச்செய்யுட்குறியணியாம்.** திருப் பாற்கடலில் அனந்தன்மீது அறிதுயிலமரும் திருமால் தேவர்களின்வேண்டு கோளினால் அரக்கரால் உலகத்துக்குத்தோன்றியுள்ள துயரத்தை நீக்கு மாறு தான் அவர்கட்கு உறுதியளித்துத் தசரதகுமாரனைத் திருவவதரித்த தைக் கீழ்ப் பாலகாண்டத்துத் திருவவதாரப்படலத்தா லறிக. திருப்பாற் கடலிலுள்ள திருமாலின் விபூகமூர்த்தியே இராமகிருஷ்ணரி யவதாரங் களுக்குக் காரணமாகு மென்ற நூற்கொள்கையும், இங்குக் கவனிக்கத்தக் கது. "சாதுக்களைக்காத்தற்காகவும், கொடுந்தொழில் புரிபவரையொழித்ததற் காகவும், அறத்தை நிலைநாட்டுதற்காகவும் யுகந்தோறும் திருவவதரிக்கின் றேன்" என்று ஸ்ரீகீதையிற் கூறியதற்குஏற்ப, 'அறந்திறம்புமென்று ஐய னயோத்தியிற்பிறந்த' என்றார். திருமால்இராமனாகும்போது திருமகள் சீதையாகவும், திருமால் கிருஷ்ணனாகத்திருவவதரிக்கும்போது இலக்குமி உருக்குமிணியாகவும் திருவவதரிப்பள் என்று பிறநூல்களிற் கூறுவது, இங்குக் கருதத்தக்கது. 'பாற்கடற்சேக்கையுடனீஇ' என்பதற்கு - பாற் கடலைச் சேக்கையாகிய ஆதிசேடனுடனே விட்டிட்டு [ஆதிசேடனென்பான் தனது தம்பியாக இருக்குமாறு அவனுடன் திருப்பாற்கடலை விட்டிட்டு] என்று விசேடப்பொருளுரைப்பர். பி-ம்:—[1]தேறுமே. [2]போதும். [3]பிரியல ளாயினள், பிரியலனையினன். (நுஉ)

உஉசு.—தன்[2]னை 'உடன்வராது இரு'என்றுஇராமன் கூறியதை நி[2]னைந்துநி[2]னைந்து சீதை வருந்துதல்.

அன்ன தன்மைய [1]லையனு மன்னையுஞ்
சொன்ன செய்யத் துணிந்தது தூய்மீத
யென்னை யென்னை யிருத்தி'யென்று [3]யெனை
வுன்ன வுன்ன வுயிருமி ழாநின்றாள்.

(இ-ள்.) அன்ன தன்மையள்-அத்தன்மையையுடைய பிராட்டி, 'ஐயன் உம் அன்னை உம் - இருமுதுகுரவரும், சொன்ன - சொல்லியகாரியங்களை, செய்ய—, துணிந்தது - நிச்சயங்கொண்டது, தாயதுவே - தாய்மையையுடையதே; என்னை - யாதுகாரணத்தால், என்னை இருத்தி என்றாய் - என்னைக் குறித்து(இங்கே)இரு என்று சொன்னாய்?' எனை-என்றுகூறி, உன்னஉன்ன-(அவ்விராமன் கூறியதை) நினைக்க நினைக்க, உயிர் உமிழாநின்றாள் - பெரு மூச்சு விடுபவளானாள்; (எ-று.)—பி-ம்:—[1]அன்னையுந்தாதையும். [2]என்றான். [3]என்றாள், அருள்.

(நூஉங)

22எ.—இராமன் சீதையைநோக்கிக் கானகஞ் சுடுமெனல்.

வல்[1]ல ரக்கரின் மால்வரை [2]போய்விழுந்
தல்[3]ல ரக்கி னுருக்கழல் [4]காட்டயற்
கல்[5]ல ரக்குங் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்றான்.

(இ - ள்.) (அது நோக்கி ஸ்ரீராமன்), 'நின் - உனது, சில் - குளிர்ந்த, அரக்கு உண்ட - செம்பஞ்சு ஊட்டிய, சே அடி போது - சிவந்த (மெல்லிய) அடித்தாமரைகள்,—வல்அரக்கரின்-கொடிய ராக்ஷசர்போலத்தோன்றுகின்ற, மால் வரை - பெரிய மலையில், போய்—, விழுந்து-படிந்து, அல்-இரவிலும், அரக்கின் உருக்கு-அரக்கை உருக்கினதுபோன்ற,அழல்-வெப்பத்தை,காட்டு-காட்டுகின்ற, அயல் கல்-பக்கத்திலுள்ள கற்கள்,அரக்கும்-தைத்தலைத்தாங்கற்குரிய, கடுமைய அல்ல - கடுமையையுடையனவல்ல,' என்றான்—; (எ - று.)

காட்டயற்கல் - வனத்தினிடத்துள்ள கல் லென்றுமாம். முதலடியில், அரக்கர் - ராக்ஷஸ்என்பது விகாரப்பட்டு 'அர்' விகுதிபெற்று வந்தது. இரண்டாமடியில், அரக்கு - ரக்தஎன்ற வடசொல்லின்திரிபு. நான்காமடியில் அரக்கு - லாக்ஷாஎன்ற வடசொல்லின்திரிபு. இச்செய்யுளில் முதலெழுத்து வேறுபட்டிருக்க, இரண்டுமுதலிய சிலஎழுத்துக்கள் ஒன்றிப் பொருள் வேறுபட்டது, திரிபுஎன்னுஞ் சொல்லணியாம். பி-ம்:—[1]அரக்கர்தின். [2]ஊடுழுந்து, மேல் விழுந்து. [3]அரக்கினுருக்கெழில்,அரக்கியுருக்கழற். [4]காட்டதர்க், காட்டெனும், காட்டியல். [5]அரக்கினும்.

(நூஉச)

22அ.—சீதை 'உமது பிரிவுத்துயரினும் காடு கடாது' என்னுதல்.

பரி[1]வி கந்த [2]மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனு
மெரியு [3]மென்பது [4]யாண்டைய தீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் [5]காடென்றாள்.

(இ - ள்.) (சீதை),—'பரிவு இகந்த மனத்தொடு-இரக்கம் நீங்கிய மனத்தோடு, பற்று இலாது-(என்னிடத்தில்) விருப்பமில்லாமல், ஒருவுகின்றனை-(என்னைவிட்டு) நீங்கிச்செல்லுவதாக இருக்கின்றாய்; ஊழி அருக்கன் உம் - பிரளயகாலத்துச் சூரியனும், எரியும் என்பது - சுடுவானென்பது, ஈண்டு -

(உன் பிரிவுத்துயரிலல் நேரும்) இவ்வெப்பத்திற்குமுன்னே, யாண்டையது-எத்தன்மையுடையது? [நின்பிரிவுத்துயர் பிரளயகாலத்துச் சூரியனைக்காட்டிலும் சுடுமென்றபடி]; பெரு காடு - (நீ) செல்லப்போகின்ற பெரிய காடானது, நின் பிரிவின்உம் சுடும்ஓ - உனது பிரிவுத்துயரைக்காட்டிலும் சுடுந்தன்மையதோ? [அன்று என்றபடி],' என்றுள் - என்று கூறினாள்; (எ - று.)

'என்னிடத்து இரக்கமும் பற்றும் இல்லாமல் நீர் என்னைவிட்டுச் செல்லுவதலால் எனக்கு நேரும் பிரிவுத்துயர் ஊழிக்காலத்துச் சூரியனும் நிகரல்லனென்னும்படி சுடுமே! இப்படிப்பட்ட பிரிவுத்துயரைவிடக் கானகஞ் சுடுந் தன்மையதோ? அன்று'என்றனளென்பதாம்: ஈண்டும் நின் பிரிவினும் என எடுத்து - (இப்போது) நெருங்கப்போகின்ற நின்பிரிவைவிட என்று உரைப்பினுமாம். உமக்கு என்னிடத்து இரக்கமும் விருப்பமும் இருக்குமாயின், என்னைவிட்டிட்டுச் செல்லமாட்டீரென்பாள் 'பரிவிகந்த மனத்தொடு பற்றிலா தொருவுகின்றனை' என்றுள். இச்செய்யுளால், 'பெருங்காடு உனது பாதத்திற்குச் சுடுமே' என்று இரக்கமுள்ளவன்போற் கூறிய இராமன் பேச்சை மறுத்துக்கூறியவாறு. பி - ம்:—[1]இழந்த. [2]மனத்தொரு. [3]என்பன. [4]யாண்டையவீண்டு, யாண்டையதின்று. [5]கான். (நூஉநு)

உஉசு.—சீதையின் மனவுறுதியைக் கண்டு இராமன் சிந்தைகொள்ளுதல்.

அண்ண லன்னசொற் கேட்டன னன்றியு
முண்ணி வந்த கருத்து முணர்ந்தனன்
கண்ணி னீர்க்கடல் கைவிட [1]நேர்கில
னெண்ணு கின்றன னென்செயற் பாற்றொ.

(இ - ள்.) அண்ணல் - ஸ்ரீராமன், - அன்ன சொல் கேட்டனன் அன்றியும் - அவ்வார்த்தையைக்கேட்டதுமல்லாமல், உள் நிவந்த கருத்துஉம்-(அவளுடைய)மனத்தில் தலையெடுத்த எண்ணத்தையும், உணர்ந்தனன் - அறிந்தவனாய்,—கண்ணின் நீர் கடல் - கண்ணீராகிய கடலை, கைவிட - (சீதை) பெருக்க, நேர்கிலன் - (அவளை விடுதற்கு) உடன்படாதவனாய், 'என் செயல் பாற்று - யாதுசெய்தற்குரியது?' எனை - என்று, எண்ணுகின்றனன் - சிந்திப்பானாயினன்; (எ - று.)—பி-ம்:—[1]நோக்கிலன். (நூஉசு)

உசo.—அப்போது சீதை மரவுரி புனைந்து இராமனையலில் நிற்றல்.

அனைய வேலை யகன்மனை [1]யெய்தினள்
புனையுஞ் [2]சீரந் துணிந்து புனைந்தன
[3]ணினையும் வள்ளல்பின் வந்[4]தய னின்றனள்
பணையி னீள்கரம் பற்றிய கையினள்.

(இ - ள்.) அனைய வேலை - அப்பொழுது, (சீதை), அகல் மனை எய்தினள் - விசாலமான மாளிகையினுட்புகுந்து, புனையும் சீரம் - உடுத்தற்குரிய

மரவுரியை, துணிந்து—, புனைந்தனள் - உடுத்துக்கொண்டு, நினையும்-(என் செய்யலாமென்று) எண்ணமிட்டுக்கொண்டிருந்த, வள்ளல்பின் - ஸ்ரீராமனிடம், வந்து—, பனையின் நீள் கரம் பற்றிய கையினள் - பனைமரம்போல நீண்ட (அவனது) திருக்கையைப் பிடித்த கையினையுடையளாய், அயல் - பக்கத்தில், நின்றனள்—; (எ - று.)

சீதை உடன் வருவதற்கு நேர்தல்பற்றி, 'வள்ளல்'என்றார். இனி, [3]நினைவில் என்றபாடத்துக்கு, நினைவு இல் வள்ளல் - அழைத்துப்போக மனமில்லாத வள்ளலென்றும், ஆலோசனையிலிருக்கின்ற வள்ளலென்றுமாம். புனையும் கரம் - இராமபிரான்புனைந்த கரத்தை யெனினுமாம்: பி மி:—[1]எய்தியட். [2]கரை. [3]நினைவின். [4]அவணின்றனள்: (நூஎ)

உகக.—சீதையின் செயலைக் கண்டவரின் பெருவருத்தம்.

ஏழை தன்செயல் [1]கண்டவர் யாவரும்
வீழு மண்ணிடை வீழ்ந்தனர் வீந்திலர்
வாழு நாளுள வென்றபின் மாள்வரோ
ஊழி பேரினு முய்குந [2]ருய்வரே.

(இ - ள்.) ஏழைதன் செயல் - சீதையின் செய்கையை, கண்டவர் யாவர்உம்-பார்த்தவரனைவரும், வீழும் மண்ணிடை-இறத்தற்குஇடமாகவுள்ள நிலத்தில், வீழ்ந்தனர் - விழுந்தவராகியும், வீந்திலர் - இறந்தாரில்லை: வாழும் நாள் - ஆயுள்நாள், உள என்ற பின் - உள்ளன வென்றால், மாள்வர்ஓ - அழிவரோ? ஊழி பேரின்உம் - யுகமுடிந்து பிரளயம் வந்தாலும், உய்குநர் - பிழைப்பவர், உய்வர்—; (எ - று.)

யாவரும் மண்ணிடைவீழ்ந்தனர் வீந்திலர்என்பதைப் பின்னடிகள் சமர்த்தித்துநின்றன; பொதுப்பொருளாற் சிறப்புப்பொருளைச்சமர்த்தித்து நின்ற வேற்றுப்பொருள்வைப்பணி. ஏ - தேற்றம். பி - மி:—[1]கண்டபின். [2]உய்குவார். (நூஅ)

உகஉ.—சீதையின்நிலையைக்கண்டோர் வருந்துதலும், இராமன் ஒன்றுசொல்லத் தொடங்குதலும்.

தாயர் தவ்வையர் தன்றுணைச் சேடிய
[1]ராய மன்னிய வன்பின ரென்றிவர்
தீயின் மூழ்கின ரொத்தனர் [2]செங்கணான்
றூய தையலை நோக்கினன் சொல்லுவான்.

(இ - ள்.) தன்-சீதையினது, தாயர் - தாய்மாரும், தவ்வையர்-தமக்கை முறையிலிருப்பவரும், துணை சேடியர் - துணையாகிய பாங்கியரும், ஆயம் மன்னிய அன்பினர்-மகளிர் கூட்டத்திற் பொருந்திய தோழியரும், என்ற—, இவர்—, தீயின் மூழ்கினர் ஒத்தனர் - நெருப்பில் அழுந்தினவரைப் போன்றனர்; செம் கணான் - ஸ்ரீராமன், தூய தையலை - குற்றமற்ற சீதையை, நோக்கினன் - நோக்கி, சொல்லுவான்—; (எ - று.)—அதனை மேல் காண்க. தாயர் - சீதையின் ஐவகைத்தாயர். இராமனுடன் வந்த தாயரெனக் கொள்ளல் ஏற்கும். பி - மி:—[1]ஆயமன்னவர். [2]சேவகன். (நூஉ)

உநந.—இராமபிரான் 'நீ விளவதறியாது உடன்வர உடன்பாட்டதனுல் எனக்குப் பெருந்துயரம் விளையும்'எனல்.

முல்லை யுங்கடன் [1]முத்து மெதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய்!நி [2]வுன்னுவா
யல்லை போத வமைந்தனை [3]யாதலி
னெல்லை [4]யற்ற விடர்தரு வாயென்றான்.

(இ - ள்.) முல்லையும் - முல்லைமலரும், கடல்முத்துமும்-கடலில் தோன்றிய முத்தமும், எதிர்ப்பின்னும் - (வெல்லும்படி) எதிர்த்து நின்றனவாலும், வெல்லும் - (அவற்றை) வெல்லுகின்ற, வெள் நகையாய் - வெள்ளிய பற்களையுடையவளே! (நீ), விளவு உன்னுவாய் அல்லை - (காட்டிற்கு வருதலால்) விளையக்கூடிய தீமையை நினைக்கின்றாயில்லை; போத - (என்னுடன்) வர, அமைந்தனை-சித்தமாக உள்ளாய்; ஆதலின்—, (எனக்கு), எல்லையற்ற-அளவில்லாத, இடர்-துன்பத்தை, தருவாய் - உண்டாக்குவாய்' என்றான்—.

'சீதையே! காட்டிற்கு என்னுடன் வருவதனுல் விளையக்கூடிய தீமை இன்னதென்று சிறிதும் நினைத்திட்டாயில்லை; அதனுல், காட்டிற்கு உடன்வர உறுதிகொண்டாய்; நீ காட்டிற்கு உடன்வருவதனுல், எனக்குப் பெருந்துயரமே விளையும்' என்று சீதையின் வரவைத் தடுக்கவேணுமென்ற கருத்தினுல், சிறிது நொந்து கூறினன் இராமபிரானென்க. சீதை காட்டிற்கு வந்ததனுல்இடர்விளைந்தவாறுங் காண்க. பற்களுக்கு - முத்து முல்லை மயிலிறகினடி இவை உவமை கூறப்படுமென்பதை, "முத்துத்தளவம் முருந்தெயிறும்" என்ற உவமானசங்கிரகத்தினுலு மறிக. யானைமருப்பு முதலிய பல இடங்களில் முத்துப் பிறக்குமென்று கூறப்பட்டிருப்பினும், கடலில் இப்பியில்தோன்றும் முத்தே சிறந்த தாதலால், 'கடல்முத்து' என்றார்.

பி-ம்:—[1]முத்தம். [2]எண்ணுவாய். [3]ஆமெனின். [4]இல்லா, தீர்ந்த. (நூஉ)

உநச.—அதுகேட்ட சீதை 'என்னைத்துறந்தபின்புதான் உமக்கு இன்பம்போலும்' எனச் சினந்து கூறுதல்.

கொற்ற வன்னது கூறலுங் கோகிலஞ்
[1]செற்ற தன்ன குதலையள் [2]சீறுவா
ளுற்று நின்ற துயரமி தொன்றுமே
யெற்று றந்தபி [3]னின்பங்கொ லாமென்றாள்.

(இ - ள்.) கொற்றவன் அது கூறலும்-அரசகுலத்தில் தோன்றினவனுகியஇராமபிரான்("போத அமைந்தனையாதலின் எல்லையற்ற இடர்தருவாய்" என்ற) அச்சொல்லைச் சொன்னவுடனே, (அதுகேட்ட), கோகிலம் செற்றது அன்ன குதலையள் - குயிலின்குரலை வென்றதுபோன்றுள்ள மழலைச் சொற்களையுடைய அச்சீதை—, (இராமனைநோக்கி), சீறுவாள் - கோபிப்பவளாய், உற்று நின்ற துயரம்-(உம்மை)நெருங்கியுள்ள துன்பம், இது ஒன்றுமே ஏ -

நான் உடன்வருவது என்ற இம்மாத்து ஒன்றுதான்போலும்; என் துறந்த பின்-என்னைவிட்டுச் சென்றபின்பு, (காட்டிலே), இன்பம் கொல் ஆம்-இன்பமே யுண்டாகும்போலும்,' என்றுள்—; (எ - று.)

'நீ உடன்வருவதனால் எல்லையற்றதுன்பந்தருவாய்'என்ற சொல் சீதை யின் செவியிலே புண்ணிற் கனல்நுழைந்தாற்போல விழுதலும், அச்சீதை மனம்பொறுதவளாய், 'உமக்குத் துயரமெல்லாம் என்னைருத்தியால்தான். என்னைத்துறந்து கானகஞ்செல்வீராலால் இன்பமே நுகர்வீர்' என்று நிஷ்டு ரந்தோன்றக் கூறின ளென்பதாம். கோகிலம் - அதன்குரலுக்கு, ஆகுபெயர். பின்னிரண்டடிக்கு, உற்றுநின்ற துயரம் இது ஒன்றுஉம்-(உன்னைப்)பொருந் திநின்ற இவ்வொருதுயராமும், என் துறந்த பின்-என்னைவிட்டபின்பு, இன் பம் ஆம் கொல் - இன்பமாகுமோ? என்றுள் என உரைத்தலுமாம். பி-ம்:— [1]செற்றவன்ன. [2]சீறுவான், சொல்லுவாள். [3]இன்பங்கொலோ, இன்பங்களாம்.

உநரு.—மறுமாற்றஞ் சொல்லாமல் சீதையை யிட்டுக்கொண்டு இராமன் தெருவிலே செல்லுதல்.

பிறிதொர் மாற்றம் பெருந்தகை [1]பேசலன்
மறுகி [2]வீழ்ந்தெதிழு [3]மைந்தரு மாதருஞ்
[4]செறுவில் வீழ்ந்த நெடுந்தெருச் [5]சென்றன
னெறி[6]பெ றுமை [7]யரிதினி [8]னீங்குவான்.

(இ - ள்.) பெரு தகை-பெருமைக்குணத்தையுடைய ஸ்ரீராமன், பிறிது ஓர் மாற்றம் பேசலன் - வேறொருவார்த்தையும் பேசாதவனுய்,—மறுகி வீழ்ந்து எழு - மனங்கலங்கி விழுந்து எழுகின்ற, மைந்தர் உம் - ஆடவரும், மாதர்உம் - மகளிரும், செறுவில் வீழ்ந்த - இடந்தோறும் விழுந்த, நெடு தெரு - பெரிய வீதியில், சென்றனன்-போனவனுய், நெறி பெறுமை-வழி யைப்பெறுமையினால், அரிதினின் நீங்குவான்—; (எ - று.)

பாத்தியென்றுபொருளுள்ள'செறு'என்பது-இலக்கணையால் இடமென்ற பொருளது.செறுவில்வீழ்ந்த நெடுந்தெரு என்பதற்கு-கண்ணீர்ப்பெருக்கினால் வயல்போலச்சேறாக்கிடக்கின்ற பெருந்தெரு என்றுமாம். பி-ம்:—[1]பேசி லன். [2]வீழ்ந்தழ. [3]மாதரும்மைந்தரும். [4]நெறியின். [5]சென்றனர், சென்றன. [6]பெறுமல். [7]அரிதன. [8]நீங்குவார். இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை. ()

உநசு.—இராமனுதியர் செல்வதுகண்ட ஊராரின்வருத்தம்.

சிரை சுற்றித் திருமகண் [1]முன்செல
மூரி விற்கை யிளையவன் [2]பின்செலக்
காரை யொத்தவன் போம்படி கண்டவவ்
வூரை யுற்ற துணர்த்தவு மொண்ணுமோ.

(இ-ள்.) திருமகள்-சீதை, சீரை சுற்றி-மரவுரியுடுத்து, முன் செல-முன்னே செல்லவும், மூரி வில் கை இளையவன் - வலியமைந்த வில்லேத்தாங்கிய கையையுடைய லக்ஷ்மணன், பின் செல - பின்னேபோகவும், காரை ஒத்தவன்-கார்மேகத்தையொத்த ஸ்ரீராமன், போம்படி-போகுமாற்றை, கண்ட—, அ ஊர் - அந்நகரத்தவர், உற்றது - அடைந்தவருத்தம், உணர்த்தவும் ஒண்ணும்ஓ - சொல்லவும்முடியுமோ? (எ - று)—ஊரை, ஐ - சாரியை.

சீரைசுற்றி என்பதை முதனிலைத்தீவகமாக இளையவன் காரையொத்தவன் என்பவற்றிலுஞ்சூட்டலாம். இனி, இளையவன் சீரைசுற்றித் திருமகள் பின் செலக் காரையொத்தவன் முன்செலப் போம்படியெனமாற்றியுரைத்தலும்ஒன்று. பி - ம்:—[1]பின். [2]முன். (நிகூக)

உகஎ.—யாவரும் இராமனுடன் காட்டுக்குத்ச் செல்வோமெனப் போதல்.

ஆரும் பின்ன ரழுதவ லித்திலர்
சோருஞ் சிந்தையர் யாவருஞ் சூழ்ந்தனர்
வீரன் முன்வன மேவுதும் யாமெனப்
[1]போரென் றெல்லொலி கைம்மிகப் போயினர்.

(இ-ள்.) ஆர்உம் - எவரும், பின்னர்—, அழுது அவலித்திலர்-அமங்கலமாக அழுதாரில்லை; யாவர்உம் - எல்லோரும், சோரும் சிந்தையர் - தளர்கின்ற மனத்தையுடையவராய், சூழ்ந்தனர் - சூழ்ந்து, 'வீரன்முன் - ஸ்ரீராமனுக்கு முன்னே, யாம் வனம் மேவுதும் - நாம் காட்டையடைவோம்,' எனை - என்று, போரென்று ஒல்லு ஒலி கை மிக - போரென்றுபொருந்திய ஒலி அதிகரிக்க, போயினர்—; (எ - று.)

இச்செய்யுளில்- யாவரும் என்றது-பலருமென்னும் பொருட்டு; போரெனல் - ஒலிக்குறிப்பு. பி-ம்:—[1]போரொன்றெல்லொலி, போதுமென்றெலி.

உகஅ.—ஸ்ரீராமன் தந்தையின் மாளிகையிலிருக்குந் தாய்மார்களைக் கண்டு தும்பிட்டு அரசனப்பார்த்துக்கொள்ளச் சொல்லல்.

தாதை [1]வாயில் குறுகினன் சார்தலுங்
கோதை வேலவன் ரூயரைக் கும்பிடா
வாதி மன்னனை யாற்றுமி னீரென்ரூன்
மாத ராருமம் விழுந்து மயங்கினர்.

(இ - ள்.) கோதை வேலவன் - வெற்றிமாலையைச்சூடிய வேலினையுடைய ஸ்ரீராமன்,—தாதை - தமப்பனாரது, வாயில் - மாளிகை வாயிலை, குறுகினன் - சமீபித்து, சார்தலும் - சேர்ந்தவுடன், தாயரை கும்பிடா - கூடவந்த)தாய்மாரைக் கைகூப்பித்தொழுது, 'ஆதி மன்னனை - சக்ரவர்த்தியை, நீர் ஆற்றுமின் - நீவிர் (இங்கேயிருந்து) தேற்றுங்கள்,' என்ரூன்-என்றனை, மாதராரும் - அம்மாதர்களும், விழுந்து மயங்கினர்—; (எ - று.)—
பி - ம்:—[1]கோயிலின் வாசலைச்சார்தலும். (நிகூங)

உகக.—தாய்மார்கள் இராமன்முதலியோரை வாழ்த்துதல்.

[1]வாழ்த்தி னர்தம் மகனை மருகியை
[2]யேத்தி னரிளை யோனை வழுத்தினர்
காத்து நல்குமின் றெய்வதங் காளென்றூர்
நாத்த ழும்ப வரற்றி நடுங்குவார்.

(இ - ள்.) (பின்), நா தழும்ப—, அரற்றி - கூவி, நடுங்குவார்-நடுங்குகின்ற அத்தாய்மார்,—தம் மகனை - ஸ்ரீராமனை, வாழ்த்தினர்—; மருகியை-மருமகளை, ஏத்தினர் - புகழ்ந்தார்கள்; இளையோனை - இலக்குவனை, வழுத்தினர் - துதித்தார்கள்; தெய்வதங்காள் - (எங்கள்) குலதெய்வங்களே! காத்து நல்குமின் - (இவர்களைக்) காத்தருளுங்கள், என்றூர்—; (எ-று.)

இனி, மகனையும் மருகியையும் இளையோனையும் வாழ்த்தி ஏத்தி வழுத்தித் தெய்வங்காள்! காத்துநல்குமினென்று அரற்றிநடுங்குவா ரென்றுமாம்.

பி - ம்:—[1]ஏத்தினர். [2]வாழ்த்தினர். (நிகக)

உசo.—முனிவனை வணங்கிவிட்டு ஸ்ரீராமன் சீதையும் தம்பியுமாகத் தேர்மீது செல்லுதல்.

அன்ன தாய ரரிதிற் பிரிந்தபின்
முன்னர் நின்ற முனிவனைக் கைதொழாத்
தன்ன தாருயிர்த் தம்பியுந் தாமரைப்
பொன்னுந் தானுமொர் தேர்மிசைப் போயினான்.

(இ - ள்.) அன்ன தாயர் - அவ்வாறுகிய தாய்மார், அரிதின் பிரிந்தபின்—,முன்னர் நின்ற முனிவனை எதிரில்நின்ற வசிஷ்டபகவானை,கைதொழ-ஃகையாற்றொழுது, (ஸ்ரீராமன்),—தன்னது அரு உயிர் தம்பிஉம் - தனது அரிய உயிர்போன்ற தம்பியாகிய இலக்குமணனும்,தாமரை பொன்உம்-சீதையும், தானும்—, ஓர் தேர்மிசை போயினன்-ஒருதேரின்மேலேறிச் சென்றான்.

தன்னது - விரித்தல், பொன் - திரு. தம்பியும் பொன்னும் தானும் போயினன் என்றதற்கு, கீழ் மந்திரப்படலத்து "ஆயதவ்வழி" என்னுங்கவியில்'தம்பியுந்தானும்***புக்கான்' என்றவிடத்துஉரைத்தாங்குரைக்க.(நிகஎ)

சீதை கானகத்துக்குஉடன் வருவதையே ஸ்ரீராமன் அரிதில் இசைந்தது கண்டு, 'தான் உடன்வருவதைக்குறித்து என்னசொல்லுவனே?' என்ற சிந்தையுடன் இலக்குமணன் சீதையின்எதிரில் தன்தமையனாரது திருவடிகளைப் பிடித்துக்கொண்டு, 'நீர் கானகஞ்செல்வது எனக்குச் சம்மதமன்று. நீர் காடு செல்வதென்றுஉறுதியாய்ப்பிடித்தால் என்னையும்உடன்அழைத்துக்கொண்டு செல்க. கையும்வில்லுமாயிருந்து உமக்குக் குற்றேவல்புரிவேன். உம்மைவிட்டு மோக்ஷமும் எனக்கு வேண்டா' என்று தன்மனவுறுதியைத் தெரிவிக்க, இராமன் 'நீ என்னுடன்வருவது நலமேயெனினும், பெற்றோர்களைப் போஷித்துக்

கொண்டு இருப்பாயாக' என்ன, லக்ஷ்மணன் கௌசலையின் பெருமையைக் கூறி 'தாய்மார்களை நான் காப்பாற்றவேண்டுமென்பதில்லை: கௌசலையே பாதுகாத்துக்கொள்வாள்:என்னைப்பணியாளனைச்செய்துகொள்ளும். உமக்கு எல்லாவேளைகளிலும் நான் உபசரிப்பேன்: நீரோ வைதேகியுடன் விரைவாக இருக்கலாம். விபரீதமுண்டாகாது' என்று கெஞ்சிக்கேட்க, இலட்சுமணனது மனத்திண்மையையறிந்து இசைந்து ஸ்ரீராமன் 'லக்ஷ்மண! உன்னுடைய சினேகிதர்களிடத்திலெல்லாஞ்சொல்லி விடைபெற்றுக்கொண்டு வனவாசகாலத்தில் நமக்குவேண்டிய படைக்கலங்கள் முதலியவற்றையும் கொணர்க' என்ன, லக்ஷ்மணனும் நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வசிட்டனது கிருகத்திலிருந்த உத்தமங்களாகிய ஆயுதங்களைக் கொணர, பிறகு ஸ்ரீராமன் அரண்யத்திற்குப்போவதால் தன் சொத்துக்களையெல்லாம் தானஞ் செய்யக்கருதிப் பிராமணேத்தமர்களையும் அடுத்து ஜீவிப்பவர்களையும் அழைத்துக்கொண்டுவருமாறு சொல்ல, லட்சுமணன் ஸுயஜ்ஞர்முதலியோரை அழைத்துக்கொண்டுவர, அவர்கட்குத் தன் பொருள்களையெல்லாம் தானஞ் செய்தபின் மனைவியால் தூண்டப்பட்டு த்ரிஜடரென்கின்றமுனிவன் வேண்டியபடி பசுக்குவியலை அவற்குத் தர, அவன் பெற்றுக்கொண்டு வாழ்த்திச் சென்றனன்; இங்ஙனம் இராமன் லக்ஷ்மணனோடும் சீதாதேவியோடும் இருந்து தானஞ்செய்தபின் சீதாலக்ஷ்மணருடனும் வனஞ்செல்ல அனுமதி பெறுமாறு தசரதனுள்ளவிடத்துக்குப் போக, தசரதன் தன்மனைவிமார்களுடன் இராமனைக் காண விரும்பி அவர்களையெல்லாம் வரவழைத்தபின்பு இராமனை மனைவியோடும் லக்ஷ்மணனோடும் தன்னிடம்வரவிட்டு அவனை அம்மன்னவன் எதிர்கொள்ளப்போய் வழியில் மூர்ச்சித்துவிழ, இராமலட்சுமணர்கள் ஓடிவந்து எடுக்க, அப்போது மகளிர்களெல்லாம்புலம்ப, எங்கும்ஓரே அழுகைக்குரலாயிருந்தது. பிறகுராமலக்ஷ்மணரும் சீதையும் மன்னவனைப் பிடித்துஎடுத்துவந்து படுக்கையில் உட்காரவைத்தனர். பிறகு அரிதில்தேறிய மன்னவனை இராமன் தேற்றித் தங்கட்கு விடைதருமாறு கேட்டனன். அது கேட்டமன்னவன் புதல்வனைத்தழுவி மூர்ச்சிக்க, அங்கிருந்த எல்லோரும் சோகத்தில் மூழ்கினர். அப்போது சுமந்திரன் கைகேயியைப் பலபடியாகத் திட்டி அவளுக்குத் தாய்மூலமாகவந்தது துர்க்குணமென்றதையும் சொல்லிப் பழித்து இராமனது நற்குணங்களையும் அவனுக்குப்பட்டங்கட்டவேண்டுவது முறையென்பதையும் சொல்லிமுடிக்க, கைகேயி சலியாதிருந்தனள். பிறகு தசரதன் சதுரங்கசேனைகளுடன் இராமனை வனத்திற்கு அனுப்பவேணுமென்றுகருதக் கைகேயி தடுத்தனள்: சித்தார்த்தரென்பவர் அவளுக்கு மதி கூறியும் அவள் கேட்கவில்லை. சித்தார்த்தர் கூறியதைக் கைகேயி கேளாமையைக் கண்டு வருந்தும் மன்னவனைநோக்கி, இராமன் 'யாவற்றையுந்துறந்து வனத்திற்குச்செல்லும் எனக்குச் சதுரங்கசேனை எற்றுக்கு?' என்று சமாதானஞ்சொல்லினன். பின்பு ராமலக்ஷ்மணர்களும் சீதையும் கைகேயி தந்த மரவுரியை உடுத்துக்கொள்கையில் சீதை மரவுரியுடுப்பதைத் தடுத்து வசிஷ்ட

முனிவன் கைகேயியைச் சீதைக்கு மரவுரிதந்தது முறையன்றென்று பழித்துக்கூற, அப்பால் மன்னவன் 'சீதை மரவுரி யுடுத்துக்கொள்வாளாயினும் அவள் மரவுரிதரிக்குமாறு நான் வரம் தரவில்லை' என்று கைகேயியைக் கண்டித்தனன். துன்புறும் மன்னவனிடத்து ஸ்ரீராமன் தன்தாயைப் பார்த்துக் கொள்ளும்படி வேண்டினன். அப்பால் மன்னவன் பெருந்துயரோடு சுமந்திரனை நோக்கி 'இராமன் முதலியோரை யேற்றிச்செல்லும்படி இரதத்தைப் பூட்டிக்கொண்டுவருமாறு கட்டளையிட, அவன்தேரைக் கொணர்ந்ததும், தனித்யட்சனைக்கொண்டு சீதை கானகத்தில் வசிக்கும் பதினான்கு வருஷத்திற்கு வேண்டிய ஆடையாபரணங்களைத் தருமாறு செய்விக்க, சீதை அந்த ஆபரணங்களைப் பூண்டு விளங்கினளாக, அப்பொழுது கௌசல்யை சீதையைக்கட்டித் தழுவி உச்சிமோந்து நல்ல உபதேசமொழிகளைக் கூறச் சீதையும் தன்மனநிலையைத் தெரிவித்தாள். பிறகு இராமன் மற்றைத் தாய்மார்களையும் வணங்கி 'யான் ஏதேனும் தவறுசெய்திருப்பினும் பொறுக்க: எனக்கு அனுமதி தருக' என்று விடைபெற்றுக்கொண்டு தந்தையாரைவலம்வந்து, உடனிருந்து பெற்றோர்க்குஉபசரிக்க இயலாதிருப்பது பற்றிய மனவருத்தத்துடனே சீதாலக்ஷ்மணர்கட்கு மன்னவனிடம் விடைகொடுப்பிக்க, பின்பு மூவரும் கௌசலைக்கு நமஸ்காரஞ்செய்தனர். அப்பால் சுமித்திரையை இலட்சுமணன் வணங்கிநிற்க, அவள் அன்னனுக்கு நல்லுபதேசங்கள் மொழிந்து விடைகொடுத்தனுப்பினள். பிறகு சுமந்திரன் தான் வணக்கத்தோடு 'இரதம் சித்தமாயிருக்கிறது: ஏறுக' என்ன, சீதை முதலிலும் இராமலக்ஷ்மணர்கள் பின்புமாக இரதத்தில் ஏறிக்கொள்ள, சுமந்திரன் தேர்க்குதிரைகளை அதட்டியோட்டினன். அதுகண்ட ஜநங்கள் பெருந்துயராற் பலபடி கூறி,நகரத்தவர்பலரும் உடன் தொடர்ந்துவரலானர்களென்பது, வான்மீகத்திற் கூறியுள்ள முறையாம்.

நகர்நீங்குபடலம் முற்றிற்று.

ரு - ஆவது தைலமாட்டுபடலம்.

(இராமன் காட்டிற்குச் சென்றுவிட்டா னென்று கேட்டு உயிர்துறந்த தசரதனுடம்பை, மாமனதுவீட்டிற்குச் சென்றிருந்த பரதனும் சத்துருக்கனும் வருமளவும் கெடாமலிருத்தற்பொருட்டுத் தைலத்தில்மூழ்குவித்துவைத்திருந்ததைக் கூறும் படலமென்பது, பொருள். இப்படலத்திற்கு இலம்பாட்டுப்படலமென்று பல ஏட்டுப்பிரதிகளிற் பெயர் காணப்படுகின்றது. அத்தொடர்க்கு-(தசரதசக்கரவர்த்தி இவ்வுலகத்தில் இல்லாமல்இறந்துபட்டதைக் கூறும் படல மென்று பொருள் காண்க: தசரதனிறந்தானென்பதைக்கூறாது அவனுடலைத் தைலத்திலிட்டாரென்று கூறுவது விளங்காததாலால், இலம்பாட்டுப்படல மென்ற பெயரே பொருத்தமானதென்றுதோன்றுகின்றது.

நகரத்துமாந்தர்பலரும் தொடர்ந்துவரத் தேரின்மீதுசென்ற இராமன் இரண்டுயோசனை தூரஞ்சென்று சூரியன்அத்தமிக்க இரவுவந்ததனல் அங்கு ஒருசோலையில் தங்கி முனிவரோடு வசிக்கலானான். உடன்வந்தவரும் அச் சோலையைச் சூழ்ந்துள்ள நதிக்கரை மணற்பரப்பு புற்றரைமுதலிய இடங்களில்தங்கி நள்ளிரவுஆனதனல் அயர்ந்துஉறங்கினர். அப்போது இராமபிரான் சுமந்திரனைவிளித்து 'இந்நகரத்தவரையெல்லாம் வனத்தில் உடனழைத்துக் கொண்டு சென்று காப்பாற்றுவது பெருவருத்தம்: இவர்களைத் திருப்பி யனுப்புவதும் எளிதுஅன்று: ஆதலால், நீ தேரினை அயோத்திக்குத்திருப்பி யோட்டிக்கொண்டுசெல்: சென்றால், இவர்கள் இரதச்சுவட்டைப்பற்றி நோக்கி இராமன் நகரத்திற்குத் திரும்பிவிட்டானென்று கருதி மீண்டு அயோத்திசெல்வார்: நீ இந்த உதவியைப் புரியவேணும்' என்று வேண்ட, சுமந்திரன் பிரிந்துசெல்வதற்கும் இராமனை வனத்துவிட்டுவந்தே னென்ற செய்தியைத் தசரதமன்னவனுக்குத் தெரிவித்தற்கும் மிகவருந்த, இராமன் நல்லுரைகளால் அவனைத்தேற்றி இசையச்செய்து, தசரதன்முதலி யோர்க்குச் சொல்லவேண்டிய செய்தியையும் சொல்லினன். சீதையும் தன் மாமனார் முதலியோர்க்குச் செய்திசொல்லினள். இலட்சுமணனைச் செய்தி கூறுமாறு சுமந்திரன் வினவ, அவன் நிட்டூரமாகக்கூறினனாக, இராமபிரான் அவனைத் தணிவிக்க, பின்பு சுமந்திரன் விடைபெற்றுத் தேரின்மீது நகர்க்கு மீண்டான். இராமனும் சீதாலக்ஷ்மணருடன் அவ்விரவில்தானே நடந்து சூரி யோதயமாவதற்குமுன் இரண்டுயோசனை தூரஞ் சென்றான். வெறுந்தேரோடு மனமழிந்து மீண்ட சுமந்திரன் இரண்டுமூன்றுநாழிகை நேரத்திற்குள் அயோத்தியடைந்து வசிட்டனையணுகி இராமன் சென்றிட்ட செய்தியைத் தெரிவிக்க, மேல் நிகழப்போவதை யெல்லாம் ஞானக்கண்ணினு லுணர்ந்த அம்முனிவன் அச்சுமந்திரனோடு தசரதன்மாளிகையைச் சேர, சுமந்திரன் தேர்கொண்டுவந்தமையையறிந்து விரைந்துவந்த அமைச்சர் இராமன்வரா மையையுணர்ந்து வருந்தாநிற்க, இரதம்வந்ததென்று கேள்வியுற்ற மன்னவ னும் இராமன்வந்தானென்றுமயக்கந்தீர்ந்து கண்விழித்து வசிட்டனைக்கண்டு 'இராமன் வந்தானே?' என்ன, மறுமாற்றஞ்சொல்லமாட்டாமல் அம்முனி வன் அப்பாற்சென்றுவிட, குறிப்பால் இராமன் வராமையையுணர்ந்த மன்ன வன் சுமந்திரனைநோக்கி 'இராமன் சேயனே? அணியனே?' என்று வினவ, சுமந்திரன் 'தன்மனைவியோடும் தம்பியோடும் இராமன் கானகஞ்சென்றான்' என்ன, அப்போதே மன்னவனது பிராணன் போயிற்று: இந்திரன்முதலிய தேவர்கள் அவனுயிரை விமானமேற்றி மீளாவுலகத்து உய்த்தனர். மன் னவனதுஉடல் உயிர்ப்புமுதலியன இன்மையால் அவன் உயிர்நீங்கியதை யுணர்ந்த கோசலை பலபடி பன்னிப் புலம்பியரற்ற, சுமித்திரையும் ஏங்கிச் சோர, மற்றைத்தேவியரும் வந்து கதறலானார்கள். அப்போது மன்னவன் இறந்தசெய்தியைச் சுமந்திரன் வசிட்டனுக்குத் தெரிவிக்க, வசிட்டன் அங்கு வந்து மற்றைமந்திரிமாரோடும் ஆலோசித்து 'உத்தரக்கிரியை செய்ய மக்கள்

எவரும் இல்லாதலால், கைகேயியின்புதல்வன் வந்தபின் ஈமக்கிரியை முடிப்போம்' எனத் தீர்மானிக்க, பிறகு தேவிமார்களை விலக்கி மந்திரிமார் மன்னவனுடலைத் தைலக்கடாரத்திலிட்டு வைத்தனர். வசிட்டமுனிவன் பரதனை யழைத்துவருமாறு மன்னவன்கட்டளையை யெழுதித் தூதுவரைக் கேகயநாட்டிற்குப் போக்கினன்: இது இங்ஙனமாக; இராமனுடன்சென்ற நகரத்தவர்கள் சூரியோதயமானவுடன் விழித்து எழுந்து இராமனைக் காணாது வருந்தித் தேர்ச்சுவட்டைப்பற்றி அதுவேறுநெறியாகச்செல்லாது அயோத்தி முகமாகச்செல்வதுகண்டு பெருமகிழ்ச்சியுற்று அயோத்திநகரம்வந்துசேர்ந்து, தசரதன் வர்ன்புக்கதையும் இராமன் கான்புக்கதையும் உணர்ந்து பெருந் துயரமெய்த, வசிட்டன் பலபடிசொல்லி அவர்களைத் தேற்ற, அன்னர் ஒரு வாறு துயரையடக்கிக்கொண்டன ரென்பது.;இப்படலத்துக் கூறும்பொருள்.

வேறு.

க.—அங்ஙனஞ்சென்ற இராமனுடன் யாவருஞ் செல்லுதல்.

[1]ஏவிய குரிசில்பின் [2]யாவ ரேகிலார்
மாவிய [3]ரூனையின் [4]மன்ன நீங்கலாத்
தேவியர் [5]தவிர்ந்தனர் [6]தெய்வ மாநக
ரோவிய [7]மொழிந்தன வுயிரி லாமையால்.

(இ - ள்.) மா இயல் தானையின் - பெருமைதங்கிய சேனையையுடைய, மன்ன - அந்தத்தசரதசக்கரவர்த்தியை, நீங்கலா - விட்டுப்பிரிதலில்லாத, தேவியர் - மனைவிமார்கள், தவிர்ந்தனர் - (பின்செல்லாது நீங்கினர்; தெய்வம் மா நகர் ஓவியம் - தெய்வத்தன்மையுள்ள சிறந்த அந்த அயோத்தியா நகரத்திலுள்ள சித்திரங்கள், உயிர் இலாமையால்—, ஒழிந்தன-(உடன்செல்லுதலை) தவிர்ந்திருந்தன: (இவர்களையன்றி), ஏவிய குரிசில் பின் - (தந்தையினது) ஏவலைப்பெற்ற இராமபிரான்பின்னே, யாவர் ஏகிலார் - எவர்தான் உடன்செல்லவில்லை? (எ - று.)

தேவியர் மன்னனைவிட்டு நீங்கக் கூடாதாதலால்,உடன் செல்லவில்லை: உயிரில்லாமையால் ஓவியங்கள் உடன்செல்லவில்லை: இவர்களைத்தவிர்த்து அயோத்தியிலுள்ள யாவரும் உடன்சென்றன ரென்றவாறு. அயோத்தியி லுள்ளாரான உடன்செல்லக் கூடியவர்யாவரும் சென்றன ரென்பதை, இங் ஙனம் விளக்கினர். மன்னைநீங்கலா-கருத்துடையடைமொழி. செல்லுதற்குக் கூடிய யாவரும் சென்றன ரென்பதை உறுதிப்படுத்தக்கருதி, 'யாவர் ஏகிலார்' என எதிர்மறையும் விளைவுமாக அமைத்துக்கூறின ரென்க. முத்தி தரும்நகரமேழனுள்முதலதும், திருமால் திருவவதரித்து வாழ்தற்கு இடமாயிருந்ததும்பற்றி 'தெய்வமாநகர்' எனப்பட்டது. பி-மி:—[1]ஏகியல். [2]யாருமே கினர். [3]தானையம். [4]மன்னன். [5]ஒழிந்தனர். [6]செல்வம். [7]ஒழித்தன. (நகஅ)

உ.—இராமபிரானது தேர் சென்றதின் வருணனை.

கைகணீர் [1]பரந்துகா ணுடரக் [2]கண்ணுகும்
வெய்யநீர் வெள்ளத்து [3]மெள்ளச் சேறலா
லுய்யவே ழுலகு[4]மொன் றுன நீருழ
றெய்வமீ னெத்ததச் செம்பொற் றேரரோ.

(இ - ள்.) அ செம் பொன் தேர் - (இராமபிரானேறிச்சென்ற) அந்தச் செம்பொன்னிலையன்ற தேரானது, கைகள் நீர் பரந்து - (தனது) பக்கங் களிலெல்லாம் நீர் பெருகி, கால் தொடர - வாய்க்கால்போலத் தொடர்ந்து செல்லுமாறு, கண் உகும்-(எல்லாச்சனங்களின்) கண்களினின்று சிந்தியதனு லாகிய, வெய்ய நீர் வெள்ளத்து - வெப்பமுள்ள நீர்வெள்ளத்தில், மெள்ள சேறலால் - மெதுவாகச் செல்லுதலினால், ஏழ் உலகுடம் ஒன்று ஆன நீர் - ஏழுலகங்களிலும் ஒருபடிப்படப்பெருகிய பெருங்கடல்வெள்ளநீரில், உய்ய உழல்-(உலகத்து உயிர்கள்) உய்யுமாறு சஞ்சரித்த, தெய்வம் மீன்-மத்ஸ்யாவ தாரமூர்த்தியாகிய திருமாலை, ஒத்தது—; (எ - று.)—அரோ-ஈற்றசை.

சக்ரவர்த்திதிருமகனுகிய இராமபிரான் பெருங்காட்டிற் செல்லுமாறு நேர்ந்ததுகுறித்துப் பெருந்துயருடனே அப்பிராஜனைத் தொடர்ந்துசெல்லும் மக்களினதுகண்களிலிருந்து பெருகுங் கண்ணீர் பிரளயப்பெருங்கடல்வெள் ளம்போல் எங்கும் பாய்ந்துசெல்ல, அதனிடையேசென்ற தேர், கடலிடையே சென்ற மத்ஸ்யாவதாரமூர்த்தியைப் போலு மெனக் குறித்தார்: **தற்குறிப் பேற்றவுவமையணி:** இவ்வணிக்கு 'கைகணீர்பரந்துகாணுடரக் கண்ணு கும் வெய்யநீர்வெள்ளத்து' என்றவிடத்துள்ள **தொடர்புயர்வுநவிற்சியணி** அங்கமாய்வந்தது. கால்தொடர, கால்-தமிழுபசருக்கம். துயரத்தினால் தோன் றுகின்ற கண்ணீர் வெப்பமாயிருக்குமாதலின், 'வெய்யநீர்'எனப்பட்டது. உல கத்தாரின் ஞானத்துக்குச் சிறந்த காரணமாகவுள்ள வேதத்தைப் பறித்துக் கொண்டுசென்ற அசுரனிடத்தினின்று அதனைமீட்கச்செய்த அவதாரமாத லின் 'எழுலகும் உய்ய வுழல் தெய்வமீன்' எனக் கூட்டினுமாம்.

எழுலகும் ஒன்றுனநீருழல் தெய்வமீன் என்பதிலடங்கிய கதை:—முன் னொரு கல்பத்தின் அந்தத்திற் பிரமதேவன் துயிலுகையில் அவன்முகங்களி னின்று வெளிப்பட்டுப் புருஷரூபத்துடன் உலாவிக்கொண்டிருந்த நான்கு வேதங்களையும் மகாபலசாலியும் நெடுங்காலந் தவஞ்செய்து பெருவரங்கள் பெற்றவனுமான சோமுகனென்னும் அசுரன் கவர்ந்துகொண்டு பிரளயவெள் ளத்தினுள் மறைந்துசெல்ல, அதனையுணர்ந்து திருமால் ஒருபெருமீனுகத் திருவவதரித்து அப்பெருங்கடலினுட்புக்கு அவ்வசுரனைத் தேடிப் பிடித்துக் கொன்று அவன் கவர்ந்துசென்ற வேதங்களை மீட்டுக்கொணர்ந்து அவற்றைப் பிரமனுக்குக் கொடுத்தருளின னென்பதாம். இவ்வசுரன் பெயர் சோமக னென்றலும், இவ்வரலாற்றை வேறுவகையாக விரித்துக்கூறுதலு முண்டு.

பி - ம்:—[1]வந்து. [2]கண்ணுறும். [3]மேவிச். [4]வந்தொதுங்க. (நூகூ)

கூ.—சூரியாத்தமன வருணனை.

[1]மீன்பொலி தரவெயி லொதுங்க மேதியோ
டான்புகக் கதிரவ னத்தம் புக்கனன்
கான்புகக் [2]காண்கில னென்று [3]கல்லிடைத்
தான்புக [4]முடுகின னென்னுந் தன்மையான்.

(இ - ள்.) கதிரவன் - ஆயிரங்கிரணங்களையுடையசூரியன்,—கான் புக காண்கிலன் என்று - (இராமபிரான்) காட்டிற் புகுவதைக் காணப்பொறே னென்ற காரணத்தினால், கல்இடை தான் புக முடுகினன் என்னும் தன்மை யான்-கல்லிடையிலே தான் பதுங்குமாறு விரைந்தானென்று சொல்லத்தக்க தன்மையையுடையவனாய்,—மேதியோடு ஆன் புக-எருமைகளும் பசுக்களும் (மேய்புலத்தில்நின்று தமது தொழுவத்திற்) புகவும், வெயில் ஒதுங்க-வெயில் விலகிவிடவும், மீன் பொலிதர - நட்சத்திரங்கள் விளக்கமாகத்தோன்றவும், அத்தம் புக்கனன் - அத்தமலையைச் சார்ந்தான்; (எ - று.)

இராமபிரான் காடுநோக்கிச் செல்கையில் இயற்கையாகச் சூரியன் அத் தமித்தலை, கவி, இராமபிரான் காட்டிற்குப் புகுதலைக் காணப் பொறுமற் கல் லிடையில் ஒளித்துக்கொள்ள விரைந்ததாகக் காரணமல்லாததைக் காரணமா கக் கற்பித்துக் கூறினர்: **ஏதுத்தற்குறிப்பேற்றவணி.** தன் குலத்திற் பிறந்த தோன்றலுக்குத் தோன்றுந் துயரத்தைக் காணப் பொறுமலிருத்தல் குல முதல்வனுக்கு இயற்கை யாதலால், தன்குலத்திற்பிறந்தவனாகிய இராமபிரா னுக்குக் கான்செல்லுமாறுநேர்ந்ததை அக்குலமுதல்வனாகிய சூரியன் காணப் பொறுதவனையின னென்க. இங்ஙனம் சூரியன் அத்தமிக்கும்போது மேதியும் ஆனும் தொழுவத்திற் புகுதலும் வெயில் நீங்கிவிடுதலும் நட்சத்திரங்கள் விளங்குதலுமாகிய இயல்பை, 'வெயிலொதுங்க மேதியோடான்புக மீன் பொலிதர' என்பவற்றால் விளக்கினர். [1]மீன் புகழ்பெற என்றபாடத்திற்கு - நட்சத்திரம் தம்மொளியால்புகழ்பெற்றுநிற்கனன்க. சூரியனது ஒளிக்குமுன் தாம் இருப்பதுதெரியாமற் கிடந்த நட்சத்திரங்கள் சூரியன் அத்தமித்தபிறகு தாம் ஒளிவிட்டுப்பிரகாசிக்குந் தன்மையனவாயிருத்தல்பற்றி, இங்ஙனங்கூறு தல் பொருந்தும். இனிச் சூரியன் அத்தமித்தபோது அவனது வெயில்மாத்தி ரம் விலகிவிட, எல்லாவொளிகளிலும் சூரியன் மிக்குத்தோன்றுபவனென்ற புகழ்மாத்திரம் நிலைத்துநிற்றலால், 'மீன்புகழ்பெற அத்தம்புக்கனன்' என்று ரெனினுமாம்; இப்பொருளில் மீன்-மின்னென்பதன்விகாரம். மின்புகழ் - ஒளி யோடுகூடிய புகழ்எனினுமாம். சூரியன் மேற்கிற் காணுமற்போவதை அத்த மலையில் மறைவதாகவும், கிழக்கில் தோன்றுவதை உதயமலையில் தோன்றுவ தாகவும் கூறுவது, கவிமரபு. தன்மையான்-முற்றெச்சம். அத்தம் - அஸ்தம் என்ற வடசொல்லின் விகாரம். **பி-ம்:**—[2]காண்கிலேன். [3]கல்லதர். [4]முடுகுவன், முழுகினன்.

(நிசா0)

சு.—அப்போது தாமரைமலர்க்கூட்டம் குவிதலின்வருணனை.

பகுத்தவான் மதிகொடு பதுமத் தண்ணலே
வகுத்தவா ணுதலியர் வதன ராசிபோ
லுகுத்த[1]கண் ணீரினி [2]லொளியு நீங்கின
முகிழ்த்[3]தழ கிழந்தன முளரி யீட்டமே.

(இ - ன்.) பகுத்த வான் மதி கொடு - பங்குபடுத்தப்பட்ட சிறந்தசந்திரனைக்கொண்டு, பதுமத்து அண்ணல் ஏ வகுத்த - தாமரைமலரில்தங்குபவனாகிய பிரமன் தானே சிருட்டித்த, வாள் நுதலியர்-ஒளிபொருந்திய நெற்றியையுடைய அந்தகரத்து மகளிரின், வதனம் ராசி போல் - முகங்களின் தொகுதிகள்போல,—முளரிஈட்டம் - தாமரைமலர்களின்கூட்டம்,—உகுத்த கண்ணீரினில் - சிந்திய கள்ளாகிய நீரோடு [கண்களிலிருந்து பெருகுகின்ற நீரோடு], ஒளிஉம் நீங்கின - நிறத்தையும் நீங்கினவாய், முகிழ்த்து - முகங்குவிந்து, அழகுஇழந்தன - அழகுகெட்டு நின்றன; (எ - று.)

சூரியனத்தமித்ததும் தாமரைமலர்கள் குவிதல், இயல்பு. கள்ளாகிய நீர்சிந்த நிறங்கெட்டு அழகிழந்து குவிந்த தாமரைமலர்க்கூட்டங்கட்கு, இராமபிரான் காட்டிற்குச்செல்லுந் துயரத்தாற் கண்களினின்று நீர்ஆறுபோற்பெருகத் தம் நிறங்கெட்டு அழகிழந்து மலர்ச்சியின்றி அழுங்கிக் கிடக்கும் அந்தகரத்துமகளிரின் முகங்களை உவமைகூறினர்; இவ்வணிக்கு 'உகுத்தகண்ணீரினில் முகிழ்த்து' என்ற இடத்திலுள்ள சிலேடையணி அங்கமாய்நின்றது. மகளிரின் நெற்றியினழகை விளக்குவதற்காக, கவி, பிரமன் சந்திரனைப் பகுத்துக்கொண்டு அந்தகரத்துமகளிரின்நுதலை வகுத்தனனென்றமையால், முன்னிரண்டடி உயர்வுநவிற்சியணியாம். பத்மம், வதநராஜி - வடசொற்கள். அண்ணலேலென்றவிடத்துள்ள ஏகாரம் - உயர்வுசிறப்பு. ஒளியும் நீங்கின என்றவிடத்துள்ள உம்மை, அழகிழந்தனவென்பதை நோக்குதலால், எதிரது தழுவிய எச்சப்பொருளது. பகுத்த வான் மதி என்பதற்கு-அட்டமிசந்திரன் என்றும் உரைக்கலாம். இனி, 'நுதலியர் வதனராசிபோன்றுள்ள முளரியீட்டம் ஒளிநீங்கி முகிழ்த்து அழகிழந்தன' என்று உரைப்பாரு முளர். முளரி - முள்ளாகியஅரியை [அரையை] யுடையதினத் தாமரைக்குக் காரணக்குறி.

பி - ம்:—[1]கண்ணீரின, கண்ணீரன, நண்ணீரென. [2]ஒளிமயங்கின, ஒளியினீங்கின. [3]அழகொழிந்தன. (நிசக)

ரு.—இருள்தோன்றுதலின் வருணனை.

அந்தியில் வெயிலொளி [1]யறிய வானக
நந்தலில் [2]கைகயன் பயந்த நங்கைதன்
மந்தரை யுரையெனுங் கடுவின் [3]மட்கிய
சிந்தையி னிருண்டது செம்மை [4]நீங்கியே.

(இ - ள்) வான் அகம் - ஆகாயத்தினிடம், - அந்தியில் - மாலைப்பொழுதில், வெயில் ஒளி அழிய - சூரியனொளிகெட்டதனால்,—நந்தல் இல் கைகயன் பயந்த நங்கைதன் - கெடுதலில்லாத கேகயவரசன் பெற்ற பெண்ணாகிய கைகேயியினது, மந்தரை உரை எனும் கடுவின் மட்கிய சிந்தையின் - மந்தரையினுடைய சொல்லாகிய விடத்தினால் நன்னிலைகெட்டுப்போகிய மனம்போல, செம்மை நீங்கி - செம்மைத்தன்மை நீங்கி, இருண்டது - இருளடைந்து விட்டது; (எ - று.)

சூரியனொளி நீங்கியதனால் ஒளிமழுங்கிய வானத்துக்கு, கூனியினுரையால் மழுங்கிப்போன கைகேயியின்சிந்தையை உவமை கூறினர். இவ்வுவமைக்கு 'செம்மைநீங்கி, இருண்டது' என்றவிடங்களிலுள்ள சிலேடை, அங்கமாய்நின்றது. வானத்திற்குச் செம்மை நீங்குதல்-செவ்வானம் நீங்குதல்: மனத்திற்குச்செம்மை நீங்குதல் - நேர்மையானநெறியைவிட்டு நீங்குதல்; வானத்துக்கு இருளுதல்-இருளால் மூடப்படுதல்: சிந்தைக்கு இருளுதல்-அறியாமை நிறைதல் எனக் காண்க. இருண்மையென்பது - இவ்விருபொருளிலும் வருதலை "கூழின்மலிமனம்போன்றிருளாநின்ற கோகிலமே" என்ற திருக்கோவையாரினாலும் அறிக. சிந்தைக்குச் செல்லும்போது செம்மை இருள் என்பன முறையே செப்பத்திலும் அறியாமையிலும் சென்றனவாயினும், செம்மை இருண்மை என்ற பண்பால் ஒத்தலின் இச்செய்யுளிற் கூறிய உவமை,பண்புவமையாம். இங்ஙனம் வருதலை "புறங்குன்றி" என்று தொடங்குந் திருக்குறளுக்குப் பரிமேலழகர்கூறிய உரையாலும் உணரலாம். கைகேயி தந்தையின்மரபால் தூபவளாதலின் இயற்கையில் நல்லமனத்தினளாயிருந்தனளென்பதும், இழிபிறப்பினளாகிய கூனியின் உரையினாலேயே அத்தூயமனந் திரிந்த தென்பதும் விளங்க, 'நந்தலில் கைகயன் பயந்த நங்கை தன் மந்தரையுரையெனுங் கடுவின் மட்கிய சிந்தை' என்றார். பி - ம்:— [1]அற்ற, அருக. [2]கேகயன். [3]வட்கிய. [4]இன்றியே. (நுசூ)

சூ.—வானம் நட்சத்திரங்களால் விளங்குதல்.

பரந்துமீ னரும்பிய பசலை வானக
மரந்தையின் முனிவர னறைந்த சாபத்தா
னிரந்தர மிமைப்பிலா நெடுங்க [1]ணீண்டிய
புரந்தர னுருவெனப் பொலிந்த தெங்குமே.

(இ - ள்.) மீன் பரந்து அரும்பிய - நட்சத்திரங்கள் பரவித் தோன்றப் பெற்ற, பசலை வானகம் - பசுமைநிறமுள்ள ஆகாயம்,—முனிவரன்-இருடிச் சிரேட்டனை கௌதமன், அரந்தையின் - மனவருத்தத்தோடு, அறைந்த - கூறிய, சாபத்தால்—, நிரந்தரம் இமைப்பு இலா நெடு கண் ஈண்டிய - எப்பொழுதும் இமைத்தலில்லாத நீண்ட கண்கள் (உடம்பெங்கும்) நிறையப் பெற்ற, புரந்தரன் - தேவேந்திரனது, உரு என - உருவம்போல, எங்கும் பொலிந்தது - (தனது) எல்லாவிடத்திலும் விளங்கிற்று; (எ - று.)

தன்னிடமெங்கும் நட்சத்திரங்கள் விளங்கப்பெற்ற பசுநிறமுள்ளவானம், தன்னுடலெங்கும் இமையாக்கண்களைப் பெற்ற பசுநிறமுள்ள இந்திரனுக்கு ஏற்ற உவமையாம். தன்மனைவியாகிய அகலிகையை வஞ்சித்துப் புணர்ந்த தனால் அவ்விந்திரனது உடலெங்கும் ஆயிரம்பெண்குறிகள் தோன்றுமாறு கௌதமமுனிவன் சபித்தானென்பதையும், பிறகு அம்முனிவனது அநுக்கிரகத்தினால் அவை கண்களாயின என்பதையும் அகலியைப்படலத்துக்காணலாம். "வரம்பில்பன் மீன்வயின் வயின்விலங்கிப், பரந்துமீதரும்பிய பசலைவானத்து" எனப் பெருங்கதையில் உஞ்சைக்காண்டத்து மாலைப்புலம்பலில் வருவதுகாணத்தக்கது. மின்னுவது மீன் என நட்சத்திரத்திற்குக் காரணக்குறி. நிரந்தரம், ஸாபம்-வடசொற்கள். சாபம்-நிறைமொழிமாந்தர்வெகுண்டு கூறும்மொழி. புரந்தரன் - (பகைவரது) உடலை அல்லது பட்டணத்தை அழிப்பவன். அரந்தைஇல்லெனப்பிரித்து - பிறவித்துயரம் ஒழியப்பெற்ற, முனிவரன் என்று உரைப்பினுமாம். பி-ம்:—[1]நீடிய, நீட்டிய. (நுசாங)

எ.—இராமபிரான் ஒருசோலையை யடைந்து முனிவரோடு உறைதல்.

திருநகர்க் [1]கோசலை யிரண்டு சென்றெரு
விரைசெறி சோலைய விரைவி [2]னெய்தினை
[3]னிரதநின் [4]றிழிந்தபி [5]னிராம னின்றிணை
யுரைசெறி முனிவரோ டுறையுங் [6]காலதே.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) இராமன்—, திரு நகர்க்கு - சிறந்த அயோத்தியாபுரியினின்று, ஓசனை இரண்டு விரைவின் சென்று - இரண்டுயோசனை தூரம் விரைவாகக் கடந்துபோய், விரை செறி ஒரு சோலையை - நறுமணம்நெருங்கிய ஒருபொழிலை, எய்தினன் - அடைந்தவனாய்,—இரதம்நின்று இழிந்த பின் - (எறிச்சென்ற) தேரினின்று கீழிறங்கியபிறகு, இன்துணை உரை செறி முனிவரோடு-(தனக்கு) இனிய நண்பராக அமைந்த புகழ்மிக்க இருடியர்களோடு, உறையும் காலை - வசிக்கும்பொழுது,—(எ-று.)— "சேனைவிட்டது" என அடுத்த கவியோடு தொடரும்.

உரைசெறிமுனிவர் என்பதற்கு - வேதமுணர்ந்த முனிவர் என உரைத்தலு மொன்று. முதல்நாள் அத்தமிக்குஞ்சமயத்தில் இராமபிரான் தமசையென்னும் நதியையடைந்து அதன்கரையில் தங்க, உடன்வந்த நகரமாந்தரும் ஆங்குள்ள மரங்களினடியிற் கிடந்துறங்கினரென்று முதனூல் கூறும். உரைசெறி முனிவரென்றது - இடைவழியிற்சந்தித்து இராமபிரானை விடமாட்டாமையால் உடன்வந்த முனிவர்கள் என்றேறனும், அவ்விடத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த முனிவரென்றேறனுங் கொள்க. பி-ம்—[1]இயோசனை. [2]எய்தினர். [3]இரதமும். [4]இழிந்து. [5]இராமன்றன். [6]காலையில். (நுசச)

அ.—இராமபிரானைப் பின்பற்றிவந்த மனிதரின்திரள் அச்சோலையின்புறத்தே தங்குதல்.

வட்ட[1]மோ ரோசனை வளவிற் றுப்நடு
வெட்டனை [2]யிடவுமோ [3]ரிடமி லாவகை
[4]புட்டகு சோலையின் புறத்துப் [5]போர்த்தென
விட்டது குரிசிலை [6]விடாத சேனையே.

(இ - ள்.) குரிசிலை விடாத சேனை-இராமபிரானை விட்டுநீங்கமாட்டாத சனங்களின் தொகுதி,—ஓர் ஓசனை வட்டம் வளவிற்று ஆய் - ஒருயோசனை தூரம் வட்டவடிவாகச்சூழ்ந்துகொண்டதாய், நடு எள் தனை இடமும் ஓர் இடம் இலா வகை - நடுவே ஓர் எள்ளைப்பிடவேண்டுமென்றாலும் அதற்கேற்ற சிறிதுவெற்றிடமும் இல்லாதபடி, புள் தகு சோலையின் புறத்து-பறவைகள் விளங்குகின்ற(இராமபிரான்தங்கிய அந்தச்,சோலையின்வெளிபிடத்தில்,போர் த்தனை - (அந்தச்சோலையையே தாம்) போர்த்தாற்போல, விட்டது - தங்கியிருந்தது; (எ - று.)

இராமபிரான் தங்கிய அந்தச்சோலையின் வெளியே ஒருயோசனை தூரம் பரவினதாய் நடுவில்சிறிதுவெற்றிடமுமில்லாமல்மிகநெருங்கி அச்சோலையையேதாம் போர்த்தாற்போலவளைந்தவடிவாய் இராமபிரானுடன்சென்ற சனங்களின் தொகுதி தங்கிற் றென்க. அச்சோலையைச் சேனை வளைந்திருந்தமையைப் போர்த்தாற்போலுமெனக் குறித்தது; **தற்குறிப்பேற்றவணி.** சேனை - இலக்கணையால், மக்கள்தொகுதியைக் காட்டிற்று. போர்த்தென - போர்த்து என்கிற செய்தென்னும் வினையெச்சம் போர்த்தால்என்னும் செயினென்னும் வினையெச்சப் பொருளில்வந்த தென்றுவது, போர்த்தது என்னுந்தொழிற் பெயர் போர்த்து என்று விகாரப்பட்டுவந்தது என்றுவது கொள்க. **பி-ம்:—** [1]ஏழ். [2]இடமும். [3]இடை. [4]புட்டிரள். [5]போர்த்தன. [6]விடாது. (நசரு)

கூ.—அச்சனங்கள் அந்த மணற்பரப்பில் ஊணுறக்கமின்றிப் பெருந்துயரோடு தங்குதல்.

[1]குயின்றன குலமணி நதியின் கூலத்திற்
பயின்றுயர் வாலுகப் பரப்பிற் பைம்புலில்
வயின்றொறும் [2]வைகின ரொன்றும் வாய்மடுத்
தயின்றிலர் துயின்றில ரழுது விம்மினர்.

(இ-ள்.) இராமபிரானுடன்சென்ற பெருந்திரளானசனங்கள் அப்பிரான் நகர்நீங்கியதனாலுண்டாகிய பெருந்துயரம் நிறைந்திருத்தலால்), ஒன்றுஉம் வாய் மடுத்து அயின்றிலர் - (உண்ணுதற்குரிய) எந்தப்பொருளையும் வாயிற் கொண்டு உண்ணாதவரும், துயின்றிலர் - உறக்கம்பிடியாதவரும், அழுது விம்மினர்-(மனத்திற்குள்ளே) பொருமி வெளிப்பட அழுபவரும்மாய், குலம் மணி

குயின்றன நதியின் கூலத்தில் - சிறந்தனவான மணிகள் செறிந்துள்ள நதியின் கரையில், பயின்று உயர் வாலுகம் பரப்பில் - திரண்டுஉயர்ந்துள்ள மணற்பரப்பில், பைம் புலில் - பசும்புல்லிலே, வயின்தொறும் - (தங்குதற்குரிய) இடங்கள்தோறும், வைகினர் - தங்கினர்கள்; (எ - று.)

குலமணி, நதி, கூலம், வாலுகம் - வடசொற்கள். ஒன்றும், உம்மை - இழிவுசிறப்பு. குலமணிகுயின்றன நதியின்கூலம் என்பதற்கு-சிறந்தமணிகள் பதித்துச்செய்யப்பெற்ற நதிக்கரை யெனினுமாம். பி - ம்: —[1]குயின்றிய. [2]வயின்றொறும் வைகினரொன்றும், வயின்றொறும் வைகினரோ. (நிசசு)

வேறு.

கo.—இதுமுதல் எட்டுக்கவிகள் - இராமனுடன்சென்ற பலரும் துயின்றதைக் கூறும்.

வாவிவிரி தாமரையின் [1]மாமலரின் வாசக்
காவிவிரி நாண்மலர் முகிழ்த்தனைய கண்ணர்
ராவிவிரி பாலுரையி னுடையணை யாக
நாவிவிரி கூழையிள நவ்வியர் துயின்றார்.

(இ - ள்.) வாவி விரி தாமரையின் மா மலரின் - தடாகத்திற் பரந்து வளர்ந்த தாமரையினது சிறந்த மலர்க்குள், வாசம் விரி காவி நாள் மலர் முகிழ்த்தனைய கண்ணர் - நறுமணம்பொருந்திய கருங்குவளையின் அன்று பூத்தமலர் மலரப்பெற்றாற்போன்ற கண்களையுடையராய், நாவி விரி கூழை இள நவ்வியர் - கஸ்தூரிமணம்விரிந்த கூந்தலையுடையராகிய மாதர்,—ஆவி விரி பால் நுரையின் ஆடை அணைஆக - புகைவிரியப்பெற்ற பால்நுரையைப் போன்ற ஆடையை அணையாகக்கொண்டு, துயின்றார்-தூங்கினர்; (எ-று.)

பருவம் வந்த மகளிர் தமதுமெல்லியஆடை அணையாகத் துயின்றனம், இதனாற் கூறப்படுகின்றது. மகளிர்முகத்திலுள்ள கண்கள் தாமரைமலரிற் காவிமலர் முகிழ்த்தாற்போலு மென்றார்: இல்பொருளுவமை. ஆவிவிரிபாலுரையினுடை - "ஆன்படுபாலுலை, போந்துபொங்கிய வாவியினுற்பொலிந்து,...மாடங்கள் .., பூந்துகில் புறம்போர்த்தன போன்றமே," "ஆவியந்துகிலார்", "பாலாராவிப்பைந்துகில்" என்பன காண்க. பி-ம்:—[1]நாண்மலரின், இன்மலரின். (நிசஎ)

கக. பெரும்பகல் வருந்தினர் பிறங்குமூலை தெங்கின்
குரும்பைகள் பொருஞ்செவிலி மங்கையர் குறங்கி
[1]லரும்பனைய கொங்கையயி லம்பனைய [2]வுண்கட்
கரும்பனைய செஞ்சொனவில் கன்னியர் துயின்றார்.

(இ - ள்.) பிறங்கு முலை தெங்கின் குரும்பைகள் பொரும் செவிலி மங்கையர் - (தமது) விளங்குகின்ற முலைகள் தென்னங்குரும்பைகளை யொத்த செவிலித்தாயராகிய மாதரின், குறங்கில் - துடையிலே, பெரு பகல் வருந்தி

னர் - நீண்டபகற்பொழுதெல்லாம் (இராமனுக்கு நேர்ந்த வனவாசத்தைக் குறித்து) வருந்தினவராகிய, அரும்பு அனைய கொங்கை - தாமரைமலரினரும்பையொத்த தனங்களையும், அயில் அம்பு அனைய உண் கண் - கூரிய அம்பையொத்தமையுண்ட கண்களையுமுடைய, கரும்பு அன்ன செம் சொல் நவில் - கரும்பையொத்த இனியசொல்லைப்பேசுபவராகிய, கன்னியர் - இளமகளிர், துயின்றார்—; (எ - று.)

இதனால், இளமங்கையர் தமது செவிலித்தாயரின் துடையில் உறங்கினமை கூறப்பட்டது. பகல்முழுதும் வருந்திய சோர்வின் மிகுதியால் கன்னிமார் உடல்தெரியாது துயின்றனரென்க. கன்னியர் - விவாகமாகாதமகளிர். வருத்தத்தோடு கழிந்த நாளாதலால் அது மிகவும் நெடுகிக் காணப்பட்டமை தோன்ற, 'பெரும்பகல்வருந்தினர்' என்றார். பொரும் - உவமவுருபு. **பி-ம்:**— [1]அரம்பையினையங் கைபயிலம்பனையவுண்டே. [2]ஒண்கண். (நசஅ)

கஉ. [1]பூவக நிறைந்த புனைத் [2]திரள்கடோறு
மாவகிரி [3]னுண்கணர் மடப்பிடியின் [4]வைகச்
சேவக [5]மமைந்தசிறு கட்கரிக ளென்னத்
தூ [6]வகலில் குந்தமற மைந்தர்க டுயின்றார்.

(இ - ள்.) பூஅகம் நிறைந்த புனைம் திரள்கள் தோறுஉம் - பூமியில் நிறைந்து தோன்றுகிற மணற்குன்றுகளினிடங்கள்தோறும், தூஅகல் இல் குந்தம் மறம் மைந்தர்கள் - ஊன் தீங்குதலில்லாத குந்தமென்னும் படையை யேந்திய வீரத்தையுடைய குமாரர்கள், மா வகிரின் உண் கணர் மட பிடியின் வைக - மாவடுப்போன்ற மையுண்ட கண்களையுடையவராகிய (தமது) மனைவியர் இளையபெண்யானைகள்போல் தங்கியிருக்க, சேவகம் அமைந்த சிறு கண் கரிகள் என்ன - வீரமமைந்த சிறிய கண்களையுடைய ஆண்யானைகள் போல, துயின்றார்—; (எ - று.)

இதனால், புனைத்தடங்களில் தமதுமனைவியர் தங்கியிருக்க, ஆடவவீரர் துயின்றமை கூறப்பட்டது. அச்சோலையின் புறம்புள்ள பிரதேசம் மணல் நிரம்பியுள்ள தென்பது 'பூவகநிறைந்தபுனைம்' என்றதனாற் பெறப்பட்டது. பூவகம் - பூஎன்ற வடமொழித்திரிபாகியசொல் அகமென்னும் எழனுருபு பெற்றுவந்தது. இனி, பூவகம்நிறைந்தபுனைம் என்பதற்கு - மலர்கள் தம்மிடம்நிறைந்த புனைம் எனினுமாம். மாவகிர் - கண்ணிற்கு வடிவில்உவமை. சிறுகண்-கரிக்கு, இயற்கை அடைமொழி. புனிதம், கரீ, குந்தம்—வடசொற்கள். **பி-ம்:**—[1]பூவகை. [2]திடர். [3]உண்கணின், ஒண்கணின். [4]வைகும். [5]அனைந்த. [6]அகலிலங்குமயின்மன்னர், அகமிருந்தமறமன்னர், அயலிருந்தமறமன்னர்.()

கஊ. தகவுமிகு தவமுமின்வ தழுவவுயர் கொழுநர்
முகமுமவ ரருளு[1]நுகர் சிலர்கடுயர் டூடுக
வகவுமிள மயில்களுயி ரலசியன வனையர்
மகவுமுலை வருடவிள மகளிர்க டுயின்றார்.

(இ - ள்.) மிகு தகவுடம் தவம்உம் இவை தழுவ உயர்-மிக்க நல்லகுணமும் கொண்டானது கொள்கையின்பழிபே நடக்கும் கொள்கையும் இவை பொருந்தியதனல் உயர்ந்துள்ள, கொழுநர் முகம்உம் அவர் அருள்உம் நுகர்-கொழுநருடைய முகத்தையும் அவருடைய கருணையையும் அனுபவிக்கின்ற, சிலர்கள் இளமகளிர்கள் - சில இளமகளிர்கள், துயர் முதிக - துன்பம் மிக்கதனல், அகவும் இள மயில்கள் உயிர் அலசியன அனையார்-ஆடுந்தன்மையுள்ள இளமயில்கள் உயிர்ஓடுங்கிபவற்றை பொத்தவர்களாய், மகவு முலை வருட - (முலையுண்ணும்) குழந்தை(மற்றொரு முலைக்காம்பைநெருடிக்கொண்டிருக்க, துயின்றார்—; (எ - று.)

இதனல், மக்களைப்பெற்ற பதிவிரதைமகளிர் துயின்றமை கூறப்படுகின்றது. கணவருடைய இன்முகத்தைபே காணுதலும் அவருடைய அருளை நாடிநுகருதலும், பதிவிரதையருக்குஇயல்பு. சிலர்கள் - விருந்திமேல் விருந்தி. பதிவிரதையர்க்குக் கொழுநரதுகொள்கைப்படி நடப்பது தவிர வேறுதவமில்லையாதலால், தவமென்பதற்கு இங்ஙனம் பொருள் கொள்ளப்பட்டது. தகவு மிகுதவமும்தழுவுயர் என்பதை மகளிர்க்கு அடைமொழியாக்காமல் கொழுநர்க்குஅடைமொழியாக்கின், தகவினலும்தவத்தினலும் உயர்ந்த கொழுநரது முகத்தையும்அருளையும்நுகர்கின்ற மகளி ரென்க.குழந்தை தன்தாயின்ஒருமுலையிற்பால்குடிக்கும்போது மற்றொருமுலையின்காம்பை நெருடுதல், இயல்பு: இதனை 'திருமலிந்ததிகழ்மார்புதேக்கவந்தென்னல்குலறி, யொருமுலையை வாய்மடுத்தொருமுலையை நெருடிக்கொண்;டிருமுலையுமுறைமுறையாலேங்கியேங்கியிருந்துணீஇய" என்றபாசுரத்தாலும் அறிக. பி ம்:—[1]நுகர்கிலர்துயர முறுவார்,நுகர்கிலர்துயரமுறுவர், நுகர்கிலர் துயரின்மூழ்கி,நுகர்கிலர்கடுயர் முழுகி. சிலபிரதிகளில் இச்செய்யுள், "சம்பகநறும்பொழில்"(கரு)என்றுதொடங்கும் பாடலுக்குப் பின்னும்,சிலபிரதிகளில்:"மாகமணி" (கச)என்றுதொடங்கும்பாடலுக்குப்பின்னும் 'மயறு' என்ற தலைப்போடு காணப்படுகின்றது.()

கச. மாகமணி மேனிகையின் மாதவிசெய் பந்தற்
கேகய நெடுங்குல மெனச்சிலர் கிடந்தார்
பூகவன மூடு[1]படு கர்ப்புளின முன்றிற்
றோகையிள வன்னநிரை யிற்சிலர் துயின்றார்.

(இ - ள்.) சிலர்-சிலமகளிர்,—மாதவி செய் பந்தல் - முல்லைக்கொடியாலமைக்கப்பட்ட பந்தலில், மாகம் மணி மேனிகையின் - வானத்தைப்போல் தோன்றுகின்ற நீலரத்தங்கள் பதிக்கப்பெற்ற திண்ணையில், கேகயம் நெடுகுலம் என - மயிலின் பெருங்கூட்டம்போல, கிடந்தார் - படுத்திருந்தார்; சிலர் - சிலமகளிர்,—பூகம் வனம் ஓடு கமுகவனத்தின் நடுவிலுள்ள, படுகர்-மடுவைச் சார்ந்த, புளினம் முன்றில் - மணல்மேடுகளில், தோகை இள அன்னம் நிரையின்-தோகையையுடைய இளவன்னங்களின் வரிசைகள் போல, துயின்றார்—; (எ - று.)

மாதவிப்பந்தலின் கீழமைந்த வேதிகையிற் சிலர் மயிற்குலம்போற்கிடந் துறங்க, சிலர் கழுகுசூழ்தோட்டத்திடையிலே மணற்குன்றுகளில் இளவன்னம் போல் துயின்றன ரென்க. வேதிகை - யாகஞ்செய்யும்பொருட்டு அமைக்கப் பட்ட திண்ணைபோல்மேடானஇடம். அந்நாட்டிற் பலரும் யாகஞ் செய்வோ ராதலின் அங்ஙனம் யாகஞ்செய்வதற்காக அமைக்கப்பட்ட வேதிகையின்மீது மாதவிக்கொடிகள் பந்தல்போற்படர்ந்தன வென்க. வீட்டின் முன்னிடம் என்றபொருளுள்ள 'முன்றில்' என்ற சொல் - இலக்கணையால், இங்கே இட மென்ற பொருளை யுணர்த்தியது. தோகை - விலங்குக்கு வால்போலப் பறவைகட்குப் பின்புறத்தில் நீண்டுவளர்வது: இது, பெரும்பாலும் மயிலுக் குக் கூறப்படும். மாகம் - மஹாகம் என்ற வடசொல்லின் திரிபு. மணிவேதிகா, மாதவீ, பூகவநம், ஹர்ம்யம் என்ற வடசொற்கள் திரிந்துவந்தன. கேகயம், குலம், புளிநம்-தற்சமவடசொற்கள். மாகமணிவேதிகை என்றதனாடருக்கு-ஆகாயத்தை அழகுசெய்கின்ற யாகவேதிகை என்று பொருள் கூறுவதிற் சிறப்புளதேற் கொள்க. பி-ம்:—[1]படுகாமர்புரை. (நிநக)

கரு. சம்பக நறும்[1]பொழில் களிற்றருண வஞ்சிக்
கொம்[3]பழுதை சிந்தன வெனச்சிலர் குழைந்தார்
வம்பளவு கொங்கைபொடு வாலுகம் வளர்க்கு
மம்பவள வல்லிக ளெனச்சில [3]ரணைசந்தார்.

(இ - ள்.) சிலர் - சிலமகளிர்,— சம்பகம் நறு பொழில்களில் - நறுமண முள்ள சண்பகச்சோலைகளிலே, தருணம் வஞ்சி கொம்பு அழுது ஒசிந்தன என-இளைய வஞ்சிக்கொடிகள் அழுது முறிந்து கீழ்விழுந்து கிடப்பனபோல, குழைந்தார் - சோர்வுடன்கிடந்து உறங்கினர்கள்; சிலர் - மற்றுஞ்சிலமாதர், —வம்பு அளவு கொங்கையொடு - கச்சையணிந்த தனங்களுடனே, வாலுகம் வளர்க்கும் அம் பவளம் வல்லிகள் என - மணற்குன்றுகளால் வளர்க்கப்படு கின்ற அழகிய பவளக்கொடிகள் போல, அணைசந்தார் - மெய்ம்மறந்து துயின்றார்கள்; (எ - று.)

சிலமகளிர் சண்பகப்பொழிலிற் சோர்ந்து தூங்க, சிலமகளிர் மணற் குன்றுகளில் அயர்ந்து தூங்கினரென்பதாம். அழுதகண்ணீருடனே தளர்ந்து கிடந்து உறங்கும் மகளிரை - வஞ்சிக்கொம்பு அழுது ஒசிந்தனபோலுமென வும், மணற்குன்றுகளில் அயர்ந்துதூங்கும் மகளிரை - வாலுகத்தால் வளர்க் கப்பட்டு வம்பளவு கொங்கையைக்கொண்ட பவளவல்லிகள் போலு மென வும் குறித்தார்; இவை இரண்டும் - தற்குறிப்பேற்றவணிகள். சம்பகம், தரு ணம், வாலுகம் - தற்சமவடசொற்கள். வஞ்சுளம், ப்ரவாளவல்லீ என்ற வட சொற்[illegible] வஞ்சி, பவளவல்லி எனத் திரிந்துவந்தன. பி ம்:—[1]பொழிலி யல். [2]அழகு. [3]அயர்ந்தார். (நிந2)

கசு. குங்கும [1]மலைக்குளிர் பனிக்[2]குழுமி [3]யென்னத்
தூங்க முலையிற்றுக ளுறச்சிலர் துயின்ற
ரங்கை யணையிற்பொலி வழுங்கமுக மெல்லாம்
பங்கய [4]முகிழ்த்தன வெனச்சிலர் படிந்தார்.

(இ-ள்.) சிலர்-சிலமாதர்கள்,-குங்குமம் மலை குளிர் பனி குழுமி என்ன-குங்குமப்பூநிறைந்துள்ள மலையிலே குளிர்ந்த பனி படிந்ததுபோல, துங்கம் முலையில் துகள் உற-பருத்துள்ள தனங்களிலே புழுதி படிந்திருக்க, துயின் ரூர்—; சிலர்-, அம் கை அணையில்-அழகிய கையாகிற தலையணையிலேபொருந்தியுள்ள, முகம் எல்லாம்-(தமது) முகங்கள்யாவும்,பொலிவு அழுங்க-அழகு கெட்டிருத்தலால், பங்கயம் முகிழ்த்தன என - தாமரைமலர்கள் குவிந்துள்ளன என்று நினைக்குமாறு, படிந்தார் - கிடந்து உறங்கினர்கள்; (எ - று.)

இதனால், தம்முடம்பிற் புழுதிபடியவும் கைகளை அணையாக அமையவும் சிற்சிலமகளிர் கிடந்து உறங்கியமையைக் கூறுகின்றூர். தரையிற்படுத்து உறங்கும் மகளிரது தனங்களிற் படிந்த புழுதி,குங்கும மலையிற் பனிபடிந்தது போலுமெனக் குறித்தார்: **தப்புறிப்பேற்றவணி.** கையே அணையாக அமைய அவற்றில் மலர்ச்சியற்ற மகளிரது முகங்கள், முகிழ்த்த பங்கயம்போலும் என்றது - **உவமைபணி.** தனங்கள் குங்குமப்பூச்சு அமைந்தனவாதலால், அவை குங்குமமலை யெனப்பட்டன. குங்குமமலை-குங்குமத்தாலியன்ற மலை யெனினுமாம். **பி-ம்:**—[1]முலைக்குளிர்மணல். [2]குமிழி. [3]அன்ன. [4]முகிழ்ப்பன.(நுருங)

-

கஎ. தொடுத்த[1]க ளிடைச்சிலர் துவண்டனர் துயின்ரு
ரடுத்த[2]வடை யிற்சில [3]ரடுனிந்தன ரயர்ந்தா
ருடுத்ததுகில் சுற்றெரு தலைச்சில ருறைந்தார்
படுத்ததளி ரிற்சிலர் [4]பசந்தன ரசந்தார்.

(இ - ள்.) சிலர்—,—துவண்டனர் - (வழிநடந்த இளைப்பினாலும் வருத்தத்தினாலும்) துவட்சியடைந்தவராய், தொடுத்த கல் இடை - (ஒன்றோடொன்று)தொடர்ந்துள்ள கல்லினிடத்திலே, துயின்ரூர்—; சிலர்—,—அடுத்த அடையில்-ஒன்றன்மீது ஒன்ரூக விழுந்துள்ள இலையிலே, அழிந்தனர்-மனம் அழிந்தவராய், அயர்ந்தார் - மெய்ம்மறந்து தூங்கினர்கள்; சிலர்—,—உடுத்த துகில் சுற்றி - உடுத்த ஆடையில் ஒருபகுதியைமாத்திரம்உடுத்துக்கொண்டு, ஒருதலை-(அதனுடைய) விளிந்திய பகுதியில், உறைந்தார் படுத்து உறங்கினர்கள்; சிலர்—,—படுத்த தளிரில் - பரப்பிய தளிரிலே, பசந்தனர் - (துயரத்தின் மிகுதியால்) நிறம் வேறுபட்டவராய், அசந்தார் - மெய்ம்மறந்து தூங்கினர்கள்; (எ - று.)

சிலரென்பதை மகளிர் என்றுமாத்திரங்கொள்ளாமல் ஆடவர் மகளிர் என்ற இருபாலாரைக் காட்டு மெனினுமாம். கல்லிடைச் சிலரும், இலையிற் சிலரும், தளிரிற் சிலரும், உடுத்தஉடையிற் சிலருமாகப் பலரும் அயர்ந்து தூங்கின ரென்க. அசந்தார் - அயர்ந்தார் என்பதன் போலி. சுற்றிஒருதலை என்பன,சுற்றெருதலை என விகாரப்பட்டுவந்தன. **பி-ம்:**—[1]மலரிற்சிலர், புருவச்சிலை. [2]கல்லிடை. [3]அணைந்தனர், அறிந்தனர். [4]பனைத்தனர்திகைத்தார், பழந்தனர்பதைத்தார். இச்செய்யுள் சிலபிரதியிற் காணப்படவில்லை. (நுருக)

கஅ.—யாவரும் உறங்துகையில் இராமன் சுமந்திரனைப்பழைத்து ஒன்று கூறத்தொடங்குதல்.

ஏனையரு மின்ன்ணை [1]மிறங்கின [2]ருறங்கா
மானவனு மந்திரிசு மந்திரின வாவென்
ஞானமில் பெருங்குண மொருங்குடைய [3]வுன்னென்
மேனிகழ்வ துண்டவுரை கேளென விளம்பும்.

(இ - ள்.) இன்ணணம்-இவ்வாறு, இறங்கினர் - (அச்சோலைப்புறத்தே) தங்கினவராகிய, ஏனையர்உம்-யாவரும், உறங்கா - தூங்கிக்கொண்டிருக்க,—மானவன்உம் - வைவச்சுவதமனுவின் குலத்திற்றோன்றிய இராமபிரானும், மந்திரி சுமந்திரனை-மந்திரியாகிய சுமந்திரனென்பானை, வாஎன்று '(இங்கே) வருவாயாக' என்று அழைத்து, (அவனை நோக்கி), 'ஞானம் இல் பெருகுணம் ஒருங்கு உடைய உன்னுல் - குற்றமற்ற சிறந்த குணங்களெல்லாவற்றையும் ஒருசேரக்கொண்டுள்ள உன்னாலே, மேல்-இனி, நிகழ்வது - நடக்கவேண்டியதொரு செயல், உண்டு—: அ உரை - அதனைப்பற்றிய பேச்சை, (யான்கூற), கேள்—கேட்பாயாக,' என-என்று சொல்லி, விளம்பும்-கூறலானன்; (எ - று.)—அதனை, மேற்கவியிற் காண்க.

[1]உறங்கினர்என்ற பாடத்துக்கு - யாவரும் இங்ஙனம் துயின்றார்கள்: (அப்போது), உறங்கா மானவனும் - தூக்கம்பிடியாதவனாகிய அவ்விராமனும் என்று உரைக்க. தன்னுடன் வந்த நகரமாந்தரைப் பின்னும் வருத்தத்திற்கு உட்படுத்தாமற் பிரியவேணுமென்னுங் கருத்தைக்கொண்ட இராமபிரான் இலட்சுமணனுடன் முன்னர் ஆலோசித்துப் பிறகு சுமந்திரனையழைத்துத் தன்கருத்தைக் கூறலாயினன் என இச்செய்யுளின் கருத்தை முதனூலிற் கேற்ப விரித்துரைக்கலாம். எனையரென்பது, எனையரென விகாரப்பட்டுவந்தது. இனி, கீழே மகளிர் பலரும் உறங்கியதைக் கூறிக்கொண்டுவந்தமையால், ஏனையர்-மற்றையோராகிய ஆடவரும், துயின்றனர் எனக் கூறலாமென்பர்: ஆயினும், கீழ்ச்சிலபாடல்களில் இருபாலாரும் துயின்றனரெனக் கொள்ளுதற்கு இடமிருத்தலாலும், பன்னிரண்டாஞ்செய்யுளில் "மறைமந்தர்கள் துயின்றார்" எனக் கூறியுள்ளதனாலும், அவ்வுரை சிறக்குமெனத் தோன்றவில்லை. பி-டி:—[1]இரங்கினர். [2]உறங்க. [3]அன்னென்.

(ருருரு)

வேறு.

கக.—இராமன் சுமந்திரனைநோக்கி உடன்வந்தவர் திருப்பிச்செல்லுமாறு இரதத்தைத் திருப்பிக்கொண்டு செல்லச் சொல்லுதல்.

பூண்டபே ரன்பி னைரப் போக்குவ தரிது போக்கா
தீண்டுநின் றேகல் பொல்லா தெந்தைதீ யிரத மின்னே
தூண்டினை [1]மீள நோக்கிச் [2]சுவட்டையோர்ந் தென்னை யங்ஙே
மீண்டன னென்ன மீள்வ [3]ரிதுகின்னை வேண்டிற் றென்றான்.

(இ-ள்.) 'பூண்ட பேர் அன்பினரை[பேரன்புபூண்டாரை]-(நம்மிடத்து) மிக்க அன்புகொண்ட இந்தச்சனங்களை, போக்குவது - திரும்பிச்செல்லுமாறு செய்வது, அரிது - முடியாது; போக்காது - (அவர்களை) அனுப்பிவிடாமல், ஈண்டு நின்று ஏகல் - இவ்விடத்தினின்று செல்லுதல், பொல்லாது - நல்லதன்று; எந்தை - எனது தந்தை போன்றவனே! இன்னை - இப்படிப்பட்டதை, நீ—, இதம் தூண்டினை மீள - இதத்தைச் செலுத்திபடியை மீண்டுசெல்ல, (கண்விழித்தெழுந்த இவர்கள்), சுவட்டை நோக்கி - (தேர்சென்ற) அடையாளத்தைக்கண்டு, ஓர்ந்து - ஆராய்ந்து, என்னை அவ்வழி மீண்டனன் என்ன - என்னை அவ்வழிபாத்திபாகரத்திற்கே திரும்பிவிட்டானென்று நினைத்து, மீள்வர் - (நாமும்) திரும்பிச்செல்வார்கள்; (ஆகையால்), இது - இதத்தைத் திருப்பிக்கொண்டு செல்லவேண்டுமென்ற இதுவே, நின்னை வேண்டற்று - உன்னை வேண்டிக்கொள்வதாகும்,' என்றான்-என்று கூறினான், (இராமன்).

தன்கீழ்வாழும் குடிமக்கட்கு மனவருத்தமுண்டாகும்பொழுது அரசகுமாரர் அதைத் தாம் தீர்ப்பது தகுதியேயன்றித் தமது துயரத்தையும் அந்தப்பட்டணத்து ஜனங்கள் நகருமாறுசெய்வது முறைமையன்று ஆதலாலும், 'நம்மையாவது நகரத்திற்குத்திருப்பி அழைத்துக்கொண்டு செல்லவேண்டும்; அல்லது, தாங்களாவது காட்டில் உடன்வரவேண்டும்' என்று பேரன்பினால் விடாப்பிடிகொண்டுள்ள இவர்களை நல்வார்த்தைசொல்லி நகரத்திற்குத் திருப்பியனுப்புவது முடியாததாலும், மேலும் நாம் இவர்களைக் காட்டிற்கு உடன்அழைத்துச்சென்றால் அந்த இவர்கட்கு எற்றபடி உணவு முதலியன அளித்தல் முடியாதாகையாலும், அன்றியும் அந்த எதேனும் கொடியவிலங்கு முதலியவற்றால் இவர்கட்குத் தீங்குநேருமாயின் அத்தீவினையும் நம்மைச் சேருமாதலாலும், இவர்களை வஞ்சித்தாவது நகரத்திற்குமீளுமாறு செய்வது இப்போது செய்யத்தக்க காரியம்: அதற்காகவே நீ இரதத்தைத் திருப்பிக்கொண்டு செல்வாயேயாலால் தேர்ச்சுவட்டைக்கண்டு இதுவரையிலும் நான் இரதத்திலேறிவந்ததுபற்றி இப்போதும் இரதத்தின்மீதேறி வனவாசத்திற்கு அஞ்சி நகரத்திற்குத் திரும்பியதாக நினைத்துத் தாமும் நகரத்திற்குத் திரும்பிவிடுவர்: ஆகையால், இதுவே இப்பொழுது நீ செய்யவேண்டிய செயல் என்று சுமந்திரனை இராமபிரான் வேண்டினனென்க. தமசாநதிக் கரையில் நகரமாந்தர்யாவரும் உறங்குகையில், சுமந்திரனேடு இராமபிரானது குணங்களைச்சொல்லிக்கொண்டு இலக்குமணன் விழித்திருக்கையில் இலக்குமண சுமந்திரர்களால் அமைக்கப்பட்ட இலைப்படுக்கையில்நின்றும் உறங்கியெழுந்திருந்த இராமபிரான் தான் நகரசனங்களுடன் வனத்திற்குச்செல்லுதல் தகுதியன்றென்பதை ஆலோசித்துப் பிறகு சுமந்திரனைப்பார்த்து 'இந்நகரமாந்தர்க்குத் தெரியாதபடி வனத்திற்குச் செல்லவேண்டுமாதலால், இரதத்தைச் சித்தப்படுத்திக்கொண்டுவருக' என்ன, அவனும் அங்ஙனமேகொண்டு, ஸ்ரீராமன் இரதத்தின்மேலேறிக்கொண்டு தமசாநதியைக்கடந்து முள்கல்லில்லாத பெரியவழியைப்பிடித்துச் 'செல்லுகையிற் சுமந்திரனைப்பார்த்து

'நீ மாத்திரம் இருந்து கொண்டு இவ்விரதத்தை அயோத்திக்குத்திரும்பிவிட் டது போல் தோன்றுமாறு வடதிசைமுகமாக ஒரு முகூர்த்தகாலம் தேரை நடத்திச்சென்று பிறகு வேறுவழியாக ஜனங்களால் சுவடுதெரியமுடியாதபடி திருப்பிக்கொண்டுவருவாயாக' என்று கட்டளையிட, சுமந்திரனும் அங்ஙனமே செய்ய, இராமபிரான் தேரின்மேலேயே தேவசுருதி கோமதி என்னும் நதிக ளைத் தாண்டிக் கோசலதேசத்தின் தென்னல்லையைக் கடந்து, அந்தகரதேவ தையை வணங்கிவிட்டுக் கங்காதீரத்தையடைந்ததும், குகன் கொண்டுவந்த ஓடத்தின்மேலேறும்பொழுது சுமந்திரனிடம் தன்தாய்தந்தையர்க்கு வேண் டிய செய்திகளைச்சொல்லி அவனைத் திருப்பியனுப்பியதாக முதனூலிற் கூறி யுள்ளது. வேண்டிற்று - இயல்பிலுல்நிகழ்காலம் இறந்தகாலமாக வந்த கால வழுவமைதி. எந்தை - அன்பிலுல் வந்த மரபுவழுவமைதி. இன்னே-இன்றே யென்பதன் விகாரமென்றுவது, இனியென்பது விகாரப்பட்டு ஏகாரவிடைச் சொல்பெற்று வந்ததென்றுவதுமாகள்க. பி-ம்:—[1]மீள்வதாகி. [2]சுவடுதேர்ந்து. [3]ஈதுன்னை, இதுவுன்னை, இதுவென்னை. (நருசு)

20.—இதுமுதல் ஆறுகவிகள் - சுமந்திரன் தான் வேறுந் தேருடன் திரும்பிச்சென்று, கேட்டவருக்கு யாதுகூறுவதென்று வருந்துவதைக் கூறும்.

செவ்விய குரிசில் கூறத் தேர்வலான் [1]செப்பு வானவ்
வெவ்விய தாயிற் றீய [2]விதியினின் மேலன் போலா
மிவ்வயி னின்னை [3]நீங்கி யின்னுபிர் [4]தீர்ந்தின் றேகி
யவ்வயி [5]னனைய காண்டற் [6]கமைந்தன [7]னடிய னென்றான்.

(இ - ள்.) செவ்விய குரிசில் - நற்குணங்களையையுடைய தலைவனாகிய இராமபிரான், கூற-(இவ்வண்ணம்) சொல்ல,—தேர் வலான்-தேர்செலுத்து தலில் வல்லவனாகிய சுமந்திரன், செப்புவான் - சொல்லுவானாயினான்:— '(நான் நீ கூறியவண்ணமே வெறுந்தேரைக்கொண்டு திரும்பிச்செல்வேனா னால்), 'இ வயின் - இவ்விடத்தினின்று, நின்னை நீங்கி - உன்னைவிட்டுப் பிரிந்து, இன் உயிர்-(எனது) இனிய பிராணனை, தீர்ந்து இன்று-நீங்கப்பெறா மல், ஏகி - மீண்டு சென்று, அ வயின்-அவ்வயோத்தியா நகரத்தில், அனைய (இராமனின்றிச் செல்வதுகண்டு அவஸ்தைப்படுகின்ற அயோத்தியாபுரியின்) அந்த நிலைமைகளை, காண்டற்கு - காணுதற்கு; அமைந்தன் - உடன்பட் டவனான, அடியன் - அடியவனாகிய யான்,—அ வெவ்விய தாயின் - (நீ காட் டிற்குச் செல்லவேணுமென்று வரம்வேண்டிய) கொடிய அந்தத் தாய்க்கும், தீய விதியினின் - (அவ்வண்ணம் காட்டிற்குச் செல்லுமாறு தூண்டிய) கொடிய விதிக்கும், மேலன் போல் ஆம் - (கொடுமையில்) மேம்பட்டவனேவன் போலும்', என்றான் - என்று கூறினான்; (எ - று.)

கானகத்திற்கு நீ செல்லுமாறு தாய் வரம்வேண்டினள்: விதி காட்டிற்குக் கொண்டுபோய்விட்டது; யாரை அவ்விருவர்செயலும் நடப்பித்த தோடு ஒழியாமல் கல்லும்முள்ளும் நிறைந்த கானகத்திலே பொருந்தார்கை வேல்நுதிபோல் பரல்பாய மெல்லடிக்கள் குருதிசார வெயிலுறைப்பநடந்து செல்ல விட்டிட்டு 'ஒருகால் இராமன் நாட்டிற்குத் திரும்பிவந்தாலும் வருவனே?' என்று ஓரெண்ணங்கொண்டு உடன் வரமுடியாமையால் நகரத்தில் தானே தங்கிய சிலர்க்கு அவ்வாசையெல்லாந் தீரச்செய்த கொடியவனைதலால் 'தாயின் வெவ்வியவிதியினின் மேலன்' என்கிறான், சுமந்திரன் [2]விதியினின் மேலென்போலாம் என்ற பாடத்திற்கு - விதியினும் மேலாக எதையொத்திருப்பேனென்க. தீர்ந்து-தீர்ந்ததுஎன்ற தொழிற்பெயரின்விகாரம்.

பி-ம்:—[1]உணர்த்துவான். [2]விதியினிமேலென்பாலாம், விதியின்மேலோன் போலாம். [3]நீக்கி, நோக்கி. [4]தீராதேகி, ஈந்தின்றேகி, நீக்கென்றேகி. [5]முடிவு. [6]அமைதலால், ஆதலால். [7]அளியன். (நருஎ)

வேறு.

உக. தேவியு மிளவலுந் தொடரச் செல்வனைப்
[1]பூவியற் கானகம் [2]புகவுய்த்தே னென்கோ
கோவினை யுடன்கொடு குறுகினே னென்கோ
யாவது கூறுகே [3]னிரும்பி னெஞ்சினேன்.

இதுமுதல் ஆறுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) தேவியும் இளவலும் தொடர - மனைவியும் தம்பியும் உடன் தொடர்ந்து செல்ல, செல்வனை - செல்வக்குமாரனாகிய இராமபிரானை, பூ இயல் கானகம்-மலர்கள் பொருந்திய காட்டில், புக-செல்லுமாறு, உய்த்தேன் என்குழை - விட்டுவந்தேனென்று சொல்வேனோ? கோவினை - தலைவனாகிய இராமபிரானை, உடன் கொடு - உடன் அழைத்துக்கொண்டு, குறுகினேன் என்குழை-(நகரத்தைக்) கிட்டினேன னென்று சொல்வேனோ? இரும்பின் நெஞ்சினேன் - இரும்பைப்போல்வலிய நெஞ்சையுடையனாகிய யான், யாவது கூறுகேன் - யாது சொல்லக்கடவேன்? (எ - று.)

'கோவினையுடன்கொடுகுறுகினேன்'என்றுசொல்லுதல் பொருந்தாததுபோலவே, பகைவர் கைவல்நுதிபோற் பரல்பாயுங் காட்டிற் புகவுய்த்ததை 'பூவியற்கானகம் புகவுய்த்தேன்' எனக் கூறுதலும் தகாதாதலாலும், நுழைதற்கரிய கடுங்காட்டிற் கொண்டுபோய் விட்டுவந்தேனென்று கூறுதல் மிகவும் அநிஷ்டத்தைக் கூறியதாமாதலாலும் 'யாவதுகூறுகேன்' என்கிறான். காட்டில் விட்டுவந்தேனென்று எவ்வாறு கூறுவேனென்பது, சுமந்திரன் கருத்து. காட்டிலேகொண்டுபோய் விட்டுவந்த கொடுஞ்சொல்லைச் சொல்லும்படி தனக்கு ஏற்பட்டிருப்பதைப்பற்றி, தன்னை, 'இரும்பின்நெஞ்சினேன்'என்று பழித்துக்கூறுகின்றான். 'தேவியும் இளவலுந் தொடர' என்றதனால், தானும் அவர்களைப்போலப் பின்தொடர்ந்துசெல்லச் சுமந்திரன் விரும்புகின்

ரூவினன்பது தொனிக்கும். என்கு - தன்மையொருமையெதிர்காலவி"னை முற்று. 'கூறுதேகன்' என்பதில், ககரவொற்று—எதிர்காலங்காட்டும். பீ மீ:— [1]பூவுயர். [2]போக்கினேன். [3]இரும்பு. (கூ.அ)

உஉ. தாருடை மலரினு மொதுங்கத் தக்கிலா
வாருடை முலையொடு மதுகை மைந்தரைப்
பாரிடைச் செலுத்தினன் பழைய நண்பினேன்
றேரிடை வந்தனன் றீதிலெ னென்கொகா.

(இ-ள்.) பழைய நண்பினேன்-முன்னோர்காலந்தொட்டு நண்பையுடை யவனும், தீது இலேன் - குற்றமற்றவனுமாகிய யான், தார் உடை மலரின் உம்-மாலையாகத் தொடுத்தற்குரிய மலர்களிலும், ஒதுங்க - நடத்தற்கு, தக்கி லா-தகுதியில்லாத [மிகவும் சுகுமாரத்தன்மையமைந்த], வார் உடை முலை யொடு-கச்சையணிந்த தனங்களையுடைய சீதையுடனே, மதுகை மைந்தரை-வலிமையமைந்த குமாரர்களை, பாரிடை - கடுந்தரையில், செலுத்தினன் - செல்லுமாறுவிட்டவனும், தேரிடை வந்தனன் - (சொஸ்தமாக நான் அரச குமாரன்போல்) தேரின்மீது ஏறிக்கொண்டுவந்தேன், என்கொ-? (எ - று.)

பூப்பட்டாலுங் கொப்பளிக்குந் தன்மையுள்ள சுகுமாரமான பாதங் களைக் கொண்ட அரசகுமாரியையும் மிகச் சுகுமாரரான அரசகுமாரர்களை யும் கொடுவெங் காட்டிடை நடக்குமாறு விட்டுத் தான் தேரின்மீது ஏறிக் கொண்டு மீண்டுபோதல் செய்யத்தகாததாகித் தீவினையுள்ள செயலுமா மாதலால், குற்ற மற்றவனும் பழைய நண்பனும் பணியாளனுமாகிய நான் தகாத இத்தொழிலைச் செய்துவிட்டு இதனை எவ்வாறு தெரிவிப்பேனென்று சுமந்திரன் வருந்திக் கூறியவாறு. மாதரினடி மலரினும்மெல்லிபதாகக் கூறப் படுதலை, "அரிச்சுழமன்னத்தின் றூவியுமாத, ரடிக்குநொரிஞ்சிப்பழம்" என் றதனாலும் அறிக. வாருடைமுலை - அடையடுத்த சினையாகுபெயர். இனி, வாருடைமுலையென்பதற்கு - கச்சையுடையச்செய்கின்ற முலையென்னின், அன்மொழித்தொகைப்பன்மொழித்தொடராம். (கூ.க)

உக. வன்புலக் [1]கன்மன மதில்லில் [2]வஞ்சனே
னென்புலப் புறவுடைந்திரங்கு மன்னன்பா
லுன்புலக் குரியவெசா [3]லுணர்த்தக் [4]செல்கெனே
தென்புலக் [5]கோபகன் றாதிற் செல்கெனே.

(இ-ள்.) வன் புலம் கல் மனம்-வலியபுலனையும் கல்லைப்போன்ற மனத் தையுமுடைய, மதி இல்-நற்புத்தியில்லாத, வஞ்சனேன் - கொடிய யான், என்பு உலப்பு உற உடைந்து இரங்கும் மன்னன்பால் - உடம்புஅழியும்படி மனம்முறிந்துவருந்துகின்ற அரசனிடத்து, தென் புலம் கோமகன் தாதில் செல்கென்ஓ - தெற்குத்திக்குப்பாலகனாகிய இயமனது தூதுவன்போலச் செல்லக்கடவேனே? உன் புலக்கு உரிய சொல் உணர்த்த செல்கென்ஓ - உனது நல்லறிவிற்கேற்ற சொல்லைத் தெரிவிக்குமாறு செல்லக்கடவேனே?

நகரத்து மாந்தர்பலரும் உடன்சென்றிருத்தலால் எப்படியும் அவர்கள் அவ்விராகவகுமரனைத் திருப்பியழைத்துவருவரென்கிற ஓரெண்ணத்திறல் உயிரைச் சிறிதேதாங்கிக்கொண்டுள்ள மன்னவனிடத்திலே சொல்லுமாறு நீ காட்டிற்குச் செல்லும்பொழுது கூறுஞ் சொல்லே உணர்த்தச்செல்வே ளுரைல், என்னுடையசெல்லை யமதூதரதுவரவுபோலாகி அவ்வரசனது உயிர் மாய்வதற்குக் காரணமா மாதலால், அங்ஙனஞ்செல்லுதல் எனக்குத் தகுதியோ? என்று சுமந்திரன் வருந்திக் கூறுகின்ற னென்க. மனங் கரைந்து அழிந்திடாமல் மனத்திட்பத்தோடு இராமபிரானது பிரிவை உணர்த்தவேண்டியவகுை இருத்தல்பற்றி, சுமந்திரன்,'கன்மன மதியில் வஞ் சனேன்' என்று தன்னைப் பழித்துக்கூறுகின்றான்.யமன் தெற்குத்திக்கிற்குப் பாலக னுதலின், 'தென்புலக்கோமகன்' எனப்பட்டான். முதலடியில், புலம்-பொறிக்கு, இலக்கணை. புலன் - இங்குக் கொடுஞ்செய்தியைக் கூறவேண்டிய வாய் என்னலாம். என்பு - உடம்புக்கு, ஆகுபெயர். தூது - பண்பாகு பெயர். இச்செய்யுளில் திரிபுஎன்னுஞ் சொல்லணி காண்க: முதலெழுத்துத் தவிர இரண்டுமுதலியசிலஎழுத்துக்கள்ஒன்றியிருக்கப் பொருள்வேறுபடுவது, இவ்வணியின் இலக்கணம். பி-ம்:—[1]கன்மத்தின், கன்மகன். [2]நெஞ்சினேன். [3]உணர்த்தி. [4]செல்லும்யான். [5]கிழவன்றன். (நகூ)

உச. நாற்றிசை மாந்தரு நகர மாக்களுந்
தேற்றினர் [1]கொணர்வருன் சிறுவன் றன்னையென்
றூற்றின வரசனை யைய வெய்ய[2]வென்
[3]கூற்றுறழ் சொல்லிறற் கொலைசெய் வேன்கொலோ.

(இ - ள்.) 'ஐய - தலைவனே! நால் திசை மாந்தர்உம் - நான்குதிக்கிலு முள்ள மனிதரும், நகரம் மாக்கள்உம்-நகரத்திலுள்ள சனங்களும், உன் சிறு வன் தன்னை-உனதுபுதல்வனுகிய ஸ்ரீராமபிரானை, தேற்றினர் கொணர்வர் - (நீ நகரத்திற்குமீண்டுவருதலாற் குற்றமில்லையென்று) சமாதானஞ்சொல்லி அழைத்துவருவர்,' என்று—, ஆற்றின அரசனை - (உயிர் நீங்காவண்ணம் முன்பு)சாந்தப்படுத்திய தசரதமன்னவனை,(இப்போது),வெய்ய கூற்று உறழ் என் சொல்லிறல் - (இராமபிரான்நகரத்திற்குத் திரும்பாமற் காட்டிற்கே சென்றிட்டான் என்ற) கொடியயமனையொத்த எனதுகடுஞ்சொல்லால், கொலைசெய்வேன் கொல் ஓ - உயிர் நீங்குமாறு செய்யக்கடவேனே? (எ-று.)

கீழ்ச்செய்யுளின் கருத்தையே கவி இச்செய்யுளிறல் வேறுவகையாக விரித்துக் கூறியுள்ளார். தசரதமன்னவன் உயிர்நீங்காதிருக்க வேணுமென்று முன்னர்ச் சமாதானப்படுத்தின யானே இப்போது அதற்குமாறுக அவனுயிர் நீங்குமாறு கடுஞ்சொல்லைக் கூறுவது தகுதியோ என்று சுமந்திரன் கூறுகின் றன னென்க; இதனால், சுமந்திரன் தசரதனைச் சமாதானப்படுத்தினனென் பதும் பெறப்படும். இனி,அருகிலிருப்பவர் சமாதானப்படுத்துவரெனக்கருதிக் கூறினனுமாம். இராமபிரான் ஒருகால் மீண்டுவரக்கூடுமென்கிற எண்ணத்தி னால் உயிரைப் போக்காது வைத்திருக்கும் மன்னர்பிரான் 'எவ்வளவு சொல்லி

யும் இராமபிரான் கேளாமல் நகரத்துமாந்தர்முதலியோரையும் வஞ்சித்துக் காட்டிற்குச்சென்றான்' என்ற கடுஞ்சொல்லைக் கேட்டமாத்திரத்தில் இறந்து படுவது திண்ணமென்பான் 'கொலைசெய்வேன் கொலோ' என்கிறான். நாற்றிசை மாந்தர் என்றது - கோசலநாட்டிலுள்ள மாந்தரை யென்னலாம். பி-ம்:—[1]உணர்விலை ரென்சிறுவன் மீள்வனென்று. [2]எம். [3]கூற்றன. (நிகூக)

உரு. அங்கிமேல் வேள்விசெய் [1]தரிதிற் பெற்றநின்
சிங்கமே றகன்றதென் [2]றுணர்த்தச் [3]செல்கையை
வெங்கள் [4]கோ மகற்கினி [5]யென்னிற் [6]கேகய
னங்கைமே கடைமுறை நல்லள் போலுமால்.

(இ - ள்.) 'அங்கிமேல் வேள்வி செய்து - அக்கினியிலே (செய்தற்குரிய அசுவமேதயாகம் புத்திரகாமேட்டி முதலிய) யாகங்களைச் செய்து, அரிதில் பெற்ற - அருமையாகப் பெற்ற, நின் சிங்கம் ஏறு - உனது ஆண்சிங்கம் போன்ற இராமபிரான், அகன்றது-(காட்டிற்குச்)சென்றிட்டான்,' என்று—, உணர்த்த - அறிவிக்குமாறு, செல்கென்ஓ - செல்லக்கடவேனோ? அங்ஙன் சோமகற்கு அறிவிக்கச்சென்றால்), இனி—, எங்கள் கோமகற்கு - எங்களது அரசனாகிய தசரதசக்கரவர்த்திக்கு, என்னில் - (இராமபிரான் காட்டிற்குச் சென்றிட்ட கடுஞ்செய்தியைத் தெரிவிக்கும்) என்னைக்காட்டிலும், கடைமுறை - இறுதியாகப்பார்க்குமிடத்து, கேகயன் நங்கைஎ - கேகயவரசனது புதல்வியாகிய கைகேயியே, நல்லள் போலும் - நல்லவள் போலும்; (எ - று.) —ஆல் - ஈற்றசை; தேற்றமுமாம்.

இராமபிரான் காட்டிற்குச்செல்லவேணுமென்று வரம்வேண்டித் தயரத மன்னவனுக்குப் பெருந்துயரத்தைக் கைகேயி விளைத்தாளாயினும், உன் பிரிவைக்கூறி அவ்வரசர்பிரானது உயிரையே போமாறு செய்யும் என்னைநோ ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து அக்கைகேயியே நல்லவள்போலத் தோன்றுவா ளென்று சுமந்திரன் இரங்கிக்கூறின னென்க. பி-ம்:—[1]அரிதுநீபெற்ற. [2]உரைக்க. [3]செல்வேனோ. [4]கோமன்னவற்கு. [5]எண்ணில். [6]கைகயன். (நிகூஉ)

உசு.—சுமந்திரன் இராமபிரானது தூளைப்பற்றிக்கொண்டு பெருந்துயரோடு பூமியிற்புரண்டு பலகூறுதல்.

முடிவுற [1]வின்ன [2]மொழிந்த பின்னரு
மடியுற[3]த் தழுவின னழுங்கு பேரரா
விடியுறத் [4]துவருவ தென்னு மின்னலன்
படியுறப் புரண்டனன் [5]பலவும் [6]பன்னினான்.

(இ - ள்.) முடிவு உற-(தன் கருத்து இராமபிரானை மீட்டு அழைத்துச் செல்வதே என்று) முடிவாகத் தெரியும்படி, இன்ன-இப்படிப்பட்ட சொற்களை, மொழிந்த பின்னர்உம் - சொல்லியபின்பும், (இராமபிரான் நகரத்துக்குத் திரும்புவதென்ற எண்ணமில்லாதவ னென்றுதேர்ந்தியதனால்), இடி

உற - இடியோசை கேட்டதனல், அழுங்கு - (அச்சத்தினல்) மனம்வருந்துந் தன்மையுள்ள, பேர் அரா - பெருஞ்சர்ப்பமானது, துவளுவது - துடித்துச் சோர்கின்றது, என்னும் - என்றுசொல்லத்தக்க, இன்னலன் - துன்பத்தை யுடையவனுய், அடி உற தழுவினன் - (அவ்விராமபிரானது) பாதங்களைச் செவ்வனே பற்றிக்கொண்டு, படி உற புரண்டனன்-பூமியிலே(தனது உடம்பு) படுமாறு புரண்டவனுய், பல உம் பன்னினுன் - (அவ்விராமபிரான்நகரத்திற் குமீளுமாறு) பலவார்த்தைகளையுஞ் சொன்னுன்; (எ - று.)

இராமபிரான் தான் பதினன்குவருடங்கள் வனவாசஞ்செய்யாது நகரத் திற்குமீள்வதில்லை யென்ற விடாப்பிடியுடனே நிற்கின்ற னென்பதை யறிந் தவுடன், இடியோசையால் நடுங்கும் பெருஞ்சருப்பம்போல் மனம் நடுங்கிய சுமந்திரன் பின்னும் இப்பிரானது பாதங்களைத் தழுவிக்கொண்டு பூமியில் விழுந்து புரண்டு பலகூறின னென்பதாம்.பி-ம்:—[1]இன்னணம். [2]மொழிந்து. [3]வணங்கிநின்றழுங்கும்பை, வணங்கிநின்றழுங்கிப்பை. [4]துவள்வதேயன்ன. [5]பின்னும், இன்ன. [6]பன்னுவான். (நிகுஉ)

உஎ.—அச்சுமந்திரனைக் கைகளாலெடுத்துக் கண்ணீரைப் போக்கி இராமபிரான் சில கூறுதல்.

தடக்கையா லெடுத்தவற் றழுவிக் [1]கண்ணநீர்
துடைத்துவே றிருத்தி [2]மற் றிணைய சொல்லினை
னடக்கு [3]மைம் பொறியொடு கரணத் தப்புறங்
கடக்கும் [4]வா லுணர்வினுக் [5]கணுகுங் காட்சியான்.

(இ - ள்.) அடக்கும் ஐம் பொறியொடு - (தத்தம் புலன்களிற்செல்ல வொட்டாது) தடுக்கவேண்டிய ஐம்பொறியுணர்வோடு, கரணத்து-மனத்துக் கும், அ புறம் கடக்கும் - அப்புறப்பட்டு நிற்பவனுய், வால் உணர்வினுக்கு - (தத்துவஞானிகளின்) பரிசுத்தமாகிய உண்மையறிவுக்கு, அணுகும் - புலனு கின்ற, காட்சியான் - தோற்றத்தையுடையவனுகிய ஸ்ரீராமபிரான்,—அவன்- அந்தச்சுமந்திரனை, தட கையால் எடுத்து தழுவி-(தனது) பெரிய கைகளினு லெடுத்துக் கட்டியணைத்து, கண்ணநீர் துடைத்து - கண்களிலிருந்து (வெள் ளம்போற்) பெருகுகின்ற நீரைத் துடைத்து, வேறுஇருத்தி - வேறுகஇருக்க வைத்து, இனைய - இவ்வாறுன சொற்களை, சொல்லினன்—; (எ - று.)— சொல்லியதை அடுத்த பதினெருஞ் செய்யுள்களிற் காண்க. மற்று-வினைமாற்று.

ஐம்பொறிகட்கும் மனத்துக்கும் எட்டாது நிற்பவனுய் யோகிகளின் மெய்யுணர்வுக்கே புலப்படுபவனுகிய கடவுள் தான் கொண்ட மானுட வேடத்திற்கு ஏற்ப யாவரோடுங்கலந்து நட்புரிமைபூண்டு ஒழுகுகின்ற தன் மையிற் கவி ஈடுபட்டமை, இந்தச் செய்யுளில் தோன்றும். "புலனைந்துக்குஞ் சொலப்படா வுணர்வின் மூர்த்தி" என்ற நம்மாழ்வார் பாசுரத்தின் பகுதி, இந்தச்செய்யுளின் பின்னிரண்டடிகளிற் கருதத்தக்கது. பலரோடு மிருக்கை

யில் ஒருவர் தாம் சொல்லுவதைக் கேளாவிடின் அவரைத் தனியே யழைத்துக் கொண்டுபோய் இரகசியமாகவுரைத்து அவர் மனத்தைத் திருப்புகின்ற உலகவியற்கைக்கு ஏற்ப, இராமபிரானும் சீதாலட்சுமணர்களின் முன்னிலையினின்றும் அந்தச் சுமந்திரனைச் சிறிது அப்பால் இட்டுக்கொண்டுபோய்'தான் நகரத்திற்கு மீள்வது தகுதியன்று' என்பதையே அவன்கருத்திற் படுமாறு காரணங்காட்டி இரகசியமாக ஓதி ஒருவாறு அவனை யிசைவிக்கலாயினனென்க. வனவாசஞ்செய்வது இலட்சுமணனுக்குச் சம்மதமன்று ஆதலால், அவனும் இச்சுமந்திரனேடு இப்போது சேர்ந்துகொள்வனே என்ற கருத்தால் தனியே இட்டுக்கொண்டுபோய்க் கூறினனெனினுமாம். பி-ம்:—[1]கண்ணினீர். [2]வைத்து. [3]மாண். [4]மன்னுணர்விலுக்கு. [5]உணரும். (நிசுசு)

உஅ.—இதுமுதல்ஐந்துகவிகள் - தான் நகர்க்கு மீண்டுவருவதுதகுதியன்று என்பதற்குரிய காரணங்களைச் சுமந்திரனுக்கு இராமன் காட்டுதலைத் தெரிவிக்கும்.

பிறத்த[1]லென் றுற்றபின் [2]பெறுவ யாவையுந்
திறத்துளி யுணர்வதோர் செம்மை யுள்ளத்தாய்
புறத்துறு பெருப்பழி [3]பொதுவின் [4]றெய்துலு
[5]மறத்திறு மறத்தியோ வவல முண்டெனை.

இதுமுதற் பதினைருகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) பிறத்தல் என்று உற்ற பின்-பிறவியென்பது உண்டானபிறகு, பெறுவ - (அந்தப்பிறவியிலே) நேரக்கூடியனவாகிய, யாவை உம் - (இன்பம் துன்பம் என்ற)எல்லாவற்றையும், திறத்து-முறைமையால், உளி-ஆராய்ந்து, உணர்வது - உணரவல்லதாகிய, ஓர் செம்மை உள்ளத்தாய்-ஒப்பற்ற நேர்மையான மனமுடையவனே! அவலம் உண்டு எனை - துன்பம் உண்டாகின்றதே யென்று கருதி, புறத்து உறு பெரும் பழி பொது இன்று எய்தல்உம் - வெளியே (யாவராலும் தூற்றிக்கூறுமாறு) பொருந்துவதாகிய பெரியபழியானது சாமானியமாகவன்றி [விசேடமாக] நேர்தலையும், அறம் திறம் (உம்)-தருமத்தின் கூறுபாட்டையும், மறத்தியோ - மறக்கக்கடவையோ? (எ - று.)

இப்புவியிலே பிறப்பென்பது உண்டானபோது அவசியம் அனுபவிக்கவேண்டிய நன்மையைப்போலவே தீவினைப்பயனையும் நுகர்ந்தே தீரவேண்டுமென்கின்ற முறைமையை ஆராய்ந்தறிந்த விவேகத்தையுடைய நீ, நான் கானகத்திற்குச் செல்லுவது உன்மனத்திற்குத் துயரத்தைத் தருவதாகுமென்கிற ஒருகாரணத்தை மாத்திரங்கொண்டு மீளவேணுமென்று கருதுகின்றாயே; அங்ஙனம் நான் செய்வேனையின், 'தருமத்தைத் தவறுதுநடத்துபவன்போல வேடம்பூண்ட இராமன் தேவனையைப் போற் கொண்டு நடக்கவேண்டிய பிதாவின் சொல்லைத் தட்டினன்'என்ற பெரும்பழி எனக்கு நேராதோ? அன்றியும், அது அறத்திற்கு விரோதமான செயலென்பதையும் மறந்துவிட்டா

[illegible] இராமபிரா னெனக்க. முதலிரண்டடிகள் - துன்பம் நேர் வதைக்குறித்து மனம் மாறுபடத்தகாதவன் நீ என்ற கருத்தை உட்கொண் டிருத்தலால், **கருத்துடையடைகொளியணியாம்.** உளி - உள்ளியென்பதன் தொகுத்தல்: இனி,"இயல்புளிக்கோலோச்சும் மன்னவன்" என்ற விடத்திற் போல, 'உளி' என்பது - மூன்றனுருபின் பொருளில் வந்தது எனக் கொ ள்ளலு மொன்று. இன்று - இன்றி யென்னும் வினையெச்சம் தொடர்பினுள் உகரமாய் வந்தது: "இன்றியென்னும் வினையெஞ் சிறுதி, நின்ற விகர முகர மாத, லொன்றியன் மருங்கிற்செய்யுளு ளுரித்தே" என்பது தொல்காப்பியம். [5]அறத்தினை என்ற பாடத்திற்கு - இராமனைக்கானகத்தில் விட்டுவந்தா னென் னும் பழிமொழி என்னைப்பற்றி யுண்டாகப் போகின்றதென்று அறத்தினை மறக்கலாமோ ? எனப் பொருள் காண்க. **பி-பி:**—[1]ஒன்று. [2]பெறுவதியாவை யும். [3]பொதுவென்று, பொதுவின். [4]எய்தவும்.

(நெடு நல்)

உகூ. முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின் றுறுதியைப் பயக்கும் பேரற
மின்பம்வந் துறுமெனி [1]னினிய தாயிடைத்
துன்பம்வந் துறுமெனிற் [2]றுறக்க லாகுமோ.

(இ -) பேர் அறம் - சிறந்ததருமம்,—முன்பு - முதலில், இசைநிறீஇ நின்று - (தன்னை மேற்கொண்டுநடப்பவனுக்கு இம்மையிற்) புகழை நிலை பெறுத்திநின்று,—முடிவு முற்றிய பின்புஉம் - இறுதிக்காலத்தால் (உயிர்) உடம்பைவிட்டு நீங்கியபின்பும், நின்று - (தான்) அழியாதுநின்று, உறு தியை பயக்கும் - (தன்னையனுட்டித்தவர்க்கு) நல்லுலகத்தைத் தரும் ; (இப் படிப்பட்டபேரறத்தை மேற்கொண்டு நடக்கும்போது), இன்பம் வந்து உறும் எனின் - (அதனால் ஒருவனுக்கு) இன்பம் வந்து கூடுமாயின், இனியது - நன்மையாகத்தோற்றுகின்றது; அ இடை--அப்படிப்பட்ட பேரறத்தை மேற் கொண்டு நடக்குமிடத்தில்தானே, துன்பம் வந்து உறும் எனின் - மனவருத் தமானது வந்து மிகுதியாகத்தோன்றுமாயின், துறக்கல் ஆகும்ஓ- துன்பம் வருகின்றது என்ற காரணத்தால் தான் மேற்கொண்ட அப்பேரறத்தைக்) கைவிடுதல் தகுமோ? (எ - று.)

கீழ்ச்செய்யுளில் 'அறம் மறத்தியோ?' என்று சுமந்திரனுக்கு இடித்துக் கூறிய இராமபிரான், இதனால், அந்த அறத்தின் தன்மையைவெளிப்படுகின் றனனென்க. ஒருவன் அறத்தை அனுட்டித்தானாயின், அவனுக்கு அந்த அறமானது இவ்வுலகத்திற் புகழையுண்டாக்கி மறுமையிலும் நற்கதியைத் தரும். அப்படிப்பட்ட தருமத்தை மேற்கொண்டொழுகும்போது இன்பந் தோன்றுமாயின் எங்ஙனம் மனமகிழ்ந்து அதனை அனுட்டிக்கவிரும்புகின் றோமோ, அங்ஙனமே அதனை மேற்கொண்டொழுகும்போது துன்பம் நேரி னும் அனுட்டித்துத் தீரவேண்டுமே யன்றிக் கைவிடுதல்தகுதி யன்றென்று கூறியவாறு. "நன்றுங்காணல்லவாக்காண்பவ ரன்றுங்கா, லல்லற் படுவ

தெவ்ன்'' என்ற திருக்குறள் இங்குக் காணத்தக்கது. இச்செய்யுளில் முன்னிரண்டடிகளால் அறத்தினுல் விளையும் பயனை விளக்கி, பின்னிரண்டடிகளால் அதனை எஞ்ஞான்றும் மேற்கொண்டேநடக்கவேண்டு மென்று வற்புறுத்திக் கூறியவாறு. நிறீஇ - சொல்லிசையளபெடை. உறுதி - அடைதற்குரிய நல்லுலகு. ஆயிடை - சுட்டுநீண்டு யகரவுடம்படுமெய் பெற்றது.
பி-ம்:—[1]இயற்றியெல்லையில். [2]துறக்கற்பாலதோ. (நுசுகூ)

நூ0. நிறப்பெரும் படைக்கல [1]நிறத்தி [2]னேறுற
மறப்பயன் [3]விளக்குறும் வன்மை யன்றோ
[4]விறப்பினுந் திருவெலா மிழப்ப வெய்தினுந்
துறப்பில ரற[5]மெனல் சூர[6]ராவதே.

(இ - ள்.) சூரர் ஆவது - சூரர் என்று சொல்லுதற்குரிய வன்மையென்பது, - (பகைவனுல் எறியப்பட்டதான), நிறம் பெரும் படைக்கலம் - ஒளிபொருந்திய சிறந்த ஆயுதம், நிறத்தின் நேர் உற - மார்பிற்குநேராக வரவும், (சிறிதும்பின்வாங்காமல்), மறம் பயன் விளக்குறும் - வீரச்செயலே மேன்மேலும் நடத்துகின்ற, வன்மை - வல்லமை, அன்று—; (பின்னைஎது எனில்), இறப்பின்இம் - சாவுநேர்வதாயினும், திரு எலாம் இழப்ப எய்தின் உம்-செல்வத்தையெல்லாம் இழந்துவிடுமாறு நேர்ந்தாலும், அறம் துறப்பிலர் எனல்-தருமத்தைக்கைவிடாதவர்என்று சொல்லப்படுமாறிருத்தலே; (எ-று.)

கீழ் அறத்தின்சிறப்பை யெடுத்துக்காட்டி அதனைக் கைவிடலாகாது என்று வற்புறுத்திய இராமபிரான், இதனால், அறத்தைக்கைவிடாதிருத்தலே வீரர்க்குரிய மறக்குண மெனக் கூறுகின்ரு னென்க. பகைவனெறிந்த படைக்கலம் தன்மார்பில் நேரேவந்து பொத்தினாலும் அதற்குப் பின்வாங்காது பொருவதாகிய வீரகுணத்தை வீரகுணம்அன்று என்று மறுத்து, எவ்வகைப்பட்ட இடர்நேர்ந்தாலும் அறத்தைக் கைவிடாத மனத்திண்மையே வீரகுணமென்று கூறியவாறு: **அவந்தியணி.** பெருஞ்செல்வரான மானிகள் போகூழால் தம் செல்வமெல்லாங் கெட்டவிடத்து உயிரையும் விடக்கருதுதலும் உளதாதலின் உயிரிழப்பதோடு செல்வமிழத்தலையுங் கூறினர்.
பி - ம்:—[1]நிறுத்தி. [2]எய்தவும். [3]விளக்குமத்தன்மையென்பரே, துறப்பன வளவையன்றரோ. [4]இறப்பெருந். [5]எனும். [6]ஆதலே. (நுசுஎ)

நூக கான்புறஞ் [1]சேறலி லருமை [2]காண்டலால்
வான்பிறங் கியபுகழ் மன்னர் தொல்குலம்
யான்பிறந் தறத்தினின் [3]றிழுக்கிற் [4]றென்னவோ
வூன்[5]றிறந் துயிர்குடித் [6]தழலும் வேலினுய்.

(இ-ள்.) ஊன் திறந்து உயிர் குடித்து உழலும் வேலினுய் - உடலைப்பிளந்து (அவ்வுடலிற்குள் புகுந்துகொண்டிருக்கும்) உயிரைப்போகுமாறு செய்துகொண்டு (போர்க்களத்திலே) நிரியவல்ல வேலாயுதத்தையுடைய

வீரனே! கான் புறம் சேறலில் - காட்டிற் செல்வதில், அருமை காண்டலால்-வருத்தத்தை யாலோசித்து (நான் அங்ஙனம் காட்டிற் செல்வதைவிட்டு நகர்க்கு)த் திரும்புவேனுயின், வான் பிறங்கிய புகழ் மன்னர் தொல் குலம்-மேலுலகத்திலும் விளங்கிய புகழையுடையதாகி வைவசுவதமனுசக்கரவர்த்தி தொடங்கிவந்த பழைய இந்தச்சூரியகுலம், யான் பிறந்து அறத்தினின்று இழுக்கிற்று என்னை - யான் பிறந்ததனுல் தருமத்தினின்று தவறியதென்று சொல்லுமாறு விடவோ?[அங்ஙனம் பழிச்சொல் தோன்றுமாறுவிடுவதுதகுதியன்று]; (எ - று.)

இந்தச்சூரியகுலம் இதுவரையிலும் அறநெறிபிழையாமல் நடந்துவந்ததாதலால், இதிற் பிறந்த நான் தந்தையின் வசனத்தின்படி காட்டிற்செல்லாமல் நகரத்திலேயே யிருப்பேனுயின், அதனுல் நான் தந்தைசொல்லைத் தவருது செய்கை யென்கின்ற அறத்தைத் தவறியவ னுவதோடு என்தந்தையையும் உண்மைதவறியவனென்ற பேருக்குஉள்ளாக்கவும் வேண்டிவருமாதலால், இங்ஙனம் யானெருவன் பிறந்ததனுல் இருவருக்குமுள்ள நீங்காப்பழியை உலகத்தவர் தூற்றுமாறு செய்வது தகுதியோ? சுத்தவீரனுகிய நீ மனத்திட்பங்கொண்டு என்னை அறத்தையநுஷ்டிக்குமாறு தூண்டவேண்டுவதாயிருக்க, அதற்குமாருக நடக்கச் சொல்லுவது உனக்குத்தான் தகுதியோ?என்று இராமபிரான் இதனுற் சுமந்திரனதுகொள்கையைக் கண்டித்துக்கூறுகின்றனனென்க.கீழ்ச்செய்யுளில் 'வீரகுணமென்பது எவ்வளவுவருத்தம் நேருவதாயினும் அறத்தைத் துறவாமையே' என்றுகட்டுரைத்த இராமபிரான், இங்கு 'ஊன்துறந்துயிர்குடித்துழலும் வேலினுய்' என்று சுமந்திரனைவிளித்தது - வீரனுகிய நீ வனவர்சம் பெருந்துன்பம் விளைத்தலால் அதனை யான் நீங்கவேனுமென்று கருதுவது, உன் வீரகுணத்துக்குச் சேராது என்னுங் கருத்தைக் குறிப்பித்தலால், கருத்துடையடைகொளியணியாம். "வான்றேய்குடி"என்றுற்போல, 'வான் பிறங்கியபுகழ்...குலம்' என்றுர். புகழை மன்னர்க்கு அடைமொழியாக்கினுமாம். உயிர்குடித்துழலும் வேல் - குடித்தற்குரியதல்லாததைக் குடித்தற்குரியதாகக்கூறியமரபுவழுவமைதி: இதனை "உண்டற்குரியவல்லாப்பொருளை, யுண்டனபோலக்கூறலுமரபே"என்ற தொல்காப்பியத்துப் பொருளியற் சூத்திரத்தில் உம்மிஞல் அமைக்க. பிறந்து=பிறக்க: எச்சத்திரிபு. பி - ம்:— [1]சேறலின். [2]காண்டியால். [3]இழுக்குற்று. [4]என்பவோ. [5]துறந்து, பிறந்து. [6]ஒளிறும், ஊறும். (நகூஅ)

நஉ. வினைக்கரு [1]மெய்ம்மையன் [2]வனத்துள் விட்டனன்
[3]மனைக்கரும் புதல்வனை யென்றன் மன்னவன்
றனைக்கருந் தவ[4]மது தலைக்கொண் [5]டேகுத
லெனைக்கருந் தவமிதற் கிரங்க லெந்தைதீ.

(இ-ள்.) :வினைக்கு அரு.மெய்ம்மையன்-(ஒழுக்கத்தால்) நடத்திக்காட்டுவதற்கு அருமையாகிய சத்தியத்தையுடைய தசரதமன்னவன், மனைக்கு - வீட்டினின்று, அரு புதல்வனை - (நோற்று) அருமையாகப் பெற்ற (தன்)

புத்திரனை, வனத்துள் விட்டனன் - காட்டிற் செல்லவிட்டான்,' என்றல் - என்று (உலகத்தவர்) புகழ்ந்து கூறுமாறுநிகழ்த்துவது,—மன்னவன் தனக்கு அரு தவம் - அந்தத் தசரதசக்கரவர்த்திக்கு அருமையான தவமாகும்; அது தலைக்கொண்டு எகுதல் - அந்தத் தசரதமன்னவனது சொல்லைத் தலையாலேற்று(க் காட்டிற்கு)ச் செல்லுதல், எனக்கு அரு தவம் - எனக்கு(ச் செய்தற்கு) அரிய தவமாகும்; (ஆதலால்), எந்தை - எனது தந்தைபோன்றவனே! நீ—, இதற்கு - (யான் காட்டிற்குச்செல்லுகின்ற) இச்செயற்கு, இரங்கல் - மனம் வருந்தாதே; (எ - று.)

அறந்தவறுதல் தகுதியன்று என்பதை வற்புறுத்திக்காட்டிய இராமபிரான், இதனால், 'யான் வனஞ்செல்வது எனக்கும் என்தந்தைக்கும் நன்மை பயக்குமாதலால், இவ்வாறு இருவர்க்கும் நன்மைதருஞ்செயலை யான் மேற்கொள்ளும்போது எம்மிடத்து அன்பையுடைய நீ அதற்கு மாறாக இரங்குதல் தகாது' என்று சுமந்திரனைத் தேற்றுகின்றனனென்க.''புறந்தூய்மை நீரானமையுமகந்தூய்மை, வாய்மையாற்காணப்படும்'' என்றவாறு தவத்திற்குஇன்றியமையாததான(மனத்தூய்மையை வாய்மையே விளக்கு மாதலாலும்,''ஸத்யமௌளசாத் பரந்தபः...நடூதோநடவிஷ்யதி [ஸத்யம் மௌளசம் என்ற இவற்றைக்காட்டிலும் சிறந்த தவம் முன்னும்இல்லை, பின்னும்இல்லை]'' என்பவாதலாலும், மன்னவனுக்கு வாய்மை தவறாமலிருப்பது தவமாமாறு காண்க.தெய்வத்தின் அருளை நாடுதலே தவம்புரிதலின் நோக்கமாதலாலும், பிதாவையே தெய்வமாக வேதமே விதித்தலாலும், தந்தைசொல்லைத் தலைமேற்கொண்டு நடப்பது மகனுக்குத் தவமாமென்க.நல்லது செய்யும்போது இரங்குவது தகுதியன் றென்க.சத்தியமென்பதை மேற்கொண்டுநடத்துமிடத்து மிகவும்வருத்தப்பட்டு நடத்தவேண்டுவதாயிருத்தலின் 'வினைக்கரு மெய்ம்மை' என்றான். மெய்ம்மையன்-சத்தியசந்தன். பி-ம்:—[1]மெய்ம்மையின்,மென்மையன். [2]வனத்து. [3]மனக்கு. [4]இது. [5]எகலே.

(நிசுகூ)

நக.—இதுமுதல் ஆறுகவிகள் - இராமன் தன் தந்தைமுதலியோரிடஞ் சொல்லுமாறு சுமந்திரனிடத்துக் கூறுவதைத் தெரிவிக்கும்.

[1]முந்தினை முனிவனை [2]யிறைஞ்சி முற்றுமென்
வந்தனை [3]முதலிய மாற்றங் [4]கூறினை
[5]யெந்தையை யவனெடு மெய்தி [6]யீண்டெனச்
[7]சிந்தனை யுணர்த்துதி யென்று [8]செப்புவாய்.

(இ - ள்.) முனிவனை - வசிட்டனை, முந்தினை இறைஞ்சி - முற்பட்டுச் சென்று வணங்கி,என் வந்தனை முதலிய மாற்றம் முற்றும் கூறினை-என்னுடைய வணக்கம்முதலிய சொற்களை(ஒன்றுவிடாமல்)முழுதுஞ் சொல்லி, அவனெடுஉம் - அந்தவசிட்டமுனிவனுடனே, எந்தையை ஈண்டென எய்தி-என் தந்தையை விரைவாக அடைந்து, 'சிந்தனை உணர்த்துதி-என்கருத்தை (அவ் வரசனிடம்) தெரிவிப்பாய்,' என்று-, செப்புவாய் - சொல்லுவாய்; (எ - று.)

இராமன் மீண்டுவராது காட்டுக்குச் சென்றுனென்ற செய்தியை மன்ன வனுபிர்போமாறு சொல்லவல்லேனல்லேனென்று பலபடியாகச் சுமந்திரன் கீழ்க்கூறியதனால், முனிவன்மூலமாகத் தன் சிந்தனையை மன்னவனிடத்து உணர்த்துமாறு அவ்விராமபிரான் இதனைற் கூறுகின்றன னென்க. முந்தினை, கூறினை - முற்றெச்சங்கள். [3]நுதலியமாற்றம் என்றபாடத்திற்கு - என்வந்த னையையும் (நான்) சொல்லிய சொல் எல்லாவற்றையுஞ் சொல்லி என்க. இது சிறக்கும். வந்தனை - வந்தஈனென்ற வடசொல்லின் விகாரம். தச ரதமன்னவன் என்பிரிவினால் மிகவும் வருந்துவ னுதலின், அது ஒருவாறு தீருமாறு அவ்வாசனிடத்து விரைந்துசென்று சிந்தனை தெரிவிக்க வேண்டு மென்பான், 'ஈண்டெனச் சிந்தனையுணர்த்துதி யென்று செப்புவாய்' என் ரூன். ஈண்டென - விரைவுகுறிக்கும் இடைச்சொல். [6]ஈண்டென சிந்தனை என்ற இயல்பான பாடத்திற்கு, ஈண்டு - இவ்வனவாசவிஷயத்தில், என - என்னுடைய, சிந்தனை - கருத்தையென்க. பி - பி:—[1]முந்திநம். [2]தொழுது, குறுகி. [4]கூறிப்பின். [5]எந்தைதாள். [6]ஈண்டவென், ஆண்டென்றன். [7]சிந்தையை. [8]செப்பினுன். (நுஎ0)

ருகச. முனிவனை யெம்பியை முறையி னின்றரும்
புனிதவே தியர்க்குமே லுறைபுத் தேளிர்க்கு
மினியன [1]விழைத்தியென் றியம்பி யெற்பிரி
தனிமையுந் தீர்த்தியென் [2]றுரைத்தி தன்மையால்.

(இ - ள்.) முனிவனை - வசிட்டமுனிவனைக்கொண்டு, 'முறையில் நின்று - நெறியில்நின்று, அரு புனித வேதியர்க்குஉம் - அருமைபாகப்பா ராட்டுவதற்குரிய பரிசுத்தரான வேதம்வல்ல பிராமணர்க்கும், மேல் உறை புத்தேளிர்க்குஉம் - மேலுலகத்தில்வாழ்கின்ற தேவர்கட்கும், இனியன இழைத்தி - நன்மையான செயல்களைச் செய்வாய்,' என்று—, 'எம்பியை இயம்பி-எனது தம்பியாகிய பரதனுக்குக் (கட்டுரை) கூறி, என் பிரி தனிமை உம்-என்னைப்பிரிந்து தனித்திருத்தலாலாகிய வருத்தத்தையும், தன்மையால்- (உன்னுடைய) நன்னடத்தையால், தீர்த்தி - தீர்ப்பாய்,' என்று உரைத்தி - என்றும் (என்வார்த்தையாகச்) சொல்வாய்; (எ - று.)

மன்னவனுக்குத் தன்செய்தியைப் பக்குவமாக உணர்த்துமாறுகூறிய இராமபிரான், இதனால், வேதியர்க்கு இனியன இழைத்தல் முதலியன செய்யுமாறும், மன்னவனது தனிமைத் துயரத்தைப் போக்கும்படியும் பரதனிடமும் அம்முனிவனைக்கொண்டு சொல்லுமாறு சுமந்திரனிடஞ் சொல்லுகின்றனனென்க. பணிபாளனைக்கொண்டு அரசகுமாரர்க்கு நன்மதி கூறுவித்தல் முறைமையன்றுதலாலும், வசிட்டன் குலகுருவாய் அவ்வப் போது ஏற்ற நன்மைகளைக் கூறி நல்வழிப்படுத்துதற்கு உரியவனுதலாலும், அவ்வசிட்டமுனிவனைக்கொண்டே பரதனுக்கும் செய்திசொல்லுமாறு இராம பிரான் கூறுகின்றன னென்க. வேதியர்க்கு இனியன - அவ்வப்போது வேதியர் வேண்டுகின்ற உதவிகள். புத்தேளிர்க்கு இனியன - தேவர்கட்கு

அரசர் செய்தற்குரிய நித்தியநைமித்திகவிழார்முதலியன. தனிமையைத்தீர்த்தல் - உரியசமயத்தில் என்னைப்போல இருந்து வேண்டியஉதவிகளைப்புரிதல் முதலியன. **பி-ம்:**—[1]இயற்றி, விளைத்தி. [2]உணர்த்திதன்மையாய். (நுஎக)

நடு. வெவ்விய தன்னையால் விளைந்த தீண்டொரு
கவ்வையென் றிறையுந்தன் கருத்தி [1]னேக்கல
னெவ்வரு ளென்வயின் [2]வைத்ததின் மெசாலா
லவ்வரு [3]ளவன்வாயி [4]னருளு கென்றியால்.

(இ-ள்.) 'ஈண்டு - இப்போது, வெவ்விய தன்னையால்-கொடிய தந்தையிலால், ஒரு கவ்வை - ஒருபழிப்பான காரியம், விளைந்தது - நேர்ந்திட்டது, என்று - என்பதை, இறையும் - சிறிதும், தன் கருத்தின் நோக்கலன் - தன் மனத்திற்கருதாதவனாகி,-என்வயின்வைத்தது எ அருள்-என்னிடம்வைத்தது எவ்வகையான அருளோ, அ அருள் - அவ்வகையான அருளை, இன்சொ. லால்-இன்சொல்லுடனே, அவன்வயின்-அவ்வரசனிடத்தும், அருளுக-செய்வாயாக,' என்றி - என்று (வசிட்டன் சொல்லாற்) சொல்வாயாக; (எ - று.)

எனது தந்தையிலால் இராமனுக்கு வன்வாசம்நேர்ந்ததென்று தன்மனத்து வெறுப்புக்கொள்ளாமல், என்னிடத்துக்கொண்டுள்ள அருளை அத்தசரதனிடத்தும் கொள்ளவேண்டுமென்று வசிட்டமுனிவனைக்கொண்டு பரதமன்னவற்குச் சொல்விக்கவேண்டுமென்று இராமபிரான் கூறுகின்றனனென்க. இனி, இச்செய்யுளுக்கு-வசிட்டமுனிவனைக்கொண்டு 'அரசனொருவன் புதல்வனைக் காட்டிற்குத் துரத்திவிட்டானென்று உலகத்திற் பழிச்சொல் நேர்ந்ததே'என்ற காரணத்திலால் கைகேயியின்மகனை பரதனிடத்து வெறுப்புக்கொள்ளாமல் இராமபிரானிடத்துப்போலவே அப்பரதனிடத்தும் கருணை கொண்டிருக்கவேண்டுமென்று அரசனிடம் சொல்லுமாறு இராமபிரான் செய்தி சொல்லியனுப்பியதாகக் கருத்து உரைப்பினுமாம். வெவ்வியது அன்னையால் என்று பிரித்து உரைப்பாருமுளர். **பி-ம்:**—[1]நோக்கலாது, ஓர்கலாது. [2]வைத்தவின்சொலால், வைத்ததன் சொலால். [3]அவ்வயின். [4]அருளி. (நுஎஉ)

நசு. வேண்டின னிவ்வர மென்று மேலவ
னீண்டரு [1]ளெம்பிபா னிறுவி யே[2]கினை
பூண்டமா தவமெனுங் கோயில் [3]புக்கென
தாண்டகை வேந்தினை யவல மாற்றிப்பின்.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) எகினை-(நீ இங்கிருந்துமீண்டு) சென்று, பூண்ட மாதவமெனும் - பெருந்தவஞ்செய்தலை மேற்கொண்டவனாகிய வசிட்டமுனிவனேடும், கோயில் புக்கு - அரண்மனையிற் போய், எனது ஆண்டகை வேந்தினை - என்னுடைய(தந்தையான) ஆண்மைக்குணமுள்ள தசரதசக்ரவர்த்தியை, அவலம் ஆற்றி - (என்னைப்பிரிதலால் அவன்கொண்ட) மனத்துயரத்தை (இன்சொற்களால்) தணிவித்து, பின் - பிறகு; இவரம் வேண்டினன் என்று

மேலவன் ஈண்டு அருள் எம்பிபால் நிறுவி - (என்னிடத்து வைத்துள்ள அருளை என் தம்பியினிடத்து வைக்கவேண்டும் என்ற) இந்தவரத்தைத் தர வேணுமென்று வேண்டிக்கொண்டேனென்று சொல்லி யாவர்க்குந்தலைவ னாகிய அத்தசரதசக்ரவர்த்திபின் நெருங்கிய அருளை என்தம்பியாகிய பரத னிடத்து நிற்குமாறு செய்து,—(எ - று.)—'தெருட்டுவாய்' என்று அடுத்த கவியோடு தொடரும்.

சுமந்திரனைத்தேற்றியபிறகு காட்டினின்று திரும்பி நாட்டையடைந்து செய்யவேண்டியதைக் கீழ் மூன்றுக்விகளாற் கூறிய இராமபிரான், இதனால், தொகுத்து அநுவாதமாகக் கூறி, அரசனிடத்து மேலுஞ்செய்யவேண்டியதைத் தெரிவிக்கின்றான். இங்ஙனம் விஷயம் விளங்குவதற்காக விரித்துக்கூறியதைத் தொகுத்து அநுவாதமாகக்கூறுவது, இயற்கையேயாம். அரசனென்பவன் திருமாலின் அம்சமாய் உலகத்தார்க்கெல்லாந் தலைவனுவ னாதலின், அவனை 'மேலவன்' என்றார்: "வையத்திறையென்றுவைக்கப் படும்" என்றார் திருவள்ளுவரும். ஆண்டகை - பண்புத்தொகை. ஆண் டனை வேந்தன் - வேற்றுமைத்தொகை: இருபெயரொட்டாகக்கொண்டு உரைப்பினுமாம். அவலம் மாற்றினைப் பிரிக்கவும் இடமுண்டு. பி-ம்:— [1]எம்பிரான். [2]பினைப். [3]புக்குநீ, புக்கினித. (நஎங)

ங-எ. ஏழிரண் டாண்டுநீத் [1]தீண்ட வந்துனைத்
தாழ்குவன் [2]றிருவடி தளர லீண்[3]டெனச்
சூழிவெங் கடகளிற் றரசற் சொல்லிப்பின்
வாழி:மா தவன்சொலான் மனந்தெ ருட்டுவாய்.

(இ - ள்.) பின்-பிறகு, 'ஏழ் இரண்டு ஆண்டு-பதினான்கு வருஷகாலத் தையும், நீத்து - (வெகுவிரைவிற்) கழித்து, ஈண்டு - இங்கே, ஈண்ட வந்து-திரும்பவந்து, உனை திருவடி தாழ்குவன்-(இராமபிரான்) உன் திருவடிகளை வணங்குவான்; தளரல்-மனம் வருந்தவேண்டா,' என - என்று, சூழி வெம் கடம் களிறு அரசன்-முகபடாத்தையுடைய கொடிய மதத்தையுடைய யானைச்சேனையைக்கொண்ட அரசனை, மாதவன் சொலால் சொல்லி - வசிட்டனுடைய சொல்லாற் சொல்லி, மனம் தெருட்டுவாய் - மனத்தைத் துயரத்தினின்று ஆற்றுவாய்; (எ - று.)

'இந்தப்பதினான்குவருடகாலமும் ஒருநிமிஷம்போற் கழிந்துவிடும்,மீண்டு வந்து உன் திருவடிகளில் இராமன் தண்டஞ்சமர்ப்பிப்பான்: ஆதலால், அவன்பிரிந்துசென்றானென்று வருந்தவேண்டா' என்று முனிவனைக்கொ ண்டு அரசனைத் தேற்றுமாறும் கூறுகின்றனன் இராமபிரானென்க. சிலநாள் தான் என்று தேற்றுமாறு 'ஏழிரண்டாண்டு' என்கின்றான். ஈண்ட-விரை வாக எனினுமாம். 'ஏழிரண்டாண்டுநீத்து உனை ஈண்டவந்து திருவடி தாழ்கு வன்: தளரல் ஈண்டு' என அரசற்குச் சொல்லிப் பின் மாதவன் சொல்லா லும் மனந்தெருட்டுவா யென உரை கூறுவாரு முளர். வாழி-அசை. பி-ம்:— [1]ஈண்டு. [2]திருவடித்தலத்தில். [3]எனை. (நஎச)

ங்கூ. முறைமையா லெற்பயந் தெடுத்த மூவர்க்குங்
[1]குறைவிலா வென்னெடு வணக்கங் கூறிப்பி
னிறைமகன் றுயர்துடைத் திருத்தி[2]மா டென்றுன்
மறைகளை [3]மறந்துபோய் வனத்துள் வைகுவான்.

(இ - ள்.) என் பயந்து எடுத்த மூவர்க்குமும் - என்னைப் பெற்றெடுத்த வர்களான கோசலை சுமித்திரை கைகேயி என்ற மூன்று தாய்மார்களிடத் தும், முறைமையால் குறைவு இலா என் நெடு வணக்கம் கூறி-முறைமையிற் பிறழாத என்னுடைய நீண்டவணக்கத்தைத் தெரிவித்து, பின்—, இறை மகன் துயர் துடைத்து - அரசன் (வருத்தப்படும்போது தக்கமொழியினாலும் உபசாரத்தினாலும் அவனுடைய) வருத்தத்தைப் போக்கி, மாடு-அவன்பக்கத் திலேயே, இருத்தி-இருப்பாய், என்றான்—; (யாவனெனில்),—மறைகளை மறைந்து போய் வனத்துள் வைகுவான் - வேதங்கட்குஎட்டாமல் மறைந் திருந்து [அப்பாற்பட்டிருந்து] (தான் எடுத்த மானிடவடிவிற்கு ஏற்பச்) சென்று காட்டுள் தங்கியிருப்பவனாகிய இராமன்; (எ - று.)

தசரதனிடஞ் சொல்லவேண்டியதைக் கீழ்தெரிவித்த இராமபிரான், இதனால், தனது அன்னைமாரிடத்துச் சொல்லவேண்டியதையும், பிறகு தான் வருமளவும் அந்தச்சுமந்திரன் செய்யவேண்டியதையும் தெரிவிக்கின்றன னென்க. மறைகளைக்கடந்தவன் பித்ருவசனபரிபாலனமென்ற ஒருதருமத் திற்குக் கட்டுப்பட்டுக் கானகஞ்செல்பவனைவதே! என்றும், மறைகளுக்கு எட் டாதிருந்தவன் மானுடனுகத்திருவவதரித்த இப்போதும் யாவருங்கண்டு களிக்கும்படி நாட்டிலேயிராமல் நாட்டார்கண்ணுக்குப் புலப்படாமல் ஞான வான்களாகிய மஹர்ஷிகள் கண்களுக்குப் புலனுகுமாறு வனத்திலேமறைந்து வாழுமாறு ஆவதே!என்றும் கவி கொண்ட ஈடுபாடு, ஈற்றடியில் தோன்றும். "அடக்குமைம்பொறியொடு கரணத்தப்புறங், கடக்கும் வாலுணர்வினுக்கு அணுகுங்காட்சியான்,*** இனையசொல்லினுன் (உஎ)" என்றுதொடங்கியகவி, "மறைகளைமறைந்துபோய் வனத்துள்வைகுவான்,...என்றான்" என்றுமுடி த்த நயம் காண்க. ஈற்றடி - முற்றுமோனை. நெடுவணக்கம் - தீர்க்கதண்டம். பி - யீ:—[1]குறையிலா. [2]ஆண்டு. [3]மறைத்துப்போய், மறந்துபோய். (நஎநு)

ங்கூ.—சுமந்திரன் இராமனை வணங்கிவிட்டுச் கானகியை நோக்கியது.

ஆள்வினை [1]யாண்மையிற் றிறம்ப லன்[2]றெனைத்
தாள்முதல் [3]வணங்கிய தனித்தின் டோள்வலா
[4]னூழ்வினை வருந்துயர் நிலையென் றுன்னுவான்
[5]வாள்விழி நோக்கினை வணங்கி நோக்கினான்.

(இ - ள்.) 'ஆள் வினை-பணியாளன் செய்யவேண்டிய செயல், ஆண்மை யின் திறம்பல் அன்று-(தலைவனுக்குக் கீழ்ப்படிதலாகிய) அடிமைத்தொழி னின்று மாறுபடுவது அன்று; (ஆகையால் பணியாளனுகிய நான் தலைவ னை

கிய இந்த இராமன் கூறியபடி நகர்க்குத் திரும்பிச்செல்வதே கடமை),' எனஎன்று (நீதியை ஆலோசித்து), (தான் இராமபிரான் உரைத்ததற்கு இணங்கியதையும் அநுமதிபெறுவதையும் அறிவிக்குமாறு), தாள்முதல் வணங்கிய-(அப்பிரானது) தாள்களிலே வணங்கின, தனி திண் தேர்வலான் - ஒப்பற்ற வலிய தேரைச் செலுத்திவந்த சாரதியாகிய சுமந்திரன், -'துயர் நிலை-துன்ப நிலையானது, ஊழ்வினை வரும் - ஊழ்வினையால் தோன்றும்,' என்று—, உன்னுவான் - எண்ணுபவனுய்,-வாள்விழி நோக்கியை - வாட்படைபோன்ற கண்களையுடைய சானகியை, வணங்கி—, நோக்கினன்—; (எ - று.)

சானகியை வணங்கிநோக்கினது-நகரத்திலேயிருக்கின்ற கௌசலை முதலியவர்கட்குச் சொல்லவேண்டிய செய்தி யுளதாயின் திரும்பிச்செல்கிற என்னிடத்துக் கூறுக என்ற குறிப்பினுல். தாள் முதல், முதல் - எழனுருபு. [4]ஊழ்வினை வசத்துயிர்நிலை என்றபாடத்திற்கு - 'இராமபிரானைப்பிரிந்து இருக்கவேண்டும் என்ற இப்போதும் என்னுயிர் உடம்பைவிட்டு நீங்கவில்லையே! இதற்குக்காரணம் இவ்வுலகத்து எத்தனைநாள் இருக்கவேண்டுமென்று விதியேற்பட்டிருக்கின்றதோ அத்தனை நாள் இருந்தேதீரவேண்டுமென்பதுவே' என்றுஉன்னினனென்க. வசத்து - வசத்தது என்பதன் விகாரம். [5]வாழ்வினைநோக்கியை என்ற பாடத்துக்கு - இலக்குமியின் கடாட்சமே ஒருவனது நல்வாழ்வுக்குக் காரணமாதலாலும், சீதை இலக்குமியின் அமிசமாவளாதலாலும், அந்தச்சீதையை இங்ஙனங்கூறினனென்க. பி ம்:— [1]ஆணையில். [2]எனத். [3]வணங்கியத். (நிஎசு)

சுo.—சீதை சுமந்திரனிடத்துச் செய்திகூறுதல்.

அன்னவள் கூறுவா ளரசர்க் கத்தையர்க்
கென்னுடை [1]வணக்கமுன் னியம்பி யானுடைப்
பொன்னிறப் பூவையுங் கிளியும் [2]போற்றுகென்
[3]றுன்னுமென் றங்கையர்க் [4]குணர்த்துவா யென்றுள்.

(இ - ள்.) அன்னவள்-அங்ஙனம் (சுமந்திரனால்) நோக்கப்பெற்ற சீதை, கூறுவாள் - (அச்சுமந்திரனிடம்) கூறுவாளாயுள்:—அரசர்க்கு - (எனதுமாமனாகிய) தசரதரிடத்தும், அத்தையர்க்கு-(எனது மாமிமார்களாகிய) கௌசலை முதலியவரிடத்தும், முன் - முதலில், என்னுடை வணக்கம் இயம்பி-என்னுடைய வணக்கத்தைச் சொல்லி, யானுடை-என்னுடைய, பொன் நிறம் பூவையும் கிளியும் - பொன்னின் தன்மையைக்கொண்ட [மிகவும் அருமையான] நாகணவாய்ப்புள்ளையும் கிளியையும், போற்றுக - பரிவோடுகாக்கவேண்டும், என்று—, உன்னும் - (என்னிடம்) அன்புள்ள, என் தங்கையர்க்கு - என் தங்கைமாரிடத்து, உணர்த்துவாய் - (யான் கூறியதாகத்) தெரிவிப்பாய், என்றுள்—; (எ - று.)

மகளிர்க்குத் தாம் வளர்க்கும் பறவைகளிடத்து அன்புமிகுதி யென்பது; இதனுல் விளங்கும். அத்தகைமைத்தனைப் பெண்பாலார் மணந்துகொள்

வது தமிழ்மக்கள் மரபென்பது, இங்குக் கவனிக்கத்தக்கது. கணவனுடைய தாயை அத்தையென்பது - இக்காலத்துவழக்கிலு முள்ளமை காண்க. தங்கையரென்றது - ஜநகனது புதல்வியாகிய ஊர்மிளையையும், ஜநகனது தம்பியான குசத்துவசனது புத்திரிகளாகிய மாண்டவி சுருதகீர்த்தி என்பவர்களையுமாகும். சீதைமுதலியோர் கூறியதாக முதனூலில் இல்லை. பொன்னிறம் என்பதைப் பூவைக்குமாத்திரம் கூட்டியுரைத் தலுமுண்டு. பூவை கிளிமுதலிய பறவைகளை மகளிர்வளர்த்தல், இயல்பு. பி-ம்:—[1]வணக்கமும். [2]போற்றுமென்று. [3]என்னுடை யெங்கையர்க்கு. [4]உணர்த்துவீர். (நுஎஎ)

சுக.—அதுகேட்டு, இராமபிரான் தேற்றவும்
சுமந்திரன் பொருமி விம்முதல்.

தேர்வலா னவ்வுரை கேட்டுத் தீங்[1]குறின்
[2]யார்வலா ருயிர்துறப் பெளி[1]தன் றேயெனைப்
போர்வலான் றடுக்கவும் பொருமி விம்மினன்
சோர்விலா [4]ளறிகிலாத் துயர்க்குச் சோர்கின்றான்.

(இ - ள்.) தேர்வலான்-தேர்ஓட்டுதலில்வல்லசாரதியாகியசுமந்திரன்,—அ உரை கேட்டு - அந்த(ச் சீதைசொன்ன) வார்த்தையைக் கேட்டு, சோர்வு இலாள் - (தான் காட்டிற்குச் செல்வதற்காகச் சிறிதும்) தளர்ச்சி கொள்ளாதவளாகிய சீதை, அறிகிலா - (இதுவரையிலும்) அறியாததான, துயர்க்கு - (இப்போது வனவாசத்தாற் படக்கூடிய) துன்பத்தைக் குறித்து, சோர்கின்றான் - மனம் வருந்துபவனாய்,— 'தீங்கு உறின்-(ஊழ்வினையால்) தீங்குநேருமாயின், யார் - எவர்கள், வலார்-(தீர்க்க)வல்லவர்கள்? உயிர் துறப்பு-உயிரை நீக்குதலென்பதும், எளிது அன்றுஎ - எளிதாக முடிவதன்றே; [விதித்தகாலத்து உயிர் போவதன்றி மற்றைக்காலத்து உயிர்போவதென்பதும் கூடாததாயிருக்கின்றது],' எறை - என்றுசொல்லி, போர்வலான் தடுக்கஉம் - மஹாவீரனாகிய இராமபிரான் (அழவேண்டா என்று) தடுத்துச்சொல்லவும், பொருமி விம்மினன் - (மனத்திற்குள்ளேயே முதலிற்) குமைந்து (பிறகு) வாய்விட்டுக் கதறினன்; (எ - று.)

தான் காட்டிற் புகுந்தால் நேரக்கூடிய வருத்தத்தைக் குறித்துச் சிறிதுங்கவலைகொள்ளாமல் தான் நாட்டில்விட்டுவந்த தன்னுடைய பூவை கிளிகளைக்குறித்துக் கவலைகொள்ளுகின்றாளே இச்சீதை! இது என்னபேதைமையென்று அவளுடைய பேதைமைக்குணத்திற்கு மனந்தளர்ந்து, பிறகு 'இவ்வளவு சுகுமாரியான சீதைக்கு வனவாசம்நேர்ந்ததே! இவ்வருத்தத்தைக் கண்டும் உயிரை வைத்துக்கொண்டிருக்கின்றேனே!!' என்று சுமந்திரன் புலம்பலாயினனென்க. இராமபிரானுடன் செல்வதற்குச் சிறிதும் மனவாட்டமின்றி மனமகிழ்ச்சியுடனே செல்லுகின்றா ளென்பார், அவளை, 'சோர்விலாள்' என்றார். பி-ம்:—[1]உறில், உறல், உற. [2]ஆர். [3]அன்றே, என்றே. [4]அறிவிலாத்துயர்க்கு, அறிவிலாததற்கு. (நுஎஅ)

சஉ.—இராமபிரானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சுமந்திரன் 'கூற வேண்டிய செய்தி யாது ?' என்று இலக்குமணனை வினவுதல்.

ஆறினன் போற்சிறி தவல மவ்வழி
[1]வேறிலா [2]வன்பிணன் விடை [3]தந் தீகெனை
வேறுசே வகற்றெழு திளைய மைந்தனைக்
கூறுவ தியாதென வினைய கூறினன்.

(இ - ள்.) வேறு இலா அன்பினன் - வேறுபடுதலில்லாத [என்றும் ஒரு வகையாயுள்ள] அன்பையுடையவனாகிய சுமந்திரன், அ வழி - அப்பொழுது, அவலம் சிறிது ஆறினன்போல் - (தான் கொண்ட) வருத்தம் சிறிது தணிந்த வன்போன்று, விடை தந்தீக எனை - 'விடைதருவாய்' என்றுசொல்லி (விடை பெற்றுக்கொண்டு), ஏறு சேவகன் தொழுது-மேன்மேற் பெருகுகின்ற வீரத் தன்மையையுடைய இராமபிரானைத் தொழுதுவிட்டு, இளைய மைந்தனை - இளையபெருமானைப்பார்த்து, கூறுவது யாது என-'சொல்லவேண்டிய செய்தி யென்ன?' என்று வினவ,—(அவ்விலக்குமணன்), இனைய - இவ்வார்த்தை களை, கூறினன்—; (எ - று.)—அவற்றை மேல் மூன்றுகவிகளிற் காண்க.

'ஆறினன் போல்' என்றமையால், இராமபிரான் தேற்றியமையால் ஆறினன்போலக் காணப்பட்டானேயன்றி உண்மையில் மனத்துயரம் ஆற வில்லை யென்க. தந்தீகனை - தொகுத்தல். பி - ம்:—[1]வேறிலான். [2]அன்பி னெய், வனப்பினெய். [3]தந்தீகென, தந்தேகனை. (ருஎக)

சங.—இதுவும் அடுத்தகவியும் - தூங்கம்: தசரதனைக்குறித்து இலக்குமணன் கூறிய நிட்டூரவார்த்தை.

[1]உரைசெய்தெங் கோமகற் [2]குதவிப் போக்கிதன்
தரை[3]செறி செல்வத்தைத் தவிர டற்றெரு
விரைசெறி குழலிமாட் டளித்த மெய்யனை
யரசனென் றின்னமொன் [4]றறையற் பாலதோ.

(இ - ள்.) எம் கோமகற்கு - எமதுதலைவனாகிய இராமபிரானுக்கு, உரை செய்து உதவி போக்கிய-'நீ தான் இதனை யாருக்கு உரிபவன்: இவ்விராச் சியத்தைப் பெற்றுக்கொள்க என்று) சொல்லிக்கொடுத்துவிட்ட, தரை செறி செல்வத்தை - பூமியோடு நிரம்பிய செல்வத்தை, தவிர - (அவ்விராமபிரான் ஆளாமல்) தவிரும்படி, மற்று - பின்னும், ஒரு விரை செறி குழலி மாட்டு அளித்த - நறுமணம்மிக்க கூந்தலையுடையவளான ஒரு பெண்ணுக்கு [கைகே யிக்கு]த் தந்திட்ட, மெய்யனை - சத்தியசந்தனான தசரதனை, அரசன் என்று-அரசனாக எண்ணி, இன்னம் - இன்னும், ஒன்று - ஒருசெய்தி, அறையல் - சொல்லுவது, பாலதுஓ - தகுதியையுடையதாகுமோ? (எ - று.)

இராமபிரானுக்கு இராச்சியத்தைக் கொடுப்பதாக வாக்களித்து அவ் வாக்குப்பிறழ்ந்து கைகேயிக்குக் கொடுத்தானே! அந்தத்தசரதமன்னவனை

ஒருபொருட்டாகக்கருதிச் செய்தியுஞ் சொல்லவேண்டுமோ? என்று, இலக்குமணன் செய்திசொல்லியனுப்புவதற்குந் தகாதவன் தசரதனென்று இதனைக் கூறுகின்றனனென்க. மெய்யனென்றது - பொய்யனென்றபடி. வாக்குக் கொடுத்துவிட்டுக் கொடுத்தவாக்கை நிறைவேற்றுமற்போவது மெய்யற்கு அழகு அல்லவாதலால், இலக்குமணன் இங்ஙனங் கூறுகின்றான். இராமபிரானுக்கு அரசுகொடுப்பதாக நிச்சயித்துக்கூறிய காலத்துக்கு முன்பே வேண்டும்போது இரண்டுவரம் தருவதாகக் கைகேயிக்குத் தசரதமன்னவன் வாக்குக்கொடுத்திருந்தபடியால், அந்தவாக்குத்தத்தம் இராமபிரானுக்குக்கொடுத்த வாக்கினும் முற்பட்டு இதனை விலக்கிவிடுதலால், தசரதன்மீது குற்றமில்லை யென்பர். இங்ஙனமாயினும், இராமபிரானிடத்து இலக்குமணன் மிக்க பட்சமுடையவனாதலால், தசரதன்செய்கை இவனுக்குக் குற்றமாகவே படுகின்றதென்க. ஓகாரம் - வினைவகையால், எதிர்மறைதழுவியது. **பி - ம்:—** [1]உரைசெயுங். [2]உறுதிபாக்கிய, உதவிபாதிய, உதவிபாக்கிய, உதவியோங்கிய. [3]கெழு. [4]உரைக்கலாவதோ, உணர்த்தலாகுமோ. (நிஅo)

சுசு. கானகம் பற்றி[1]நற் புதல்வன் காயுணைப்
போனகம் [2]பற்றிய [3]பொய்யில் [4]மன்னர்க்கிங்
[5]கூனகம் பற்றிய [6]வுயிர்கொ டின்னும்போய்
வானகம் பற்றிலா வலிமை கூறென்றான்.

(இ - ள்.) (ஆயினும் அவ்வரசனுக்குச் செய்திசொல்லவேண்டுமென்பாயாயின்), நல் புதல்வன் - (தனது) மூத்ததுமாரன் [இராமபிரான்], கானகம் பற்றி - காட்டையடைந்து, காய் உணை - (காட்டிற் கிடைக்கக்கூடிய) காயை உணவாகப் புசித்துக்கொண்டு நிற்க, (தான் நாட்டிலேயிருந்து), போனகம் பற்றிய - (நாட்டிற்கிடைக்கும்) அரசவுணவைப் புசித்துக்கொண்டிருக்கின்ற, பொய் இல் மன்னர்க்கு - பொய்ம்மையில்லாத [சத்தியசந்தரான] அரசனிடத்தில், இங்கு - இவ்வுலகில், ஊன் அகம் பற்றிய உயிர்கொடு-உடலிடத்துத்தங்கிய உயிரைக்கொண்டிருந்து, இன்னும் போய் வானகம் பற்றிலா-இன்னமும் இறந்துபோய் மேலுலகத்தையடையாத, வலிமை - (அவனுடைய) வலிமையை(ப்பாதுகாத்துக்கொள்ளுமாறு), கூறு - சொல்வாய், என்றான்—; (எ-று.)

தசரதனுக்கு யான் செய்திசொல்லவேண்டுவது அவசியமெனத் தோன்றினாற் சொல்லுகிறேன்; கேட்பாயாக; இராமபிரான் காட்டிற்சென்று அவ்விடத்திற்கிடைக்குங் காய்கிழங்குகளைப் புசித்துக்கொண்டிருக்கத் தான் இறந்திடாமல் நாட்டிலேயிருந்து அறுசுவையுணவுகளைப் புசித்தவண்ணம் சத்திய சந்தனென்று சொல்லிக்கொண்டு வலியவனுயிருப்பானை எனத் தசரதனிடம் கூறுவாயென்பதாம். இனி, இச்செப்புட்டு - 'காட்டிற்குத் தாதத்தினாலும், நாங்கள்இன்னும் உனக்கு மனத்திருத்தியுண்டாகும்படி இறந்துபோய் வானுலகஞ்சேராமல் உயிர்தாங்கி வலிமையோடு சஞ்சரிப்பவராகவே நிற்கின்றோம்' என்று தசரதனிடங்கூறுவாயாக என்று; இராமபிரானைக் காட்டிற்குச்செல்லு

மாறுசெய்ததுகுறித்துத் தசரதனிடத்துத் தான்கொண்டுள்ள மனவெறுப்புத் தோன்ற நிஷ்டூரமாகச் செய்திசொல்லியனுப்புகின்றனன் இலக்குமணனென்று கொள்ளவுமாம். இராமபிரானைக் காட்டிற்கு அனுப்புவதற்கேற்றிய பெருந்துயரத்தில் தசரதமன்னவன் மூழ்கிக்கிடந்தாலும் தானும் இராமனுடனே காட்டிற்கு அப்போதே சென்றால்; குலமுறையாய்வந்த இராச்சியம் அராஜகமாய்ப்போக அதனால்விளையும்பாவம் தன்னைச் சேருமாதலாலும், பரதனை வரவழைத்துப் பட்டங்கட்டிப் பிறகு இராமபிரானை யனுப்புவதற்குக் கைகேயி உடன்படாளாதலாலும் இராமபிரானுடன் தசரதன் கானகஞ்சென்றிலன்போலும். பி-ம்:—[1]இப். [2]பற்றுமப். [3]பொருவின். [4]மன்னவர்க்கு. [5]யான். [6]உயிர்கொண்டு, உயிரோடு. (நுஅக)

சரு.—இதுவும் இலக்குமணன் வார்த்தை: இலக்குமணர் பரதனுக்குச் செய்திசொல்லியனுப்புதல்.

மின்னுடன் பிறந்தவாட் [1]பரத [2]வேந்தற்கென்
மன்னுடன் [3]பிறந்திலன் மண்கொண் [4]டாள்கின்ற
[5]தன்னுடன் [3]பிறந்திலன் றம்பி[6]முன்னலெ
னென்னுடன் [7]பிறந்தயான் [8]வலியெ னென்றியால்.

(இ - ள்.) மின் உடன் பிறந்த வாள் பரத வேந்தற்கு-ஒளியுடன்கூடிய வாட்படையையுடைய பரதராசனிடத்தில், 'என் மன்னுடன் பிறந்திலன்-அரசளுகவேண்டிய எனது இராமபிரானுடன் பிறந்தேனுமல்லேன்; மண்கொண்டு ஆள்கின்ற தன்னுடன் பிறந்திலன் - (இராமபிரானுக்குரிய) பூமியை(த் தான் தாயின்மூலமாகக்கவர்ந்து) கொண்டு அரசாட்சிசெய்கின்ற அந்தப்பரதனுடனும் பிறந்திலேன்;தம்பி முன்னலன்-(சத்துருக்கனனைத்) தம்பியென்றுங் கொள்ளேன்; என்னுடன் பிறந்த யான்-(வேறொருவரோடுபிறவாமல்) என்னோடு நானே பிறந்த [தனித்துப்பிறந்த] நான், வலியென்-வலிமையில் யாதொருகுறையுமின்றியுள்ளேன்,' என்றி-என்று கூறுவாய்; (எ - று.)

இராச்சியத்தை உனக்குக்கொடுத்துவிட்டேனென்று முதலிற் சொல்லிருக்கவும் இராமபிரான் அதனைக் கைக்கொள்ளாமல் தந்தை காட்டிற்குச்செல்லச்சொன்னு னென்று கானகஞ் சென்றகாரணம்பற்றி அவ்விராமபிரானிடத்து உள்ள வெறுப்பினால் 'மன்னுடன் பிறந்திலன்' என்றும், மூத்தபற்குரிய இராச்சியத்தைத் தந்திரமாகக் கவர்ந்து ஆள்கின்றனென்றகாரணம்பற்றிப் பரதனிடத்துக்கொண்ட வெறுப்பினால் அவன்பெயரையுஞ் சொல்லவிருப்பில்லாமையால். 'மண்கொண்டாள்கின்ற தன்னுடன் பிறந்திலன்' என்றும், பரதனை எப்போதும் ஒட்டி நடக்கின்ற தன்மைபற்றிச் சத்துருக்கனனிடமும் தான் வெறுப்புக்கொண்டமையால், 'தம்பிமுன்னலன்' என்றும் கூறினான். 'யான் வலியென்' என்று கூறியது -ஒருகால் நீ காட்டிலும் எங்களை நிச்சிந்தையாக இருக்கவொட்டாமற் பொர வருவாயேயானால் உன்னையழிப்பதற்குவற்ற வலிமையுடையேன் யா னென்று பரதனை

மருட்டுதற்காகவும், 'மின்னுடன் பிறந்தவாள் பரதன்' என்று அடைமொழி கொடுத்தது-நீ ஒருகால் காட்டிலும் எங்களை யெதிர்க்கவருவாயேயாலல் எதிர்க்கும் உன்னுடைய வாள் மின்னல்போல் ஒருநொடிப்பொழுதிற் காணப்படாம லொழிந்துவிடுமென்று குறிப்பித்தற்காகவும் என விசேடப்பொருளுரைப்பர். தம்பிமுன்னலென் - (அப்பரதனுக்கு நான்) தம்பிமுறையாலே னென்பதையுங் கருதகில்லேனென உரைத்தலும் ஒன்று. பி-ம்:—[1]பரதன். [2]வேந்தற்கு-மன். [3]பிறந்திலன். [4]ஆள்கின்றுன். [5]தன்னெடும். [6]முன்னலன், முன்றிலே, முன்பலென். [7]பிறந்துநான். [8]வலியான். (நிஅஉ)

சஅசு.—இராமன் தம்பியையடக்க, சுமந்திரன்மீண்டுசெல்லச்சித்தனுதல்.

ஆரிய னிளவலை நோக்கி யைய[1]நீ
சீரிய வல்லன செப்ப லென்றபின்
பாரிடை வணங்கினன் [2]பரியு நெஞ்சினன்
றேரிடை வித்தகன் சேறன் மேயினன்.

(இ-ள்.) ஆரியன்-இராமபிரான், இளவலை-இளையபெருமாளை, நோக்கி-, 'ஐய-, நீ—, சீரிய அல்லன-சிறப்பற்ற பேச்சுக்களை, செப்பல்-சொல்லவேண்டா,' என்ற பின்-என்று அடக்கியபின்பு,—பரியும் நெஞ்சினன்-(இராமபிரானைப் பிரிந்துசெல்லுமாறு நேர்ந்ததுகுறித்து) மனம் வருந்துபவனுகி, வித்தகன் - (தேரோட்டுதொழிலில்) வல்லவனுகிய சுமந்திரன்,—பாரிடை வணங்கினன்-பூமியில் விழுந்து வணங்கி, தேர் இடை சேறல் மேயினன்-தேருள்ள இடத்துக்குச் செல்லலானன்; (எ - று.)

தந்தையாரைப்பற்றியும் பரதனைப்பற்றியும் இளையபெருமாள் நிஷ்டூரமாகச் சொல்லியவற்றைக் கேட்ட இராமபிரான், 'நீ இங்ஙனம் கூறுவது தகுதியன்று; இனிச் சொல்லாதிருப்பாயாக' என்று அவ்விலக்குமணனைக் கண்டிக்க, பிறகு சுமந்திரன் மனவருத்தத்தோடு இராமபிரானைவணங்கி மீண்டு செல்ல ஒருப்பட்டுத் தேர்நிறுத்திய இடத்துக்குச் சென்றன னென்பதாம். "கூட்டினன் தேர்ப்பொறி" என மேல்வருவதனால், தேரிடைஎன்பதற்கு - தேரைநிறுத்தியுள்ள இடத்துக்கு எனப் பொருள்கொள்ளப்பட்டது.
பி - ம்:—[1]இச். [2]பதைக்கும். (நிஅங)

சஎ.—தேரைப்பூட்டிக்கொண்டு சுமந்திரன் அயோத்திக்கு மீளுதல்.

கூட்டினன் றேர்ப்பொறி [1]கூட்டிக் [2]கோன்முறை
பூட்டினன் [3]புரவியப் புரவிபோ நெறி
காட்டினன் காட்டித்தன் கல்வி மாட்சியா
லோட்டினன் றெருவரு முணர்வு ருமலே.

(இ - ள்.)(சுமந்திரன்),தேர் பொறி-இரதமாகிய பொறியை,கூட்டினன்-சித்தப்படுத்தினன்; கூட்டி-(அங்ஙனம்)சித்தப்படுத்தியபின், புரவி - குதிரைகளை, கோல் முறை பூட்டினன் - கோல்கொள்ளும்முறையில் [ஓட்டுதற்கு

இயையுமாறு](அத்தேரிலே) பூட்டினன்; அ புரவி போம் நெறி காட்டினன்-அந்தக்குதிரைசெல்லும்வழி (யாவர்க்கும் கண்விழித்துஎழுந்தால்) தோன்று மாறு (குதிரையைச்) செலுத்தினன்; காட்டி - அங்ஙனஞ்செய்துகொண்டே, தன் கல்வி மாட்சியால்-(குதிரைசெலுத்தும்)விச்சையில் தனக்குஎற்பட்டுள்ள வல்லமையால், ஒருவர் உம் உணர்வு உறுமல் எ ஓட்டினன்-ஒருவரும் தேர் செல்லும் ஒலியைக்கேட்டுக் கண்விழித்துக்கொள்ளாதபடி [ஒலியின்றித்தேர் செல்லும்படி] (அத்தேரைச்) செலுத்தினன்; (எ-று.)

தேரிடைச்சென்ற சுமந்திரன் அத்தேரிற் குதிரைகளைப்பூட்டிச் சென்ற வழி யாவர்க்கும் புலனுகும்படி சுவடுதோன்றுமாறு தேரைச்செலுத்தினை யினும்,உறங்குபவர் விழித்தெழுந்திராதபடி அத்தேர்செல்லுவதாற் பேரொலி யுண்டாகாவண்ணம் தேர்ப்பாகுத்தொழிலில் தனக்குள்ளவல்லமையாற்செய் தனனென்பதாம்.இச்செய்யுளில் ஒருவாக்கியத்தினீற்றில்விட்டசொல்அடுத்த வாக்கியத்தின் முதலில்வர இங்ஙனம் பல வாக்கியங்கள் வந்தமை **ஒற்றை மணிமாலை**யென்னும் ஏகாவளியலங்காரமாம். **பி-ம்:**—[1]கூடி. [2]கொண்முறை, [3]மண்முறை. [3]புரவியும். (நிஅசு)

சஅ.—இராமபிரானும் அவ்விரவிற் பிரயாணமாதல்.

தையறன் கற்புந்தன் றகவுந் தம்பியு
மையறு கருணையு முணர்வும் வாய்மையுஞ்
செய்ய[1]தன் வில்லுமே சேம மாகக்கொண்
டையனும் போயினு னல்லி னுப்பவே.

(இ-ள்.) தையல்தன் கற்பு உம்-சீதாபிராட்டியின் பதிவிரதாதருமமும், தன் தகவுஉம் - தனது மேன்மைக்குணமும், மை அறு கருணைஉம் - குற்ற மற்ற (தன்னுடைய) அருட்குணமும், உணர்வுஉம்-நல்லறிவும், வாய்மைஉம் - சத்தியமும், செய்ய தன் வில்உம்-செம்மைத்தன்மையையுடைய தனது தனுசும், தம்பிஉம்எ-இளையபெருமானுமே, (என்ற இவை), சேமம் ஆக கொண்டு-(தனக்குப்)பாதுகாவலாக அமையப்பெற்று,அல்லின் நாப்பண்-அந்த இரவின் நடுவில் [நடுராத்திரியில்], ஐயன்உம் - இராமபிரானும், போயினான் - செல்லலானான்; (எ - று.)

தம்பி வில் என்ற உருவப்பொருளோடு கற்புமுதலிய அருவப்பொருளையுஞ் சேர்த்துக் காவலெனக் கூறிய நயம் கருதத் தக்கது. பொருள்முறைக்கு ஏற்ப, தம்பிஎன்பது இறுதியிற் கூட்டப்பட்டது. தகவு என்பதில் கருணை முதலியன அடங்குமாயினும்,சிறப்புடைமையால்,குணங்களுட்சிறந்தனவான கருணைமுதலியவற்றைத் தனியே யெடுத்துக் காட்டினர். செய்ய வில்-கொடியோரை நலிந்து நல்லோரைப் பாதுகாக்குந் தன்மை யமைந்த வில்: இனி; நாணிஎறிடாமையால் வளைந்திராமல் நேராக இருக்கும் வில் எனக் கூறலும் ஒன்று. **பி - ம்:**—[1]கை. (நிஅரு)

வேறு.

சகூ.—அப்போது இருள்செறிந்திருக்க, சந்திரன் உதயமாதல்.

பொய்வினைக் குதவும் [1]வாழ்க்கை யரக்கரைப் பொருந்தி யன்னர்
செய்வினைக் குதவு [2]நட்பாற் செல்பவர்த் தடுப்ப [3]தேய்க்கு
மை[4]விளக் கியதே யன்ன [5]வயங்கிரு [6]டுரக்க(வானங்
கைவிளக் கெடுத்த தென்ன வந்தது கடவுட் டிங்கள்;)

(இ - ள்.) பொய் வினைக்கு உதவும் வாழ்க்கை அரக்கரை-வஞ்சகத்தொழிலைச் செய்வதற்குத் துணையாயிருக்கும் வாழ்வையுடைய இராக்கதரை, பொருந்தி - சேர்ந்திருந்து, அன்னர் செய் வினைக்கு - அந்தஅரக்கர் செய்கின்ற (கொலைமுதலிய) தீத்தொழிற்கு, உதவும் - துணைசெய்கின்ற, நட்பால் - சினேககுணத்தினால், செல்பவர் தடுப்பது எய்க்கும்-(அவ்வரக்கர்க்குப் பகையாகிச்) செல்கின்ற இராம விலக்குமணரைச் (செல்லவேண்டாவென்று) தடைசெய்வதை ஒத்திருப்பதும், மை விளக்கியது ஏ அன்ன-அஞ்சனத்தின் தன்மையை விளங்கச்செய்வதுபோல்வதுமான, வயங்கு இருள் - (கருநிறத் தோடு) விளங்குகின்ற இருட்டை, துரக்க - ஓட்டிவிடும்படி, வானம்-ஆகாயமானது, கைவிளக்கு எடுத்தது என்ன - கையிலேந்திக்காட்டும் விளக்கை (த் தான்) எடுத்துத்தாங்கியதென்று சொல்லும்படி, கடவுள் திங்கள்-தெய்வத் தன்மைவாய்ந்த சந்திரன், வந்தது - தோன்றிற்று; (எ - று.)

இருட்டானது தான் தன்கருநிறத்தால் அரக்கரையொத்திருந்து அவர் புரிகின்ற தீச்செயல்கட்கும் உதவியாயிருப்ப தாதலால், அவ்வரக்கரைச் சங்கரித்தற்பொருட்டே திருவவதரித்த மூர்த்தியாகிய இராமபிரான் தம்பியோடு அரக்கர்வாழுங் காட்டிற்குச் செல்லத்தொடங்கியபோது அவ்வரக்கரிடத்துள்ளநட்பினால் 'நீங்கள் இங்குவரவேண்டா' என்று இவர்களைத் தடுப்பது போன்றிருந்த தென;இருட்செறிவை முதலிரண்டடிகளினுற் குறித்தார். பிறகு அவ்விருள்நீங்கும்படிவானத்திற்சந்திரன் தோன்றியதை இராமபிரான் காட்டிற்குச்செல்லுகையில் வானம் கைவிளக்கையேந்திக் காட்டுவதுபோலுமெனப் பின்னடிகளினுற் குறித்தார்.இவ்விரண்டும்-தன்மைத்தற்குறிப்பேற்ற வணிகளாம். "எறனுற் கிருளைநீங்கக் கைவிளக்கேந்தியாங்கு, வீறுயர்மதியந் தோன்ற" என்ற சிந்தாமணிப்பகுதி இந்தச்செய்யுளின் பின்னிரண்டடிகளிற் காணத்தக்கது. அரக்கர் கொடியவிலங்குகள்போல இரவிற்சஞ்சரித்து முனிவர்முதலியோர்க்குத் தீங்குபுரிபவ ராதலால், இருள் அவ்வரக்கர் செய்யும்வினைக்கு உதவும் நட்பு ஆவதாகும். சந்திரன் தேவதைகளிற்சேர்ந்தவனென்பது;நூற்றுணிபு: ஆதலால்,'கடவுட்டிங்கள்' என்றார். மைவிளக்கியது அன்ன இருள்-மைபோல்தான்றும்இருள். இனி இச்செய்யுட்கு—வந்ததாகிய திங்கள் அரக்கர்க்குநட்பாய்ச் செல்பவரைத் தடுப்பதையேய்க்கும் என்று உரைப்பாருமுளர்: அவ்வுரை சிறவாது. பி - ம்:—[1]வாட்கை. [2]நட்பாய்ச். சேறற்பால், நட்பாற்செல்பவற். [3]ஓக்கும். [4]விளக்கியதேயென்ன, விளக்கீதேயென்ன, விளக்கீதையன்ன. [5]மயங்கு. [6]துரப்ப. (நிஅசு)

ரு0.—உதித்த சந்திரனது வருணனை.

[1]மருமத்துத் தன்னை யூன்று [2]மறக்கொடும் பாவந் தீர்க்கு
முருமொத்த சிலையி னுரை யொருப்படுத் துதவி நின்ற
கருமத்தின் விளைவை [3]யெண்ணிக் களிப்பொடுங் காண வந்த
கருமத்தின் வதன மென்னப் பொலிந்தது தனிவெண் டிங்கள்.

(இ - ள்.) தனி வெள் திங்கள் - (அப்போது உதித்த) ஒப்பற்ற வெண் ணிறத்தையுடைய சந்திரன்,—தன்னை மருமத்து ஊன்றும் மறம் கொடும் பாவம் - தன்னுடைய உயிர்நிலையிலே தாக்குவதான வீரத்தன்மையையுடைய கொடியபாவத்தை, தீர்க்கும் - ஒழிக்கவல்ல, உரும் ஒத்த சிலைபினுரை - இடியையொத்த [பேரொலிசெய்கின்ற] வில்லையுடைய இராமலக்குமணரை, ஒருப்படுத்து - (வனத்திற்கு வருமாறு) உடன்படுத்தி, உதவிநின்ற - (தனக் குத்) துணைபுரிந்த, கருமத்தின் விளைவை - (தனது) நல்வினைப்பயனை, எண்ணி -, களிப்பொடுஉம் - மனமகிழ்ச்சியுடனே, காண வந்த - தரிசிக்கு மாறு (அங்கு) வந்த, தருமத்தின் - தருமதேவதையின், வதனம் என்ன - முகம்போல, பொலிந்தது - விளங்கிற்று; (எ - று.)

தன்னை உயிர்நிலையில் நலிகின்ற அதருமத்தை வேரோடு களையும்பொ ருட்டாக அரக்கரை யொழிக்குமாறு தனது நல்வினைப்பயனால் இராமலக்கும ணர் வில்லை யேந்திக் கானகஞ்சேர்ந்தா ரென்று மகிழ்ச்சிபினால் மலர்ந்த தரும தேவதையின் முகம்போலு மெனக் சந்திரனை வருணித்தார்; இதுவும் - தற் குறிப்பேற்றவணியே. மருமத்துத் தன்னை யூன்றுஞ் சிலைபினுரை என இயை த்து - தன்மனத்திலே தன்னையே [தருமத்தையே] எண்ணுகின்ற வில்லாளி களை யென்னலுமாம்: இனி, (தருமதேவதையின்) நெஞ்சில் தன்னைப் பதியச் செய்யும் கொடும்பாவமெனக் கூறுவாருமுளர். [1]மருமத்துத் தன்னையூன்றி என்ற பாடத்துக்கு - மனத்தினால் தருமமாகிய தன்னையே பகைகண்டு என உரைக்க. பி - ம்:—[2]மாக். [3]உன்னி. (ருஅள)

ருக.—அப்போது மலர்கள்யாவும் குவிந்திருத்தல்.

காம்புயர் கானகஞ் செல்லுங் கரியவன் வறுமை நோக்கித்
தேம்பின குவிந்த போலுஞ் செங்கழு நீருஞ் சேரைப்
பாம்பின தலைய வாகிப் [1]பரிந்தன [2]குவிந்து [3]சாய்ந்த
வாம்பலு மென்ற போது [1]நின்றபோ தலர்வ துண்டோ.

(இ - ள்.) காம்பு உயர் கானம் - மூங்கில்கள் ஓங்கிவளரப்பெற்ற காட் டிலே, செல்லும் - நடந்துசெல்கின்ற, கரியவன் - இராமபிரானது, வறுமை நோக்கி - தரித்திரன்போன்றுள்ளநிலையைப் பார்த்து, தேம்பின-மனம்வருந் தினவாய், செங்கழுநீர்உம் - செங்கழுநீர்மலரும், குவிந்தபோலும் - குவிந்த வற்றை யொத்துத்தோன்றும்; ஆம்பல்உம் -, சேரை பாம்பின தலைய ஆகி - சாரைப்பாம்பினுடையதலைபோன்ற தோற்றத்தையுடையனவாய், பரிந்தன-

மனம்வருந்தி, குவிந்து சாய்ந்த - வாய்குவிந்து சாய்ந்துகிடந்தன; என்ற போது - என்றுல், நின்ற போது - மற்றை மலர்கள், அலர்வது உண்டு ஓ - மலர்ந்திருத்தல் உளவாகுமோ? (எ - று.)

இரவிற் கூம்புந்தன்மையவான செங்கழுநீர் அப்போது அங்கு இராமன் நிலையைக்கண்டு வருந்திறற்போலக் குவிந்துகிடந்தன; அதுகிடக்கட்டும். சந்திரனைக்கண்டால்மலருந் தன்மையனவாகிய ஆம்பல்களோ இராமபிரான் ஒரு வறியவன்போற் கானகஞ்சேரநேர்ந்ததுகுறித்து இரங்கினவாய்க் குவிந்து கிடந்தன: இங்ஙனம் இரவிற் கூம்பும் மலரன்றி மலர்ந்தேநிற்கும் ஆம்பல் மலர்களும் குவிந்துகிடந்தனவென்றுல், மற்றைமலர் குவிந்துகிடந்தன என்பது தானே பெறப்படு மென்பதாம். குழுதபாந்தவன் [ஆம்பலின்சுற்றம்] என்று சந்திரனுக்குப் பேருண்டாகுமாறு அவனைக்கண்டால் மலருந்தன்மையுள்ளது ஆம்பல் என்ற பொருள் விளங்குதலால், ஆம்பலும் என்றவிடத்து உம்மை - உயர்வுசிறப்பு. கரியவன் வறுமை - இராமனுக்கு வறியவன்போலக் காட்டில் நடந்துசெல்ல வேண்டிவந்த தன்மை. ஓரறிவுயிரும் இராமனுக்கு நேர்ந்த நிலையையுணர்ந்து வருந்துமென்றுல் அதனை உலகம் மெய்யாகக் கொள்ளாதாதலால், முதல்வாக்கியத்தில் 'போலும்' என்பதைப் பெய்து கூறினர்.பி-ம்:—[1]பரந்தன. [2]குவிந்த. [3]சோர்ந்த. [4]அங்கம்புயம், போதெலாம்.

ருo.—நிலவில் இராமன்முதலிய முவரும் செல்லுதல்.

அஞ்சனக் குன்ற மன்ன வழகனு மழகன் [1]றன்னை
யெஞ்சலில் [2]பொன்போர்த் தன்ன விளவலு மிந்து வென்பான்
வெஞ்சிலைப் புருவத் தாடன் மெல்லடிக் கேற்ப வெண்ணூற்
பஞ்சிடைப்[3]படுத்த தென்ன வெண்ணிலாப் பரப்பப் போனர்.

(இ - ள்.) அஞ்சனம் குன்றம் அன்ன அழகன்உம்-பச்சைமாமலைபோல் அழகிய திருமேனியையுடைய இராமபிரானும், அழகன்தன்னை எஞ்சல் இல் பொன் போர்த்து அன்ன இளவல் உம் - இராமபிரானைக் குறைதலில்லாத [மாற்றுயர்ந்த] பொன்னைப் போர்த்து வைத்திருப்பதுபோன்ற வடிவத்தை யுடைய இளையபெருமாளும்,-இந்து என்பான் - சந்திரன், வெம் சிலை புருவத்தாள் தன் மெல் அடிக்கு ஏற்ப - கொடிய வில்லையொத்த புருவத்தைக் கொண்டவளான சீதாபிராட்டியின் மெல்லிய அடிகள் நடப்பதற்கு ஏற்ற மாறு, வெள் நூல் பஞ்சு இடை படுத்தது என்ன-வெண்ணிறமான நூலுண்டாகும் பஞ்சை அக்காட்டினிடத்துப் பரப்பியதையொப்ப, வெள் நிலா பரப்ப - வெண்மை நிறமுள்ள நிலாவை (எங்கும்) பரவச்செய்யாநிற்கையில், போனர் - (அக்காட்டில்) நடந்து சென்றார்கள்; (எ - று.)

சந்திரன் வெண்ணிலவைக் காட்டினிடம்முழுதும்வீசியது, சீதை தன் மெல்லடியைக் கொடுங்கானத்தில் வைத்துநடந்தால் கல்முதலியன யுறுத்துமே யென்று அக்காட்டினிடம் முழுவதும் வெண்பஞ்சைப் பரப்பியதுபோலு

மெனப் பின்னிரண்டடிகளில் நிலாப்பரவியதைத் **தற்குறிப்பேற்றவணியால்** வருணித்தார். அங்ஙனம் பரந்த நிலாவில் இராமபிரான் முதலியோர் நடந்து சென்றன ரென்பதாம். இராமபிரான் வடிவழகுதையும் பொன்னைக்கொண்டு போர்த்தால் எங்ஙனம் விளங்குமோ அங்ஙனம் விளங்குவது, இலக்குமணன் திருமேனியென்பது; 'அழகன்றன்னை யெஞ்சலில்பொன்போர்த்தன்ன விளவல்' என்பதன்கருத்து: இதனால், நிறத்தில்மாத்திரம் இராமனைபோடு இலக்குமணனுக்குவேறுபாடேதவிரச் சாயலிற் சிறிதும் வேறுபாடில்லை யெனக் கூறியவாறும். இனி, இலட்சுமணன் இராமனைவிடாதுதொடர்ந்துசெல்வதனால் இங்ஙனங்கூறியதென்பாருமுளர். பீ-மீ:—[1]தன்மேல். [2]அன்புபோர்த்த. [3]படுத்தாலன்ன, படுத்தாலென்ன. (ருஅசு)

ருசு.—சீதாபிராட்டியும் தன்மெல்லிய பாதங்களைத் தரையில்வைத்து நடந்ததைப் பற்றிய கவிக்கூற்று.

சிறு[1]விலை மருங்குல் கொங்கை[2]யேந்திய செல்வ மென்னு
[3]நெறியிருங் கூந்த னங்கை சீறடி நீர்க்கொப் பூழி
னறியன [4]தொடந்து சென்று [5]நடந்தன ணனைவயி [6]னீங்கு
முறுவலி யன்பி[7]னூங்கொன் றுண்டென [8]நுவல்வ துண்டோ.

(இ-ள்.) சிறு விலை மருங்குல்-மிகவும் இளைத்த இடையுடன், கொங்கை-(பருத்த) தனங்களை, ஏந்திய-தாங்கியுள்ள, செல்வம் என்னும் - செல்வமகளென்று சொல்லப்படுகின்ற, நெறி இரு கூந்தல் நங்கை-நெறித்த மிக்க கூந்தலையுடைய சீதாபிராட்டி,—சிறுஅடி-சிறியபாதங்கள், நீர் கொப்பூழின் நறியன-நீரில்தோன்றுங் குமிழியைக்காட்டிலும் மிகமெல்லிய (ன;என்றலும்அ) வற்றால், தொடர்ந்து சென்று-(இராமபிரானைப்) பின்பற்றிப்போய், நடந்தனள்—; நனையில் நீங்கும் உறு வலி அன்பின்-குற்றத்தினின்றுநீங்கிய மிக்க வலிமையுள்ள அன்பைவிட, ஊங்கு-மிக்க வலிமையுள்ளதாகிய, ஒன்று-ஒரு பொருள், உண்டு-(உலகத்தில்) உள்ளது, என - என்று, நுவல்வது-சொல்லுதற்குரியது, உண்டொ-உள்ளதோ? [இல்லை]; (எ-று.)

காற்றுச்சிறிதுபட்டாலும் உடையுந்தன்மையுள்ள நீர்க்குமிழியைவிட மெல்லிய தன்பாதங்களைக் கடுங்கானில் ஊன்றவைத்துச் சீதாபிராட்டியும் தன்கணவனுடைய பின்னே நடந்து சென்றனளே; இங்ஙனம் அவட்கு வலிமையைத் தந்தது அன்பேயன்றே; ஆகவே, அந்தஅன்பைவிட வலியது ஒன்றும்இல்லை யென்றவாறு. இராமனிடத்துச் சீதைக்குஉள்ள அன்பே அவட்கு நடக்கும் வலிமையைத் தந்த தென்றபடி. சீதையும் தன்மெல்லிய பாதங்களைக் கடுநிலத்திலேவைத்து ஊன்றிக் கணவன்பின்னே சென்றாள் என்று முதல்மூன்றடிகளிற் கூறிய சிறப்புப்பொருளை, 'உறுவலி அன்பினூங் கொன்றுண்டென நுவல்வதுண்டோ' என்ற பொதுப்பொருள் சமர்த்தித்து நின்றது; **வேற்றுப்பொருள்வைப்பணி.** இதனை, வடநூலார் அர்த்தாந்தரந்யாஸமென்பர். சிறுவிலை பஞ்சம்; இளைத்தவயிறுஎன்று கூறுதற்காக 'கூரமோ

தரம்' என்று வடமொழியிற் கூறுவதுபோல, நுண்ணியஇடையென்பதைத் தெரிவிக்க 'சிறுவிலமருங்குல்'என்றது. சீதாபிராட்டி அருமையாகப் பாராட் டப்பட்டுவந்தனளென்பதுதோன்ற, 'செல்வமென்னும்நங்கை' என்றார். பி-மீ:—[1]நிலை. [2]இந்திர, இந்திரை. [3]செறி. [4]உளைந்துசோர.[5]நடாத்தலினவை யுள், நடந்தெனினவையுள். [6]நீங்கி. [7]ஊங்கின். [8]உணர்வதுண்டோ. (நிகo)

நுச.—கவிக்கூற்று: இராமபிரான் உதயகாலத்திற்முன் இரண்டுயோசனை சென்றனென்றுகூறிச் சுமந்திரன் செய்ததைச் சொல்வோமெனல்.

பரிதிவா னவனுங் கீழ்பாற் பருவரை பற்று முன்னந்
திருவிணை யகனுந் தென்பால் யோசனை யிரண்டு சென்று
னருவிபாய் கண்ணும் புண்ணை யழிகின்ற மனமுந் தானுந்
[1]துரிதமான் றேரிற் [2]போனன் செய்தது சொல்ல லுற்றும்.

(இ-ள்.) பரிதி வானவன் உம்-சூரியனும், கீழ்பால் பரு வரை பற்று முன்னம்-கிழக்குத்திக்கிலுள்ள பருத்தமலையை [உதயகிரியை] அடைவதற்கு முன்னம் [சூரியோதயத்துக்கு முன்னமே], திருவின் நாயகன் உம் - இலக் குமியின் கணவனை ஸ்ரீராமபிரான், தென்பால்-தெற்குத்திக்கில், யோசனை இரண்டு சென்றனன்-இரண்டுயோசனை தூரம் நடந்து சென்றிட்டான்; (இனி), அருவிபாய் கண் உம்-அருவிவெள்ளம்போல்(துயரக்கண்ணீரைச்)சொரிகின்ற கண்களும்,புண் ஆய் அழிகின்ற மனம் உம்-புண்பட்டுவருந்துகின்ற மனமும்,-தான்உம்-தானுமாகி, துரிதம் மான் தேரில் போனன் - விரைந்து செல்லு கின்ற குதிரைபூட்டிய தேரின்மீது ஏறிக்கொண்டு திரும்பிச்சென்ற சுமந்தி ரன், செய்தது-செய்ததை, சொல்லல் உற்றும்-இனிச் சொல்வோம்; (எ-று.)

கண்ணும் மனமுந்தானும் போனன்-திணைவிரவிச் சிறப்பால் உயர்திணை முடிபேற்ற வழுவமைதி. பரிதிவானவனும், உம்மை - எதிரது தழுவியது. துரிதம்-த்வரிதம்: வடசொல். சொல்லலுற்றும் - கவிகட்குரிய தனித்தன் மைப்பன்மை. பி-மீ:—[1]துரகம். [2]சென்றனன். (நிகக)

நுரு.—சுமந்திரன் அயோத்திசேர்ந்து வசிட்டனிடஞ்செய்திதெரிவிக்க, அவன் வருந்துதல்.

கடிகை[1]யோ ரிரண்டு மூன்றிற் கடிமதி லயோத்தி கண்டா
னடியிணை தொழுதா னதி முனிவனு மவனு முற்ற
படியெலாங் [2]கேட்டு நெஞ்சிற் பருவர லுழந்தான் [3]முன்னே
முடிவெலா [4]முணர்ந்தா னந்தோ [5]முடிந்தனன் மன்ன னென்றான்.

(இ - ள்.) (சுமந்திரன்),—கடிகை ஓர் இரண்டு மூன்றில் - ஐந்துநாழி கைக்குள், கடி மதில் அயோத்தி-காவலாக அமைந்த மதிளையுடைய அயோத் திமாநகரத்தை, கண்டான்-அடைந்து, ஆதி முனிவனை-குலகுருவாய்ச்சிறந்த வசிஷ்டமுனிவனை, அடி இணை தொழுதான் - உபயபாதங்களில் வணங்

கிறன்; அவன்உம் - அம்முனிவனும், உற்ற படி எலாம் கேட்டு - நிகழ்ந்த வகைமுழுவதையும் (அச்சுமந்திரனிடம்) கேட்டறிந்து, நெஞ்சில் - (தன்) மனத்தினுள்ளே, பருவரல் உழந்தான்-துன்பத்தால் வருந்திறன்; முன்னே முடிவு எலாம் உணர்ந்தான் - மேலே நிகழப்போவதையெல்லாம் அறிந்தவனாய், அந்தோ மன்னன் முடிந்தனன் என்றான் - ஐயோ! அரசன் இறந்து விட்டானென்று கூறினான்; (எ - று.)

இராமபிரான் நகரத்துக்குத் திரும்பிவர ஒருப்படாமல் இரதத்தையும் திருப்பிவிட்டுத் தம்பியும் மனைவியுமாகக் காட்டிற்குப் போய்விட்டானென்ற செய்தியைக் கேட்டவுடனே, அரசன் இறப்பது நிச்சயமென்று வசிட்டமுனிவன் கூறின னென்பதாம். தெளிவுபற்றி, 'முடிந்தனன்' என இறந்தகாலத்தாற் கூறினார்: வழுவமைதி. இரண்டுமூன்று - உம்மைத்தொகை. இரண்டு அல்லதுமூன்றுஎனினுமாம். பண்புத்தொகையாகக் கொள்ளின், ஆறுஎன்று பொருள். பருவரல்-பரிவு வருதல்என்றுபொருளுள்ள பரி வா என்ற வினைச் சொற்கள் தொடர்ந்து விகாரப்பட்ட 'பருவா' என்பது பகுதியாக, அதனடியாகப்பிறந்த தொழிற்பெயர். முன்னேமுடிவெலாம் உணர்ந்தான் என்பதற்கு - முன்னமே தன் ஞானக்கண்ணினால் முடிவைக் கண்டறிந்தவனென வசிட்டனெனக் கொள்ளினுமாம். பி - மீ:—[1]ஒன்றிரண்டு. [2]கேட்டே, கேட்டான். [3]முன்னம். [4]உணர்ந்தே, உணர்ந்தேன். [5]அரசன். (ருகூ)

ருசு.—வருந்தியவண்ணம் வசிட்டமுனிவன் சுமந்திரனேடும் அரண்மனையிற் புகுதல்.

நின்றுயர் பழியை யஞ்சி நேர்ந்திலன் றடுக்க வள்ள
லொன்றுநா வுரைத்த லேக்கான்[1]றருமத்திற் குறுதி பார்ப்பான்
வென்றவ [2]ருளரே [3]மேலை விதியினை [4]யென்று [5]விம்மி
பொன்றிணி மன்னன் கோயில் சுமந்திர னேடும் [6]புக்கான்.

(இ - ள்.) 'வள்ளல்-உதாரகுணமுடையவனுகிய தசரதன், நின்று உயர் பழியை அஞ்சி தடுக்க நேர்ந்திலன்-நிலைபெற்று வளரக்கூடிய பழிக்குப்பயப் பட்டு(இராமபிரான் காட்டிற்குச்செல்வதை)த் தடுத்தற்கு ஒருப்பட்டானில்லை: தருமத்திற்கு உறுதி பார்ப்பான் - தருமம் நிலைநிற்குந்தன்மையை நாடுபவனுகிய இராமபிரான், நான் உரைத்தல் ஒன்றுஉம் நோக்கான் நான் கூறியதைச் சிறிதும் கருதினனில்லை; மேலை விதியினை வென்றவர் உளர்எ - பழைய வினைக்கு(வயப்படாது அதனைக்)கடந்துநின்றவர் இவ்வுலகத்தில் எவரேனும் இருக்கின்றனரோ?' என்று-என்று சொல்லி, விம்மி-புலம்பிக்கொண்டு, சுமந்திரனேடும்-சுமந்திரனென்பவனுடனே, பொன் திணி மன்னன் கோயில் - பொன்னுலியன்ற அரசமாளிகையினுள், புக்கான் - புகுந்தான்; (எ - று.)

நான்உரைத்தல்என்றது - "ஐயநீயொருவியோங்கிய, கற்றடங்காணுதி யென்னிற்கண்ணகன், மற்றடந்தானையான் வாழ்கிலான்" என்று நகர்நீங்கு படலத்து வந்ததனை. அதனை அப்பிரான் நோக்காமையை "அன்னவன் பணி

தலை யேந்தியாற்றுதல்" என்ற பாடலிற் காண்க. தரும ஸம்ஸ்தாபநஞ்செய்யத் திருவவதரித்தவனென்பான் இராமபிரானை 'தருமத்திற்குறுதிபார்ப்பான்' என்றான். "சூழ்வினை நான்முகத்தோருவர்ச் சூழினும், ஊழ்வினையொருவரா லொழிக்கற்பாலதோ" என்று வசிட்டன் மொழியாக அங்குவந்தது ஒப்புநோக்குக. பி-ம்:—[1]தருமத்தின். [2]யாரே. [2]மேலவ். [3]என்ன. [5]விம்மா. [6]போனான். ()

நுஎ.—தேர்கொண்டு வந்ததுகேட்டு அமைச்சர் விரைந்துவந்து சுமந்திரன்நிலைகண்டு தளர்தல்.

தேர்கொண்டு வள்ளல் வந்தா னென்றுதஞ் சிந்தை யுந்த
வூர்கொண்ட திங்க ளென்ன மன்னனை யுழையர் [1]சுற்றிக்
கார்கொண்ட மேனி யானைக் கண்டிலர் [2]கண்ணில் வற்ற
நீர்கொண்ட நெடுந் [3]தேர்ப் பாக னிலைகண்டே நிலையிற் றீர்ந்தார்.

(இ - ள்.) (தேர்வந்தசெய்தியை யறிந்தவுடனே),—உழையர் - மந்திரிமார்கள்,—தேர்கொண்டு வள்ளல் வந்தான் என்று தம் சிந்தை உந்த-[1]தேரின்மீது ஏறிக்கொண்டு இராமபிரான் திரும்பிவந்திட்டான்' என்பதனால் தமது எண்ணம் தூண்டிச்செலுத்த,—திங்கள் ஊர் கொண்ட(து)என்ன - சந்திரன் ஊர்கோளைக்கொண்டுள்ளதுபோல, மன்னனை சுற்றி - தசரத மன்னவனைச் சுற்றிநின்று, கார் கொண்ட மேனியானை கண்டிலர்-கருநிறமுள்ள இராமபிரானைக் காணாதவர்களாய், கண்ணில் வற்ற நீர் கொண்ட நெடு தேர் பாகன் நிலை கண்டு - கண்களில் வற்றாத [மேன்மேற்சுரக்கின்ற] கண்ணீரைக் கொண்ட தேர்ப்பாகன் தன்மையைக்கண்டு, நிலையில் தீர்ந்தார் - (தமது) மனநிலை நீங்கப்பெற்றார்கள் [வருத்தமடைந்தார்கள்]; (எ - று.)

தேர்வந்ததுகேட்டு இராமபிரானே வந்திட்டானென்று துணிந்து மனமகிழ்ச்சியடைந்துவந்த மந்திரியர் தசரதமன்னவனைச் சூழ்ந்திருந்து, அங்கு இராமனையின்றிச் சுமந்திரன் கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருகநிற்பது கண்டு தாம் கொண்ட மகிழ்ச்சிநீங்கி வருந்தின ரென்பதாம். அரசனைச் சூழ்ந்திருந்த உழையர் திங்களைச்சூழ்ந்த ஊர்கோட்கு உவமையாவர். கண்டே-செய்தி சொல்லாதிருக்கையிலேயே என்றபடி. பி - ம்:—[1]சுற்ற. [2]கண்ணீர். [2]தேரான்றன். (நிகழ)

நுஅ.—இரதம்வந்ததென்னக்கேட்டுத் தசரதன் கண்விழித்து 'இராமன் வந்தானோ?' என்று வசிட்டனை வினவுதல்.

இரதம்வந் துற்ற தென்றுங் கியாவரு மியம்ப லோடும்
வரதன்வந் துற்று [1]னென்ன மன்னனு மயக்கந் தீர்ந்தான்
புரைதபு கமல நாட்டம் பொருக்கென விழித்து நோக்கி
விரதமா தவனைக் கண்டான் வீரன் [2]வந் தானே வென்றான்.

(இ - ள்.) இரதம் வந்து உற்றது என்று-(காட்டிற்குச்சென்ற) இரதமானது மீண்டுவந்து சேர்ந்ததென்று, ஆங்கு யாவர்உம் - அங்குள்ள எல்லாரும், இயம்பலோடுஉம்-சொல்லவே,—வரதன் வந்து உற்றான் என்ன மன்னன்உம்

மயக்கம் தீர்ந்தான் - இராமபிரான் வந்திட்டானென்றுகருதித் தசரதமன்ன வனும் மனமயக்கந்தீர்ந்தவனாகி, புரை தபு கமலம் நாட்டம் பொருக்கென விழித்து நோக்கி-குற்றமற்ற தாமரைமலர்போன்ற (தன்) கண்களைச் சடக் கென விழித்துப்பார்த்து, (தன்எதிரேநின்ற), விரதம் மாதவனை கண்டான்- நோன்புகளை மேற்கொண்ட சிறந்ததவத்தினனாகிய வசிட்டமுனிவனைப் பார் த்து, வீரன் வந்தான்ஓ என்றான்-'மஹாவீரனாகிய இராமபிரான் திரும்பிவந் தானோ?' என்று வினவினன்; (எ - ரு.)

இராமன் வேண்டுவார் வேண்டும் வரங்களைக்கொடுப்பவனாதலால், நாட் டிற்குத்திரும்பவேணுமென்று; உடன்தொடர்ந்துசென்ற . நகரத்தவரின் வேண்டுகோட்கு இணங்கித் திரும்பிவந்தான்போலுமென்ற கருத்தினை ஒத லின், தசரதன் 'வரதன் வந்துற்றான்'என்று கருதினன்.பொருக்கென-விரை வுக்குறிப்பு. தவஞ்செய்கையில் மனத்தைப்புலன்வழிச்செலுத்தாமை உணவு விலக்கல்முதலியபலவகைநியமங்களை மேற்கொண்டுஒழுகவேண்டுவதுஇன்றி யமையாததா மாதலின்'விரதமாதவன்'என்றார். பி-ம்:-[1]என்ன.[2]வந்தனனே.

ருக.—மறுமொழிசொல்லாமையால் இராமன்வரவையுணர்ந்துயூர்ச்சித்த மன்னனது துயரைக் காணப்பெறாது முனிவன் அப்பாற்சேல்லல்.

இல்லையென்[1]றுரைக்க[2]லாற்றா[3]னெங்கினன் முனிவ னின்றா
[4]னல்லவன் முகமே நம்பி[5]நடந்தில னென்னு மாற்றஞ்
சொல்லலு மரசன் சோர்ந்தான் றுய[6]ருறு முனிவ னெனிவ்
வல்லல்காண் கில்லே னென்ன [7]வாண்டுநின் றகலப் போனான்.

(இ - ள்.) முனிவன் - வசிட்டமகாரிஷி,—இல்லை என்று உரைக்கல் ஆற்றான்-(இராமன்) வந்திலனென்று (தன்வாயிறற்) சொல்லப்பொறாமல், எங்கினன் நின்றான் - மனம்வருந்தி வாளாவிருந்தான்; நல்லவன் முகம்எ - நற்குணங்களையுடையவனாகிய வசிட்டமுனிவனுடைய முகமே, நம்பி நடந் திலன் என்னும் மாற்றம் சொல்லலும்-இராமபிரான் திரும்பிவந்திலனென்ற செய்தியைத் தெரிவிக்கவே,—அரசன் - தசரதன்,—சோர்ந்தான் - மூர்ச்சித் தான்; துயர் உறு முனிவன்-(மனத்தில்) துயரம் மிக்கவனான வசிட்டன்,— நான் இ அல்லல் காண்கில்லேன் என்ன - நான் இத்துயரத்தைக் கண்டு மனம்பொறேனென்றுசொல்லி, ஆண்டு நின்று-அவ்விடத்தினின்று, அகல போனான் - அப்பாற் சென்றான்; (எ - று.)

உயிர்க்குஉவப்புஉண்டாகும்போது மலர்ந்தும் துயர்நேரும்போது வாடி யும்உள்ளக்கருத்தை முகம் தெரிவிக்குமாதலால், 'நல்லவன்முகமே நம்பிநடந் திலனென்னுமாற்றஞ்சொல்லலும்' எனப்பட்டது; "அடுத்ததுகாட்டும் பளி ங்குபோல்நெஞ்சம், கடுத்தது காட்டும் முகம்"என்றார், நாயனாரும். காய்தல் உவத்தலின்றி,மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக் கும் உள்ளத்தையுடைய உரவோனாலும் ஆற்றமுடியாதாயிற்று, ஆண்டுத் தோன்றிய துயர் மென்று துயரத்தின்மிகுதியை விளக்கியவாறு. பி-ம்:—

[1]உரைத்தல். [2]ஆற்றுது. [3]வங்கிமா. [4]வல்லவன். [5]நடந்தனன், வந்திலன். [6]பெறு. [7]ஆங்கு.

(நிகசு)

சுஎ.—இராமன்முதலியோர் காட்டினிடம் சென்றமையைச்சுமந்திரன் தெரிவிக்க, மன்னவன் அத்துயரச்செய்தியா லாவியை யிழத்தல்.

நாயகன் பின்னுந் [1]தன்றேர்ப் பாகனை நோக்கி நம்பி
சேயனே வணிய னேவென் றுரைத்தலு [2]மனையான் செய்ய
வேயுயர் [3]கானிற் ரூனுந் தம்பியு மிதிலைப் பொன்னும்
[4]போயின னென்ரு னென்ற போழ்தத்தே யாவி போனான்.

(இ-ள்.) நாயகன் - தசரதமன்னவன், பின்உம் - மீண்டும், தன் தேர் பாகனை நோக்கி-தனக்குத்தேரோட்டுபவனாகிய சுமந்திரனைப் பார்த்து, நம்பி சேயன்ஓ அணியன்ஓ என்று உரைத்தலும் - 'இராமன் தூரத்திலுள்ளானோ? (அன்றிச்) சமீபத்திலுள்ளானோ?' என்று வினவுதலும்,—அனையான்-அந்தச் சுமந்திரன், செய்ய வேய் உயர் கானில்-நேராகவளருந்தன்மையுள்ள மூங்கில் கள் ஓங்கிவளரப்பெற்ற காட்டிலே, தான்உம்—, தம்பிஉம் மிதிலைபொன் உம்-இளையபெருமாளும் மிதிலாபுரியில் தோன்றிய இலக்குமிபோன்ற சீதை யுமாக, போயினன்—, என்ரூன்-என்று மறுமொழிகூறினான்; என்ற போழ் தத்துஎ-என்றுசொன்னபோதே, ஆவி போனான் - (தசரதன்) உயிர் நீங்கப் பெற்றான்; (எ - று.)

'இராமபிரான் தான் பட்டணத்திலிருந்துபுறப்பட்டதுமுதல் சுமந்திரன் புறப்படும்வரையில் இராமன்செய்த செயலையெல்லாங்கேட்டு அவற்றை நினைத்தாவது ஆறியிருக்கலாமோ?' என்ற ஓர்எண்ணத்தினால் விளைவு, அவ் விராமபிரான் கானகஞ்சேர்ந்தவரையிலும் நிகழ்ந்தசெய்தியைச் சொல்ல, 'காட்டில் இராமபிரான் புகுந்தான்' என்ற துயர்விளக்குங்கடுஞ்சொல்லைக் கேட்டவுடனே தன்னையும்அறியாமல் பெருந்துயரம்பொங்க அதனால் உயி ரொழிந்தனன் தசரதன் என்று முதனூலைச் சிறிதுஓட்டிப் பொருள்விரித்து உரைத்துக்கொள்க. மிதிலைப்பொன்னுந்தம்பியுந்தானும் போயினன்-சிறப்பி னால்உயர்திணையாண்பால் முடிபேற்றது.

சுமந்திரன் இராமபிரானைவிட்டு அயோத்திக்குப்போனபோது அவனைக் கண்ட நகரத்துச் சனங்கள் மிகவருத்தமடைய,பின்பு அவன் தசரதனையணுகி இராமன்சொல்லியசெய்தியையும் சீதையின்நிலையையுந் தெரிவித்துஅயோத் தியிலுள்ளசராசரங்களெல்லாம் மனவருத்தமுற்றிருப்பதையுந் தெரிவிக்க, அத்தசரதன் மனங்கலங்கி மூர்ச்சித்தான்; கௌசலை 'பர்த்தாவுக்கும் தீங்கு நேருமோ?'என்று அஞ்சித் திகைத்துப் பின் அச்சுமந்திரன்சொல்லிய இராம னதுசெய்தியைக் கேட்டதனால் மிகவருந்தித்துயருறுகையில், அவளை அச்சும ந்திரன் 'இராமலட்சுமணசீதைகள் வனவாசத்தால்வருந்தார்'என்று எடுத்துக் காட்டித்தேற்ற;பிறகு அந்தக்கௌசலை இராமனைக் காட்டிற்குஅனுப்பியதைச்

சொல்லித் தசரதனிடம்புலம்ப,மீண்டும் அரசன்மனங்கலங்கிமூர்ச்சித்து வெகு நேரங்கழித்து மூர்ச்சைதெளிய, பின்பு அவ்வரசனிடத்துத் தான் சிறிது நிஷ்டூரமாகக் கூறியதைப் பொறுக்குமாறுவேண்டினள். அப்பால் மன்னவன் துயரமுற்றவண்ணமே துயில்கொண்டிருந்து பிறகுவிழித்துத் தான் பூர்வத்தில் இவ்வண்ணம் புத்திரசோகம்தோன்றுமாறு, நீர்மொள்ளும் இருடிகுமரனை நீர்பருகுகின்ற யானையென்றுமாறுகக்கருதிக் கொன்ற செய்தியைக் கௌசலையிடம் கூறித் தான் முன்செய்த அத்தீவினைக்கு இரங்குவதும் இராமனைக்குறித்துக் கதறுவதுமாக இருந்து, கைகேயியைப்பழித்தவண்ணம் கௌசலையையும்,சுமித்திரையையும் பார்த்துக்கொண்டே துயரத்தைத் தாங்க மாட்டாமல் ஆவிபோகப்பெற்றுன்என்ற விஷயம் முதனூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பி-ம்:—[1]நற்றேர்ப். [2]தேர்வலானும் [3]கானம். [4]போயினர்.

சுஉக.—தசரதனை வானோர் மீளாவுலகத்திற் சேர்த்தல்.

இந்திரன் முதல்வ [1]ராய கடவுளர் யாரு மீண்டிச்
சந்திர [2]னனைய தாங்கோர் [3]மானத்தின் றலையிற் றுங்கி
வந்தன னெந்தை தந்தை யெனமனங் களித்து வள்ள
லுந்தியா னுலகி னும்பர் [4]மீள்கிலா வுலகத் துய்த்தார்.

(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது அவ்விடத்து, இந்திரன் முதல்வர் ஆய கடவுளர் யார்உம் - தேவேந்திரன் முதலாகவுள்ள வானவர்யாவரும், ஈண்டி - திரண்டுவந்து, எந்தை தந்தை வந்தனன் என - எமதுதந்தையான திருமாலின் தந்தையாகிய தசரதன் (எம்மிடத்துக்கு) வந்திடலாலுனென்று, மனம் களித்து - மனம்மகிழ்ந்து, சந்திரன் அனையது ஓர் மானத்தின்தலையில் தாங்கி - சந்திரனையொத்து [வெண்ணிறத்ததாக] உள்ள ஒப்பற்ற விமானத்திலே (அவனை யெழுந்தருளப்பண்ணித் தாங்கள் அதனைத்) தாங்கிக் கொண்டு,—வள்ளல் - அந்தத்தசரதனை, உந்தியான் உலகின் உம்பர் - (திருமாலினது) நாபீகமலத்தில் தோன்றியவருகிய பிரமதேவனது உலகத்துக்கும் மேலேயுள்ள, மீள்கிலா உலகத்து - (தன்னையடைந்தவர்) மீளுதலில்லாத உலகத்தில், உய்த்தார் - கொண்டுசேர்த்தனர்; (எ - று.)

யாவருக்கும் புத்திமுத்திகளைத் தரவல்ல பரம்பொருளாகிய இராமபிரானைப் பெற்ற தந்தைக்குப் பரமபதங்கிடைப்பது திண்ணமென்னுங் கருத்தால், கம்பர் இவ்வாறு கூறினர்;இவ்விஷயம் முதனூலிற் காணப்படவில்லை. மானம் - முதற்குறைவிகாரம். 'மீள்கிலாவுலகத்துய்த்தார்' என்று இங்குக் கூறிவிட்டு,மேல்மீட்சிப்படலத்தில் இராவணனைவென்ற இராமபிரானை நான்முகன்முதலிய தேவர்கள்வந்து தொழுது போற்றினமையைச் சொல்லிய போது "மெய்யினுக்குயிரையீந்த வேந்தர்கோன் விமானத்தெய்த" என்று தசரதன் இராமனைக்காணுமாறு விமானத்தின்மீதுவந்தா னென்று கூறியது எங்ஙனம் பொருந்துமெனின்?—மீள்கிலா உலகம் என்பதற்குப்பொருள் - சுவர்க்கம் முதலிய நல்லுலகத்தைச் சேர்ந்தவர் அந்த நல்வினை தீர்ந்தபொ

முது அங்குன்று மீண்டுகருமவயத்தராகிப் பிறப்பது முதலிய துன்பங்கட்கு இடமாவதுபோலஅல்லாமல் தன்னையடைந்தவர் எஞ்ஞான்றும் நிலையாக இருத்தற்கு உரிய உலகு என்பதேயாகும்; ஆதலால், தாம் எங்குச்செல்ல வேணுமென்றாலும் அங்குச் செல்லமுடியாது சிறைப்பட்டிருக்கும் உலகு என்பது பொருளல்ல: வைகுந்தம் புக்கவர் வினைவயத்தராய் உழலாமல் தாம் விரும்பிய வண்ணம் சேர வல்லமையுள்ளவரென்பதையும், அன்னர் இந்த உலகத்தைப்பார்த்து அருவருப்புக்கொள்வரென்பதையும், திருவேங்கடம் முதலிய திவ்யதேசங்களில் அர்ச்சாவதாரங்கொண்டுள்ள எம்பெருமான்களுடைய சௌலப்பியம் முதலிய குணங்களி லீடுபடுவரென்பதையும், விபவாவதாரங்களிலுள்ள சௌசீல்யம் முதலிய குணங்களிலீடுபடுவதுண்டு என்பதையும் நூல்களிற் காணலாம். பி-மீ:—[1]ஆன. [2]அனைய. [3]விமானத்தின். [4]பேர்கிலா, மீள்விலா. (நிகூ அ)

சூ உ.— கோசலை தசரதன் மாண்டமையையறிந்து வருந்துதல்.

[1]உயிர்ப்பிலன் [2]றுடிப்பு மில்ல [3]னென்றுணர்ந் துருவந் தீண்டி
யயிர்த்தன ணோக்கி மன்னற் காருயி ரின்மை தேறி
மயிற்குல மனைய நங்கை கோசலை மறுகி வீழ்ந்தாள்
வெயிற்சுடு கோடை தன்னி லென்பிலா வுயிரின் வேவாள்.

(இ-ள்.) குலம் மயில் அனைய நங்கை கோசலை-சிறந்த மயிற்பறவையை யொத்த சாயலையுடைய பெண்கள்நாயகமாகிய கௌசலைப்பிராட்டி,—அயிர்த்தனள்-(தசரதன்நிலையைக் கண்டு மனத்திற்) சந்தேகங்கொண்டவளாய், உருவம் தீண்டி நோக்கி-(அத்தசரதனது)உடம்பைத் தொட்டுப்பார்த்து,'உயிர்ப்பு இலன்-(மூக்கில்) சுவாசம் வரப்பெற்றிலன்; துடிப்புஉம் இல்லன்-(மார்புமுதலிய இடங்களில்)நாடி முதலியன அடித்துக்கொள்ளுதலும் இல்லாமலிருக்கிறான்,' என்று உணர்ந்து-என்றுகண்டறிந்து, மன்னற்கு ஆர் உயிர் இன்மை தேறி-தசரதமன்னவனுக்கு அருமையானஉயிர் நீங்கிவிட்டதென்பதை நிச்சயித்து, மறுகி - மனங்கலங்கி, வீழ்ந்தாள் - கீழ்வீழ்ந்து, வெயில் சுடு கோடை தன்னில் என்பு இலா உயிரின் வேவாள் - வெயில் கொளுத்துகின்ற முதுவேனிற்காலத்தில் (அவ்வெயிலிலே அகப்பட்ட) என்பில்லாத பிராணியைப் போல [புழுப்போல]த் துடிப்பவளாளாள்; (எ - று.)

மரணமடைந்தநாள் விடியுங்காலத்தில் வந்தியர்முதலியோர் தோத்திரப் பாடல்களைப்பாடுதல்முதலிய அரசர்க்குரிய மரியாதைகளைச்செய்தும் தசரத மன்னவன் எழுந்துவராமலிருக்கவே, அந்தப்புரத்திருந்த மகளிர்கள் மெல்லியசொற்களால் எழுப்பியும் எழுந்திராததுகண்டு அரசனையணுகி நிதானித்துப்பார்த்து மூச்சுமுதலிய தயிலுக்குரிய குறிகள் ஒன்றும்இல்லாததுகண்டு மெல்லமெல்ல மன்னவன் மரணமடைந்திட்டானென்றே அறுதியிட்டு, துயரின்மிகுதியால் மெய்ம்மறந்து அயர்ந்துகிடக்குங் கௌசலையைப்பார்த்துக்கதறியழ;அந்தக்கோசலை அவ்வொலியாற் கண்விழித்தெழுந்து அரசனை உற்றுப்

பார்த்தும் பரிசித்துப்பார்த்தும் மன்னன் மரணமடைந்தானென்றே நிச்சயித்துக் கதறிக்கொண்டு புலம்பலாயின னென்று முதனூலிற் கூறியுள்ளது. துயரத்தினுல்வருந்துங் கௌசலைக்கு, நல்லவெயிற்காலத்திற் கடுவெயிலிலகப்பட்டுத் துடிக்கும் புழுவை உவமை கூறினர். மயிற்குலம் - மயிற்கூட்ட மென்று சொல்வதிற் சிறப்பில்லை. பி-ம்:—[1]உயிர்த்திலன். [2]உணர்வுமில்லன், உணர்வுமில்லை. [3]என. (நுகூ)

கூக.—கௌசலை புலம்பத்தொடங்குதல்.

இருந்தவந் தணீனை டெல்லா மீன்றவன் றன்னை [1]யீனப்
பெருந்தவஞ் செய்த நங்கை [2]கணவனிற் பிரிந்து தெய்வ
மருந்திழந் தவரின் விம்மி மணிபிரி யரவின் [3]மாந்தி
யருந்துணை [4]யிழந்த வன்றிற் பெடையென வரற்ற லுற்றுள்.

(இ - ள்.) இருந்த அந்தணனேடு எல்லாம் ஈன்றவன்தன்னை ஈன பெருதவம் செய்த நங்கை-என்றும் இருப்பவனுகிய பிரமதேவனேடு எல்லாவுலகங்களையும் தந்தருளியவனுகிய திருமாலைப் புதல்வனுகப்பெறுமாறு மிக்க தவஞ் செய்த பெண்களிற் சிறந்த கௌசலை, கணவனின் பிரிந்து-கணவனை நீங்கப்பெற்று, தெய்வம் மருந்து இழந்தவரின் விம்மி மணி பிரி அரவின் மாந்தி - தேவாமிருதத்தை யிழந்தவர்போன்று வருந்தியும் (தன்னுச்சியிலிருக்கும்) மாணிக்கத்தை யிழக்கப்பெற்ற சர்ப்பம்போல மயங்கியுமிருந்து, (பிறகு), அருதுணை இழந்த அன்றில் பெடை என - (தன்னுடைய) அருமையான ஆணை யிழக்கப்பெற்ற பெண்ணன்றிற் பறவைபோல, அரற்றல் உற்றுள் - கதறத் தொடங்கினள்; (எ-று.)—கதறுவதை மேல் ஆறுகவிகளிற் காண்க.

பர்த்தாவையே தனக்குப் போக்கியமாகவும் அலங்காரமாகவும் எல்லாமுமாகவும் பாராட்டித் தன்புதல்வனையும் பிரிந்திருந்த பதிவிரதாசிரோமணியாகிய கௌசலை, அந்தக் கணவனையும் இழக்க நேர்ந்ததனுல், அரிதிற்பெற்றுத் தன்கைப்பட்ட தேவாமிருதம் கைவிஞ்சிப் போனதுபோலவும் அரவம் தன்னுச்சி மாணிக்கத்தையிழந்ததுபோலவும் மிகவும் வருந்தி, துணையையிழந்த அன்றிற் பேடுபோலக் கதறலாயின னென்பதாம். மணிபிழந்தநாகம் வருந்துவதனை "அருமணியிழந்தோர் நாக மலமருகின்றது" என்றவிடத்துங் காண்க. பிரமதேவன் புராணமுனி என்று கூறப்படுவனுதலால், அவனை 'இருந்தவந் தணன்' என்றுர். எல்லாவற்றையும் ஈன்ற கடவுளைப் புதல்வனுகப் பெறுவது பெருந்தவத்தின் காரியமென்பது, கூறுமலே விளங்கும். பி-ம்:—[1]ஈன்ற. [2]கணவனைப். [3]மாழ்கி. [4]பிறிந்த, பிரிந்த. (சுஂ)

வேறு.

சுச.—இதுமுதல்ஆறுகவிகள் - கணவனையிழந்த கௌசலையின்புலம்பல்.

தானே தானே தஞ்சமி லாதான் [1]றகைவில்லான்
போனுன் போனு னெங்களை [2]நீத்திப் பொழுதென்னை
வானீர் சுண்டி மண்ணற [3]வற்றி மறுகுற்ற
மீனை [4]யென்ன மெய்தடு மாறி [5]விழுகின்றுள்.

(இ-ள்.) 'தஞ்சம் இலாதான் - தாழ்வு இல்லாதவனும், தகை வில்லான்- பெருமைக்குணமுடைய வில்லையுடையவனுமாகிய மன்னவன், இப்பொழுது—, எங்களை நீத்து—, தானே தானே போனான் போனான் - ஒருவியாதியுமில்லாமலே தானேயிறந்திட்டான்,' என்ற - என்றுகூறி;—வான் நீர் சுண்டி - வானினின்று பெய்யும் மழைநீரும் இன்றி, மண் அற வற்றி - பூமியிலும் (தான்வாழும் நீரும்) அடியோடு வற்றியதனால், மறுகுற்ற-நிலைதடுமாறிய, மீன் ஏ என்ன - மச்சம் போல, மெய் தடுமாறி விழுகின்றார்கள் - உடம்பு தடுமாறி விழுகின்றவளாளால், (கௌசலை); (எ - று.)

நீர் வாழுயிரான மச்சத்துக்கு வானீரில்லாவிடினே நீர்வாழ்வது வருத்தமாயிருக்கும்; அவ்வானீரில்லாமையோடு தான் வாழ்கின்ற நீரும் மாறினால் நீர்வாழுயிரான அம்மீன் தடுமாறுவதுபோல, இராமபிரானைப் பிரிந்ததனால் எற்கேவவருத்தமுற்றிருந்த கௌசலை இப்போது தான் வாழிடமானகணவனையும் இழந்ததனால் மனங்கலங்கித் தடுமாறினளென்று உவமானப்பொருத்தங் காண்க. சுண்டி வற்றி என்ற செய்தினைச்சங்கள், காரணப்பொருளன. முதலடியில் [1]தகவில்லான்என்ற பாடத்துக்கு-இராமனைக் காட்டிற்கு அனுப்பியதனால் தகுதியற்றவனாகிய மன்னவன், தஞ்சம் இலாதான் - தன்னைக் காப்பவர் இல்லாதவனாகி, தானே தானே போனன்போனான் - தானே தற்கொலைசெய்துகொண்டாற்போல இறந்திட்டான் என்று பொருள்காண்க. அவலத்தினால், தானேதானே போனன்போனான் என்ற அடுக்குகள் வந்தன. சிலபிரதிகளில் முறையே "வடித்தாழ்" (சுஎ) "நோயும்" (சுசு) என்ற பாடல்கள்இருக்க, அவற்றின்பின் இப்பாடல் காணப்படுகின்றது. **பி-ம்:**— [2]நீக்கி. [3]வற்ரு, வற்ற. [4]போல. [5]மெலிகின்றாள். (சுஐ)

சுஏ. [1]ஒன்ரு நன்னுட் டுய்க்குவ ரிந்நாட் டுயிர்காப்பா
[2]ரன்றே மக்கட் பெற்றுயிர் வாழ்வார்க் [3]கவ[4]முண்டே
யின்றே வந்தீண் டஞ்ச [5]லெனுதெம் மகனென்பான்
கொன்ரு [6]னன்றே தந்தையை யென்றாள் குலைகின்றாள்.

(இ - ள்.) இ நாட்டு உயிர் காப்பார் - இந்தநாட்டிலே பிராணிகளைப் பாதுகாப்பவராகிய அரசர், ஒன்றுஆ - ஒருதலையாக, நல் நாடு - வானுலகத்து நாட்டிலும், உய்க்குவர்அன்றே - (அரசு) செலுத்துவார்களன்ரே; (மேலும்), மக்கள் பெற்று உயிர் வாழ்வார்க்கு-உயிருடன் வாழ்ந்திருந்து மக்களைப்பெற்ற மானுடர்க்கு, அவம் உண்டுஎ - நல்லுலகமில்லாதுபோவது நேர்படுமோ? [நேராதென்றபடி]; (ஆயினும்), எம்மகன் என்பான் - எமது மகன், இன்றுஎ ஈண்டு வந்து - (அரசன் உயிர்போவதாயிருந்த) இன்றைத்தினமே இங்கு வந்து, அஞ்சல் எனுது - '(யான்பிரிந்து சென்றிட்டேனென்று என் பிரிவுத்துயருக்கு) அஞ்சவேண்டா' (யான் வந்திட்டேன்) என்று சொல்லாமையால், தந்தையை - (தன்) தந்தையாரை, கொன்ரூன் அன்றே - உயிர்நீங்குமாறு செய்தானன்ரே? என்ரூள்-என்று (கௌசலை) வாய்விட்டுக் கதறுபவளாய், குலைகின்றாள் - (துயரத்தினால்) நடுங்குபவளாளால்; (எ - று.)

இந்தக்கோசலநாட்டில் அரசுபுரியும் மன்னவர் மறுமையில் வானுலகத்தும் அரசுபுரிவாரேயன்றித் தீக்கதிக்கட் செல்லார்;மேலும் புதல்வரைப்பெற்றோர்க்குத் தீக்கதியில்லை யென்பதும் நூல்களிற் பிரசித்தம்; ஆகவே, தசரத மன்னவர் நற்கதிசேர்ந்தாரோ இல்லையோ என்ற கவலையில்லை;ஆயினும், தீக்கதியிற் புகாது காப்பவனென்று பிரசித்தனை அந்தனதுகுமாரன் மன்னர் பெருந்துயரடைந்து சாகின்றநிலையைச் சார்ந்தபோதுகிட்டிவந்து 'அஞ்சாதே' என்று சொல்லாமல் அம்மன்னவரை உயிரொழியுமாறுசெய்தானே! இதுவே என்துயரத்தை மிகுவிக்கின்ற தென்றுசொல்லிக் கௌசலைபுலம்பினளென்க. [1]ஒன்றோஎன்ற பாடத்தில், முன்னிரண்டடிகட்கு-(புத்திரராற்பெறும்) பயன் ஒன்றுதானே? [ஒன்றன்று: பலவாகும்]; புத்திரர் தம்மைப்பெற்றோரை நற்கதியிற்சேர்ப்பார்: இம்மையிலும் (பெற்றோரிருக்குமளவும்) அவரைப்பாது காப்பாரன்றோ? ஆதலால், மக்களைப்பெற்றோர்க்கு அவமுண்டோ? என்றும் உரைக்கலாம். பி-ம்:—[1]ஒன்றோ, ஒன்றே. [2]அன்றேல். [3]அறம். [4]உண்டோ. [5]எதுதே, எதுதென். [6]என்றே, அந்தோ, அன்றோ. (சுஙஉ)

சுசுசு. நோயும் [1]மின்றி நோன்கதிர் வாள்வே லினை[2]யின்றி
மாயுந் [3]தன்மை மக்களி [1]னூலா மறமன்ன
[5]னேயுந் [6]தெண்டு மிப்பியு மாகங் கனிவாழை
வேயும் போன்று னென்று [7]மயங்கா விழுகின்றுள்.

(இ - ள்.) 'நோய் உம் இன்றி-(மரணமடைதற்குஏதுவான உடற்)பிணியால் இறத்தலும் இல்லாமல், நோன் கதிர் வாள் வேல் இவை இன்றி - நிறைந்த ஒளியையுடைய வாட்படை வேற்படை என்ற இவைகளால் இறத்தலும் இல்லாமல், மாயும் தன்மை - மரணத்தையடையக்கூடியநிலை, மக்களில் ஓ-பெற்ற புத்திரரால் நேர்வதோ? (இது என்ன அநியாயம்!!) மறம் மன்னன் - வலிமையையுடைய தசரதமன்னவன்,—எயும் தெண்டுஉம்-பொருந்திய நண்டும், இப்பியும்-முத்துச்சிப்பியும், ஆகம் கனி வாழை (உம்) - தன்னிடத்துக் கனியைக் கொண்ட வாழையும், வேய்உம்-மூங்கிலும், போன்றுன்-(கொண்ட கருவினுல் அழிவதுபோல) ஆனன்,' என்று—, மயங்கா - மயங்கி, விழுகின்றுள் - வீழ்பவளும் ஆனாள்; (எ - று.)

உலகத்திலே நோயால் இறப்பது என்பது, மாந்தர்கட்கு இயற்கை: மன்னவர்க்கோ முனைமுகத்துச்சென்று வில்வாள்முதலியபடைக்கலங்களால் இறத்தல் சிறந்ததாம்: இவ்விருவகையானும் அல்லாமல் தன்மகன்மூலமாக [மகனைப்பிரிந்த காரணமாக]இத்தத்தசரதமன்னவனுக்கு மரணம் நேர்ந்ததே! என்றுபுலம்பின ளென்க. படைக்கலத்தால் இறந்துபடுதலே மன்னவர்க்குச் சிறப்பாதலால், அங்ஙனம் படைக்கலத்தால் இறவாது அரசகுலத்தவர் நோயால் ஒருகால் இறந்துபடினும் அம்மன்னவரை அந்தணர் தருப்பையிற்கிடத்தி வாளாற்போழ்ந்து 'போரிலிறந்தவர் புக்க உலகம் புகுக'என்று கூறுதலும் மரபாயிருந்த தென்பதை, "மன்னர், நோய்ப்பால்விளிந்தயாக்கைதழீஇக்,

காதன்மறந்தவர் தீதுமருங்கறுமா, ரறம்புரிகொள்கை நான்மறைமுதல்வர், திறம்புரிபசும்புல் பரப்பினர்கிடத்தி, மறங்கந்தாக நல்லமர்வீழ்ந்த, நீள் கழன்மறவர் செல்வுழிச் செல்கென,வாள்போழ்ந்தடக்கலுமுய்ந்தனர்' என்ற புறநானூற்றாலும், "கொற்றங்கொண்டு குடிபுறங்காத்துச், செற்றத்தெவ்வர் தேயந்தமதாக்கியுந், தருப்பையிற்கிடத்தி வாளிற் போழ்ந்து, செருப்புகன் மன்னர் செல்வுழிசெல்கென, மூத்துவிளித லிக்குடிப் பிறந்தோர்க்கு, நாப் புடைபெயராது நாணுத்தகவுடைத்தே" என்ற மணிமேகலையாலும் உணர்க. ளுண்டுமுதலியவற்றினின்றுதோன்றுங் கரு அவற்றையழிக்கு மென்பது பிரசித்தம்; இதனை, "நண்டுசிப்பிவேய்கதலி நாசமுறுங் காலத்துக், கொண்ட கருவழிக்குங்கொள்கைபோல்"என்றதனாலும் அறியலாம். [5]காயும் புள்ளிக்கர்க் கடநாகங் கனிவாழை என்றபாடத்திற்கு-கர்க்கடமும்நாகமும்என்பவை கரு விறற்சாதல் ஜாதிகவுவமானமெனவும், வாழையும் வேயும் பிரதியட்சவுவமா னமெனவுங் கூறினரு முளர்; நாகம் கொண்ட கருவினுல் இறத்தல் ஜாதிக மாகவும் வழங்குவதாகத் தெரியவில்லை: ஆதலால், கனிவாழைநாகம் எனக் கூட்டிக் கனியாதற்குரிய வாழைமரமென்னலாம்: நாகம் - நகம் என்பதன் நீட்டல்: நகம் - மரமென்க. இனி, நாகம்-நாகம்போற் கொட்டப்பட்டார்க்கு வருத்தத்தை யுண்டாக்கக்கூடிய விருச்சிகமென்பாருமுளர். பி-ம்:—[1]அன் றேல், அன்றி. [2]அன்றி. [3]செல்வம். [4]ஆக, ஆம், ஆகி. [5]காயும். [6]புள்ளிக்கற் புடம், புள்ளிகீகற்றடி. [7]மயங்கி. (கூ0கூ)

கூஎ. வடித்தாழ் கூந்தற் கேகயன் மாதே மதியாலே
பிடித்தாய் வையம் பெற்றனை போரா வரமின்னே
மூடித்தா யன்றே மந்திர மென்றுண் முகில்வாய்மின்
றூடித்தா லென்ன மன்னவன் மார்பிற் றுவள்கின்றுள்.

(இ-ள்.)முகில்வாய் மின் துடித்தால் என்ன மன்னவன் மார்பில் துவள் கின்றுள் - முகிலினிடத்து மின்னல் துவள்வதுபோலத் தசரதமன்னவன் மார்பிலேகிடந்து (துயரத்தால் துவள்பவளாகிய கோசலை, (கைகேயியைப் பார்த்து), 'வடி தாழ்.கூந்தல் கேகயன் மாதே-அழகுபெற்றுத் தொங்குகின்ற கூந்தலையுடைய கேகயவரசன் புதல்வியே! மதியாலே-(உன்) புத்திவல்லமை யாலே, வையம் பிடித்தாய் - பூமியைக் கைப்பற்றிக்கொண்டாய்; (அங்ஙனம் கைப்பற்றுமாறு), போரா வரம் பெற்றனை-மாறு சொல்லமுடியாத வரத்தை யடைந்தாய்;இன்னே மந்திரம் முடித்தாய் அன்றே-இப்போதே உன் ஆலோ சனையை முடித்தாயல்லவா!' என்றுள்-என்றும் கூறினள்; (எ - று.)

கௌசலை தசரதனதுமார்பில் வீழ்ந்து புரண்டுபுலம்பும்போது கைகேயி இருந்தாளைப் பார்த்து, 'அடி! கைகேயி! நீ நல்லதந்திரஞ்செய்து மாறு கூற முடியாத வரமென்ற ஒன்றைப்பற்றி இராச்சியத்தைக்கைப்பற்றி வெற்றகாரி யத்தை நன்குமுடித்தாய்'என்று அரசன் இறப்பதற்குக்காரணம் அவளென்பது படக் குத்துப்பாடாகக் கூறினளென்க. வால்மீகிராமாயணத்தில் கௌசலை புலம்பும்போது மன்னவனது தலையைத் தன்மடிமேல் வைத்துக்கொண்டு

காதன்மறந்தவர் தீதுமருங்கறுமா, ரறம்புரிகொள்கை நான்மறைமுதல்வர், திறம்புரிபசும்புல் பரப்பினர்கிடத்தி, மறங்கந்தாக நல்லமர்வீழ்ந்த, நீள் கழன்மறவர் செல்வுழிச் செல்கென,வாள்போழ்ந்தடக்கலுமுய்ந்தனர்' என்ற புறநானூற்றுரலும், "கொற்றங்கொண்டு குடிபுறங்காத்துச், செற்றத்தெவ்வர் தேயந்தமதாக்கியுந், தருப்பையிற்கிடத்தி வாளிற் போழ்ந்து, செருப்புகன் மன்னர் செல்வுழிசெல்கென, மூத்துவிளித லிக்குடிப் பிறந்தோர்க்கு, நாப் புடைபெயராது நாணுத்தகவுடைத்தே" என்ற மணிமேகலையாலும் உணர்க. ஞெண்டுமுதலியவற்றினின்றுதோன்றுங் கரு அவற்றையழிக்கு மென்பது பிரசித்தம்; இதனை, "நண்டுசிப்பிவேய்கதலி நாசமுறுங் காலத்துக், கொண்ட கருவழிக்குங்கொள்கைபோல்"என்றதனாலும் அறியலாம். [5]காயும் புள்ளிக்கர்க் கடநாகங் கனிவாழை என்றபாடத்திற்கு-கர்க்கடமும்நாகமும்என்பவை கரு விழுற்சாதல் ஐதிகவுவமானமெனவும், வாழையும் வேயும் பிரதியட்சவுவமா னமெனவுங் கூறினரு முளர்; நாகம் கொண்ட கருவிலுல் இறத்தல் ஐதிக மாகவும் வழங்குவதாகத் தெரியவில்லை: ஆதலால், கனிவாழைநாகம் எனக் கூட்டிக் கனியாதற்குஉரிய வாழைமரமென்னலாம்: நாகம் - நகம் என்பதன் நீட்டல்: நகம் - மரமென்க. இனி, நாகம்-நாகம்போற் கொட்டப்பட்டார்க்கு வருத்தத்தை யுண்டாக்கக்கூடிய விருச்சிகமென்பாருமுளர். பி-ம்:—[1]அன் றேறல், அன்றி. [2]அன்றி. [3]செல்வம். [4]ஆக, ஆம், ஆகி. [5]காயும். [6]புள்ளிக்கற் புடம், புள்ளிக்கற்றடி. [7]மயங்கி. (கூ0ங)

கூஎ. வடித்தாழ் கூந்தற் கேகயன் மாதே மதியாலே
பிடித்தாய் வையம் பெற்றனை போரா வரமின்னே
முடித்தா யன்றே மந்திர மென்றுண் முகில்வாய்மின் -
றடித்தா லென்ன மன்னவன் மார்பிற் றுவள்கின்றுள்.

(இ-ள்.)முகில்வாய் மின் துடித்தால் என்ன மன்னவன் மார்பில் துவள் கின்றுள் - முகிலினிடத்து மின்னல் துவள்வதுபோலத் தசரதமன்னவன் மார்பிலேகிடந்து (துயரத்தால்,துவள்பவளாகிய கோசலை, (கைகேயியைப் பார்த்து), 'வடி தாழ்.கூந்தல் கேகயன் மாதே-அழகுபெற்றுத் தொங்குகின்ற கூந்தலையுடைய கேகயவரசன் புதல்வியே! மதியாலே-(உன்) புத்திவல்லமை யாலே, வையம் பிடித்தாய் - பூமியைக் கைப்பற்றிக்கொண்டாய்; (அங்ஙனம் கைப்பற்றுமாறு), போரா வரம் பெற்றனை-மாறு சொல்லமுடியாத வரத்தை யடைந்தாய்;இன்னே மந்திரம் முடித்தாய் அன்றே-இப்போதே உன் ஆலோ சனையை முடித்தாயல்லவா!' என்றுள்-என்றும் கூறினள்; (எ - று.)

கௌசலை தசரதனதுமார்பில் வீழ்ந்து புரண்டுபுலம்பும்போது கைகேயி இருந்தாளைப் பார்த்து, 'அடி! கைகேயி! நீ நல்லதந்திரஞ்செய்து மாறு கூற முடியாத வரமென்ற ஒன்றைப்பற்றி இராச்சியத்தைக்கைப்பற்றி எடுத்தகாரி யத்தை நன்குமுடித்தாய்'என்று அரசன் இறப்பதற்குக்காரணம் அவளென்பது படக் குத்துப்பாடாகக் கூறினளென்க. வால்மீகிராமாயணத்தில் கௌசலை புலம்பும்போது மன்னவனது தலையைத் தன்மடிமேல் வைத்துக்கொண்டு

கைகேயியைநோக்கி ''கைகேயி! உன்கருத்து நிறைவேறிற்று: கொடியதன்மை யுடையவளே! பிடிவாதயாக இருந்து உன்முயற்சியை நிறைவேற்றிக்கொண் டாயல்லவா! மன்னவனைப் போக்கினை. இராமனும், இல்லை. இனி இராச்சி யம் முழுவதையும் உன்தலையிற்றானே கட்டிக்கொண்டு அனுபவிப்பாய்' என் பது முதலாகக் கூறுமாற்றைக் காணலாம். வடுதல்-அழகுபெறுதலென்னும் பொருளதாதலை ''வடுவின்று வடிந்தயாக்கையன்'' என்ற புறநானூற்றாலும் அறியலாம். (சுoச)

சுஉ. அருந்தே ராணைச் சம்பர னைப்பண் டமர்வென்று
யிருந்தார் வானே ருன்னரு ளாலே யினி[1]தன்றோ
விருந்தா கின்று யென்றனள் வேழத் தரசொன்றைப்
[2]பிரிந்தா ரன்பிற் [3]றுழ்பிடி யென்னப் [4]பிரிவுற்றாள்.

(இ-ள்.) வேழத்து அரசு ஒன்றை-ஒப்பற்ற அரசயானையை, பிரிந்து—, ஆர் அன்பில் தாழ்-நிறைந்த அன்பிலால் மனந்தளர்கின்ற, பிடி என்ன-பெண் யானைபோல, பிரிவு உற்றாள்-(கணவனைப்) பிரிந்த கௌசலை,-அரு தேரானை சம்பரனை-(தன்னைத்தொடர்ந்து வெல்லுதற்குக்கூடாத) அருமையான தேரிற் சென்றுபொருத சம்பராசுரனை, பண்டு - முற்காலத்து, அமர் வென்றாய் - போரில் வென்றவனே! உன் அருளால்ஏ வானோர் இனிது இருந்தார் - உன் னுடைய கருணையிலாலே தேவர்கள் (அந்தச் சம்பராசுரனால் தமக்கு உண்டா யிருந்த வருத்தம்நீங்கிச்) சௌக்கியமாக (இப்போது) இருக்கின்றார்கள்; அன் னர் விருந்து ஆகின்றாய் - (அப்படி உன்னாலே உபகாரம்பெற்ற) அத்தேவர் கட்கு விருந்தினனாகின்றாய்,' என்றனள் - என்றுங் கூறினாள்; (எ - று.)

வானவர்கள் உன்னால் நன்மையடைந்து தம்மரசு நிலைநிற்பதனால் தாம் தம்முடையஇடத்தில் இனிதாகஇருக்க, அத்தேவர்கட்கும் உதவும் வல்லமை யுள்ள நீ இவ்வுலகத்திற்றானே இனிதிராமல் அவ்வானுலகத்தார்க்கு விருந் தாகச் சென்றாயோ?என்று புலம்பினாள் கௌசலை யென்க. பி-ம்:—[1]இந்நாள். [2]பெருந்தாழன்பில். [3]சூழ். [5]புரள்கின்றாள். (சுoரு)

சுஊ. வேள்வித் செல்வந் துய்த்திகொன் மெய்ம்மைத் துணை[1]யின்
[2]சூழ்வுச் செல்வந் துய்த்திகொ றோலா மனு [3]றூலின் [மைச்
[4]வாழ்வுச் செல்வந் துய்த்திகொன் [5]முன்னென் றனள்வானோர்
கேள்வித் செல்வந் துய்க்க வயிற்றோர் [6]கிளைதந்தாள்.

(இ - ள்.) வானோர் - தேவர்களும், கேள்வி செல்வம் - வேதத்தின்செல் வமாகிய பரம்பொருளை, துய்க்க-(கண்ணாற் கண்டு) அனுபவிக்கும்படி, வயிற்று-(தன்) வயிற்றிலிருந்து, ஓர் கிளை-ஒப்பற்ற புதல்வனை, தந்தாள் - பெற்றவ ளாகிய கௌசலை,—(இறந்த மன்னவனைக்குறித்து), 'முன்-முன்னே(நீ செய் தருள்ள), வேள்வி செல்வம்-யாகங்களின்பயனை, துய்த்திகொல்-அநுபவிக்கச் சென்றாயோ? . மெய்ம்மை - சத்தியத்தைமேற்கொண்டதனாலாகிய, துணை

இன்மை சூழ்வு செல்வம் - ஒப்பற்றதாய்ச் சூழ்தலையுடைய பயனை, துய்த்தி கொல் - அநுபவிக்கச்சென்றுயோ? தோலா மனு நூலின் வாழ்வு செல்வம் - இழிவுபடுதலில்லாத மனுதருமசாத்திரத்தின் முறைப்படியே வாழ்தலாலான பயனை, துய்த்தி கொல்-,' என்றனள் - என்று புலம்பலானுள்; (எ - று.)

வேள்விசெய்தல் சத்தியமேயுரைத்தல் மனுமுறைப்படியொழுகுதல் என்பவற்றை முன் மேற்கொண்டிருந்தாயாதலால், அந்த வேள்விப்பய னையோ, அல்லது சத்தியத்தின் பயனையோ, அன்றி மநுதருமசாஸ்திரப்படி நடந்ததன் பயனையோ அநுபவிக்குமாறு சென்றுய்போலு மெனப் புலம்பி னள் கௌசலை யென்க.''யாருஞ்செய்யாதயாக மிவன்செய்துமறந்த'' என்று அரசியற்படலத்திற் கூறியதனால், தசரதசக்ரவர்த்தி பலவகையாகங்களையும் இயற்றியுள்ளா னென்பது, பெறப்படும். ஸ்ருதி என்று வேதத்திற்கு வட மொழியில் ஒருபெயராதலால், அச்சொல்லின் மொழிபெயர்ப்பாக 'கேள்வி' என்றார்: கேள்வி யென்பது வேதமென்ற பொருளில் வருதலை ''கெடுவில் கேள்வியு ணடுவாகுதலும்'' என்ற பரிபாடலிலும் காண்க. செல்வம் - பூமியி னுள்ளே மறைந்துகிடக்கும் நிதிபோல வேதத்தின் உட்பொருளாய் மறைந் திருக்குங் கடவுள். கிளை என்ற சொல்-கிளைஞருள் ஒருவனுகிய மக னென்ற பொருளைத் தந்தது. பி-ம்:—[1]இன்பம். [2]சூழி, சூழ்வின். [3]நூலால். [4]வாழிச். [5]மன். [6]கிரி. (சுஐசு)

வேறு.

எ0.—கோசலையும் சுமித்திரையும் புலம்புகையில் மற்றைத் தேவிமார் திரண்டுவந்து புலம்புதல்.

ஆழி வேந்தன் பெருந்தேவி [1]யன்ன பன்னி யழுதரற்றத்
தோழி யன்ன சுமித்திரையுந் துளங்கி யேங்கி யுயிர்சோர
வூழி [2]திரிவ தெனக்கோயி லுலையும் வேலை மற்றழுந்த
மாழை [3]யுண்கட் டேவியரு மயிலின் குழாத்தின் வந்திரைத்தார்.

(இ - ள்.) ஆழி வேந்தன் பெரு தேவி - ஆஞ்ஞாசக்கரத்தைக்கொண்ட தசரதமன்னவனது தேவிமாருள் மூத்தவளாகிய கௌசலை,-அன்ன பன்னி-அவ்வாறுன சொற்களைச் சொல்லி, அழுது அரற்ற - புலம்பிக் கதற,-(அப் போது), தோழி அன்ன சுமத்திரைஉம் - (அந்தக் கௌசலாதேவிக்குத்) தோழிபோல்பவளான சுமத்திராதேவியும், துளங்கி ஏங்கி உயிர் சோர - மனம் வருந்திப் புலம்பி உயிர்தளர்ந்திருக்க [மூர்ச்சித்திருக்க],-ஊழி திரிவது என கோயில் உலையும் வேலை - யுகம்முடிவதுபோல அரண்மனை (நிலைமாறி) வருத்தமடைந்த அப்பொழுது,ஒழிந்த மாழை உண் கண் தேவியர் உம்-மற்று மூள்ளவரான மாதுவைபோத்து மையுண்டகண்களையுடையதேவிமார்களும், மயிலின் குழாத்தின் வந்து - மயிற்பறவைகளின் கூட்டம்போலத் திரண்டு வந்து, இரைத்தார் - பேரொலியுண்டாகுமாறு அழுதார்கள்; (எ - று.)—மற்று - அசை.

கீழ்க் கோசலை புலம்பியதைக்கூறி, அவளுடனே சுமித்திரையும் தோழி போல் அழுது உயிர் சோர்ந்தா ளெனச் சுமித்திரை கோசலையுடன் புலம் பியதை முன்னிரண்டடிகளாற் கூறினர். இதுவரையிற் பெருமகிழ்ச்சியுட னிருந்த மன்னவனதுகோயில் இப்போது அங்ஙிலமாறியதலை, 'ஊழிதிரிவ தெனக் கோயிலுலையும்வகை' என்றது. பி-ம்:—[1]அனைய. [2]பேர்வது. [3]ஒண்.

எக.—தீரண்டதேவியர் சகசுமனஞ்செய்யுமாறு மனவுறுதிகோள்ளுதல்.

துஞ்சி னானைத் தம்முயிரின் றுணையை கண்டார் துணுக்கத்தா
னஞ்சு [1]நுகர்ந்தா ரென[2]வுடல [3]நடுங்கா நின்ரு ரென்ரு லு
மஞ்சி [4]யழுங்கி விழுந்திலரா லன்பிற் றறுகண் பிறிதுண்டோ
வஞ்ச மில்லா மனத்தானை வானிற் [5]றொடர்வான் மனம்வலித்தார்.

(இ - ள்.) (அங்ஙனம் அரற்றிய அம்மங்கைமார்),— துஞ்சினானை தம் உயிரின் துணையை-இறந்துபட்ட தமதுஉயிர்க்குத்துணைவனை [கணவனை] னவனை, கண்டார்-(கண்ணுற்) கண்டு, துணுக்கத்தால்-(மனத் ய) அச்சத்தினல், நஞ்சு நுகர்ந்தார் என-விஷத்தை யுண்டவர் ம் நடுங்காநின்ரூர்-தம்முடம்பு நடுங்கப்பெற்ரூர்: என்ரூல்உம்—, ா மனத்தானை-வஞ்சனைக்குணம் சிறிதும் இல்லாத [சுத்தமான] டைய அந்தத்தசரதனை, வானில் தொடர்வான்-வானுலகத்திலும் சல்லும்படி, மனம் வலித்தார் - நெஞ்சிற்குள் உறுதிசெய்து ய், அஞ்சி அழுங்கி விழுந்திலர் - மேன்மேலும் அச்சமும் மனத் கு மூர்ச்சித்துவிழுந்திலர்; அன்பில் தறுகண் பிறிது உண்டோ - ்டிலும்கொடியது வேரொன்று உண்டோ?[இல்லையென்றபடி].

வன் இறந்துவிட்டானென்பதைக் கேள்வியுற்றதும் அரற்றிக் கொண்டு திரண்டு வந்தவரான அந்தத்தசரதனுடைய மற்றைத்தேவிமார் இறந்தகணவனைக் கண்ணுற் கண்டதும் முதலில் நஞ்சுண்டவர்போல் நடுக்கம் மிகப்பெற்ரூராயினும், பிறகு சகசுமனஞ்செய்து கணவன்புக்கவுலகத்துக்குத் தாமும் போய்விடுவதாகத் தம்நெஞ்சில் உறுதி கொண்டதனுற் பின்னும் அஞ்சியழுங்கி மூர்ச்சியாதவராயின ரென்க. தம்கணவனை வானில் தொடரு மாறு மனம் வலித்ததற்குக் காரணம்-தம்கணவனிடத்து அத்தேவியர் கொண் டிருந்தபேரன்பே யென்பார், 'அன்பிற்றறுகண் பிறிதுண்டோ' என்ரூர். தம்முயிரையும் விடுமாறு அன்பு தூண்டுவதனல், அந்த அன்பு தறுகண்மை யுடையதாகும். 'வஞ்சமில்லாமனத்தானை வானிற்றொடர்வான் மனம் வலித் தார்' என்ற வாக்கியத்தை 'அன்பிற்றறுகண்பிறிதுண்டோ' என்ற வாக்கி யஞ் சமர்த்தித்து நின்றது; தொடர்ந்திலர்செய்யுட்குறியணியாம். பி-ம்:— [1]கவர்ந்தாலென, கரந்தாலென, நுகர்ந்தாலென, நுகர்ந்தாரன்று. [2]உடலும். [3]நடுங்குகின்ரூர். [4]அஞ்சி. [5]தொடர்வாமெனுமனத்தார். (சுஅ)

எஉ.—இதுவும் அடுத்த கவியும் - மகளிர் அநிதத்தானை சூழ்ந்திருத்தலின் வருணனை.

அளங்கொ ளலக்க ரிருப்பரப்பி லண்ட [1]ருலகி லப்புறத்தில்
[2]விளங்கு மாதர் கற்பிணை [3]ரிவரின் யாரே யெனநின்ரூர்
களங்க நீத்த [4]மதிமுகத்தார் [5]கான வெள்ளங் கால்கோப்பத்
துளங்க லில்லாத் தனிக்[6]குன்றிற் ரொக்க மயிலிற் சூழ்ந்திருந்தார்.

(இ - ள்) 'அளம் கொள் அளக்கர் இரும் பரப்பில் - உப்பளத்தைக் கொண்ட கடலாற்சூழப்பட்ட பெரிய பூமிமுழுவதிலும், அண்டர் உலகில் - சுவர்க்கலோகத்திலும், அப்புறத்தில் - (அதற்கும்) அப்பாற்பட்ட மகர்லோகம் முதலிய இடங்களிலுமுள்ள, விளங்கும் மாதர் கற்பினர் [கற்புவிளங்கும் மாதர்] - கற்புடன் விளங்குகின்ற மகளிர், இவரின்-இம்மங்கைமாரைக்காட்டிலும், யார்எ - யாவர்தாம் உளர்?' என - என்று சொல்லுமாறு, நின்றூர் - (கற்பிலுல் மேம்பட்டு) இருப்பவராகிய, களங்கம் தீர்த்த மதி முகத்தார்-களங்கமற்ற சந்திரனையொத்த மகளிர்; கானம் வெள்ளம் கால் கோப்ப - காட்டு நதியின்வெள்ளம் மலையினடிப்பகுதியையும் கவிந்துகொள்ள, துளங்கல் இல்லா தனி குன்றில் - அசைதலில்லாத ஒப்பற்ற மலையிலே, தொக்க-கூடியிருந்த, மயிலின் - மயிற்பறவைகள்போல, சூழ்ந்திருந்தார் - (அவ்வரண்மனையில்) திரண்டிருந்தார்கள்; (எ - று.)

அதசரதனுடைய தேவிமார் கணவனைப்பிரிந்து இவ்வுலகிலிருக்க மனமில்லாமல் கணவனுடன் சகமனஞ்செய்து உயிர்துறக்கக் கருதியதனால், அம்மகளிர் இவ்வுலகிலும் மேலுலகத்தும் தம்மோடொத்தவர் எவருமில்லாத பெருங்கற்பினரெனப்பட்டார். அவர்கள் ஒருங்கே அவ்வரண்மனையில் திரண்டதற்கு, மலையிற்றொக்கமயிற்குழாத்தை உவமைகூறினர். மயில் தொகுதற்குக் காரணங் கற்பிக்கவேண்டி 'கானவெள்ளங் கால்கோப்ப' என்றூர். தசரதமன்னனைச் சூழ்ந்திருந்த மகளிர்க்கு மலையிற்றொக்க மயில் உவமையெனக் கொள்வாருமுளர். கானம் - காடு: கானவெள்ளமெனவே, காட்டியாற்றின் வெள்ளமாயிற்று. இனி, அவர்கள் புலம்புவதுபற்றி, கானவெள்ளங் கால்கோப்ப - பிழக்கான [பலாக்கணை] ப்பாடல் எங்கும் நிறைய எனினுமாம். அளத்தற்கு அருமையானது என்ற காரணம்பற்றி, கடலுக்கு அளக்கரென்று பெயர். பி - ம்:—[1]உலகிற்கு. [2]இளங்கண். [3]இவரின் யாவரெனநின்றூர், இவரினினியாரெனநின்றூர், இவரில் யாரே யென்கின்றூர், வினவில் யாவரென்கின்றூர். [4]முகத்தினர். [5]கான. [6]வரையில்.

(கூ ஏ)

எங. கைத்த சொல்லா லுயிர்[1]நிழந்தும் புதல்வற் [2]பிரிந்தும் கடையோட, மெய்த்த வேந்தன் றிருவுடம்பைப் [3]பிரியாதழுது [4]விட்டிலராற், பித்த [5]மயக்காஞ் சுறவெறியும் பிறவிப் பெரிய கடல் கடக்க, வுய்த்து [6]மீண்ட நாவாயிற் றூம் போவா ரொக்கின்றூர்.

(இ - ள்.) புதல்வன் பிரிந்துஉம் - புதல்வனைப் பிரிந்தும், கைத்த சொல்லால் உயிர் இழந்து உம்-மனம்வெறுக்குமாறு உள்ள(கொடிய)சொல்லினாலே (தன்) உயிரே நீங்கப்பெற்றும், கடையோட மெய்த்த - (தன்) இறுதிக்காலம் வரையிலும் சத்தியத்தையே மேற்கொண்ட, வேந்தன் - தசரதமன்னவனது, திருவுடம்பை - உடலை, பிரியாது-விட்டுப்பிரியாமல்; அழுது விட்டிலர்-அழுதவண்ணம் பற்றிக்கொண்டிருந்தார்: (அவர்கள்),—பித்த மயக்கு ஆம் சுறவு எறியும் பிறவி பெரிய கடல் கடக்க உய்த்து-(மண் பொன் முதலியவற்றில்) பித்துக்கொள்வதற்குக் காரணமாகிய மாயையென்னுஞ் சுறாமீன்கள் சஞ்சரிக்

கின்ற பிறப்பாகிற பெரியகடலைக் கடக்குமாறு செலுத்தி, மீண்ட - மீண்டுள்ள, நாவாயில்-மரக்கலத்திலே, தாம்உம் போவார் - தாமும் போகப்போகின்றவர்களை, ஒக்கின்றார் - ஒத்திருந்தனர்; (எ -று.)

தான் உயிர்நீங்குமளவும் சத்தியந்தவறக்கூடாதென்ற நோன்பை மேற்கொண்டு அதிலுறற் கைகேயியின் வன்சொற்கேட்டுப் புதல்வனைப்பிரிந்து உயிரிழந்த மன்னவ னென்பது, 'கைத்தசொல்லால்...மெய்த்த வேந்தன்'என்பதனால் விளக்கப்பட்டது. மயக்கு மாயையென்பன - பரியாயச் சொற்கள். நிலையற்றனவும் சாரமற்றனவுமான உலகத்துப்பொருள்களை நிலையுள்ளனவும் சாரமுள்ளனவும்போலத் தோற்றுவித்துப் பொருள்களைப் பெறவேணுமென்ற ஓர் பித்துத்தன்மையை நெஞ்சில் தோற்றுவித்தலால், மாயையை, 'பித்தமயக்கு'என்றார். பித்த-பித்துத்தன்மையைக் கொண்ட: குறிப்புப்பெயரெச்சம். கடலில் அகப்பட்டவரைச் சுறாமீன்கள் கொன்றுதின்பதுபோலப் பிறவியில் அகப்பட்ட ஆன்மாக்களை மாயையென்பது ஈடேறவொட்டாமல் அழிப்பதனால்,அம்மாயை 'சுறவு'என உருவகஞ் செய்யப்பட்டது.தசரதனது அவ்வுடல் அவன் பிறவியைக்கடந்து மீளாவுலகஞ்சேர்தற்குச் சாதனமாக இருந்ததனால், அது பிறவிக்கடலைக்கடக்கவுய்த்த நாவாயாக உருவகஞ்செய்யப்பட்டது. அவ்வுடலத்தைத்தழுவிச் சகமனஞ்செய்து அரசன்புக்கவுலகம் தாமும் புகப்போகின்றவராதலின், அம்மகளிரை 'நாவாயிற்றாமும்போவாரொக்கின்றார்' எனக்குறித்தார்; தற்குறிப்பேற்றவணி. இங்குக்கூறப்பட்டவர் பட்டமகிஷியரையொழிந்த மற்றையோராவர்.பி-ம்:—[1]இழந்து.[2]பிரிந்து. [3]பிரியார்பற்றி. [4]விட்டிலார். [5]மயக்கச், மயக்கிற். [6]நீண்ட நாவாயின்றாமே. ()

எச.—இங்ஙனம்இருக்கச் சுமந்திரனற் செய்தியுணர்ந்து வந்த வசிட்டமுனிவன் வருந்தல்.

மாதரார்க ளறு[1]பதினா யிரரு மூள்ளம் வலித்திருப்பக்
கோதில் குணத்துக் கோசலையு மிளைய [2]மாதுங் குழைந்தேங்கச்
சோதி மணித்தேர்ச் சுமந்திரன்சென் றரசன் றன்மை சொலவந்த
வேத முனிவன் விதிசெய்த வினையை நோக்கி விம்முவான்.

(இ-ள்.) மாதரார்கள் அறுபதினாயிரர்உம்-(தசரதமன்னவனது மனைவிமார்களாகிய) அறுபதினாயிரம்மாதராரார்களும், உள்ளம் வலித்து இருப்ப - (சகமனஞ்செய்வது என்று) மனத்தில்உறுதிகொண்டிருக்க,—கோதுஇல் குணத்து கோசலைஉம் இளைய மாதுஉம் குழைந்து ஏங்க - குற்றமற்ற குணத்தையுடைய கௌசல்யாதேவியும் இளையதேவியாகிய சுமித்திரையும் மனமிளகிச்சோர,—சோதி மணி தேர் சுமந்திரன் - ஒளிபொருந்திய மணிகள்பதிக்கப்பெற்ற தேரோட்டுஞ்சாரதியாகிய சுமந்திரன், சென்று—, அரசன் தன்மை சொல - தசரதமன்னவன் இறந்துபட்டநிலைமையைத் தெரிவிக்க, வந்த - (தன்னிருப்பிடத்தினின்று அரசன் இறந்துள்ள இடத்துக்கு) வந்த, வேதம்

முனிவன்-வேதம்வல்ல இருடியாகிய அந்த வசிஷ்ட முனிவன், விதி செய்த வினைபை நோக்கி - ஊழ்வினைக்குரிய கடவுள் செய்த செயலைக் குறித்து, விம்முவான்-வருந்துவானானான்; (எ - று.)

சுமந்திரன் செய்தி அறிவிக்க, வசிட்டன் அங்குவந்து மன்னவனுக்கு நேர்ந்தநிலையைக்கண்கூடாகக்கண்டு தானும் மனம்வருந்தலானானென்க. இவ்விஷயம் ஸ்ரீவால்மீகத்திற் காணப்படவில்லை. பி-ம்:—[1]பதினுயிரர்தம். [2]மானும்.

எரு —இதுவும் வசிஷ்டமுனிவன் வருந்துதலைக் கூறும்.

வந்த[1]முனிவன் வரங்கொடுத்து மகனை[2]நீத்த வன்கண்மை
யெந்தை [3]தீர்ந்தா னெனவுள்ளத் தெண்ணி யெண்ணி யிரங்குவா
னுந்து கடலிற் பெருங்கலமொன் [4]றுடைபா நிற்கத் [5]தனிநாய்க
னுந்து நீங்கச் செயலோரா மீகா மனைப்போ [6]னவுற்றான்.

(இ-ள்.) வந்த முனிவன் - (தசரதன் இறந்தஇடத்துக்கு) வந்த வசிட்ட முனிவன், வரம்கொடுத்து மகனை நீத்த வன்கண்மை எந்தை தீர்ந்தான் எனை- (கைகேயிக்கு இரண்டு) வரங்களைக்கொடுத்து (அதனால் தன்) புதல்வனைப் பிரிந்த கொடுமையையுடைய எம்மையன் தசரதன் இறந்துவிட்டானென்று, உள்ளத்து-(தன்)மனத்திலே, எண்ணி எண்ணி - பலகால்நினைந்து, இரங்குவான்-மனந்தளர்பவனுய்,-உந்து கடலில் பெரு கலம் ஒன்று உடையாகிற்க-(அலை)மோதுகின்ற கடலிலே பெரிய மரக்கலமொன்று உடைந்துவிட, தனிநாய்கன்-தனிப்பட்ட அம்மரக்கலத்துக்கு உரியவன், நைந்துநீங்க-இறந்துபோக, செயல் ஓரா-(தான்) செய்வது இன்னதெனத் தெரியாமல் திகைக்கின்ற, மீகாமனை போல் - மாலுமியைப்போல, நவுற்றான் - வருந்தினான்; (எ-று.)

மன்னவனுடலை மரக்கலமாகவும், மன்னவனை நாவாய்க்குரிய நாயகனாகவும், அம்மன்னவனை நன்னெறியிற் செலவுய்க்கும் வசிட்டனை மீகாமனாகவும் உருவகஞ்செய்தார். கலமுடைதல் - அரசன் உயிர்போதல். இந்தப் பாடல் அச்சுப்பிரதியிற் காணப்படாவிடினும் அனேக ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது. பி-ம்:—[1]முனியும். [2]இழந்த. [3]தீர்த்தான். [4]உலையாகிற்க. [5]தமியனுய். [6]நவையுற்றான்.

(சுகஉ)

எசு.—மன்னவனுடலைத் தைலத்தி லிடுதல்.

[1]செய்யக் கடவ செயற்குரிய [2]சிறுவ ரீண்டை யாரல்ல
[3]ரெய்தக் கடவ பொரு[4]ளெய்தா திகவா தென்ன வியல்[5]பென்ன
[6]மையற் கொடியாண் மகனீண்டு வந்தான் முடித்து மற்றென்னத்
தையற்[7]கடலிற் கிடந்தானைத் [8]தயிலக் கடலின் றலை[9]யுய்த்தார்.

(இ-ள்.) 'செய்ய கடவ-செய்தற்குரிய கடமைகளை, செயற்கு உரிய-செய்தற்குத்தக்கவரான, சிறுவர்-குமாரர்கள், ஈண்டையார் அல்லர் - இங்கேயிருப்பவராக இல்லை; எய்தக்கடவ பொருள் எய்தாது இகவாது-வாவேண்டி

யவை வாராது தீரா: இயல்புஎன்ன - (இப்போது செய்யவேண்டிய) இயல் பான செயல் யாது?' என்ன-என்று ஓராலோசனை(அவ்வரண்மனையில்)உண் டாக,(அமைச்சர்கள்),'மையல் கொடியாள்-மனமயக்கத்தைக்கொண்டகொடி யவளான கைகேயியின், மகன்-புதல்வனென பரதன், ஈண்டு வந்தால்-இங்கே வந்துசேர்வதன்பின்,(பிறகு), முடித்தும்-(அரசனது உத்தரக்கிரியைகளை அவ னைக்கொண்டுசெய்து) முடிப்போம்,' என்ன-என்று நிச்சயித்து, தையல் கட லில் கிடந்தானை-மகளிரின்கடல்போன்ற கூட்டத்திற்கிடக்கின்ற தசரதனை, தயிலம் கடலின்தலை - கடல்போல் மிக்க தைலத்தில், உய்த்தார் - கொண்டு செலுத்தினர்கள்; (எ - று.)—மற்று-அசை: வினைமாற்றுமாம்.

அந்தஅரண்மனையில் அரசனுக்கு நாலுபத்திரிருந்தும் ஒருத்தரும் அரு கிலில்லாமற்போயினமைபற்றி, 'நாம் வெறுமனேயிருத்தல் கூடாது: எப்படி யாவது மன்னவனை ஸம்ஸ்காரஞ் செய்பவேண்டும்' என்று சிலர்க்கு எண்ண முண்டாக,ஆங்குள்ளசுற்றத்தார்பலர்க்கும் புதல்வனில்லாமல் தஹநம்முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்வதில் எண்ணமில்லாமையை யுணர்ந்த மந்திரிமார் மன்னவனதுஉடல் கெடாமலிருக்கும்பொருட்டு அவ்வுடலை எண்ணெய்க் கிடாரத்திலிட்டுவைத்தார்க ளென்று மூதனூலிற் கூறியுள்ளது. அதற்குஏற்ப இப்பாடலுக்கும் கருத்து விரித்துக்கொள்க. ஒருகடலினின்று நீக்கக் கருதிய வர் வேறொருகடலி லுய்த்தார்க ளென்ற ஈற்றடியில் அஸங்கத்யலங்கார மென்று வடமொழியிற்கூறப்படும் பொருத்தமின்மையணிபிருத்தல் காண்க.

பி-ம்:—[1]செய்தற்குரிய. [2]சிறுவரவரண்டையர். [3]எய்தற்குரிய. [4]எய்தாதிகவா ஹென்ன, எய்தாரிகலாரென்ன, எய்தாவிளைபவாரென்னும், எய்தாவிடரா லென்னே. [5]என்ரை. [6]மையிற். [7]கடனின்றெடுத்தவனை. [8]தைலக். [9]உய்த்தான்.

எஎ.—வசிட்டன் பரதனை யழைத்துவருமாறு தூதுவரை ஓலைகொடுத்துப் போக்குதல்.

தேவி மாரை யிவற்குரிமை செய்யு நாளிற் செந்தீயி
லாவி [1]நீத்தி ரெனநீக்கி யிரண வமார்க ளிருவரையுந் [கென்
தாவில் கோயிற் றலையிருத்தித் தண்டார்ப் பரதற் கொண்[2]டணை
றேவி ரென்மன் னவனணை [3]யெழுதி மூடங்க [4]லெடுத்தேதாரை.

(இ - ள்.) தேவிமாரை - (அரசனுடலவிடாமற் சூழ்ந்துகொண்டிருந்த அறுபதினாயிரம்) மனைவியரையும் நோக்கி, 'இவற்கு-இம்மன்னவற்கு,உரிமை செய்யும் நாளில் - உரிய ஈமக்கடனைச் செய்யும்போது, செந்தீயில் ஆவி நீத் திர்-செந்நிறத்தீயில் (இம்மன்னவனதுஉடலைத் தழுவிக்கொண்டு) உயிர்விட லாம்; (இப்போது விலகியிருங்கள்),' என நீக்கி - என்றுசொல்லி (அப்பாற்) போகச்செய்து,—அரிவைமார்கள் இருவரைஉம் - பட்டமகிஷிபரான (சுமித் திரை கௌசலையென்ற) இருவரையும், தா இல் கோயில் தலை இருத்தி-குற்ற மற்ற (அவரவர்க்குஉரிய) அரண்மனையிலிருக்கவைத்து, 'தண் தார் பரதன்

கொண்டு அணைக என்று - 'குளிர்ச்சிபொருந்திய மாலையைச்சூடிய பரதனை யழைத்துக்கொண்டு வருவீராக' என்று சொல்லி, முடங்கல் எடுத்தோதாதை - (மன்னவனாணையை எழுதிய)ஓலையையெடுத்துச் செல்பவராகிய தூதரை,மன்னவன் ஆணை எழுதி - அரசன் கட்டளையின்னதென்று எழுதிக்கொடுத்து, எவிஞன் - (பரதனை யழைத்துவரும்மாறு)அனுப்பினான், (வசிட்டமுனிவன்).

கீழ்ச்செய்யுளில்''தையற்கடலிற் கிடந்தானைத் தயிலக்கடலின்றலையுய்த் தார்'' என்றுகூறிய கவி, தையற்கடலினின்று மன்னவனை மீட்டவகையை முதல்மூன்றடிகளால் விவரித்து, தைலக்கடலிலுப்த்ததற்குக் காரணத்தை 'தண்டார்ப்பரதற் கொண்டானை கென்றேவினான் மன்னவனாணை யெழுதி முடங்கலெடுத்தோதாதை' என்பதனால் விளக்குகின்றன ரென அறிக.மார்க்கண்டேயன் மௌத்கல்யன் வாமதேவன் காஶ்யபன் காத்யாயனன் கௌதமன் ஜாபாலி என்கின்ற பிராமணோத்தமர்களும் மந்திரிமாரும்கூடி யாலோசித்து வசிட்டமுனிவனைநோக்கி 'ராமலட்சுமணர்கள் காட்டுக்குப் போயிருக்கின்றார்கள்: பரதசத்துருக்கனர்களும் கேகயதேசத்தில் ராஜகிருஹமென்னும் நகரத்துக்குப் போயிருக்கிறார்கள். நாடு அராஜகமாக இருக்கலாகாது' என்றுகூறி அராஜகத்தால்விளையுந் தீங்குகளை விரிவாகஎடுத்துச்சொல்லி 'இட்சுவாகு குலத்திற்பிறந்த ஒருவனை அரசனைக்கவேண்டும்' என்ன, வசிட்டமுனிவனும்'தசரதன் பரதனுக்கு இராச்சியத்தைக் கொடுத்திருக்கின்றானையால், நாம் ஆராயவேண்டியசெயல் ஒன்றுமில்லை'என்றுகூறி,சித்தார்த்தன் விசயன் சயந்தன் அசோகன் என்னுந் தூதர்களை விளித்து:நீங்கள் விரைந்துசெல்லுங் குதிரைகளின்மீதுஏறிக்கொண்டு ராஜகிருஹநகரத்தை யடைந்து துயரத்தைச் சிறிதுங்காட்டாமல், கேகயமன்னவனுக்கும் பரதனுக்கும் காணிக்கைபட்டுவஸ்திரம் முதலியவற்றையுங் கொடுத்து ஒருகாரியம் கைவிஞ்சிப்போவதாயிருத்தலால் உடனேவருக என்றுசொல்லிப் பரதனை யழைத்துவருக' என்றுசொல்லியனுப்பின னென்று முதனூலிற் கூறியுள்ளது. பி - ய்:— [1]போக்கீர். [2]அணுகென்று. [3]எழுது. [4]கொடுத்தவரை. (சுகக)

எஅ.—கவிக் கூற்று.

போனா ரவருங் கேகயர்கோன் பொன்மா நகரம் புகவெய்த
வானு வறிவி னருந்தவனு மறமார் பள்ளி [1]யதுசேர்ந்தான்
சேனை பதியிற் [2]சுமந்திரனைச் செயற்பாற் குரிய செய்கென்னு
மேனுஞ் சொன்ன [3]மாந்தர்க்கு [4]விளந்த பரிசு விளம்புவாம்.

(இ - ள்.) அவர்உம்-(வசிட்டர் அனுப்பிய)அத்தூதுவரும்,கேகயர்கோன் பொன் மா நகரம் புக எய்த போனர்-கேகயமன்னவனது அழகிய சிறந்தநகரத்தைப் போய்ச்சேரும்படி சென்றார்கள்; ஆனு அறிவின் அருந்தவன் உம் - (ஒருவர்க்கும்)அமையாத பேரறிவினையும் (பிறர்க்குச்செய்தற்கு) அரியதவத்தையுமுடையனாகிய வசிட்டனும், சேனைபதியில் சுமந்திரனைசெயற்பாற்கு உரிய செய்க என்னு - 'சேனைபதியரில் ஒருவனாகிய சுமந்திரனைநோக்கி அவ

சியமாய்நடக்கவேண்டிய இராச்சியகாரியங்களைச்செய்க'என்றுசொல்லிவிட்டு, அறம் ஆர் பள்ளிஅது சேர்ந்தான் - (தனது) குலதருமத்தை யநுட்டித்தற்கு உரிய தன்னிடத்தைப் போய்ச்சேர்ந்தான்; மேல் நாம் சொன்ன மாந்தர்க்கு - முன்பு (இராமனுடன் சென்று உறங்கிவிட்டனரெனக்) கூறிய மனிதர்களிடத்து, விளைந்த - நிகழ்ந்த, பரிசு - செய்தியை, விளம்புவாம்—; (எ - று.)

கீழ்த் தேவிமார்கள் செய்தியைக்கூறிய கவி, மற்றையோர் தத்தமிடத்துக்குப் போயினதையும் இராச்சியம் அரசனில்லாக்காலத்து நிகழ்ந்தவகையையும் தெரிவித்து, மேற்சொல்லப்போவதையும் இன்னதெனக்கூறுகின்றார். பி-ம்:—[1]அறை. [2]சுமந்திரனே ..செய்கின்றான். [3]மாந்தர்கட்கு. [4]விளைந்ததினிதாம். (சுகரு)

எசு.—தூரியோதயவருணனை.

[1]மீனீர் வேலை முரசியம்ப விண்ணோ ரேத்த மண்[2]ணிறைந்தத்
தூநீ[3]ரொளிவாள் புடையிலங்கச் சுடர்த்தே ரேறித் தோன்றினான்
வானே புக்கா னரும்புதல்வன் மக்க [4]ளகன்றூர் வருமளவும்
யானே காப்ப னிவ்[5]வுலக மென்பான் போல [6]வெறிகதிரோன்.

(இ - ள்.) மீன் நீர் வேலை - மீனை மிகுதியாகக்கொண்ட நீர்மயமான சமுத்திரம், முரசு இயம்ப - முரசவாத்தியம்போல் ஒலிக்கவும், விண்ணோர் ஏத்த - தேவர்கள் துதிக்கவும், மண் இறைஞ்ச - உலகத்திலுள்ளவர்(தன்னை) வணங்கவும், தூ நீர் ஒளி வாள் புடை இலங்க - பரிசுத்தமானதன்மையையுடைய ஒளியாகிய வாள் (தன்)புறத்தே விளங்கவும்,—எறி கதிரோன் - வீசுகின்ற ஆயிரக்கிரணங்களையுடையவனான சூரியன்,—[5]அரு புதல்வன் வான் புக்கான் - (தமது குலத்துத்தோன்றிய) அரியகுணங்களையுடைய புதல்வனாகிய தசரதன் சுவர்க்கஞ் சேர்ந்திட்டான்; மக்கள் அகன்றூர் - அவன் புதல்வர் நால்வருள் இராமலட்சுமணர்கள் காட்டிலும் பரதசத்துருக்கனர் கேகயதேசத்திலுமாக இக்நகரிலில்லாமல் அப்பாலிருக்கிறார்கள்; வரும் அளவும் - (அத்தசரதகுமாரர்களில் பரதசத்துருக்கினர் இங்கு) வந்து சேர்கின்ற வரையிலும், 'இ உலகை—, யான் காப்பன்—,' என்பான் போல-என்று கூறுபவன்போல, சுடர் தேர் ஏறி - ஒளியுள்ள தேரின்மீது ஏறிக்கொண்டு, தோன்றினான் - உதயமானான்; (எ - று.)

எறிகதிரோன் தோன்றினான் என இயையும். தன்னைச் சார்ந்தவரின் நாடு அராஜகமாகப் போகையில் அந்நாட்டிற்குரியவனும் வேறோரிடத்திலிருப்பவனுமாகிய மன்னவன் முரசுஇயம்பவும் பலரும் ஏத்தவும் வாளைப் புடை விளித்த கோலத்தோடு தேரேறிக்கொண்டு வருவதுபோல, தனது குலத்தவருடைய தேசம் அராஜகமாக இருக்கவிவாண்ணாதென்றகருத்தினாற் குலமுதல்வனாகிய சூரியன் வேலை முரசியம்ப விண்ணோரும்மண்ணோரு மேத்த ஒளிவாள் புடையிலிலங்கத் தேரேறித் தோன்றினனென வருணித்தார்; இயற்கையிற் சூரியனுதிப்பதற்கு ஒருகாரணத்தைக் கற்பித்துக்கூறியது;

ஏதுத்தற்குறிப்பேற்றவணி: இவ்வணிக்கு-வேலைமுரசியம்ப என்பது முதலிய இடத்துள்ள உருவகங்கள் அங்கமாய் நின்றன. இராமன் முதலியோர், என்று புறப்பட்டனரோ அன்றை மாலைப்போதே நகரத்தைக்கடந்து ஒருசோலையில் தங்கி அற்றை நள்ளிரவில்தானே நகரத்தவரைப் பிரிந்து அவர்கட்குத் தெரியாது அப்பாற் செல்ல, சுமந்திரனும் அன்று விடிவதற்கு முன்னரே வந்து இராமன் கானகஞ் சேர்ந்த செய்தியை மன்னவனிடஞ்சொல்ல அவனும் அப்போதே ஆவிநீங்கினனை, கேகயநகரத்துக்குத் தூதுவர்போய்ச்சேர மறுநாள் சூரிய னுதய மாயினன் என்பது, கம்பர்கருத்து. பி-ம்:—[1]மீளர். [2]இறைஞ்சித். [3]புடைவாளொளி. [4]பிரிந்தார். [5]உலகம். [6]விரி. (சுகசு)

அ○.—மணல் முதலிய இடத்து உறங்கிய நகரத்துச்சனங்கள் கண்விழித்தெழுந்து இராமனைக் காணாது வருந்துதல்.

வருந்தா வண்ணம் [1]வருந்தினர் மறந்தார் தம்மை வள்ளலு
[2]மாங், கிருந்தா னென்றே யிருந்தார்க ளெல்லா மெழுந்தா ருளி
ருக்கும், பெருந்தா மரைக்கட் கருமுகிலைப் பெயர்ந்தார் காணர்
[3]பேதுற்றார், பொருந்தா நயனம் பொருந்திநமைப் பொன்றச் [4]சூழ்ந்த
வெனப் [5]புரண்டார்.

(இ - ள்.) வருந்தா வண்ணம் வருந்தினர்-(இதுவரையில்) எவரும்வருந்தியிராதவகையாக வருத்தமடைந்தவரும், தம்மை மறந்தார் - (துயரத்தாலும் வழிவந்த இளைப்பாலும்) தம்மையும் மறந்து உறக்கங்கொண்டவர்களும், வள்ளலும் ஆங்குள இருந்தான் என்று இருந்தார்கள் - வரையாதுகொடுக்குந் தன்மையுடையவனாகிய இராமன் அவ்விடத்தில்தானே இருக்கின்றா னென்றே யெண்ணியிருப்பவர்களுமாகிய, எல்லாம் - (இராமனைத்தொடர்ந்துவந்த நகரத்தவர்) எல்லாரும், எழுந்தார் - (கண்விழித்து)எழுந்து, பெயர்ந்தார்-(தம்மிடத்தை) விட்டுச்சென்று, (இராமபிரான் பள்ளிகொண்ட இடத்தைக்கிட்டிப்போய்ப்பார்த்து), அருள் இருக்கும் பெரு தாமரை கண் கரு முகிலை காணர்-அருள் (ஊற்றுப்போற் சுரக்கும்படி) குடியிருக்கின்ற பெரியதாமரை மலர்போலுந் திருக்கண்களையுடைய கருமுகில்போன்ற திருநிறத்தவனை ஸ்ரீராமபிரானைக் காணப்பெறுதவராய், பேது உற்றார்-மனக்கலக்கமடைந்து, பொருந்தா நயனம் - மூடாத (நமது) கண்கள், பொருந்தி - மூடி [உறக்கமடைந்து], நமை - நம்மை, பொன்ற - அழியும்படி, சூழ்ந்த - ஆலோசித்தன, என - என்றுசொல்லி, புரண்டார் - (துயரத்தின் மிகுதியால்) தரையில்விழுந்து புரளலானார்கள்; (எ - று.)

'வருந்தாவண்ணம் வருந்தினர்' என்றதனாடர் - இராமனைத்தொடர்ந்து சென்றவர் துயில்கொள்ளுவதற்குமுன் அடைந்திருந்த நிலைமையை விளக்கும்: பின்னிரண்டடிகள் - உறக்கம் நீத்தபின்பு அவர் அடைந்த நிலையைத் தெரிவிப்பன. கருமுகில் - உவமவாகுபெயர். தாம் உறங்கினதே இராமபிரான் தம்மைவிட்டுப் பிரிந்து செல்வதற்கு ஏதுவாயினமையால்,

'பொருந்தாநயனம்பொருந்தி நமைப் பொன்றச்சூழ்ந்த' என்றுகூறி வருந்திப் புரண்டனர் அந்நகரத்துமாந்த ரென்க. தன்னைப்பிரிந்திருக்கமாட்டாமல் உடன்தொடர்ந்துவந்த நகரத்தவர் மிகவருந்தும்படி கருணையற்றவன்போலப் பிரிந்திட்ட இராமபிரானை, இங்கு 'அருளிருக்கும் பெருந்தாமரைக்கண் கருமுகில்' என்றது - இவன் நகரத்தவரைப் பிரிந்ததும் அருளின் காரியமே யென்பதைப் புலப்படுத்தற்பொருட்டாகும்; அது எங்ஙனே யெனில் - நகரத்தவர்க்கு எஞ்ஞான்றும் தன்னுடன் வாழ்வது நேர்வதால் களிப்பு மிகவும்விஞ்சுவதுபற்றி அப்பெருங்களிப்பை அவர்கள் தாங்கவல்லவ ரல்லராதலால், விரணவைத்தியஞ் செய்யும்மருத்துவன் விரணத்தைக்கீறி ஆறச்செய்வதுபோல அவர்கள் தன்னை பிடைவிடாமல் நுகர்வதை வனவாச மென்ற வியாசத்தினால் இடையறவுபடுத்திப் பெருமகிழ்ச்சியைத் தாங்கவல்ல உறுதியை அவர்களின் நெஞ்சத்திற்கு உண்டாக்கி மீண்டும் தன்னை யநுபவிக்கும் அநுபவத்தை மிகவுந்தருதற்பொருட்டே யாகுமாதலாலென்பர். இங்ஙனம் இவர்களுக்கு மனத்திட்பத்தைக்கொடுக்க வேண்டுமென்ற கருத்தைக்கொண்டதனால்தான் ஸ்ரீராமபிரான் ஏககாலத்தில் நகரத்தவர்யாவரையும் பொருந்தாநயனம் பொருந்துமாறு சூழ்ந்தன னென்க. அன்றியும், அவர்கள் தன்னுடன்வரின் தன்னுடைய தெய்வத்தன்மையாற் காத்தலன்றி வேறுவகையாக அவர்களியாவரையும் பசி பிணிமுதலியன இன்றி வனத்திற் காத்தல் அரிதாகையாலும், தெய்வத்தன்மையை வெளிப்படுத்தாம லிருக்கவேணுமென்பதே அப்பிரான் திருவுள்ளமாதலாலும், அங்ஙனம் அவாகளைவருந்துமாறு விடுதல் அருளின்செயலாகாததாலாலும், அவர்களைப்பிரிந்தது அருளின் செயலேயாதல் காண்க. ரு-பி:—[1]வருந்திஞரை. [2]அங்கு. [3]வெய்துற்றார். [4]செய்தது, சூழ்ந்தது. [5]புகன்றார். (அகஎ)

அக.—இராமனைக்காணாத நகரமாந்தர் செயல்தவை.

எட்டுத் திசையு [1]மோடுவ னெழுவார் விழுவா ரிடர்க்கடலுள் விட்டு[2]த் தீர்ந்தா [3]னமையென்பார் [4]வெய்ப னினபன் விணையென்பா [5]ரொட்டிப் படர்ந்த தண்டகமிவ் வுலகத் துளதன் றெனுணர்வைச் [6]சுட்டிச் [7]சேரா[8]தாற்றுதுமோ [9]தொடர்துந் தெரின் சுவடென்பார்.

(இ - ள்.) எட்டு திசையும் ஓடுவான் எழுவார் (இராமனைத் தேடும்பொருட்டு) எட்டுத்திக்கிலும் ஓடிப்போகுமாறு எழுந்திருப்பார்; விழுவார் - (துயரமிகுதியால் கால்நடைதாராமையால்) விழுந்திடுவார்; நமை இடர் கடலுள் விட்டு தீர்ந்தான் என்பார் - நம்மைத் துயர்க்கடலுள் அழுக்கவிட்டு அப்பாற் சென்றிட்டா னென்பார்; ஐயன் வினை வெய்யன் [வெய்யவினையன்] என்பார் - நமதுதலைவன் (நம்திறத்துக்) கொடியசெயலைச் செய்தன னென்பார்: 'ஒட்டி படர்ந்த தண்டகம் - பொருந்திப்பரவியுள்ள தண்டகவனம், இ உலகத்து உளது அன்றழ - இவ்வுலகத்திலிருப்பதான்று அன்றே? உணர்வை - (நம்முடைய) அறிவைக்கொண்டு, சுட்டி-ஆராய்ந்து அறிந்து, சேராது-

(அதனைச்சேர்ந்து இராமபிரானை) அடைந்திடாமல், ஆற்றுதும் ஓ - ஆறியிருக்கவல்லமையுடையோமோ? தேரின் சுவடு - (அந்தத்தண்டகத்தைநோக்கிச் சென்றிருக்கவேண்டிய) இரதசக்கரத்தின்வடுவை, தொடர்தும் - பற்றிச் செல்வோம், என்பார் - என்றுசொல்வார்கள்; (எ - று.)

ஸ்ரீராமனைப்பிரிந்த நகரத்துச்சனங்கள் பெருந்துயரமடைந்து எட்டுத்திசையிலும் தேட ஓடியெழுந்து கால்நடை தாராதுவிழுந்து 'நம்மைத் துயரக்கடலுள் விட்டுச்சென்றானே!'என்றும் 'இராமன் கொடியவன்' என்றும் துயரத்தின்மிகுதியாற் பழித்து,'அந்த இராமன்சென்ற தண்டகாரணியம் பூமியில் தானே யிருக்கிறது; ஆகட்டும், விடுகிறோமா?'என்று சொல்லிச் சிறிதுதேறித் தேரின்சுவடு சென்றவழியைப் பற்றுவோ மென்று மனத்தில் ஓரெண்ணங் கொண்டார்க ளென்பதாம்; இராமனைப்பிரிந்த நகரத்துமாந்தர் பலவகைச் செயல் நிகழ்த்தியதாகக் கூறியது - வினைமுதல் விளக்கணியாம்: இதனை, வடநூலார் காரகதீபகாலங்காரமென்பார். 'வெய்யனையன் வினை' என்பதை விகுதிபிரித்துக் கூட்டாமல், "உயர்திணைதொடர்ந்தபொருள் முதலாறு, மதலைது சார்த்தினத்திணைமுடிபின்"என்ற சூத்திரத்தால் உயர்திணைதொடர்ந்த செயல் உயர்திணைமுடிபைக் கொண்டதாக அமைத்தலுமொன்று. பி-ம்:— [1]ஓடுவார். [2]நீத்தான். [3]நுமை. [4]வெய்யவையன். [5]ஒட்டுப். [6]சுட்டுச். [7]சேர்தல், சோராது. [8]ஆற்றுதுமேல். [9]தொடர்ந்த. (சுகஅ)

அ2.—தேர்ச்சுவடு நகர்நோக்கிச்சென்றதுகண்டு யாவரும் மகிழ்ச்சிகொண்டு ஆரவாரித்தல்.

தேரின் சுவடு நோக்குவார் திருமா நகரின் [1]மிசைத்திரிய
ஆருந் திகிரிக் குறி[2]யொற்றி யுணர்ந்தா ரெல்லா முயிர்வந்தா
ராரு மஞ்ச லையன்போ யபோதத்தி யடைந்தா [3]னென்றசனிக் [தார்.
காருங்கடலு [4]மொருவழிக்கொண் [5]டார்த்த வென்னக் [6]கடிதார்த்

(இ - ள்.) தேரின் சுவடு நோக்குவார் - தேரின்சக்கரவடுவைத் தேடிச்சென்ற நகரத்துமாந்தர்,—திரு மா நகரின்மிசை திரிய வுரும் திகிரி குறி ஒற்றி - சிறந்த அயோத்திமாநகரத்தை நோக்கி மீண்டுசெல்லுந் தேர்ச்சக்கரத்தின் அடையாளத்தைக் கண்டு, உணர்ந்தார் - (தம்மறிவினால்) ஆராய்ந்து அறிந்தவராய், எல்லாம் - யாவரும், உயிர் வந்தார்-(போவதுபோன்றிருந்த தம்முடைய) உயிர் (சரியான நிலைக்கு) வரப்பெற்றவராய், 'ஆர்உம்-எவரும், அஞ்சல் - அஞ்சவேண்டா; ஐயன் போய் அயோத்தி அடைந்தான் - இராமபிரான் மீண்டு சென்று திருவயோத்தியைச் சேர்ந்திட்டான்,' என்று-என்று சொல்லி,—(பெருமகிழ்ச்சியடைந்து), 'அசனி கார்உம் கடல்உம்-பேரிடியையுடைய வானமும்(அலைமோதுதலையுடைய)சமுத்திரமும்,ஒரு வழி கொண்டு-ஓரிடத்துச் சேர்ந்து, ஆர்த்த - ஆரவாரித்தன,' என்ன - என்று (கண்டோர்) கருதும்படி, கடிது ஆர்த்தார் - மிகவும் ஆரவாரித்தார்கள்; (எ - று.)

தேரின்சுவட்டைப்பற்றி அதுசென்ற வழியே சென்று தண்டகைசேர லாமென்று கருதிய நகரத்தவர், தேரின்சுவடுசெல்லும்வழியைக்கண்டு அது தென்திசைபாகச் செல்லாமல் வடதிசைபாக ஊர்க்குச்சென்றிருந்தது பற்றி, 'இராமன் நம்முடைய வேண்டுகோட்குஇணங்கி வனத்துவசித்தலுக்குப் பின்வாங்கி நகரத்துக்கே திரும்பிச்சென்றிட்டான்' என்று அறுதியிட்டு, தங்களுடைய கருத்துநிறைவேறியதலால பெருமகிழ்ச்சியால் வானமும் கடலும் ஒருங்குசேர்ந்து ஒலித்தாலொப்பப் பேராரவாரமுண்டாகும்படி மகிழ்ச்சியிற்கர்ச்சித்தனரென்பதாம். இதுவரையிற் பெருந்துபரத்தால் உயிர்சோர்ந்திருந்த நகரத்தவர் இப்போது அத்தளர்ச்சி நீங்கி மனக்கிளர்ச்சிகொண்டனரென்பது, 'எல்லாமுயிர்வந்தார்'என்றதன்பொருள். அஞ்சல் எதிர்மறைவியங்கோள்முற்று; "மகிணனல்"என்ற விடத்துப்போல. பி-ம்:—[1]மிசைச் செல்ல, திறமறிய. [2]ஒற்ற, தோற்ற. [3]என. [4]ஒருழிக், ஒருமொழிக்.[5]ஆர்த்தது. [6]கலித்து. (சுகக)

அக.—மகிழ்ச்சியடைந்த அந்நகரத்துமகளிர்களின் வருணனை.

மான வரவின் வாய்த்[1]தீய வலைவான் முருலைவா ளெயிற்றின்[2]வழி
யானகடுவுக் கரு[3]மருந்தா வருந்து மமுதம் [4]பெற்றுய்ந்து
போன் பொழுதிற் புகுந்தவுயிர் [5]பொறுத்தா ரொத்தார் பொருவரிய
வேனின் [6]மதனை மதனழித்தான் மீண்டா னென்ன [7]வாண்டையார்.

(இ - ள்.) ஆண்டையார் - அங்குஇருந்த நகரத்தவர்,—'பொரு அரிய வேனில் மதனை மதன் அழித்தான்-(அழகில்) ஒப்பற்றவனை வேனிற்காலத்துக்குஉரிய மன்மதனையும் (தன்னுடையபேரழகினால் நான் தான் அழகில் உயர்ந்தவ னென்றுகொண்டிருந்த) செருக்கைப் போக்கினவனுகிய ஸ்ரீராமபிரான், மீண்டான்-(நகரத்துக்கே)திரும்பிவிட்டான்,'என்ன-என்று கருதியதனால்;-மானம் அரவின்-சீறுந்தன்மையைக்கொண்டுள்ள சர்ப்பத்தின், வாய்-வாயிலுள்ள, தீய வலை வான் தொழில் வாள் எயிற்றின்வழி-கொடிய வளைந்த பெரிய தொழிலையைக்கொண்ட கூரிய விஷப்பற்களின் வழியாக, ஆன-(தம்மீது)பாய்ந்த, கடுவுக்கு-நஞ்சைப் போக்குவதற்கு, அரு மருந்து ஆ-அருமையான மருந்தாகிய, அருந்தும் அமுதம்-உண்ணுதற்குரிய தேவாமிருதத்தை, பெற்று - அடைந்து, உய்ந்து போன பொழுதில் - இறக்குந்தன்மைநீங்கிப் பிழைத்துவிட்டபொழுதில், புகுந்த உயிர் - (தம்முடையஉடம்பில்) மீண்டும் வந்துசேர்ந்த ஆண்மாவை, பொறுத்தார்-தாங்கியவரை, ஒத்தார்—; (எ - று.)

இராமபிரானுடன்சென்று அப்பிராட்டிப்பிரிந்த பிரிவுத்துயரத்தினால் உயிர்போகும் நிலையையடைந்து அவ்விராமபிரான் நகரத்திற்கேதிரும்பிவிட்டானென்ற உறுதியான எண்ணத்தை யடைந்ததனால் அத்துயர் நீங்கி உயிர்தளிர்க்கப்பெற்ற அயோத்திமாநகரத்துச் சனங்கட்கு, அரவுதீண்டிய நஞ்சின் வேகத்தால் உயிர்போகும் நிலையையடைந்து அந்நஞ்சைப் போக்கும் அரு மருந்தாகிய தேவாமிருதத்தைப்பெற்று அதனால் உயிர் உடலில் மீண்டுவரப்

பெற்றவரை உவமைகூறினர்; **உவமையணி.** நாகத்திற்குக் காளன் காளாத்திரி யமன் யமதூதி என்ற நான்கு நச்சுப்பற்கள்உள்ளன என்றும், நாகம் பல்லாற்கடித்துத் தம்பற்களின்புரையிலுள்ள நஞ்சைக் கடித்த இடத்தின்வழியாக உடலிற் செலுத்தினால்தான் அவ்விஷம் இரத்தத்திற் கலந்து மாளச் செய்கின்ற தென்றும் கூறுவர். மன்மதன் அழகுவிஞ்சியவ னென்பது, பிரசித்தம்: அவனினும்மிக்க அழகையுடையவன் இராம னென்பார், 'மதனை மதனழித்தான்'என்றார். இனி இத்தொடர்க்கு-சிவபெருமான் என்று பொருளுரைத்து, இராமபிரான் கானம்புகுந்து பகைவரான அரக்கரைக் களையப் போவதனால், அவனுக்குச் சிவபெரு மானை உவமைகூறியது எனக் காட்டினாருமுளர். **பி பீ:**—[1]தீயின். [2]வரவு. [3]நஞ்சமருந்து மமுதது, மருந்தாமருந்து மமுதம், நஞ்சாமமிர்தமருந்து. [4]பெற்றுபர்ந்து, பெறலஞ்சி. [5]போர்த்தாரோராத்தார். [6]மதனின்மிகமிக்கான், மதனை யெழிலழித்தான். [7]ஆண்டகையார், ஆண்டகையார்.

(கூஉ○)

அசு.—இராம[1]னைத் தொடர்ந்துசென்றோர் நகரந்திரும்து மீளுதல்.

ஆறு செல்லச் செல்லத்தே ராழி கண்டார [1]ஏயற்பால
வேறு சென்ற நெறிகாணார் [2]விம்மா நின்ற [3]வுவகையராய்
மாறி யுலகம் வகுத்தநாள் வரம்பு கடந்து மண்முழுதும்
மேறி யொடுங்கு [4]மெறிகடல்போ [5]லெழின்மா நகர மெய்தினார்.

(இ - ள்.) ஆறு செல்ல செல்ல-வழி கடந்து போகப்போக, தேர் ஆழி கண்டார்-தேர்ச்சக்கரத்தின் வடுவைப் பார்த்த அவர்கள்,—அயல் பால வேறு சென்ற நெறி காணார்-(நகரத்திற்குச் செல்வதன்றி) அயலான இடந்தானாய்த் (தேர்ச்சக்கரங்கள்) வேறுகச்சென்ற வழி (எதையும்) காணுமல், விம்மா நின்ற உவகையர் ஆய்-மேன்மேல் விஞ்சித்தோன்றுகின்ற மகிழ்ச்சியையுடையவராய்,—மாறி-(பிரளயம்) தோன்றி,(பின்பு), உலகம் வகுத்த நாள்-உலகத்தைப் படைத்த காலத்தில், வரம்பு கடந்து மண் முழுதுமேறி ஓடுங்கும் எறி கடல் போல் - எல்லையைமீறி உலகம் முழுதும்சென்று மீண்டும் தன் னெல்லையில் அடங்குகின்ற அலவீசுங் கடல்போன்று, எழில் மா நகரம் எய்தினார் - அழகிய அயோத்தியாபுரியைச் சேர்ந்தார்கள்; (எ - று.)

தேர்ச்சுவட்டையே பற்றிச்சென்ற அந்நகரத்துமாந்தர் அச்சுவடு அயோத்திமாநகரத்துக்குச்செல்வதன்றி வேற்றிடத்துக்குச் செல்லவில்லையென்பதைத்திண்ணமாகத்தெளிந்து,'இராமபிரான் நகரத்திற்கே மீண்டனன்'என்று நம்பிப் பெருமகிழ்ச்சிகொண்டு நகரத்திற்கே மீண்டன ரென்பதாம். இராமபிரான் காட்டிற்குச் சென்றபோது பெருந்திரளாக அவனுடன் புறப்பட்ட நகரத்துமாந்தர் மீண்டுந் திரும்பிவந்து சேர்தற்கு, பிரளயகாலத்தில் தன் எல்லைகடந்து பொங்கி மண்முழுதும் பரவியகடல் உலகத்தைப்படைக்குங்காலத்தில் மீண்டு தன்னெல்லையிலே யடங்குதலை உவமை கூறினர்; **தற்குறிப்பேற்ற வுவமையணி.** இராமபிரான் கானஞ்செல்லும்போது திரண்டுபெருந்திரளாச்

சென்ற மாந்தர்க்கு உலகநிலைமாறும் பிரளயகாலத்தில் வரம்புகடந்து உலக மெங்குஞ் செல்லுங் கடலும், இராமன் மீண்டனனென்ற கருத்திலுல் மீண்டு அயோத்தி சென்றுசேர்ந்த அம்மாந்தர்க்குத் தன்னிலையிலொடுங்குங் கடலும் உவமை யெனக் காண்க. மாறுதல் என்பது - ஏற்கனவேயுள்ள நிலை மைவேறுபடுதலாதலால், பிரளயத்தையடைவதைக் காட்டிற்று. பி - ம்:— [1]அயலப்பால், ஆயப்பால். [2]விம்மி. [3]உவகையான். [4]ஆலை. [5]எயில். (சுஉக)

அரு.—மீண்டுவந்தநகரத்தவர் அரசனிறந்ததையும் இராமபிரான் கானகஞ் சென்றதையு முணர்ந்து பெருந்துயருறுதல்.

புக்கா ரரசன் பொன்[1]னுலகம் போறு னென்னும் பொருள்கேட்டா ருக்கார் நெஞ்ச முயிருருத்தா ருற்ற தெம்மா னுரைப்பரிதா றக்கான் போறுன் வனமென்னுந் [2]தகையு முணர்ந்தார் [3]மிகையாவி யக்கா லத்தே [4]யகலுமோ [5]வவதி பென்றுன் [6]றளதாலுல்.

(இ - ள்.) புக்கார் - (அங்ஙனம் மீண்டு அயோத்திநகரைச்) சென்றடைந்தவர்கள்,—அரசன் பொன் உலகம் போறுன் என்னும் பொருள் கேட்டார் - 'தசரதமன்னவன் விண்ணுலகம் அடைந்தான்' என்ற செய்தியையும் கேட்டார்கள்; '(அங்ஙனம் அரசன் விண்ணையடைவதற்குக் காரணமாக), தக்கான் வனம் போறுன் - பெருந்தகையாகிய இராமபிரான் வனத்திற்குச் சென்றுன்,' என்னும் - என்கின்ற, தகைஉம் - செய்தியையும், உணர்ந்தார்- அறிந்தனர்: (இவ்விரண்டு துயரச்செய்தியால்), நெஞ்சம் உக்கார் - மனம் முறியப்பெற்றூர்; உயிர் உருத்தார் - உயிரொழிந்தவர்போல் மூர்ச்சையடைந் தார்; உற்றது - (அவர்கள்பட்ட) பெருந்துயரத்தை, எம்மால்—, உரைப்பு - சொல்வது, அரிது - முடியாதசெயலாகும்: (ஆனுல், அவர்கள் உயிர் என் நீங்கவில்லையென்னில்),—மிகை ஆவி-எஞ்சிநின்ற உயிர், அவதி என்று ஒன்று உளது ஆனுல்-(உயிர்போவதற்கு விதியிலுல் ஏற்பட்ட) காலவெல்லையென்ப தொன்று இருக்குமானுல் [உயிர் செல்லவேண்டியகாலம் இன்னதென்று ஒவ் வொருவர்க்கும் காலவெல்லை விதியிலுல் ஏற்பட்டிருத்தலா லென்றபடி], அ காலத்து ஏ அகலும் ஓ - அங்ஙனம் பெருந்துயரம் நேர்ந்தகாலத்து உயிர் உடம்பைவிட்டுச் செல்லுமோ? [செல்லாதென்றபடி]; (எ - று)

மீண்டுவந்த நகரத்தவர் இராமபிரான் திரும்பிவந்திடாது தங்களைவஞ் சித்து வனத்திற்கேசென்றன னென்பதையும் அத்துயரச்செய்தியைச் சுமந் தாலைறிந்தவுடன் புத்திரசோகத்திலுற் பெருந்துயரடைந்து தசரதமன்னன் இறந்திட்டானென்பதையும் உணர்ந்து, இவர்களுயிரும்போய்விடு மென்று கருதுமாறு அவ்வளவு பெருந்துயரமடைந்தார்கள்: ஆனுல், அகாலத்தில் உயிர்போகா ஆதலால், அவர்களின்உயிர் போகவில்லையென்பதே. இப்படி அவர்கள் பட்ட துயரத்தை நம்மால்எடுத்துச்சொல்லவும் முடியாதென்றவாறு. ஈற்றடி-முதன்மூன்றடிகளைச் சமர்த்தித்துநின்றது; தொடர்நிலைச் செய்யுட்

குறியணி. இச்செய்யுளை நகர்நீங்குபடலத்தின் உரை—ஆஞ் செய்யுளோடு ஒப்பிடுக. **பி - மி:**—[1]உலகில். [2]தன்மை. [3]மிகவாவி. [4]அழியுமோ. [5]உறுதி. [6]உள.

அசு.—அங்ஙனம் வந்திய நகரத்தவரின் வருத்தத்தை வசிட்டன் தணித்தல்.

மன்னற் [1]கல்லார் வனம்[2]போன மைந்தற்[3]கல்லார் வாங்கரிய
வின்னற் சிறையி [4]னிடைப்பட்டா ரிருந்தார் நின்ற வருந்தவனு
முன்னற் கரிய பழிக்கஞ்சி யன்றே வொழிந்த தியானென்று
பன்னற் [5]கரிய பலநெறியும் பகர்ந்து [6]பதைப்பை [7]நீக்கினான்.

(இ - ள்.) மன்னற்கு அல்லார் - (நகரத்திலிருந்தபடியே) தசரதமன்னவனுக்கு உதவப்பெறாதவரும், வனம் போன மைந்தற்கு அல்லார் - காட்டிற்குச்சென்ற இராமபிரானுடனேயிருந்து அவனுக்கு உதவப்பெறாதவருமாகி, வாங்க அரிய இன்னல் சிறையினிடை பட்டார் - போக்குவதற்குக் கூடாத துன்பமாகிய சிறையிலே யகப்பட்டுக்கொண்டு தவிப்பவராய், இருந்தார் - (மீண்ட அந்நகரத்தவர்) இருந்தார்கள்; நின்ற அரு தவன் உம் - (அவர்களிடையே வந்து அவர்கள்படும் பெருந்துன்பத்தைப்பார்த்து) நின்ற அரிய தவத்தையுடைய வசிட்டமுனிவனும், 'உன்னற்கு அரிய பழிக்கு அஞ்சி அன்றே யான் ஒழிந்தது - யானும் நினைத்தற்கும் அரிய [மிக்க] பழிக்குப் பயந்தன்றே உயிர் நீங்காது இத்துயரத்தைக் கண்டுகொண்டிருந்தது,' என்று—, பன்னற்கு அரிய பல நெறியும் பகர்ந்து-சொல்லுதற்கும் அருமையான (துயராறுதற்குரிய) பலமுறைகளையும் சொல்லி, பதைப்பை-(அவர்கள் மனத்துக்கொண்ட) துடிப்பை, நீக்கினான்—; (எ - று.)

'நகரத்திலேயே இருந்து மன்னவனுக்குத்தேறுதல் முதலிய செயலைச் செய்தால் மன்னற்குஆனவராகலாம்; அன்றி, இராமபிரான் சென்றதையுணர்ந்து நகருக்குமீளாமல் அவனிருக்குமிடத்தைநாடி அவனைச்சேர்ந்திட்டால் அந்த இராமனுக்கு ஆனவராகலாம்: இப்படி இருவரில் எவற்கும் உதவாமல் எமாந்திட்டோமே! இப்படிப்பட்ட நம்முடையஉயிரை வைத்துக்கொண்டிருப்பது எற்றுக்கு?' என்று மிகவும்வருந்தித் துடிக்கின்ற அந்தச் சனங்களைப் பார்த்து, வசிட்டமுனிவன் 'எனக்கும் உங்களைப்போலவே மனவருத்தம் மிக்குள்ளதே; இந்தஉயிரையும் விட்டிடலாமென்ற கருத்தும் உண்டு; ஆயினும், அங்ஙனம் தற்கொலைசெய்துகொள்வது மறுமையிற் கொடுநரகத்தைத் தரும். பெரும்பாதகத்தை வினைக்கு மென்றே அங்ஙனஞ் செய்யாதொழிந்தேன்: மன்னவனே விதிவசத்தாற் புத்திரசோகமென்ற ஒருவியாசத்தினுலிறந்திட்டான்: அங்ஙனம் எல்லார்க்கும் நேருமோ? விதியின்வழி பன்றே யாவும் நிகழும்' என்றுற்போலத் தேறுதலையுண்டாக்கும் வசனங்கள் பலவற்றையும் போதித்துத் தேற்றி அவர்கள்பதைப்பைப் போக்கலாயின னென்பதாம். 'சாமானியரான மானுடர்யாவரும் இராமபிரான் காட்டிற்குச் செல்கின்றனென்றல் பின்தொடர்வதும் அவனைப்பிரியநேர்ந்ததற்காக உயிரைவிடுவோமென்பதாக மிகவருந்துவதுமாகையில், வசிட்டன்மனம் கல்லோ?, அவனுக்கு

இராமனைப்பிரிந்ததில் அத்துணையாகவருத்தம் இல்லையோ?' என்று ஆசங்கை இந்தச் சரித்திரத்தைப் படித்துச்செல்வோர்க்குத் தோன்றக்கூடுமாதலால், அதனையொழித்தற்காக, கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் "வசிட்டமுனிவன் மெய்யுணர்வினதுதலால் தனது வாலறிவால் மனத்தைத் தேற்றித் துயரத்தையடக்கிக் கொண்டிருந்தானே யன்றி அவனுக்குப்பெருந்துயரமில்லை யென்பது இல்லை" என்றப்பொருள் தோன்றுமாறு இராமபிரானுடன் சென்ற நகரத்தவரைத் தனது பலதிறப்பட்ட போதனையால் ஆற்றினனென்று கூறினர்போலும். இவ்விஷயம் மூதனூலிற் காணப்பட்டிலது.

பி - மீ:—[1]அல்லர், அல்லால். [2]புகுந்த. [3]அல்லர், அல்லால், அல்லல். [4]இடர். [5]உரிய. [6]பதைப்பு. [7]விலக்கினன். (சுஉங)

அ.—கவிக்கூற்று: இனி இராமன் சரிதை கூறுவோமெனல்.

வெள்ளத் திடைவாழ் வடவனலை யஞ்சி வேலை கடவாத
பள்ளக் கடலின் முனிபணியாற் பையு ணகரம் [1]வைகிடமேல்
வள்ளற் குறைத [2]பணி யென்னும் வானோர் [3]தவத்தால் வயங்கிருளி
னள்ளிற் போன வரிசிலைக்கை நம்பி செய்கை நடத்துவாம்.

(இ - ள்.) வெள்ளத்து இடை-(தனது) நீர்ப்பெருக்கின் நடுவில், வாழ்-தங்கியுள்ள, வட அனலை-வடவாக்கினிக்கு, அஞ்சி-பயந்து, வேலை கடவாத-(தன்) கரையை மீறிச்செல்லமாட்டாத, பள்ளம் கடலின் - ஆழமான கடல் போல, முனி பணியால்-வசிட்டமுனிவனது கட்டளையினால், பையுள் நகரம்-துன்பத்துளழுந்திய நகரத்தவர், வைகிட - (தம்முயிரைப் போக்குவதென்ற கருத்தையொழித்து ஒருவாறு) ஆறியிருக்க,—வள்ளல் தாதை பணி என்னும் வானோர் தவத்தால் - உதாரகுணமுடைய தந்தையாகிய தசரதமன்னவனுடைய கட்டளையென்கின்ற வானோர் செய்த தவப்பயனால், வயங்கு இருளின் நள்ளில்-செறிந்த இராப்போதின் நடுவில், போன - (தன்னுடன் வந்த நகரத்தவரை வஞ்சித்துச்) சென்ற, வரி சிலை கை நம்பி - கட்டமைந்த வில்லையுடைய இராமபிரானது, செய்கை - செயலை, மேல் - இனி, நடத்துவாம் - கூறுவோம்; (எ - று.)

அயோத்திமாநகரத்துக்கு மீண்ட சனங்கள் வசிட்டனுபதேசத்தாற் கரைபுரண்டு பொங்கிவந்த தமது துயரக்கடல் தம்முள்ளேயடங்க ஒருவாறு அடங்கியிருந்தார்கள்: அயோத்தியின்செய்தி இவ்வாறிருக்க: நள்ளிரவில் தன்னுடன்வந்த நகரத்தவரை வஞ்சித்துச்சென்ற இராமபிரானது சரிதையை இனிச்சொல்வோ மென்பதாம். இராமபிரான் வனஞ்சென்றது தேவர்கட்கு இடையூறு இயற்றிவந்த இராவணன் இந்திரசித்து முதலிய அரக்கர் அழிந்தொழிதற்குப் பரம்பரையாய்க் காரணமாதலால், தந்தைபணி யென்று அப்பிரான் வனவாசஞ்செய்யினும் அது தேவர்கள்செய்த தவத்தின் பயனால் நிகழ்ந்ததேயென்பார், 'தாதைபணியென்னும் வானோர்தவம்' என்றார். சமுத்திரத்தின் இடையிலே ஒரு பெண்குதிரை யிருக்கின்றதென்பதும், அது தன் வாயிலுள்ள அக்கினியினால் மிக்கமழை யாறுகளின்பெருவெள்ளம் என்பவற்

முல் கடலில் நீர் மிகும்போது அந்நீரைப் பருகிக் கடலை ஒரெல்லையில்தானே நிற்குமாறு செய்கின்ற தென்பதும் நூற்கொள்கை: அந்தப் பெண்குதிரை 'படபா' எனப்படும்: அநலம் என்முல், அக்கினி;படபா அநல என்ற இரண்டு வடமொழிகள் ஒன்றுசேர்ந்து தீர்க்கசந்திபெற்ற தொடர்மொழியாகிய படபா நல என்பது தென்மொழியில் திரிந்து விகாரப்பட்டு'வடவனல்'என்முயிற்று: வடதிசையிலுள்ள அனல் என்று காரணப்பொருளுரைப்பாருமுளர். பி-ம்:— [1]பதைப்படங்க, வைகலுமேல், வைகமேல். [2]பணியிலுல், பணியாலும். [3]வரத்தால். (கூ2-சு)

தைலமாட்டுபடலம் முற்றிற்று.

கூ - ஆவது கங்கைப்படலம்.

கங்கையைப்பற்றிய படலமென்று விரியும். இராமபிரான் குகனை நண்ப ரைக்கொண்டு அவனுல் கங்கையைக்கடந்ததைத் தெரிவிக்கும்படலமென் பது, பொருள். இப்படலத்தின்பெயர் பலபிரதிகளில் 'குகப்படலம்' என்று காணப்படுகிறது. இங்ஙனம்காணும் பிரதிகளில் இப்போது காணப்படும் க-ஆம் படலமாகிய குகப்படலத்திற்குக் **கங்கைப்படலம்** என்று பெயர் காணப் படுகிறது. "எழையேதலன்கீழ்மகனென்னுதிரங்கிமற்றவற்கின்னருள்சுரந்து, மாழைமான் மடநோக்கி யுன்முழி யும்பியெம்பி யென்முழிந்திலையுக ந்து, தோழனீயெனக்கிங்கொழியென்ற சொற்கள் வந்தடியேன் மனத்திருந் திட, வாழிவண்ணல நின்னடியினை யடைந்தேதன்," "கூரணிந்தவேல் வலவன் குகனேடுங்கங்கைதன்னிற், சீரணிந்தசேவடிகாண்டதும்" என்று பெரி யோரும் பாராட்டிக்கூறும்படி ஸ்ரீராமபிரான் குகனேடுசேவடி காண்ட தைத் தெரிவித்தல் முக்கியமாதலால் குகப்படலமென்ற இப்பெயரே இப்பட லத்திற்கு எற்கும்.

சுமந்திரனை அயோத்தியாபட்டணத்துக்கு அனுப்பி நகரத்துச்சனங் கட்குத்தெரியாமல் நள்ளிருளில் நடந்த ஸ்ரீராமன்முதலிய மூவரும் மருத நிலங்களின் வளங்களைக் கண்ட வண்ணம் நாட்டைக் கடந்து கங்கைக்கரை யையடைந்து அங்கேயுள்ள தவசியர்வந்து உபசரிக்கக் கங்கைநீராடிச் செய் கடன்முடித்து அம்முனிவரிட்டகாய்கிழங்குமுதலியனஉண்டு பர்ணசாலையில் - மகிழ்ந்திருக்கையில், அத்தக் கங்கைக்கரையிலுள்ள சிருங்கபேரபுரத்துக்கு அரசனுகிய குகனென்பான் இராமபிரான் வந்துள்ளதைக் கேள்வியுற் றுக் காணிக்கைப்பொருள்களைக் கையிலேந்தித் தன்சேனையோடும் அங்கு வந்து இராமபிரானைக் காணவந்திருப்பதை இலக்குமணன் மூலமாக அறி வித்து அனுமதிபெற்றுத் தான்மாத்திரம் உட்புக்கு அடிவணங்கிக் காணிக் கைப்பொருளை யீய, இராமபிரான் 'காணிக்கைப் பொருளைப்பெற்றுற்போல் மகிழ்ந்தேன்: நீ இன்று உன் சுற்றத்தோடு ஊர்க்குப்போய் நாளைக் கங்கை கடக்குமாறு நாவாய் கொணர்க' என்ன; பிரிந்து செல்லுதற்கு அன்னன்

வருந்தியது கண்ட இராமபிரான், அன்றிரவுதன்னேடிருக்க அனுமதிதா, குகனும் இளையபெருமாளைப்போலவே இராமனை இரவிலே தன்சேனையோ டும் காவல்புரிந்தனன். மறுநாள் பொழுதுபுலர்ந்ததும், நாட்கடன்முடித்த பின் ஸ்ரீராமன் 'விரைவில் நாவாய் கொணர்க' என்ன, குகன் மிகவும் வருந்தி 'வேண்டிய குற்றேவல்புரிவேன்: இக்குத்தாளே கழிக்கவேண்டிய நாட்களைக் கழிக்க'என்று வேண்ட, இராமபிரான் அதுகேட்டு 'நான் புண் ணியநதியாடிப் புனிதரை வழிபடவேண்டும்: அவைபுரிந்து சிலநாளில் வருவோம்' என்றான். குகனும் ஸ்ரீராமபிரான்கருத்தை யுணர்ந்து நாவாய் கொணர்ந்து 'ஏறுக' என்ன, இராமபிரான் சீதாலக்ஷ்மணரோடும் முனிவர் பக்கல் விடைபெற்றுக்கொண்டு நாவாயேற, நாவாய்கொண்டு கங்கையைக் கடத்தினன். பிறகு, ஸ்ரீராமன் 'சித்திரகூடஞ் செல்லும்வழியாது?'என்று அக்குகனே வினவ;குகன் 'நான் தேவரீரைவிட்டுப் பிரியேன்: என்சேனையோ டும் உமக்கு வேண்டியதெல்லாம் புரிவேன்: உம்மோடு இருக்க அநுமதிதருக' என்று மிகவும் வேண்ட, அவன்வார்த்தையைக் கேட்டு ஸ்ரீராமன் அந்தக் குகனைநோக்கி, 'நீ என்னுயிரை யொத்தவன்: என்தம்பி உன்தம்பி: சீதை உன்தோழி: நாங்கள் தயரதர்க்கு நால்வர்புதல்வ ரிருந்தோம்: இப்போது ஐவராளேம்: இனி உன்சுற்றம் என்சுற்றமே: ஆகலால் சிருங்கபேரபுரத்த வரைப் பாதுகாப்பாயாக; அயோத்திக்கு மீளும்போது இங்குவருவோம். கோசலநாட்டைக் காத்தற்குப் பரதனை வைத்தோம். இங்குள்ளாரைப் பாது காக்க உன்னை வைத்திருக்கிறோம்.என்கிளைஞரான இவரைப் பாதுகாப்பாய்' என்று நட்புரிமைபாராட்டிச் சொல்ல, இட்டபணியைக் கடக்கமாட்டாமல் குகன் விடைபெற்றுக்கொள்ள, பிறகு இராமன்முதலியோர் காட்டுநெறியை நோக்கி நடந்து சென்றன ரென்பது இப்படலத்திற் கூறியபொருள்.

வேறு.

க.—இராமபிரான் இல்கிதமனைவிதீ சீதையோடுந் செல்லுதல்.

வெய்யோளெனி தன்மேனியின் [1]விரிசோதியின் மறைபப்
பொய்யோவெனு மிடையாளொடு [2]மிளையோனெடும் போனான்
மையோ·மர கதமோ[3]மறி கடலோமழை முகிலோ
வையோவிவன் வடிவென்பதொ ராழிபாவழ குடையான்.

(இ - ள்.) 'இவன் வடிவு-இவனது திருமேனியின் நிறம், மை-அஞ்ச னத்தைப் போலுமோ? மரகதம் ஓ-மரகதவிரத்தினத்தைப் போலுமோ? மறி கடல் ஓ-(அலை) மடங்குந்தன்மையுள்ள கடலைப் போலுமோ? மழை முகில் ஓ-மழைபெய்யும்நிலையிலுள்ள வானத்தைப் போலுமோ? ஐயோ-!' என்பது-வன்று சொல்லத்தக்க, அழியா ஓர் அழகு உடையான் - ஒப்பற்றுமாறாத அழகைப் படைத்தவனாகிய இராமபிரான்,-வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியின் மறைய-வெப்பமான கிரணங்களையுடைய சூரியனது ஒளி

தனது திருமேனியினின்று வெளிப்பட்டுப்பரவுகின்ற ஒளிக்குள் மறைந்திட, பொய் ஓ எனும் இடையாளொடு உம்-இல்லையென்று சொல்லுமாறு [மிக நுண்ணியதாக] உள்ள இடையைக்கொண்டவளான சீதாபிராட்டியோடும், இளையாளொடு உம்-இளையபெருமாளுடனும், போனான் - செல்லலானான்.

மைமுதலியவை என்றும்மாறாது ஒருபடிப்பட அழகுடையனவல்ல வாதலாலும் ஞாயிற்றினொளியும் தம்முள் மறையும்படி பேரொளிபடைத்தன வல்லவாதலாலும் இராமபிரானது திருமேனிக்கு அவை ஒருபடியாக ஒப்பா வனவன்றி முற்றுவமையாகா வென்க: இங்ஙனம் அஞ்சனம்முதலியவற்றில் எதுவும் உவமையாகாமையால்தான், மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ என ஐயப்படவேண்டிய தாயிற்று. ஐயோ - அதிசயமுறவிரங்கு தலைக் குறிப்பிக்கும் இடைச்சொல். "அச்சோவையோ, வென்னேயெற்றவ னெனுஞ்சொ லதிசயமுறவிரங்கல்" என்பது, சூடாமணிநிகண்டு. வெய் யோன்ஒளி - சூரியனது ஒளிக்காக [சூரியனதுவெப்பத்துக்குஅஞ்சி], தன் - இராமபிரானின், விரி சோதியின் மறைய - பரந்தஒளிவடிவான திருமேனி நிழலிலொதுங்க;-(அங்ஙனம்மறைந்த), பொய்யோவெனும் இடையாளொடு என்று உரைகூறுவாருமுளர். பி-ம்:—[1]மினிர். [2]இளையாளொடு. [3]மழைமுகி லோ மறிகடலோ. (சுஉஙி)

உ.—இதுமுதல் நான்குகவிகள் - இராமபிரான் சீதையுடனே தான் செல்லும் காட்டினில் நிகழும் அன்னம்முதலிய காணுதலைக்கூறும்.

அளியன்னதொ [1]ரறறுன்னிய குழலாள்கட லமிழ்தின்
[2]றெளிவன்னதொர் மொழியாணிறை தவமன்னதொர் [3]செயலாள்
வெளியன்னதொ ரிடையாளொடும் விடையன்னதொர் நடையான்
களியன்னமு மடவன்னமு [4]முடனுடுவ கண்டான்.

(இ-ள்.) அளி அன்னது-வண்டினை யொத்ததாய், ஓர் அறல் துன்னிய-ஒப்பற்ற கருமணல் நெருங்கியிருப்பதுபோல நெருங்கியிருக்கின்ற, குழலாள்-கூந்தலையுடையவளும், கடல் அமிழ்தின் அன்னது தெளிவு ஓர் மொழியாள்-திருப்பாற்கடலினின்று தோன்றிய அமிருதத்தையொத்து [இனியவாய்] தெளிவான பேச்சுக்களையுடையவளும், நிறை தவம் அன்னது ஓர் செயலாள்-நிறைந்ததவத்தையொத்துத் தூய்மையதான தொழிலையுடையவளும், வெளி அன்னது ஓர் இடையாளொடுஉம் - ஆகாயத்தை யொத்ததான [கண்ணுக்குப் புலனாகாததான] இடையையுடையவளுமான சீதாபிராட்டியோடுங்கூட, விடை அன்னது ஓர் நடையான் - காளைமாட்டை யொத்த [கம்பீரமும் வலிமைச்செருக்குந் தோற்றுவதான] நடையையுடையவனான ஸ்ரீராமபிரான், களி அன்னம் உம்-மதக்களிப்பையுடைய அன்னமும், மடம் அன்னம் உம்-மடப்பத்தையுடைய பெண்ணன்னமும், உடன் ஆடுவ-சேர்ந்து உலாவுவதை, கண்டான் —; (எ - று.)

சீதையின் குழலுக்கு - அளியும் அறலும், தெள்ளிய இனியமொழிக்கு-தெளிந்த இனிமை மிக்க அமுதமும், தூய்மையான செயலுக்கு - தவமும், கண்ணுக்குப் புலனாகாத இடைக்கு - ஆகாயமும் உவமையெனக் காண்க. அறல், நிறத்தோடு வடிவிலும் உவமை. விடையன்ன தொர்நடை - வ்ருஷப கதி. தூயசெயல் - கற்பொழுக்கம். அன்னம் என்ற பொதுப்பெயர் - 'கள்ளி,' 'மடம்' என்ற அடைமொழிகளைப்பெற்று, முறையேஆணையும் பெண்ணையுங் காட்டின. 'இடையாளொடும் விடையன்னதொர் நடையான் களியன்னமும் மடவன்னமு முடனுடுவ கண்டான்' என்றதனால், அவை சீதையும் தானும் உடன்செல்வதைப்போலு மென்ற குறிப்புடன் கண்டா னென்பது, பெறப்படும். பி ம்:—[1]அறல்பன்னிய. [2]தெளியன்னது. [3]பொறையாள். [4]நடமாடுவ, விளையாடுவ, விளையாடுதல். (சூஉசூ)

கூ. அஞ்சம்பையு மையன்[1]றன தலகம்பையு மளவா
நஞ்சங்களை [2]வெலலாகிய நயனங்களை யுடையா
[3]டுஞ்சுங்களி வரிவண்டுகள் குழலின் [4]படிசுழலுங்
கஞ்சங்களை [5]மஞ்சன்கழ னகுகின்றது கண்டாள்.

(இ - ள்.) அஞ்சு அம்பை உம் - (மன்மதனது) பஞ்சபாணங்களையும், ஐயன்தனது அலகு அம்பை உம் - இராமபிரானது கூர்மையான அம்பையும், அளவா - அளந்து [உவமையாற் கடந்து], நஞ்சங்களை வெலல் ஆகிய - விடத்தை வெல்லுகின்ற, நயனங்களை - கண்களை, உடையாள் - படைத்தவளான சீதை,—களி துஞ்சும் வரி வண்டுகள்-மதக்களிப்புத்தங்கிய இரேகைகளமைந்த வண்டுகள், குழலின் படி சுழலும் - வேய்ங்குழலின் தன்மையோடு [இன்னிசையோடு] வட்டமிடப்பெற்ற, கஞ்சங்களை - தாமரைமலர்களை, மஞ்சன் கழல்-இராமபிரானது திருவடிகள், நகுகின்றது-(தமக்கு இவை இணையாகா என்று) பரிகசிப்பதுபோன்றிருத்தலை, கண்டாள்—; (எ - று.)

சீதாபிராட்டி, வண்டுகள் சுழலப்பெற்றதும் மஞ்சன்கழல்நகுகின்றது மான கஞ்சங்கள் தாம்செல்லும்வழியிடையே பூத்திருத்தலைக் கண்டா னென்ற வாறு. அத்தாமரைமலர்கள் இராமபிரானது திருவடிகட்கு ஒப்பாகா என்றது-எதிரிநிலையணி. "அவிழ்தட்சணை" என்று ஸ்ரீவான்மீகிபகவான் அருளிச் செய்யுமாறு கண்ணழகு விஞ்சியவளாதலால் 'அஞ்சம்பையும்.....நயனங்களை யுடையாள்' எனச் சீதாபிராட்டியைக் கண்ணழகுடையவளென்று பாராட்டிக்கூறினர். தமக்கு இலக்காளரை வசப்படுத்துந்தன்மை அஞ்சம்புக்கும் இராமபிரானது அலகம்புக்கும் உளதாதல்பற்றி, அவை நயனங்கட்கு உவமையாயின. நஞ்சும் உண்டார்க்கே வேதனையுண்டாக்குவதாக இருக்க இந்தக் கண்கள் இலக்காளர்க்கும் வேதனையை விளைத்தலால், நயனம் நஞ்சங்களை வெல்வதாகும். இதனால், இராமபிரான் சீதாபிராட்டியின் கண்ணழகில் ஈடுபட்டுள்ளா னென்பது, விளங்கும். நஞ்சங்கள், கள் - அசை. அலகு-கூர்மைக்கு,

இலக்கணை. வண்டுகள் குழலின்படி சுழலும் என்னுமிடத்தில் "இருங்கட் டும்பி குழலாக" என்றது ஒப்புநோக்கத்தக்கது. களி துஞ்சும் வண்டுகள் குழ லின்படி சுழலும்என்பதற்கு-களிப்புப்பொருந்தியவண்டுகள் நெய்கின்றகுழல் போலப் போவதும்வருவதுமாக இருக்கின்ற என உரைத்தாருமுளர். குழ லின்படி-அளகத்திற் சுழல்வதுபோல என்று உரைத்தலும் ஒன்று. பி பி:— [1]கையிலழகம்பை, தனதகலம்பை, கையிலகலம்பை. [2]வெல. [3]கொஞ்சுங்கிளி. [4]மிசைசுழலக். [5]அஞ்சங்களோருகுதன் கழல், மஞ்சன்கழனகுகின்றன. (கூஉள)

சு. மாகந்தரு மகரந்தரு பளகந்[1]தரு மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான்
மேகந்தனி [2]வருகின்றது [3]மின்னேனெடன மிளிர்பூ
ணாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா.

இதுவும் அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) மா கந்தம் உம் - மிக்க நறுமணத்தையும், மகரந்தம் உம் - பூந் துகளையுங்கொண்ட, அளகம் - கூந்தல், தரு - பெற்ற, மதியின் பாகம் தரு- சந்திரனது துண்டத்தை [அஷ்டமீசந்திரனை] யொத்த, நுதலாளொடு-நெற் றியையுடையவளான சீதாபிராட்டியோடு, பவளம் தரும் இதழான் - பவழத் தையொத்த அதரத்தையுடையவனாகிய ஸ்ரீராமபிரான்,—மிளிர் பூண் - விள ங்குகின்ற ஆபரணங்களையணிந்த, மேகம் மின்னேடு தனி வருகின்றது என- மழைமுகில் மின்னலோடுசேர்ந்து தனித்துவருகின்றதுபோலவும், நாகம் பிடி யோடு தனி வருகின்றது என - ஆண்யானை (தன்) பெட்டையோடு தனித்து வருகின்றதுபோலவும், நடவா-(தாளிணைகள்) நடந்துசென்று,—(எ-று.) "குவ ளைத்தொகை கண்டான்" என அடுத்த செய்யுளோடு தொடர்ந்துமுடியும்.

மாகந்தம் மகரந்தம் என்பன, அளகத்துக்கு அடைமொழிகள். அளகம் . பெண்மயிர்: இது இப்பொருளதாதலை "அளகமோதியையம்பால்...பெண்மயிர்" என்ற பிங்கலந்தையாலும் அறிக. சீதாபிராட்டியின் கூந்தன்மயிரை யடுத் துத் தோன்றும் நெற்றியை 'அளகந்தரு மதியின் பாகந்தரு நுதல்' என வரு ணித்தார்; தரு - உவமவுருபு. நுதலாளொடு இதழான் வருவது - மேகம் மின் னேடு வருவதனையும், நாகம் பிடியோடு வருவதனையும் போலு மென்றார்; உவமையணி. மேகம்மின்னேடென்றது - வடிவத்திலும், நாகம் பிடியோ டென்றது - நடையிலும் உவமையாம். மேகந்தனிவருகின்றது என்றது - இடியின்றி வருவதென்ற கருத்திலுலாகும். 'மிளிர்பூண்' என்ற அடை மொழி 'மேகம், நாகம்' என்ற இரண்டோடும் இயையத்தக்கது. நாகந்தனி வருகின்றது என்றது - யூதபதிஇனத்தோடும் வருவது இயல்பாதலால், அங் ஙனமின்றித் தனித்துவருகின்றதென்னும் பொருளை யுணர்த்தற்காக. நாகம்- நகத்தில்வாழ்வது என யானைக்குக் காரணக்குறி; நகம் - மலை. பி-யீ:— [1]தொடர், தர. [2]வருகின்றதொர். [3]வில்லோடென. (கூஉஅ)

ரு. தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவை யமுதின்
கிளைகட்டிய கருவிக்கிள ரிசையிற்பசை நறவின்
விளைகட்டியின் மதுரித்தெழு கிளவிக்[1]கிளி விழிபோற்
களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகை [2]கண்டான்.

(இ-ள்.) தொளை கட்டிய கிளை முட்டிய சுருதி சுவை அமுதின்-தொளை பொருந்திய வேய்ங்குழலிலிருந்து (வாய்க்காற்றுத்) தாக்கியெழுப்பிய இசையாகிய (காதாற்)சுவைக்குந்தன்மையுள்ள அமுதம் போலவும்,கிளை கட்டிய கருவி கிளர் இசையின் - நரம்பு கட்டப்பெற்ற கருவியாகிய யாழினின்று எழுகின்ற இசைபோலவும், பசை நறவின் - பசுந்தேன்போலவும்,விளை கட்டியின் -(கருப்பஞ்சாற்றினின்று)உண்டாக்கப்படுகின்ற பாகுகட்டிபோலவும், மதுரித்து - இனிமையைப்பெற்று, எழு - உண்டாகின்ற, கிளவி - பேச்சையுடைய, கிளி-கிளிபோன்றவளான சீதாபிராட்டியின், விழி போல் - கண்களைப் போன்றுள்ள, களை கட்டவர் தளை விட்டு எறி குவளை தொகை-களைபிடுங்குபவர்வயலினின்று விட்டெறிகின்ற குவளைமலரின் தொகுதியை,கண்டான்-.

இராமபிரான் சீதையின் கண்களைப்போல் தோன்றுகின்ற குவளைமலர்த்தொகையைக் கண்டானென்க. சீதாபிராட்டியின் பேச்சு - இனிமைபயத்தலில் வேய்ங்குழலினிசையையும்,யாழினிசையையும், பசுந்தேனையும், கருப்புக்கட்டியையும் போலுமென்க. வேய்ங்குழலாகிப்போன் தன்வாயினின்று விடுத்த காற்று உட்புறத்துத் தாக்கித் திறந்த தொளைவழியே வெளிவருவதலேயே இசை பிறத்தலால், 'கிளைமுட்டிய சுருதி' என்றார். கிளை - வேய்ங்குழல்; "தண்ணுமையாழ் முழவங்கிளை" என்றதுங் காண்க. அமுதின் முதலிய இடங்களிலுள்ள இன்னீ உவமப்பொரு வாக்காமல் உறழ்பொருவாக்கிச் சுருதிச் சுவையமுது முதலியவற்றைக் காட்டிலும் விஞ்சி மதுரித்தெழுகின்ற கிளவி என்று உரைத்தலும் பொருந்தும். கிளி - கிளிபோன்றவட்கு, ஆகுபெயர். பி-ம்:—[1]கிளர். [2]கண்டார். (சுஉசு)

சுர.—இதுமுதல் மூன்றுகவிகள் - இராமனுதியீர் பலவகைக்காட்சிகளைக் கண்டவண்ணம் கோசலநாடுகடந்தமையைத் தெரிவிக்கும்.

அருப்பேந்திய கலசத்துணை யமுதேந்திய மதமா
மருப்[1]பேந்திய வெனலாமுலை மழையேந்திய குழலாள்
[2]கருப்பேந்திர முதலாயின கண்டானிடர் காணாள்
பொருப்பேந்திய தோளாளெனை விளையாடினள் [3]போனாள்.

(இ - ள்.) ஏந்திய - (இவள்)தாங்கியுள்ளவை;—அரும்பு ஏந்திய கலசம் துணை - அரும்பை(த் தன்மேலிடத்து)க்கொண்டுள்ள இரண்டு பொற்கலசங்களோ? (அன்றி), அமுது ஏந்திய மதம் மா மருப்பு - இனிமையை (த் தன்னிடத்து)க் கொண்டுள்ளனவும் மதயானையினிடத்துத்தோன்றியுள்ளனவுமான (இரட்டைத்)தந்தங்களோ? எனல்ஆம் - என்று சொல்லுதற்குத்தக்க,முலைதனங்களைக் கொண்டுள்ள, மழை ஏந்திய குழலாள் - மேகத்தை யொத்த கூந்தலையுடையவளாகிய சீதாபிராட்டி,— இடர் காணாள் - (தன் கணவனு

டன் செல்வதனுல் வழிநடத்தலினுலுண்டாகிற) வருத்தத்தை (ச் சிறிதும்) அடையாதவளாய், பொருப்பு ஏந்திய தோளானெடு - மலையையொத்த தோளையுடைய இராமபிரானேடு, விளையாடினள்-மனம் மகிழ்ந்தவளாய், கரும்பு ஏந்திரம் முதல் ஆயின கண்டாள்-கரும்பாலை முதலியவற்றைக் கண்ட வண்ணம், போனுள்—;(எ - று.)

பலவகைக் காட்சிகளையும் கண்டுகொண்டே செல்வதனுல் வழி நடந்த வருத்தம் சிறிதுந் தோன்றுமல், சீதை, மனமகிழ்ந்து இராமபிரானுடன் சென்றனளென்று கருத்துக் கூறுவாருமுளர். தனங்களுக்கு - அருப்பேந்திய கலசத்துணையும், அழுதேந்திய மாமருப்பும் உவமை. ஏந்திய ஏந்திரம்=யந்திரம்:வடசொல். 'மதமா ஏந்திய' என்பது, மருப்புக்கு இயற்கையடைமொழி. முன்னிரண்டடிகட்கு - அரும்பையேந்தியனவும் அழுதகலசத்துணையேந்திய எனவும் மதமா மருப்பேந்திய எனவுஞ்சொல்லுதற்குரிய முலையையும் மழையேந்திய குழலையுமுடையவ ளெனக்கூறலுமாம். மூன்றுமடியில் தொடைமுரண்காண்க. ஏந்திய என்றசொல் பலமுறைவந்தது சொற்பொ நுட்பின்வருநிலையணியாம். பி-ம்:—[1]ஏந்தியது. [2]கருப்பேந்தியம். [3]போவாள்.

எ. [1]பன்னந்துக டரளந்தொகு படர்[2]பங்கய நன்னீ
ரன்னந்துயில் வதிதண்டலை [3]யயனந்துறை புளினஞ்
சின்னந்தரு மலர்[4]சிந்திய செறி[5]நந்தன வன[6]நன்
[7]பொன்னந்திய நதிகண்டுள [8]மகிழ்ந்தனர் [9]போனர்.

(இ - ள்.) பல் நந்துகள் தரளம் தொகு - பலசங்குகளினின்று தோன்றிய முத்துக்கள் சேரப்பெற்ற, படர் பங்கயம் நல் நீர்-படர்ந்துள்ள தாமரைக் கொடிகளையுடைய சிறந்த நீர்நிலைகளில், அன்னம் துயில் வதி-அன்னப்பறவைகள் தூங்குவதற்கு இடனான, தண்தலை - சோலைகளையும், அயல் நந்து உறை புளினம் - பக்கங்களில் சங்குப்பூச்சிகள் தங்கப்பெற்ற மணல்மேடுகளையும், சின்னம் தரு மலர் சிந்திய செறி நந்தனவனம் - விடுபூவாக அணிதற்குரிய மலர்களைச் சிந்தியுள்ள பூஞ்செடிகளடர்ந்த நந்தவனங்களையும், நல் பொன் நந்திய நதி - சிறந்த பொன்னைக் கொழிக்கின்ற நதிகளையும், கண்டு —, உளம் மகிழ்ந்தனர் - மனமகிழ்ந்தவர்களாய், போனர் - (இராமன் முதலியவர்) சென்றார்; (எ - று.)

கால்நடையாகச்சென்ற இராமன்முதலியோர் தாம் செல்லும் வழியிடையேயுள்ள சோலைகளையும் புளினங்களையும் நந்தவனங்களையும் ஆறுகளையும் கண்டு மனமகிழ்ந்தன ரென்பதாம். இராமபிரான் கோசலதேசத்தைக் கடந்து கங்கையைச் சேருமுன் தமசாநதிக்கரையில் தங்கியபின்பு தேவசருதி நதீகோமதி என்னும் நதிகளைக் கடந்தா னென்பது முதனூலால் விளங்கும். நந்நகத்தில் தோன்றிய எனினுமாம். பி-ம்:—[1]பன்னந்துகுதரளம். [2]பந்திகள்படுநீர், [1]தொடர்கள்படுநீர். [3]அயநந்துறை. [4]தந்தன, சிந்தின. [5]சந்தனவனம். [6]ஆம். ன்னுந்திய. [8]மகிழ்வுற்றனர். [9]போவார்.

(கூடக)

4. கால்பாய்[1]வன முதுமேதிகள் கதிர்மேய்வன கடைவாய்ப்
பால்பாய்வன [2]நறைபாய்வன மலர்வாயளி படரச்
சேல்பாய்வன கயல்பாய்வன செங்கான்மட வன்னம்
போல்பாய்[3]புனன் மடவார்படி [4]நெடுநாடனை போனார்.

(இ - ள்.) முது மேதிகள் - முதிர்ந்த எருமைகள், கதிர் மேய்வன-நெற் கதிர்களை மேய்வனவாக,(அதனல்), கடைவாய் பால் பாய்வன-(தமது)வாய்க் கடையினின்று (மணிபிடியாத அக்கதிர்களின்) பாலொழுகப்பெற்றனவாய், கால்பாய்வன-(தமது)கால்களாற் பாயப்பெற்றனவும்,—நறை பாய்வன மலர் வாய் அளி படர - தேனொழுகப்பெற்றனவான நீர்மலர்களிலுள்ள வண்டுகள் மேலெழுந்து உலாவுமாறு, சேல் பாய்வன கயல் பாய்வன-சேல்மீன்களும் கயல்மீன்களும்(களிப்புக்கொண்டு)குதித்து மேலெழப்பெற்றனவுமான, பாய் புனல்-பாய்ந்து செல்லுந் தன்மையுள்ள நீர்களில், செம் கால் மடம் அன்னம் போல - செந்நிறத்தாலைக்கொண்ட மடப்பத்தையுடைய அன்னப்பறவை போல, மடவார் படி - மகளிர் மூழ்குதற்குஇடனை, நெடு நாடு அனை - சிற ந்த அந்தக்கோசலநாட்டை, போனர்-(இராமன் முதலிய மூவரும்) கடந்து சென்றார்கள்; (எ - று.)

அந்தக்கோசலதேசம், எங்குப்பார்த்தாலும் பாய்ந்துசெல்லும் நீர்நிலை களைப்பெற்றுள்ளது; அந்தநீர்நிலைகளில், சிற்சிலவிடத்து, நீரைக்கண்டால் மகிழ்ந்து செல்லும் எருமைகள் தம்வாயில் மேய்ந்த முற்றுகதிரினின்று பால் பெருகிக் கொண்டிருக்கப் பாயும்: அன்றியும், அந்நீர்நிலைகள் கயல்மீன் களும் சேல்மீன்களும் துள்ளி விளையாடப்பெறும்: அங்ஙன் அம்மீன்கள் துள்ளிவிளை யாடிக் குதிக்கும்போது அந்நீர்நிலைகளிலுள்ள தாமரைமலர்களின்மீது தாக்கு வதனல் அம்மலர்களில் தேனைப் பருகுமாறு உள்ளே படிந்திருந்த வண்டுகள் மேலெழும். இங்ஙனமான நீர்நிலைகளில் தமக்கென்று ஏற்பட்ட துறைகளுள் மகளிர் மடவன்னம்போற் படிந்துமூழ்குவார்கள்: அவ்வாறு புனல்வளஞ் சிற ந்த கோசலநாட்டை இராமன்முதலியோர் கடந்துசென்றன ரென்பதாம்.

பி-ம்:—[1]முலை, புனல். [2]பறை, புனல். [3]புனமடவார். [4]திருநாடு. (சுசுஉ)

வேறு.

சுசு—இராமன் முதலியோர் கங்கையை யடைதல்.

பரிதி பற்றிய பல்[1]கலன் [2]முற்றினர்
மருத வைப்பின் வளங்கெழு நாடொரீஇச்
சுருதி கற்றுயர் [3]தோமிலர் [4]சுற்றுறும்
விரிதி ரைப்புனற் கங்கையை [5]மேவினர்.

(இ - ள்.) பரிதி பற்றிய பல் கலன் முற்றினர்-சூரியன்போல விளங்கு கின்ற பல ஆபரணங்களை நிரம்பஅணிந்த இராமன் முதலிய அம்மூவரும்;- மருதம் வைப்பின் வளம் கெழு நாடு ஒரீஇ-மருதநிலமாகிய வளப்பம்பொருந் திய கோசலநாட்டைக் கடந்து (பின்பு); சுருதி கற்று உயர் தோம் இலர் சுற்

றுறும் - வேதங்களைப்பயின்று மேம்பாடுற்ற குற்றமற்ற முனிவர் சூழ்ந்து தங்கப்பெற்ற, விரி திரை புனல் கங்கையை - பரவுகின்ற அலைநீரையுடைய கங்காநதியை, மேவினர் - சென்று சேர்ந்தார்கள்; (எ - று.)

தாம் செய்யவேண்டிய விரதநியமங்களைச் செய்துகொண்டு இனிது உறைதற்குஏற்ற தலமாதலாலும், தன்னையடைந்தாரது தீவினைகளைப்போக்குந் தெய்வநதி யாதலாலும், சுருதிகற்றயர்தோமிலர் அதனைச்சுற்றி வாழ்வாராயினர். பி-மீ:—[1]கனை. [2]முற்றிய. [3]தோமிலாச். [4]சுற்றுற. [5]மேவினன். (சுஙஉ)

கo.—கங்கைக்கரையில் வாழுந் தபோதனர் இராமனைக் காணவருதல்.

கங்கை யென்னுங் கடவுட் [1]டிருநதித்
தங்கி வைகுந் தபோதனர் யாவரு
மெங்கள் செல்கதி வந்ததென் றேமுறு
வங்க ணையகற் காணவந் தண்மினர்.

(இ - ள்.) கங்கை என்னும் கடவுள் திருநதி-கங்கையென்று சொல்லப்படுகின்ற தெய்வத்தன்மையுள்ள சிறந்த நதிக்கரையில், தங்கி வைகும்-தங்கி வாழ்கின்ற, தபோதனர் யாவர்உம்-இருடியரெல்லாரும், 'எங்கள் செல் கதி-யாம்(தவம் செய்து)அடையும் புகலிடமாகிய பரம்பொருள், வந்தது-(இங்கே) வந்திட்டது,' என்று-, ஏமுறு-மகிழ்ச்சியடைந்து, அம்கண் நாயகன்-அழகிய திருக்கண்களையுடைய இராமபிரானை, காண - தரிசிக்குமாறு, வந்து-, அண்மினர் - நெருங்கினர்கள்; (எ - று.)

தாங்கள் எந்தக்கடவுளை அடையவேணுமென்று தவஞ்செய்கின்றார்களோ அந்தக்கடவுளே மானிடவடிவந்தாங்கி வந்துள்ளதைத் தமது ஞானக்கண்ணினாலுணர்ந்து அக்கங்கைக்கரையில்வாழும் முனிவர்கள் 'எங்கள்செல்கதிவந்தது' என்று சொல்லிக்கொண்டு இராமபிரானை வந்தணுகின ரென்க. நாம் தேடிச்செல்லவேண்டிய பரம்பொருள் நாம்இருக்குமிடந்தேடி வந்ததே! இதுஎன்ன பெரும்பேறு என்றஈடுபாடு, 'செல்கதிவந்தது' என்றவிடத்துத் தோன்றும். தன்னில் ஒருகால் மூழ்கியவரது தீவினைகளையெல்லாம் போக்குந் தன்மையுடையது மாத்திரமேயன்றி, திரிவிக்கிரம மூர்த்தியாகிய திருமால் திருவடியினின்று பிரமதேவரால் உண்டாக்கப்பெற்றுச் சிவபிரானது சடையில்தங்கி இப்பூவுலகில் வருதலாலும், கங்கை 'கடவுணதி'என்று சொல்லத்தகும். பி - மீ:—[1]பெருநதி. (சுஙச)

கக.—வந்தமுனிவர்கள் இராமனைத் தரிசித்துமகிழ்தல்.

பெண்ணி [1]லேக்குஞ் சுவையிற் பிறர் [2]பிறக்
கெண்ணி [3]லேக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி [4]லேக்கும் பராவரு தைப்பசுங்
கண்ணி லேக்கின ருள்ளங் களிக்கின்றார்.

(இ - ள்.) பிறர் பிறர்க்கு-'முனிவரினும்)மிகவும் வேறுபட்டவரானஇல்லறத்தார்களால், பெண்ணின் நோக்கும் - பெண்பாலாரிடத்து (த் தாம்) அனுபவித்துக்காணப்படுகின்ற, சுவையின்-காமவின்பம்போல,-எண்ணில் நோக்கி

இயம்ப அரு இன்பத்தை-மனத்திலுல் ஆராய்ந்துபார்த்து (வாயிலுற்) சொல் லுவதற்கும் அருமையான இன்பத்தின் வடிவானவனும், பண்ணில் நோக்கும் பரா அமுதை - சுரவடிவமான வேதத்திலு லுணரவல்ல சிறந்த அமுதசொரு பியுமாகிய அந்த இராமபிரானை, (அம்முனிவர்), பசும் கண்ணின் நோக்கினர்-ஊனக்கண்களாற் காணப்பெற்றவராய், உள்ளம் களிக்கின்றார்—; (எ - று.)

இவ்வுலகத்தவர் பெண்பாலாரின் கலவியின்பத்தால் மனங்களிப்பது போல், பற்றற்ற யோகியராகிய அத்தபோதனர்கள் இன்பவடிவானவனும் வேதங்களா லுணரப்படும் அமுதம்போல்இனியனுமாகிய பரம்பொருளின்வடி வான அவ்விராமபிரானைக்கண்டு உள்ளங்களித்தனரென்க.இல்லறத்தார் காம சுகத்தைத்துய்த்து இன்பத்தையடைவதுபோல, முனிவர் எம்பெருமானைத் தியானித்து இன்பமடைகின்றனரென இன்பமடைதற்றிறத்தில்ஒப்புமையே யன்றி இன்பத்திறத்து ஒப்புமைகூறியதன்று: பேரின்பத்தைச் சிற்றின்பம் எள்ளளவும் ஒவ்வாதாகையா லென்க. பிறர்க்கு - உருபுமயக்கம். சுவையின் அமுதைக் கண்ணினேக்கினர் உள்ளங்களிக்கின்றார் என இயையும். இனி, சுவையின் என்பதை, 'இயம்பரு' என்பதனோடு இயைத்து, பரம்பொருளின் வடிவாகிய இராமபிரானைக் கண்டதலாகிய இன்பம் பெண்பாலாரை அனுப வித்தலால்அடைந்த இன்பம்போல் பிறர் எண்ணிலுல்நோக்கிப் பிறர்க்கு இயம்புதற்குஅரியது எனப் பொருள் கொள்ளினுமாம். பரவமுது பரா வமுது: நீட்டல்விகாரம். பராவு அமுதுஎனப்பிரித்து உரைப்பினுமாம். பிறர் பிறர் என்றவிடத்து முதலதாகிய பிறர் - இல்வாழ்வாரையும், இரண்டாவது பிறர் - துறவறத்தாரையுங் காட்டு மென்றாரு முளர். பி-ம்:—[1]நோக்கின். [2]பெறற்கு, தமக்கு. [3]நோக்கவிளம்பரு, நோக்கிலியம்பரு. நோக்கு. (சூகூ)

கூ.—வந்த முனிவர்கள் இராமபிரானைப் புகழ்ந்து பாடி ஆடுதல்.

[1]எதிர்கொ டேத்தின ரின்னிசை பாடினர்
வெதிர்கொள் கோலின ராடினர் வீரனைக்
கதிர்கொ டாமரைக் கண்ணனைக் கண்ணிலுன்
மதுர வாரி யமுதென மாந்துவார்.

(இ-ள்.) வெதிர் கொள் கோலினர்-மூங்கில்களிலுலியன்ற(திரி தண்டத் தையேந்தியஅம்முனிவர்கள்,—வீரனை - மகாவீரனும், கதிர் கொள் தாமரை கண்ணனை - ஒளியைக்கொண்ட தாமரைமலர்போன்ற கண்களையுடையவனு மான இராமபிரானை, மதுரம் வாரி அமுது என-இன்சுவையுடைய பாற்கட லிற்றோன்றும் அமுதத்தை (வாயிலுல் முகந்துஉண்பது) போல, கண்ணிலுல் மாந்துவார்-கண்ணிலுற் பருகியுண்பவராய், எதிர் கொடு - எதிர்கொண்டு, இன் இசை பாடினர் ஏத்தினர்-இனிய இசைகளைக்கொண்டு பாடித்துதித்து, ஆடினர் - ஆனந்தநர்த்தனஞ்செய்தார்கள்; (எ - று.)

இராமபிரானைக் கண்ணிலுற்கண்ட களிப்பிலுல் அம்முனிவர்கள் ஏத்திப் பாடி ஆடினர்க ளென்க. தாம் உள்ளவிடத்திற்கு வரும் விருந்தினரை உப சரித்தற்குக் குறிப்பாக எதிர்கொள்ளுதல் முறைமை யாதலால் இம்முனிவரும்

எதிர்கொண்டன ரென்க. "நூலே கரகம் முகிழ்கோன்மணியே, யாயுங்காலை யந்தணர்க்குரிய"என்ற தொல்காப்பியத்திற்குஎற்ப அவ்வந்தணர்களை'வெதிர் கொள் கோலினர்' என்றார். கதிர் கொள் தாமரை என்பதற்கு-சூரியகிரணங் களை எதிர்கொள்கின்ற [சூரியகிரணங்களால் மலர்கின்ற] தாமரை எனினு மாம். வாரி - கடலுக்கு, இலக்கணை. பி-ம்:—[1]எதிர்கொண்டு. (சுஙசு)

கஙு.—அம்முனிவர்கள் இராமபிரானைத் தம்மிருப்பிடத்திற்கு அழைத்துக்கொண்டு செல்லுதல்.

மனையி னீங்கிய மக்களை வைகலு
நினையு நெஞ்சினர் [1]கண்டிலர் நேடுவா
ரனையர் வந்துற வாண் [2]டெதிர்ந் தார்களி
[3]னினிய [4]மாதவப் பள்ளிகொண் [5]டெய்தினர்.

(இ - ள்.) மனையின் நீங்கிய மக்களை-(தமது) வீட்டினின்றுநீங்கிய பிள் ளைகளை, வைகல்உம்-நாள்தோறும், நினையும் நெஞ்சினர்-எண்ணுகின்ற மனத் தையுடையவராய், கண்டிலர்-காணப்பெறாமல், நேடுவார் - தேடுபவர்களாகி, அனையர் வந்து உற-(காணுமற்போன)அந்தப்பிள்ளைகள் வந்துசேர,எதிர்ந்தார் களின்-எதிர்ப்படப்பெற்ற பெற்றோர்கள்போல, ஆண்டு-அப்பொழுது, (அம் முனிவர்கள் இராமபிரானைப் பேராதரத்தோடு எதிர்கொண்டு), இனிய மா தவம் பள்ளி - இனிய சிறந்த தவஞ்செய்தற்குரிய (தமது) வாழிடத்தில், கொண்டு - அழைத்துக்கொண்டு, எய்தினர் - போய்ச்சேர்ந்தார்; (எ - று.)

தமதுமக்கள் மனையினின்று காணாதுபோய்விடஅவர்களைக் காண்போமா என்கின்ற கருத்தோடு தேடிக்கொண்டிருப்பவருக்கு அவர்கள்காணப்பட்டால் எங்ஙனம் பெருமகிழ்ச்சியுண்டாகுமோ அத்துணைப் பெருமகிழ்ச்சியுடனே, அம்முனிவர்கள்,தமது அஞ்ஞானத்தால்மனத்தைவிட்டகன்றபரம்பொருளைத் தேடிக்கொண்டிருக்கையில் கண்களாற்காணுமாறு நேரேவந்து கூடியதனாற் பெருமகிழ்ச்சியடைந்தனரென்றவாறு.கீழ் "பெண்ணினேனைக்குஞ்சுவையின்" என்றசெய்யுளிற்பெண்களாற்பெறும் இன்பத்தைஉலகத்தவர்பெறுதல்போல் அம்முனிவர்கள் இராமபிரானைக்கண்டதனாற் களிப்படைந்தமையைக் கூறிய கவி,இச்செய்யுளால் உலகத்தவர் பிரிந்த மக்களைக் கண்டதனாற் பெறுங்களிப் பை முனிவர்கள் எய்தினமையைக் கூறின ரென்க.இதனால்,'சர்வேசுவரனே எல்லாவுறவுமுறையும்'என்று அம்முனிவர் கருதியமையைச் சிறிது புலப்படுத் தினவாறுயிற்று. பி-ம்:—[1]நீடினர்தேடுவார். [2]எதிர்ந்தார்கள்போல். [3]இனைய. [4]மாதவர். [5]ஏகினர். (சுஙஎ)

கசு.—முனிவர்கள் இராமபிரானது வழிவந்த வருத்தத்தைப் போக்கியதல்.

பொழியுங் கண்ணிற் புதுப்புன லாட்டினர்
மொழியு மின்சொலின் மொய்ம்மலர் சூட்டினர்
[1]ரதிவி லன்பெனு மாரமிழ் தூட்டினர்
வழியின் வந்த [2]வருத்தந் தணியவே.

(இ - ள்.) (அம்முனிவர்கள்),—வழியின் வந்த வருத்தம் தணிய - வழி நடப்பினல்நேர்ந்த வருத்தம் (அவ்விராமபிரானுக்குத்) தணியுமாறு, கண்ணில் பொழியும் புது புனல் ஆட்டினர் - (தமது) கண்களினின்றும் (பெருங்களிப் பினல்) வெளிவருகின்ற புதுநீரைக்கொண்டு திருமஞ்சனஞ்செய்து, மொழி யும் இன் சொலின் - (தாம்) சொல்லுகின்ற இனிய சொல்லாகிய, மொய் மலர் - நெருக்கமாகத்தொடுக்கப்பட்ட மலர்மாலையை, சூட்டினர் - சூட்டி, அழிவு இல் அன்பு எனும் ஆர் அமிழ்து ஊட்டினர் - குறைதலில்லாத அன்பாகிய நிறைந்த உணவை உண்ணச்செய்தனர்; (எ - று.)

வெகுதூரம் நடந்துவந்து இளைத்துப் பசித்தவரை நீராட்டி உபசரித்து உண்பிப்பதுமுறை. அம்முனிவர்கள் தங்கண்களில் ஆனந்தக்கண்ணீர்பெருக்கி இன்சொல் சொல்லித் தமது அன்பைக் காட்டியபொழுது, நீராடியுண்ட வன்போல் இராமபிரான் மனநிறைவுகொண்டனனென்றவாறு. "புனையுங் கண்ணி யெனதுடைய வாசகஞ்செய்மாலேயே" என்ற பெரியார்பாசுரத்தை யொட்டி, 'மொழியுமின்சொலின் மொய்ம்மலர்சூட்டினர்' என்றார். கண் ணிற் புதுப்புனலாட்டினர் - "பொழிந்தவுண்கணீர்ப் புதுப்புனலாட்டினர்" என்றார் நகர்நீங்குபடலத்தும். உணவிடுவார்க்கு அன்பு இன்றியமையாது வேண்டுதலின், இங்கு, 'அன்பெனுமமுது' என்றார். பி-ம்:—[1]இழிவில்,விழி யில். [2]வருத்தம்வருத்தவே, [3]வருத்தம்வருந்தவே, வருத்தத்தைவீட்டினர், வருத்தத்தை வாட்டினர். (கூஉ)

கரு.—அம்முனிவர்கள் இராமபிரானை நீராடி அழுதுசெய்யுமாறு வேண்டுதல்.

காயுங் [1]கானிற் கிழங்குங் கனிகளுந்
தூய தேடிக் [2]கொணர்ந்தனர் தோன்றனீ
யாய கங்கை யரும்புன [3]லாடினை
[4]தீயை யோம்பினை செய்யமு தென்றனர்.

(இ - ள்.) (அம்முனிவர்கள்),—கானில் - காட்டினின்று, தூய - பரி சுத்தமான, காய்உம் - காய்களையும், கிழங்குஉம்-கிழங்குகளையும், கனிகள் உம்-பழங்களையும், தேடிக்கொணர்ந்தனர் - தேடிக்கொண்டுவந்தவர்களாய்,— (இராமபிரானைநோக்கி), 'தோன்றல் - (யாவரினுஞ்) சிறந்துவிளங்குபவனே! நீ—, ஆய கங்கை அரு புனல் ஆடினை - அருகிலுள்ள கங்கையின் அருமை யான நீரில் மூழ்கி, தீயை ஓம்பினை - அக்கினியை வளர்த்தவனைப் [நாடோ றுஞ்செய்யவேண்டிய அக்கினிஹோத்திரத்தைச் செய்துவிட்டுஎன்றபடி], (நாங்கள் கொணர்ந்த காய்கனிகிழங்குகளை), அமுது செய் - உண்பாயாக,' என்றனர் - என்று வேண்டிக்கொண்டார்கள்; (எ - று.)

கிருகஸ்தர்க்கு அக்கினிஹோத்திரஞ்செய்தல் இன்றியமையாததாதலின் 'தீயைஓம்பினை' என்றார். "காடுகளூடுபோய்.....வருகின்றதாமோதரா ...தூளிசாணுன்னுடம்பு,...ஆடிஅமுதுசெய்" என்ற பாசுரம் இங்கு நினை

விற்கு வருகின்றது. தூய - பெயர். தோன்றல் - ஆண்பாற்சிறப்புப்பெயர். பி-ம்:—[1]கானக். [2]கொணர்ந்தனம். [3]ஆடிமுத். [+]தியுமோம்பினை, தியையோம்பிப்பின், தியையோம்பிநீர். (சுஙக)

கசு.—இராமபிரான் சீதைபோடு கங்கையில் நீராடுதல்.

மங்கை யர்க்கு விளக்கன்ன [1]மாதைபுஞ்
செங்கை [2]பற்றினன் றேவருங் [3]கைதொழப்
பங்க யத்தயன் பண்டுதன் [4]பாதத்திற்
[5]கங்கை யிற்[6]றருங் கங்கையி னாடினன்.

(இ-ள்.) (இராமபிரான்),—மங்கையர்க்கு விளக்கு அன்ன மாதை உம்-பெண்பாலார்க்கெல்லாம்விளக்குப்போல்பவளாகிய சீதாபிராட்டியையும், செம்கை பற்றினன் - சிவந்துள்ள (தன்) கையாற் பிடித்துக்கொண்டவனும், தேவர்உம் கைதொழ - தேவர்களும் கைகூப்பித்தொழும்படி, பங்கயத்து அயன்-(திருமாலின்நாபீ) கமலத்தில் தோன்றியவனுகிய பிரமதேவன், பண்டு - முற்காலத்தில், தன் பாதத்தின் - (திரிவிக்கிரமனை) தன்னுடைய தாளினைக் கழுவிய, கம்-நீரினால், கையின்-கைகம்மூலமாக, தரும் - உண்டாக்கிய, கங்கையின் - கங்காநதியிலே, ஆடினன் - நீராடினன்; (எ - று.)

இராமபிரான் சீதாதேவியைக் கைப்பற்றிக்கொண்டுகங்கையில் நீராடினனென்பதாம். ஸ்ரீராமன் தனது ஸ்ரீபாததீர்த்தமாகிய கங்காநதியில் தான்கொண்ட மாநுடவேடத்திற்கு ஏற்ப நீராடினனென்றவாறு. 'கைதொழ' என்பது 'தரும்' என்பதனோடு இயையும். பிரமதேவன் திரிவிக்கிரமனை திருமாலினது சீர்பாதங்களைக் கைக்கமண்டலநீரைக் கையாலெடுத்துவிளக்க அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்கையாகத் திருவவதரித்த தாகையால் 'கங்கையிற் றருங்கங்கை' என்று சமத்காரம்படப் பேசினர். இதனால், கங்கையென்பதற்கு ஒரு காரணப்பொருள் கற்பித்தாற்போல நிருத்தியலங்காரமென்னும் **பிரிதிலை நவிற்சியணி**படக்கூறியவாறு காண்க. பி-ம்:—[1]மானை. [2]பற்றியத், பற்றிநற். [3]துன்பற, இன்புற, துன்புற. [4]பாதநீர். [5]அங்கையில். [6]தந்த. (சுசo)

கஎ.—கங்கை இராமபிரானைப் புகழ்தல்.

கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப்
பன்னி நீக்கரும் பாதகம் பாருளோ
ரென்னி [1]னீக்குவர் யானுமின் றெற்றந்த
வுன்னி [2]னீக்கினை னுய்ந்தனை [3]னுலென்றுள்.

(இ-ள்.) கன்னி நீக்கு அருங் கங்கைஉம்-அழியாத்தன்மையினின்று நீங்குதலில்லாத[ஜீவநதியான] அத்தக்கங்காநதியும்,—(இராமபிரானை), கைதாழா-கைகூப்பிவணங்கி, 'பார் உளோர்-உலகத்தவர், பன்னி நீக்க அரு பாதகம்-சொல்லி முடிக்கமுடியாத [மிகவும் அதிகமான] பாவத்தை, என்னின் நீக்கு

வர் - என்னிடத்து மூழ்குவதாற் போக்கிக்கொள்வார்கள்; யான்உம்—, இன்று - இப்போது, (அந்தப்பாவங்களையெல்லாம்), என் தந்த உன்னின் - (திரிவிக்கிரமனெனி பூரீபாதத்தினின்று) என்னையுண்டாக்கிய உன்னாலே [நீ என்னிடத்து மூழ்கியதனால்], நீக்கினன் -போக்கினவளாய், உய்ந்தனன்- நல்வாழ்வுபெற்றேன்,'என்றாள் - என்றுகூறினாள்;(எ-று.)—ஆல் - தேற்றம்.

உலகத்தாரெல்லாரும் என்னிடத்துமூழ்கிப் பெருந்திரளான தம்முடைப் பாவத்தைப் போக்கிக்கொள்ள, நீ என்னில் மூழ்கியதனால், என்னிடத்துச் சேர்ந்த அத்தீவினைகள்யாவும் நீங்கப்பெற்று ஈடேறினே னென்றனள் கங்கா நதியின் பெண்தெய்வமென்க. புண்ணியமூர்த்தியாகிய இராமபிரானிடத் துள்ள நன்மையால், பரிசுத்தமாகியகங்கையும் தீவினைநீங்கி உய்வுபெறுபவ ளாயினளென்றுகூறிய இதில், ஒருத்தருடைய குணத்தினால் மற்றொருவர்க்கு நன்மைவினைதலாகிய **அகமலரீச்சியணி** காண்க: இதனை, வடநூலார் உல் லாஸாலங்கார மென்பர். கன்னிநீக்கருங்கங்கை என்பதற்கு-கன்னித்தன்மை நீங்குதலில்லாத கங்கையென்று பொருளுரைப்பது பொருத்தமாயிற்கொள்க. பன்னி நீக்க அரும்பாதகம் என்பதற்கு - ஆராய்ந்து நீக்குவதற்குமுடியாத பெரும்பாதகம்என உரைப்பாருமுளர். **பி - மீ:**—[1]நீங்கினர். [2]நீக்கினனுய்ந் தனன், நீக்கியுயர்ந்தனன். [3]யான். (சுசக)

கஅ.—கங்கையில்முழுதும் இராமபிரானது தோற்றம்.

வெங்க ணாகக் கரத்தினன் வெண்ணிறக்
கங்கை வார்சடைக் கற்றையன் கற்புடை
மங்கை காணநின் றூடுகின் றூன்வகிர்த்
திங்கள் சூடிய செல்வனிற் றோன்றினன்.

(இ-ள்.) வெம் கண் நாகம் கரத்தினன்-கொடுங்கண்ணையுடைய யானைத் துதிக்கைபோலுங் கையையுடையவனும், வெள் நிறம் கங்கை வார் சடை கற்றையன்-வெண்ணிறமுள்ள கங்கையின்நீர்ஒழுகப்பெற்ற சடைத்தொகுதி யையுடையவனும், கற்புஉடை மங்கை காண நின்று ஆடுகின்றூன் - கற்பை யுடைய சீதாபிராட்டியென்னும் பெண் காணுமாறு நீராடுகின்றவனுமாகிய இராமபிரான், [வெம் கண் நாகம் கரத்தினன்-கொடுங்கண்ணையுடைய நாகத் தை (ஆபரணமாகக்) கையிற் பூண்டவனும், வெள் நிறம் கங்கை வார் சடை கற்றையன்—, கற்புஉடை மங்கை காணநின்று ஆடுகின்றூன்-கற்பையுடைய பார்வதிதேவிகாணுமாறு நின்று கூத்தாடுகின்றவனுமான], வகிர் திங்கள் சூடிய செல்வனில்-பிறைச்சந்திரனைத் திருமுடியிற்றரித்த (அணிமாமுதலிய) அஷ்டைச்சுவரியங்களுக்கும் உரியவனென சிவபிரானைப்போல, தோன்றி னன் - விளங்கினன்; (எ - று.)

இராமபிரானுக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை. இராமபிரான் கங்கை யில் நீராடிஎழும்பொழுது தான் எற்றுக்கொண்டுள்ள தவவேடத்திற்குரிய சடையில்நின்றும் கங்கையின்நீர் பெருகிக்கொண்டிருக்குமாதலால், அவ்விராம

பிரானை 'கங்கைவார்சடைக் கற்றையன்' என்ற தென்க. சிவபிரானது சடையிலே தங்கிக் கங்கை கீழ்பெருகுகின்றது என்பது, பிரசித்தம். இராம பிரானைக் குறிக்குமிடத்து நாகக்கரத்தினன்என்ற தொடர்-உவமைத்தொகை யும், சிவபிரானைக்குறிக்குமிடத்து வேற்றுமைத்தொகையுமாம். இராமபிரா னுக்குச்செல்லுமிடத்து ஆடுதல்-நீராடுதலும்,சிவபிரானுக்குச் செல்லுமிட த்து ஆடுதல் - அம்பலத்து ஆடுதலுமாம்.

(சுசஉ)

கசூ —இதுவும் அது.

தள்ளு [1]நீர்ப்பெருங் கங்கைத் தரங்கத்தால்
வள்ளி நுண்ணிடை மாமல ராளொடும்
வெள்ளி வெண்ணிறப் பாற்கடன் மேலுநாட்
பள்ளி நீங்கிய பான்மையிற் றோன்றினன்.

(இ - ள்.) (பின்னும் சீதாபிராட்டியோடுகூடிய அவ்விராமபிரான்), தள் ளும் நீர் பெரு கங்கை தரங்கத்தால் - மோதுந்தன்மையுள்ள நீரையுடைய சிறந்த கங்கையின் அலையினல்,—மேலு நாள் - முன்னாளில், வள்ளி நுண் இடை மா மலராளொடுஉம் - கொடிபோலும் நுண்ணிய இடையையுடைய சிறந்த தாமரைமலரில் வசிப்பவளான இலக்குமியுடனே, வெள்ளி வெள் நிறம் பாற்கடல் - வெள்ளியைப்போலும் வெண்ணிறமுள்ள திருப்பாற்கடலி லே, பள்ளி நீங்கிய பான்மையின் - படுத்திருத்தலைவிட்டெழுந்துநின்ற தன் மைபோல், தோன்றினன்—; (எ - று.)

வெண்ணிறமுள்ள கங்காநதியின் அலைகளின்நடுவில் இராமபிரான் சீதாதேவியோடும் நின்றது-பாற்கடலிற் பள்ளிகொள்ளும்பரமனை திருமால் தான் பள்ளிகொண்டிருத்தலைவிட்டு இலக்குமிதேவியோடும் எழுந்து நிற்குந் தன்மையை யொக்கு மென்றூர்: **தன்மைத்தற்குறிப்பேற்றவணி.** வள்ளி=வல் லீ: வடசொல்லின் விகாரம்: வள்ளிக்கொடியுமாம். **பி-ம்:**--[1]நீர்க்குரைக். ()

20.—சீதாபிராட்டி கங்கையில் நீராடுதல்.

வஞ்சி [1]நாண விடைக்கு மடநடைக்
கஞ்சி யன்ன மொதுங்க [2]வடியன்ன
கஞ்ச நீரி லொளிப்பக் [3]கயலுகப்
[4]பஞ்சி மெல்லடிப் பாவையு மாடினள்.

(இ - ள்.) இடைக்கு-(தன்னுடைய)இடையழகுக்குத் தோற்று, வஞ்சி-வஞ்சிக்கொடி, நாண-வெட்கி(நீரில்)மறையவும்,—மட நடைக்கு (தன்னுடை ய)இளமையான நடைக்கு, அஞ்சி-தோற்று, அன்னம்-அன்னப்பறவை, ஓது ங்க-அப்பாற்செல்லவும்,—அடி அன்ன கஞ்சம்-(மற்றைமாதரது)பாதத்திற்கு ஒப்பான தாமரை (தன்னுடைய பாதத்திற்கு ஒப்பாகாமல் வெள்கி), நீரில் ஒளிப்ப-நீரினுள் மறைந்துகொள்ளவும், கயல் உக-(தன் கண்ணுக்குஒப்பாகா மையால்) கயல் மீன்கள் அப்பாற்செல்லவும், பஞ்சி மெல் அடி பாவைஉம் - செம்பஞ்சு ஊட்டப்பெற்ற மெல்லியபாதங்களையுடைய சித்திரப்பதுமை போன்ற சீதாபிராட்டியும், ஆடினள் - நீராடினள்; (எ - று.)

நீராடும்பொழுது நீரிலுள்ள வஞ்சியும் கஞ்சமும்மறைதலும், அன்னமும் கயலும் அப்பாற்செல்லுதலும் - இயல்பு; அவ்வியல்பின்படியே சீதாபிராட்டி நீராடும்பொழுதும் வஞ்சியும் கஞ்சமும் நீரில்மறைதல் முதலியன நிகழ, அவ் வஞ்சிக்கொடிமுதலியவைபிராட்டியின் இடைமுதலியவற்றிற்குத்தோற்றமை யால் அங்ஙனம் நிகழ்ந்தனனெனக் குறித்தார்:ஏதுத்தற்குறிப்பேற்றவணி.இராம பிரான் நீராடியதை கசூ-ஆங் கவியாற் கூறிய கவி இடைப்பிறவரலாகச் சில கூறி,இச்செய்யுளாற் சீதை நீராடியதைக் கூறுகின்றா ரென்க. பி-ம்:—[1]நாணி வணங்க, நாணிவணங்கி,நாணிமடங்க. [2]அடியினீள், அடியிணை, அடிக்குமென். [3]கயல்புக. [4]பஞ்சின். (சுசக)

உக.—சீதை நீராடியதாற் கங்கை நறுமணம்பெறுதல்.

[1]தேவ தேவன் செறிசடைக் கற்றையுட்
கோவை மாலை யெருக்கொடு கொன்றையின்
பூவு [2]நாறலள் பூங்குழற் [3]கூந்தலி
னாவி நாண்மலர் [4]கங்கையு நாறினாள்.

(இ - ள்.) தேவதேவன்-மகாதேவனென்னும் நாமம் படைத்த சிவபெரு மானுடைய, செறி சடை கற்றையுள் - அடர்ந்துள்ள சடைத்தொகுதி யினுள்ளே, கோவை மாலை எருக்கொடு கொன்றையின் பூவும் நாறலள் - பலகோவையான மாலையாகத்தொடுக்கப்பட்ட எருக்கம்பூ கொன்றைப்பூ என்ற இவற்றின் மணம் வீசப்பெறுதவளான, கங்கையும்-கங்காநதியும், - பூ குழல் - அழகமைந்த கூந்தலையுடையவளான சீதாபிராட்டியின், கூந்தலின்- கூந்தலிலேயுள்ள,நாவி-கத்தூரிப்புழுகெண்ணெய்மணமும், நாள் மலர்-அன்ற லர்ந்த மலர்மணமும், நாறினாள் - (தன்னிடம்) வீசப்பெற்றாள்; (எ - று.)

கங்காதேவி சிவபெருமானது சடைமுடியிலே தங்கிப் பின் அங்குநின்று வீழ்பவளாயிருந்தும் அந்தப்பெருமான் தன்முடியிற்சூடிய எருக்கு கொன்றை இவற்றின்மலர்மாலைகளின் மணம் தன்னிடத்துப் பொருந்தினளில்லை; அப் படிப்பட்ட கங்காதேவி சீதாபிராட்டி தன்னீரில் மூழ்கியதனால் அப்பிராட்டி யின்கூந்தலிற்றடவிய கத்தூரிப்புழுகெண்ணெயும் அப்பிராட்டி சூடிய மலரும் என்ற இவற்றின்மணம் தன்னிடங் கமழப்பெற்றன ளென்பதாம். இதனால், பெருநீர்வெள்ளமாயிருந்த கங்கையின்பெருக்கும் மணம் நாறும்படி பிராட்டி கூந்தலில் மணம் விஞ்சியிருந்ததென்று வீறுகோளணி தொனித்தல் காண்க. நாவி நாண்மலர் கங்கையும் நாறினாள் - உயர்திணைதொடர்ந்தபொருள் உயர்திணைமுடிபேற்ற திணைவழுவமைதி. கங்கை - நதியின்பெண்தெய்வத் தைக்காட்டிய உயர்திணை. பி - ம்:—[1]தேவர்தேவன், தேவன்சென்னிச். [2]நாறிலள். [3]கற்றையின். [4]நங்கையும். (சுசஞ)

உஉ.—சீதையின்மீது கங்கையின்திரை மோதுதலின் வருணனை.

நுரைக்கொ ழுந்தெழுந் தோங்கி நுடங்கலா
னரைத்த [1]கூந்தலி னங்கைமந் தாகினி
யுரைத்த சீதை [2]தனிமையை யுன்னுவா
டிரைக்கை நீட்டிச் செவியியி னுட்டினாள்.

(இ-ள்.) நுரை கொழுந்து எழுந்து ஓங்கி நுடங்கலால் - நுரைகள் அலையின்மேலெழுந்து உயர்ந்து அசைவதால், நரைத்த கூந்தலின்-வெண்ணிறமான கூந்தலையுடைய, நங்கை-ஒருபெண்போற்காணப்படுகின்ற, மந்தாகினி-கங்காதேவியானவள்,—உரைத்த - (பதிவிரதாதருமத்தைப்பாராட்டி யாவராலும் எடுத்துக்) கூறப்படுகின்ற, சீதை தனிமையை-சீதாபிராட்டி(வேறொரு பெண்திக்குஇல்லாமல்) தனித்திருப்பதை, உன்னுவாள் - நினைத்தவளாய்,-செவிலியின்-செவிலித்தாயைப்போல, திரை கை நீட்டி - அலையாகிய கையைநீட்டி, ஆட்டினள் - நீராடச்செய்தாள்; (எ - று.)

மகள் நீர்நிலையில் நீராடும்போது செவிலித்தாய் தன்கையினல் நீராட்டுவித்தல்போல, கங்கை திரையாற் சீதாபிராட்டியை நீராட்டுவித்தனளென்றவாறு. சீதாபிராட்டி நீராடும்போது அவள்மீது கங்காநதியின்திரைபடுவதனை, கவி, சீதை பெண்துணையின்றித் தனித்து நீராடுவதுநோக்கி அவள்மீது இரக்கங்கொண்டு மகளைத் தன்கையாற் செவிலி நீராட்டுவதுபோலக் கங்கை திரைக்கைநீட்டி ஆட்டினளென வருணித்தஇது - உருவகவணியையும் தற்குறிப்பேற்றவணியையும் அங்கமாகக்கொண்டுவந்த உவமையணி. அலையில் எழுந்துஓங்கும் நுரை நரைத்த கூந்தல்போலு மென்க: இந்த நரைத்தகூந்தல் என்ற அடைமொழி கங்கையைச் செவிலித்தா யென்றற்கு உதவுதல் காண்க. விண்ணுலகத்துள்ள கங்காநதிக்குப் பெயராகிய மந்தாகிநீ யென்பது, இங்கு கங்கை யென்ற மாத்திரமாய் நின்றது. பி-ம்:—[1]கூந்தலணங்கை. [2]தனிமைகண்டு.

(சுசசு)

உங.—கங்கைநீர்வெள்ளாத்தில் சீதாதேவியின்கூந்தல் தோன்றுதலின் வருணனை.

மங்கை வார்குழற் கற்றை மழைக்குலந்
[1]தங்கு நீரிடைத் தாழ்ந்து [2]குழைப்பது
கங்கை [3]யாற்றிடை யோடுங் கரியவள்
பொங்கு நீர் [4]ச்சுழி போவன [5]போன்றதே.

(இ - ள்.) மங்கை-சீதாபிராட்டியின், வார் குழல் கற்றை-நீண்ட கூந்தற்றொகுதியாகிய, மழை குலம் - மேகங்களின்கூட்டம், தாழ்ந்து - அவிழ்ந்துதொங்கி, தங்கு நீரிடை - (படியுந்துறையிற்) பொருந்திய நீரிலே, குழைப்—பது - குழைந்துகாட்டுவது,—கங்கை யாற்றிடை-கங்கையாற்றின் நடுவிலே, ஓடும் - ஓடுகின்ற, கரியவள் - கருநிறமுடைய யமுனைநதியின், பொங்கு நீர் சுழி போவன - மிக்கநீர்ச்சுழிகள் செல்வனவற்றை, போன்றது - ஒத்துத் தோன்றிற்று; (எ - று.)

வெண்ணிறக்கங்கையிலே சீதாபிராட்டியின்கரியகூந்தல் தாழ்ந்துகுழைவது, கங்கையிலே யமுனைநதி கலந்து ஓடும்போது அதன்இடையே தோன்றும் நீர்ச்சுழியைப் போலு மென்பதாம்: தன்மைத்தற்குறிப்பேற்றவணி. யமுனை கருநிறநீரையுடையதாகையால், அதனை 'கரியவள்' என்றார். யமுனை

கங்கையின்உபநதிகளுள் ஒன்று. பி-ம்:—[1]தங்கி. [2]குழைப்பன, தழைப்பன. [3]யாற்றுடனுடுங்கரியவள், யாற்றிடையாடுங்கரியவள், யாற்றொடுங்காளிந்தி தன்னெடும், யாற்றொடுங்காளிந்தீயொடும். [4]நிழல். [5]போன்றவே. (சுசள)

உசு.—சீதை கங்கையின்நீரில்முழ்கியெழுதலின் வருணனை.

சுழிபட் [1]டோங்கிய தூங்கொலி யாற்றுத்தன்
விழியிற் [2]சேலுகள் வானிற வெள்ளத்து
முழுகித் தோன்றுகின் றுண்[3]முதற் பாற்கட
லழுவத் தன்றெழு வா[4]ளென லாயினள்.

(இ - ள்.) சுழிபட்டு - சுழிகள் பொருந்தி, ஓங்கிய - (அலைகள்) ஓங்கப் பெற்ற, தூங்கு ஒலி - மிக்கவொலியையுடைய, ஆற்று-கங்காநதியினது, தன் விழியின் சேல் உகள் - தனது கண்விழிகள்போன்ற சேல்மீன்கள் துள்ளிக்குதிக்கப்பெற்ற, வால் நிறம் வெள்ளத்து-வெண்மைநிறத்தைக்கொண்ட வெள்ளத்திலே, முழுகி-நீராடி, தோன்றுகின்றுள்-வெளிப்படுகின்ற அந்தச் சீதாபிராட்டி,—முதல் பாற்கடல் அழுவத்து - சிறந்த திருப்பாற்கடலின் பெருக்கிலே, அன்று - (தேவர்கள்கடல்கடைந்த) அக்காலத்து, எழுவாள் - தோன்றியவளான இலக்குமி, எனல் - என்று சொல்லுதற்குஏற்குமாறு, ஆயினுள்—; (எ - று.)

வெண்ணிறமுள்ள கங்காநதிப்பெருக்கில் மூழ்கி வெளிப்படுஞ் சீதை, பாற்கடலைக்கடைந்தகாலத்து அதனினின்று வெளிவந்த இலக்குமியைப் போன்றனளென்க: **உவமையணி.** விழியிற் சேலுகள் என்ற விடத்து **எதிர் நிலையணி** காண்க. கங்காநதியின்நீர் வெண்ணிறமுடைய தாதலால், அதற்குப் பாற்கடல் உவமையாயிற்று. பி-ம்:-[1]ஓடிய. [2]சேலுக. [3]முறையாற்கடல். [4]என.

உரு.—கவிக்கூற்று: இராமபிரான் நீராடியதனாற் கங்காநதிக்கு மகிமை விஞ்சியதாது மெனல்.

செய்ய தாமரைத் தாள்பண்டு தீண்டலால்
வெய்ய பாதகந் [1]தீர்த்து [2]விளங்குவா
ளையன் மேனி யெலா[3]மளைந் தாளினி
யைய மாநர கத்திடை [4]வைகுமோ.

(இ-ள்.) பண்டு - முற்காலத்தில் [திருமால் நிரிவிக்கிரமாவதாரஞ்செய்ய அப்பரமனதுவலத்திருவடி சத்தியலோகத்திற் சென்றபோது], செய்ய தாமரை தாள்-செந்தாமரைமலர்போன்ற அப்பிரானது திருவடிகளை, தீண்டலால்-பரிசித்ததனால், வெய்ய பாதகம் - (தன்னில் மூழ்குபவரது) கொடிய பாவங்களை, தீர்த்து - போக்கிக்கொண்டு, விளங்குவாள் - விளங்குபவள், ஐயன் - இராமபிரானது, மேனி எலாம் - திருமேனிமுழுவதையும், அளைந்தாள்-பரிசிக்கப்பெற்றாள்; இனி-, வையம் - இவ்வுலகம், மா நரகத்திடை-பெரு நரகத்தில், வைகும் ஓ-தங்குமோ? [தங்காதென்றபடி]; (எ - று.)

கங்கை முன்பு திரிவிக்கிரமாவதாரஞ்செய்த திருமாலினது திருவடியை மாத்திரம் பரிசித்த காரணத்தினல் தன்னில்மூழ்கியவரது பெரும்பாவங்களை யே போக்குபவளாய் விளங்குபவளாளுள்;இப்போதோ அந்தத்திருமாலினது திருவவதாரமாகிய ஸ்ரீராமபிரானது திருமேனிமுழுவதுமே தன்னிடத்துத் தோயப்பெற்றதனல் தன்காற்று மேலேபடப்பெற்றவர்களது பெரும்பாவத் தையும் போக்கும் பெருமையைப் பெறுவா ளாதலால், இவ்வுலகம் இனித் தீவினைப்பயனை நுகருமாறு வெந்நரகிற் சேரா தென்றவாறு. தன்னை நினைப் போரது பாவத்தையும் போக்கும் பெருமையைப் பெறுவாளாதலால் வையம் நரகிற்றங்கா தென்ரு ரென்றலுமாம். இந்தச்செய்யுளில், **தொடர்நிலைச் செய்யுட்பொருட்பேறணி** காண்க. பி - ம்:—[1]தீர்ந்து. [2]விளங்கிஞள். [3]அனைந்தால். [4]வைகுமே.

(சுகக)

உசு.—இராமபிரான் செய்கடனை முடித்துக்கொண்டு, முனிவர்கட்கு விருந்தினனகி யுண்ணுதல்.

துறைந றும்புன லாடிச் சுருதியோ
ருறையு ளெய்தி [1]யுணர்வுடை யோருணை
[2]ரிறைவற் கைதொழு [3]தேந்தெரி யோம்பிப்பி
னறிஞர் காதற் கமைவிருந் [4]தாகினன்.

(இ-ள்.) (இராமன்), துறை நறும் புனல் ஆடி-(முற்கூறியவாறு கங்கை யின்)நீராடுதுறையிலே புண்ணியதீர்த்தத்தில் மூழ்கி, சுருதியோர் உறையுள் எய்தி-வேதம்வல்ல அம்முனிவர்கள் வாழுமிடத்தைச் சேர்ந்து,உணர்வு உடை யோர் உணர் இறைவன் கைதொழுது-ஞானிகள் தியானிக்கின்ற பரம்பொ ருளை வணங்கிவிட்டு, ஏந்து எரி ஓம்பி - சுவலிக்கின்ற அக்கினியிற் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்துமுடித்து [அக்கினிஹோத்ரஞ்செய்து],பின்- பிறகு, அறிஞர்-அம்முனிவரின், காதற்கு-அன்புக்கு, அமை-ஏற்ற, விருந்து ஆகினன் - விருந்தினனகி (அவர்கள் தந்த காய் கனி முதலியவற்றை)யுண் டான்; (எ - று.)

இதனல், இராமபிரான் தான் கொண்ட மாநுடவேடத்திற்குஏற்ப வைதி கச்சடங்குகளில் சிறிதுந்தவறுது ஒழுகிவந்தவ னென்பதையும், வேதம்வல்ல வர்களும் கொண்டாடுமாறு நடப்பவ னென்பதையும் விளக்கியவாறு காண்க. நீராடுதல் இஷ்டதேவதையைத்தியானஞ்செய்தல் அக்கினிகாரியஞ்செய்தல் பிறகு உண்ணுதல் என்பன, பிராமண க்ஷத்திரியவைசிய ரென்னும் மூன்று வருணத்தார்க்கும் இன்றியமையாச் செயலாகு மென்ப. 'உணர்வுடையோ ருணரிறைவற் கைதொழுது' என்றதிற் சந்தியாவந்தனஞ் செய்தமையும் அடங்கும். பி ம்:—[1]உணர்வுடைத்தம்பியோடு. [2]இறையைக் கைதொழுது, இறைவர்க்கைதொழுது, இறைவற்கேதொழுது. [3]எண்ணெரியோம்பினன், ஏந்தெரியோம்பினன். [4]ஆயினன்.

(சுஙo)

உஎ.—முனிவர்கள் செய்த விருந்தினுல் இராமபிரான் மனமகிழ்ந்திருத்தல்.

வருந்தித் தான்றர வந்த வமுதையு
மருந்து நீரென் றமரரை யூட்டிணன்
[1]விருந்து மெல்லட குண்டு [2]விளங்கிணன்
திருந்தி ணர்வயிற் [3]செய்தது தேயுமோ.

(இ - ள்.) தான் வருந்தி - தான் மிகவுஞ் சிரமப்பட்டு, தர-உண்டாக்க, வந்த - தோன்றிய, அமுதையும்-அமிருதத்தையும், (தான் உண்ணுமல்), நீர் அருந்தும் என்று-'நீங்கள் உண்ணுங்கள்' என்று சொல்லி, அமரரை - தேவர் களை, ஊட்டிணன்-உண்ணச்செய்தவருகிய திருமாலின் அவதாரமாகிய அவ்வி ராமபிரான்,-விருந்து-(முனிவர்கள் தனக்கு) விருந்தாக இட்ட, மெல் அடகு-மெல்லிய இலையுணவை, உண்டு - புஜித்து, விளங்கிணன்-; (இது எங்ஙனம் பொருந்தும்? எனின்),—திருந்திணர்வயின் - மனஞ்செம்மைப் பட்டிருப்பவ ரிடத்து, செய்தது - செய்த செயல், தேயும்ஓ - குறைபடுமோ? [குறைபடா தன்றே?] (எ-று.)—ஆதலால்தான், மனந்திருந்திய இராமன் முனிவர்களின் மெல்லடகை விருந்துண்டு விளங்கின னென்க.

'தான்னே வருந்தித்தேடியதும் சிறந்தஉணவுப்பொருட்கெல்லாந் தான் மேம்பட்டுஉவமையாவதுமான அமிருதத்தையும் இலட்சியஞ்செய்து உண் ணுது, "அமுதமமரர்கட்கீந்த நிமிர்சுடராழிநெடுமால், அமுதினுமாற்ற வினி யன்" என்று பெரியாரும் பாராட்டியருளிச்செய்யும்படி தேவர்கட்கு ஈந்த திருமால்,முனிவர்கள் ஈந்த காய்கனிமுதலிய இலையுணவுகளை விரும்பிப் புசித் தானே; இது எங்ஙனம் நிகழ்ந்தது?' என்று தோன்றும் ஐயப்பாட்டை,'மனந் திருந்திணரிடத்துப் பிறர்செய்தது எதுவும் தாழ்மைப்படாது சிறப்புற்றே யிருக்கும்' எனப் பொருள்கொண்ட 'திருந்திணர்வயிற் செய்ததுதேயுமோ?' என்றஈற்றடியாற் போக்கினர்:சிறப்புப்பொருளைப் பொதுப்பொருள்கொண்டு சமர்த்தித்த **வேற்றுப்பொருள்வைப்பணி**, இது. இதனால், அம்முனிவர்கள் இராமபிரானுக்கு ஈந்த இலையுணவு அமிழ்திலும்மிகச்சிறந்து அப்பிரானுக்கு மனவுவப்பை விளைத்த தென்பது, விளங்கும். ஈற்றடியில் திருந்திணர்வயிற் செய்தவந் தேயுமோ என்ற பாடத்துக்கு - மனந்திருந்தினவராகிய இருடியர் கள் மிக்கதவஞ்செய்துள்ளவராதலால் அத்தவத்தின்பயனால்அவர்களீந்த அட குணைவையும் அமுதத்திலுஞ் சிறந்ததாகக் கொண்டு இராமபிரான் உண்டன னெனக் கருத்துக்காண்க. பி டி:—[1]விருந்தின். [2]விரும்பினன். [3]செய்தன, செய்வன. (சுருக)

உஅ.—இதுமுதல்எட்டுக்கவிகள் - இராமபிரானைக் காணவரும் தூதனது வருணனை.

ஆய காலையி னுயிர மம்பிக்கு
நாய கன்[1]போர்க் குகனெனு நாமத்தான்
றூய நங்கைத் துறை[2]விடுந் தொன்மையான்
காயும் வில்லினன் [3]கற்றிர டோளினன்.

செய்யுண் முதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
அகலிடநெடிதாளுந	505	அந்தியில்வெயி	371	அனியன்னதொர்	4 8
அகில்புனைகுழல்	496	அந்தகரணிவுறு	101	அறம்கெட	6 1
அகிலிடுதூபமன்ன	719	அந்நான்முகனூர்	269	அறத்தனதினைத்தி	7 3
அங்கணனவனி	193	அந்நெடுந்துயருறு	783	அறத்தனவேரறுத்	5 9
அங்கிநீரினுங்	635	அப்பனைகங்கை	678	அறத்தானே	7 3
அங்கிமேல்	386	அம்முனிவரலோடு	504	அறநிரம்பிய	1 2
அங்குளகிளைகாவற்	488	அயாவுயிர்த்த	764	அறமெனக்கிலேயோ	2 2
அச்சொற்கேளா	155	அரக்கர்பாவமு	128	அறிவருஞ்சிறுகுருப்	61 5
அசும்புபாய்வரை	540	அரசரிற்	117	அறுத்தாய்தனையால்	2 4
அஞ்சடுத்தவமளி	740	அரசனைவிடுத்த	68	அறுபதினாயிரமக்	7 1
அஞ்சம்பையும்	439	அரஞ்சுடவழனிமிர்	755	அறுபதினாயிரரா	3 5
அஞ்சலளையன	146	அரிந்தான்முன்றே	164	அறுபதினாயிரோரு	3
அஞ்சனக்குன்ற	406	அரியதாமுவப்ப	465	அறைகழற்சிலம்	5 2
அஞ்சனமேனி	339	அரியவனுரைசெய	765	அன்பிழைத்த	2
அஞ்சனவண்ணன்	684	அருஞ்சிறப்பமை	21	அன்றவளுலகினை	8
அஞ்சிமந்தரை	121	அருந்தியினகம்	502	அன்றுதிர்ந்தபின்	7
அஞ்சினர்வானவ	592	அருந்தியனை	494	அன்றொனிலவெனை	6
அட்டிலுமிழந்தன	348	அருந்தவமென்றுனை	688	அன்னசொல்	1
அடருஞ்செல்வம்	550	அருந்தேராளை	419	அன்னதன்மையள	5
அடித்தலங்கண்டி	607	அருப்பேந்திய	441	அன்னதன்மையன்	3
அடித்தலமிரண்டை	813	அல்லனைநெடுங்க	673	அன்னதாயர்	3
அடிதாழுதுவகை	468	அல்லலுழுள	506	அன்னதுகண்ட	1
அடிமிசைத்தூளி	676	அல்லையாண்டமைக்	708	அன்னபாவிநு	2
அடியிணையுறை	499	அலங்கன்மன்னனை	39	அன்னவர்முகத்	32
அடியிற்சுடர்	295	அலம்புவார்குழல்	537	அன்னவருளனைக்	1
அடுத்தபற்பகல்	533	அலர்ந்தபைங்கூழ்	568	அன்னவள்கூறவா	39
அடைந்தவமீண்டி	138	அலைநெடும்புனல்	663	அன்னவள்பணி	32
அடைவருங்கொடு	646	அவ்வயினரசனை	326	அன்னவறுனை	48
அண்டமுற்றுங்	570	அவ்வழியவனை	705	அன்னனாயு	2
அண்ணலன்ன	359	அவ்வழியியைமயவர்	807	அன்னுரன்றனை	31
அண்ணலும்விரும்பி	463	அவ்விடையன்னணரு	709	அன்னுரனவர்	31
அண்ணலுமதுகே	479	அவ்வுரைகேட்டலு	586	அன்னுனையதனைவரு	32
அணங்குவாள்	106	அவனிகாவல்	232	அன்னுனேயவிருள்	62
அத்திசையுற்றுறைய	483	அவித்தவைம்புலத்	651	அனையசெய்கையர்	63
அதிர்கடல்வையகம்	658	அழிவருமரசியல்	616	அனையதன்மை	12
அந்தணரருந்தவர்	331	அழுதுதாயரொ	354	அனையதாகிய	3
அந்தணருறையுளை	614	அள்ளற்பள்ளப்	257	அனையதாதலி	5
அந்தணாளர்	82	அளங்கொள்	421	அனையாப்புனல்	51
அந்தநற்பெருங்	793	அளம்படுகுரைகடல்	62	அனையராதலி	8
அந்தவாய்மொழி	550	அளிக்குநாயகன்	526	அனையவேலையகன்	35

உதிக்கும்மூலையுள்	305	எம்பரத்ததாக்கி	769	என்றென்றாசன்	264
உந்தாதுநெய்வார்த்	292	எய்தவின்னல்வந்த	549	என்றென்றறிவித்	303
உந்துபொற்றடங்	628	எய்திநூலுளோர்	629	என்றென்றுன்னும்	162
உந்தைதீமையும்	792	எய்தியக்கேகைய	105	என்னக்கேட்டவ்	729
உந்தையோவிறந்த	644	எய்தியவேலையிற்	782	என்னவுன்னு	238
உம்மையாலுடைமை	22	எயினர்தங்கிடம்	517	என்னும்வேலையில்	630
உமைக்குநாதற்கு	86	எல்லொடுங்கியமுகத்	761	என்னைநிருபன்	290
உய்ந்தநிவ்வுலக	195	எலியெலாமிப்படை	681	என்னைக்கண்டும்	248
உய்யாநின்றேறன்	600	எழுகசேனை	559	என்னைநீங்கி	226
உயங்கியந்நகர்	354	எழுந்ததுதுகள்	745	எனக்குரல்லையு	119
உயரருளொண்	196	எழுந்ததுபெரும்ப	652	எனவிவையன்ன	704
உயிர்ப்பிலன்	414	எழுந்தநங்கையை	355	எனைத்துணமை	757
உரிமைமைந்தரை	50	எழுந்தனனிளையவ	748	ஏங்கினன்விம்மலோ	584
உரியமாதவ	58	எழுந்தனனேங்கின	579	ஏடறுகோதையர்	668
உருகுகாதலிற்	525	எற்றேறபக்வேன்	256	ஏண்பாலோவா	161
உருளுநேமியு	84	எறிந்தனகடியசொல்	578	ஏத்தரும்பெருங்குண	808
உரைசெய்தெந்	399	எறிபகட்டினம்	562	ஏத்தவந்துலகெலா	61
உரைசெய்பெருமை	279	என்பத்தைக்கேட்ட	709	ஏந்திளமுலையாளை	495
உரைசெய்மன்னன்	632	என்பதுசொல்லிய	809	ஏந்துசெல்வத்திமை	741
உரைத்தகூனி	132	என்பனசொல்லி	694	ஏய்ந்தகாலமிது	566
உரைத்தபின்	325	என்புகழ்கின்ற	704	ஏய்ந்தமுலைசெல்வம்	101
உரைத்தவாசகங்	737	என்புதோல்	87	ஏயவரங்க	143
உலர்ந்ததுநா	144	என்வயிற்றரு	73	ஏர்தரந்த	565
உவரிவாயன்றிப்	522	என்றநாட்டினை	569	ஏவம்பாரார்	160
உற்றதுகொண்டு	11	என்றபின்முனிவ	330	ஏவியருளில்	368
உற்றுளபொருள்	505	என்றபினேந்தலும்	780	ஏவியமொழி	476
உறத்தகும்மரசி	38	என்றம்முனிவன்	241	ஏவினவள்ளை	93
உன்னவுன்ன	624	என்றலால்யானுனை	804	ஏழிரண்டாண்டு	395
ஊடுறமெருக்கி	716	என்றலும்பதைத்	789	ஏழுயர்மதகளிற்று	584
ஊணலவுண்வழி	618	என்றலுமேயடியின்	724	ஏழுதப்பிசையல்	360
ஊருணிநிறையவும்	65	என்றவாசகஞ்	39	ஏற்றவர்க்கருபொ	620
ஊற்றமேமிக	459	என்றனளென்ன	190	ஏற்றவித்தன்கையி	803
ஊறுகொண்ட	564	என்றனன்மடவா	501	ஏற்றிடவானுடைக	912
ஊனமிளந்த	564	என்றனனிளவலை	759	என்றனனெனக்கை	324
எஃகெறிசுரு	616	என்றுவொன்றுன்	261	என்றுன்பாவிக்	603
எட்குலாமலர்	567	என்றிறைஞ்சி	74	ஐனகியினியன	911
எட்டுத்திசையும்	429	என்றுகாதலி	511	ஐனையருமின்னனம்	380
எடுத்தமாமுழி	735	என்றுகூறலும்	557	ஐந்துமைந்தராள்	633
எண்டருங்கடை	167	என்றுகூறி	634	ஐயசாலவு	49
எண்ணருஞ்சுரும்பு	676	என்றுகொண்டினை	214	ஐயதியாதென்றும்	779
எதிர்கொடேத்தின	445	என்றுகொண்டு	631	ஐயனுடைச்சாற்	191
எந்தைதீயுவந்திதஞ்	36	என்றுசிந்தித்	549	ஐயனைக்காண்டலு	332
எந்தையாண்டையா	785	என்றுபின்னரு	217	ஐயாயாவேனுள்	273
எந்தையும்யாயும்	586	என்றுபின்னு	81	ஐயிருபத்தோடைந்	479
எந்தையெவ்வுலகு	606	என்றெடுத்துப்பற்	772	ஐயுறுஞ்சுடர்	175
எந்தையேயேவ	207	என்றெழுந்து	697	ஐவனக்குரற்றினைக்	539
எந்தையேவ	799	என்றென்றயருந்	275	ஒட்டியபகைஞர்	19

ஒத்தசிக்கையர் 59
ஒருத்தலேப்பரத் 51
ஒருமகள்காதலின் 755
ஒருமாமுனிவன் 267
ஒருவில்பெண்மை 527
ஒல்கலில்தவத் 80
ஒலியார்கடல் 258
ஒள்ளியபொனிலை 800
ஒளிதோக்கன 348
ஒறப்பிறையக்கம் 151
ஒன்முகண்ணுட்டு 416
ஒன்முகின்ற 159
ஒன்றியவெகையர் 63
ஒன்றுமில்பொய்யர 507
ஓடைகல்லெனி 352
ஓதாகின்ற 509
ஓதுகின்றில 567
ஓர்வினல்லினை 90
ஓவினல்லுயிர் 353
கங்குலுங்கதிர் 509
கஞ்சமுகிழ்த்தன 695
கட்டுரைக்கரும் 414
கண்டுகண்டுருகி 188
கண்டுகண்டுவிம்மி 23
கண்டுகண்டுவிம்மி 450
கண்டுகண்டுவிம்மி 680
கண்டுகண்டுவிம்மி 749
கண்டுகண்டுவிம்மி 77
கண்டுகண்டுவிம்மி 408
கண்டுகண்டுவிம்மி 70
கண்டுகண்டுவிம்மி 311
கண்டுகண்டுவிம்மி 41
கண்டுகண்டுவிம்மி 216
கண்டுகண்டுவிம்மி 603
கண்டுகண்டுவிம்மி 203
கண்டுகண்டுவிம்மி 340
கண்டுகண்டுவிம்மி 252
கண்டுகண்டுவிம்மி 153
கண்டுகண்டுவிம்மி 214
கண்டுகண்டுவிம்மி 771
கண்டுகண்டுவிம்மி 152
கண்டுகண்டுவிம்மி 146
கண்டுகண்டுவிம்மி 81
கண்டுகண்டுவிம்மி 621
கண்டுகண்டுவிம்மி 333
கண்டுகண்டுவிம்மி 751
கண்டுகண்டுவிம்மி 627
கல்லோக்கிடந்த 515
கல்லுவெண்மலை 484
கல்வியுமிளமையும் 117
கவ்வாரவதுவென 596
கவியணமேர்த்தி 94
கள்ளவிழ்கோதை 141
கள்ளாமாக்கவர் 571
கற்காதுறுத்தினமை 696
கற்றகான்மறையவர் 61
கறுத்தாயுருவம் 254
கன்றயிரோய்க்குக 615
கன்னகுரிஞ்புயக் 784
கன்னநிகன்மயில் 336
கன்னங்கருங் 448
கன்னியர்க்கமைகருங் 16
கன்னியரனிகாலை 498
கன்னிளையபழிசய 618
கனங்குழைக்கோக 658
காகுசையா 210
காதலரிலாத 125
காதலர்தந்தார 405
காதலர்தந்தார 316
காதலர்தந்தார 447
காதலர்தந்தார 466
காதலர்தந்தார 761
காதலர்தந்தார 200
காதலர்தந்தார 316
காதலர்தந்தார 706
காதலர்தந்தார 100
காதலர்தந்தார 143
காதலர்தந்தார 516
காதலர்தந்தார 11
காதலர்தந்தார 208
காதலர்தந்தார 745
காதலர்தந்தார 572
காதலர்தந்தார 457
காதலர்தந்தார 315
காதலர்தந்தார 340
காதலர்தந்தார 678
காதலர்தந்தார 400
காதலர்தந்தார 283
காதலர்தந்தார 611
காதலர்தந்தார 511
காதலர்தந்தார 336
காதலர்தந்தார 671
காதலர்தந்தார 378
காதலர்தந்தார 180
குடையினனிமிர் 502
குரிசிற்கனன்பாரிடை 749
குயின்றனகுலமணி 374
குரவலர்குழலியை 612
குரிசில்சிக்கையை 55
குரிசிலேதுவலால் 712
குரிசிறுக்கம்பியை 649
குருக்கணிகழ்தலி 589
குருதிவாளனைக் 521
குருமணிப்பூண்ண 574
குலமுதற்றிருன்மையு 9
குவளையினெழிலும் 184
குழுமிமேகங்கள் 515
குழுவுநல்லிடமெனை 535
கூழைதுக்கின்றகொரி 214
கூற்றமென்றிலேல 590
கூன்றிங்கிருக்கன 815
கூன்றனைறையமா 496
கூடிழனன்றேர்ப்பு 402
கூடுமனன்றேர்ப்பு 497
கூறுமகன்றையர் 462
கூறுமகன்றையர் 165
கூறுமகன்றையர் 805
கூறுமகன்றையர் 133
கூறுமகன்றையர் 126
கூறுமகன்றையர் 702
கூறுமகன்றையர் 292
கூறுமகன்றையர் 250
கூறுமகன்றையர் 61
கூறுமகன்றையர் 360
கூறுமகன்றையர் 122
கூறுமகன்றையர் 283
கூறுமகன்றையர் 253
கூறுமகன்றையர் 220
கூறுமகன்றையர் 150
கூறுமகன்றையர் 62
கூறுமகன்றையர் 714
கூறுமகன்றையர் 360
கூறுமகன்றையர் 347
கூறுமகன்றையர் 607
கூறுமகன்றையர் 503
கூறுமகன்றையர் 134
கூறுமகன்றையர் 251
கூறுமகன்றையர் 731
கூறுமகன்றையர் 141
கூறுமகன்றையர் 243
கூறுமகன்றையர் 152

கொற்றவர்முனிவர் 191
கொற்றவண்ணது 361
கொன்றேறலெனன 602
கோடகத்தேர் 751
கோதறத்தவஞ்செ 762
கோதைதவரிவிற் 291
கோதைவிற்குரிசில் 467
கோமகன்பிரிதலிற் 662
கோளுணமெம்பொறி 86
கோன்மேற்கொண்டு 151
சக்கரத்தானவன் 543
சங்கமுமகரமீனுங் 714
சங்குபோரியுந் 628
சத்திரநிழற்ற 200
சந்தமிலைதாவின் 198
சந்திரர்கோடி 185
சந்திரற்குவமை 8
சம்பகநறும் 378
சரதமிப்புவி 114
சரிந்தபூவுள 45
சலந்தலைக்கொண்ட 523
சாந்தணிபுளினத்தி 482
சாயடங்கநலங் 172
சான்றவராக 805
சிங்கக்குருளைக் 294
சிங்கவேறனைய 466
சித்தரீதிகைக்கின்ற 227
சிந்தனையுணர்கிற்பா 480
சிந்தினவணிமணி 335
சிந்தைதளர்வுற் 277
சிந்தையென்செய 124
சிரித்தபங்கய 170
சிருங்கிபேரமென 460
சிவந்தவாய்ச்சீதை 113
சிறக்குஞ்சொல்ல 71
சிறந்ததம்பி 224
சிறந்தார்சொல்லு 604
சிறுவிலமருங்குல் 407
சினக்குறும்பெறிந் 580
சினக்கொடுந்திறல் 735
சீதப்பனிநீரளவி 239
சீரைசுற்றித் 362
சீலமல்லன 89
சீலமின்னெதன் 528
சீலமுந்தருமமுஞ்ச 775
சீற்றந்துறந்தான் 311
சூடுமயானத்திடை 727
சுண்ணமுமலரும் 193
சுழித்தசெம்பொனி 531
சுழித்துநீர்வரு 722
சுழிபட்டோங்கிய 453
சுழியுடைத்தாயுடை 596
சுற்றத்தார்தேவரொ 723
சுற்றமப்புற 461
சுற்றூர்மணியின் 295
சுற்றியசீரையன் 330
சுற்றினிருந்தழி 639
சூடிச்சந்தனந் 558
சூடினமலர்க்கரஞ் 591
சூதுமுந்துற 84
சூழமைந்த 572
சூழிவெங்கடகரி 753
செஞ்செவே 475
செந்தழல்புரி 503
செம்பொறற்செய் 534
செம்மைசான்மனத் 623
செம்மையிற்றருமத்தி 68
செய்துடைச்செல்வ 321
செய்ம்மறந்தன 350
செய்யக்கடவ 424
செய்யதாமரை 453
செல்லியசெலவினை 659
செல்லுஞ்சொல் 309
செவ்வழியுருட்டிய 581
செவ்வியகுரிசில் 382
சேணுயர்தருமத்தி 751
சேணுலாவிய 166
சேதாம்பற்பொதுளை 281
சேந்தாமரைவிரி 492
சேமமின்பமை 166
சேலாகியமாமுதல்ம 213
சேற்றிளமலை 655
சேனைவீரரும் 757
சொற்பெற்ற 716
சொற்றலைசாய்த் 792
சொற்றூள்கொற்ற 139
சோர்வொடுமாழ்கி 314
ஞாணீயுமும்பலொன் 283
தகவுமிகுதல 376
தங்குதண்சாந்தின் 651
தஞ்சமில்வுலகி 614
தஞ்சனவெதுகி 617
தடக்கையாலெடுத் 387
தண்டலைக்கீசகலை 337
தம்முயிர்க்குறுதி 1
தம்மையுமுணர்ந் 33
தருமமென்றிரு 64
தலைக்குவட்டயன் 31
தழுவினபுளினர் 70
தழைத்ததன்றொ 61
தழைத்தவான்சினை 75
தழையொடித்தன 17
தள்ளாதிலேசான் 52
தள்ளரிப்பெருந் 54
தள்ளாநல்லே தில்லை 28
தன்முன்னெயவன் 69
தன்னைதம்பியுந் 72
தனயாயிருந் 79
தாதையப்பரிசு 5
தாதைவாயிற் 361
தாப்பையில் 20
தாய்பெயுந்துயி 111
தாய்த்தாமரை 801
தாயர்தம் 791
தாயர்நல்லடை 311
தாயரைத்தெய்வ 716
தாயர்வாயிலை 610
தாயாயினுந் 321
தாயுமாயினை 11
தாயுமிலாதவர் 337
தாரணிதாங்கிய 45
தாவடிதாவின் 24
திருக்கிளைசெல 373
திருத்தி 401

திருமணியகுடம் 192
திருவரைசுற்றிய 342
திருவுளமெனின் 485
திரையார்கடல்சூழ் 235
தீங்கிழை 5
தீண்டலுமுணர்ந்த 105
தீயமந்தரை 127
தீயனகொடியவள் 622
தீயனையமாவும் 484
தீயனவிராமனே 588
துஞ்சினனேத்தம் 421
துடித்தனகபோலங் 591
துடியலையினன் 456
துடியெறிநெறிகளுந் 683
துண்ணெனவுஞ்சொ 192
துண்ணெனவுநெஞ்சி 783
துப்புறழ்துவர் 506
தும்பியின்குழாத்திற் 472
தும்பியுமாவு 689
துளிபடத்துழாவு 720
துறக்கமேமுதல 474
துறத்தலுநல்லறத் 773
துறந்தசெல்வன் 738
துறந்துபோயமைன 356
துறந்துபோயிருன் 630
துன்றுகுழும்புன 454
துன்புளிஞெளினின் 486
துன்றுநாள்வளர்ந் 633
துன்னியமுயிசம்பனி 97
துன்னுறவிவந்து 707
தூண்மலர்வாலிச் 124
தூங்கடைப்படலை 546
தூங்கானன்றுவள்ள 410
தூண்மணைச்சிலம்ப 656
தூண்வயானவ்வளை 398
தூதின்சுவடு 430
தூதருடாயும் 573
தூவெதிர்தூவல் 451
தெண்கடற்றிரை 1
தெண்டிரைப்பரப்பி 2
தெண்டிரைவளாவிய 3
தெண்டிரைவிளக்கம் 4
தெண்பனிவாடை 6
தெண்மணிவடமுந் 7
தெண்மதிபுரையுந் 8
தெண்மதியுமிழ்ந்த 9
தெண்மதியுமிழ்ந்தன 10
தெண்மதியுமிழ்ந்தென 11
தெண்மதியுமிழ்ந்தெனக் 12
தெண்மதியுமிழ்ந்தெனத் 13
தெண்மதியுமிழ்ந்தெனப் 14
தெண்மதியுமிழ்ந்தெனவே 15
தெண்மதியுமிழ்ந்தெனவோ 16
தெண்மதியுமிழ்ந்தெனன் 17
தெண்மதியுமிழ்ந்தெனனே 18
தெண்மதியுமிழ்ந்தெனனோ 19
தெண்மதியுமிழ்ந்தெனனோர் 20
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க் 21
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்கு 22
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்கும் 23
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமே 24
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோ 25
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர் 26
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்க் 27
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்கு 28
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குல 29
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத் 30
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்தி 31
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற் 32
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்கு 33
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரி 34
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரிய 35
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியன் 36
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல் 37
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்ல 38
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லன் 39
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென் 40
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்ப 41
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பது 42
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதை 43
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக் 44
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்கு 45
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குல 46
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத் 47
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்தி 48
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற் 49
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்கு 50
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரி 51
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரிய 52
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியன் 53
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல் 54
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்ல 55
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லன் 56
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென் 57
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்ப 58
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பது 59
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதை 60
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக் 61
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்கு 62
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குல 63
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத் 64
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்தி 65
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற் 66
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்கு 67
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரி 68
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரிய 69
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியன் 70
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல் 71
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்ல 72
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லன் 73
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென் 74
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்ப 75
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பது 76
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதை 77
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக் 78
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்கு 79
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குல 80
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத் 81
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்தி 82
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற் 83
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்கு 84
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரி 85
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரிய 86
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியன் 87
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல் 88
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்ல 89
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லன் 90
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென் 91
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்ப 92
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பது 93
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதை 94
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக் 95
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்கு 96
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குல 97
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத் 98
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்தி 99
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற் 100
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்கு 101
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரி 102
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரிய 103
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியன் 104
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல் 105
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்ல 106
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லன் 107
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென் 108
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்ப 109
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பது 110
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதை 111
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக் 112
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்கு 113
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குல 114
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத் 115
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்தி 116
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற் 117
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்கு 118
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரி 119
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரிய 120
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியன் 121
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல் 122
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்ல 123
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லன் 124
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென் 125
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்ப 126
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பது 127
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதை 128
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக் 129
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்கு 130
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குல 131
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத் 132
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்தி 133
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற் 134
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்கு 135
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரி 136
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரிய 137
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியன் 138
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல் 139
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்ல 140
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லன் 141
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென் 142
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்ப 143
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பது 144
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதை 145
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக் 146
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்கு 147
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குல 148
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத் 149
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்தி 150
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற் 151
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்கு 152
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குல 153
தெண்மதியுமிழ்ந்தெனனோர்க்குமோர்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்திற்குரியனல்லனென்பதைக்குலத்

நீளெழுத்தொடர் 43
நுரைக்கொழுந் 451
நெக்கனவுடலுயிர் 334
நெகுதற்கொத்த 256
நெடுங்கணழக்குறுந் 546
நெய்கொணீருண்டு 541
நெய்ஞ்ஞிறை 493
நெறியிடுநெறி 483
நைவீரலீர்மைந்தீர் 725
நோக்கிஞற்சுமந்தி 640
நோயீரல்லீர் 597
நோயும்மின்றி 417
நோவதாகவிவ் 790
பகுத்தவான்மதி 371
பசைந்தசிந்தைதீ 798
பஞ்சிமென்றளிரடி 19
படஞ்செய்ந்நாகணை 787
படர்ந்தெழுந்த 516
படருறவுளன் 487
படரெலாம்படப் 750
படரெலாம்படைத் 728
படியொடுதிருந்தகர் 654
படுமுரசறைந்தனர் 651
படைமாணரசை 254
பண்டியெங்கும் 561
பண்டைநூறெறி 814
பண்ணினபகுதீதர் 653
பண்ணுறுகடகரி 115
பண்முதிர்களிற்றிரு 752
பணிமொழி 488
பதினிரந்தன 42
பந்தருரூட்புறு 517
பரத்தினீங்கும் 730
பரதனிப்படைதொ 748
பரந்துமீனரும்பிய 372
பரவுகேள்வியும் 703
பராவரும்புதல்வரை 107
பரிதிபற்றிய 443
பரிதிவானவனுங் 408
பரிவிகந்தமனத் 358
பழுதின்மாதவன் 37
பற்பகனிழற்று 582
பற்றியவ்வயின் 627
பற்றிலேதவத்தினிற் 584
பற்றுறுத்தன்ன 458
பன்னந்துகடரளம் 442
பன்னரியதோன்பிற் 772
பனையவாநெடுங்கரப் 66
பாக்கியம்புரிந் 116
பாகியல்பவளச் 183
பாங்கினுத்தரிய 717
பாடனீத்தன 567
பாணிளமிஞிறுக 492
பாதங்கள்பெயர் 592
பாதுகந்தலைக்கொடு 814
பாந்தடோரிவை 537
பாரோர்கொள்ளார் 601
பாலுடைமொழி 481
பாலையேய்நிறத் 677
பாவமுநின்ற 687
பாவமுமருந்துயரும் 201
பிணிக்குறுமுடை 621
பிதிர்ந்தசாறு 566
பிறத்தலென்று 388
பிறந்திறந்து 120
பிறந்துகீயுடை 791
பிறிதொர்மாற்றம் 362
பிறியார்பிரிமே 234
பின்குற்றமன்னும் 304
பின்னல்வீரனை 786
பின்னுந்தம்பியை 552
பின்னும்பகர் 319
புக்கபின்னிருபரும் 7
புக்கவன்றன்னை 205
புக்கணன்புனலிடை 780
புக்காரரசன் 433
புக்குப்பெருகீர் 267
புக்குறைறவிட 507
புகலிடங்கொடுவென 334
புண்ணியக்கிழாடர் 30
புண்ணியத்துப்பயிற் 77
புண்ணுறுத்துயிற் 781
புரைசமாக்கரி 238
புரியுந்தன்மகன் 23
புல்லினனின்றலைவன் 164
புலம்புறுகுரிசிறார் 709
புலிப்பாலைபயந் 1111
புறத்துகாமெமரு 231
புனைந்திலெண்மேனியி 215
பூண்டபேரன்பிரு 380
பூண்டமாதவன் 501
பூரைகனியுமுழி 261
பூத்தகாண்மலர் 143
பூதலமுற்றதனிற் 144
பூநனைசினைதுன்றி 500
பூமழைபுனன்மறை 100
பூரியர்புனர்மாதர் 490
பூவுகவிறைத்த 376
பூவுருவொலன்கழல் 9
பூவலர்குரலோடு 404
பூவிரிபொலன்கழற் 675
பூவிரைவண்முகன் 633
பொன்னினிரின்னாமு 40
பொன்னினிலுலக்குந் 444
பொன்னெனவாயுற்ற 145
பொன்னேவன் 454
பெருகியசெல்வ 746
பெருந்தினைகதிரை 665
பெரும்பலவருந்தி 375
பெருமகன்...பிறக்க 25
பெருமகனொன்வெய்த் 758
பெருமையாலுலகே 11
பெற்றுடையபுன் 210
பெறுதன்முற்று 775
பொரிவைபெற்றவை 62
[illegible] 1328
[illegible] 191
[illegible] 1113
[illegible] 1177
[illegible] 1014
[illegible] 7
[illegible] 1116
[illegible] 1117
[illegible] 1111
[illegible] 1121
[illegible] 251
[illegible] 1111
[illegible] 426
[illegible] 346
[illegible] 2221
மகன்வினன்பிரு 63

மங்கையம்மொழி 216
மங்கையர்க்கு 448
மங்கையர்குறங்கென 96
மங்கைவார்குழல் 452
மஞ்சளாவிய 531
மஞ்செனவகிற்புகை 345
மடந்தைமார்களிற் 535
மண்கொடுவருமென 340
மண்செய்தபாவம் 286
மண்டலந்தரு 44
மண்ணுள்கின்ற 162
மண்ணின்மேல் 626
மண்ணினுநல்லண் 33
மண்ணுறுமுரசினம் 6
மண்ணெயும்வானெயு 662
மணங்கினார் 498
மத்தளமுதலிய 667
மந்தரைக்கூற்றமும் 670
மந்தரைபின்னரும் 116
மந்தியுங்கடுவனு 544
மந்திரக்கிழவரு 639
மய்யறுவிசும்பின் 721
மரிவனைடப்பீலியின் 546
மருங்கனை 682
மருமருத்துருன்னெ 405
மல்லியமேகயன் 661
மலர்ந்திலையகம் 797
மழுங்கூலம்புனர 347
மற்றவளிறைஞ்சி 472
மற்றவன்செயன்ன 35
மற்றுக்கூற்றத்து 557
மற்றுநுங்கை 126
மற்றுயர்வரற்பாலர் 773
மற்றுவன்வாள் 472
மறந்தாவரிவனெவும் 262
மறந்திலெம்மேகசலை 113
மறவிலிறல்முருகன் 619
மறுகின்மைந்துசேண 625
மறைபிறர்கேள்வாற்கு 736
மன்றவிரன்மலி 491
மன்றவெள்வானை 53
மன்னரிவ்வியல்பே 637
மன்னவன்பணியன் 210
மன்னவனிருங்கேள் 800
மன்னர்கல்லெர் 434
மன்னனேயவனேரியை 4
மன்னுயிர்க்குகல்கு 768
மன்னெடுங்கழல் 71
மனக்கொன்றுதன 789
மனிதர்வானவர் 34
மனையினீங்கியமக்க 446
யாகந்தழுமகந்தழு 440
மாகமணிவேதிகை 377
மாண்டனனெந்தை 594
மாதர்கள்கற்பின் 182
மாதர்யாவரும் 741
மாதரருங்கலமும் 282
மாதராள்களறுபதி 423
மாதவர்க்கு 228
மாதவன்றனை 47
மாந்தர்தமொய்ம்பி 351
மாமுனிவர்க்குறவா 693
மாயநீங்கிய 548
மாலவந்தகன்றபின் 545
மாலவாய் 470
மாவியலுதயமாந் 542
மாவும்யானையும் 629
மாழையொண்கணி 130
மாளவமுளரெரு 595
மாளுமென்றே 599
மாற்றமஃது 110
மாற்றுன்செயலாம் 249
மாறினியென்னை 324
மான்மறிக்காத்தான் 230
மான்றளிக்குல 742
மானவரவின் 431
மீன்பொருவு 199
மின்னின்றனைய 236
மின்னுடன்பிறந்த 401
மின்னெறுத்தகீற்றங் 300
மீன்றமேனி 570
மீன்பொலிதர 370
மீனீர்வேலை 427
முடிவுறவின்னன 386
முத்தினின்முழுநிலை 98
முதலவன்முதலிய 581
முதிரொளியுயிர்த்தன 97
முந்நினைமுனிவனை 392
முல்லையுங்கடன் 361
முழுவெயுமிடமாவி 350
முழுக்கலின்வலிய 342
முழுவலம்புபிறந்து 340
முற்பயந்தெடுத்த 186
முற்றமுற்றுவித்து 636
முற்றுமுகை 497
முறைதிரிந்திதாரு 643
முறையமையன் 216
முறையமையாலெற் 396
முறையமையினெய்தி 14
முறையின்மொய்ம் 42
முறையும்வாய்மையு 792
முன்புகின்றிசை 389
முன்னர்க்கோசிக 228
முன்னர்வந்துதித்து 797
முன்னவனென்று 686
முன்னுறப்பணித்தவ 806
முன்னுநுங்குல 623
முன்னையர்முறை 671
முன்னையூழ்வினைப் 51
முனியும்முனியும் 242
முனிவன்சொல்லும் 262
முனிவனுமுரைப்ப 807
முனிவனுமுவகை 79
முனிவனெயெம்பி 393
முன்டெழுகாதலா 577
மூத்தகற்குரித்தரசு 122
மூவாராய்முதலாகி 179
மூவெழுமுறைமை 60
மூன்றுலகினுக் 645
மெய்யார்தவமே 259
மெய்யின்மெய்யே 263
மெய்யேயென்றன் 157
மெய்யைச்சிதைவித் 300
மேகிலத்தி 145
மேவிமென்மலராள் 72
மேவுகான 549
மைந்தருங்குல 50
மைந்தரையின்மையி 24
மைந்தன்கடமே 272
மையறுமனத்தினாரு 610
மையுறுவியிலா 680
மொய்பெருஞ்சே 672
மொயம்மாண்வினை 242
மொய்யராக 173
மொய்யுறுதுமலர் 545
மொழித்தருகேட்டலு 67
யாதானும்மனக் 85
யானைசுற்றின 560
வங்கியம்பல 178
வஞ்சமோமகனே 219
வஞ்சிகாண 450

வட்டமோரோசனை 374
வடங்கொள்பூண் 521
வடித்தாழ்கூந்தல் 418
வடியுடையயிற்படை 746
வடுவின்மாவகிர் 536
வண்டுளர்தாரவன் 140
வண்மையியுமானமு 771
வந்தமாதவத்தோனை 734
வந்தமாதவன் 625
வந்தமுனியைமுக 279
வந்தமுனிவன் 424
வந்தவடன்னை 206
வந்தனவரம்பிணவா 712
வந்துதாயை 576
வந்தெதிரேதொழு 700
வரங்கொள்வித்து 142
வரதன்பகர்வான் 308
வரதன்றுஞ்சிணன் 788
வரன்முறை 638
வரனிலுந்தைசொன் 796
வரிசைகொளொண் 530
வரிவிலெம்பி 226
வருந்தாவண்ணம் 428
வருந்தித்தான்றர 455
வல்லரக்கரின் 358
வலக்கார்முகமென் 301
வலங்கடிந்தேதையுய 341
வலியனென்றவர் 556
வள்ளுறுவயிரவாள் 642
வள்ளுறைகழித் 46
வளங்கெழுதிருநகர் 91
வளைகள்காந்தளிற் 536
வற்கலையினுடையா 698
வறுத்துவித்திய 514
வன்புலக்கன்மன 384
வன்மாயக்கைகேசி 264
வன்றிறற்றபாலையை 747
வனத்தினனென்ற 587
வாக்கினல்வந்தர 590
வாங்கியமருங்குலை 344
வாங்குவேய்ங்கழை 512
வாட்டொழிலுழவ 61
வாடொடுதானையா 609
வாணித்திலவெண் 317
வாணிலாநகைக 558
வாய்கயப்புற 118
வாய்தந்தேனென் 154
வாய்நனிபுரந்த 62
வாய்மையென்று 791
வாயான்மன்னன் 244
வாயிலின் மன்னர் 138
வாயொளிமழுங்க 578
வாரணமரற்ற 196
வாரமென்னினி 33
வாரார்முலையாரு 281
வாவிவிரிதாமரையி 375
வாழ்த்திணர்தம் 364
வாழ்வினநுகலிய 327
வாள்புரைவிழி 500
வாளும்வேலும்விட் 520
வானமேயனைய 344
வானவருரைத்தலும் 808
வானின்றிழிந்து 2
வாணுந்நிலனும் 291
வாழ்ந்கொள்ளார் 153
விடங்கொடேக்கி 541
விடுநதிகடி 451
விண்டொடாடலிவந்த 189
விண்ணவர்விசும்பு 185
விண்ணுட்டவர் 217
விண்ணிடையனைத் 711
விண்ணுமேர்மையாத்து 771
விண்ணுமன்னறை 225
விண்மினன்பகலும் 810
விரிமணிமேகலை 661
விரியிருட்பனைகலை 441
விருப்பினையுரினன் 375
விரும்பியலுப்பெறும் 17
வில்லார்தோளான் 601
வில்விடங்கிய 527
வில்லின்வேந்தியர் 562
வில்விணும்வாளினும் 611
விழிக்குங்கண் 247
விழுந்தனர்சிலர் 333
விளக்கொளிமறைந் 187
விளையுந்தகபுகழ் 133
விற்கொள்வாணுதல் 559
விற்றடந்தாமரை 328

கம்பராமாயணத்து அயோத்தியாகாண்டத்தின் அரும்பதவகராதி முதலியன. *

அஃகலிலறநெறி, பள்ளி-107
அக்கரை, குகப்-57
அக்கரையணைதல், வனம்-38
அக்குரோணி, குகப்-5
அகத்தியன் புனல்குடித்த கடல் × தானையுந் திருவுநீங்கிய அயோத்திநகர்: ஆறுசெல்-45
அகநகர், பள்ளி-36
அகநிறையருள், கங்கை-63
அகம்-பூமி, ஆறுசெல்-44
அகம் நிலைநிறுத்தியவரலாறு, ஆறுசெல்-44
அகம்பொருமி-மனங்கலங்கி, திருவ.டி-59
அகம்விம்முமன்பு, வனம்-20
அகல்வான், நகர்-89
அகலம், மந்திரப்-57
அகலிடம், குகப்-67
அகவுமயில் × மகளிர்: தைல-13
அகன்கான், நகர்-8
அகன்புனலாடல்நீத்த, பள்ளி-24
அகன்மலை, பள்ளி-18
அகில்புனைகுழல், வனம்-11
அகிலிதூபம் × மயிற்பீலி: குக-58
அங்கணன், சித்திர-1
அங்கயற்கண்ணன்-இராமபிரான்: கங்கை-10
அங்கி-அக்கினி: தைல-25
அங்கி கற்புடையாய்க்குச் சுடாது சீரிதுரைத்தருளிற்றல், பள்ளி-141
அங்கிவிசை, கைகேசி-77
அங்குசம், சித்திர-55
அங்குசத்தாற்றூண்டுதல், பள்ளி-69
அச்சு, குகப்-51
அசனிபாமழை, குகப்-11
அசனியஞ்சு, பள்ளி-67
அசனிவேற்றிரணன் மறிந்து மன்னனுற்ற மாமயம் × தந்தைமரணத்தால் கீழ்மீழ்ந்த பரதன்: பள்ளி-45
அசனிவேறு × வெள்ளை: பள்ளி-59
அசுணமா குறிஞ்சிப்பாடல் கேட்டுவருதல், சித்திர-24
அசும்பு - ஊற்றுப்பெருக்கு: சித்திர-36
அசோகு × நெருப்புச்சுவாலை: வனம்-8
அஞ்சடுத்தவமளி, திருவடி-11
அஞ்சம்பு, கங்கை-3
அஞ்சனக்குன்றமன்ன வழகன், தைல-52
அஞ்சனந்துறந்த நாட்டம் × கறையறக்கழுவியகாலவேல்: ஆறுசெல்-39
அஞ்சனநாயிறன்னவையன், கங்கை-56
அஞ்சனம், ஆறுசெல்-39
அஞ்சனமேனி, நகர்-189
அஞ்சனவண்ணன், குகப்-14
அஞ்சியமகளிர்கண் × வெருவிப்பாயுங்கயற்குலம்: குகப்-55
அஞ்சியயர்தல், ஆறுசெல்-12
அஞ்சுமஞ்சு மென்குருகியரஞ்சும், நகர்-10
அஞ்சொன்மாதர், பள்ளி-106
அட்டில்புகையிழுத்தல், நகர்-206
அடக்கந்தோற்றுவிக்குங்குறி, கைகே-104
அடகு, கங்கை-27
அடர்தல்-நெருங்குதல்: சித்திர-54
அடவி, திருவடி-40
அடிச்சுவடுகள், சித்திர-20
அடித்தலமிரண்டையு முடித்தலஞ் சூடுதல், திருவடி-136
அடிதாழா, கங்கை-68
அடிதாழுது, கங்கை-47
அடிதாழுதேத்தி, வனம்-34
அடிதாமேயன், கங்கை-68
அடிபுனைதளிர், வனம்-17
அடிமிசைத்தூளி தேவர்முடிமிசைப்படர்வது, குகப்-3
அடியன், தைல-20

* இங்குக் காட்டப்படுபவை - படலப்பெயரின் முதற்குறிப்பும், படலச் செய்யுள்களின்னென்னவும்.

இராமன் தேரில்லாதவன் × சென்று வடல் கண்டிருகும் ஆர் கை கேசி - 94

இராமன் கல்லன்கண்ணிறு கல் லன், மந்திர-42

இராமன் நிலமங்கையும் செல்வ மங்கையும் உவப்புறு கணவன், மந்திர-32

இராமன் சோவை நீக்குவான் வந் தனன், மந்திர-29

இராமன் படைத்தல் முதலியமுத் தொழிலையும் புரிபவன், மந்திர-39

இராமன் பண்ணில்சோக்கும்பரா வமுது, கங்கை-11

இராமன் பரத்துவாசராச்சிரமத் து வசியாமைக்குக் காரணம், வன ம்-32

இராமன் பரதனைத் தழுவுதல் × தயாமுதல் அறத்தினைத் தழுவுதல்: திருவடி-55

இராமன் பரம்பொருள், மந்திர 39

இராமன் பின்பு பிறந்தானுமுள னெனப் பிரியாதான், குகப்-68

இராமன் பூமடந்தை புவித்திரு இவர்களின் இன்னுயிர்த்துணை, மந் திர-40

இராமன் பெயரால் இடையூறுபெ யரும், மந்திரப்-41

இராமன் மகுடஞ்சூடச் செல்கின் ருரென்று இருகையுமிரைத்து மொய் த்தல், கைகேசி-83

இராமன் மகுடம்பூலைவிடின் யாழ் ளமோ, நகர்-40

இராமன் மீண்டுவராவிடின், நா னும் கானகத்துடனிருந்து அருந்தவம் புரிவேனென்று பரதன் கூறுதல், ஆறுசெல்-18

இராமன்மீளாமை நான் அரசு ஏற் றுக்கொள்வேனென்ற கருத்திருத்தல் தான், பள்ளி-78

இராமன் முடிகவிப்பதில் முனிவ ரும் மகிழ்தல், ஆறுசெல்-23

இராமன் முடிபுனைதல்காண அரச வெள்ளம் வருதல் × அமிழ்துணைச்சு ரர்வெள்ளம் குழுமுதல்: கைகேசி-67

இராமன் முதலியோர்வந்தபோது வனம் குளிர்தல், வனம்-46

இராமன் வருந்தும் அளவி × மாமைப்: கங்:41

இராமனை வனத்தினின்று மீட்டு கேட்டு மனமுவந்திருத்தல், கைகே சி-108

இராமன் வனஞ்செல்வதறிந்து கொ டிமுதலியன அடங்குதல், நகர்- 05

இராமன் வனஞ்சென்றால் உ மையு யிரும், நகர்-32

இராமன் வீதியிற்செல்லக் கண்ட மாதரார்நிலை, மந்திர-55, 51)

இராமன் வேடர் குலத்தை யும் நிலையெனல், கங்கை-71

இராமன் றங்கை வந்தானென்று தேவர் மனங்களித்து விமானத் மூலமாக நின்னிலையுலகத்து தல் - 61

இராமன் முறை, மந்:40

இராமனது வனவாசத்தைத் வருந்தும் அரசி × மாமைப்: கங்:41)

இராமனுக்கு வனவாசத்தைத் கிடைத்தல், கங்கை 17

இராமனிடத்துப் பிறரும் வைக்கை × குமு: மந்:34

இராமனிடத்து வைத்த லொழுகுதல், மந்:41

இராமனிடத்துள்ள தி - ×:

இராமனிற்கு வந்த நிலை, மந்:4:

இராமனுக்கு மந்:42

இராமனும் கானகத்தே னே கொடுத்துப் பின் அ

கொடுத்தல் முறைபிறழாதோ, நகர்-112

இராமனுடன்சென்று மீண்ட சனங்கள் × உலகம் வருத்தநாள் மண் முழுதேற்பியொடுங்குங்கடல்: தைல-84

இராமனுடன் போகாதிருந்தது என்று, குகப்-18

இராம னுண்மைந்த னுணை, கைகே-7

இராமனைக்கன்று தோன்றுகின் றுன், கைகேசி-86

இராம னெண்மகனல்லன் உம்மகன், மந்திர-87

இராமனே யெல்லாவுறவும், பள்ளி-58

இராமனைக் கற்றறிந்தோரும் மற்றையோரும் உண்ணுநீரினுமுயிரினு முவப்பார், மந்திர-42

இராமனைக்காணுதல் × இறந்ததானதையைக்காணுதல்: சிருவடி-53

இராமனைக்குறைபடக்கூறிக் கோபமுற்ற தாயை யவன் குடிவனென்று கூறிக்கூறல், மந்தரை-50

இராமனைத் தழுவியது தோளும் மார்பும் பூமாற்கினைத்தாங்கும் பரப்பினவென்று கூறிப் பார்ப்பதுபோலும், மந்திர-42

இராமனை நோக்கி மனங்களித்தல், கங்கை 11

இராமனைப் பிரிந்துதோடு கணைவேயுயிர்த்த கோசலை × வானீர் சுமந்து மழைமுகிற்றி மறுகுற்றதின், நகுல-64

இராமனை யிழந்த கோசலை × கன்றுயிழந்த முசை: நகர்-14

இராமனை யுகந்த முனிவன் கூறுந் தவத்தின் பிழைதருகின் விலங்கிறுத்தலைத் தேவர்கள் முதலியவற்றிற் றரும விளக்கிறுத்தல், மந்திர-44

இராமனைப் பிரிந்தமுகம் பெற்ற தன் பரன், அறியவிடும்பைபயில் நீங்குதல், மந்திர-67

இராமனைப் பெற்றபின் அவனி யாள்வார் புத்திரரைப்பெறுதல் புல்லிது, கைகேசி-95

இராமனைப்பெற்றவன் தளர்வது தகுதியன்று, மந்திர 65

இராமனைப்பெற்றூர் குலமன்னவரில் முன் யாவருமில்லை, மந்திர-37

இராமனைப்போல வுயிர்களும் அவனிடத்து அன்பின, மந்திர-85

இராமனை முனிவர் மனையினீங்கியமக்களை நேடிக் கண்டனர் போலக் காணுதல், கங்கை-13

இராமனையிகிற் பெற்று வனத்திழக்குங் கோசலை, நகர்-13

இராமனை யூழ்வினைப்பயத்தாலும் வேள்விப்பயத்தாலுந் தசரதன் பெற்றது, மந்திர-67

இராமனை வணங்கிலனென்றிச் சிந்தையின் றுயர் தீராது, பள்ளி-58

இராமனைவிடப் பரதனுயர்ந்தவன், குகப்-35

இராமனை வேதியர் முதலோர் அறப்பயனென்பர், மந்திர-41

இராமனைநோக்கினைதலின் முனிவனுய்குவனென்றது, வனம் 29

இராவணன், மந்திர - 3, மந்தரை - 39

இராவணது ஒன்றில் விருப்புற்றூர்க்கு நெடுகித்தோன்றுதல், கைகேசி - 55

இரிதல்-நிலைகெடுதல்: சித்திர-38

இரியல் போதல் - நிலைகெட்டோடுதல்; பள்ளி-109

இரியற்குரல்-கூக்குரல்: நகர்-35

இரீஇ, மந்திர-63

இருக்கை, மந்தரை-54

இருகணருவிசோர்தல், கங்கை-48

இருகுன்றுபோலக் குலவியதோள், சித்திர 53

இருகை, வனம்-36

இருகைகூப்புதல், பள்ளி-43

இருகையிற்கரி கிக ணெண்ணிறந்தவர், நகர்-178

இருட்பகை, கங்கை-49

இருட்பகையோட வெய்யவனெழுதல், கைகேசி-61

இருடியரில் மூத்தவர்க்கு யானைக்கன்று துலாக்கையா லருவிநீர் கொணர்ந்து குண்டிகையிற் பெய்தல், சித்திர-29

இருண்டகுஞ்சி, கங்கை 41

இருந்தவந்தணன்-பிரமன்;தைல 63

எளியபழுப்புலயல், சித்திர-31
எளியோப்புதல், கண்ணை-21
எருக்கு கொன்றை சென்றழுடை யணை, கண்ணை-21
எல்-ஞாயன்: சித்திர-17; ஞாயி, சி
எல்லை-முடிவு: மக்கிர-12
எல்லைகடந்தன்றே, கேளையுமாரு யிருங்கொடுவேபாயன்றே, கண்ணகடந் தன்றே, குகப் - 16. 17, 19
எல்லைத்தவருத்தி, கண்ணை-42
எல்லையற்றவிடர்தருவாய், நகர்-233
எல்லையிலின்பம், சித்திர-57
எல்லொடுங்கிய முகம், திருவடி-51
எலியெலாமிப்பனை யாலையாள், குகப்-10
எவ்வம்-குறைவு, குற்றம்: மக்கிர - 82, நகர்-162
எவ்வழிமரபினும், பள்ளி-51
எழு-தூண்: மக்கிர-56
எழுகின்றகாதல், குகப்-28
எழுத்தெதாடர் வாயில், மக்கிர-56
எழுதருமெழிலாள், வஞ்சி-9
எழுதருமேனி, பள்ளி-4
எழுதுபாவையன்னாள், நகர்-220
எழுவினுமுயர்ந்தமேகாள், குகப்-33
எள்ளாநிலைகூர்பெருமை, நகர்-53
எள்ளுதல்-பழித்தல்: கைகேசி-26
எள்ளுறுதீக்கருமம், நகர்-109
எளியவருணவு, பள்ளி 112
எற்றி - அழித்துப்போகட்டு: பள்ளி-49
எற்றுதல் - மோதுதல்: கைகேயி - 47: ஆறுசெல்-54
எற்றுநீர்க்கங்கை, கங்கை 40
எற்றுறத்தபி னின்பங் கொல், நகர்-234
எற்றேபகர்வேண், நகர்-61
எறிகடல், குகப்-57
எறிகதிரோன், தைல-59
எறிதல்-மோதுதல்: பள்ளி-14. இடி தோன்றுதல், பள்ளி - 45; அப்பால் தள்ளுதல், பள்ளி-47
எறிதிரைக்கடல் × திறந்தவாயினர் எங்கினை அரசன்றேவியர், நகர்-108
எறிந்தன கழியதிகால், பள்ளி-45
எறிந்துவிளையுதல், பள்ளி-55
எறிநீர்க்கங்கை, கங்கை-44
எனிலையுப்பு யல், சித்திர-31
எனிலோப்புதல், கண்ணை-21
எருக்கு கொன்றை சென்றழுடை யணை, கண்ணை-21
எல்-ஞாயன்: சித்திர-17; ஞாயி, சி
எல்லை-முடிவு: மக்கிர-12
எல்லைகடந்தன்றே, கேளையுமாரு யிருங்கொடுவேபாயன்றே, கண்ணகடந் தன்றே, குகப் - 16. 17, 19
எல்லைத்தவருத்தி, கண்ணை-42
எல்லையற்றவிடர்தருவாய், நகர்-233
எல்லையிலின்பம், சித்திர-57
எல்லொடுங்கிய முகம், திருவடி-51
எலியெலாமிப்பனை யாலையாள், குகப்-10
எவ்வம்-குறைவு, குற்றம்: மக்கிர - 82, நகர்-162
எவ்வழிமரபினும், பள்ளி-51
எழு-தூண்: மக்கிர-56
எழுகின்றகாதல், குகப்-28
எழுத்தெதாடர் வாயில், மக்கிர-56
எழுதருமெழிலாள், வஞ்சி-9
எழுதருமேனி, பள்ளி-4
எழுதுபாவையன்னாள், நகர்-220
எழுவினுமுயர்ந்தமேகாள், குகப்-33
எள்ளாநிலைகூர்பெருமை, நகர்-53
எள்ளுதல்-பழித்தல்: கைகேசி-26
எள்ளுறுதீக்கருமம், நகர்-109
எளியவருணவு, பள்ளி 112
எற்றி - அழித்துப்போகட்டு: பள்ளி-49
எற்றுதல் - மோதுதல்: கைகேயி - 47: ஆறுசெல்-54
எற்றுநீர்க்கங்கை, கங்கை 40
எற்றுறத்தபி னின்பங் கொல், நகர்-234
எற்றேபகர்வேண், நகர்-61
எறிகடல், குகப்-57
எறிகதிரோன், தைல-59
எறிதல்-மோதுதல்: பள்ளி-14. இடி தோன்றுதல், பள்ளி - 45; அப்பால் தள்ளுதல், பள்ளி-47
எறிதிரைக்கடல் × திறந்தவாயினர் எங்கினை அரசன்றேவியர், நகர்-108
எறிந்தன கழியதிகால், பள்ளி-45
எறிந்துவிளையுதல், பள்ளி-55
எறிநீர்க்கங்கை, கங்கை-44
எனிலையுப்பு யல், சித்திர-31
எனிலோப்புதல், கண்ணை-21
எருக்கு கொன்றை சென்றழுடை யணை, கண்ணை-21
எல்-ஞாயன்: சித்திர-17; ஞாயி, சி
எல்லை-முடிவு: மக்கிர-12
எல்லைகடந்தன்றே, கேளையுமாரு யிருங்கொடுவேபாயன்றே, கண்ணகடந் தன்றே, குகப் - 16. 17, 19
எல்லைத்தவருத்தி, கண்ணை-42
எல்லையற்றவிடர்தருவாய், நகர்-233
எல்லையிலின்பம், சித்திர-57
எல்லொடுங்கிய முகம், திருவடி-51
எலியெலாமிப்பனை யாலையாள், குகப்-10
எவ்வம்-குறைவு, குற்றம்: மக்கிர - 82, நகர்-162
எவ்வழிமரபினும், பள்ளி-51
எழு-தூண்: மக்கிர-56
எழுகின்றகாதல், குகப்-28
எழுத்தெதாடர் வாயில், மக்கிர-56
எழுதருமெழிலாள், வஞ்சி-9
எழுதருமேனி, பள்ளி-4
எழுதுபாவையன்னாள், நகர்-220
எழுவினுமுயர்ந்தமேகாள், குகப்-33
எள்ளாநிலைகூர்பெருமை, நகர்-53
எள்ளுதல்-பழித்தல்: கைகேசி-26
எள்ளுறுதீக்கருமம், நகர்-109
எளியவருணவு, பள்ளி 112
எற்றி - அழித்துப்போகட்டு: பள்ளி-49
எற்றுதல் - மோதுதல்: கைகேயி - 47: ஆறுசெல்-54
எற்றுநீர்க்கங்கை, கங்கை 40
எற்றுறத்தபி னின்பங் கொல், நகர்-234
எற்றேபகர்வேண், நகர்-61
எறிகடல், குகப்-57
எறிகதிரோன், தைல-59
எறிதல்-மோதுதல்: பள்ளி-14. இடி தோன்றுதல், பள்ளி - 45; அப்பால் தள்ளுதல், பள்ளி-47
எறிதிரைக்கடல் × திறந்தவாயினர் எங்கினை அரசன்றேவியர், நகர்-108
எறிந்தன கழியதிகால், பள்ளி-45
எறிந்துவிளையுதல், பள்ளி-55
எறிநீர்க்கங்கை, கங்கை-44

எண்-பெருமை, வலிமை: கைகேசி-31, 46;
எத்தரும் பெருங்குணத்திராமன், திருவடி-131
எத்திசிற்றல், கங்கை-47
எத்து-புகழ், தூரி: கைகேசி-101, பள்ளி-17
எத்திற் கெய்துழுலம், மந்திரை-12
எதம், நகர்-151
எந்தல், பள்ளி-12, ஆறுசெல் 52
எந்தல் வேந்த, ஆறுசெல்-19
எந்திழை, சித்திர-39
எந்திழைமுலையாள், வனம்-19
எந்தினன், கங்கை-67
எந்துசெல்வத் திணையவராமென, திருவடி-12
எந்துதோன், நகர்-95
எந்துதோன்மார்பு, சித்திர-31
எந்திரி, கங்கை-26
எழுறுதல் - மகிழ்ச்சியடைதல், கங்கை-10
எய்தல்-பொருதல், வனம்-45
எய்த்த, மந்திர-6
எயினர்பொருள், கங்கை-70
எயிறுபரந்திரம், பள்ளி-72
எர் கடவம் - அழ வைக்கு: ஆறுசெல்-47
எர்மனை, ஆறுசெல்-32
எலம், சித்திர-2
எறுதல்-உடன்படுதல்: கைகேசி-8
எறுதல்வினை துய்ப்பவர்-சேனையில் வெற்றவரான போகந்துய்ப்பவர்: திருவடி-18
எறும் குற்றம், நன்பம்: கைகேசி-38, ஆரண்-17
எறுழ், நகர்-180
எறுழ்மதில், நகர்-81
எறுழ்வினைஞர், நகர்-87
எறுழ்வை, ஆறுசெல்-8
எழுமைந்த விசை, பள்ளி, 34
எழிசை, நகர்-213
எழிலை டேழுலகம், ஆறுசெல்-20
எழுகடல், குகப்-23
எழுபகலிற்கேகயத்தினின்று அயோத்தி சேர்தல், பள்ளி-18
எழுயர் மதகளிறு, பள்ளி-55
எழை-பெண், சீதை: நகர்-231
எழையியினேனன், குகப்-36
எற்றம் எறுதல், நகர்-142
எற்றவர், பள்ளி-114
எற்றிளம் பிடிக்குலம், ஆறு-29
எற்றையாடு, பள்ளி-14
எறினவெகுளி, நகர்-159
எறு - சிறப்புணர்த்துஞ் சொல்: "வாளினெறு": கைகேசி-45: காவல், பள்ளி-17
எறுசேவகன், தைல-42
எறுதல்-அடைதல், கடந்து கரையேறுதல்: வனம்-35, பள்ளி-106, குகப்-48
என்றவுரை மறுக்குமீட்டதோ, திருவடி-126
என்றனன், குகப்-12
என்று, பள்ளி-12
எனோர், குகப்-24
ஐ-வியப்பு: ஐயுறுஞ்சுடர் மேனியான்: கைகேசி-56
ஐந்துதேர்-பஞ்சேந்திரியங்கள்: மந்திர-21
ஐந்து மைந்துநா ளுழியாமென, பள்ளி-143
ஐந்தொடாகிய மூப்பகை, மந்திர-66: ஐந்தொடு-ஐந்தால்.
ஐம்புலமவித்தவர், ஆறுசெல்-23
ஐம் பெரும் பூதம், திருவடி-120
ஐம்பொறி குறைமக, நகர்-196
ஐம்பொறியொடு காணத்தப்புறங் கடக்கும் வாலுணர்வினுக்கு அணுகுங் காட்சியான், தைல-27
ஐய-வியக்கத்தக்க, ஐயனே: நகர்-74: கங்கை-45: வனம்-33
ஐயம், மந்திர-16
ஐயன்-தந்தை, பெரியோன்: நகர்-226: கங்கை-3, 68, 77
ஐயன்புகழைத்தழுவிமற்றையோர் புகழ்கிற்பது, கைகேசி-92
ஐயன் மேனியெலாமளைதல், கங்கை-25
ஐயனினிமீளான், நகர்-106
ஐயனேநோக்கிச் சீதை முகமலர்தல் × சூரியனேநோக்கித் தாமரை மலர்தல்: கங்கை 56
ஐயா, நகர்-82

கர்க்கடம், தைல-66
கரகதக்கரி, திருவடி - 16
கரஞ்செவிகூடுதல், பள்ளி - 66
க்ரணம்-மனம்; தைல - 27
க்ரத்தல்; சித்திர-11
கரந்துறைதல், மந்திர-20
கரி; மந்திர-49, நகர் - 74, திருவடி-16
கரிக்கரம்பொரு கைத்தலம், கைகேசி-50
கரிகளபம், சித்திர - 29
கரிநிருபர், மந்திர-49
கரிபரியிரதங்காலாள், குகப் 48
கரிமதம் பொழிதல், திருவடி - 21
கரியசெம்மல், மந்தரை-55
கரியமா-பன்றி, சித்திர - 33
கரியவள்-யமுனை; கங்கை-23, வனம்-31: கைகேயி, திருவடி-57
கரியவள் கங்கையாற்றிடையோடுதல், கங்கை - 23
கரியவன்-இராமன், தைல-51, ஆறுசெல்-27
கரியவன் கைவறியன், பள்ளி-55
கரியின்குரல், நகர் - 76
கரியினேறு, குகப்-25
கருங்கடல் × ஆர்ப்பினைடொருங்கடை நெடும்படை: குகப்-11
கருங்கார், பள்ளி - 37
கருணையன், நகர்-33
கருணை, நகர் - 12
கருணையின்மலர்ந்த கண்ணன், கங்கை - 46
கருத்து, மந்திர - 33
கருநறுங்குஞ்சி, குகப் - 28
கருப்பேந்திரம், கங்கை-6
கரும்பலர்கழனி, பள்ளி-116
கரும்பனமொழியினர், நகர் - 176
கரும்பு × சொல்: தைல - 11
கருமம்-செய்யவேண்டிய தொழில்; மந்திர-37, 65
கருவி, மந்திர - 10, திருவடி - 32
கருவிமாமழை, சித்திர 14
கரைகாணுக்காதல், குகப்-26
கரைசெய்வேலை, பள்ளி-127
கரைதல்-மனமுருகுதல், நகர்-14
கரையாவுயர்தல், நகர்-33
கல் × மார்பு, கங்கை-33
கல்லணை கிழங்கு, தூதுசெல் - 38
கல்லதர் கடிதுபோக்கிய கொழுஞ், மந்தரை - 59
கல்லதர்க்கிடந்த பாம்பு, வனம் - 42
கல்விடைப்படுத்தபுல், குகப் -31
கல்லின்வலியழுனிகொங்கு, நகர்-194
கல்லுடையன கானம், வனம் 15
கல்லுதல், கங்கை-71, சித்திர-13
கல்லெ × கை, பள்ளி-81
கல்லெயாண்டுயர்ந்தோன், குகப்-42
கலசத்துணை, கங்கை-6
கலம்-மரக்கலம்: பள்ளி-68 உண்கலம்: பள்ளி-81
கலமுடைய நாய்கணிக்கச் செயலோரா மீகாமன் × மன்னவன் சித்தஞ் செயலோரா வசிட்டன்; தைல 75
கலராசி - ஆபரணத்தொகுதி திருவடி-10
கலவை, ஆதிசெல்-37
கலவைச்சாந்து, சித்திர - 2
கலாமுடையார், பள்ளி 25
கலித்தல் - தடமோதுதல், வனம் - 40: ஒலித்தல், கைகேசி-58
கலியிரைட்சி, ஆதிசெல்-15
கலிவான், கங்கை-61
கலினம், குகப் 32
கலுழியாறு, நகர் 184
கலுழியூற்று, நகர் 194
கலுழிவெள்ளம், திருவடி 81
கலை-வஸ்திரம், மந்தரை - 8; நூல், நகர்-141: மேகலை, நகர்-211; வேறு, மந்திர-58
கலைக்கோட்டுமுனிவன், திருவடி-61
கலைமகள், மந்திரை-42
கலையில்மதி × கலைவளர்த்தகுரு: குகப்-25
கலைமான்கடல், நகர்-33
கலைமான் குழவி, மந்திர 8
கலைமுற்பொன், மந்திர 12
கவ்வை × கலகம்: பள்ளி 5
கவ்வை-பழிப்பாரவாரம், வனம் 55
கவ்வைக்கடல், நகர்-162
கவ்வையர், திருவடி 130
கவசம், ஆதிசெல்-50

கவசம் பூட்டமைத்திடுதல், திருவடி-29
கவசமார்பம், திருவடி-32
கவசம், திருவடி-35
கவரி, நகர்-2, ஒருமான்: சித்திர 5; X அன்னம்; கைகேசி-72
கவரி குடைகளின்றிக் கோசலை கோயில் சென்றான், நகர்-2
கவரிப்பானிறவால், சித்திர-5
கவரிமா மானம்நோக்குதற்கு உவமை, மந்திர-9
கவரியங்கற்றை சுற்றுற எய்துதல், மந்திர-4
கவலை-ஓர் கிழங்கு; கங்கை 71: சித்திர-13
கவலைக்குழிகளைப் பிரசம் நிறைத்தல், சித்திர-13
கவளம், திருவடி-15
கவிகை-குடை-மந்திர; 28, X சந்திரர், கைகேசி 72, X மீன், ஆறுசெல்-35
கவிகைபோய்ப்பழல், பள்ளி-52
கவிகை பெய்ப்பழல், மந்திர-28
கவியமை கீர்த்தியங்காலை, மந்திரை 26
கவிர்வாய் - முருக்கமலர் போன்றவாய்; மந்திர-61
கவிர் - அழகு, வடிவம்: மந்திரை-31
கவிழ்தரும், வனம்-5
கழல், மந்திர-1, பள்ளி - 58, திருவடி-29
கழல் கற்பிழுதுத்த போலும், கங்கை-32
கழல்சேவிக்கவந்தனன், கங்கை-39
கழல்சேவை, மந்திர-1
கழல்சேவிக்கவிரவாவர்த்தல், நகர்-111
கழல்பொருதுர்த்தல், பள்ளி-53
கழல்வளன், மந்திர-38
கழற, மந்திர-2
கழனிக்கானாறாடு, பள்ளி-116
கழித்தல் - கழற்றியெறிதல், சித்திர-21
கழிபேரவலம், நகர்-40
கழுத்துகாண் உண்மைகற்குக்காப்பின் நாண், நகர் 19
கழுத்து, திருவடி-26
கழை, சித்திர-46
கள்-வண்டு, நகர்-211, அசை, நஞ்சங்கள்; கங்கை-3; தேன், பள்ளி-32
கள்வனேன், கங்கை-45
கள்ளக்கைகேசி, நகர்-62
கள்ளவாசை, குகப்-63
கள்ளவிழ்கோதையான் - இராமன்; மந்தரை-29 [கர்-109
கள்ளூறு செவ்வாய்க்கணிகை, நகளிதுஞ்சும் வண்டு, கங்கை-3
களிப்பு, மந்திர-52, சித்திர-11
களிப்புறக்காணுதல், மந்திர-52
களிமஞ்ஞை, வனம்-9
களிமயில், வனம்-14
களியன்னம், கங்கை-2
களிறு மேகத்தைப்பிடியெனக்கருதுதல், வனம்-47
களைகட்டவர், கங்கை-5
களைகண் - பற்றுகாப்பு: ஆறுசெல்-10
களைகணில்லாவுலகம் X உடைக்கலம்: ஆறுசெய்-10
கற்கனியக்கனிகின்றதுயரான், குகப்-29
கற்காணுந்திண்மை, குகப்-26
கற்பகக்கா, திருவடி-14
கற்பகம் கொடுக்குந் தன்மையது, சித்திர-25
கற்பகந்தாங்கிய ஆடை, திருவடி-9
கற்பகநறுழல் காதலித்தல், பள்ளி-52
கற்பகநறுமலர், சித்திர-21
கற்பினெனிவரின் யாரேயெனகின்றூர், தைல-72
கற்பு-மந்திர-17, கைகேசி-66, பதிவிரதாதருமம், கல்லின்தன்மை; நகர்-16: - கல்வி: திருவடி-72
கற்புடை மங்கை - பார்வதி, கங்கை-18
கற்புடையார் தீக்குளிக்கையில் மகிழ்ச்சியுடனிருத்தல், பள்ளி-141
கற்புறுத்தியகற்பு, நகர்-16
கற்பெனும் வரம்பழித்தவள், பள்ளி-75
கற்றடம்-காடு; நகர்-166, 223
கற்றல்-பழகியிருத்தல்; வனம்-16
கற்றவர், மந்திர 42